# தென்னாட்டுப் போர்க்களங்கள்

கா. அப்பாதுரை M.A.L.T.

அலமேலு நிலையம்

கா. அப்பாதுரையார் தெரு, சென்னை-18.

மூன்றும் பதிப்பு: நவம்பர் 1971.
உரிமை ஆசிரியருக்கு.

விலை ரூ. 15

விற்பனை உரிமை:

பாரி நிலையம்

59, பிராட்வே, :: சென்னை-1.

அச்சிட்டோர்: ராமன்ஸ் பிரிண்டிங் பிரஸ், சென்னை-17.

# பதிப்புரை

தமிழ் ஒரு மொழி மட்டுமன்று, ஒரு மொழி இலக்கியம் மட்டு மன்று. அது ஒரு தனிப் பண்பாடு, உலகின் முதல் தேசீயம், முழுநிறை தேசீய இனம். அதன் விரிவாக அமைபவையே தென்னகத் தேசீயம், இந்தியத் தேசீயம், ஆசியாவின் பண்பாடு, அகல் உலகின் மனித இன நாகரிகம்!

மனித இனம் ஒரு பெருங் கோயிலானால், தமிழகம் அதன் கருவறை (கர்ப்பக்கிருகம்).

உலக வரலாற்றுக்கு வரலாற்றொளி தரும் இத் தமிழக வரலாற்றை, இக்குறிக்கோள்கள் நனி விளங்க எடுத்துக் காட்டுகிறது, தென்னாட்டுப் போர்க்களங்கள் என்ற இவ் வரலாற்றேடு. இது வெறும் ஆயுதப் போர்க்களங்களின் வரலாறு மட்டுமன்று, பண்பாட்டுப் போர்க்களங்களின், வாழ்க்கைப் போராட்டங்களின் வரலாறாகவும் விளங்கு கிறது.

விடுதலை பெற்ற இந்தியாவில், நல்ல தமிழ்த்தேசீய கட்சி கண்ட தமிழகத்தில், இனி எழுதப்படவேண்டிய மெய்யான வரலாற்றிலக்கியத்துக்கு ஒரு மூலமாக, முதலேடாக இது அமைந்துள்ளது.

இதன் ஆசிரியர் பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை எம். ஏ. (தமிழ்). எம். ஏ. (ஆங்கிலம்). விசாரத் (இந்தி) எல். டி. தமிழக, இந்தியத் தேசீய இயக்கங்களுடன் ஊடாடி யவர். அவற்றின் மொழி, கலை, இலக்கியத்துறைப் பேராள ராக இலங்குபவர். இவ் ஏட்டின் மூன்றும் பதிப்பையும் பிற எல்லாப் புத்தேடுகளையும் எம் பதிப்பாக வெளியிட அவர்கள் இசைந்தமைக்கு யாம் நன்றி தெரிவித்துக் கொள் கின்றோம்.

ஆசிரியருடன் சேர்ந்து நாட்டுக்கும் மொழிக்கும் பாடு பட்டுவரும் எம் பதிப்பகத்தின் இவ்வெளியீட்டையும் பிற வெளியீடுகளையும் மாணவரும் மக்களும் மக்களாட்சியும் ஆதரித்து ஊக்குமாறு வேண்டுகின்றோம்.

**அலமேலு நிலையத்தார்.**

# முகப்புரை

வடதிசை நாகரிகமாகிய அரை இருளும், மேலை நாகரிகமாகிய அரையொளியுமே இன்றைய தமிழரால்—கற்றறிந்த தமிழரால் கூட—ஒளியாகக் கொண்டு பின்பற்றப் படுகின்றன. வருங்கால உலகம் பெறவேண்டும் முற்றொளிக்கு இவை படிகள் என்பதில் ஐயமில்லை. ஆனால் தமிழக அளவில் இந்த அரையிருள், அரை ஒளிகளைவிட, முற்காலத் தமிழகத்தின் முழுநிலவொளி அவ் வருங்கால முழுக் கதிரொளி காணும் வகையில் இன்னும் உயர்ந்த படியாக உதவுவது ஆகும். வடதிசை நாகரிகத்தையும் மேலை நாகரிகத்தையும் சரியான முறையில் நாம் பயன் படுத்துவதானால், அவை முற்காலத் தமிழர் நில வொளிக்கும் வருங்கால உலகின் கதிரொளிக்கும் இட்டுச் செல்லும் தகுதியுடையன என்பது உறுதி. ஆனால் வடதிசை, மேல்திசை, பண்டைத் தமிழகம், வருங்கால உலகம் என்ற படிகளைத் தலை கீழாக்கி இடைக்கால வடதிசையின் பிற்போக்கு வழியில் சறுக்குவதே இன்றைய இந்திய மாநில ஆட்சிக்கும், மாநில நாகரிகத்துக்கும் உரிய ஒரு பெரிய மாய இடராக உள்ளது. மேலை நாகரிகத்தை அயல் நாகரிக மாகவும், வடதிசை அடிமை இருட்கால நாகரிகத்தை அக உரிமை நாகரிக மாகவும் கொள்ளும் வடதிசையின் இன்றைய போக்குத் தமிழரை மட்டுமன்றி உலகையும் இருளை நோக்கியே இட்டுச் சென்று வருகிறது.

தமிழக வரலாறு, தமிழகப் பண்பாடு, தமிழக இலக்கியம் ஆகியவற்றின் ஆராய்ச்சி இன்னும் தமிழகத்திலேயே ஆட்சி வகுப்பினர், பத்திரிகைகள், கல்வி நிலையங்கள், கல்லூரி, பல்கலைக் கழகங்கள் ஆகியவை அக்கறை கொள்ளாத,கண்ணெடுத்தும் பாராத துறைகளாய் உள்ளன.உலக வரலாறு கூட,பள்ளி கல்லூரிகள் பற்றிய மட்டில் இன்னும் ஒன்றிரண்டு மேலை நாடுகளின் ஆதிக்க வேட்டை வரலாறாக உள்ளதேயன்றி, 'ஒருலக' இனவரலாறாகக் கருத்துருவாகவில்லை. அக் குறிக்கோளை 'ஒருலக அவை'(ஐக்கிய நாடுகள் சங்கம்) கொடியாகத் தூக்கியுள்ளது என்பது உண்மையே. 'உலக மக்கள்' என்ற குரல் எழுப்பப் பட்டுள்ளதும் உண்மையே. ஆனால் உலக அவையின் ஆட்சி உறுப்பினர் இன்னும் நாட்டாதிக்க அரசுகளும் ஆதிக்க நாடுகளும் மட்டுமே. மக்கள் நேரடிப் பேராட்சி இன்னும் அதைத் தீண்டவில்லை. அது மட்டுமன்று. உலகக் குறிக்கோளை முதன் முதலில் உலகில் உயர்த்திய இனம், வள்ளுவர் இனம், தமிழினப் பண்பாடு அதில் இடம் பெறவில்லை. ஆதிக்க இனங்கள், நாடுகளைக் கட்டுப்படுத்த, மொழி இன சமன்மைகாக்க இன்னும் வகை காணப்படவில்லை. இந் நிலையில் இன்றைய உலகக்

குறிக்கோள் 'தமிழக மில்லாத ஒரு உலகக்குறிக்கோள் மட்டுமல்ல, 'தமிழினம்' போன்ற ஆதிக்க மற்ற, உரிமை யற்ற இனங்களை விலக்கி வைத்த ஓர் உலகக் குறிக்கோளாகவே உள்ளது; பண்டை நாகரிக இனங்கள் பலவும் இல்லாத இடைக்கால நாகரிகங்களின் மேற் பூச்சு உலகமாகவே உள்ளது.

தமிழகத்தின் முழு நிறை வரலாறு. வகுத்துக் காண்பது என்பது எளிதன்று. மேல் திசைத் தொடர்புகளிலிருந்தும், மேல்திசை வடதிசையாளர் மேற்கொண்டுள்ள பழம் பொருளாராய்ச்சி, மொழியாராய்ச்சி, கல் வெட்டாராய்ச்சிகளின் உதவிகொண்டும் உலகின் பெரும் பகுதியின் வரலாறும் எழுதப்பட்டு வருகின்றது. இவ் வரலாறுகள் இயற்றியவர் தமிழ், தமிழினம், தமிழகம் ஆகியவை பற்றி எதுவும் அறியாதவர், அறிய முடியாதவர்; அவ் வழி நம்பிக்கையின் நிழலோ, களவோ அற்றவர். அதுமட்டு மன்று. நடு நிலை யுணர்வு கூட அவ் வழி அவர்களில் பெரும் பாலாரை நாடச் செய்யவில்லை. மேலைப் பற்றுட்சி முதன்மையாகவும், வடதிசைப் பற்றுட்சி செறிவாகவும் அந் நடு நிலையைத் தடையிட்டு நிறுத்துகிறது. கிட்டிய சான்றுகளைக் கூட, உலகப் பொது மக்களோ, தமிழரோ, அறியாத வகையில் திரை யிட்டுள்ளனர் பலர். ஒரு சாரார் அறிவதை வேறொரு சாரர் அறியாமல் மறைக்கும் தட்டிகள் இட்டுள்ளனர் வேறு சிலர்.

இக் குறைபாடுகள் இன்று பெரிதாகத் தோற்றுவது இயல்பே. ஆனல் சில ஆண்டுகளுக்கு முன் இவை இன்னும் பெரிதாகத்தான் இருந்தன. குறைபாடுகளை அகற்றும் முயற்சியே குறைபாட்டையும் காட்டும், நிறைவை நோக்கியும் நம்மை ஊக்கும். பல இடர்கள், தடைகளுக்கிடையே சென்ற அரை நூற்றுண்டில் பண்டை இலக்கிய ஒளியும், பண்டை வரலாற்றொளியும் சிறிது சிறிதாக ஆய்ந்து பல அறிவுத் தொண்டர்கள் சேகரித்த சேகரத்தின் பயனே நம் இன்றைய அறிவு, இன்றைய குறைபாட்டறிவு! அவ் வனுபவங்களின் விளைவே இச் சிற்றேடு.

போர்களும் அரசர் ஆட்சிகளும், வெளி நாட்டுத் தொடர்புகளும் வரலாற்றின் உயிரல்ல என்பதை மேலை வரலாற்றாசிரியர்கள் சுட்டிச் சுட்டிச் சென்றுள்ளனர். அதன் பயனகவே இலக்கிய வரலாறு, சமய வரலாறு, அரசிய லமைப்பு வரலாறு, பொருளியல் வரலாறு முதலிய வாழ்க்கை நாகரிக வரலாற்றுப் பகுதிகள் உலகில் விளக்க மடைந்து வருகின்றன. ஆனல் நம் தமிழகத்தின் நிலை இவ் வகையில் தலை கீழானது. நமக்குக் கிட்டும் வரலாற்றாதாரம் உலகில்

வேறெந்த இனத்துக்கும் கிட்டாத ஒன்று. அது உலக வரலாற்றுக்கே ஒரு புதுத் திசை திருப்பி யுதவ வல்லது. சங்க இலக்கியம் மூலம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற் பட்ட தமிழர் அரசியல், சமய, சமுதாய, பொருளியல் வாழ்வை நாம் அறிவது போல், உலகில் வேறு எந்த நாட்ட வரும் எந்த மொழி, இலக்கிய மூல மாகவும், எந்தக் காலத் துக்கும் முழு வரலாற்றோவியம் காண முடியாது. இதை எல்லா வரலாற்றாசிரியர்களும் ஒப்புக் கொண்டுள்ளனர். ஆனால் இதிலேயே தமிழர் நெடுநாள் சொக்கி யிருந்து விட்டனர் என்னலாம். புலமை சான்ற வரலாற்றாசிரியர் 1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க காலத் தமிழகம் பற்றி அணி அணியாக எழுதினர். நுணுக்க விரிவாக எழுதினர். ஆனால் அதன் பிற்பட்ட 1800 ஆண்டு வரலாற்றுக்கு அது போன்ற இலக்கியம் இல்லை. அது போன்ற வரலாறு நீண்ட நாள் எழுதப்பட முடியாது. இது உலக வரலாற்றிலே ஒருபுதிர்—உலக வரலாற்றுக்கே ஒரு புதிர் ஆகும்.

கல்வெட்டு, பட்டயங்கள், நாணயங்கள் உதவியால் தமிழகத்துக்கு நாம் காணும் வரலாறு சென்ற ஆயிர ஆண்டு வரலாறே. அது சங்ககால வரலாறு போல நிறைவுடைய தேசிய வரலாறு அல்லவே அல்ல. ஆனால் அது உலக வரலாறு தொடங்கிய இடத்தில் தொடங்கிற்று—ஆண்டு, நாட்டுப் பெயர், இடம், மன்னர் பெயர் முதலியன அதில் உண்டு. போர் உண்டு, மன்னர் பெயர் வரிசை, செயல் வரிசை உண்டு, இதுவே உண்மை வரலாறு என்று கொண்டவர்—சிறப்பாக மாணவர்—பலர்!

‘தென்னாட்டுப் போர்க் களங்கள்’ என்ற இச் சிற்றேடு மூவகைக் குறிக்கோள்களுடன் எழுதப்பட்டுள்ளது. அது தமிழகத்தை மையமாகக்கொண்டு அதன் அரசியல் விரி வாகிய தென்னாட்டிலும், அதனினும் விரிந்த பண்பு விரிவாகிய தமிழுலகம், அதாவது இந்தியாவிலும் தென் கிழக்காசியா விலும் கண்ணோட்டம் செலுத்தித் தமிழகத்தேசிய வாழ்வின் உடலும், உயிர் மையமும் காண முயன்றுள்ளது. அந்நாடு களின் தேசிய, இன உரிமை வரலாறுகளில் வருங்கால வர லாற்றாசிரியர் மிகுதி கவனம் செலுத்தும்படி அது அவர்களைத் தூண்ட முனைந்துள்ளது. இரண்டாவதாக, போர்கள், வெளி நாட்டுத் தொடர்புகள் ஆகியவை தென்னகத்தைப் பற்றிய அளவில் வெறும் நிகழ்ச்சிகளல்ல. வரலாற்றின் எலும்புருவம் மட்டு மல்ல. அவையே தமிழர் தேசீய வாழ்வின் பல திரும்பு கட்டங்கள், பண்பு மாறுபாட்டுக் கணுக்கள் ஆகும். அத் தேசீய வாழ்வுக்கு உருத்தருபவையும், அதன் வளர்ச்சி தளர்ச்சிகள், உறுதி தளர்வுக் கூறுகளை வகுத்தமைக்கும்

ஊழ்க்கூறுகளும் அவையே. ஆகவே கூடிய மட்டும் போர்க்கள வரலாறு தேசிய வரலாற்றின் எலும்புமையமாக, கணு மையங்களாக, திரும்பு கட்டங்களாகவே விளக்கப் பட்டுள்ளன. மூன்றாவதாக, போரும் தேசிய வாழ்வும் கூட நாட்டின் எலும்புக்கூடும், உடலும் மட்டுமே. அவற்றின் உயிர் அதன் தேசியப் பண்பும், அப் பண்பு அகல் உலகுடன் கொண்டுள்ள தொடர்புமே யாகும். நாட்டுக்கு மட்டுமன்றி உலகுக்கே வருங்கால வளர்ச்சிக் குரிய வழியும் திசையும் காட்டுவது இவ்வுயிர்ப் பண்பேயாகும். ஆகவே நிகழ்ச்சி கடந்து அவற்றின் காரண காரியங்களை ஆராய்வதும், அவற்றை நாடுகடந்து உலகில் கண்டு மதிப்பிட முயலுவதும் தேசிய வரலாற்றாசிரியன் இன்றியமையாக் கடமையாகும். தமிழக வரலாற்றின் உயிர் காண்போர் அவ்வரலாறு உண்மையில் உலகவரலாற்றின் ஓர் உட்கூறே என்பதை நெடுநாள் காணாதிருக்க முடியாது. இன்றைய உலகம் ஒருலகம் ஆக முடியாமல் தடுமாறுகிறது என்றால், இன்றைய இந்திய மாநிலமும் கீழ் திசையும் ஒற்றுமை காண முடியாமல், தற்பண்பு உணர முடியாமல் தத்தளிக்கின்றன வென்றால், அது தமிழக வரலாறு காணாக் குறையாலும், தமிழக வரலாற்றொளியற்ற உலக வரலாறும், கீழ்திசை வரலாறும் காண முயல்வதாலுமே என்னலாம். மேலும், உலகின் எல்லா நாடுகளின் பழமை வரலாறுகளும் தமிழக வரலாற்றுடன் தொடர்பு கொண்டவை. தமிழக வரலாற்றில் கருத்துச் செலுத்தாத உலக வரலாற்றாசிரியர் அத்தகைய பல உலகப் பழமைகளை உலக வரலாற்றுடன் இணைக்க முடியாமல் விட்டுவிட நேர்ந்துள்ளது. உலக வரலாறும் உலக நாகரிகமும் உயிர் பெறாச் சித்திரங்களாய் இயங்குவதன் காரணம் இதுவே.

இம் முத்திறத்திலும் தமிழக வரலாற்றுக் கூறுகளைச் சுட்டியேனும் செல்ல இச்சிற்றேடு முயன்றுள்ளது. தமிழுலகும் அறிவுலகும்—தமிழ்ப் பற்றுடைய உலகு மட்டுமன்று, உலக அறிவில் முனைந்தாலும் தமிழினத்தைப் புறக் கணிக்க விரும்பாத அறிவுலகும்—இம் முயற்சியைத் தமிழ்ப் தொண்டிலும், உலகத் தொண்டிலும், ஒரு சிறு கணுவாகக் கொண்டு வரவேற்று, இன்னும் இது போன்ற முயற்சிகளை மேன்மேலும் ஊக்கிப் பெருக்கும் என்று நம்புகிறோம்.

வ. ஆ. 2002, ஐப்பசி 27 — கா. அப்பாத்துரை.
13-11-1971

# உட்பிரிவு

1. வீரமரபு பக்கம் 1

[தோற்றுவாய் - புனைந்துரையன்று, வரலாறே! - கடல் கடந்த வெற்றிகள் - உள்வளர்ச்சி - புறநானூற்றுக் காலத் தமிழகம்: இரு கருத்துரைகள்-புதுமலர்ச்சி-தமிழர் மரபில் பிளவுகள்]

2. வானவிளிம்பு பக்கம் 11

[தோற்றுவாய்-கடவுளராகக் காட்சியளிக்கும் காவலர்!-கனவேயாயினும் வியத்தகுகனவே-நாகமரபு-நாகர் தமிழினத் தவரே!-வாணமரபு-பாரத இராமாயண மரபுகள்-ஆராய்ச்சிப் போக்குகள்-திருத்தந்தை ஹீராஸ் ஆராய்ச்சி ஒளி]

3. அகல் உலகத் தொடர்பு பக்கம் 23

[தோற்றுவாய்-தமிழர் முதல் வானகப் போர்?-முதற் கடற் போரும் கடற் பேரரசும்-பரதன், பரத கண்டம், ஆதிமனு-பண்டைச் சாவக வெற்றி-முந்நீர் விழா-நெடியோன் புகழ் மரபு-கடலக மேலையுலக, தொலைக் கீழையுலகத் தொடர்புகள்-கடல் கடந்த கீழை உலகத் தொடர்புகள்: அரசியல் தூதர் தொடர்புகள்]

4. வடதிசைத் தொடர்புகள் பக்கம் 35

[தோற்றுவாய்-வடதிசை, தென்திசை வண்ணங்கள்-வடதிசை மகதப்பேரரசர்; சிசுநாகர், நந்தர்-மோரியர்தொடர்பு; சோழப் பேரரசன் இளஞ்சேட் சென்னி-மோரியர் படையெடுப்பு; வாட்டாற்றுப் போர்; செல்லூர்ப் போர்-செருப்பாழிப் போர்; சோழப் பேரரசன் பெரு வெற்றி-முதல் இலங்கை வெற்றி; மனுச் சோழன்-இமயத்தில் வில், புலி, கயல் பொறிப்பு-கலிங்கப் பேரரசன் கார வேலன் படையெடுப்பும் தோல்வியும்-இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்-முதல் வல்லத்துப் போர்-கரிகாலன், நெடுஞ்செழியன் இமயப் படையெடுப்பு]

5. சங்ககாலப் போர்கள்—i பக்கம் 49

[தோற்றுவாய்-தமிழர் வரலாற்றுணர்வு-கரிகாலன் புகழ் வளர்ச்சி: மலைப்பளிக்கும் பெரும் புதிர்-வெண்ணில் போர் i அல்லது வெண்ணி வாயிற்போர்-வெண்ணிப் போர் ii அல்லது வெண்ணிப் பறந்தலைப் போர்-வாகைப் பறந்தலை-வெண்

ணிப்போர் iii-கரிகாலன் வட நாட்டு வெற்றி-கரிகால் வளவன் பிற்காலப் புகழ்-பண்டைப் பெருஞ் சோழர் போர்கள்]

6. சங்ககாலப் போர்கள்—ii பக்கம் 68

[தோற்றுவாய்-தமிழகக் கடம்பர்-கடம்பரும் தமிழிலக்கியமும்-கடம் பெறிந்த சேரர் பெருமை-நெடுஞ்சேரலாதன் கடம் பழிப்பு-கடம்பின் பெருவாயில் போர்-சேரமான் கடல் பிறக் கோட்டிய வேல்கெழு குட்டுவன்-செங்குட்டுவன் பிறவெற்றிகள்-கொங்கர் செங்களம்-இடும்பில், வியலூர், கொடுகூர் வெற்றிகள்-நேரிவாயில் போர்-வடபுல எழுச்சி: கங்கைப் போர் I—கங்கைப் போர் II அல்லது குயிலாலுவப் போர்-செங்குட்டுவன் வடதிசை வெற்றியின் சூழல்]

7. சங்ககாலப் போர்கள்—iii பக்கம் 88

[தோற்றுவாய்-இருவகைப் போட்டிகள்-சோழன் நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, போராட்டங்கள்-காரியாற்றுப் போர் I கூடற் பறந்தலை III-தலையாலங்கானத்துப் போர்: தமிழகம் முன் என்றும் கண்டிராத கம்பலை-வீறுமிக்க பேரரசனைப் பாடிய விழுமிய சிறுபெருங் காப்பியம்-திருக்கோவலூர்ப் போர் I: கருவூர் முற்றுகை-காரியாற்றுப் போர் II-குளமுற்றத்துப் போர்-திருக்கோவலூர்ப் போர் II-தகடூர்ப் பெரும் போர்-கானப் பேரெயில் அழிவு-கழுமலப் போர்-களப்பிரர் படையெடுப்பு]

8 பேரரசுப் போட்டி பக்கம் 116

[தோற்றுவாய்-பல்லவர் குடிமரபின் தொடர்புகள்-சாளுக்கிய பல்லவப் போட்டி: புள்ளலூர்ப் போர்-சிம்பிகைப் போர்-வடதிசைப் பெரும் போர்-கோயத்தூர், தண்டக்கல், முனையத்தூர்ப் போர்கள்-சாளுக்கிய பல்லவப் போட்டி: பரியளம், மணிமங்கலம், சூரமாரம்-வாதாபிப் பேரழிவு, கி. பி. 642-பல்லவர் இலங்கைத் தொடர்பு-பெரும் புகழ்ப் பல்லவர்-பாண்டியப் பேரரசு: நின்ற சீர் நெடுமாறன்-சாளுக்கிய பல்லவ பாண்டியப் போட்டி: நெல்வேலிப் போர் கி. பி. 675-பெரிய புராணப் பாட்டு எங்கே?-அரிகேசரி நெடுமாறனின் பிற போர்கள்: பாழி, செந்நிலம்-பெருவள நல்லூர்ப் போர் கி. பி. 675-மருதூர், செங்கோடு, புதாங்கோட்டுப் போர்கள் மங்களாபுரம் போர்-பாண்டிய பல்லவப் போட்டி-பாண்டியர் மழகொங்க வெற்றி: பெரியலூர், புகலியூர்ப் போர்கள்-சாளுக்கிய பல்லவப் போராட்டம்-கடைசிச் சாளுக்கிய பாண்டியப் போராட்டம்: வெண்பைப் போர்

கி. பி. 740-741-சாளுக்கியர் வீழ்ச்சி: இராஷ்டிரகூடர் எழுச்சி- பாண்டிய பல்லவப் போட்டி: பெண்ணுகடப் போர்-தகடூர் அதிகன் வீழ்ச்சி: ஆயிரவேலி, அயிரூர், புகழியூர் அமர்க்களங் கள்-வெள்ளூர், விண்ணம், செழியக்குடி, நாட்டுக் குறும்புப் பறந்தலைகள்-விழிஞப் போர் i-திருநெல்வேலி, விழிஞம் ii, கோட்டாறு, சேவூர், பூலந்தை, நாரையாறு, கடையல் போர்க்களங்கள்-இராஷ்டிரகூட பல்லவப் போட்டி: விளந் தைப் போர் கி. பி. 788, குருக்கோட்டுப் போர்க்களம் (கி. பி. 826—836)-பாண்டிய பல்லவப் போட்டி: தெள்ளாற் றுப் போர் I கி. பி. 834-வெள்ளாறு, பழயாறு, நள்ளாறு, கடம்பூர்ப் போர்க்களங்கள்- தமிழ் வளர்த்த நந்தி-பாண்டியர் இலங்கைப் படையெடுப்பு: சிங்களப் போர், குன்னூர்ப் போர் கி. பி, 840 விழிஞப் போர் II-குடமூக்குப் போர் கி. பி. 854-அரிசிலாற்றுப் போர் கி. பி. 862-பாண்டிய பல்லவப் போட்டி கி. பி.862 முதல் 880; கடைசிக் கட்டம்; இடவைப் போர் கி. பி. 862-திருப்புறம்பியம் போர் கி.பி. 880-கரகிரிப் போர் (880-890)-நிரவத்தியபுரம், பெருவங்கூர்ப் போர்க் களங்கள் (888—918)-மாந்தரவு, மதுமதுகு, மண்ணே, மங்கல், சோரமதிப் போர்க்களங்கள்]

9 சோழப் பெரும் பேரரசு பக்கம் 168

[தோற்றுவாய்-சங்ககால அரசியல் வாழ்வின் மூன்று குறைபாடுகள்-தென் திசை உயிர் வளம்-இடைக்கால மறு மலர்ச்சி-சோழப் பெரும் பேரரசின் தனிச் சிறப்புக்கள்- இந்திய மாநிலத் தேசியத்தின் அடித்தளம்-சோழப் பெரும் பேரரசின் வளர்ச்சிப்படிகள்-சோழர் மீட்சி: விசயாலய சோழன்-தொண்டை நாட்டு வெற்றி-சோழ பாண்டியப் போ ராட்டம். வெள்ளூர்ப் போர் கி. பி. 919-இலங்கைப் படை யெடுப்பு(934-944)-இராஷ்டிரகூடர் முதலாம் படையெடுப்பு: முற்காட்டுப் போர் 910-வல்லாளப் போர் அல்லது வல்லம் போர் i 910-சோழரின் இராஷ்டிர கூடப் படையெடுப்பு 940-சீட்புலி, நெல்லூர் வெற்றிகள்-இரண்டாம் இராஷ்டிர கூடப் படையெடுப்பு: தக்கோலப் போர் 949-தும்பைப் பதிப் போர் 938-சோழபாண்டியப் போராட்டம்; சேவூர்ப் போர் 953; இலங்கைப் படையெடுப்பு: சேவூர்ப் போர் ii 962-இலங் கைப் படையெடுப்பு 965-தொண்டை நாடு மீட்பு (962—967)—தமிழகத்தின் ஒப்புயர்வற்ற இரு பெரும் பேரரசர்கள்- காந்தளூர்ப் போர் 988-உதகையழிவு-விழிஞப் போர்- பாண்டி நாட்டு வெற்றி-இரண்டாம் சேரப் படையெடுப்பு: கொல்ல வெற்றி, கொடுங்கோளூர் வெற்றி-குடகு வெற்றி: பணசோகேப் போர்-கங்க வாடி, நுளம்பவாடி, தடிகைபாடி

வெற்றிகள்: 991-இலங்கைப் படையெடுப்பு: 991-கலையூர் போர்: 1004-சோழசாளுக்கியப்போராட்டம்;தோஹூர் போர்: 1007-சீட்புலி நாட்டு வெற்றி: 991-வேங்கை நாட்டு வெற்றி: 999-முதற் கலிங்கப் போர்-முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரம் அல்லது மாலத்தீவு, இலக்கத் தீவு வெற்றிகள்: 1007-இராச ராசன் பாரிய வெற்றித் தொகுதி-கண்கண்ட தமிழக வெற்றி உலா வீரன்-சோழ சாளுக்கியப் போராட்டம் I; இடைதுறை நாடு. வனவாசி பன்னீராயிர வெற்றி: கொள்ளிப்பாக்கை, மண்ணைக் கடக வெற்றிகள்: 1008-ஈழப் பெரும் போர்: 1017-பாண்டிய, சேர நாட்டு நிகழ்ச்சிகள் 1018, 1019-சோழ, சாளுக்கியப் போராட்டம் II: பளகாம்வேப் போர் 1019, முசங்கிப் போர் 1020-வடதிசைப் படையெழுச்சி: 1022, 23-வடதிசைப் போர் i: சக்கரக் கோட்டப் போர்-வட திசைப் போர் ii ஆதி நகர்ப் போர்-வடதிசை வெற்றி iii: தண்ட புத்திப் போர்-வடதிசை வெற்றி iv: தக்கணலாடம்-வடதிசை வெற்றி v: வங்காஎ தேசம்-வடதிசை வெற்றி vi: உத்திரலாடம்-சோழர் படையெடுப்பும் வடதிசை நிலைமை களும்-கன்ஞேசிப் போர் 1035-சோழர் படையெடுப்பும் இந் திய நாகரிகமும்-கடல் கடந்த கடாரப் படையெடுப்பு: 1025-கடார வெற்றி 1. சீர் விசயப் போர்—2. பண்ணை—3. மலையூர்—4. மாயிருடிங்கம்—5. இலங்கா சோகம்—6. மாபப்பளாம்—7. தலைத் தக்கோலம்—8. தமாலிங்கம்—9. இலாமுரி தேசம்—10. மாநக்கவாரம்-கடார வெற்றியின் பின் விளைவுகள்-பாண்டியர் விடுதலைக் கிளர்ச்சியின் முறிவு-சேரர் கிளர்ச்சி முறிவு-ஈழக் கிளர்ச்சி-சோழ சாளுக்கியர் மூன்ரும் போராட்டம்: 1042-வேங்கை நாட்டுறவு-களிறு பெற் றெடுத்த போதகங்கள்-இலங்கைப் போர்க்களரி 1046, 1054; 1055, 1067; அனுராதபுரம் போர் 1064. 1065-சோழ சாளுக் கியப் போராட்டம்: முதற் கட்டம்: கம்பிலிப் போர் 1046; 2ம் கட்டம்: பூண்டூர்ப் போர் 1048; கலியாணபுரம் அழிவு; கொப்பத்துப் பெரும்போர் 1054;சோழ சாளுக்கியப் போட்டி: முடக்காற்றுப் போர் 1059-சோழ சாளுக்கியப் போட்டி முதற் போர் 1063, 2ம் போர் 1064, 3வது கூடல் சங்கமப் போர் 1064; 4வது கிருஷ்ணையாற்றுப் போர் 1066; 5வது விசய வாடாப் போர் சக்கரக்கோட்ட வெற்றி-1067; 6வது விசய வாடாப் போர் 1068; 7வது போர் 1058, 1070-இரண்டாம் கடார வெற்றி 1068-முதலாம் குலோத்துங்கன் வடதிசை வெற்றிகள் : வயிராகரப் போர், சக்கரக் கோட்டப் போர்-சோழ சாளுக்கியப் போட்டி: (1075-6) நங்கிலி, மணலி, அளத்தி, நவிலை, துங்கபத்திரைச் செங்களப் போர்கள்-சோழ பாண்டியப் போட்டி: 1081 செம்பொன் மாரிப்

போர்-சேர நாட்டுப் படையெடுப்பு 1081, விழிஞப் போர் II, காந்தளூர்ச் சாலைப் போர் II, கோட்டாற்றுப் போர்-கலிங்கப் போர் I (தென்கலிங்கம்) 1096-கலிங்கப் போர் II (வடகலிங்கம்) 1112-ஈழ விடுதலை 1073: அனுராத புரம் போர் II, III; பொலன்னறுவாப் போர்-கங்க வாடி இழப்பு 1116-தும்மேப் போர் 1116-வேங்கை நாடு இழப்பு 1118-முதலாம் குலோத்துங்கன் வெளி நாட்டுத் தொடர்பு (1) வட இந்தியா: கன்னோசி; (2) பர்மா; (3) கடாரம்; (4) இந்து சீனா: காம்போசம்; (5) சீனம்-முதற் குலோத்துங் கன் பின்னோர்கள்-பிற்காலப் பாண்டியப் பேரரசு-காந்தமன் புராணமரபில் ஒரு காந்தமன் வரலாற்று மரபு-பாண்டியர் உள் நாட்டுப் போர்: ஈழ, சோழ, பாண்டியப் போட்டி I (1167-1175); வடலி, பராக்கிரமபுரம், குண்டனிகா, அமரா வதி, தொண்டி, பாசிப்பட்டணம் போர்கள்-பாண்டியர் உள் நாட்டுப் போர்: ஈழ, சோழ, பாண்டியப் போட்டி II: 1180-1188 திருவேடகப் போர் 1180; நெட்டூர்ப் போர் 1188-ஈழ நாட்டுப் படையெடுப்பு 1188-கொங்கு வெற்றி 1194-தெலுங் குச் சோடர்-வடதிசைத் தொடர்பு-புதிய பேரரசுப் போட்டி; சோழ பாண்டியப் போராட்டத் தொடக்கம்: மட்டியூர், கழிக் கோட்டைப் போர்கள் 1202-ஹொய்சளர் வளர்ச்சி: ஹாங்கல், குறுக்கோடு, குத்திவோலில், உத்தரா, சோரட்டூர், யெல்பர்க்காப் போர்கள் (1190—1091)-புதிய பேரரசுப் போட்டி: சோழ பாண்டியப் போராட்டம்: தஞ்சைப் போர் 1219-பாண்டியர் ஹொய்சளப்போட்டி; சோணாட்டு உட்கிளர்ச்சிகள்; உறத்திப் போர் 1221-சோழ பாண் டியப் போராட்டம் இரண்டாம் படையெழுச்சி 1231-பாண்டியர் ஹொய்சளப் போட்டி; சோணாட்டு உட்கிளர்ச்சி கள்; தெள்ளாற்றுப் போர் ii, பெரம்பலூர்ப் போர், மகேந் திர மங்கலம் போர்: 1232-சோழப் பேரரசின் இறுதிச் சுடர் வீச்சு—ஹொய்சளர் சதுரங்க ஆட்டம்-சோழப் பேரரசின் வீழ்ச்சியும் மறைவும், பாண்டியர் பேரெழுச்சி: 1257-பாண்டி யர் ஹொய்சளப் போராட்டம்: கண்ணனூர்ப் போர் 1264-பாண்டிய நாட்டு நெப்போலியன் இலங்கைப் படையெடுப்பு 1255-சேந்தமங்கல அழிவு-முடிசூர்ப்போர்: நெல்லூர் வீரமா முடிவிழா-பாண்டியர் ஈழப் படையெழுச்சி: காரிக் களப்போர்: 1284-பாண்டியப் பேரரசின் வீழ்ச்சி: இஸ்லாமிய வரலாற்றாசிரியர் கூற்று-தலைச்சிக் குளங்கரைப் போர்-மெய்ந் நிலை-திருவாங்கூர் நெப்போலியன் இரவிவர்மன் குலசேகரன்]

10. வீழ்ச்சியும் மீட்சியும் பக்கம் 275

[தோற்றுவாய்-வீழ்ச்சி : கடல் வாழ்வு சரிந்தது-வாணிக, தொழில் முறை நாகரிகம் சரிந்தது, வடதிசை நிலப் பண்ணை

முறை வளர்ந்தது-நாகரிக மாறுபாடும் வீழ்ச்சியும்-மொழி வாழ்வின் சீர் குலைவு; இலக்கிய வாழ்வின் பண்பு கேடு-தேசிய வாழ்வின் உள்ளார்ந்த தொடர்ச்சிப் பண்பு-தென்னாட்டின் தேசியவலு தமிழகமே-தெலுங்கரும் தமிழரும், முனைவர் சி. ஆர். ரெட்டியின் மதிப்புரை-இஸ்லாமியரும் தென்னாடும்-பக்தி இயக்கமும் இஸ்லாமும் - இஸ்லாம் : தேசியவாழ்வும் சமயவாழ்வும் -இஸ்லாமும் ஆசியத் தேசியங்களும்-தென்னகத்தில் வடதிசை இஸ்லாமியர் தலையீடு-வீரதவளப் பட்டினப் போர் 1318 -மதுரையில் சுல்தான்கள் ஆட்சி (1336-1377)-கோதாவரிப் போர் 1326 - காம்பிலி வீழ்ச்சி 1327-தென் திசைப் புதிய தேசீய ஒளி : வீர சைவப் பேரியக்கம் ; விசய நகரப் பேரரசு நிறுவனம் 1336-திருவண்ணாமலைப் போர் 1341-கண்ணனூர்க் குப்பம் முற்றுகை 1342; ஹொய்சளர் வீழ்ச்சி 1344-பாமினிப் பேரரசின் பிறப்பு 1347 - தமிழக விடுதலைப் போராட்டம் : மரகத நகரம் அல்லது விரிஞ்சிபுரம் போர் (1365 6); சமய வரம் போர் 1367-கௌதல் போர் 1367 -விசய நகரப் பேரரசுக் காலத்தில் தமிழ்த் தென்னகமும் இலங்கையும்-சோழ பாண்டிய காலத்தமிழ் மரபுத் தொடர்ச்சி: விசய நகரப் பேரரசின் முதல் இலங்கை வெற்றி 1385-பாமினிப் பேரரசன் பிரூஸின் வீரப் போராட்டம் 1398 1399- ஒரு பெண்ணழகிக்கான பேரரசன் போராட்டம் (1406-1412)-இன்ப துன்பங்கள்: (1412-1422) இரு பேரரசுகளின் வெற்றி தோல்விகள்-துங்கபத்திரை யாற்றுப் போர் (1422-1426)-தபதி யாற்றுப் போர் 1428-கலிங்க எழுச்சி: கஜபதி மரபின் வளர்ச்சி-வேழ நாடு வென்ற வேழ வேட்டைக் காரன் 1435-சோழ, பாண்டியத் தமிழ் மரபின் தூரவானம்; இலங்கை வெற்றிகள் , சிங்கை, இராசை, செண்பை, முதலை, வீரை, வைப்பாறு; அனுரை, விருதை, அறந்தைப் போர்கள் 1435-சங்கர நயினார் கோயில் போர், திருக் குற்றாலப் போர், முதலைக் குளப் போர், வீர கேரளம் புதூர்ப் போர் (1422-1463)-பாமினிப் பேரரசில் உட் கட்சிப் பிளவு-இரேய்ச்சூர்ப் போர் I 1443-இரண்டாம் தேவராயன் படைத் துறைச் சீரமைப்பு-விசய நகரப் பேரரசர் வண்மை-கலிங்கப் பேரரசின் தொடர்ந்த வளர்ச்சி - கந்தார்ப் போர் (1461 - 1463)-மேற்குக் கரைக் கொள்ளைக்காரர் தொல்லை (1463-82)-கஜபதி அரசர் சாய்வு; பாமினியின் சரிவு: விசயநகர மறு மலர்ச்சி-பேரரசைக் கட்டமைத்த பெருஞ் சிற்பிகள்; சாளுவ நரசிம்மனும், நரச நாயகனும் - நரசநாயகனின் தமிழகத் திரு எழுச்சி 1496 - விசய நகரப் பேரரசின் பொன்னூழி (1500-1565) தீவானிப்

போர் 1509-கோயில் கொண்டாப் போர்1509-சோழப் பேரரசர் அரசியல் திட்ட மரபு-படைத்துறை சார்ந்த தமிழ், மேலை நாட்டுமரபு-தென்மைசூர் வெற்றி (1510-12) - கீழ் திசைக் கலிங்க வெற்றிகள்: கிருஷ்ணையாற்றுப்போர் I (1513-1516) - இஸ்லாமிய அரசமரபின் காவலன் - கிருஷ்ணை யாற்றுப் போர் II அல்லது இரெய்ச்சூர்ப் போர் 11 1520 (மே 19) - கிருஷ்ண தேவராயனும், தெலுங்கு தமிழ் இலக்கியமும் - தமிழக நாயக மரபுகளின் தோற்றம்-நாகமன் ஆட்சியும், பாண்டியர் சோழர் போராட்டமும் - அரசுரிமைப் பூசல் - விசுவநாதநாயகன் மதுரை ஆட்சிப் பொறுப்பு; முதற் பகுதி (1529-30), இடைப் பகுதி (1533-42)-மலையடிவாரப் போர் 1533- அச்சுத ராயனின் வட திசைப் போர்கள்-இராமராயன் பதவி வேட்டையும் குழப்பங்களும் - அரவீட்டு மரபின் புரட்சி, துங்கபத்திரைப் போர்-வைதிக இயக்கம் 16,18ம் நூற்ருண்டுகள் - போர்ச்சுக் கீசியர் வளர்ச்சி: இராமராயன் எதிர் நடவடிக்கைகள் (1542-1547)-கயத் தாற்றுப் போர் I, 11 (15501 559)- தோவாளைக் கணவாய்ப் போர் (1550-59) - மதுரை நாயகமும் அரிய நாயகமும் ஆற்றிய பணி நாயகங்கள் (1550-1584) - இராமராயனின் வடதிசைத் தொடர்புகள் 1 (1542 1560)-ஜம்கெட் போர் 1560-இராமராயன் வட திசைத் தொடர்புகள் 11 (1560-1564)-தலைக் கோட்டைப் போர் அல்லது இராட்சசத் தங்கடிப் போர் 1565 தும்பிச்சி நாயகன் எழுச்சி 1564-இலங்கைப் படையெழுச்சி: புத்தளம் போர்-மாவலி வாணாதிராயன் கிளர்ச்சி (1572-1595)-மும் மொழி மண்டலங்கள்-முதல் தலைநகர் மாற்றம்-பெண்ணை யாற்றுப் போர் (1586-1589)-வல்லம் பிரகாரம் போர் அல்லது வல்லத்துப் போர் 11 1583-ஜம்புல மதுகுப் போர் 1598-அகமது நகர் வீழ்ச்சி, வீர அரசி சாந்து பீபி 1600-சேதுபதி மரபின் தோற்றம் 1605-உத்தர மேரூர்ப் போர் 1601-மின்னல் அல்லது முன்னலிப் போர் 1603- வேலூர்ப் போர் 1603-புதிய தலைநகர் மாற்றம்-மைசூர் எழுச்சி (1610-1612)-வீரமா முனிவர் (1606-1623)-மதுரை மண்டலத் தலைநகர் மாற்றம் 1616-தஞ்சை செஞ்சி நாயக மரபுகள்-செங்கற்பட்டுப் போர், திருச்சிராப்பள்ளிப் போர், மதுரைப் போர் (1603-1607)-செஞ்சிப் போர் (1607-8) -விசய நகர அரசுரிமைப் போராட்டம் (1614-1618)- தோப் பூர்ப் போர் 1616-1617 பாளையங் கோட்டைப் போர் 1617- அரசுரிமைப் போர் முடிவு-கர்நூல் கைதுறப்பு (1619-1624)- முதல் மதுரை மைசூர் மோதுதல் 1625-திருவாங்கூர்ப் படை யெடுப்பு1634-சேதுபதி மரபின் அரசுரிமைப் போராட்டம்,

(1637-1645)-பேரரச மரபின் வாழ்வு தாழ்வுகள் (1630-1642)-மைசூர், இக்கேரி, பிசப்பூர் எழுச்சிகள்; மராட்டிய இனப் புது மலர்ச்சி-உதயகிரிப் போர் 1644-வேலூர் போர் 1645-பிசப்பூரின் புதிய படை யெழுச்சிகள் (1644-1646)-விரிஞ்சிபுரம் போர் 1646-வேலூர் முற்றுகை 1647-செஞ்சி முற்றுகையும் வீழ்ச்சியும் (1648-1649)-மதுரை தஞ்சை அரசுகளும் பிசப்பூரும்-மூக்கறுத்தான் போராட்டம், மைசூர் மதுரைப் பூசல் (1656-59)-மதுரை அரசின் இரண்டாம் தலைநகர் மாற்றம் 1640-44)-பஞ்சமும் போரும் 1659-ஆட்சிக் குழுவின் அட்டூழியம்: முஸ்லிம் படையெடுப்பு (1659-1663)-சேது நாட்டுப் போர் 1665-மதுரை அரசின் மூன்றும் தலைநகர் மாற்றம் 1665-மைசூர்ப் போர் 1667-ஈரோட்டுப் போர் 1672-சக்கரப் பட்டணம் போர் 1675-ஹாசன் அல்லது ஆசனுப்போர் 1677-தஞ்சை நாயக மரபின் வீழ்ச்சி 1673-தஞ்சை மராட்டிய மரபு: ஏக்கோஜி 1674-கடக் போர் 1677-வாலிகண்டபுரம் போர் (1677-8)-சிவாஜியின் செஞ்சி வெற்றி 1678-வேலூர் முற்றுகை 1678-கிழவன் சேதுபதி: புதுக்கோட்டை மரபின் தோற்றம்-தென்னக முஸ்லிம் அரசுகளின் வீழ்ச்சி (1686-87)-வந்த வாசிப் போர் (1687-9)-செஞ்சி முற்றுகை (1690-1698)-தேசூர்ப் போர் 1693-ஆரணிப்போர் 1696-மதுரை வீர அரசி மங்கம்மாள் (1689-1706)-தஞ்சைப்போராட்டம்-காந்தமன் மரபு-மைசூர்ப் போராட்டம்-சேதுபதி போராட்டம்-திருவாங்கூர்ப் படையெடுப்பு-கதலி மலைப் போர்; ராஜா தேசிங்கின் வீர காதை 1714-சேது மரபின் அரசுரிமைக் கலவரம்-உறையூர் போர் 1729-சிவகங்கை மரபின் தோற்றம் 1729-மதுரை அரசின் வீழ்ச்சி (1732-1736)-அம்மையநாயகனூர் போர் 1736-பாலகேத் போர் 1726-தமிழகத்தின் 84 கோட்டைகளின் பட்டியல்-தாமல் செருவுப் போர் 1740-கொடுத்தலம் போர்; சந்தா சாகிபின் மராத்திய மண்டலச் சிறை வாழ்வு 1746-ஆம்பூர்ப் போர் 1749-திருவாதிப் போர் I 1750 (ஜுலை 19); II 1750 (ஆகஸ்டு 20)-செஞ்சிப் போர் அல்லது வெள்ளி மேட்டுப் பேட்டைப் போர் அல்லது புத்தனந்தல் போர் 1750 (டிசம்பர்-15)-கிளைவ் அருந்திறற்பணி: ஆர்க்காட்டு முற்றுகை 1751, ஆரணிப் போர், காவேரிப் பாக்கம் போர் 1752, பாகூர்ப் போர் 1753-வந்தவாசிப் போர் 1760-செஞ்சி வீழ்ச்சி 1761)

**11.** தேசிய வாழ்வும் புதுமலர்ச்சியும் பக்கம் 446

[தோற்றுவாய்-பண்புத்தளர்வு, உறுதிச் செறிவு-இடைக் காலம் வளர்த்த இரண்டு பண்புகள்-அக அலை, புற அலை-1760;

கீழ்திசை வாழ்வின் திரும்பு கட்டம்; போலித் தேசியத்துக்கு ஒரு படிப்பினை!-தென்னகத் தேசியமும் மறுமலர்ச்சி இயக்கங் களும்-தென்னகத்தின் முதல் தேசிய அலை: மைசூர் எழுச்சி (1763-1798)-ஹைதர், திப்பு; நிறைவு, குறைவுகள்-பிரிட்டிஷ் ஆதிக்க வளர்ச்சி-தமிழ்த் தேசியமும் பிரிட்டிஷ் ஆட்சியும்-தண்டுல்காப்போர் 1763-முதல் மைசூர் போராட்டம் (1767-1769)-காக்கன்கரைப் போர் 1767-செங்கம் கணவாய்ப் போர் 1767 (செப் 2)-திருவண்ணாமலைப் போர் 1767 (செப் 26)-ஆம்பூர் முற்றுகை 1767 (டிசம் 6)-வாணியம்பாடிப் போர் 1767 (டிசம்பர் 8)-மூல பாகல் போர் 1768 (ஆக 4)-நிஜாம், மராத்தி யர் போராட்டம்; சிங்குர்லிப்போர் 1771 (மார்ச் 6)-சாவனூர் போர் 1776-இராரவிப் போர் 1777-இரண்டாம் மைசூர்ப் போராட்டம் (1780-1782)-பேரம்பாக்கம் போர் I; 1780 (செப் 8-9)-பேரம் பாக்கம் போர் II அல்லது புள்ளலூர்ப் போர் II (ஆங்கில வரலாறுகளின் படி I) 1780 (செப் 10)-செஞ்சியில் ஹைதர் 1780 (நவம்பர்)-சிதம்பரம் போர் 1781 (ஜுன் 18)-புத்தந்துறை (போர்ட்டோ நோவா) போர் 1781 (ஜுலை 1)-புள்ளலூர்ப் போர் III (ஆங்கில வரலாற்றாசிரியர் கள் கூற்றுப்படி II) 1781 (ஆக 27)-சோளிங்கர்ப் போர் 1781 (செப் 27)-அன்னக்குடிப் போர் 1782 (பிப் 17-18)-திரிகலூர்ப் போர் 1782 (ஏப் 7)-தோபிகர்ப் போர் 1782 (மே 31)-ஆரணிப் போர் 1782 (ஜுன் 2)-நெடுங்கல் போர் 1782 (ஜுன் 8)-பனி யாணிப் போர் 1782 (நவம் 29)-ஹைதர் மறைவு 1782 (டிச 7)-போரின் திரும்பு கட்டம் 1782-பெரிய பட்டினம் போர் 1783-மங்களூர் ஒப்பந்தம் 1784 (மார்ச்சு)-திப்புவின் மைசூர் மராட் டியப் போராட்டம் 1786, சாவனூர்ப் போர் II; கண்டகிப் போர் 1786-மூன்றும் மைசூர்ப் போராட்டம்-(1790-1792)-சத்தியமங்கலம் போர் 1790 (செப் 13)-அரிகேராப் போர் 1791 (மே 15)-கர்டா அல்லது கர்ட்லாப் போர் 1795 (மார் 11)-மராத்தியர் நிஜாம் போராட்டம்-நான்காம் மைசூர்ப் போராட்டம் 1799-சித்தேசுவரப் போர் 1799 (மார் 6)-மழவள்ளிப் போர் 1799 (மார் 27)-சீரங்கபட்டினம் வீழ்ச்சி 1799 (மே 4)-தென் தமிழகத் தேசிய எழுச்சி (1750-1834)-பூலித்தேவர் போராட்டம் (1750-1760)-சிவகெங்கை எழுச்சி (1772-1780)-பாஞ்சாலங் குறிச்சிப்புரட்சி I (1785-1801) மன் னன் போராட்டம் (1785-1798)-பாஞ்சாலங் குறிச்சிப் புரட்சி II (1785-1801): தமிழக மக்கட் போராட்டம் 1801 (பிப்ரவரி 2-மே 23)-மருது காவியம் 1801 (மே 28-அக் 1)-தமிழகப் புண்ணிய பூமிகள்-மைசூர், தென் தமிழக எழுச்சிகளின் தமிழகங் கடந்த தேசிய எதிரொலிகள் (1801-1947)-முடிவுரை]

# தென்னாட்டுப் போர்க்களங்கள்

★

## சங்க காலம்

★

## 1. வீரமரபு

''வீரம் செறிந்த தமிழ்நாடு!''
''புகழ் மண்டிக்கிடக்கும் தமிழ்நாடு!''
''கல்விசிறந்த தமிழ்நாடு!''
''செல்வம்
எத்தனை உண்டு புவிமீதே அவை
யாவும் படைத்த தமிழ்நாடு!''

வீரம், புகழ், கல்வி, செல்வம் ஆகிய பண்டைத் தமிழகத்தின் மரபு வளங்களை எண்ணிப் பெருமைப் படுகிறார், கவிஞர் பாரதியார்! இந்நான்கு கூறுகளிலுமே தமிழகம் இன்று அடைந்துள்ள நிலையை எண்ணினால் பாரதியார் உரைகளை நாம் கவிஞர்களுக்கு இயல்பான மிகையுரைகளென்றோ, புனைந்துரைகளென்றோதான் கருத வேண்டிவரும். 'கொடுக்கிலாதானைப் பாரியே' என்றும், போர்க்களங் காணாதவனைப் புலியேறு என்றும் புகழும் கவிராயர் கவிதை மரபில் இவையும் சேர்ந்தவைதானோ என்று எண்ணத்தோன்றும்.

கவிஞர் பாரதியாருக்கே இத்தகைய ஐயங்கள் ஏற்பட்டிருந்தனவோ, என்னவோ? அவர் அவற்றை வரலாற்றுப் புலவன் மரபில் நின்று வகுத்துரைக்க முயன்றுள்ளார்.

கம்பன், இளங்கோ, வள்ளுவர் ஆகிய கலைச்சிகரங்களை அவர் நமக்கு எடுத்துக் காட்டுகின்றார். அக் கல்விக்கடல்களைத் தந்த தமிழ் நாடு 'கல்வி சிறந்த தமிழ் நாடே' என்பதை மெய்ப்பிக்கின்றார். இதுபோலவே 'வீரம் செறிந்த தமிழ்நாடு' 'புகழ் மண்டிக்கிடக்கும் தமிழ்நாடு' 'செல்வம்........யாவும் படைத்த தமிழ் நாடு' என்ற கூற்றுக்களையும் அவர் வகுத்து விளக்க முற்பட்டுள்ளார்.

புனைந்துரையன்று, வரலாறே!

தமிழகத்தின் வீரப்புகழ் வெறும் புனைந்துரையன்று, மிகையுரையன்று; வரலாறு காட்டும் செய்தியேயாகும். கவிஞர் பாரதியார் அவ்வரலாற்றுச் செய்திகளைத் திரைப் படக் காட்சிகளைப்போல நம் மனக்கண் முன் ஓடச் செய்கின்றார்,

"விண்ணை இடிக்கும் தலைஇமயம்—எனும்
வெற்பை அடக்கும் திறலுடையார்—சமர்
பண்ணிக் கலிங்கத்து இருள் கெடுத்தார்—தமிழ்ப்
பார்த்திபர் நின்ற தமிழ்நாடு."

நில எல்லையில் தமிழர் பண்டைப் பெருவெற்றிகள் இமயத்தை அடக்கின. தமிழ் மூவேந்தரும் வில், கயல், புலி ஆகிய முத்தமிழ்க் கொடிகளையும் இமயமலையுச்சியில் பொறித்தார்கள். நில உலகத்தின் கூரை எனப்படும் இமயம் தமிழர் வீரப் புகழை வானகத்துக்கு எடுத்துரைத்தது. அது தமிழர் தம் கொடிமரமாகவே அன்று நிலவிற்று. அத்துடன் இமயத்தையடுத்த வடநாடாகிய கங்கை நாட்டையும் இடை நாடுகளாகிய வங்கத்தையும், கலிங்கத்தையும் வென்று அவர்கள் போர்ப் பரணி பாடினார்கள்.

காரிகால சோழன் இமயங்கடந்து மேருமலையின் உச்சியையே தாக்கினான். அதைத் தன் செண்டாயுதத்தால்அடித்து அதன் தருக்கை அடக்கினான். அதன் முன்புற நெற்றியில் மட்டுமன்றிப் பின் புறத்திலும் தன் புகழ் எழுதுவதற்காக, அவன் அதன் தலையைத் திருகினான். இருபுறங்களிலும் தன் புலிக்கொடி பொறித்து, வடதிசைப் பெருமன்னரிடம் பெரும் பொருள் திறைகொண்டு மீண்டான்.

சேரன் செங்குட்டுவன் கங்கைக் கரைகடந்து ஆரிய அரசர் கனகன், விசயன் ஆகியவர்களை முறியடித்தான். அவர்கள் தலைகள்மீதே இமயமலையின் பெருங்கல்லொன்றை ஏற்றிக்கொண்டு தமிழகத்துக்கு வந்தான். தன் தலைநகராகிய வஞ்சியில் தமிழர் கற்புத் தெய்வமாகிய கண்ணகிக்கு அக் கல்லிலேயே சிலை செதுக்குவித்தான். இது தமிழ்ப் பெருங் காப்பியமான சிலப்பதிகாரம் தரும் செய்தியாகும்.

கடல் கடந்த வெற்றிகள்

நில எல்லையில் தமிழர் வெற்றிகள் இவை. ஆனால் ஏனைய கீழ்திசை மன்னரைப்போல, அசோகன், ஹர்ஷன், அலாவு

தின், அக்பர் ஆகியவர்களைப்போலத் தமிழர் நிலப் பேரரசுடன் நின்றவரல்லர். அவர்கள் தமிழ்க் கொடிகள் கடல் அலைகள் மீதும் தவழ்ந்தன. பாரதியார் கவிதைமொழிகளிலே இந்த வெற்றிகளும் எதிரொலிக்கின்றன.

சிங்களம், புட்பகம், சாவகம்—ஆதிய
தீவுபலவினும் சென்றேறி—அங்கே
தங்கள் புலிக்கொடி, மீன்கொடியும் நின்று
சால்புறக் கண்ட தமிழ்நாடு.

தமிழர் கை வரிசைகள் கடல் கடந்த நாடுகளாகிய இலங்கை, பர்மா, மலாயா, அந்தமான்-நிக்கோபார்த்தீவுகள், சுமத்ரா, ஜாவா, இந்து-சீனு ஆகிய தென்கிழக்காசியப்பகுதிகளிலும் பரவியிருந்தன. அந்நாடுகளிலெல்லாம் பாண்டியர் தங்கள் மீன் கொடியையும், சோழர் தங்கள் புலிக்கொடியையும் நாட்டி, ஆட்சியும் வாணிகமும் கலையும் பரப்பியிருந்தனர்.

கிழக்கே சென்ற கை மேற்கேயும் செல்லத் தவறவில்லை. சேரரும், பாண்டியரும், சோழரும் மாலத்தீவங்கள், இலக்கத் தீவங்கள், கடம்பர் மூலதளமான வெள்ளைத்தீவு, யவனர்நாடு ஆகியவற்றில் தம் ஆணை பரப்பியிருந்தார்கள். அவர்கள் வாணிகமும், தொழிலும், குடியேற்றங்களும் இவ்வெல்லை கடந்து, கிழக்கே சீனம், சீயம் (சயாம்) நாடுகளையும், மேற்கே சிந்துவெளி, ஏலம், சுமேரிய நாகரிகங்கள், பாபிலோனியா, அஸிரியா, பாலஸ்தீனம், எகிப்து, உரோமகம் ஆகிய நாடுகளையும் அளாவி ஒளி வீசின. கவிஞர் பாரதியாரின் சொற்கள் இவற்றையும் சுட்டிக் காட்டுகின்றன.

சினம், மிசிரம், யவனரகம்—இன்னும்
தேசம்பலவும் புகழ்வீசிக்—கலை
ஞானம், படைத்தொழில், வாணிகமும் மிக
நன்று வளர்த்த தமிழ்நாடு.

சிங்களம் இலங்கையையும், சாவகம் மலாயா, சுமத்ரா, ஜாவா ஆகிய நாடுகளையும், புட்பகம் பர்மாவையும், மிசிரம் எகிப்தையும், யவனரகம் கிரேக்க உரோம நாடுகளையும் குறிப்பவை. தவிர, பண்டைத் தமிழ் இலக்கியத்தில் மலாயா நாடு கடாரம் என்றும், காழகம், என்றும், பர்மா அருமணம் என்றும் அழைக்கப்பட்டன. காழகம், கலிங்கம் என்ற நாட்டுப் பெயர்கள் தமிழிலக்கியத்தில் அந்நாடுகளுக்குரிய துணி வகைகளின் பெயர்களாகவும், வங்க நாட்டின் பெயர் கங்கை

யாற்றில் செல்ல உதவிய தட்டையான கப்பல் வகையின் பெயராகவும் விளங்கின. இலங்கையின் பெயராகிய ஈழம் பொன்னின் பெயராக வழங்கிற்று. இவை தமிழரின் மிகப் பழமை வாய்ந்த கடல் கடந்த அயல் நிலத் தொடர்பு களுக்குத்தமிழ் மொழியே தரும் சான்றுகள் ஆகும்.

ஆரியர் இமயம் கடந்து வருவதற்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகட்கு முன்பே தமிழினத்தவர் எழுத்தும் கலையும் நாக ரிகமும் உடையவராய், சிந்துகங்கை வெளியெங்கும் பரவி நாடு நகரங்களும், கோட்டை கொத்தளங்களும் நிறுவிவாழ்ந்தனர். கி. மு. 3000 ஆண்டளவிலேயே அவர்கள் வணிகர் சிந்து வெளியிலும் ஏலம், சுமேர் ஆகிய இறந்துபட்ட நாகரிக வெளி களிலும் வாணிகம் செய்தும் குடியேறியும் நாகரிகம் பரப்பியு மிருந்தனர். ஏலம், சுமேர் மக்களும் எகிப்தியரும் தமிழரின் பண்டைக் கிளையினங்களாகச்சென்று குடியேறியவர்கள் என்று பல அறிஞர்கள் கருதுகின்றனர். திருத்தந்தை ஹீராஸ் தமிழினத்தவரில் ஒரு சாரரான திரையர் அல்லது திராவிடர் நடுநிலக்கடலெங்கும் பரந்து, ஸ்பெயின், பிரான்சு, இங்கி லாந்து முதலிய நாடுகளிலும், நடு அமெரிக்காவிலும்கூட வாழ்ந்து பண்டைப் பெரு நாகரிகங்கள் வளர்த்திருந்தனர் என்று கருதுகிறார். இப்போதுள்ள மனிதஇனம் நாகரிகமடையு முன்பே, உலகெங்கும் பரவியிருந்த, மரபிழந்துபோன ஒரு முன்னைய நாகரிக இனத்தின் உயிர்க் கால்வழியே தமிழ் இனம் என்பர் 'உலக வரலாறு' எழுதிய எச். ஜி. வெல்ஸ் என்பார்.

### உள் வளர்ச்சி

மனித இன வரலாறு எங்கும் பொதுவாக வளர்ச்சியையே காட்டவேண்டும், வளர்ச்சியையே காட்டுகிறது. ஆனால் கீழை உலக வரலாறு பொதுவாகவும், தமிழகவரலாறு சிறப்பாகவும் இதற்கு மாறான போக்கைக் காட்டுகிறது. வாழ்ந்த தமிழகம், உலகாண்ட தமிழகம், உலகின் செல்வம் திறை கொண்ட தமிழகம் படிப்படியாகத் தாழ்வுற்று இன்றையஅவல நிலையை எட்டியுள்ளது என்பதையே வரலாறு காட்டவல்லது. ஆனால் இது தமிழக வரலாறு மட்டுமல்ல, தமிகத்துடன் ஊடாடிய பண்டைப் பெரு நாகரிக இனங்கள் அனைத்தின் வரலாறு களும் இதுவே. உண்மையில் அவ்வினங்களில் பல இன்று தடமற அழிந்துவிட்டன. பண்டைஃபினீஷியா, கார் தேஜ், ஹிட்டைட் பேரரசு, ஏலம், சுமேர் ஆகியவை இன்று புதை பொருளாராய்ச்சியால் மட்டுமே அறியப்பட வேண்டி யவை ஆகியுள்ளன. எகிப்தியர், பாரசீகர், கிரேக்கர், உரோமர்

ஆகியோர் தம் நாட்டில் பிற இனங்கள், பிற நாகரிகங்கள், சமயங்கள் வாழவிட்டு தம் புகழைமட்டும் நாகரிக உலகில் தடம் பொறித்துச் சென்றுள்ளனர். சீனரும் தமிழரும் மட்டுமே தம் பண்டைப் புகழைத் தாமே தற்கால உலகிற்கு அளிக்கும் பழமைத்தூதுவராக இன்று தற்கால உலகிலே காட்சியளிக்கின்றனர்.

தமிழர் வரலாற்றுக்கும் சீனர்வரலாற்றுக்கும் ஒரு பெரிய வேற்றுமை உண்டு. சீனர் வரலாறு சீனத்தின் பழம்புகழை மட்டுமே காட்டுகின்றது. தற்காலச் சீனம் அழியாது நின்று புதுவாழ்வும் அவாவிநிற்பது உண்மையே. ஆனல் இன்றைய சீனத்தின் புதுவாழ்வு இன்றைய உலகத்தின் புதுவாழ்வில் ஒருபகுதியே. அது தன் பண்டைப்புகழின் புதுமலர்ச்சியாகப் புதிய வளர்ச்சிபெறவில்லை. ஆனல் தமிழக வரலாறு பழம் புகழைமட்டும் காட்டவில்லை. அந்தப் புகழ் படிப்படியாகத் தளர்ந்து அவலநிலையுற்று உலகப் புதுவாழ்வில் புதுப்பங்கு பெறுவதைமட்டும் காட்டவில்லை. பழம்புகழின் தளர்ச்சியுடன் ஒரு புதுநிகழ்ச்சியாக, அந்தப்புகழின் புதுமலர்ச்சியையும் நாம் அருகருகே வரலாற்றில் காணலாம். தமிழகம் இன்று உலகின் புதுவாழ்வில் பங்குகொள்வதுடன் அமையவில்லை. உலகுக்கு ஒரு புது வாழ்வும் புது மலர்ச்சியும் உண்டுபண்ணும் வகையில் அது தன் பழம்புகழைப் புதுப்பிக்க முனைந்துள்ளது. அதுவே தமிழகத்தின் உள்ளேயும் அதற்கு வெளியே அகல்உலகிலேயும் இன்று நாம் காணத் தொடங்கியிருக்கும் இரு திசைப்பட்ட மறுமலர்ச்சித் துடிப்பு ஆகும்.

தமிழகத்தின் வரலாறு இவ்வகையில் தமிழகத்தில் பற்றுடைய தமிழர்க்கு மட்டுமின்றி, புதிய உலகில் பற்றுக் கொண்ட உலக வாணருக்கும் தனி முக்கியத்துவம் உடையதாகும். வருங்காலத் தமிழகத்துக்கு எச்சரிக்கைதரும் முறையில் அது பண்டைப்புகழ் நலிந்த வகைகளையும் காட்டவேண்டும். வருங்காலத் தமிழகத்துக்கும் உலகுக்கும் ஊக்கம் தந்து புதுவழி காட்டும் முறையில், அப்பழம்புகழ் அழியாது நீடித்து நின்ற வகைகளையும், அதன் நலிவிடையே உள் விரவிஎழுந்து வளர்ந்துவரும் புதுமலர்ச்சியின் வளர்ச்சிகளையும் நன்குஎடுத்துக்காட்டவேண்டும். இவ்விரண்டுக்கும் மூலாதாரமாக உலகம் நெடுநாள் மறந்துவிட்ட, சிற்சில சமயம் உலகின் கண்களிலிருந்து மறைக்கப்பட்டுவிட்ட, அப்பழம்புகழின் பண்பையும், அளவையும் நாம் ஆராய்ந்து மதிப்பிட்டுக் கணித்தறிவது இன்றியமையாத முதற்படியாகும்.

தமிழர் தேசீயம், அண்மையிலேயே தன்னுரிமையும், தன்னாட்சியும் பெற்றுவரும் தமிழகம் இதில் முனைந்து முன்னேறும் பெரும் பொறுப்புடையது.

தமிழர் பழைய வாழ்வை உள்ளவாறறிய விரும்புகிறவர்களுக்குத் தமிழ் இலக்கியம் பொதுவாக ஒரு திரையிட்ட பலகணியாய் உதவுகிறது. சங்க இலக்கியம் இத்திரையின் ஒளியார்ந்த பகுதியேயாகும். ஆனால் காணும் கண்ணொளிக்கு விளக்கமாகப் பழமை ஒளி வந்து திரையில் கூடும் பகுதி புறநானூறே எனலாம். அது தொடர்ச்சியுடைய ஒரே வீர காவியமல்ல. ஆனால் தமிழர் வீர காவியங்களுக்கெல்லாம் அதுவே தலையூற்று என்னலாம். தமிழர் வீர காவியங்கள் பலவற்றின் சிறு வண்ணப் படிவங்களின் தொகுதியாக அது விளங்குகிறது.

## புறநானூற்றுக் காலத் தமிழகம்: இரு கருத்துரைகள்

தமிழ் வெறியர், தமிழ் பற்றார்வலர்களை மட்டுமன்றி, ஆறியமைந்த தமிழார்வமுடையவர்களைக்கூடத் தட்டியெழுப்ப வல்லவை. புறநானூறு பற்றிக் காலஞ்சென்ற இராவ் பகதூர் எஸ். வையாபுரி அவர்கள் குறிப்பிட்ட இரண்டு கருத்துக்கள். புறநானூற்றுக்காலத் தமிழினமும் இக்காலத்தமிழினமும் பெயராலும் உடலாலும் ஒன்று; உயிராலும் பண்பாலும் வேறு என்று கருதுபவர் அவர். தமிழார்வலர் இன்று அவ்வாறு கருத முடியாது. பழந்தமிழினமும் இன்றைத் தமிழினமும் உயிராலும் பண்பாலும் ஒன்று; உடலாலும் சூழலாலுமே வேறுபட்டது என்றுதான் நாம் கருதுகிறோம். ஆயினும் இந் நிலையிலும் இராவ்பகதூர் அவர்களின் கருத்துக்கள் புதுமையுடையன, புத்துயிரும் புத்தூக்கமும் எழுப்புவன என்றே கொள்ளத்தக்கவை. அவற்றில் கருத்துச் செலுத்துவது பெரும் பயனுடையதாகும் என்பதில் ஐயமில்லை.

அவர் முதல்கருத்து வரலாற்று முக்கியத்துவம் உடையது. மொழியாராய்ச்சியாளரின் தனிப்பட்ட கவனத்திற்குரியது.

''முதலாவது நாம் கவனிக்கத்தக்கது, திராவிடமொழிகள் பலவும் புறநானூற்றுக்குப்பின், இவ்விரண்டாயிரம் ஆண்டுகளில் தோற்றியவைகளே. மலையாளம் சுமார் கி. பி. 1200-ல் தமிழிலிருந்து கிளைத்தது. இதற்கு 4 அல்லது 5 நூற்றாண்டுகளுக்கு முன்னே கன்னடமும் தெலுங்கும் கிளைத்தன.

"தமிழுக்கும் இவற்றுக்கும் இடையேயுள்ள தொடர்பு தாய்மை (சேய்மை)த் தொடர்பா, அல்லது தமக்கை தங்கைத் தொடர்புதானு என்ற விவகாரம் இப்போது அவசியமில்லை. ஆசிரியர் சுந்தரம் பிள்ளை,

"கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளம் துளுவும்
உன்னுதரத்து உதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்"

என்று கூறியது பெரும்பாலும் உண்மையே என நடுநிலையாளர் எவரும் ஒப்புக்கொள்வர்.........

"இம்மொழிகள் எல்லாம் தோன்றுவதற்கு முன்பு புறநானூற்றுச்செய்யுட்கள் தோன்றின என்று அச்செய்யுட்களின் தொன்மையும், அத்தொன்மையின் அளவும் புலப்படுத்தற்கு மாத்திரமே இங்கு இச்செய்தி கூறப்பட்டதாகும்."

ஆசிரியர் இரண்டாவது குறிப்பு நாம் மேலே சுட்டிக் காட்டிய அவர் அடிப்படைக் கருத்தின் விளக்கமேயாகும். இன்று தென்னுட்டவரிடையே தமிழர் அறிவிலும், மலையாளிகள் கலையுணர்விலும்,கன்னடியர் பண்பிலும், தெலுங்கர் வீரத்திலும் மேம்பட்டுள்ளனர் என்று எவரும் எளிதில் காணலாம். பண்டைத் தமிழினம் இவ்வெல்லா மொழியினங்களையும் உட்கொண்டிருந்தது போலவே, இவ்வெல்லாத் திறங்களையும் ஒருங்குடன் கொண்டிருந்தது. ஆனல் அதில் மேம்பட்டு முனைப்பாய் இருந்த பண்பு ஒன்று உண்டென்ருல், அது வீரப் பண்பே. ஆசிரியர் வையாபுரியார் இதைத் தெள்ளத் தெளியப் புறநானூற்றிலே காண்கிருர்.

புறநானூற்றில் காணப்படும் வீரத்துக்கு ஓரளவு இணையாகச் சொல்லத்தக்க வெளியுலக இனங்கள் இந்தியாவில் இராசபுத்திர இனமும், ஐரோப்பாவில் வடதிசையில் முன்பு வாழ்ந்த டேனிய வடஜெர்மனிய இனமேமுயாகும். இவ்வீர மரபின் ஒரு சிறு தடத்தைக்கூடத் தற்காலத் தமிழினத்தில் காணமுடியவில்லையே என்று இராவ்பகதூர் பெரிதும் கவல்கின்ருர்.

"நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக நமக்கு நாட்டுப்பற்று என்பது போய்விட்டது. நாட்டுக்காக உயிர் விடுதல் என்பது பழங்கதையே! வீரம், தீரம் என்பவை எல்லாம் அகராதியில் காணும் சொற்களாய் முடிந்தனவேயன்றி, அவற்றுக்கும் இன்றுள்ள நமது வாழ்க்கைக்கும் யாதொரு தொடர்பும் இல்லாமல் சென்றொழிந்தது. நாடு நலம்பெற வேண்டுமாயின் இந் நல்லுணர்ச்சிகளை நாம் மீண்டும் பெறுதல் வேண்டும்.

இங்ஙனம் செய்வதற்குப் புறநானூற்றுச் செய்யுட்களைவிட உற்றதுணை நமக்கு வேறு யாதும் இல்லை.''

புது மலர்ச்சி

புறநானூறு பற்றி ஆசிரியர் வையாபுரி அவர்கள் கொண்டுள்ள கருத்து, அவர் ஆர்வம் ஆகிய இரண்டும் யாவராலும் வரவேற்கத் தக்கவையே, ஏற்றுக்கொள்ளத் தக்கவையே. ஆனால் புறநானூற்றில் அவர் கொண்டுள்ள மட்டுமீறிய ஆர்வத்தால் அவர் அப்பழம்புகழ் வீரத்தின் தேய்வு நலிவுகளை மட்டுமே தமிழினத்திலும், அதன் வரலாற்றிலும் காண முடிகிறது. தேய்விடையே புதுத்தளிர்விட்டு நலிவிடையே வளரத் தொடங்கியுள்ள புதுமலர்ச்சியை அவர் காணவில்லை என்பது தெளிவு. ஏனெனில் தமிழின வரலாற்றிலே நாம் இந்த வீரத்தின் தேய்வைமட்டுமல்ல, அதன் புதுவளர்ச்சியையும் காணலாம்.

புறநானூற்று வீரம் இலக்கிய வீரம் மட்டுமன்று. வாழ்க்கையில் தழைத்து இலக்கியத்தில் கனிந்த வீரமே! மதுரைக் காஞ்சி மூலம் அதுவே தலையாலங்கானத்துப் பெரும் போர் வெற்றியாகி இலக்கியத்திலும்வாழ்விலும் மலரக்காண்கிறோம். இப்புகழை இமயம்வரை கொண்டு செல்கிறது, சிலம்புச் செல்வம். இதனை அடுத்து முத்தொள்ளாயிரத்தில் தமிழில் முன்னோ பின்னோ என்றுமில்லாத வகையில் அது பின்னும் இன்னிலா வொளிபூத்து முறுவலிக்கக் காண்கிறோம். சோழப் பேரரசர் காலத்தில் அது இலக்கியத்தில் மூவருலாவாகவும், கலிங்கத்துப் பரணியாகவும் புதுமுகையவிழக்காண்கிறோம். இவை இலக்கிய முகைகள் மட்டுமல்ல. வங்கம், கலிங்கம், கடாரம் ஆகிய நாடுகள் அப்புது வீரகாவியங்களால் அதிர்வுற்றன. அவற்றிலிருந்து எழுந்த வீர அலைகள் அராபிக் கடலில் மாலத்தீவுகள் என்னும் பழந்தீவுகள் பன்னீராயிரத்தையும், வங்காள விரிகுடாவில் அந்தமான் நிக்கோபார் என்னும் மாநக்கவாரத்தீவுகளையும் அலைக்கழித்தன.

சோழப்பேரரசைவிட எல்லையில் குறைந்தாலும் வீரத்தில் குறைந்ததல்ல, பிற்காலப் பாண்டியப் பேரரசு!மேலும் செல்வ நிலையில் அது சோழப் பேரரசையும் விஞ்சியிருந்தது என்பதை வெளிநாட்டார் குறிப்புக்களே தெரிவிக்கின்றன. முன்என்றும் இல்லாவகையில், அந்நாளைய வரலாற்றாசிரியர் தமிழகத்தைப் பெரிய இந்தியா என்றும், சிந்து கங்கைப் பரப்பைச் சிறிய இந்தியா என்றும் அழைத்திருந்தனர். தமிழகத்தின் இவ்வீர வாழ்வும், கீழ்த்திசை உலகின் விடுதலை வாழ்வும் சரிந்ததற்கே

பாண்டியர் திரட்டிய இந்தப் பெருஞ் செல்வந்தான் காரணம் என்று அறிகிறோம். பாண்டியப் பேரரசர் காலத்தில் தமிழகத்திலேயே வந்து குவிந்து கிடந்த உலகின் செல்வம், அதற்குக் காரணமான தமிழகத்தின் உலகப் பெருந் தொழில்கள் ஆகியவற்றைக் கவரவே போர்ச்சுக்கீசியரும் டச்சுக்காரரும், டேனியரும் ஜெர்மானியரும், பிரஞ்சுக்காரரும் ஆங்கிலேயரும், தமிழகத்திலும் தமிழகம் சூழ்ந்த தென்கிழக்காசியாவிலும் வட்டமிடத் தொடங்கினர்.

தமிழருக்கும் கீழ்திசை யுலகுக்கும் வாழ்வளித்த தமிழர் வீரம் வெள்ளையராட்சியின் தொடக்கத்தில் வெள்ளையருக்கே புதிய வாழ்வும் உலக வாணிக, தொழில் தலைமையும், பேரரச வாழ்வும் தந்தது. வீரம் அழியவில்லை, ஆனால் அது அயலாருக்குப் பயன்பட்டது. ஆயினும் வெள்ளையர் ஆட்சியின் பிற்பகுதியில், இதே வீரம் தம் ஆட்சிக்கு ஆபத்தானதென்று கண்டு, வெள்ளையர் அதை அழிக்க முற்பட்டனர். ஆனால் அது அவர்களையெதிர்த்துப் பாஞ்சாலங்குறிச்சியிலும், வேலூரிலும், மைசூரிலும் கிளர்ந்தெழுந்தது.

## தமிழர் மரபில் பிளவுகள்

பாண்டியப் பேரரசுக் காலத்திலும், வெள்ளையராட்சியிலும், புறநானூற்றுக்கால வீரம் மறைந்துவிடவில்லை; குறைந்து விடக்கூட இல்லை. ஆனால் அதனால் எதிர்பார்க்கப் படத்தக்க வளம் மட்டும் கிட்டவில்லை. அதுமட்டுமன்று. புறநானூற்றுக் கால வீரம் குன்றாது நின்று நிலவினாலும், புறநானூற்றுக் காலத்தமிழ் இலக்கிய வளம்தான் அதைப் பாடும் தகுதியில் குறைந்து விட்டது என்னல்வேண்டும். 'வெற்றி வேற்கை வீரராமன்' என்று தன்னைக் குறித்துக்கொண்ட அதிவீரராமபாண்டியன் தமிழர் வீரம் பாடவில்லை. நளகதையே பாடினான். அல்லது நீதி நூல்கள், காம நூல்கள், கடவுட் கவிதைகள் இயற்றினான். பாஞ்சாலங்குறிச்சி வீரமரபு புது வீர காவியம் பாடிற்று. ஆனால் அதில் காவியப் பண்பைவிட வீரப் பண்பே மிகுதி. அதைப் பாடிய மரபு வேறு, இலக்கியப் புலவர் மரபு வேறாக அன்று விளங்கிற்று.

புறநானூற்று வீரம் பொன்றி விட்டது என்று புலம்பும் வையாபுரியவர்கள் பிறந்த இடத்துக் கருகிலேதான் பாஞ்சாலங்குறிச்சியின் புகழ் நின்று நிலவிற்று. அதுமட்டுமன்று. அவர் அருகிலே, அவர் காலத்திலேதான், புதிய வீரசோதியாக வ. உ. சிதம்பரனாரின் புத்தியக்கம் பழம் புகழ் புதுக்கிற்று.

அவர் காலத்திலேதான் திருப்பூர்க்குமரன் புறநானூற்று வீரத்துக்கு ஒரு புத்துருத்தந்தான். ஆனால் இவற்றை யெல்லாம் காண முடியாத நிலையில் வையாபுரி போன்றோரின் இலக்கிய மரபு வேறாகவும், திருப்பூர்க்குமரனின் வீரமரபு வேறாகவும் தமிழகத்தில் பிரிவுற்று இயங்கின. ஆனால் கவிஞர் பாரதி மீண்டும் தமிழகத்தின் இருமரபுகளையும் தம் கவிதையில் இணைத்துப் புதிய விடிவெள்ளியாக ஒளி விசியுள்ளார். அயலாட்சிகளிலும், அயற் பண்புகளிலும் குளிர்காய்ந்த வையாபுரி போன்றோரின் இலக்கிய மரபு பாரதியார் கவிதையைப் போற்றிற்று. ஆனால் அக்கவிதையிலே புதிதாகத் தளிர்விட்டுப் பொலியத் தொடங்கிவிட்ட இந்தப் புதிய மெய்ம்மையை அது காணவில்லை.

புறநானூற்றுக் கால வீரம் இன்னும் தமிழரிடையே இருக்கிறது. அக்கால அறிவும் இருக்கிறது, கலையும் இருக்கிறது. ஆனால் இவற்றின் தங்கு தடையற்ற வளர்ச்சிக்குரிய விடுதலையுரிமையாட்சியும், ஒன்றுபட்ட இன எழுச்சியும், மரபொற்றுமையும்தான் நம்மிடையே இல்லை. தமிழர் வீரமரபை இன்று தமிழர் அறிவுமரபு அடக்கி ஒடுக்கி அமிழ்த்திக் கங்காணி மரபாய் இயங்குகிறது. தமிழர் கலைமரபு இன்னும் பெரிதும் அயல் மொழி, அயல் இன ஆட்சிகளுக்குப் பரிந்து முன்னின்று உழைக்கும் நிலையிலேயே உள்ளது. தமிழர் கோயிலில், சமய வாழ்வில், திருமணங்களில் இன்னும் பிறமொழி ஆட்சி நீங்கவில்லை. தமிழர் கல்வி இன்னும் பிறமொழிக் கல்வியாகவே நீடிக்கின்றது. தமிழர் அரசியல் வாழ்வு இன்னும் பழந்தமிழர் புகழவாவினை முழுதளவில் மக்களிடம் எழுப்பும் நிலை அடையாமல்தான் இருக்கிறது!

வீரமரபில் வந்து அறிவும் கலையும் வளர்த்த தமிழர் மீண்டும் வீரம் வளர்த்த பின்னரே, தம் அறிவையும் தம் கலையையும் தமக்குப் பயன்படும் உயிர் அறிவாகவும், உயிர்க் கலையாகவும் வளர்க்க முடியும். தமிழர் போர்க்களங்களின் வரலாறு தமிழ்மரபின் உயிர் வரலாற்றை அவர்கள் கண்முன் கொண்டு வருவதுடன், அவ்வீர மரபை வளர்க்கவும் உதவும் என்பது உறுதி.

# 2 வான விளிம்பு

தமிழகத்திலே பல வரலாற்று மரபுகள், புராண மரபுகளிடையே புராண மரபுகளாக மயங்கியுள்ளன. அதே சமயம் பல புராண மரபுகள், வரலாற்று மரபுகளாக மதிப்புப் பெற்றுள்ளன. பழமையின் வான விளிம்பிலேயே இவற்றின் மயக்கங்கள் மிகுதி.

எடுத்துக் காட்டாக, தமிழ் மூவேந்தர்களுடைய தலை சிறந்த முன்னோர்களின் அருஞ் செயல்களே தமிழர் பெருந் தெய்வங்களின் புகழ் மரபுகளாக உலவுகின்றன. சிறப்பாகப் பாண்டியர் வாழ்வுடன் சிவபெருமானும், சேரர் வாழ்வுடன் முருகனும், சோழர் வாழ்வுடன் திருமாலும் இணைகின்றனர்.

மலையமலைக்குரிய மன்னனாகிய பாண்டியன் வளர்த்த முத்தமிழ் நங்கையே மூன்று மார்பகங்களையுடைய தடாதகைப் பிராட்டி அல்லது மலைமகளாகவும், அவளை மணந்த சௌந்தர பாண்டியனே சிவபெருமானாகவும், அவர்கள் பிள்ளை உக்கிர பாண்டியனே முருகனாகவும் திருவிளையாடற் புராணத்தில் காட்சியளிக்கின்றனர். பல ஆராய்ச்சியாளர் சௌந்தர பாண்டியனை நிலந்தரு திருவிற் பாண்டியன் அல்லது தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன். நெடுஞ்செழியனாகவும், உக்கிர பாண்டியனை கானப் பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதியாகவும் காண்கின்றனர்.

கடன்மா (கடலில் விரைந்து முன்னேறும் மரக்கலம்) ஊர்ந்து சென்று கடற் கடம்பரை அழித்த சேரரின் பெருஞ் செயலிலே நாம் முருகன் வீரப் புகழ் மரபைக் காண்கிறோம். கடல்பிறக் கோட்டிய செல்கெழு குட்டுவனின் இச்செயலை வருணிக்கும் பரணர் புராண மரபினை உவமையாகக் காட்டத் தவறவில்லை. இக்குட்டுவனோ அல்லது அவன் முன்னோருள் ஒருவனோ முருகனாகவும் 'கடம்பின் வாயில்' போரில் அவனால் முறியடிக்கப்பட்ட பெண் கொலை புரிந்த நன்னனோ அல்லது அவன் முன்னோருள் ஒருவனோ சூரபன்மனாகவும் உருவகப் படுத்தப் பட்டிருக்கக் கூடும்.

**கடவுளராகக் காட்சியளிக்கும் காவலர்!**

சோழர் தொடக்கக் கால மன்னர் மரபு வரலாற்று மரபா, அல்லது முற்றிலும் புராண மரபுதானா என்று ஐயுறத் தக்கதாகவே உள்ளது. அத்துடன் அவர்களில் சிலர் பெயரும் புகழும் அப்படியே இராமாயணத் தலைவன் இராமன்

முன்னோர் சிலரின் பெயருடனும் புகழுடனும் முற்றிலும் ஒன்றுபடுகின்றன. இராமன் திருமாலாகக் கருதப்படுவதற்கு இதுவே வழி செய்திருக்கக் கூடும்.

புராண மரபுடன் மயங்கும் இந்தச் சோழர் குடி முதல்வர்கள் சிபி, முசுகுந்தன், காந்தமன், செம்பியன், மனு ஆகியவர்கள். இவர்களில சிபி ஒரு புறுவைக் காப்பதற்காக அதைத் துரத்தி வந்த பருந்தினிடம் தன் தசையையே அரிந்து கொடுத்தான் என்று கூறப்படுகிறது. முசுகுந்தனே அரக்கர்கள் பலரை வென்று இந்திரனையே காத்தவன்! காந்தமன் தன் வாளால் குடகு மலையைப் பிளந்து காவிரியைச் சோழநாட்டில் ஓடச் செய்தவன் என்று குறிக்கப்படுகிறான். செம்பியன் அரக்கர்களின் பறக்கும் கோட்டைகள் மூன்றைத் தாக்கி அழித்து, உலகு காத்தவனாகப் புகழப்படுகிறான். தூங்கெயில் எறிந்த தொடித் தோட்செம்பியன் என்ற அவன் விருதுப்பெயரே இவ்வரலாறு காட்டுகிறது. மனுச்சோழன் ஆவின் கன்றின் மீது தேரை ஏற்றி விட்டதற்காக தன் மகனைத் தானும் தேர்க்காலில் இட்டுஅரைத்து நீதியைநிலை நாட்டினான் என்று அறிகிறோம்.

தமிழில் எவ்வளவு பற்றார்வம் கொண்ட தமிழரும் இந்தக் கதைகளை வரலாறு என்று கூறவோ, நம்பவோ தயங்குவர். ஆயினும் சிலப்பதிகாரமும் கலிங்கத்துப் பரணியும் மட்டுமன்றி,பல கல்வெட்டுக்களும் புகழும் செயல்கள் இவை! இவற்றை முற்றிலும் கற்பனை, வரலாற்று மெய்மை சிறிதும் அற்றவை என்று ஒதுக்கி விடவும் முடியாது. மனிதனின் வீரச் செயல்கள், சிறந்தசெயல்கள் இங்கே தெய்வச் செயல்களாகப் புனைந்துரைக்கப்பட்டு, அதன் மூலம் வரலாற்று மெய்மைகள் பெரிதும் உருத் தெரியாமல் சிதைக்கப்பட்டுள்ளன என்பது தெளிவு.

**கனவேயாயினும் வியத்தகு கனவே !**

இருபதாம் நூற்றாண்டில் தான் நம் காலத்தில் நாம் வானூர்திகளையும், பறக்கும் கோட்டைகளையும் பற்றிக் கண்டும் கேட்டும் வருகிறோம். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தமிழர் தம் நாளிலும் பழஞ் செய்திகளாக இவற்றைக் கூறும் போது, அவை தமிழன் கண்ட கனவுகளாய் இருந்தால் கூட வியத்தகு கனவுகளே யாகும் என்பதில் ஐயமில்லை. தமிழன் கனவில் கண்ட இந்த வானகப் போர்க் காட்சி அவனது அரை வரலாறு, அரைப் புராண மரபில் திரிபுர மெரித்த விரிசடைக் கடவுளாகவும் காட்சி தருகின்றது.

இதிலும் விந்தையென்னவென்ருல் கனவில்கூடத் தமிழ் அரசனே, தமிழ்த் தெய்வமோ பறந்ததாகத் தமிழன் கற்பனை செய்யவில்லை. அந்த அரசன் எதிரிகளும் அந்தத் தெய்வத்தின் எதிரிகளும்தான் பறக்கும் கோட்டை அல்லது பறக்கும் நகரங்களை ஆண்டனர். வானகப்போரின் புகழை அவ்வரக்க எதிரிகளுக்கே தந்துவிட்டு, தன் அரசனுக்கும் தெய்வத்துக்கும் தமிழன் வெற்றிப் புகழைமட்டுமே தந்தான்! தமிழரசர், தமிழ்த் தெய்வம் பறக்கும் வித்தையைக் கற்றுக் கொள்ளாவிட்டாலும், அதைக் கற்றவரை அழிக்கக் கற்றுக் கொண்டிருந்தனர் போலும்!

வாழ்விலே கண்ட தன்றிக் கனவிலே எதுவும் தோன்றுவதில்லை என்பர். கண்டதைக் கனவுமிகைப்படுத்தலாம், திரிக்கலாம். ஆனால் குறைந்த அளவு கண்டதை அல்லது காண அவாவியதை அல்லது கண்டஞ்சியதைத்தான் அது உருவகப் படுத்தமுடியும். அப்படியானல் இக்கனவின் மூலம் தமிழர் பழமையில் வருங்கால ஆராய்ச்சி ஒருபடி முன்னேற வழி காணக்கூடும் எனலாம்.

## நாக மரபு

புராண மரபில் மறைந்து அல்லது மறைக்கப்பட்டுக் கிடக்கும் இன்னும் சில செய்திகளை இது நம் நினைவுக்குக் கொண்டுவரக் கூடும். இந்தப் பறக்கும் கோட்டைகளுக்கு உரியவர் தமிழ் இனத்தவராலும் ஏனை இனத்தவராலும நாகர்கள் என்று குறிக்கப்பட்டவரே யாவர் என்று ஊகித்தல் தவறல்ல. தமிழர் பெருநகரங்களைக் கட்டியவர்கள் என்று தமிழிலக்கியமும், பாண்டவர் தலை நகரைக் கட்டியவர்களென்று பாரதமும் புகழ்வது இவ்வினத்தவரையே. அவர்கள் தமிழகத்திலும் தென்னாட்டிலும் மட்டுமன்றி, இலங்கையிலும், வட இந்தியாவிலும், கீழ்கடல் தீவுகளிலும் அன்று வாழ்ந்தார்கள், இன்றும் வாழ்கிருர்கள். நாகரிகத்தில் பிற்பட்டுக்கிடக்கும் நிலையில்கூட அசாமில் தம் இனத்துக்கெனத் தனி நாடு கோருமளவு அவர்கள் இன்றும் தனி வாழ்வும் தனிப்பண்பும் உடையவர்களாகவே உள்ளனர்.

ஆரியர்க்குச் சமஸ்கிருத எழுத்தை முதன் முதலில் ஆக்கித் தந்தவர்கள் என்றும், நாகரிகம் கற்பித்தவர்களென்றும் நாகர்களை ஆராய்ச்சி யறிஞர் போற்றியுள்ளனர். உலகில் முதல்முதல் கடலுள் மூழ்கி முத்தெடுத்தவர்களென்றும், பாம்புகள்போலவும் எறும்புகள்போலவும் நிலத்

தின் கரு அகழ்ந்து உலகில் முதன் முதலாகப் பொன் வெள்ளி முதலிய உலோகங்களைக் கண்டவர்கள் என்றும், அருங்கலை வேலைப்பாட்டில் சிறந்தவர்களென்றும் கருதப்படுபவர்கள் அவர்கள். இன்றுகூட இத்தொழில்களில் உலகெங்கும் இவ்வினத்தவரோ அல்லது அவர்களுடன் குருதிக் கலப்புடையவர்களோ தான் திறம்பட ஈடுபட்டு உழைக்கின்றனர் என்றும் கேள்விப்படுகிறோம்.

உலகெங்கும் பாம்பு வழிபாட்டைப் பரப்பியவர்களும் இந்த நாகர்கள் என்றே கருதப்படுகிறது. இது அவர்கள் முற்காலப் பொதுப்பரப்புக்கு மட்டுமன்றி, மலையாள நாட்டில் சிறப்பாகப் பரவிய செறிவுக்கும் சான்று ஆகும். பாம்புக் காட்டு நம்பூதிரிகள் என்று கூறப்படும் மலையாள பிராமணர்கள் உண்மையில் பண்டை நாகரின் பெருங்குடி மரபினரே யாதல் கூடும்!

புத்தர் பிறந்த சாக்கியர் குடி நாகமரபு சார்ந்ததென்று அவர் பிறப்பிடத்தின் அகழ்வாராய்ச்சி ஏடுகள் கூறுகின்றன. புத்தமதம் வங்கத்திலும், தென்னாட்டிலும், இலங்கையிலும், பர்மா சீனாவிலும் விரைந்து பரவியதற்கு இவ்விடங்களில் உள்ள மக்களில் பெரும் பகுதியினர் நாகமரபினராக இருந்ததே தலையான காரணம் எனறும் கூறப்படுகிறது.

இந்த நாகர்கள் யார்? எந்த இனத்துடன் நெருங்கிய தொர்டபுடையவர்கள்? இவர்கள் பண்டைப் பெருவாழ்வு அழிந்து உலகெங்கும் இன்று சிறுமையுற்று நலிவானேன்?

இன்னும் ஆராய்ச்சியுலகம் தெளிவாக வரையறுக்க முடியாத கேள்விகள் இவை! ஆயினும், ஆராய்ச்சிக்கு இங்கே கொடிகாட்டல் முடியாததன்று.

நாகர்களுக்கென்று இன்று தனி மொழி எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. அவர்கள் சில இடங்களில் திராவிட மொழிகளையும், சில இடங்களில் வேற்றின மொழிகளையும் பேசுகின்றனர். ஆனால் எங்கும் அவர்கள் நாகரிகம் ஒன்றே! எங்கும் அவர்கள் தம்மை நாகர்கள் என்றே கூறிக்கொள்கின்றனர், பாம்பு என்ற பொருளில் இப்பெயர் தமிழுக்கும் சமஸ்கிருதத்துக்கும் பொதுவான பெயரேயாகும். ஆனால் நாக மரபினரின் கிளையினத்தவரான வில்லியர் முதலிய பெயர்கள் தென்னாட்டிலும் வட இந்தியாவிலும் ஒருங்கே 'வில்' என்ற தமிழ்ச் சொல்லடிப்படையான தமிழ்ப் பெயராகவே காணப்படுகின்றன.

நாகர் தமிழினத்தவரே!

நாகர்கள் உண்மையில் தமிழகத்தில் நாற்புறமும் செந்தமிழ் அல்லது திருந்திய தமிழ் பரவாத இடங்களில் உள்ள தமிழினத்தவர்களே. செந்தமிழ் பரவாத இடத்திலேயே ஆரிய முதலிய பிற இனத்தாக்குதல்கள் முதன் முதலில் நிகழ்ந்ததனுல், அவர்கள் தமிழகத்துக்கு வேலியாய், அயலவர்க்கு எளிதாக இரையாயினர். இக்காரணத்தால் அவர்கள் மதிப்பில் குறைந்து அடிமைப்பட்டனரேயன்றி, பண்பாட்டில் எளிதில் மாறவில்லே. தமிழகம் சூழ்ந்த திராவிட இனத்தவர்கள் மட்டுமன்றி, சிங்களர், வங்காளர், பர்மியர், மலாய் மக்கள், திபெத்தியர், நேபாள காசுமீர மக்கள் ஆகிய பலரும் இந்நாக மரபினரேயாதல் சாலும். இந்தியா முழுவதிலும் தாழ்த்தப்பட்ட மக்கள், கோயில் குருக்களாகவும், மருத்துவ, மந்திர, சோதிட வாணர்களாகவும் உள்ள வகுப்பினர் நாகர்களே என்றே கருத இடமுண்டு.

வருங்கால ஆராய்ச்சிகள் இவற்றைத் தெளிவுபடுத்த வேண்டும்.

மனித இனத்திடையே மனித இனத்தவரான இந்த நாகரைப் பண்டைத் தமிழர்கூடத் தெளிவாய் அறியாமல், இன்றைய ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ச்சியும் தெளிய முடியாமல் மறைத்ததற்கும், மறைப்பதற்கும் புராண மரபுகளும், அவற்றைப் பின்பற்றிய தமிழ், சமஸ்கிருத இலக்கிய மரபுகளுமே காரணமாகும்.

ஓரிடத்தில் இம்மரபுகள், நாகர் வாழ்வகம் தேவர் உலகம் என்கின்றன; ஓரிடத்தில் நிலவுலகுக்கு அடியில் உள்ள ஒரு கீழுலகம் என்று காட்டுகின்றன. ஒரு சில சமயங்களில் மணிமேகலே போன்ற ஏடுகள் தம்மையறியாமல் புராண மரபை மறந்து அதை மனித உலகமாகக் கூறிவிடுகின்றன. கிள்ளிவளவன் நாக அரசனுன வலேவணன் மகளாகிய பீலிவளேயை மணந்து தொண்டைமானே ஈன்றதாக மணிமேகலே மூலம் கேள்விப்படுகிறோம்.

நாகர்கள் மனித உருவினர் என்று சில சமயமும் பாதி மனிதர், பாதி பாம்புருவங்களென்று சில சமயமும் புராண மரபில் குறிக்கப் பெறுகிருர்கள். நாகரிகமுடையவர்களென்று சில சமயமும், ஆடையற்ற, மனிதரைத் தின்கின்ற காட்டுமிராண்டிகள், அரக்கர்கள் என்று வேறு சில இடங்களிலும் அவர்கள் வருணிக்கப் படுகிருர்கள்.

திருந்திய தமிழ் அல்லது செந்தமிழ் பரவிய இடமெல்லாம் திருந்திய ஆரியம் அல்லது சமஸ்கிருதமும் பரவிற்று.

பண்டைத் தமிழர் நாடகக் கலையும், இசைக் கலையும் முதன் முதல் செந்தமிழ் நிலத்திலே அழிவுற்று, பின் சமஸ்கிருதத்தில் பரவி அங்கே உயிர்ப்பும் வளர்ச்சியுமற்று நலிந்ததைக் காண்கிறோம். அதுபோலவே செந்தமிழ் பரவிய இடமெல்லாம் நிலவிய நாகர் அல்லது பழந்தமிழினத்தவர் விஞ்ஞான அறிவும் அழிவுற்று, சிலகாலம் சமஸ்கிருதத்தில் தலைகாட்டி ஒய்ந்தது. ஆனால் நாகர் வாழ்விழந்தபோதும் தொழில் துறையுள் அதை நீண்ட நாள் பேணி வந்தனர். இராவணனின் வானவூர்தி, சிந்தாமணியின் பறக்கும் குதிரை, அராபிக் கதைகளில் வரும் மாயக் கம்பளங்கள், மந்திரங்கள் ஆகியவை படிப்படியாக அழிந்துவந்த நாகரின் விஞ்ஞான அறிவின் கனவுலகத் துடிப்புகளே என்னலாம்.

அந்நாளில் விசையூர்திகள், பறவையூர்திகள், விசைச் செய்திகள் முதலிய பல புதுமைகள் செயலிலேயே நிலவின என்பதைப் பண்டிதமணி அவர்கள் தமிழில் மொழி பெயர்த்துள்ள சுக்கிரநீதி ஐயத்துக்கிடமில்லா வகையில் குறிப்பிடுகிறது. அதை இயற்றிய சுக்கிராச்சாரியார் அசுரகுரு என்று பின்னாட்களில் கருதப்பட்டுவிட்டார் என்பதும், தென்னாட்டுப் பேரரசன் மாவலிவாணனுக்கு அவரே அமைச்சரும் குருவும் ஆவார் என்பதும் குறித்துக் காணத் தக்கன.

எனவே பறக்கும் கோட்டை முதலியன தமிழர் கனவானாலும் நாகர் கனவின் நிழல்களேயாகக்கூடும்.

நாகர் வாழ்வு பற்றிய மெய்ம் மரபுகளைப் போலவே புராண மரபுகளால் மறைக்கப்பட்ட மற்றொரு வரலாற்றுக் கூறு மாவலி மரபு அல்லது வாண மரபு ஆகும்.

### வாண மரபு

மாவலி ஒரு கொடிய அரக்கன் என்றும், திருமாலின் எதிரி என்றும், திருமாலின் வாமன அவதாரத்தால் கொன்றொழிக்கப்பட்டவன் என்றும் பாகவத புராணம் கூறுகிறது. ஆயினும் வியத்தகு முறையில் திருமால் பக்தர்களேயான திருவாங்கூர், கொச்சி அரசர்கள் அணிமைக்காலம் வரை தம்மை மாவலியின் மரபினர் என்று கூறுவதிலேயே பெருமை கொண்டுள்ளனர். இது மட்டுமோ? மலையாள நாட்டுப் பொதுமக்கள் மாவலியின் நல்லாட்சியின் நினைவாகவே தம் தேசிய சமுதாய விழாவாகிய திருவோணத்தை ஆண்டுதோறும் இன்றும் கொண்டாடி வருகின்றனர். தென்னாடெங்கும் ஒரே மொழி நாடாகக்கொண்டு ஆண்ட

பேரரசன் என்றும் அவனைக்குறிக்கின்றனர். மலையாள நாடு மட்டுமன்றிப் பண்டைத் தமிழகம் முழுவதுமே இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் இவ்விழாவைக் கொண்டாடியதாக அறிகிறோம்.

மணிமேகலையில் கிள்ளிவளவனின் பட்டத்தரசியான சீர்த்தியும், தஞ்சைவாணன் கோவையில் அதன் பாட்டுடைத் தலைவனும் மாவலி மரபினரே என்று காண்கிறோம். மற்றும் மாவலியின் மகன் வாணன் பெயரால் அவன் மரபினர் வரலாற்றில் தம்மை வாணர் என்றே குறித்துக் கொள்கின்றனர். அவர்கள் மாவலியைப் போல என்றும் பேரரசராக வாழாவிட்டாலும், அந்த எண்ணத்தை ஏழேழு தலைமுறைகளாக மறக்கவில்லை. ஏனெனில் வாணர் மரபின் குடிகளும் கிளைக்குடிகளும் வல்லமை வாய்ந்த சிற்றரசர்களாகத் தமிழகத்திலும் தென்னாட்டின் பல பல திசைகளிலும் சங்க கால முதல் பிரிட்டிஷ் வாணிகக்குழு ஆட்சிக் காலம்வரை இரண்டாயிரம் ஆண்டு இடையறா ஆட்சி நடத்தினர். எத்தனையோ அரச பேரரச மரபுகள் தோன்றி வளர்ந்து மறைந்தபோதும் அவர்கள் அவ்வளவு காலமும் அழியாமல் தம் மரபும் பெருமையும் காத்து வாழ்ந்தனர். எண்ணற்ற பல கல்வெட்டுகள் இதற்குச் சான்று பகர்கின்றன.

நம் வரலாற்றாராய்ச்சி ஒளியோ, நமக்கு இன்று அழியாது மீந்துள்ள தமிழிலக்கிய ஒளியோ சென்றெட்டாத தொல் பழங்காலத்தில், மாவலி தென்னாடெங்கும் ஒரு குடைக்கீழ் ஆண்ட பேரரசனாயிருந்திருக்க வேண்டும் என்பதை இவ் வரலாற்றுத் தடங்கள் காட்டுகின்றன. ஆனால் புராணமரபின் மாயவண்ணம் இவ்வுண்மைத் தடத்தின்மீது ஆராய்ச்சியாளர் கண்ணொளிகூடப் பரவாமல் தடுத்து வருகின்றது.

### பாரத இராமாயண மரபுகள்

புராண மரபைவிடத் திண்ணிய திரையிட்டுள்ளது இதிகாச மரபு. புராண மரபு மயங்க வைக்கிறது என்றால், இதிகாச மரபு திகைக்க வைக்கின்றது, ஆராய்ச்சி யறிஞர்கள் கூடச் செய்திகளை திரித்துணருமாறு செய்கிறது.

இராமாயண பாரதக் கதைகள் சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும், சங்க இலக்கியங்களிலும் பல விடங்களில் சுட்டிக் குறிக்கப்படுகின்றன. ஆனால் கதையுடனன்றி, கதை நிகழ்ச்சிகளுடனும் கதை யுறுப்பினர்களுடனுமே தொடர்பு கொண்டு ஒரு சில மிகப் பழமை வாய்ந்த பாடல்கள் சங்க

இலக்கியத்தொகுப்பில் (சிறப்பாகப் புறநானூற்றில்) நமக்குக் கிட்டியுள்ளன. அவற்றுள் ஒன்று பெருஞ்சோற்றுதியன் சேரலாதனை முரஞ்சியூர் முடிநாகராயர் என்ற புலவர் பாடியது ஆகும்.

"அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருது களத்து ஒழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாதுகொடுத்தோய்!
(புறம் 2)

என்று அப்புலவர் அரசனை நேராக விளித்துப் பாடுகிறார். 'அலைந்தாடுகின்ற பிடரி மயிரினையுடைய குதிரைகளை உரிமையாகக்கொண்ட ஐவருடன் (பாண்டவருடன்) சினங்கொண்டெழுந்து, அவரிடமிருந்து நாட்டைக் கைக்கொண்டு, பொன்னாலான அழகிய தும்பை மலர் சூடிப் போருக்கெழுந்த நூற்றுவரும் (கௌரவரும்) போரிட்டுப் போர்க்களத்திலே அழிவுற்ற சமயத்தில், இருசார்பினருக்கும் பெருவிருந்து கொடுத்த அரசனே!" என்பது இதன் பொருள்.

பாரதப் போரில் பெருஞ்சோறு அளித்ததனை ஒட்டியே இச்சேரப் பேரரசன் பெருஞ்சோற்றுதியன் என்றழைக்கப் பட்டான்.

இப்பாடல் பாரதக் கதையின் வாய்மைக்கே ஓர் அகச் சான்று என்று கூறத்தக்கதாய் உள்ளது. ஏனெனில் மன்னன் உதியன் சேரலாதன் பாரதப்போர் நடந்தபோது போர்க் களத்தில் பாண்டவருடனிருந்தவன். புலவர் அவனை நேரில் சென்று பாடியதனால் அவரும் அரசரும் பாரதப்போர்நிகழ்ந்த காலத்திலேயே வாழ்ந்தவராவர்.

பாரதப் போரைக் குறிக்காமல் அதன் முக்கிய உறுப்பினருள் ஒருவரும், பாண்டவர் ஐவருள் முதல்வருமான தரும புத்திரனைச் சோதமனார் என்ற புலவர் பாடியதாக மற்றொரு பாட்டு (புறம் 366) உளது. இதில் புலவர் தருமபுத்திரனை 'அறவோர் மகனே, மறவோர் செம்மால்!' என்று விளித்து, 'அறமும் பொருளும் இன்பமும் பெருக்கி நிலையான வீடுபேறு காண்பாயாக!' என்று வாழ்த்துகிறார். பாரதப் போர்க் காலத்தவராகக் கருதப்படும் மற்றொரு புலவர் மார்க்கண்டேயனார். நிலையாமை பற்றிய அவர் அழகிய பாட்டொன்று புறநானூற்றில் (362) காணப்படுகிறது. அத்துடன் யாப்பருங்கல விருத்தியுரையில் அவரால் பாடப்பட்டதாகத் தெரியவரும் மார்க்கண்டேயனார் காஞ்சியிலிருந்து ஓர் விழுமிய பாடலும் 'தோல்' என்பதற்கு எடுத்துக் காட்டாகக் குறிக்கப்படுகிறது.,

பாரதப் போரையும் பெருஞ் சோற்றுதியனையும் தம் காலச் செய்தியாகவே முரஞ்சியூர் முடிநாகராயர் குறிக்கிறார். அதே செய்தியைப் பழங்காலச் செய்தியாகக் குறிப்பவர் மாமூலனார் (அகம் 233). சிலப்பதிகாரமும்

'ஓரைவர் ஈரைம் பதின்மர் உடன் றெழுந்த
போரில் பெருஞ்சோறு போற்றாது தானளித்த
சேரன்' [29-வது வாழ்த்துக் காதை]

என்று இதே நிகழ்ச்சியைப் பழங்காலச் செய்தியாகக் குறிக்கிறது.

பாரதத்துடன் தொடர்புடைய இப்பாடல்களைப் போலவே, இராமாயணத்துடன் சமகாலத் தொடர்புடையதாகத் தோற்றும் மற்றொரு பாடலும் சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளது. இது பொதுவாக நிலையாமை பற்றி வான்மீகியார் என்ற புலவர் பாடிய பாட்டே [புறம் 358]. இப் பெயர் சமஸ்கிருதத்தில் இராமாயணம் இயற்றிய வான் மீகியையோ, இராமாயணத்திலேயே கதை யுறுப்பினராகக் காணப்படும் வான்மீகியையோ நினைவூட்டுவது ஆகும்.

## ஆராய்ச்சிப் போக்குகள்

பாரதம் இராமாயணம் ஆகிய இதிகாசங்களை வரலாற்று நிகழ்ச்சிகளாகக் கொள்பவருள்ளும் பலருக்கு இப் பாடல்கள் அதிர்ச்சியையும் குழப்பத்தையும் தந்துள்ளன. அவற்றைக் கற்பனைக் கதையென்று கருதுபவர்களிலும் பலருக்கு இது அதிர்ச்சியையும் குழப்பத்தையும் தரத்தவறவில்லை. ஏனென்றால் அவ்விரு சாராருமே இக் கதைகளைச் சமஸ்கிருதத்திற்கும் ஆரிய நாகரிகத்துக்குமே உரியன என்று எளிதாக முடிவுக்கட்டி வைத்துள்ளனர். இதற்கு மாறான சான்றுகளோ கருத்துக்களோ வந்தால் அவற்றை அவர்கள் செவியில் போட்டுக் கொள்ளுவதில்லை. அவற்றை மெல்ல நழுவவிடவே எண்ணுவர். அவர்கள் தரும் விளக்கங்களும் இதற்கேற்பச் சுவைகரமானவை.

வான்மீகியாரைப் போன்ற புலவர் தேவமொழிக்கே உரியவராதலால் மனித மொழியாகிய தமிழில் அப் பெயர் கொண்ட வேறு யாராவதுதான் பாடியிருக்க முடியும் என்று இத்தகையவர் சிலர் கூறுகின்றனர். அத்துடன் பெருஞ் சோற்றுதியன் சேரலாதன் பாரதப் போர்க்காலத்தில் இருந்திருக்க முடியாதென்றும், அவன் முன்னோர்கள் செயலையே புலவர் அவன்மீது ஏற்றிப்பாடியிருக்கலாம் என்றும்கூறுவர். இன்னும் சிலர் இராமாயண பாரத நாடகங்களில் நடிகர்கள் கூறுவதற்

காக இப் புலவர்கள் பாடிய பாடல்களே இவைகளென்று கூறி ஆராய்ச்சித் துறையிலேயே தம் கற்பனைத் திறத்தைக் காட்டு கின்றனர். ஆனால் சங்கப் பாடல்களின் பொதுஇயல்புகளை ஒரு சிறிது அறிந்தவர்களுக்கு இவ்விளக்கங்கள் பொருந்தா விளக் கங்கள் என்று மட்டுமே தோற்றக்கூடும்.

இவ் விளக்கங்களை மறுப்பது எவ்வளவு எளிதாயினும் அவற்றினிடமாக வேறு பொருந்தும் விளக்கங்கள் அளிப்பது எளிதாயில்லை. ஏனெனில் பாரத இராமாயணங்கள் வரலாற்று நிகழ்ச்சிகள்; கற்பனைக் கதைகளுமல்ல, ஆரிய திராவிடப் போராட்ட உருவகங்களுமல்ல என்று ஒப்புக்கொண்டாலன்றி இவற்றிற்கு விளக்கம் தர முன்வரவே முடியாது.

சமஸ்கிருதப்பற்றில் எவருக்கும் இளைக்காதவரும், அதே சமயம் அது காரணமாகத் தமிழ்ப்பற்றில் பின்னடையாதவரு மான விசித்திரப் பிறவிகள் தமிழகத்தில் ஒரு சிலரே பிறந் துள்ளனர்.

அத்தகையவருள் ஒருவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் விரிவுரையாளரான உயர்திரு இரா. இராகவையங்கார். அவர் இராமாயண பாரதங்களின் வாய்மையையும் அதற்குத் துணைசெய்யும் தமிழ்ப்பாடல்களையும் ஏற்று ஆராய்ச்சித் துறையில் ஆரிய திராவிட சமரசம் கண்டுள்ளார்.

''கௌதமனார் பாடிய புறப்பாட்டும்,முடிநாகராயர் புறப் பாட்டும் பாரத காலத்தனவென்று நினைத்தற்கேற்ற அகச் சான்றுகளுடன் சிறந்து விளங்குதல் அவைவல்லார் நன் குணர்வர்'' என்பது அவர் முடிவு.

திரு இராகவையங்கார் முடிவே திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை, மறைத்திரு மறைமலையடிகள் ஆகியோரும் ஏற்ற முடிவு எனலாம். ஏனெனில் பாரத நிகழ்ச்சிக்குரிய காலமேபுற நானூற்றின் இப் பழம் பாடல்களின் காலம் என்று அவர்கள் கொண்டனர். புராணக் கணிப்பின்படி பாரதப்போர் மூன்றாம் ஊழியிறுதியில் அதாவது கி. மு. 3200-ல் நிகழ்ந்ததாக வேண் டும். ஆனால் சமஸ்கிருத ஆராய்ச்சியாளர் ஆரியர் இந்தியா விற்கு வநத காலம் கி. மு. 1500 எனறே கருதுவதால், பாரத காலத்தையும் அதற்கேற்ப கி.மு. 1000 என்று முடிவுசெய்துள் ளனர்.

மேற்குறிப்பிட்ட சமரஸ முடிவு சமரசமான முடிவு மட்டு மல்ல, தமிழ் சமஸ்கிருத ஆதாரங்களுடனொத்த நேர்மையான முடிவும் ஆகும். ஆயினும் ஆரியர் இந்தியாவுக்குள் நுழைந்து நெடுநாளாகாத அவ்வளவு பழைய காலத்திலேயே, யமுனைக் கரை ஆரியருக்கும் தென்னிந்தியாவின் தென்கோடிக்கும்

இடையே அவ்வளவு நட்புறவு ஏற்பட்டிருக்க முடியும் என்று கருதுவது பொருத்தமற்றதாகவே உள்ளது.

## திருத்தந்தை ஹீராஸ் ஆராய்ச்சி ஒளி

இராமாயண பாரதங்களின் மீதும் தமிழிலக்கியத்தின் மீதும் நாகரிகத்தின் மீதும் திருத்தந்தை ஹீராஸின் ஆராய்ச்சிகள் ஒரு புதிய ஒளியை வீசியுள்ளன.

இராமாயண பாரதங்கள் இன்று ஆரியருடைய இதிகாசங்கள் என்றும், ஆரியர் ஆக்கியனமட்டுமல்ல, ஆரிய அரசுகள் பற்றியனவே என்றும்தான் பொதுவாகக் கருதப்படுகின்றன. அவை திராவிடரை எதிர்த்து ஆரியர்களடைந்த முன்னேற்றத்தைக் குறிப்பவை என்று கருதுபவர்கூடப் பலர். சமஸ்கிருதத்தில் உள்ள இன்றைய பாரத இராமாயணங்களைப் பொறுத்த அளவில் பிந்திய கூற்றுத் தவறு என்பதற்கில்லை. ஆனால் அவை உண்மையில் சமஸ்கிருதத்திற்கோ ஆரியருக்கோ மட்டும் உரியவை அல்ல. சமஸ்கிருத பாரத இராமாயணங்கள் அவற்றின் மிகப் பழைய வடிவங்கள், அவற்றின் மூலங்கள் என்பதுகூட உண்மையல்ல. புத்தசாதகக் கதைகளில் இடம் பெறும் இராமாயண பாரதக் கதைகளும், சமணரின் பாரத இராமாயணக் கதைகளும் அவற்றிலும் முற்பட்டவை ஆகும்.

இராமாயண பாரதங்களும் பல புராண மரபுகளும் உண்மையில் ஆரியர் வருவதற்கு நெடுநாள் முற்பட்ட திராவிடரின் பழங்கதை மரபுகளாகவோ, இலக்கிய மரபுகளாகவோ, வரலாற்று மரபுகளாகவோ நிலவியிருக்க வேண்டுமென்று அறிஞர் திருத்தந்தை ஹீராஸ் கருதியுள்ளார்.

வருங்கால ஆராய்ச்சிகள் இதற்கு மேலும் விளக்கம் தரக் கூடும். அந்நாளில் கன்னட பாரத இராமாயணங்கள், தமிழ்க் கம்பராமாயணம் ஆகியவற்றில் சமஸ்கிருத ஏடுகளினின்றும் மாறுபட்ட கருத்துக்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய தமிழ்ச் சங்க இலக்கியக் குறிப்புகள் ஆகியவை புது விளக்கம் தரும் பழமைக் கருவூலங்கள் என்பது தெரியவருவது உறுதி.

புறநானூற்றுப் பாடல்கள் இயற்றப்பட்ட காலம் பொதுவாகத் தென்னாட்டில் மலையாளமோ, தெலுங்கோ, கன்னடமோ தமிழினின்று பிரிவுறாத காலம் என்று இராவ்பகதூர் எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் கருதுகிறார்கள். இதை மேலே காட்டியுள்ளோம். புறநானூற்றில் பாரத இராமாயணம் பற்றிய பாடல்கள் இயற்றப்பட்ட காலம் தென்னாட்டி

லும் வடநாட்டிலும் கிட்டத்தட்ட ஒரே தமிழ் மொழி பேசப் பட்டகாலம். அதாவது ஆரியர் வருகையால் வடநாட்டு மொழிகள் தென்னாட்டு மொழிகளிலிருந்தும் நெடுந்தொலை வேறுபட்டுவிடாத காலமாகும். தென்னாடெங்குமிருந்து கடைச் சங்க காலத்தில் மதுரைச் சங்கத்தில் வந்து தமிழ் புலவர் தம் பாட்டுக்களை அரங்கேற்றியதுபோல அந்நாளில் மதுரைக்கும் தெற்கே அலைவாயிலும் (கவாடபுரத்திலும்) தென்மதுரையிலும் இருந்த இடைச்சங்க, தலைச்சங்கங்களில் சிந்து கங்கை சமவெளியிலிருந்தும் தமிழ்ப் புலவர்கள் வந்து பாடல்களை அரங்கேற்றி யிருந்தினராதல் வேண்டும்.

முடிநாகராயர் என்ற பெயரின் கடைசிப் பகுதி 'இராயர்' என்றெண்ணிப் பலர் மலைப்பு எய்துகின்றனர். இது 'ர' கரத்தை முதலாக உடைய எழுத்து என்பதே மலைப்பின் காரணம். இதனாலேயே அப்பெயர் முடிநாகனாராயிருத்தல் கூடுமென்றும் பலர் கருதியுள்ளனர், அவ்வாறு எழுதியும் வரு கின்றனர். ஆனால் கடைசிப்பகுதி 'ஆயர்' என்பதே, முடிநாகர் என்பதனுடன் சேர்ந்தே இது முடிநாகராயர் ஆகின்றது.

கொச்சி அரசர் மாவலி மரபுக்கும் பண்டைச் சேர மரபுக் கும் ஒருங்கே உரிமையுடையவர். அவர் குடிப்பெயர் கடல் மலை நாட்டுப் பெரும் படைப்பு வழியினர் என்பது. அதன் ஐந்துகிளை இனத்தவர்கள் மூத்தவர், இளையவர், பல்லுறுத் தியர், மடத்தின் கீழார் அல்லது முரஞ்சியூரார், சாலியூரார் ஆவர். பரிபாடலில் மதுரையடுத்த நாகர் நகரத்தினர் பூமுடி நாகர் என்று அழைக்கப்படுகின்றனர். எனவே முரஞ்சியூர் முடிநாகர் ஆயர் என்பவர் சேர நாட்டில் முரஞ்சியூர் சார்ந்த ஒரு நாகர் மரபினரே என்று காண்கிறோம்.

# 3. அகல் உலகத் தொடர்பு

போர் என்பது இடைக்காலப் புராண மரபில் யானை, குதிரை, தேர், காலாள் என்ற நால்வகைப் படைகளின்போர் மட்டுமே. இது முற்றிலும் நில மீது நடைபெற்ற போர் என்பது தெளிவு. இது கடந்து இடைக்காலக் கனவுகள் கூடச் செல்லவில்லை கடலறியாத, வானகங்கனவு காணாத சில நாகரிக இனங்களின் சின்னமாகவே இம்மரபு இயன்றது. ஆனால் உலகின் புராண காலத் தொடக்கத்திலும், தமிழர், கிரேக்கர் வரலாற்று வானவிளிம்பிலும் நாம் நிலப்போர், கடற்போர், வானகப்போர் என்ற இக்கால மூவரங்கப் போர்களின் சின்னங்களையும் காண்கிறோம். நில உலக நாகரிகங்கள் பலவற்றுக்கு முற்பட, கடலகத்தே பரவி, வானகமளாவி வளர எண்ணிய சில பல பழமைசான்ற நாகரிகங்கள் இருந்தன என்பதை இது குறித்துக் காட்டுகிறது.

நாலாயிர, ஐயாயிர ஆண்டுகட்கு முன் வானகப்போரும், வானகச் செலவும் கனவிலேனும் நிலவின என்பதை எவரும் ஒத்துக்கொள்வர். அதே சமயம் தற்கால உலகில் மேலை நாடுகளிலேனும் இக்கனவுகள் நனவாகக் காணப்பட்டது சென்ற இருநூறு ஆண்டுகளுக்குள்ளேயே என்பதும், அவற்றின் பயனாகவே நாம் நீராவிக்கப்பல்கள், விசையூர்திகள், வானூர்திகள், தந்தி, தொலைபேசிகள் பெற்றிருக்கிறோம் என்பதும் குறிப்பிடத்தக்கன. முற்காலக்கனவுகள் கனவுகளாகவே நின்று கனவு மரபும் அழிவுற்றதற்கு இடைக்காலப் பண்பே காரணம் என்னல் வேண்டும். அது அக்கனவுகளை மனித அருஞ் செயல் கனவுகள் என்ற நிலையிருந்து படிப்படியாக மாயமந்திரங்கள், தெய்விக அருஞ்செயல்கள், பேய்ச்செயல்கள், அரக்க பூதச் செயல்கள் என்ற நிலைக்கு ஒதுக்கித் தள்ளிற்று. வருங்கால ஆர்வக்கனவுகளாய் வளராமல், சென்ற கால நினைவுகளாய், நாளடைவில் மனித வாழ்க்கையுடன் தொடர்பற்ற மூடக் கருத்துக்களாய் அவை தேய்வுற்றன.

**'தமிழர் முதல் வானகப்போர்?'**

கனவு கடந்து நனவிலே இவை நிலவின என்பதோ, மீட்டும் நிலவக்கூடும் என்பதோ இடைக்காலம் நம்பாத ஒன்று. மீட்டும் நிலவக்கூடும் என்ற நம்பிக்கையே நம் காலத்தில் மேலையுலகில் அவற்றை நனவாக்கிச் செயல் வெற்றிகளும் ஆக்கிற்று. ஆனால் முன் நிலவியிருக்க முடியாது என்ற

இடைக்கால அவநம்பிக்கையே இன்னும் நீடிக்கின்றது. இந்த அவநம்பிக்கை ஆராயாத, ஆராய்ச்சிப் பக்கமே நாடாத ஒரு முடிந்த முடிபாய், தற்காலத்தவரின் ஒரு புது மூட நம்பிக்கையாக இயங்குகின்றது. இம்முடிபு முற்றிலும் சரியல்ல என்பதைப் பழமை ஆராய்ச்சிகளின் போக்குக் காட்டி வருகிறது.

இடைக்காலக் கனவுகளுக்கு எட்டாத அளவில், பண்டைக் கிரேக்சர், உரோமர் இலக்கிய கலைவாழ்வு மேம்பட்டிருந்தது. இடைக்காலக் கனவுகளுக்கு எட்டாத தொலைவிலேயே, தற்காலத்தவர் வியக்குமளவில், பினிஷீயர், எகிப்தியர், அராபியர், தமிழர், மலாய் இனத்தவர் ஆகியோர் பரந்த கடலுலக வாழ்வும், வாணிகத் தொழில் வாழ்வும் பெற்றிருந்தனர். இக்கடலக நாகரிகங்கள் இடைக்கால உலகமறியாத அமெரிக்காக் கண்டத்திலும் சென்று பரவியதாகத் தெரிகிறது. தவிர, இன்றைய நகரங்கள்கூட முழுதும் பெற்றிரா அளவில் பண்டைய பெருநகரங்களில் வடிகால் அமைப்பு, குடிநீர்க் குழாய், குளிப்பறை ஆகிய வசதிகள் மிகுதியாய் இருந்தன. உண்மையில் இவ்வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்ட பின்னரே நகரங்கள் அந்நாளில் திட்டமிட்டுக் கட்டப்பட்டன என்று காணும்போது இக்கால மக்கள் நாணமும் வியப்பும் ஒருங்கே கொள்ள வேண்டும். இந்நிலையில் பண்டை நாகரிகங்கள் பற்றி இக்காலப் பொதுமக்கள் மட்டுமின்றி. அறிஞர் பலரும் கொண்டுள்ள முடிவுகள் புரட்சிகரமாக மாறவேண்டியவை என்பது மிகையன்று.

பண்டைத் தமிழரிடையே வானகச் செலவும் வானகப் போரும் இருந்தனவோ இல்லையோ; அவை பற்றிய நினைவுகளும், ஒருவேளை அவை பற்றிய மரபழிந்து விட்ட நனவு முயற்சிகளும் இருந்திருக்கக் கூடும் என்று எண்ண இடமுண்டு. இதனைத் தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியன் மரபுரை சுட்டிக் காட்டுகிறது. இச்செம்பியன் காலத்திய பறக்கும் கோட்டைகள் அல்லது பறக்கும் நகரங்கள் தமிழர் கனவில் அல்லது நினைவில் எழுந்த முதல் வானகப்போராக நம் கண்முன் காட்சியளிக்கின்றன.

ஒரு வானகப்போருடன் தொடங்கும் தமிழர் வரலாறு அடுத்து ஒரு கடலகப்போரையும் தொடக்கத்திலேயே நம் பார்வைக்குக் கொண்டு வருகிறது.

## முதற் கடற்போரும் கடற் பேரரசும்

வானவிளிம்பு கடந்து, ஆனால் அவ்விளிம்பிலே மயங்கும் இலக்கிய மரபிலே, நாம் தமிழரின் இப்பெருங் கடலகப் போரின் தடத்தைக் காண்கிறோம். அது தடங்கெட்ட இன்

றைய தமிழர் வாழ்வுடனேகூடத் தொடர்புடையது என்று கூறலாம். அது பற்றிய இலக்கியக் குறிப்புகளும் மரபுரை களும் பல. அதற்கு ஆக்கம் தரும் பிற்கால இடைக்கால வர லாற்றுச் செய்திகளும், கல்வெட்டுச் சான்றுகளும்கூட உண்டு. ஆயினும் இவற்ருலும் அத்தொல் பழங்காலச் சித்திரத்தின் முழு உருவத்தை நாம் தெளிவாகக் காணமுடியவில்லை. காணும் அளவிலும் ஆராய்ச்சியாளர் கருத்து வேறுபாடு களும், அவர்களது ஆராயா நம்பிக்கை அவநம்பிக்கைகளும் அதன் உருவின் மீதே நிழலாடுகின்றன.

சங்க இலக்கியத்திலே பழங்காலப் பாண்டியருக்கும், அவர்கள் முன்னேருக்கும் முற்பட்ட பாண்டியனுக நெடி யோன் விளங்குகிருன். கடைச் சங்க காலத்திலே பாடல் சான்ற பெரும்புகழ்ப்பாண்டியன் தலையாலங்கானத்து நெடுஞ் செழியனே. அவன் முன்னேர்களாக மதுரைக் காஞ்சி யாசிரியர் மாங்குடி மருதனுர் பல்சாலை முதுகுடுமியையும் நெடியோனையும் சிறப்பிக்கின்ருர். அதே சமயம் முதுகுடுமி யைப் பாடிய நெட்டிமையார் முதுகுடுமியின் முன்னேனுக அவனைக் குறிக்கிருர். எனவே இரண்டாயிரம் ஆணடுகளுக்கு முன்னும் அது கடந்தும் மிகப்பழங்காலத்துப் பாண்டிய னுகவே நெடியோன் கருதப்பட்டிருநதான்.

நெடியோன் மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட பாண்டியன் அல்லன். ஏனெனில் கடைச்சங்க காலத் தில் மட்டுமே மதுரை பாண்டியர் தலைநகராயிருந்தது. உண்மையில் தலைநகரை முதல் முதல் கொற்கையிலிருந்து தற்கால மதுரைக்கு மாற்றியவன் முதுகுடுமியே. அவனுக்கு முற்பட்ட இடைச்சங்க காலத்தில் கடல் கொண்ட குமரி யாற்றின் கடல் முகமான அலைவாய் (கவாடபுரம்) நகரும், தலைச்சங்க காலத்தில் அதற்கும் தெற்கில் கடல் கொண்ட பஃறுளியாற்றின் கரையிலிருந்த் தென் மதுரையும் பாண் டியர் தலைநகரங்களாய் இருந்தன என்று அறிகிருேம், நெடி யோன் தலைநகர் பஃறுளியாற்றின் கரையிலே இருந்ததென்று சங்கப் பாடல்கள் பகர்கின்றன.

### 'பரதன்' 'பரதகண்டம்' 'ஆதி மனு'

நெடியோனுக்கு நிலந்தருதிருவிற் பாண்டியன் என்றும் பெயர் உண்டு. "நிலந்தந்த பேருதவிப் பொலந்தார் மார்பின் நெடியோன்" என்ற மதுரைக் காஞ்சியடிகள் இதை நினைவூட்டுகின்றன. நிலந்தருதிருவிற் பாண்டியன் காலத்தி லேயே, அவன் அவைக்களத்திலேயே தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்டது. இது அந்நூற்பாயிரம் தரும் தகவல்

ஆகும். நெடியோன் பஃறுளியாறு கடல் கொள்ளுமுன் அவ்வாற்றின் கரையிலே இருந்து ஆண்ட முதற் சங்க காலத்துப் பாண்டியன் என்பதை இது வலியுறுத்துகிறது. அத்துடன் கடல்கோளின்போது அவன் வாழ்ந்ததனால், கடல் கோளுக்குப் பின்னும் அவனே குமரியாற்றின் கடல் முகத்திலிருந்த இரண்டாவது தலைநகரான அலைவாயிலிலும் வந்து ஆட்சி தொடங்கி யிருக்கவேண்டும்.

பஃறுளியாறு கடல் கோளால் அழிந்தபின், இவன் வடதிசையில் தன் ஆட்சி எல்லையை விரிவுபடுத்தி, இமயம், கங்கை ஆகியவற்றைக் கைக்கொண்டிருந்ததாகத் தமிழ் ஏடுகள் சாற்றுகின்றன.

> "பஃறுளியாற்றுடன் பனிமலை யடுக்கத்துக்
> குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள
> வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
> தென்திசையாண்ட தென்னவன்" (சிலப் 11,19,-22)

என்று சிலப்பதிகாரம் கூறுவது காணலாம். பழந்தமிழகப் பகுதிகள் கடலுள் அழிந்த அக்காலத்திலேயே இமயமும் சிந்து கங்கை வெளிகளும், கடலிலிருந்து புது நிலமாகத் தோன்றியிருந்தன. நெடியோன் கடல்கோளுக்குத் தப்பி வந்த துணையிலிகளையும், ஏலாரையும், துயருழந்தாரையும் அவ்விடங்களில் கொண்டு குடியேற்றியிருக்க வேண்டும். ஏனெனில் இமயம்வரை அவன் நாளில் ஒரே தமிழ்மொழி பேசப்பட்டதென்று கூறப்படுகிறது,

> "தென் குமரி வடபெருங்கல்
> குணகுட கடலா வெல்லைத்
> தொன்று மொழிந்து தொழில் கேட்ப"
>
> (மதுரைக் காஞ்சி 70-72)

என்ற மாங்குடி மருதனார் கூற்று இதற்குச் சான்று.

புதுநிலமாகக் கங்கையும் யமுனையும் இமயமும் உள்ளடங்கிய பரப்பைத் தமிழகத்துக்குத் தந்த காரணத்தாலேயே நெடியோன் நிலந்தருதிருவிற்பாண்டியன் என்று பெயர் பெற்றான். இப்பெயருடன் அவன் இன்று 'இந்தியா' என்று அழைக்கப்படும் பகுதி முழுமைக்கும் ஒரே பேரரசன் ஆனான்.

வெள்ளையர் ஆட்சிக்கு முற்பட, இமய முதல் குமரிவரை ஆண்ட முதற் பேரரசன் மட்டுமல்ல, ஒரே பேரரசன், நெடியோன் என்ற இந்த நிலந்தரு திருவிற்பாண்டியனேயாவன்;

முன்னும்பின்னும் இல்லாத இவ்வரும் பெருஞ்செயல் இதிகாச புராணங்களில் தன் அருஞ்சுவட்டைப் பதிப்பிக்கத் தவற வில்லை. இந்தியா அல்லது பாரத கண்டம் முழுதும் ஒரு குடைக்கீழ் ஆண்டதாக இதிகாசங்களில் கூறப்படும் பரதன் இவனே என்று பண்டித சவரிராயன் போன்ற அறிஞர் கருதியுள்ளனர். பரதர் அல்லது கடலரசர் என்பது பாண்டிய ருக்குப் பொதுவாகவும், இவன் மரபினருக்குச் சிறப்பாகவும் ஏற்பட்ட பெயரேயாகும். பரத கண்டம் என்ற பெயரில் அது இன்னும் நிலைபெற்ற வழக்காகியுள்ளது.

மற்றும் மிகப்பழங்காலப் புராணங்களில் இவனே 'ஆதிமனு'வாக குறிக்கப்படுகிறுன், இந்திய புராணங்களில் காணப்படும் 'ஆதி மனு' வரலாறு மட்டுமன்றி, விவிலிய நூலில் கூறப்படும் 'நோவா' வரலாறும், அது போன்ற பிற இனங்களின் ஊழி வெள்ளக் கதைகளும் இவன் பழம் பெரும் புகழ்மரபில் வந்தவையே என்று பல உலகப்பழமையாராய்ச்சி யறிஞர் கருதுகின்றனர்.

பண்டைச் சாவகவெற்றி

இமயம்வரை நிலப் பேரரசனுக ஆண்டதுடன் இப் பாண்டியன் பேரவா நிறைவு பெறவில்லை. அவன் மறவன் மட்டுமல்ல, கடல்மறவன் அல்லது பரதவன். தமிழ்ப் பரதவரின் கடலாட்சிக் கொடியாகிய மீன்கொடியை அவன் கடல் கடந்த நாடுகளுக்கும் கொண்டு சென்றுன். முந்நீர் விழாவின் நெடியோன் என்ற இவன் முழுச்சிறப்புப் பெயரும் தமிழ் மரபிலேயும் தமிழ்ப்புராண மரபிலேயும் வழங்கும் வடிம்பலம்ப நின்ற பாண்டியன் என்ற பெயரும், சயமா கீர்த்தி என்ற பெயரும் இக்கடற்பெரும் போர் வெற்றியைக் குறித்த வழக்குகளேயாகும்.

"முழங்கும் முந்நீர் முழுவதும் வளை இப்
பரந்து பட்ட வியன் ஞாலம்
தாளில் தந்து தம்புகழ் நிறீஇ
ஒருதாம் ஆகிய உரவோர்." (புறம் 18)

என்று தலையாலங்கானத்து நெடுஞ்செழியனைப் பாடிய் குடபுலவியனுரும்.

"செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க்கீத்த
முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணல்" (புறம் 9)

என்று முதுகுடுமியைப் பாடிய நெட்டிமையாரும்,

"வானியைந்த இருமுந்நீர்ப்
பேஎ நிலைஇய இரும்பௌவத்துக்
கொடும்புணரி விலங்குபோழ—
சீர்சான்ற உயர் நெல்லின்
ஊர் கொண்ட உயர் கொற்றவ!"

(மதுரைக்காஞ்சி 75-7, 87-8)

என்று மாங்குடி மருதனாரும் தம் காலத்திலும் பழங்காலப் புகழ்ச் செய்திகளாக இவற்றை விரித்துரைத்துள்ளனர்.

'உயர் நெல்லின் ஊர்' என்ற மதுரைக் காஞ்சியுரை நெல்லின் பெயரையுடைய ஓர் ஊரைக்குறிக்கிறது. கடலில் கலம் செலுத்திச் சென்று கொண்ட ஊராதலால், அது கடல் கடந்த ஒரு நாட்டின் ஊர் என்பதும் தெளிவு. இத்தகைய ஊர் நெடியோன் வெற்றிச் சின்னங்கள் பலவற்றுடன் தொடர்புடைய சாவகம் அல்லது சுமத்ராத் தீவிலுள்ள சாலியூரே யாகும். சாலி என்பது நெல்லின் மறு பெயர். அத்தீவின் பழம் பெயர்களாயே சாவகம், பொன்னாடு, ஜவநாடு, யவநாடு ஆகியவற்றில் யவநாடு என்பதன் பொருளும் இதனுடன் நெருங்கிய தொடர்புடையதே. ஏனெனில் 'யவ' என்பது வாற்கோதுமையின் மறுபெயர் ஆகும்.

சாலியூர் இன்றளவும் 'சாரி' என்றே வழங்குகிறது. சோழர் 12-ம் நூற்றாண்டில் கடாரத்தில் அடைந்த வெற்றிகளிலும் சாலியூர் வெற்றி குறிக்கப்பட்டுள்ளது. சோழர் காலத்தில் கடாரம் என்பது சீர் விசயம் என்ற கடற் பேரரசாய், மலாயாவையும் பல தீவுகளையும் உட்கொண்டிருந்தது. அதன் தலைநகரான சீர் விசய நகர் சுமத்ராத் தீவிலுள்ள இன்றைய 'பாலம்பாங்' நகரமேயாகும். சாலியூர் இந்தச் சீர் விசய நகருக்கு அருகிலேயே அமைந்துள்ளது. பாண்டியன் படையெடுப்பின்போது சாலியூரே தலை நகராய் இருந்ததென்றும் பாண்டியன் வெற்றி குறித்த புதிய பேரரசத் தலைநகரே சீர் விசய நகரென்றும் நாம் கொள்ள இடமுண்டு. ஏனென்றால் சோழர்படை யெடுப்பின்போது அங்கே ஆண்ட பேரரசன் சீர்மாற சீர்வியயோத்துங்கனே. அவன் குடிப் பெயரான 'சீர்மாற' என்பது 'மாறன்' அல்லது பாண்டியன் மரபை நினைவூட்டுகிறது. அவர்கள் கொடியும் மரபுப் பெயருக்கிசைய மீனக் கொடியாகவே யிருந்தது.

மன்னர் குடிப் பெயரில் மட்டுமின்றி, மக்கட் பெயர் ஊர்ப்பெயர் ஆகியவற்றிலும் மொழியிலும், வாழ்விலும் நாம் சோழர் படையெடுப்புக்கு முற்பட்ட சாவக நாட்டில்

பல தமிழகத் தொடர்புகளைப் பொதுவாகவும், பாண்டி நாட்டுத் தொடர்புகளை சிறப்பாகவும் காண்கிறோம். மதுரை பண்டைத் தலைநகரின் பெயராகவும், ஒரு தீவின் பெயராக வும், ஒரு கடலிடுக்கின் பெயராகவும் நிலவுகின்றது. மலாயா என்ற நாட்டுப் பெயர் இன்றும் மலையம் என்ற பொதிகை மலையை நினைவூட்டுவதாகும். இவையன்றிப் பாண்டியன், மதியன், புகார், மலையன் கோ, செம்பூட்சேஎய், குறிஞ்சி, செங்கரை ஆகிய தமிழ்ப் பெயர்களும் அங்கே நிலவுவதாக மகாவித்வான் இரா. இராகவய்யங்காரின் தமிழ் வரலாறு எடுத்துக் காட்டுகிறது. சாவகத்தில் சங்க காலத்தில் தமிழ்ப் பேசப்பட்டதாக மணிமேகலை கூறுகிறது. அத்துடன் சோழர் படையெடுப்புக்கு முன்னும் பின்னும் அங்கே பல தமிழ்க் கல் வெட்டுக்களும், பட்டயங்களும், பண்டைத் தமிழக எழுத்துக் களிலேயே வரையப்பட்ட சமஸ்கிருதக் கல் வெட்டுக்களும் கிடைக்கின்றன.

## முந்நீர் விழா

சயநாடு அல்லது சாவகத்தை வென்ற பெரும் புகழாளன் என்ற முறையிலேயே நெடியோன் சயமா கீர்த்தி என்றழைக் கப்பட்டான். கி. பி. ஏழாம் நூற்றாண்டுக்கு முற்பட்டவரான இறையனார் அகப்பொருளுரையின் ஆசிரியர் ‘சயமா கீர்த்திய னாகிய நிலந்தரு திருவிற் பாண்டியன்’ என்று கூறுவதால் இது நெடியோன் பெயரே என்பது தெரியவரும். சய நாடு, ஜவ நாடு என்ற நாட்டுப் பெயர்கள் அமைந்த சாவக நாட்டுக் கல் வெட்டுக்கள் பல உண்டு. ஜய நகரம், சுந்தர பாண்டியன் என்ற பெயர்களை உட்கொண்ட கல்வெட்டும் ஒன்று உளது. ‘ஜய நகர சுந்தர பாண்டிய தேவாதீசுவர நாம ராஜாபிஷேக’ என்பது அதன் வாசகம் ஆகும். ‘பாண்டிய’ என்ற பெயருக் கேற்ப இந்தக் கல் வெட்டில் மீன் இலச்சினையும் காணப் படுகிறது.

வடிம்பலம்ப நின்ற பாண்டியன், முந்நீர் விழவின் நெடி யோன் என்ற பெயர்கள் கடற்பேரரசன் என்ற முறையில் கடல் கடந்த நாட்டில் அவன் நடத்திய கடல் விழாவைக் குறிக்கின்றன. அதில் அவன் பாறையில் தன் அடிகளைப் பொறித்து அதன்மீது கடல் அலைகள் வந்து அலம்பும்படி செய்ததாக அறிகிறோம். இதுவே இன்றுவரை அந் நாட்டவ ரிடையே அரசர் முடிசூட்டு விழா மரபாக இருந்து வருகிறது. மன்னர் இவ்வழக்கத்தைத் தலைமுறை தலைமுறையாக மேற் கொண்டிருந்தனர் என்பதைக் கல்வெட்டுக்கள், பல காட்டு

கின்றன. சீர் அருடன் ஆற்றின் நடுவே இங்ஙனம் அடி பொறிப்பதற்குரிய ஒருபெரும் பாறையிருக்கிறது. இதில் பூர்ண வர்மன் என்ற பெரியோன் அடி வைத்த செய்தி குறிக்கப்பட்டுள்ளது. இம் மன்னன் பெயருடன் 'நெடியோன்' என்று பொருள்படும் தொடரும் உள்ளது.

'தருமா நகர்த் தலைவனும் உலகை ஆள்பவனுமாகிய நெடியோன் ஸ்ரீமான் பூர்ண வர்மனின் (விஷ்ணுவின் அடிகளை ஒத்த) இணையடிகள்.''

''விக்ராந்தஸ்யா வனிபதே ச்ரீமத: பூர்ண வர்மண:

தருமா நகரேந்துஸ்ய விஷ்ணோரிவ பதத்வயம்''

என்பதே இந்தக் கல்வெட்டு (இந்தியப் பழமை ஏடு III 355-58.)

இதில் தருமா நகர் என்பது கொற்கையே என்று சமஸ்கிருத ஆதாரம் காட்டி முடிவு கொள்கிறார், இரா. இராகவய்யங்கார் அவர்கள். வேறு சிலர் அதைக் கன்னியாகுமரி அடுத்த ஓர் இடம் என்று கூறுவதாகவும் அவர்கள் மேற்கோள் காட்டியுள்ளார். இருவகையிலும் இங்கே காட்டப்பட்ட கல்வெட்டிலும் வேறு பல கல் வெட்டுக்களிலும் குறிக்கப்பட்ட பூர்ண வர்மன் முந்நீர் விழாவின் நெடியோன் தானோ என்று கருத இடமுண்டு. அவை நெடியோன் கல்வெட்டுக்களானால் அவை ஏன் தமிழில் எழுதப்படவில்லை, சமஸ்கிருதத்தில் எவ்வாறு எழுதப்பட்டது என்று அறிய முடியவில்லை. ஏனென்றால் இவ்வளவு பழமையான காலத்தில் சமஸ்கிருத மொழி (கல்வெட்டுக் காட்டும் தொல்பழஞ் சமஸ்கிருதம்கூட) உருவாகியிருக்க வழியில்லை.

## நெடியோன் புகழ் மரபு

நெடியோன் சங்க காலத்திலே பழம் புகழுடையவனாகப் பல பாடல்களில் (கலி; முல்லை: 4; சிலப்பதிகாரம் அழற்படு காதை 56-61) சிறப்பிக்கப்படுகிறான். பிற்கால இலக்கியங்களிலும் இவன் பெயர் நீடித்து நிலவி வந்துள்ளது.

தமிழகத்தில் மிகப் பழமையான அரசன் என்று கூறுவதன்றி, இன்று இவன் காலத்தையோ பழமையெல்லையையோ நாம் கணித்து வரையறுத்துக் கூற முடியவில்லை. பாரதப் போரை ஒட்டிப் பெருஞ்சோற்றுதியனுக்குக் கி. மு. 1000 எனக் குத்து மதிப்பாகக் கூறுவது போலவே, பல ஆசிரியர்கள் தொல்காப்பியத்துக்கும், நெடியோனுக்கும் கி. மு. 500

என்ற கால மதிப்புத் தருகின்றனர். ஆனால் கடைச் சங்கப் புலவருள் மாமூலனார் முதலிய பலர் அசோகனுக்கு முற்பட்டவர் என்று கருத இடமுண்டு. தவிர பாரதப் போர்க் காலம், தொல்காப்பியர் காலம் ஆகிய இரண்டிலுமே எது முந்தியது, எது பிந்தியது என்று கூறுவது முடியாது. இன்றைய புராண இதிகாச அடிப்படையிலேயே பாரதப் போர் முந்தியதென்று ஆராய்ச்சியாளர் மதிப்பிட்டுள்ளனர். எப்படியும் தொல்காப்பியர், நெடியோன் காலங்கள் கி. மு. 500க்குப் பல நூற்றாண்டுகள் முற்பட்டிருத்தல் சாலும். ஏனெனில் இலங்கை வேறு, தற்போதைய தமிழகம் வேறு என்ற நிலை பெரிதும் இடைச்சங்க காலத்தில் ஏற்பட்ட நிலையேயாகும். இது பாரதத்துக்கு மட்டுமின்றி, இராமாயண காலத்துக்கும் முற்பட்ட நிலைமை என்று குறிப்பிடத் தேவையில்லை.

நெடியோன் காலத்துக்குரிய, அதாவது பிற்காலச் சோழர் படையெடுப்புக்கு முந்திய தமிழ்க் கல்வெட்டுக்களும் தமிழக வாணிக, குடியிருப்புச் சின்னங்களும் சுமத்ரா, மலாயா நாடுகளில் மட்டுமன்றி சீயம், இந்து சீனா ஆகியவற்றிலும், கிழக்கிந்தியத் தீவுகளிலும் பரந்து காணப்படுகின்றன. இந்து சீனாவில் பல நூற்றாண்டுகளாகச் 'சம்பா' என்ற தமிழ்ப் பேரரசே நிலவி வந்ததாக அறிகிறோம். சீனத்திலும், சப்பானிலும்கூடப் பண்டைத் தமிழ்த் தொடர்புகளைக் காணலாம் என்று பழமையாராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

## கடலக மேலையுலக, தொலைக் கீழையுலகத் தொடர்புகள்

தவிர கி. மு. 2000க்கு முன்னிருந்தே எகிப்து, பாலஸ்தீன், பாபிலோன் ஆகிய மேலை நாடுகள் கிழக்கே சீனத்துடன் நிலப் போக்கு வரவுகளும், கடற் போக்கு வரவுகளும், வாணிகத் தொடர்பும் உடையவையாய் இருந்தன. சீனத்தின் பட்டும், மாணிக்கமும் மேலை நாடுகளிலும், எகிப்தின் பவளங்கள், வெள்ளீயம், துணி வகைகள் ஆகியவை சீனத்திலும் பரிமாறப் பட்டன. கி. மு. 1500 க்குப் பின் நிலப் போக்கு வரவு திடுமென நின்று விட்டது. ஆரியர் போன்ற பண்படா நாடோடி இனங்களின் இடப் பெயர்வால் ஏற்பட்ட விளைவு இது என்று தோன்றுகிறது. இதனால் கடல் வாணிகமும் கடல் போக்கு வரவுகளும் மிகுதியாயின. தமிழகமும் மலாயாவும் இக்கடல் வாணிகத்தில் நடு இடம் வகித்ததினால் பெரும் பயன் அடைந்தன. மலாயாக் கடற் கரையைச் சுற்றிச் செல்வதற்குப் பதில் கரைக்குக் கரை கடந்தும், தமிழகக் கடற் கரையைச் சுற்றுவதற்குப் பதில் கீழ்க்கரைத் துறைமுகங்களிலிருந்து மேல்

கரைத் துறைமுகங்களுக்குக் கடந்தும் வந்ததால், மலாயா. தமிழகம் ஆகிய இரு நாடுகளிலும் உள்நாட்டு வாணிக வழிகளுடன் இது இணைந்தது.

தொடக்கத்தில் தமிழரே கீழ்க்கோடிக்கும், மேல் கோடிக்கும் இடையே வாணிகத்தில் ஈடுபட்டிருந்தனர். ஆனால் மேற்கே பினீஷியரும் அராபியரும் படிப்படியாகத் தமிழ் வணிகருடன் அதைப்பங்கிட்டுப் போட்டி வளர்த்தனர். அது போல மேற்கே தொடக்கத்தில் மலாய் மக்களும் பின் சீனரும் பங்கு கொண்டனர். இந்தப் பழங்கால அகல் உலக வாணிகத்தில் தமிழகம் போக்கு வரவு வழியின் மையமாக இருந்தது போலவே, அதன் சரக்குகளும் பேரிடம் வகித்தன. தமிழகத்தின் பண்டைப் பெருஞ் செல்வத்துக்கு இதுவே காரணம்.

கி. மு. 3000-லிருந்து உரோமப் பேரரசின் வீழ்ச்சிக் காலமாகிய கி. பி. 500வரை தமிழகமே கடல் வாணிகத்தில்இடைவிடாத நீண்ட வாழ்வுடையதா யிருந்தது. ஏனெனில் தமிழகத்துடன் மேல் திசையில் முதலில் எகிப்தும் பாலஸ்தீனமும், அவர்கள் நாகரிகம் வீழ்ச்சியடைந்த பின் கிரேக்க உரோமரும், கிரேக்க உரோமர் வீழ்ச்சிக்குப் பின் அராபியரும் தொடர்பு கொண்டனர். கீழ்திசையில் இதுபோலவே முதலில் மலாய் இனத்தவரும் அவர்கள் கைதளர்ந்த பின் சீனரும் தமிழருடன் வாணிகத் தொடர்பில் பங்கு கொண்டனர்.

இக் காலங்களிலே அகல் உலகுடன் தமிழகம் கொண்ட அரசியல் கலை நாகரிகத் தொடர்புகள் மிகப் பலவாயிருந்திருத்தல் வேண்டும். இவற்றின் பெரும்பகுதியை நாம் அறிய முடியவில்லை. ஆனல் அறியத்தக்க அளவிலும் பொதுவாகக் கீழ்திசையையும் சிறப்பாகத் தமிழினத்தையும் புறக்கணிக்கும் வெள்ளை யறிஞர் போக்கு உண்மை துருவிக் காண்பதில் தடை கற்களாய் உள்ளன. எடுத்துக் காட்டாக, கி. மு. 2000 ஆண்டளவிலேயே எகிப்தியர் ‘பண்ட்’ என்ற நாட்டையும் அதிலுள்ள ‘ஓவிர்’ என்ற துறைமுகத்தையும், அதனருகே கிடைக்கும் தங்கம், தேக்கு, மணப் பொருள்கள் ஆகியவற்றையும் பற்றிக் கூறுகின்றனர். அந்த நாட்டையே தங்கள் மூலத் தாயகமென்றும குறிக்கின்றனர். பண்ட் என்பது பாண்டிநாடு என்பதும், ‘ஓவிர்’ என்பது ‘உவர்’ என்ற தென்பாண்டி நாட்டுத் துறைமுகம் என்பதும் மேலீடாகவே தெள்ளத்தெளிவாக விளங்கும் செய்திகள் ஆகும். கோலார் தங்கவயல் சங்க காலத்திலும் சிந்துவெளி நாகரிக காலத்திலும் தொழிற்பட்டிருந்த செய்தி இதனை வலியுறுத்தும். ஆனல் ‘வெள்ளைட்டறிஞர்’ அதை அபிஸினியாவிலோ, தென் ஆப்பிரிக்காவிலோ தம் கற்பனைக் கோல்கொண்டு கிளறித் தேடுகின்றனர்.

பாண்டியன், மீனன், ஊர், சிவன் முதலிய பேர்களும் இது போலவே நாலாயிர ஆண்டுகட்கு முற்பட்ட உலகெங்கும் காணப்படுகின்றன.

உரோமப் பேரரசர் காலங்களில் மேலை நாடுகளில் தமிழகம் வாங்கிய சரக்குகளைவிட அங்கே அனுப்பிய சரக்குகளே மிகுதியாயிருந்ததால் மேலை உலகின் தங்கம் முழுவதும் தமிழகத்திலேயே வநது குவிந்தன. உண்மையில் கம்பட்டசாலைகளில் அடிக்கப்பட்ட பொன் காசுகள் தமிழகத்துக் கென்றே அடிக்கப்பட்டன. உரோம் அழிந்து ஆயிரக் கணக்கான ஆண்டுகள் கழித்தும் அக்காசுகள் தமிழகத்தில் செலாவாணியில் நீடிக்குமளவு அவை தமிழகத்தில் செறிவுற்றிருந்தன. இவை போக, இன்றளவும், ஒருவேளை இனியும், எடுக்கப்படும் புதையல் பொற்காசுகள் அளவற்றவை.

சங்க காலத் தமிழகத்தின் நகரங்களில், நாகரிக உலகின் எல்லா நாட்டவர்களும் வந்தும் தங்கியும் சென்றும் இருந்தனர். புதுச்சேரியில் உரோமக் குடியிருப்பு ஒன்று அண்மையில் அகழ்ந்து காணப்பட்டுள்ளது. முசிறியில் உரோமக் குடியிருப்புடன் உரோமப் படைத்தளமும், உரோமப் பேரரசர் அகஸ்டஸ் காலக் கோயிலும் இருந்ததாக மேலை நாட்டாசிரியர் குறிக்கின்றனர். காவிரிப்பூமபட்டினம் முதலிய நகரங்களில் உள்ள பன்மொழி மாந்தர்பற்றிப் பட்டினப் பாலை பகர்கின்றது.

**கடல்கடந்த கீழை உலகத் தொடர்புகள் :**

**அரசியல் தூதர் தொடர்புகள்**

கி. மு. 6-ம் நூற்றுண்டிலேயே தமிழருக்கும் இலங்கைக்கும் அரசியல், சமுதாய, மணத் தொடர்புகள் இருந்தன. கி. மு. 2-ம் நூற்றுண்டிலும் 1-ம் நூற்றுண்டின் இறுதியிலும் தமிழ்மரபினர் இலங்கையில் அரசாண்டனர். கி. மு. 26 லும் 20 லும் பாண்டிய அரசன் உரோமப் பேரரசர் அகஸ்டஸிடம் அரசியல் வாணிகத் தொடர்பும் படைத் துறைத் தொடர்பும் கோரி இரு தடவை தூதர் அனுப்பியிருந்ததாக ஸ்டிராபோ என்ற பண்டை உரோம ஆசிரியர் குறிக்கிறுர். கி. மு. 2-ம் நூற்றுண்டில் ஹான் பேரரசர் காலத்திலிருந்து முந்நூறு ஆண்டுகள் தமிழகத்திலிருந்து சீனப் பேரரசருக்கு இது போன்ற தூதுகள் சென்றதாகப் 'பான்கூ' என்ற கடைச் சங்க காலத்துச் சீன ஆசிரியர் குறித்துள்ளார்,

சீனப் பேரரசர் ஹுவான்—தி காலத்தில் கி. பி. 159லும் 161லும் தமிழகத்தின் ஒரு பேரரசனிடமிருந்து அரசியல் வாணிகத் தூதுக்குழுக்கள் சென்றதாகச் சீனர் குறித்துள்ளனர். தந்தம், காண்டாமா (காண்டா மிருகம்) ஆமை ஓடுகள் ஆகியவற்றை அவர்கள் கொண்டு சென்றதாகத் தெரிகிறது. தமிழர் அந் நாளிலேயே தென் ஆப்பிரிக்காவுடன் தொடர்பு கொண்டிருந்தனர் என்பதையும் இதே செய்தி காட்டுகிறது. ஏனெனில் இன்றும் காண்டாமா அந் நாட்டுக்குரிய விலங்கு ஆகும். காம்போச நாடும், சம்பா நாடும் சீனத்துக்கு அனுப்பிய பொருள்களில் தமிழகத்தின் வைடூரியங்களும், துணி மணி மணப் பொருள்களும், யானையும் இடம் பெற்றனவாம்.

சம்பாவின் பண்டை எழுத்தும், சப்பானின் பண்டைய 'கடகம்' எழுத்து முறையும் பண்டைத் தமிழ் எழுத்தையே தழுவியவை என்று மேனாட்டறிஞர் கருதுகின்றனர்.

தமிழரின் இவ் அகலுலகத் தொடர்பைக் குறிக்காத வரலாற்றாசிரியர் இல்லை என்னலாம். ஆனால் தமிழக வரலாற்றில் இவற்றின் படிப்பினையையும், தொல்காப்பியம் சங்க இலக்கியம் ஆகியவற்றின் படிப்பினையையும் வரலாற்றாசிரியர் மறந்து விடுகின்றனர். சங்க இலக்கியங்கள் வரலாற்று மரபுகளைப்போல் ஆராய்வதற்குரியன அல்லது புதிய ஆராய்ச்சியின் நுனித் தும்புகளாகக் கருதுவதற்குரியன ஆகும். அவ்வாறு கருதுவதற்கு மாறாக, அவற்றைப் புராண மரபுகளைவிடப் போலி எனப் புறக்கணிக்க இது இடந்தந்துள்ளது. புராண மரபுகளிலும் தமிழ்த் தொடர்பு நீக்கி அயல் தொடர்புக்கே ஆர்வ நாட்டம் காட்டும்படி இது தூண்டியுள்ளது.

தமிழர்—மேலை உலகத் தொடர்பு, தமிழர்—கீழை உலகத் தொடர்பு ஆகியவற்றைவிட, தமிழர்—வட உலகத் தொடர்பையே இந்த அயல் மரபு நாட்டம் பெரிதும் பாதிக்கிறது.

## 4. வடதிசைத் தொடர்புகள்

தமிழகத்தின் மிகப்பழமை வாய்ந்த தொடர்புகள் கிழக்கு, மேற்குத் தொடர்புகளே. அவையே உயிர்த்தொடர்பு களாகவும் வளமான தொடர்புகளாகவும் அமைந்துள்ளன. இது இயல்பே. ஏனெனில், பண்டை நாகரிக உலகம் கிழக்கு மேற்காகவே நெடுந்தொலை பரவியிருந்தது. அதன் தெற்கு-வடக்கு அகலம் கிழக்கு மேற்கு நீளத்தை நோக்க இன்றுகூட மிகுதியன்று. இதற்கு இயற்கையான நில இயல் காரணங் களும் வரலாற்றுக் காரணங்களும் உண்டு.

முதலாவதாக, உலகின் வடகோடியும், தென் கோடியும், இன்றளவும் உயிரின வாழ்வுக்கே, புல்பூண்டுகளுக்கே இடம் தராதவை. தவிர மனித நாகரிகம் மலையில் பிறந்ததாயினும், அங்கே சிறு வாழ்வே வாழ்ந்தது. ஆற்றோரங்களில் ஓரளவு தழைத்ததாயினும், அவ்வழி உலகில் பரவவில்லை. கடலோர மாகவே, கடல் கடந்தே, அது உலகில் பரவமுடிந்தது. இவ் வகையில் தென் ஆசியா, நடுநிலக் கடல் சூழ்ந்த நிலம், நடு அமெரிக்கா ஆகியவற்றின் வாய்ப்புப் பெரிது. ஏனெனில் உலகின் வடபாதி கடலற்ற முழு நிலப்பரப்பு. தென் பாதியோ நிலமற்ற கடல் பரப்பு, அல்லது தொடர்பற்றுத் துண்டுபட்டுக் கிடக்கும் நிலத்தொகுதி. இவற்றுக்கு மாறாக நடு உலகு, சிறப்பாக, உலக நடுவரைக்குச் சற்று வடக்கி லுள்ள நடு உலக வளையம் கடலுடன் நிலமும், நிலத்துடன் கடலும் கலந்து உறவாடும் திருநலம் உடையது.

தமிழகம் நாகரிக உலகின் நடுமையம், நாகரிக உலகின் உயிர் மையமும் அதுவே; உலகின் கடல்வழி உயிர்ப் பாதை கள் அனைத்தின் நடு இணைப்பாகவும் அது அமைந்துள்ளது. மனித இன நாகரிகக் கொடியும் அதனின்றே பல திசைகளி லும் கிளைத்துச் செல்வது காண்கிறோம். ஆனால் இந்த நாகரிக ஒளி உலகில் பரவுவதற்கும் பரவி வளர்ந்து நீடிப்பதற்கும் தடையாய் அமைந்த திசை வடதிசையே. பண்டை மேலை நாகரிகங்களில் பெரும்பாலானவையும், கீழை நாகரிகங்களில்

பலவும் இவ்வடதிசை வாடைக்கு இலக்காகியே அழிவெய்தி யுள்ளன. கீழ் கோடியில் சீனமும், மேல் கோடியில் தற்கால மேலை ஐரோப்பாவும் தமிழகமும் மட்டுமே அவ்வாடைக்கு முற்றிலும் ஆட்படாமல் உயிர்வளர்ச்சி பெறுகின்றன.

தமிழக வடதிசைத் தொடர்புகளும், தமிழக—உலகத் தொடர்புகளும் சரிவர உணரப்படாமலும் சரிவரப் பயன் படுத்தப் பெருமலும் தடை செய்து வருவதும் இவ் வாடையே.

தமிழக-உலகத் தொடர்புகளில் மேலையுலகத் தொடர் புக்கே நமக்கு இதுவரை பழமையான சான்றுகள் மிகுதி யாகக் கிட்டியுள்ளன. ஆனால் மேல் திசையில் எந்த நாகரிக மும் தொடர்ச்சியான நீடித்த வாழ்வுடையதாயில்லை. நாகரி கங்கள் அத் திசையில் ஒன்றன்பின் ஒன்ருகத் தோன்றி அழிந்து, புதுப்புது நாகரிகங்கள் எழுந்து வளர்ந்துவந் துள்ளன. ஆகவே தமிழகத்தின் மேலைத் தொடர்புகள் ஒரு தலைமுறைத் தொடர்பாயிராமல், பல மேல் திசைத் தலைமுறைகளின் தொடர்பாக இருந்துவருகிறது. ஆனால் கீழ்திசைத் தொடர்புகள் மேல் திசையுடன் ஒத்த பழமை யுடையவை மட்டுமல்ல. அவற்றைவிடப் பல்லாயிரக் கணக் கான ஆண்டுகள் நீடித்த தொடர்ச்சியுமுடையவை. அவற் றுள் பல—சீன சப்பானிய, தென் கிழக்காசிய நாகரிகங்கள்— தமிழகத்துடனொத்த நீடித்த ஒரே தலைமுறைத் தொடர்பாய், தமிழகத்தின் உயிர்த்துணை நாகரிகங்களாக நிலவுகின்றன. தமிழகத்துடன் அவை மூவாயிரமாண்டு தொடர்ந்த உறவுடையன.

**வடதிசை, தென்திசை வண்ணங்கள்**

வடதிசையில். கங்கை இமய எல்லைகள் பற்றியவரை, தமி ழகத் தொடர்பு பழமையில் குறைந்ததன்று. குறைந்த அள வில் நெடியோன் காலமுதல், ஒருவேளை அதற்கும் முற்பட்டே தமிழக வாழ்வும், நாகரிக ஒளியும் அவ்வெல்லை வரை படர்ந்து, பல சமயம் அது கடந்தும் பரவியதுண்டு, அத்துடன் இது பண்டை மேலை உலகத் தொடர்புபோல இடையிடையே அறுபட்டு விடாமல், கிட்டத்தட்டச் சீனத் தொடர்பு போலவே இடையருது நீடித்துள்ளது. ஆயினும் சீனம், சிறப் பாகத் தென்சீனம்—வடதிசை வாடைக்குப் பெரிதும் ஒதுங்கி வாழ்ந்ததனுல், மூவாயிரம் ஆண்டுகளாக ஒரே மொழி, இலக் கியம், கலை, நாகரிகத் தொடர்ச்சியுடையதாய் இருக்க முடிகிறது. ஆனுல் சீன, சப்பானிய உலகுகளுக்குப் புத்த

நெறி அளித்த சிந்து கங்கைச் சம வெளியிலே அந்தப் புத்தர் கால மொழியோ, இலக்கியமோ, சமய வாழ்வோகூட நீடித்து நிலவவில்லை. மொழி இலக்கியத் துறையில் புத்தர் கால முதல் இன்றுவரை பாளி பாகத நாகரிகம், சமஸ்கிருத நாகரிகம், அபபிரும்ச மொழி வாழ்வு, தத்காலத் தாய்மொழி வாழ்வு என்ற நான்கு தலை முறைகள் ஆகியுள்ளன. இவற்றிடையேகூட ஒன்றுபட்ட வாழ்வு இல்லாது, இடத்துக்கிட வேறுபாடும், ஓரிடத்துக்குள்ளேயே வகுப்புக்கு வகுப்பு வேறுபாடும் மிகுதி. தமிழகத்தின் தனிப்பெரு வாழ்வைக்கூட இவை அவ்வப்போது தாக்க நேர்கின்றது.

தமிழக வடதிசைத் தொடர்புகள் தெற்கினின்றும் வட திசை செல்லும்போதெல்லாம் நாகரிக ஒளித் தொடர்பாகவும், வடக்கினின்று தெற்கே வரும்போதெல்லாம் நாகரிகச் சீர்குலைவுத் தொடர்பாகவுமே இருந்து வந்திருக்கின்றன, இது தமழகத்தின் குற்றமன்று. சிந்து கங்கை சமவெளியின் குற்றமுமன்று. ஏனெனில் மிகப் பழமையான அடிப்படைத் தொடர்பில், இரண்டும் தெற்கினின்று பரவிய ஒரே பேரின நாகரிகமேயாகும். குற்றம், சிந்து கங்கைச் சமவெளி வட ஆசியப் பரப்புடன் நிலத் தொடர்பு பட்டு, வாடையின் நடுநேர் வழியில் கிடப்பதேயாகும். இதனுல் புத்தர் காலக் கங்கை வெளியுடன் தமிழகத்துக்கு இருந்த நற்றொடர்புகள் புத்தருக்குப் பிற்பட்ட காலத்தில் சீர் குலைந்தும், இஸ்லாமிய காலங்களில் இன்னும் இடர்ப்பட்டும், அதன்பின் முற்றிலும் இடக்குற்றும் வந்துள்ளன.

இந்திய மாநிலத்திலே வடக்கு நின்றும் தெற்கு, மேற்கினின்றும் கிழக்கு நோக்கிய வெற்றிகள் குறைவு. தெற்கினின்றும் வடக்கு, கிழக்கினின்றும் மேற்கு நோக்கிய வெற்றிகளே தொகையில் பல. அத்துடன் முந்தியவை அயல் தொடர்புக்களாகவும், அழிவுத் தொடர்புகளாகவுமே உள்ளன. பிந்தியவையோ மாநில வாழ்வுக்கு ஒற்றுமையும் ஆக்கமும் பீடும் தரும் தேசியத் தொடர்புகளாக உள்ளன. ஆயினும் இந்திய மாநில வரலாறு எழுதியவர்கள் பெரும்பாலும் அயலினத்தவர் அல்லது அயலின நோக்குடையவர்கள். அத்துடன் அவர்கள் உலக நாகரிக அலைகளைத் தவருகப் புரிந்துகொண்டவர்கள். இக் காரணங்களால் அவர்கள் அழிவுத் தொடர்புகளையே நுணுகி நுணுகி விரித்து ஆராய்ந்துள்ளனர். ஆக்கத் தொடர்புகளைப் புறக்கணித்தும் இருட்டடித்துமே வந்துள்ளனர்.

நெடியோனுக்குப் பின் கங்கையிலும், இமயத்திலும் தம் ஆட்சி அல்லது புகழ்த்தடம் பொறிக்க முயன்ற தமிழரசர்

மிகப்பலர். அதன் எதிர் விளைவாக ஒரே ஒரு சமயம் வடதிசை பேர்ரசுகளும் தெற்கே ஆதிக்கம் பரப்ப முயன்றதுண்டு. ஆயினும் இத் தெற்கு வடக்குத் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஒரு தனிப்பண்பு காணலாம். அது பெரிதும வடகிழக்குத் தெற்குத் தொடர்பாக இருந்தது. அதில் தமிழகத்துடன் கங்கை வெளியே போட்டியிட்டது. சிந்துவெளி அதில் மிகுதி கலக்கவில்லை. நாலாயிர ஆண்டுகளுக்குமுன் சிந்து வெளியும் பண்டை மாநில நாகரிகத்தில் உயிர்ப் பங்கு கொணடிருந்தது. ஆனால் ஆரியர் வரவால், அது மாநிலத்தின் உயிர்த் தொடர் பற்ற பகுதி ஆயிற்று. அப் பகுதியும் அதற்கு வாயிலாய் அமைந்த வடமதுரை, தில்லிப் பகுதியும் அயல் நில வாடைக்கு வழிவிட்டு, அதற்கு மூலதளமாய் அமைந்ததன்றி வேறு உயிர் நாகரிகத் தொடர்புடையதாய் இல்லை.

**வடதிசை மகதப் பேரரசர் : சிசு நாகர், நந்தர்**

பண்டைத் தமிழ் ஏடுகள், பண்டைத்தமிழக வரலாற்றுக் குறிப்புக்கள் மட்டும் உடையனவல்ல, பண்டைக் கங்கை வெளிக் குறிப்புக்களும் அவற்றில் மிகுதி. எடுத்துக்காட்டாக, காஞ்சியும் புகாரும், மதுரையும்,வஞ்சியும் குறிப்பிடப்படுவது போலவே வடதிசை பண்டைப் பெருநகரமான பாடலிபுரமும் குறிப்பிடப்படுகிறது; இந்நகரம் கி மு; 500முதம் 475 வரை ஆண்ட அஜாத் சத்துரு என்ற சிசு நாகமரபுப் பேரரசனால் நிறுவப்பட்டது. இது ஆயிரமாண்டு பல பேரரசுகளுக்குத் தலைநகராயிருந்து கி.பி. 6-ம் நூற்றாண்டில் அழிவுற்றது. இதன் மிகப் பழமையான சமகால இலக்கியக் குறிப்புகள் தமிழ் ஏடுகளிலேயே உள்ளன.

> ''வெண்கோட்டியானை சோனை படியும்
> பொன்மலி பாடலி பெறீ இயர்'' (குறுந். 75)

என்ற படுமரத்து மோசிக் கீரனாரின் பாடல் சோனை யாற்றங் கரையிலுள்ள பாடலி நகரத்தையும், அதன் செல்வத்தையும் குறிப்பது காணலாம். இந்தச் செல்வத்துக்குப் பெரிதும் காரணமாயிருந்தவர் பேரரசர் அசோகனுக்கு முன் அந் நாட்டை ஆண்ட நந்தர்கள் ஆவர். அவர்கள் அலெக் சாண்டர் படையெடுப்புக்கு அஞ்சித் தம் பெருஞ் செல் வத்தைக் கங்கையாற்றின் நடுவே புதைத்து வைத்திருந் தனர். 2500 ஆண்டுகட்கு முற்பட்ட இச்செய்தியைக் கடைச் சங்க காலத்துப் பழம்பெரும் புலவர் மாமூலனார் குறித் துள்ளார்.

> ''பல் புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்
> சீர் மிகு பாடலிக் குழீஇக் கங்கை
> நீர்முதல்கரந்த நிதியங்கொல்லோ?'' (அகம். 265)

இந்நகரை நிறுவிய பேரரசனை அஜாதசத்துருவின் பெயரன் உதயணன் என்று கூறப்படுகிறது. இன்று மரபிழந்து மறக்கப்பட்டுவிட்ட ஏதோ ஒரு வடதிசைத் தாய்மொழியில் அவன் குடிமரபின் வரலாறு ஒரு பெருங்காவியமாக எழுதப்பட்டதென்று அறிகிறோம். அதன் பெரும் பகுதி தமிழிலும் பெருங்கதை என்ற பெயருடன் சிதைவுற்ற ஓர் ஏடாக நிலவுகிறது. பாடலிபுர நகரம் பொன்னுக்கு மட்டுமன்றிப் பொன்னில் நல்ல கலை வேலைப்பாடுடையவர்களுக்கும் பேர்போனதென்று அது குறிக்கிறது,

''பாடலிப் பிறந்த பசும்பொன் வினைஞர்'' (பெருங்கதை: உஞ்சைக் காண்டம்) என்பது அந்நூலின் ஆசிரியரான கொங்குவேள் தரும் தகவல் ஆகும்.

இக்குறிப்புக்கள் அசோகனுக்கு முற்பட்ட புத்தர்பிரான் காலத்தைச் சார்ந்தவை. இவற்றில் இறுதிக்குறிப்பு நீங்கலாக, ஏனையவை கி.மு. 3—முதல் 4—ம் நூற்றாண்டுவரை வாழ்ந்த புலவரின் சமகாலக் குறிப்புக்கள் என்பதும் கவனிக்கத்தக்கது.

மோரியர் தொடர்பு :

### சோழப் பேரரசன் இளஞ் சேட்சென்னி

அசோகன் மரபினர் 'மோரியர்' ஆவர். இவர்கள் கி, மு. 4-ம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து கி.மு. 2-ம் நூற்றாண்டின் தொடக்கம்வரை ஆண்டவர்கள். அவர்களைப்பற்றியசமகாலக் குறிப்புக்களும் சங்க இலக்கியத்தில் நிரம்ப உள்ளன. இவர்கள் அசோகன் காலத்தவர்களல்லரென்றும், பிற்காலத்தில் அதாவது கி. மு. 2-ம் நூற்றாண்டினர் அல்லது கி.பி. 3-ம் நூற்றாண்டினர் என்று கொள்ள ஆதாரம் தேடுபவர் உண்டு. ஆனால் அசோகனைப் பற்றியே வரலாற்றாசிரியர்கள் கொண்ட ஒரு தவறான கருத்துத்தான் இதற்குக் காரணம். அசோகன் பேரரசின் தென் எல்லை மைசூர் என்று அறிகிறோம். ஆனால் அசோகன் கலிங்கத்தை மட்டுமே வென்றான். தென்னாட்டின் வடபகுதியை வெல்லவில்லை. ஆகவே பிந்துசாரனேபண்டைத் தமிழகம் நீங்கிய தென்னாட்டை வென்றிருக்க வேண்டும் என்று பலர் கருதியுள்ளனர். மிக அண்மைக் காலத்தவரான திபெத்திய வரலாற்றாசிரியர் தாரநாதர் குறிப்பை இதற்கு ஆதரவாகக் கொள்கின்றனர்.

உண்மை என்னவெனில் கலிங்கம்,மோரியர்காலத்தில் ஒரு பேரரசு, சிறிய நாடு அன்று. அது அசோகன் பேரரசைவிடப் பரப்பிலோ ஆற்றலிலோ குறைந்ததன்று. பின்னாளைய ஆந்திர

பேரரசைப் போலவே அதுவும் கங்கை முதல் வடபெண்ணை வரை பரவியிருந்தது. மோரியருக்கு முற்படக் கலிங்கரும் அவருக்கு முற்பட்ட நந்தரும் சிசுநாகருங்கூடத் தம் பேரர செல்லையை மைசூர் வட எல்லைவரை பரப்பியிருந்தனரென்றும் இப்போது தெரியவருகிறது. இப்பேரரசின் விரிவு அஜாதசத் துருவின் காலத்திலேயே நடைபெற்றதாகலாம். தமிழகத்திற் கும் அப்பேரரசுக்கும் இடையிலுள்ள வடுகர் கோசர் என்ற முரட்டு வகுப்பினரே அதன் எல்லையில் வாழ்ந்தனர். அசோ கன் கலிங்கத்தை வெல்லாவிட்டால், கலிங்கர்களே அசோ கனை வென்றிருப்பர். மோரியர் வீழ்ச்சிக்குப்பின் கலிங்கப் பேரரசன் காரவேலனும், ஆந்திரப் பேரரசரும் அவ்வாறே வென்றனர். ஆகவே தமிழக எல்லை வரை அசோகன் பேரரசு பரவியது அவன் முன்னோர் காலத்திலன்று. கலிங்கப் பேரரசின் வெற்றியே அவனை அப் பேரரசின் எல்லையாகிய தமிழக எல்லைக்குக் கொண்டு வந்தது. அது கடந்தும் அவன் சேர, சோழ, பாண்டிய அரசர்களை வெல்ல முயன்றான். அது முடியாததனாலேயே அவர்களுடன் நேசத் தொடர்பு வைத் துக்கொண்டான். பிற்கால வரலாற்றுச் செய்திகள் பல இதனைத் தெளிவு படுத்தும்.

அசோகன் காலத்து மோரியப் படைகளைத் தமிழகப் பேரரசனான சோழன் இளஞ்சேட்சென்னி செருப்பாழி என்ற பெரும்போரில் வென்றான். தமிழக வரலாற்றில் நாம் காணும் முதற்பெரும் நிலப்போர் இதுவேயாகும். இதனைப் பற்றிய முழு விவரங்களும் சங்க இலக்கியப் பாடல்களில் சிதறிக் கிடக்கின்றன. முனைவர் எம். இராசமாணிக்கனார் இவற்றை நமக்குத் திரட்டிக் கோவைப்படுத்தித்தந்துள்ளார்.

இளஞ்சேட் சென்னியின் காலம் ஏறத்தாழ கி. மு. 3-ம் நூற்றாண்டு ஆகும்.

**மோரியர் படையெடுப்பு : வாட்டாற்றுப்போர் :**

**செல்லூர்ப் போர்**

சங்க காலத்தின் பின்னாட்களில் கல்வெட்டுக்களில் நாம் வடுகவழி என்ற கீழ்கடற் கரையோரப் பாதைபற்றி கேள்விப் படுகிறோம். பல்லவ சோழ காலங்களில் தமிழகத்தையும் ஆந்திரத்தையும் வட இந்தியாவையும் இது இணைத்தது. ஆனால் சங்க காலத்தில் இவ்வழி காடுகள் நிறைந்ததாகவும் எளிதில் கடக்கக் கூடாததாகவுமே இருந்தது. ஏனெனில் நீல கிரி வழியாகவும் குடகு வழியாகவுமே பயணம் செய்வோரும் படையெடுப்போரும் சென்று வந்தனர். துளுவ நாடே

தமிழகத்தின் வடக்கு வெளியாய் இலங்கிற்று. அந் நாளில் அது பொன் விளையும் திருநாடாக விளங்கிற்று.படை யெடுப்பாளர்களை இந்தப் பொன் வேட்கையும் கவர்ந்திருந்தன என்பதில் ஐயமில்லை.

மோரியர் முதற் கண் தம் எல்லைப்புறத்திலிருந்த கோசர்களைத் துளுவ நாட்டின்மீது ஏவினர். இக் கோசர் கோவா அருகிலுள்ள தற்காலக் கோலாப்பூரைச் சார்ந்தவர்கள். சங்க காலத்தில் தமிழர் நிலப் படைகளில் அவர்கள் வீரராகச் சேர்ந்து பணியாற்றிய துண்டு. அவர்கள் சொன்னசொல் காப்பவர்களென்று அந்நாளில் புகழ் பெற்றிருந்தனர் சங்க ஏடுகள் இது காரணமாக அவர்களை 'வாய்மொழிக் கோசர்' என்றும், அசோகர் கல்வெட்டுக்கள் 'சத்தியபுத்திரர்' என்றும் பராவுகின்றன.

துளுவ நாட்டை அந்நாளில் ஆண்டவன் நன்னன் என்பவன். சங்கப் பாடல்களில் பின்னுட்களில் சேரர் போர்களில் மிகுதி ஈடுபட்ட நன்னன் இவன் மரபினன் ஆகலாம். இடைக் காலங்களிலும் இவன் பெயர் மரபை, நன்னிச் சோடர் முதலான கன்னடநாட்டுப் பெயர்களின் முதல் பகுதியில் காணலாம்.

கோசர் நன்னனைப் போரில் முறியடித்து அவனைக் காடுகளுக்குத் துரத்தினர். அவன் பட்டத்து யானையைக் கொன்றனர். துளுவ நாட்டைக் கைப்பற்றி அங்கேயே தங்கினர். அந் நாட்டின் சிறந்த கோட்டை நகராகிய 'பாழி'யை அரணுக்கி வலிமைப் படுத்திக்கொண்டு, அதையே தம் அடுத்த படையெடுப்புக்குரிய மூலதளமாக்கிக் கொண்டனர். பின் அவர்கள் சேரனையும், அதியன் மரபினனுகிய எழினியையும், சோழ நாட்டெல்லையிலுள்ள அழுந்தூர் வேள் திதியனையும், பாண்டிய நாட்டெல்லையிலுள்ள மோகூர்த் தலைவனையும் படிப்படியாகத் தாக்கினர்.

சேரர் படைத்தலைவன் குதிரை மலைக் கோமானுகிய பிட்டங்கொற்றன் மோரியருடன் பல தடவை போர் புரிந்தான். இவற்றில் எப்பக்கம் வெற்றியடைந்தது என்பது தெரியவில்லை. ஆனுல் மோரியர் கை வலுத்திருந்தது என்றே கூற வேண்டும். ஏனெனில் அவர்கள் எழினியைத் தாக்கி வாட்டாறு என்ற இடத்திலும் செல்லூர் என்ற நகரின் கீழ் திசையிலும் பெரும் போர் உடற்றினுர்கள். செல்லூர்க் கீழ்திசைப் போரில் எழினி மார்பில் வேல் பாய்வுற்று மாண்டான்.

சோழ நாட்டெல்லையிலுள்ள அழுந்தூர்வேள் ஆகிய திதியனிடத்திலும் பாண்டி நாட்டெல்லையிலுள்ள மோகூர்த் தலை

வனிடத்திலும் மோரியர் கை வரிசை சாயவில்லை. திதியன் அவர்களை முறியடித்துத் துரத்தினான், மோகூர் பணியாமல் நிமிர்ந்து நின்றது. பாண்டி நாட்டுக்குள் மோரியர் அடி யெடுத்து வைக்க முடியாமல் இது தடுத்து நிறுத்திற்று.

இச்சமயம் வரை மோரியப் பேரரசன், பேரரசுப் படை தமிழகம் புகவில்லை. எல்லைப்படைகளே ஈடுபட்டிருந்தன. துளுவ நாட்டு முதல் வெற்றியின் பின் சிறுசிறு தலைவர்களிடம் ஏற்பட்ட தோல்விகள் அவனைத் தட்டி எழுப்பின. அவன் இப் போது பேரரசின் பெரும்படையையே திரட்டினான். துளுவ நாடு அல்லது குடகையும் மைசூர் அல்லது எருமை நாட்டை யும் கடந்து தமிழகத்துக்குள் வரும் வழியிலுள்ள மலைகளை ஆற்றூர்க் கணவாய்ப் பக்கம் வெட்டிச் செப்பனிட்டுத் தேர் செல்லும் பாதை உண்டு பண்ணினான். இவ்வேலை சில ஆண்டு கள் பிடித்திருக்க வேண்டும். ஏனெனில் அம்முயற்சி சங்க ஏடுகளில் பல இடங்களில் சுட்டியுரைக்கப்படுகிறது.

பாதை முற்றுப் பெற்றபின் கடலெனப் பரந்த மோரியப் பேரரசின் பெரும் படைகள் பேரேரியில் வந்து தேங்குவது போலத் துளுவ நாட்டில் வந்து குழுமிப் பேராறுகளாகத் தமிழகத்துக்குள் வந்து பாய்ந்தன.

### செருப்பாழிப் போர்: சோழப் பேரரசன் பெருவெற்றி

தமிழகத்துக்கு வந்துற்ற பேரிடையூற்றைச் சோழப் பேர ரசன் இளஞ்சேட் சென்னி உணர்ந்து கொண்டான். இனித் தமிழகவேளிர் கைகளிலும் சிற்றரசர்மீதும் பொறுப்பைவிட்டு விட்டு ஒதுங்கியிருப்பது தகாது என்று எண்ணினான். அவனும் தன் பேரரசுப் பெரும் படைகளைத் திரட்டினான். அந்நாளில் சேரரும் பாண்டியரும் அவன் ஆணையின் கீழ்ப்பட்ட துணையரசு களாய் இருந்திருக்கவேண்டும். ஏனெனில் போர் தமிழகப் போர் ஆயினும் வெற்றிகள் சோழப் பேரரசன் வெற்றியா கவே குறிக்கப்படுகின்றன. வடவர் புராண மரபில் சேர, பாண்டியரைவிடச் சோழருக்கே பேரிடம் ஏற்பட்டது இப் பெரும் போரின் புகழ் காரணமாகவே என்னலாம்.

சோழநாட் டெல்லையிலேயே மோரியர் படைகள் பல தடவை நையப் புடைக்கப் பெற்றன. மோரியர் மீண்டும் மீண்டும் புதுப்புதுப் படைகள் அனுப்பினர். வடதிசைப் பேர ரசின் முழு ஆற்றலும் இதில் ஈடுபடுத்தப்பட்டது. ஆயினும் சோழப் பெரும்படையும் பிற தமிழகப் படைகளும் அவர் களைச் சிதறடித்தன. உயிரிழந்தவரும், உறுப்பிழந்தவரும்

போக மீந்தவர் சோழ நாட்டின் எல்லையிலிருந்து துளுவ நாடு வரை தப்பிேனும் பிழைத்தோம் என்றோடினர்.

திதியனைப்போல இளஞ்சேட் சென்னி மோரியரை முறியடித்ததுடன் அமையவில்லை. அவர்கள் மறுபடி தமிழகப் பக்கம் திரும்பாதிருக்கும்படி செய்ய அவன் எண்ணினான். ஆகவே தோற்றோடிய படைகளைத் துளுவ நாட்டுக்கே துரத்திக்கொண்டு சென்றான். மோரியர் மூலதளமாகிய பாழிக் கோட்டையையே முற்றுகையிட்டான்.

தாக்கியவர் இப்போது திருப்பித் தாக்கப்பட்டனர். பாழிக் கோட்டையிலுள்ள தங்கள் பிடியையேனும் காப்பாற்றிக்கொள்ள மோரியர் அரும்பாடுபட்டனர். ஆனால் சென்னி தமிழகத்தின் அன்றைய சென்னியாகிய துளுவ நாட்டிலேயே மோரியர் தடம் அழியும்வரை போரிட்டான். பாழிக் கோட்டை தரை மட்டமாக்கப்பட்டது,

செருப்பாழி எறிந்த இளஞ்சேட்சென்னியின் பெரும்புகழ் இடையன்சேந்தன் கொற்றனாரால் இனிதுபாடப்பட்டுள்ளது.

''எழூஉத்திணிதோள் சோழர்பெருமகன்
விளங்குபுகழ் நிறுத்த இளம்பெருஞ் சென்னி
குடிக் கடனாகலின் குறைவினை முடிமார்
செம்புறழ் புரிசைப் பாழி நூறி
வம்பவடுகர் பைந்தலை சவட்டிக்
கொன்றயானை......................' (அகம் 375)

தமிழகத்தைப் போரால் வெல்ல முடியும் என்ற நம்பிக்கை அசோகனுக்குத் தகர்ந்த பின்னரே, சமயப் போர்வையில் ஆட்சிப் புகழ் பரப்ப அவன் முனைந்திருக்கவேண்டும் என்னலாம். சங்க காலத்திலேயே தமிழகம் ஆரிய வண்ணமாகத் தொடங்கியதற்கு அசோகனும் புத்த சமண சமயங்களின் இனிப்பான தலையீடுகளுமே காரணம் ஆயின என்னலாம்.

செருப்பாழி எறிந்த இளஞ்சேட் சென்னி கி.மு. மூன்றாம் நூற்றாண்டினன் என்றும், சிபி, முசுகுந்தன், காந்தன், தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன் ஆகியோர் அவனுக்கு முற்பட்ட சோழர் என்றும் முனைவர் இராசமாணிக்கனார் கருதுகிறார். அவனுக்குப்பின் மனுநீதிச் சோழனும் முதற் கரிகாலனும் கி.மு. இரண்டாம் நூற்றாண்டினர் என்றும், பெரும்புகழ் வாய்ந்த இரண்டாம் கரிகாலன் கி. மு முதல் நூற்றாண்டினன் என்றும் அவர் வகுத்துள்ளார். தமிழரசர்

வரிசை முறையும் காலவரையறையும் முற்றிலும் நிறைவுற ஒழுங்குபடும்வரை இவ்வரிசை முறையையே நாம் தற்காலிக மாக ஏற்றுக்கொள்ளலாகும்.

## முதல் இலங்கை வெற்றி : மனுச்சோழன்

மனுநீதிச் சோழனே இலங்கையை ஆண்ட தமிழ்ச்சோழ அரசன் ஏலாரன் என்று முனைவர் இராசமாணிக்கனார் முடிவு செய்கின்றனர். ஆவின் கன்றுக்குப் பதிலாக மைந்தனைத் தேர்க் காலிலிட்டரைத்த கதை இரு அரசர்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளது என்பதே இதன் காரணம். முதற்கரிகால னைக் கி. மு. இரண்டாம் நூற்றாண்டினனாக அவர் கொள்வதற் கும் இதுவே வழிவகுத்தது என்னலாம். திருவள்ளுவர் கதை மரபில் அவர் மாணவராகவும் புரவலராகவும் கூறப்படும் கடல் வணிகன் ஏலேலசிங்கனே ஏலாரா என்று கருதுபவரும் உண்டு.

> ‘ நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி
> வளி தொழிலாண்ட உரவோன்மருக!’ (புறம் 66)

என்று வெண்ணிக் குயத்தியார் சோழன் கரிகாலனைப் பாடும் பாட்டில் கரிகாலன் முன்னோனாகக் குறிப்பது இந்த ‘மனுச் சோழனையே என்று கருத இடமுண்டு. ஏனெனில் இவ்வடிகள் அம்முன்னோன் கடலில் கப்பலில் சென்றுபோராற்றியதையும், அச்சமயம் காற்றையே ஆட்கொண்டதையும் குறிப்பிடு கின்றன.

## இமயத்தில் வில், புலி, கயல் பொறிப்பு

தமிழ் மூவேந்தரும் ஒருவருடன் ஒருவர் போட்டியிட்டு இமயத்தில் வில், கயல்‘ புலிக் கொடிகள் பொறித்தனர் என்று சங்க நூல்கள் பலகாலும் பகர்கின்றன. இவை வெறும் புனைந்துரைகளென்று பல புலவரும் பெரும்பாலான வரலாற் றாசிரியர்களும் கொள்கின்றனர். வரலாற்று வான விளிம்பில் உள்ள தெற்கு வடக்குத் தொடர்புகளையும் தமிழிலக்கியத் தில் தமிழர் கடற்போர். தொலைவடவர் பற்றியும் ஆரிய ருடன் போர் செய்து பெற்ற வெற்றிகள் பற்றியும் வரும்மிகப் பலவான குறிப்புக்கள் புனைந்துரைகளாகக் கொள்ளுதற்கு இடந்தராதவை. இவற்றுள் பல புறத்துறையில் அரசரைப் புகழும் பாட்டுகள் மட்டுமல்ல; அகத்துறையில் காதலி கூற்றிலும், காதலன் கூற்றிலும், பாங்கி கூற்றிலும் பாங் கன் கூற்றிலும் உவமை நயம், அடைமொழிநயம் படப்

பெரும் புலவர் இடைப் பெய்து கூறும் குறிப்புக்கள் எத்தனையோ உண்டு. நாடறிந்தனவாக மட்டுமன்றி வீடறிந்தனவாகக் கூறப்படும் இவ்வெற்றிகள் இன்று தமிழர் கனவு காணாத ஓர் உயர் தேசிய வாழ்வையும், அதனூடாகப் பல வரலாற்று நிகழ்ச்சிகளையும் காட்டுகின்றன என்பதில் ஐயமில்லை.

தென்திசை வடதிசைப் போட்டி பெரும்பாலும் கங்கைப் பேரரசுகளும் தமிழகப் பேரரசுகளும் இவற்றுடனே ஆந்திர கலிங்கப் பேரரசுகளும் மட்டுமே ஈடுபட்ட ஒன்றாகும். இதில் தொடக்கக் காலத்தில் ஆந்திரப் பேரரசும் அதன்பின் ஆந்திர கங்கைப்பேரரசுகளும் ஆரிய அரசுகள் என்று கூறப்பட்டிருத்தல்கூடும். இங்கே ஆரியம என்ற சொல் இனஅடிப்படையான உணர்ச்சி காட்டும் சொல் அன்று. நாட்டடிப்படையாகவும் திசையடிப்படையாகவும் வழங்கிய சொல்லேயாகும். புத்தர் காலங்களில், கங்கை நாட்டினரே தம்மை மிகம் பெருமையுடன் ஆரியர் என்று கூறிக்கொண்டனர். ஆனால் இக்காலம் ஆரிய இன அடிப்படை ஒரு தேசீய அடிப்படையில் வளர்ந்த காலம் ஆகும்.

தமிழக நாகரிகமே கங்கை நாட்டில் இப்புதிய ஆரிய தேசீயத்தை உருவாக்கக் காரணமாய் இருந்தது. ஆந்திரர் கலிங்க நாடு முழுவதும் வென்று இமயம் வரை பரவிய காலத்தில், இந்தத் தேசீய ஆரியர் புகழ் உச்ச நிலையடைந்தது. ஆந்திரர் வங்கத்தை வென்றதுடன் அமையாது பர்மாவின் பெரும்பகுதியையும் கைக்கொண்ட பின் ஆந்திர—மகதப் பேரரசு 'முக்கலிங்கம்' என்று அழைக்கப்பட்டது. முக்கலிங்கம் என்பது தெலுங்க கலிங்கம், வங்கம், பர்மா ஆகிய மூன்றுமே. இம் முக்கலிங்கப் பேரரசர் காலத்தில் தமிழர்—கங்கை ஆரியர் போட்டி மறைந்தது. கங்கை ஆரியர், ஆந்திரர், தமிழர் ஒரே நாகரிகத்தின் அடிப்படையில் இணைந்து, பண்படா ஆரியரும் அயலாருமான சிந்து ஆரிய மன்னரை எதிர்க்கத் தொடங்கினர். இதுவே சேரன் செங்குட்டுவன் காலம் (கி.பி. 150-200) ஆகும்.

எனவே மூவேந்தர் வடதிசைப் படையெடுப்புக்கள் நடந்த காலம் செருப்பாழி எறிந்த இளஞ்சேட் சென்னிக்கும் (கி.மு. 3-ம் நூற்றாண்டு) செங்குட்டுவனுக்கும் (கி. பி. 150) இடைப்பட்ட காலமாய் இருத்தல் வேண்டும். இக்காலத்திலே மூவேந்தர் வடதிசைக்கெதிராக நீண்ட நாள் ஒன்றுபட்டிருந்த செய்தியைக் கலிங்கப் பேரரசன் காரவேலன் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன.

**கலிங்கப் பேரரசன் காரவேலன் படையெடுப்பும் தோல்வியும்**

காரவேலன் கலிங்கப் பேரரசனாக ஆண்ட காலத்தை நம்மால் வரையறுக்க முடியவில்லை. ஆனால் அவன் ஆந்திரரை அடக்கி மகத நாட்டையும் வென்று புகழுச்சியடைந்திருந்த நாட்கள் கி. மு. 163-க்கும் கி. மு. 153-க்கும் இடைப்பட்ட பத்தாண்டுகளே என்று அறிகிறோம். அவன் சமண சமயம் சார்ந்தவன். அசோகன் தன் ஆட்சிப் பரப்புடனே புத்த சமயமும் பரப்பியது போல, தன் ஆட்சிப் பரப்புடன் சமண சமயமும் பரப்பவேண்டும் என்ற எண்ணம் கொண்டவன் அவன். இக் காரணத்தாலேயே அவன் சமண சமய அசோகன் என்று குறிக்கப்படுகிறான். ஆந்திரப் பேரரசின் நீடித்த ஆட்சிக்கு வழி வகுத்துக் கொடுத்தவன் அவனே.

வடதிசையில்பரப்பிய ஆட்சியையும் சமயத்தையும் தென்திசையிலும் பரப்பி, அசோகனையும் தாண்டிப் புகழ்பெற்று விடவேண்டுமென்று கார வேலன் துடித்தான். ஆந்திரப் பேரரசு தற்காலிகமாக அவன் கீழ்ப்பட்டிருந்ததனால் அவன் பேரரசின் எல்லையும் அசோகன் பேரரச எல்லையைப் போலவே தமிழக எல்லையை அளாவியிருந்தது. மோரியர் என்றும் தலைப்படாத அளவில் அவன் தமிழகத்தில் இடம் கொள்ளப் பல போர்கள் ஆற்றினான். தமிழகத்தில் மூவேந்தர்கள், வேளிர்கள் ஆகிய யாவரும் செருப்பாழி கடந்த இளஞ்சேட் சென்னி காலமுதல் வட திசையை எதிர்த்து ஒரே கூட்டு முன்னணி அமைத்திருந்தனர். இதைச் சூழ்ச்சிகளால் உடைக்கவும் காரவேலன் அரும்பெரும் முயற்சிகள் செய்தான். இவற்றில் வெற்றி பெற்றதாகவும் அவன் தற்காலிகமாக எண்ணினான் என்று தோற்றுகிறது. ஏனென்றால் அவன் கல்வெட்டுக்களில் ஒன்றில் அவன் இதுபற்றித் தற்பெருமை கொள்கிறான். 113 ஆண்டுகளாகத் தமிழகத்தில் நிலவிவந்துள்ள தமிழக அரசர்களின் கூட்டணியைச் சிதைத்து விட்டதாக அவன் அதில் குறிக்கிறான்.

கூட்டணி அமைந்த காலம் செருப்பாழி எறிந்த காலமானால் அதன் ஆண்டு கி. மு. 276 அல்லது கி. மு. 266ஆக இருக்கவேண்டும் என்னலாம்.

**இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்**

வடஇமயத்தில் தமிழ்த்தடம் பொறித்த தமிழ் மூவேந்தருள் முதல்வன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனே என்று கூறலாம். ஏனெனில் சேரருள்ளேயே செங்குட்டுவன் இமயம் வரை வென்றாலும், பிற தமிழ் வேந்தரும் இமயத்தில் தடம் பொறித்தாலும் அவனே 'இமயவரம்பன்' என்ற சிறப்புப் பெயருக்குப் போட்டியில்லாத உரிமையுடையவனாய் இருந்து

வந்திருக்கிறுன். அவனே பத்துப்பாட்டில் பாடிய குமட்டூர்க் கண்ணனுர்,

'ஏம மாகிய சீர்கெழுவிழவின்
நெடியோன் அன்ன நல்லிசை
ஒடியா மைந்த!'

என்று நெடியோன் புகழை நினைவூட்டி, அதற்கு அவன் உரியவ னுகட்டும் என்று வாழ்த்துகிருர். நெடியோன் இமயம் வரை வென்ற பழம்புகழுடன், இமயத்தில் விற்பொறித்த நெடுஞ் சேரலாதனின் புதுப் புகழை இது ஒப்பிடுவதாகக் காண்கிறது. இது நெடுஞ்சேரலாதன் செயலன்று, அவன் முன்னேர்களின் புகழே என்று சிலர் கருத்துக்கொள்கின்றனர். ஆனுல்முன்னேர் செயல் பின்னேருக்குக் கூறப்படுவது மரபானுலும், நெடுஞ் சேரலாதனே முன்னேஞக எங்கும் சிறப்பிக்கப்படுகிருன். அவ னும் இமயம் முதல் குமரிவரை ஆண்டதாகப் பத்துப்பாட்டுக் கூறுகிறது.

"ஆரியர் துவன்றிய பேரிசை இமயம்
தென்னங் குமரியோடாயிடை
மன்மீக் கூறுநர் மறம்தபக் கடந்தே!"

இது நேரடியாட்சியாகவோ, எல்லா அரசராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட மேலுரிமையாகவோ, அல்லது மாநிலமெங் கும் ஆற்றிய வெற்றி உலாவாகவோ நிகழ்ந்திருக்கலாம். ஆனுல் நெடுஞ்சேரலாதன் காலத்தை வரையறுக்கும் வரையி லும், இதுபற்றி மேலும் சான்றுகள் அறியப்படும் வரையிலும் இதைத் திட்டப்படுத்திக் கூற முடியாது. இச் செயல் சோழ ரும், பாண்டியரும் புலி கயல் பொறிப்பதற்கு முற்பட்டது என்பதில் மட்டும் ஐயமில்லை.

சோழருள் இமயத்தில் தமிழ்ச் சின்னம் பொறித்தவன் கரிகாலனே என்றும், பாண்டியருள் மீனக்கொடி பொறித்த வன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனே என்றும் கருத இடமுண்டு.

முதல் வல்லத்துப் போர்

சோழருள் ஓரரசன் ஆரியரைத் தஞ்சையடுத்த வல்லம் என்ற இடத்தில் நிகழ்ந்த போரில் முறியடித்ததாகப் பாவைக் கொட்டிலார் என்னும் புலவர் தெரிவிக்கிருர்.

"மாரியம் பின் மழைத்தோல் சோழர் வென்வேல்
வில்ஈண்டு குறும்பின் வல்லத்துப் புறமிளை
ஆரியர் படையின் உடைக என்
நேரிறை முன்கை வீங்கிய வளையே!" (அகம் 336)

காதலி காதலனிடம் உள்ள கோபத்தைச் சுழலும் வளையல்

மீது செலுத்தி, வல்லத்துப்போரில் உடைந்த ஆரியர் படை போல் என் வளை உடையட்டும் என்கிறாள்!

தமிழக வரலாற்றில் வல்லத்தில் நடைபெற்ற போர்கள் பல. அவற்றுள் முதல் போர் ஆரியர் படை உடையத் தமிழர் ஆற்றிய இப்போரேயாகும். இப்போரில் ஈடுபட்ட சோழமன்னன் யார், அது செருப்பாழிப் போரையொட்டி நிகழ்ந்ததா, பின் நிகழ்ந்ததா என்பது தெரியவில்லை.

**கரிகாலன், நெடுஞ்செழியன் இமயப் படையெடுப்பு**

வட திசையில் படையெடுத்த சோழன் கரிகாலன் இரண்டாம் கரிகாலனே. இவன் காலம் ஏறத்தாழ கி. மு. முதல் நூற்றாண்டு என்று கருதப்படுகிறது. வடதிசை வென்ற பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனைப் பற்றி நாம் மிகுதி அறிவதற்கில்லை.

> "வட ஆரியர் படை கடந்து
> தென் தமிழ் நாடு ஒருங்கு காணப்
> புரைதீர் கற்பின் தேவி தன்னுடன்
> அரைசு கட்டிலில் துஞ்சிய பாண்டியன்
> நெடுஞ்செழியன்"

(சிலப்பதிகாரம் மதுரைக் காண்டம் இறுதிக் கட்டுரை)

என்ற இளங்கோவின் முத்தமிழ்க் காப்பியக் கூற்றினும் விளக்கமிக்க சான்று நமக்குக் கிட்டவில்லை.

சங்கப் பாடல்களில் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியனைப் பற்றிய பாட்டுக்கள் எதுவும் நமக்கு வந்து எட்டவில்லை. ஆனால் அவன் பெருவீரன் மட்டுமல்ல; சிறந்த சிந்தையும் செழுங்கலைத் திறமும் படைத்தவன் என்பதை அவனே பாடிய பாடல் ஒன்று காட்டுகிறது. அதுவே,

> "உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும்
> பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே!
> ஒரு குடிப்பிறந்த பல்லோ ருள்ளும்
> மூத்தோன்வருக என்னாது, அவருள்
> அறிவுடையோனாறு அரசுஞ் செல்லும்!" (புறம் 183)

எனக் கல்விபற்றிப் பாடிய இக்காவலன் உயர் நலங் காட்டுவது ஆகும்.

மூவேந்தர் வடநாட்டுப் படையெடுப்புடன் நாம் புராண மரபின் வான விளிம்பையும் இலக்கியங் குறித்த மரபுகளின் வானவிளிம்பையும் கடந்து சங்ககால வரலாற்றொளிக்குள் வருகிறோம்.

# 5. சங்ககாலப் போர்கள்–1

தமிழர் தமக்கென வரலாறு வகுத்துக் கொள்ளவில்லை என்று குறைப்பட்டுக் கொள்கின்றனர் சிலர். தமிழருக்கு வரலாற்றுணர்வே கிடையாது என்று முடிவு செய்து விடுப வருமுண்டு. இந்த இரண்டும் இருவேறு வகையில் பிழை பட்ட கருத்துக்களேயாகும். ஏனெனில் அறிவியல் போல வரலாறும் எல்லா நாடுகளிலும் புதுப்படைப்பே. உலகெங் கும் வரலாற்றுக்கான ஆதாரங்கள் தேடி ஆராயப் பெற்று, நாட்டு வரலாறு தொகுக்கப்பட்டு வருவது சென்ற இரண்டு மூன்று நூற்றாண்டுகளிலேயே என்னலாம்.

வரலாற்று ஆதாரங்களைப் பேணுவதிலும் தேடுவதிலும் நாடுகளைத் தூண்டியது தேசீய உணர்வே. தமிழகமும் சீன மும் நீங்கலான உலக நாடுகளில் இத்தேசீய உணர்வு காரண மாக நாட்டெல்லை வகுக்கப்பட்டதும், தேசீய அரசியல்கள் அமைந்ததும் அண்மைக்காலத்தில்தான். இத்தேசீய உணர்வு டன், பண்டை நாகரிகங்களின் தூண்டுதலால் ஏற்பட்ட கலை மறுமலர்ச்சியும், வரலாற்றை உருவாக்கும் முயற்சிக்கு எங் கும் மிகுந்த ஆக்கம் அளித்துள்ளது. தமிழகத்திலோ தேசீய உணர்வும் தேசீய நாட்டெல்லையும், தேசீய அரசியலும் இரண் டாயிரம் மூவாயிர ஆண்டுகட்கு முன்பே ஏற்பட்டு விட்டன. கலைமலர்ச்சியிலோ, உலகுக்குத் தூண்டுதல் தந்த பண்டை நாகரிகங்களுக்குமுற்பட்டே அதற்கு நீடித்த வளர்ச்சி ஏற்பட் டிருந்தது. வரலாற்றுணர்வும் வரலாற்றொளியும் அதன் இலக் கிய வாழ்வு முழுதும் உள்ளூர நின்று ஒளி வீசுகின்றது.

ஆனால் காலக்கேடாக, மற்றெல்லா நாடுகளிலும் புதிய தேசீயத்தால் வரலாறு காணப்பட்ட நாளிலேயே தமி ழகம் தன் தேசீய எல்லை, தேசீய அரசியல், தேசீய உரிமை வாழ்வு, தேசீய உணர்வு ஆகியவற்றை இழந்துள்ளது. எனவே, தமிழகம் தனக்கென வரலாறு வகுத்துகொள்ளவில்லை என்பதைவிட, அத்தைய வரலாறு வகுப்பதற்குரிய சூழ் நிலையை இழந்து அது தடுமாறுகிறது என்பதே உண்மையா

கும். தமிழினம் வரலாற்றுணர்வு அற்றது என்பதைவிட, அவ் வரலாற்றுணர்வு அயலின, அயல்மொழி ஆதிக்கங்களால் அடக்கி ஒடுக்கி அழிக்கப்பட்டு வருகிறது என்று கூறுவதே பொருத்தமானது.

பிரிட்டிஷ் ஆட்சி பொதுவாக தமிழகம் நீங்கிய கீழ் திசைக்கு முற்றிலும் அயலாட்சியாய் நிலவிற்று என்று கூற முடியாது. உண்மையில் சிந்து கங்கை வெளிபோன்ற மாநிலங் களுக்கு வரலாற்று வெளிச்சம் அளித்தது அவ்வாட்சியே. அவ் வாட்சியிலேயே அம்மாநிலம் புத்தரையும், அசோகனையும், கனிஷ்கனையும் கண்டது. அதற்குமுன் அது வரலாறு என்ற பெயரால் அறிந்ததெல்லாம் பஞ்சதந்திரக் கதைகளும், விக் கிரமாதித்தன் வேதாள பதுமைக் கதைகளும், புராணப் பஞ் சாங்கங்களுமே. அத்துடன் அயலாட்சி என்று கூறப்படும் அவ் வாட்சியிலேயே மாநிலத்தின் பழம் பெருமைக்குரிய சிந்து வெளி, நாலந்தா, பாடலிபுர நகரம், கபிலவாஸ்து, வட மதுரை ஆகிய இடங்கள் பழமையாராய்ச்சி ஒளிகண்டன. தவிர, அம்மரபுக்குரிய சமஸ்கிருதமொழி, இலக்கியம் ஆகி யவை சார்ந்த ஆராய்ச்சிகளிலும் வெள்ளையர் தத்தம் தாய் மொழிகளில் காட்டிய ஆர்வத்தினும் மேம்பட்ட ஆர்வம் காட்டி, அவற்றைப் பேணி வளர்த்தனர்.

இவற்றுக்கு நேர்மாறுக, அதே ஆட்சியாளரும், ஓரளவு அவர்களுக்குப் பின் வந்த மாநில ஆட்சியினருங்கூடத் தமிழ், தமிழகம், தமிழின மொழிகள் ஆகியவற்றின் வரலாற்றிலும், ஆராய்ச்சியிலும், பாராமுகமுடையவர்களாகவே இருந் தனர். தமிழகத்தில் பண்டைப்பெருமைக்குரிய கொற்கை, பழமதுரை, வஞ்சிமூதூர், மண் மூடிய உறந்தை, கடலால் ஓர ளவு அழிவுற்ற புகார், பழயாறை, கங்கைகொண்ட சோழ புரம், புதுவை, மல்லை, காஞ்சி ஆகிய இடங்களின் அகழ்வா ராய்ச்சி தமிழக வரலாற்றுக்கும், மாநில வரலாற்றுக்கும் கூடப் பெரும்பயன் அளித்திருக்கும். ஆனால் அறிஞர் துப் ரேய்ல் போன்ற தனி வெள்ளையர் ஒருவர் இருவர் முயற்சி யன்றி, ஆராய்ச்சித்துறையோ, ஆட்சியாளரோ அவற்றில் இன்னும் போதிய அளவு கருத்துச் செலுத்தவில்லை.

தமிழகம் மாநிலத்தின் ஒரு நேரிய உறுப்பாகக்கூடக் கரு தப்படவில்லை. மாநிலத்தின் ஒருபுற உறுப்பாக, அதன் பண் பாட்டுக்கு ஊறு செய்யும் ஒரு நோயுறுப்பாகவே அது ஓரக் கண்ணுல் பார்வையிடப்படுகிறது. இந்நிலையில் அதன் வர லாறு வகுக்கப்படாதிருப்பது மட்டுமல்ல குறை, வகுக்கப்படு வதற்குத் தடங்கலான பண்புகளே வளர்க்கப்படுகின்றன. கிட்டத்தட்ட ஆங்கில ஆட்சித் தொடக்கம்வரை இருந்ததா

கத் தெரியவரும் தமிழிலக்கியக்கடலின் பெரும்பகுதி, அயல் பண்பாட்சியினரின் ஆதிக்கத்தால் அணிமைக்காலத்திலேயே அழிந்துள்ளதாக, இன்னும் அழிந்துவருவதாக அறிகிறோம்.

## தமிழர் வரலாற்றுணர்வு

தமிழினத்தார் உண்மையில் வேறெந்த இனத்துக்கும் அணிமைவரை ஏற்படாத வரலாற்றுணர்வு மட்டுமன்றி, நில இயலுணர்வும், அறிவியலுணர்வும் உடையவராயிருந்தனர். இதனைத் திரட்டுருவிலும், துண்டுத்துணுக்கு வடிவிலும் நமக்கு இன்று கிடைத்துள்ள இலக்கியமும் கலவெட்டுக்களுமே காட்டப் போதியன. உண்மையில் கல்வெட்டுக்கள் ஏராளமாயுள்ள பிற்காலத்தின்வகையில் நமக்குக் கிடைக்கும் வரலாற்றொளியைவிட, சங்ககாலத்துக்கு அதன் துண்டுத்துணுக்கு இலக்கியத்தால் கிடைத்துள்ள ஒளியே பெரிது. ஏனெனில கல்வெட்டுக்கள் தற்செயலாகவே நமக்கு வரலாற்றுக்கு உதவுகின்றன. அவை கிட்டத்தட்ட அத்தனையும் கோயில்களுக்கும் கோயில்குருக்கள்மார்களுக்கும் மன்னர் கொடுத்த மானியங்கள் பற்றியவைகளே. ஆனால் சங்க இலக்கியம் மன்னர்கள், ஆட்சிமுறை, போர்கள், மக்கள் கருத்துக்கள், வாழ்க்கைச் சூழல் ஆகிய எல்லாத் துறைகளிலுமே பரவியுள்ளன. அது போன்ற வாழ்க்கை இலக்கியத்தை, வரலாற்று நோக்குடைய அறிவியல் நோக்கு வாய்ந்த இலக்கியத்தை நாம் உலகில் வேறு எங்கணுமே காணமுடியாது.

சங்க இலக்கியத்தில் அந்நாளைய பாண்டியரைப் பாடும் புலவர்கள் அவர்கள் தொலை முன்னோனாகிய நெடியோன் புகழைச் சுட்டிக்காட்டியுள்ளனர். சேரநாட்டில் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைப் பாடும் புலவர் ஒருவர் அவன் முன்னோரை மட்டுமன்றி மூவேந்தருக்குமே சிறப்புத்தரும் புகழ் வாய்ந்த நெடியோனையும்சுட்டி அவன்போல வாழ்வாயாக என்று வாழ்த்துகிறார். மாமூலனார், பரணர்போன்ற பழம் புலவர்கள் தம் காலத் தமிழக வரலாற்றுச் செய்திகளைமட்டுமன்றித்தொலையிலுள்ள கங்கை நாட்டுச் செய்திகளையும் நமக்குப் பதிவுசெய்து சென்றுள்ளனர். இவை வெள்ளையர் வரும்வரை எவரும் அறியாத செய்திகள் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழரிடையே வரலாற்றுணர்வும், நில இயல், அறிவியல் உணர்வுகளும், பண்படாப் பிற இனத் தலையீடுகளாலும் ஆதிக்கங்களாலுமே படிப்படியாக நலிந்துவந்தன என்னல் வேண்டும். ஏனெனில் சோழப் பேரரசரின் காலங்கடந்துகூட இவை புராண மரபுகளின் குளறுபடிகளுடன் கலவாதுஇயங்குவது காணலாம். எடுத்துக்காட்டாக, சங்க காலத்துக்கும்

வேள்விக்குடிச் செப்பேடுகளின் காலத்துக்கும் இடையே ஐந் நூறு ஆண்டு இடையீடும் பெருத்த அரசியல் குழப்பமும் மாறு பாடுகளும் ஏற்பட்டிருந்தன. ஆயினும் சங்க காலத்திலேயே முற்பட்டவனான பல்சாலை முதுகுடுமிப் பாண்டியன் அளித்த நன்கொடையை பல நூற்றாண்டுக்கால அரசியல் மரபும், அரசியல் அரங்க மரபும் அறிந்து பாண்டியன் உறுதிசெய்ய முடிந்தது. இது போலவே தேவார காலத்துக்கும், பெரிய புராண காலத்துக்கும் ஐந்நூறு ஆண்டு இடையீடும் பெருத்த அரசியல் மாறுபாடுகளும் இடையே இருந்தன, ஆயினும் பெரிய புராணம் பாடிய புலவர் சேக்கிழாரால், முற்பட்ட கால அரசியல் பின்னணி நிலைகள் சரிவர உணர்ந்து தீட்டப் பட்டுள்ளன. அதே காலத்திலிருந்த சயங்கொண்டாரும் ஒட்டக்கூத்தரும் பெருஞ் சோழருக்கு ஆயிரமாண்டு முற்பட்ட சோழர்கள் வரலாற்றை அவர்களைப்பற்றிய சின்னஞ் சிறு செய்திகளையும் வரலாற்று மரபு வழியே அறிந்து உரைத் துள்ளார்.

தமிழர் வரலாற்றுணர்வுக்குப் பிற்காலப் பாண்டியர் கல் வெட்டொன்று வியக்கத்தக்க நற்சான்று அளிக்கிறது. 12-ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆண்ட அப் பாண்டியன் சோழர் அரண்மனையையும் தலைநகர் முழுவதையும் அழித்து விட்டான். ஆனால் பட்டினப்பாலை ஆசிரியர் கடியலூர் உருத் திரங்கண்ணனார் கரிகாலன் முன் அதனை அரங்கேற்றுவதற் காகக் கட்டப்பட்ட பதினாறு கால் மண்டபத்தை அழியாது காத்தானும்! இதில் வரலாற்று மரபின் ஆற்றலையும் காண் கிறோம். தமிழர் கலையார்வத்தின் அருமையையும், ஆட்சி யெல்லை கடந்த தேசீய ஆர்வத்தின் பெருமையையும் பார்க் கிறோம், ஏனெனில் கரிகாலனும் சோழன்தான், சோழன்மீ துள்ள கோபம் அவன்மீது பாயவில்லை. ஏனெனில் அவன் பாடல்கொண்ட சோழன், தமிழகத்துக்குத் தேசீயப் பழம் புகழளித்த சோழன்! கலையார்வம், தேசீய ஆர்வம், வர லாற்று மரபு ஆகிய மூன்றும் இங்கே பன்னிரண்டு நூற்றாண்டு கள் தாண்டிச் செயலாற்றுவது காண்கிறோம்.

சங்க இலக்கியத்தின் உதவி கொண்டு நாம் இன்று தமி ழர் வாழ்க்கை பற்றியும், அறிவு நிலைபற்றியும், அரசியல் சமு தாயப் பழக்க வழக்கங்கள்பற்றியும் அறியும் செய்திகள் பல. அவற்றால் நாம் அறியவரும் போர்களின் தொகையும் நூற் றுக்கணக்கானது. வரலாற்று மரபு இழந்த நம் நாட்களில் அவற்றுள் பலவற்றின் முன்பின் வரிசை முறை, கால இடச் சூழல்கள் ஆகியவற்றை முற்றிலும் விளக்கமாக அறிய முடிய வில்லை. வருங்கால ஆராய்ச்சிகளே அவற்றுக்கு மேலும் விளக் கம் அளிக்கவேண்டும். ஆயினும் தேசீய வாழ்வின் பொதுப்

போக்கை உணர்த்தும் பெரும் போர்கள் சிலவற்றை நாம் உருவகப்படுத்திக் காணமுடியும்.

**கரிகாலன் புகழ் வளர்ச்சி: மலைப்பளிக்கும் பெரும் புதிர்**

தமிழிலக்கியத்தில் மட்டுமன்றி, தமிழகம் சூழ்ந்த பல நாடுகளிலுள்ள பல மொழிகளின் இலக்கியத்திலும், அது போலவே பல நாடுகளின் கல்வெட்டுக்களிலும், பல நாட்டு மக்கள் உள்ளங்களிலும் புகழ் பரப்பிய பண்டைத் தமிழ்ப் பேரரசன் கரிகாலன். அவன் புகழ் அவன் காலத்தில் மட்டு மன்றி அது கடந்தும் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்வது கண்டு தமிழார்வலர்கூட வியப்பும் மலைப்பும் எய்துகின்றனர். வரலாற்றாராய்ச்சியாளர்களோ, இவ்வகையில் திகைப்பும் குழப்பமும் அடைகின்றனர். இலக்கியத்திலும் சரி, கல்வெட்டுக்களிலும் சரி காலமும் தேசமும் மொழியும் தொலைவாகும் தோறும் புகழ் வளர்வது கண்டு, அவர்கள் பழங்கால இலக்கியச் சான்றுகளை மட்டுமே வர லாற்று மெய்ம்மை எனக் கொள்கின்றனர். பிற்காலக் கல்வெட்டுச் சான்றுரைகள் அத்தனையையும் படிப்படியாக வளர்ந்த கற்பனை எனக் கருதுகின்றனர்.

ஆனால் மொழி எல்லை, தேச எல்லைகடந்து பல விடத்தும் பல காலத்தும், பலராலும், கரிகாலன் பெயர் போற்றப் படுவதை வரலாற்றாசிரியர் முடிவு விளக்க வில்லை. தவிர கரிகாலன் பற்றிய பழந் தமிழ் இலக்கிய உரைகளே ஒன்றுக் கொன்று முற்றிலும் பொருந்த வில்லை.

முனைவர் இராச மாணிக்கனார் சங்க காலத்திலே கி.மு.2-ம் நூற்றாண்டின் முடிவில் ஒரு கரிகாலனும், அதே நூற்றாண்டின் பிற்பகுதில் ஒரு கரிகாலனும் இருந்ததாகக் கொள்கிறார். இரு கரிகாலர்களையும் பற்றிய சங்க இலக்கியச் சான்றுகளையும் பிரித்துக் காட்டுவதுடன், ‘வெண்ணி’ அல்லது வெண்ணில் என்ற இடத்தில் நிகழ்ந்த போர் பற்றிய குறிப்புக்களையும் இருவேறு கரிகாலர்களால் ஆற்றபட்ட மூவேறு போர்கள் என்றும் விளக்கி யுள்ளார்.

இவ்விளக்கத்தின் பின்னும் சங்க இலக்கியக் குறிப்புக்கள் தான் தெளிவடைகின்றன. சங்க காலத்திலேயே இயற்றப் பட்ட சிலப்பதிகாரம் தரும் வடநாட்டுப் படையெடுப்பும், கலிங்கத்துப்பரணி, மூவருலாக்கள் குறிப்பிடும் இமயம் அல்லது மேருவைச் செண்டாலடித்துப் புலி பொறித்தல், காவிரிக்குக் கரைகட்டல் ஆகியவையும் இரண்டாம் கரி காலனுக்குரியனவென்று கொள்ளக் கூடுமானாலும், சங்க

இலக்கியம் அது பற்றிக் கூருதது வியப்பைத் தராமலில்லை. வரலாற்ருசிரியர் பலர் இது காரணமாக இவற்றைப் பிற்காலப் போலிப் புனைந்துரை என முடிவு செய்ய எண்ணுகின்றனர். ஆனல் இவை சங்க காலத்திறுதியிலோ அல்லது புராண வரலாற்று மரபுகளின் வானவிளிம்பிலோ உள்ள மற்ருெரு கரிகாலன் செயலாகவும் இருத்தல் கூடும். ஏனெனில் பிற்காலச் சோழரின் அன்பில் பட்டயங்கள், திருவாலங் காட்டுப் பட்டயங்கள், லெய்டன் பட்டயங்கள் ஆகியன பெருநற்கிள்ளி என்ற சோழனுக்கும், செங்கணுன் என்ற சோழனுக்கும் இடைப்பட்டவனுக ஒரு கரிகாலனைக் குறிக்கின்றன.

வடதிசைப் படையெடுப்பு முதலிய செய்திகள் முற்றிலும் புனைந்துரையென்று கூறத்தக்க தன்று என்பதை 8-ம் நூற்ருண்டுக்குரிய மாலேபாட்டுப்பட்டயங்கள் முதலானதெலுங்கு ஆதாரங்களும், சிங்கள வரலாற்றேடான மகாவம்சோவும் காட்டுகின்றன. ஆந்திர நாட்டிலும் மைசூர் நாட்டிலும் ஆண்ட சோழ மரபினர் தம்மைக் கரிகாலன் மரபினர் என்று பெருமையுடன் கூறிக் கொள்வதை நோக்க, கரிகாலன் அப் பகுதியை வென்று ஆண்ட காலத்தில் அவன் ஆட்சியாளராக அமர்த்திய சோழர் குடி இளவல்களாகவே அவர்கள் இருத்தல் கூடும் என்று கருத வேண்டி யிருக்கிறது. மிகப் பிற்பட்ட காலங்கள் வரையுள்ள பல மரபினர் — ஹைதராபாதில் உள்ள வாரங்கல் ஆண்ட காகதீய மரபினர், விஜயநகர ஆட்சிக் காலத்தில் கார்வெட் நகர் ஆண்ட சாளுவ மரபினர், ஒரிசா அல்லது கலிங்கம் ஆண்ட கங்க சோடர் ஆகியவர்களது பெருங் காலஇடப் பரப்பு கரிகாலனின் பரந்த வெற்றிகளுக்கு சான்றுதருவன வாகும்.

தெலுங்குக் கல் வெட்டுக்களில் பலவற்றில் ஒரு சமஸ்கிருதப் பாட்டின் அடிகள் ஓயாது பல்லவியாகக் காதில் மணியோசைபோல ஒலிக்கின்றன. மூன்று கண்ணுடைய ஏதோ ஒரு அரசன் கரிகாலனுக்குப் பணியா திருந்ததையும், கரிகாலன் அவன் மூன்ரும் கண்ணைக் குடைந்தெடுத்து விட்டதையும் காவிரிக்குக் கரைகட்டிய செய்தியையும் அது புனைந்து புகழ்கின்றது. அப்பாடல்,

சரண சரோருஹ
விஹத விலோசன
த்ரிலோசன
ப்ரமுகாகில
ப்ருதி வீசுவர
காரில

*காவேரி தீர*
*கரிகாலகுல—*

என்பது. இதையே குலோத்துங்கன் பிள்ளைத் தமிழும்

*முகுல நதிக்கரசன்*
*முடி கொடு வகுத்தகரை*
*முகில் தொட அமைத்தது*
*அறிவோம்!*
*இருபுறமும் ஒக்க நினது*
*ஒருபுலி பொறிக்க வட*
*இம கிரி திரித்தது*
*அறிவோம்.*
*இகல் முகரி முக்கணிலும்*
*ஒருகண் கிழியக் கிழியில்*
*எழுது கண் அழித்தது*
*அறிவோம்!*

என்று இன்னும் நயத்திறம்படப் புனைந்துரைக்கின்றது.

தமிழில் பெரிய புராணம் (12ம்நூற்றுண்டு), சோழவம்ச சரித்திரம் என்ற பிருகதீஸ்வரர் மகாத்மியம் (16ம் நூற்றுண்டு), சோழ மண்டல சதகம், செவ்வந்திப் புராணம் (17ம் நூற்றுண்டு) ஆகியவையும், தெலுங்கில் பண்டிதாராத்ய சரிதம் (13 ம் நூற்றுண்டு), கன்னடத்தில் நவசோள சரித்திரம் (14 ம் நூற்றுண்டு) ஆகியவையும் யாவும் தத்தம் காலங்களுக் கேற்பக் கரிகாலனைப் பற்றிய பல மாறுபட்ட கதைப் பதிப்புகள் தருகின்றன.

### வெண்ணில் போர் I அல்லது வெண்ணி வாயிற் போர்

வெண்ணி அல்லது வெண்ணில் என்பது தஞ்சாவூரை அடுத்த ஓர் ஊர். இது தேவாரப்பதிகம் பெற்ற காலத்தில் நாயன்மாரால் பாடப்பட்டுள்ளது. இப்போது அது கோயிலுண்ணி (கோயில் வெண்ணி) என்ற பெயருடன் நிலவுகிறது.

முதல் வெண்ணிப் போரில் முதற் கரிகாலன் பதினொரு வேளிர்கள் அல்லது சிற்றரசர்களையும் சில அரசர்களையும் ஒருங்கே முறியடித்தான் என்று அறிகிறோம். அரசர்கள் யார் யார் என்பது கூறப்படவில்லை யானாலும், பன்மையிலேயே குறிக்கப்படுவதால் சேர பாண்டியர் இருவருமே கரிகாலனை எதிர்த்தனர் என்று கருதலாம். முதற் கரிகாலன் பேரரசனல்லா விட்டாலும் அந்நிலைக்கு உயர்ந்து வருவதையே இது குறிக்கிறது. ஏனெனில் இப் பெருங்கூட்டு வலு இப்போரில் முற்றிலும் முறிந்துவிட்டதென்று அறிகிறோம். அரசரும் சிற்

றரசரும் ஓடிய ஓட்டத்தில் அவர்கள் தத்தம் போர் முரசங்களை உடன் கொண்டு செல்லக்கூட நேரமில்லாது போயிற்று. அவற்றைக் களத்திலேயே கைவிட்டு ஓடினர்.

இப்போர் பற்றிச் சங்க காலப் பழம் பெரும் புலவர் பரணர் ஒரு கவிதை ஓவியம் தீட்டியுள்ளார்,

காய்சின மொய்ம்பில் பெரும் பெயர்க்கரிகால்
ஆர்கலி நறவின் வெண்ணி வாயில்
சீர்கெழு மன்னர் மறலிய ஞாட்பில்
இமிழ் இசை முரசம் பொருகளத்து ஒழியப்
பதினொருவேளிரொடு வேந்தர் சாய
மொய்வலி அறுத்த ஞான்றைக்
தொய்யா அழுந்தூர் ஆர்ப்பினும் பெரிதே!

(அகம் 246)

பாட்டின் இறுதியில் போர் வெற்றியின் பயனாக அழுந்தூரில் உண்டான ஆர்ப்பரிப் பாரவாரம் பெரிதென்ற குறிப்புத் தரப்பட்டுள்ளது. இறு வெற்றி ஆரவாரம் என்பதிலும், அழுந்நூர் போர்க்களத்துக்கு அருகிலுள்ள நகரமோ அல்லது தலை நகரமோ ஆக வேண்டுமென்பதிலும் ஐயமில்லை. அழுந்தூரே தலைநகரென்றும் முதற்கரிகாலன் இச்சமயம் அழுந்தூர் வேள் அல்லது சிற்றரசன் நிலையில் இருந்தே வலிமை பெற்று வளரத் தொடங்கினான் என்றும் கருதப்படுகிறது. ஆனால் பிற அகப்பாடல்களில் அழுந்தூருடன், இடையாறு, கழார் ஆகிய ஊர்களும் அவனுடன் நெருங்கிய தொடர்புடையனவாகக் குறிக்கப்படுகின்றன. எனவே செருப்பாழி வென்ற நெடுஞ்சேட் சென்னிக்குப்பின் பேரரசு பழையபடி சரியத் தொடங்கிற் றென்றும் அதைத் தடுக்கும் முயற்சியிலேயே, கரிகாலன் அழுந்தூரிலும், பிற வேளிர் தலையூர்களிலும் ஆதாவு பெற்றுப் போராடினான் என்று கொள்ள வேண்டும்.

செருப்பாழி எறிந்த இளஞ்சேட் சென்னிக்கும் முதற் கரிகாலனுக்கும் உள்ள தொடர்பு மற்றொரு செய்தியாலும் வலியுறுத்தப்படுகிறது. முந்தியவன் காலத்தில் சோழர் படைத்தலைவனாயிருந்தவன் அழுந்தூர் வேள் திதியனே. இதே அழுந்தூர் வேள் திதியன் என்ற பெயரே முதற்கரிகாலன் காலப் படைத்தலைவனாகவும் அவன் அறமன்றத் தலைவனாகவும் இருந்ததாகக் காணப்படுகிறது. புகழ்பெற்ற இரண்டாம் கரிகாலன் தாய் அழுந்தூர் வேள் மகள் என்பது காண. அழுந்தூர் வேளுக்கும் சோழருக்கும் உள்ள மரபுத் தொடர்பு தெளிவாகும்.

இத் திதியன் படையில் பல கோசர் வீரராயிருந்தனர். அவர்களில் சிலர் அன்னி மிஞிலி என்ற நங்கையின் தந்தை கண்ணைக் கெடுத்து விட்டனர். திதியன் அழுந்தூர் மன்றத்தில் முறைசெய்து அவ்வீரரைக் கொலைத்தண்டனைக்கு ஆளாக்கினான். இச் செய்தியும் பரணராலேயே (அகம் 196-ல்) குறிக்கப்பட்டுள்ளது.

## வெண்ணிப்போர் II அல்லது வெண்ணிப் பறந்தலைப்போர்

வெண்ணியில் நடைபெற்ற இரண்டாவது போரும் முதற் கரிகாலன் ஆற்றிய போரேயாகும். இப்போர் ஒரு வகையில் முன்னைய போரைத் தொடர்ந்து வந்த தமிழக முதன்மைப் பேரரசு நிலைக்கான போட்டிப் போராகவே தோற்றுகிறது. ஏனெனில் இதில் புகழ்மிக்க சேரனான பெருஞ் சேரலாதனே கரிகாலன் எதிரியாகப் போரிட்டான். இந்தப் பெருஞ் சேரலாதனைச் சிலர் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் எனக்கொள்வதுண்டு. அதே சமயம் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் கரிகாலனின் மருமகனெனவும் சில மரபுகள் குறிக்கின்றன. ஆதலால் கரிகாலன் நெடுஞ்சேரலாதன் ஆகிய இரு பெயர்களிலும் உள்ள குழப்பம் இச்செய்திகளிடையே தெளிவு தரத்தக்கதாயில்லை, தலை தடுமாற வைப்பதாகவேயுள்ளது. ஏனெனில் பெருஞ்சேரலாதனும் நெடுஞ்சேரலாதனும் வேறாயிருத்தல் வேண்டும். நெடுஞ் சேரலாதன் தொடர்புடைய கரிகாலனும் முதற்கரிகாலனின் வேறாகல்வேண்டும்.

வெண்ணிப் பெருவெளியில் நடந்த இப்போர் மிகவும் கோரமான போராயிருந்திருக்க வேண்டும். ஏனெனில் இப்போரின் பயனாகச் சேரநாடே ஒளியிழந்த தென்று புறநானூற்றுப் பாடல் ஒன்று குறிக்கிறது. சேரமன்னன் பெருஞ்சேரலாதன் கரிகாலனுடன் நேருக்கு நேர் நின்று இறுதிவரை போரிட்டான். அவன் மார்பில் பாய்ந்த வேல் முதுவரையில் துளைத்ததால், மார்பில் மட்டுமன்றி முதுகிலும் புண்பட்டு விட்டது. 'முதுகிற் புண்' என்பது பொதுவாகக் கோழைமையின் சின்னம். இங்கே சேரன்புண் இத்தகையதல்ல வாயிலும் அவன் இச்சொல்லுக்கு இடமேற்பட்டது கண்டு, போரை நிறுத்தி வடக்கிருந்து மானத்துடன் உயிர்விடத் துணிந்தான்.

இச்செய்திகளைக் கழாத்தலையார் என்ற புலவர் உருக்கமாகப் பாடுகிறார். சேரநாட்டு நிலையும் மன்னன் விழுமிய நிலையும் நம் மனக்கண் முன்னே புலவரால் கொண்டு வந்து நிறுத்தப்படுகின்றன.

"மண்முழா மறப்ப, பண்யாழ் மறப்ப,
இருங்கட் குழிசி அவிழ்ந்து இழுது மறப்ப,
சுரும்பார் தேறல் சுற்றம் மறப்ப,
உழவர் ஓதை மறப்ப, விழவும்
அகலுள் ஆங்கண் சீறூர் மறப்ப,
புறப்புண் நாணி, மறத்தகை மன்னன்
வாள் வடக்கிருந்தனன். (புறம் 65]

"முரசு முழங்கவில்லை. யாழ் இசையை மறந்தது. அகன்ற பால் வட்டில்கள் பாலின்றி வறண்டு கிடக்கின்றன. சுறுசுறுப்பான தேனீக்கள் திரட்டிய தேனை இப்போது தீண்டுவாரில்லை. உழவர் கழனிகளில் உழுதலைத் தவிர்த்தனர். ஊர்ப்புற வெளிகள்விழாவயரும் கூட்டங்கள் இன்றி வெறிச்சென்றிருக்கின்றன" என்று அவர் சேரநாட்டு நிலையைச் சித்திரிக்கிறார். 'ஞாயிறும் திங்களும் எதிரெதிர் நின்று போரிட்டுத் திங்கள் சாய்வதுபோல் சாய்ந்தான் சேரன்' என்று அம்மன்னர் மாண்பையும் புலவர் பெருமித இரக்கத்துடன் குறிக்கிறார்.

களத்தில் வெற்றியடைந்த கரிகாலனைப் பாடிய புலவர் ஒரு பெண் பாவலர். வெண்ணிக்களத்துக்குரிய வெண்ணி ஊரிலேயே பிறந்தவர். குயவர் தொழில் மரபினர். அவர் வெற்றி வீர அரசனைப் பாடினாலும், அப் பாட்டில்கூடச் சேரன் பெருமித முடிபே முனைப்பாக, ஆனால் கரிகாலனின் பெருமை தோன்றப் பாடியுள்ளார்.

கடற்போர் பல செய்த சோழ மரபில் வந்தவனே என்று அப் பெண்பாற் புலவர் அரசனை விளித்துப் பாடுகிறார்.

"நளி இரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளி தொழில் ஆண்ட உரவோன் மருக!
களி இயல் யானைக் கரிகால் வளவ!
சென்று அமர்க் கடந்த நின் ஆற்றல் தோன்ற
வென்றோய்! நின்னினும் நல்லன் அன்றே,
கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை
மிகப் புகழ் உலக மெய்திப்
புறப் புண் நாணி வடக்கு இருந்தோனே!" (புறம் 66)

"கரிகாலன் வெற்றியால் புகழ் பெற்றான்! சேரலாதன் வடக்கிருந்து புகழ் பெற்றான்! ஒருவனது, வீரத்தின் புகழ்! அடுத்தவனது, வீரத்தின் மானத்தின் புகழ்! எது நல்லது, பின்னது அல்லவா?' என்று கேட்கும் புலவரின் கேள்வி நயம் வெண்ணிப் போரின் வீரர் வீர நயங்களைவிடச் சிறந்தாகவே காணப்படுகிறது.

சேரன் வீரம், மானம் நாடி மாளத்துணிந்த பெருமித நிலை ஆகிய செய்திகள் ஒரு கணத்தில் தமிழகமெங்கும் பரவின. அப்பெருஞ் சேரனைக் காணும் ஆர்வம தமிழக மெங்கணும் எழுந்தது சான்றோர்கள் பலர் தீர்த்தயாத்திரைக்குப் புறப்படும் இக்காலப் பத்தர்கள்போலப் போர்க்களத்துக்கு விரைந்தனர். மன்னனுடன் வடக்கிருந்து மாளும் மாள்வே புகழ்மாள்வு என்று அவர்கள் துணிந்தனர்.

''கரிகால் வளவ னோடு வெண்ணிப் பறந்தலைப்
பொருது புண் நாணிய சேரலாதன்
அழிகள மருங்கின் வாள் வடக்கிருந்தென
இன்னா இன்னுரை கேட்ட சான்றோர்
அரும் பெறலுலகத் தவனோடு செலீஇயர்
பெரும் பிறிதாகி யாங்கு!'' (அகம் 55)

என்று இப்புகழார்வத்தை மாமூலனார் தீட்டிக்காட்டியுள்ளார்.

**வாகைப் பறந்தலை :**

முதலாவது கரிகாலன் ஆற்றிய மற்றொரு பெரும் போர் வாகைப் பறந்தலைப் போராகும்.

விரிஉளைப்பொலிந்த பரியுடை நன்மான்
வெருவரு தானையொடு வேண்டுபுலத் திறுத்த
பெருவளக் கரிகால் முன்னிலைச் செல்லார்
சூடாவாகைப் பறந்தலை ஆடுபெற
ஒன்பது குடையும் நண்பக லொழிந்த
பீடில் மன்னர் போல
ஓடுவை மன்னால்! (அகம் 125)

என்ற பாடலில் பரணர் இப்போரை விரித்துரைத்துள்ளார். 'வாகை' ஒரு இடத்தின் பெயர் என்பதைக் கவிஞர் தமிழ்ப் புலவர் மரபுப்படியே 'சூடாவாகை' என்று அடைகொடுத்துத் தெரிவிக்கின்றார். கவிஞர் அப்படிக் கூறவில்லையானால் வாகை ஒரு போர்க்களம் என்பதை உணராமல் 'வெற்றிக்குரிய பூ'வாகக் கொண்டு நாம் மயங்க இடமேற்பட்டிருக்கக் கூடும்.

கரிகாலன் அப்போரில் ஒன்பது மன்னர்களை எதிர்த்துச் சமரிட்டான். அவர்கள் கரி, பரி, தேர், காலாட்படைகளை மிகுதியாகவே உடையவராய் இருந்தனர். ஆனால் அவர்களால் கரிகாலன் முன் நிற்க முடியவில்லை. கரிகாலன் அரும்பெரு வெற்றிபெற்றான். ஒன்பது மன்னரும்தம் கொற்றக்குடைகளையும் புகழ்க்கொடிகளையும் களத்திலே எறிந்துவிட்டு ஓடினர்.

இப்போரைச் சில வரலாற்றாசிரியர்கள் இரண்டாம் கரிகாலனின் வடதிசைப் படையெடுப்பின் ஒரு பகுதியாகவும், அவன் திரும்பும் சமயம் நடைபெற்றதாகவும் குறிக்கின்றனர். ஆனால் கரிகாலனின் இப்போர்களைப் பாடிய பரணரும், மாமூலனாரும் மிக முற்பட்ட காலத்தவர்கள். ஆகவே இது இரண்டாம் கரிகாலனாக இருக்கமுடியாது. ஆயினும் தமிழகத்தில் வேளிரன்றி ஒன்பது மன்னர் அந்நாளில் இருந்தனர் என்று கூறமுடியாது. தமிழகத்துக்கு வடக்கே கன்னட தெலுங்கு நாடாகிய வடுக எல்லையில்கூட இப்பழங்காலத்தில் ஒன்பது மன்னர் அந்நாளில் இருந்திருக்கக்கூடுமா என்றுஐயுற இடமுண்டு. ஆந்திரர், கலிங்கர், சூடுநாகர் அல்லது குடுபல்லவர் கடம்பர் ஆகிய பேரரசமரபினரே அக்காலத்தில் நிலவியிருக்கக்கூடும். எனவே முதற்கரிகாலன் வாகைப்பறந்தலை வெற்றி தொலைத் தென்னாடு அல்லது வடநாட்டு வெற்றியாகவே இருத்தல் வேண்டும்.

'பீடில் மன்னர்' 'ஒடுவை' என்ற புலவர் சொற்கள் அயலின அரசரே குறித்த தொனியை உடையன.

தவிர பரணர் சங்ககாலத்தரசர்களிலே மிகமுற்பட்டவர். நீண்ட நாள் வாழ்ந்தவர். அவர் முதுமைக் காலத்திலேகபிலர் இளைஞராயிருந்தவர். மாமூலனாரோ பரணரிலும் பழமை வாய்ந்தவர். அவர் மோரியருக்கு முற்பட்டு கி. மு. 3-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்தவர். இவற்றை நோக்க மாமூலனாராலும், பரணராலும் பாடப்பட்ட வெண்ணி முதற்போர், வாகைப்பறந்தலைக்குரிய கரிகாலன் முதற்கரிகாலன் என்று முனைவர் இராசமாணிக்கனார் குறித்த அரசனுக்கும் முற்பட்ட ஒரு மூல முதல் கரிகாலனாயிருந்திருக்கக்கூடும் என்னலாம்.

இது மேலும் ஆராய்வதற்குரியது.

மேருவைச் செண்டாலடித்தல், காவிரிக்குக் கரைகட்டல் முதலிய சிலப்பதிகார, பிற்கால மரபுக்குரிய செயல்களில் சிலவேனும் இம்மூல முதல் கரிகாலனுக்குரியன ஆகலாம். 'பெரும் பெயர்க்கரிகால்' என்ற சங்க ஏடுகளின் கூற்றுக்கள் மூலமுதல் கரிகாலன் மரபும் பெயரும் உடைய கரிகாலன் என்ற பொருள் கொண்டனவாகவும் இருந்திருக்கக் கூடும்.

## வெண்ணிப்போர் III

சங்கப் பாடல்களிலே பத்துப்பாட்டின் இரண்டு பாட்டுக்கள், கடியலூர் உருத்திரக்கண்ணனார் பாடிய பட்டினப் பாலை, முடத்தாமக் கண்ணியார் பாடிய பொருநராற்றுப் படை ஆகி

யவைமூன்றும் வெண்ணிப்போர் ஆற்றிய இரண்டாம் கரிகால னைப் பற்றியவையேயாகும். முனைவர் இராசமாணிக்கனார் குறித்தபடி, கரிகாலனைப்பற்றிய பிற்காலப் பெரும் புகழ் மரபின் செயல்கள் யாவும், முதற்கரிகாலனுக்குரியன என்று ஒதுக்கப்பட்டன போக மிகுந்தவை, இவனுக்கே உரியனவாக லாம். முதற்கரிகாலனுக்குரியன என்று ஒதுக்கியவற்றுட் சில வும் இவற்றுட் சிலவும் ஒரு மூல முதல் கரிகாலனுக்குரியன ஆயினும்கூட, இரண்டாம் கரிகாலனின் வரலாற்றுப் பெருமை ஒரு சிறிதும் குறைந்துவிடாது, ஏனெனில் புனைந் துரையோ என வரலாற்றாசிரியர் ஐயுறாத உறுதிச் செயல்கள் பெரும்பாலன இவன் செயல்களே யாகும்.

வடதிசைப் பெருவெற்றிகள், மேருவைச் செண்டாலடித் தல், வடதிசைப் பெருமன்னன் ஒருவன் மூன்று கண்ணில் ஒரு கண்ணைக் கொய்தல், காஞ்சி நகரம் நிறுவுதல் ஆகிய செயல் களே மூன்று கரிகாலனுக்குள் யாருக்குரியன என்று வரை யறுக்க முடியாதவை. கல்வெட்டுக்கள் பெருமைபடக்கூறும் கரிகாலன் உறையூரிலே ஆண்டதாகவே நீண்ட கால மரபுரை குறிக்கிறது. 'இரண்டாம்' (கடைசிச் சங்ககாலக்) கரிகாலன் உறையூரில் கோட்டை கொத்தளம் பெருக்கினாலும் காவிரிப் பூம்பட்டினத்திலேயே இருந்து அரசாண்டதாகத் தெரிகிறது. இது முன் இரு கரிகாலருக்கு மட்டுமே பொருந்தும். காஞ்சி நகரைக் கரிகாலன் வலிமைப் படுத்தியதாக மட்டும் கொள்ளாமல் புதிது நிறுவியதாக, அல்லது பெருநகராக்கிய தாகக் கொள்வதனால், இதுவும் முற்பட்ட கரிகாலர்களுக்கே பொருந்தும். ஆயினும்,

> 'காடு கொன்று நாடாக்கிக்
> குளந்தொட்டு வளம் பெருக்கி...
> கோயிலொடு குடி நிறிஇ! (பட். பாலை 244-5. 286)

என்ற பட்டினப்பாலை அடிகளும்,

> 'முதியோர்
> அவைபுகு பொழுதில் தம்பகை முரண் சொலியவும்'
> (பொருந, 187-8)

என்ற பொருநராற்றுப்படையின் குறிப்புடன்

> இளமைநாணி முதுமை எய்தி
> உரைமுடிவு காட்டிய உரவோன் (மணிமேகலை)

என்ற மணிமேகலைக் குறிப்பும் இரண்டாம் கரிகாலனே பெரும்பெயர்க்கரிகாலன் என்று சுட்டுகின்றன.

ஆயினும் சிலப்பதிகாரத்தின் வஞ்சின மாலை குறிப்பிடும் கரிகாலன் மகள் ஆதிமந்தி வரலாறு பரணர் பாடிய அகப் பாடல் ஒன்றில் (அகம் 222) குறிக்கப்படுகிறது. எனவே புராணப் பெரும்புகழ்க் கரிகாலனும், சிலப்பதிகாரம் மணி மேகலை குறிக்கும் கரிகாலனும், கல்வெட்டுக்களில் புகழப்படுப வனும் இரண்டு கரிகாலர்களும் அல்ல, மூலமுதல் கரிகாலனே என்றும், அவன் புகழும் செயலிற் சிலவும் பிந்திய இரு கரி காலர்களாலும் மேற்கொள்ளப்பட்டும் அவர்கள் மீது புலவ ரால் சார்த்தப்பட்டும் வந்தன என்றும் கூற இடமுண்டு.

இரண்டாம் கரிகாலன் (மூலமுதல் கரிகாலனை ஏற்றால் அவனை எண்ணி மூன்றாம் கரிகாலன்) செய்திகள் என்று பட்டினப்பாலை பெருநராற்றுப்படை ஆகிய இருபாக்களா லும் உறுதியாகக் கூறத்தக்கவை கீழ் வருபவையே.

இரண்டாம் கரிகாலன் திருமாளவளவன் என்ற புகழ்ப் பெயருடையவன் (பட். பாலை. 299). அவன் கரிகாலன் என்ற பெயரும் உடையவன் (பொருநர். 138). அவன் தந்தை உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னி (ஷெ 130). அவன் பிறக் கும்போதே அரசுரிமை பெற்றவன், ஆனால் சிறைப்பட்டு வாளால் விடுதலையுற்றான். (பொருநர், 132; பட்.பா. 221-7) அவன் இளமை கண்டு முறைசெய்யும் ஆற்றல் பற்றி ஐயுற்ற முதுமை வாய்ந்த அமைச்சர் நாணும்படி முதுமை வேடத்தில் வந்து முறை செய்தான் (பொருநர். 187-8). பல சமயச்சார் பான விழாப்பணிகள், வேள்வி முறைகள் செய்தான் (பட். பா. 200-203). ஒளியர், அருவாளர், பாண்டியர், வடவர், மேல்புலத்தவர்கள் ஆகியவர்களை வென்றடக்கியிருந்தான் (பட். பா. 274-277). பொதுவர் மரபையே அழித்தான். இருங்கோவேளை முறியடித்தான்(பட்.பா.282-3). உறையூர்க் கோட்டை கட்டிப் புதுப்பித்தான்; ஏரி, குளம் வெட்டி உழவு பெருக்கி, புதுக்குடியிருப்புகளும் கோயிலும் வகுத்தான் (பட். பா. 284-6). வெண்ணிப்போர் ஆற்றினான் (பொருநர். 143-148).

மூன்றாம் வெண்ணிப்போர் பற்றிப் பொருநர் ஆற்றுப் படையில் முடத்தாமக் கண்ணியார் குறிக்கும் அடிகளாவன.

இரும் பனம் போந்தைத் தோடும், கருஞ்சினை
அரவாய் வேம்பின் அங்குழைத் தெரியலும்
ஓங்கிருஞ் சென்னி மேம்பட மிலைந்த
இருபெரு வேந்தரும் ஒருகளத்தவிய

வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்தாள்
கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்''
(பொருநர். 143-148)

இங்கே கரிகால் வளவன் பனம்பூமாலை அணிந்த சேர வேந்தனையும், வேப்பம் பூமாலையணிந்த பாண்டிய வேந்தனையும் ஒருங்கே எதிர்த்துப் போர் நிகழ்த்தினான். இருபெரு வேந்தர்களும் முறிவுற்றதன்றி, களத்திலேயே பட்டு வீழ்ந்தனர். இதன் பின்னரே கரிகாலன் தமிழகப் பேரரசன் ஆகியிருக்க வேண்டும்.

கரிகாலன் வடநாட்டு வெற்றி

கரிகாலன் வடநாட்டு வெற்றி பற்றிக் குறிக்கும் ஏடு சிலப்பதிகாரமேயாகும். இது காரணமாக, அதை வரலாற்று மெய்ம்மையுடையதன்று எனக் கருதுபவர் உண்டு. சிலப்பதிகாரம் சங்க காலத்து ஏடன்று என்றும், அது வரலாற்று நிகழ்ச்சிகள் விரவிய ஒரு புனைகதையே என்றும் பலவாறாக ஆராயப்புகுபவர் உண்டு. ஆனால் உண்மையில் இது சங்ககால வரலாற்று மரபு முற்றிலும் காணமுடியாத நிலையில் பிற்காலத்தாரும் நம் காலத்தவரும் கொள்ளும் குளறுபடியின் விளைவேயன்றி வேறன்று. ஏனெனில் பத்துப் பாட்டினுள்ளேயே பொருநர் ஆற்றுப்படை குறிப்பிடும் மூன்றும் வெண்ணிப்போரை அதே அரசனை விரிவாகப் பாடும் பட்டினப்பாலை குறிப்பிடவில்லை என்பது கூர்ந்து நோக்கத்தக்கது. பாடுவோர் காலத்துக்குப்பின் சில செயல்கள் நிகழ்ந்திருக்கக் கூடும் என்பதும், அக்காலப் புலவர்களிடையே வரலாற்று நோக்குப் பொதுவாக மிகுதியாயினும், மாமூலனார், பரணர், இளங்கோ ஆகியவரிடையேதான் அது முனைப்பாகக் காணப்படுகிறது என்பதும் கவனிக்கத்தக்க செய்திகள் ஆகும். பொதுவான சங்க ஏடுகளை விடச் சிலப்பதிகார மணிமேகலைக் காவியங்கள் வரலாற்று முக்கியத்துவம் குறைந்தவையல்ல—ஆம், முக்கியத்துவம் இன்னும் முனைப்பாக உள்ளவையே என்பதை வருங்கால ஆராய்ச்சிகள் கட்டாயம் காட்டும். சங்க காலத்தை அறுதியிட இன்று பல செய்திகள் உதவுகின்றனவாயினும், முதல் முதல் உதவியவை சிலப்பதிகார மணிமேகலைகளே என்பதும், இன்னும் அதை வலியுறுத்த மணிமேகலை பெரிதும் காரணமாய் உள்ளது என்பதும் மறக்கத்தக்க செய்திகளல்ல.

கரிகாலன் வடதிசைப் படையெடுப்பைப் பற்றிச் சிலப்பதிகாரம் தரும் சித்திரங்கள் வழக்கப்படி இளங்கோவுக்குரிய சுருக்கி விளக்கும் ஆற்றல் காட்டுபவையாகும்.

''இருநில மருங்கில் பொருநரைப்பெரு அச்
செருவெங்காதலின் திருமாவளவன்......
புண்ணியத் திசைமுகம் பொக்கிய அந்நாள்......
இமையவர் உறையும் இமையப் பிடர்த்தலைக்
கொடுவரி ஒற்றிக் கொள்கையில் பெயர்வோற்கு
மாநீர் வேலி வச்சிர நாட்டுக்
கோன் இறை கொடுத்த கொற்றப் பந்தரும்;
மகத நன்னாட்டு வாள்வாய் வேந்தன்
பகைப்புறத்துக் கொடுத்த பட்டி மண்டபமும்;
அவந்திவேந்தன் உவந்தனன் கொடுத்த
நிவந் தோங்குமரபின் தோரண வாயிலும்''

என இங்கே இவ்வெற்றியின் விளைவுகள் கூறப்படுகின்றனவேயன்றி, வெற்றிகள் வருணிக்கப்படவில்லை. தென்னாட்டில் எவருடனும் போர் செய்யும் வாய்ப்புக்கிடையாமல் தோள் தினவெடுத்ததனாலேயே கரிகாலன் வடதிசை சென்றதாக இங்கே கூறப்படுகிறது. இமயத்தின் நெற்றி அல்லது முன்புறமும் பிடர் அல்லது பின்புறமும் அவன் புலிப்பொறி நாட்டினான். மீளும்போது வச்சிரநாட்டு மன்னன் முத்துப்பந்தரும், மகத வேந்தன் பட்டிமண்டபமும், அவந்திவேந்தன் தோரண வாயிலும் திறையாக அல்லது வெற்றிப்பரிசாக அளிக்க, அவற்றுடன் கரிகாலன் புகார் நகருக்கு மீண்டான்.

இங்கே குறிப்பிட்ட, வச்சிர, மகத, அவந்தி வேந்தர்கள் கரிகாலன் எதிரிகளாகத் தோன்றவில்லை. அவர்கள் அவன் பெருவெற்றிகள் கண்டு மதித்து அவன் மேலாட்சியை உவந்து ஏற்ற நேய அரசர்கள் என்றே தோன்றுகிறது. இந்த மூவரசர்களும் மோரியர் காலத்துக்குப் பின் குப்தர் காலம் வரை பெரிதும் தமிழகத்துடன் நேசம் பாராட்டித் தம்மை வடதிசையில் வலிமையுள்ளவர்களாக்கிக் கொள்ள விரும்பியவர்கள் என்னலாம். குப்தர் காலத்தில் எழுந்த வடதிசைப் பகைமை பெருஞ்சோழர் வெற்றியின் பின் மீண்டும் மாறி நேசத் தொடர்பு வளர்ந்தது காண்கிறோம்.

வடகிழக்குத் தெற்கு சார்ந்த இந்தப் படை யெடுப்பும் நேசமும் அடிக்கடி இவ்விரு திசைகளிடையே இருந்த சரிசம அரசியல் போட்டியையும், அதே சமயம் பண்பாட்டு நேசத்தையும் விளக்குவதாகும். முற்காலத்தில் புத்த சமயமும் பிற்காலத்தில் தமிழர் நாகரிகமும் பெரிதும் பரவிய வடதிசைப் பகுதி இதுவேயாகும்.

**கரிகால் வளவன் பிற்காலப்புகழ்**

பட்டினப்பாலைபாடிய கடியலூர் உருத்திரங்கண்ணனருக்குக் கரிகாலன் பதினறு இலட்சம் பொன் பரிசளித்தான் என்ற செய்தி

> "தழுவு செந்தமிழ்ப் பரிசில்வாணர்போன்
> பத்தொடாறு நூறுயிரம் பெறப்
> பண்டு பட்டினப்பாலை கொண்டதும்"

எனக் கலிங்கத்துப் பரணியில் குறிக்கப்பட்டுள்ளது.

இதே பாடல் அவன் இமயமலையைச் செண்டு அதாவது கைத்தடியால் அடித்து, பம்பரம்போல் திருகிவைத்து இருபுறமும் புலி பொறித்த செய்தியை உயர்வு நவிற்சியணி நயம் தோன்ற உரைக்கிறது.

> "செண்டு கொண்டு கரிகாலன் ஒருகாலின் இமயச்
> சிமய மால் வரைதிரித்தருளி, மீள அதனைப்
> பண்டு நின்றபடி நிற்க இது என்று முதுகில்
> பாய்புலிக் கொடி குறித்ததும் மறித்த பொழுதே"
> (கலிங்கத்துப் பரணி.)

இதே செய்தியுடன் காவிரிக்கரை கட்டிய செய்தியும் பிறவும் சேர்த்து,

> தென்னருவிச்
> சென்னிப்புலியேறு இருத்திக் கிரி திரித்துப்
> பொன்னிக்கரை கண்டபூபதி (விக்கிரம சோழனுலா)

என்று மூவருலா முதலிய பிற்கால ஏடுகளும் கல்வெட்டுக்களும் கரிகாலன் புகழை எல்லையறப் பெருக்கிக் கூறுகின்றன.

பதினன்காம் நூற்றுண்டில் (கி.பி. 1356) வச்சிரநாடு அதாவது நாகபுரியடுத்துள்ள பஸ்தர் நாட்டில் ஆண்ட தெலுங்குச் சோட அரசன் பத்திராயனின் செப்புப்பட்டயம் கரிகாலன் புகழை வேறு எந்த ஏடும் ஆதாரமும் கொண்டு செல்லாத அளவு உச்சிவான் ஏற்றுகிறது. அவன் வடநாட்டில் வென்ற மன்னர் தலைமீதே கங்கை நீர் ஏற்றிக்கொண்டு வந்து தமிழகத்தில் குளித்தான் என்றும், போசராசனை வென்றுன் என்றும் முக்கட் பல்லவன் கண்ணென்றைக் காற் பெருவிரலால் அழுத்திக் குறைத்தான் என்றும் அது கூறுகிறது.

**பண்டைப் பெருஞ்சோழர் போர்கள்**

பின்னுளைய பெருஞ்சோழர்களைப் போலவே சங்ககாலத்தில் ஒன்றிரண்டு நூற்றுண்டுகளேனும் சோழர் தமிழக முதற்

பேரரசராக இருந்துதமிழகம்கடந்து அண்மைவடதிசையிலும் தொலை வடதிசையிலும் தம் வீரப் புகழ்பரப்ப முயன்றனர் என்பதற்கு ஐயமில்லை. அப் பண்டைப் பெருஞ்சோழர் காலத் துப் போர்களில் செருப்பாழியும் கரிகாலன் வடதிசை வெற்றி களும் உயர்வான் முகடுகளாகும் என்பதிலும் ஐயமில்லை. இவற்றுக்கு இடையிலோ முன்னோ பின்னோ என்று வரை யறுக்க முடியாத பல சோழப் பெரும் போர்களை நாம் சங்க இலக்கியப் பலகணி மூலமாகக் காணலாம்.

உறையூரிலிருந்து அரசாண்ட தித்தன் என்ற ஒரு சோழன் காலத்தில் வடுகவேந்தன் கட்டியும் மற்றொரு பாணர் குடி மன்னனும் உறையூர் வரை படையெடுத்து வந்து அதனை முற்றுகையிட்டதாக அறிகிறோம். இத் தித்தனுக்கு ஐயை என்ற சீர்சான்ற புதல்வி யிருந்ததாகவும், அவன் உறையூரை நன்கு அரண் செய்து காத்ததாகவும் அகப்பாடல்கள் சில குறிக்கின்றன. அவன் கோட்டையிலிருந்து எழுப்பிய போர் முரசம் கேட்டே எதிரிகள் ஓடியதாகப் புலவர் ஒருவர் உயர்வு நவிற்சிச்சுவை தோன்றப் பாடியுள்ளார்.

மற்றொரு பெரும்போரில் சோழன் வேல்பல் தடக்கைப் பெருவிறல்கிள்ளி என்ற சோழப் பெரு மன்னனும் செரமான் குடக்கோநெடுஞ் சேரலாதன் என்ற சேரப் பேரரசனும் வேங்கையுடன் வேங்கை எதிர்த்ததுபோல் எதிர்த்து நின்று பொருதனர். இருபுறத்துப் படைகளும் இருபுறத்தரசரும் முற்றிலும் சரிசம வலிமையுடையவராகவும், சரிசம வீர முடையவராகவுமே இருந்ததால், இருவருக்குமே வெற்றி கிட்டவில்லை. அது மட்டுமன்று. இரு திறப் படைகளும் சாகும்வரை போரிட்டு மடிந்தன. இரு பேரரசர்களும் ஒருவர் மீது ஒருவர் மும்முரமாகத் தாக்கிப் போர் செய்து இறந்த னர். போர்க்களத்தின் வெற்றி இரு வேந்தருக்குமே கிட்டா மல் கூற்றுவனுக்கும், அவன் போர்ப் படைகளுக்கும், கழுகு பருந்துகளுக்குமே கிட்டிற்று!

இப் போர் விளைவாக எழுந்த துயரமிக்க காட்சிகளையும் அதனால் எழுந்த உருக்கமான கருத்துக்களையும் களங்கண்டு பாடிய இரு பெரும் புலவர் நமக்குத் தந்துள்ளனர்.

'யானையும் குதிரையும், தேரும் வீரரும் செயலற்றுக்கிடக் கின்றனரே! வீரர் கண் மறைத்துக் கேடயங்கள் கிடக்கின் றன. அடிப்பாரின்றி முரசுகள் உருளுகின்றன. நெஞ்சில் சாந் துடன் குருதியும் சேர்ந்து வடிய மன்னர் கிடக்கின்றனர். இனி நாடு என்ன ஆவது'' என்று பெரும்புலவர் பரணர் கலங்கு கின்றார்.

ஏனைப்பல் யானையும் அம்பொடுதுளங்கி
விளைக்கும் வினையின்றிப் படைமயாழிந்தனவே!
விறற்புகழ் மாண்ட புரவியெல்லாம்
மறத்தகை மைந்தரோடு ஆண்டுப் பட்டனவே!

தேர்தர வந்த சான்றோ ரெல்லாம்
தோல்கண் மறைப்ப ஒருங்குமாய்ந்தனரே!
விசித்துவினை மாண்ட மயிர்க்கண் முரசம்
பொறுக்குநர் இன்மையின் இருந்து விளிந்தனவே!
சாந்தமை மார்பில் நெடுவேல் பாய்ந்தென
வேந்தரும் பொருதுகளத்து ஒழிந்தனர்! இனியே
என்ஆவது கொல்தானே...........
.................அகன்தலை நாடே! (புறம்63)

கழாத்தலையார் என்ற மற்ெருரு புலவர், 'வெற்றியை நாடி வெற்றிக்குரிய இரு மன்னரும் இப்படிப் போர் புரிவதனுல் என்ன பயன்?' என்று கேட்டு, இறுதியில் இத்தகைய வீரம் பாழ்படாது என்று தேறி 'வாழ்க அவர் புகழ்' என்று அமைகிருர்.

வருதார்தாங்கி அமர்மிகல் யாவது?.........
அறத்தின்மண்டிய மறப்போர் வேந்தர்
தாம் மாய்ந்தனரே! குடை துளங்கினவே!
உரைசால் சிறப்பின் முரைசு ஒழிந்தனவே!.........
களங்கொளற்கின்றி, தெறுவர
உடன்வீழ்ந்தன்றுல் அமரே?—பெண்டிரும்
பாசடகு மிசையார், பனிநீர் மூழ்கார்,
மார்பகம் பொருந்தி ஆங்கு அமைந்தனரே!.........
அரும்பெறல் உலகம் நிறைய
விருந்து பெற்றனரால்! பொலிகநும்புகழே! (புறம் 62)

வெற்றி கொள்வார் யாருமில்லாமல் இரு பேரரசர் பெண்டிரும் தத்தம் கணவர் மார்பில் விழுந்து அழுதனராம்!

தமிழர் வீரத்தின் பெருமையையும், அது தமிழினத்துக்குச் செய்த அழிவையும் இப் போரும் பாடலும் நன்கு விளக்குகின்றன.

## 6. சங்ககாலப் போர்கள் II

தமிழினத்தின் குடி மரபுகளுள் தலை சிறந்தன நான்கு என்று வகுத்துரைத்துள்ளார் தலைமை சான்ற சங்கப் புலவரான மாங்குடி மருதனார்.

> "துடியன், பாணன், பறையன், கடம்பனென்று
> இந்நான்கல்லது குடியுமில்லை!" (புறம் 355)

என்பது அவர் கருத்து. இந் நால் வகையினரும் பழமையும் பெருமையும் உடைய உச்ச உயர் குடியினராகக் கருதப்பட்டிருந்தனர் என்று அறிகிறோம். இந் நால்வரில் பறையரைத் தவிர மற்றவரைப்பற்றி நாம் இன்று தமிழகத்தில் மிகுதி கேள்விப்படவில்லை. பறையரும் இன்று ஒரு குடியினராய் இல்லை. புதிதாக இடைக்காலத்தில் எழுந்துள்ள சாதிகளுள் ஒரு சாதியினர் ஆகியுள்ளனர். அத்துடன் தமிழினத்தின் உச்ச உயர் குடியினராகிய அவர்கள் இன்று தாழ்ந்துவிட்ட தமிழரிடையேயும் மிகத் தாழ்ந்த படியினராக, தீண்டப்படாதவராகக் கருதப்படுகின்றனர். தமிழ், தமிழினம் அடைந்துள்ள இழி வெல்லையை இது குறித்துக் காட்டுகிறது.

பாணர் இயற்புலவராக மட்டுமன்றி இயல், இசை, நாடகம் ஆகிய மூன்றுக்கும் உரியவரான சங்ககாலப் பாடகர் வகுப்பையோ, மாவலி மரபினரான வாணர் வகுப்பையோ, இரண்டையுமோ குறிக்கக்கூடும். முன்னவர் முத்தமிழ்ப் பாக்களால் மன்னனைப் பாடும் உரிமையிலிருந்து முத்தமிழ்ப் பாக்களால் தெய்வத்துக்கு வழிபாடாற்றும் குருமார் வகுப்பாகி, தேவாரகாலத்துக்குப் பின் அரசியலுரிமையும் சமய உரிமையும் இழந்து, புதிய அயல் மரபு அளாவிய குருமார் கைப்பட்ட கோயில் அடிமைகளாகவும், சமூக அடிமைகளாகவும் இழிவுற்றனர். இன்று அவர்கள் தாழ்த்தப்பட்டவரல்லரானாலும், அவர்களைவிட எவ்வளவோ அவல நிலையிலேயே வாழ்கின்றனர். கலைகாத்த அம் மரபினர் இன்று தம் நிலை காக்கவே அலமரும் நிலையில் உள்ளனர்.

உலகாண்ட மாவலி மரபினர் நிலையும் இன்று தடம்காண முடியா நிலையேயாகும்.

பறையும் முரசும் அறையும் பறையரையும் வள்ளுவரையும் போலவே, துடியரும் துடியடிக்கும் உயர் உரிமைக் குடியினராய் இருந்திருத்தல் கூடும். ஆனால் அவர்களைப்பற்றி நாம் மிகுதி கேள்விப்படவில்லை. நீலகிரியில் வாழும் துதவர் அல்லது தோதவர் பெயரை அவர்கள் பெயர் நினைவூட்டுவதாய் உள்ளது. மலங்குடி மக்களாதலின் அவர்கள் இடைக்காலத்தில் ஒதுங்கி வாழ்ந்து நாகரிக வாய்ப்பற்று விட்டனர். அவர்கள் சமுதாயத்தில் தாழ்ந்துவிடா விட்டாலும், அரசியல் சமுதாய உரிமையும் பண்பாடும் குன்றியுள்ளனர்.

## தமிழகக் கடம்பர்

நால்வகைக் குடிகளுள் ஒன்றான கடம்பர் பற்றியும் நாம் தமிழ் வாழ்வில் மிகுதி கேள்விப்படுவதில்லை. ஆனால் கடம்பு என்ற மரப்பெயரை அது நினைவூட்டுகிறது. கடம்பு மரத்தை மரபுச் சின்னமாக உடையவர்களே கடம்பர். பண்டைத் தமிழகத்தில் கடம்பு மரமும் கடம்பரும் மிகுதியாகவே இருந்திருக்க வேண்டும். மதுரையருகிலே முன்பு நாகர் நகரம் இருந்தது போலவே, கடம்பரும் மிகுதியாகவே யிருந்திருக்க வேண்டும். மதுரையே முதலில் கடம்பர் ஆட்சியில் இருந்திருக்கக் கூடும். கடம்பரிடமிருந்து பாண்டியரால் வெல்லப்பட்டு அது கடைச் சங்ககாலப் பாண்டியரின் புதிய தலைநகரமாகியிருக்கக் கூடும். ஏனெனில் மதுரையின் கோயில் திருமரம் கடம்ப மரம் என்றே அறிகிறோம். மதுரையும் கடம்பவனம் என்றே புராணங்களில் குறிக்கப்படுகிறது. அதன் தலபுராணங்களில் ஒன்றின் பெயரும் கடம்பவன புராணம் என்பதே.

தமிழர் தெய்வங்களுள் முருகனுக்குரிய பூ கடப்பம் பூவே. முருகன் கடம்பன் என்றும் குறிக்கப் பெறுகிறான். உண்மையில் சூரபன்மன் மரபினரான கடம்பரை வென்றே அவன் அப் பெயர் பெற்றானாகல் வேண்டும். கடம்பர் பாண்டியரின் பழைய எதிரிகள் மட்டுமல்லர், சேரரின் எதிரிகளும் ஆவர் என்பதை இது நமக்கு நினைவூட்டுகிறது. சேரரின் எதிரிகளாக மட்டுமே தமிழ் இலக்கிய மரபில் கடம்பர் நம்முன் காட்சியளிக்கின்றனர். ஆனால் தமிழகத்துக்கு வெளியே, தென்னாட்டு வரலாற்றில் கடம்ப மரபினர் மூன்றாம் நூற்றாண்டு முதல் பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை தனியரசாகவும் பேரரசாகவும் சிற்றரசாகவும் கிட்டத்தட்ட ஆயிர ஆண்டுகளுக்கு மேல் வட கொண்கானப் பகுதியில் பெருவாழ்வு பெற்றிருந்தனர் என்று அறிகிறோம்.

பல்லவர் வரலாறு எழுதுபவர் இந்தியாவுக்கு வெளியி லும் வடஇந்தியாவிலும் அப்பெயரின் தொடர்புகளைத் துரு வித் தேடி அலசிப் பார்க்கத் தவறவில்லை. ஆனால் சேரர் வர லாறு எழுதுபவர் தமிழகத்துக்கு வடக்கே நீண்ட காலம் ஆண்ட கடம்பரைப் பற்றிக் கவனிப்பதேயில்லை. அதுபோலக் கடம்பர் வரலாறு எழுதியவர்களும் தமிழிலக்கியமும் சேரர் வரலாறும் அவர்கள் வகையில் தரும் ஒளி மீது கருத்துத் திருப் பினரில்லை. இது வியப்புக்குரியது ஆகும். ஏனெனில் கடம்ப மரபினரின் ஆட்சி முதல்வனாகக் கருதப்படுபவன் மயூரசர்மன் என்பவன். அவன் ஏறத்தாழ நான்காம் நூற்றாண்டில், கி. பி. 345-க்கும் 370-க்கும் இடையே ஆட்சி செய்தவனாகக் கருதப் படுகிறான். கடம்பரைப் பற்றிப் பதிற்றுப் பத்துத் தரும் சான் றுகள் இதற்குக் குறைந்தது மூன்று நூற்றாண்டுகளுக்கு முற் பட்டது. தமிழிலக்கியம் இவ்வாறு கடம்பரின் தொடக்க வர லாறு கூறுவதுடன், அவர்கள் மூலத்தாயகம் எது என்பதை யும், அவர்கள் எவ்வாறு வாழ்வு தொடங்கினர் என்பதையும் காட்டுகிறது.

## கடம்பரும் தமிழிலக்கியமும்

வரலாற்றில் கடம்பர் தலைமைத் தாயகம் வனவாசி பன் னீராயிரம் என்று குறிக்கப்படுகிறது. இதில் கடற்கரையோ ரப் பகுதியாகிய கொண்கானம் தொளாயிரமும் உள்நாட்டுப் பகுதியாகிய ஹலசி பன்னீராயிரமும் சேர்ந்திருந்தன. பின் னாட்களில் அவர்கள் ஹாங்கல் ஐந்நூற்றையும், பேலூர், பயலநாடு ஆகிய பகுதிகளையும் உள்ளடக்கி இந் நாளைய கன் னட நாடு முழுவதும் பரவினர். மைசூரில் உள்ள கிரிபர்வதம் அல்லது பேளூரிலும், பல்லாரி மாவட்டத்தில் உள்ள உச்சங்கி யிலும் அவர்கள் கிளைக்குடிகள் ஆண்டன. வரலாற்றுக் கால முழுதும் அவர்கள் உள்நாட்டில் பரவி உள்நாட்டுக் குடிகளா கவே வாழ்ந்தனர். ஆயினும் அவர்கள் மூலத்தாயகம் கொண் கானக் கடற்கரையே என்றும், அவர்கள் தொடக்கத்தில் கட லாட்சி செய்த இனமே என்றும் பதிற்றுப் பத்தும் சங்க இலக் கியமும் காட்டுகின்றன.

சங்ககாலத்தில் தமிழகத்தின் வட எல்லையில் இருந்த கொண்கானப் பகுதியில் ஆண்ட குடித்தலைவன் நன்னன் ஆவன். அவன் தமிழக வேளிர்களுள் ஒருவன். அவன் நாடு பாலி நாடு என்று அழைக்கப்பட்டது. அது தற்கால மலபார் மாவட்டத்துக்கு வடக்கே, வைநாட்டுக்கு வட கிழக்கில் தற் போது குடகு என்று வகுக்கப்பட்டுள்ள மாவட்டம் ஆகும். இந்நாட்டிலும் இதனையடுத்த பகுதிகளிலும் இன்னும் 'நன்

ணன்' பெயர் மரபு குடிப்பெயர்களில் பொன்றுமல் நிலவு கிறது. வரலாற்றுக் கால முழுதும் கல்வெட்டுக்களிலும் காணப்பெறுகிறது. அத்துடன் பாண்டிநாட்டில் பெருஞ் சோழர் காலம் வரை நிலவிவந்த பண்டைத் தமிழ் எழுத்து முறை தமிழகத்தில் வழக்கற்றுப் போய் விட்டாலும் இப் பகுதியில் இன்னும் 'கோல் எழுத்து' என்ற பெயருடன் நிலவி வருவதாக அறிகிருேம்.

குடகு நாட்டு வரலாற்றில் ஹைதர் காலம் வரை தமிழ் மூவேந்தர் ஆட்சித் தொடர்பின் சின்னங்கள் காணப்படுகின் றன.

சங்க காலங்களில் நன்னன் நாட்டில் பேசப்பட்ட மொழி தமிழாயினும், அது அன்றே செந்தமிழிலிருந்து பெரிதும் மாறு படத் தொடங்கியிருந்தது. சங்கப்புலவர் நன்னனைத் தமிழி லேயே பாடினராலும் அவன் நாடு திருந்தாத்தமிழ் பேசிய நிலம் என்பதைக்குறித்து 'மொழிபெயர் தேயம்' என அதை அழைத்தனர்.

பாலிநாடு சுரங்கத் தொழில் நடைபெற்ற பகுதியில் இருந்தது. ஆகவே அது பொன் வள மிக்கதாயிருந்தது. விய லூர், அரயம் என்பன அந்நாட்டில் உள்ள முக்கியமான கோட்டை நகரங்களாகும். இளஞ்சேட் சென்னியின் செருப் பாழிப் போர் நடந்த இடமாகிய 'பாழி' இந்நாட்டின் பழமை வாய்ந்த அரணமைந்த நகரங்களுள் ஒன்றேயாகும். இவை தவிர நன்னன் ஆண்ட தலைநகரம் 'கடம்பின் வாயில்' என்ற பெயருடையதாய் இருந்தது. நன்னன் உண்மையில் கடம்ப மரபினன் என்பதையும் அவன் ஆண்ட பகுதியாகிய பாலி நாடு கடம்பர் தாயகமான கொண்கானத்தின் ஒரு பகுதியே என்பதையும் இது காட்டுகிறது.

கடம்பர்கள் மூலத்தாயகம் கொண்கானக்கரை என்பதை மட்டுமே அவர்கள் பிற்கால வரலாறு காட்டுகிறது. ஆனல் சேரர்களின் எதிரிகளாகிய கடம்பர்கள் கடற் கொள்ளைக் காரர்களாக இருந்தனர். அவர்கள் கொள்ளைத் தொழிலுக் குரிய மூலதளம் கடற்கரையில் இல்லை, கடலகத்தே ஒரு தீவிலே இருந்தது. அவர்கள் மரபுச்சின்னமாகிய தாய்க் கடம்பமரம் இருந்த இடமும் அதுவே. இத்தீவைக் கிரேக்கர் 'லெயூகெ' அதாவது வெள்ளைத்தீவு என்று அழைத்தனர். அதுவே மங்களூரை அடுத்துள்ள 'தூவக்கல்' என்ற தீவு என்று வரலாற்ருராய்ச்சியாளர் கருதுகின்றனர். லெயூகெ என்ற கிரேக்கச் சொல்லும். தூவக்கல் என்ற பழந்தமிழ்த் தொட ரும் இரண்டுமே வெள்ளைத்தீவு என்றே பொருள் படுவன.

மேல் கடற்கரையில் 'பாருகச்சம்' என்ற பண்டைத் துறைமுகம் தற்காலப் பம்பாய் அருகில்இருந்தது. அதிலிருந்து மலபார்க் கரையிலுள்ள முசிறி வரையிலும் இக்கடற் கொள்ளைக்காரரர் நடமாட்டம் மிகுதி என்றும், மேனாட்டுக் கப்பல்கள் இதற்குத் தெற்கே தான் வாணிகம் நடத்த முடியும் என்றும் கிரேக்கர்கள் குறித்துள்ளனர். சேர அரசர் ஆட்சியும், பாண்டிய மன்னர் ஆட்சியும் இதற்குத் தெற்கே பாதுகாப்பளித்த செய்தியையும், சிறப்பாகச் சேரர் இவ்வாணிக எல்லையை மங்களூர் கடந்து கி. பி. முதல்நூற்றாண்டுக்குள் பரப்பினர் என்ற செய்தியையும் கிரேக்க ஆசிரியர் குறிப்புக்களே தெளிவுபடுத்துகின்றன.

## கடம்பெறிந்த சேரர் பெருமை

கடம்பர் எவ்வளவு பழமையானவர், அவர்களுக்கும் சேரர்களுக்கும் இடையேயுள்ள தொடர்பு எவ்வளவு நீடித்த ஒன்று என்று நம்மால் கூறமுடியாது. கந்தபுராணத்தின் முருகன்—சூரபன்மன் போராட்டத்தில் அடங்கியுள்ள மருமம் அது. ஆனால் பதிற்றுப்பத்துத் தரும் ஒளியால், நமக்கு அதன் மூலம் தெரியவரும் முதல் சேரனான இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன் காலமுதலே அது தொடங்கிவிட்டது என்று காண்கிறோம்.

நெடுஞ்சேரலாதன் காலத்தையும் நம்மால் இன்னும் வரையறுத்துக் கூறமுடியாது. ஆனால் வரலாற்றாராய்ச்சியாளர் கனவுகளையும் இலக்கிய ஆராய்ச்சியாளர் மதிப்பீடுகளையும் தாண்டிய பழமையுடையவன் அவன் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் இமயத்தில் புலி பொறித்த சோழன் கரிகாலன் காலம் எதுவாயினும், அவன் அக்கரிகாலனுக்கு முற்பட்டவனாகவே இருக்க வேண்டும்.

தவிர, அவன் பழமையைச் சுட்டிக்காட்டும் இன்னொரு செய்தியும் உண்டு. சங்ககாலத்திலே சேரர் தலைநகராகப் பெயர் பெற்றஇடம் வஞ்சியே. சிலப்பதிகாரத்தில் செங்குட்டுவன் தலை நகராகவும், பதிற்றுப்பத்தில் அவனுக்கும் பிற்பட்ட சேரன் ஒருவன் தலைநகராகவும் அது குறிக்கப்பட்டுள்ளது. செங்குட்டுவன் காலத்திலேயே அது நீடித்துச் சேரர் தலைநகராய் இருந்திருத்தல் வேண்டும் என்பதில் ஐயமில்லை. ஆனால் இமயவரம்பன் காலத்தில் தலைநகரம் வஞ்சியாகவோ அல்லது கிளைக்குடியினர் வாழ்ந்த தொண்டியாகவோ இல்லை. அது 'நறவு' என்ற பெயருடைய நகரமாய் இருந்தது. இதுவஞ்சிக்கு நெடுந்தொலை வடக்கில் இருந்தது. சோர்தாயக நாடும் இச்சமயம் வட மலபாராகவே இருந்தது. இது சங்க காலத்தி

லேயே அறியப்படாத தொல்பழமைச் சின்னமாகும். அதே சமயம் 'நறவு' தலைநகராயிருந்த செய்தியைக் கிரேக்க ஆசிரியர் குறிப்பிட்டுள்ளனர்.

## நெடுஞ்சேரலாதன் கடம்பழிப்பு

சேரன் செங்குட்டுவன் முன்னோர்கள் புகழ்ச் செயல்களைத் தொகுத்துக்கூறும் இளங்கோவடிகள் அவற்றுடன் மாடலன் கூற்றாக இமயவரம்பன் செயல்களையும் குறித்துள்ளார்.

> "போந்தைக் கண்ணி நின் ஊங்கணோர் மருங்கில்
> கடற்கடம்பு எறிந்த காவலனாயினும்,
> விடற்சிலை பொறித்த விறலோனாயினும்,......
>
> வன்சொல் யவனர் வளநாடு ஆண்டு
> பொன்படு நெடுவரை புகுந்தோனாயினும்."
> (சிலப் xxvii 134—6, 141—2)

இதில் கடல் கடம்பெறிந்த செய்தியே முதலாவதாகக் கூறப்பட்டுள்ளது. இமய மலையில் விற்கொடி பொறித்தது, யவனர் நாடு ஒன்றை வென்று திறை கொண்டு ஆண்டது, கடம்பர் நாட்டகத்திலேயுள்ள பொன் விளையும் குடகுமலை புகுந்தது ஆகிய இமய வரம்பனின் மற்றச் செயல்களும் குறிக்கப்பட்டுள்ளன. மற்றும் சிலப்பதிகாரத்திலேயே,

> "முந்நீரின் உட்புக்கு மூவாக் கடம்பு எறிந்தான்
> மன்னர்கோச் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்
> கல் நவில் தோள் ஓச்சி கடல் கடைந்தான் என்பரால்"
> (சிலப் xvii உள்வரி வாழ்த்து 3)

எனக் கடம்பெறிந்த செயல் இனிய முறையிலே புனைந்து பாராட்டப்படுகிறது.

பதிற்றுப்பத்திலும் மேற்குறிப்பிட்ட செய்திகளுடனே ஏழு முடிமாலை யணிதல், இமய முதல் குமரிவரை ஆட்சி பரப்புதல் முதலியன கூறப்படுகின்றன. அவற்றிடையே,

> "பலர் மொசிந்து ஓம்பிய திரள்பூம் கடம்பின்
> கடியுடை முழுமுதல் துமிய ஏஎய்" (பதிற் xi 12-13)
> "கடம்பு முதல் தடிந்த கடுஞ்சின வேந்தே!"
> (பதிற் zii 3)

என்று கடம்பரின் மூலதளத்தில் அவர்கள் சின்னமான கடப்ப மரம் வெட்டப்பட்ட செய்தி குறிக்கப்படுகிறது. மற்றும்.

> "துளங்கு பிசிருடைய மாக்கடல் நீக்கிக்
> கடம்பு அறுத்து இயற்றிய வலம்படு வியன்பணை.
> (பதிற் xvii 4—5)

என்றதன் மூலம் கடம்பைச் சென்றடைவதற்காகக் கடலில் நாவாய் செலுத்திச்சென்ற செய்தியும்,

"எங்கோ
இரு முந்நீர்த்துருத்தியுள்
முரணியோர்த் தலைச்சென்று
கடம்பு முதல் தடிந்த கடுஞ்சின முன்பின்
நெடுஞ்சேரலாதன் வாழ்க அவன் கண்ணி"
(பதிற் XX 1—5)

என்றதனால் அக்கடம்பமரம் கடல் நடுவே ஒரு தீவில் இருந்த தென்பதும், அஃதன் கண் எதிர்த்து நின்ற கடம்பரை அழித்து அம்மரம் சிதைத்தான் என்பதும் கூறப்பட்டுள்ளன.

இரண்டாம்பத்தின் இறுதியில் உள்ள பதிகம் இச்செய்தி களுடன் ஆரியர்களை அடிபணிய வைத்த செய்தியும், யவனர் கைகளைப் பின்னால் கட்டித் தலையில் நெய் ஊற்றி அவர்கள் விடுதலைக்கீடாகப் பெரும் பொருள்பெற்ற செய்தியும் குறிக் கப்படுகின்றன. இங்கே யவனர் நாடு என்பது யவனர் குடி யேற்றங்களில் ஒன்றாய் இருக்கவேண்டும் என்று தோன்று கிறது. கி. மு. முதல் நூற்றாண்டில் ஆண்ட உரோமப் பேரர சர் அகஸ்டஸ் காலத்தில் இத்தகைய ஒரு கிரேக்கக்குடியேற்ற மும் கோயிலும் முசிறியில் இருந்ததாக அறிகிறோம்.

"வலம்படு முரசின் சேரல்ஆதன்
முந்நீர் ஒட்டிக் கடம்பறுத்து, இமயத்து
முன்னோர் மருள வணங்குவில் பொறித்து,
நன்னகர் மாந்தர் முற்றத்து ஒன்னார்
பணி திறை தந்த பாடுசால் நன்கலம்,
பொன் செய் பாவை வயிரமோடு ஆம்பல்
ஒன்று வாய் நிறையக் குவைஇ அன்று அவண்
நிலந்தினத் துறந்த நிதியம்" (அகம் 127)

என்று மாமூலனார் கடம்பெறிதல், இமய விற்பொறித்தல், (யவனர்)பெருந்திறை கொணர்தல் ஆகிய நெடுஞ்சேரலாதன் செயல்களைக் குறித்தது காணலாம்.

பதிற்றுப்பத்தின் மூன்றாம் பத்துக்குரிய பல்யானை செல் கெழு குட்டுவன் சிலப்பதிகாரத்தில் 'அகப்பா எறிந்த அருந் திறலான்' (சிலப் xxviii 144)என்று புகழப்படுகிறான். பதிற்றுப் பத்தில் இதனுடன் உம்பர்நாடு (ஆனைமலைப்பகுதி) வெற்றி, கொங்கு வெற்றி, மேல் கடலிலிருந்து கீழ்கடல்வரை ஆட்சி பரப்பி இருகடலும் ஆள்வதற்கறிகுறியாக இருகடல் நீரும் ஆடியது ஆகியவை சிறப்பிக்கப்படுகின்றன.

**கடம்பின் பெருவாயில் போர்**

கடம்பின் பெருவாயில் என்பது நன்னன்வேண்மான் ஆண்ட பாலி நாட்டின் ஒரு நகரம். அதுவே நன்னன் தலை நகரமாகவும் இருத்தல் கூடும். இந்நாடு பூழிநாடு அதாவது தற்போதைய தென் கன்னட மாவட்டத்தை அடுத்துள்ள குடகு மாகாணம் ஆகும். செருப்பாழிப் போருக்கு முன்பு அப்பகுதியில் கோசரால் கொல்லப்பட்ட ஒரு நன்னனைப் பற்றிக் கேள்விப்படுகிறோம். கடம்பின் பெருவாயில் போரில் ஈடுபட்ட மன்னன் அவன் மரபினருள் ஒருவனாகவே இருத்தல் கூடும்.

கடைச் சங்கப் பாடல்களிலே பத்துப்பாட்டில் மலைபடு கடாத்தில் பாடப்படும் நன்னன் வேறு. பதிற்றுப்பத்திற்குறிக் கப்படும் நன்னன் வேறு. முந்தியவன் சோழநாட்டை யடுத்த செங்கண்மா நாட்டு நன்னன். பிந்தியவனே சேரநாட்டு எல்லையிலிருந்த பாலிநாட்டு நன்னன் அல்லது கொண் கானத்து நன்னன் ஆவன். இக்கொண்கானத்து நன்னனைப் பற்றிப் பரணர் பல பாடல்கள் பாடியுள்ளார். அவற்றுள் சிலவேனும் செருப்பாழிக்காலத்து நன்னனைக் குறித்தன ஆகும். 'பெண் கொலை புரிந்த நன்னன்' என்று கொண் கானத்து நன்னன் அழைக்கப்படுவதற்குக் காரணமான நிகழ்ச்சியையே ஒரு பாட்டில் அவர் குறிக்கிறார்.

> மண்ணிய சென்ற ஒண்ணுதல் அரிவை
> புனல்தரு பசுங்காய் தின்றதன் தப்பற்கு
> ஒன்பதிற்று ஒன்பது களிற்றோடு அவள்நிறை
> பொன் செய் பாவை கொடுப்பவும் கொள்ளான்
> பெண்கொலை புரிந்த நன்னன். (குறுந்தொகை 292)

நன்னனின் மாளிகையின் பின்னே ஓடிய ஓர் ஓடையில் மிதந்து வந்த அவன் தோட்டத்துப் பசுங்காய் ஒன்றை ஓர் அறியாச் சிறுமி தின்றுவிட்டாள். அதற்காக அவன் அவளைக் கொலை செய்தான். பெண்ணின் பெற்றோர் அவள் பிழைக்காக யானைகள் பலவும், அவள் எடையின் அளவில் பொற்சிலையும் தருவதாகக் கூறியும், அக்கொடுஞ் செயலிலிருந்து அவன் விலக ஒருப்படவில்லை. இச்செயல் காரணமாகப் பல தலை முறைகளாகத் தமிழ்ப் புலவர் அவனையோ, அவன் மரபின ரையோ, உறவினரையோ பாடுவதில்லை, வணங்குவதில்லை என்று சூள் செய்திருந்தனர் என்று அறிகிறோம்,

இந் நன்னன் மரபினர் பாழிக் கோட்டையில் பெரும் பொற்குவை குவித்திருந்தனர் என்றும் பரணர் கூறுகிறார்.

செருப்பாழிப் போருக்கு உரிய கோட்டை இதுவே ஆகல் வேண்டும்.

கடம்பின்வாயில் போரில் நன்னனை எதிர்த்தவன் பதிற்றுப்பத்தின் நான்காம் பத்திற்குரிய களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல் என்ற சேர அரசன் ஆவான். சேரருக்குரிய மணிமுடியை அவன் முடிசூட்டு விழாவின்போது பெறமுடியாதிருந்ததனாலேயே அவன் களங்காய் கோத்த நார்முடி அணிந்திருக்க வேண்டுமென்றும், அது காரணமாகவே அப்பெயர் பெற்றானென்றும் உரையாசிரியர் கருதியுள்ளார்.

களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரலின் தந்தை சேரல் ஆதனென்றும், தாய் வேளாவிக் கோமான் மகளான பதுமன் தேவி என்றும் பதிற்றுப்பத்து நான்காம்பத்தின் பதிகம் கூறுகிறது. அவன் நீர் கொப்பளிக்கும் நேரி மலையை உடையவன். 25 ஆண்டுகள் ஆட்சி செய்தவன். முன்னும் பின்னும் ஆண்ட சேரர்களைப்போலவே வள்ளன்மை மிக்கவன். நாலாம்பத்தில் அவனைப் பாடிய புலவர் காப்பியாற்றுக் காப்பியனார். அவருக்கு அவன் அப்பாட்டிற்குரிய பரிசாக நாற்பதினாயிரம் பொற்காசும் நாட்டிற் பாதியும் அளித்தான். புலவர் தன்பாதி அரசையும் அரசனிடமே விட்டு அவனிடம் அமைச்சரானார் என்று அறிகிறோம்.

பிற்பட்ட சங்ககாலத்தில் தகடூரில் அதிகமான் அஞ்சி ஆண்டது பற்றிக் கேள்விப்படுகிறோம். நார்முடிச் சேரலின் காலம் அதற்கு முற்பட்டது. ஆதலால் அப்போது அதிகமான் அஞ்சியின் முன்னோனை நெடுமிடல் என்பவன் ஆட்சி செய்தான். நார்முடிச் சேரல் இந்நெடுமிடலின் இறுமாப்பை அடக்கி அவனைத் தனக்கு உட்படுத்தினான். நெடுமிடலுக்குப் பின் தகடூர் ஆண்டவர் சேர மரபினரே. ஆகவே அதிகமான் நெடுமான் அஞ்சியும் அவன் மரபினரும் சேரரால் புதிதாகத் தலைமை அளிக்கப்பட்ட குடிகளே என்று அறிகிறோம்.

களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் பூழி நாட்டின்மீது படையெடுத்துச் சென்றான். பூழி நாடு என்பது இந் நாளைய சேரர் தாயகமான வடமலையாளத்துக்கு வடக்கேயுள்ள தென் கன்னட மாவட்டமே. அதன் ஒரு பகுதியே நன்னனின் பாலி நாடாகிய குடகுப்பகுதி. இப்பூழி நாட்டுப் படையெடுப்பின் ஒரு நிகழ்ச்சியே கடம்பின் வாயிற் போர். அதில் நார்முடிச் சேரல் பொன்னங் கண்ணியும் பொன் மாலையும் சூடிய நன்னனை வென்று அவன் தலையை வெட்டி வீழ்த்தினான். பொன்னால் அணி செய்யப்பட்ட அவனுக்குரிய வாகை மரத்தை வேருடனும் கிளையுடனும் சிதைத்தழித்தான்.

"பொன்னங் கண்ணிப் பொலந்தேர் நன்னன்
சுடர்வீ வாகைக் கடிமுதல் தடிந்த
தார்முக மைந்தின் நார்முடிச் சேரல்."

(பதிற்: XL 14—16)

அகநானூற்றிலுள்ள பரணர் பாடல்களால் நார்முடிச் சேரல் படைத்தலைவன் ஆய் எயினன் என்றும், நன்னன் படைத்தலைவன் மிஞிலி என்றும் தெரியவருகிறது. சேரர் படைத் தலைவனாகிய ஆய் எயினன் நன்னன் படைத்தலைவனாகிய மிஞிலியின் வேற்போருக்கு ஆற்றாது போரில் சாய்ந்தான்.

"கடும்பரிக்குதிரை ஆஅய் எயினன்
நெடுந்தேர் மிஞிலியொடு பொருதுகளம் பட்டென"

(அகம் 148)

"ஒன்னார்
ஓம்பரண் கடந்த வீங்குபெருந் தானை
அடுபோர் மிஞிலி செருவேல் கடைஇ
முருகுறழ் முன்பொடு பொருதுகளஞ் சிவப்ப
ஆஅய் எயினன் வீழ்ந்தென" (அகம் 181)

களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலால் நன்னன் முறியடிக்கப்பட்டு வீழ்ந்தபோர் பெருந்துறைப்போர் என்று கல்லாடனார் குறிக்கிறார்.

"குடாஅது
இரும்பொன் வாகைப் பெருந்துறைச் செருவில்
பொலம்பூண் நன்னன்பொருது களத்தொழிய
வலம்படு கொற்றம் தந்த வாய் வாள்
களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்!" (அகம் 199)

பெருந்துறைப்போர் என்பது கடம்பின் வாயில் பெருந்துறைப் போர் என்ற முறையில் கடம்பின் வாயிற் போருக்கே உரிய மற்றொரு பெயராய் இருத்தல் கூடும்.

### சேரமான் கடல் பிறக்கோட்டிய வேல்கெழு குட்டுவன்

கடலோட்டிய வேல்கெழு குட்டுவன் என்ற பெயருடைய ஒரு சேரனைப் பரணர் புறநானூற்றில் (புறம் 369) பாடியுள்ளார். கடலோட்டிய செயலை அதே புலவர் செங்குட்டுவன் செயலாகப் பதிற்றுப்பத்தில் கூறுவதால் கடலோட்டிய வேல்கெழு குட்டுவன் என்பது சேரன் செங்குட்டுவனுக்குரிய மறுபெயரே என்று கொள்ளத்தகும்.

"பல்செருக் கடந்த கொல் களிற்று யானைக்
கோடுநரல் பௌவம் கலங்க வேலிட்டு
உடைதிரைப் பரப்பில் படுகடல் ஓட்டிய
வெல்புகழ்க் குட்டுவன்" (பதிற்: XLVI 10—13)

கடற்கொள்ளைக்காரர் கடற்கரை அடுத்த ஒரு தீவில் கோட்டை கட்டி வாழ்ந்தனர். ஆகவே கடலே தமக்கு முழு நிறை பாதுகாப்பு அளிக்கும் என்று எண்ணினர். ஆனால் குட்டுவன் வீரர்கள் யானைமீதேறிநின்று கடலகத்தில் இறங்கி வேல்களை வீசினர். இதனால் பகைவரின் பாதுகாப்பு உடைபட்டது.

மற்றும்,

"கடும்பரிப் புரவி ஊர்ந்த நின்
படுந்திரைப் பனிக்கடல் உழந்த தாளே!"
(பதிற்: XLi 26—27)

"கெடலரும் பல்புகழ் நிலைஇ நீர்புக்குக்
கடலொடு உழந்த பனித்துறைப் பரதவ!"
(பதிற்: XLVIII 3—4)

என்ற அடிகளில் அவன் அஞ்சா நெஞ்சுடன் கடலகம் புகுந்து தன் எதிரிகளுடன் போரிட்ட பரதவன் அல்லது கடல் மறவன் எனப் பராவப்படுகிறான்.

"தாங்கிரும் பரப்பில் கடல் பிறக்கோட்டி"

எனச் சிலப்பதிகாரமும் (காதை 30. கட்டுரை 12) இச்செயல் குறித்துள்ளது.

**செங்குட்டுவன் பிற வெற்றிகள்**

பதிற்றுப்பத்து ஐந்தாம்பத்தின் பதிகத்தால் செங்குட்டுவன் தந்தை வடநாட்டினருககு அச்சந்தரும் கொடியையுடைய நெடுஞ்சேரலாதன் என்றும், அவன் தாய் சோழன் மகள் மணக்கிள்ளி என்றும் அறிகிறோம். அவன் தாய் கரிகாலன் மகள் நற்சோணை என்று சிலப்பதிகாரம் தரும் செய்தியுடன் இது சிறிது முரண்படுகிறது. ஆனால் இரண்டும் ஒரே இளவரசிக்குரிய பெயர் என்று கொள்ளப்பட்டு வருகிறது.

செங்குட்டுவன் வெற்றிகளுள் ஒன்று பாண்டிய நாட்டெல்லையிலுள்ள பழையன் மோகூரை அழித்தது ஆகும். பழையன் நாட்டெல்லையிலிருந்த அருகன் என்ற தலைவன் செங்குட்டுவனுக்கு இப்போரில் உதவியாயிருந்தான். பழையன் செங்குட்டுவனை எதிர்த்தழித்து விடுவதாக வஞ்சினம் கூறிக்கொண்டு போர்க் கெழுந்தான். இப்போரில் மோகூர் வீழ்ச்சி அடைந்தது. பழையன் காவல் மரமாகிய வேம்பைச்

செங்குட்டுவன் வெட்டி வீழ்த்தி, அவன் யானைகளின் உதவி கொண்டே அதனைத் தன் நாட்டுக்கு இழுத்து வந்தான். அத்துடன் அதைக் கட்டி இழுப்பதற்கு அவன் பழையன் குடும்பத்துப் பெண்டிரின் கூந்தல்களையே அறுத்து வடமாகத் திரித்துப் பயன்படுத்தினான் என்று அறிகிறோம். மோகூர்ப் போரில் பழையனுக்குச் சில வேந்தரும் பல வேளிரும் துணை நின்றதாகத் தெரிகிறது.

தமிழர் வீரத்தோடு கலந்த கறையாகக் கடும்போட்டி உணர்ச்சியும் கொடுமையும் இடம்பெற்று இருந்தன என்பதை இது ஒளிவு மறைவின்றிக் காட்டுகிறது.

## கொங்கர் செங்களம்

நெடுமிடலை அடக்கிய சேரன் செங்குட்டுவன் முன்னோன் இருதிசைக் கடலிலும் நீராடித் தமிழகத்தின் வடதிசை முழுவதும் ஆட்கொண்டிருந்தான். ஆயினும் கொங்கு வெற்றி முழுதும் உறுதியாய் விடவில்லை. கொங்கு நாட்டில் எழுந்த கிளர்ச்சிகளைச் செங்குட்டுவன் செங்களம் என்ற இடத்தில் போர் செய்து அடக்கவேண்டிவந்தது. இதில் சோழர் பாண்டியர் கொங்கருக்கு உதவினர் என்று தோற்றுகிறது,

''நும்போல் வேந்தர் நும்மோடு இகலிக்
கொங்கர் செங்களத்துச் கொடுவரிக் கயற்கொடி
பகைப்புறத்துத் தந்தனராயினும், ஆங்கவை
திசைமுக வேழத்தின் செவியகம் புக்கன''
(சிலப்பதிகாரம் XXV 152—155)

என்று சிலப்பதிகாரத்தில் வில்லவன் கூற்றாக இதை இளங்கோ அறிவிக்கிறார்.

## இடும்பில், வியலூர், கொடுகூர் வெற்றிகள்

செங்குட்டுவன் உள்நாட்டுப்பெரு வெற்றிகளில் கொங்கு நாட்டுப் போருக்கு அடுத்தபடி இடும்பில் கைக்கொண்டதும், வியலூர் கொடுகூர் அழித்ததும் முக்கியமானவை ஆகும்.

இடும்பில் என்பது தஞ்சை மாவட்டத்திலுள்ள இடும்பாவனம் என்று உரையாசிரியர் அடியார்க்குநல்லார் குறிக்கிறார்.

'மாறா வல்வில் இடும்பில் புறத்திறுத்து'(பதிற்.5பதிகம்9) என்று பதிற்றுப் பத்தும்,

'கொடுந்தேர்த்தானையோடு இடும்பில் புறத்திறுத்து
(சிலப் XXviii 118)

என்று சிலப்பதிகாரமும் இதனைக் குறிப்பிடுகின்றன,

வியலூர் தஞ்சையில் உள்ள திருவிசலூர் என்று சிலர் கூறுவர். ஆனால்,

*"கறி வளர் சிலம்பில் துஞ்சும் யானையின்*
*சிறு குரல் நெய்தல் வியலூர் எறிந்தபின்"*
*(சிலப். xxviii 114—5)*

என்ற சிலப்பதிகார அடிகளால் அது பாலி அல்லது குடகு நாட்டு வியலூரே என்று தெரிகிறது. மிளகு வளர்வதும் யானை மிகுதியாயுள்ளதும் ஒருங்கேயிருப்பது மேல்கரையிலேயேயாகும். இம் முற்றுகையைக் கிட்டத்தட்ட இதே சொற்களிலேயே பதிற்றுப் பத்துப் பதிகம் தருகிறது.

*'உறுபுலி அன்ன வயவர் வீழச்*
*சிறு குரல் நெய்தல் வியலூர் நூறி'*
*(பதிற். 5. பதிகம் 10—11)*

வியலூர் கோட்டை நகரம் என்று முன்பே கண்டிருக்கிறோம். அதை அழித்ததை அடுத்து நிகழ்ந்த செய்தியே கொடுகூர் வெற்றி, பதிகம் தரும் குறிப்பால் வியலூரும் கொடுகூரும் ஒரே ஆற்றின் எதிர்எதிர் கரையில் இருந்ததாகத் தெரிகிறது. வியலூர் எறிந்தபின் செங்குட்டுவன் ஆற்றைக் கடந்தே கொடுகூர் சென்று அதை அழித்தான்.

*'வியலூர் நூறி,*
*அக்கரை நண்ணிக் கொடுகூர் எறிந்து'*
*(பதிற். 5. பதிகம் 10—11)*

என்பது இதனைத் தெளியக்காட்டும்.

### நேரிவாயில் போர்

நேரிவாயில் என்பது இன்றைய திருச்சிராப்பள்ளி நகரின் பகுதியாக இருக்கும் பண்டை உறையூரின் தெற்குவாயில் அருகே அமைந்திருந்த ஓர் ஊர் ஆகும். அதில் நடைபெற்ற போர் சோழர் அரசுரிமைக்காகவே எழுந்தது. சேரன் செங்குட்டுவன் தாய் சோழர் குடிப்பிறந்தவளாதலால், அரசுரிமை கோரிய கிள்ளி வளவன் அவன் மைத்துனனாய் இருந்தான். ஆனால் அதே அரசுரிமைக்கு வேறும் ஒன்பது சோழர்குடி இளவல்கள் போட்டியிட்டுக் கிள்ளிவளவனுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தனர். செங்குட்டுவன் கிள்ளிவளவனை ஆதரித்து ஒன்பது இளவரசரையும் ஒருங்கே யெதிர்த்து நின்று போரிட்டான்.

போர் ஒரே பகலில் நடைபெற்று முடிந்துவிட்டது. செங்குட்டுவன் ஒன்பது சோழ இளவல்களையும் களத்தில் வென்று

முறியடித்தான். தன் மைத்துனன் கிள்ளிவளவனையே சோழ மன்னனாக முடிசூட்டினான். மணிமேகலைக் காப்பியத்தில் இடம் பெறும் சோழன் இவனே.

இப்போர் பற்றிப் பதிற்றுப்பத்துப் பதிகமும் சிலப்பதிகாரமும் விரித்துரைக்கின்றன.

''வெந்திறல்
ஆராச் செருவில் சோழர் குடிக்கு உரியோர்
ஒன்பதின்மர் வீழ வாயிற்புறத்து இறுத்து
நிலைச் செருவின் ஆற்றலை அறுத்து''
(பதிற் 5. பதிகம் 18—20)

என்ற பதிற்றுப் பத்துப் பதிகமும்

''ஆர்புனை தெரியல் ஒன்பது மன்னரை
நேரி வாயில் நிலைச்செரு வென்று''
(சிலப் xxviii 116—117)

என்று சிலப்பதிகாரத்திலேயே, செங்குட்டுவனைப் புகழ்ந்து கூறும் முறையில் மாடலன்,

''நின்
மைத்துனவ வளவன் கிள்ளியொடு பொருந்தா
ஒத்த பண்பினர் ஒன்பது மன்னர்
இளவரசு பொறாஅர், ஏவல் கேளார்,
வளநாடு அழிக்கும் மாண்பினர் ஆதலின்,
ஒன்பது குடையும் ஒரு பகல்ஒழித்து, அவன்
பொன் புனை திகிரி ஒருவழிப் படுத்தோய்!''

என்று இப்போரை விளக்கமாக எடுத்துரைத்துள்ளான்.

செங்குட்டுவன் நாட்களுக்குள் சேர அரசே தமிழகத்தின் முதற்பேரரசாக நிலவிற்று. சோழப்பேரரசு வலி குன்றியதுடன், ஆற்றல் சிதறி ஆங்காங்கே தனி நகரில் தனி ஆட்சி செலுத்திய சிற்றரசுகளை அடக்கமுடியா நிலைமையடைந்தது. நெரிவாயில் போர் இதனைக் காட்டுகிறது. உறவு முறையை முன்னிட்டு, அதன் உள் நிகழ்ச்சிகளில் தலையிட்டதன் மூலம் சேரன் ஆற்றல் அதன்மீது பின்னும் வளர்ந்தது. உறவு காரணமாகவே கிள்ளி வளவன் ஆட்சியைச் சேரர் வளர்ச்சி பாதிக்காமல் இருந்தது. அத்துடன் இச்சமயம் பாண்டியரும் சோழரைப் போலவே சேரனுக்கு அடங்கியிருந்தனர் என்று தோற்றுகிறது. கொங்கர் செங்களத்தில் இரு அரசரும் வேளிருடன் தோல்வி எய்தியதே இதற்குப் பெரிதும்காரணம் ஆகலாம்.

**வடபுல எழுச்சி: கங்கைப்போர் I**

சேரன் செங்குட்டுவன் கண்ணகி சிலைக்காக வடதிசையில் படையெடுத்துச் செல்வதற்கு நெடுநாள் முன்பே கங்கைப் பேராற்றில் தன் முதற்போர் ஆற்றியிருந்தான். அவன் அப்போது வடதிசை சென்றது அவன் அன்னை கங்கையில் நீராடுவதற்குத் துணையாகவே. ஆயினும் படையணிகளுடன் சென்றதால் பல ஆரிய மன்னர்கள் திரண்டு வந்து அவன் போக்கைத் தடுத்தனர். செங்குட்டுவன் தனியாக நின்று அத்தனை வேநதரையும் களத்தில் சிதறடித்தான், ஓடிய ஒரு சிலர் நீங்கலாக மீந்தவர் அனைவரும் உயிர் பிறிதாகினர். கங்கைப்படுகளம் ஒரே குருதிக்களமாகவும் பிணக்களமாகவும் ஆயிற்று.

சிலப்பதிகாரத்திலே மாடலன் கூற்ருகவே இப்போர் வருணிக்கப்படுகிறது.

> "கங்கைப்பேர் யாற்றுக் கடும்புனல் நீத்தம்
> எங்கோ மகளை ஆட்டிய அந்நாள்
> ஆரிய மன்னர் ஈரைந்நூற்று வர்க்கு
> ஒரு நீயாகிய செரு வெங்கோலம்
> கண் விழித்துக் கண்டது கருங்கட் கூற்றம்!"

(சிலப் XXV 160—164)

இப்போரின் கோரக்காட்சியையும் அதில் தனியொருவனாக நின்று செங்குட்டுவன் வெற்றிக் கூத்தாடியதையும் சாவின் தெய்வமாகிய கூற்றமே கண்ணிமையாமல் வியப்புடன் பார்த்துக்கொண்டிருந்தது என்று கவிஞர் வியந்துரைக்கிருர்.

இப்போரில் கொங்கணரும் கலிங்கரும், கருநாடரும், பங்களரும், கங்கரும் கட்டியரும். ஆரியரும் பிறரும் எதிரிகளிடையே இருந்தனர். அவர்கள் பலமொழி பேசுபவர்கள். ஆரியமும் தமிழுமாக அவர்கள் மொழிகள் மயங்கிக் குழம்பின. போரின் மறக்கத்தகாத கண்கொள்ளாக் காட்சி செங்குட்டுவன் ஆற்றிய யானைப்படையின் தாக்குதலே என்று இளங்கோ கூறுகிருர்.

> கொங்கணர், கலிங்கர், கொடுங்கரு நாடர்
> பங்களர், கங்கர், பல்வேற் கட்டியர்
> வட ஆரிய ரொடு வண்டமிழ் மயக்கத்துள்
> கடமலை வேட்டம் என் கட்புலம் பிரியாது.

(சிலப் XXV 156)

**கங்கைப்போர் II அல்லது குயிலாலுவப் போர்**

சேரன் செங்குட்டுவனின் இரண்டாவது வடதிசைப் படையெழுச்சி சிலப்பதிகாரத்திலேயே மிகவும் விரிவுபட உரைக்கப்பட்டுள்ளது. அப்படையெடுப்புக்கான இரண்டு காரணங்கள் கூறப்படுகின்றன. ஒன்று கண்ணகிக்குச் சிலே கொணர்வது, மற்றது வடதிசையரசர்களில் பாலகுமாரன் மக்களாகிய கனகனும் விசயனும் தமிழரசரை ஏளனமாகப் பேசியது. பின்னதன் பயனுக, சேரன் செங்குட்டுவன் ஒருநெடு மொழி கூறிப் புறப்பட்டான். ''இந்த வடபுல ஆரிய அரசரை முறியடித்து அவர்கள் தலைமீதே கண்ணகி சிலையை ஏற்றிக் கொண்டு வருவேன். அப்படிச் செய்யாவிட்டால், நான் செங் கோலரசனல்ல!'' என்று அவன் சீற்றத்துடன் எழுந்தான்.

முதற் கங்கைப்போர்க் காலத்திலிருந்தே வடதிசையில் மகதப் பேரரசராக இருந்த நூற்றுவர் கன்னர் சேரன் செங்குட்டுவனுக்கு உற்ற நண்பராய், அவன் மேலாட்சியை ஏற்றிருந்தனர். சேரன் வடதிசைப் படையெடுப்புப்பற்றிக் கேள்விப்பட்டதும் அவர்கள் அவனை எதிர்கொண்டு வரவேற் கச் சஞ்சயன் என்ற படைத்தலைவனுடன் நூறு ஆடல் நங்கை யர், இருநூற்றெட்டுப் பாடகர், நூறு கழைக்கூத்தாடிகள், நூறுதேர், பதினுயிரம்குதிரைகள், இருபதினுயிரம் வண்டிகள், அணிமணிப் பரிசுகள் அனுப்பியிருந்தனர். சேரன் அவர்களை ஏற்று, கங்கை கடக்க நாவாய்ப் படைகளைச் சித்தம் செய்து வைக்குமாறு அவர்களுக்கு ஆணை போக்கினுன்.

கன்னர் உதவியுடன் சேரப் படைகள் கங்கை கடந்து, வட கரையிலுள்ள உத்தரை நாட்டையடைந்தனர். குயிலாலுவம் என்ற இடத்தில் கன்னன், விசயன் ஆகிய ஆரிய அரசர்கள் பெரும் படையுடன் தமிழ்ப்படையை வந்து எதிர்த்தனர். இக் கனக விசயர் தலைமையில் உத்தரன், விசித்திரன், உருத் திரன், பைரவன், சித்திர சிங்கன், தனுத்தரன், சுவேதன் ஆகிய பல அரசர்கள் தங்கள் தங்கள் படைகளுடன் வந்து குழுமினர்.

கரையுடைத்த பெருவெள்ளம் போன்ற ஆரிய அரசரின் படை வரிசைகளைக் கண்ட சேரன் எல்லையில்லா மகிழ்ச்சி கொண்டான். விரைவில் முரசுகள் முழங்கின. சங்கங்கள் இயம்பின. காளங்கள் ஆர்ப்பரித்தன. வில் வீரர்களும், வேல் வீரர்களும் வாள் வீரர்களும் நீடித்து மும்முரமான போரில்ஈடு பட்டார்கள். அமர்க்களத்தின் ஆர்ப்பரிப்பும் அமலையும் காது களைச் செவிடுபட வைத்தன. குருதியும் குறையுறுப்புக்களும் பிணக்குவியல்களும் நிலத்தை மறைத்தன. தூசியும் கொடியும் கண்களுக்குத் திசைகளையே மறைக்கும் மறைதிரைகளாயின,

போர்வெறிகொண்ட யானைபோல் சேரன்ஆரிய அரசரின் கடும் படை மாக்களைக்கொன்று களம் குவித்தான். அம் மன்னர் அவன் திசையில் திரும்ப அஞ்சினர். ஆனால் ஆரியர் படை குறையக் குறையத் தமிழ்ப் படை அதைச் சூழ்ந்து நெருங்கிற்று. ஒரு பகல் எல்லைக்குள் அவ்வளவு பெருந்தொகை யான படை வீரர்களைக் கூற்றுவன் கூடக் கொன்று குவிக்க முடியுமா என்று வியந்து ஆரிய அரசர் மலைத்தனர். இறுதியில் படைகளெல்லாம் தோற்றபின் அவர்கள் சிவ வேடம் தவ வேடம் பூண்டு ஒளிந்தனர். இளங்கோவின் மொழிகளில்,

''வாய் வாளாண்மையின் வண்தமிழ் இகழ்ந்த
காய்வேல் தடக்கைக் கனகனும் விசயனும்
ஐம்பத்திருவர் கடுந்தேராளரோடு
செங்குட்டுவன் தன் சினவலைப்படுதலும்
சடையினர் உடையினர் சாம்பற் பூச்சினர்.........
ஆடுகூத்தர் ஆகி எங்கணும்
ஏந்துவாள் ஒழிய''

(சிலப். XXVI 221—5, 228—9)

வெருவியோட முயன்றனர். ஆனால் சேரன் வீரர் அவர் களைப் பற்றிக்கொணர,அரசன் அவர்களை விலங்கிட்டுப்பிணித் தான். பின் அமைச்சன் வில்லவன் கோதையுடனும் படைத் தலைவன் நீலனுடனும் ஒரு படையை அனுப்பி இமயத்தி லிருந்து கல் கொண்டு வரும்படி பணித்தான்.

இமயத்திலிருந்து பத்தினிக்கல் கனகவிசயரின் முடிமீதே ஏற்றிக் கொண்டு வரப்பட்டது. மற்ற ஆரிய அரசர்கள் இதற் குள் கங்கையின் தென்கரையில் தமிழ்ப்பேரரசனுக்கும் அவன் படைவீரர்களுக்கும் தங்குவதற்குரியபாடிப்பெருநகர் அமைத் திருந்தனர். இங்கே குயிலாலுவப் போரில் இறந்தவர்களுக் குரிய வினைமுறைகள். இறந்தவர் மைந்தர் குடிமரபினருக்கான மட்டு மதிப்புப் பரிசில்கள், வெற்றி வீரர்களுக்குப் பொன்னால் செய்த வாகைப் பூ முதலிய சிறப்புக்கள் நிகழ்த்தப்பட்டன.

''நிறப்புண் கூர்ந்து
புறம் பெறவந்த போர்வாள் மறவர்
வருகதாம் என வாகைப் பொலந்தோடு
பெருநாளமயம் பிறக்கிடக்கொடுத்து''

சிலப்—XXVII 41—44)

என்று இளங்கோ இச்செயல் போற்றியுள்ளார்.

தமிழரைப் பழித்த கனவிசயர் கல் சுமந்துவரும் காட்சி யைப்பாண்டிய சோழருக்குக்காட்டி வரும்படி அரசன் பணித்

தலைவன் நீலனிடம் அவர்களை ஒப்படைத்து அனுப்பிவிட்டு வஞ்சிக்கு மீண்டான்.

பத்தினிக்கல் வந்ததும் அதற்கு முறைப்படி நீர்ப்படை செய்யப்பட்டது. இச்சமயம் தமிழகத்தின் அரசியல் நிலைகளை அறிந்து வந்து கூறிய மாடலன் என்ற பார்ப்பனனுக்குச் சேரன் செங்குட்டுவன் தன்எடையாகிய ஐம்பது துலைப்பொன் நன்கொடை யளிதான்.

குயிலாலுவப் போர் அல்லது இரண்டாவது கங்கைப் போர் நிகழ்ச்சி பதிற்றுப்பத்தில் பதிகத்தில் குறிக்கப்பட்டுள்ளது.

"கடவுட் பத்தினிக் கற்கோள் வேண்டிக்
கானவில் கானங் கணையிற் போகி
ஆரிய அண்ணலை வீட்டிப் பேரிசை
இன்பல் அருவிக் கங்கை மண்ணி
இனந்தெரி பல் ஆன் கன்றொடு கொண்டு
(பதிற்:—5. பதிகம் 4–8)

என இவ் வெற்றியின் பயனாக வடக்கிலிருந்து பல ஆனிரைகளையும் கைக்கொண்டு வந்ததாக இப் பதிகம் குறிக்கிறது.

பதிற்றுப்பத்து மூலத்திலோ வேறு சங்கப்பாடல்களிலோ செங்குட்டுவனின் கங்கைப்போர், குயிலாலுவப் போர் ஆகியவை தெளிவாக குறிக்கப்படா விட்டாலும், அவற்றைப் பொதுவே சுட்டுபவையாகக் கொள்ளக்கூடிய பகுதிகள் பதிற்றுப்பத்திலும் அகநானூற்றிலும் உண்டு.

"கடவுள் நிலைஇய கல்ஓங்கு நெடுவரை
வடதிசை எல்லை இமயமாகத்
தென்னங் குமரியொடு ஆயிடைஅரசர்
முரசுடைப் பெருஞ்சமம் ததைய ஆர்ப்பெழச்
சொல்பல நாட்டைத் தொல்கவினழித்த
போர் அடுதானைப் பொலந்தார்க் குட்டுவ!"
(பதிற்:—xLiii 6—11)

"ஆரியர் அலறத் தாக்கிப் பேரிசைத்
தொன்றுமுதிர் வடவரை வணங்கு விற்பொறித்து
வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன்
வஞ்சி" (அகம்—396)

இவற்றுள் பிந்திய பாடல் பத்துப்பாட்டில் செங்குட்டுவனைப் பாடிய அதே புலவர் பாட்டே. ஆயினும் மன்னர் பெயர் இல்லாததால் அது செங்குட்டுவன்செயலை மட்டுமன்றி,அவன்

தந்தை அல்லது முன்னோனை இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் செயலையும் பொதுவாகச் சுட்டத்தக்கதாய் உள்ளது.

"உடன்று மேல்வந்த ஆரியமன்னரைக்
கடும்புனற் கங்கைப் பேராற்று வென்றாய்!"
(சிலப். xxviii 120—121)

என்று சிலப்பதிகாரத்தில் மாடலன் கூற்றாகவரும் அடிகளும் இரண்டு கங்கைப் போர்களுக்கும் பின் பேசப்பட்டது என்ற முறையில் இரு போர்களையும் பொதுவே சுட்டுபவையாகவே உள்ளன.

## செங்குட்டுவன் வடதிசை வெற்றியின் சூழல்

செங்குட்டுவன் காலத்தில் வட கிழக்கிந்தியாவில் ஆண்ட பேரரசர் மகதத்தை ஆண்ட ஆந்திர மரபினராகிய மகா கர்ணர் ஆவர். இவர்கள் சதகர்ணிகள் என்றும் கூறப்படுவர். இவர்களே சிலப்பதிகாரத்தில் குறிககப்பட்ட மகதப் பேரரசர் நூற்றுவர் கன்னர் ஆவர். இவர்சள் வடபெண்ணை யாற்றின் கரையிலிருந்து மகாநதிவரையிலுள்ள ஆந்திரப் பேரரசின் எல்லையும், இமயம்வரைப் பரவிய கங்கைவெளி யெல்லையும் பர்மாவும் சேர்ந்த மூன்று பேரரசெல்லைகளாகிய முக்கலிங்கத்தையும் ஒரு குடைக்கீழ் ஆண்டவர்கள் ஆவர். இத்தகு பெரும் பேரரசர் தமிழக பேரரசன் ஆணைக்குக் கட்டுப்பட்டு அவன் ஆர்வ நண்பரா யிருந்ததற்கு ஒரு காரணம் உண்டு. இது அந் நாளைய அரசியல் சூழலால் விளங்குகிறது. அவனுக்கு மேல் திசையில் தமிழக நாகரிகத்துக்கு மட்டுமன்றிக் கங்கை நாகரிகத்துக்கும் முற்றிலும் அயலான ஒரு புற உலகப் பேரரசு காந்தாரத்தைத் தலை நகராகக்கொண்டு சிந்துவெளி முழுவதையும் காசுமீரம், ஆப்கனிஸ்தானம், ஆரியா, அரகோசியா, பாக்டிரியா ஆகிய நடு ஆசிய நாடுகளையும் ஆண்டு வந்தது. சக மரபைச் சார்ந்த அதன் அரசர் குடி சிந்துகங்கை வெளி நாகரிகங்களுக்கு எவ்வளவு அயலானது என்பதை அக் குடியின் முதலரசர் பெயர் 'காட்பீஸ்'ஸே காட்டும். ஆனால் அடுத்த அரசன் கனிஷ்கன் புத்தநெறியைத் தழுவியதனாலேயே அரைகுறையாக இந்திய மாநிலப் பண்பாட்டின் போர்வை போர்த்திக்கொண்டு தன் பெயருக்கு இந்தியத் தொனி கொடுத்துக் கங்கை வெளியையும் கைக்கொள்ளக் கனவு கண்டான். இப் புறப்பகையிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ளும் பொருட்டே தமிழினத்தவர் அல்லது திராவிடராகிய வடதிசை ஆந்திரப் பேரரசர் தம் இனத்தவராகிய தமிழருடன் அளவளாவி, தமிழகப் பேரரசன் ஆதரவை நாடினர். ஆந்திரப் பேரரசர் ஆட்சியும் பிற்காலச்

சோழப் பெரும் பேரரசர் ஆட்சியுமே வங்கத்தின் நாகரிகத்தைத் தமிழக நாகரித்தின் ஒரு நறு நிழலாக்கி, அதை வடதிசையில் ஒரு நாகரிகச் செழும்பண்ணையாகத் திகழச் செய்துள்ளது என்பது இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.

சிலப்பதிகாரத்தில் கனகன் என்று குறிக்கப்படும் அரசன் இந்தச் சகப்பேரரசன் . கனிஷ்கனே என்றும், விசயன் என்று குறிக்கப்படும் அரசன் அவனுக்குப் பேராதரவாயிருந்துஅவ்ன் பேரரசாட்சியைப் பரப்புவதற்கு உதவியாயிருந்த வலிமை வாய்ந்த காசுமீர நாட்டரசன் விசயாலயனே என்றும், இருவரையும் சேரன் வென்றடக்கிய இரண்டாங் கங்கைப் போர் அவன் பேரரசின் கிழக்கெல்லையும் ஆந்திரப் பேரரசர் மேற்கெல்லையுமாகிய வடமதுரை அல்லது தில்லிநகரப் பகுதிக்கருகிலேயே நடைபெற்றிருக்கவேண்டுமென்றும் கருத இடமுண்டு. பின்னுளைய சோழப் பெரும் பேரரசன் முதலாம் இராசேந்திரன் வெற்றிகளும் மதுரை மண்டலம் அல்லது வடமதுரைவரைக்கும் பரவிச் சென்றன என்று அவன் மெய்க்கீர்த்தி கூறுகின்றது.

கனிஷ்கனுக்குப் பிற்பட்ட அரசர் தமிழகச் சைவ வைணவ நெறிகளை ஏற்றுச் சைவவைணவப் பெயர்களை மேற்கொண்டிருந்தனர் என்பதும், அவர்கள் பேரரசிழந்து மிகச் சிறு சிற்றரசராகவே இயங்கினர் என்பதும் இவ்விளக்கத்துக்கு வலுத்தருவது ஆகும். ஆயினும் இராசேந்திரன் வெற்றிகளையே மறைத்தும் இருட்டடித்தும் வந்த வடதிசைப் பாசமும் தென்திசை அலக்கணிப்பும்மிக்க மாநில வரலாற்றுசிரியர்கள் இப்பண்டைச் செய்திகளை ஆராய்ந்து மெய்மை காண விழையாது ஒதுக்குவதில் வியப்பில்லை.

கனகவிசயர் ஒரே அரசன் பாலகுமாரன் மக்களாகச் சிலம்பில் குறிக்கப்பட்டுள்ளனர். இது மேற்கூறிய விளக்கத்துடன் முரண்படுகிறது என்பதில் ஐயமில்லை. ஆனால் காலநிலைமைகள் வடதிசையாளர் உவர்ப்புநீக்கி அதே சமயம் வேறு உவப்புக்கலவாத நிலையில் ஆராய்தற்குரியனவேயாகும். அதுவரையில் ஓரளவு மேற்கூறிய விளக்கமே வரலாற்று நிலைக்கு மிக அணுக்க நல் விளக்கமாகக் கொள்ளப்படலாகும்.

# 7. சங்ககாலப் போர்கள் III

சங்க இலக்கியம் ஒரு வரலாற்றுச் சுரங்கம். ஆனால் அது இன்னும் நன்கு அகழ்ந்து பயன் காணப்பெறாத சுரங்கமாகவே உள்ளது. அதன் அறிவு தமிழ்ப் புலவருலகில் செறிந்து கிடக்கின்றது. அதனை ஆராய்வதற்குரிய வரலாற்று வாய்ப்பும் ஆராய்ச்சி வாய்ப்பும் அப்புலவருலகுக்கு எட்டாத அயல் மொழிக் கல்வி நிலையங்களின் ஆராய்ச்சி அரங்கங்களில் இருக்கின்றன. ஆட்சியினத்தின் கலைகளுள் ஒன்றாக வரலாறும், அவற்றின் பண்பாட்சிக் கருவிகளாக சமஸ்கிருதம், ஆங்கிலம், இந்தி ஆகிய அயல் மொழிகளும் இருக்கும்வரை, ஆட்சி நிலையங்களிலும் கல்வி நிலையங்களிலும் தமிழும் தமிழ்ப்புலமைத் துறையும் தாழ்ந்த படிகளிலும் மிகத்தாழ்ந்த கீழ்ப்படியில்தான் இருக்க முடியும். அதே சமயம் வரலாற்றுத்துறையும் அயல் மொழித்துறைகளும் தமிழும் தமிழ் பயின்ற தமிழரும் தமிழ்ப் புலமையும் சென்று எட்ட முடியாத உச்ச உயர் படிகளாகவே நிலவும். இவ்விரண்டும் சரிசம நிலையில் உழைத்துச் சங்க இலக்கிய அடிப்படையில் தமிழக வரலாற்றையும், தமிழக வரலாற்றடிப்படையில் சங்க இலக்கியத்தையும் இனித்தான் வகுக்கவேண்டும்.

மொத்தமாகச் சங்க இலக்கியத்தின் காலத்தை மதிப்பிடுவதிலேயே தமிழாராய்ச்சியாளர் முயற்சிகள் இதுவரை பெரிதும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. சங்க இலக்கியத்துக்குள்ளேயே கால வரிசை காண முயன்றவர் மிகச் சிலர். இத்துறையில் அறிஞர் கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் அரும்பெரு முயற்சிகள் எடுத்துக் கொண்டுள்ளார்கள். ஆனால் அவர் அடிச்சுவட்டை இதுகாறும் யாரும் பின்பற்றத் துணியவில்லை. இது வியப்புக்குரியது. ஏனெனில் சங்க இலக்கியக் கால வரிசைக்கு வேண்டிய சான்றுகள் எதையும் வெளியே தேட வேண்டியதில்லை. சங்க இலக்கியத்துக்குள்ளேயே அது வகையில் ஏராளமான சான்றுகள் உள்ளன.

இதுவரையில் சங்க இலக்கியத்தை ஆராய்ந்தவர்கள் பெரும்பாலும் — வரலாற்றாராய்ச்சியாளர் மட்டுமன்றிப்

புலவர்களும்கூட—சிலப்பதிகாரத்தையும் மணிமேகலையையும் சங்க இலக்கிய காலத்துக்குப் பிற்பட்ட ஏடுகளாகவோ, அல்லது சங்க இலக்கிய காலத்திலேயே பிற்பட்ட ஏடுகளாகவோதான் கருதி வந்துள்ளனர். இலக்கியம், பண்பாடு, மொழி ஆகிய துறைகளில் சில மயக்க முடிபுகளை இம்மயக்க முடிவுக்கு ஆதாரமாகக் காட்டியும் அமைந்துள்ளனர். ஆயினும் அவர்களே, அவர்களில் பெரும்பாலானவர்களே, செங்குட்டுவன் காலத்து (ஆரியப் படை கடந்த) நெடுஞ்செழியனுக்குத் தலையாலங்கானத்து நெடுஞ்செழியன் பெயரனென்றும், பாண்டியன் கானப்பேர்தந்த உக்கிரப் பெருவழுதி பாண்டியர்களுள் கடைசியானவன் என்றும் முடிவு கண்டுள்ளார்கள். இது சரியானால் அறிஞர் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் கொண்டதுபோல மணிமேகலை சிலப்பதிகார ஏடுகளும் செய்திகளும் சங்க காலத்தின் இறுதிப்பகுதிக்கல்ல, நடுப் பகுதிக்கே உரியவை என்பது தெளிவு.

விரிவான சங்க இலக்கிய கால வரிசை ஆராய்ச்சிகள் மூலம் புது முடிபுகள் காணப்படும்வரை பதிற்றுப்பத்தின் முதல் நான்கு பத்துக்களும், மாமூலனார், பரணர், கள்ளில் ஆத்திரையனார் முதலிய முற்காலப் புலவர்களும் குறிப்பிடும் செய்திகள் கடைச் சங்கத்தின் முற்காலத்துக்குரியவை என்றும், ஐந்தாம்பத்தும் அதனோடு சமயகாலத் தொடர்புடையவராகத் தெரியவரும் சங்க காலப் புலவர்கள் குறிப்புக்கள் நடுக்காலத்தன என்றும், பிற சங்கப் புலவர்கள் குறிப்பிடும் செய்திகள் பிற்காலத்தன என்றும் கொள்வதே பொருத்தமானது.

## இருவகைப் போட்டிகள்

தமிழக வரலாற்றில் ஒளிகாண விரும்புபவர்கள் பண்டைத் தமிழர் அரசியல் வாழ்வின் இரண்டு போக்குகளைக் கவனித்தல் வேண்டும். ஒன்று வேளிர் அல்லது குடியரசர் வலிமைபெற்று வல்லாட்சி எய்தி, முடியரசரை எதிர்த்தும் பிற குடியரசரை அடக்கியும் தாமே முடியரசராக விழைந்த போக்கு. கடைச் சங்க காலத்தில் மலையமான் திருமுடிக்காரியும், அதிகமான் நெடுமானஞ்சியும், பறம்புமலைப் பாரியும் இம் முயற்சியை மேற்கொண்டு வெற்றி பெறாது அழிந்தவர்களே யாவர். இதற்கு மேம்பட்ட தளத்தில் முடியரசர் மூவர் என்ற நிலை ஏற்பட்டபின் மற்ற முடியரசர் இருவரையும் வென்று தமிழக முதல்வர் ஆகும் அவாவும் முடியரசரைத் தூண்டின. சேரர் வரலாற்றில் நாம் கேள்விப்படும் 'எழுமுடியரசர்', பிற்காலச் சோழபாண்டியர் வரலாற்றிலும் கல்வெட்

டுக்களிலும் அடிபடும் 'மும்முடியரசர்' ஆகிய வழக்குகளும், புராண இதிகாசங்களில் குறிக்கப்படும் 'மூவுலகாளும் மன்னர்!' 'ஏழுலகாளும் மன்னர்!' முதலிய புனைந்துரைகளும் தமிழரின் நீடித்த தேசிய அரசியல் வரலாற்று மரபின் தடங்களே யாகும்.

''போந்தை வேம்பே ஆர் என வரூஉம்''

என்ற தொல்காப்பிய நூற்பா வாசகத்தில் மூவேந்தர் மலர்ச் சின்னங்களான பனை, வேம்பு, ஆத்தி ஆகியவற்றிய் சேரன் மலர்ச் சின்னமாள பனை (போந்தையே) முதலில் கூறப் பட்டது. இதனால் தமிழக முதன்மைப் போட்டியில் தொல் காப்பியர் காலத்திலோ, அதற்கு முற்பட்டோ, சேரனே முந்திய முதன்மையுடையவனாக இருத்தல் கூடும் என்பர், அறிஞர் தேவநேயப் பாவணர். இது ஆராய்தற்குரியது. ஏனெனில் இது தமிழக முதன்மையின் முந்துநிலையாகவும் இருக்கலாம். முடியரசு நிலைபெற்றவருள் முந்தியவன் என்ற காரணமாகவும் இருக்கலாம். தொல்காப்பியம் கேட்ட அதங்கோட்டாசான் ஊராகிய அதங்கொடும் காப்பியக்குடியும் சேரநாட்டுக்கு உரியனவாயிருந்ததாகத் தெரிவதால், தொல்காப்பியர் தன் பிறந்த நாட்டுச் சின்னத்தை முதலில் கூறியதாகவும் கொள்ளலாம். இறுதியாக, தொல்காப்பியர் காலத்திலும் அதற்கு முன்னும் சேரநாடு தென்கோடியிலோ தென்மேற்கு கோடியிலோ பஃறுளியாறு கடந்தே இருந்ததாகத் தெரிவதால், மூவரசுகள் தென்கோடி அல்லது மேல் கோடியிலிருந்து வரிசைப்படுத்தப் பட்டதாகவும் இருத்தல் சாலும்.

ஐயப்பாட்டுக்குரிய இக் குறிப்பைப் பிற்கால ஆராய்ச் சிக்கு விட்டுவிட்டால், தமிழக முதன்மைப் போட்டியில் வரலாற்றுக்கு முற்பட்ட தொல் பழங்கால முதன்மையுடையவர்கள் பாண்டியரே என்பதை நெடியோன் மரபு காட்டு கிறது. கடைச் சங்ககாலத் தொடக்கத்தில் இருந்தவனாகத் தெரியவரும் பல்சாலை முதுகுடுமிப் பெருவழுதியும் இத்தகைய முதன்மையுடையவனாக இருந்திருக்க வேண்டும். ஆனால் இவர் கட்கு இடைப்பட்ட காலத்தைப்பற்றி நமக்கு எதுவும் தெரியவில்லை. வரலாற்று வானவிளிம்பிலும் புராண மரபின் அரையொளியிலும் சேரர் சோழர் முன்பின்னாக முதன்மை பெற்றிருக்கக் கூடும். கி. மு. 6-ம் நூற்றாண்டுக்கும் 1-ம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்திலும் இதுபோலச் சோழரும் சேரரும் தலைமை நிலைக்கு முன்பின்னாகப் போட்டியிட்டிருத்தல் வேண்டும் என்பதில் ஐயமில்லை.

இலங்கை வரலாறும் இலங்கைத் தமிழர் பண்பாட்டு நிலையும் இக்காலப் போக்கைத் தெளியக் காட்டுகின்றன. ஏனெனில் இக்காலத்தில் அரசமரபிலும், மக்கள் மரபிலும் பாண்டிய நாட்டவரும் இலங்கை நாட்டவரும் ஒரே தமிழ்க் குடிமக்களாக வேற்றுமையில்லாமல் நேசத்தொடர்பு கொண்டிருந்தனர். இலங்கைத் தமிழ்ப் பண்பாட்டில் இந்த அடிப் படைப் பாண்டி நாட்டுப்பண்பை இன்றும் காணலாம் ஆனால் இதே காலங்களில் சோழரும் சேரருமே பெரும்பாலும் இலங்கைமீது படையெடுத்தும், ஆண்டும், புதுத்தமிழ்க் குடியேற்றங்கள் கொண்டுசென்றும் இலங்கை வாழ்வில் புது மாறுதல் சுழி உண்டுபண்ணினர். சேர சோழர் வலுவை எதிர்க்கப் பாண்டியர் உதவி போதாதிருந்த காரணத்தினாலேயே தமிழகம் கடந்த தொடர்பு ஊக்கப்பட்டு அதன் பயனாகத் தென்னிலங்கையின் மொழியும், பண்பாடும், அயல் பண்பாடுகளுடனும் மொழிகளுடனும் கலந்து தமிழ் நாகரிகத்திலிருந்து தோற்றத்தில் ஓரளவு வேறுபட்ட சிங்கள நாகரிகமாகத் திரியலாயிற்று என்னலாம்.

சேரன் செங்குட்டுவன் நாட்களில் சேரர் தமிழகத்தில் முதன்மை எய்தினர். ஆனால் சங்க இலக்கிய காலத்தில் பிற்பகுதியில் மீண்டும் தலைமைப் போட்டி எழுந்து பாண்டியரும், சேரரும், சோழரும் அடுத்தடுத்துத் தற்காலிகமாக முதன்மை எய்தினர். இப்போட்டியில் மூவருமே தளர்ந்துவிட்ட நிலையில் தான் இறுதியில் மூவருமே கோட்டைவிட நேர்ந்தது.

### சோழன் நலங்கிள்ளி-நெடுங்கிள்ளி போராட்டங்கள்

நேரிவாயில் போர் மூலம் செங்குட்டுவன் உதவியால் அரசுரிமை பெற்ற சோழன் நலங்கிள்ளி. கரிகாலன் காலமுதல் தலைநகராய் இருந்த காவிரிப்பூம் பட்டினத்திலிருந்தே அவன் ஆட்சி செய்தான். அவன் பெருவீரன், தானே பாடவல்ல புலமையுடையவன். ஆனால் அவன் போர் வெறியும் இறுமாப்பும் தற்பெருமையும் உடையவன். பண்டைச்சோழரைப்போலவே அவனிடம் சிறந்த நிலப்படையும் கடற்படையும் இருந்தன, அவற்றின் உதவியால் பழம் புகழ்க் கரிகாலனைப்போலத் தமிழக முழுவதும் வென்று வட புலங்களையும் கீழடக்கிப் பேரரசனாக வேண்டும் என்ற பேரவா அவனுக்கு மிகுதியாயிருந்தது.

‘சோணாட்டிலிருந்து வலஞ்சுற்றிப்புறப்பட்டுப்பாண்டிய நாட்டையும், சேரநாட்டையும் நீ வென்று விட்டதால் இனி வடக்கே படையெடுக்கக்கூடும் என்று வடதிசையரசர் நடுங்குகின்றனர்’ என்று கோவூர்கிழார் அவன் கால நிலையைச் சுட்டிக் காட்டுகிறார்.

"குணகடல் பின்னதாகக் குடகடல்
வெண்தலைப் புணரியின் மான்குளம்பு அலைப்ப
வலமுறை வருதலும் உண்டென்று அலமந்து
நெஞ்சு நடுங்கு அவலம் பாயத்
துஞ்சாக் கண்ண வடபுலத்தரசே." (புறம் 31)

இவ்வரசனே பாடிய பாடல்களில் ஒன்று அரச வாழ்வு பற்றிய ஒரு புதுமைவாய்ந்த கருத்தை அறிவிக்கின்றது. அரசுரிமை என்பது தொல்லை வாய்ந்தது. பெரும் பளுவுடையது என்று அவன் அமைச்சர் கூறி வந்தனர். 'குடிகளை வருத்திப் பணம் தேடுபவனுக்குத்தான் அரசு பெருஞ்சுமையாய் விடத் தக்கது. வலிமை வாய்ந்த அரசனுக்கு அது நீரில் மிதக்கும் கிடைச்சுப்போல இலேசானது' என்று அவன் (புறம்—75) கூறுகிறான். தான் வலிமை வாய்ந்த அரசன் என்ற அவன் இறுமாப்பை இது நன்கு வெளிப்படுத்துகிறது.

போருக்கெழும் சமயம் அவன் சூளுரையாகக் கூறிய ஒரு பாடலும் இதே இறுமாப்பைக் காட்டுகின்றது. ஆனால் இதில் கூட அவன் கால உயர்பண்பு தெற்றெனை விளங்குகிறது. 'என் காலைப் பிடித்துக் கெஞ்சினால் இந்நாட்டையும் என்னுயிரையும் கூட என்னால் கொடுக்க முடியும். எதிர்த்து வந்தாலோ, வந்தவர் புலியை மிதித்த குருடன் ஆவார்கள். யானைக்காலில் மிதியுண்ட இளமூங்கில் ஆவார்கள்' என்று அவன் கூறுகிறான்.

"மெல்ல வந்தென் நல்லடி பொருந்தி
ஈ யென இரக்குவராயின், சீருடை
முரசுகெழு தாயத் தரசோ தஞ்சம்,
இன்னுயிர் ஆயினும் கொடுக்குவென்......
உள்ளம் எள்ளிய மடவோன், தெள்ளிதில்
துஞ்சுபுலி இடறிய சிதடன் போல...........
கழைதின் யானைகால் அகப்பட்ட
வன்திணி நீள்முளை போல
உய்ந்தனன் பெயர்தலோ அரிதே!" (புறம் 73)

அவன் ஆட்சியிலும் அவன் பின்னோன் ஆட்சியிலும் சோழரின் அவைப்புலவராய் இருந்தவர் கோவூர்கிழார். பாணர், விறலியர், கூத்தர், பொருநர் என்ற அந்நாளைய நால்வகைப் பாடகரில், அவர் பொருநர் வகுப்பைச் சேர்ந்தவர். பாணர் அரசவையில் சென்று மன்னனைப் பாடுவோர். விறலியர் ஆடல் நங்கையர். கூத்தர் நாடகம் ஆடுபவர். பொருநர் பாசறையிலும் போர்க்களத்திலும் மன்னனுக்கும் வீரருக்கும் எழுச்சி யூட்டிப் பாடுபவர்கள்.

நலங்கிள்ளியின் பொருநராய் இருப்பதால் மன்னர்களுக்கிக் கிடைக்காத ஒரு பெருமை தமக்கே கிடைத்ததாகக் கோவூர் கிழார் ஒரு பாட்டில் நயமாகக் கூறிக்கிறார். அவர் முரசறையக் குணில் எடுத்தாலே அரசர் எல்லோரும் நடுங்கினராம்! ஏனெனில் அது நலங்கிள்ளி படையெழுச்சிக்கு அடையாளமாய் இருந்தது!

கோவூர்கிழாரேயன்றி ஆலத்தூர் கிழார், உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என்ற புலவர்களும் இவ்வரசனைப் பாடியுள்ளனர். இவர்கள் அவன் தற்பெருமையை நயமாகச் சுட்டிக் காட்டினர். 'போர் வெறி போதாது; அன்பும் அருளும் அரசர்க்கு அணி' என்று அவர்கள் அவனை இடித்துரைத்து வந்தது குறிப்பிடத்தக்கது.

பேரவாவுடைய இந்த அரசனுக்கு அவன் ஆட்சியின் முற்பகுதி முழுவதும் அருகிலேயே எதிர்ப்பு இருந்தது. சோழர் குடியின் இளவரசனான நெடுங்கிள்ளி என்பவன் அவனுக்கெதிராக எழுந்து உறையூர் ஆவூர் ஆகிய நகரங்களைக் கைப்பற்றி ஆண்டு வந்தான். நலங்கிள்ளி பெரும் படைகளுடன் புறப்பட்டுச் சென்று அவனை அடக்கி ஒடுக்க முற்பட்டான்.

நலங்கிள்ளிக்கு மாவளத்தான் என்று ஒரு தம்பி உண்டு. நெடுங்கிள்ளிக் கெதிராகப் போரிலீடுபடும்படி அவனை நலங்கிள்ளி அனுப்பினான். நெடுங்கிள்ளி அச்சமயம் கோவூரிலிருந்தான். மாவளத்தான் அந்நகரை முற்றுகையிட்டான். இம்முற்றுகை பற்றிய இரண்டு செய்திகள் நமக்குத் தெரிகின்றன. முதலாவது இளந்தத்தன் என்ற புலவன் நலங்கிள்ளியைப் பாடிவிட்டு, நெடுங்கிள்ளியையும் பாட ஆவூர் வந்தான். அவனை நலங்கிள்ளியின் ஒற்றன் என்றெண்ணி நெடுங்கிள்ளி கொல்ல முற்பட்டான். கோவூர்கிழார் ஓடோடிச் சென்று புலவர்கள் நடு நிலையுரிமையை எடுத்துரைத்து அவனைக் காத்தார் (புறம் 47).

ஆவூர் முற்றுகை நாள் கணக்காக, வாரக் கணக்காக நீடித்தது. நெடுங்கிள்ளி வெளிவந்து போரிடாமல் கோட்டைக்குள்ளேயே அடைபட்டுக் கிடந்தான். இதனால் நகரத்தின் உள்ளிருந்த மக்களுக்கும் உயிரினங்களுக்கும் பெருத்த முட்டுப்பாடு ஏற்பட்டது. கோவூர்கிழார் மீண்டும் நெடுங்கிள்ளியிடம் சென்று வீர அறிவுரை தந்தார். 'வீரமரபில் வந்தவன் நீ, குடிகள் வருந்த இப்படி அடைபட்டுக் கிடப்பது நன்றன்று. போர் புரிய விருப்பம் இருந்தால், ஆண்மையோடு வெளியே வந்து வெற்றி தேடு. இல்லாவிட்டால் நாட்டுக்குரியவனிடம் கோட்டையை விட்டுவிடு' என்றார் (புறம் 44).

நெடுங்கிள்ளி இச்சுடு சொற்களால் உளங்கிளறப் பெற்று வெளியே வந்து போரிட்டான். அவன் தோற்று விடவே, ஆவூரைத் துறந்துவிட்டு உறையூர் சென்று தங்கினான். சில நாட்களுக்குள் நலங்கிள்ளி அங்கும் வந்து முற்றுகை தொடங்கினான். நெடுங்கிள்ளி ஆவூரில் நகருக்குள்ளிருந்து நாட்கழித்தது போலவே, உறையூரிலும் நாட்கடத்தினான். இத்தடவை கோவூர்கிழார் நெடுங்கிள்ளிக்கு அறிவுரை கூறவில்லை. நலங்கிள்ளிக்கே கூறினார்.

> "இரும்பனை வெண்தோடு மிலைந்தோன் அல்லன்,
> கடுஞ்சினை வேம்பின் தெரியலோன் அல்லன்,
> நின்ன கண்ணியும் ஆர்மிடைந்தன்றே! நின்னொடு
> பொருவோன் கண்ணியும் ஆர்மிடைந்தன்றே!
> ஒருவீர் தோற்பினும் தோற்பது உம்குடியே!" (புறம் 45)

"நீங்கள் இருவரும் சோழர், ஆர் அல்லது ஆத்திமாலை அணிந்தவர்களே. எவர் தோற்றாலும் தோல்வியறியாச் சோழர் குடிக்குத்தான் இகழ் உண்டாகும்!" என்று கூறிப் புலவர் இருவரையும் நண்பராக்கினார்.

சங்க இலக்கியப் பாடல்களால் நெடுங்கிள்ளி—நலங்கிள்ளி தொடர்பின் வரலாறு நமக்கு இதுவரைதான் விவரமாகக் கிடைக்கிறது. ஆனால் புலவர் அருமுயற்சியால் ஏற்பட்ட நேசம் நீடித்திருந்ததாகத் தெரியவில்லை. இருவருமே மீண்டும் போர்களில் ஈடுபட்டனர். இப்போர்களில் ஒன்றே காரியாற்றுப் போர். இதே இடத்தில் பின்னும் போர்கள் நடந்ததால் இதை நாம் முதற் காரியாற்றுப் போர் எனலாம்.

### காரியாற்றுப் போர் I

காரியாறு என்பது ஓர் ஆற்றுக்கும் ஓர் ஊருக்கும் பெயர் என்று தெரிகிறது. இது தமிழகத்தின் வட பகுதியில் திருவள்ளூரிலிருந்து காளத்திக்குச் செல்லும் வழியில் இருக்கிறது. இவ்வூர் தற்போது இராமகிரி என்று வழங்கப்படுகிறது. இது தேவார காலங்களில் பாடல்பெற்ற பதிகங்களுள் ஒன்றாக இருந்தது. அதில் கோயில் கொண்ட இறைவன் பெயர் காரிக்கரை உடைய நாயனார் என்பது. ஊரின் பழைய பெயரை இது சுட்டிக் காட்டுகிறது. உண்மையில் இராமகிரி என்பது 'காரி மலை' என்ற தமிழின் இடைக்கால சமஸ்கிருத மொழிபெயர்ப்பேயாகும். காரி என்ற தமிழ்ச் சொல் கருமை நிறம் உடையது என்ற பொருளில் நஞ்சு, நஞ்சுண்ட சிவனார், நஞ்சுண்டு உடல் கரியவனான திருமால், கரு நிறமுடைய இரா

மன் ஆகிய பொருள்கள் உடையது. முற்காலங்களில் அயிரை போன்ற பெயர் மலே, ஆறு, ஊர் ஆகியவற்றுக்கு ஒரே பெய ராய் வழங்கியது போல, இப் பக்கங்களிலுள்ள மலே, ஆறு, ஊர் ஆகிய மூன்றும் ''காரி'' என்று பெயர் பெற்றிருக்க வேண்டும். ஏனெனில் இதனருகே ஓடும் இரட்டை ஆறு களில் ஒன்று காளிந்தி என்றும் மற்ருென்று காலேறு என்றும் அழைக்கப்படுகிறது. இரண்டாவது பெயர் காரியாறு என்ப தன் தெலுங்கு மருஉவேயாகும். காரிமலே என்பது அந்நாள் காளத்தியிலிருந்து திருப்பதி வரை இருந்த மலேயைக் குறித் தது. அயிரை மலேயிலும காரி (இராமன் அல்லது திருமால்) அல்லது காளி (கொற்றவை) இடங்கொண்டிருந்திருக்கக் கூடும். காரிநதி என்ற இப்பெயரின் சிதைவே காரிந்தி அல்லது காளிந்தி என்று மருவியிருத்தல் கூடும்.

நெடுங்கிள்ளிக்கு வடபுல வடுக அரசர்கள் உதவியிருந்த னர் என்று எண்ண இடமுண்டு. போர் சோளுட்டின் வட எல்லேயில் நடைபெற்றது என்பது இதைக் குறித்துக் காட் டும். நலங்கிள்ளியின் கை ஓங்கிவருவது கண்டு நெடுங்கிள்ளி தன் வழக்கமான மடிமையை அகற்றிவிட்டு மூர்க்கமாகப் போர் புரிந்தான். ஏழு நாட்கள் வரை இருதிறத்தாரும் ஒரு வருக்கொருவர் விட்டுக்கொடுக்காமலே கடும்போர் நடத்தி னர். இறுதியில் நெடுங்கிள்ளியும் நலங்கிள்ளியும் நேருக்கு நேராக நின்று மற்போர் புரிந்தனர். இதன்பயனுக நெடுங் கிள்ளி களத்தில் சாய்ந்தான். பின்னுளில் இப்போர் காரண மாகவே அவன் காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி என்று குறிக்கப்பட்டான்.

காரியாற்றிலும் அதனேயடுத்த தமிழக வட எல்லேப் பகுதியிலும் பின்னுட்களில் மற்றும் பல போர்கள் நடைபெற் றன என்பது குறிப்பிடத்தக்கது. அடுத்த தலேமுறையில் காரி யாற்றில் மற்ருெரு போர் நடந்ததனுலேயே, நாம் இப் போரை முதற் காரியாற்றுப் போர் என்று குறிக்கிருேம்.

நலங்கிள்ளி காரியாற்று வெற்றிக்குப்பின் தன் நாட்டை விரிவுபடுத்துவதில் கருத்துச் செலுத்தினுன். பாண்டி நாட் டின்மீது படைஎடுத்து அந்நாட்டில் உள்ள ஏழு அரண்களே முற்றுகையிட்டு வென்று கைக்கொண்டான் (புறம் 33). இவ னிடம் பெருங்கடற்படை இருந்தது. அத்துடன் அவன் காலத்தில் நிலப்படையும் மிகச் சிறந்த முறையில் மூவணிக ளாக ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது (புறம் 225).

அவன் நாட்களில் தமிழகத்தில் அறிவியல் (விஞ்ஞானம்) கலேகள் ஆகிய யாவும் நன்கு தழைத்திருந்தன. அந்நாளேய

வானநூல் அறிவை உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என்ற புலவரும் (புறம் 30), அக்காலக்கடல் வாணிக வளத்தையும், கலத்துறையில் அல்லியம் என்ற ஊமைக் கூத்து வகையையும் கோவூர்கிழார் என்ற புலவரும் (புறம் 33) குறிப்பிட்டுள்ளார்கள்.

## கூடற் பறந்தலை III

மதுரையையடுத்த வெளியிலே நடைபெற்றதாகச் சங்கப் பாடல்களால் நாம் இரண்டு போர்கள் பற்றி அறிகிறோம். அவற்றுள் முதலாவது இன்ன அரசன் காலத்தில் நடைபெற்றதென்று நம்மால் வரையறுக்க முடியவில்லை. ஆனால் அதனைக் கடைச் சங்கத்தின் முற்பட்ட காலப் புலவர்களுள் ஒருவரான பரணர் பாடுவதாலும் அதில் சேரரும் சோழரும் முறியடிக்கப்பட்டதாகக் கூறப்படுவதாலும், அது கட்டாயம் செங்குட்டுவன் காலத்துக்கு முற்பட்டதாகவே இருக்க வேண்டும் என்று கூறலாம். இந்தக் காலத்தில் சேர சோழரே முதன்மை வகித்திருந்ததாக நமக்குத் தெரியவந்தாலும், இக்காலத்துக்கு முன்னும் இடையிலும் பாண்டியன் முதன்மை பெற்ற காலங்கள் இருந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் பெரும் புகழ்ப் பாண்டியனான பல்சாலை முதுகுடுமி இக்காலத்துக்கு முற்பட்ட பழம் பாண்டியனே. தவிர காலவரையறைப்படுத்த முடியாத பல பாண்டியர் பெயர்களை நாம் சங்க இலக்கியத்தின்மூலம் அறிகிறோம். இப்போர் அவர்களுள் ஏதாவது ஒரு அரசன் காலத்ததாக இருந்திருக்கலாம்.

தவிர, பரணர் சேர சோழர்களைப் பற்றியும், எண்ணற்ற வேளிர்களைப்பற்றியும் பிறநாட்டரசர்களைப் பற்றியும் பாடியிருந்தாலும், பாண்டியரைப்பற்றிக் கிட்டதட்ட எதுவுமே கூறவில்லை என்னலாம். பசும்பூட் பாண்டியன் என்ற ஒரு பாண்டியன் பெயரே அவர் பாடல்களில் இடம் பெறுகிறது. பாண்டிநாட்டு வேளிர்களுள் ஒருவனான பழயனும்குறிப்பிடப் படுகிறான். பசும்பூட் பாண்டியன் என்ற இப்பெயரைச் சிலர் தலையாலங்கானத்துப் பாண்டியன் என்று கொள்ள எண்ணுவர். ஆனால் பரணர்காலத்துக்கும் காலநிலைக்கும் இது ஒவ்வாதது. அது முற்பட்ட ஏதோ ஒரு பாண்டியனாகவும், குறிப்பிட்ட போருக்கு அவனே உரியவனாகவும் இருத்தல் கூடும்.

> "மையணி யானை மறப் போர்ச் செழியன்
> பொய்யா விழவின் கூடல் பறந்தலை
> உடனியைந்தெழுந்த இரு பெருவேந்தர்

கடல் மருள் பெரும் படை கலங்கத் தாக்கி,
இரங்கிசை முரசம் ஒழியப் பரந்து அவர்
ஓடுபுறம் கண்ட ஞான்று'' (அகம் 116)

என்பது இப்போர் பற்றிய பழம்பாடல். இரு பெரு வேந்தர்கள் படைகளும் கடல்கள் போலிருந்தன. ஆனால் அவர்கள் முறிவுற்ற பின் தத்தம் போர் முரசங்களைக் கீழே போட்டுவிட்டு ஓடினர் என்று இப்பாடலில் பரணர் கூறுகிறார்.

தலையாலங்கானத்துப் பாண்டியன் காலத்தில் பழயன் மாறன் பாண்டியர் படைத்தலைவனாய் இருந்து அருஞ்செயல்கள் ஆற்றியதாக அறிகிறோம். சேர சோழர் முதன்மைக் காலத்திலும் இம்மரபினரே பாண்டியன் படைத்தலைவனாய் இருந்திருக்க வேண்டுமென்று தோன்றுகிறது, ஏனெனில் பரணரின் மற்றொரு பாட்டுச் சோணாட்டுக்குள்ளேயே வந்து போரிட்ட பழயனைப் புகழ்கிறது.

''வென்வேல்
மாரியம்பின் மழைத்தோல் பழயன்
காவிரி வைப்பில் போர் அன்ன என்
செறிவளை உடைத்தலோ இலனே!''

இரண்டாம் கூடற்பறந்தலைப்போர் தலையாலங்கானத்துப் பாண்டியன் காலத்தை ஒட்டி, அதற்கு ஒரு சிறிதே முன்னதாக நடந்திருக்கவேண்டும். ஏனெனில் அதில் தோல்வியுற்ற அரசன் சோழன் கிள்ளி வளவன். வெற்றி பெற்றவனோ தலையாலங்கானத்துப் போரிலேயே பாண்டியர் படைத்தலைவனாய் இருந்த பழயன்மாறன். இப்போர் பற்றிய பாடலையும் சிலர் தலையாலங்கானத்துப்போர் பற்றியதாகவே கொள்வதுண்டு. ஆனால் இதனைப்பாடிய புலவர் பரணர். இதில் சோழன் மட்டுமே போரில் ஈடுபட்டுத் தோல்வியடைந்தான். தவிர, பாட்டின் இறுதியடி கோக்கோதை மார்பன் என்ற சேரனைச் சுட்டுவதுபோலக் காணப்படுகிறது. சேரன் இப்போரில் பாண்டியன் நண்பனாக இருந்திருத்தல் கூடும். தலையாலங்கானத்துப் போரில் அவன் சோழனுக்கு உதவியாயிருந்தான் என்று அறிகிறோம்.

பழயன் மாறன் இப்போரில் கிள்ளி வளவனை முறியடித்ததுடன் அவனிடமிருந்து யானைகள், குதிரைகள் பலவற்றைக் கைக்கொண்டான் என்று அறிகிறோம்.

இப்போர் பற்றி நக்கீரர் பாடும்பாடல் வருமாறு

''இழையணி யானைப் பழயன் மாறன்
மாடமலி மறுகில் கூடல் ஆங்கண்
வெள்ளத் தானையொடு வேறுபுலத்து இறுத்த

கிள்ளிவளவன் நல்லமர் சாஅய்க்
கடும்பரிப் புரவியொடு களிறுபல வவ்வி
ஏதில் மன்னர் ஊர்கொளக்
கோதைமார்பன் உவகையிற் பெரிதே!" (அகம்346)

இங்கே கோதை மார்பன் என்று குறிக்கப்படுபவன் அப்போது சிறுவனாயிருந்த பின்னாளைய தலையாலங்கானத்துப் பாண்டியனே என்றும் சிலர் கருதியுள்ளனர். இதுவும் ஆராய்தற்குரியதே.

தலையாலங்கானத்துப் போர்

தலையாலங்கானம் என்பது சோழநாட்டில் தற்காலத் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த நன்னிலம் வட்டத்திலுள்ள ஓர் ஊர். பிற்காலங்களில் இது தலையாலங்காடு என்று வழங்கிற்று. தேவார காலங்களில் இது திருநாவுக்கரசரால் பாடப்பட்டுச் சிவநெறிக்குரிய ஒரு திருப்பதியாயிற்று.

சங்க இலக்கியகாலப் போர்களிலே தலைசிறந்த பெரும் புகழ்ப்போர் தலையாலங்கானத்துப் போரேயாகும். அப்போரின் புகழில் ஈடுபட்டு, அதன் வியத்தகு வீரக்காட்சிகளையும், அதன் பேராரவாரத்தையும், அதன்பின் ஏற்பட்ட அமளி குமளிகளையும் கண்டும் கேட்டும் அவற்றை வருணனைகளாகவோ உவமை, அடைமொழிகள் வாயிலாகவோ எடுத்தாளாத புலவர் அந்நாளில் இல்லை என்னலாம். இப்போரின் வெற்றி வீரனான பெரும் பாண்டியன் மீதே அந்நாளைய தலைசிறந்த புலவர்களான நக்கீரரும் மாங்குடி மருதனாரும் சிறு பெருங்காப்பியங்கள் என்று கூறத்தக்க நெடுநல்வாடை, மதுரைக்காஞ்சி ஆகிய பெரும் பாடல்களைப் பாடியுள்ளனர். தவிர அப்போரையும் போர்வலவனான வழுதியையும் பாடிய பிற புலவர்களின் தொகையும் ஏராளம்.

அரசுரிமை பெறும் சமயம் (இரண்டாம்) நெடுஞ்செழியன் வயதுவராத முதிரா இளைஞனாயிருந்தான். பாண்டி நாட்டைக் கைப்பற்றிவிட இதுவே தருணம் என்று மற்ற அரசர்கள் எண்ணினார்கள். அவர்கள் ஒருவர் இருவராகத் தாக்கவில்லை. இரண்டு பேரரசர்களும், ஐந்து வேளிர்களும் சேர்ந்து ஒருங்கு திரண்டு தாக்கினார்கள். எதிர்த்த வேளிர்கள் திதியன், எழினி, எருமையூரன், இளங்கோவேண்மான், பொருநன் ஆகியவர்கள். பேரரசருள் இப்போரிலீடுபட்ட சேரன் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்று அறிகிறோம். போரில் ஈடுபட்ட சோழன் இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளி என்று சிலர் கருதியுள்ளனர். ஆனால் இது பொருத்தமற்றது. அவன் கிள்ளி வளவனாகவே இருத்தல் வேண்டும் என்று கூறலாம்.

ஏனெனில் தலையாலங்கானத்துக்கு முற்பட்ட கூடற்பறந் தலைப்போர் அவன் முயற்சியேயாகும்.

தமிழ் தலைமயங்கிய தலையாலங்கானம் என்று இப்போர்க் களத்தைப் புலவர் குடபுலவியனார் (புறம்19) வருணித் துள்ளார். தமிழகத்து வீரமுழுவதுமே போரில் ஈடுபட் டிருந்தது என்பதையும்; இருபக்கத்தும் தமிழர்களே நிறைந்திருந்தாலும், எருமையூரன் போன்ற வடுகரின் படைகளும் இடை கலந்திருந்தன என்பதையும் இது நினைவூட்டுகிறது. இத்தனை அரசர் பாண்டியரை எதிர்க்க ஒன்றுபட்டாலும் போர் நடைபெற்ற இடம் பாண்டிய நாடன்று, சோணாடே என்பது குறிப்பிடத்தக்கது. சோழனே கூட்டுறவின் இயக்கும் உறுப்பாகவும் தலைமை உறுப்பாகவும் இருந்தான் என்பதில் ஐயமில்லை. படைதிரண்டு வருவதறிந்து பாண்டியன் முன்னேறிச் சென்று சோணாட்டில் தலையாலங் கானத்தருகே எதிரிகளைத் தாக்கியிருக்கக்கூடும்; அல்லது படை யெடுத்த எதிரிகளைமுறியடித்துத் துரத்திச்சென்று தலையாலங் கானத்தை யடைந்ததும், நெருக்கித் தாக்கியிருக்கக்கூடும். எவ்வாறாயினும் பாண்டியன் எழுவரையும் விஞ்சிய வீர முடையவனாய் இருந்தான் என்பது எளிதில் போதரும்.

எதிரிகள் பல திசையினர் ஆதலால் சோணாட்டில் தலை யாலங்கானத்திலேயே அவர்கள் ஒருங்கே கூடிப் புறப்பட ஏற்பாடு செய்திருக்கவேண்டும். அவர்கள் கூடுமிடத்திலேயே நெடுஞ்செழியன் அவர்களைத் துணிவுடன் சென்றெதிர்த்தான் என்பதே பொருத்தமுடையதென்று தோன்றுகிறது.

போர் தொடங்கும் சமயம் பாண்டியன் எவ்வளவு இளைஞ னுயிருந்தான் என்பதை இடைக்குன்றூர் கிழார் என்ற புலவர் நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

"கிண்கிணி களைந்தகால், ஒண்கழல் தொட்டு;
குடுமி களைந்த நுதல், வேம்பின் ஒண்தளிர்
நெடுங்கொடி உழிஞைப் பவரொடு மிலைந்து;
குறுந்தொடி கழித்தகை, சாபம் பற்றி
நெடுந்தேர்க் கொடிஞ்சி பொலிய நின்றோன்—
யார் கொல்?"................(புறம் 77)

"கிண்கிணி யணிந்து விளையாடும் குழந்தை அதை அவிழ்த்து வீரக்கழல் அணிந்திருக்கிறான். பிள்ளைக்குடுமி இப்போதுதான் களைந்திருக்கிறது. அதன்மேல் மரபுச் சின்னமாகிய வேப்ப மாலையையும் போர்ச்சின்னமாகிய உழிஞையையும் சுற்றியிருக்கிறான். கையில் இருந்த காப்பைக் காணோம். அதற்குப்பதில் வில் இருக்கிறது.

இத்தகைய போர்த் தோற்றத்தையுடைய சிறுவன் ஒருவன் தேர் மோட்டைப்பற்றி நிற்கிறானே, அவன் யாரோ?'' என்று புலவர் அழகு நயம்படக் கேட்கிறார். சிறு பிள்ளையாயிருந்தாலும் போர் கண்டு அவன் சிறிதும் இமையாடவில்லை. அதே சமயம் அவன் வெற்றிகூட அவனிடம் பெருமையை உண்டு பண்ணவில்லை' என்றும் புலவர் குறிக்கிறார். 'மகிழ்ந்தன்றும் மலிந்தன்றும் இலனே' என்ற சொற்கள் இந்நிலையைச் சித்திரிக்கின்றன.

''மெய்த் திருவந்துற்றபோதும் வெந்துயர் வந்துற்றபோதும்
ஒத்திருக்கும் உள்ளத்துரவோன்'' (நளவெண்பா)

என்ற தருமனைப் பற்றிய புகழேந்தியார் வருணனையையே இவ்வடிகள் நினைவூட்ட வல்லன.

நெடுஞ்செழியன் படைகள் பெரியனவாயிருந்தாலும் ஏழு படைகள் திரண்ட எதிரியின் படைப்பெருங்கடலை நோக்க, அது மிகச் சிறிதாகவே யிருந்தது. எனவே போர்த் தொடக்கத்தில் எவரும் எதிரிகளின் வெற்றியையே எதிர்பார்த்திருக்க முடியும். ஆனால் பாண்டியன் மதுரைவாயில் வெளியிலுள்ள பொய்கையில் குளித்துத் தாரும் கண்ணியும் படைக்கலங்களும் சூடிப் போர்க்களத்துக்கு வந்தசமயம், அவனுடனிருந்த இடைக்குன்றூர்க்கிழார் ''எதிரிகள் எத்தனைபேர் பிழைப்பார்களோ'' என்றே குறிக்கிறார்!

''மூதூர் வாயில் பனிக்கயம் மண்ணி......
வெம்போர்ச் செழியனும் வந்தனன்—எதிர்ந்த
வம்ப மன்னரோ, பலரே!
எஞ்சுவர் கொல்லோ பகல், தவச் சிறிதே!'' (புறம்79)

இளையன் என்று தன்னை ஏளனமாகக்கருதி, வெற்றி தமதே என்ற இறுமாப்புடன் படையெடுத்த எதிரிகளைக்கண்டு பாண்டியன் கடுஞ்சினம் கொண்டான். ''அவர்களைச் சிதறடித்து அவர்கள் முரசங்களைக் கைக்கொள்வேன், கொள்ளாவிட்டால் நான் கொடுங்கோலனாகுக, புலவர் என்னைப் பாடா தொழிக, இரவலர்க்கு ஈயாத பண்புடையவனாகுக!'' என்று வஞ்சினம் கூறுகிறான். இவ்வஞ்சினம் அவனே இயற்றிய ஒரு புறப் பாடலாக நமக்குக் காட்சி தருகிறது.

''நகுதக் கனரே நாடு மீக்கூறுநர்!
இளையன் இவன் என உளையக் கூறி......
சிறு சொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமம் சிதையத் தாக்கி, முரசமொடு
ஒருங்கு அகப் படேஎன் ஆயின்
குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக!......

> புலவர் பாடாது வரைக என் நிலவரை!......
> இரப்போர்க் கீயா இன்மை யான் உறவே!" (புறம் 72)

**தமிழகம் முன் என்றும் கண்டிராத கம்பலை**

போரில் எதிரிபடைகள் பல கடல்கள் உடைத்தோடி வருவதுபோல ஆரவாரித்த வண்ணம் வந்து நிறைந்தன. பாறைகள்மீது மோதும் பேரலைகள்போல அவை பாண்டியன் படைகள்மீது வந்து வந்து மோதின. ஆனால் ஒரு பகலுக்குள் அவ்வணிகள் யாவும் அலைகள் போலவே சிதறின. பாண்டியன் தேர்ப்படைகளும், யானைப் படைகளும் எதிரிகளின் படைகளை உழுநிலமாக்கி எங்கும் உழுதன. வில்வீரர் வெற்றி விதைகளாகிய அம்புகளை எங்கும் தூவி விதைத்தனர். குதிரை வீரர்கள் பொலி எருதுகள் கதிர்களை மிதித்துத் துவைப்பது போல எதிரிகளின் உடலங்களை எங்கும் சவட்டி அழித்தனர். எதிரிகள் சிதறி ஓடத் தலைப்பட்டனர். கிலியினால் ஒருவர் மீதொருவர் உந்தியுல் முந்தியும் தாறுமாறுகக் குழம்பி ஆர்ப்பரித்தனர்.

அவர்கள் எழுப்பிய இந்த ஆரவாரம் போர்க்களத்துடன் நிற்கவில்லை. நாடெங்கும் பரந்தது. அதுபோன்ற கம்பலையைத் தமிழகம் அதற்குமுன் என்றும் கேட்டதில்லை.அத்துடன் இரண்டாயிரம் ஆண்டு சென்ற பின்னும் தமிழர் காதுகளில் அது இன்னும் ஒலிக்கும்படி சங்க இலக்கியப் பாடல்கள் பல அதனை நமக்கு பதிவுசெய்து தந்துள்ளன.

> "கால் என்னக் கடிதுரா அய்
> நாடு கெட எரிபரப்பி,
> ஆலங்கானத்து அஞ்சுவர இறுத்து,
> அரசு பட அமர் உழக்கி,
> முரசுகொண்டு களம்வேட்ட
> அடுதிறல் உயர் புகழ்வேந்தே!"
>
> (மதுரைக் காஞ்சி 125—130)

என்று போர் வெற்றிகொண்ட மன்னனை மாங்குடி மருதனர் பாராட்டியுள்ளார்.

'பாண்டியன் இளையன், போர் அனுபவமற்ற முதிராச் சிறுவன். அவனை எதிர்த்தவரோ களங்கண்ட காவலர், பேராற்றல்மிக்க பேரரசரும் வீர வேளிரும் ஆவர். அவன் ஒருவன், அவர்கள் எழுவர்! இது கோழமைமிக்க அநீதி, ஆனுல் பேராற்றல் மிக்கவர் அநீதிச்செயல்' என்று அந்நாளைய தமிழர் எண்ணினர். ஆயினும் பாண்டியன் இந்த அநீதியை

யும் ஆற்றலையும் ஒருங்கே சிதறடித்துத் தமிழ் வானில் இருள் கீண்டெழும் ஒரு புது ஞாயிறாகப் பொலிவுற்றான். இதையே,

''ஒருவனை ஒருவன் அடுதலும், தொலைதலும்
புதுவது அன்று, இவ் உலகத்து இயற்கை!
இன்றின் ஊங்கோ கேளலம்!...
பசும் பூட் செழியன்
பீடும் செம்மலும் அறியார் கூடிப்
பொருதும் என்று தன்தலை வந்த
புனைகழல் எழுவர் நல்வலம் அடங்க
ஒருநாள் ஆகிப் பொருது களத்து அடலே!''

(புறப் 76)

என்று ஒரு புலவர் வியந்துரைத்தனர்.

'புலிகளை அகப்படுத்த வேட்டுவர் பொருத்தி வைக்கும் கல் அடார் அல்லது பாராங்கல் பொறி போன்றவன் பாண்டியன் என்பது தெரியாமல் மாற்றார் அவனிடம் வந்து சிக்குண்டனர்' என்று ஒரு புலவர் (குடபுலவியனார், புறம் 19-ல்) அவனைப் பாராட்டினார். 'எதிரிகளாகிய அரசர், வேளிர், வீரர் ஆகியவர்கள் செய்த குற்றத்துக்கு அவர்கள் மனைவியர்கள் தம் கூந்தல் களைந்து கைம் பெண்கள் ஆகும்படி செய்யலாமா?' என்று வேறொரு புலவர் (கல்லாடனார், புறம் 25-ல்) வசை மொழி கூறுவதுபோல இசைமொழி புகன்றார். மற்றும் ஒரு புலவர் (மாங்குடி மருதனார் புறம் 26-ல்,) 'உன்னுடன் போர் செய்தவர்கள் நற்பேறுடையவர்கள். ஏனெனில் தத்தம் முரசங்களை மட்டும் உன்னிடம் தந்துவிட்டு, அவற்றுக்குப் பதிலாகத் தாங்கள் பொன்னுலகம் பெற்றுவிட்டனர்!'' என்று கேலி நயம்படப் புகழ்ந்தார்.

படையெடுப்பாளர்களைத் திருப்பி ஓட்டுவதுடன் பாண்டியன் மனநிறைவு பெறவில்லை. அவர்கள் நாடுகள் தோறும் சென்று தாக்கி அவர்கள் கொட்டம் அடக்கித் தன் ஆற்றலையும் ஆட்சி எல்லையையும் விரிவுபடுத்த எண்ணினான். தலையாலங்கானத்தில் அவனுடன் இருந்து படைத்தலைமை வகித்தவன் பழையன். ஆனால் வேறுபல படைத்தலைவர்களும் அவனிடமிருந்து போர் உடற்றினர். அவர்களில் ஒருவன் அதுகை என்பவன். அவன் தலைமையில் பாண்டியன் ஒரு படையைச் சோழ நாட்டைத் தாக்கும்படி அனுப்பினான். தலையாலங்கானப் போரிலோ அல்லது அதனை யடுத்த தாக்குதலிலோ சோழன் பெரும்படைத் தலைவனும் மிழலைக் கூற்றத்தின் வேளுமான எவ்வியை அதுகை தாக்கிக் கொன்றான் (புறம் 233). அவனுக்குரிய மிழலைக் கூற்றமும் பாண்டிநாட்டின் எல்லையுடன் சேர்க்கப்பட்டது. இச் சோணாட்டுத் தாக்கு

தலுக்குப்பின் பாண்டியன் சேர நாட்டின்மீது படையெடுத் தான். சேரமான் யானைக்கட்சேய் சிறைப்பட்டான். அவன் படைத்தலைவனை அழும்பில்வேள் போரில் மாண்டான். அழும்பில் வேளுக்குரிய நாடும் பாண்டிய நாட்டுடன் சேர்க்கப்பட்டது.

''நல்லூர்க் கெழீஇய
ஓம்பா ஈகை மாவேள் எவ்வி
புனலம் புதவின் மிழலையொடு
பொன்னணி யானைத் தொன்முதிர் வேளிர்
குப்பை நெல்லின் முத்தூறு தந்த
கொற்ற நீள்குடைக் கொடித்தேர்ச் செழிய!

[புறம் 24]

என்ற மாங்குடி கிழாரின் பாட்டு மிழலை, முத்தூற்றுக் கூற்ற வெற்றியையும்,

'அழும்பில் அன்ன நாடிழந்தனரும்'

(மதுரைக் காஞ்சி 345)

என்ற மதுரைக் காஞ்சியுரை அழும்பில் வெற்றியையும் குறித் துள்ளன.

தலையாலங்கானத்துப் போரிலோ, அதற்குப் பிற்பட்ட ஒரு படையெடுப்பிலோ சேரமான் மாந்தரஞ் சேரல் இரும் பொறை சிறைபட்டான். இச்சேரமான், ஒரு பாடல்சான்ற பெரும்புகழ்ப் பேரரசன். அவன் எப்படியோ தன் ஆற்றல் காட்டிச் சிறையினின்றும் தப்பியோடித் தன் நாடு சென்று இழந்த புகழை மீட்டும் பெற்றுவிட்டான். அவனைப் பலபடப் பாராட்டிப் பேசியுள்ள புலவர் பலர். அவருள் ஒருவரான குறுங்கோழியூர் கிழார் (புறம் 17-ல்) சிறைப்பட்டபின் விடு பட்ட அவன் திறத்தையும் ஓர் அருஞ்செயலாகச் சிறப்பித்துப் பாராட்டியுள்ளார். 'குழியகப்பட்ட கொல் களிறு தன் கொம்புகளின் ஆற்றலால் குழிதூர்த்துத் தன் கிளை யினத் துடன் சென்று சேர்தலை' அவன் முயற்சிக்கேற்ற உவமையாக அவர் எடுத்துக் கூறுகிறுர்.

**வீறுமிக்க பேரரசனைப் பாடிய விழுமிய சிறு பெருங்காய்பியம்**

பாண்டியனைச் சிறப்பித்துக் கூறும் சிறு பெருங்காப்பியங் கள் இரண்டினுள், மாங்குடி மருதனாரின் மதுரைக் காஞ்சி யுடன் போட்டியிடுவதன்றி, அதனை விஞ்சிய, விழுமிய சிறு பெருங்காப்பியமாகத் திகழ்வது, நக்கீரனார் பாடிய நெடுநல் வாடையேயாகும். சங்க இலக்கியமென்னும் ஒப்புயர்வற்ற

கலை மாளிகையிலேகூட இதற்கிணையான காப்பிய இலக்கணம் நிறைந்த ஒரு சிறு பெருங்காப்பியம் காணமுடியாது. அதில் நாம் ஒருபுறம் நெடுஞ்செழியன் வெற்றிப் போர்க் களத்திலிருந்து வரும் வரவுக்காகக் காத்திருக்கும் பேரரசியாரின் சோகக் காட்சியை—நள்ளிரவிலே அவள் படுக்கையறையிலேயே சென்று காண்கிறோம். மறுபுறம் போர் வெற்றியின் புகழ் வீறுடைய நெடுஞ்செழியனினும் பெரியோனான மனிதப் பண்புமிக்க பேரரசன் நெடுஞ்செழியனைக் காண்கிறோம். சங்க இலக்கியத்திலேகூட ஓர் அரசன் உள்ளத்தை-அரசியின் உள்ளத்தின் பின்னணியுடன் காணும் இது போன்ற காட்சி பிறிதில்லை என்னலாம். மன்னன் இப்போது வெற்றி மகிழ்ச்சியில் இல்லை. தன்னை வரவேற்கக் காத்திருக்கும் தன் ஆருயிர்த் தலைவியான பேரரசியிடம்கூட இல்லை. போரில் புண்பட்ட வீரரிடமே ஈடுபட்டு நிற்கிறது. நள்ளிரவு, என்றும் பாராமல், இருட்டையும், குளிர் காற்றையும். மழைத் தூறலையும் பொருட்படுத்தாமல் படை வீட்டிலிருந்து புறப்பட்டு மன்னன் படைக்களத்திலே சுற்றுகிறான். யானையின் அறுந்த துதிக்கைகள், வீரரின் குறைபட்ட யாக்கைகள் எங்கும் கிடக்கின்றன. பாண்டில் விளக்கேந்தி ஒருவன் அருகே வருகிறான். விழுப்புண் பெற்ற வீரர், புகழ் பெற்றோர் ஆகியவரை மன்னனுக்குக் காட்டி அறிமுகப்படுத்தும்படி படைப்பெருந்தலைவன் (முன்னோன்) வேலுடன் செல்கிறான். வெண் கொற்றக் குடையை முதியவன் ஒருவன் சற்றுப் பின்னாக நின்று ஏந்திக்கொண்டு வருகிறான். போரில் வீரம் காட்டிய புதுப்படை வீரன் ஒருவன் இளந்தோள்மேல் அவன் வலதுகை கிடக்கின்றது. இடது தோளிலிருந்து நழுவும் மேலாடையை இடது கை பற்றியும், பற்றாமலும் பிடித்திருக்கின்றது.

போர் வெற்றியினால் அவன் உள்ளத்தில் ஏற்பட்ட மகிழ்ச்சியை இறந்தவர், புண்பட்டவர் பற்றிய எண்ணம் அகற்றியிருக்கிறது. ஆனால் பிறருக்கு அதைக் காட்டாது மறைத்து அவன் ஒரு முகமலர்ச்சியை வருவித்துக் கொள்கிறான். காயம் பட்டவர்களிடம் அவன் கனிவுடன் அவர்கள் நோவுபற்றியும், உடல்நிலை வாய்ப்புக்கள் பற்றியும் பேசி ஆறுதல் தருகிறான். புகழ்பெற்றவர்களை அவன் பாராட்டுகிறான்.

இக்காட்சி தமிழிலக்கியத்தில் மட்டுமல்ல, உலக இலக்கியத்திலேயே ஒரு கண் கொள்ளாக் காட்சியாகும்.

ஓடையொடு பொலிந்த வினைநவில் யானை
நீள்திரள் தடக்கை நில மிசை புரள,

களிறு களம் படுத்த பெருஞ்செய் ஆடவர்
ஒளிறுவாள் விழுப்புண் காணிய புறம் போந்து
வடந்தைத் தண்வளி எதிர்தொறும் நுடங்கி.....
பாண்டில் விளக்கின் பருஉக்சுடர் அழல,
வேம்பு தலையாத்த நோன் காழ் எஃகமொடு,
முன்னோன்முறை முறைகாட்ட........
எறிதுளி விதிர்ப்ப,
புடைவீழ் அந்துகில் இடவயின் தழீஇ
வாள்தோள் கோத்த வன் கட் காளை
சுவல்மிசை அமைந்த கையன், முகனமர்ந்து
நூல்கால் யாத்த மாலை வெண்குடை
தவ்வென்றசைஇத் தாதுளி மறைப்ப,
நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்
சிலரொடு திரிதரும் வேந்தன்
பலரொடு முரணிய பாசறைத் தொழிலே!

(பத்துப்பாட்டு : நெடுநல் வாடை: 169-173, 175-177, 180-188)

**திருக்கோவலூர்ப் போர் I : கருவூர் முற்றுகை**

தலையாலங்கானத்துப் போரில் பாண்டியனை எதிர்த்த சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியல்லன், கிள்ளி வளவனாகவே இருக்க வேண்டுமென்று மேலே கூறினோம். கிள்ளிவளவன் வகையிலும் ஆராய்ச்சியாளர் பலவகைப் பட்ட குழப்பங்களை உடையவராய் இருக்கின்றனர். முதலாவது நலங்கிள்ளிக்குப் பின் ஆண்டவன் கிள்ளிவளவன் என்று சிலரும், நலங்கிள்ளிக்கு முன் ஆண்ட அவன் தமையனே கிள்ளிவளவன் என்று சிலரும் கொள்கின்றனர். இரண்டாவதாக இக்குழப்பத்திடையே இன்னொரு குழப்பமாக, கிள்ளி வளவனும் மணிமேகலைக் காப்பியத்துச் சோழன் மாவண் கிள்ளியும் ஒருவனே என்று சிலரும், வேறு வேறு என்று பிறரும் கொள்கின்றனர். ஆனால் பெரும்பாலான ஆசிரியர்கள் கொள்வதுபோல, தலையாலங்கானத்துப் பாண்டியனைச் சிலப்பதிகாரத்து ஆரியபடை கடந்த நெடுஞ்செழியனுக்குப் பின் வந்தவன் என்றும் அவன் பெயரன் என்றும் கொள்வது சரியானால், கிள்ளிவளவன் நலங்கிள்ளிக்குப் பின் ஆண்டவனே என்பதிலும், அவனே மணிமேகலைக் காப்பியத்துக்குரிய மாவண் கிள்ளி என்பதிலும் ஐயமிருக்க முடியாது.

மற்றும் கிள்ளிவளவனும் பழயன்மாறனும் ஈடுபட்ட கூடற்பறந்தலை இரண்டாம் போர் பற்றிய நக்கீரர் பாடல் (அகம் 346) சிலரால் தலையாலங்கானத்துக்கு முற்பட்ட போரைக் குறிப்பதாகவும்,வேறு சிலரால் அதற்குப் பிற்பட்ட

போரைக் குறிப்பதாகவும் கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் அது பழயன் வெற்றியன்று, கிள்ளிவளவன் வெற்றியே என்றும் அவர்கள் கருதியுள்ளனர். பாடியவர் நக்கீரர் என்பதையும் பாட்டின் அடை மொழிகளையும் நோக்க, அப்போர் தலையாலங்கானப் போருக்கு முந்தியதென்றும், வெற்றி பழையனதே என்றும் கொள்ளலாமாயினும், பிந்திய பொருள்கூட கிள்ளிவளவன் ஆட்சிப்போக்குக்கு மாறுபட்டதன்று. ஏனெனில் தலையாலங்கானத்துப் போரால் சேர சோழர் முதன்மை பெரிதும் பாதிக்கப்பட்டு, பாண்டியனே பெரும் புகழடைந்தது உண்மையானாலும், ஒரு தலைமுறைக்குள்ளேயே சேரசோழர் மீண்டும் தலையெடுத்து, முதன்மைப் பதவிக்குத் தாமே போட்டியிடுவது காண்கிறோம்.

சங்கப்பாடல்கள் மூலம் நாம் கிள்ளிவளவனின் திருக்கோவலூர் வெற்றியையும் அவன் கருவூர் முற்றுகையையும் பற்றிக் கேள்விப்படுகிறோம் மணிமேகலையின் மூலம் அவனது இரண்டாம் காரியாற்றுப் போர் பற்றிய விவரம் காண்கிறோம். இவை ஒருங்கு சேர, அவனுக்கு மீண்டும் தமிழக வெற்றி உறுதியாதல் குறிப்பிடத்தக்கது.

மலையமான்காரி தென்னார்க்காட்டு மாவட்டத்தில் தென்பெண்ணையாற்றின் கரையிலுள்ள திருக்கோவலில் இருந்து ஆண்டவன். முள்ளூர் மலைப்பகுதியும் அவன் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. சோழன் ஆரியப் படையெடுப்பை வல்லத்துப் போரில் வென்றதுபோலவே, காரியின் முன்னோரும் இம் முள்ளூர் மலையருகே நடந்த போரில் ஆரியரை வென்றதாக அறிகிறோம். நெடுங்கிள்ளிக்கோ அல்லது சோழரின் வேறு எந்த எதிரிக்கோ உதவிய காரணத்தினாலேயே, கிள்ளிவளவன் காரியை எதிர்த்திருக்கவேண்டும். காரி இப்போரில் கொல்லப்பட்டான். அவன் சிறுவர் இருவரைக் கிள்ளிவளவன் யானைக்காலிலிட்டு இடறி அழிக்கும்படி கட்டளையிட்டான். ஆனால் கோவூர்கிழார் என்ற புலவர் (புறம் 46) அரசனிடம் சோழ மரபின் பெருமையையும், காரி மரபின் வள்ளன்மையையும் எடுத்துரைத்து இதைத் தடுத்தார்.

கிள்ளிவளவனின் அடுத்த செயல் கருவூர் முற்றுகையேயாகும். மலையமானை வென்றபின் அவன் கொங்கு நாட்டின் மீது படையெடுத்து வென்றான். பின் கொங்கு நாடு கடந்து சேரநாட்டின் தலைநகரான கருவூரை முற்றுகையிட்டான். சேரமான் கோட்டைக்குள் புகுந்து தற்காப்பிலே கவனம் செலுத்தினான். வெளியிலுள்ள காவல்மரத்தை சோழன் வெட்டும் ஓசை கேட்டும் அவன் வெளிவராதிருந்தான்.

சோழன் சுற்றுப்புறம் உள்ள ஊர்களும் கழனிகளும் பூங்காக் களும் எரித்துப் பாழாக்க முனைந்தான். அப்போது அவனு டன் இருந்த புலவர் ஆலத்தூர் கிழார் அவனுக்கு அறிவுரை கூறினர். ''புறுவின் இன்னலை விலக்கிய சிபிச் சோழன் மர பில் வந்தவன் நீ! வீரமின்றி ஒதுங்கி வாழும் இவ் அரசனை எதிர்ப்பதும் அதற்காக அழிவு சூழ்வதும் உனக்கு நன்றன்று'' (புறம் 36.) என்று உரைத்தார்.

இறுதியில் சோழன் வஞ்சி முற்றுகையில் வெற்றி பெற் ருன். இவ்வெற்றியைப் பெண்பாற் புலவர் மாறோக்கத்து நப்பசலையார் இரண்டு பாட்டுக்களில் (புறம்: 37, 39.) சிறப் பித்துள்ளார்.

## காரியாற்றுப் போர் II

கிள்ளிவளவன் அல்லது மாவண் கிள்ளியின் ஆட்சியின் பிற்பகுதியில் சேரரும் பாண்டியரும் மண்ணாசையால் உந்தப் பட்டுச் சோழ நாட்டின் மீது படையெடுத்தனரென்றும், சோழன் தம்பியால் காரியாற்றில் மாற்றரசர் இருவரும் முற் றிலும் முறியடிக்கப்பட்டனரென்றும் மணிமேகலைக் காப்பி யம் நமக்குத் தெரிவிக்கிறது.

முதற் காரியாற்றுப் போரைப்போலவே இப்போரும் தமிழக வடஎல்லையிலேயே நடைபெற்றது என்பது வியப்புக் குரியது. ஏனெனில் எதிரிகள் இருவருள் பாண்டியன் தென் திசையிலும் சேரன் மேல் திசையிலும் இருந்தனர். சோழன் தமிழகத்தில் அடைந்துவரும் முதன்மையை வடபுல அரச ருடன் சேர்ந்தேனும் சேர பாண்டியர் ஒடுக்க நினைத்திருத்தல் கூடும் என்பதே பொருத்தமாகத் தோற்றுகிறது.

எஞ்சா மண் நசைஇ இகல்உளம் துரப்ப
வஞ்சியி னிருந்து வஞ்சி சூடி
முறஞ்செவி யானையும் தேரும்மாவும்
மறங்கெழு வயவாள் வயவரும் மிடைந்த
தளைத்தார்ச் சேனையொடு மலைத்துத்தலை வந்தோர்
சிலைக்கயல் நெடுங்கொடி நெடுவேல் தடக்கை
ஆர்புனை தெரியல் இளங்கோன் தன்னால்
காரியாற்றுக் கொண்ட காவல் வெண்குடை
வலிகெழுதடக்கை மாவண்கிள்ளி!

(மணிமேகலை XIX 119—127.)

## குளமுற்றத்துப் போர்

இரண்டாம் காரியாற்றுப் போருக்குப் பின் கிள்ளிவள வன் பாண்டியரையும் சேரரையும் அவர்கள் நாட்டுக்குத்

துரத்திச் சென்றிருக்க வேண்டும். சேர நாட்டில் குளமுற்றம் என்ற இடத்தில் நிகழ்ந்த ஒரு போரில் அவன் உயிர் இழந்தனனுகலாம். குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் என்று பின்னுளில் அவனுக்கு வழங்கிய பெயர் இதனைக் காட்டுகிறது.

குளமுற்றம் ஒரு போர்க்களத்தின் பெயரன்று, சோழன் சென்று தங்கியிருந்த ஓர் இடப் பெயரே என்று கருதுபவரும் உண்டு.

## திருக்கோவலூர்ப் போர் II

பேரரசுகளின் வல்லமைப் போட்டிகளிடையே சிறிய அரசுகளும் அவற்றை ஒத்த முக்கியத்துவம் பெறுவது இயல்பு. சங்ககாலத் தமிழக வேளிர் வகையில் இது முற்றிலும் உண்மையாகும்.

அதியமான் மரபினர் சங்ககாலத்தில் மட்டுமின்றி, பிற்காலச் சோழ பாண்டியப் பேரரசர் ஆட்சியிலும் வலிமை வாய்ந்த சிறு வல்லரசாய் இருந்தவர்கள். சங்ககாலத்தில் அதியமான் நெடுமானஞ்சி தமிழகத்தின் தலைசிறந்த பெண் பாற் புலவரான ஔவையாரை அவைப் புலவராகவும், அமைச்சரது நிலையில் அறிவுரையாளராகவும், தன் அரசியல் தூதராகவும் கொண்டிருந்தான். அவன் தலைநகர் தகடூர் என்பது, அது இந்நாளில் சேலத்திலுள்ள தருமபுரிக்கு அருகில் இருந்ததென்று தோன்றுகிறது. இன்று பாழுங்கோட்டையாகக் கிடக்கும் அதமன் கோட்டை என்ற பெயர் அதியமான் கோட்டை என்பதன்மரூஉவே என்று தெரியவருகிறது.

அதியமானைப் போலவே வலிமை வாய்ந்த மற்ருெரு வேள் மலையமான். அவன் தற்காலத் தென்னூர்க்காட்டு மாவட்டத்தில் தென்பெண்ணை ஆற்றின் கரையிலுள்ள திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டிருந்தான். அவன பெயர் காரி. இந்தக் காரி கிள்ளிவளவனல் கொல்லப்பட்ட காரியானல், கிள்ளிவளவன் ஆட்சியோ, தலையாலங்கானத்துப் பாண்டியன் ஆட்சியோ நாம் மேலே கொண்டதைவிடப் பிற்பட்டதாயிருக்க வேண்டும். ஆயின் இந்தக் காரி அவன் மரபில் பின் வந்தவனுகவும் இருக்கலாம்.

அதியமான் தன் நாட்டை விரிவுபடுத்தும் எண்ணத்துடன் கோவலூர் மீது படையெடுத்தான்.

கோவலூர்ப் போரில் அதியமான் வெற்றி கண்டான். காரி நகர் விட்டு ஓடினன். கோவலூர் அதியமான் நெடுமானஞ்சியின் ஆட்சிக்குள்ளாயிற்று.

### தகடூர்ப் பெரும்போர்

கோவலூர்ப் போரில் தோற்றோடிய காரி சேரனிடம் தஞ்சமடைந்தான். இக்காலச் சேரன் பதிற்றுப்பத்தின் எட்டாம் பத்துக்குரிய பெருஞ்சேரல் இரும்பொறை ஆவன். அவன் இச்சமயம் தன் நாட்டெல்லையில் இருந்த வலிமை வாய்ந்த வேளான ஓவியர் தலைவன் ஓரியை வெல்லவும், அவனுக்குரிய கொல்லி மலையைக் கைக்கொள்ளவும் திட்டமிட்டிருந்தான். காரி சேரன் படைத் தலைமையில் தானே சென்று ஓரியைத் துரத்திவிட்டுக் கொல்லி மலையைச் சேரனுக்குச் சேர்ப்பித்தான். முன்பு தோற்றோடிய காரி சேரனிடம் தஞ்சம் புகுந்தது போலவே, ஓரி இப்போது அதியமானிடம் தஞ்சம் புகுந்தான். அதன்மீது சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறையும் மலையமான் காரியும் சேர்ந்து அதியமான் தகடூர் மீது படை யெடுத்தனர்.

அதியமானுக்கும் ஓரிக்கும் உதவியாகப் பாண்டிய அரசனும் சோழ அரசனும் வந்து துணை தந்தனர் என்று பதிற்றுப் பத்தின் பதிகம் கூறுகிறது.

> 'கொல்லிக் கூற்றத்து நீர்கூர்மீமிசை
> பல்வேல்தானை அதிகமானோடு
> இருபெரு வேந்தரையும் உடன்நிலைவென்று
> முரசும்குடையும் கலனும் கொண்டு
> உரைசால் சிறப்பின் அடுகளம் வேட்டு
> துகள்தீர்மகளிர் இரங்கத் துப்பு அறுத்துத்
> தகடூர் எறிந்து..........'' (பதிற்: பதிகம் 3—9)

என்று சேரன் அடைந்த பெரு வெற்றியைப் பதிகம் சற்று விரிவாகவே கூறுகிறது. பாட்டு மூலத்திலும்,

> ''வெல்போர் ஆடவர் மறம்புரிந்து காக்கும்
> வில்பயில் இறும்பில் தகடூர் நூறி''

என்ற அடிகள் இவ் வெற்றியைக் குறிக்கின்றன.

இப்போரைப்பற்றிச் சங்க இலக்கியம் என்ற பாடல் திரட்டில் சேராமல், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற தனிப் பாடலான தகடூர் யாத்திரை என்ற பாட்டு ஆக்கப்பட்டிருந்தது என்று அறிகிறோம். இது நமக்கு முழுதும் கிடைக்கவில்லை. ஒரு சில பாக்களே கிடைத்துள்ளன. சங்கப்பாடல்களைப் போலவே இதிலும் பாடல்கள் ஒன்றுக்கு மேற்பட்ட புலவர்களால் பாடப்பட்டன என்று தோன்றுகிறது. பாடிய புலவர்களுள் ஒருவர் பதிற்றுப்பத்தில் இச் சேர மன்னனைப் பாடிய அரிசில்கிழாரே என்பது குறிக்கத்தக்கது.

தகடூர்ப் போர்பற்றிய தகடூர் யாத்திரை தரும் வரலாற்றுக்கும், பதிற்றுப்பத்துப் பதிகத்தில் கண்ட வரலாற்றுக்கும் இடையே சில முக்கிய கூறுகளில் வேற்றுமைகள் உள்ளன. பதிற்றுப் பத்துத் தகடூரில் போர் புரிந்த தலைவன் அதிகமான் என்று மட்டுமே குறிக்கின்றது. ஔவையார் பாடல்கள் மூலம் இது நெடுமான் அஞ்சி என்று தோன்றுகிறது. ஆனால் தகடூர் யாத்திரையில் அது அவன் மகன் எழினி என்று கூறப்படுகிறது. தவிர பதிற்றுப்பத்தின் பதிகம் இரண்டரசர் உதவி பற்றிக் குறிக்கிறது. மற்றப் பாடல்களில் அக் குறிப்பு இல்லை.

தகடூர் முற்றுகை அஞ்சி காலத்திலும் சில நாட்களுக்குப் பின் மகன் காலத்திலும் இரண்டு தடவை நடந்ததோ என்று கருத இது இடம் தருகிறது. முதல் முற்றுகையில் அஞ்சி இறந்தான். இதை ஔவையார் பாடியுள்ளார். சேரமான் வெற்றி பெற்றாலும் நாடு நகர்களை அழிக்கவில்லை. நாட்டைத் தன் நாட்டுடன் சேர்த்துக் கொள்ளவில்லை. இரண்டு அரசர்களும் சேர்ந்து படையெடுப்பில் அதிகமானுக்கு உதவி செய்த போர் இதுவேயாதல் வேண்டும். இரண்டாவது முற்றுகை சேரன் ஒருவனால் மட்டுமே நடத்தப்பட்டது. அதன் வெற்றியின் பின்பே கோட்டையழிக்கப்பட்டு, நாடு கைக்கொள்ளப்பட்டதாகல் வேண்டும்.

எழினியின் தலைமையில் நடைபெற்ற கோட்டைப் பாதுகாப்புப் போரில், அவன் படைத்தலைவன் பெரும்பாக்கன் என்ற ஒரு வீர இளைஞன் என்று அறிகிறோம். அவன் எதிரி படைகளைக் கோட்டைக் குள்ளிருந்து தாக்கவில்லை. துணிச்சலுடன், கோட்டைக்கு வெளியே படையுடன் வந்து எதிர்த்தான். அத்துடன் இறுமாப்புடன் தன் படையின் முன் வந்து நின்று எதிரி படைகளை எதிர்பார்த்து நின்றான். சேரனுடன் களஞ் சென்றிருந்த அரிசில் கிழார், பொன் முடியார் என்ற இரு புலவர்களும் அவனை அரசனுக்குச் சுட்டிக் காட்டிப் பேசிய பேச்சுக்களையும் போர் விவரங்களையும் தகடூர் யாத்திரை நமக்கு நேர்முகக் காட்சிகளாகத் தருகின்றன.

'அதோ கருந்தாடியுடைய அந்த அஞ்சா நெஞ்சன் தன் கையில் உள்ள வேலையும் நம்மையும் பார்த்து இறுமாப்புடன் சிரிக்கிறான்,' என்கிறார் ஒரு புலவர். 'அந்த வீர இளைஞனால் வீறுமிக்க யானைகளைக்கூட வீழ்த்த முடியும் என்று தோற்றுகிறது' என்கிறார் மற்றொரு புலவர்.

முதல் நாளிலேயே கோட்டைக்கு வெளியிலுள்ள போர் முடிந்து விட்டது. தகடூர்ப் படைகள் பேரழிவுடன் கோட்

டைக்குள் பின் வாங்கின. சேர வீரர்கள் காவல் காட்டை அழித்தனர். மறுநாள் கோட்டைக்குள் சென்றனர்.

போரின் நேர்முகக் காட்சியாக நமக்குக் கிட்டியுள்ள தமிழ்ப் பாடல் தகடூர் யாத்திரை ஒன்றே என்னலாம். ஆனல் அது நமக்கு அரைகுறை வடிவிலேயே கிடைத்துள்ளது.

கானப் பேரெயில் அழிவு:

கானப் பேரெயில் என்பது பாண்டியநாட்டில் பண்டைக் காலத்தில் நிலவிய ஒரு வலிமை வாய்ந்த கோட்டை. கானப் பேர் என்பது இந் நாளைய காளையார்கோயிலே என்று ஆராய்ச்சியாளர் முடிவு கண்டுள்ளனர். அதன் கோட்டை மதில்கள் வெல்ல முடியாதவை என்று சங்க காலங்களில் கருதப் பட்டிருந்தன. அதன் தலைவனான வேங்கை மார்பன் இது பற்றிப் பெரிதும் தருக்குடையவனா யிருந்தான். பாண்டியன் உக்கிரப் பெருவழுதி அதை வென்று வேங்கை மார்பன் தருக்கை அடக்கினன். இக்காரணத்தாலேயே அவன் கானப் பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி என்றும், கானப் பேர் தந்த உக்கிரப் பெருவழுதி என்றும் அழைக்கப்பட்டான்.

கானப் பேர் எயில் எறிந்த வெற்றியை ஐயூர் மூலங்கிழார் என்ற புலவர் (புறம் 21ல்) பாடியுள்ளார். பழுக்கக் காய்ச்சிய இரும்பில் சுவறிய நீரை யாரும் இரும்பிலிருந்து மீட்க முடியாது. கானப் பேரெயிலையும் அதுபோலவே பாண்டியனிடமிருந்து மீட்க முடியாது என்று வேங்கை மார்பன் மறுகினன் என்று புலவர் கூறுகிருர். புலவர் பலர் அவனைப் பாடினாலும் அப்பாடல்களின் புகழ் மாட்சி கடந்து அவன் வெற்றி மாண்புடையதென்றும் அவர் அவனைச் சிறப்பிக்கிருர்.

சங்க காலப் பாண்டியருள் கடைசிப் பாண்டியன் என்று இவன் கருதப்படுவதுண்டு. தமிழக வாழ்வில் ஏதோ ஒரு மாறுதல் இவனுக்குப் பின் சங்கம்நீடிக்காமல் செய்திருக்க வேண்டும்.

அக நானூற்றை உப்பூரி கிழகர் மகன் உருத்திர சன்மனல் தொகுக்கும்படி செய்த பாண்டியன் இவனே என்றும் கருதப்படுகிறது. நற்றிணையும் குறுந்தொகையும் அவன் காலத்துக்கு முன்பே தொகுக்கப் பட்டிருந்தன என்று தெரிய வருகிறது. (பக். 89. தொகை நூல்களின் கால முறை: இலக்கிய தீபம்: எஸ். வையாபுரிப்பிள்ளை)

கானப்பேர் தந்த உக்கிரப் பெருவழுதியும் சேரமான் மாரி வெண்கோவும் இராசசூயம் வேட்ட பெரு நற்கிள்ளியுடன் ஒருங்கிருந்த காட்சியை ஔவையார் (புறம் 367) பாடியுள்ளார்.

## கழுமலப் போர்

சங்க காலத்திறுதியிலே யிருந்த சோழன் செங்கணான் சேரமான் கணைக்கால் இரும்பொறையுடன் கழுமலத்தில் போர் புரிந்ததாக அறிகிறோம். கணைக்கால் இரும்பொறை சோழனது குடவாயில் கோட்டத்தில் சிறைப்படுத்தப் பட்டதாகவும், நீர் கேட்டபோது சிறை காவலர் அவனை மதியாது காலந் தாழ்த்ததால் அவன் தன்மான உணர்ச்சிகொண்டு உணவுநீர் மறுத்து உயிர் விட்டான் என்றும் தமிழ் மரபுரை கூறுகிறது. ஆனால் கணைக்கால் இரும்பொறையின் பாடல் ஒன்று (புறம் 74) சங்க இலக்கிய எல்லையிலேயே அவன் இச் சமயம் கூறிய மாள்வுரையாகக் காட்சி தருகிறது.

மற்றொரு மரபு சேரமானை விடுவிப்பதற்காகப் பொய்கையார் என்னும் புலவர் கழுமலப் போர் பற்றிக் களவழி என்ற ஒரு பாடல் இயற்றியதாகக் கூறுகிறது. ஆனால் களவழி இயற்றிய பொய்கையார் சங்க இலக்கியத்திலேயே சேரன் கோக்கோதை மார்பனைப் பாடிய பொய்கையார் அல்ல வென்றும் வரலாற்றாசிரியர் பலர் மறுக்கின்றனர்.

செங்கணான் எழுபதுக்கு மேற்பட்ட சிவன் கோயில்களும், சில திருமால் கோயில்களும் தமிழகம் எங்கும் கட்டியதாகவும் திருமங்கையாழ்வார் குறித்துள்ளார்.

செங்கணான் சங்ககாலத் தமிழகத்தின் கடைசிச் சோழனாயிருத்தல் வேண்டும். ஆராய்ச்சியாளர் பலர் அவனை ஐந்தாம் நூற்றாண்டினன் என்று கருதுகின்றனர். இங்ஙனம் கருதுவதற்குச் சரியான காரணம கிடையாது. கோயில்கள் சங்க காலத்தில் கட்டப்பட்டிருக்க முடியாது என்ற அவர்கள் கருத்தே இதற்கு வழி வகுத்தது. இம்மறுப்புச் சங்ககாலத் தொடக்க நிலைக்கே பொருந்தும், கடைசிப் பகுதிக் கன்று என்னலாம்.

## களப்பிரர் படையெடுப்பு

சங்ககால இலக்கியமரபு, பண்பாட்டு மரபு ஆகிய இரண்டும் கி. பி. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி. பி. 5-ம் நூற்றாண்டுக்குள் தடமில்லாமல் அழிந்தன என்னலாம். சங்க இலக்கியங்கள் அதன்பின் ஒரு சில புலவர்களுக்குள்ளாகப் பூட்டிவைக்கப்பட்டே பேரளவில் அழிந்து ஒரு சிறு பகுதியளவில் நம்மை வந்தெட்டியுள்ளன. சங்கத்துக்குப் பிற்பட்ட இலக்கியத்தில் கூட முன்னை மரபு பேணிய இலக்கிய மரபு தேய்ந்து தேய்ந்து வந்ததால், அதிலும் மிகச் சிறு பகுதியே

நம்மை வந்தெட்டியுள்ளது. மரபிலும் பண்பிலும் மிகுதிமாறு பட்ட இலக்கியமே தழைத்துள்ளது. மக்கள் பண்பாடும் சங்க காலத் தமிழர் இனமறிய முடியாத நிலையில் மாறியுள்ளது.

இப் பெருமாறுதலுக்குக் காரணமான அரசியல் நிகழ்ச்சி களப்பிரர் படையெடுப்பே ஆகும். இக் களப்பிரர் யார், என்ன காரணமாகத் திடுமெனத் தமிழகத்துக்குள் படை யெடுத்தனர் என்பது இன்னும் ஆராய்ச்சிக்குரிய செய்தியா கவே இருக்கிறது. ஆனால் அவர்கள் தமிழகத்தின் வட எல்லை யில் இன்று கன்னட நாடு என்றும் தெலுங்கு நாடு என்றும் அழைக்கப்படும் வடுக நாட்டின் தென் பகுதியிலிருந்து தெற்கு நோக்கிச் சாய்ந்த நாடோடிக் குடிகளாவர். அவர்கள் படை யெடுப்பும் ஆதிக்கமும் கி. பி. 250- க்கும் கி. பி. 550-க்கும் இடைப்பட்டவை

களப்பிரர் தமிழ்ப் பண்பாட்டுக்கு முற்றிலும் அயலான வராய் இருந்தனர் என்பதை நாம் ஒத்துக்கொள்ள முடியும். ஏனெனில் படையெடுப்புக்குப் பிற்பட்ட தமிழர் ஆதாரங்கள் அவ்வாறே குறிக்கின்றன. அவர்கள் பெரிதும் சமண சமயத்த வராய் இருந்தனர் என்றும் அறிகிறோம். அசோகன் புத்த சமயத்தையே இலங்கை வரை பரப்பினாலும், சமண சமயமும் அவன் காலத்துக்குள்ளேயே மேல் வடுக நாடு அல்லது தற்கா லக் கன்னடநாடுவரை பரவியிருந்தது. புத்த சமயமோ பெரி தும் கீழ்கரை வழியாகவே வந்தது. களப்பிரர் கன்னடப் பகு தியிலிருந்தே வந்தனர் என்பதை இது காட்டுகிறது.

பதிற்றுப் பத்துச் சேரர்களில் ஒருவன் ஆடுகோட் பாட் டுச்சேரலாதன். அவன் தண்டாரணியம் என்ற வடுக புலக் காடுகளை வென்றான் என்று அறிகிறோம். இதுபோலவே ஆந் திரரின் தென்திசை ஆட்சித் தலைவரும், கரிகாலன் காலமுதல் சோழரும், இப் பகுதியில் நிலையான குடி வாழ்வு நிறுவப் பாடு பட்டனர். பிற்பட்ட சங்ககாலச் சோழர் பலர் நாட்களில் இந் நாடோடிகளின் உதவியே போர்களை வடஎல்லைக்குக் கொண்டு வந்திருந்தன என்று கண்டோம். கி. பி. 250 ல் இப் பகுதியின் முத்திசையிலும் பேரரசுகள் சரிந்தன. அதே சமயம் கி. மு. 250 முதலே விந்தியமலைக்கு அப்பாலிருந்தும், சிந்து ஆற்றுக்கு அப்பாலிருந்தும் பண்டை ஆரியரை ஒத்த நாடோ டிகள் மேலே இந்தியா, நடு இந்தியா கடந்து தெற்கு நோக்கி நெருக்கினர். இவ்வுந்துதலின் பயனாகவும் முன்னைய எதிர்ப்புக் களின் பயனாகவும் வளமான தமிழகத்தின்மீது சரிந்த வடுக நாடோடிக் குழாத்தினரே களப்பிரர் ஆவர்.

காஞ்சியில் சோழர் ஆட்சிச் சரிவின் பின் எழுந்த புது ஆட்சியாளரே ஆந்திரர்கீழ்ச் சிற்றரசராக இருந்த பல்லவர். இவர்கள் ஆட்சி தொடங்கியது கி. பி. 250 லேயே. அதுவே முதலில் களப்பிரர் தாக்குதலால் சரிவுற்றுச் சிலகாலம் வடக்கே ஒதுங்கி நின்றது. விரைவில் சோணுடும், பாண்டி நாடும் இதே தாக்குதலுக்குள்ளாயின.

இடைக்காலப் பாண்டியப் பேரரசருக்குரிய ஆதாரங் களான வேள்விக்குடிச் செப்பேடுகளும் சின்னமனூர் செப்பேடு களும் இக்களப்பிரர் படையெடுப்புப்பற்றியும் அதனுல் ஏற் பட்ட தமிழரசுகளின் அழிவைப்பற்றியும் நமக்குக் கூறுகின் றன. களப்பிரர் படையெழுச்சிக்கு முன் ஆண்டதாகப் பல் சாலை முதுகுடுமியையும் தலையாலங்கானத்துப்பாண்டியனையும் மட்டுமேஅவை குறிப்பிடுகின்றன.

''தலையாலங் கானத்தில் தன்னெக்கும் இருவேந்தரைக்
கொலைவாளில் தலைதுமித்துக் குறைத்தலையின் கூத்
தொழித்தும்,
மாபாரதம் தமிழ்ப்படுத்தும், மதுராபுரிச் சங்கம் வைத்தும்,
மகாராசரும் சார்வ பௌமரும் மகீமண்டலம் காத்திகந்த
பின்''

என்று சின்னமனூர்ச் செப்பேடுகளும்

'பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி' வேள்விக்குடி என்னும் ஊரைக் கொற்கை கிழான் நற்கொற்றன் என் பானுக்குத் தர, அவன் அதை

நீடு புக்தி துய்த்த பின்,
அளவரிய அதிராசரை அகல நீக்கி அகலிடத்தைக்

''களப்பிரனெனும் கலியரசன் கைக் கொண்டதனை
இறக்கிய பின்...........
'கடுங்கோனெனும் கதிர்வேல் தென்னன்''

என்று வேள்விக்குடிச் செப்பேடுகளும் கூறுகின்றன.

ஆனுல் களப்பிரர் வடுக நிலத்திலிருந்து வந்த தமிழினத்த வரே யன்றி அயலினத்தவரோ, அயல் மொழியினரோகூட அல்ல என்பதை இவ்வாதாரங்களின் தொனியே காட்டு கின்றன. அவர்கள் அயல் பண்பும் அயல் சமயமும் குறிக்கப்படு கிறது. அயல் மொழி குறிக்கப்படவில்லை. அயல் சமயம் என் பது சமய நூல்களாலன்றித் தெரியவில்லை. இன்று களப்பிரர் யார் என்று தெரிய வராததும் இதனை வலியுறுத்தும். இங்கி லாந்தில் பண்டை ஆங்கிலோ சாக்ஸனியருடனும், பிரஞ்சு

மக்களுடனும் டேனியர் கலந்துவிட்டதுபோல, அவர்களும் தமிழருடன் இரண்டறக் கலந்து விட்டனர். அவர்களால் தமிழகத்துக்கு ஏற்பட்ட ஒரேகுறை பண்டைத் தமிழர் உயர் நாகரிக மரபும், பண்பாட்டு மரபும் இன்றுவரை முற்றிலும் மீளமுடியாமல் மரம் தடுமாறிப் போனதேயாகும்.

களப்பிரர் ஆட்சி கலியாட்சி என்றும் அயலாட்சி என்றும் பிற்கால நூல்கள் மிகைப் படுத்தியது சமய வேறுபாடு காரணமாக மட்டுமே. களப்பிரர் படையெடுப்பு மக்களிடையே ஒரு சமுதாய மாற்றமாகவும், பண்பாட்டு மாற்றமாகவும், சில இடங்களில் ஆட்சி மாற்றமாகவும் இருந்ததேயன்றி. ஒரே அழிவாக இருந்ததில்லை. சங்க காலத்துக்குச் சிறிது பிற்பட்ட பாண்டி நாட்டிலேயே மாணிக்கவாசகர் வாழ்ந்து இறவாப் பாடல்கள் பாடியுள்ளார். கல்லாடர், திருமூலர் வாழ்ந்ததும், சேந்தன் திவாரம் முதலிய புதுநூல்கள் எழுந்ததும், சீவக சிந்தாமணி முதலிய புதிய சமணகாவியங்கள் எழுந்ததும் இக்காலத்திலேயேதான். சைவ நாயன்மார், வைணவ ஆழ்வார்களில் முற்பட்ட சிலர் இக்காலத்தவரே. நமக்கு முழு விவரம் தெரியாவிட்டாலும், கி. பி. 5ம் நூற்றுண்டு வரை வலி குன்றியவராகவோ வலியுடையவராகவோ பாண்டிய சோழர் இக் காலங்களிலும் ஓரளவு ஆட்சிசெய்யாமலில்லை. அரசியலில், களப்பிரர் எழுச்சி ஓரிரு தலைமுறை ஆட்சிக்கும், பொதுவாக தமிழக முதன்மைப் போட்டியின் நலிவுக்குமே காரணமா யிருந்திருக்க வேண்டும்.

வேள்விக்குடிச் செப்பேடு, சின்னமனூர்ப்பட்டயம் ஆகியவற்றின் வாசகங்களை நோக்க, பாண்டி நாட்டில் பாண்டியன் கடுங்கோன் ஆட்சியிலேயே களப்பிரர் அரசு கைக் கொண்டனர் என்றும், அவனாலேயே அது மீண்டும் கைப்பற்றப்பட்டதென்றும் எண்ண இடமுண்டு. அத்துடன்,

"துன்னு சேனையில் துளங்கிய ஒருகரு நாட
மன்னன் அன்ன நான் வதிந்தருள் தென்னனை ஓட்டிக்
கன்னிமண்டலம் கொண்டு அமண் கையர் கை விழுந்து
முன்னம் நீடிய வைதிக நெறியையும் ஒழித்தான்"

என்று திருவிளையாடற்புராணப் பாடல் கூறுவதும் இதனை வலியுறுத்துகின்றது.

## 8. பேரரசுப் போட்டி

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் தமிழகத்தின் பேரரசு வளர்ச்சிக்குரிய போட்டி தமிழகத்துக்குள்ளேதான் இருந்தது. தமிழகம் கடந்து வேறு புறப் போட்டி இருந்ததில்லை. ஏனெனில் தமிழகத்துடன் ஒத்த, ஒருவேளை தமிழகத்துக்கு அடுத்த படியான பழமையான புற உலகப் பேரரசுகள் எகிப்திய, ஹித்தைத்திய, அசிரிய, சீனப் பேரரசுகளே. இவற்றுடன் தமிழகம் வாணிகம், கலை, நாகரிகம் சார்ந்த நேசத்தொடர்பே கொண்டிருந்தது. ஆனால் நெடியோன் காலத்தில் முதல் முதலாகக் கீழ் திசையில் கடல்கடந்த கடாரத்தின் பேரரசுப் போட்டி எழுந்தது. அதன்பின், கடைச்சங்க காலங்களில், புத்தருக்கு முற்பட்டும் பிற்பட்டும், வடகிழக்கே, ஆந்திர, கலிங்க, மகதப் பேரரசுகள் தொடக்கத்தில் பேரரசுப் போட்டியும், பின் நேசத் தொடர்பும் கொண்டிருந்தன. அந்நாளைய சூழ் நிலையே இந்நேசத் தொடர்புக்குப் பெரிதும் உதவிற்று.

இந்திய மாநிலத்தில் நாகரிகக்கொடி தமிழகத்திலிருந்து கிழக்குக்கரை யோரமாகவே படர்ந்து செல்வது காணலாம். இதே பண்பைத் தமிழினமொழிகளின் எல்லையும் காட்டுகிறது. அந்த எல்லை மேற்கே குறுகியும், கிழக்கே நீண்டும் கிடக்கிறது. வடமேற்கும் மேற்கும் நாகரிகத்திலும் பண்பாட்டிலும் இன்றளவும் படிப்படியாகப் பிற்பட்டேயுள்ளன. இதன் காரணங்களை நாம் நில இயலிலும் வரலாற்றிலுமே காணவேண்டும். பண்படா அயலினங்களின் வரவுக்கு வடமேற்குத் திசை எப்போதும் வாயிலாக இருந்து வந்துள்ளது. கி. பி. 150-ல் ஆரியர் அத்திசையிலிருந்து பரவிய நாள்முதல், கி. பி. 1500 -ல் முகலாயர் அவ்வழி வந்து புகுந்ததுவரை, அவ்வாயில் அயலினப் படையெடுப்புக்களுக்கும், அயலினக் குடியெழுச்சிகளுக்கும் இடையறாத பாதையாகவே நிலவியுள்ளது. இத் தாக்குதல்கள் நேர் கிழக்காகவும் தென்கிழக்காகவும் தெற்காகவும் பரந்தன. வடமேற்கும் வடக்கும் மேற்கும் பழம் பண்பாட்டு வளத்தில் பிற்பட்டதற்கு இப் பண்படாத் தாக்குதல்களே காரணம் ஆகும்.

வடமேற்குத் திசையிலிருந்து வந்த இந்த அலைகளில் முதற் பேரலை கி. மு 5, 3-ம் நூற்றாண்டுகளில் பாரசீக, கிரேக்க படையெடுப்புகளுடன் முடிவடைகின்றது. இதனால் தமிழகம் கடந்த மாநில நாகரிக வாழ்வு முற்றிலும் அழிந்து விடவில்லை. கீழ்

கோடியில் மகத நாகரிகம் ஆரிய இனத்துடன் கலப்புற்றுத் தன்னை ஆரிய நாகரிகம் என்றே அழைத்துக் கொண்டாலும், அது பழைய நாகரிகத்தின் ஒரு புதுமலர்ச்சியாகவே நிலவிற்று. இதனைப் பழைய ஆரிய நாகரிகம் அதாவது புத்த-சமண,பாளி-பாகத கால ஆரிய நாகரிகம் என்னலாம். இது தமிழகப் பண்பாட்டுடனும் ஆந்திர-கலிங்கப் பண்பாட்டுடனும் இழைந்து, அவற்றின் நிலவொளியிலும் தென்றலிலும் வளர்ந்ததாதலால், அவற்றுடன் இணைந்து ஒரே நாகரிகக்கொடியாய் இலங்கிற்று. வடமேற்கிலிருந்துவந்த புது அயல் பண்பாடுகளின் தாக்குதலை எதிர்த்துச் சமாளிக்கும் வகையில் அந் நாகரிகங்கள் தமிழகத்தின் உதவியையும் ஒத்தாசையையும் நாடின.

கி. மு. 3-ம் நூற்றுண்டிலிருந்து கி. பி. 3-ம் நூற்றுண்டு வரையும் வடமேற்கிலிருந்து யூச்சியர், குஷாணர், பார்த்தியர், பஃலவர், ஊணர் என்ற பல புதிய முரட்டு இனத்தவர்கள் படையெடுத்தனர். அவர்கள் வடமேற்கிலும் வடக்கிலும் மேற்கிலும் பல பேரரசுகளையும் அரசுகளையும் அமைத்து விரைந்து பரவினர். மாநில வாழ்வு இதனால் மீண்டும் கலகலத்தது. அது மட்டுமன்று. இதுவரை அயல் அலைகளால் பாதிக்கபடாதிருந்த கீழ் திசை நாகரிகக் கொடியையும் அவை பாதிக்கத் தொடங்கின. அக் கீழ் திசைக்கொடி இதுவரை தமிழகத்தையே தலைமையகமாகவும் உயிர் நிலையாகவும் கொண்டு, ஒன்றுபட்ட ஒரே நாகரிகமாக வளர்ந்து வந்தது. புதிய அலை அதனைத் துண்டுபடுத்தி, இருவேறு வகைப்பட்ட வளர்ச்சிகளாக்கிற்று. இரண்டிலும் பெருத்த மாறுபாடுகளை உண்டுபண்ணிற்று.

வடதிசையில் பாளி-பாகத மொழி சார்ந்தும், புத்த-சமண சமய நெறிகள் சார்ந்தும் வளர்ந்த மகத நாகரிகத்தில் முதலில் மொழி மாறுபட்டது. பாளி-பாகத நாகரிகமாயிருந்த அது சமஸ்கிருத நாகரிகமாக மாறிற்று. இதனை யடுத்துச் சமய வாழ்வும் திரிபுற்றது. புத்த-சமணநெறி சார்ந்த நாகரிகமாயிருந்த அது இப்போது வைதிகநெறி சார்ந்ததாயிற்று. சோழப் பேரரசின் ஆற்றல் மூலம் மீண்டும் தாய்மொழி சார்ந்த நாகரிகம் மாநிலமெங்கும் பரவும்வரை அது ஒரு புதிய இடைக்கால ஆரிய நாகரிகமாக ஆயிரஆண்டுக்கு மேற்பட வளர்ந்தது.

வடமேற்கு அலை நாகரிகக் கொடியின் தலையூற்றாக இருந்த தமிழகத்தை நேரடியாகப் பாதிக்கவில்லை. ஆனால் அது பாதிக்காமலே இருந்திருந்தால், இந்தியாவின் வரலாறும் ஆசியாவின் வரலாறும், கீழ் திசையின் வரலாறும் வேறாய் இருந்திருக்கும், உலக நாகரிக வரலாறே வேறுபட்டிருக்கும். வடமேற்கு அலை

தென்னாட்டின் வடமேற்குப் பகுதியில் ஆந்திரப் பேரரசை நிலைகுலையச் செய்தது. அதன் தென் எல்லையிலும் தமிழக வட எல்லையிலும் இருந்த பண்படாத் தமிழின மக்களான களப் பிரரை அது தமிழகத்தின்மீது புரளும்படி செய்தது. இதன் மூலம், தமிழர் நாகரிகம் களப்பிரரை நாகரிகப்படுத்தி மேல் திசையில் பரவுவதற்கு மாறாக, களப்பிரர் நாகரிகமே தமிழ் நாகரிகத்தின் புகழ் மரபைக் கிட்டத்தட்ட அழிக்கும்படி நேர்ந்தது

களப்பிரர் என்பவர் கடலோரமாக முத்திசையிலும் வளர்ந்த தமிழ் நாகரிகத்தில் ஒதுங்கிவிட்ட தமிழின மலங்குடி மக்களே. அவர்கள் திருப்பதிக்கு வடக்கேயுள்ள காடுகளில் வேட்டையாடியும் ஆடுமாடு மேய்த்தும் காடோடிகளாக வாழ்ந்தவர்கள். மேற்கிலிருந்து சேரரும், தெற்கிலிருந்து சோழரும், கிழக்கிலிருந்து புதிய தமிழக அரசரான பல்லவ ரும், வடக்கிலிருந்து ஆந்திரரும் அவர்கள் நாட்டில் உழவும் குடியும் புகுத்தி நெருங்கி வந்தனர். இவர்களுள்ளும் தமிழக அரசர்களுள்ளும் நடந்த போர்களில் அவர்கள் ஈடுபட் டதனாலேயே, தமிழகத்தில் சோழநாட்டின் வட எல்லை பல போர்களுக்கு ஆளாயிருந்தது என்று கண்டோம். வடக்கி லிருந்து பண்படா இனங்களின் தாக்குதலே இவர்களை அலை யலையாகத் தெற்கு நோக்கிக்கொண்டுவந்து தமிழகத்தின்மீது புரளச் செய்தது.

## பல்லவர் குடிமரபின் தொடர்புகள்

பல்லவர் பண்படா அயலினங்களுள் ஒன்றான பஃலவரே என்று சிலரும், பாளி சமஸ்கிருத நாகரிகத்தையே முதலில் பெரிதும் ஆதரித்ததனால் வடதிசையினரே என்று வேறுசிலரும் கருதியுள்ளனர். அவர்கள் சோழ மரபினர் என்று எண்ணு பவரும் உண்டு.

பல்லவர் என்பது நாடு குறித்த, அல்லது இனம் குறித்த பெயர் அன்று. அது குடிப்பெயரே என்பது தெளிவு. திரையர் இனத்தவரே பெரிதும் வாழ்ந்த தொண்டை நாட்டை அவர் கள் நீடித்து ஆண்டனர். அவர்கள் சோழ மரபுடனோ ஆந்திர மரபுடனோ களப்பிரருடனோ தொடர்புடையவரா யிருக்கக் கூடும். ஆனால் மூவகையிலும் அவர்கள் தமிழர் அல்லது தமிழினத்தவர் என்பது தெளிவு. அவர்கள் பாரத்துவாச கோத்திரத்தவர் என்று கூறிக்கொண்டதுண்டு. ஆனால் இது திரையர் அல்லது பரதவர் குலமரபுக்கொத்ததே. அவர்கள் கொடிகளும் சின்னமும் கிட்டத்தட்டச் சோழருக்குரியதே.

அவர்கள் பாளி-சம்ஸ்கிருத ஆதரவு உண்மையில் அவர்கள் புத்த-சமண நெறியையே காட்டுகிறது. களப்பிரரும் தமிழகத்தில் பாண்டியர்களும் பல்லவர்களும் ஏழாம் நூற்றுண்டு வரை சமணரே என்பதும், ஆந்திரப் பேரரசர்கள் பலர் புத்த நெறியினர் என்பதும் கருத்தில் கொள்ளத்தக்கன.

களப்பிரர் குடியெழுச்சி கி. பி. 3-முதல் 5-ம் நூற்றுண்டு வரை பரவியிருத்தல் வேண்டும். பல்லவர் ஆட்சி காஞ்சியில் அமைந்ததும் இக் காலத்தின் தொடக்கத்திலேயே. ஆனல் மூன்றும் நூற்றுண்டிலிருந்த சோழ அரசும், நான்காம் நூற்றுண்டில் பல்லவ அரசும், ஐந்தாம் நூற்றுண்டில் பாண்டிய அரசும் அவர்கள் படையெடுப்பால் வீழ்ச்சியடைந்திருத்தல் கூடும். தொண்டைநாடிழந்த பல்லவர் தமிழகத்துக்கு வெளியில் இருந்து கொண்டே, தங்கள் பட்டயங்களில் காஞ்சியில் ஆண்டதாகக் குறித்துக் கொள்கின்றனர். ஆறும் நூற்றுண்டின் இறுதியில்தான் பல்லவன் சிம்ம விஷ்ணு ஒருபுறமும், பாண்டியன் கடுங்கோன் மறுபுறமும் (575-600) களப்பிரரைத் துரத்தித் தமிழகத்தில் தத்தம் அரசை நாட்டியதாகப் பெருமையுடன் கூறிக்கொண்டனர். ஒருவேளை இரு சாராரும் ஒன்றுபட்டே இச்செயலை ஆற்றியிருத்தல் கூடும்.

களப்பிரர் வீழ்ச்சியின் பின்னும் சோழர் ஒரு சிறு பகுதியில் சிற்றரசராகவே இருந்தனர். பாண்டியரும் பல்லவரும் தமிழகத்தின் புதிய பேரரசராக விளங்கினர். அடுத்த மூன்று நூற்றுண்டுகளின் தமிழக வரலாறு பெரிதும் பாண்டியர் பல்லவர் பேரரசுப் போட்டியாகவே இருக்கின்றது. ஆனல் இப்போது பேரரசுப் போட்டி தமிழகத்துடன் நிற்கவில்லை. தென்னுட்டரசியல் எல்லை முழுவதிலும் அப்போட்டி பரவி விட்டது காண்கிறோம். ஆந்திரப் பேரரசின் அழிபாட்டினிடையே வடக்கில் சாளுக்கியரும் தெற்கில் கங்கரும் தமிழகத்துக்கு வடக்கிலிருந்து பாண்டிய பல்லவருடன் தலையிட்டுப் போட்டியிட்டனர். அவர்களிடையே தமிழகத்தில் சோழரும், வடக்கே கடம்பர், பாணர், வைடும்பர், நுளம்பர், தெலுங்கச்சோடர் ஆகியவர்களும் போட்டியில் ஒவ்வொரு தரப்பிலும் சேர்ந்து பங்கு கொண்டனர்.

சாளுக்கியருக்கு வடக்கே சிந்து கங்கை சமவெளியில் கி.பி. 4-5-ம் நூற்றுண்டுகளில் குப்தப்பேரரசும் 7-ம் நூற்றுண்டில் ஹர்ஷரின் தானேசுவரப் பேரரசும் இருந்தன. கரிகாலனும் செங்குட்டுவனும் வடதிசை சென்று வீர வெற்றி பெற்றது போலவே, குப்தர்களில் சமுத்திரகுப்தன் வெற்றி உலாப்புறப்பட்டான் என்று கூறப்படுகிறது. அவன் காஞ்சிவரை படை

யெடுத்தான் என்றும், காஞ்சியில் விஷ்ணுகோபன் என்ற அரசன் அவனை எதிர்த்துத் திருப்பியோட்டினான் என்றும் கூறப்படுகிறது. இந்த விஷ்ணுகோபன் கி. பி. 4-ம் நூற்றாண்டிலிருந்த ஒரு பல்லவனேயாகலாம் என்றும் வரலாற்றாசிரியர் கருதுகின்றனர். சிலர் சமுத்திரகுப்தன் அவ்வளவு தென்கோடி வரை வரவில்லை யென்றும், விஷ்ணுகோபன் முதலிய அரசர் கலிங்க நாட்டில் சென்றே போரிட்டனர் என்றும் சொல்கிறார்கள். அடுத்த குப்த அரசன் இரண்டாம் சந்திரகுப்தன் அல்லது விக்கிரமாதித்தன் விந்தியத்துக்கு வடக்கே வங்காளத்திலிருந்து கூர்ச்சரம்வரை இருகடலும் அளாவும் பேரரசு ஆண்டான். குப்த ஆட்சி சரிந்தபின் ஊணரை எதிர்த்து வெற்றி பெற்ற அரசன் ஹர்ஷனும் இதுபோலவே இருதிசைக் கடல் அளாவும் பேரரசை நாட்டி, தெற்கே சாளுக்கியரையும் வெல்லக் கனவு கண்டு கொண்டிருந்தார்.

சாளுக்கியருக்கு இங்ஙனம் வடக்கே ஹர்ஷனும்தெற்கே பல்லவரும் போட்டியாயினர். பல்லவருக்கோ வடக்கே சாளுக்கியரும் தெற்கே பாண்டியரும் போட்டியானார்கள். எனவே 7-ம் நூற்றாண்டு ஹர்ஷ—சாளுக்கியப்போட்டி, சாளுக்கிய பல்லவப்போட்டி, பல்லவ—பாண்டியப்போட்டி ஆகிய பல திசைப்போட்டிகளுக்கு ஆளாயிருந்தது.

### சாளுக்கிய பல்லவப் போட்டி : புள்ளலூர்ப்போர்

பல்லவன் மகேந்திரவர்மன் கி. பி. 610-லிருந்து630 வரை ஆண்டான். அவன் தந்தை காலத்திலேயே பல்லவப் பேரரசு தொண்டை நாடு, சோழ நாடு ஆகியவற்றுடன் வடதிசையில் கோதாவரி கிருஷ்ணா ஆறுகளுக்கு இடையிலுள்ள வேங்கை (தற்காலக் கோதாவரி, கிருஷ்ணா, குண்டூர், நெல்லூர் அடங்கிய) நாட்டையும் வென்று உட்கொண்டு பரந்திருந்தது. இதே காலத்திய சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசியும் கடம்பரையும் மற்றச் சிற்றரசர்களையும் வென்று பல்லவ எல்லை வரை தன் பேரரசைப் பரப்பி, பல்லவர் மீது பாயச் சமயம் பார்த்திருந்தான்.

பல்லவப் பேரரசுக்குத் தெற்கில் சிற்றரசரான சோழரும் பாண்டியப் பேரரசரும் இருந்தனர். அதன் மேற்கே கங்கர் வலிமைவாய்ந்த சிற்றரசராய் இருந்தனர். புலிகேசி முதலில் கங்கஅரசனாகிய துர்வினீதனைத் தன்னுடன் சேர்த்துக்கொண்டு பல்லவப்பேரரசின் மீது படையெடுத்தான். சாளுக்கியர் தம் வெற்றிகளைப் பற்றியும் பல்லவர் தம் வெற்றிகளைப் பற்றியும் மட்டுமே குறித்துள்ளனர் என்று தோன்றுகிறது. இந்தப்

போர் பற்றி இருதரப்புகளும் இருவேறுபட்ட விவரங்கள் தெரிவிக்கின்றன.

புலிகேசியின் 'ஐஹோளே'க் கல்வெட்டு அவன் வெற்றியை வானளாவப் புகழ்கிறது. அவன் படைகள் பேரரசை முற்றிலும் அலைக்கழித்தன. பல்லவ அரசன் படையுடன் காஞ்சிநகருக்குள்ளே சென்று தஞ்சம் புகுந்தான். சாளுக்கியப் படைகள் காஞ்சி கடந்து தெற்கே வந்தன. பல்லவப் பேரரசு முழுவதையும் ஆட்கொண்டபின் சாளுக்கியப் படைகள் மீண்டன. சாளுக்கியப் படைகள் எழுப்பிய தூசிப் படலம் பல்லவ மன்னரின் ஒளியை மங்கச்செய்தது. இதுவே அப்பட்டயம் தரும் விவரம் ஆகும்.

சாளுக்கிய ஆதாரங்கள் வெற்றியின் இன்னொரு பகுதியைப் பற்றியும் கூறுகின்றன. சாளுக்கியர் வேங்கை நாட்டைப் பல்லவர்களிடமிருந்து வென்றனர். புலிகேசி அதைத் தன் தம்பி விஷ்ணுவர்த்தனனுக்குக் கொடுத்து, அவனை அங்கே அரசனாக்கினான். இது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த செய்தி. ஏனெனில் இந்த விஷ்ணுவர்த்தனனே கீழை சாளுக்கியர் என்ற ஒரு புதிய மரபுக்கு முதல்வனானான். புலிகேசியின் மூல மரபு இதன் முன்பே சாளுக்கியர் என்று பெயர் பெற்றது. சாளுக்கியரின் இந்தப் பிளவு பின்னாளில் சோழப் பேரரசின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவிற்று.

பல்லவர்களுடைய காசக்குடிப்பட்டயம் போரின் மற்றொரு புறத்தை நமக்குத் தீட்டிக் காட்டுகிறது.

'மகேந்திரன் தன் நாட்டின்மீது படையெடுத்த பகைவர்களைப் புள்ளலூரில் முறியடித்துத் துரத்தினான்' என்று கூறுகிறது அது.

இரண்டு தரப்புக்கள் தரும் விவரங்களும் சேர்ந்தால் முழு உண்மையும் தெரியவரும்.

புள்ளலூர் என்பது காஞ்சிபுரத்துக்குப் பத்துக் கல் தொலைவிலுள்ள ஒரு ஊர், புலிகேசியும் துர்வினீதனும் முதலில் பல்லவப் பேரரசு முழுவதும் தாக்கிச் சூறையாடினார்கள். சோழ பாண்டியரையும் புலிகேசி பல்லவருக்கெதிராகத் தூண்டிவிட்டிருந்ததனாலேயே இது எளிதில் முடிந்தது. தென் எல்லையில் தென் தமிழரசர் படைகளும் வடதிசையில் சாளுக்கியப் படைகளும் ஒரே சமயத்தில் ஒருங்கே தாக்கியதாலேயே பல்லவன் மகேந்திரன் காஞ்சிக் கோட்டைக்குள் சரணடைய நேர்ந்தது. இத் தறுவாயைப் பயன்படுத்திச் சாளுக்கியர் பல்லவப் பேரரசின் வடபகுதியையும் கவர்ந்துகொள்ள முடிந்தது.

ஆனால் போர் முடிவில், பல்லவன் படைகளுடன் வெளி வந்து காஞ்சிக்கு வெளியே முற்றுகையிட்ட சாளுக்கியப் படைகளைத் தாக்கினான். அவர்களைத் துரத்தியடித்து, புள்ளலூர்ப் போரில் அவர்களை முறியடித்துப் பல்லவ அரசின் எல்லையிலிருந்தே அப்புறப்படுத்தினான்.

புள்ளலூர்ப் போர் பல்லவ வெற்றியானதனாலேயே அதைப் புலிகேசியின் பட்டயங்கள் குறிப்பிடவில்லை. ஆனால் பல்லவப் பேரரசு இதற்குப் பின்னும் தன் பழைய எல்லையில் ஆட்சி செலுத்திவந்தது. இது புள்ளலூர் வெற்றிக்குச் சான்று. அத்துடன் புலிகேசி இதுபற்றிக் குறிப்பிடாவிட்டாலும் அவனுடன் நின்று போரிட்ட துர்வினீதன் கல்வெட்டுக்கள் இதைக் குறிப்பிடுகின்றன.

புள்ளலூருடன் முடிவடைந்த போராட்டம் இருசார்புகளுக்கும் வெற்றி தோல்வியில்லாச் சம நிலைப் போராட்டமே என்று கூறத்தகுமானாலும், பல்லவப் பேரரசு அதனால் வேங்கை நாட்டை இழந்தது. இது அதற்கு ஒரு வலிமைகேடே என்று கூறலாம். ஆனால் அதே சமயம் வளர்ந்துவரும் சாளுக்கியப் பேரரசுக்குப் பல்லவப் பேரரசன் புள்ளலூர் வெற்றி ஒரு தடையாயிற்று என்றும் கூறவேண்டும்.

மகேந்திரவர்மன் ஒரு பேரரசன், பெருவீரன். அத்துடன் அவன் ஒரு தலைசிறந்த கலையார்வலனாகவும் கலைஞனாகவும் விளங்கினான். பல கோயில்களை அவன் கட்டியதனால் அவன் சேதகரி (சைத்தியம், கோயில்காரி; செய்தவன் சைத்யகாரி: அல்லது சேதகரி, கோயில் கட்டியவன்) என்றும், ஓவியங்கள் பல அவற்றிலே தீட்டியதால் சித்திரகாரப்புலி என்றும் அழைக்கப்பட்டான். செங்கற்பட்டுக்கருகிலுள்ள வல்லத்திலும் திண்டிவனத்துக்கருகிலுள்ள தளவனூரிலும், அரக்கோணத்தை அடுத்த மகேந்திரவாடியிலும் இவன் சமணர்களுக்குரிய குகைக்கோயில்கள் கட்டினான்.

இம்மன்னன் தொடக்கத்தில் சமணனாயிருந்து, தேவாரப் புகழ் வாய்ந்த திருநாவுக்கரசு நாயனார் என்ற அப்பரால் சைவ சமயத்திற்கு மாற்றப்பட்டான். சைவனானபின், இவன் தென்னார்க்காட்டு மாவட்டத்தில் திருவதிகையிலுள்ள சமணப்பள்ளியை இடித்துத் தன் பட்டப் பெயரான 'குணபரன்' என்ற தொடரால் குணபரேசுரம் என்ற சிவன் கோயில் கட்டுவித்தான். இச்செய்தியை அவனது திருச்சிராப்பள்ளி மலைக்கோயில் கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

தென்னாட்டில் மரம், செங்கல், சுண்ணாம்பு இல்லாமல் முதல் முதல் கற்குடைந்து கோயில் கட்டியவன் இவனே.

இதைத் தென் ஆர்க்காட்டு மாவட்டத்திலுள்ள மண்டகப் பட்டுக் கல்வெட்டுத் தெளிவாக்குகிறது. இதுவரை இருந்த தமிழ்க்கோயில்கள் மரத்தாலோ, சுண்ணத்தாலோ கட்டப் பட்டனவென்பதையும், இதனுலேயே அவற்றை நாம் இன்று காண முடியவில்லை என்பதையும் இது விளக்குகிறது. காஞ்சி யில் வயல்களெங்கும் காணப்படும் கல் இலிங்கங்கள் இடிந்து தகர்ந்த இந்தப் பழைய கோயில்களின் மூல இலிங்கங்களே யாகும்.

அந்நாளைய இசைக்கலையில் இம்மன்னன் தேர்ச்சிபெற்ற வனுயிருந்தான். சில புதிய சுரங்களையும், பண்களையும் அவனே சமைத்தான் என்று அவன் குடுமியாமலைக் கல் வெட்டுக்கள் கூறுகின்றன. நடன ஓவியக் கலைகளில் அவன் சிறப்பையும், அவன் காலச் சிறப்பையும் சித்தன்னவாசல் உயிரோவியங்கள் இன்றும் புலப்படுத்துகின்றன.

அவன் சமஸ்கிருதத்தில் பெரும்புலவன். சமண மதத்தின ஞக இருக்கும் சமயம் அவன் புத்தரையும் காபாலிக சைவரை யும் நகைச்சுவை ததும்பத் தாக்கி, 'மத்தஹாசப் பிரஹசனம்' என்ற களிநாடகம் இயற்றினுன்.

## சிம்பிகைப் போர்

பல்லவப் பேரரசின்மீது தன் அடுத்த தாக்குதலைத் தொடங்குமுன் இரண்டாம் புலிகேசி தன் நாட்டைச் செப்பம் செய்யத் தொடங்கினுன்.

பாணர் தலைவனுன இரண விக்கிரமனை முறியடித்து, இரண்டாம் புலிகேசி (606-642) சிம்பிகைப் போரில் அவன் நாட்டைச் சூறையாடினுன். அவன் நாட்டில் பொன்னுகவே நேரடியாக வரிவசூலித்து, அதைத் திறையாகக்கொண்டு சென்றுன். இந்தத் திறை திரப்பொன் (திறைப்பொன்) என்று குறிக்கப்பட்டுள்ளது.

## வடதிசைப் பெரும்போர்

புலிகேசி தெற்கே திரும்புமுன் வடதிசையில் ஹர்ஷவர்த் தன்ன் என்ற கன்னேசிப் பேரரசன் தெற்கே படையெடுப்ப தாக அவனுக்குத் தெரியவந்தது. அவன் வடதிசை நோக்கிச் சென்றுன். ஹர்ஷனும் புலிகேசியும் ஈடுபட்ட போரில் ஹர்ஷன் முறியடிக்கப்பட்டான். புலிகேசி இந்த வெற்றி யைப் பயன்படுத்தி வடநாட்டின்மீது படையெடுக்க விரும்ப வில்லை. தெற்கேயிருந்த பல்லவப் பேரரசை எண்ணி அவன் வடக்கே சமரசம் செய்துகொண்டு திரும்பினுன்.

### கோயத்தூர், தண்டக்கல், முனயத்தூர்ப் போர்கள்

பாணர்கள் மீண்டும் புலிகேசியை எதிர்த்துப் போரிட்டனர். புலிகேசியின் கீழ்ச் சிற்றரசனு யிருந்த கங்கத்தலைவன் மாதவ முத்தரசன் அல்லது முத்தய்யா என்பவன். அவன் கோயத்தூர், தண்டக்கல், முனயத்தூர் என்ற இடங்களில் அவர்களை முறியடித்தான்.

கோயத்தூர் என்பது சித்தூர் மாவட்டத்தில் புங்கனூர்ப் பெருநிலக்கிழமையைச் சார்ந்த ஓர் ஊர் ஆகும்.

### சாளுக்கிய பல்லவப்போட்டி பரியளம், மணிமங்கலம், சூரமாரம்

முதலாம் மகேந்திரவர்மனுக்குப்பின் முதலாம் நரசிம்மவர்ம பல்லவன் (630-668) பேரரசனானான். முந்திய பல்லவ னாட்சியில் புள்ளலூரில் அடைந்த தோல்வியைக் கழுவும் எண்ணத்துடன் புலிகேசி இப்போது படையெடுத்தான். இப்போரில் பல்லவனே பெரு வெற்றியடைந்தான். சாளுக்கியர் நாட்டின்மீதே எதிர் தாக்குதல் நடத்திச் சாளுக்கியப் பேரரசன் கொட்டம் ஒரு தலைமுறைக்கு மீண்டும் எழாதவாறு செய்தான்.

இப்போரின் விவரங்களைப் பல்லவர்களின் வேலூர்ப் பாளையம் செப்பேடுகளும் கூரம் செப்பேடுகளும் நமக்கு விரித்துரைக்கின்றன.

பரியளம், மணிமங்கலம், சூரமாரம் என்ற மூன்று இடங்களில் தொடர்ந்து பல்லவன் பெரு வெற்றி பெற்றான். சாளுக்கியப் படைகளைப் பல்லவப் பேரரசின் எல்லைக்கப்பால் துரத்தினான்.

மணிமங்கலம் என்பது காஞ்சிக்கு இருபது கல் தொலைவில் இன்றும் உள்ள ஊரே. பரியளமும் சூரமாரமும் அணிமையிலேயே இருந்திருக்கக்கூடும். இப் போர்களில் 'யானைக்கூட்டத்துக்குச் சிங்கம் போன்றவனும், நரசிங்கப் பெருமானை ஒத்தவனும், வணங்கா முடிமன்னர் மகுடத்தின்மேல் இருக்கும் சூடாமணியைப்போன்றவனுமான நரசிம்மவர்மன் வெற்றி யென்னும் பதத்தைப் புலிகேசியின் முதுகாகிய பட்டயத்தின்மீது எழுதினான்' என்று அணியலங்காரமாகக் கூரப் பட்டயம் குறிக்கிறது.

### வாதாபிப் பேரழிவு கி. பி. 642

சாளுக்கியரை முறியடித்ததுடன் நரசிம்மவர்மன் அமையவில்லை. அவன் சாளுக்கியர் தாயகத்தின்மீதே படையெடுத்

துச் செல்ல முனைந்தான். இதே சமயம் முன் சாளுக்கியப் போரில் பாண்டியர் தெற்கில் படையெடுத்ததுபோல, இப்போதும் படையெடுத்ததாகத் தெரிகிறது. எல்லைப்புறப் படைகளைப் பாண்டியன் வென்றதால், மன்னன் விரைந்து தெற்கே செல்லவேண்டியிருந்தது. அப்படியே மன்னன் சென்று பாண்டியனை வென்று அவனைப் பாண்டிய நாட்டுக்கே துரத்தியதாக அறிகிறோம். ஆனால் தெற்கே புறப்படுமுன், பல்லவன் ஒரு பெரும் படையைச் சாளுக்கியப் படையெடுப்புக்கு வடக்கே அனுப்பி வைத்தான்.

இச்சமயம் பல்லவப் பேரரசர் நரசிம்மவர்மன் படைத் தலைவர் தமிழர் வரலாற்றிலும், இலக்கியத்திலும், சமய வாழ்விலும் ஒருங்கே இடம் பெற்ற பரஞ்சோதியார் ஆவர். சைவத் திருத்தொண்டர் அறுபத்து மூவரில் ஒருவராகக் குறிக்கப்பட்ட சிறுத்தொண்டர் இவரேயாவர்.

படைத்தலைவர் பரஞ்சோதியார் தலைமையில் பல்லவப் பெரும்படை சாளுக்கியப் படைவீரரை அவர்கள் தலைநகரான வாதாபிக்கே துரத்திச் சென்றது. பல்லவர் சாளுக்கியப்படைகளைக் கொன்று குவித்தனர். சாளுக்கியர் நாடு முழுவதும் திரிந்து சூறையாடினர். தலை நகரான வாதாபியைக் கைப்பற்றி அதை மண்ணோடு மண்ணாக்கி, அதன் எல்லையில் தம் வெற்றித்தூண் நிறுவினர். பல தலைமுறைகளாகச் சாளுக்கியர் சேகரித்துவைத்திருந்த பெரிய செல்வக் குவையையும் பொன்னையும் பரஞ்சோதியார் கைப்பற்றி, அவற்றைத் தம் பேரரசன் நரசிம்மவர்மன் முன் கொண்டு வந்து குவித்தார்.

தம் வெற்றிச் சின்னங்களுள் ஒன்றாக, பரஞ்சோதியார் வாதாபியிலிருந்து கொண்டுவந்த பெரிய பிள்ளையார் சிலையை அவர் காஞ்சிமாநகரில் நிறுவினார் என்றும், அத்தெய்வம் அதன்பின்னரே தமிழர் வணங்கும் தெய்வங்களுள் இடம் பெற்று, சிவபெருமானின் பிள்ளையாகிய முருகனுக்கு முன் பிறந்த மூத்தபிள்ளையாராக கொள்ளப்பட்டதென்றும் அறிகிறோம். ஏழாம் நூற்றாண்டுக்கு முன் சமய இலக்கியங்களில் பிள்ளையார் என்ற சொல் முருகனுக்குமட்டுமே வழங்கிற்று. முருகன், சிவன், திருமால் ஆகியவர்களே நூலின் காப்புக் கடவுள்களாக முன்பு வழங்கியதுபோல, இதுமுதல் பிள்ளையார் காப்புக் கடவுளாயினர்.

பிள்ளையார் தொடக்கத்தில் மராத்தியர் தெய்வம் என்றும், மூன்று மனைவியர்களை உடையவர் என்றும் அறிகிறோம். முருகனே அந்நாளில் வடதிசையில் மணமாகாக் காளையாய் வணங்கப்பட்டார். எப்படியோ தமிழகத்தில் முருகனுக்கு இருமனைவியர் இருந்ததாகச் சொல்லப்பட்டிருந்ததனால்,

பிள்ளையார் மணமாகாக் கடவுளாய்ச் சந்திகள், குளக்கரைகள், கோயில்வாயிற்படிகள்தோறும் இடம் பெற்றார்.

"வாதாபி கணபதிம் பஜே!" என்ற இக்காலப் பாட்டுக் கச்சேரிகளின் காப்புப் பாடலின் முதலடியில்கணபதி வாதாபியிலிருந்து வந்த இந்தச் செய்தி இன்றும் குறிக்கப்பட்டே வருகிறது!

வாதாபி வெற்றியின் பின்னரே பரஞ்சோதியார் வீரப் புகழ்போதும் என்று விடுத்து, அசோகனைப்போல் அருட்புகழ் நாடி, தொண்டர்க்குத் தொண்டனும் சிறுத்தொண்டரானார்.

அவர் திருத்தொண்டுகளை விரித்துரைக்கும் பெரிய புராண ஆசிரியர் சேக்கிழார் அவர் வாதாபி வெற்றியையுந் திறம் படப் பாடியுள்ளார்.

"மன்னவர்க்குத் தண்டுபோய்
வடபுலத்து வாதாபித்
தொல்நகரம் துகளாகத்
துணைநெடுங்கைவரை உகைத்தும்
பன்மணியும் நிதிக்குவையும்
பகட்டினமும் பரித்தொகையும்
இன்னன எண்ணில கவர்ந்தே
இகலஅரசன் முன்கொணர்ந்தார்!"

வாதாபி அழிவிலேயே புலிகேசி போரில் இறந்துபட்டிருக்கவேண்டும். போரின் கடுமையும் அழிவும் சாளுக்கிய குலம் முன்என்றும் அறிந்திராத ஒன்றாகவே இருந்திருக்க வேண்டும். ஏனெனில் வாதாபி நகரம் பின் என்றும் தலைநகரமாக இயங்கியதில்லை. தென்னாட்டின் பாழ்பட்ட நகரங்கள் பட்டியலில் அது நிலையாகவே இடம் பெற்றுவிட்டது. அத்துடன் வாதாபி அழிவின் பின் பதின்மூன்று ஆண்டுகள் சாளுக்கியப் பேரரசு அரசனில்லாப் பேரரசாகவே நிலவிற்று. அரசு நிலையில் பெருங் குழப்பத்துக்குள்ளாகியிருந்த பேரரசை இரண்டாம் புலிகேசியின் மகனான முதலாம் விக்கிரமாதித்தியன் திரும்பத் தந்தை கால நிலைக்குச் சீர்ப்படுத்தி முடிசூட்டிக் கொண்டது கி. பி. 655-லேயே ஆகும்.

சாளுக்கியருக்கெதிரான பல்லவர் போர்களில் இலங்கை அரசன் ஒருவனும் உதவியதாக விக்கிரமாதித்தியன் ஆட்சியில் வெளியிடப்பட்ட கர்நூல் பட்டயத்தால் அறிகிறோம்.

### பல்லவர் இலங்கைத் தொடர்பு

நரசிம்மவர்ம பல்லவன் வடபுலமாகிய வாதாபியை மட்டுமல்ல, இலங்கையையும் வென்றான் என்று காசக்குடிப்

பட்டயம் கூறுகிறது. இச் செயலைத் தசரத ராமன் செயலுடன் அது ஒப்பிடுகிறது.

சாளுக்கியரைத் தோற்கடித்தவர் மூவர் என்று விக்கிரமாதித்தனும் கூறுகிறான். இம் மூவருள் நரசிம்ம வர்மனுடனிருந்த மற்ற இருவர், பல்லவர் வடதிசையாண்டு முந்திய சாளுக்கியவெற்றியால் பதவியிழந்த பல்லவ மாகாணத் தலைவன் ஒருவன். மற்றவன் இலங்கையரசனான மானவர்மனே யாகும். இவன் பகைவர்களால் தன் அரசிழந்து, காஞ்சியில் நரசிம்மவர்மனிடம் தஞ்சம் புகுந்திருந்தான் என்று இலங்கைப் பண்டை வரலாற்று ஏடான மகாவம்சோ கூறுகிறது. சாளுக்கியப் படையெடுப்பில் அவன் உதவி செய்ததன் பயனாக, பல்லவன் நரசிம்மவர்மன் அவனுக்கு ஒருபடை கொடுத்துதவி இலங்கை அரசியலை மீட்கும்படி அனுப்பினான். ஆனால் மானவர்மன் தன் எதிரி அரசனான அட்ட தத்தனுடன் போர் புரிந்து தோற்றுவிட்டான்.

பல்லவர்கள் சேர சோழ பண்டியரைப் போலவே நல்ல கடற்படை உடையவராய் இருந்தனர். வெளி நாட்டு வாணிகம், குடியேற்றம், வெளிநாட்டுக் கல்வெட்டுக்கள் ஆகியவற்றில் முத்தமிழ் அரசர் பெயர்களும் நாட்டுப் பெயர்களும் அடிபடுவதுபோலவே, பல்லவ அரசர் பெயரும் குடிகள் பெயரும் மிகுதி இடம் பெற்றுள்ளன.

மானவர்மன் தோல்வி பற்றிக் கேள்விப்பட்ட நரசிம்மன் ஒருபெரிய கடற்படையை இலங்கைக்கு அனுப்பினான். கடல்தள ஆதரவு பெற்ற இப்படை மானவர்மன் எதிரியாகிய அட்ட தத்தனைப் போரில் முறியடித்துக் கொன்று, மானவர்மனை அரசனாக்கிற்று என்று அறிகிறோம்.

## பெரும்புகழ்ப் பல்லவர்

பல்லவர்களில் மிகப்பெரும்புகழ் பெற்றவர்கள் முதலாம் மகேந்திரனும் முதலாம் நரசிம்மவர்மனுமே ஆவர். நரசிம்மவர்மனுக்கு மாமல்லன் என்று ஒரு பட்டப் பெயரும் உண்டு. மாமல்லபுரத்தில் கடற்கரைக்கோயில்கள் மகேந்திரன் காலத்தில் தொடங்கப்பட்டாலும் இவன் காலத்திலேயே முடிவுற்றன. அதன் துறைமுகத்தையும் அவன் செப்பம் செய்து, அதையேதன்பேரரசின் தலைமைத்துறைமுகமாக்கினான்.அவன் கடற் படைத்தளமாக இருந்தது அதுவே. இலங்கைப் படையெடுப்பு அங்கிருந்தே தொடங்கிற்று. அவன்பட்டப்பெயராகிய மாமல்லன் என்பதிலிருந்தே மாமல்லபுரம் அப் பெயர் பெற்றதெனப் பல வரலாற்றாசிரியர் கருதுகின்றனர். ஆனால் சங்க

இலக்கியங்களிலே இத்துறைமுகப்பட்டினம் கடல் மல்லை எனக் குறிக்கப்படுகிறது. சங்க இலக்கியமே பல்லவர்களுக்குப் பிற்பட்டது என்று கூறுபவர் கூற்றுடன்கூட இது ஒத்துவராத செய்தி. ஏனெனில் அவர்கள்கூட இச்சங்ககாலம் சிம்ம விஷ்ணுவுக்கு முற்பட்ட காஞ்சி இழந்த பல்லவர்களுக்கே பிற்பட்டதென்பர். எனவே மல்லைக்கு அழகும் பெருமையும் உண்டு பண்ணி 'மாமல்லை' ஆக்கியவன் என்ற முறையிலேயே நரசிம்ம வர்மபல்லவன் 'மாமல்லன்' என்ற புகழ்ப்பெயர் பெற்றான் என்னலாம்.

மாமல்லபுரம் பிற்காலத்தாரால் 'மகாபலிபுரம்' ஆக்கப்பட்டது. மாமல்லையில் அவன் அமைத்த ஐம்பெருந் தெய்வங்கள் (பஞ்சமூர்த்திகள்) கோயில்களும் பிற்காலத்தாரால் பஞ்சபாண்டவரின் 'தேர்கள்' ஆகக் கொள்ளப்பட்டன.

சங்ககால இலக்கியக் கலையழகைச் சிற்பத்திலும் ஓவியத்திலும் காட்டிய பல்லவர் சிறப்பை மேனாட்டவர் கண்டு வியந்து பாராட்டும் வரை கவனிக்காதிருந்த தமிழர், தேவார பெரிய புராண காலத்துக்குப் பின் பல்லவர் புகழை மறந்ததில் வியப்பில்லை. அத்துடன் இப்பல்லவர்கள் தமிழில் அக்கரை காட்டாமல் சமஸ்கிருதத்திலேயே மிகுதி ஈடுபட்டிருந்தனர் என்பதைக்கொண்டு அவர்கள் அயலினத்தவர் என்று வரலாற்றாசிரியர் பலர் கருத முனைந்து விடுகின்றனர். ஆனால் முழு உண்மையைச் சரிவரக் காண்பதானால், மரபிழந்து வந்த பழந் தமிழ்க் கலைச் சிறப்புக்களையெல்லாம் சமஸ்கிருதப் பெருமையாக்கிப் புதுநிலப்பரப்பில் தவழவிட்டு, அதன் மூலம் பாளி பாகத காலப் 'பழய ஆரிய' நாகரிகத்தைப் பிற்காலப் 'புதிய ஆரிய' மாகிய சமஸ்கிருத ஆரியமாக வளர்த்த பெருமையில் பெரும் பகுதி பல்லவர்களுடையதேயாகும்.

வாதாபி, மாமல்லபுரம், நாமக்கல், குடுமியாமலை, புதுக்கோட்டை யருகிலுள்ள திருமெய்யம், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் இப் பல்லவன் குகைக்கோயில்கள் கட்டினான். அவன் சில ஆண்டுகளேனும் வாதாபியை ஆண்டான் என்பதை வாதாபிக் குகைக்கோயில்கள் காட்டுகின்றன. லால்குடிக்கு அருகிலுள்ள பல்லாவரத்திலும் காஞ்சியிலும் அவன் கோட்டைகள் கட்டியதாகத் தெரிகிறது.

சீனயாத்திரிகன் யுவான் சுவாங் இவ்வரசன் காலத்திலேயே கி. பி. 640-ல் காஞ்சிக்கு வந்து அங்கே நீண்டகாலம் தங்கியிருந்தான். தென்னாட்டை அவன் 'திராவிடம்' என்ற பெயராலேயே குறித்துள்ளான். அதன் அந்நாளைய நாகரிகம், சமய வாழ்வு ஆகியவைபற்றியும் அவன் எழுதியுள்ளான். காஞ்சியிலிருக்கும்போதே ஒரு பாண்டியன் இறந்ததாகவும், அதன்

பின் பாண்டிய நாட்டையும் அவன் சென்று கண்டதாகவும் தெரிகிறது. இறந்த பாண்டியன் செழியன் சேந்தன் என்றும், அடுத்த பாண்டியன் அரிகேசரிமாறவர்மன் என்றும் தெரிகிறது.

**பாண்டியப் பேரரசு: நின்றசீர்நெடுமாறன்**

முதலாம் நரசிம்மவர்மன் காலத்திய பாண்டியன் அரிகேசரி மாறவர்மன் என்றும் அவன் ஏறத்தாழ 640முதல் 670 வரை ஆண்டான் என்றும் தோற்றுகிறது. வேள்விக்குடி, சின்னமனூர்ச் செப்பேடுகளால் அவன் இடைக்காலப் பாண்டியரில் முதல்வராகிய கடுங்கோன், அவனி சூளாமணி, செழியன் சேந்தன் ஆகிய மூவருக்கும் பின் வந்தவன் என்று அறிகிறோம்.

தமிழிலக்கிய ஆராய்ச்சியும் வரலாற்றாராய்ச்சியும் தொடக்க நிலையிலிருந்த காலத்தில் பலர் சங்ககாலத்துக்கு முற்பட்ட நெடியோன் அல்லது நிலந்தருதிருவிற் பாண்டியனோடு இப் பாண்டியனை ஒன்றுபடுத்தி குழப்பி இடக்குற்றனர்.

மற்றும், இவனை இவனுக்குப் பின் வந்த பாண்டியன் கோச்சடையன் இரணதீரன், பாண்டியன் அரிகேசரி பராங்குச மாறவர்மன் என்ற முதலாம் இராசசிம்மன் ஆகிய இருவருடனோ பின்னவனுடனோ ஒன்றுபடுத்துவதும் உண்டு.

தவிர, இறையனாரகப் பொருளுரையில் மேற்கோளாகத் தரப்பட்ட பாண்டிக்கோவையின் தலைவனையே இப்பாண்டியனாகச் சிலரும் அரிகேசரி பராங்குசனாகச் சிலரும் கொள்வதுண்டு. பராங்குசன் வெற்றி பெற்ற போர்களில் சிலபலவற்றின் பெயர் அக்கோவையில் வருவதே இதற்குக் காரணம் ஆகும். ஆனால் ஆசிரியர் மறைமலையடிகள் போதிய காரணம் காட்டி, கோவைத் தலைவன் இரண்டாவது இடைக்காலப் பாண்டியன் அவனி சூளாமணியே என்று நாட்டியுள்ளார். அடுத்துவரும் சேந்தன் வானவன் என்று பெயர் பெறுவதனால், அவனோ, அவன் முன்னோனோ, இருவருமோ சேர நாட்டில் வெற்றிகள் அடைந்தனர் ஆகல் வேண்டும். இந்தப் பாண்டியர் சமணர்களாயினும் தமிழை வளர்ப்பதில் பின்னடைந்ததில்லை என்பதைச் சேந்தன் காலத்தில் இயற்றப்பட்ட தமிழ் நிகண்டாகிய சேந்த திவாகரம் காட்டும். தமிழில் சமண காவியங்கள், ஏடுகள் பல இக்காலத்தன ஆதல் கூடும்.

முந்தியவர் செய்திகள் எதுவாயினும் நான்காவது இடைக் காலப் பாண்டியன் அரிகேசரி மாறவர்மனே பாண்டிய அரசைப் பேரரசாக்கிய முதற் பெரும்பாண்டியன் என்பதில் ஐயமில்லை.

தேவாரத்தாலும் பெரிய புராணத்தாலும் சிவநெறித் திருத் தொண்டர் அறுபத்து மூவருள் ஒருவராகப் பாடப் பட்ட நின்ற சீர்நெடுமாறன் இந்த அரிகேசரி மாறவர்மனே என்பதும் உறுதி. முதல் மகேந்திரவர்ம பல்லவனைச் சமண நெறியிலிருந்து திருநாவுக்கரசர் சிவ நெறிக்கு மாற்றியருளியதுபோல, இந்தப் பாண்டியனையும் அதே காலத்தை அடுத்து வாழ்ந்த திருஞான சம்பந்தர் சிவ நெறிக்கு மாற்றியதாக அறிகிறோம். இவன் அரசி பாண்டி மாதேவி என்றும் சோழன் மகளாதலால் வளவர்கோன் பாவை என்றும் பாட்டில் பாராட்டப் பெற்றுள்ளார். அரசியாரும் அமைச்சராகிய குலச்சிறையாரும் அரசனைச் சிவநெறிக்குக் கொண்டுவர உதவினதனால், அவர்களும் அறுபத்து மூவருள் இடம்பெற்றுள்ளனர்.

சாளுக்கிய—பல்லவ—பாண்டியப் போட்டி:

நெல்வேலிப் போர் கி. பி. 675.

திருத்தொண்டத் தொகைபாடிய சுந்தரமூர்த்தி நாயனார் எட்டாம் நூற்றாண்டிலேயே வாழ்ந்தவர். அரிகேசரி கொண்ட நெல்வேலிப்போர் வெற்றியின் புகழ் அவர் காலம் வரை பேரொளி வீசியிருந்தது என்பதை அவர் பாடல் காட்டுகிறது. நூறு ஆண்டுகள் கழித்தும் அவன் தலைசிறந்த பெருஞ் செயலாக அவர் அதையே குறிக்கிறார்.

> ''நிறைகொண்ட சிந்தையால்
> நெல்வேலிகொண்ட
> நின்ற சீர்நெடுமாறன்
> அடியார்க்கும் அடியேன்!''

இப்போர் மன்னனுக்கு வீரப்புகழ் மட்டுமே தருவதாயிருந்தால், சமயவாணராகிய நாயனார் இது ஒன்றையே அவன் பெரும் புகழாகப் பாடியிருக்கமாட்டார் என்று துணிந்து கூறலாம். அது சமயம், மொழி, நாடு ஆகிய மூன்றும் காத்த தேசியப் போராகவே நாயனார் கண்ணிலும், அவர் காலத்தவர் கண்ணிலும் தோன்றியிருக்கவேண்டும். சுந்தரமூர்த்தி நாயனார் காலம் நெடுமாறன் காலத்திலிருந்து மிகவும் மாறுபட்டதல்ல என்பதும், பல்லவர் பாண்டியப்

போட்டி அக் காலத்தில் ஓய்வுற்று விடவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது.

பேரரசுப் போட்டியின் வரலாற்றில் சாளுக்கிய பல்லவப் போட்டிக் காலத்துக்கும், பல்லவ பாண்டியப் போட்டிக் காலத்துக்கும் இடைப்பட்டது நெல்வேலிப்போர். அத்துடன் அது சுந்தரமூர்த்தி நாயனார் கண்ணில் சைவரும் தமிழரும் ஆன இரு பேரரசர்—பாண்டிய பல்லவர்—சமணனும் வடுகனுமான சாளுக்கியப் பேரரசன் முதலாம் விக்கிரமாதித்தனை எதிர்த்துப்போராடிப் பெற்ற வெற்றியாகத் தோன்றியிருக்க வேண்டும். இம் முறையில் வேறெந்தப் போரையும் விட இந்தப் போர் ஒரு பாண்டியனையும் ஒரு பல்லவனையும் நாயன்மாராகப் பாடிய சுந்தரமூர்த்திக்கு முதல்தரத் தேசீயப் போராகவும், நின்ற சீர் நெடுமாறன் தமிழகத்துக்கு ஆற்றிய அரும்பெரும் செயலாகவும் தோற்றியிருத்தல் இயல்பே. நெல்வேலிப் போரைப்பற்றிச் செப்பேடுகள் மிகுதி விவரம் தரவில்லை. அதைக் குறித்த பாண்டியர் செப்பேடு வேள்விக்குடிச் செப்பேடு ஒன்றே. அது,

''வில்வேலிக் கடற்றானையை
நெல்வேலிச் செருவென்றும்''

என்ற இரு பாதியடியில் மற்றப் போர்களிடையே ஒரு போராக அதைக் கூறியுள்ளது. இதனால் நெல்வேலி என்பது திருநெல்வேலியே என்றும் நெல்வேலிப்போர் சேரருடன் ஆற்றிய ஒரு சிறுபோரே என்றும் பல ஆசிரியர்கள் கருதிப் போந்தனர். பாண்டியர் ஆதாரங்களை மட்டுமன்றிப் பல்லவர் சாளுக்கியர் முதலிய வெளியார் ஆதாரங்களையும் ஒப்பிட்டுக் கண்ட ஆராய்ச்சியாளர் சுந்தரமூர்த்தியின் கண்கொண்டு நோக்கி மெய்நிலை கண்டுள்ளனர்.

'நெல்வேலி' திருநெல்வேலியல்ல, தென்னார்க்காட்டு மாவட்டத்திலுள்ள நெய்வேலியே என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். அது புதுக்கோட்டையருகிலுள்ள நெய்வேலியாகவும் இருத்தல் கூடும்.

இப்போரில் பாண்டியன் எதிரி பாண்டியப் பேரரசின் எல்லையில் இருந்த பல்லவப் பேரரசனல்ல. அப்பேரரசின் எல்லை தாண்டி நிலவிய சாளுக்கியப் பேரரசன் முதலாம் விக்ரமாதித்தியனேயாவன்.

வாதாபி அழிவால் சாளுக்கிய மரபுக்கு ஏற்பட்ட திண்ணிய கறையைப் புதுவெற்றிகளால் போக்க வீரனான விக்கிரமாதித்தன் துடித்தான். ஆனால் வீரத்தில் தந்தைக்குப் பிற

படாத விக்கிரமாதித்தன் விவேகத்தில் பிற்பட்டு விட்டான் என்று கூற வேண்டும். புலிகேசியைப் போல அவன் பல்லவருக் கெதிராகப் பாண்டிய சேர சோழர் கங்கர் உதவி திரட்டத் தவறினான். தன் வலிமையிலேயே செருக்கியவனாய்க் கடல் போன்ற தானைகளுடன் பல்லவநாட்டில் காட்டாறுபோல் பாய்ந்து சூறாவளி போல் சுழன்றடித்தான். பின் தமிழக முழு வதிலும் தன் புகழ் நாட்ட எண்ணி, பல்லவப் பேரரசின் எல்லை கடந்து சோழ நாட்டில் புகமுனைந்தான்.

பல்லவனை மட்டுமன்றித் தமிழரசர்கள் அனைவரையுமே துச்சமாக மதித்த விக்கிரமாதித்தன் மீது பாண்டியன் அரி கேசரி நெடுமாறன் கொதிப்படைந்தான். அவன் மீது தன் பேரரசுப் படைகளுடனும் சோழர் துணைப்படைகளுடனும் சீறிப் பாய்ந்தான். இதன் விளைவாக ஏற்பட்டதே நெல்வேலிப் போரின் மங்காப் புகழ் வெற்றி! அடங்கொண்டு தமிழகத்தில் புகுந்த விக்கிரமாதித்தன் வெற்றியெழுச்சிக்கு இது முற்றுப் புள்ளி வைத்தது. அவன் முன்வைத்த காலைப் பின்வைத்துமீட் டும் பல்லவ எல்லை கடந்து தன் பேரரசுக்கு ஓடமுனைந்தான்.

சாளுக்கிய வெற்றிகளால் திகிலடைந்திருந்த பல்லவன் இப்போது அவனைத் தன் எல்லையில் மீட்டும் மீட்டும் முறி யடிக்க நல்ல வாய்ப்புக் கிடைத்தது. தமிழகத்தின் தென் திசைப் பேரரசு தமிழர் என்ற பொது உணர்ச்சியினால் உந் தப்பட்டுத் தன் அணிமை எதிரியான பல்லவப் பேரரசின் எதி ரியை முறியடித்து அதற்கு வலுத்தந்தது.

இவ்வெற்றி பாண்டியன் ஒருவனுடைய வெற்றியன்று, தமிழ் மன்னர் அனைவரின் வெற்றி என்பதைச் சாளுக்கியரின் கேந்தூர்ப் பட்டயம் சுட்டிக்காட்டுகிறது. தமிழ் மன்னர் அனைவருமே கூடிப் போரிட்ட போர்கள் பல—இது அத்த கைய முதற்போரும் அல்ல, இறுதிப்போரும் அல்ல. ஆனால் பாண்டியர் தலைமையில் தமிழர் ஒன்றுபட்ட வெற்றிப் போர் களில் இது முதல் போர் ஆகும்.

> 'வில்லவனை நெல்வேலியிலும்
> விரிபொழில் சங்கர மங்கைப்
> பல்லவனையும் புறம் கண்ட
> பாராங்குசஉன் பஞ்சவர் தொன்றலும்'

என்று சின்னமனூர்க் கல்வெட்டுக் கூறுகிறது. இங்கே வில்ல வன் என்று கூறியதால் போர் சேரனை எதிர்த்த போர் என் றும். சங்கரமங்கைப்போரும் பராங்குசனுக்கு உரிமையாக் கப்பட்டிருப்பதால், அரிகேசரி மாறனும் பராங்குசனும் ஒரு

வரே என்றும் பலர் கருத இடமேற்பட்டுள்ளது. இங்கே பொதுவாகப் பாண்டியர் செயல் குறிப்பிடப்பட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது.

**பெரிய புராணப் பாட்டு எங்கே?**

நெல்வேலிப் போர் கி. பி. 675-ல் நடைபெற்றது என்று உறுதியாகக் கூறலாம். ஆகவே நெடுமாறன் 670 வரை யன்றி 675 கடந்தும் ஆட்சிசெய்திருந்தான் என்றே கொள்ளல் வேண்டும்.

வரலாற்றுணர்வு மிக்கவரான சேக்கிழார் இப்போரின் முழு உண்மையும் ஆய்ந்துகண்டு பாடியிருப்பது காணலாம், 'சேயபுலத் தெவ்வர் தம் கடல் போன்ற தானையை நெல் வேலியில் அழித்தார்' என்றும், 'வடபுலத்து முதல் மன்னன் படைசரிந்ததும் நெடுமாறன் வாகை புனைந்தான்' என்றும் அவர் பாடினார். 'முதல் மன்னர்' என்ற தொடர் எதிரியான சாளுக்கிய விக்கிரமாதித்தன் வடதிசையில் பேரரசாண்ட பேராற்றல் உடையவன் என்றும், அவனை வென்ற வெற்றி அருமை உடைய தென்றும் நன்கு குறித்துக் காட்டுகிறது.

**அரிகேசரி நெடுமாறனின் பிறபோர்கள்: பாழி, செந்நிலம்**

அரிகேசரி மாறவர்மனுக்குரியனவாக மற்றும் இரண்டு வெற்றிகள் குறிக்கப்பட்டுள்ளன. அவையே பாழி செந்நிலம் ஆகிய இரண்டு போர்க்களங்களின் வெற்றிகள் ஆகும்.

> சூழ் யானை செல உந்திப்
> பாழி வாய் அமர் கடந்தும்,

என்று பாழிப் போரைப் பற்றியும்,

> கைந் நிலத்த களிறு உந்திச்
> செந்நிலத்துச் செரு வென்றும்

என்று செந்நிலப்போரைப் பற்றியும் வேள்விக்குடிச் செப் பேடுகள் குறித்துள்ளன. இச் செப்பேடுகளில் நெல்வேலிப் பெரும் போரையும் இந்தப் போர்களையும் ஒரே பொது மொழியில் புகழ்வதே அதன் விளக்க மற்ற தன்மையை எடுத் துக் காட்டும். இப்போர்கள் எங்கே யாரை எதிர்த்து நடை பெற்றன என்பது குறிக்கப்படவில்லை. ஆனால் முன்பின் வரி களிலே, எதிரிகளாகிய பரவரைப் பாழ்படுத்தியதும், குறு நாட்டவர் குலங் கெடுத்ததும் கூறப்படுகின்றன. அத்துடன் சேரநாட்டு வெற்றி சற்று விரிவாகக் கூறப்படுகிறது.

''பார் அளவும் தனிச் செங்கோல்
கேரளனைப் பல முறையும்
உரிமைச் சுற்றமும் மாவும் யானையும்
புரிசை மாவதிப் புலியூர் அப்பகல்
நாழிகை யிறவாமல் கோழியுள் வென்றுகொண்டும்''

என்ற அடிகளால் கேரளனை வென்று அவன் குடியினரைச் சிறைப்படுத்தி, யானையும் குதிரையும் கைக்கொண்டான் என்றும், அத்துடன் ஒரு பகலிலேயே சோழநாட்டு உறையூரை வென்றுகொண்டான் என்றும் அப்பட்டயம் தெரிவிக்கிறது.

பாழி, செந்நிலப் போர்கள் பல்லவனை எதிர்த்த போர்களாய் இருக்கலாம் என்று சிலர் கருதியுள்ளனர். ஆனால் இப் பாண்டியன் எதிரிகளுள் இன்னும் பல்லவன் குறிக்கப்படவில்லை. பல்லவ பாண்டியப்போட்டி அடுத்த ஆட்சியுடனேயே தொடங்குகிறது என்னலாம். எனவே பாழி, செந்நிலப் போர்கள் சேரனையோ, பரவர் முதலிய குடிமரபினரையோ எதிர்த்து நிகழ்த்தப்பட்ட போர்களாகவே இருத்தல் கூடும். ஆயினும் மற்ற வெற்றிகளிலிருந்து அவை தனித்தே குறிக்கப்படுகின்றன. அதே சமயம் இப் பாண்டியன் வெற்றிகளுள் உறையூர் கூறப்படுவதால் செந்நிலப் போர் பல்லவனையோ, அவன் சார்பில் சோழனையோ எதிர்த்து வென்ற வெற்றியாய் இருத்தல் கூடும்.

பாழி என்பது குடகு நாட்டிலுள்ள சங்க காலத்துச் செருப் பாழியாகவே இருத்தல் கூடாததன்று. அடுத்த தலை முறைப் பாண்டியர்கள் வரலாற்றில் அந்நாட்டுடன் பாண்டியர் முன்னைய போர்த் தொடர்பு குறிக்கப்படுகிறது.

'உதய கிரிமத் தியத்து உறு சுடர்போலத்
தெற்றெனத் திசை நடுங்க மற்று அவன் வெளிப்பட்டு'

என்று வேள்விக்குடிச் செப்பேடு அவன் ஆட்சித் தொடக்கத்தை ஆரவாரமாகக் குறிக்கிறது. இது கவிதைப் புனைந்துரையாயினும், அதன் தொனியே அவன் பாண்டிய மரபுக்குப் பேரரசு நிலை அளித்தான் என்று குறிப்பதாகும்.

## பெருவள நல்லூர்ப் போர் கி. பி. 675

பெருவள நல்லூர் என்பது பண்டை உறையூர் அல்லது இன்றைய திருச்சிராப்பள்ளிக்கு அருகிலே, பத்துக் கல் தொலைவுக்கு உள்ளேயே இருந்த ஓர் ஊர். இங்கே நடந்த போரில் பல்லவன் முதலாம் பரமேசுரவர்மன் (670-685) சாளுக்கியன்

முதலாம் விக்கிரமாதித்தனுடன் போர் செய்தான். இப்போர் நெல்வேலிப் போருக்குப் பின், அதே ஆண்டில் நடைபெற்றது. உண்மையில் அது நெல்வேலிப்போருக்கு முன்னுகவும் பின்னுக வும் நிகழ்ந்த சாளுக்கியப் படையெடுப்பின் கடைசிக்கட்டமே யாகும்.

முதலாம் பரமேசுவரவர்மன் பட்டத்துக்கு வந்த ஆண்டி லேயே சாளுக்கிய விக்கிரமாதித்தன் படையெடுப்புத் தொடங்கி விட்டது. தவிசேறிய புதிய அரசன் மீது விக்கிர மாதித்தன் கடல் போன்ற பெரும் படைகள் திடுமெனப் பாய்ந்து, தலைநகராகிய காஞ்சியையே கைப் பற்றிக் கொண் டன. கி. பி. 670 லிருந்து 674 வரை காஞ்சிநகரும் பல்லவப் பேரரசும் சாளுக்கியப் படைகளின் பேரழிவுக்கு ஆளாயின. இக் காலத்திய சாளுக்கியர் கோலாகலமான வெற்றிகளை அவர்களின் கட்வல், சோர, கேந்தூர்ப் பட்டயங்கள் பலபடத் தெரிவிக்கின்றன.

''அகழி சூழ்ந்த காஞ்சிமா நகருக்குள் விக்கிரமாதித்தன் சித்திர காந்தம் என்னும் தன் குதிரை மீதமர்ந்து புகுந்து, பல்லவ மன்னர் தன் திருவடிகளை முத்தமிடும்படி செய்தான். புகழ் மிக்க மாமல்லன் (நரசிம்ம வர்மன்) பெயரனுன பரமேசு வர வர்மனைப் புறமுதுகிட்டோடச்செய்ததனுல் அவன் 'இராச மல்லன்' என்ற பட்டப் பெயர் புனைந்து கொண்டான்'' என்று கட்வல் பட்டயம் புனைந்து கூறுகின்றது.

விக்கிரமாத்தித்தனுடைய திடீர்த்தாக்குதலைச் சமாளிக்க இயலாது பல்லவப் படைகள் பின்னடைந்து சென்றிருந்தன என்பதிலும், தடுப்பவர் யாரும் இல்லாமல் விக்கிரமாதித்தன் பல்லவப் பேரரசின் எல்லை முழுதும் கடந்து அதன் தென் கோடிவரை சென்றிருக்க வேண்டும் என்பதிலும் ஐயமில்லை. ஏனெனில் அவன் படைகள் நிலையாக உரக புரத்தையே தம் மூலதள மாக்கி யிருந்தன என்று கேந்தூர்ப் பட்டயங்கள் கூறு கின்றன. உரகபுரம் என்று இங்கே கூறப்படுவது இன்று திருச்சிராப்பள்ளியின் பகுதியாக உள்ள பழய உறையூர் மாநகரே யாகும். இதிலிருந்தே சாளுக்கியப் படைகள் பெருவள நல்லூர்ப் போர்க் களத்துக்கு முன்னேறி யிருந்தனர் என்று உய்த்துணரலாம்.

நெல்வேலிப்போருடன் சாளுக்கிய பல்லவப்போராட்டம் சாளுக்கிய தமிழகப் போராட்டமாயிற்று. ஆனுல் அப்போர் முடிவில் அது மீண்டும் பல்லவ சாளுக்கியப் போராட்ட மாகவே நடைபெற்றது. ஆனுல் சாளுக்கிய பல்லவர் தொடர்பு தலைமாறி விட்டது. இதுவரை பல்லவப்பட்டயங்கள் மௌனம்

சாதித்தன. சாளுக்கியப் பட்டயங்கள்முழங்கின. ஆனால் இதன் பின் பல்லவப் பட்டயங்கள் முழங்கின. சாளுக்கியப் பட்டயங்கள் மௌனம் சாதித்தன. ஆயினும், 'தமிழரசர் அனைவரும் கூடி விக்கிரமாதித்தனை எதிர்த்தனர்' என்ற சாளுக்கியரின் கேந்தூர்ப் பட்டயக் கூற்று ஒன்றே போரின் திரும்பு கட்டத்தையும், அதற்கான காரணத்தையும் சுட்டிக் காட்டுகிறது. பாண்டியரின் சின்னமனூர்ச் செப்பேடும் சுந்தர மூர்த்தி நாயனாரின் தேவாரப் பாடலும் இதற்கு உரை விளக்கம் தருகின்றன.

கூரம் பட்டயம் பெருவள நல்லூர்ப் போரைப் பிற்காலச் செயற்கைக் காவியங்களின் பகட்டாரவாரப் பாணியில் சொல் அணி அடுக்குகளுடன் விரிவாக வருணிக்கிறது.

''சாளுக்கியப்படைவீரர் தொகை பல நூறாயிரக்கணக்கில் இருந்தது ஆனால் பல்லவன் பரமேசுர வர்மன் 'அரிவாரணம்' என்ற தன் போர் யானை மீதும், 'அதிசயம்' என்ற தன் போர்க் குதிரை மீதும் அமர்ந்து சுழன்று சுழன்று சென்று சாளுக்கியப் படையணிகளாகிய அலை கடலைக் கலக்கினான். சாளுக்கியவீரர் வெருண்டோடினர். விக்கிரமாதித்தன் படையிழந்து தன்னந் தனியனாய் ஒரு கந்தலாடையால் தன்னை மறைத்துக்கொண்டு ஓடினான்.''

உதயேந்திரப் பட்டயம் போர் முடிவைச் சுருக்கமாகத் தெரிவிக்கிறது.

பெருவள நல்லூர்ப் போரில் விக்கிரமாதித்தன் தோற்றுத் தன் தாயகத்துக்கே ஓடிவிட்டான்.

பல்லவப் பேரரசின் தென்கோடியிலுள்ள பெருவள நல்லூரிலேயே போர் நடந்ததால் சாளுக்கியப் படைகள் அத் தோல்வியின் பின் அப்பேரரசின் பரப்பு முழுதும் தாண்டியே தாயகம் செல்ல முடியும். இந்த அளவுக்கேனும் பெருவள நல்லூர்த் தோல்விக்குப் பின் அவை சீர் குலையா திருந்திருக்க வேண்டும் என்று நாம் நம்பலாம். எனவே சாளுக்கியர் பெருவள நல்லூரிலேயே முற்றிலும் சீர்குலைந்தோடினர் என்பது பல்லவரின் மிகை யுரையாகவே இருக்கக்கூடும். அவர்கள் தோற்ற பின்னும் போரிட்டுக்கொண்டே எல்லை தாண்டியிருக்கவேண்டும். ஆயினும் நெல்வேலிப் போரும் பெருவள நல்லூர்ப் போரும் தமிழகத்துக்குத் தெம்பும் வலுவும் தந்தன என்பதில் ஐயமில்லை. களப்பிரர் படையெழுச்சியால் உருக் குலைந்து நின்ற தமிழகம் இடைக்கால முதற் பாண்டியப் பேரரசின் ஆட்சியிலேயே மீண்டும் நிமிர்ந்து நின்று வெற்றி எக்களிப்புடன் மறுபடியும் வடக்கு நோக்கத் தொடங்கிற்று

என்னலாம். அடுத்த தலைமுறைகளும் அதனைத் தொடர்ந்து வந்த சோழப் பேரரசர் ஆட்சியும் இதைத் தெளிவாகக் காட்டுகின்றன.

பல்லவப் பேரரசில் துளிர்த்துப் பாண்டியப் பேரரசில் தழைத்த இந்தத் தமிழகத்தின் மறுமலர்ச்சி சோழப் பெரும் பேரரசில் கிட்டத்தட்ட மீட்டும் சங்ககால, சங்க காலத்துக்கு முற்பட்ட பெருமையை அடையும் வகையில் புது மலர்ச்சி எய்திற்று என்னல் வேண்டும்.

நெல்வேலியும் பெருவளநல்லூரும் தரும் படிப்பினைகள் இவையே.

## மருதூர், செங்கோடு, புதான்கோட்டுப் போர்கள்

அரிகேசரி மாறவர்மனுக்குப்பின் பாண்டிய அரியணை ஏறியவன் பாண்டியன் கோச்சடையன் இரணதீரன் என்பவன். அவன் 670-லிருந்து 710-வரை ஆண்டதாகக் கணிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நெல்வேலிப்போர் அரிகேசரிக்கே உரியதாகத் தெரியவருவதாலும், அது 675-ல் நடைபெற்றது என்பது உறுதியாகத் தெரிவதாலும், கோச்சடையன் ஆட்சி அதன் பின்னரே தொடங்கியிருத்தல் என்னலாம்.

இவன் தென்னவானவன், செம்பியன், சோழன், மதுர கருநாடகன், கொங்கர் கோமான் முதலிய புகழ்ப் பெயர்கள் தாங்கினான். இவை அவன் வெற்றிகளையும், அவன் அரசியல் தொடர்புகளையும், ஆற்றல் எல்லையையும் காட்டுகின்றன.

வேள்விக்குடிச் செப்பேடுகள் இவ்வரசனைப்பற்றிக் குறிக்கும் முதற் செய்தி மருதூர், செங்கோடு, புதான் கோட்டுப் போர்களேயாகும்.

> "பொருதுஊரும் கடல்தானையை
> மருதூரில் மரண்பு அழித்து"

என்ற அடிகள் மருதூர் வெற்றியைக் குறிக்கின்றன. ஆயினும் அது யாருக்கெதிரான வெற்றி என்பதை அது வெளிப்படத் தெளிவாகக் குறிக்கவில்லை. இதனால் ஆராய்ச்சியாளர் திரு. டி. வி. சதாசிவப் பண்டாரத்தார் அவர்கள் இப்போரும் இதற்கடுத்துக் குறிக்கப்பட்ட மங்களாபுரம் போரும் இரண்டுமே சாளுக்கியருக் கெதிராகப் பாண்டியர் ஆற்றிய போர்களே என்று கொண்டுள்ளார். "மேலைச் சாளுக்கிய மன்னனாகிய முதல் விக்கிரமாதித்தனைத் திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள மருதூரிலும் மங்களாபுரத்திலும் போரில்வென்று புறங்

காட்டி ஓடச்செய்த புகழுடையவன் இவ்வேந்தன்" என்று அவர் குறிக்கிறார். மருதூரும் மங்களாபுரமும் இரண்டிடங்களும் நெல்வேலியையும் பெருவளநல்லூரையும் போலவே திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ளவை என்றும், இரண்டு போர்களுமே நெல்வேலி வெற்றியைத் தொடர்ந்து, ஆனால் பெருவள நல்லூருக்கு முன் நடைபெற்றன என்றும் அவர் கருதினராதல் வேண்டும். ஆனால் வேள்விக்குடிப் பட்டயத்தின் வாசகங்களை நோக்க, மருதூர், செங்கோடு, புதான்கோடு ஆகிய போர்களில் உள்ள எதிரிகள் வேறு, மங்களாபுரத்திலுள்ள எதிரிகள் வேறு என்றே எண்ண இடமேற்படுகிறது. அது போலவே, அவ்விருசார்ப் போர்களும் நெல்வேலியையடுத்தோ, ஒன்றையொன்றடுத்தோ நிகழ்ந்தன என்றும் கொள்ள இடமில்லை.

மருதூர்ப்போர் ஆய்வேளை எதிர்த்து வெற்றி கண்ட போரே என்று கருதுவதே நேர்மையானது. ஏனெனில் மருதூர்ப் போரைப் பற்றிய மேலே காட்டிய அடிகளை யடுத்து, அதன் தொடர்ச்சியாகவே,

> "ஆய்வேளை அகப்படவே
> என்னுமை எறிந்து அழித்து"

என்றும்,

> "செங்கோட்டும் புதான்கோட்டும்
> செருவென்று அவர் சினம் தவிர்த்து"

என்றும் ஆய்வேள் வெற்றியும் செங்கோட்டுப் புதான்கோட்டுப் போர்களும் குறிக்கப்பட்டுள்ளன. பிந்திய இரண்டு போர்களிலும் எதிரியாகச் சுட்டப்பட்ட 'அவர்' முன் கூறப்பட்ட ஆய்வேளேயாவன் என்பதில் ஐயமில்லை. ஆய்வேள் எறிந்து அழிக்கப்பட்டதும் முன் போரிலேயே என்பதும் இதனால் தெளிவுபடுகிறது.

மருதூர்ப் போரில் ஆய்வேளின் ஆட்சி ஆற்றல் அழிக்கப்பட்டாலும், அவன் அதில் பாண்டியன் கைப்படவில்லை. பணியவுமில்லை. அப்போரின் தோல்வியால் அவன் புண்ணேறுண்ட புலிபோல் சீற்றங்கொண்டு மீண்டும் மீண்டும் பாய்ந்தெழுந்து வந்தான். செங்கோட்டிலும் புதான்கோட்டிலும் போரிட்டு முறியடிக்கப்பட்ட பின்னர், அவன் உயிரிழந்தோ அல்லது பணிந்தோ சினந்தணிந்தான். இதுவே செப்பேட்டு வாசகங்கள் நமக்குத் தரும் சித்திரம் ஆகும்.

ஆய்வேள் என்பவன் சங்கப்பாடல்களில் நாம் கேள்விப்படும் பொதிகை மலை ஆயின் மரபில் வந்தவனே. சங்ககால

ஆய்மரபினரின் தலை நகரம் ஆய்குடி. அது இன்றும் அப்பெயருடன் திருநெல்வேலி மாவட்டத்தில் நிலவுகின்றது. கோச்சடையன் காலத்திலும் அதுவே அவன் தலை நகராய் இருந்திருக்கக்கூடும். பின் நாட்களில் இம்மரபினர் திருநெல்வேலி மாவட்டத்தின் தென்மேற்குப் பகுதியிலுள்ள நாங்குனேரி வட்டம் முழுவதும் அதன்பின் தென்திருவாங்கூர் முழுவதும் கைக்கொண்டு ஆண்டதுண்டு. அடிக்கடி அவர்கள் திருவாங்கூர் முழுவதும் பரவியதும் உண்டு. ஓரே ஒரு தடவை (14—ம் நூற்றுண்டில்) அம்மரபினர் தமிழக முழுவதும் வென்றதும் உண்டு. இன்றைய திருவாங்கூர் மன்னர் இவன் மரபினரே யாவர்.

சங்ககாலத்தில் ஆய்வேள் வலிமை வாய்ந்த சிற்றரசனுய் இருந்தான். கோச்சடையன் காலத்தில் அவன் இன்னும் வலிமையுடையவனுக வளர்ந்து வந்திருக்க வேண்டும். ஏனெனில் அவனை வென்ற செய்தி பேரரசரை எதிர்த்துப் பெற்ற வெற்றிகளுக்கு ஒப்பாக, அவற்றிலும் முனைப்பாகக் குறிக்கப்பட்டுள்ளது. ஆய்வேளும் பிறவேளிர்களும் சங்ககாலத்தைப்போலவே இடைக்காலத்திலும் பிற்காலத்திலும்கூட அரசரை வெல்லவும் அரசரைத் தாண்டிப் பேரரசராகவும் விதிர்விதிர்ப்புடையவராகவே இருந்தனர் என்று காண்கிருேம். அவர்கள் தமிழக வரலாற்றில் ஆற்றியுள்ள துணுக்குறும் செய்திகள் இதற்குச் சான்று தரும்.

மருதூர் திருச்சிராப்பள்ளியருகிலுள்ள ஊர் என்று தோன்றவில்லை. ஆராய்ச்சியாளர் அது பாண்டி நாட்டிலேயே உள்ள திருப்புடைமருதூரே என்று கருதுகின்றனர். இது உண்மையில் திருநெல்வேலி மாவட்டத்தில் இன்று அம்பாசமுத்திரம் என்று அழைக்கப்படும் நகரின் பழம்பெயரே என்றும் அறிகிருேம். அடுத்த பாண்டிய அரசர் காலங்களில் அது அவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது என்று அறிகிருேம். ஆய்வேளின் சங்ககாலத் தலைநகருக்கு அண்மையிலேயே அது இருந்ததனுல், அவ்விடத்தின் பெயரால் புகழ் அடைந்துள்ள போர் அவனை எதிர்த்து ஆற்றப்பட்டபோராய் இருத்தல் இயல்பே என்னலாம்.

செங்கோடு, புதான்கோடு ஆகிய இடங்கள் எங்கே இருந்தன என்று அறியக்கூடவில்லை. ஆனுல் தென்திருவாங்கூர்—திருநெல்வேலி மாவட்ட இணைப்பாய் இயலும் செங்கோட்டையையும் அதங்கோடு முதலிய தென்திருவாங்கூர்ப் பழம் பதிகளையும் அவை நினைவூட்டுகின்றன என்பதில் ஐயமில்லை. அவை ஆய்வேள் நாட்டின் பகுதிகளாகவே இருந்திருத்தல் கூடும். அதங்கோடு என்பது நாகர்கோவிலையடுத்த திருவதங்

கோடு அல்லது திருவாங்கோடு என்ற திருவாங்கூரின் பழய தலைநகர். அதுவே தொல்காப்பிய காலப் பெரும்புலவர் அதங்கோட்டாசான் பிறப்புகம் என்பதும் இங்கே நினைவிற் கொள்ளத்தக்கது.

மங்களாபுரம் போர்

"கொங்கலரும் நறும் பொழில்வாய்க்
குயிலோடு மயில் அகவும்
மங்களாபுரமெனும் மாநகருள்
மாரதரை எறிந்தழித்து"

என்று கொஞ்சும் கவிமொழியில மங்களாபுர வெற்றி குறிக்கப்படுகிறது. இங்கும் 'மாரதர்' என்ற சொல்லைத் தவிரப் போரில் எதிரி யார் என்பதை அறிய வேறு வழியில்லை. ஆனால் 'மாரதர்' என்பது புராண மரபு வழியாகப் பேரரசரைக் குறித்த தொடர் ஆகும். 'பெருந்தேர் வேந்தர்' என்பது அதன் பொருளாகும். இதுவும் 'மதுர கருநாடகன்' என்ற இப் பாண்டியன் புகழ்ப் பெயருமே எதிரி கருநாடக நாட்டிலுள்ள ஒரு பேரரசன் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன. கோச்சடையன் நாளில் இத்தகைய பேரரசு சாளுக்கியப் பேரரசு ஒன்றே.

பாண்டியப் பேரரசுக்கும் சாளுக்கியப் பேரரசுக்கும் இயல்பாக நேரடிப்போட்டி இந்நாளில் ஏற்படக் காரணம் கிடையாது. ஏனெனில் சாளுக்கியப்பேரரசின் எல்லையுடன் தொடர்புடைய பேரரசு பல்லவப்பேரரசேயாகும். முதலாம் மகேந்திரவர்மன் நாட்களில் சாளுக்கியப் பேரரசர் பல்லவப் பேரரசுக்கெதிராகப் பாண்டிய சேர சோழர் ஆதரவை பெரிதும் நாடினர் என்று காண்கிறோம். ஆனால் முதலாம் விக்கிரமாதித்தன் பல்லவப் பேரரசின் எல்லை கடக்கத் துணிந்ததாலேயே, சாளுக்கிய பாண்டியக் கைகலப்புக்கு இடம் ஏற்பட்டது. ஆனால் முதல் கைகலப்பே சாளுக்கியர் பேராற்றலுக்கு ஒரு அடியாகவும் அவர்கள் புகழுக்கு ஒரு கறையாகவும் அமைந்தது. அடுத்த சில தலைமுறைகளுக்குச் சாளுக்கிய பல்லவப் போட்டி, பகைமை தாண்டிச் சாளுக்கிய—பாண்டியப் போட்டியும் பகைமையும் ஏற்பட இது காரணமாயிற்று. ஆயினும் கீழ்கரையோரம் பல்லவப் பேரரசைக் கடக்காமல் இரு பேரரசுகளும் மோதிக்கொள்ள வழியில்லாதிருந்தது. உள்நாட்டுப் பகுதியிலோ கங்க அரசர் இருந்தனர். அவர்கள் தொடக்கத்தில் சாளுக்கியரை ஆதரித்துப் பல்லவரைத் தாக்கினர். பின் பல்லவர் நண்பராய் இருந்தனர். கோச்சடையன் காலத்துக்குப் பின்னரே அவர்கள் பாண்டியர் நண்பராய்

பாண்டியர் வடபுல எதிர்ப்புக்கு உதவினர். இவற்றை மனதுட் கொண்டால் மங்களாபுரம் போரின் போக்கு விளங்கும்.

மங்களாபுரம் என்பது தென்கன்னட மாவட்டத்திலுள்ள மங்களூரே என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இடைக் காலப் பாண்டியர் வரலாற்றில் இது அடிக்கடி இடம் பெறு கிறது. குடகு நாட்டு வரலாற்றிலும் பாண்டியர் சோழர் படையெடுப்புப் பற்றிய சின்னங்கள் பல உண்டு. குடகு நாட் டின் மிகப்பழமை வாய்ந்த வரலாறு இத்தமிழகத் தொடர்பு களுடனேயே தொடங்குகிறது என்னலாம். கீழ் கரையிலும் உள் நாட்டிலும் இல்லாத சாளுக்கிய பாண்டியத் தொடர்பு, மிகச்சிறு சிற்றரசுகளே மிகுதியாகஇருந்த மேல்கரை வழியாக முதலில் பாய்ந்தது என்பதை மங்களாபுரம் போர் காட்டு கிறது.

மங்களாபுரம் அல்லது மங்களூரில் பாண்டியன் எதிரி ஒரு மராட்டிய அரசன் என்று பல ஆசிரியர்கள் குறித்துள்ளனர். 'மாரதர்' என்பதை அவர்கள் 'மராடர்' என்று கொண்டிருக் கக்கூடும். ஆனால் அவர்கள் குறிப்பிடும் செய்தியே 'மாரதர்' சாளுக்கியரே என்பதைக் காட்டும்.

'மங்களாபுரத்தை ஆண்ட பேரரசன் தன் இறுதிப் படுக் கையின்போது தன் பிள்ளைகளை அழைத்தான். பாண்டியர் கையில் தான் அடைந்த அவமதிப்பை எண்ணி எண்ணி அவன் குமுறினான். அந்த அவமதிப்புக்குப் பழிவாங்கி அந்தக் கறை யைக் கழுவாமல் இறப்பதுபற்றி அவன் மிகவும் வருந்தினான். அவன் பிள்ளைகள் அதனைத் தாம் கட்டாயம் செய்வதாக வாக் களித்தனர். அதன்படி நடந்த போரே மங்களாபுரம்போர். இது அவர்கள் கூற்று.

முன்பு பாண்டியர் கையில் அவமதிப்படைந்த அரசன் சாளுக்கியனே தவிர வேறு எந்த வடபுல மன்னராகவும் இருக்க முடியாது. பாண்டியரை மங்களாபுரத்தில் எதிர்த்த அரசனும் விக்கிரமாதித்தனுக்குப் பின்வந்த சாளுக்கியப் பேரரசன் விசயாதித்தியனே.

மங்களாபுரம் வெற்றியால் மேல்கொங்கு என்று அந் நாள் அழைக்கப்பட்ட வடமலையாள தென் கன்னடக்கரை பாண்டியன் ஆட்சிக்குட்பட்டது. இச்செயலால் கோச் சடையன் தன் பின்னோருக்குப் பெரும் புகழும் பொறுப்பும், அத்துடன் பெருந்தொல்லையும் மரபுரிமையாக விட்டுச் சென் றான். ஏனெனில் சாளுக்கிய—பாண்டியப் போட்டி இப்போது நேரடிப் போட்டியாகவும் அணுக்க போட்டியாகவும் மாறிற்று.

சாளுக்கியரைப் பாண்டியரும் என்றும் முற்றிலும் வென்று அடக்கிவிட முடியவில்லை. பிற்காலத்திய சோழப் பெரும் பேரரசரும்கூடக் கீழைச் சாளுக்கியரை முற்றிலும் தமதாக்கியதுபோல மேலைச் சாளுக்கியரை ஆக்கிவிட முடியவில்லை. இரு பேரரசுகளில் ஏதேனும் ஒன்று இது செய்திருந்தால்தென்னாட்டின் வடமேற்குப் பகுதி தென்னாட்டுக்கு இவ்வளவு அயல் நிலமாகவும், மேலை இந்தியா மாநிலத் தேசியவாழ்வில் இவ்வளவு பிற்பட்டும் இருக்கமாட்டா என்னலாம்.

இந்தியாவின் நாகரிகம் என்பது தமிழர் தொட்ட இடத்துப் பண்பாடு என்பதும், இந்தியாவில் பிற்போக்கு என்பது தமிழர் விட்ட இடத்துக் குறை என்பதும் இதனால் விளங்கும். தமிழின உரிமையற்ற இந்திய அரசியலும், தமிழ்த் தொடர் பற்ற இந்தியத் தேசியமோ வரலாறோ காண்பவரும் கவனிக்க வேண்டிய செய்தி இது.

### பாண்டிய பல்லவப் போட்டி: நந்திபுர முற்றுகை. நெடுவயல், குறுமடை, மன்னிக்குறிச்சி, பூவலூர், கொடும்பாளூர், குழும்பூர், சங்கரமங்கை, மண்ணைக்குறிச்சி. பெண்ணாகடம்; மண்ணை, நென்மிலி, கரூர், சூதவனம், நிம்பவனம், குரும்பூர், சூரவழுந்தூர்.

பாண்டியன் அரிகேசரி பராங்குசன் மாறவர்மன் என்ற முதலாம் இராசசிம்மன் (710—775) ஆட்சியும், பல்லவன் இரண்டாம் நந்திவர்மன் பல்லவ மல்லன் (710—775) ஆட்சியும் பேரளவில் சமகால ஆட்சியாய் அமைகின்றன. அவர்கள் காலத்திலேயே பாண்டிய பல்லவப்போட்டி உச்சநிலையை அடைந்தது என்னலாம்.

பல்லவன் முதலாம் பரமேசுரவர்மனுக்குப் பின் இரண்டாம் நரசிம்மவர்மன் என்ற இராசசிம்மன்(685—705) இரண்டாம் பரமேசுரவர்மன் (705—710) ஆகியோர் ஆண்டனர். இவ்வரசர்களுடன் முதலாம் மகேந்திரவர்மனின் தந்தையாகிய சிம்மவிஷ்ணுவின் நேர் மரபு தொடர்பற்றுப் போய் விட்டது. அரசகுடிக்கு அண்மை மரபினருள் ஒருவனான சித்திர மாயனே உறவினரால் அரசுரிமைக் குடிவழித் தகுதியுடையவனாகக் கருதப்பட்டான். ஆனால் அவன் பல்லவப் பேரரசின் பெரும் பொறுப்பை—பாண்டிய சாளுக்கியப் போட்டிகளின் நெருக்கடியை-ஏற்றுச் சமாளிக்கத்தக்க ஆற்றலற்றவன் என்று நாட்டின் பொறுப்புடைய பெருமக்கள் எண்ணினர். அவர்கள் சிம்மவிஷ்ணுவின் உடன் பிறந்தானான பீமவர்மன் வழி வந்த இரணியவர்மனை அரசனாகும்படி வேண்டினர். இரணி

வர்மன் முதியவனாதலால் தன் மைந்தரைக் கேட்க, அவர்களுள் மூத்தவர்கள் அப்பொறுப்பேற்க அஞ்சினர். கடைசி இளைஞனான நந்திவர்மனே பொறுப்பேற்று இரண்டாம் நந்திவர்மன் ஆனான்.

சித்திரமாயனை ஆதரித்தவரை நந்திவர்மன் ஆதரவாளர் எளிதில் முறியடித்துத் துரத்தினர். சித்திரமாயன் பல்லவர் எதிரியான பாண்டியன் அரிகேசரி பராங்குசனிடம் சென்று தஞ்சம் அடைந்தான். இதை அறிந்தே உள்ளூரப் பாண்டியப் பேரரசின் மேலாட்சியை விரும்பாத பாண்டி நாட்டு வேளிரான தகடூர் அதிகமான், கங்க அரசன் பெரும்பிடுகு முத்தரசன் ஆகிய இருவரும் பல்லவன் நந்திவர்மனை ஆதரித்தனர். சேரரும் சோழரும் இப்போரில் பாண்டியன் பக்கமே இருந்தனர் என்று தோற்றுகிறது. ஏனெனில் பல்லவப் பட்டயங்கள் பல்லவனைத் தென்தமிழரசர் அனைவரும் சேர்ந்து எதிர்த்தனர் என்று கூறுகிறது.

பாண்டிய பல்லவப் பெரும்போர் என்று குறிக்கத்தகும் இப்போராட்டத்தில் முதற் பகுதி நந்திபுர முற்றுகையே யாகும். நந்திபுரம் என்பது கும்பகோணத்தருகிலுள்ள ஒரு பழய நகரம். அது இன்று நாதன்கோவில் என்ற பெயருடையது. இப்பல்லவன் காலத்திலேயே வாழ்ந்து அவனையும் பாடியுள்ள திருமங்கையாழ்வார் அதிலுள்ள கோயிலை நந்திபுர விண்ணகரம் என்று குறித்தார். இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் அது பல்லவப் பேரரசின் துணைத்தலைநகராகவும் தென்மாகாணத் தலைமையிடமாகவும் இருந்தது. திருமால் ஆர்வலனான பல்லவன் இங்கே அடிக்கடி தங்கி அங்குள்ள திருமால் கோயிலில் சென்று வணங்குவது வழக்கம். கி. பி. 734-ல் அவன் இவ்வாறு தங்கியிருக்கும் சமயம் பாண்டியன் தலைமையில் தென்தமிழரசர் அதனை முற்றுகையிட்டனர். பல்லவப் பேரரசன் கிட்டத்தட்டச் சிறைப்பட்டவனானன்.

பல்லவன் படைத்தலைவனான உதயசந்திரன் தமிழகத்தின் தளபதிகளுள் தலைசிறந்தவன். அவன் வேகவதியாற்றின் கரையிலுள்ள வில்வல நகர்க் கோமான் என்று குறிக்கப்படுகிறான். அவன் ஒப்பற்ற வீரன் மட்டுமல்ல, தலைவனிடம் அசையாத உறுதியும், ஈடுபாடும், தன்மறுப்பும் உடையவன். பேரரசன் நிலை உணர்ந்ததும் அவன் உடனே துடிதுடித்தெழுந்தான். சூறுவளிபோலச் சுழன்று எதிரிகள்மீது போர்முரசு முழக்கினான்.

நெடுவயல் முதலாகச் சூரவழுந்தூர் ஈருக மேலே குறிப்பிட்ட களப்போர்கள் அத்தனையும் பாண்டியப் பேரரசரின் தலைமையிலுள்ள தென் தமிழகப் படைகளுக்கும் உதயசந்

திரன் தலைமையிலுள்ள வடதமிழகப் படைகளுக்கும் இடையே நிகழ்ந்த போர்களேயாகும். உதயசந்திரனுக்கு மேலே கூறிய படி அதிகனும் கங்க அரசன் பெரும்பிடுகு முத்தரசனும் உதவினர். இப் போர்களுள் பாண்டியன் வெற்றிகளும் பலவாயிருந்திருத்தல் கூடும். உதயசந்திரனின் பல்லவ வெற்றிகளும் பலவாயிருந்திருத்தல் கூடும். எனவே அவரவர் வெற்றிகளையே அவரவர் குறித்துள்ளனர். ஆயினும் பாண்டியரே தாக்குதல் போர் நடத்தினர். அவர்களே அரசியல் நோக்கத்துடனும் போராடினர். இதனால் அவர்களே பெரும் பொருட்குவைகளைக் கைப்பற்றியதாகவும், நாட்டெல்லையை விரிவுபடுத்தியதாகவும் கூறுகின்றனர். உதயசந்திரன் போர் நோக்கம் தற்காப்புப் போராகவே இருந்தது. அவன் தன் பேரரசனை விடுவித்துப் பேரரசைக் காப்பதிலேயே கண்ணுங்கருத்துமாய் இருந்தான். இதனாலேயே இருவருமே வெற்றி கண்டதாகக் கூறிக்கொள்ள முடிந்தது.

இப் போர்க்களங்கள் யாவும் பெரும்பாலும் புதுக்கோட்டை பகுதியில் உள்ளன. ஒரு சில தஞ்சை திருச்சிராப்பள்ளிப் பகுதிகளுக்குரியனவாகவும் இருக்கக் கூடும்.

நெடுவயல் முதல் குழும்பூர் வரையிலுள்ள ஏழு போர்களைப் பாண்டியனின் வேள்விக்குடிச் செப்பேடு பாண்டியன் பெரு வெற்றிகளாக கொண்டாடுகின்றது. இவற்றுள்ளும் முதல் ஐந்தும் பொதுப்படை மொழியிலேயே வருணிக்கப்படுகின்றன.

"கடுவிசையால் எதிர்ந்தவரை
நெடுவயல் வாய் நிகர்அழித்து,
கறுவடைந்த மனத்தவரை
குறுமடை வாய்க் கூர்ப்பழித்து,
மன்னிகுறிச்சியும் திருமங்கையும்
முன்னின்றவர் முரணழித்து,
மேவலோர் கடல்தானையோடு ஏற்றெதிர்ந்தவரைப்
பூவலூர்ப்புறங்கண்டும்"

கொடும்பாளூர் என்பது புதுக்கோட்டைப் பகுதியில் முன்பு ஆண்ட கொடும்பாளூர் வேளின் தலைநகரம் ஆகும். அதற்கேற்ப அது கோட்டை சூழ்ந்த நகராகக் குறிக்கப்படுகிறது. இப் போரில் குதிரைகளும் யானைகளும் பாண்டியரால் பேரளவில் கைப்பற்றப்பட்டன என்று அறிகிறோம்.

கொடும்புரிசை நெடுங்கிடங்கில்
கொடும்பாளூர்க் கூடார்
கடும்பரியும் கருங்களிறும்
கதிர்வேலில் கைக்கொண்டும்"

குழும்பூர் வெற்றியே பாண்டியர் கடைசிப் பெருவெற்றி ஆகும். அதிலும் யானை குதிரைகள் கைப்பற்றப்பட்டன. போரில் எதிரி பல்லவன் என்பது இப்போர் பற்றிய செய்தியிலேயே தெளிவாகக் குறிக்கப்படுகிறது.

செழும்புரவிப் பல்லவனைக்
குழுமபூரில் தேசுஅழிய
எண இறந்த மால்களிறும்
இவுளிகளும பல கவர்ந்தும்.''

சங்கரமங்கைப் போர் வேள்விக்குடிச் செப்பேட்டில் குறிக்கப்படவில்லை, ஆனல் சின்னமனூர்ச் செப்பேட்டில் நெல்வேலி சங்கரமங்கை எனற இரண்டு போர்கள் இம்மன்னன் பெயரால் குறிக்கப்படுகின்றன. உதயேந்திரனின் பல்லவ ஆதாரங்களும் ஒரு நெல்வேலி பற்றிக் குறிக்கின்றன. அது இந்த நென்மிலியே அல்லது நெல்வேலிதானு என்று தெரியவில்லை. நெல்வேலியிலேயே இரண்டு போர்களும் நடந்தன என்ருல், இந்த நெல்வேலிப் போரை நாம் இரண்டாம் நெல்வேலிப் போர் என்று குறிக்கவேண்டும்.

'வில்லவனை நெல்வேலியிலும்
விரிபொழில் சங்கரமங்கைப்
பல்லவனைப் புறங்கண்ட
பராங்குசன் பஞ்சவர் தொன்றலும்'

என்ற சின்னமனூர் வாசகம் சங்கரமங்கைப்போர் இப் பாண்டியன் வெற்றி என்று தெளிவாகக் குறிக்கிறது. ஆயினும் பல்லவரும் இதைத் தமது வெற்றியாகக் கூறுவதால், இது வெற்றி தோல்வி உறுதியற்ற சரிசமப் போராய் இருந்திருத்தல் கூடும். மண்ணைக்குறிச்சியில் பல்லவனும், பெண்ணுகடத்தில் பாண்டியனும் வெற்றி பெற்றனர். பெண்ணுகடத்தில் பல போர்கள் நிகழ்ந்திருப்பதனுல், இப்போரை நாம் முதலாம் பெண்ணுகடப் போர் என்று கூறலாகும்.

மண்ணை முதல் சூரவழுந்தார் ஈருன ஏழு போர்களும் தம் வெற்றியாகவே பல்லவர் குறிக்கின்றனர்.

நென்மலியில் வெருவச்
செருவேல் வலங்கைப்
பிடித்த படைத்திறல்
பல்லவர்கோன்'

என்று நென்மலிப் போரைத் திருமங்கையாழ்வார் தம் பெரிய திருமொழியில் குறிப்பிட்டுள்ளார்.

கரூர்ப் போரிலேயே பல்லவப் படைத்தலைவன் உதயசந்திரன் பல்லவ அரசுரிமைப் போட்டியாளனான சித்திர மாயனைப் போரில் வென்று நந்திவர்மன் ஆட்சிக்கும் அரசுரிமைக்கும் உறுதியளித்தான்.

இப்போராட்டம் கிட்டத்தட்டச் சரிசமப் போராட்டம் என்னலாம். ஏனெனில் பாண்டியர் வெற்றிகள் பெரும்பாலும் பாண்டியநாட்டெல்லைக்குள்ளும், பல்லவர் வெற்றிகள் பெரும்பாலும் பல்லவ எல்லைக்குட்பட்ட சோழ நாட்டிலுமே இருக்கின்றன. ஆயினும் போர் முடிவில் பாண்டியன் கையே ஓங்கியும், பல்லவன் கை தாழ்ந்தும் இருந்தன என்றே தோன்றுகிறது. பல்லவனுக்கு உதவி செய்த அதிகன்மீதும் முத்தரசர் மீதும் பாண்டியன் இப்போரின் பின் எதிர் நடவடிக்கை எடுக்க முடிந்தது. ஆனால் பாண்டியப் போராட்டத்துக்கிடையிலேயே பல்லவப் பேரரசு சாளுக்கியர் தாக்குதலுக்கு ஆளாயிற்று.

பல்லவப் பேரரசை விட, அதைத் தாக்கி வலுப்பெருக்கி வந்த சாளுக்கியப் பேரரசு ஆபத்தானதென்று பாண்டியர் கருதியிருக்க வேண்டும். ஏனென்றால் அவர்கள் பல்லவருடன் சேர்ந்தவரைத் தண்டித்ததுடன் அமைந்தனர். பல்லவ பாண்டியப் போராட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்திக்கொண்டு, பல்லவர்களைப் போலவே சாளுக்கியருக்கெதிராகப் பாய முனைந்தனர்.

**பாண்டியர் மழகொங்க வெற்றி:**

**பெரியலூர், புகலியூர்ப் போர்கள்**

வேள்விக்குடிச் செப்பேடு பெரியலூர்ப் போரின் வெற்றியையும் மழகொங்க வெற்றியையும் தனித்தனியாகவே, ஆனால் அடுத்தடுத்துக் கூறுகின்றன. ஆனால் பெரியலூர் வெற்றியே மழகொங்க நாட்டு வெற்றிக்குரிய போர்கள் வெற்றியாயிருந்ததென்னலாம்.

''தரியலராய்த் தனித்தவரைப்
பெரியலூர்ப் பீடழித்தும்;
பூவிரியும் பொழிற்சோலைக்
காவிரியைக் கடந்திட்டு,
அழகமைந்த வார்சிலையின்
மழகொங்கம் அடிப்படுத்தும்''

மழகொங்கர் தலைவன் மகளாகிய பூசுந்தரியைப் பாண்டியன் பராங்குசன் மணம்புரிந்துகொண்டான். அவள் வயிற்றிற் பிறந்த புதல்வனே அடுத்த பாண்டியப் பேரரசனான நெடுஞ்

சடையன் பராந்தகன் ஆவான். இங்கிலாந்தின் மன்னர் 13-ம் நூற்றுண்டில் வேல்ஸ் நாட்டை வென்ற பின், தன்மைந்தனை வேல்ஸ் நாட்டுக் கோமானுக முடி சூட்டியதுபோலப் பாண்டியனும் இந்த இளவரசன் நெடுஞ்சடையனுக்கு வயது வந்தவுடன் 'கொங்கர்கோன்' என்ற உரிமையுடன் அவனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டினுன்.

சாளுக்கிய பல்லவப் போராட்டம்

பல்லவர் தென்திசைப் போரில் ஈடுபட்டிருந்த சமயம் முதலாம் விக்கிரமாதித்தனுடைய இரண்டாம புதல்வனும் வினயாதித்தனுக்குப் பின் சாளுக்கியப் பேரரசனுனவனுமான இரண்டாம் விக்கிரமாதித்தன் (733—746) பல்லவப் பேரரசின் மீது படையெடுத்துக் காஞ்சியைக் கைப்பற்றிக் கொண்டான். இப்படையெடுப்பில் இரண்டாம் விக்கிரமாதித்தன் மகன் கீர்த்தி வர்மனும் அவனுடன் கலந்துகொணடிருந்தான்.

காஞ்சி சாளுக்கியர் கையிலிருந்த காலம் சிறிதேயானுலும் அவர்கள் வெற்றி நிறை வெற்றியாகவே இருந்ததென்று தெரிகிறது. போரில் இதுவரை தென்னுட்டு மனனர் கையாண்டிராத ஒரு வள்ளுவர் பண்பைச் சாளுக்கியப் பேரரசன் கையாண்டு பல்லவப் பேரரசரை நாணவைத்தான். அவன் நகரில் அழிவு செய்யவில்லை; மக்களைத் துன்புறுத்தவில்லை. அது மட்டுமன்று, அவன் தந்தை முதலாம் விக்கிரமாதித்தன் காஞ்சி கைலாசநாதர் கோயிலிலிருந்து கொள்ளையிட்டுச் சென்ற பொற்காசுகளையும் அணிமணிகளையும் அக்கோயிலுக்கே திருப்பிக்கொடுத்தான். இவையன்றி மேலும் பல நன்கொடைகள் அளித்தான். காஞ்சியைக் கைக்கொண்டிருந்த சில நாட்களில் நகர, நாட்டு மக்கள் உள்ளத்தையே அவன் கவர்ந்துகொண்டான் என்று அறிகிறோம்.

> ''இன்னு செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
> நன்னயம் செய்துவிடல்''

என்ற நீதிப்படி தான் செய்த செயலையும் வாதாபியில் பல்லவர் செய்த செயலுடன் ஒப்பிட்டுக் காட்டி அவன் கைலாசநாதர் கோயில் தூண் ஒன்றில் ஒரு கல்வெட்டுப் பொறிப்பித்தான்.

விசித்திரமான இவ்'வள்ளுவத்' தண்டனைக்கு எதிர்செயல் வகை தெரியாமல் பல்லவர் விழித்திருக்க வேண்டும்!

பல்லவனைத் தென் தமிழக அரசரிடமிருந்து மீட்ட பின் உதயசந்திரன் வடக்கே திரும்பிச் சாளுக்கியரைத் தம் நாட்

டுக்குத் துரத்திப் பல்லவப் பேரரசை மீண்டும் நிலைநிறுத்தினான்.

கடைசிச் சாளுக்கிய பாண்டியப் போராட்டம்:
வெண்ணைப் போர் கி பி. 740-741

மழகொங்க வெற்றியும் அதிகன் வெற்றியும் முடிவுற்ற பின்னர் பாண்டியன் தன் கைவரிசையை இன்னும் வடக்கே செலுத்தினான். தற்கால மைசூரின் பெரும்பகுதியே அன்று கங்க நாடு என்றழைக்கப்பட்டிருந்தது. பல்லவ பாண்டியப் போரில் கங்கர் பல்லவனுக்கு உதவியாயிருந்ததே இப்படையெடுப்புக்குரிய ஒரு காரணம் ஆகும். படையெடுப்பின்போது கங்க அரசன் சிரீபுருஷ முத்தரசன் என்பவன். அவன் சில சமயம் சாளுக்கியருக்கும் சில சமயம் பல்லவருக்கும் உதவினாலும், சாளுக்கியப் பேரரசன் இரண்டாம் விக்கிரமாதித்தனையே மேலாட்சியாளனாகக் கொண்டிருந்தான். ஆகவே அவனை எதிர்த்தபோது சாளுக்கியரும் அவனுக்கு ஆதரவாகப் போர்க்களத்துக்கு வந்தனர்.

கி. பி. 740 அல்லது 741-ல் வெண்பை என்னுமிடத்தில் நடந்த போரில் பாண்டியன் பராங்குசன் பெரு வெற்றி கண்டான் இப்போரில் பாண்டியர் படைத்தலைவன் காரி என்பவன். பாண்டியர் புகழ் இப்போரினால் பெருவளம் உற்றது. பாண்டியப் பேரரசு இதன்பின் தென்னாட்டின் உச்ச உயர் பேரரசாக உயர்ந்தது. இதுவரை சாளுக்கியரிடம் உரிமையும் பல்லவனிடம் பாசமும் காட்டிவந்த கங்கர் இப்போது தெளிவாகப் பாண்டியர் மேலாட்சியையும் ஏற்று, அவர்கள் நேசத்தையும் இருகையேந்திப் பெற்றனர்.

சிரீபுருஷன் புதல்வி கொங்கர் கோனான பாண்டிய இளவரசன் நெடுஞ்சடையனுக்கு மணமுடிக்கப் பெற்றாள். கொங்கர் செல்வனுடன் கங்கர் செல்வி கொண்ட இந்த இணைவு சாளுக்கியனுக்கும் பல்லவனுக்கும் பெரிய கண்ணுறுத்தலாக இருந்திருக்கவேண்டும்,

சாளுக்கியர் வீழ்ச்சி: இராஷ்ட்டிரகூடர் எழுச்சி:

பாண்டிய பல்லவ போட்டியின் உச்சநிலை கண்ட அதே தலைமுறையே சாளுக்கிய பல்லவப் போட்டியின் உச்சநிலையும், பாண்டிய-சாளுக்கிய போட்டியின் உச்சநிலையும் கண்டது. தென்னாட்டின் இந்த முக்கோணப் போட்டியால் மூன்று பேரரசுகளுமே நாளடைவில் நலிவுற்றாலும், முதல்முதல் உரமற்று விழநேர்ந்தது சாளுக்கியப் பேரரசே. சாளுக்கியருக்

கெதிராகக் கிளர்ந்தெழுந்த இராஷ்டிரகூட குடித்தலைவன் தந்திதுர்க்கனுக்குப் பல்லவன் இரண்டாம் நந்திவர்மன் உதவியாயிருந்தான். கி. பி. 754-ல் தந்திதுர்க்கன் கடைசிச் சாளுக்கிய அரசனான கீர்த்திவர்மனை வென்றொழித்துத்தானே பேரரசனானன். அடுத்த ஓரிரு நூற்றாண்டுகள் சாளுக்கியப் பேரரசினிடமாக வடதிசையில் இராஷ்டிரக்கூடப் பேரரசு ஆற்றல் வாய்ந்ததாக வளர்ந்தது.

பல்லவன் உதவியைக்கூடப் பொருட்படுத்தாமல் இராஷ்டிரகூடத் தந்திதுர்க்கன் பல்லவப் பேரரசைப் படையெடுத்துக் காஞ்சியைச் சிலநாள் கீழடக்கியிருந்ததாகத் தெரிகிறது. இந்தத் தந்திதுர்க்கன் வயிரமேகன் என்ற சிறப்புப் பெயரால் குறிக்கப்பட்டான். திருமங்கையாழ்வார் இதனைச் சுட்டியே,

"மன்னவன் தொண்டையர் கோன்
வணங்கும் நீள் முடிமாலை
வயிரமேகன்
தன் வலி தன் புகழ்சூழ்ந்த
கச்சி"

என்று பாடியுள்ளார். இராஷ்டிரகூடர் எழுத்துமூலங்களும் இதை வலியுறுத்துகின்றன. ஆனால் தந்திதுர்க்கன் காஞ்சியை நீண்டநாள் கீழடக்கியிருக்கவில்லை. அவன் நோக்கமும் பல்லவப்பேரரசைக் கொள்வதன்று, வசப்படுத்துவதே என்று கருதலாம். ஏனெனில் அவன் தன் மகள் ரீவாவை நந்திவர்ம பல்லவனுக்கு மணஞ் செய்து தந்து, அவ்வுறவால் தன்னை வலுப்படுத்திக்கொண்டு சென்றான் என்று தோன்றுகிறது.

இராஷ்ரடிகூடர் - பல்லவரின் இந்த மண உறவு அவர்கள் நேசத்தைவிட அவர்கள் பகைமைக்குப் பின்னால் காரணமாய் அமைந்தது என்னலாம்.

### பாண்டிய பல்லவப் போட்டி: பெண்ணைகடப்போர்

இரண்டாம் நந்திவர்ம பல்லவனும் பாண்டியன் அரிகேசரி பராங்குசன் மாறவர்மனும் ஒருங்கே ஆட்சி தொடங்கி நீண்ட காலம் ஆட்சி செய்தாலும், பாண்டியன் ஆட்சியே முதலில் முடிவடைந்தது. அதன்பின் பாண்டிய பல்லவப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்திய பாண்டியன் முன் ஆட்சியில் கொங்கர் கோமானாயிருந்த நெடுஞ்சடையன் பராந்தகனேயாவன் (765—790). கேள்விக்குடிச் செப்பேட்டைத் தன் மூன்றாம் ஆட்சி யாண்டிலும், சீவரமங்கலம் செப்பேட்டை அதற்குச் சில ஆண்டுகளுக்குப் பின்னும் வெளியிட்டுப் பாண்டியர் வரலாற்றுக்குப் பேருதவி புரிந்தவன் இவனே, சென்னைப்

பொருட்காட்சி மனையிலும் இம்மன்னன் அளித்த மற்றொரு செப்பேடு உளது.

முந்திய பாண்டிய அரசன் காலத்தில் அமைச்சராயிருந்த மாறன் காரியே இவ்வரசன் காலத்திலும் தொடர்ந்து அரசியலைச் செவ்வனே நடத்தினான். ஆனைமலைக் கோயில் கட்டியவன் இவன் என்றே கருதப்படுகிறது. இவனன்றிக்காரி எயினன, காந்தன், கணபதி என்ற சிறந்த படைத்தலைவர்களும் இவனுக்கு இருந்தனர். மாறன்காரி மாண்டபின், காரிஎயினனே அவனுக்குப் பதிலாக அமைச்சனாய் இருந்தான். இப்பாண்டியனது உத்தர மந்திரியான மதுரகவியே பன்னிரண்டு ஆழ்வார்களுள் ஒருவராகிய மதுரகவி என்று கருதுவர் சிலர். இப்பாண்டிய மன்னன் வைணவப் பற்றுள்ளவன் என்பதில் ஐயமில்லை.

இப்பாண்டியன் பல்லவன் இரண்டாம் நரசிம்மவர்மனைக் காவிரிக்குத் தென் கரையில் உள்ள பெண்ணாகடத்தில் முறியடித்துப் பெரும் புகழ் அடைந்தான்.

''நாற்பெரும் படையும்
பாற்படப் பரப்பிக்
கருதாது வந்து எதிர்மலைந்த
காடவனைக் காடுஅடையப்
பூவிரியும் புனற்கழனிக்
காவிரியின் தென்னகரைமேல்
தண்நாக மலர்ச்சோலைப்

பெண்ணாகடத்து அமர்வென்றும்''

என்று இப்போர் வேள்விக்குடிச் செப்பேட்டில் விரித்துரைக்கப் படுகிறது.

**தகடூர் அதிகன் வீழ்ச்சி: ஆயிரவேலி அயிரூர், புகழியூர் அமர்க்களங்கள்**

முந்திய பாண்டியன் பல்லவனுக்கு உதவியதற்காகத் தகடூர் அதிகனைப் போரில் தாக்கித் தண்டிருத்திருந்தான். ஆயினும் அதிகன் முற்றிலும் முறியடிக்கப் படவில்லையென்றோ, அல்லது தப்பிச்சென்று புதுவலிமை தேடினன் என்றோ தெரிகிறது. நெடுஞ்சடையன் ஆட்சியின்போது அவன் பல்லவன் இரண்டாம் நந்திவர்மன் உதவிமட்டுமன்றிக் கேரளன் உதவியும் பெற்றுப் பெரும் படையுடன் பாண்டியப் பேரரசை உதிர்க்க முனைந்தான். திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள புகழியூரிலும், காவிரி வடகரையிலுள்ள ஆயிரவேலி, அயிரூர் எனற இடங்களிலும் பெரும் போர்கள் நிகழ்ந்தன.

மாஇரும் பெரும்புனல்
காவிரி வடகரை
ஆயிர வேலி
ஆயிரூர் தன்னிலும்,
புகழியூரிலும்
திகழ்வேல் அதியனை
ஓடுபுறம்கண்டு, அவன்
ஒலியுடை மணித்தேர்
ஆடல் வெம்மா
அவை உடன்கவர்ந்தும்

என்ற சீவரமங்கலச் செப்பேடு இப்போரை விளக்கமாக விரித்துரைக்கிறது. போரில் தோற்ற அதிகன் யானைகளும், குதிரைகளும் கைப்பற்றப்பட்டன. இப் போர்களில் பல்லவனும் கேரளனும் உதவியதும், இரு படைகளும் தோற்றோடியதும் வருணிக்கப் பட்டுள்ளன.

பல்லவனும் கேரளனும்
ஆங்கவற்குப் பாங்காகிப்
பல்படையொடு பார்ஞெளியப்
பௌவமெனப் பரந்தெழுந்து
குடபாலும் குணபாலும்
அணுகவந்து விட்டிருப்ப,
வெல்படையொடு மேற்சென்று, அங்கு
இருவரையும் இருபாலும்
இடரெய்தப் படைவிடுத்து.

தமிழக அரசர் யாவரும் ஈடுபட்டுப் பாண்டியனை எதிர்த்த இப்போர் ஒரு சிற்றரசனை எதிர்த்த சிறு போர் அன்று, தமிழகப் பேரரசுப் போட்டியின் ஓர் உயிர்ப்பகுதியே யாகும். இப் போராட்டம் வேள்விக்குடிச் செப்பேட்டில் குறிக்கப்படாததால், அது வெளியிடப்பட்ட நெடுஞ்சடையனின் மூன்றும் ஆண்டு (768) சென்றபின் நடந்ததாதல் வேண்டும். இப்போரில் அதிகன் மதுரையிலேயே சிறைப்படுத்தப்பட்டான்.

குடகொங்கத்து அடல்மன்னனைக்
கொல்களிற்றொடும் கொண்டுபோந்து
கொடிஅணிமணி நெடுமாடக்
கூடல்மதி லகத்து வைத்தும்

என்று சீவரமங்கலத்துச் செப்பேடு இதனைக் குறிப்பிடுகின்றது.

கொங்கநாட்டு வெற்றியின் பின் இப்பாண்டியன் அந் நாட்டில் (இன்றைய கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள) காஞ்சிவாய்ப் பேரூரில் தன் வழிபடு தெய்வமாகிய திருமாலுக்குக் 'குன்றமன்னதோர் கோயில்' கட்டினான். கரவந்த

புரம் என்னும் கோட்டையைத் திருத்தி யமைத்தான். இது அதிகன் கோட்டைகளுள் ஒன்றாக இருக்கலாம். அது திருநெல்வேலியில் ஆய் வேளின் கோட்டைகளுள் ஒன்றான களக்காடு என்பாரும் உளர்.

வெள்ளூர், விண்ணம், செழியக்குடி, நாட்டுக்குறும்புப் பறந்தலைகள்

இவ்வூர்கள் எங்கிருந்தன என்று தெளிவாக அறிய முடியவில்லை. வெள்ளூர் பின்னாளில் சோழர் பாண்டியப் போர்க்களமாயிருந்த ஊராதலால், அது மதுரைக்கருகில் உள்ளதே. இவ்விடங்களில் முறியடிக்கப்பட்ட குறும்பரும் யார் என்று கூற முடியவில்லை. பின்னாட்களில் சோழர் காலத்திலும் விசயநகரப் பேரரசர் காலத்திலும் பாளையக்காரர்களாக நிலவிய பெருங்குடி மக்களாகவே அவர்கள் இருந்திருத்தல் கூடும்.

'பொன்மலர்ப் புறவில்
வெள்ளூர், விண்ணம்,
செழியக்குடி என்று
இவற்றுள தெவ்வர்
அழியக் கொடுஞ்சிலை
அன்றுகால் வளைத்தும்'

என்று சீவரமங்கலச் செப்பேடு இவ்வெற்றிகளைக் குறித்துள்ளது.

காட்டுக்குறும்பு சென்றடைய
நாட்டுக்குறும்பில் செருவென்றும்

என்று வேள்விக்குடிச் செப்பேடு நாட்டுக் குறும்பை மட்டும் குறிக்கிறது. நான்கு களங்களிலும் முதல் களம் அதுவே என்பதை அது காட்டும்.

விழிஞப் போர் I

நெடுஞ் சடையன் வெற்றிகளில் ஆய்வேளை அடக்கியது தனிச்சிறப்புப்படக் குறிக்கப்படுகிறது.

ஆய்வேளையும் குறும்பரையும்
அடல் அமருள் அழித்தோட்டி

என்று வேள்விக்குடிச் செப்பேடு இதைக் குறிக்கிறது. ஆனால் இந் நிகழ்ச்சியை விரிவுபடக் குறிப்பது சீவரமங்கலத்துச் செப்பேடே. அதன் வாசகங்களால் ஆய்வேள் அப்போது வேண்மன்னனா யிருந்தானென்றும், முழுவதும் ஒருவேளை திருவாங்கூர் முழுவதும் ஆண்டிருக்கக் கூடுமென்றும், எப்படியும் திருவனந்தபுரம் வரை அவன் ஆட்சி பரவியிருந்ததென்றும்

அறிகிறோம். ஏனென்றால் அவனைத் தாக்கிய போர் திருவனந்த புரத்துக்குச் சற்றே தெற்கிலுள்ள விழிஞத்திலேயே நடை பெற்றது. அதுஉயர்பெரு மதில்களுடன் இராவணன்இலங்கை போன்ற அரணங்களுடையதாயிருந்த தென்று செப்பேடு குறிக்கிறது.

ஆழிமுந்நீர் அகழ்ஆக
அகல் வானத் தகடு உரிஞ்சும்
பாழிநீள் மதில் பரந் தோங்கிப்
பகலவனும் அகல ஓடும்
அணியி லங்கையின்
அரணி தாகிய
மணியிலங்கு நெடுமாட
மதில் விழிஞம் அது அழியக்
கொற்ற வேலை உறை நீக்கி
வேற்றத்தானை வேண் மன்னனை
வென்று அவன் தன் விழுநிதியொடு
குன்றம் அன்ன கொலைக்களிறும்
கூந்தல் மாவும் குலதனமும்
நன்னாடும் அவைகொண்டும்

என, ஆய்வேள் யானை குதிரை செல்வங்கள் கைப்பற்றி அவன் நாடும் கைக் கொண்ட செய்தி தெரிய வருகிறது.

வேணாடு என்ற திருவெங்கூரில் ஆய்வேளை யல்லாத வேறு குடி மன்னரும் இருந்தனர். மலைநாட்டுக் கருகந்தன் இவர் களில் ஒருவனாய் இருத்தல் வேண்டும். நெடுஞ்சடையன் ஏறத் தாழ கி பி. 788-ல் அவனை வென்று, அருவியூர்க் கோட்டை, கரைக்கோட்டை என்ற அவனுடைய அரண்காப்புடைய நகர் கள் இரண்டை அழித்தான்.

நெடுஞ்சடையன் ஆட்சி இறுதியில் பாண்டியநாடு, கன் னியாகுமரி முதல் தென்கன்னட மாவட்டம் வரையுள்ள கொங்குநாடு, மைசூர், சேர நாட்டுப் பகுதி ஆகியவை பாண் டியப் பேரரசின் எல்லைக்கு உட்பட்டிருந்தன.

## திருநெல்வேலி, விழிஞம் II, கோட்டாறு, சேவூர், பூலந்தை நாரையாறு, கடையல் போர்க்களங்கள்.

நெடுஞ்சடையனுக்குப் பின் பாண்டியன் இரண்டாம் இராசசிங்கன் (780—800), முதலாம் வரகுணன் அல்லது வர குண மகாராசன் (800—830) ஆகியோர் ஆண்டனர். 'கொற் றவர்கள் தொழுக சோழற்கால் வரகுணமகாராசன்' என்று மட்டுமே சின்னமனூர்ச் செப்பேடுகள் இவனைக் குறிக்கின்றன

இவனே இறையனார் அகப் பொருளுரைமேற்கோளில்காட்டிய பாண்டிக் கோவையின் தலைவன் என்ற கருத்துடன், இத் தலைவனுக்குரியதாகக் குறிக்கப்பட்ட இப்போர்கள் இந்த வரகுணன் போரில் ஏற்பட்டுள்ளன. ஆயினும் மறைமலையடிகள் குறித்தபடி, இப்பாண்டிக்கோவைத் தலைவன் இரண்டாவது அல்லது மூன்றாவது இடைக்காலப் பாண்டியன் அவனி சூளாமணியாக இருக்கவேண்டும் என்பதே பொருத்தமானது. ஏனெனில் இப்போர்கள் யாவும் சேரனை எதிர்த்த போர்களே. நெடுஞ்சடையன் நாட்களில் ஆய்வேளுக் குரியதாயிருந்து அவனால் கைக்கொள்ளப்பட்ட நாட்டிலே, அதே இடத்திலும் அருகிலும் இத்தனை போர்கள் நடைப்பெற்றிருக்க வழியில்லை. இக்கோட்பாட்டையே உறுதியாகக் கொண்டபின் பாண்டியர்க்கு கோவையின் முதற்போரே முதல் விழிஞப்போராகவும், நெடுஞ்சடையன் விழிஞப்போர் இரண்டாம் விழிஞப் போராகவும் கொள்ளத்தகும்.

வாதவூரடிகளாகிய மாணிக்கவாசகர் காலத்திற்கு முன் இருந்தவனும் அவரால் 'வரகுணனும் தென்னவன்', 'வரகுணன் வெற்பில் வைத்தகயல்' எனப்பட்டவனும் ஆன வரகுணப் பாண்டியன் இவனே என்பர் சிலர். ஆனால் அப்பாண்டியனும் வாதவூரரும் சங்கஇலக்கியம், மணிமேகலை காலத்தவர் என்ற ஆசிரியர் மறைமலையடிகளின் முடிவே இங்கும் முடிவாகக் கொள்ளத்தக்கது,

பட்டினத்தடிகளும் நம்பியாண்டார் நம்பியும் இடைக்கால முதல் வரகுணனுக்கு பிந்தியவரே யாதலாலும், இவ்விடைக்கால வரகுணனும் சிவநெறிப் பற்றுடையவனே யாதலாலும், அவர்கள் குறித்த வரகுணன் இவனே என்பது கூடாததல்ல. ஆயினும் கழற்சிங்கனைத் தம் காலத்தவனாகவும் நெடுமாறனை அணிமைக் காலத்தவனாகவும் சுந்தரர் குறித்தது போன்ற தொனி அவர்கள் குறிப்பில் இல்லை. அத்துடன் சிவநெறிப் பற்றுப் பாண்டியர் பெரும்பாலாருக்கும் பொதுவேயாகும். ஆகவே மொத்தத்தில் வாதவூரர் குறித்த வரகுணனையே பின்னோரும் அவர் வழிநின்று குறித்தவர் ஆகலாம்.

இடைக் காலத்துக்குரிய இம்முதல் வரகுண பாண்டியன் போரும் வரலாறும் நமக்குத் திறம்படத் தெரிய வழியில்லை யாயினும், அவன் காலத்தில் பாண்டியப் பேரரசு உச்ச நிலையிலிருந்த தென்று நாம் உறுதியாகக் கூறமுடியும். அவன் ஆட்சி சோழ நாடுமுழுதும் பரவியிருந்த தென்றும், பல்லவப் பேரரசினிடமிருந்து சோழ நாடு முழுவதும் அவன் காலத்திலோ, அதற்குச் சற்றுமுன்னோ கைக்கொள்ளப்பட்டு விட்டதென்றும் அவன் கல்வெட்டுக்களின் பரப்பே காட்டுகின்றன

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள திருச்செந்தூர், இராதாபுரம், அம்பாசமுத்திரம் ஆகிய இடங்களில் அவன் அரும்பெருங் கோயிற்பணிகள் ஆற்றினன்.

இராஷ்டிரகூட—பல்லவர் போட்டி : விளந்தைப்போர்
கி. பி. 788

இரண்டாம் நந்திவர்மன் பல்லவனுக்குப் பின் வந்த தந்தி வர்மன் (775-826) இராஷ்டிரகூட மரபுடன் உறவுடையவன். ஆனால் இது அவனுக்கும் அவன் பேரரசுக்கும் தொல்லை யாகவே முடிந்தது. துருவன் மூன்றும் கோவிந்தன் என்ற இரண்டு இராஷ்டிரகூடப் பேரரசர் ஆட்சித் தொடக்கத்தில் தன் உறவினரான போட்டி அரசுரிமையாளரை ஆதரித்து அவன் இராஷ்டிரகூட அரசியலில் தலையிட்டுப் பல போர் களில் மாட்டிக்கொண்டான். இதனால் பல்லவப் பேரரசு ஓர ளவு தளர்வுற்ற தென்னலாம். ஆனால் கி. பி. 788-ல் விளந்தை என்ற இடத்தில் இராஷ்டிரகூடப் பேரரசன் முதலாம் கிருஷ் ணனுக்கெதிராகப் பல்லவன் தந்திவர்மன் பெரு வெற்றி பெற்றான். இப்போரில் பாணர்குடி மன்னன் பல்லவன் பக்க மாக இருந்தான்.

குருக்கோட்டுப் போர்க்களம் (கி. பி. 826-36)

தந்திவர்ம பல்லவனுக்குப் பின் தெள்ளாறெறிந்த நந்தி வர்மன் என்று குறிக்கப்படும் மூன்றும் நந்திவர்மன் (826-850) அரியணை ஏறினன். சுந்தரமூர்த்தி நாயனாராலும் சேக்கிழாரா லும் அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவனாகக் குறிக்கப் பட்ட கழற்சிங்கன் அல்லது கழல்நந்தி இவனே என்று கருதப் படுகிறது. சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டத் தொகையில்,

> "கடல்சூழ்ந்த உலகெல்லாம்
> காக்கின்ற பெருமான்
> காடவர்கோன் கழற்சிங்கன்
> அடியார்க்கும் அடியேன்"

என்ற அடிகளில் இவனைத் தம் காலத்தவராக, 'காக்கின்ற' என்ற நிகழ்காலம் மூலம் குறித்துள்ளார். இம்மன்னன் மீது பெயர் அறிவிக்கப்படாத அவன் காலத் தமிழ்க் கவிஞர் ஒரு வர் 'நந்திக் கலம்பகம்' என்ற அழகிய காவியம் புனைந்தியற்றி யுள்ளார். தவிர சங்க காலத்தில் ஒரு பாரதம் பாடிய பெருந் தேவனார் இருந்தது போல, இவன் காலத்திலும் உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுளாகச் சிலப்பதிகாரத்தைப் போன்ற நடையில் ஒரு பாரதம் பாடிய பெருந்தேவனார் இருந்

தார். வெண்பாவால் இயன்ற இந்தப் பாரதத்திலும் ஒரு சில பாக்களே நமக்கு வந்தெட்டியுள்ளன.

குருக்கோடு என்பது துங்கபத்திரை ஆற்றங்கரையிலுள்ள அரண் அமைந்த நகர் என்று அறிகிறோம். பல்லவன் மூன்றாம் நந்திவர்மன் இராஷ்டிரகூட மன்னரால் தன் முன்னோர் அடைந்த தோல்விகளின் கறை நீக்க எண்ணி இராஷ்டிரகூட பேரரசின் மீது படையெடுத்துச் சென்றான். குருக்கோட்டில் எதிரிகளுடன் கைகலப்பு ஏற்பட்டு, ஒரு உக்கிரமான போர் நடைபெற்றது.

''கூடலர் முனைகள்சாய
வடபுலம் கவர்ந்துகொண்டு''

என்று சேக்கிழார் பெரிய புராணமும்,

''குஞ்சரங்கள் சாயக்
குருக்கோட்டை அத்தனையும்
அஞ்சரங்கள் ஆர்த்தான்
அருள்''

என்று நந்திக்கலம்பகமும் இவ்வெற்றியைப் பாடியுள்ளன' 'யானைகள் வாளால் துணிக்கப்பட்டன. அவை அணிந்திருந்த முத்துமாலைகள் போர்க்களத்தில் சிதறிக்கிடந்தன. அக்காட்சி போர்க்களமங்கை தன் பற்களைக் காட்டிச் சிரிப்பது போன்றிருந்தது' என்று வேலூர்ப்பாளையப் பட்டயம் போர்பற்றி அணியழகுபடக் கவிதை புனைந்துள்ளது.

இப்போரின் பின் பல்லவப் பேரரசின் மதிப்பு உயர்ந்த தென்பதில் ஐயமில்லை. ஏனெனில் இராஷ்டிரகூடப் பேரரசர் களிலே பெரும் புகழ் வாய்ந்த பேரரசனான அமோகவர்ஷன் தன் புதல்வி சங்காவை அவனுக்கு மணம் செய்து கொடுத்தான். அந்நாளைய பெண்பாலாரில் அழகாலும் குணத்தாலும் கல்வியாலும் சிறந்து 'நாமகளும் பூமகளும் ஒருங்கு பிறந்தா' ளென்னும் சிறப்புடையவளாக, இவ்வரசி வருணிக்கப்படு கிறாள். அமோகவர்ஷனைப்போலவே அவளும் சமணநெறி சார்ந்தவளாகவே இருந்திருத்தல் கூடும். சிவன் கோயிலில் பூவை முகர்ந்ததற்காக மூக்கை ஒரு நாயனாரும், அதன்பின் கையை மற்றொரு நாயனாரான அவள் கணவனும் வெட்டினார் கள் என்று பெரிய புராணங்கூறுவது இப்பெண்ணரணங்கைப் பற்றிய செய்தியே என்று ஆராய்ச்சியாளர் பலர் கருதுகின் றனர்,

## பாண்டிய பல்லவப் போட்டி : தெள்ளாற்றுப்போர் I
கி. பி. 834

தெள்ளாறு வடஆர்க்காட்டு மாவட்டத்தில் வந்தவாசிக் கருகிலுள்ளது. இதே இடத்தில் சோழப் பேரரசர் காலத்திலும் ஒரு போர் நடந்ததாதலால், இதனை நாம் முதல் தெள்ளாற்றுப்போர் என்று கூறலாம். மூன்றும் நந்திவர்ம பல்லவனுக்குத் 'தெள்ளாறெறிநத நந்திவர்மன்' என்ற சிறப்புப் பெயரையும் பெரும் புகழையும் அளித்த போர் இதுவேயாகும்.

முதலாம் வரகுணவர்மனுக்குப் பின் பாண்டிய அரியணை ஏறியவன் சீர்மாறன் சீரிவல்லபன் பரசக்கர கோலாகலன் என்பவன் (830-862). பல்லவரிடமிருந்து முந்திய பாண்டியன் சோணாட்டைக் கைப்பற்றிய பின் பாண்டியன் அத்துடன் அமையாமல் பல்லவ நாட்டின் மீதே படையெடுக்க எண்ணினான். பல்லவன் வடதிசைப் படையெழுச்சியைப்பயன்படுத்தி அவன் சேர சோழப் படைகளையும் உடன்கொண்டு தெள்ளாறு வரை முன்னேறினான். அவ்விடத்தில் தென் தமிழ்ப் படைகள் படுதோல்வியடைந்தன. இராஷ்டிரகூட வெற்றியால் உயர்ந்த பல்லவன் மதிப்பு தெள்ளாற்று வெற்றியால் முன்னிலும் பன்மடங்காக வளர்ந்தது.

இப்போரால் சோழநாடு பழையபடி பல்லவப்பேரரசுக்கு உட்பட்டதாயிற்று.

பெருந்தேவனார் பாரத வெண்பா இத்தெள்ளாற்றுப் போரைக் குறிப்பிட்டு நந்திவர்மனைப் புகழ்ந்துள்ளது.

''வண்மையால், கல்வியால், மாபலத்தால், ஆள்வினையால்
உண்மையால், பாராள் உரிமையால்,—திண்மையால்,
தேர்வேந்தர் வான்ஏறத் தெள்ளாற்றில் வென்றானோடு
யார் வேந்தர் ஏற்பார் எதிர்?''

## வெள்ளாறு, பழயாறு, நள்ளாறு, கடம்பூர்ப் போர்க்களங்கள்

தெள்ளாறெறிந்த பின்னும், பல்லவன் மூன்றும் நந்திவர்மன் பகைவர்களைத் துரத்திச் சென்று, சோணாட்டில் உள்ள வெள்ளாறு, பழயாறு, நள்ளாறு, கடம்பூர் முதலிய போர்க்களங்களில் அவர்களை முறியடித்துத் துரத்தினான். இப்போர்கள் 834–க்கும் 836–க்கும் இடையே நடைபெற்றிருக்கக்கூடும்.

## தமிழ் வளர்த்த நந்தி

தெள்ளாறெறிந்த நந்திவர்வன் தமிழ்ப் புலமையும் தமிழ்ப் பற்றும் உடையவன். 'தமிழ் நந்தி' 'பைந்தமிழை ஆய்

கின்ற கோன் நந்தி' 'நூற்கடல் புலவன்' 'நூல் வரம்பு முழுதும் கண்டான்' என நந்திக் கலம்பக ஆசிரியர் அவனைப் புகழ்கின்றார். அவன் மறைவு பற்றிய அவர் பாடலுடன் சோக ரசத்துக்கும் அணியழகுக்கும் ஈடாகக் கூறத்தக்க பாடல்கள் மிகச் சிலவே.

''வானுறுமதியை அடைந்தது உன்வதனம்!
வையகம் அடைந்தது உன் கீர்த்தி!
கானுறு புலியை அடைந்தது உன் வீரம்!
கற்பகம் அடைந்தது உன் கரங்கள்!
தேன்உறு மலராள் அரியிடம் சேர்ந்தாள்!
செந்தழல் புகுந்தது உன் மேனி!—
யானும் என் கவியும் எவ்விடம் புகுவேம்,
எந்தையே! நந்தி நாயகனே!''

**பாண்டியர் இலங்கைப் படையெடுப்பு: சிங்களப்போர்:**
**குன்னூர்ப்போர் 840**

சீர்மாறன் சிரீவல்லபன் வெற்றிகளாகச் சிங்களம், குன்னூர், விழிஞம் என்று மூன்று பெயர்களை மட்டுமே சின்னமனூர்ச் செப்பேடுகள் குறிக்கின்றன. சிங்களம் என்ற சொல் இலங்கையைக் குறித்ததென்பதில் ஐயமில்லை. ஆனால் அது இங்கே ஒரு போர்க்களப் பெயராகக் கூறப்பட்டதா, முழு இலங்கைப் போரையும் மொத்தமாகக் காட்டிற்று என்பது தெரியவில்லை. அதுபோலவே சிங்களம், விழிஞம் ஆகிய இரண்டு வெற்றிகளின் இடையே கூறப்படுகிற குன்னூர் முந்தியதைச் சேர்ந்ததா, பிந்தியதைச் சார்ந்ததா என்பதும் விளங்கவில்லை. கேரளப் பகுதியிலும் நீலகிரிப் பகுதியிலும் குன்னூர் என்ற இடப்பெயர்கள் உள்ளன. ஆனால் சிங்களப் போர் என்ற பொது நிகழ்ச்சியின் முக்கிய உறுப்பாகவே குன்னூர் குறிக்கப்பட்டிருக்கிறது என்று கருத இடமுண்டு.

கடலுக்கப்பாற்பட்ட தலைத்தமிழகத்துக்கும் இலங்கைத் தமிழகத்துக்கும் இடையே சங்ககாலஉறவு, பெரும்பாலும் சோழர் படையெடுப்பாகவும் சேரநாட்டவர் குடியேற்றமாகவுமே இருந்தது. பாண்டிய நாட்டுத் தொடர்பு மன்னர் நேசத் தொடர்பாகவும் அத்துடன்மன்னர், மக்கள் மண உறவுத் தொடர்பாகவும் மட்டுமே இருந்தது. நெடியோன் காலத்துக்கு இப்பால், இலங்கைத் தமிழகமும் தலைத் தமிழகமும் கடலால் பிரிவுற்று வேறு வேறு நிலப்பிரிவுகளானபின், சீர்மாறன் ஆட்சியிலேயே நாம் முதல் தடவையாகப் பாண்டிய-இலங்கை சரிசமப் போட்டிப் பூசல்பற்றிக் கேள்விப்படுகிறோம். இது உண்மையில் பாண்டியர் பேரரசு விரிவின் ஒரு படியே

என்பதில் ஐயமில்லை. ஏனெனில் கரிகாலனுக்குப்பின் அச் சங்க காலச் சோழனையும் அவன் மரபினரையும் இடைக்காலப் பாண்டியரையும் பின்பற்றிச் சோழப் பேரரசரும இலங்கையைத் தம் பேரரசு வளர்ச்சியில் கடல்கடந்த பேரரசின் முதற் படியாகக் கொண்டது காண்கிறோம். ஆயினும் இடைக்காலப் பாண்டியர் ஊழியில் மட்டுமே பாண்டியரும் இலங்கையரசரும் சரிசமப் பேரரசுப் போட்டியில் முனைவது காண்கிறோம். பாண்டி நாட்டுத் தமிழக மறுமலர்ச்சி இலங்கையிலும் இந் நாளில் பூப்பெய்தியது என்று தோற்றுகிறது.

போருக்குக் காரணமாக இரு திசையிலும் பேரரசுக்குரிய சாக்குப் போக்குகளும் வாய்ப்புக்களும் இயல்பாகக் கிடைத் தன.

நெடுஞ்சடையன் மழவர்கோன் பாவையன்றி வேறு ஓர் அயல்புலப் பாவையையும் மணந்திருந்தான். அவ்வழியில் பிறந்த ஓர் இளவரசன் சீர் மாறனுக்கெதிராகப் பாண்டிய அரசுரிமை கோரினான். பாண்டியப் பேரரசின்மீது ஆதிக்கம் செலுத்தும் விழிப்புடன் இலங்கை அரசன் தர்மபாலன் அவ னுக்கு ஆதரவளித்தான். அதேசமயம் இலங்கை மரபுப்படி தனக்கு அமைச்சர் பதவி அளிக்கவில்லை என்று குறைப்பட்ட தர்ம பாலனின் இளவல் மகேந்திரன் சீர்மாறனிடம் தஞ்ச மடைந்தான். போர்த் தினவுகொண்ட இருபெருவேந்தர் களும் இவ்வாறு கடல் கடந்து தம் அரசியல் கரங்களை நீட்ட முனைந்தனர்,

பாண்டியன் ஒரு படையுடன் மகேந்திரனை இலங்கைக்கு அனுப்பினான். பாண்டியர் படை இலங்கையில் 'மகதசித' என்ற கோட்டையை முற்றுகையிட்டது. இவ்வமயம் தர்ம பாலன் இறக்கவே, அவன் மகன் அகபோதி அரசனானான். அர சன் தன் உடன் பிறந்தவனான சிலாமேகசேனனுடன் அவர் களை எதிர்த்துப் போரிட்டான். இந்தப் போரே ஒருவேளைகுன் னூர்ப் போராக இருந்திருக்கக்கூடும். இப்போரில் பாண்டியன் முழுநிறை வெற்றி பெற்றான். ஆனால் இப்போரில் இருபுறமும் பேரழிவு ஏற்பட்டது பாண்டியர் தளபதியும் மகேந்திரனும் படைவீரர்களில் பெரும்பகுதியினரும் மாண்டனர், அதே சம யம் பாண்டியரிடம் பட்ட அவமதிப்புத் தாங்காமல் இளவர சன் சேனன் தற்கொலை செய்துகொண்டான். இந்நிலையில் இலங்கை மன்னன் தன் அரியணையையும் அணிமணி நிதிகளை யும் மட்டும் காப்பாற்றிக் கொள்ள எண்ணி அவற்றுடன் மலாய் நாட்டுக்கு ஓடினான்.

இப்போரில் பாண்டியர் ஈழ நாட்டில் பல நகரங்களைக் கொள்ளையிட்டனர் என்றும், புத்தப்பள்ளிகளிலுள்ள பொற் படிவங்களையும் விலை யுயர்ந்த பல பொருள்களையும் கவர்ந்து

சென்றனர் என்றும், சிங்கள மாநிலம் தன் செல்வமெல்லாம் இழந்து சிறுமையுற்ற தென்றும் மகாவம்சோ கூறுகிறது.

இலங்கையும் பாண்டியப் பேரரசுக்கு உட்பட்டது.

கடலாட்சித் துறையிலும் சங்ககாலப் பண்பின் மறு மலர்ச்சி பாண்டியா ஆட்சியில்ஏற்பட்டது என்பதை இப்போர் காட்டுகிறது. சேரசோழபல்லவரும் கடற்படை வைத்திருந் தாலும்,பல்லவர்களும்இலங்கைவெற்றிபற்றிக் கனவுகண்டிருந் தாலும், பாண்டியரே இடைக்காலத்தில் தமிழகத்தின் தனிக் கடற்பேரரசராயினர். இவ்வகையிலும் இடைக்காலப் பாண் டிய அரசு நெடியோன் காலக் கடல்ஆட்சியின் மறுமலர்ச்சியா கவும் கரிகாலன் கடல்வெற்றியின் மறுபதிப்பாகவும் அமைந்த துடன், பின்னாளைய பெரும் பேரரசான சோழ மரபுக்கு வழி காட்டியாகவும் தூண்டுதலாகவும் மிளிர்ந்தது.

தொல்பழங் காலத்தையும் சோழப் பெரும் பேரரசுக் காலத்தையும் போலவே, இக்காலத்திலும் தமிழகப் பேரரசு ஒன்றே கடலகப் பேரரசாக விளங்கி யிருந்தது என்பது குறிப் பிடத்தக்கது.

## விழிஞப் போர் II

வேணாட்டில் ஏதேனும் ஒரு கிளர்ச்சியை ஒட்டி இப் போர் நிகழ்ந்திருக்கலாம். விழிஞம் திருவனந்தபுரத்துக்குப் பத்துக் கல் தெற்கிலுள்ள மேல் கடற்கரைத் துறைமுக நகரம் என்பது முன்பே குறிக்கப்பட்டது.

தேங்கமழ்பொழில் குன்னூரிலும்,
சிங்களத்தும், விழிஞத்தும்
வாடாத வாகை சூடிக்
கோடாத செங்கோல் நடக்க

என்ற சின்னமனூர்ப் பட்டய வாசகங்கள் விழிஞப் போரு டன் குன்னூர் சிங்களப்போர்களையும் எடுத்துரைககின்றன. முன்பே நாடிழந்திருந்த வேணாடாண்ட சேர அரசன் இலங் கைப் போர் நிகழ்ச்சியின்போது கிளர்ச்சி செய்தோ, நேரடி யாக இலங்கை அரசனுடன் தொடர்புகொண்டோ இருந் திருக்கலாம். இதுவே இலங்கைப் போரை யடுத்துச் சேர நாட்டிலும் ஒரு விழிஞப் போரைத் தூண்டியிருக்கக்கூடும் என்னலாம்.

## குடமூக்குப் போர் கி. பி. 854.

முன் எந்தப் பேரரசுக்கும் இல்லாத உச்சதளத்துக்கு ஈழ வெற்றி பாண்டியன் புகழை உயர்த்தியிருக்க வேண்டும். களப் பிரர் எழுச்சியின் பயனாகத் தன்னிலையும் தன்னுணர்வும் கெட்

டிருந்த தமிழகம் இப் பாண்டிய வெற்றி மூலம் தன்னைத்தான் உணரத் தொடங்கிவிட்டது. ஆனால் தமிழகம் என்றும் எந்தத் தனி ஒரு தமிழனோ அல்லது தனியொரு தமிழரசனோ உச்ச உயர்நிலை அடைவதைப் பொறுப்பதில்லை. இதனால், மற்றத் தமிழரசுகள்—பேரரசுகளும் அரசுகளும், சிற்றரசுகளும் யாவும் கலங்கின, எதிர்ப்பில் ஒன்றுபட முனைந்தன. அது மட்டு மன்று. தென்னாட்டின் வடதிசைப் பேரரசுகளும், சிந்து கங்கை வெளியில் வலிமை கெடாதிருக்க ஒருசில அரசுகளும் கூடநடுங் கின. அவையும் எதிர்ப்புக்குவலுவூட்டின. பாண்டியப்பேரர சால் மாநிலத்துக்குவர இருநத ஆபத்து பண்டை நெடியோன் புகழின் நிழலாக, சங்ககாலச் செங்குட்டுவன், கரிகாலன் புக ழின் மறுபதிப்பாக அவர்கள் உள்ளத்தில் வீசியிருத்தல் கூடும். அவர்கள் அனைவரும் விரைவில் ஆபத்துக் காலத் தோழர் களாக ஒன்று கூடிப் பாண்டியரை எதிர்க்க முனைந்தனர். குட மூக்குப் போரே அதன் விளைவு.

குடமூக்கு என்பது கும்பகோணத்துக்குரிய தமிழ்ப்பெயர். அப் பெயராலேயே அது தமிழிலக்கியத்திலும் வரலாற்றிலும் குறிக்கப்படுகிறது. அது கி. பி. 854-ல் நடை பெற்றிருக்க வேண்டும் என்று ஆராய்ச்சிப் பேரறிஞர் டி. வி. சதாசிவப் பண்டாரத்தார் கருதுகிறார்.

> "கொங்கலரும் பொழில்
> குடமூக்கில் போர்குறித்து
> வந்தெதிர்த்த கங்க, பல்லவ
> சோழ, காளிங்க, மாகதாதிகள்
> குருதிப்பெரும்புனல் குளிப்பக்
> கூர்வெங்கணைத் தொடைநெகிழ்த்து"

என்று சின்னமனூர்ச் செப்பேடு இவ்வெற்றி பற்றி முழக்க மிடுகின்றது. இதில் பாண்டியர் முக்கிய எதிரிகளும் எதிரி களுக்குத் தலைமை வகித்தவர்களும் பல்லவர்களே என்பதில் ஐயமில்லை. இச் சமயம் பல்லவப் பேரரசை ஆண்டவன் நிரு பதுங்கவர்மன். அவனது வாகூர் செப்பேடுகளும் இதைக் குறிப்பிடுகின்றன.

பல்லவனுடன் கங்கர், சோழர், கலிங்கர், மகதர் ஆகிய வர் படைகளும் பாண்டியனை எதிர்த்தன என்று சின்ன மனூர்ச் செப்பேடு கூறுகிறது. தெள்ளாற்றுக்குப் பின் சோழர் பல்லவர் சிற்றரசர்களே. கங்கரும் இச் சமயம் பல்ல வருடன் சேர்ந்ததில் வியப்பில்லை. அவர்கள் என்றும் பேரரச ராகாவிட்டாலும்அவ்வெண்ணத்துடன் எப்போதும்பக்கமாறி வந்தவர்களே. ஆனால் கலிங்கரும் மகதரும் இதில் இடம்

பெற்றிருப்பதை வரலாற்றாசிரியர் மிகையுரை என்று கருதுகின்றனர். மிகையுரை எப்போதும் கவிதையில் இடம் பெறுபவை. ஓர் அரசனுக்கும், ஒரு போருக்கும் மட்டும் அவை உரியவையல்ல, எனவே அது மிகையுரையன்று, கால நிலையைக் கண்ணாடி போலக் காட்டும் மெய்யுரையே.

தமிழகத்திலேயே தென்னார்க்காட்டு மாவட்டத்தின் ஒரு பகுதியும் மைசூரை அடுத்த பகுதியும் மகதநாடு என்று குறிக்கப்படுவதுண்டு. தென்னார்க்காட்டு மாவட்டத்தில் பாடலிபுரம் என்ற வடமகதத் தலைநகரப் பெயருடைய பண்டைநகரமும் உண்டு. குடமூக்குப் போரிலீடுபட்ட மகதர் இப் பகுதிச் சிற்றரசராக இருத்தலும் கூடும். ஆனால் கலிங்கருடன் அவர்கள் இணைத்துக் கூறப்படுகின்றனர். இத்தொடர்புகள் இன்னும் ஆராயத்தக்கன.

ஏழாம் நூற்றாண்டின் பின் பன்னிரெண்டாம் நூற்றாண்டில் இஸ்லாமிய அரசு பேரரசுகள் வரும்வரை வடதிசையில் பேரரசுகளே கிடையாது என்பதையும், அச் சமயந்தான் தென்னாட்டில் மாநிலத் தேசியம் தென்னாட்டுப் பேரரச அவா உருவில் கரு முளைத்து, தென்னாட்டுப் பேரரசுப் போட்டியில் கருமுதிர்வுற்று, சோழப் பெரும் பேரரசின் உருவில் பிறக்க இருந்த தென்பதையும் தேசியக் கண்ணோட்டமற்ற அயல்புல, அயல் நோக்குடைய வரலாற்றாசிரியர் காணத் தவறியுள்ளனர்.

## அரசிலாற்றுப் போர் கி. பி. 862

சீர்மாற சிரீவல்லப பாண்டியனது கடைசிப் போர்க்களம் அரசிலாற்றுப் போர்க்களமே. அது அரிசிலாற்றங் கரையில் நடைபெற்றதனால் அரசிலாற்றுப் போர் என்றே அழைக்கப்படுகிறது. பாண்டியர் பெருந்தோல்வியாதலால் அது பாண்டியர் செப்பேடுகள் எதிலும் குறிக்கப்பெறவில்லை ஆனால் வெற்றி பெற்ற பல்லவன் நிருபதுங்கனது வாகூர்ச் செப்பேடுகள் அதை விதந்துரைக்கின்றன.

இலங்கையில் பாண்டியர் ஆட்சி சில நாட்களுக்குள் அழிந்தது. இலங்கையைக் கைப்பற்றியாண்ட புதிய அரசன் இரண்டாம் சேனன் பாண்டியர் மீது பழிவாங்கும் எண்ணத்துடன் மாயப் பாண்டியனை மீண்டும் கண்டுபிடித்து ஆதரித்தான். அவனுடன் பல்லவன் நிருபதுங்கனை யடுத்து, அவன் உதவியால் பாண்டியர் எதிரிகளை மீண்டும் திரட்டினான். இங்ஙனம் பழிவாங்கும் போரை இலங்கையிலோ இலங்கையின் திசையிலோ நடத்தாமல், பல்லவப் பெருஞ்சேனையுடன் தன்

சிங்களப் படைகளையும் சேர்த்து வடக்கிலிருந்து பாண்டி நாட் நாட்டின் மீது படையெடுத்தான்.

கி. பி. 862-ல் நடைபெற்ற இப்போரில் பல்லவரும் சிங்களரும் பெரு வெற்றி கண்டனர். பாண்டியப் பேரரசு தற்காப்பில் நின்று தன்னைக் காத்துத் தன் மாநிலங் கடந்த புகழை மின்னலென மறையவிடவே நேர்ந்தது. அடுத்த பாண்டியன் ஆட்சி இதே ஆண்டில் தொடங்குவதால், சீர் மாறன் போரிலோ அல்லது போரின் பின் ஏற்பட்ட மன இடிவிலோ மாண்டிருக்கக்கூடும் என்னலாம்.

பாண்டியப் பேரரசின் வளர்ச்சிக்கு இப்போர் பேரிடியானாலும், இப்போர் அப்பேரரசை சிதறடித்து விடவில்லை. அதன் வளர்ச்சியை முற்றிலும் தடுத்துவிடவும் இல்லை சீர் மாறன் புதல்வர் இருவர் ஆட்சிகளும் இதனைக் காட்டுகின்றன.

**பாண்டிய-பல்லவப் போட்டி:—862-880: கடைசிக் கட்டம்:**
**இடவைப் போர் கி. பி. 862.**

சீர்மாற சிரீவல்லபனுக்குப்பின் அவன் புதல்வர் இரண்டாம் வரகுணன் என்ற வரகுணவர்மன் (862—880), பராந்தகன் வீர நாராயணன் (880—900) ஆகிய இரு புதல்வர்களும் அவர்களை அடுத்துப் பராந்தகன் புதல்வனான மூன்றும் இராசசிம்மனும் (900—910] ஆண்டனர்.

இடவைப் போர் பாண்டியர் வெற்றிகளுள் ஒன்று ஆயினும், பாண்டியர் செப்பேடுகள் எதுவும் அது பற்றிக் குறிக்கவில்லை. கல்வெட்டுகளின் சான்றுகொண்டே அதைத் துணியவேண்டியதாயுள்ளது. ஆனால் அது எந்த அரசனுக்குரியது என்பது பற்றி வரலாற்றாசிரியர்களுக்கிடையே பெருவேற்றுமைக் காணப்படுகிறது. அதை முதலாம் வரகுணன் என்ற வரகுண மகாராசனுக்கு உரிமைப்படுத்துபவர்களும், பராந்தகன் வீர நாராயணனுக்கு உரிமைப்படுத்துபவரும் உண்டு இது பாண்டியப் பேரரசின் சோழநாட்டு வெற்றி குறிப்பதனாலும், முதலாம் வரகுணவர்மன் அரசூர்ப்படை வீட்டிலிருந்து கொண்டே திருப்புடை மருதூர் என்ற அம்பாசமுத்திரத்திலுள்ள கோயிலுக்குக் கொடை வழங்கியதாகத் தெரிவதனாலும், முதலாம் வரகுணன் ஆட்சியுடனேயே இது பெரிதும் இசைவது ஆகும். ஆயினும் கல்வெட்டாராய்ச்சியாளர் தரும் ஆண்டுக் கணிப்பை யொட்டியே இதனை இரண்டாம் வரகுணவர்மனுக்குரியதாகக் கொள்ளவேண்டியிருக்கிறது.

இடவை என்பது சோழ மண்டலத்தில் இராசேந்திரசிங்க வளநாட்டு மண்ணி நாட்டில் இன்றைய கும்பகோணத்துக்

கருகாமையில் இருந்ததெனத் திரு பண்டாரத்தார், கல் வெட்டுக்கள் மூலம் சுட்டிக் காட்டுகிறார். புலவர் திரு. வை. சுந்தரேசவாண்டையார் (செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 22, பரல் 5 பக்கம் 140-1) திருப்பனந்தாள் கல்வெட்டுக்களின் உதவியால் அது வடகரை மண்ணி நாடு எனற பகுதியில் இடவை வாய்க்கால் என்ற வாய்க்காலை அடுத்துள்ள ஒரு ஊர் எனறும், 1447 வரை அவ்வூர் இருந்ததாகக் கல்வெட்டுக் களால் தெரிவதாகவும் அறிவிக்கிறார். ஆனால் ஆதித்த சோழ னுடன் போரிட்டு ஒரு பாண்டியன் பின்னடைந்து ஓடிய கார ணத்தாலேயே அது இடவை என்று பெயர் பெற்றதென்று குறிக்கிறார். ஆனால், 'இந்நாட்டு இடவையாகிய, பாண்டியனை வென்கண்ட சோழ சருப்பேதி மங்கலத்து' என்ற கல்வெட்டுச் சான்றே இடவை என்பது வெநகணடதற்கு முன்னுள்ள பெயர் என்பதைக் காட்டும். இடவையிலுள்ள அந் தப்போரை நோக்க, பாண்டியன் வென்ற இந்த இடவைப் போர் முதல் இடவைப்போர் ஆகும் என்னலாம்.

> 'குரைகழற்கால் அரசு இறைஞ்சக்
> குவலயம தன தாக்கின
> வரைபுரையும் மணி நெடுந்தோள்
> மன்னர் கோன் வரகுணவர்மன்'

என்று சின்னமனூர்ச் செப்பேடு இரண்டாம் வரகுணனைப் புகழ்கிறது. ஆனால் அவன் செயலாக வேறு எதுவும் கூறப்பட வில்லை.

திண்டுக்கல் பகுதியிலுள்ள ஒரு கல்வெட்டின் மூலம் இப் பாண்டியன் சோணாட்டின் மீது படையெடுத்து, தென் பெண்ணையாற்றின் கரையிலுள்ள அரசூரில்தளமிட்டுத் தங்கி யிருந்ததாக அறிகிறோம். சோழன் இப்போரில் தோல்வியுற் றான். அத்துடன் இப்பாண்டியன் வேம்பில் என்ற இடத்தி லுள்ள கோட்டையை அழித்தான் என்றும் அறிகிறோம். வேம் பில் என்பது தற்கால வேம்பற்றூர் ஆகும். ஆதுவே சங்ககால விசலூர் அல்லது வியலூர் என்றும் சிலர் கொள்கின்றனர். ஏனெனில் அதுவும் திருவிசலூர் என்றே அழைக்கப்பட்டது.

பராந்தகப் பள்ளிவேலன் என்ற நாகமபுல்லன் இடவைப் போரில் பாண்டியனுடன் போர் செய்திருந்தான். இப்போர் பராந்தக நாராயணன் போர் என்று கருதுவதற்கு இப்பெயர் இடம் கொடுத்திருத்தல் வேண்டும்.

## திருப்புறம்பியம் போர் 880

திருப்புறம்பியம் என்பது கும்பகோணத்துக்கு அருகி லுள்ள ஓர் ஊர். இங்குக் கி. பி. 880-ல் நடைப்பெற்ற பெரும்

போர் தென்னாட்டு வரலாற்றிலேயே பெரு முக்கியத்துவம் உடைய ஒரு போராராக எல்லா வரலாற்றாசிரியர்களாலும் கொள்ளப்படுகிறது. உண்மையில் அது பாண்டியருக்கும் பல்லவருக்கும் இடையே இருநூறு ஆண்டுகளாக நடைபெற்று வந்த தமிழக முதன்மைப் போட்டியாகிய சதுரங்கத்தின் இறுதியாட்டம் ஆகும். இது மட்டுமன்று, அது அவ்வாட்டத்தில் எதிர்பாராத திரும்பு கட்டமும் ஆகும். போட்டியில் இரு பேரரசுகளும் இரண்டு பெரிய மதயானைகள்போல் சண்டையிட்டுத் தளர்வுற்றன. அச்சமயம் சங்ககாலத்திலிருந்து ஐந்து ஆறு நூற்றாண்டுகளுக்கு மேல் பேரரசார்வத்தைக் கருவிலவைத்து வளர்த்த சோழர் புலிபோலச் சீறி எழுந்து தமிழக அரசியல் களத்தை விரைவில் தமதாக்கிக் கொண்டனர், அது மட்டுமன்று, நிலத்தில் தமிழகம் கடந்து நெடுந்தொலை செல்லாமலும், கடலகத்தில் இலங்கை கடந்து கனவுகாண முடியாமலும் இருந்த பாண்டியர் போலன்றி, அவர்கள் கரிகாலன் செயலையும் நெடியோன் செயலையும் வரலாற்றுக் காலத்திலேயே மெய்யாக்கி, தென்னாடெங்கும் பரந்து சிந்து கங்கை வெளியிலும் இலங்கையிலும தென்கிழக்காசியாவிலும் மீண்டும் தமிழகக் கொடியைப் பறக்கவிடத் தொடங்கினர்.

திருப்புறம்பியப் போர் நிகழ்ச்சியின்போது பல்லவப் பேரரசனாயிருந்தவன் நிருபதுங்க வர்மன் (850-882). அவனுடன் அவன் புதல்வன் அபராஜிதனும் ஆட்சியில் பங்குகொண்டிருந்தான். பல்லவன் நெருங்கிய உறவினனாய் இருந்த கங்க அரசன் முதலாம் பிருதிவீபதியும், வளர்நதுவரும் சிற்றரசுத் தலைவனான சோழன் ஆதித்தனும் பல்லவர் பக்கம் நின்று போரிட்டனர். பாண்டியன் இரண்டாம் வரகுணன் இப்போரில் ஒப்பற்ற வீரம் காட்டினான். ஆனால் கங்கன் பிருதிவீபதி கணடவர் வியக்கும் வண்ணம் பாண்டியர் படைகளைக் கொன்று குவித்தான். சீற்றம் கொண்ட பாண்டியன் அவன் மீது பாய்ந்து அவனைக் கொன்று வீழ்த்தினான். ஆனால் மாள்வதற்கு முன்பே அவன் தன் வீரத்தால் பல்லவர் பக்கத்துக்கே வெற்றியளித்துவிட்டான். கங்கரின் உதயேந்திரக் கல்வெட்டு இச்செயலைப் பாராட்டிக் கூறுகிறது.

'தன் உயிர் விட்டும் அபராஜிதனை (பகைவரால் வெல்லப் படாதவன் என்ற அப்பெயரின் பொருளுக்கேற்றபடி) அபராஜிதனாகவே ஆக்கிவிட்டான்' என்று அது குறிக்கிறது.

திருப்புறம்பியத்தில் இன்றும் முதலாம் பிருதிவீபதிக்கு நிறுவப்பட்ட வீரக்கோயில் அழியாது நிலவுகின்றதென்று தெரிய வருகிறது.

பல்லவர் பக்கத்துக்குப் போர் மிகப் பெரிய வெற்றி. பாண்டியரோ அதில் கிட்டத்தட்டத் தம் பேரரசு வலுவையே இழந்தனர். ஆயினும் வெற்றிபெற்ற பல்லவரும் அவ் வெற்றியின் பயனைப்பெற முடியவில்லை. வடக்கிலும் தெற்கிலும் இரு பேரரசுகளுடன் நீடித்த போட்டியிட்டு அவ்வரசு தளர்ந்து போய்விட்டது. இவ் வெற்றியைப் பயன்படுத்தி யிருக்ககூடிய வீரமும் வாய்ப்பும் உடையவன் கங்கன் பிருதிவீபதி. அவன் போரில்பட்ட சமயர், வலிமை வாய்ந்த பின்னுரிமையாளர் இல்லாது போயினர். ஆகவே தென்னகத்தின் பேரூழும், இந்திய மாநிலத்தின் ஆகூழும் போரின் பயனை அப்போது உருவில் சிறிதாய் இருந்த பேரரசுக் குழந்தையாகிய சோழ அரசுக்கே அளித்தன.

போரில் உதவியதற்குரிய பரிசாக ஆதித்த சோழனுக்குத் தஞ்சையைச் சூழ்ந்த பகுதி அளிக்கப்பட்டது. அதனை அவன் இறுகப்பற்றினான். அதையே மூலதளமாகக்கொண்டு தன் தலைமுறைக்குள் பல்லவருடைய படையை வீழ்த்தி, பாண்டியர் பக்கம் திரும்புவதற்குச் சோழ அரசைப் பக்குவப் படுத்தினான்.

கரகிரிப்போர் (880—890)

பாண்டியன் பராந்தக வீர நாராயணன் இப் போரில் உக்கிரன் என்ற ஒரு தலைவனை வென்று பெண்ணாகடத்தை அழித்தான்.

## நிரவத்யபுரம், பெருவங்கூர்ப் போர்க்களங்கள் (888-918.)

இரண்டாம்புலிகேசிக்குப்பின் சாளுக்கிய மரபு இரண்டாய்ப் பிரிந்தது. பல்லவப் பேரரசின் வடபகுதியாகிய வேங்கிநாட்டை கீழைச் சாளுக்கியர் என்ற பிரிவினர் ஆண்டுவந்தனர். அவர்களில் போரில் வல்லவனெனப் பேர் பெற்றவன் சாளுக்கிய வீமன். அவன் இராஷ்டிர கூடப்பேரரசன் மூன்றும் கிருஷ்ணனையும் அவனுக்கு உதவியாக வந்த கருநாடக அரசர்களையும் கூர்ச்சர (குஜராத்) நாட்டு அரசரையும் ஒருங்கே இப் போர்க்களங்களில் முறியடித்தான் என்று மசூலிப்பட்டணம் பட்டயங்களால் அறிகிறோம்.

இப் போர்களில் இராஷ்டிர கூடரின் படைத்தலைவன் குண்டய்யா என்பவன் ஆவன்.

## மாந்தரவு, மதுமதுகு, மண்ணெ, மங்கள், சோரமதிப் போர்க்களங்கள்

தென்னாட்டின் தென் கோடியாகிய தமிழகத்திலும், வடகோடியாகிய கோதாவரி கிருஷ்ணா இடைநிலப் பகுதியிலும் தான் பேரரசுகளின் பெரும் போட்டிகளால் ஏற்பட்ட

சுழிகள்பல சிற்றரசுகளின்வாழ்வைக் கரைப்பது காண்கிறோம். இடைக்காலத்தில் மட்டுமன்றிப் பிற் காலங்களில் கூடத் தென்னாட்டு வாழ்வின் நடுமையச் சுழலாக மைசூரும் தற்கால இராயலசீமாப் பகுதியுமே இயங்கியுள்ளன என்பது காணலாம் இப் பகுதிகள் தான் சங்காலத்தில் 'வடுகநாடு' என்று குறிக் கப்பட்ட குறிஞ்சிமுல்லை நிலப்பகுதிகள் ஆகும். இங்கே கங் கர், கடம்பர். பாணர், வைடும்பர், நுளம்பர் ஆகியோரும், இருங்கோல சோழர், உச்சங்கிப் பாண்டியர், தெலுங்குச் சோடர் போன்ற பாண்டிய, சோழ மரபின் கிளைக்குடிகள் பலவும் சுழலும் சுழற்சியின் வரலாறு தென்னாட்டு நாகரிக வாலாற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். தென் னாட்டு வரலாற்றின் பலபுதிர்களை இப் பகுதிபற்றிய நுணுகிய விளக்க வரலாறு விடுவிப்பது உறுதி.

ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பேரரசுப்போட்டி களில் சிக்கிக் கங்கர் மிகவும் வலுவிழந்திருந்தனர். அவர்களி டையே ஏற்பட்ட பிளவுகள் இதனை மிகுதிப்படுத்தின. இவற் றுள் ஒன்று அரசுரிமைப் போட்டியாகத் தொடங்கிக் கங்க மரபையே இரு மரபுகளாக்கி, இப் பகுதிச் சிற்றரசுகளையும் இரு கட்சிகளாக்கிற்று. அவர்களிடையே ஓயாத போராட் டங்கள் நடைபெற்றன. அப் போராட்டத்தைச் சேர்ந்த போர்களே மேற்குறிக்கப்பட்டவை.

கங்க அரசுரிமையாளர்களில் ஒருவன் முதலாம் பிருதி வீபதி திருப்புறம்பியப் போரில் வீர மறைவுற்றவன் இவனே. அவனைப் பாணரும் வைடும்பரும் ஆதரித்தனர். அவனை எதிர்த்த உரிமையாளன் முதலாம் இராசமல்லன். அவனை நுளம்பரும் தெலுங்க சோடரும் ஆதரித்தனர்.

இம் மரபினர் நீடித்து ஆற்றிய உட்பகைப் போர்க்களங் களில் சோரமதி முக்கியமானது. இது அனந்தப்பூர் மாவட் டத்தில் பெனுகொண்டா வட்டத்தைச் சார்ந்த தற்காலச் சோளமாரியேயாகும். இப்போர் கி. பி. 878-ல் நடைபெற்ற தென்று அறிகிறோம். அதில் வெற்றிபெற்றவன் முதலாம் பிருதிவீபதியும்அவன் தரப்பினருமே. ஆயினும் இராசமல்லன் முற்றிலும் வலுவிழந்து விட வில்லை. திரும்புறம்பியப் போரில் முதலாம் பிருதிவீபதி இறந்ததனால் இராசமல்லன் மரபு மீண் டும் வலுவுறத் தொடங்கிற்று.

## 9. சோழப் பெரும் பேரரசு

தென்னக வரலாற்றிலே சங்க காலத்துடன் போட்டியிட வல்ல காலம் ஒன்று உண்டு. அதுவே சோழப்பெரும் பேரரசர் ஆட்சிக்காலம். அரசியல் துறையில் அது சங்ககாலம் கடந்து பெருவெற்றி கண்டது. ஆனால் வாழ்க்கைத் துறையில் அது சங்ககாலத்தார் பண்பையோ, இனவளத்தையோ சென்றெட்ட வில்லை. இலக்கிய வகையில், பண்பிலும் வளத்திலும் அது குறைபட நேர்ந்தாலும், வீறமைதிமிக்க அகலக் கவிதை யளவில் அது புது நிலமும் புது மலர்ச்சியும் கண்டது.

தமிழக நாகரிகமும் தேசீய வாழ்வும் பின்னோக்கிய தளர்ச்சியல்ல, முன்னோக்கிய வளர்ச்சியே என்பதை இது நன்கு எடுத்துக் காட்டுகிறது. தளர்ச்சிக் கூறுகள், வளர்ச்சிக் கூறுகள் அதில் தொன்று தொட்டே உண்டு. அயல் பண்புகள் சில சமயம் அதன் தளர்ச்சிக் கூறுகளை வலியுறுத்தின. சில சமயம் அவை வளர்ச்சிக் கூறுகளை ஊக்கின. இவற்றிடையே அது தளர்ச்சி, மறு மலர்ச்சி, புது மலர்ச்சி ஆகிய மூவகை அலை எதிர் அலைகளாக விழுந்தெழுந்து கிளர்ந்து செல்கிறது என்னலாம்.

அரசியல் துறையில் பேரரசு நோக்கிய வளர்ச்சி யலைகளை நாம் கிட்டத் தட்டத் தொடக்கத்திலிருந்தே காண்கிறோம். கடைச் சங்கத்துக்கு முன்னும் கடைச்சங்க காலத்திலும் வீறுார்ந்த பேரரசர் இமய எல்லையும் ஈழ எல்லையும் கடார எல்லையும் காண அவாவி யிருந்தனர். அதே அவாவும் அதே அளவில் முனைத்தெழுந்த செயலும் சோழப் பெரும் பேரரசர் காலத்தின் மீண்டும் உச்சநிலை அடைந்தன. அத்துடன் சங்க காலத்தின் மறு மலர்ச்சியுடன் அது அமைந்து நின்று விட வில்லை. அது கடந்து புது மலர்ச்சியாகவும் பொங்கிப் பொதுளிற்று.

### சங்ககால அரசியல் வாழ்வின் மூன்று குறைபாடுகள்

சங்காகலப் பேரரசுவளர்ச்சியில் நாம் மூன்று குறைகளைக் காண முடியும். சோழப் பெரும் பேரரசர் காலம் அம் மூன்றை யுமே தவிர்த்துள்ளது.

முதலாவதாக, சங்ககாலப் பேரரசுப் பண்பில் இயல்பாக வளம் இருந்தது. ஆனால் உள்ளார்ந்த ஏதோ ஒரு தளர்ச்சிக் கூறு காரணமாக, அந்த வளம் உண்மையான வளமாகச் செய

லாற்றவில்லை, வளரவில்லை. சங்ககாலப் பேரரசுப் போக்கில் இதைக் காணலாம். நெடியோன் கண்ட பேரரசு எல்லையைப் பார்க்கிலும் கரிகாலன் எல்லை குறைபட்டது. கரிகாலன் எல்லையையும் செங்குட்டுவன் எல்லை சென்றெட்டவில்லை. செங்குட்டுவனுக்குப் பின்னே அது தமிழகத்தின் எல்லைக்குள்ளேயே மேலும் குறுக்கம் அடைந்தது. இறுதியில் அரசியல் அமைதியற்ற ஒரு களப்பிரர் எழுச்சிக்கு அது வழிவிட்டு, அதனால் சீர்குலைவு எய்திற்று.

மேலும், நெடியோன் வெற்றிகள் தவிர, மற்றச் சங்க காலப் பேரரசுகள், பேரரசுகள் என்ற பெயரால் நாம் உணரும் நேரடி ஆட்சிகளாய் இருந்தன என்று கூறுவதற்கில்லை. வீரப் புகழ் வேட்டை, மேலுரிமை யாட்சி, தற்காலிகத் திறையிறுப்பு, வீர உலா ஆகிய அளவிலேயே அவற்றில் பலவும் அமைந்திருக்கக் கூடும். இதனாலேயே அவை நிலையான மரபு வளம் காணவில்லை.

அந்நாட்களில் பேரரசரும் முடியரசரும் மற்றப் பேரரசர், முடியரசரை வெல்வதற்கு எவ்வளவு சிறப்பு இருந்ததோ, அதே அளவு சிறப்பு அவர்கள் குடியரசரை வெல்வதற்கும் இருந்தது. வீரம் வண்மை ஆகிய இருபண்புகளிலும் பேரரசர், முடியரசர், குடியரசர் ஆகியவர்களிடையே மக்களோ, புலவர்களோ எந்த வேறுபாடும் காணவில்லை. வீர மிக்கவர், பண்பு மிக்கவர் எந்நிலையினராயினும் உச்சி மேற்கொண்டு போற்றப்பட்டனர். பழைமையான உரிமைப் பேரரசர்களான மூவருக்கும் ஒத்த உயர் மதிப்பு இருந்தது. ஆனால் பாசம் குடியரசர் பக்கமே இருந்ததெனக் கருதுவதற்கு இடமுண்டு.

இது நல்ல குடியாட்சிப் பண்பாயிருக்கலாம். ஆனால் வீரப் போட்டியும் புகழ் வேட்டையும் குடியாட்சியைக் கெடுத்தன. அதே சமயம் பேரரசர் செயல்கள் மக்கள் வேடிக்கைக் காட்சியாகவே இருந்தன. அவை அவர்கள் இன உணர்வைத் தட்டி எழுப்பவில்லை. ஒற்றுமையை வளர்க்கவில்லை. சீட்டுக் கட்டுகளால் வீடு கட்டிக் கட்டி அழித்து விளையாடும் பிள்ளைகளின் விளையாட்டுக்கள்போல, அவற்றின் எழுச்சிகளும் வீழ்ச்சிகளும் தமிழர் வீர விளையாட்டுக்களாய் இருந்தன.

இக் காரணத்தாலேயே சங்க காலத்தில் பேரரசர்களின் அருகில் முடியரசுகளும், முடியரசுகளின் அருகிலே குடியரசுகளும் இருந்துஇடைவிடாப் போட்டியில் முனைவது காண்கிறோம்.

இறுதியாக அந்நாளைய பேரரசுகளுக்கும் வெற்றிகளுக்கும் இலக்கியச் சான்றுகள் தவிர, வேறுபுறச் சான்றுகள் கிட்ட

வில்லை. தமிழிலக்கியத்தின் தனிச்சிறப்பை எளிதில் அறியாத இந்நாளைய உலகில் வரலாற்றாராய்ச்சியாளர் முதலில் அவற்றின் மெய்ம்மையையே ஏற்கமறுத்தனர். கிரேக்க உரோமகச் சான்றுகள் இருந்திராவிட்டால், சங்ககாலமென்ற ஒன்று இருந்தது என்பதையே அவர்கள் நம்ப மறுத்திருப்பர். ஆனால் சங்க இலக்கியச் சான்றின் மதிப்பு உணரப்பட்ட பின்பும், புறச்சான்றுகள் இல்லாக் குறை சிறிதன்று. வரலாற்றுச் செய்திகளை ஒழுங்கு படுத்தவும், உறுதிப்படுத்தவும் அவை இன்றியமையாதவையே.

புறச்சான்றுகள் இல்லாததற்கும் இலக்கியச் சான்றுகளே வளமிழந்து, மரபிழந்து போவதற்கும் அடிப்படைக் காரணம் ஒன்றே ஒன்றுதான். சங்க காலத்தில் தேசீயப் பண்பு வேறெக் காலத்தையும் வேறு எந்த உலகப் பகுதியையும்விட வளமாய் இருந்தது. ஆனால் தேசியக் குறிக்கோள் நாகரிக உலகின் வேறு எந்தப் பகுதியிலும், எந்தக் காலத்திலும் இருந்ததைக் காட்டிலும் குறைவு. இதனால் ஒரே புலவர் இரண்டு அரசரை, சில சமயம் இருதரப்பு அரசரையும் பாடமுடிந்தது பாடியது பண்பையேயன்றி, ஆளையன்று என்பது உணரப்பட்டது. ஆனால் உலகை ஒரு குடைக் கீழ் ஆளுதல், பொதுவற ஒரு மொழி வைத்து உலகாளுதல் என்பவை அழகு வாய்ந்த புகழ்க் குறிக்கோள்களாகவே இருந்தன. தமிழ் உலகம் ஒரு குடைக்கீழ் ஆகவேண்டும் என்ற செயற் குறிக்கோள் அல்லது மக்கட் சார்பான தேசியக் குறிக்கோள் இருந்ததில்லை.

## தென்திசை உயிர் வளம்

சங்ககாலப் பேரரசுகள் தாண்டி இப் பண்புக்ளில் சங்க காலத்துக்குப் பிற்பட்ட பேரரசுகள் பொதுவாகவும், சோழப் பெரும் பேரரசு சிறப்பாகவும் வளர்ச்சி பெற்று வநதது குறிப்பிடத்தக்கது

இவை களப்பிரர் எழுச்சியின் நற்பயன்கள் என்பதும் கூர்ந்து கவனிக்கத்தக்கது.

சங்ககாலப் பேரரசுகள், முடியரசுகள். சிற்றரசுகளின் எல்லையற்ற பலதிசைப் போட்டிகள், சங்க காலத்துடன் ஒழிகின்றன. மூவரசுகளுக்கே பேரரசுக் குத்தகை உரிமை என்ற உயிரற்ற மரபும் ஒழிகின்றது. அடுத்த ஆறு நூற்றாண்டுகளுக்குத் தமிழகத்துக்குள்ளே பாண்டிய பல்லவப் பேரரசுகள் இரண்டு மட்டுமே போட்டியிடுகின்றன. இவை நீங்கிய தமிழ் முடியரசுகள் சிற்றரசாக இயங்கிய சோழ அரசும்,சேர அரசும் கங்க அரசுமே. தமிழகத்துக்கு வடக்கிலும் தென்னாட்டின் வடதிசைப் போட்டியில் ஆந்திர, கலிங்க, கடம்ப, பாண, நாகர்

போட்டிகள் ஒடுங்கி, ஆந்திரப் பேரரசில் குறைந்த, ஆனல் அதைவிட நீடித்த நிலையான பேரரசாக, சாளுக்கியப பேரரசு ஒன்றே நிலவிற்று. இமய எல்லைக்குட்பட்ட வட மாநிலத்திலும் ஆந்திரர் ஒன்று படுத்தும் திறனல், குப்கர் அல்லது ஹர்ஷன் பேரரசு ஒன்றே நிலவிற்று.

சங்க காலத்தைப்போலவே ஆற்றல் உயர்நிலை தெற்கிலேயே இன்னும் இருந்தது. ஹர்ஷனைச் சாளுக்கிய புலிகேசியும், சாளுக்கிய புலிகேசியைப் பல்லவ மகேந்திரவர்மனும், பல்லவர்களைப் பாண்டியரும் அடிக்கடி வென்றனர். அத்துடன் ஏழாம் நூற்றாண்டின்பின் வடதிசைப் பேரரசுகள் யாவும் சிதறுண்டதனல் அவ்வெல்லை, இஸ்லாமிய இனங்களின் படையெடுப்புக்கே எட்டு நூற்றாண்டுகள் வாயில் திறந்துவைத்துக் காத்துக்கொண்டேயிருக்க நேர்ந்தது. தென்னடோ, பின்னும் ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆண்டுகள் பேரரசாட்சியைக் கருவில் கொண்டிருந்தது. தமிழகமோ, சோழப் பேரரசுமூலம் மீண்டும் இமயமும் ஈழமும் கடாரமும் பரவத்தக்க வளர்ச்சியை யடைந்து வந்தது

## இடைக்கால மறுமலர்ச்சி

இடைக்காலத்தில் தமிழகத்தில் இரண்டு பேரரசுகள் இருந்தாலும், பழமையான மரபில் வந்த பாண்டியப் பேரரசே பேரளவில் சோழப் பெரும்பேரரசின் மறுமலர்ச்சிக்கும் புது மலர்ச்சிக்கும் வழிவகுத்த பேரரசு என்னலாம். ஏனென்றல் அது தமிழக முற்றிலும் பரவ முடியாத நிலையிலும், தமிழகம் கடந்து பழந் தமிழகப் பகுதியாகிய மலையாள நாடும் கன்னடநாடும் உள்ளடக்கிக் குடகுவரையிலும் துங்கபத்திரா வரையிலும் பரவிற்று.அத்துடன் கடலகத்தில் அது ஈழங்கைக் கொண்டிருந்தது. ஆனல் அதே சமயம் சங்ககால ஆந்திரப் பேரரசு நீங்கலாக தென்னகப் பேரரசுகளில் தமிழகப்பேரரசுகள், அரசுகள் மட்டுமே கடலாட்சி பெற்றிருந்தன. பல்லவப் பேரரசு புதிய தமிழ் மரபாயிருந்தாலும், கடலாட்சியில் முத்தமிழ் அரசுகளுடன் சரிசம பங்கு கொணடிருந்தது. அதன் தாயகம் தமிழருள் திரையர் அல்லது குறும்பர் குடியாட்சிப் பகுதியாயிருந்தது என்பதையும், இத் திரையர் மரபினரே ஆந்திரர் என்பதையும். இது நினைவூட்டுகிறது. பண்டைக் காலத்திலிருந்தே கீழ்திசைக் குடியேற்றங்களில் முத்தமிழ் அரசர் குடிகளையும் ஆந்திர கலிங்கக் குடிகளையும் போலவே, திரையர் அல்லது பல்லவர் குடிகளும் பெரிதும் பங்கு கொண்டிருந்தனர்.

தமிழகக் கடலாட்சி வளர்ச்சியில் பிற தமிழரசுகளுடன் பல்லவப் பேரரசர் பங்கு கொண்டிருந்ததன்றி, சிற்பம், இசை

ஓவியம் ஆகிய கலைகளிலும் அவர்கள் தனி சிறப்புக்குரிய பங்கு கொண்டிருந்தனர். சங்க காலத்தில் பரிபாடலுக்குப் பண் வகுக்கப்பட்டிருந்ததுபோல, பாண்டிய பல்லவப் பேரரசர் காலத்திலேயே தேவாரத்துக்குப் பண் வகுக்கப்பட்டது. ஓவிய, சிற்பக்கலைகளில் பல்லவர் பங்கு முனைப்பானது, மிகப்பெரியது. அதில் மறுமலர்ச்சிமட்டுமன்றிப் புதுமலர்ச்சியும் கண்டவர்கள் அவர்களே என்னலாம். சங்க கால இசை மரபில் சிறிதளவேனும் தேவாரத்தால் நமக்கு வந்து எட்டியதுபோல, மரமும் சுண்ணமும் செங்கலும் வைத்துக் கட்டப்பட்ட சங்க காலக் கோயிற் பண்புகளை, கல் தளிகளாகப் புதுவது புதுக்கி நமக்கு நிலையான படிவங்களாக்கித் தந்தவர்களும் பல்லவர்களே. இத்துறையில் அவர்கள் சோழ பாண்டிய விசயநகரச் சிறப்பிற்கு வழி காட்டியவர்கள் ஆவர். அது மட்டுமல்ல. சங்க காலப் பண்பைக் கெடாது காத்ததன் மூலம் இன்று அவர்களைவிட முனைப்பான புகழுக்கு உரியவராகின்றனர்.

பாண்டிய பல்லவர் ஆட்சி இந்தப் பல்வேறு துறைகளிலும் சோழப் பேரரசர் புது மலர்ச்சிக்குரிய மறுமலர்ச்சிப் படியாய் அமைகிறது.

## சோழப் பெரும் பேரரசின் தனிச்சிறப்புக்கள்

சங்க காலப் பேரரசுகளின் தற்காலிக எல்லைகளையும் சிதறிய எல்லைகளையும் சோழப் பெரும் பேரரசு ஒரே தொடர்ந்த எல்லை ஆக்கிற்று. ஒரே நேரடி ஆட்சி எல்லையும் ஆக்கிற்று. இடைக்காலப் பாண்டிய பல்லவர் அரசுகளின் செயல்களையும் கனவுகளையும் தாண்டி அது பரவிற்று. அத்துடன் முத்தமிழ் அரசரும் பல்லவரும் பிறதென்னாட்டு அரசரும் நாடு, மாவட்டம், வட்டம், சிறுவட்டம் ஆகிய ஆட்சி எல்லைகளையே வகுத்திருந்தனர். நாடு என்ற பெயரைப் பழைய குடியாட்சி எல்லையாகிய சிற்றெல்லையாக்கி, அதன் மீது வளநாடும் கோட்டமும் வகுத்தவர்களும், பழைய அரசர் நாட்டெல்லைகளையும், பேரரசு நாட்டெல்லைகளையும் தம் பெரும் பேரரசின் மண்டலங்களாக வகுத்தவர்களும் சோழப் பெரும் பேரரசர்களே. அவர்கள் மண்டலத் தலைவர்கள் உள் நாட்டில் தற்போதைய மாவட்ட ஆட்சித்தலைவர்கள் (Governors) போலவும், வெளி நாட்டில் தற்போதைய அரசுப் பேராளரைப்போலவும் (Viceroys or Consuls) ஆண்டனர்.

சோழப் பெரும் பேரரசின் புது மலர்ச்சியில் இன்னொரு கூறு சமய பண்பாட்டுத்துறை ஆகும். இவ்விரு துறைகளிலுமே சங்க காலத்திலிருந்து தமிழர் குடியாட்சிப் பண்பும் தற்பண்பும் பழந் தமிழ் நாகரிக மரபும் கெட்டே வந்தன. ஆனு

லும் தமிழகமிழந்த இழப்பு முற்றிலும் வீண்போகவில்லை, தொலை எல்லையில் புற உலகு தாவி இராட்சச வளர்ச்சியாக வளர்ந்த பழந் தமிழ்ப்பண்பு இப்போது அணிமை எல்லையில் குறைந்த அளவில், தமிழகம் கடந்த மாநிலத் தேசியப்பண் பாக ஓங்கி வளர்ந்தது.

சங்க காலத்திலேயே யானை பழக்குபவர் 'வடமொழி' என்ற ஏதோ ஒரு குழூமொழியைப் பயன்படுத்தினர் என்று அறிகிறோம். வழகிறந்த பழந தமிழ்த் திரிச்சொற்களும உரிச் சொற்களும், நாகரின் பழந்தமிழ்த் திசைச்சொற்களும இதனை உருவாக்கப் பயன்பட்டிருக்கக்கூடும். பிற்காலத்தார் இதனை வடதிசை மொழி என்று கருதுவதற்கேற்ப, இதன் வகை திரிபுகளே புத்த சமணர்களால் வட திசையில் பாளி பாகதங் களாகவும் சங்க காலத்திறுதியிலே சமஸ்திருதமாகவும் வளர்ச்சியுற்றன. ஆந்திர பல்லவர்கள் தொடக்கத்தில் பாளியையும் பின்னரே சமஸ்கிருதத்தையும் மேற் கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. முதலில் காஞ்சி யிலும் காசுமீரத்திலும் வடக்குத் தெற்குக் கோடிகளில் பண் படுத்தப்பட்ட இந்தப் பழய சமஸ்கிருதமே, குப்தர் கால முதல் கங்கை வெளியிலும் பரவி, அங்குள்ள இன்றைய இந்தி போன்ற ஒரு பழங்காலக் கலவை மொழியுடன் சேர்ந்து பிற் கால இலக்கிய வடிவம் வாய்ந்த சமஸ்கிருதமாயிற்று.

தமிழகப் பண்பாட்டின் சிதைவையும் தமிழக இயல்கலை நூல் துறைகளையும், அவற்றின் உயிர் மரபினின்றும் பிரித்து, வளராத ஆனல் பரந்த மரபுகளாக சமஸ்கிருதமூலம் இந்தியா எங்கும் பரப்ப உதவிய பேரரசு பல்லவப் பேரரசே. புத்த சமயத்துக்கு அசோகன் செய்த பணியை சமஸ்கிருதத்துக்கு ஆற்றியவர்கள் பல்லவர்களே.

'நகரங்களிலே காஞ்சி (நகரேஷு காஞ்சி) எனக் காசி முதலிய ஏனைய நகரங்கள் பெறாத பழயபெருமையைக் காஞ்சி மாநகர் சமஸ்கிருத உலகிலே பெற்றதன் காரணம் இதுவே.

சமஸ்கிருத மொழிக்குப் பல்லவர் ஆற்றிய இதே தொண்டை, இன்னும் பேரளவாகவும் நிலையாகவும் இந்திய மாநிலப் பண்பாட்டுக்கு ஆற்றி, 'அசோகர், கனிஷ்கர், குப தர், பல்லவர்' ஆகிய அனைவரும் சேர்ந்த கூட்டுக்கு ஒப்பான பெரும் புகழ் நாட்டியவர்கள் சோழப் பேரரசர்களே.

## இந்திய மாநிலத் தேசியத்தின் அடித்தளம்

சோழப் பெரும் பேரரசர் இல்லையானால், இன்றைய இந் திய மாநிலம் பெயரளவுக்குக்கூட ஒரு தேசமாய் நிலவியிருக்க முடியாது என்னலாம். ஏனெனில் அதன் அடிப்படைப் பண்

பாட்டை உருவாக்கியவர்கள் அவர்களே. பிரிட்டிஷ் ஆட்சி ஏடனும், இலங்கையும், பர்மாவும்,மலாயாவும் பரந்திருந்தது. ஆயினும 1947-ல் புதிய தேசீய எல்லை அமைந்தபோது, அது பெரிதும சோழப் பேரரசின் எல்லைக்கப்பால் செல்லவில்லை என்பதை வரலாற்றின் தொலை விளைவுகளைக் கணித்துக் காண்பவர் கவனித்தல் வேண்டும். மற்றும் அப்பெரும் பேரரசு பரவாத தென்னாட்டின் வட மேல் திசையும் இந்தியாவின் வட மேல் திசையும் மேலை நாட்டவர் தொடர்பு காரணமாகச் செல்வத்தில் முன்னேறினும், இலக்கியம், கலை பண்பாட்டுத் துறைகளில் இன்னும் பிற்பட்டே இருப்பது காணலாம்.

மொழியும் இலக்கியமும் இல்லாத வடதிசைக்கு, ஒரு சமஸ்கிருதத்தையே பல்லவப் பேரரசு உருவக்கித் தரமுடிந்தது. ஆனாலும் பாண்டிய பல்லவப் பேரரசுகளின் நிழலிலேயே வளர்ந்த சமயப் பேரியக்க அலைகளின் பயனை-சைவ, வைணவ இயக்கங்களின் விளைவை—சோழப் பெரும் பேரரசே கூர்ச்சரத்துக்கும் கங்கை வெளிக்கும் கொண்டு சென்றது. இதன் பயனாகத் தென்னாடெங்கும் சோழப் பெரும் பேரரசர் காலத்திலேயே மலையாளம், தெலுங்கு, கன்னடம் முதலிய தமிழின மொழிகளில் இலக்கிய வளம் உண்டாயிற்று. அதே காலத்திலேயே மராத்தி, வங்காளி, இந்தி, உருது ஆகிய வடதிசைத் தாய்மொழி இலக்கியங்களுக்குரிய கருவிதைகளும் எட்டி விதைக்கபபட்டு விட்டன என்பதனை காணலாம்.

சோழப் பெரும் பேரரசர் பரப்பிய இந்தப் பண்பாடு தற்காலிகமானது எனறு தோன்றினாலும், வருங்காலத்தில் நிலையானதாகவே அமையக்கூடும் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் சங்க காலத்தில் தமிழகத்தில் மட்டுமே வளர்ந்த பண்பாடு, அது கடந்த களர்நிலத்தால் அழியவெய்த நேர்ந்ததுபோல, சோழப் பெரும் பேரரசு பரப்பிய பண்பாடும் அப்பேரரசின் எல்லைக்கப்பால் இருந்த களர்நிலத்தாலேயே அணிமைக்காலத்தில் தளர்வுறத் தொடங்கியிருந்தது. ஆயினும நாகரிக மேலை ஆட்சியில் சோழப் பெரும் பேரரசர் ஆட்சி எல்லை கடந்து ஆசியா எங்கும் பண்பாடு பரந்து வருகிறது. எனவே சங்க காலத்துக்குப் பின் தமிழகத்திலும், சோழப் பெரும் பேரரசர் ஆட்சிக்குப் பின் இந்தியாவிலும், மேலை நாகரிக ஆட்சியில் தென்கிழக்காசியாவிலும் ஏற்பட்ட தளர்சசி இனி நீங்கி, சங்க காலத் தமிழக ஒளி ஆசியாவிலும் உலகு முழுவதிலும் அணிமை வருங்காலத்தில் எளிதில் பரவி நிறைவுறும் என்னலாம்.

தன் பண்பும் தன் மரபும் இழந்து சூழ்பண்பு வளரக் காத்திருந்த தமிழகம், சூழ் பண்பின் தளர்ச்சி நீக்க மீண்டும்

கிளர்ந்தெழ வேண்டும். கிளர்ந்தெழுவது இன்றியமையாத் தேவை. ஏனெனில் கீழை உலகைத் தட்டி எழுப்பிய மேலை ஐரோப்பிய நாகரிகத்திலும் தளர்ச்சியின் சின்னங்கள் காணப் படுகின்றன. கீழ்திசை நாகரிகங்களின் மறுமலர்ச்சியால் எழுந்த கிரேக்க உரோம நாகரிகங்கள் அழிவுற்றபின் அவற்றின் தொலை மறுமலர்ச்சியாய் எழுந்ததே தொலைமேலை நாகரிகம். அது உயிர்பெற மீண்டும் நாகரிக வேர்முதல் நிலமான தமிழகம். அத்தமிழகத்துடன் அது மீண்டும புதுத்தொடர்பு கொள்ளுவதும், மீண்டும் புதுமலர்ச்சி பெறுவதும் உயிர் நிலைத் தேவைகள் ஆகும்.

## சோழப் பெரும் பேரரசின் வளர்ச்சிப் படிகள்

சோழப் பெரும் பேரரசின் வளர்ச்சியில் நாம் நான்கு படிகளைக் காணலாம். பாண்டிய பல்லவ மறுமலர்ச்சிக் கால முழுதும் சோழர் சிற்றரசராய் அடங்கியிருந்தனர். ஆனால் சங்க காலப்பேரரச அவாவை அவர்கள் பொறுமையுடன் ஆறுநூற்றாண்டு தம் சிற்றரசுக் கருவில் அடக்கி வைத்திருந்தனர் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் இக்காலத்திலேயே பாண்டியர், சோழர் மரபுகளின் கிளைகள் தென்னாடெங்கும் பரவிப் பல புதிய சிற்றரசுகளை அமைத்துப் புதுநிலத்தில் வளரப்பெற்றன. இவற்றின் வரலாறு தமிழகம் கடந்த தமிழர் வரலாற்றின் ஓர் உயிர் நிலைக்கூறாக இனித்தான் தொகுக்கப்பெறல் வேண்டும். ஆனால் இடைக்காலப் பாண்டியரால் குடகில் வெல்லப்பட்ட கொங்க மரபினரும் உச்சங்கிப் பாண்டியரும் தெலுங்குச் சோடரும் வடக்கே கலிங்கத்தில் ஆண்ட சோழகங்கரும் இவர்களுள் குறிப்பிடத்தக்கவர் ஆவர்.

சோழப் பெரும் பேரரசின் கருநிலைக்காலம் எனப் பாண்டிய பல்லவப் போட்டிக் காலத்தைக் குறிக்கலாம்.

விசயாலயன் முதல் (9-ம் நூற்றாண்டு) இராசராசன் காலம் வரையுள்ள பெரும் பேரரசின காலத்தை வல்லரசுக் காலம் என்னலாம். இக்காலத்திலேயே இடைக்காலப் பாண்டியப் பேரரசின் எல்லையும் பல்லவப் பேரரசின் எல்லையும் தாண்டிச் சோழப் பேரரசு வளர்ந்து விட்டது காண்கிறோம் ஆனால் பாண்டிய பல்லவ காலத்திலேயே வடதிசைப் பேரரசாகிய சாளுக்கிய அரசினிடமாக, புதிதான இராஷ்டிரகூடப் பேரரசு எழுநதிருந்தது. தென் தமிழகத்தில் புதிய பேரரசான சோழப பேரரசு ஒன்று மட்டுமே நீடித்தது. அது வடதிசையில் புதிய பேரரசான இராஷ்டிரகூடருடன் போட்டியிட்டது.

சோழப் பெரும் பேரரசின் பெரும்பேரரசுக் காலம் அல்லது உச்சவாழ்வுக்காலம் முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன் ஆகிய இருவர் ஆட்சிக்காலமே. இராசேந்திரன் புதல்வர் ஆட்சிகள் இவ்வுச்சப்புகழை உச்ச நிலையிலேயே காத்தன.

முதலாம் குலோத்துங்க சோழன் காலமுதல் ஒரு நூற்றுண்டுக்காலம் வரை சோழப்பேரரசு வளர்ச்சியுறுமல் உறுதியுடன் பேரரசாக நிலவிய காலம் என்னலாம். இப்பேரரசுக்கு அச்சமயம் இருந்த பகைகள் உட்பகைகளுமல்ல, புறப்பகைகளும் அல்ல—எல்லைப்புறப் போட்டிகள் மட்டுமேஎன்னலாம். வடதிசையில் மேலைச் சாளுக்கியர் வென்றடக்கப்படாமலே இருந்தனர். தெற்கிலோ மீண்டும்மீண்டும் வென்றடக்கப்பட்டும், அடங்காதவர்களாகப் பாண்டியர் விளங்கினர். சோழப் பேரரசின் வளர்ச்சியைத் தடுக்க மேலைச்சாளுக்கியர் ஓரளவு காரணமாயிருந்தனர். ஆனுல் அவ்வளர்ச்சியைத் தடுப்பதற்கு மட்டுமன்றி, அதன் வீழ்ச்சிக்கே காரணமாயிருந்தவர்கள் பாண்டியர்களே என்னலாம்.

சோழப் பெரும் பேரரசைத் தடுத்தழித்துப் பாண்டியர் மீண்டும் பேரரசராக முடிந்தது. ஆனுல் அவர்கள் பேரரசு சோழப் பேரரசின் எல்லையைச் செயலிலும் சென்று எட்டவில்லை. கனவிலும் அதன் அகல் விரிவைக் காணவில்லை. தமிழக எல்லையையும் அது நீடித்துக் காக்கத் தவறிற்று. சோழப் பேரரசு வீழ்ச்சியுருமல் இருந்தால், இஸ்லாமியப்படையெடுப்பும் ஆட்சியும் மாநிலத்தின் அரசியல் வாழ்வைக் குலைத்திருக்காதென்னலாம்.

## சோழர் மீட்சி: விசயாலய சோழன்

சங்ககாலச் சோழர் புகார் என்ற காவிரிப்பூம் பட்டினத்தையோ, உறையூரையோ தலைநகராகக் கொண்டு ஆண்டனர் என்று அறிகிருேம் ஆனுல் இடைக்காலச் சோழர் சிற்றரசராக இருந்தபோது கும்பகோணத்துக்கு மூன்று கல் தென் கிழக்கிலிருந்த பழயாறையையே தலைநகராகக் கொண்டிருந்தனர் என்று அறிஞர் பண்டாரத்தார் நிலை நாட்டியுள்ளார். அது அந்நாளில் பெருநகராய், இக்காலத்திய முழையூர், பட்டீச்சுரம், திருச்சத்திமுற்றம். அரிச்சந்திரபுரம், ஆரியப்படையூர், சோணப்பெருமாள் கோயில், திருமேற்றளி, தாராசுரம், நாதன் கோவில் ஆகிய பல சிற்றூர்களை உள்ளடக்கியதாய் இருந்ததென்றும் அவர் கூறுகிருர்.

இடைக்காலச் சோழர்களைப் பற்றித் துண்டுத் துணுக்கான செய்திகளன்றிக் கோவையாக எதுவும் நமக்குத் தெரிய

வரவில்லை. ஏனெனில் பிற்காலப் புகழ்ச் சோழர் பெருமைப் படத்தக்க எச்செயலையும் அவர்கள் செய்யவில்லை. சங்ககாலச் சோழரைத் தம் முன்னோராகக் குறிக்கும் வரலாற்று நோக்குடைய பிற்காலச் சோழர் இவ் விடைக்காலச் சோழரைப்பற்றி வாளாமை சாதித்துள்ளனர்.

பெருஞ்சோழர் காலத்து இலக்கியத்தில், அப்பெருஞ் சோழர்களின் முன்னோனாக,

"மீதெல்லாம்.
எண்கொண்ட தொண்ணூற்றின்
மேலும் இருமூன்று
புண்கொண்ட வென்றிப்
புரவலன்" (விக்கிரம சோழன் உலா 27—32)

"அடுத்தடுத்துச்
சீறும் செருவில்
திருமார்பு தொண்ணூறும்
ஆறும் படுதழும்பின்
ஆரத்தோன்" (குலோத்துங்க சோழன் உலா 38-44)

"புல்லார்
தொழும்புடைய ஆகத்துத்
தொண்ணூறும் ஆறும்
தழும்புடைய சண்டப்பிர
சண்டன்" (இராசராசசோழன் உலா 35—40)

என்று ஒட்டக்கூத்தப் பெருமானின் மூவருலாக்களும்,

"புண் ஊறு தன்திரு
மேனியில் பூண் ஆகத்
தொண்ணூறும் ஆறும்
சுமந்தோன்"

என்று சங்கரசோழன் உலாவும், அடிக்கடி போர் செய்து மார்பில் 96 புண்களைப் புகழணியாகக் கொண்ட ஒரு பெருஞ் சோழனைப்பற்றிப் புகழ்கின்றன. இது பெருஞ் சோழரில் முதல்வனான விசயாலயனையே (846—881) குறிப்பதாகக் கொள்ளப்படுகிறது. பாண்டியப் பேரரசருக்கோ, பல்லவப் பேரரசருக்கோ அடங்கிய ஒரு சின்னஞ் சிறு குடிவேந்தாயிருந்த சோழமரபை ஒரு வலிமைவாய்ந்த அரசாக்குவதிலேயே அவன் இத்தனை கடும் போராட்டங்களில் ஈடுபட்டிருக்க வேண்டும். ஆனால் அவற்றுள் முக்கியமான ஒன்றே நமக்குத் தெரியவருகிறது. அவன் ஆட்சித் தொடக்கத்தில் கி. பி 846—ல் அவன் முத்தரையர் என்ற பெயருடைய குறுநிலமன்னரிடமிருந்து தஞ்சையைக் கைப்பற்றினான்.

இடவைப் போரில் இந்தத் தஞ்சையையும் பாண்டியன் இரண்டாம் வரகுணன் அவனிடமிருந்து கைப்பற்றினான். ஆனால் 880-ல் நடைபெற்ற திருப்புறம்பியப் போரில் சோழனுக்குத் தஞ்சை மட்டிலுமன்றி, சோழநாட்டின் பெரும்பகுதியும் மீண்டும் கிடைத்தது. இப்போர்க்காலத்தில விசயாலயனே சோழ அரசனாயிருந்த போதிலும், அவன் முதுமை காரணமாக அவன் மகன் ஆதித்தனே போரில் ஈடுபட்டிருந்தான். 871-லேயே அவனுக்கு விசயாலயன் இளவரசுப்பட்டம் கட்டியிருந்தான். போரில் பாண்டியன் படுதோல்வியடைய, கங்கன் பிருதிவீபதி மாள, சோழனும் பல்லவனும் மட்டுமே வெற்றியின் பயனை நுகர்வதற்கு மீந்திருந்தனர். பல்லவனுக்கும் படைவலுமிகவும் குறைந்து விட்டதால், சோழ நாட்டையும் சேர்த்து ஆளும் ஆற்றலில்லாமல் அதைச் சோழன் வசமே விட்டு விட்டான். இவ்வகையில் ஆதித்தன் ஆட்சித் தொடக்கத்திலேயே சோழர் சோழநாட்டின் மன்னராய் வலுவுற்றனர்.

சோழர் தொண்டை நாட்டு வெற்றி

ஆதித்த சோழன் (871—907) ஏதோ ஒரு போரில் ஏறத்தாழ 981-க்கு முன பல்லவப் பேரரசின் கடைசி அரசனான அபஜிராதனை ஒரு போரில் கொன்று, தொண்டைநாடு முழுவதையும் கைப்பற்றிக்கொண்டான். கொங்கு நாட்டையும் அவனே கைப்பற்றினான் என்று அவன் காலத்தில் வாழ்ந்த நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதிப் பாடல் ஒன்று கூறுகிறது.

''சிங்கத்துருவனைச் செற்றவன்
சிற்றம்பலம் முகடு
கொங்கின் கனகம் அளித்த
ஆதித்தன்''

அடுத்த ஆட்சியில் கொங்கு நாடெங்கும் சோழர் கல்வெட்டுக்கள் காணப்படுவது இக் கூற்றை உறுதிப்படுத்துகிறது. இலங்கையையும் அவன் வென்றானென்று அதே புலவர் குறித்துள்ளார்.

''புலம்மன்னிய மன்னைச்
சிங்களநாடு பொடிபடுத்த
குலமன்னிய புகழ்க்
கோகனநாதன்''

எக் காரணத்தாலேனும் அவன் சிங்கள நாட்டின்மீது படையெடுத்துச் சில வெற்றிகள் பெற்றிருக்கக் கூடும். ஆனால் இது பற்றிய வேறு சான்று எதுவும் நமக்குக் கிட்டவில்லை.

மைசூரில் ஆண்ட கங்க அரசன் முதலாம் பிருதிவீபதியின் புதல்வன் இரண்டாம் பிருதிவீபதியுடனும், வடதிசையாண்ட இராஷ்டிரகூடப் பேரரசன் இரண்டாம் கிருஷ்ணனுடனும் ஆதித்த சோழன் நட்புடையவனுகவே இருந்தான் அவன் மனைவியர் இருவருள், பட்டத்தரசியான இளங்கோப்பிச்சி இராஷ்டிரகூடப்பேரரசன் புதல்வியே. மற்ற மனைவி திரிபுவன மாதேவி பலலவமரபுக்கு உரியவளாய் இருந்தாள்.

சோழ பாண்டியப் போராட்டம்:

வெள்ளூர்ப்போர் கி. பி. 919.

சோழ மரபைப் பேரரசநிலைக்குக் கொண்டுவந்த முதற் பெருஞ் சோழன் முதலாம் பராந்தகனே (907—953). அவன் ஆட்சியின் முதல்செயலும், அவன் ஆட்சியின்பெரும்பகுதியை ஆட்கொண்ட செயலும் பாண்டி நாட்டுப் போராட்டமே யாகும். சோழநாடும் தொண்டைநாடும்கொங்குநாடும்பரந்த தன் வல்லாட்சியுடன் பாண்டி நாட்டையும் சேர்தது. அவன் தமிழக, முதற் பேரரசனுக அரும்பாடுபட்டான். இப் போராட்டமே இறுதியில் அவனை இலங்கைமீது படையெடுக்கவும் தூண்டிற்று.

பராந்தகன் தன் ஆட்சியின்முதல் மூன்று ஆண்டுகளிலேயே பாண்டியனைப் பல போர்களில் முறியடித்து மதுரையைக் கைப்பற்றி யிருந்தான். 910-ம் ஆண்டுக் கல்வெட்டுக்கள் அவனை மதுரைகொண்டகோப்பரகேசரிவர்மன் என்று பாராட்டுகின்றன. ஆனல் பாண்டிய வெற்றி அவ்வளவு எளிதாக அவனுக்கு நிலையான வெற்றியாகி விடவில்லை.

இப் போராட்டத்தில் பாண்டியனுக் கெதிராகச் சோழனை ஆதரித்த வேளிர் இருவர் ஆவர் ஒருவன் பாண்டி நாட்டெல்லையிலேயே தற்காலப் புதுக்கோட்டைப் பகுதியில் ஆண்ட கொடும்பாளூர்த் தலைவன். மற்றவன் கீழைப்பழுவூருக்குரிய பழுவேட்டரையன் கண்டன்அமுதன்.

இச் சமயம் பாண்டிநாட்டை ஆண்டவன் இடைக்காலப் பாண்டியப்பேரரச மரபின் கடைசி மன்னனை மூன்றும் இராச சிம்மன் (900-919). அவன் பதினன்காம ஆட்சி யாண்டில் வெளியிட்ட சின்னமனூர்ச் செப்பேடு தஞ்சையர் கோனையும் கொடும்பாளூர த தலைவனையும் போரகளில வெனறதாகக் கூறுகிறது. பாண்டியனுக்கும், சோழனுக்கும் 910-க்கு முன்னும் பின்னும் பல போர்கள் நடந்தன என்றும, சிலவற்றில் பாண்டியனும் சிலவற்றில் சோழனும் வெற்றி பெற்றனர் என்றும் இது காட்டுகிறது.

910-ல் அரசிருக்கை இழந்த பாண்டியன் அந்நாளில்இலங்கையை ஆண்ட ஐந்தாம் கஸ்ஸபன் உதவி கோரினான். இலங்கை வேந்தன், சக்கன் என்ற ஒருபடைத் தலைவனை ஒரு பெரும் படையுடன் அனுப்பி உதவினான். அப்படையின் பெருக்கைக் கண்டு அது நாவலந்தீவு (இந்தியா) முழுவதையும் வென்றுவிட முடியுமென்று மூன்றும் இராச சிம்ம பாண்டியன் களித்தாடியதாக இலங்கை மகாவம்சோ கூறுகிறது. சங்க காலத் தமிழர் பேரரசக் கனவார்வம நான்கு நூற்றாண்டுகளுக்குப் பின்னும் பாண்டியப் பேரரசர் உள்ளத்தில் கொழுந்துவிட்டெரிந்த தென்பதை இது காட்டுகிறது. ஆனால் தமிழரின் இந்தக் கனவைச் சோழரே பின்னாளில் பெரிதளவு நிறைவேற்ற இருந்தனர் என்பதை அப் பாண்டியன் எண்ணியிருக்க மாட்டான் என்னலாம்.

வெள்ளூர் மதுரைக்குத் தென்மேற்கே சிறிது தொலைவிலுள்ள ஓர்ஊர். அவ்விடத்தில் கி.பி. 919-ல் பாண்டியப் படைகளும் படைத்தலைவன் சக்கனுடைய சிங்களப் படைகளும் சோழனை எதிர்த்துக் கடும்போரிட்டன. இப்போரில் சோழன் பரந்தகன் பெரு வெற்றி யடைந்தான். கணக்கற்ற யானைகளையும் வீரர்களையும் அவன் போரில் கொன்று குவித்து, மீண்டும் மதுரையைக் கைப்பற்றினான்.

இப்போரில் சோழர் படைத்தலைவராயிருந்தவர்கள், சோழ மண்டலத்தில் பாம்புணிக்கூற்றத்தைச்சேர்ந்தஅரசூருக்குரிய அரசூருடையான் தீரன் சென்னிப் பேரரையன் என்பவனும், பரதூர் உடையான் நக்கன் காத்தனும் ஆவர்.

நாடிழந்து தோற்றோடிய பாண்டியன் மீண்டும் இலங்கையரசனிடம சென்று உதவி கோரினான். அவ்வுதவியை எதிர்பார்த்த வண்ணமே அவன் 923 முதல் 934 வரை பதினொரு ஆண்டுகள் இலங்கையில் கழித்தான். இலங்கை மன்னன் அவனுக்கு எல்லாவகை மதிப்பும் கொடுத்தான். ஆனால் சோழனை எதிர்க்கப் படையுதவி செய்யாமல் காலந் தாழ்த்தினான். பாண்டியன் இலங்கையில் தங்கியிருந்த இடம் 'மகத சித' என்ற கோட்டை என்று அறிகிறோம்.

## இலங்கைப் படையெடுப்பு 934—944

934-க்குள் பராந்தகன் பாண்டி நாட்டிலுள்ள கிளர்ச்சிகளனைத்தையும் அடக்கிவிட்டான். அதன்பின் அவன் மதுரையில் தன்னைப் பாண்டிமயன்னனாக முடி சூட்டிக்கொள்ள விரும்பினான். ஆனால் பாண்டியர் இந்திரனிடமிருநது பெற்றதாகக் கூறப்படும் சுந்தரமுடியும் தவிசும் பிற சின்னங்களும் மதுரையில் காணப்படவில்லை. தோற்றோடிய பாண்டியன்

அவற்றை எடுத்துக்கொண்டு இலங்கை சென்றிருந்தான் என்று சோழன் அறிந்தான். அவற்றை அனுப்பித் தரும்படி சிங்கள மன்னனுக்கு அவன் தூது அனுப்பினான்.

உதவிக்குக் காத்திருந்த பாண்டியன் இதற்குள்ளாக மனம் தளர்வுற்று, முடியையும் சின்னங்களையும் இலங்கையரசன் பாதுகாப்பிலேயே விட்டுவிட்டு, தன் தாய் வானவன்மாதேவியின் பிறந்தகமாகிய சேர நாட்டுக்கு ஓடிவிட்டான்.

பாண்டியன் தன்னிடம் நம்பிப் பாதுகாப்புக்காக விட்டுச் சென்ற சின்னங்களை இலங்கையரசன் சோழனுக்குத் திருப்பித் தர மறுத்துவிட்டான். இதனால் சீற்றமடைந்த சோழன் பராந்தகன் இலங்கைமீதே படையெடுத்தான். ஈழத்தில் நடைபெற்ற போரில் பராந்தகன் படை வெற்றிபெற்றது. இச் சமயம் இலங்கையரசனாயிருந்த நான்காம் உதயன், இலங்கையின் தென் பகுதியில் மலைகளின் பாதுகாப்பில் இருந்த ரோகண நாட்டுக்கு ஓடிவிட்டான். இலங்கையின் மிகப் பெரும் பகுதி பராந்தகன் கைப்பட்டது. ஆனாலும் ஓடிய இலங்கைவேந்தன் பாண்டியன் சின்னங்களையும் தன்னுடன் எடுத்துக்கொண்டு ஓடியிருந்தான். ஆகவே, ஈழத்தின் பெரும் பகுதியையும் வென்றபின்னும், பராந்தகன் ஈழம் சென்றதன் நோக்கம் நிறைவேறாமலே மீள வேண்டியதாயிற்று. இச் சமயம் வட திசையில் இராஷ்டிரகூடருடன் போர்மூளத் தக்கசூழல், இருந்ததால் அவன் இலங்கைப் போரை நீடிக்காமல், 944-ல் சோழ நாடு திரும்பினான்.

பாண்டிநாட்டு வெற்றியின் பின் பராந்தகன் 'மதுரை கொண்ட கோப்பரகேசரி' என்ற பட்டம் கொண்டிருந்தான். மதுரை வெற்றியும் ஈழ வெற்றியும் ஒரே தொடர்ந்த போரின் வெற்றிகளாதலால் அவன் இப்போது இரண்டு வெற்றிகளையும் ஒரே விருதுப் பெயராக்கி 'மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பர கேசரி' என்று தன்னைக் குறித்துக் கொண்டான். இவ் வெற்றிகளைச் சோழர் கல்வெட்டுக்களைப் போலவே சோழ நேசன் கங்கன் இரண்டாம் பிருதிவீபதியின் கல்வெட்டுக்களும் பராவுகின்றன.

பெருஞ் சோழர் கால இலக்கியத்தில் இவ்விரு வெற்றிகளும் பல தடவை குறிக்கப்பட்டுள்ளன.

> ஈழமும் தமிழ்க்
> கூடலும் சிதைந்து
> இகல் கடந்ததோர்
> இசை பரந்ததும்
> (கலிங்கத்துப்பரணி: இராச பாரம்பரியம்: 23)

என்று செயங்கொண்டார் கலிங்கத்துப்பரணியும்,

' வெங்கோல் வேந்தன்
தென்னன் நாடும்
ஈழமும் கொண்ட திறல்
செங்கோல் சோழன்
கோழி வேந்தன்
செம்பியன்''

(9-ம் திருமுறை; கோயிற்பதிகம் 8)

என்று பராந்தகசோழன் மகனான கண்டராதித்தனின 9-ம் திரு முறையும்,

நராதிபர்
தாழ முன்சென்று
மதுரைத் தமிழ்ப்பதியும்
ஈழமும் கொண்ட
இகலாளி!

(குலோத்துங்க சோழன் உலா: 44—46)

ஈழம் எழுநூற்றுக்
காவதமும் சென்று எறிந்து
வேழம் திறைகொண்டு
மீண்டகோன்!

(இராசராச சோழன் உலா: 38—46

என்று ஒட்டக்கூத்தப் பெருமானின் மூவருலாவும் பாரந்தகன் வெற்றிகளைப் புகழ்ந்து பாடியுள்ளன.

## இராஷ்டிரகூடர் முதலாம் படையெடுப்பு:

முற்காட்டுப் போர் 910.

பல்லவ இராஷ்டிரகூட மணத் தொடர்புகள் அப் பேரரசுகளுக்குள்ளே பல போர்களுக்குக் காரணமாயிருந்தது போலவே, முதலாம் பராந்தகன் காலத்திலும் மண உறவுகளால் சோழ இராஷ்டிரகூடப் பேரரசுகளுக்கு இடையேயும் பூசல்கள் மூண்டன. இவற்றுள் முதற்போருக்குக் காரணமான தொடர்பு ஆதித்த சோழனின் இராஷ்டிரகூடத் தொடர்பேயாகும். ஏனெனில் இராஷ்டிரகூட இளவரசியே பட்டத்தரசியானதால், அவள் மகன் உரிமையை ஆதரித்து இராஷ்டிரகூட அரசன் பராந்தகனுக்கெதிராக 910-ல் சோணாட்டின் வடஎல்லையின் மீது படையெடுத்தான்.

இப்போரில் வாணகப்பாடியை ஆண்ட வாணன் இரண்டாம் விசயாதித்தனும் (895--910): அவன் மகன் இரண்டாம் விக்கிரமாதித்தனும் இராஷ்டிரகூடனுக்கு ஆதரவாய்

இருந்தனர். கங்க அரசன் இரண்டாம்பிருதிவீபதியும், கொடும்பாளூர்த் தலைவனும் கீழைப்பழுவூர்ப் பழுவேட்டரையன் கண்டன அமுதனும் சோழனுக்கு ஒத்தாசையாய் இருந்தனர்.

வாணகப்பாடி தொண்டை நாட்டின் ஒரு பகுதி. அதனை ஆண்ட வாணன் இரண்டாம் விசயாதித்தன், தொண்டை நாட்டைப் பல்லவர் மேலுரிமை ஏற்று ஆண்ட குடி மன்னனே. ஆனால் ஆதித்த சோழன் பல்லவரிடமிருந்து தொண்டை நாட்டைக் கைக்கொண்ட சமயம் அவன் பல்லவர் மேலுரிமையை எறிந்துவிட்டு, ஆதித்தன் மேலுரிமையையும் மேற்கொள்ளமால் தன் தனியுரிமை கொண்டாடத் தொடங்கினன். ஆனால் சோழருக்கெதிராக இப்போரில் செயலாற்றியதன் மூலம் அவனது தன்னுரிமை ஆட்சிக்கு விரைவில் முடிவு ஏற்பட்டது.

முற்காட்டுப் போரில் சோழர் வெற்றி பெற்றனர்.

போரில் பெரு வீரங்காட்டி யிறந்த கசவய்யா என்பவனுக்கு வீரக்கல் நாட்டியதாக ஒரு கல்வெட்டுக் குறிக்கிறது.

இரண்டாம் பிருதிவீபதியின் உதவிக்குப் பரிசாக, சோழன் அவனுக்கு இரு வாணர்களின் நாட்டையும் கொடுத்து மாவலி வாணராயன் என்ற பட்டமும் அளித்ததாக அறிகிறோம். ஆனால் இது நிறைவேற்றப்பட்டது அடுத்த போர் முடிவிலேயே யாகும். இப்போரிலேயே சோழன் அதற்கான உறுதிமொழி அளித்திருத்தல் கூடும்.

### வல்லாளப் போர் அல்லது வல்லம் போர் I (910)

முற்காட்டுப் போரில் இராஷ்டிரகூடருக்கு உதவிய வாணர் மீது சோழன் பழி வாங்க எண்ணினன். அவர்கள் நாட்டின் மீது படையெடுத்தான்.

வல்லாளம் அல்லது வல்லம் என்பது வாணர்களின் தலைநகரமே யாகும். இது இன்றைய வட ஆர்க்காட்டு மாவட்டத்தில் குடியாத்தம் வட்டத்தைச் சார்ந்த திருவலம் என்னும் ஊரே என்று அறியப்படுகிறது.

இப்போரில் சோழர் வெற்றியடைந்த பின்னரே வாணகப்பாடியின் ஆட்சி முற்காட்டுப் போர் முடிவில் வாக்களித்தபடி இரண்டாம் பிருதிவீபதியின் வசம் ஒப்படைக்கப்பட்டது. மாவலி வாணராயன் என்ற பட்டமும் சோழ அரசனல் முறைப்படி இப்போர் முடிவிலேதான் கொடுக்கப்பட்டதாகச் சோளிங்கர்க் கல்வெட்டுக் கூறுகிறது.

வாண அரசர்களை மட்டுமன்றி. வைடும்ப அரசனையும் சோழன் பராந்தகன் முறியடித்து அவன் நாட்டைக் கைக் கொண்டு அவனைத் துரத்தினான் என்று தெரியவருகிறது. ஆனால் வைடும்பர் போர் தனியாகக் குறிக்கப்படாததால், வாணரு டனே அவர்களும் போர் செய்து தோற்று நாடிழந்திருக்க வேண்டும் என்று தோற்றுகிறது. நாடிழந்த வாணரும் வைடும்பரும் சோழன் எதிரியாகிய இராஷ்டிரகூடப் பேரர சனிடம் சென்று அவன் ஆதரவை நாடியிருந்தனர்.

சோழரின் இராஷ்டிரகூடப் படையெடுப்பு 940

பராந்தகன் தன் ஆட்சித் தொடக்கத்திலேயே தன் தந்தையின் இராஷ்டிரகூடத் திருமணத் தொடர்பு காரண மாக இராஷ்டிரகூடரைப் பகைத்துக் கொண்டிருந்தான். ஆனால் இப்பகைமை நீங்கியபின், நட்பைப் புதுப்பிக்கப் பராந்தகன் செய்த மணத் தொடர்பும் பகைமையையே வளர்த்தது. இப்பகைமை கிட்டத்தட்ட அரை நூற்றாண் டுக்கு மேலாகச் சோழப் பேரரசின் வளர்ச்சியையே தடுத்துப் பேரிடர் தருவதாக அமைந்தது.

இராஷ்டிரகூடப் பேரரசன் இரண்டாம் கிருஷ்ணன் 913-ல் இறந்தபின், அவன் பெயரன் மூன்றும் இந்திரன் தவிசேறி 934 வரை ஆண்டு வந்தான். அவன் மகன் நான்காம் கோவிந் தன் வனப்பில் வேள்மதன் போன்றவன் என்று கூறப்படு கிறது. மூன்றும் இந்திரன் 918லேயே அவனுக்கு இளவரசுப் பட்டம் கட்டி வைத்திருந்தான்.

பராந்தகன் தன் மகள் வீரமாதேவியை நான்காம் கோவிந்தனுக்கு மணம் செய்து கொடுத்து, அதன் மூலம் புதிய இராஷ்டிரகூட நட்பை உண்டுபண்ண எண்ணினான்

ஆனால் நான்காம் கோவிந்தன் அரசிருக்கை ஏறி ஓர் ஆண் டாவதற்குள் இராஷ்டிரகூடப் பேரரசில் பெரும் புரட்சிகள் உண்டாயின.

கீழைச் சாளுக்கிய அரசு இச் சமயம் இரண்டு பிரிவுகளா கப் பிரிந்திருந்தது. வடதிசைப் பிரிவிலுள்ள யுத்த மல்ல னுக்கும் தென் பிரிவிலுள்ள இரண்டாம் வீமனுக்கும் போர் மூண்டது. நான்காம் கோவிந்தன் இதில் தலையிட்டு, யுத்த மல்லனுக்கு உதவியாக நின்று இரண்டாம் வீமனுடன் போர் தொடுத்தான். போரில் நான்காம் கோவிந்தன் ஆதரித்த பக் கம் படுதோல்வியுற்றது.

ஏற்கெனவே நான்காம் கோவிந்தன் இராஷ்டிரகூடப் பெருமக்களிடையே மனக் கசப்பை உண்டுபண்ணியிருந்தான். போரின் தோல்வி அவன் மீது வெறுப்பைப் பெருக்கிற்று.

அவன் சிற்றப்பன் மகனாகிய மூன்றாம் கிருஷ்ணன் அவனுக்கெதிராகக் கிளர்ச்சி செய்து, தன் தந்தையான மூன்றாம் அமோகவர்ஷனையே 935-ல் இராஷ்டிரகூடத் தலைநகரான மான்யகேத நகரில் பேரரசனாக்கினான்.

அரசிருக்கை யிழந்த சோழன் மருமகன் நான்காம் கோவிந்தன் தன் மனைவி வீரமாதேவியுடன் மாமனாகிய சோழன் மாளிகையில் தஞ்சையிலேயே வந்து அடைக்கலம் புகுந்தான். 935 முதல் 939 வரை அவன் அங்கேயே தங்கினான். 939-ல் மூன்றாம் அமோக வர்ஷன் இறக்கவே, அவன் தனக்கு உதவும்படி பராந்தகனை வேண்டினான்.

சோழர் பெரும்படை ஒன்றுடன் நான்காம் கோவிந்தன் இராஷ்டிரகூடப் பேரரசைத் தாக்கப் புறப்பட்டான்.

கங்க அரசன் இரண்டாம் பூதுகன் மூன்றாம் கிருஷ்ணனின் தமக்கையை மணந்திருந்தான். அவன் இப்படையெடுப்பை அறிந்தவுடன் தன் மைத்துனனுக்கு உதவியாக விரைந்தெழுந்தான்.

இராஷ்டிரகூடப் படையும் கங்கர் படையும் ஒன்றாகச் சேர்ந்து 940-ல் நான்காம் கோவிந்தனையும் சோழர் படைகளையும் தாக்கிப் போரிட்டன. போரில் சோழர் படை தோற்றது. அதன் மீது மூன்றாம் கிருஷ்ணனே இராஷ்டிரகூட முடிகவித்து 968 வரை ஆண்டான்.

தன் அரசுரிமையைக் எதிர்த்த சோழர் மீது அவன் உள்ளூரக் கறுவிக் கொண்டிருந்தான்.

### சீட்புலி, நெல்லூர் வெற்றிகள்

கி. பி 941-ல் பராந்தக சோழனின் படைத் தலைவனான சிறு குளத்தூர் மாறன் பரமேஸ்வரன் என்ற செம்பியன் சோழியவரையன், சீட்புலி நாட்டை வென்று, நெல்லூரை அழித்துவிட்டுத் திருவொற்றியூர் வழியாகச் சோணாடு மீண்டான். திருவொற்றியூர்க் கல்வெட்டொன்று இதைத் தெரிவிக்கிறது.

நான்காம் கோவிந்தனை முறியடித்த வீரன்மீது பழிவாங்கவே இந்தச் செயல் நடைபெற்றிருக்கவேண்டும் என்னலாம். ஏனெனில் வீமன் ஆண்ட பகுதி அதுவே.

### இரண்டாம் இராஷ்டிரகூடப் படையெடுப்பு:
### தக்கோலப்போர் 949.

வெற்றி முரசுகொட்டி ஒன்பதாம் நூற்றாண்டின் நடுவிலிருந்து புகழ் ஏணியில் ஏறிவந்த சோழப் பேரரசுமீது பத்

தாம் நூற்றாண்டின் நடுப் பகுதியில், இருட் படலங்கள் வீசத் தொடங்கின. சோழர் இராஷ்டிரகூடப் படையெடுப்பின் தோல்விக்குப் பின் இந்நிலை மேலும் நெருக்கடியாகி வந்தது. ஏனெனில் சோழன் வலக்கை நண்பனாயிருந்த கங்க அரசன் இரண்டாம் பிருதிவீபதி இறந்தபின், கங்க அரசில் இருந்த இரு பிரிவினர் ஆட்சியும் இராஷ்டிரகூடப் பேரரசன் மூன்றாம் கிருஷ்ணன் மைத்துனனான இரண்டாம் பூதுகனிடத்திலேயே வந்து ஒன்று சேர்ந்தன. மூன்றாம் கிருஷ்ணன் இனி எந்த நேரத்திலும் படையெடுத்து வரக்கூடும். என்று தெரிந்து பராந்தகன் தன் வடஎல்லையை வலுப்படுத்துவதில் மும்முரமாக ஈடுபட்டான்.

கி. பி. 936–லிருந்து வடதிசைக் காவலின் பொறுப்புப் பராந்தகன் மூத்த புதல்வனான இராசாதித்தனிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவன் தென் ஆர்க்காட்டு மாவட்டத்தில் தற்போது திருநாம நல்லூர் என்று அழைக்கப்படும் திருநாவலூரைத் தலைமை யிடமாகக்கொண்டு படையுடன் தங்கி யிருந்தான். அவன் படைத்தலைவன் சேரநாட்டு நந்திக்கரைப் புத்தூரைச் சேர்ந்த வெள்ளன்குமரன் என்பவன். அவனும் அருகில் தற்போது கிராமம் என்று வழங்கும் முடியூரில் படையுடன் தங்கினான். 940-க்குப் பின் இவ்வேற்பாடுகள் இரட்டித்தன. இராசாதித்தன் தம்பியாகிய அரிகுல கேசரியும் படையுடன் அங்கே அமர்த்தப்பட்டான்.

இராஷ்டிரகூடப் பேரரசனும் தன் படைகளை உச்ச அளவுக்குப் பெருக்கிக்கொண்டு வந்தான். அவனுக்கு உதவியாக அவன் மைத்துனனான வலிமைமிக்க கங்க அரசன் இரண்டாவது பூதுகனும், சோழனால் முன்பு துரத்தப்பட்ட இரண்டு வாண அரசர்களும் வைடும்ப அரசனும் வந்து சூழுமினர். எதிரி படைகள் தொண்டை நாட்டின் வட எல்லைக்கருகே வந்துவிட்டன என்றறிந்தே பராந்தகனின் மூத்த புதல்வனான இராசாதித்தன் தன் சோழப் பெரும்படையுடன் அவனைத் தடுத்து நிறுத்த முயன்றான். இருபடைகளும் தக்கோலப் போரில் ஒன்றை ஒன்று தாக்கிக் கைகலந்தன.

தக்கோலம் என்பது அரக்கோணத்துக்கு ஆறுகல் தென்கிழக்கிலுள்ள ஓர் ஊர். இக்களத்தில் இருதரப்பினரும் கடும் போர் புரிந்தனர். இருதிறப் படைகளிலும் ஆயிரக்கணக்கான வீரர் வீழ்ந்துபட்டனர். நெடுநேரம் வெற்றி எப்பக்கமும் சாயவில்லை. எதிரி படைகளே தொகையில் மிகப் பெரிதாயிருந்த போதிலும், சோழ வீரர் அஞ்சா நெஞ்சராய் முன்வைத்த காலைப் பின் வைக்காமல் பேரிடையூறுகளுக் கிடையே போரிட்டனர்.

ஒரு சிறு நிகழ்ச்சி போரைச் சோழருக்கு எதிராக்கிற்று. இராசாதித்தன் வீரப்போராட்டத்தில் இராஷ்டிரகூடப்படைகள் பலவிடங்களிலும் பூட்டற்றுக் குலைந்தது கண்ட கங்க மன்னன் பூதுகன், யானை மேலிருந்த இராசாதித்தன் மீது தன் அம்புகளைப் பாய்ச்சினான். ஓர் அம்பு அவன் மார்பில் தைக்கவே அவன் உடனடியாக உயிர்நீத்தான். தலைவனில்லாப் படைகள் கட்டுக்குலைந்து குழப்பமெய்தின. மூன்றாம் கிருஷ்ணன் எளிதில் வெற்றி வாகை சூடினான்.

'இராசாதித்தன் வீற்றிருந்த யானையின் அம்பாரியையே தன் போர்க்களமாக்கி, பூதுகன் அவனை விண்ணுலகேற்றினான்' என்று பங்களூர் ஆதக்கூர்க் கல்வெட்டுக் கூறுகிறது.

சோழர் ஆதாரங்களும் இராசாதித்தன் யானைமேல் துஞ்சினான் என்றே கூறுகின்றன.

சோழப் பேரரசர் வீர வெற்றி வாழ்விலே தக்கோலப் போரைப் போன்ற பேரிடி வேறு எதுவும் கிடையாது. அந்த வீழ்ச்சியிலிருந்து அது பேரரசுநிலைக்கு மீளக் கிட்டத்தட்ட அரை நூற்றாண்டு ஆயிற்று.

இராஷ்டிரகூடப் படைகள் தங்கு தடையின்றிச் சிலகாலம் தொண்டை நாடெங்கும் சுழன்று திரிந்தன. இராஷ்டிரகூடக் கல்வெட்டுக்கள் மூன்றாம் கிருஷ்ணனின் வெற்றியைப் பலபட மிகைபடுத்தத் தவறவில்லை. அவை 'கச்சியும் தஞ்சையும் கொண்ட கன்னட தேவன்' என்ற விருதுப்பெயரை அவனுக்குச் சூட்டுகின்றன. தொண்டை நாடு முழுவதும் வென்றதுடன் நில்லாமல் சோழ நாட்டையும் கைக்கொண்டான் என்று கூறுவன சில. இராமேசுவரத்தில் வெற்றித் தூண் நாட்டினான் என்றும், இலங்கையரசனைப் பணிய வைத்து அவனிடம் கப்பம் பெற்று மீண்டான் என்றும் பிதற்றுகின்றன சில இவையெல்லாம் ஆதாரமற்ற மிகையுரைகள் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் தென்னார்க்காட்டுத் திருவதிகைக்குத் தெற்கே சோழர் கல்வெட்டன்றி இராஷ்டிரகூடக் கல்வெட்டு எதுவும் அகப்படவில்லை. அதற்கு வடக்கில்கூட 955 கழிந்த பின்னரே படிப்படியாக இராஷ்டிரகூடக் கல்வெட்டுக்கள் பெருகுகின்றன.

பராந்தகன் ஆட்சியின் நடுப்பகுதியில், வடக்கே நெல்லூர் வரை பரவியிருந்த சோழப்பேரரசு தக்கோலப்போரினால் தொண்டை நாடு முற்றிலும் கிட்டத்தட்ட நிலையாக இழந்து, சோழர் தாயக எல்லையுடன் சில தலைமுறைகள் அமைந்து நின்றது.

இப்போரில் கங்கன் இரண்டாம் பூதுகன் இராஷ்டிரகூடருக்கு அளித்த உதவி மிகப்பெரிது. அதற்குப் பரிசாக வன

வாசி 12,000மும் பெல்வொளை 300-ம் அவனுக்கு அளிக்கப் பட்டன.

இராஷ்டிரகூடர் தொண்டை நாடு முழுவதும் வென்றடக்க ஆறுண்டுகள் பிடித்தன. ஆனால் அதன்பின் 955 முதல் அது முழுவதும் இராஷ்டிரகூடர் நேராட்சியிலேயே இருந்தது. சிறிது சிறிதாகவே பராந்தகன் பின்னோர்கள் அதை மீட்க முடிந்தது.

தும்பைப்பதிப் போர் 938.

இக்காலத்தில் சிற்றரசர்களுள் கீழைச் சாளுக்கிய நாட்டின் தென்பகுதியை ஆண்ட மன்னன் வீமன் ஒரு பெரு வீரனாய் இருந்தான். பராந்தகன் ஆட்சியின்போது அவன் இராஷ்டிரகூட அரசன் நான்காம் கோவிந்தனை முறியடித்ததும் பின் சோழரால் தாக்கப்பட்டதும் கண்டோம். இவற்றுக்கிடையே அவன் 938-ல் கங்க மன்னனாகிய ஏறெயகங்கனையும் நுளம்பன் ஐயப்பனையும் தும்பைப் பதிப் போரில் முறியடித்து வெற்றி எய்தினான்.

சோழ—பாண்டியப் போராட்டம்: சேவூர்ப் போர் I 953
இலங்கைப் படையெடுப்பு: சேவூர்ப் போர் II 962.

முதற் பராந்தக சோழன் இறக்கு முன்பே தக்கோலப் போரில் பெரு வீரனாகிய அவன் மூத்த புதல்வன் இராசாதித்தன் உயிரிழந்தான். அவன் இரண்டாம் புதல்வனாகிய கண்டராதித்தன் (950—957), அப்போரிலேயே கலந்துகொண்டிருந்த மூன்றாம் புதல்வனாகிய அரிஞ்சயன் (956—957) ஆகியோர் முதற் பராந்தகன் ஆட்சியிறுதியையே தம் ஆட்சியாகக் கொண்டு ஒருவர்பின் ஒருவராக ஆண்டு மாண்டனர்.

முதற் பராந்தகன் ஆட்சியிலேயே சோழர் தொண்டை நாடு முற்றிலும் இழந்துவிட்டனர். அத்துடன் அவ்வாட்சியிறுதியில் கண்டராதித்தன் பட்டத்துக்கு வந்தவுடனேயே மூன்றாம் இராசசிம்ம பாண்டியன் மகனாகிய வீர பாண்டியன் இராஷ்டிரகூடத் தாக்குதலால் வலிகுன்றியிருந்த சோழர்களுக் கெதிராகக் கிளர்ந்தெழுந்து தன்னாட்சியைக் கைக்கொண்டான். அத்துடன் 953-ல் சோழருடன்அவன் சேவூரில் தொடுத்த போரில் வெற்றி பெற்றான். இதுவே முதற் சேவூர்ப் போராகும். இப்போரில் அவன் தான் ஒரு சோழனைக் கொன்றதாகவும், அச் சோழன் தலையையே போர்க்களத்தில் கால் பந்தாக வைத்து உருட்டி விளையாடியதாகவும் பெருமை கொண்டான். 'சோழன் தலைக் கொண்ட வீர பாண்டியன்' என்ற விருதுப் பெயரும் சூட்டிக்கொண்டான்.

இங்கே சோழன் என்று பெயர் விவரமில்லாமல் கூறிய தனால் அது சோழ அரசனாக யிருக்க முடியாது, சோழர் குடி இளவரசருள் ஒருவராய் இருக்க வேண்டுமென்று வரலாற்றா சிரியர் கருதுகின்றனர். ஆனால் தம் மரபுக்கு இதனால் ஏற் பட்ட கறையை மாற்றச் சோழர் அவன் செயலை அவன் மீதே திருப்பினர் என்பது நோக்க, அந்நாளைய சோழர் இச்செயலைச் சிறு செயலாகக் கொள்ளவில்லை என்று தோற்றும். பாண்டிய னால் உயிரிழந்த சோழன் அரிஞ்சயனே என்று சிலர் கூறுவர். முதற் சேவூர்ப் போர் 953-ம் ஆண்டில் நிகழ்ந்ததாயின், அது முதற் பராந்தகனாகவே இருந்திருந்தலும் கூடும் என்னலாம்.

தொண்டை நாடும் பாண்டிய நாடும் இழந்த நிலையில் கண்டராதித்த சோழன் மீண்டும் விசயாலயன் காலச் சிற்ற ரச எல்லையாகிய சோணாட்டை மட்டுமே ஆண்டிருக்க வேண் டும். ஆனால் இச் சோழன் பெருஞ் சிவ பக்தமுனதால், இது பற்றிக் கவலை கொள்ளவில்லை. ஆட்சி யெல்லை பரப்புவதை விட ஆண்டவன் பக்தி எல்லையைப் பரப்புவதிலேயே அவன் தன் வாழ்நாளைச் செலவிட்டான். அவன் அரசனாகவும் பக்தனா கவும் இருந்தது போலவே, அருங்கவிஞனாகவும் இருந்தான். தேவார ஆசிரியர்கள் போலவே கோயில்கள் தோறும் சென்று அவன் திருப்பதியங்கள் பாடினான். ஆட்சியின் பிற்பகுதியில் அவன் மேற்குத் தமிழகமாகிய இன்றைய மலையாளக் கரை தென்கன்னட மாவட்டம், மைசூர் ஆகிய இடங்களில் திரிந்து சமயப்பணிகளாற்றி, மைசூரிலேயே இறுதி நாட்களைக் கழித்தான் என்று தோற்றுகிறது. அவன் பாடிய பதியங்கள் பலஇருக்கக் கூடுமானாலும் நமக்கு ஒன்றே கிட்டி யுள்ளது. பன்னிரு திருமுறைகளையும் தொகுத்த சைவ ஆன்றோரால் அது ஒன்பதாம் திருமுறையில் சேர்க்கப்பட் டுள்ளது. அதன் கடைசிப்பாட்டு அவன் இக்காலத் திருச்சி ராப்பள்ளியாகிய உறந்தை அல்லது கோழி நகரையும், தஞ்சை நாட்டையும் ஆண்டவன் என்று குறிப்பிடுகிறது.

"சீரால்மல்கு தில்லைச் செம்பொன்
அம்பலத்தாடி தன்னைக்
காரார் சோலைக் கோழிவேந்தன்
தஞ்சையர்கோன் கலந்த
ஆரா இன்சொல் கண்டராதித்தன்
அருந்தமிழ்மாலை"

சமயத்திருப்பணிபோலவே ஏரி, குளம் முதலிய நாட்டுத் திருப்பணிகளிலும் இவன் கருத்துச் செலுத்தியிருந்தான். கண்டராதித்தப்பேரேரி போன்ற பெயர்கள் இதற்குச் சான்று. இவன் அரசியருள் ஒருவர் மழவர்கோன் பாவை யாகிய செம்பியன் மாதேவி. தன் கணவன் இறக்கும் சமயம்

சிறுவனை விட்டுச் சென்ற மதுராந்தகனைப் பேணுவதற்காக இப் பெருநதேவி அவனுடன் இறவாது வாழ்ந்து, மூன்று ஆட்சிகள் வரை கணவன் வழிநின்று சமயத் திருப்பணிகளை நாடெங்கும் பரப்பி, இராசராசன் ஆட்சியில் 1001-ம் ஆண்டில் இயற்கை எய்தினர். சோழர் குலமே பெருமைப் படத்தக்க மூதன்னையாக அவர் வாழ்நாள் அமைந்தது.

வீரனை அரிஞ்சய சோழன் முன்னோரிழந்த தொண்டை நாட்டை மீட்பதற்காகப் பல போர்கள் ஆற்றினன். அவன் 'ஆற்றூர்த் துஞ்சிய பெருமாள்' என்று அழைக்கப்படுவதால், ஆற்றூரில் போர் புரிநதே மாண்டிருந்தான் என்று கருத இடமுண்டு.

அரிஞ்சயனுக்குப் பின் அவன் மகன் இரண்டாம் பராந் தகன் அல்லது சுந்தர சோழனும் (957—970) கண்டரா தித்தன் மகனான மதுராந்தகன் அல்லது உத்தம சோழனும் (970—985) ஆண்டனர்.

சுந்தரசோழன் காலமுதல் சோழ மரபு புதுப் பேரரசுப் புகழ் வளர்த்தது போலவே, அவன் ஆட்சி முதல் தமிழ் மொழியும் புது மலர்ச்சியுற்றது என்னல் வேண்டும். சங்க காலத்துப் பாடல்களில் பெரும்பகுதி நமக்கு வந்தெட்டாதது போலவே, இச்சோழர் காலத்துத் தமிழ்வளத்திலும் பெரும் பகுதி நமக்கு வந்து எட்டவில்லை. அந்நாளைய இலக்கண நூலாகிய வீர சோழியத்தின் உரையில் கண்ட மேற்கோள் களில் பல சுந்தர சோழனையும் மற்ற முன் பின் சோழர்களை யும் குறிப்பிட்டுள்ளன. இறந்துபட்ட அக்கால நல்லிலக்கிய ஏடுகளையும் நற்பண்புகளையும் அவை நமக்கு நினைவூட்டு கின்றன.

இராமாயணம் பாடிய கம்பர் இக்காலத்தவரே என்று கருதுகின்றனர், பல தமிழ்ப்புலவர்கள். இதுஎப்படியானாலும், சுநதர சோழன் காலமே கன்னட இலக்கியத்தில் பெரு மலர்ச்சி ஏற்பட்ட காலம் எனனலாம. சுந்தர சோழனின் புகழைத் தமிழ் ஏடுகளிலும் பன்மடங்காக மிகைப்படுத்திக் கன்னட காபபியங்கள், புனை கதைகள் தீட்டியுள்ளன. ஆனல் அவற்றுட்பல நின்றசீர்நெடுமாறனை சுந்தர பாண்டி யன புகழுடன் இவன் புகழை ஒன்று படுத்திக் குளறுபடி செய்துள்ளன.

'சோழன் முடித்தலை கொண்டவன்' என்று பெருமை யடித்துக்கொண்ட வீரபாண்டியனை வீழ்த்திப் பாண்டிய நாட்டை மீண்டும் கைப்பற்றச் சுந்தரசோழன் பேரவாக் கொண்டான். முன் பாண்டியன் வெற்றிகண்ட அதே களத்தி லேயே சோழனும் போரிட்டதால் இதனை நாம் இரண்டாம்

சேவூர்ப்போர் என்னலாம். இது சுந்தரசோழனின் ஐந்தாம் ஆட்சி ஆண்டில், 962-ல் நடைபெற்றதாகத்தெரிகிறது.

இப்போர் சோழர்களை இலங்கைப் படையெழுச்சிக்கும் தூண்டிற்று. ஏனெனில் இலங்கையரசன் நான்காம் மயிந்தன் சேவூர்ப்போரில் பாண்டியனுக்கு உதவியாக ஒரு பெரிய இலங்கைப் படையை அனுப்பியிருந்தான். இப்போரிலும் இதன்பின் நடைபெற்ற இலங்கைப் படையெடுப்பிலும் சோழர் படைகளைச் சுந்தரசோழன் மூத்த புதல்வனான ஆதித்தனும், கொடும்பாளூர்க் குறுநில மன்னன் பராந்தகன் சிறியவேளான் என்பவனும், தொண்டைநாட்டுச் சிற்றரசன் பார்த்திவேந்திரவர்மனும் நடத்திச் சென்றனர். இலங்கைப் படையெடுப்பின் பின் நடைபெற்ற பாண்டியப் போரில் சிறிய வேளான் இடத்தில் அவன் மகன் பூதிவிக்கிரமகேசரி படைத்தலைமை வகித்தான்.

இரண்டாம் சேவூர்ப்போரில் பாண்டியன் தோல்வியுற்று, சோழர் பெருவெற்றி பெற்றனர். பாண்டி நாடும் அவர்கள் கைப்பட்டது. இதன் பின் சோழன் இரண்டாம் பராந்தகனாகிய சுந்தரசோழன் 'மதுரைகொண்ட இராசகேசரி வர்மன்' என்றும், 'பாண்டியனைச் சுரம் இறக்கின பெருமாள்' என்றும் விருதுப் பெயர்கள் மேற்கொண்டான்.

சேவூர்ப்போரினால் வந்த பாண்டிய நாட்டு வெற்றி நிலையான வெற்றியாக இல்லை. ஏனெனில் 965, 966-ம் ஆண்டு களுக்குரிய வீரபாண்டியனுடைய 18,19-ம் ஆண்டுக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. ஓடிச்சென்றவன் மீண்டு வந்து ஆண்டானென்று தெரிகிறது. இலங்கைப் படையெடுப்பின் பின் சோழர் மீண்டும் பாண்டி நாட்டைத் தாக்கினர். இப்போதுதான் வீர பாண்டியன் போரில் மாண்டான். முன் அவன் சோழர் தலையை வெட்டியதாக விருது கூறியதுபோல, இப்போது அவன் தலையை வெட்டி, சோழர் விருதுப்பட்டம் பூண்டனர். 'வீரபாண்டியன் முடித்தலைகொண்ட கோப்பரகேசரிவர்மன்' என்று சோழ இளவரசன் ஆதித்தன் குறிக்கப்பட்டான். அவனுடனே படைத் தலைவராய் இருந்த கொடும்பாளூர்க் குறுநில மன்னன் பூதிவிக்கிரம கேசரியும், பார்த்திவேநதிரனும் அதே பட்டத்தைத் தாமும் மேற்கொண்டனர்.

பெருவீரனான ஆதித்தனுக்குச் சுந்தரசோழன் 966-ல் இளவரசுப்பட்டம் கட்டியிருந்தான். ஆனால் எதிரிகள் சிலரால் அவன் 969-ல் கொலையுண்டான்.

### இலங்கைப் படையெடுப்பு 965

பாண்டியனுக்கு இலங்கை அரசன் நான்காம் மயிந்தன் உதவி செய்ததனால், சுந்தரசோழன் அந்நாட்டின்மீது படை யெடுக்க நேர்ந்தது. பாண்டி நாட்டுப் படையெடுப்பில் முதலில் படைத்தலைவர்களாயிருந்த ஆதித்தன், கொடும் பாளூர்த்தலைவன் பராந்தகன் சிறியவேளான், தொண்டை நாட்டுத் தலைவன் பார்த்திவேந்திரவர்மன் ஆகியவர்களே இங்கும் அனுப்பப்பட்டிருந்தனர். ஆனால் சிங்களப் படைத் தலைவன் சேனு என்பவன் சோழர் படைகளை முறியடித்தான். சோழர் படைத்தலைவருள் ஒருவனான பராந்தகன் சிறிய வேளான் போரில் உயிர்துறந்தான். கல்வெட்டுக்கள் அவனைக் 'கொடும்பாளூர் வேளான் சிறியவேளான்' என்று குறிக்கின்றன.

இத்தோல்வியின் பின் சோழர் இலங்கை மன்னனோடு நேச உடன்படிக்கை செய்துகொண்டு மீண்டனர் என்று இலங்கை வரலாற்றேடான மகாவம்சோ கூறுகிறது.

### தொண்டை நாடு மீட்பு 962-967

தொண்டை நாட்டை அடிப்படுத்திய இராஷ்டிரகூட மன்னன் மூன்றும் கிருஷ்ணன் சார்பாக அந்நாட்டை ஆண்டவன் வைடும்ப மரபினனான விக்கிரமாதித்தனும் அவன் பின்னோருமே யாவர். விக்கிரமாதித்தனுக்குப் பின் திருவையன், சீர்கண்டன் என்பவர்கள் ஒருவர்பின் ஒருவராக ஆட்சிப் பொறுப்பேற்றனர். வாணரும் தொடக்கத்தில் இராஷ்டிர கூடர் பக்கம் இருந்தாலும், சோழன் அரிஞ்சயன் தன் மகள் அரிஞ்சிகைப் பிராட்டியாரை வாணமன்னனுக்கு மணஞ் செய்து கொடுத்து அவன் நேசத்தைப் பெற்றிருந்தான். ஆயினும் அரிஞ்சயன் போர்கள் முழுதும் வெற்றி யடையவில்லை.

சுந்தரசோழன் தந்தையைப் பின்பற்றி வடக்கே அடிக்கடி போர்களில் ஈடுபட்டான். இதில் அவன் திடீர் வெற்றி எதுவும் பெறுவிட்டாலும், படிப்படியாகத் தொண்டை நாடு முழுவதும் அவன் கைப்பட்டன என்று தோற்றுகிறது. அவன் ஆட்சியின் ஐந்தாம் ஆண்டு (962) முதல் அவன் கல்வெட்டுக்கள் தொண்டை நாட்டின் பல பகுதிகளிலும் காணப்படுகின்றன. அதே சமயம் 967-வரை இராஷ்டிரர் கூடர் கல்வெட்டுக்களும் ஆங்காங்கு இடம்பெறுகின்றன. எனவே 962-லிருந்து 967 வரை தொண்டை நாட்டுப் போராட்டம் மெல்ல மெல்லச் சோழர் பக்கம் வெற்றியாக வளர்ந்தது என்று கூறலாம்.

சுந்தரசோழன் இறந்தபோது அவன் மனைவியருள் வானவன் மாதேவி என்பவள் பால்குடி குழந்தை ஒன்றை விட்டுவிட்டுக் கணவனுடன் எரிமூழ்கினர்.

முலைமகப்பிரிந்து முழங்கு எரிநடுவணும்
தலைமகற் பிரியாத் தையல்

என்று அந்நாளைய கல்வெட்டுக்கள் அவர் உயிர்மறுப்பைப் புகழ்கின்றன.

இவ் வீர அரச நங்கையே சோழப் பேரரசனுன இராச ராசனை ஈன்ற மாதேவியாவாள்.

வீர சோழிய உரைமேற்கோள் செய்யுளான கலிப்பா ஒன்று சுந்தர சோழனின் வண்மையைப் புகழ்ந்துள்ளது. அது புத்த சமயஞ்சார்ந்த ஏடு என்பதையும் கீழே தரப்படும் பாடலின் முதலடி காட்டுகிறது.

"போதியந் திருநிழல் புனித! நிற்பரவுதும்,
மேதகுநந்திபுரி மன்னர் சுந்தர
சோழர் வண்மையும் வனப்பும்
திண்மையும் உலகில் சிறந்து வாழ்க எனவே!"

தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் முதலாம் இராசராச சோழனுல் அவன் தாய் தந்தையரான சுந்தர சோழன், அரசி வானவன் மாதேவி ஆகியோரின் படிவங்கள் நிறுவப்பட்டுள்ளன.

## தமிழகத்தின் ஒப்புயர்வற்ற இருபெரும் பேரரசர்கள்

சுந்தரசோழன் காலமானவுடனே அவன் மகன் முறைப்படி அரசனுகவில்லை. பொதுமக்கள் அவனே அரசனுக வேண்டுமென்று விரும்பியதாகத் தெரிகிறது. ஆனுல் அரிஞ்சயனுக்கு முன்பே இளமை காரணமாக அரசுரிமை பெருதிருந்த கண்டராதித்தன் மகன் மதுராந்தக உத்தம சோழனுக்கு (970—985) அவன் அரசுரிமையை விட்டுக் கொடுத்திருந்தான். அதற்குப் பதிலாக, உத்தம சோழனுக்குப் பின் இராசராசனே அரசுரிமை பெறுவது என்ற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சோழப் பேரரசை ஒரே ஆட்சியில் பெரும் பேரரசாக்கியவன் முதலாம் இராசராசனே (985—1014). அவன் பேரரசு விரிவினுல் மட்டும் பெரியவனல்லன். பேரரசு வென்ருண்ட வீரத்தால் மட்டும் பெரியவனல்லன். அரசனுக்கும் பேரரசனுக்கும் உரிய எல்லாப் பண்புகளும் நிறைந்த தமிழ

கப் பேரரசன் மட்டுமல்ல, உலகப் பேரரசன் என்றே அவனைக் கூறலாம். ஏனெனில் உலக வரலாற்றிலேயே இத்தகைய பண்பு நிறைவைக் காண்டல் அரிது. அலக்ஸாண்டர், ஸீசர், நெப்போலியன் ஆகியவர்களுடன் மட்டுமே அவனை ஒப்பிட முடியும். அவன் தொலைநோக்கு அவர்களிடையே அலெக்ஸாண்டர் ஒருவருக்கே இருந்ததெனலாம். ஆனால் ஆட்சித் திறமையிலும் தேசீய ஆட்சித் திறமையிலும் எந்த அரசர் பேரரசரையும் அவனுக்கு இணையாகக் கூற முடியாது.

மன்னர் வெற்றிகளையும் செயல்களையும் கல்வெட்டுக்களின் முகப்பில்மெய்க்கீர்த்திகளாக வகுத்துரைக்கும்வழக்கத்தைப் புதுவது புனைந்து தமிழக வரலாற்றுக்குப் பேருதவி புரிந்ததற்காக அவனைப் புகழாத வரலாற்றாசிரியர் இல்லை. ஆனால் நாட்டு வரலாற்று வகையில் அவன் காட்டிய அதே நுண்மாண் நுழைபுலத்தை அவன் தன் பேரரசின் வீர வெற்றிகளிலும் ஆட்சித் திட்டங்களிலும் காட்டினான், அவன் வெற்றிகள் முன்னைய தமிழரசர், பேரரசர் எவர் வெற்றிகளையும் விட—சங்ககால, பிற்கால அரசர் ஆகிய எவர் வெற்றிகளையும் தாண்டி—நிலையான நீடித்த பயன் தந்தன. அவன் திறமையால் ஒரு நூற்றாண்டுக்கும், அவன் ஒப்பற்ற பின்தோன்றலான முதலாம் குலோத்துங்கன் திறமையால் மற்றொரு நூற்றாண்டுக்கும் சோழப் பேரரசு நிலைத்திருந்தது. தமிழகப் பேரரசுகள் எதுவும் இப்படி நூற்றாண்டுக் கணக்காக உச்ச நிலையிலில்லை. அதுமட்டுமன்று. தந்தை ஆட்சித்தொடக்கத்தை அடுத்துப் பிள்ளையாட்சி தொடங்கவைத்து, தந்தை காலத்திலேயே பிள்ளையும் சரி மதிப்புடன் ஆட்சிப் பயிற்சி பெற்று ஆளச்செய்ததனால் உலகில் எந்தப் பேரரசு மரபும் காணாத அதிசயத்தை, திறமையில் ஒருவருக்கொருவர் குறையாத பல தலைமுறைப் பேரரசர் மரபை அவன் உண்டுபண்ணினான். அவன் ஊக்கியப் போர் ஆர்வம், அவன் ஊட்டிய ஆட்சித் திறம், அவன் எழுப்பிய அரசியல் சூழ்ச்சிநய மரபு ஆகியவையும்பேரரசின் தொடர்ந்த வீர மரபுக்கும், ஆட்சி மரபுக்கும் காரணமாய் இருந்தன. இவற்றில் அவனுக்கு இணையான இன்னொரு பெருஞ் சோழனைக் கூறுவதானால், அது முதலாம் குலோத்துங்கனே யாகும். ஏனெனில் பேரரசை வானளாவ வளரும்படி விசையுடன் உந்தித் தள்ளிய பெருமை இராசராசனுடைய தென்றால், அது சரிந்து விழாதபடி விசையுடன் தடுத்தாட் கொண்ட பெருமை கட்டாயம் குலோத்துங்கனுக்குரியது. முதல் திறத்தில் இராசராசன் உலக வரலாற்றிலேயே ஒப்புயர்வற்றவன் என்றால், இண்டாம் திறத்தில் அது போலவே உலக வரலாற்றில் குலோத்துங்கன் ஒப்புயர்வற்றவன் ஆவான்.

இருவரின் ஒப்புமையையும் இன்னும் ஒரு திசையில் காணலாம், பேரரசில் நேராட்சி எல்லை கடந்த பெரும்பகுதி களை மண்டலங்களாக்கியது. அதன் சிற்றெல்லையிலுள்ள ஊர் களை அடுத்த பேரெல்லையுடன் தொடர்புபடுத்திஇணைக்க'வள நாடு' என்ற புதுப்பிரிவை ஆக்கியது, வரி விதிப்புக்குரிய திட் டமும், வரி அல்லது அரசாங்க வருமானத்தையும்அதற்கிடான மக்கள் வருமான வளர்ச்சியையும் ஒப்பிட்டுக் காண்பதற்குரிய திட்டமும் எளிதாகும்படி பேரரசெங்கும் நில அளவைத் திட்டம் செய்தது ஆகிய இராசராசன்செயலேபிரிட்டிஷ்ஆட்சி வரையும் கீழ் திசை அறிந்த ஆட்சிப்பெருஞ் செயல்களாகும். குலோத்துங்கன் இவற்றைப் பின்பற்றியவன் மட்டுமல்ல. இதுபோன்ற திட்டத்தை அவன் தமிழ் இலக்கியத்தில் ஊக் கினான். புவிச் சக்கரவர்த்தியைப் பாடும் கவிச் சக்கரவர்த்தி கள் அவன் காலமுதல் தான் தொடுத்துச் சில தலைமுறைகள் இருந்தார்கள். கம்பர்கூட உண்மையில் அக்காலத்தவரே என்று கருதப் பெறுகிறார். ஆனால் தமிழகப் புவிச் சக்கர வர்த்திகளைப் பாடிய தமிழ்க் கவிச் சக்கரவர்த்திகள் முற் றிலும் முதற் குலோத்துங்கன் மரபினர் காலத்தில் வாழ்ந்த வர்களே,

இராசராசன் வரலாறாக சமஸ்கிருதத்தில் ஒரு காப்பிய ஏடும், தமிழில் ஒரு நாடகமும் அவன் காலத்திலேயே இருந்த தாக அறிகிறோம். பேரரசன் கண்காண யாக்கப்பட்ட தமிழ கப் பேரரசு வரலாறுகள் நமக்கு வந்து கிட்டாமற்போனது நம் பேரவப்பேறே யாகும்.

### காந்தளூர்ப் போர் 988

சோழப் பெரும் பேரரசன் முதலாம் இராசராசன் ஆட் சிக்குரிய எண்ணற்ற பல வெற்றிகளிடையே அவன் காலக் கல்வெட்டுக்களால் பலபடப் புகழ்ந்து பேசப்படுவது 'காந் தளூர்ச் சாலை கலமறுத்தருளிய' அவன் செயலேயாகும். காந் தளூர்ச்சாலை என்பது தற்காலக் கேரள அரசுக்குரிய எல்லை யின் தலைநகராகவுள்ள திருவனந்தபுரத்தின் ஒரு பகுதி. நகரின் பழம்பெரும் பகுதியும் அதுவேயாகும். அதன் நடுவீதி இன்றும் சாலை,பழஞ்சாலை அல்லது நெடுஞ்சாலை என்ற பெயரு டன் நகரின் பெருங் கடைவீதியாகவும் வாணிகக் களமாகவும் இயங்குகின்றது. தமிழ் வணிகரும் தமிழரும் பேரளவில் வாழும் பகுதி அதனைச் சுற்றிலும் உள்ள இடங்களாகவே இன்றும் உள்ளன. சேர நாட்டுத் தமிழ்ப் புலவர் மிகுதியாக அணிமை வரை வாழ்ந்துள்ள கரமனை நகரம் அதன் கீழ்கோடி யிலும், அவர்கள் பழம்பெரும் புரவலனான ஆய் மரபில் வந்த

திருவாங்கூர் மன்னன் அரண்மனை மறுகோடியிலும் உள்ளன. இப் பழஞ்சாலையருகே புதிதாக அமைந்த சிறுசாலை ஆரியச் சாலை என்று பெயர் பெற்றிருப்பதும், பழயசாலை இன்னும் தமிழ் ஒலிபடச் சாலை (Chalai) என்றும், புதிய ஆரியச்சாலை சமஸ்கிருத ஒலிபட ஆரியசாலை (Aryashala) என்றும் மலையாள மொழியில் எழுதப்படுவதும் குறிப்பிடத் தக்க செய்திகள் ஆகும். இவை ஆயிர ஆண்டுகடந்தும் மொழி காட்டும் வர லாற்றுப் பண்புகள் ஆகும்.

காந்தளூர்ச் சாலை அந்நாளில் சேர அல்லது கேரள மன் னரின் தலைசிறந்த துறைமுகமாகவும் வாணிகக்களமாகவும் மட்டுமன்றி, அவர்கள் கடற்படையின் மூலதளமாகவும் இருந் தது. கல்வெட்டுக்கள் அதற்குத் தரும் பெருஞ்சிறப்பின் உயிர் மறை இதுவே.

ஆட்சித் தொடக்கத்திலேயே இராசராசன் மேற் கொண்ட தென்திசைப் படையெடுப்புக் காந்தளூர்ச்சாலை நோக்கிய படையெடுப்பாகவே இருந்தது.

இப்படையெடுப்பின் காரணமாகக் கூறப்படும் செய்தி யும் இராசராசனின் பேரரசுப் பண்பை முனைப்பாகச் சுட்டிக் காட்டுவதாகவே இருக்கிறது. இராசராசன் எக்காரியம் பற்றியோ சேர அரசனிடம் ஒரு தூதனை அனுப்பியிருந்தான். தூதன் யார் என்பதுகூட நமக்குத் தெரியவில்லை. ஆனால் சேரன் அத்தூதன் தூதை மறுத்ததுடன் நில்லாமல் அரசு நெறிக்கு முற்றிலும் மாறுபட்ட நிலையில் தூதனை அவமதித்து, அவனை உதகையிலிருந்த தன் சிறைக்கூடத்தில் இட்டுப் பிணித்துவைத்தான்.

இச்செய்தி கேட்ட பேரரசன் செயல் சேர நாட்டை எரித்தழித்தது. அத்துடன் அமையவில்லை. பேரரசெங்கும் சுழன்றடித்தது. பேரரசைக் கீழ்திசை காணாத, கேளாத அள வில் அடங்கொண்ட திண்தோள் அரசாக்கிற்று!

சோழர் பெரும்படை பாண்டியனைத் தாக்கிப் பாண்டி நாட்டைக் கைப்பற்றிய பின்னரே காந்தளூரை நோக்கிப் பாய்ந்தது என்று அறிகிறோம்: இதற்கு ஒரு காரணம் உண்டு. காந்தளூர்ச் சாலை ஒரு கடற்படைத்தளம்: அதன்முழுஆற்றலை யும் அழிக்க வேண்டுமானால் நிலப்படை மட்டும் போதாது. கடற்படையும் வேண்டும். கடற் கடம்பரை வேரறுத்த பண்டை நாட் சேரர் காலமுதல் சோழர் காலம்வரை சேரரின் பெருஞ் சிறப்பும் பேராற்றலும் அவர்கள் கடற்படையாகவே இருந்தது. பாண்டிய சோழரிடமும் பல்லவரிடமும் கூடப் பெருங் கடற்படை இருந்ததானாலும், அவைப் பாதுகாப்புக் குப் பயன் படவில்லை. சேரருக்கோ நிலத்திசையில் சையமலை

யின் பேரரண் இருந்த படியால், கடற்படை புதுவலுவூட்டும் கருவியாயிருந்தது. சேரரை எவர் வென்ருலும் நீடித்து ஆட்சி செய்ய முடியாதிருந்ததன் காரணம் இதுவே. இராசராசன் சேரரின் இந்த நிலேயான ஆற்றலே அழிக்க எண்ணியதால், கடற்படையைக் குமரி சுற்றிக் கடல் வழி செலுத்தி, இதற்குத் துணையாகப் பாண்டிநாடு கைப்பற்றிச் செல்ல எண்ணிஞன்.

இராசராசன் காலத்துச் சேரன் பாஸ்கர இரவிவர்மன் (978—1036) என்பவன்.

காந்தளூர்ச் சாலேப்போர் நிலப்போர் மட்டுமன்று, நிலப் போரும் கடற்போரும் கலந்த கடல்நிலப் போரேயாகும். அப்போரில் சேர மன்னனின் கப்பற் படைகள் அழிந்து போயின என்று அறிகிருேம். தகடூர்ப் போரை நேரே இருந்து கண்டு தீட்டிய அரிசில்கிழார், பொன் முடியார் போன்ற தமிழ்ப் புலவர் அன்றிருந்திருந்தால், தகடூர் யாத்திரை போன்ற, ஆனுல் அதுபோல் சிதைந் தழியாத, ஒரு காந்தளூர்க் காவியத்தை நாம் பெற்றிருக்கக்கூடும்!

காந்தளூர்ப் போரிலே சேரனுடன் ஏற்கெனவே பாண்டி நாட்டில் தோற்று நாடிழந்த பாண்டியன் அமரபுயங்கனும் சேர்ந்து போராடிஞன். போர் முடிவில் இரண்டரசர்களின் பெருஞ் செல்வக் குவை மட்டுமன்றி, அவர்களின் இரு முடி களும் கைப்பற்றப்பட்டன. இவ்வெற்றி காரணமாகவே 'மும் முடிச் சோழன்' என்ற பட்டத்தைச் சோழன் முதல் முதலாக மேற்கொண்டான். இராசராசன் என்ற பெயர் அவன் கால முதல் இன்றுவரை அவனது இயற்பெயர்போல வழங்கிஞலும், இப்போரின் பின் அவனுக்கு நிலேயாக வழங்கிய வழக் கேயாகும். காந்தளூர்ப் போர் என்ற பெரும்போரின் பயஞகவே இராசராசன் தமிழக முழுமுதலரசஞகவும், தென்ஞட்டின் தலேமையரசஞவுகம் ஆய்விட்டான் என்பது குறிப்பிடத்தக்கது.

உதகை அழிவு

காந்தளூரையும் சுற்றுப்புறங்களேயும் எங்கும் அழித் தொழித்த வண்ணமாகவே சோழர் படைகள் கடுஞ் சீற்றத் துடன் தூதன் சிறைப்பட்டிருந்த உதகை நோக்கிச் சென்றன. சூளிகைகளும்மாளிகைகளும்நிறைந்த உதகைக் கோட்டையை யும்நகரையும்சோழர் சுக்குநூருக்கிப் பொடி படுத்தினர். எரித் துச் சாம்பராக்கினர். சிறையை உடைத்துத் தூதனே அரசன் சென்று விடுவித்தான். இம்பெருஞ் செயலேச் சோழர் காலக் கவிதைகள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

''தூதற் காப்
பண்டு பகலொன்றில் ஈரொன்பது 'சுரமும்'

கொண்டு மலைநாடு கொண்டோனும்.''
(விக்கிரம சோழன் உலா; 32—34)

''ஏறிப்பகல் ஒன்றில் எச்சுரமும் போய் உதகை
நூறித் தன் தூதனை நோக்கினோன்''
(குலோத்துங்க சோழன் உலா: 46—48)

''மதகயத்தால் ஈரொன்பது சுரமும் அட்டித்து
உதகையைத் தீ உய்த்த உரவோன்''
(இராசராச சோழன் உலா; 40—41)

என்று கவிச் சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் மூவருலாவிலும்,

சதய நாள்விழா உதியர் மண்டலந்
தன்னில் வைத்தவன் தனியோர் மாவின்மேல்
உதய பானுவொத்து உதகை வென்றகோன்
ஒரு கை வாரணம் பல கவர்ந்ததும்
(கலிங்கத்துப் பரணி 201)

என்று கவிச் சக்கரவர்த்தி சயங்கொண்டாரும் நேரில் காணா விட்டாலும் நேரில் கேட்டு இப் போரை வருணித்துள்ளனர்.

'பகல்ஒன்றில்ஈரொன்பது சுரம்'(பன்னிரண்டுமணிநேரத் துக்குள் பதினெட்டுக் காடு கடந்து) என்ற தொடர் சோழர் படை சென்ற வேகத்தையும் போரின் உக்கிர வேகத்தையும் நம் கண்முன் கொண்டு வருவனவாகும். 'உதகை நூறி,' உதகை தீ உய்த்த' என்பனவும் போர்க் காட்சியைக் கண்முன் நிறுத்துபவைகளே.

இராசராசன் பிறந்த நாள் சதயம். அப் பிறந்த நாள் உதகைப் போரை யடுத்து நிகழ்ந்தது. சேர நாட்டிலே, சேர னின் குதிரை மீதேறி, சதய நாள் விழாவை உதகை வெற்றி யாகவே கொண்டாடினனென்றும், அவன் குதிரையேறி உதகைக் கோட்டைக்குள்ளேபுகுந்தது உதயசூரியன் அந்நாட் டில் மேற்குத்தொடர் மலையில் எழுவது போன்றிருந்த தென்றும் கவிப்பேரரசரான சயங்கொண்டார் தரும் காவியக் காட்சி தமிழர் வரலாற்று வழியாக வந்த கண் கொள்ளாக் கலைக் காட்சியாகும்.

உதகை என்பது தற்காலத் திருவாங்கூரில் கோட்டாறு என்ற பழம் பெயரையுடைய தற்கால நாகர்கோவிலுக்கு வட மேற்கே கற்குளம் வட்டத்திலுள்ள ஓர் ஊர், அது அந்நாளில் மாடமாளிகை கூடகோபுரம் கோட்டை உட்கோட்டைகளை யுடைய சேரரின் பெருநகரமாய் இருந்தது. தூதனைச் சிறை யில் வைத்துத் துன்புறுத்தியதால் வந்த கோபத்தாலேயே இராசராசன் இத்தகைய அழிவு வேலையைச் செய்ய நேர்ந்தது என்று வரலாற்றறிஞர் பண்டாரத்தார். சுட்டிக் காட்டியுள்

ளார். இராசராசன் பேரரசுப் பண்பில் இது ஒரு கூறேயாகும். 'கடிதோச்சி மெல்ல எறிக' என்ற வள்ளுவனாரின் அரசியல் நுண்ணறிவுக்குரிய வாழ்க்கையிலக்கியத்துக்கு இது ஒரு நுனி முகம் என்னலாம். இராசராசன் ஆட்சி முழுதும் காட்டும் பண்பு இதுவன்று என்பதையும் அவன் பிற செயல்கள் தெரிவிக்கும். அவன் இயற் பெயராகவே அமைந்த 'அருண்மொழித்தேவன்' என்ற தொடரும் அதற்குச் சின்னமாகும்.

உதகை எரியூட்டப் பட்டசெயலை அகவற்பாவில் அமைந்த திருக்கோவலூர்க் கல்வெட்டு ஒன்று

''சாரன்மலை எட்டும் சேரன் மலை நாட்டுத்
தாவடிக் குவட்டின் பாவடிச் சுவட்டுத்
தொடர் நெய்க்கனகம் துகள் எழ, நெடுநல்
கோபுரம் கோவைகுலைய, மாபெரும்
புரிசை வட்டம் பொடிபட, புரிசைச்
சுதைகவின் படைத்த சூளிகை மாளிகை
உதகைமுன் ஒள் எரி கொளுவி
உதகை வேந்தைக் கடல்புக வெகுண்டு''

எனத் தீட்டிக் காட்டுகிறது.

விழிஞப்போர்

விழிஞம் திருவனந்தபுரத்துக்குத் தெற்கே 10 கல் தொலைவில் மேல் கடல் கரையிலுள்ள ஒரு துறைமுக நகரம். இன்றும் அது அப் பெயருடனே சிற்றூராக உள்ளது. ஆனால் ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக அது சேர நாட்டின் தலை சிறந்த துறைமுகமாய் இருந்தது. காந்தளூர்ச்சாலை கலமறுத்த பின் சோழர் படையும் கடற்படையும் சேர்ந்து ஆற்றிய அரு நிகழ்ச்சி இது ஆகும். இந் நகரங்களின் சூறையாகவும் மன்னர் குடிமன்னர் திறையாகவும் சோழன் பெரும் பொன்மணி பொருட் குவைகளும், யானைகளும் சோணாட்டுக்குக் கொண்டு வந்து குவித்தான்.

சேரநாட்டு வெற்றியில் சோழர் படைத் தலைவனாயிருந்த வன் கம்பன்மணியன்என்ற விக்கிரம சிங்க மூவேந்த வேளான். மவென்ற நாட்டிலிருந்து வெற்றிச் சின்னங்களுள் ஒன்றாகஅவன் சேரநாட்டிலிருந்து பிள்ளையாரின் மரகதப் படிமம் ஒன்று கொணர்ந்து திருப்பூவணக் கோயிலில் சேர்த்தான் என்றும் அறிகிறோம்.

பாண்டி நாட்டு வெற்றி

சேர நாட்டுக்குச் சோழப் படைகள் செல்லும் வழியிலேயே, பாண்டியன் அமரபுயங்கனைச் சோழர் போரில் முறியடித்துப் பாண்டிநாட்டைக் கைப்பற்றிக்கொண்டனர்.இதன்

பயனாக இராசராசன் 'செழியரைத் தேசுகொள் கோவி ராச கேசரி வர்மன்' என்ற நீண்ட விருதுப் பெரும் பெயர் மேற் கொண்டான். 'பாண்டிய குலாசனி' (பாண்டியர் மரபுக்கு அசனி அல்லது இடி) என்ற பட்டமும் இப் போரின் பயனாகவே அவனுக்குச் சூட்டப்பட்டது.

இப்போர் பற்றிய குறிப்புக்களில் பாண்டிய நாட்டை ஆண்ட பாண்டியர்கள் பலராகக் காணப்படுகின்றனர். அமர புயங்கன் தலைமையில் ஐந்து பாண்டியர்கள் ஆண்டிருக்கலா மென்று தோற்றுகிறது.

பாண்டிய நாட்டில் இதுவரை சோழர் அடைந்த வெற்றி களுக்கும், இராசராசன் அடைந்த வெற்றிக்கும் பெரு வேறு பாடு உண்டு. வென்ற நாடுகள் எங்குமே வென்றவர் நேரடி ஆட்சியை வகுத்த முதல் தமிழ்ப்பேரரசன் இராசராசனே. பாண்டி நாட்டைச் சோழப்பேரரசன் ஒரு தனி மண்டல மாக்கி, அதற்கு இராசராச மண்டலம் என்ற புதுப்பெயர் சூட்டுவித்தான. இதுபோலவே பேரரசின் மற்ற இடங்களும் மண்டலங்களாக்கப்பட்டு அவன் விருதுப் பெயர்களில் ஒன்று மண்டலப்பெயராக வழங்கிற்று.

பல நாடுகளும் வளநாடுகளும், பல நகரங்களும் நகரத் தெருக்களும் இவ்வாறு பேரரசர் வெற்றிப் பெயர், விருதுப் பெயர்களாக மாற்றப்பட்டதும் இராசராசன் காலத்திலேயே ஆகும். தமிழக அரசர்களில் அவனை ஒத்த புதுக் கருத்துவளம் மிக்க அரசர்கள் முன்னும் இருந்ததில்லை, பின்னும் இருந்த தில்லை என்னலாம்.

## இரண்டாம் சேரப்படையெடுப்பு: கொல்ல வெற்றி: கொடுங்கோளூர் வெற்றி

பாண்டிய நாடு வென்றுகொண்ட பின் இராசராசன் மீண்டும் சேர நாட்டுப் பக்கம் திரும்பினான். முதலில் வெல்லப் பட்ட சேரநாட்டு அரசன் அதன் தென்கோடி ஆண்ட திருவாங் கூர் அரசனே. வடபகுதியில் வேறும் பல சிற்றரசர் ஆட்சி களாகப் பழய சேரநாட்டு மேல்கரைப் பகுதி அன்று அமைந் திருந்தது. அதில் ஒன்றே சோழன் அடுத்த வெற்றிக்குரிய கொல்லநாடு. அது தற்காலக் கொல்ல நகரையே தலைமையிட மாகக் கொண்டது.

சங்காலச் சேரர் தலைநகரான வஞ்சி இப்போது கொடுங் கோளூர் என்று வழங்குவதுபோலவே, சேரர் காலத்திலும் வழங்கிற்று. அதுவும் அன்றைய கொல்ல நாட்டுடன் சேர்ந் திருந்ததனால், கொல்ல வெற்றியுடன் வெற்றியாகச் சோழர் கொடுங்கோளூரையும் தமதாக்கினர்.

கொல்ல வெற்றிக்குப்பின் சோழன் தன்னைக் 'கீர்த்தி பராக்கிரமன்' என்று அழைத்துக் கொண்டான்.

குடகு வெற்றி: பணசோகேப்போர்

தமிழகப் பேரரசர் தம் வெற்றி உலாக்களை வலமாக வளைந்து சென்று நடத்துவது தமிழக மரபு என்று கருதலாம். சங்கப் புலவராகிய கோவூர்கிழார் சோழன் கிள்ளி வளவனைப் பாடிய பாட்டில் இதனைக்குறித்துள்ளார். இராசராசன் வெற்றிகள் இம் மரபை நினைவூட்டுகின்றன.

கொல்லம், கொடும்பாளூர் வெற்றிகளுக்குப் பின் இராசராசன் வடக்கே சென்று குடகுமலை நாட்டை அணுகினான். இது சங்ககாலத்திலும் குடமலை நாடு என்றே அழைக்கப்பட்டது. இப்போது குடகு நாடு என்று வழங்குகிறது. இந்நாட்டவரும் அருகிலுள்ள தென்கன்னட மாவட்டத்தின் ஒரு பகுதியினரும் இன்று பேசும் மொழி துளு என்று கூறப்படும். தமிழ், மலையாளம். தெலுங்கு. கன்னடம்: துளு என்ற ஐந்து தென்மொழி அல்லது திராவிட மொழிகளுள் அது ஒன்று. அது கன்னடத்திலிருந்து பிரிந்த ஒரு மொழியேயாகும். அதன் பரப்பும் தொகையும் மிகச் சிறிதே. ஆனால் இன்று அந்தச் சிறு மொழியிலிருந்தும் சிறுபரப்புடைய மொழியாகக் குடகு மொழி பிரிந்து வருவதாக மொழி நூலார் பலர் கருதுகின்றனர். ஆனால் சங்ககாலத்திலிருந்து 12, 13-ம் நூற்றாண்டுவரை கூட இக்குடகு நாடு தமிழகத்தின் வடவெல்லை நாடாகவே குறிக்கப்பட்டுள்ளது.

பொன் விளையும் நாடு என்று சங்க காலத்திலும், காப்பிக் கொட்டை விளைவிக்கப்பட்ட நாடென்று 15-ம் நூற்றாண்டிலிருந்தும் பெயர் விளங்கிய நிலம் இது. வீரத்துக்கும் வீரசைவ சமயத்துக்கும் அது என்றும் ஒரு கோட்டையாகவும் மூலதளமாகவும் இருந்து வந்துள்ளது.

சங்க காலத்துக்குப் பின்னும் அந்நாட்டின் மிகப் பழங் கல்வெட்டுக்களும் மிகப் பழமை வாய்ந்த வரலாற்றுச் சான்றுகளும் பாண்டியர் சோழர்களின் தமிழ்க் கல்வெட்டுக்களே.

இராசராசன் காலத்தில் குடகுமலை நாட்டைக் கொங்காள்வார் என்ற அரச மரபினர் ஆண்டுவந்தனர். பாணசோகம் அல்லது பணசோகே என்ற இடத்தில் நடைபெற்ற போரில் இராசராசன் கொங்காள்வ மரபிலுள்ள அரசனை முறியடித்துத் துரத்தினான். நாடு அவன் கைப்பட்டது. ஆனால் தொலையிலுள்ள இந்த மலைநாட்டை நேரடியாக அவன் ஆள விரும்பவில்லை. போரில் சோழருக்குப் பேருதவியாயிருந்த 'மனிஜன்' என்ற வீரனுக்கு அவன் 'க்ஷத்திரிய சிகாமணி

கொங்காள்வான்' என்ற பட்டம் தந்து 'மாளவ்வி' என்ற ஊரையும் அவனுக்கு அளித்திருந்தான். திரும்பும் சமயம் நாட்டின் ஆட்சியையும் தன் கீழ்ச் சிற்றரசனாக இருந்து ஆளும்படி அவனிடமே விட்டுவிட்டான். அவன் மரபினரே அங்கே நெடு நாள் ஆண்டனர்.

**கங்கவாடி, நுளம்பவாடி, தடிகைபாடி வெற்றிகள்: 991**

குடகு வெற்றியிலிருந்தே சோழர் பெரும்படைத் தலைவனாக, இராசராசன் மூத்த புதல்வனான முதலாம் இராசேந்திரன் அமர்த்தப்பட்டிருந்தான். தற்கால மைசூர்த் தனியரசுடன் அதனை யடுத்த சேலம் மாவட்ட எல்லையையும் பெல்லாரி மாவட்டத்தையும் உள்ளடக்கிய கங்கவாடி, நுளம்பவாடி, தடிகைபாடி ஆகியவற்றை—மலையம், கொண்கானம், துளுவம் ஆகிய பகுதிகளை—மும்முடிச் சோழன் பெற்ற வெற்றிக்களிறு என்று குறிக்கப்படும் இராசேந்திரன் கைக்கொண்டதாகக் கல்வெட்டொன்று குறித்துள்ளது.

இராசேந்திரன் ஏற்கனவே 'பஞ்சவன் மாராயன்' என்று தந்தையாரால் பட்டம் சூட்டப்பெற்றிருந்தான். கங்க நாட்டுக்கும் வேங்கை நாட்டுக்கும் உரிய மாதண்ட நாயகன் அல்லது மண்டல ஆட்சித்தலைவனாய் இருந்து பேரரசின் ஆட்சியில் இளமையிலேயே அவன் பங்கும் பயிற்சியும் பெற்றான்.

**இலங்கைப் படையெடுப்பு: 991**

இலங்கை அரசன் ஐந்தாம் மயிந்தன் சேரபாண்டிப்போர்களில் எதிர்தரப்பினருக்கு உதவி செய்திருந்தான். ஆகவே இராசராசசோழன் இராசேந்திரன் தலைமையிலேயே ஒரு சோழப் பெரும்படையை இலங்கையைத் தாக்க அனுப்பினான். சோழர் வெற்றிமேல் வெற்றியடைந்து வந்தனர். இதன் பயனாக இலங்கைப் படை வீரர்களிடையே பெருங்குழப்பம் உண்டாயிற்று. இலங்கை வேந்தன் தீவின் பெரும்பகுதியையும் சோழர் வசமே விட்டுவிட்டு, அதன் தென்கீழ்பாலுள்ள மலைப் பகுதியாகிய ரோகணநாட்டுக்கு ஓடிவிட்டான். ரோகணநாடு நீங்கலான தீவு முழுவதும் சோழர் ஆட்சிக்குட்பட்டது,

இலங்கை மன்னர் பழந்தலைநகரான அனுராதபுரம் சோழர் தாக்குதலால் முற்றிலும் அழிந்தொழிந்தது. பல்லவர் அழித்த வாதாபி போல அது இவ் வழிவிலிருந்து எக் காலத்தும் மீண்டும் மீட்சி பெறுமல், இன்றளவும் பாழ் நகராகவே உள்ளது. சோழர் இலங்கை அல்லது ஈழ மண்டலத்துக்கு மும்முடிச் சோழ மண்டலம் என்றுபெயரிட்டனர். அதைச் சோழர் ஆட்சிக்குக்கொண்டு வந்தனர். அத்துடன் அனுராதபுரத்தைப்

போலத் தீவின் வடதிசைமையமா யமையாமல் முழுத் தீவின் மைய இடத்திலேயே பொலன்னருவா என்ற புதுநகரம் ஆக்கினர். சோழர் தலைநகராகிய அதுவே பிற்காலங்களில் சிங்கள மன்னர் தலைநகராயிற்று.

சோழர் காலத்தில் சோழர் சிற்ப முறைப்படி கட்டப் பட்ட கோயில்கள் ஈழ மண்டலத்தில் எழுந்தன இது கல்வெட்டுக்களால் தெரிகிறது. அத்துடன் இராசராசன் தஞ்சையில் கட்டிய பெருவுடையார் கோயிலுக்குச் சோழர் ஆட்சியிலிருந்த ஈழநாட்டு ஊர்கள் சில நிவந்தமாக விடப்பட்டிருந்தன என்று அறிகிறோம்.

பொலன்னருவாக்குச் சோழர் இட்டபெயர் சனநாத மங்கலம் என்பது. குடியாட்சிதழுவி ஆண்டவன் என்ற முறையில் இராசராசனுக்குச் சனநாதன் என்ற விருதுப்பெயர் இருந்தது குடியாட்சிக்குத் தற்போது வழங்கும் புதுப்பெயரான ஜனநாயகம் என்ற தொடரை இவ் வழக்கு நினைவூட்டுகிறது.

மாந்தோட்டம் என்ற இலங்கை நகரம் சோழர் காலத்தில் இராசராசபுரம் என்று பெயர் பெற்றிருந்தது.

## கலையூர்ப் போர்: 1004

சோழர் படைத்தலைவன் அப்பிரமேயன் என்பவன் கலையூர் என்ற இடத்தில் ஒரு ஹொய்சள மன்னனை முறியடித்தான் என்று தெரியவருகிறது. ஹொய்சள மரபினர் பின்னாட்களில் கங்கர் ஆண்ட பகுதிகளை ஆண்ட வலிமை வாய்ந்த அரசராவர். ஆனால் இராசராசன் காலத்தில் அவர்கள் மிகச் சிறு மன்னராகவே இருந்திருக்கவேண்டும். அவர்கள் பெயரை நாம் தென்முட்டு வரலாற்றில் முதல் முதல் கேள்விப்படுவதே இக் கலையூர்ப் போரில்தான் என்று கல்வெட்டாராய்ச்சியாளர் திரு ஸீவெல் குறிப்பிட்டுள்ளார்.

கலையூர் என்பது தலைக்காட்டருகில் மேற்கு மலைத் தொடர் அடுத்துக் காவிரியின் தென்கரையில் இருந்த ஓர் ஊர்.

## சோழ சாளுக்கியப் போராட்டம்; தோனூர்ப் போர்: 1007

பாண்டிய பல்லவர் ஆட்சிக்கால இறுதியில் சாளுக்கிய அரசை விழுங்கி வளர்ந்த புதிய இராஷ்டிரகூடப் பேரரசு சோழப் பேரரசர் ஊழியில் சுந்தர சோழன் ஆட்சிவரை நிலவி, பின் சாளுக்கிய மரபினனான தைலப்பன் என்பவனால் வீழ்த்தப்பட்டது. அது முதல் இராஷ்டிரகூடப் பேரரசு ஆண்ட திசையில் மேலைச் சாளுக்கியர் லல்லாட்சி செலுத்தி

னர். அவர்கள் வடக்கே மாளவ நாட்டை ஆண்ட வல்லரசர் பாரமாரருடனும், தெற்கே சோழருடனும்இராசராசன் கால முதல் ஓயாத போராட்டத்துக்கு ஆளாயினர். சோழப் பேரரசுடன் இறுதிவரை போராடி அதனால் முற்றிலும் விழுங்கப் பெறுமல் இருந்த தென்னாட்டு வல்லரசு அது ஒன்றே. ஆனால் பேரரசின் தளர்ச்சியுடன் அதுவும் தளர்ச்சியுற்றுப் பிற்காலங்களில் வாரங்கல் (பழந்தமிழ் ஓர் அம்கல், ஒரு கல்)நகரிலிருந்து ஆண்ட காததீய மரபினர், வட கலிங்கத்து (ஒரிசா) கஜபதிகள், தேவகிரியாண்ட யாதவர் ஆகியவர் ஆட்சிப் பரப்புக்கு இடம் தந்தது.

இராசராசன் காலத்தில் மேலைச் சாளுக்கிய அரசனயிருந்தவன் இரண்டாம் தைலனின் மகனை சத்தியாசிரயன். அவன் கல்வெட்டுக்களும் தஞ்சைப் பெருவுடையார்கோயில் கல்வெட்டுக்களும் இராசேந்திர சோழனுல் நிகழ்த்தப்பட்ட மேலைச் சாளுக்கியப் படையெடுப்பைப் பற்றிக் கூறுகின்றன.

''சோழர் குலத்துக்கு அணியும், சோழன் இராசராச வித்தியாதரனுக்கு மகனும் ஆன நூர்மடிச் சோழ இராசேந்திர வித்தியாதரன் ஒன்பது இலட்சம் வீரர்கள் கொண்ட பெரும் படையுடன் படையெடுத்து வந்தான். பீசப்பூர் வட்டத்திலுள்ள தோனூர் வரை முன்னேறிப் பெரும் போர் ஆற்றினன். நாட்டைச் சூறையாடிப் பாழ்படுத்தினன். நகரங்களைக் கொளுத்தினன். இளங்குழவிகள், மறையோர் என்றும் பாராமல் கொன்றான். கன்னியரைக் கைப்பற்றிக் கவர்ந்து சென்றான்''—இவ்வாறெல்லாம் சாளுக்கிய ஹோட்டூர்க் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

இதில் சோழரை வித்தியாதரர் என்று கவிதைப் புராண மொழியில் கூறப்பட்டுள்ளது. இது சாளுக்கியர் மனிதரிடம் தோல்வி யடையவில்லை, மனித எல்லை கடந்த தேவகணத்தாரிடமே தோல்வி யடைந்தனர் என்ற உணர்ச்சியை உண்டு பண்ணுவதற்காகவேயாகும். அழிவும் மிகைப்படுத்திக்கூறப் பட்டுள்ளது. வாசகர் அனுதாபத்தைச் சாளுக்கியரிடம் திருப்புவதற்கான மிகை நவிற்சியுரையே இது என்னலாம். ஆனல் சோழர் தோனூர் வெற்றிக்கு இது சிறந்த சான்று. 'சத்தியாசிரயனை எறிந்து எழுந்தருளி' என்றுமட்டும் தஞ்சைக் கல்வெட்டுக் கூறுகிறது. ஆனல் தோனூர்ப் போரில் படைத் தலைவன் இராசேந்திரன் கட்டளைப்படி சத்தியாசிரயன் ஏறியிருந்த யானையைத் தாக்க முயன்று வீர மாள்வுற்ற வீரன் ஒருவன் நினைவாகப் பொற்பூக்கள் வழங்கப்பட்டிருந்தன. இவ் வீரன் பெயர் சுருதிமான் நக்கன் சந்திரன் என்ற இராசமல்ல முத்தரையன் என்பது. சோழர்கால வீரர் புலவராகவும், புல்

வர் வீரராகவும் இருந்தனர் என்பதையும் இச்செய்தி குறித்துக் காட்டுகிறது.

## சீட்புலி நாட்டு வெற்றி: 991

தெலுங்குச் சோழன் பீமன் ஆண்ட சீட்புலி நாடு, பாகி நாடு ஆகியவற்றைப் பராந்தகன் வென்றிருந்தான், ஆனால் சோழர் தொண்டை நாடிழந்தபின் அது மீட்டும் கைப்பற்றப் பெறவில்லை. இராசராச சோழன் அவற்றைக் கைப்பற்ற எண்ணினான். 991-ல் அங்கே ஒரு பெரும் படையை அனுப்பினான். படைத்தலைவனாயிருந்தவன் தஞ்சாவூர் வட்டத்துக் காருகுடியுடையான் பரமன் மழபாடியான் என்ற மும்முடிச் சோழன் ஆவன். தவிர, கீழைச் சாளுக்கிய நாட்டை இழந்து அதனை மீட்டும் பெறும் எண்ணத்துடன் சோழன் உதவிநாடி வந்திருந்த சக்திவர்மனும் அதில் ஈடுபட்டிருநதான். அவ் வாண்டிலேயே வெற்றி ஏற்பட்டு, சீட்புலி நாடும் பாகிநாடும் சோழப் பேரரசின் ஆட்சிக்கு உட்பட்டன.

## வேங்கை நாட்டு வெற்றி: 999

பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே கீழச்சாளுக்கியர் ஆண்ட வேங்கை நாட்டுப்பகுதியை அம்மராசன், பாடபன் என்ற இருவழியினர் இருபகுதிகளாக ஆண்டுவந்தனர். இருவழியினருக்கும் 925-முதல் ஏற்பட்ட சச்சரவின் பயனாக, 973-ல் இளையோன் வழியினரான பாடபனும் அவன் தம்பி தாழனும் நாடு முழுவதும் கைக்கொண்டனர். அதனை 27 ஆண்டுகள் ஆண்டனர். மூத்தவழி மரபினரான சக்திவர்மன் சோழனிடம் வந்து அடைக்கலம் புகுந்தான். 991-ல் சீட்புலி நாட்டு வெற்றியில் இச்சமயத்திலேயே அவன் பங்கு கொண்டான்.

999-ல் இராசராசன் சக்திவர்மனுக்கு உதவி செய்யும்படி வேங்கை நாட்டின் மீது படையெடுத்தான். போரில் இளைய மரபினரை வென்று, அவன் சக்திவர்மனையே வேங்கைநாட்டு வேந்தனாக முடிசூட்டினான். அவன் 999-லிருந்து 1011 வரை ஆண்டான். சக்திவர்மன் இளவல் விமலாதித்தான் இராசராசன் புதல்வியான குந்தவைப் பிராட்டியாரை மணஞ் செய்திருந்தான். ஆகவே சக்திவர்மனை முடிசூட்டும்போதே, அவனுக்குப்பின் அரசுரிமை விமாலதித்தனுக்கே என்ற உறுதி பெற்று, அவனுக்கே சோழன் சிற்றரசுப் பட்டமும் கட்டிவைத்தான். இதன் பயனாக 1011-ல் சோழ அரசன் மருமகனே கீழைச்சாளுக்கிய மன்னன் ஆனான்.

## முதற் கலிங்கப்போர்

கலிங்கம் என்பது கோதாவரியாற்றுக்கும் மகாநதிக்கும் இடையேயுள்ள கடற்கரைப் பகுதி ஆகும். இது கீழைச்சாளுக்கிய நாடான வேங்கைக்கு வடக்கேயுள்ளது. இங்கே கஞ்சம் மாவட்டத்தை அடுத்துள்ள மகேந்திரம் என்ற மலைக் குவடுகளில் பாதி தமிழ் மொழியிலும் பாதி சமஸ்கிருத மொழியிலும் வரையப்பட்ட இரண்டு கல்வெட்டுக்கள் உள்ளன. அவற்றின் மூலம் இராஜேந்திரனும் அவன் மைத்துனன் விமலாதித்தனும்சேர்ந்து குலூதன் என்ற ஓர் அரசனைவென்று அம்மலையில் வெற்றித் தூண் நிறுவினர் என்று அறிகிறோம். ஆனல் ஆட்சியும் ஆண்டும் அவற்றில் குறிக்கப்படாததால், காலம் கணித்துணர முடியவில்லை. முதலாம் இராசேந்திரன் மெய்கீர்த்தியில் அது குறிக்கப்படவில்லை. ஆகவே அது இராசராசன் காலத்தில், வேங்கை வெற்றிக்குப்பின் நிகழ்ந்திருத்தல் வேண்டும்.

## முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரம் அல்லது மாலத்தீவு, இலக்கத்தீவவெற்றிகள்: *1007*

இராசராசன் பெரு வெற்றிகளுள் கடைசியானது முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரம என்னும் தற்கால மாலத்தீவு வெற்றியேயாகும். இத்தீவுகள் தென்னாட்டுக்குத் தென்மேற்காகவும் இலங்கைக்கு மேற்காகவும இலக்கத்தீவத்துக்குத் தெற்காகவும் கிடக்கின்றன. தென்னாட்டுக் கடற்கரையிலிருந்தும் இலங்கைக் கடற்கரையிலிருந்தும் பன்னூற்றுக்கணக்கான கல் தொலைவில் கடல் நடுவில் அத் தீவுக்குழு அமைந்துள்ளது. முற்காலத்தில் அது ஒரு மலையாளக்கரை இஸ்லாமிய மன்னன் ஆட்சியிலும், தற்போது இலங்கை ஆட்சியிலும், இருக்கிறது.

தமிழ் நிலத்துக்கு வடக்கே கன்னடம், தெலுங்கு முதலிய தமிழ் திரிந்த, தமிழினத் திசைமொழிகளுடனே தெற்கேயும் தமிழ் திரிந்த, தமிழினத்திசைமொழிகள் நிலவிய பகுதிகளாக சிங்களமும, முந்நீர்ப் பழநதீவும் பழய உரை மேற்கோள்களில் குறிக்கப்படுகின்றன. கடல்கொண்ட குமரிநாட்டில் குமரியாற்றுக்குத் தெற்கேயிருந்த தமிழகப் பரப்பே அவை என்பதையும் அவ்வுரைகள் குறிக்கின்றன கன்னித் தென்கரைக் கடற் பழந்தீவம்' என்ற தெய்வச் சிலையார் உரைமேற்கோள் செய்யுளை இதற்குச் சான்றாகக் கூறலாம். இச்செய்யுள் தொல்காப்பியத்திற்கு முன்னிருந்த அகத்தியச் செய்யுள் என்றும் குறிக்கப்பட்டுள்ளது.அதுபோலப் பாண்டிநாடு 'கன்னி நாடு,'

'கன்னியாறு ஓடி வளப்படுத்திய நாடு' என்று குறிக்கப்படுகிறது. 'கன்னியாறு' என்பது வைகை, தாம்பிரவருணி போன்ற சிறிய ஆறு அல்ல. காவிரிக்கு ஒப்பாகவோ, அதனை விடவோ பெரிய ஆறாக அது இருந்திருக்க வேண்டும் என்னலாம். சிலர் தாமிரவருணியையும், சிலர் தென் திருவாங்கூரிலுள்ள ப்ழயாற்றையும் கன்னியாறாகவோ, கன்னியாற்றின் பகுதியாகவோ கொள்வதுண்டு. இலங்கையில் எதிர் திசையிலும் தாமிரவருணியின் தொடர்ச்சி இருந்திருப்பது நோக்க, பண்டைக் கன்னியாறு தற்போதைய தாமிர வருணியையும் பழயாற்றையும் கிளையாறுகாளாகக் கொண்டு இலங்கை நடுப் பகுதியினூடாக ஓடிக் குமரிநிலத்தின் வழி தென்கடலில் சென்று விழுந்திருக்க வேண்டும் என்று தோற்றுகிறது. இடைச்சங்ககால அலைவாய் அல்லது கவாட புரமும் முந்நீர்ப் பழந்தீவும் அவ்வாற்றின் கடல் முகத்தருகிலேயே இருந்திருக்கக் கூடும். தென்மதுரையைக் கரையில் கொண்ட பஃறுளியாறு இக்குமரியாற்றிலிருந்து நெடியோனால் வெட்டப் பட்ட ஒரு பெருங் கால்வாயாய் இருத்தல் வேண்டும் என்னலாம்.

பழந்தீவத்தின்மீது இராசராசன் படையெடுப்பதற்குரிய காரணம் சேரநாட்டவர்க்கு அத்தீவின் மக்கள் கொடுத்த தொல்லையாகவே இருக்கக்கூடும் என்று அறிஞர் பண்டாரத்தார் கருதியுள்ளார். சேரநாட்டுப் பகுதியில் வடக்கே கடம்பர் கடற் கொள்ளைக்காரர் மூலதளமாய் இருந்ததுபோல, இதுவும் இக்காலத்தில் கடற்கொள்ளைக்காரர் மூலதளமாய் இருந்திருக்க வேண்டும் என்றே தோன்றுகிறது. உலகில் தமிழர் பதின் கூற்று எண்மானம் (Decimal notation) பரவு முன் இருந்த அறுகூற்று, பன்னிரண்டன் கூற்று மானங்கள் (Sexagesimal System) இலக்கத்தீவ, மாலத்தீவப் பழங்குடியினத்தின் மொழியில் இருப்பதாக மொழி நூலறிஞர் கூறுகின்றனர்.

பழந்தீவு கடல்நடுவில் பலகல் தொலை கடந்திருந்ததால் நடுக்கடல் செல்லும் பெருங்கப்பல்கள் அடங்கிய பெருங்கடற்படை கொண்டே அதைத் தாக்க முடியும். இருபதாம் நூற்றுண்டின் இயந்திர முன்னேற்றங்களிடையேகூட இது ஒரு பெருங் கடற் செயலேயாகும். இத்தகைய போரை நடத்தத் தக்க முறையில் சோழரிடம் சேரரைப் போலவே ஆற்றல்மிக்க கடற்படை இருந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. வெற்றிக்குப்பின் இந்நடை முறையிலும், இதனிலும் விரிவான கடார வெற்றியிலும் கடல் வாழ்வில் தீரமுடைய சேரநாட்டுக் கடற்படை வீரரும் காந்தளூர்ப் போருக்குப்பின் சோழருக்கு உதவியிருத்தல் இயல்பே.

இலக்கத் தீவங்கள் என்று இந்நாளில் குறிக்கப்படும் தீவக்கூட்டங்களும் சோழர் காலங்களில் மாலத்தீவின் ஆட்சியிலேயே இருந்தன. ஆகவே சோழர் பழந்தீவு பன்னீராயிரத்தின் வெற்றியுடனே இலக்கத்தீவங்களின் வெற்றியும் இணைந்துள்ளது என்று தெரிய வருகிறது.

## இராசராசன் பாரிய வெற்றித் தொகுதி

ஆட்சித்திறத்தை ஒதுக்கி வைத்தால்கூட, இராசராசன் வெற்றிகள் மட்டுமே ஓர் ஆட்சியில் எந்தப் பேரரசனும் கண்டிராத அளவு வியத்தக்க வெற்றிகள் ஆகும் என்று துணிந்து கூறலாம். உண்மையில் ஹானிபல், சீசர், அலக்ஸாண்டர், நெப்போலியன் ஆகியோர்வெற்றிகளுடன் ஒப்பிட்டால்கூட, அது எவ்வகையிலும் மதிப்புக் கெடுவதல்ல, அவற்றை விஞ்சுவதேயாகும். ஆனால் அவன் மெய்க்கீர்த்தி ஏதோ ஒரு சிற்றரசன் வெற்றிகளைத் தொகுத்துச் சொல்லும் பாணியில் சுருக்கமாகவே உள்ளன.

''காந்தளூர்ச்சாலை கலமறுத் தருளி.
வேங்கைநாடும், கங்கை பாடியும்,
தடிகை பாடியும், நுளம்ப பாடியும்,
குடமலை நாடும், கொல்லமும், கலிங்கமும்,
முரண் தொழில் சிங்களர் ஈழமண்டலமும்,
இரட்டபாடி ஏழரை இலக்கமும்,
முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரமும் கொண்டு, தன்
எழில்வளர் ஊழியுள் எல்லாயாண்டும்
தொழுதக விளங்கும்யாண்டே, செழியரைத்
தேசுகொள் கோராச கேசரிவர்மன் ..''

வெற்றிகளுள் வியத்தகு வெற்றியாக இங்கே குறித்திருப்பது வடதிசை வெற்றிகளையோ கடல் கடந்த வெற்றிகளையோ அல்ல. அவை எல்லாம் ஒவ்வொரு ஆண்டு வெற்றிதான் என்றும், ஆட்சி முழுவதும் வென்று பெற்ற வெற்றி செழியரை அல்லது பாண்டியரை வென்று தேசு அதாவது புகழ் அழித்த வெற்றியே என்று இங்கே குறிக்கப்பட்டிருப்பது வியத்தற்குரியது. அக்காலத்திலும் தமிழர் பெரும் பகைவர் தமிழரே என்பதை இது சுட்டிக்காட்டுகிறது. பின்னாளில் சோழப் பெரும் பேரரசை மீண்டும் வென்ற பேரரசர் பாண்டியரே என்பதையும் இது நமக்கு நினைவூட்டுகிறது.

வாணகப்பாடி ஆண்ட தலைவருக்கு வானவன் என்றும், பாண்டி நாடாண்டவர்கட்கு மீனவன் என்றும். சாளுக்கியர் கீழ்ப்பட்டிருந்த பகுதி ஆண்டவருக்கு வல்லவர் என்றும், தென் பாண்டி நாடாண்டவருக்குத் தென்னவர் என்றும்,

கங்க நாடு ஆண்டவர்கட்குக் கங்கர் என்றும், இலங்கை நாடாண்டவர்கட்கு இலங்கேசன் என்றும், தொண்டை நாடாண்டவர்க்குப் பல்லவர் என்றும் பட்டங்கள் வழங்கிய அழகும், இராசராசவளநாடு (பாண்டி), மும்முடிச் சோழ மண்டலம் (இலங்கை), ஜெயங்கொண்ட சோழ மண்டலம் (தொண்டை நாடு) ஆகிய மண்டலப் பெயர்களும் இராசராசன் ஆட்சிக்குரிய அரசியல் தமிழ் வளம் காட்டும் தொடர்கள் ஆகும்.

**கண்கண்ட தமிழக வெற்றி உலாவீரன்:**

பாண்டி நாட்டில் பிறந்தவர்கள் தமிழ் வளர்த்த தண்ணளிப் பாண்டியர் பற்றி ஏனையவரினும் பெருமைப் படலாமாஞல், அத் தமிழுக்கு வானளாவிய பரிசில்கள் வழங்கிய தம் வானவர் ஏந்தல்கள் பற்றிச்சேரநாட்டில்பிறந்தவர்களும், அத் தமிழர் முழு வீறுகாட்டி உலகில் தமிழர் இனப்பெருமையைப் பொறித்த அணியணியான பெருஞ் சோழர் பட்டிகை காட்டிச் சோழ நாட்டில் பிறந்தவரும் தத்தம் தனிப்பெருமை கொண்டாடலாம்! முத்தமிழ் நாடாக விளங்கிய பண்டைத் தமிழரசுகள் ஒத்த தமிழ் நாடுகளாகவே திகழ்ந்த முத்திறத் தேசியங்களே என்னலாம்

இம் முத்திசைத் தேசியங்களின் போட்டியாலேயே பண்டைத் தமிழகம் கிட்டத்தட்ட அழிந்து, அதன் மறுமலர்ச்சியாகத் தோன்றிய இடைக்காலத் தமிழகமும் கிட்டத்தட்டத் தன் பெருமை சீர்குலைக்கப் பெற்று நலிந்துள்ளது என்னலாம். இன்று கூடத் தமிழர் தமிழருடன் ஆற்றும் போட்டியே தமிழகத்தையும் அடிமைக் குழியில் அமிழ்த்தி வைத்துக் கொண்டிருக்கிறது என்பது தவருகாது.

இராசராசன் வரலாறு மட்டும் படித்த எவரும் இதற்கு மேல் ஒரு வீர மன்னன் வெற்றியைக் கற்பனையிலும் புனைந்து காணல் அரிது என்று கருத இடமுண்டு. ஆனல் அவனைக் கடந்த வெற்றி வீரனுக விளங்கியவன் அம் மும்முடிச் சோழன் பெற்ற வெற்றிக்களிறுகிய இராசேந்திரனே! இராசேந்திரன் இராசராசன்மகனுக, அவனை அடுத்து ஆண்ட பெருஞ் சோழனுயிரா விட்டால், பெருஞ் சோழர் வரிசையில்கூட அவனுக்கு இடம் போதாது. அவன் வெற்றிகள் சோழகமும் தமிழகமும் கண்டிராத, இன்றுகூடக் கனவு காணுதவெற்றி என்னலாம். அவன் புகழில் பெரும்பாதி தந்தை யாட்சியில், தந்தைபுகழில் புதையுண்டு விட்டாலும் தந்தை தனிப்புகழோ அவன் தனிப்புகழோ அதனல் குறைபடவில்லை. இரண்டும் சோழப் பெருமரபின் இரு வேறு திசைப் புகழாகவே இயல்கின்றன.

கற்பனையுலகில் தமிழர்களுக் கண்ட விக்கிரமாதித்தன் வெற்றி முழுதும் கட்டுக் கதையல்ல, இராசேந்திரன் வெற்றியின் ஒரு நிழலே என்று கூறலாம்.

முதலாம் இராசேந்திரன் பட்டத்துக்கு வந்த ஆண்டிலேயே முதலாம் இராசராசனின் வெற்றிகளின் பயனாகச் சோழப் பேரரசின் எல்லை தற்காலத் தமிழகம் முழுவதையும் தற்காலக் கேரளம், ஆந்திரம் ஆகியவற்றையும் கன்னடத்தின் தென்பால் உள்ள பெரும் பகுதியையும் கிட்டத்தட்ட இலங்கை முழுவதையும் உள்ளடக்கியிருந்தது. அதை இமயம் வரை, கடாரம் வரை கொண்டு சென்று, நெடியோனது பழம் பாண்டித் தொல் கனவைச் சோழரின் புது நனவாக்கியவன் இராசேந்திரனேயாவன்.

**சோழ சாளுக்கியப் போராட்டம்:**
**இடைதுறை நாடு வனவாசி பன்னீராயிர வெற்றி:**
**கொள்ளிப்பாக்கை, மண்ணைக் கடக வெற்றிகள்: 1008**

இராசேந்திரன் காலத்துக்குரிய சோழ சாளுக்கியப் போராட்டத்தின் முதற் பெருங்கட்டம் அவனது மூன்றாவது ஆண்டு மெய்க்கீர்த்தியிலேயே இடம் பெறுகிறது. ஆகவே அதன்பெரும்பகுதி அவன் இளவரசனாவதற்கு முன்னோபின்னோ இராசராசன் ஆட்சிப் பகுதியில் நிகழ்ந்த செயல்களாகவே இருக்க வேண்டும். இப்போரில் இராசேந்திரன் எதிரியாகக் குறிக்கப்படும் மன்னன் சத்தியாசிரயன் ஆட்சி 1008-ம் ஆண்டுடன் முடிவதால், இவையும் அவ்வாண்டுக்கே உரிய செய்திகள் ஆக வேண்டும்.

இவ் வெற்றிகளுக்குரிய இடங்களில் இடைதுறை நாடு என்பது சாளுக்கிய கல்வெட்டுக்களில் இடத்தோர் இரண்டாயிரம் என்று குறிக்கப்படும் நிலமே. அது கிருஷ்ணா, துங்கபத்திரா ஆறுகளுக்கு இடைப்பட்ட நிலம் ஆகும். தற்போது அது பம்பாய் மாகாணத்திலுள்ள இரேய்ச்சூர் மாவட்டத்தை உள்ளடக்கிய பகுதி ஆகும். இது போல வனவாசி என்பது கல்வெட்டுக்களில் வனவாசி பன்னீராயிரம் எனப்படுவது ஆகும். அது மைசூரின் வடமேற்குப் பகுதியும் அதற்கு வடக்கிலுள்ள கோவாப்பகுதி அல்லது வடகொங்கானக் கரையும் சேர்ந்த இடமாகும். பண்டைச் சேரர்காலத்தில் அது கடம்பர்களின் தாயகமாய் இருந்தது. பின்னாட்களில் அது வாணர்கள் அல்லது பாணர்களின் தாயகமாயிற்று, வனவாசி என்ற பெயர் பாணவாசி. பனவாசி என்பவற்றின் மருஉவே.

கொள்ளிப்பாக்கை என்பது ஒரு நகரம். அதுவே பின்னாட்களில் பாமினி மரபினரின் தலைநகரமாகக் குல்பர்கா என்ற பெயர் பெற்றிருந்தது. சோழர் காலத்திலும் அது கொள்ளிப் பாக்கை ஏழாயிரம் என்ற பரப்பின் தலைமை நகரமாகவே இருந்தது. அந்நகரம் தற்கால ஹைதராபாத் நகருக்கு நாற்பத்தைந்து கல் வடகிழக்கிலுள்ளது. சாளுக்கியர் பேரரசிலும் அது துணைத் தலைநகரமாய் இருந்தது.

மண்ணைக் கடகம் என்பது இராஷ்டிரகூடப் பேரரசுக்கும், அதைத் தொடர்ந்து இராசேந்திர சோழன் காலம் வரை இருந்த மேலைச் சாளுக்கியருக்கும் உரிய தலைநகரமேயாகும். அது அக்காலத்தில் மானியகேதம் என்றும் வழங்கிற்று. இந் நாளில் அது மால்கேட் என்றும் வழங்கப் பெறுகிறது.

இவ் வெற்றிகளால் மேலைச் சாளுக்கியப் பேரரசின் தென் பகுதியான வனவாசியும், இரட்டபாடி ஏழரை இலக்கமும் சோழ பேரரசில் இணைந்தன. கொள்ளிப் பாக்கைப் போரே இப் பெரும் பரப்பை வசப்படுத்தப் பெரிதும் உதவி யிருக்கக் கூடும். சாளுக்கியரின் தென் தலைநகரான அந் நகரம் இப் போரில் முற்றிலும் அழிக்கப்பட்டது. ஆனால் சோழர் தென் திசை வெற்றியுடன் நில்லாமல் தலை நகரான மண்ணைக் கடக் கத்தையும் அழித்தனர். சோழரால் அழிவுற்றபின் அது கிட்டத்தட்ட வாதாபி, அனுராத புரம் கதியை அடைந்தது. ஏனெனில் அது மீண்டும் சாளுக்கியப் பேரரசின் தலைநகராகவோ, வேறு எந்தப் பேரரசின் தலை நகராகவோ அமைய வில்லை. மேலைச்சாளுக்கியர் அதன் பின் மண்ணைக்கடகத் துக்கு நாற்பத்தெட்டுக் கல் வடகிழக்கிலுள்ள கலியாணபுரத் தைத் தம் புதுத் தலைநகராக்கிக் கொண்டனர்.

இராசேந்திரன் வென்ற சாளுக்கியப் பேரரசின் பகுதி களில் துங்கபத்திரைக்குத் தெற்கிலுள்ள பகுதியே நிலையாகச் சோழப் பேரரசில் இருந்தது. இடைதுறை அல்லது இடீரய்ச் சூர்ப் பகுதியைச் சாளுக்கியர் விரைவில் மீட்டு வெற்றி பெற்ற னர் என்பதை அங்குள்ள கல்வெட்டுக்கள் காட்டுகின்றன. ஆனால் துங்கபத்திரை ஆறு மேலைச் சாளுக்கிய, சோழப் பேரரசுகளின் நிலையான இடை யெல்லையாயிற்று.

> ''நெடிதுஇயல் ஊழியுள் இடைதுறைநாடும்,
> தொடர்வன வேலிப் படர்வனவாசியும்
> சுள்ளிச்சூழ்மதில் கொள்ளிப்பாக்கையும்
> நண்ணற்குஅரு முரண்மண்ணைக் கடக்கமும்''

என்று இராசேந்திரன் மெய்க்கீர்த்தி இவ் வெற்றிகளைக் குறிக் கிறது.

ஈழப் பெரும் போர்: 1017

இராசராசன் காலத்து ஈழப்போரில் ஐந்தாம் மயிந்தன் நாட்டாட்சியைச் சோழரிடம் விட்டுவிட்டு, ரோகண நாட்டு மலைப் பக்கங்களில் சென்று ஓடி ஒளிந்துகொண்டான். அவன் சில ஆண்டுகளுக்குப் பின் வெளிவந்து படை திரட்டிச் சோழர் ஆட்சியை எதிர்க்க முற்பட்டான். இதன் பயனாக 1017-ல் முதலாம் இராசேந்திரன் மீண்டும் ஈழநாட்டுக்குப் படையெடுத்துச் சென்று போர் தொடுத்தான்.

இத்தடவை சோழர் வெற்றி முன் என்றும் இல்லாத முறையில் நிறைவெற்றியாயிற்று. ஏனெனில் சோழர் ஐந்தாம் மயிந்தனைப் போரில் முறியடித்துச் சிறைப்படுத்தினர். அவனைச் சோழ நாட்டுக்கே அனுப்பிக் காவலிலும் வைத்தனர். அத்துடன் இராசேந்திரன் அவன் முடியையும் அவன் அரசியணிந்த முடியையும் கைக்கொண்டான். தவிர, முன் முதலாம் பராந்தகன் ஆட்சியில், பாண்டியன் ஈழ அரசனிடம் அடைக்கலமாக வைத்துவிட்டுச் சென்ற சுந்தர முடியும்இந்திரனாரமும் கூட இப்போது சோழன் கைவசமாயின. ஈழத்தீவு முழுவதும், இராசராசன் ஆட்சியில் சோழர் ஆட்சியுட்படாதிருந்த ரோகணநாடு உட்பட, சோழர் ஆட்சிக்கு உட்பட்டது.

இத்தகைய ஒரு வெற்றியை உளத்தில் கொண்டே இராசராசன் தன் இலங்கைத் தலைநகரைத் தீவின் மையஇடமாகிய பொலன்னருவா அல்லது சனநாதமங்கலத்தில் தேர்ந்தமைத்தான் என்பது இச் சமயம் இங்கே குறிப்பிடத்தக்கது ஆகும்.

"பொருகடல் ஈழத்து அரசர் தம் முடியும்,
ஆங்கவர் தேவியர் ஓங்கு எழில் முடியும்,
முன் அவர் பக்கல் தென்னவன் வைத்த
சுந்தரமுடியும் இந்திரன் ஆரமும்
தெண்டிரை ஈழமண்டல முழுவதும்

என இவ் வெற்றிகளை இராசேந்திரன் மெய்க்கீர்த்திகள் விளக்கமாக அறிவிக்கின்றன.

ஈழவெற்றிக்குப்பின் நிகழ்ந்த சில நிகழ்ச்சிகளை இலங்கை மகாவம்சோ குறித்துள்ளது.

சிறைப்பட்ட இலங்கைவேந்தன் சோழருக்குப் பணிந்து சோணாட்டிலேயே 1029 வரை வாழ்ந்தான். ஆனால் இலங்கை மக்கள் சிலர் சோழருக்குத் தெரியாமலே அவன் புதல்வன் காசிபனை மறைவில் வைத்து வளர்த்து வந்தனர். தந்தை இறந்தபின் அவன் தன் ஆதரவாளர் உதவியால் படை திரட்டிச் சோழராட்சியை வென்று, விக்கிரமபாகு என்ற பெயருடன் அப்பகுதியை 1029 முதல் 1042 வரை ஆண்டான்.

## பாண்டிய, சேரநாட்டு நிகழ்ச்சிகள் 1018, 1019

சில கல்வெட்டுகள் இராசேந்திரன் சேரநாட்டில் படையெடுத்தானென்றும், திருவாலங்காட்டுச் செப்பேடுகள் அவன் பாண்டிநாட்டிலும் பாண்டியனை ஓட்டி நாட்டைக் கைப்பற்றினான் என்றும் கூறுகின்றன. ஆனால் இவை விளக்கமற்ற குறிப்புக்கள் ஆகும். புதுச்சேரி யடுத்த இராசேந்திரன் பத்தாம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்றே அதை விளக்கமாகக் கூறுகிறது.

நாட்டாட்சி இழந்த பாண்டிய மரபினர் அடிக்கடி வெளி வந்து தொல்லை கொடுத்துக்கொண்டிருந்தனர். இதனை ஒழிக்க இராசேந்திரன் ஒரு புதுத்திட்டம் வகுத்தான். கிளர்ந்தெழுந்த பாண்டியனை ஓட்டியபின், அவன் தன் மக்களுள் ஒருவனையே பாண்டிநாட்டில் தன் அரசப்பிரதிநிதியாக நிலையாக அமர்த்தி விட எண்ணினான். இப்புதல்வனுக்கு அவன் சோழ பாண்டியன் என்ற பதவிப் பட்டத்துடன், பாண்டியன் மரபுப்படி சடையவர்மன் என்ற ஆட்சிப் பெயரையும் சேர்த்து, சடையவர்மன் சுந்தர சோழ பாண்டியன் என்ற விருதுப் பெயர் அளித்தான்.

சோழர் மாறிமாறிப் பரகேசரி, இராசகேசரி என்று தொடர்ச்சியாக ஆட்சிப் பட்டம் கட்டிக்கொண்டதுபோல, பாண்டியரும் மாறவர்மன் சடையவர்மன் என்று மாறிமாறிப் பட்டம் கட்டிக்கொண்டு வந்தனர். தன் மகனையே சடையவர்மன் என்ற பட்டம் ஏற்கச் செய்வதன் மூலம் பாண்டியர் மரபை நிலையாகச் சோழரின் கிளைமரபாக்க இராசேந்திரன் எண்ணினான்.

சோழ பாண்டியர் அரசிருக்கைக்காகவும் விழாவுக்காகவும் இராசேந்திரன் மதுரைமாநகரில் மிகப் பாரிய அளவில் ஒரு மணி மாடமாளிகை கட்ட ஏற்பாடு செய்தான். அதன் பாரத்தால் பாரே அதிர்ந்ததென்று கல்வெட்டுக்கள் அதைப் பாரித்துப் புகழ்கின்றன. அது கட்டி முடிந்ததும் இராசேந்திரன் 1018-ல் தன் மகனுக்குச் சடையவர்மன் சுந்தரச்சோழ பாண்டியன் என்ற பட்டமளிக்கும் விழாவைப் பேராரவாரத்துடன் மதுரையில் நடத்தினான்.

அடுத்த ஆண்டில் சேர நாட்டையும் சோழ பாண்டியன் வசமே ஒப்படைத்துவிட இராசேந்திரன் எண்ணினான். சேர நாட்டு ஆட்சி மரபுக்குரிய முடியும் சின்னங்களும் பரசுராமனால் சாந்திமத் தீவுகளில் ஒரு வெல்ல முடியாத கோட்டையில் வைத்துக் காக்கப்பட்டன என்று அந்நாளில் கூறப்பட்டது. இராசேந்திரன் சாந்திமத் தீவைக் கைப்பற்றி அதிலுள்ள சேரர் முடியையும் மாலையையும் கைக்கொண்டான்.

எறிபடைக் கேரளன் முறைமையில் சூடும்
குலதனமாகிய பலர் புகழ் முடியும்,
செங்கதிர் மாலையும், சங்கு அதிர் வேலைத்
தொல்பெருங்காவல் பல் பழந்தீவும்,
செருவில் சினவி இருபத் தொருகால்
அரசுகளைகட்ட பரசுராமன்
மேவருஞ் சாந்திமத் தீவு அரண் கருதி
இருத்திய செம்பொன் திருத்தகு முடியும்

என்று மெய்க்கீர்த்தி யடிகள் இவற்றைக் குறிக்கின்றன.

இங்கே பல் பழந்தீவு வேருகவும், சாந்திமத் தீவு வேருகவும், சேரர் முடி வேருகவும், பரசுராமன் வைத்த செம்பொன் முடி வேருகவுமே குறிக்கப்பட்டுள்ளன.

பல்பழந்தீவு என்பதை இலக்கத் தீவக்கூட்டம் என்று கொள்வர் திரு சீவெல். சாந்திமத்தீவு அராபிக்கடலிலிருந்த ஒரு தீவாதல் வேண்டும் என்பர் அறிஞர் பண்டாரத்தார்.

## சோழ சாளுக்கியப் போராட்டம் II : பளகாம்வேப் போர் 1019 : முசங்கிப்போர் 1020

மேலைச்சாளுக்கிய அரசனை ஐந்தாம் விக்கிரமாதித்தனுக்குப்பின் அவன் இளவல் சயசிம்மன் பட்டத்துக்கு வந்தான். தந்தையும் தமயனும் இழந்த நாடுகளை அவன் சோழருடன் போர் செய்து திரும்பவும் பெற்ருன் என்று பளகாம்வேயிலுள்ள 1019-ம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று கூறுகிறது. அப்பகுதியில் அவன் சோழர் எல்லைப்படைகளை வென்று இரட்டைபாடி ஏழரை இலக்கம் சார்ந்த வடமேற்கு மைசூர், பெல்லாரிப் பகுதிகளைக் கைக்கொண்டிருக்க வேண்டும் என்று தெரிகிறது.

அடுத்த ஆண்டில் முயங்கி அல்லது முசங்கியில் நடைபெற்ற போரில இராசேந்திரன் இரட்டைபாடி ஏழரை இலக்கத்தை மீட்டுப் பெற்ருன். சயசிம்மன் ஓடி ஒளித்துக் கொண்டான். அவன் நிதிக்குவைகளை வாரிக்கொண்டு இராசேந்திரன் மீண்டான்.

பயங்கொடு பழிமிக முயங்கியில் முதுகிட்டு
ஒளித்தசய சிங்கன் அளப்பரும் புகழொடு
பீடியல் இரட்டபாடி ஏழரை
இலக்கமும், நவநிதிக் குலப்பெரு மலைகளும்

பெற்றனன் என்று மெய்க்கீர்த்தி புகல்கின்றது.

இப்போர்கள் துங்கபத்திரை எல்லையை நிலையாக்கும் போர்களாக மட்டுமே இருந்தன. மேலைச்சாளுக்கியர் அது

கடந்து தெற்கிலும், சோழர் அது கடந்து வடக்கிலும் வென்றனராயினும், இரண்டும் நீடிக்கவில்லை.

**சோழர் வடதிசைப் படையெழுச்சி : 1022—23**

இராசராசன் வெற்றிகளாலும் பத்தாம் ஆட்சி ஆண்டு வரை இராசேந்திரன் ஆற்றிய போர்களாலும் இராசராசன் காலத்துப் பேரரசின் எல்லை முழுதும் நிலையான எல்லையாயிற்று. பேரரசு வெளிநாட்டுப் போர்களுக்கு மூலதளமாகுமளவு நிலையான வலுப்பெற்றது. இதன் பின்னரே இராசேந்திரனுக்கே யுரிய தனி வெற்றிகள் தொடங்குகின்றன. 'பூர்வ தேசமும் கங்கையும் கடாரமும் கொண்ட கோப்பர கேசரி வர்மன்' என்ற அவன் நீண்ட விருதுப்பெயர் இவ்வெற்றிகளை ஒரே தொடர் வெற்றியாகக் குறித்துள்ளது. இவைகூட அவன் ஆட்சியில் ஐந்து ஆண்டுகட்கு மேல் பிடிக்கவில்லை என்பது வியப்புக்குரிய செய்தியாகவே உள்ளது. ஏனெனில் அது வடதிசையில் கங்கை வரை சென்று அடைந்த பல நில வெற்றிகளையும், அதன்பின் கடல் கடந்து கடாரம் வரை சென்று அடைந்த பல கடல் வெற்றிகளையும் உள்ளடக்குகின்றது.

வடதிசை வெற்றி 1022, 1023 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும், கீழ்திசை வெற்றி 1025-ம் ஆண்டிலும் முடிவு பெற்று விட்டதாகத் தோற்றுகிறது.

இவ்விரு வெற்றிகளைப்பற்றித் தமிழர் அந்நாளிலேயே பெருமைகொண்டிருந்தனர் என்பதில் ஐயமில்லை. கல்வெட்டுக்கள் சற்று விளக்கமாகவே இருந்தாலும், மற்றவெற்றிகளைப் போல இவற்றையும் தொகுத்தே கூறுகின்றன. விளக்கம் தருவதற்குரிய இலக்கியங்களும் இக்காலப் பிரிவுக்குக் குறைவே. சுந்தர சோழன் கால இலக்கியம்போல இக்கால இலக்கியமும் மிகுதி அழிவுற்றிருக்கலாம். கலிங்கத்துப் பரணியோ, மூவருலாவோ தொல்பழ நிகழ்ச்சிகளாகவே இவற்றையும் குறித்துச் செல்கின்றன. வெளிநாட்டுப் புறச் சான்றுகளே இவற்றைத் துலக்கப் பெரிதும் உதவியுள்ளன. ஆனால் போதிய அளவு வட இந்திய வரலாறு ஆராய்பவர் இவ்வகையில் உதவ முடியவில்லை. ஏனெனில் அவர்கள் கீழ் திசையிலேயே பொதுவாகவும், தமிழினத்திலே சிறப்பாகவும் அக்கரையற்றவர்கள். நாட்டு மக்கள் சார்பில் நின்று வரலாற்றை நோக்காமல், அயலினத்தவர், அயல்நாட்டவர், மேனாட்டவர் கண்கொண்டு அயலார் வரலாறாகவே அதைக் காண்பவர்கள் ஆகியுள்ளனர்.

வடதிசைச் சிந்து கங்கைவெளி வரலாறு அயற்படையெடுப்பாளர், அயலாட்சியாளர் வரலாறாகவே கருதப்பட்டு

வருகிறது. கஜினிமாமூது பதினெட்டுத் தடவை படையெடுத்துக் கோயில்களை பிடித்துக் கோயில் செல்வங்களைக் கொள்ளை கொண்ட நிகழ்ச்சிகளில் ஆர்வம் காட்டி ஆராயும் வடதிசை ஆராய்ச்சியாளர், அதே சமயம் நடைபெற்ற, ஒருவேளை கஜினி மாமூதின் படையெடுப்புடனேயே மோதிக்கொண்ட சோழப் படையெடுப்பில் மட்டும் அக்கறை காட்டாதிருப்பது வியப்புக்குரிய செய்தியேயாகும்.

வடதிசைப் படையெழுச்சிக்குப் பெயரளவில் காரணமாகக் கூறப்படுவது, புதிய சோழர் தலைநகரான கங்கைகொண்ட சோழபுரத்தைத் திருநிலைப்படுத்துவதற்குக் கங்கை நீர் கொண்டுவர இராசேந்திரன் விரும்பினான் என்பதே. இவ்வகையில் பண்டை முத்தமிழ் அரசர் போல, கரிகாலனைப் போல, வெற்றி வீரனாக உலாவரவேண்டும் என்ற ஆர்வமே முதன்மையாய் இருந்திருத்தல் கூடும். இவற்றைத் தாண்டிய நெடியோன் புகழ் அணிமைக் காலத்தில் மறக்கப்பட்டிருப்பினும், அன்று உயிர் மரபாய் இலங்கி யிருக்கக்கூடும். ஏனெனில் நெடியோன் காலத்திலிருந்து தென்கிழக்காசியாவில் 'சிரீமாறமரபு' அன்றுவரையும், 16-ம் நூற்றாண்டு வரையும், நிலவிற்று என்று அறிகிறோம். வடதிசை நில வெற்றிஉலா மட்டிலுமன்றிக் கீழ்திசைக் கடல்வெற்றி உலாவிலும் இந் நெடியோன் புகழே அவனைத் தூண்டியிருக்கக் கூடும்.

மெய்க்கீர்த்தி தரும் வடதிசை வெற்றிப் பட்டியல் மிக நெடு நீளமானதாகும். தனித்தனி வெற்றிகளைக் காண்பதன் முன் அதனைக் கருத்தில் கொள்ளுதல் நலமாகும்.

விக்கிரமவீரர் சக்கரக்கோட்டமும்,
முதிர் படவல்லை மதுரை மண்டலமும்
காமிடை வளைஇய நாமணைக் கோணமும்,
வெஞ்சினவீரர் பஞ்சப் பள்ளியும்,
பாசடைப் பழன மாசுணி தேசமும்
அயர்வில் வண்கீர்த்தி ஆதிநகர் அகவையில்
சந்திரன் தொல்குலத்து இந்திரரதனை
வினை அமர்க்களத்துக் கிளையொடும் பிடித்துப்
பலதனத்தொடுநிறை குலதனக்குவையும்,
கிட்டரும் செறிமிளை ஒட்டவிஷயமும்,
பூசலர்சேரும்நற் கோசலநாடும்,
தன்மபாலனை வெம்முனைஅழித்து
வண்டுஉறைசோலை தண்டபுத்தியும்,
இரணசூரனை முரண்அறத் தாக்கித்
திக்குஅணை கீர்த்தித் தக்கணலாடமும்
கோவிந்த சந்தன் மாஇழிந்து ஓடத்

தங்காத சாரல் வங்காளதேசமும்
தொடுகழல் சங்குகொடு அடல் மகிபாலனை
வெஞ்சமர் வளாகத்து அஞ்சுவித் தருளி
ஒண்திறல் யானையும் பெண்டிர் பண்டாரமும்,
நித்தில நெடுங்கடல் உத்தரலாடமும்
வெறிபுனல் தீர்த்தத்து எறிபுனல் கங்கையும்

இதில் நாட்டுப் பெயரும் நகரப் பெயருமாக 12-ம் அரசர் பெயர்களாக 3-ம் தரப்பட்டுள்ளன.

இக்காலம் தென்னாட்டளவு வடநாட்டில் நாட்டாட்சி முறைகளோ, வரலாறோ பெரிதும் இல்லாத காலம். அத்துடன் மேனாட்டு, வடநாட்டு ஆராய்ச்சியாளர்கள் இந்தப் பெயர்களைத் தென்னாட்டு எல்லையருகிலேயே தேடவேண்டும் என்பதிலே முழுக்கவனம் செலுத்தியுள்ளனர். இக்கால வடநாடு—தென்னாட்டுத் தொடர்பை உணர்ந்து விளக்க இவை பெருந் தடைகளாய் உள்ளன. வடநாட்டு மக்களும் தென்னாட்டு மக்களும் வேறுவேறு இனத்தவர், வெறுவேறு நாகரிகத்தவர் என்ற உள்ளார்ந்த கருத்தும், அவற்றுள் தென்னாட்டு மக்களும் மக்கள் இனமரபும் துடைக்கப்படவேண்டும என்ற ஆர்வமுமே இவற்றுக்கு வாய்விடாக் காரணங்களாக உள்ளன.

இச் சூழல்களிடையே வரலாற்றாசிரியர்கள் தரும் ஒளியே கூட இராசேந்திரன் வெற்றிகளின் அளவை விளக்க ஓரளவு போதியன என்னலாம்.

வடதிசைப்போர் 1. சக்கரக் கோட்டப் போர் :

சோழர் காலத்துக்கு நெடுங்கால முற்பட்ட உரை மேற்கோள் பாடல்களிலேயே சச்கரக்கோட்டம் என்ற பெயர் காணப்படுகிறது. அத்துடன் தமிழகத்திலுள்ள இடப்பெயர், மலைப் பெயர், ஊர்ப்பெயர்கள் பல கலிங்கப்பகுதியிலும் வங்கத்திலும் சிந்து ஆற்றங்கரையிலும் மிகப் பழங்காலத்திலிருந்தே காணப்படுகின்றன. இவற்றின் தொடர்பு இன்னும் விளங்கவில்லை. இவை நெடியோன் காலத்திற்கு இப்பாற்பட்ட தொடர்புகளாயிருக்க இடமுண்டு. ஏனெனில் இதே தொடர்புகள் தொலைத் தென்கிழக்காசியாவிலும் காணப்படுகின்றன.

இராமாயணக் கதையில் வரும் சித்திரக் கூடம் சக்கர கோட்டமே எனப்படுகிறது.

சோழர் காலச் சக்கரக்கோட்டம் இந்நாளைய இந்திய மாநிலத்தின் நடுமாகாணத்தில் விசாகப்பட்டணம் மாவட்டத்துக்கு வடமேற்கிலுள்ள பஸ்தார்த் தனியரசில் உள்ள ஒரு கோட்டை நகர் என்று கருதப்படுகிறது.

'பஸ்தர்'ப் பகுதியில் தம்மை நாகர் என்றும் போக புரத்தரசர் என்றும் குறித்துக்கொண்ட அரசர் கால்வழியினர் 11-12-ம் நூற்றுண்டில் இருந்தனர். 'மாசுணி' (பாம்பு) என்பது நாகர் குறித்த பேராதலால், மாசுணி தேசம் என்பது அவர்கள் ஆண்ட பகுதியாகவே இருக்கவேண்டும் என்று மதிப்பிடப்படுகிறது.

மதுரை மண்டலம், நாமணைக் கோணம், பஞ்சப்பள்ளி ஆகியவையும் இந்த எல்லை யருகிலேயே இருக்க வேண்டுமென்று ஆராய்ச்சியாளர் ஊகிக்கின்றனர்.

மதுரை மண்டலம் யமுனைக்கரை மதுரையை நினைவூட்டுகிறது. ஆனால் சோழ எல்லையிலிருந்து அது நெடுந்தொலைவானதனால், ஆராய்ச்சியாளர் மதுரை மண்டலம் அதுவாயிருக்கக்கூடும் என்று கருதவில்லை. நாமணைக்கோணம் என்பது பஞ்சப்பள்ளி அருகிலேயே இருக்கவேண்டும் என்பதும் ஊகமேயாகும். இவை வருங்கால ஆராய்ச்சிகளாலன்றித் தெளியக்கூடாதவை.

வடதிசைப் போர் 2. ஆதிநகர்ப் போர் :

ஆதிநகர்வெற்றியின் பயனாகவே ஒட்டர தேசமும் கோசலமும் கைப்பற்றப்பட்டன.

ஒட்டர தேசம் என்பது தற்கால ஒரிசா மாகாணம்.

கோசலம் என்பது இராமாயண இராமனுக்குரிய கங்கைக்கு வடகரையிலுள்ள கோசலத்தையே நினைவூட்டுவது. அதையே இயல்பாகக் குறிப்பது. ஆனால் இது கங்கை கடப்பதற்கு முன் கூறப்பட்டதாதலால், கங்கைக்குத் தெற்கில் ஒரிசாவை ஒட்டிக் கிடக்கும் மகாகோசலம் அல்லது தென் கோசலம் என்று ஆராய்ச்சியாளர் ஊகிக்கின்றனர்.

இப்போர் வெற்றியிலேயே இந்திரரதன் முறியடிக்கப்பட்டதாகவும் அறியப்படுகிறது. தென் கோசலமும் ஒட்டர தேசமும் ஆண்டவன் அவனே எனவும் கணிக்கப்படுகிறது. தாரா நகரத்தை ஆண்ட பேரரசன் தன் எதிரிகளுள் ஒருவனைக் குறிக்கும் இந்திரரதனே இவனா யிருக்கவேண்டும் என்று வரலாற்றாசிரியர் சிலர் ஊகிக்கின்றனர்.

வடதிசை வெற்றி 3. தண்டபுத்திப் போர் :

தண்டபுத்திப் போர் கங்கையாறு கடந்தபின் நடைபெற்றது. கங்கை யாற்றினுள் வரிசையாக யானைகளைப்பாலம் போல நிறுத்தி அவற்றின் மீதே சோழப் படைகள் ஆற்றைக் கடந்தன என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

தண்டபுத்தி என்பது தற்கால வங்க மாகாணத்தின் மிதுனபுரி மாவட்டப்பகுதி என்று கூறப்படுகிறது. அதனை ஆண்டவன் தர்மபாலன்.

வடதிசை வெற்றி 4. தக்கணலாடம்

கங்கையின் தென்புறமுள்ள வங்க, பீகார்ப் பகுதிகளின் ஒருகூறு இது என்று கருதப்படுகிறது. இதனை ஆண்டவனே இரணசூரன். கூர்ச்சரத்தின் (குஜராத்தின்) தென்பகுதி இது என்பாரும் உண்டு.

வடதிசை வெற்றி 5. வங்காள தேசம்:

இதனை ஆண்டவன் கோவிந்தசந்தன் அல்லது கோவிந்த சந்திரன்.

வடதிசை வெற்றி 6. உத்திரலாடம்:

இது கடற்கரையிலிருந்தது. இதையும் கங்கைக்குத் தென் கரையிலுள்ள பகுதியே என்பர் ஆராய்ச்சியாளர். இதனைக் கூர்ச்சரம் (குஜராத்) வடபகுதி என்பவரும் உண்டு.

'தொடுகடல் சங்கு கொடட்டல் மகிபாலனை' என்ற மெய்க் கீர்த்தி வரியைச் 'சங்குக் கோட்ட மகிபாலனை' என்று வாசிக்க நேர்ந்ததன் மூலம் 'சங்குக் கோட்டப் போர்' என்று ஒரு போரைக் கருதி யுள்ளனர், திரு சீவெல் முதலிய வெளிநாட்டு ஆசிரியர், இடைமிகும் ஒற்றுக்கள் தமிழ்த் தொடர்களைச் சரி வரப் பிரிக்க எவ்வளவு உயிர்நிலையுதவிகள் என்பதைத் தமிழர் இங்கே கணலாம்.

உத்தரலாடத்தை ஆண்டவன் மகிபாலன்.

இந்நாடுகள், அரசர்கள் பெரிதும் சிறு நாடுகள், சிற்றரசர் களே. ஆனால்கடைசி அரசனான மகிபாலன் மட்டும் பேரரசன். சோழ வீரர் இந்தச் சிற்றரசர்களை யெல்லாம் வென்ற பின் பேரரசனையே தாக்கி வென்றனர்.

இந் நாடுகள் அனைத்திலும் பெருந்திரளான பொருட் குவையும் வெற்றிச் சின்னங்களும் கவர்ந்துகொண்டு சோழர் அவ் வரசர்கள் பலரையும் சிறைப்படுத்தி இட்டுச் சென்றனர். கங்கையில் நீராடியபின், கங்கை நீரைக் குடங்களில் நிரப்பிச் சிறைப்பட்ட அரசர்கள் தலையில் ஏற்றி, அவற்றைச் சோணாட் டுக்கு கொண்டு வந்தனர்.

இப்படை யெடுப்பை நடத்தி'' படைத் தலைவனைச் சோழப் பேராசன் இராசேந்திரன் கோதாவரிக் கரைவரை சென்று எதிர்கொண்டு சோணாட்டில் புதிதாகக் கட்டப்பட்ட

தலைநகரான கங்கைகொண்ட சோழபுரத்துக்கு அரச மதிப்புடன் இட்டுச் சென்றான். வடதிசையின் மன்னர் தலையிலுள்ள கங்கைநீர்க் குடங்களால் நகரின் கோயிலும் நகரமும் திருநிலைப் படுத்தப்பட்டபின், அந்நீர் நகரின் அருகே பத்துக் கல் நீள அகல முடையதாகக் கட்டப்பட்ட சோழ கங்க ஏரியில் சேர்க்கப்பட்டன.

கங்கைகொண்ட சோழபுரம் இராசேந்திரன் கால முதல் இறுதிச் சோழப் பேரரசன் மூன்றாம் இராசராசன் காலம் வரையும் தலைநகராகவே இருந்தது. ஆனால் இப்போது அது முற்றிலும் பாழடைந்து கிடக்கிறது அது பெரிதும் பாண்டியப் பேரரசர் படையெடுப்புகளின் போதே அழிக்கப்பட்டிருக்கக்கூடும். ஆனால் வேளாண்மைக்குப் பெரிதும் பயன் பட்டு வந்த சோழகங்க ஏரி பிரிட்டிஷ் ஆட்சிக் காலம்வரை கட்டுக் குலையாமல் இருந்ததாக அறிகிறோம். அதற்குத் தொலைவிலிருந்து நீர்கொண்டு வரும் கால் வாய்கள் தூர்ந்த பின்னும் சோழர் கட்டுமானப் பெருமையை அது காட்டியே நின்றது ஆனால் வரலாற்றுப் பெருமையில் அக்கறையற்ற, கலைப்பெருமை யறியாத தொடக்கக் கால வெள்ளை அதிகாரிகள் காவிரிக்கு ஓர் அணைகட்டும் சமயம் அதைச்சாக்கிட்டு இவ் ஏரியின் கரைகளைச் சிதைத்தெடுத்ததாகத் தெரிகிறது. அப்பகுதி மக்கள் இது கண்டு கலவரம் செய்ததனால். ஒரு கரையேனும் பழய கட்டுமானம் காட்டி இன்னும் நிலவுகிறது.

### சோழர் படையெடுப்பும் வடதிசை நிலைமைகளும்

சோணாட்டைப்போலவே, ஆனால் அதனைவிட எல்லை குறைந்து, தென்னாட்டின் வடமேல் கோடியில் சோழர் காலங்களில் மேலைச் சாளுக்கிய அரசு வலிமையுடைய அரசாகவே நிலவிற்று. அதன் வடக்கில் பாரமாரரது மாளவ அரசும் வலிமையுடையதாகவே நிலவியிருந்தது. ஆனால் சிந்து கங்கைச் சமவெளியில் கீழ் கோடியிலுள்ள மகிபாலன் பேரரசு நீங்கலாக, வடமேற்குப் பகுதி முழுவதும் வலிமையற்ற சின்னஞ் சிறு அரசுகளே நிலவின இவையும் ஆயிர ஆண்டுக் காலமாகக் குஷாணர், பார்த்தியர், ஊணர். அராபியர் ஆகியவர்களின் படையெடுப்பினால் ஒரே குழப்ப நிலையில் தான் இருந்தன. இராசேந்திரன் காலத்தில் 1000 முதல் 1035வரை கஜினி மாமூது, இராசேந்திரன் தெற்கிலிருந்து படையெடுத்த கங்கைக் கரைவரை, தானும் பதினெட்டுத் தடவை படையெடுத்து, கோயில்களை இடித்துத் தரைமட்டமாக்கி, மக்களைக் கொள்ளையிட்டு, பெரும் பொருட் குவை சூறையாடிச் சென்றான்.

திரு நீலகண்ட சாஸ்திரியின் முன்னுரையுடன் 'திராவிடம்' என்ற ஆங்கில நூல் இயற்றிய ஈழத்து ஆசிரியர் திரு இ. எஸ். தம்பி முத்து அவர்கள் வடநாட்டின் இந்த இருதிசைச் சமகாலப் படையெடுப்புகளைச் சுட்டிக்காட்டி யுள்ளார். இஸ்லாமியருக் கெதிராகத் தெற்கும் வடக்கும் மட்டும் இணைந்திருந்தால், இந்தியா எத்தனை பாதுகாப்புடையதாக இருந்திருக்கும் என்று அவர் ஆற்றாமையுடன் குறிக்கிறார். ஆனால் வரலாற்றாசிரியரின் குறுகிய கண்ணோட்டம் இரண்டு படையெடுப்புக்களும் சமகாலத்தன என்பதைக் கூடக் கவனிக்க விடாமல் செய்துள்ளது.

மகிபாலன் பேரரசாட்சி கன்னோசி வரை எட்டியிருந்தது. ஆகவே வடமதுரை அதன் மேற்கு எல்லையிலேயே இருந்தது. சோழன் வெற்றிகள் அனைத்தையும் தென்னக எல்லையடுத்தே கண்டுவிடும் ஆர்வம் வரலாற்றாசிரியர்கள் கண்களைப் பெரிதும் மறைத்து வந்துள்ளது. அவ்வெற்றிகளுட் பல கஜினியின் படையெடுப்புடன் கை கலக்கும் வரை வடக்கும் மேற்கும் சென்றிருக்கக்கூடும் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் சோழர் தக்ஷிணலாட உத்தரலாட வெற்றி கூர்ச்சர வெற்றியாகவே இருத்தல் கூடும். மதுரை மண்டல வெற்றி வடமதுரையாக வும் இருக்கலாம். சோழனுக்கு முன்னோ பின்னோ கஜினி மாமூது தும் இதே பகுதியைக் கொள்ளையிட்டிருக்கலாகும். ஏனெனில் வட திசை யரசர்கள் இருபடை யெடுப்பாளர்களையும் எதிரெதிராக்கிப் பாதுகாப்புத்தேட முயன்றனர் என்பதை ஒரு சில வரலாற்றாசிரியர்கள் சுட்டிச் சென்றுள்ளனர்.

## கன்னோசிப் போர் 1035

கஜினியின் படையெடுப்பு கன்னோசிக்கு இப்பால் வர வில்லை. கன்னோசி மகிபாலன் ஆட்சிக்கு உட்பட்டே யிருந்தது. 1023 லேயே சோழனிடம் தோல்வியுற்ற மகிபாலன் இதைத் தடுத்து நிறுத்தியிருக்க முடியாது. தன் மேலுரிமையாளன் உதவியுடனேயே அவன் இப் படையெடுப்புத் தன் பேரரசின் எல்லை கடவாமல் தடுத்திருக்க வேண்டும். சோமநாதபுரம் கோயிலைவிடக் காசிக் கோயில் அந்நாள் செல்வ வளத்திலும் புனிதத் தன்மையிலும் குறைந்ததன்று. அதன் பக்கம் கஜினி மாமூது நாடாதது இதனைச் சுட்டுகிறது. 1035-ல் வடதிசை யரசர் தலைமையில், மகிபாலன் சோழன் துணையுடனேயே கஜினி மாமூதைக் கடைசித் தடவையாக முறியடித்துத்துரத்தி யிருந்தான்.

இப்போர் சோழன் கடல் கடந்த வெற்றிகளுக்குப் பிற்பட்டதாதல் வேண்டும். ஏனெனில் அவ் வெற்றி 1025-க்குள்

முடிந்து விட்டது. வடதிசைவெற்றியினும் பரந்தபுகழ்பெற்ற சோழருக்குக் கன்னேசி வெற்றி ஒரு வெற்றியாகத் தோன்றி யிருக்காது. அது சோழர் துணைகொண்டு வட மன்னர்அடைந்த வெற்றியாதலால் சோழர் மெய்க்கீர்த்தி அதனைக் குறிக்காது விட்டிருக்கலாம்.

## சோழர் படை யெடுப்பும் இந்திய நாகரிகமும்

'இப்படையெடுப்பின் பயனுகத் தமிழர் நாகரிகமும் வங்காளத்தில் புகுந்தது என்று ஐயமின்றிக் கூறலாம்' எனத் திரு பண்டாரத்தார் வடநாட்டுப் படையெடுப்பு வரலாற்றை முடிக்கிருர். சோழர் படையுடன் சென்ற படைத் தலைவர் களுள்ளும் வீரகளுள்ளும் சிலர் திரும்பிவராது வங்காளத் திலேயே தங்கிவிட்டனர். வங்காளத்தில் பாலர் மரபை யடுத்து ஆண்ட சேன மரபினர் இத்தகைய ஒரு சோழப்படைத் தலைவன் வழியினரே என்று வங்காள வரலாற்ருசிரியர் ஆர். டி. பானர்ஜி குறித்துள்ளார். மிதிலை அல்லது பீகாரிலும் கருநாடக மரபினர் ஆட்சிசெய்தனர் என்று தெரிகிறது.

வங்காளத்திலிருந்து தமிழகத்துக்கும், தமிழகத்திலிருந்து வங்காளத்துக்கும் சைவப் பெரும் புலவர் தொடர்பு இராசேந் திரன் காலத்திலிருந்தே பெருகிற்று. பதினைன்காம் நூற்ருண் டில் வங்கத்தில் வாழ்ந்த வைணவப் பெருந் தலைவர் சைதன் னியர் மைசூரிலும் காஞ்சியிலும் நெடுநாள் தங்கித் தமிழர் சமய இலக்கியவளத்தை வட.திசைகொண்டு சென்று பரப் பினர்.

## கடல்கடந்த கடாரப் படையெடுப்பு: 1025

முதலாம் இராசேந்திரன் 13-ம் ஆண்டைய மெய்க் கீர்த்தி கடற்படைகளைக் கடல்நடுவில் செலுத்தி அவன் கடாரப் பேரரசின் கடல் கடந்த பல நாடுகளையும் வென்ற செய்தி கூறுகிறது நெடியோன் காலத்துக்குப் பின் சோழர் களோ. பாண்டியர்களோ இவ்வளவு பாரிய அளவில் கடற் படை யெடுப்பை நடத்தியது கிடையாது. சோழர் கடற்படை எந்த அளவுக்கு வளர்ந்திருந்தது என்பதைக் கடாரத்தின் தொலை மட்டுமன்றி அக் கடாரப் பேரரசின் பரப்பும் சுட்டிக் காட்டும். மேற்கே அந்தமான் நிக்கோபார்த் தீவுகள். வடக்கே பர்மா, தெற்கே சுமத்திரா சாவா, கிழக்கே கீழ்கடல் ஆகிய எல்லைகள் அளாவிய கடாரப் பேரரசும் கடற்படை ஆற்றலில் பெரிதாகவே இருந்திருக்க வேண்டும். சோழர் படை யெடுப்புக்கு முன் குறைந்தது 400 ஆண்டுகளும், அதன் பின் 400 ஆண்டுகளும் வாழ்ந்த அந்தப் பேரரசின் ஆற்றலைக்

காண, அதனைப் பணியவைத்த சோழர் கடற்படை ஆற்றல் வியக்கத்தக்கதேயாகும்

இராசராசன் ஆட்சியின் பிற்பகுதியிலிருந்து இராசேந்திரன் ஆட்சியின் முற்பகுதிவரை சோழப் பேரரசும் கடாரப் பேரரசும் நேசப் பேரரசுகளாகவே இருந்தன. இராசராசன் காலத்தில் கடாரப் பேரரசனான சூடாமணிவர்மன் நாகபட்டினத்தில் கட்டிய புத்த பள்ளிக்கு (சூடாமணி விகாரம்) இராசராசப் பெரும் பள்ளி என்று பெயரிட்டிருந்தான். அதற்கு நிவந்தமாக இராசராசன் ஆனைமங்கலம் என்ற ஊரைப் பள்ளிச் சந்தமாக அளித்திருந்தான். இக் கோயில் இராசேந்திரன் காலத்திலிருந்த பேரரசன் சீர்மாற சீர்விசயோத்துங்கன் காலத்திலேயே முடிக்கப்பட்டது.

இரு பேரரசுகளுக்கு மிடையே இருந்து வந்த நட்பு திடுமென முறிவுறக் காரணம் என்ன என்பது தெரியவில்லை. சீன தேசத்துடனும் மேலை நாடுகளுடனும் தமிழரும் கடாரத்து மக்களும் கொண்டிருந்த வாணிகத் தொடர்பின் கடும்போட்டியே இதற்குக் காரணமாக இருந்திருக்கலாம் என்று சில வரலாற்றாசிரியர் கருதுகின்றனர்.

இவ் வெற்றிகளைப் பற்றி மெய்க்கீர்த்தி தரும் விவரங்கள் வழக்கம் போலத் தொகுப்புரையேயாகும்.

''அலைகடல் நடுவுள் பலகலம் செலுத்திச்
சங்கிராம விசயோத் துங்கவர்மன்
ஆகிய கடாரத் தரசனை வாகையும்
பொருகடல் கும்பக் கரியொடும் அகப்படுத்து
உரிமையில் பிறக்கிய பருநிதிப் பிறக்கமும்
ஆர்த்தவன் அகநகர்ப் போர்த் தொழில் வாசலில்
விச்சா திரத்தோரணமும் மொய்த்தொளிர்
புனைமணிப்புதவமும் கனமணிக்கதவமும்
நிறைநீர் விசயமும், துறைநீர்ப்பண்ணையும்,
வண்மலையூர் எயில் தொன் மலையூரும்,
ஆழ்கட லகழ்சூழ் மாயிருடிங்கமும்,
கலங்காவல்வினை இலங்காசோகமும்,
காப்புறு நிறைபுனல் மாபப்பளாமும்
காவல் அம் புரிசை மேவிலிம்பங்கமும்,
விளைப் பந்துருடை வளைப்பந்தூரும்,
கலைத் தக்கோர்புகழ் தலைத்தக்கோலமும்
தீதமர்பல்வினை மாதமார்லிங்கமும்
கலாமுதிர் கடுந்திறல் இலாமுரிதேசமும்

தேனக்கவார்பொழில் மாநக்கவாரமும்
தொடுகடற்காவல் கடுமுரண் கடாரமும்
மாப்பொருதண்டால் கொண்ட''

வடதிசையில் வெற்றிகள் அனைத்தும் ஒரே பேரரசன் ஆட்சிப் பகுதிக்குரியனவாதல் போல, இங்கேயும் எல்லா வெற்றிகளும் ஒரே பெரும் பேரரசனான கடாரப் பேரரசன் சங்கிராம விசயோத்துங்கன் ஆட்சிமீது நடத்தப்பட்ட வெற்றிகளேயாகும். அவனிடமிருந்து திறையாகப் பெற்ற பெரும் பொருட்குவையுடன் அவன் நகர்வாயிலான வித்தியாதரதோரணமும் புனைமணிப்புதவமும் கனமணிக்கதவமும் வெற்றிச்சின்னங்களாகக் கொண்டுவந்தான் என்று மெய்க்கீர்த்தி கூறுகிறது.

கடார வெற்றி 1. சீர்விசயப்போர்:

விசயம் அல்லது சீர்விசயம் என்பது சீர்விசயப் பேரரசு என்று அழைக்கப்பட்ட கடாரப் பேரரசின் மைய ஆட்சியிடமே யாகும். இது இக்காலத்தில் சுமத்ரா என்று வழங்கும் பண்டைச் சாவகம் அல்லது பொன்னாட்டில் உள்ள தற்காலப் பாலம்பாங் நகரே என்று அறியப்படுகிறது.

கடார வெற்றி 2. பண்ணை:

பனி அல்லது பனை என்று இப்போது வழங்கும் சுமத்ராத் தீவின் கீழ்கரைப் பகுதியே பண்ணை எனப்படுகிறது.

கடார வெற்றி 3. மலையூர்:

இது எங்கிருந்தது என்று தெளிவாய் அறியப்படவில்லை. சுமாத்ராவிலேயே இருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது. மலையூர் என்ற ஓர் ஆறு அங்கு இருப்பதால் அதற்கருகில் அது இருந்திருக்கக்கூடும்.

கடார வெற்றி 4. மாயிருடிங்கம்:

இது மலாயாத் தீவக் குறையின் நடுவே உள்ள நாட்டைச் சார்ந்தது,

கடார வெற்றி 5. இலங்காசோகம்:

இது கடாரம் (கெட்டாவைப்) போல மலாயாவின் கீழ் கரையிலுள்ளது.

கடார வெற்றி 6. மாபப்பளாம்:

மலாயா வடக்கிலுள்ள கிராநில இடுக் கருகிலுள்ள பகுதியே மாபப்பளாமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

கடார வெற்றி 7. தலைத்தக்கோலம்:

*மலாயா மேல் கரையில் வடபால் தகோபா மாகாணத்தின் தலை நகரான தக்கோலமே இது என்று தெரிகிறது.*

கடார வெற்றி 8. தமாலிங்கம்:

*மலாயாவின் கீழ் கரையில் தெமிலிங் ஆறு கடலுடன் கலக்கும் இடமே இது எனப்படுகிறது.*

கடார வெற்றி 9. இலாமுரிதேசம்:

*இது மலாயாவின் வடபகுதி.*

கடார வெற்றி 10. மாநக்கவாரம்:

*இது நிக்கோபார்த் தீவுகள் ஆகும்.*

கடார வெற்றியின் பின் விளைவுகள்:

நெடியோன் காலமுதல் கிழக் காசியாவுக்கும் சீனாவுக்கும் தமிழகத்துக்கும் இடையே யிருநத தொடர்புகள் சோழர் வெற்றிகளால் மேலும் பெருகியிருக்க வேண்டும். சோழர் வெற்றிக்குரிய இடங்கள் மலாயா சூழ்ந்தவை என்று மட்டுமே நமக்குத் தெரிய வருகின்றன. ஆனால் இந்து சீனாவிலும் பின்னாட்களில் தமிழ் மரபினர் ஆட்சியும் கலையும், சமயமும் இலக்கியமும் பேரளவில் பரவியிருந்தது காண்கிறோம். வட இந்திய சமயமாகிய புத்த சமயத்தையும், மேலை அரபு நாட்டவர் சமயமாகிய இஸ்லாத்தையும் தொலைக் கிழக்குத் திசையில் கொண்டு சென்றவர்கள் அவ்வச் சமயம் சார்ந்த தமிழரே என்றறிகிறோம். காம்போசத்துடனும் சீயத்துடனும் உள்ள தமிழ்த் தொடர்புச் சின்னங்கள் இன்றுவரை நிலவுகின்றன.

குலோத்துங்கனுக்குப் பின் இருந்த தமிழ்ப் புலவர்கள் காலம்வரை கங்கைப் போரின் புகழும் கடாரப் போரின் புகழுமே இராசேந்திரன் பெரும் புகழாகவும் சோழர் புகழ் வைப்பாகவும் போற்றப்பட்டுள்ளன.

> "களிறு கங்கைநீர் உண்ண மண்ணையில்
> காய்சினத் தொடே கலவு செம்பியன்
> குளிறுதெண் திரைக் குரை கடாரமும்
> கொண்டு மண்டலம் குடையுள் வைத்ததும்"
>
> (கலிங்கத்துப் பரணி 189)

> "கங்கா நதியும் கடாரமும் கைக்கொண்டு
> கங்காபுரி புரந்த கற்பகம்"
>
> (விக்கிரம சோழன் உலா 34—36)

கங்கா நதியும் கடாரமும் கைக்கொண்டு
சிங்காதனத்திருந்த செம்பியர்கோன்
(குலோத்துங்க சோழன் உலா 49—50)

எனப் இப்புவி யேற்றின் வெற்றிகளைக் கவியேறுகள் பரவினர்.

பாண்டியர் விடுதலைக் கிளர்ச்சியின் முறிவு:

இராசேந்திரன் ஆட்சியின் பிற்பகுதியில் பாண்டிய மரபினர் இழந்த நாட்டை மீண்டும்பெற முனைந்தெழுந்தனர். இராசேந்திரன் மகனாகிய இராசாதிராசன் சோழர் படை நடத்திச்சென்று அவர்களை முறியடித்தான். கிளர்ச்சி செய்த பாண்டியர் மூவருள்ளே,மானாபரணன் என்பவன் தலைதுணிக்கப் பெற்றான். வீர கேரளன் என்பவன் யானைக் காலிலிட்டு இடறப்பட்டான். சுந்தர பாண்டியன் என்ற ஒருவனே தலைவிரி கோலத்துடன் முல்லையூர் புகுந்து ஒளித்துக்கொண்டான். இராசாதிராசன் மெய்க்கீர்த்தியிலேயே இவை குறிக்கப்பட்டுள்ளன.

சேரர் கிளர்ச்சி முறிவு:

சேர நாட்டிலிருந்த பல அரசர் சிற்றரசர் மரபுகளும் இச்சமயம் விடுதலை நாடிக் கிளர்ந் தெழுந்தன. ஆனால் இராசேந்திரன் புதல்வன் இராசாதிராசன் சேரநாட்டின் மீதும் படையெடுத்துச் சென்று அவற்றை அடக்கினான். வேணாடு அல்லது திருவாங்கூர் அரசன் போரில் கொலையுண்டான். அவனுக்கு உதவியாக வந்த கூபக நாட்டரசன் புறமுதுகிட்டு ஓடி ஒளிந்தான். பரசுராமனால் முடி சூட்டப்பட்ட மரபினரான எலிமலை சார்ந்த இராமகுட நாட்டு மன்னன் தோல்வியுற்றுப் பணிந்து சோழர் ஆதரவு பெற்று நீண்டகாலம் அந்நாட்டை ஆண்டான்.

ஈழக் கிளர்ச்சி:

1029 லிருந்து 1041 வரை ரோகண நாட்டை ஆண்ட ஐந்தாம் மயிந்தன் புதல்வன் காசிபன் என்ற விக்கிரமபாகு இலங்கை முற்றிலும் வெல்லும் அவாவில் போர்புரிந்து மாண்டான் என்று சோழர் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. அவனுக்குப் பின் மூன்று ஆண்டுகள் ரோகணத்தை ஆள முயன்ற மகாலான கித்தி என்ற அவன் மகனும் படியிழந்து முடியிழந்து, சோழரிடம் பெற்ற அவமதிப்புத் தாங்காமல் 1044-ல் தன் கழுத்தைத் தானே அறுத்துக்கொண்டு மாண்டான் என்று கேள்விப்படுகிறோம்.

சோழர் சாளுக்கியர் மூன்றும் போராட்டம்: 1042

மேலைச் சாளுக்கிய மன்னனுன இரண்டாம் சயசிங்கனுக்குப் பின் 1042-ல் முதல் சோமேசுரன் ஆகவமல்லன் என்பவன் ஆட்சிக்கு வந்தான். அவன் சோழ எல்லை கடக்க முயன்றதால், இராசேந்திரன் புதல்வன் இராசாதிராசன் படையுடன் சென்று அவனை முறியடித்தான். படைத் தலைவர்களாகிய கண்டப்பையன், கங்காதரன் ஆகியோர் கொலையுண்டனர். சோமேசுவரன் புதல்வர்களாகிய விக்கிரமாதித்தனும் விசயாதித்தனும், படைத்தலைவனுன சங்கமையனும் போர்க்களத்திலிருந்து ஒளிந்தோடினர். கொள்ளிப்பாக்கை நகரை எரியூட்டி, யானை குதிரை பொற்குவை ஆகியபெருந் திறையுடன் இராசாதிராசன் சோனுடு மீண்டான்.

வெங்கை நாட்டுறவு:

இராசராசன் மகள் குந்தவைக்கும் கீழைச் சாளுக்கிய விசயாதித்தனுக்கும் பிறந்த மகன் நரேந்தின். இராசேந்திரன் தன் புதல்வியர் இருவரில் இளையளாகிய அம்மங்கை தேவியை அவனுக்கு மணஞ்செய்து கொடுத்தான். இவ்விருவர் புதல்வனே பின்னுளைய முதலாம் குலோத்துங்கன் ஆனுன்.

களிறு பெற்றெடுத்த போதகங்கள் :

பேரரசர் பிள்ளைகள் பெருவீரராய் இருப்பது மனித இன வரலாறு அறியாத ஒரு செய்தி ஆகும். சங்ககாலச் சேரர் மரபும் இடைக்கால, பிற்கால பாண்டியர் மரபும் இதற்கு ஓரளவு விலக்காகலாம். ஆனுல் அவ் விரு எல்லையிலும் நிலவிய, இஸ்லாமிய அரசர் குடிகளில் இருந்தது போன்ற இடைவிடாப் போட்டி இதற்குக் காரணம் ஆகலாம். ஆனுல் சோழப்பேரரசு இவ்வகையில் வியத்தக்க பெருமரபாய் அமைந்தது. முதலாம் இராசராசன் தன் மரபினரிடையே ஊட்டிய பேரவா ஆர்வமும், வளர்த்த குடிப்பயிற்சி முறை மரபுமே இதற்கு அடிப்படை என்னலாம். மும்முடிச் சோழனுகிய அவன் பெற்ற களிறுன முதல் இராசேந்திரன் தந்தையினும் பெரிய வீரனென்றுல், அக்களிறு பெற்ற போதகங்களாகிய முதல் இராசாதிராசன் (1018—1054), இரண்டாம் இராசேந்திரன் (1051—1063), வீர ராசேந்திரன் (1063—1070) ஆகியவர்கள் அவனுக்கு மிகுதி பிற்படாத பெரு வீரராயிருந்தது குறிப்பிடத்தக்கது. தந்தையைப்போல் அவர்கள் வெற்றிகள் நிலங்கடந்து செல்லாவிட்டாலும், தந்தையாலும் பின்னேராலும் வெல்லப்படாதிருந்த மேலைச் சாளுக்கியரை முற்றிலும் முறியடித்து அடக்க அவர்கள் காட்டிய தீரம் கொஞ்ச நஞ்சமன்று. அவர்

கள் அதில் வெற்றியடையாதது ஒரு குறையன்று—பாண்டிய ரைப் போலச் சாளுக்கியரும் விடாப்பிடியுடையவராய், அச் சமயத்தில் வீர அரசரைப் பெற்றிருந்ததனாலேயே அவர்கள் இப் பெரு வீரச் செயல்களுக்குத் தப்பிப் பிழைத்திருந்தனர்.

முதற் குலோத்துங்கனுடன் பேரரசு தளர்ச்சியடைந்து விடவில்லையானால், சாளுக்கியர் வீழ்ச்சியடைந்திருப்பது உறுதி. ஏனெனில் சாளுக்கியப் பேரரசும் சில நாட்களில் தளர்ச்சியுற்றது.

### இலங்கைப் போர்க்களரி *1046—1054: 1055, 1067;* அனுராதபுரம் போர் *1064—65*

இலங்கை சோழர் ஆட்சியிலிருந்தாலும், தென் ரோகண நாட்டிலிருந்து மீட்டும் மீட்டும் கிளர்ச்சிகள் முதல் இராசேந் திரன் புதல்வர் மூவர் ஆட்சியிலும் இருந்துகொண்டே வந்தன. அதுபற்றிய சோழர் கல்வெட்டுக்களும் இலங்கைவரலாற்றேட் டுச செய்திகளும் மொத்தத்தில் ஒத்துவரினும் சில்லறை விவ ரங்களிலும் பெயர்களிலும் அவைஅடிக்கடி முரண்படுகின்றன.

இராசாதிராசன் காலத்திலேயே சோழர் மூன்று தடவை படையெடுத்து வெற்றி பெற்றனர். முதல்வெற்றி 1046-க் குரியது. இதில் துளுவ நாட்டில் ஒடி ஒளிந்திருந்த மகாலான கித்தியின் புதல்வன் முடியிழந்து துரத்தப் பெற்றான். இவனை மகாவம்சோ விக்கிரம பாண்டு என்றும், சோழ ஆதாரங்கள் விக்கிரம பாண்டியன் என்றும் கூறுகின்றன. சிங்களத் தாய், பாண்டியத் தந்தையையோ அல்லது சிங்களத் தந்தை பாண் டியத் தாயையோ அவன் கொண்டவனாக இருக்கக்கூடும். பாண்டிய ஈழ அரசுரிமைகள் இரண்டுக்கும் அவன் உரியவனாக இருந்தான் என்று தோன்றுகிறது.

இராசாதிராசன் இரண்டாவது வெற்றி 1046-ல் கன்னர மரபினனான ஈழத்து அரசன் சீவல்லபன் மதனராஜனுக் கெதிரானதென்று சோழர் குறிக்கின்றனர். ஆனால் சோழரி டம் தோற்று 1053-ல் உயிரிழந்தவன் விக்கிரமபாண்டுவின் கமன் ராசேந்திர பாண்டு என்று மகாவம்சோ கூறுகிறது.

1047 முதல் 1051 வரை அயோத்தி அரசகுமாரனான ஜகதீபாலன் ரோகணத்தைக் கைப்பற்றி ஆண்டு, சோழர் கைப்பட்டு மாண்டான் என்றும், அவனது செல்வங்களோடு அவன் மனைவியையும் மகளையும் சோழர்கள் தம் நாட்டுக்குக் கொண்டு சென்றனர் என்றும் மகா வம்சோ குறிக்கிறது. ஆனால் கொல்லப்பட்டது கன்னியாகுப்ஜத்தை ஆண்ட வீர

சலாமேகன் என்றும், அவன் தாய், மனைவி, தமக்கை ஆகிய வரைக் கைப்பற்றிச் சோழர் அவமதித்தபின் அவன் மீண்டும் போர் செய்து மாண்டான் என்றும் சோழர் கூறுகின்றனர்.

இரண்டாம் இராசேந்திரன் ஆட்சித் தொடக்கத்தில் 1054 அல்லது 1055-லும் கலிங்க மன்னனென்று கூறப்படும் இன்னொரு சலாமேகன் கொல்லப்பட்டதாகத் தெரிய வரு கிறது. அதேபோரில் இலங்கை மன்னன் மானுபரணனின் இரு புதல்வர்கள் சிறைப்பட்டனர்.

வீரராசேந்திரன் ஆட்சியில் ரோகணத்தில் இருந்து கொண்டு இலங்கை மன்னன் விசயபாகு போர் தொடுத்தான். 1064—65-ல் சோழர் அனுராதபுரப் போரில் இலங்கை மன் னனை முறியடித்தனர். ஆனால் இதன்பின் விசயபாகு தமிழர் கோட்டையாகிய புலத்தியைக் கைப்பற்றித் தமிழரை வெளி யேற்றினான் என்று அறிகிறோம். ஆயினும் இதன் பின்னரும் போர் மீண்டும் எழுந்தது 1067-ல் விசயபாகு போரில் தோற்று ஓடி ஒளித்தான். சோழர் அவன் மனைவியைச் சிறைப் படுத்திக் கொண்டும் அளப்பரும் செல்வம திறைகொண்டும் சென்றனர்.

## சோழ—சாளுக்கியப் போராட்டம்:

முதற்கட்டம்: கம்பிலிப்போர் 1046

முதல் இராசேந்திரன் ஆட்சியிறுதியில் நடத்தப்பட்ட சோழ சாளுக்கியப் போரில் படைப் பெருந்தலைவனாயிருந்து போர் நடத்தியவன் இராசாதிராசனே. இவ் விரு பேரரசு களின் இடைவிடா அழிவுப் போர்களின் அலை எதிர் அலைகள் முதல் இராசேந்திரன் ஆட்சி கடந்தே உச்ச நிலை எய்தின.

1046-ல் இராசாதிராசன் முடியேற்றபின் சளுக்கியப் பேரரசையே வென்று கொள்ளும் ஆர்வத்துடன் அதன் எல்லை மீது படையெடுத்தான். இச்சமயம் நிகழ்ந்த போரில் சோழன் பெரு வெற்றி கொண்டான். சாளுக்கியப் படைத்தலைவர் பலர் களம் விட்டோடினர். ஓடிய அத் தலைவர்களின் பெயர்ப் பட்டி யலாகக் கண்டர் தினகரன், நாரணன், கணபதி, மதுசூதனன் ஆகிய பெயர்களையும் மெய்க்கீர்த்தி தெரிவிக்கிறது.

இப்போர் முடிவில் கம்பிலிநகரத்திலிருந்த சாளுக்கியப் பேரரசர் மாளிகை தகர்த்தெரியப்பட்டது. அதே இடத்தில் சோழரது வெற்றித் தூண் நாட்டப்பட்டது. இதைக் கலிங்கத் துப்பரணி 'கம்பிலிச் சயத் தம்பம் நட்டதும' என்று குறிக் கிறது.

சோழ சாளுக்கியப் போட்டி:

**2-ம் கட்டம்: பூண்டூர்ப் போர் *1048***

இராசாதிராசன் சாளுக்கியர் தாயகமாகிய குந்தள நாட்டின் மீது படையெடுத்து, கிருஷ்ணை ஆற்றங்கரையிலுள்ள பூண்டூரில் நடைபெற்ற போரில் சாளுக்கியரைப் பேரழிவுக்கு ஆளாக்கினான். இப்போரில் இராசாதிராசன் தம்பியான இரண்டாம் இராசேந்திரனும் அவனுடன் படைத்தலைவனாகச் சென்றிருந்தான். எதிர் தரப்பில் சாளுக்கியப் படைத்தலைவர்களாயிருந்தவர்கள் தெலுங்க விச்சையன், அத்திராசன், அக்கப்பையன், கொண்டையராஜன், முஞ்சன், தண்ட நாயகன் தனஞ்சயன், வீரமாணிக்கன் ஆகியவர்கள். அனைவரும் முறியடிக்கப்பட்டதுடன் படைத்தலைவன் விச்சையனின் தாய் தந்தையரும் எண்ணற்ற மகளிரும் சிறைப்பிடிக்கப்பட்டனர். பூண்டூர் நகரின் மதில்கள் இடித்துப் பாழாக்கப்பட்டன.

மண்ணதி என்ற நகரிலிருந்த சாளுக்கிய மாளிகையைச் சோழர் எரியூட்டினர். அந்நகரிலேயே சோழர் புலிச்சின்னம் பொறித்த வெற்றித்தூண் நாட்டினர்.

மேலைச் சாளுக்கியர் கிருஷ்ணை, துங்கபத்திரை ஆறுகளில் அழகிய பெரிய மூன்று அரச துறைகள் கட்டியிருந்தனர். சிறுதுறை, பெருந்துறை, தெய்வ வீமகசி என்ற அம்முத் துறைகளிலும் சோழ அரசன் தன் பட்டத்து யானைகளைக் குளிக்கச் செய்து சாளுக்கியரை அவமதித்தான்.

அருகிலிருந்த வராகமலையில் சாளுக்கியர் தம் வராக (பன்றி) முத்திரை பொறித்திருந்தனர். அதே மலையில் சோழர் தம் புலி முத்திரை பொறித்து, அப்பொறி தாங்கிய வெற்றித் தூணையும் நிறுவினர்.

இச் சமயம் சோழர் தங்கியிருந்த பாசறையில் சாளுக்கிய மன்னன் ஆகவமல்லன் ஒற்றர்களாக்கிய வீரர் வந்தனர். சோழன் அவர்களைக் கண்டுபிடித்து அவர்களைப் பிடித்துக் கட்டி ஆகவமல்லனிடமே அனுப்பினான். ஆனால், 'ஆகவமல்லன் எங்கும் போரில் புறங்காட்டி ஓடியவன்' என்று அவர்கள் மார்பிலேயே எழுதி அனுப்பினான்.

இவ் அவமதிப்புத் தாங்காமல் ஆகவமல்லன் மீண்டும் போர் புரிந்து தோற்றான். இப்போரில் நுளம்பன், காளிதாசன், சாமுண்டன், பொம்மையன், வில்லவராசன் முதலிய சாளுக்கியப் படைத்தலைவர்கள் தோற்றோடினர். அவர்களுக்கு உதவியாக அவர்களுடன் போர்செய்த கூர்ச்சர மன்னன் ஒருவன் போரிலேயே மாண்டான்.

**சோழ—சாளுக்கியப் போட்டி: கலியாண புரம் அழிவு:**

ஆகவமல்லன் மீண்டும் சோழரிடம் வீம்புடன் தூதனுப்பினான். சோழர் தூதரைக் கேலி செய்து திருப்பி அனுப்பினர். அவர்களுள் ஒருவனுக்கு ஆண் வேடமிட்டு ஆகவமல்லன் என்ற பெயரை ஒட்டியும், மற்றொருவனுக்குப் பெண்ணுடை உடுத்து பெண்கள் போல ஐம்பால் கொண்டையிட்டு, ஆகவமல்லி என்று பெயர் ஒட்டியும் அனுப்பினர்.

இவ்வவமதிப்பின் பின் நடந்த மறுபோரில் சோழர் சாளுக்கிய தலைநகராகிய கலியாணபுரத்தையே கைப்பற்றினர். பல்லவர் சாளுக்கிய வாதாபியை அழித்தது போலவும், முதல் இராசராசன் காலத்தில் சோழர் மேலைச் சாளுக்கியரின் முதல்தலைநகரமாகிய மண்ணைக்கடகத்தை (மான்யகேதத்தை) அழித்தது போலவும், இப்போது இராசாதிராசன் அவர்கள் புதிய தலைநகராகிய கலியாணபுரத்தை அழித்தான்.

கலியாணபுர வெற்றியின் சின்னமாகச் சோழர் கொண்டு வந்த பொருள்களில், அந் நகரிலுள்ள துவாரபாலர் படிமம் ஒன்று. அதன் பீடத்தில் ''சிரீ ஸ்வஸ்தி சிரீ உடையார் விசய ராசேந்திர தேவர் கலியாண புரம் எறிந்து கொண்டுவந்த துவாரபாலர்'' என்று வரையப்பட்டுள்ளது.

கலியாணபுரத்திலேயே வெற்றிக் கறிகுறியாக இராசாதிராசன் வீராபிடேகம் செய்துகொண்டானென்றும், அச் சமயம் விசயராசேந்திரன் என்ற வீரப்பட்டம் மேற்கொண்டான் என்றும் அறிகிறோம்.

கம்பிலித் தம்பம் நட்டது, கலியாணபுர அழிவு, வராக மலைப் புலிப்பொறிப்பு ஆகிய செய்திகள் தமிழ் இலக்கியத்திலும் பொறிக்கப்பட்டுள்ளன.

''கம்பிலிச் சயத்தம்ப நட்டதும்
கடி அரண்கொள் கலியாணர்கட்டு அறச்
கிம்புரிப் பணைக் கிரி உகைத்தவன்
கிரிகள் எட்டிலும் புலிபொறித்ததும் (கலிங்கத்துப்
பரணி 8—26.)

மும்மடிபோய்க் கலியாணி
செற்ற தனியாண்மைச் சேவகனும்
(விக்கிரம சோழனுலா 37—8)

என இவற்றைச் சயங்கொண்டாரும் ஒட்டக் கூத்தரும் குறித்துள்ளனர்.

**சோழ—சாளுக்கியப் போட்டி:**

**கொப்பத்துப் பெரும்போர் 1054**

கொப்பம் என்பது மேற்கு மைசூர்ப் பகுதியில் மேல் மலைத்தொடருக் கருகிலுள்ளதென்று சிலரும், இன்றைய பம்பாய் மாகாணத்தில் பெல்காம் மாவட்டத்தருகில் கிருஷ்ணை யாற்றிலுள்ள ஒரு குடுவை வளைவின் அருகேயுள்ள தென்று வேறு சிலரும் கருதுகின்றனர். இதில் பிந்திய இடமே பொருத்தமானது என்று தோன்றுகிறது ஏனெனில் இவ்விடம் ஒரு தீர்த்தம் என்று கூறப்பட்டுள்ளது. இவ் வளைவினருகே ஒரு தீர்த்தத்தலமும் அதனை அடுத்து ஒரு கோயிலும் இன்னும் உள்ளன. அக்கோயிலும் கொப்பேசுரர் கோயில் என்றே வழங்குகிறது. தவிர, வெற்றியின் பின் சோழர் கோலாப்பூரில் வெற்றித் தூண் நாட்டியதாகக் கூறியுள்ளனர். அவ் வெற்றித் தூண் இன்று காணப்படாவிட்டாலும், கோலாப்பூர் இவ் வளைவிலிருந்து சிறிது தொலைவிலேயே யுள்ளது.

முதலாம் இராசாதிராசன் தன் தம்பி இரண்டாம் இராசேந்திரனுடன் மேலைச் சாளுக்கியர் மேல் படையெடுத்துச் சென்றான். கொப்பத்தில் சோழப் படைகளும் மேலைச் சாளுக்கியப் படைகளும் சந்தித்தன. இருதரப்பினரும் போருக்கு ஆயத்தமாகத் தம் படைகளை அணிவகுத்து நிறுத்தினர். மேலைச் சாளுக்கியர் பக்கம் மன்னன் சோமேஸ்வர ஆகவமல்லன் போர்க்களம் வரவில்லை. ஆனால் அவன் மைந்தர்கள் படைகளைத் தலைமை வகித்து நடத்தினர். சோழர் பக்கத்திலோ மன்னன் இராசாதிராசனும் இளவரசன் இராசேந்திரனும் படைத்தலைவரா யிருந்தனர்.

சோழப் படையின் முன்னணியில் இராசேந்திரனே தலைமை வகித்து ஒரு யானைமேல் இவர்ந்திருந்தான். பின்னணியில் அதுபோல யானையின் மேல் மன்னன் இராசாதிராசன் தலைமை தாங்கி இருந்தான். எதிரிகளின் முதல் யானைப் படைத் தாக்குதலிலேயே இராசேந்திரன் முன்னணி சீர்குலைந்தது. ஆனால் இராசாதிராசன் பின்னணி முன் வந்து நின்று எதிரியின் தாக்குதலைச் சமாளித்தது. எளிதாகத் தோற்றிய சாளுக்கியர் வெற்றி தடைப்பட்டு மீட்டும் மும்முரமான தாக்குதல் எதிர்தாக்குதல் ஏற்பட்டது இதனால் மனமுளைந்த சாளுக்கியர் தம் வில்லாளரை இராசாதிராசன் யானையையே ஒரு மிக்கக் குறிவைத்து அம்புமாரி பொழியும்படி ஏவினர். யானை சல்லடையாய்த் துளைக்கப்பட்டது. யானைமீதிருந்த ஆட்களும் ஒவ்வொருவராகக் கொல்லப்பட்டனர். இறுதியில் மன்னனும் யானை மீதிருந்தே சாய்ந்தான்.

மீகாமனில்லா மரக்கலம் போல் சோழர்படை இப்போது தள்ளாடிற்று. இத் தறுவாயைப் பயன் படுத்திப் போரைச் சாளுக்கியர் முறுக்கவே, சோழர் படை நிலை கலங்கிக் கலைந்து சிதறி ஓடத் தலைப்பட்டது. போர்க்களம் இனி தமதே என்று கருதி ஆர்ப்பரித்த வண்ணம் சாளுக்கிய வீரர் சோழர் படைகளைத் தொடர்ந்தனர்.

அண்ணன் போர்களில் எல்லாம் இராசேந்திரன் ஈடுபட்டுப் பயிற்சி பெற்றிருந்தான். அவன் ஒரு சில கணங்களுக்குள் நிலைமையைச் சமாளித்தான். அண்ணன் விழுந்த இடத்திலேயே மற்றொரு யானைமேல் ஏறினான். அண்ணன் முடியைத் தான் சூடினான். பட்டாபிடேக முழக்கமாகப் போர்முரசு கொட்டுவித்தான். புதிய வீர மன்னனைப் பெற்ற கிளர்ச்சியில் வீரர் மீண்டும் திரண்டனர். அம்புமாரிகள் முன்போலவே பொழிந்தன. இராசேந்திரனுடைய குன்றுபோன்ற புயங்களிலும் துடைகளிலும் அவை தைத்துப் புண்ணூறு பெருக்கின. ஆனால் அவன் தன் போர் வீரர்களுக்கே ஆதன் மூலம் வீரமூட்டி ஆர்ப்பரித்துப் போரிட்டான்.

சாளுக்கியர் அடைய இருந்த வீரத் திருநங்கை சோழர் பக்கம் திரும்பி நின்று நகைத்தாள். தோல்வியை வெற்றியாக்கி இராசேந்திரன் புதிய ஆட்சியைப் புகழாட்சியாக்கினான்.

கொப்பத்துப் போர் வரலாற்றில் புகழ்பெற்ற வெற்றி மட்டுமன்று தமிழ் இலக்கியம் நெடுநாள் மறவாதபோராயிற்று.

> ''ஒரு களிற்றின்மேல் வரு களிற்றை ஒத்து
> உலகு உயக்கொளப் பொருது கொப்பையில்
> பொருகளத்திலே முடிகவித்தவன்''

என்று கலிங்கத்துப் பரணியில் சயங்கொண்டார் இராசேந்திரன் வீரத்தைப் பாடுகின்றார்.

> ''கொலை யானை
> பப்பத்தொரு பசிப்பேய் பற்ற ஒருபரணி
> கொப்பத்து ஒரு களிற்றால் கொண்டகோன்
>
> (இராசராச சோழனுலா)

> ''பற்றலரை
> வெப்பத்து அடுகளத்தில் வேழங்கள் ஆயிரமும்
> கொப்பத்து ஒரு களிற்றால் கொண்டோனும''
>
> (விக்கிரம சோழனுலா)

என மூவர் உலாவில் ஒட்டக்கூத்தர் இதே போரைக் குறிக்கிறார்.

சாளுக்கியர் பக்கம் கடைசி இளவரசனான சயசிங்கன் போரில் இறந்தான். தவிர, படைத் தலைவர்களாகிய புலிகேசி, தசபன்மன், அசோகையன், ஆரையன், மொட்டையன், நன்னி நுளம்பன் ஆகியோரும் மாண்டனர். மற்றச் சாளுக்கிய இளவரசரும் வன்னியரேவன், துத்தன், குண்டமையன் முதலிய படைத் தலைவர்களும், வீரர்களும் அஞ்சியோடி ஒளிந்தனர்.

சாளுக்கியருடைய பட்டத்து அரசியரான சாங்கப்பை, சத்தியவ்வை என்பவர்கள் இருவரும் கைப்பற்றப்பட்டனர். அவர்கள் பட்டத்து யானைகளாகிய சத்துருபயங்கரன், கரபத்திரன், மூலபத்திரன் ஆகியவையும் சாளுக்கியரின் வராகக் கொடியும், பெருந்திரளான நிதிக்குவையும் சோழர் வசமாயின. எண்ணிறந்த எதிரிகளின் ஒட்டகங்களும் குதிரைகளும் பிறபொருள்களும் சோழர் கைப்பட்டன.

இராசேந்திரன் போர்க்களத்திலேயே வீராபிடேகம் செய்தபின் கோலாப்பூரில் ஒரு வெற்றித் தூண் நாட்டினான்.

இராசராசன் கல்வெட்டுக்களில் 'கலியாணபுரமும் கொல்லா புரமும் எரிந்து யானைமேல் துஞ்சின பெருமான்' என்று குறிக்கப் பெறுகிறான்.

இப்போரிலே சாளுக்கியர் தாமே சோழரை முறியடித்துக் காஞ்சி நோக்கித் துரத்தியதாகக் கூறுகின்றனர். இப்போர்பற்றிய மட்டில் இது சரியன்று. ஆனால் சாளுக்கியர் வலு எப்போதும் பாதுகாப்பில் இருந்தது. சோழர் எத்தனை வெற்றி பெற்றாலும், அவர்கள் போனபின் சாளுக்கியர் தம் கைத்திறம் காட்டித் தம் பழய எல்லைக்கு வர முடிந்தது. சோழர் தாம் வென்ற இடங்களை காத்து நிலையாகப் பேண முடியவில்லை.

## சோழ சாளுக்கியர் போட்டி: முடக்காற்றுப் போர் 1059

கொப்பத்துப் போரில் பெற்ற அவமதிப்பை நீக்கும் எண்ணத்துடன் ஆகவமல்லன் பெரும் படையுடன் சோழநாட்டைத் தாக்கப் புறப்பட்டான். ஆனால் சோழர் படை கிருஷ்ணையாற்றின் பக்கமே அப்படையைச் சந்தித்துப் போர் தொடங்கிற்று. இதுவே முடக்காற்றுப் போர் ஆகும்.

இதிலும் மேலைச் சாளுக்கியர் பல துன்பங்களுக்கு ஆளாயினர். மேலைச் சாளுக்கிய தண்ட நாயகனாகிய வாலாதேவனும் வேறு பல தலைவர்களும் கொல்லப்பட்டனர். மன்னன் ஆகவமல்லனும் அவன் மகன் விக்கிரமாதித்தனும் இருகையன் என்ற தலைவனும் அமர்க்களத்திலிருந்து ஓடினர். தம் மானத்தைக் காக்கவந்த சாளுக்கியர் உள்ள மானத்தையும் இழந்து அவமானத்தைச் சுமந்து சென்றனர்.

இப்பெரும் போரில் இரண்டாம் இராசேந்திரன் மட்டுமன்றி, இராசமகேந்திரன், வீரராசேந்திரன் ஆகிய அவன் இரு இளவல்களும் கலந்துகொண்டனர் என்று தெரிகிறது. ஏனெனில் மூவர் கல்வெட்டுக்களுமே அவ்வெற்றிக் குரியவர்களாக அவ்வவர்களைப் பாராட்டுகின்றன.

இவ் விளவல்கள் இருவருள் மூத்தவனாகிய இராசமகேந்திரன் இளவரசுப்பட்டங்கட்டி அரசனாகு முன்பே மாண்டவன் என்று அறிஞர் பண்டாரத்தார் கல்வெட்டு, இலக்கியச் சான்றுகளால் நிறுவியுள்ளார்.

சோழ சாளுக்கியப் போட்டி *1063—1067:* கூடல் சங்கமப் போர் *1064:*

வீர ராசேந்திர சோழன் கால முழுவதும் பெரிதும் போர்களிலேயே கழிந்தன. தன் தமையன்மார் கொண்ட உறுதிகளைத் தான் நிறை வேற்றியதாகவும், 'ஆகவமல்லனை ஐம்மடி வெந்கொண்டதாக, அதாவது ஐந்து தடவை போரில் முறியடித்ததாகவும் இவன் மெய்க்கீர்த்தி கூறுகிறது. இந்த ஐந்து போர்களும் கூடல் சங்கம வெற்றியுடனும் விசயவாடா வெற்றி யுடனும் நிறைவு பெறுகின்றன.

முதற்போர் *1063:*

ஆகவமல்லன் பெருவீரனான தன் இளைய மகன் விக்கிரமாதித்தனைத் தன் பேரரசின் தென் எல்லையாகிய கொள்ளிப்பாக்கையில் அமர்த்தி, தக்க சமயம் பார்த்துச் சோழரிடமிருந்து கங்க பாடியைக் கைப்பற்றும்படி கூறியிருந்தான். வீர ராசேந்திரன் முடிசூட்டு விழாவில் ஈடுபட்டிருந்த சமயம் விக்கிரமாதித்தன் இப் படையெடுப்பில் முனைந்தான். முடிசூட்டு விழாவை அவசர அவசரமாக முடித்துவிட்டு வீரராசேந்திரன் பெரும் படையுடன் வடக்கே சென்று விக்கிரமாதித்தனை முறியடித்தான்.

*2*-ம் போர் *1064:*

கீழைச் சாளுக்கிய மன்னன் இராசராச நரேந்திரன் சோழன் இரண்டாம் இராசேந்திரனின் மருமகன், முதல் இராசராசனின் மகன் பிள்ளையாகிய பேரன். அவன் 1064-ல் உயிர்துறந்தான். அத் தறுவாயைப்பயன்படுத்தி, அவன்மகன் இரண்டாம் நரேந்திரன் பட்டத்துக்கு வருமுன்பே, மேலைச் சாளுக்கிய அரசன் ஆகவமல்லன் தன் கீழ் வனவாசித் தண்ட நாயகனாய் இருந்த சாமுண்டராயனை அனுப்பிக் கீழைச்சாளுக்

கிய நாட்டை வென்றுகொள்ள எண்ணினான். ஆனால் வீர ராசேந்திரன் அவனுடன் போராடி அவனை முறியடித்து அவன் தலை துணித்தான். சாமுண்டராயன் புதல்வியைக் கைப்பற்றி மூக்கை அரிந்ததாகவும் சோழரது கருவூர்க்கல்வெட்டு கூறுகிறது.

3-ம் போர் *1064:*

இதுவே கூடல் சங்கமப் போர் ஆகும்.

கூடல் சங்கமம் என்பது துங்கபத்திரையும் கிருஷ்ணையும் கூடும் இடத்திலுள்ள கூடலியாய் இருக்கவேண்டும் என்று சிலர் கூறுகின்றனர். ஆனால் அது கிருஷ்ணையும் பஞ்ச கங்கை யாறுகளும் கூடும் இடத்தில் பெல்காம் மாவட்டத்தில் கிட்ணப்பூர்ப் பகுதியிலே இருந்தது என்று கருத இடமுண்டு. எனெனில் இந்தக் களத்திலேயே கொப்பப்போர் நடைபெற்றதாகல் வேண்டும். மற்றும் இதே சங்கமத்துக்குப் பின்னும் ஒரு தடவை ஆகவமல்லன் வீர ராசேந்திரனைப் போருக்கழைத்தபோது சோழர் கரந்தை என்ற இடத்திலேயே காத்திருந்தனர் என்று அறிகிறோம். கரந்தை பஞ்ச கங்கை யாற்றுப் பக்கமே உள்ளது.

மேலைச் சாளுக்கியர் வடக்கிருந்து பெருகிவரும் கடல் போன்ற ஒருபெரும் படை திரட்டிக்கொண்டு களத்தில் அணி யணியாக வந்தனர். இருதரப்பினரும் வெற்றி எப்பக்கம் சாயும் என்றறியாத நிலையில் நெடுநேரம் போராடினர். இறுதியில் வீர ராசேந்திரனே பெரு வெற்றியுற்று, சாளுக்கிய வேந்தனான ஆகவமல்லன் பாசறையை முற்றுகையிட்டு அவன் மனைவியரையும் பட்டத்து யானையாகியப் புட்பகப் பிடியையும் வராகக் கொடியையும் யானைகுதிரை களையும் மற்ற நிதிக் குவைகளையும் கைப்பற்றிச் சோணாட்டுக்கு அனுப்பினான்.

போரில் மேலைச் சாளுக்கிய தண்டநாயகர்களான கேசவன், கேத்தரையன், மாரயன், போத்தரயன், இரேச்சயன் முதலியவர்கள் கொலையுண்டனர். படைத் தலைவனாகிய மதுவணனும், மன்னனின் மக்களாகிய விக்கிரமாதித்தன், சயசிங்கன் ஆகியவர்களும், மன்னன் ஆகவமல்லனும் போர்க்களத்திலிருந்து சிதறி யோடினர்.

சோழன் வீர ராசேந்திரன் தன் தலைநகரான கங்கை கொண்ட சோழபுரம் சென்று வெற்றி மணிமுடிசூடி அபிடேகம் செய்துகொண்டான்.

''குந்தளரையுந் கூடல் சங்கமத்து வென்ற
கோன் அபயன்'
(கலிங்கத்துப் பரணி, இராச பாரம்பரியம், 29)

என்று சயங்கொண்டாரும்;

''கூடலார்
''சங்கமத்துக் கொள்ளும் தனிப்பரணிக்கு எண்ணிறந்த
துங்கமதயானை துணித்தோனும்...........''
(விக்கிரமசோழன் உலா 42—44)

''பாடஅரிய பரணி பகட்டணி வீழ்
கூடலார் சங்கமத்துக் கொண்டகோன்''
(இராசராச சோழன் உலா 49—50)

என்று ஒட்டக்கூத்தரும் இப் போரின் முரசு முழக்குகின்றனர். வீரராசேந்திரன் மெய்க்கீர்த்தியும் கல்வெட்டுக்களும் காவிய முறையில் இப்போரைப் புனைந்து விரித்துரைக்கின்றன.

சோழ சாளுக்கியப் போட்டி; 1066—1067

கிருஷ்ணை ஆற்றுப் போர் 1066 விசயவாடாப் போர் 1067

சோழ சாளுக்கியப் போட்டி கூடல் சங்கமத்துப் போரினுல் முற்றுப் பெறவில்லை. இரண்டாண்டுகளுக்குள் மீண்டும் தொடங்கிற்று.

நான்காம் போர்: கிருஷ்ணையாற்றுப் போர்: 1066

இது ஏதோ ஓர் ஆற்றின் பக்கம் நடைபெற்றதாக மட்டும் அறிகிறோம். ஆற்றின் பெயரோ, இடமோ திட்டவட்டமாகத் தெரியவில்லை. ஆயினும் முன் பின் போர்களைப் போலவே இதுவும் கிருஷ்ணையாற்றின் பக்கம் நடந்திருக்கக் கூடும். இப்போரில் சாளுக்கியப் படைத்தலைவர்களான மல்லியண்ணன், மஞ்சிப் பையன், பிரமதேவன், அசோகையன், சத்தியண்ணன், வீமையன், வங்காரன் ஆகியோர் களத்தில் பட்டனர். தவிர, சாளுக்கியருக்கு உதவியாக வந்த கங்கன், நுளம்பன், காடவர்கோன், வைதும்பராயன் என்ற சிற்றரசர்களும் உயிர் நீத்தனர்.

ஐந்தாம் போர்: விசயவாடாப் போர்:

சக்கரக்கோட்ட வேற்றி: 1067

'கூடல் சங்கமத்திலேயே இன்னொரு முறை என்னுடன் போர் புரிந்துபார், அப்போதுதான் நீ வீரன்' என்று வாய்த்துடுக்காக ஆகவமல்லன் மீண்டும் வீரராசேந்திரனுக்குச்

கங்காகேத்தன் என்ற படைத்தலைவன் மூலம் சொல்லியனுப் பியதாகக் கேள்விப்படுகிறோம். அதன்படி வீர ராசேந்திரன் படையுடன் கூடல் சங்கமத்துக்கு அருகிலுள்ள கரந்தையில் சென்று காத்திருந்தான். ஆனால் ஆகவமல்லன் வரவில்லை. ஒரு மாதம் வரை காத்திருந்தான். சோழன் சீற்றங்கொண்டு அப் பகுதியிலிருந்த தேவநாதன், சித்தி, கேசி என்ற படைத்தலை வர்களைத் தோற்கடித்துத் துரத்தினான். நகரங்களை எரியூட்டிக் களத்திலேயே வெற்றித் தூண் நாட்டினான். அத்துடன் ஆகவ மல்லனைப்போல உருவம் செய்து, கழுத்தில் கண்டிகை பூட்டி, 'ஐந்து தடவை தோற்று ஓடியவன்' என்ற விளம்பரப் பலகை எழுதி மார்பில் தொங்கவிட்டு, ஊர்வலம் கொண்டு சென்று அவமதித்தான். இதன் பின்னும் ஆகவமல்லன் வராதது கண்டு அவன் வியப்புற்றான்.

ஆகவமல்லன் வராமைக்குக் காரணம் அவன் மாள்வே என்பது சோழனுக்கு நெடுநாள் தெரியாது. 1068-ல் அவன் நீரில் மூழ்கி உயிர் நீத்தான்.

ஆறும் போர்: விசயவாடாப் போர்: 1068

ஆகவமல்லன் இறந்தது அவன் மகன் விக்கிரமாதித்தனுக் கும் தெரியாது. அவன் கீழைச்சாளுக்கியரை வென்று அவர் கள் நாட்டைக் கைக்கொள்ளும் பணியில் ஈடுபட்டிருந்தான். சாளுக்கியப் பெரு வீரனான அவன் கீழைச்சாளுக்கியரை வென்றதுடன் அமையாமல் அவர்கள் நாட்டுக்கு வடக்கே யுள்ள சக்கரக் கோட்டத்தையும் கைப்பற்றினான்.

கூடல் சங்கமத்துப் போர்க் களத்தருகே நின்று விரைந்த வீர ராசேந்திரன் கீழைச் சாளுக்கியர் நாட்டை மீண்டும் கைப்பற்ற முனைந்தான். அவனைத் தடுத்து நிறுத்த முனைந்த னர், சாளுக்கியப் படைத் தலைவர்களான சனநாதன், இராச மய்யன், திப்பரசன் ஆகியோர். இரு தரப்பினருக்கும் 1068-ல் விசயவாடாவில் கடும்போர் நிகழ்ந்தது. அதில் சாளுக்கிய படைத்தலைவர்கள் முற்றிலும் தோல்வியடைந்து காட்டுக்குள் ஒளித்தோடினர். பின்னர் சோழன் சக்கரச் கோட்டம் தாண்டி வேங்கைநாட்டின் வடபகுதியையும் வென்றான். விக் கிரமாதித்தனிடமிருந்து தோற்றோடி தன்னிடம் வந்து அடைக் கலம் புகுந்திருந்த கீழைச் சாளுக்கிய மன்னன் ஏழாம் விசயா தித்தனிடமே அவன் நாட்டை ஒப்படைத்து மீண்டான்.

சோழ சாளுக்கியப் போட்டி: ஏழாம்போர்: 1068—1070

இச்சமயம் ஆகவமல்லன் இறந்ததனால் அவன் பிள்ளை களான இரண்டாம் சோமேசுவரன், ஆறும் விக்கிரமாதித்தன்

ஆகியோருக்கிடையே பிளவுஏற்பட்டது.மூத்தவனுனசோமேசுவரனே அரசனுனன். விக்கிரமாதித்தன் சோழன் உதவி நாடினுன்.

வீர ராசேந்திரன் துற்போதைய அனந்தப்பூர் மாவட்டத்திலுள்ள குத்தியை முற்றுகையிட்டான். பின் கம்பிலி நகரை எரி யூட்டினுன். இடைதுறை நாடு புகுந்து அங்குள்ள கரடிக்கல் என்ற இடத்தில் வெறறித் தூண் நாட்டினுன். இறுதியில் சோமேசுவரனைத் துரத்திவிட்டு, விக்கிரமாதித்தனையே மன்னனுக்கிப் பட்டம் கட்டினுன். தன் புதல்வியையும் அவனுக்கு மணம் செய்து கொடுத்து, சாளுக்கியர் பகையரசை நட்பரசாக்கித் தன் வயப்படுத்தவும் முயன்ருன்.

விக்கிரமாதித்தன் வாழ்க்கையைச் சமஸ்கிருத காவியமாக்கிய பில்கணன் விக்கிரமாதித்தன் வெற்றிக்கு அவன் தம்பி சயசிம்மனும், கோவாவிலிருந்து ஆண்ட கடம்பகுல மன்னன் சயகேசி, மைசூர்ப் பகுதியில் ஆண்ட ஆளுபவேந்தன் ஆகியோர் உதவியே காரணம் என்று கூறுகிருன். அவன் வலிமை கண்டு சோழன் அவனை மருமகனுக்கி நேசம் காட்டியதாகவும் குறிக்கிருன். ஆனுல் சயசிம்மன் முதலியோர் சோழ அரசன் நட்புப்பெறும் வகையிலேயே முனைந்து உதவி யிருந்தன ராதல் வேண்டும் என்னலாம்.

இராஷ்டிரகூடர் மண உறவால் முன் சோழர் நன்மைக்கு மாருகத் தீமையே அடைந்தது போல, சாளுக்கியரின் இப் புதிய உறவும் விரைவில் நேசத்துக்கு மாருகப் பகைமையையே வளர்த்தது.

## இரண்டாம் கடார வெற்றி; 1068.

சோழர் மேலுரிமை ஏற்றிருந்த கடார அரசில் அரசுரிமை காரணமாகப் பிளவு ஏற்பட்டது. அரசிழந்து தன்னிடம் அடைக்கலம் புகுந்த இளவரசனுக்கு உதவியாக, வீர ராசேந்திரன் தன் படைத்தலைவர்களை அனுப்பினுன், கடாரத்தை மீட்டு அவன் நட்புக்குரியவனிடமே தந்தான்.

கீழைச் சாளுக்கிய அரசன் ஏழாம் விசயாதித்தனின் உறவினன் சாளுக்கிய இரண்டாம் இராசேந்திரன் வீர ராசேந்திரனின் மருமகன். பின்னுளில் முதலாம் குலோத்துங்க சோழனுனவன் அவனே. கீழைச் சாளுக்கிய அரசை ஏழாம் விசயாதித்தன் பெற்றதனுல், அவன் சிலகாலம் முதலாம் இராசேந்திரன் வடதிசையில் வென்ற நாடுகளில் சிலவற்றைக் கைக்கொண்டு ஆண்டு வந்தான். இக்கடாரப் போரில் அவனும் படைத்தலைவர்களுள் ஒருவனுகச் சென்று போர் செய்து புகழ் பெற்ருன்

என்று தோற்றுகிறது. ஏனெனில் கடாரப் பேரரசிலிருந்து இச் சமயம் சீனத்துக்கு அனுப்பட்ட தூதுவர் அவனையே கடாரப் பேரரசனாகக் குறித்துள்ளனர்.

'பரக்கும் ஓதக் கடாரம் அழித்த நாள்' (கலிங்கத்துப் பரணி 618) என்று கலிங்கத்துப்பரணி முதலாம் குலோத் துங்கனுக்கும் கடார வெற்றியை உரிமையாக்கி யிருப்பது இதனாலேயே என்னலாம்.

முதலாம் குலோத்துங்கன் வடதிசை வெற்றிகள்;
வயிராகரப் போர்: சக்கரக் கோட்டப் போர்

சோழப் பேரரசனாகு முன்னும், கடாரம் செல்லுமுன்னும் கீழைச்சாளுக்கிய இரண்டாம் இராசேந்திரனாயிருந்த முதலாம் குலோத்துங்கன் அடைந்த வடதிசை வெற்றிகளில்வயிராகரப் போரும், சக்கரக் கோட்ட வெற்றியும் முனைப்பாக மூவரு லாக்களிலும் கலிங்கத்துப் பரணியிலும் குறிக்கப்படுகின்றன. இவற்றில் சக்கரக் கோட்டத்தில் ஆட்சி செய்த அரசன் தாராவிலிருந்து ஆண்டவன் என்று தெரிகிறது. அது தாரா வில் ஆண்ட வடதிசைப் பெரும்புகழ் விக்கிரமாதித்தனாய் இருக்கக் கூடும். ஆனால் வென்ற நாடுகளுள் வத்தவநாடு ஒன்று என்று குறிக்கப்படுகிறது.

விருதராசபயங்கரன் முன்னொர் நாள்
வென்றசக்கரக் கோட்டத்திடை
(கலிங்கத்துப் பரணி 6—14)

'வளவர்பிரான் திருப்புருவத்
தனுக்கோட்டம் நமன்கோட்டம்
பட்டத்து சக்கரக்கோட்டம்
(கலிங்கத்துப் பரணி 10—23)

மாறுபட்டெழு தண்டெழ, வத்தவர்
ஏறுபட்டதும் (கலிங்கத்துப் பரணி 11—73)
புகையெரி குவிப்ப வயிரா
'கரம்எரிமடுத்தும்' (கலிங்கத்துப் பரணி 10—71)

எனச் சயங்கொண்டாராலும்.

''வஞ்சனைகடந்து வயிராகரத்துக்
குஞ்சரக் குழாம் பல வாரி, எஞ்சலில்
சக்கரக்கோட்டத்துத் தாரா அரசனைத்
திக்குநிகழத் திறைகொண்டருளி''
''விளங்கு சயமகளை இளங்கோப் பருவத்துச்
சக்கரக்கோட்டத்து விக்கிரமத் தொழிலால்''

"வயிராகரத்துவாரி அயிர்முனைக்
கொந்தள வரசர் தந்தளமிரிய"

என்று கல்வெட்டுக்களாலும் இவை புகழப் பெறுகின்றன.

இளமைக் காலத்திலேயே ஒரு தென்னாட்டு நெப்போலியனாக விளங்கிய இவ் வீரன் அரசியல் மேதையாகவும் இருந்தான் என்று கூறவேண்டும். ஏனெனில் பேரசனான பின் அவன் தன் வீரப் போரார்வம், பேரவா ஆகிய உட்பகைகளையே அடக்கி, தற்காப்புப் போர்களுடன் பெரிதும் அமைந்து நின்றான். அத்துடன் பேரரசின் எல்லை குறைந்தாலும் வலிமை குறையாமலிருப்பதிலும், நல்லாட்சியமைப்பதிலுமே அவன் கண்ணும் கருத்துமாய் இருந்தான். இக் காரணங்களாலேயே சோழப பேரரசரிடையே தலை சிறந்த பெருவீரனான முதலாம் இராசேந்திரனைத் தாண்டி வரலாற்றாசிரியர் அவனை முதலாம் இராசராசனுக்கு ஒப்பாகக் கருதியுள்ளனர்.

வீர ராசேந்திரனுக்குப்பின் அவன் மகனும் மேலைச்சாளுக்கிய விக்கிரமாதித்தன் மைத்துனனுமான அதிராசேந்திரனை அரசுரிமையைப் பெற்றாலும், அவன் முதலாண்டுக்குள்ளேயே உயிரிழந்தான். ஆகவே குலோத்துங்கன் சோழப்பேரரசுரிமை பெற்று கீழைச்சாளுக்கிய மரபிலிருந்த இரண்டாம் இராசேந்திரன் என்ற பெயரை மாற்றிக் குலோத்துங்கன் என்ற பெயருடன் ஆட்சிதொடங்கினான். அவன் ஐம்பதாண்டுக்கால ஆட்சியே (1070-1120) சோழப்பேரரசு அமைதியும் வலிமையும் ஒருங்கே பெற்றிருந்த நடுக்காலமும் பொற்காலமும் ஆகும் என்னலாம்.

**சோழ சாளுக்கியப் போட்டி 1075-6: நங்கிலி, மணலி, அளத்தி, நவிலை, துங்கபத்திரைச் செங்களப் போர்கள்.**

கீழைச் சாளுக்கியரும் சோழரும் முன்னிலும் இணக்கமாக ஒன்றுபடுவது காணப் பொறுக்காமல், மேலைச் சாளுக்கிய விக்கிரமாதித்தன் சோழர்மீது தாக்கும் எண்ணத்துடன் ஐந்தாண்டுகளாகப் பெரும்படை திரட்டி வந்தான். சோழனும் அதனை அறிந்து தன் படைகளைச் செப்பம் செய்துவந்தான்.

நங்கிலிப்போர் 1075: இச்சமயம் மேலைச்சாளுக்கியப் பேரரசு இருபிளவாகியிருந்தது. வடதிசையில் ஆகவமல்லன் முதற் புதல்வனான இரண்டாம் சோமேசுவரனும், தெற்கே அவன் இளவலான ஆறும் விக்கிரமாதித்தனும் ஆண்டுவந்தனர். இருவரிடையேயும் நல்லுறவு இல்லாததறிந்து, குலோத்துங்

கன் மெல்லச் சோமேசுவரனைத் தன் பக்கம் இழுத்துக்கொண்டான். ஆனால் விக்கிரமாதித்தன் பக்கம் அவன் இளவல்களான சயசிம்மனும் விசயாதித்தனும் இருந்தனர். அத்துடன் கோவாவிலிருந்துகொண்டு கொண்கான முழுதும் ஆண்ட கடம்பகுல மன்னன் சயகேசியும், ஹொய்சள அரசன் விசயாதித்தனும் அவன் மகன் எறெயங்கனும், உச்சங்கியிலிருந்து கொண்டு நுளம்பவாடியை ஆண்ட பாண்டியன் திரிபுவன மல்லனும், வட திசையில் தேவகிரியாண்ட யாதவமன்னன் இரண்டாம் சேவுணனும் விக்கிரமாதித்தனையே ஆதரித்தனர்.

நங்கிலி என்பது மைசூரில் கோலார் வட்டத்திலுள்ளது.

இப்போரில் சோழனுக்கு உதவிய இரண்டாம் சோமேசுவரன் தன் உடன் பிறந்தானிடம் சிறைப்பட்டான். விக்கிரமாதித்தன் அவன் நாட்டையும் தன் நாட்டுடனே சேர்த்துக் கொண்டான். இச்செயல் பின்னாட்களில் சாளுக்கியப் பேரரசை மீண்டும் வலுப்படுத்த உதவிற்று. ஆயினும் நங்கிலிப் போரில் சாளுக்கியர் அடைந்த தோல்வியை இது ஈடுசெய்யவில்லை. சோழர் பெரு வெற்றி எய்தினர். தோற்றோடிய சாளுக்கியரைத் துங்கபத்திரை கடந்தும் துரத்திக்கொண்டு சென்று மீண்டும் பல போர்களில் முறியடித்தனர்.

கங்கவாடி முழுவதும் சோழர் கைவசமாயிற்று.

மணலிப்போர்: தோற்றோடிய சாளுக்கியர் இங்கே மீண்டும் தோல்வியுற்றனர்.

அளத்திப்போர்: இங்கும் சோழரே பெரு வெற்றிகொண்டு, சாளுக்கியர் யானைகள் பலவற்றைக் கைக்கொண்டனர்.

> 'தளத்தொடும் பொரு தண்டு எழப் பண்டு ஓர்நாள்
> அளத்திபட்டது அறிந்திலை, ஐயநீ?'
>
> (கலிங்கத்துப் பரணி 11: 74)

என்று சயங்கொண்டாரும்,

> 'அளத்தியிலிட்ட களிற்றினது ஈட்டமும்'

என்று குலோத்துங்கன் மெய்க்கீர்த்தியும் இப் போருக்குச் சான்று பகர்கின்றன.

நவிலைப்போர்: இங்கும் சோழர் வெற்றிபெற்று ஆயிரக் கணக்கான யானைகளைப் பெற்றனர்.

> 'தண்டநாயகர் காக்கும் நவிலையில்
> கொண்ட ஆயிரம் குஞ்சரம் அல்லவோ?'
>
> (கலிங்கத்துப் பரணி 11: 75)

துங்கப்பத்திரைச் செங்களப்போர்: இப்போரில் விக்கிரமாதித்தனும் அவன் தம்பி சயசிம்மனும் ஓடி ஒளிந்தனர்.

துங்கபத்திரைச் செங்களத்திடைச்
சோழசேகரன் வாள்எறிந்தபோர்
வெங்கதக் களிற்றின் படத்திஞல்
வெளியடங்கவே மிசைக்கவித்துமே
(கலிங்கத்துப் பரணி 4—7)

என்று இப்போரைச் சயங்கொண்டார் பாடியுள்ளார்.

இப்போரால் கங்க மண்டலத்துடன் கொண்கானமும் (சிங்கணமும்) சோழப் பேரரசில் நிலையாகச் சேர்ந்தது.

இப் போர்களிஞல் சோழப் பேரரசு புகழும் செல்வமும் பெற்றது. ஆட்சியெல்லையும் ஒரு சிறிதே விரிவடைந்தது. ஆஞல் சோமேசுவரன் ஆண்ட பகுதியையும் பெற்றதன் மூலம் விக்கிரமாதித்தன் தன் வாழ்வைப் பெருக்கிக் கொள்ள முடிந்தது.

### சோழ பாண்டியப் போட்டி: 1081: செம்பொன்மாரிப் போர்:

முதலாம் இராசேந்திரன் பாண்டி நாட்டில் செய்த ஏற்பாட்டின்படி அவன் மகன் சடையவர்மன் சுந்தரசோழ பாண்டியன் 1042 வரையிலும், அதன் பின் அவன் பிள்ளைகள் இருவரும்பேரனும்சோழபாண்டியராகஇருந்துபாண்டிய நாட்டை ஆண்டனர். ஆஞல் குலோதுங்கசோழன் ஆட்சித் தொடக்கத்தில் சோழப் பேரரசில் உள்நாட்டுக் குழப்பநிலை ஏற்பட்டிருந்ததால், அதனைப் பயன்படுத்திப் பாண்டிய மரபினர் ஐவர் நாட்டைக் கைப்பற்றி ஆண்டனர். பாண்டிநாடு கை நெகிழவே, சேரநாடும் ஈழநாடும் அதுபோலவே நெகிழ்வுற்றன. குலோத்துங்கன் வடதிசைப் போர் முடிந்தும், இதுவகையில் அவசரப்படாமல், ஆர அமர இருந்து ஆட்சியை வலுப்படுத்தி, படைகளையும் திரட்டிக்கொண்டு 1081-ல் தெற்கே படையெடுத்தான்.

பாண்டியருடன் செம்பொன்மாரி என்ற போர்க்களத்தில் ஒரு பெரும் போர் நடைபெற்றது. சேரரும் பாண்டியருக்கு இப் போரில் உதவினர் என்று தெரிகிறது. பாண்டியன் 'தற்கொலைப்' படை அல்லது மூலதளப் படையான 'சாவேர்ப் படை' கடைசி மூச்சுவரைப் போராடி மாண்டது. பாண்டியர் ஐவரும் முற்றிலும் தோற்றுக் காட்டில் புகுந்து ஒளிந்துகொண்டனர். பாண்டியர் ஆண்ட முத்துச்சலாபக் கரையும், சைய மலை, பொதியமலைப் பகுதிகளும், கன்னியாகுமரிப் பகுதியும் சோழப் பேரரசுக்குள் மீண்டும் இடம் பெற்றன.

'விட்டதண்டுஎழ மீனவர் ஐவரும்
கெட்டகேட்டினைக் கேட்டிலை போலும்நீ?'
(கலிங்கத்துப் பரணி 11—70)

என்று பெரும் பரணியும்,

'வடகடல் தென்கடல், படர்வது போலத்
தன்பெருஞ் சேனையைஏவி, பஞ்சவர்
ஐவரும் பொருத போர்க் களத்தஞ்சி
வெரிந் அளித்துஓடி அரண் எனப்புக்க
காடு அறத்துடைத்து நாடுஅடிப்படுத்து'

என மெய்க்கீர்த்தியும் இதனைக் குறிக்கின்றன.

**சேரநாட்டுப் படையெடுப்பு 1081; விழிஞப்போர் II காந்தளூர்ச்சாலைப் போர் II: கோட்டாற்றுப் போர்:—**

குலோத்துங்கன் ஆட்சித் தொடக்கத்தில் ஏற்பட்டிருந்த குழப்பத்தில் சேரநாட்டுப் பகுதியில் மீண்டும் பல சிற்றரசர் தலையெடுத்திருந்தனர். அவர்களில் சேரன் அல்லது திருவாங்கூர் அரசன் ஒருவன் என்று தோன்றுகிறது. ஏனெனில் சேரர் கடற்படை பற்றிக் கேள்விப்படுகிறோம்.

விழிஞத்தில் போர்க்கஞ்சாத மலைநாட்டு வீரர் மிகப் பலர் தம் உயிரைக் காவு கொடுத்தும் இறுதியில் சேரர் தோல்வியே அடைந்தனர். காந்தளூர்ச் சாலையில் கடற்படைகள் இருமுறை அழிக்கப்பட்டன. கோட்டாற்றுப்போர் கடும் போராயிருந்தது. அதன் வெற்றியின் பின் குலோத்துங்கன் அந்நகரை எரியூட்டினான். ஆனால் போரின் முடிவில் அந்நகரே மீண்டும் செப்பம் செய்யப்பட்டிருக்கவேண்டும். ஏனெனில் சேர நாட்டிலுள்ள சோழரின் நிலைப்படைக்கு அதுவே தளமாக்கப்பட்டது.

கோட்டாறு என்பது நாகர்கோயிலுக்கு அணிமைக் காலம் வரை வழங்கிய பழம்பெயர். கோட்டாற்று நிலப்படை சோழர் பாளையங்களில் முதன்மை யுடையதாயிற்று.

'வேலைகொண்டு விழிஞம் அழித்ததும்
சாலைகொண்டதும் தண்டு கொண்டேயன்றோ?'
(கலிங்கத்துப் பரணி 11; 72)

'வெள்ளாறும் கோட்டாறும் புகையால் மூட'
(கலிங்கத்துப் பரணி 8: 21)

என்று பரணியும்,

*சேலைத்துரந்து சிலையைத் தடிந்து இருகால்*
*சாலைக் கலம் அறுத்த தண்டினான்'*
(விக்கிரம சோழனுலா 46—48)

என்று உலாவும் பாடியுள்ளன.

**கலிங்கப்போர் I (தென்கலிங்கம்) 1096.**

*தென் கலிங்கம் என்பது கோதாவரி ஆற்றுக்கும் மகேந்திர கிரிக்கும் இடைப்பட்ட நாடு. அது வேங்கை நாடாண்ட கீழைச் சாளுக்கியருக்கு உட்பட்டது. ஆனால் தென் கலிங்க நாடாண்ட வீமன் தன்னுரிமையாக ஆள எண்ணிக் கிளர்ச்சிகள் செய்தான். குலோத்துங்கன் தன் புதல்வன் விக்கிரம சோழனை அனுப்பி அவனை மீண்டும் கீழடக்கினான். விக்கிரம சோழனே (1093—1113) கலிங்க நாட்டு ஆட்சியையும் ஏற்றான்.*

குலோத்துங்கனை எதிர்த்துக் கிளர்ச்சி செய்த பாண்டியர் ஐவருள் ஒருவன் தோற்றோடியபின் மீண்டும் வந்து சோழருக்குப் பணிந்து ஆட்சியை மேற்கொண்டிருந்தான். இவனே சடையவர்மன் பராந்தக பாண்டியன். தென்கலிங்கப் போரில் விக்கிரம சோழனுடன் அவனும் கலந்துகொண்டிருந்தான். அவன் மெய்க்கீர்த்தி இதனால் அவனுக்கும் தென்கலிங்க வெற்றியை உரிமைப் படுத்தியுள்ளது,

'தெலுங்க வீமன் விலங்கல்மிசை ஏறவும்
கலிங்க பூமியைக் கனல் எரிபருகவும்,
ஐம்படைப் பருவத்து வெம்படைதாங்கி,
வேங்கை மண்டலத்து ஆங்கு இனிது இருந்து,

என விக்கிரமசோழன் மெய்க்கீர்த்தியும்,

'தெலுங்கவீமன் குளங்கொண்டு
தென்கலிங்கம் அடிப்படுத்துத்
திசையனைத்தும் உடனாண்ட
சிரீ பராந்தகதேவர்'

எனப் பாண்டியர் மெய்க்கீர்த்தியும் இதனை இயம்புகின்றன.

*1098-ல் தென் கலிங்கத்தில் மீண்டும் எழுந்த கிளர்ச்சியொன்றை நரலோக வீரன் என்ற சோழர் படைத்தலைவன் அடக்கினான்.*

**கலிங்கப்போர் II (வடகலிங்கம்) 1112**

*வடகலிங்கத்தை ஆண்ட மன்னன் அனந்தவர்மன் 1074-ல் பட்டம்பெற்று 1150-வரை எழுபத்தைந்து ஆண்டுகள் அளவில் மிக நீண்டகாலம் ஆண்டவன். அவன்சோடகங்க*

மரபின் முதல் அரசனாதலால், சோழருடன் தொடர்புடையவன். குலோத்துங்கன் புதல்வியையே அவன் மணந்தான் என்றும் கருதப்படுகிறது. அவன் அரசி தமிழ் இளவரசி என்பதில் மட்டும் சிறிதும் ஐயமில்லை. ஒருவேளை அவன் தாயும் தமிழ் இளவரசியாகவே இருந்திருக்கக்கூடும். ஏனெனில் அவன் ஆட்சியில் தமிழும் தமிழ்ப் புலவர்களும் கலிங்கநாட்டில் பேராதரவு பெற்றனர் என்று அறிகிறோம்.

அனந்தவர்மனுக்கும் குலோத்துங்கனுக்கும் பகைமை எப்படி, ஏன் உண்டாயிற்று என்று இன்று நம்மால் அறியக் கூடவில்லை. ஒருவேளை தெலுங்க வீமனுக்கோ சாளுக்கியருக்கோ அவன் உடந்தையாய் இருந்திருக்கக்கூடும். அனந்தவர்மன் இரண்டு தவணை திறை கொடாததே போருக்குரிய காரணம் என்று கலிங்கத்துப்பரணி கூறுகிறது.

இப்போரில் முழுப் பொறுப்பேற்றுச் சோழர் படைகளை நடத்திச் சென்ற மாதண்ட நாயகன் வண்டையர்கோன் கருணாகரத் தொண்டைமான் என்பவன். இவனுடன் வாண கோவரையன், முடிகொண்ட சோழன் என்ற வேறு இரண்டு படைத்தலைவர்களும் துணைசென்றதாகக் கலிங்கத்துப் பரணியில் காணப்படும் ஒரு தாழிசை கூறுகிறது. சோழப் படைகள் காஞ்சியிலிருந்து புறப்பட்டுப் பல காடுகள், மலைகள், நாடுகள் கடந்து சென்று கலிங்க நாட்டிற் புகுந்து பல நகர்களுக்குத் தீயிட்டுக் கொளுத்தின. அனந்தவர்மன் பெரும் படைகளைத் திரட்டிக்கொண்டு வந்து எதிர்த்தான். கடலுடன் கடல் மோதினாற் போன்ற பேராரவாரத்துடன் இரு படைகளும் மோதின, ஒன்றை ஒன்று வளைத்து மொய்த்தன. நீடித்த கைகலப்பின் பின் கலிங்கவீரர் நாற்புறமும் கலைந்தோடினர்.

தொண்டைமான் பல யானை, குதிரை, ஒட்டகங்கள், தேர்கள் மணிக்குவியல்கள் ஆகியவற்றுடன் மகளிரையும் கைப்பற்றினான். மலையில் ஓடிஒளிந்து கொண்ட மன்னனையும் மலையையே வில் வேலியால் சூழ்ந்து நின்று தேடிப் பிடித்தனர், சூறைப் பொருளுடனும் கட்டுண்ட கலிங்க மன்னனுடனும் வீரருடனும் சோணாடு திரும்பினர். குலோத்துங்கன் வெற்றித் தளபதியை எதிர்கொண்டழைத்துப் பெருமதிப்பு வரிசைகள் நல்கிப் பாராட்டினான்.

இப் போரில் மட்டையன், மாதவன், எங்கராயன், ஏஞ்சணன், இராசணன், தாமயன், போத்தயன், கேத்தணன் ஆகிய படைத்தலைவர்கள் உயிர் துறந்ததாகக் குலோத்துங்கன் மெய்க்கீர்த்தி கூறுகிறது. இவர்களுள் எங்கராயன் என்பவன் அனந்தவர்மன் அமைச்சனென்றும், தாமயன் அவன் தலை

மைத் தளபதியென்றும் கலிங்கத்துப் பரணியால் தெரிய வருகிறது.

குண்டூர் மாவட்டத்திலுள்ள 1108-ம் ஆண்டைய கல்வெட்டு ஒன்று சோடர் மரபு மன்னன் வீமன் கலிங்கனை வென்று சோழருக்கு உட்படுத்தியதாகக்கூறுகிறது. இச் சிற்றரசன் இரண்டாம் கலிங்கத்துப் போரில் சோழர் பக்கமிருந்து வெற்றியில் பங்கு கொண்டவனு யிருத்தல் கூடும்.

அனந்தவர்மன் எவ்வளவு நாள் சோழருக்கு வணங்கி நடந்தான் என்பது தெரியவரவில்லை.

ஈழவிடுதலை: 1073: அனுராதபுரம் போர் II, III:
பொலன்னருவாப் போர்:

குலோத்துங்கன் ஆட்சித் தொடக்கத்துக்குரிய குழப்பத்தைப் பயன்படுத்தி ஈழநாட்டார் ரோகணத்தில் ஆண்ட விசயபாகுவை இலங்கை முழுமைக்கும் அரசனுக்கினுர்கள்.

அனுராதபுரப் போர் II:

இதில் சோழர் படையெடுத்துச் சென்று போரிட்டு விசயபாகுவை வென்று அந்த நகரத்தைக் கைப்பற்றினர். விசயபாகு பொலன்னருவாவுக்குச் சென்றபோது சோழர் அங்குச் சென்று அவனைத் துரத்தினர். வேறுநகரங்களில் பதுங்கியிருந்து படை திரட்டிக்கொண்டு விசயபாகு மீண்டும் படையெடுத்தான்.

பொலன்னருவாப் போர்:

பொலன்னருவாவில் உக்கிரமான போராட்டம் நடைபெற்றது. முடிவில் விசயபாகு வெற்றி பெற்ருன். பெற்றதும் அவன் அனுராதபுரத்தைத் தாக்கினுன்.

அனுராதபுரப் போர்: III

விசயபாகுவின் படை இங்கே இறுதியாகச் சோழர் படையை முறியடித்துத் துரத்திற்று. விசயபாகு ஈழநாடு முழுமைக்கும் அரசனுனுன். சோழர் இலங்கையை நிலையாக இழந்தனர். ஆனுல் குலோத்துங்கன் புதிய ஈழ அரசனுடன் நேச உடன்படிக்கை செய்து கொண்டு, தன் புதல்வியருள் ஒருத்தியான சூரியவல்லியை விசயபாகுவின் புதல்வனுக்கு மணஞ் செய்வித்தான் என்று தெரிகிறது.

## கங்கவாடி இழப்பு: *1116*

தகடூரிலிருந்து ஆண்ட கொங்கு நாட்டின் குடி மன்னனை அதிகமானே சோழரால் கங்க நாட்டுக்கும் பிரதிநிதியாக அமர்த்தப்பட்டிருந்தான். 1116-ல் ஹொய்சள மன்னன் பிட்டிகவிஷ்ணு வர்த்தனனின் தண்ட நாயகனை கங்கராசன் அதிகமானைப் போரில் வென்று கங்கவாடியைக் கைப்பற்றிக் கொண்டான். ஹொய்சள மன்னனும் இது முதல் தலைக்காடு கொண்ட ஹொய்சளன் என்று விருதுப்பெயர் சூட்டிக்கொண்டான். இவ்வெற்றி மூலமே இதுவரை கிட்டத்தட்டக் குடி மன்னனாயிருந்த ஹொய்சளன் இப்போது வலிமை யுடைய முடியரசனாகத் தொடங்கினான்.

## தும்மேப் போர்: *1117*

பேரரசுகளின் போட்டிக் கிடையே ஹொய்சள அரசு மெல்ல வளரத் தொடங்குவதை நாம் இப்போது காண்கிறோம். ஹொய்சளன் பிட்டிக விஷ்ணுவர்த்தனன் சோழரை எதிர்த்தது போல விக்கிரமாதித்தனைக் கூட எதிர்க்க முயன்றான். ஆனால் இரு பேரரசுகளை ஒருங்கே பகைப்பது தவறு என்று கண்டு பணிந்தான். ஆனால் அண்டை அயல் அரசுகளைக் கைப்பற்றி ஆட்சியை விரிவுபடுத்த அவன் தயங்கவில்லை.

தும்மேப் போரில் அவன் உச்சங்கியிலாண்ட நுளம்ப பாண்டியனை திரிபுவனமல்லனை முறியடித்தான். உச்சங்கி இவ்வாறு அவன் கைப்பட்டது. இது கடம்பர் பகைமையை அவனுக்குத் தந்தது. ஆயினும் அப்போட்டியைச் சமாளித்து ஒரு தலை முறைக்குள் (1137-க்குள்) அவன் கங்கவாடி, உச்சங்கி, ஹாங்கல் ஆகிய பகுதிகளுக்கு அரசனானான்.

## வேங்கைநாடு இழப்பு *1118*

வேங்கைநாட்டில் குலோத்துங்கன் தன் பிரதிநிதிகளாகத் தன் மக்களுள் ஒவ்வொருவரை அனுப்பியே ஆண்டு வந்தான். வட எல்லையில் வேங்கை நாட்டைக்காக்கவே இரு கலிங்கப் போர்களும் எழுந்தன என்னலாம். 1118-க்குப் பின் குலோத்துங்கன் வேங்கை நாட்டைத் தானே வைத்துக் காக்க விரும்பாமல், முதலாம் கொண்கன் புதல்வன் சோடன் என்ற ஒரு தெலுங்குச் சோழனிடமே அதை விட்டுவிட்டான். அந்த ஆண்டே விக்கிரமாதித்தன் அதைக் கைப்பற்றித் தனக்குட்பட்ட அரசாக்கினான்.

## முதலாம் குலோத்துங்கன் வெளிநாட்டுத் தொடர்பு:

இலங்கை, கங்கவாடி, வேங்கை நாடுகளைக் குலோத்துங்கன் மனமார விட்டுக்கொடுத்தே இழந்திருக்க வேண்டும் என்று எண்ண இடமுண்டு. இராசராசன் காலத்திலிருந்து சோழர் தம் ஆட்சி எல்லையையே ஒரு தமிழகம் கடந்த புதிய தேசீய எல்லையாக்க அரும்பாடுபட்டனர். அதில் அவர்கள் அடைந்த வெற்றியின் அளவே இன்றைய இந்திய மாநிலத் தேசீயத்தின் அளவாகும். ஆனால் கங்கை வெளியில் பரவிய அளவு தெக்காணப்பகுதியில் சோழர் வெற்றி காண முடியவில்லை. வடமேற்கு நாகரிகக் குளறுபடி தென்னாட்டின் வட மேற்குப் பகுதியான மேலைச் சாளுக்கியரின் குந்தள நாட்டையும், அதன் அருகேயுள்ள கீழ்கரை வேங்கை கலிங்க நாடுகளையும் பாதித்தன. இந் நிலையில் குலோத்துங்கன் தன் பேரரசின் எல்லையைத் தேசீய எல்லையாக்க முயலாமல், கெமால்பாஷாவைப்போலத் தேசீய எல்லையிலேயே பேரரசெல்லையைக் குறுக்கி, அதைத் தற்காலிகமாக ஒரு தமிழக வல்லரசாக்க எண்ணியிருக்கக்கூடும் என்னலாம். ஏனென்றால் ஆட்சியிறுதிக்காலத்தில் தமிழகத் தேசீய எல்லைக்கு வெளியேயுள்ள ஆட்சிப்பகுதியில் அவன் வீரமும் வீம்பும் காட்டாமல், அவற்றை மெல்லக்கைநெகிழவிட்டான். ஆனால் இதனால் பேரரசு வலிமையோ புகழோ சிறிதும் குறைபட வில்லை என்பதைப் பிற்கால இலக்கியங்களின் பெருமிதத் தொனியேகாட்டும். உண்மையில் பேரரசின் குறுக்கத்துக்குப் பின்னரே நாம் இந்தப் பெருமிதத் தொனியைக் காண்கிறோம் என்னலாம். புவிப் பேரரசரைக் கவிப் பேரரசர்கள் பாடிய காலம் குலோத்துங்கனுக்குப் பிற்பட்ட காலமே.

குலோத்துங்கன் வெளிநாட்டுத் தொடர்புகளிலேயும் நாம் இந்தப் புதுத் தத்துவத்தின் தடத்தை காண்கிறோம். நிலங்கடந்தும் கடல் கடந்தும் முற்பட்ட சோழப் பேரரசர் புற உலகில் நிறுவிய பேரரசு மதிப்பைவிட, தமிழகப் பேரரசனாக நின்ற குலோத்துங்கன் மதிப்பு மிகப் பெரிது என்பதை இவை காட்டுகின்றன. ஏனெனில் அது கிட்டத்தட்ட அவன் கால உலகினை அளாவியதாய் இருந்தது.

### (1) வட இந்தியா: கன்னோசி:

கன்னோஜ் அல்லது கன்யாகுப்ஜம் என்பது வடஇந்தியாவில் தற்கால உத்தரபிரதேசத்தில் காசிக்கு வடமேற்கிலுள்ள ஒரு நகரம். அதனை யாண்ட அரசனுடன் குலோத்துங்கன் நட்புறவு கொண்டிருந்தான். அவனால் கங்கை கொண்ட சோழபுரம் கோயிலுக்கு அளிக்கப்பட்ட நிவந்தம்

பற்றிய கல்வெட்டு எக்காரணத்தாலோ முற்றுப்பெரு நிலையில் உள்ளது. குலோத்துங்கன் காலத்தில் அந்நாட்டை ஆட்சி புரிந்தவர்கள் மதனகோபால தேவனும் அவன் புதல்வன் கோவிந்த சந்திரனும் ஆவர். கங்கைகொண்ட சோழபுரம் கல்வெட்டு 1111-ம் ஆண்டுக்குரியதாதலால் குலோத்துங்கனுடன் நேச உறவுகொண்ட அரசன் கோவிந்த சந்திரனுகவே இருக்கக்கூடும். இந் நட்புக்கு இன்னொரு சான்றும் உண்டு. கன்னேசி அரசன் சூரிய வழிபாட்டினன். அதை மதித்துக் குலோத்துங்கன் ஓா ஊரில் சூரியன் கோயில் அமைத்ததனுல், அது இன்றளவும் அக்கோயிற் பெயரை ஊர்ப் பெயராகக் கொண்டுள்ளது.

(2) பர்மா:

பர்மா தேசத்தில் புக்கம் என்ற நகரிலிருந்து ஆண்ட திரிபுவனதித்த தம்மராசன் (1084-1112) என்ற அரசன் ஒரு சோழ இளவரசனைப் புத்தசமயத்தினனுக்கி, அவன் மகளை மணந்துகொண்டான் என்றுபர்மா நாட்டுக் கல்வெட்டு ஒன்று உணர்த்துகிறது. இளவரசன் யார் என்று தெரியவில்லை. ஆனுல் சோழருக்கும் பர்மாவுக்கும் குலோத்துங்கன் காலத்தில் நேசத் தொடர்பு இருந்தது என்பதை இது காட்டும்.

பேகன் நாட்டரசன் கியான்ஸித்தாவுடனும் சோழன் தொடர்பு கொண்டிருந்தான்.

(3) கடாரம்:

இளமையில் கடாரப்போரில் ஈடுபட்டு அந்நாட்டரசனுக்கு உதவியவன் குலோத்துங்கன். அந் நட்பு நீடித்ததென்பதை அவன் ஆட்சி காட்டுகிறது. 1090-ல் இராச வித்தியாதர சாமந்தன், அபிமான துங்க சாமந்தன் என்ற இரு தூதரைக் கடாரத்தரசன் குலோத்துங்கனிடம் அனுப்பினுன். நாகப்பட்டினத்தில் இருந்த இராசராசப் பெரும்பள்ளி, இராசேந்திரப் பெரும்பள்ளி என்ற இரண்டு புத்தப் பள்ளிகளுக்கும் முன்பு அளிக்கப்பட்ட மானியங்களை உறுதி செய்து தரும்படி கடாரத்தரசன் கோரியபடி குலோத்துங்கன் செப்பேடுகள் வழங்கினுன். மேலும் இங்கே இராசேந்திரப் பெரும்பள்ளி என்பது முன்பு இரண்டாம் இராசேந்திரனுயிருந்த குலோத்துங்கன் உதவிக்கு நன்றியறிதலாகக் கடராத்தரசன் கட்டியதேயாகும் என்பது கவனிக்கத்தக்கது.

கடார வெற்றிக்குப் பின் குலோத்துங்கன் தென் கிழக்காசியா வெங்கும் சுற்றுப் பயணம் செய்திருக்கவேண்டும் அவன் காம்போச நட்பு இதன் சின்னம் ஆகும்.

(4) இந்து சீனு; காம்போசம்:

காம்போச அரசன் குலோத்துங்கனுக்கு அனுப்பித் தந்த கல் ஒன்று சிதம்பரம் கோயிலில் பதிக்கப் பெற்றுள்ளதை அங்குள்ள ஒரு கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

காம்போச நாட்டில் இந்நாளில் ஆண்ட ஜயவர்மன், ஹர்ஷ வர்மன் என்ற அரசருள் தென் பகுதியை ஆண்ட ஹர்ஷவர்மனே குலோத்துங்கனுடன் தொடர்பு கொண்டவன் என்று கருதப்படுகிறது,

(5) சீனம்:

கடாரத்திலிருந்தே குலோத்துங்கன் சீனருடன் தொடர்பு கொண்டிருந்தான் என்று கருத இடமுண்டு. சோழப்பேரரசனை பின்னும் 1077-ல் 72 பேர் அடங்கிய ஒரு தூதுக்குழுவை அவன் சீனப்பேரரசுக்கு அனுப்பினுன் என்று தெரிகிறது. இது சீனவரலாறு தரும் தகவல்.

இவ்வுலகத் தொடர்புகள், சுங்கந்தகர்த்தல், நாட்டின் முழுநில அளவை ஏற்பாடு முதலியன காண, குலோத்துங்கன் தமிழகத்தின் காலங்கடந்த தொலை நோக்கும் பெருமையும் உடைய பேரரசன் என்று உறுதியாகக் கூறலாம். உண்மையில் கரிகாலன், செங்குட்டுவன், முதலாம் இராசேந்திரன் போன்ற வீரர்களையும், இராசராசன் போன்ற அரசியல் மேதைகளையும் கூடத் தாண்டிய உலகளாவிய பெருமையுடையவன் குலோத்துங்கன் என்னலாம்.

தமிழகத்தின் தேசியம் மிகப் பழமையானதானுலும், தத்தம் பேரவாவாலும் போட்டி உட்போட்டிகளாலும் அரசர் பேரரசர் அதைப் பெரிதும் கவனிக்காமலே இருந்தனர் என்னலாம். தமிழக மரபைக் காக்க வடவரைத் தாக்கிய செங்குட்டுவன்கூடக் குலோத்துங்கனளவு தொலை நோக்குடையவன் என்று கூற முடியாது. இத் தொலை நோக்கை அவன் எழுதி வைக்கவில்லை, அவன் செயல்கள் காட்டும்!

முதற் குலோத்துங்கன் பின்னோர்கள்

முதற் குலோத்துங்கனுக்குப் பின் விக்கிரம சோழன் (1118-1136), இரண்டாம் குலோத்துங்கன் (1133-1150). இரண்டாம் இராசராசன் (1146-1163), இரண்டாம் இராசாதிராசன் (1163-1178), மூன்றும் குலோத்துங்கன் (1178-1218), மூன்றும் இராசராசன் (1216-1256), மூன்றும் இராசேந்திரன் (1246-1279) ஆகிய ஏழு சோழ மன்னர் ஆண்டனர். இக்கடை

ச் சோழர்களிடையேகூடத் திறமை யற்றவன் என்று கூறக் கூடியவன் மூன்றும் இரரசராசனே. மரபுத் திறத்தில்இந்த ஒரு சோடை இல்லாதிருந்தால் ஒருவேளை பேரரசுஇன்னும் சிறிது காலம்நீடித்திருக்கக் கூடும். ஆயினும் மேற்கேஹொய்சளரும் தெற்கே பாண்டியரும், வடக்கே தெலுங்குச் சோடரும் உள் நாட்டிலேயே காடவரராயன் கோப்பெருஞ் சிங்கன், வாண கோவரையன், சம்புவராயன். சேதிராயன் ஆகிய சிற்றரசரும் அடைந்து வந்த வளர்ச்சி எப்படியும் சோழப் பேரரசின் தளர்ச் சியை மிகைப்படுத்துவதாகவே இருந்தது.

முதற் குலோத்துங்கன் காலத்தில் பேரரசு இழந்த இலங்கை, கங்கவாடி, வேங்கைநாடு அகிய மூன்று பகுதிகளில் இலங்கை தவிர மற்ற இரண்டும் தற்கால இழப்புக்களே. ஏனெனில் அடுத்த அரசன் விக்கிரம சோழன் கங்க வாடியை யும் வேங்கை நாட்டையும் மீண்டும் தனக்கு உட்படுத்திவிட் டான். இதன்பின் மூன்றும் குலோத்துங்கன் ஆட்சிக் காலம் வரை ஒரு முழு நூற்றாண்டுக் காலம் (1118-1218) பேரரசின் எல்லையும் குறைய வில்லை. உறுதியும் குலையாமலே இருந்தது. மூன்றும் இராசராசன் காலத்திலோ பெயரளவிலேயே பேர ரசின் எல்லை தமிக முழுவதும் பரவியிருந்தது. பேரரசு சிற்றர சர் தயவால் வாழ்ந்து, பாண்டியர்-ஹொய்சளர் போட்டியா லேயே பிழைத்திருந்தது. கடைசி அரசன் மூன்றும் இராசேந் திரன் பெருவீரனுகவே இருந்தான். முன் ஆட்சியின் தவறுகளை அவன் ஓரளவு சரி செய்து பழயபடி சோழப் பேரரசை ஒரு வலிமை வாய்ந்த சிற்றரசாகவாவது ஆக்க முனைந்தான். ஆனல் பாண்டியப் பேரரசு இதற்குள் ஹொய்சள அரசையும் வென்று சோழ அரசையும்விழுங்கித் தமிழக முதற் பேரரசாகி விட்டது. சோழப் பேரரசு ஒரு தலை முறைக்குள் முடியரசாய், சிற்றரசாய், பாண்டியப் பேரரசின் வயிற்றில் நிலையாக அடங்கிவிட்டது.

### பிற்காலப் பாண்டியப் பேரரசு:

சோழப் பேரரசின் இந்த மாலைப் போதிலே பாண்டியப் பேரரசு கருவிலடங்காத ஒரு முரட்டுப் பிள்ளையாக, சில சம யம் தனக்கே தீமை செய்துகொண்டும், சில சமயம் உரம் பெற்று வளர்ந்தும் வந்து திடுமெனப் பேரரசு நிலை எய்துவது காண்கிறோம்.

இரண்டாம் குலோத்துங்கன் ஆட்சிக் காலத்திலே, 1132-ல் பட்டம் பெற்ற பாண்டிய அரசன் மாறவர்மன் சீவல்லபன் பாண்டிய நாட்டு ஆட்சியைக் கைப்பற்றியதுடன் நில்லாமல், திருவாங்கூர் அரசரையும் தன் கீழ் அடக்கி மேல்

உரிமை பெற்றிருந்ததாக அறிகிறோம். இவன் பாண்டியர் பேரரசு நிலையைக் காட்டும் ஒரு விடி வெள்ளி ஆவன். ஆனால் இவனுக்குப்பின் இரண்டாவது இராசாதிராசன் காலம்வரை நாம் மீண்டும் பாண்டியரைப் பற்றி மிகுதி கேள்விப்பட வில்லை.

இரண்டாவது இராசாதிராசன் காலத்தில் தொடங்கிய பாண்டிய உள்நாட்டுப் போர் மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சியிலேயே முடிவடைகிறது. இப்போர் காரணமாகச் சோழப் பேரரசின் புகழும் வல்லமையும் பின்னும் நீடித்தன. ஆனால் அந்த ஆட்சியிலேயே பாண்டியப் பேரரசு கரு முதிர்ச்சி யடைந்து விட்டது. அடுத்த ஆட்சிக்குள் அது தமிழக முழு வதும் பரந்து அதன் எல்லையில் நின்று ஆர்ப்பரிக்கத் தொடங் கிற்று.

பதினாலாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாண்டியப் பேரரசு மீண்டும் உள்நாட்டுப் போரால் வீழ்ச்சி யடைந்தது. அதுவே வடதிசையை அலைக்கழித்த ஆப்கானிய இனத்தைத் தென்திசைக்கும் வரவழைத்தது.

## காந்தமன் புராண மரபில் ஒரு காந்தமன் வரலாற்று மரபு

கடைச் சங்க காலத்துக்கு முற்பட்ட ஆதி சோழருள் ஒருவன் காந்தன் அல்லது காந்தமன். அவன் குடமலையில் அடை பட்டுக்கிடந்த காவிரியை வாளால் துளைத்துத் தமிழ கத்தில் ஒழுக விட்டான் என்று புராண மரபு புனைந்துரைக் கிறது. அது வரலாற்றுக்கு முற்பட்ட ஒரு செயலேதானோ என்று எண்ணவைக்கிறது, வரலாற்றுக் காலத்திலே அதே செயலை அதே சோழ மரபில்வந்த இரண்டாம் இராசராசன் செய்தது! இதை இலக்கிய மூலம் நாம் அறிகிறோம்.

'மலைகொன்று பொன்னிக்கு வழிகண்ட கண்டன்
வரராச ராசன்கை வாள் என்னவந்தே!'
(தக்கயாகப் பரணி 549).

'சுழியிட்ட காவிரிக்குச் சோணாடு வாழ
வழியிட்ட வாள் காணவாரீர்!'
(இராசராச சோழனுலா 169-170)

என்று ஒட்டக்கூத்தர் இது குறித்துள்ளார்.

'சைய
மலைச்சிறைதீர் வாள் கண்டன் வெள்ளணி நாள் வாழ்த்திக்
கொலைச் சிறைதீர் வேந்துக் குழாம்'

என்ற தொல்காப்பிய நச்சினார்க்கினியருரையின் மேற்கோள் பழம் பாடலடிகளும் இவ்வரலாற்று மரபே குறித்ததாதல் வேண்டும்.

'இயற்கை காரணமாகவோ, படைவேந்தர் செயலாலோ காவிரி சையமலைப் பக்கம் அடைப்புண்டு, சோணாட்டு வளம் சுருங்குவதாயிற்று' என்று விளக்கம் உரைத்துள்ளனர், அறிஞர் பண்டாரத்தார். 'வாள்' கொண்டு வெட்டினான் என்ற குறிப்பு பகையரசர் செயலையே குறிப்பதாகும் என்றும் அவர் கருதியுள்ளார்.

கி. மு. 6-ம் நூற்றாண்டில் பாபிலோன் நகரத் தாக்குதலில் மீடியர் செய்த செயலை இது நினைவூட்டுகிறது.

பேரறிஞர் திருத்தந்தை ஹிராஸின் சிந்து வெளி எழுத்து விளக்கம் சரி என்று உறுதி காணப்பெறுமாயின், காந்தமன் பற்றிய மரபுரையும் ஐயாயிர ஆண்டுகட்டு முற்பட்ட ஒரு தமிழகப்பேரரசன் செயலைக் குறிப்பதாகலாம். இரண்டாம் இராசராசன் பெயர் அம்மரபில் வந்த செயலாகவே காணப் படுகிறது.

**பாண்டியர் உள்நாட்டுப் போர்: I**

**ஈழ—சோழ—பாண்டியப் போட்டி *1167—1175***

**வடலி, பராக்கிரமபுரம், குண்டானிகா, அமராவதி, தொண்டி, பாசிப்பட்டணம் போர்கள்**

சடையவர்மன் குலசேகர பாண்டியன் 1161-ல் அரியணையேறினான். அவன் திருநெல்வேலியிலிருந்துகொண்டு பாண்டி நாட்டின் தென் பகுதியை ஆண்டு வந்தான். அதே சமயத்தில் வடபாதியை மதுரையிலிருந்து கொண்டு பராக்கிரம பாண்டியன் என்ற மற்றொரு பாண்டியன் அரசாட்சி செய்து வந்தான். இருவருக்குமிடையே எக்காரணத்தாலோ போட்டியும் பூசலும் எழுந்தன. அதன் பயனாக, குலசேகரன் பராக்கிரமனை மதுரையில் முற்றுகை யிட்டுத் தாக்கினான்.

முற்றுகையைச் சமாளிக்க முடியாமல், பராக்கிரம பாண்டியன் தனக்கு உதவி செய்யும்படி இலங்கையரசன் பராக்கிரமபாகுவுக்கு வேண்டுதல் விடுத்தான். பராக்கிரம பாகு இலங்கையின் பெருவேந்தன், பெரியான் என்று விதந்துரைக்கப்பட்டவன். மற்றத் தமிழக அரசர்களைப் பின்பற்றிக் கடற்படை ஏற்படுத்திக்கொண்ட முதல் அரசன் அவனே. பாண்டிய சோழரைப் போலவே அவனுக்கும் கடல் கடந்த ஆட்சியில் ஆர்வம் உண்டாயிற்று. அவன் உதவி செய்ய இணங்கி, இலங்காபுரன் என்ற படைத்தலைவனுடன் ஒரு

பெரிய இலங்கைப் படையைப் பாண்டி நாட்டுக்கு அனுப்பி ஞன். ஆனால் அது வந்து சேருவதற்குள், குலசேகரன் முற்று கையை முறுக்கினன். பராக்கிரமனையும் அவன் மனைவி மக்களை யும் கொன்றழித்துத் தன்னையே பாண்டிநாடு முழுமைக்கும் அரசனாக மதுரையில் முடி சூட்டிக் கொண்டான்.

பராக்கிரமன் குடும்பத்தில் கொலைக்குத் தப்பியது அவன் புதல்வன் வீரபாண்டியன் என்ற ஒரு சிறுவன் மட்டுமே. அவனை உறவினர் சிலர் எப்படியோ ஒளித்துக் காத்து, பல இடங்களில் சுற்றித் திரிந்த பின், இறுதியில் பொதிகைமலை யில் வைத்துப் பேணினர்.

இச் செய்திகளை அறிந்த இலங்கை வேந்தன் பராக்கிரம பாகு கடுஞ் சீற்றமடைந்தான். குலசேகரனை அழித்து. பராக் கிரமன் புதல்வன் வீரபாண்டியனையே அரசனுக்கும்படி படைத்தலைவன் இலங்காபுரனுக்குக் கட்டளை பிறப்பித்தான்.

மாதண்டநாயகன் இலங்காபுரன் படைகளுடன் பாண்டி நாடெங்கும் சூறாவளிபோலச் சுற்றித் திரிந்தான். குண்டுக்கல் என்ற மூவரணுடைய நகரைக் கைப்பற்றி அதைத் தன் மூல தளமாக்கினன். அதற்குப் பராக்கிரமபுரம் என்று பெயர் சூட்டி, அதிலிருந்துகொண்டு, குலசேகரன் ஆதரவாளர் களான நாகநாடாள்வான், சீலமேகன், நரசிங்கபிரமாதிரா யன், கடக்குடராயன் ஆகியவர்களை முறியடித்தான். குலசேக ரனுக்கு ஆதரவாயிருந்த நகரங்கள் பலவும் எரியூட்டப்பட் டன. குலசேகரன் அவனைத் தாக்கும்படி சுந்தரபாண்டியன், பாண்டியாதிராசன் என்ற தலைவர்களை அனுப்பினன். அவர் களை முறியடித்து இலங்காபுரன் வீர கங்கை நகரைத் தீக்கிரை யாக்கினன்.

வடலிப் போர்: வடலியில் நடைபெற்ற போரில் இலங்கா புரன் குலசேகரனின் ஆதரவாளனான ஆளவந்தான் என்ற தலைவனைக் களத்தில் முறியடித்துக் கொன்றான்.

பராக்கிரமபுரப் போர்: குலசேகரன் திருநெல்வேலியிலுள்ள தன் நிலைப்படைகளைத் திரட்டினன். மாவடி ராயர் உட்படத் தன் துணைவர்களான முப்பத்திரண்டு தலைவர்களையும் துணைக் கொண்டான். பராக்கிரமபுரத் தருகிலே அவன் இலங்காபுரனு டன் முப்பத்து மூன்று நாட்கள் கடும்போர் நிகழ்த்தினன். புதியதொரு பாரதப் போராக அது அந்நாளில் வருணிக்கப் பட்டது. ஆனால் போர் முடிவில் இலங்கைப் படைத்தலைவன் இலங்காபுரனுக்கே வெற்றி கிடைத்தது.

இதற்கடுத்து நிகழ்ந்த மற்றொரு போரில் பாண்டியன் குலசேகரன் படையின் பெரும் பகுதியுமிழந்து களம் விட் டோடினன்.

இலங்காபுரன் எரிகாலூருக்கு நெருப்பிட்டு, தேவிப் பட்டணத்தைக் கைப்பற்றினான்.

குண்டனிகாப் போர்: குண்டனிகா என்ற இடத்தில் நடைபெற்ற போரில் இலங்காபுரன் பல தலைவர்களைத் தனக்கு அடங்கிப் பணியும்படி செய்தான்.

வடமண், மேற்குடி, மணமேற்குடி, மஞ்சங்குடி ஆகிய இடங்களை எரியூட்டியவாறு முன்னேறினான்.

அமராவதிப் போர்: அமராவதியில் நடைபெற்ற போரில் குலசேகரனுக்கு உதவியாகக் கொங்குநாட்டிலுள்ள அவன் மாமன் படைகளும், சேரன் படைகளும் போரிட்டன. பல நாட்கள் நடந்த இந்தப் போரில் தொடக்கத்தில் குலசேகரன் பக்கமே வெற்றி சாய்வதுபோல் தோன்றிற்று. ஆனால் இறுதியில் இலங்காபுரனே அவன் படைகளையும் அவன் ஆதரவாளர் படைகளையும் சிதறடித்தான். குலசேகரன் உயிரைக்காக்க ஓடி ஒளிந்தான்.

இலங்காபுரன் நெட்டூரில் பாளையமிட்டிறங்கினான். இங்கிருந்து பொதிகைமலைப் பக்கம் பதிவிருந்த பராக்கிரமன் புதல்வன் வீரபாண்டியனைத் தருவித்து, அவனுடன் மதுரை நோக்கிச் சென்றான். மதுரை எளிதில் அவன் கை வசப்பட்டது. அவன் வீரபாண்டியனையே அரசனாக முடிசூட்டினான்.

அதுமுதல் சில நாட்கள் பாண்டியநாட்டாட்சி இலங்கைப் படைகளின் ஆட்சியாயிற்று. எங்கும் இலங்கை நாணயமாகிய காகபணமே செலாவணியாயிற்று. இலங்கை வேந்தன் 'பாண்டிய விஜயன்' என்ற பட்டம் தாங்கி அவ்வெற்றிச் சின்னமாக இலங்கையில் 'பாண்டு விஜயம்' என்ற ஊர் நிறுவினான்.

பாண்டி நாட்டின் பெரும் பகுதியை நாட்டுப் பெருந்தலைவர்களுக்கே விட்டுத்தந்து இலங்காபுரன் அவர்கள் ஆதரவைப் பெற்றான். ஆனால் குலசேகரன் படையெடுத்தபோது இத்தலைவர்கள் அவனுடன் சேர்ந்துகொண்டனர். இலங்கைப்படை வீரரிடம் பாண்டியநாட்டு மக்கள் கொண்ட வெறுப்பே இதற்குக் காரணம் என்னலாம். புதிய வலிமைபெற்ற குலசேகர பாண்டியன் இலங்கைப் படைகளைவென்று நாட்டைக் கைப்பற்றிக் கொண்டு அரசனானான். வீரபாண்டியனை அவன் நாட்டைவிட்டுத் துரத்தினான். ஆனால் குலசேகரன் வெற்றி நீடிக்கவில்லை. இலங்கைப் படைத்தலைவன் இலங்காபுரன் இலங்கை வேந்தனுக்கு நிலைமையறிவித்து, மேலும் உதவிப் படை கோரினான். இலங்கையரசன் தண்டநாயகன் ஜகத்விஜயனுடன் மற்றொரு படை அனுப்பினான். இலங்கைப் படைத்தலைவர் இருவரும் சேர்ந்து மீண்டும் குலசேகரனைத் துரத்திவிட்டு, வீரபாண்டியனைத் தவிசேற்றினர்.

குலசேகரன் துணையற்ற நிலையில் தொண்டைமான் கோட்டை, சாந்தனேரிக் கோட்டை ஆகிய இடங்களில் திரிந்து இறுதியில சோழன் இராசாதிராசனை அடைந்து தனக்கு உதவுமபடி வேண்டினான். சோழன் வேண்டுகோளை ஏற்று, திருச்சிற்றமபல முடையான் பெருமான் நம்பி பல்லவ ராயன என்ற தன் படைத்தலைவனை ஒரு படையுடன் குலசேகரனுக்கு உதவும்படி அனுப்பினான்.

தொண்டிப் போர்: பாசிப்பட்டணம் போர்:

இந்த இரு போர்களிலும் சோழப் படைத்தலைவன் பல்லவராயன் இலங்கைப் படைகளை முறியடித்தான். இலங்கைப் படைத்தலைவர் இருவர் தலைகளையும் வெட்டி, மதுரைக் கோட்டை வாயிலில் யாவரும் காணக் கட்டித் தூக்கினான். பின் தலைவன் பல்லவராயன் சோழ அரசன் கட்டளைப்படி குலசேகரனையே பாண்டிய நாட்டின் அரசனாக மதுரையில் முடி சூட்டினான்.

பேராவலும் பேரார்வமும் உடைய இலங்கை வேந்தன் பராக்கிரமபாகு இசசெய்திகளைக் கேட்டுக் கடுஞ்சினம் கொண்டான். அவன் உடன் தானே தமிழகத்தின் மீது படையெடுக்கத் திட்டமிட்டான். ஈழ நாட்டிலுள்ள ஊராத்துறை, புலைசசேரி, மாந்தோட்டம், வல்லிக்காமம், மட்டிவாழ் முதலிய துறைமுகப் பட்டினங்களிலே படைகளைக் குவித்தான். அவற்றைத் தமிழகம் கொண்டுவரக் கப்பல்களுக்கும் திட்டம் செய்தான்.

இத் திட்டங்களை உணர்ந்த சோழன் எதிர்த் திட்டங்களிட்டான். ஈழநாட்டு அரசுரிமை கோரிப் பராக்கிரமபாகுவுடன் போட்டியிட்ட அவன் மருமகன் சீவல்லபன் சோழனிடம் உதவி வேண்டிச் சோணாட்டிலேயே தங்கியிருந்தான். சோழ அமைச்சனான வேதவனமுடையான் அம்மையப்பனான அண்ணன் பல்லவராயன் என்பவன் அறிவுரைப்படி சோழன் சீவல்லபனுடன் ஒரு பெரும் படையை இலங்கைக்கு அனுப்பினான். அப் படை ஈழத் துறைமுகத்தில் இருந்த கப்பல்களையும் படைகளையும் அழித்து நாடெங்கும் சூறையாடிற்று. சோழர் படைத்தலைவன யானை, குதிரை, நிதிகளை நிரம்பக் கைக்கொண்டு, படைத்தலைவர்களில் பலரைக் கொன்று மீந்தவரைச் சிறைப்பற்றிச் சோழனிடம் கொணர்ந்து ஒப்படைத்தான்.

பராக்கிரம பாண்டியனையும் அவன் மகனையும் ஆதரிக்கப் போனதனால் விளைந்த தீங்குகளைக் கண்டு பராக்கிரமபாகு

மனக் கசப்புற்றான். அவன் இப்போது படைக் கருவியைக் கைவிட்டுச் சூழ்ச்சிக் கருவியை மேற்கொண்டான். குலசேகரனையே ஆதரிப்பதாகக் கூறி அவனுக்குப் பரிசில்கள் அனுப்பினான். குலசேகரனும் சோழன் தனக்குச் செய்த நன்றிமறந்து அதை ஏற்றுக்கொண்டான். கோட்டை வாயிலிலுள்ள இலங்கைப் படைத்தலைவர் தலைகளை அகற்றினான். சோழனிடம் பற்றுடைய தலைவர்களைத் தண்டித்தான்.

பாண்டியனது நன்றி கேடான இந்தப் போக்கைக் கண்ட சோழன் அவனை அழித்து வீர பாண்டியனையே அரசனுக்கும்படி அண்ணன் பல்லவராயனுக்குக் கட்டளையிட்டான். அண்ணன் பல்லவராயன் குலசேகரனைப் போரில் முறியடித்துத் துரத்தி விட்டு, வீர பாண்டியனையே அரசமுக்கினான். அவன் 1175 முதல் 1180 வரை ஆண்டான்.

இப்போரில் சோழன் இரண்டாம் இராசாதிராசன் பாண்டி நாட்டில் தன் பெருமையை நாட்டியதன்றி, இலங்கையிலும் போர் செய்து வெற்றிகள் பெற்றதனால், 'மதுரையும் ஈழமும் கொண்ட கோவிராச கேசரிவர்மன்' என்ற பட்டம் மேற் கொண்டான்.

பாண்டியர் உள்நாட்டுப் போர்:
ஈழ—சோழ—பாண்டியப் போட்டி: II 1180—1188:
திருவேடகப் போர் 1180: நெட்டூர்ப் போர் 1188:

இலங்கைவேந்தன் குலசேகர பாண்டியனை வசப்படுத்தியது போலவே வீரபாண்டியனையும் வசப்படுத்தத்தொடங்கினான். குலசேகரனைப் போலவே அவனும் நன்றி மறந்து இலங்கைப் பாசத்தில் இழைந்தான்.

இதே சமயம் தோற்றோடிய குலசேகரன் தன் செயல்களே தன்னை அழித்ததை எண்ணி எண்ணி மனமுடைந்து மாண்டான். அவன் புதல்வன் விக்கிரமன் மூன்றாம் குலோத்துங்க சோழனிடம் சென்று பணிந்து, தந்தையிழந்த அரசுரிமையைத் தனக்குமீட்டுத் தரும்படி வேண்டினான். வீரபாண்டியன் நன்றி கேட்டால் அவன் மீது சீற்றங்கொண்டிருந்த சோழன், தன் படைத் தலைவனான அம்மையப்பன் இராசராச சம்புவராயனை அழைத்து, வீரபாண்டியனை ஒழித்து அவனையே மதுரையில் முடி சூட்டி வரும்படி ஏவினான். சோழர் பாண்டி நாட்டின் மீது படையெடுத்தனர்.

திருவேடகப் போர் 1180;

வீரபாண்டியன் திருவேடகத்தில் சோழர் படையை எதிர்த்தான். இலங்கை வேந்தனும் அப்போரில் அவனுக்கு

உதவியாக இலங்கைப் படைகளை அனுப்பியிருந்தான். இப்போரில் பாண்டி நாட்டின் ஏழகப் படைகளும் மறவர் படைகளும் வியத்தகு வீரசூரச் செயல்களாற்றி முழுமூச்சுடன் போர் செய்து அழிந்தன. இலங்கைப் படைகளோ இலங்கைக்கு அடித்துத் துரத்தப்பட்டன. பாண்டிய இளவரசன் ஒருவன் போரில் கொல்லப்பட்டான். அண்ணன் சம்புவராயன் மதுரையும் அரசும் கொண்டு வெற்றித் தூண் நிறுவி விக்கிரம பாண்டியனைப் பாண்டி நாட்டின் அரசனுக்கினுன்.

## நெட்டூர்ப் போர் *1188:*

முடியிழந்த வீர பாண்டியன் கேரள அரசன் உதவியுடன் மீண்டும் பாண்டி நாட்டின்மீது படையெடுத்தான். நெட்டூர் என்னுமிடத்தில் சோழர் படைக்கும் அவனுடன் வந்த சேரர் படைக்கும் போர் நிகழ்ந்தது.

நெட்டூர் என்பது தற்போதைய இரமநாதபுர மாவட்டத்தில் சிவகங்கை வட்டம் சார்ந்த இளையான்குடிக்கு அருகில் உள்ளது.

இப்போரில் வீர பாண்டியன்படையும் சேரநாட்டுப் படையும் முற்றிலும் தோல்வியுற்று அழிந்தன. சேரன் சோழரிடம் பணிந்து மன்னிப்புப் பெற்றுன். குலோத்துங்கன் போரில் வாகை சூடியதுடன், பாண்டியருக்கு வழி வழி உரிமையாயிருந்த முடியைக் கைப்பற்றினுன். வீர பாண்டியன் பட்டத்தரசி சிறைப்பிடிக்கப்பட்டு வேளம் ஏற்றப்பட்டாள்.

வீர பாண்டியன் மீண்டும் சேரனிடம் அடைக்கலம் புகுந்தான். ஆனுல் சோழர் பகையினும் நட்பே சிறந்ததென்று கொண்டு, சேரன் வீர பாண்டியனையும் அவன் புதல்வர் இருவரையும் அழைத்துக்கொண்டு, அவனிடம் ஓம்படை கோரினுன். சோழர் அவர்களை மதித்து ஆதரவு காட்டினுன். வீர பாண்டியனுக்குப் பாண்டிநாட்டின் ஒரு பகுதி கொடுத்து ஆளச் செய்தான். சேரன் நன்னம்பிக்கையையும் பாராட்டி அவனுக்கும் பரிசில்கள் வழங்கினுன்.

## ஈழ நாட்டுப் படையெடுப்பு *1188:*

பாண்டியனுக்கு உதவியதற்காக ஈழ அரசன் மீது வெகுண்டு மூன்ரும் குலோத்துங்கன் ஈழத்தின்மீது படையெடுத்தான். அவன் பெற்ற வெற்றிகள்பராக்கிரம பாகுவுடன் மதிப்பான தொடர்புடன் மீளப் போதியவையா யிருந்தன.

### கொங்கு வெற்றி 1194

கொங்கு நாட்டைச் சோழர்கீழ் கொங்குச்சோழர் ஆண்டு வந்தனர். சோழன் இரண்டாம இராசாதிராசன் காலத்தில் அவர்கள் சோழருக்குத் திறை செலுத்துவதை நிறுத்தித் தன்னுரிமைபெற முயன்றிருந்தனர். மூன்றும் குலோத்துங்கன், கொங்கு நாட்டின் தலை நகரான கரூர்மீது படையெடுத்து, அதைக் கைப்பற்றினன். அவ்விடத்திலேயே சோழ கேரளன் என்ற பட்டம் மேற்கொண்டு அவ்வகையில் சிறப்பு முடி சூட்டிக் கொணடான்.

### தெலுங்குச் சோடர்;

நெல்லூர், கடப்பை சித்தூர்ப் பகுதிகளில் ஆண்ட தெலுங்குச் சோடர்கள் சோழப் பேரரசின் மாலைப்போதில் மிகவும் சக்தி வாய்ந்தவர்களாக வளர்ந்தார்கள். ஆனல், அவர்கள் எப்போதும் சோழருக்கு நண்பர்களாகவே இருந்ததுடன், சோழருக் கெதிராக அடிக்கடி கிளர்ந்தெழுந்து தொல்லை தந்த சம்புவராயர், காடவராயர், சேதிராயர் ஆகியவர்களிடமிருந்து சோழஅரசனைக் காத்தனர். மூன்றும் குலோத்துங்கசோழன் வலிமை வாய்ந்த அரசனே யானுலும் இத்தொல்லைகளிலிருந்து காப்புப்பெற உதவும்படி காஞ்சிப் பகுதியை அவர்கள் வசமே விட்டிருந்தான் என்று தெரிகிறது. 1192க்குள் இக்காரணத்தால் அவர்கள் கிட்டத்தட்டத் தன்னுட்சி யுடையவர்களாய், காஞ்சியையும் தம் வசத்திலேயே கொண்டிருந்தனர். நல்ல சித்தரசன், தம்மு சித்தரசன், திருக்காளத்தி தேவன் என்பவர் மூன்றும் குலோத்துங்கன் காலத்தில் காஞ்சியாண்ட அரசரென்ற இவ்வுரிமை கொண்டாடினர்.

### வடதிசைத் தொடர்பு

மூன்றும் குலோத்துங்கனின் குடுமியாமலைக் கல்வெட்டு, அவ்வரசன் வேங்கைநாட்டைவென்று உறங்கைமாநகர் (ஓரங்கல்) அல்லது வாரங்கல் புகுந்தான் என்று கூறுகிறது. சோழர் இச்சமயம் இவ்வளவு நெடுந் தொலைவிலுள்ள ஒரு நகரை இத்தகைய படையெடுப்புக் குரியதாக்கும் ஆற்றல் உடையவர்களாய் இருந்திருக்க முடியாது. ஆனல் ஓரங்கல் ஆண்ட பேரரசன் வேங்கை நாடு கடந்து சோணாட்டுக்குள் படையெடுத்திருக்கக் கூடும். தெலுங்குச் சோடருடன் சேர்ந்து குலோத்துங்கன் அவனை முறியடித்தனுப்பியிருக்கவேண்டும். இதனையே வேங்கை வென்று உறங்கை (ஓரங்கல்) புகுந்ததாக அக் கல்வெட்டுக் குறித்திருக்கலாம்.

### புதிய பேரரசுப் போட்டி!
### சோழ-பாண்டியப் போராட்டத் தொடக்கம்!
### மட்டியூர், கழிக்கோட்டைப் போர்கள் 1202

மூன்றும் குலோத்துங்க சோழன் உதவியால் அரியாசனம் ஏறிய விக்கிரம பாண்டியன் சடையவர்மன் குலசேகர பாண்டியன் பிற்காலப் பாண்டியப் பேரரசின் முதல்வன் ஆவன் தற்கால மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களடங்கிய பாண்டியநாடு முழுவதும் அவன் ஆட்சிக்குட்பட்டிருந்தது. பழய பாண்டியப் பேரரசரின் கனவுகளும் எண்ணங்களும் அவன் உள்ளத்தில் உலவி அவன் ஆட்கிப் போக்கிலேயே ஒளிவீசுகின்றன. அவன் அரசியல் தலைவன் களவழி நாடாள்வானை சயங்கொண்ட சோழ சீவல்லுவன் என்பவன். தன் அரசிருக்கைகளுக்கு அவன் மழவராயன், முனையதரையன் என்ற பெரும் பெயர்கள் வழங்கினான். சேரமான் கோதை இரவிவர்மன் அவன் மைத்துனன். தன் ஆட்சிப் பெருமையால் அவன் தான் சோழர் கீழ் சிற்றரசன் என்பதை மறந்து, திறைகொடுக்க மறுத்தான்.

மூன்றும் குலோத்துங்க சோழன் கடுஞ் சீற்றத்துடன் பாண்டி நாட்டின்மீது படையெடுத்தான்.

### மட்டியூர்ப் போர்:
### கழிக்கோட்டைப் போர் 1202:

பாண்டியன் ஏழகப் படையும் மறப் படையும் இப்போர்களில் புறங்காட்டி ஓடின. பாண்டியனும் தன் இளவலுடன் நகரைவிட்டே ஓடி ஒளிந்துகொண்டான்.

சோழன் குலோத்துங்கன் III தன் முதற்கோபத்தில் நகரின் பல மண்டபங்களை அழித்தான். 'வழுதியர் தம் கூடமாடம் கழுதை ஏரிட உழுது புகழ்க் கதிர் விளையக் கவடி விதைத்தான்' என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன. அத்துடன் சோழன் சோழ பாண்டியன் என்ற பட்டம் சூட்டிகொண்டு, வீரமாமுடி புனைந்து வெற்றி விழா (விசயாபிடேகம்), வீரவிழா (வீராபிடேகம்) ஆற்றினான். பாண்டிய மண்டலத்துச் சோழ பாண்டிய மண்டலம் என்றும், மதுரைமா நகருக்கு முடித்தலை கோண்ட சோழபுரம் என்றும், மதுரைக் கொலு மண்டபத்துக்குச் சேர பாண்டியர் தம்பிரான் என்றும் பெயர் வழங்க வைத்தான்.

முப்பெருந் தமிழ் நாடுகளிலும் ஒப்பற்றவன் சோழனாகிய தானே என்ற தருக்குடன் மூன்றும் குலோத்துங்கன் திரிபுவன வீரதேவன் (மூவுலக அரசன்)என்று பட்டம் மேற்கொண்டான்,

வணங்கா முடியினராகிய பாண்டிய மரபினர் உள்ளத்தில் சோழப் பேரரசை வீழ்த்தும் துடுக்கையும், பாண்டியப்பேரரசு காணும் ஆர்வத்தையும் உண்டு பண்ணியவை இந்த அவமதிப்பும் வீறுப்பும் கலந்த பெயர் ஆரவாரங்களே என்பதில் ஐயமில்லை. ஏனெனில் அடுத்த தலைமுறையிலேயே பாண்டியர் மீது சோழர் சுமத்திய அனைத்தும் சோழர்மீது பாண்டியராலும் திருப்பி வட்டியுடன் சுமத்தப்பட்டன.

**ஹொய்சளர் வளர்ச்சி, ஹாங்கல், குறுக்கோடு, குத்திவோலில், உத்தரா, சோரட்டூர், யெல்பர்காப் போர்கள்: 1190—1191**

சோழப் பேரரசைப் போலவே சாளுக்கியப் பேரரசும் பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் தகர்ந்து வந்தது. அவர்கள் கீழிருந்தாண்ட தேவகிரி யாதவர்கள் அவர்களை விழுங்கி வளர்ந்தனர். சாளுக்கியப் பேரரசையே எதிர்க்கத் துணிந்த ஹொய்சளர் சாளுக்கியப் பேரரசின் தென் எல்லை கடந்து வந்தனர். ஹொய்சள இரண்டாம் வல்லாளன் ஹாங்கல் முதலிய போர்க்களங்களில் யாதவரையும் முறியடித்துத் தன் ஆட்சியெல்லையை மாலப்பிரபை கிருஷ்ணை ஆறுகள்வரை பரப்பினான்.

**புதிய பேரரசுப் போட்டி:**

**சோழ பாண்டியப் போராட்டம்: தஞ்சைப் போர் 1219.**

சோழப் பேரரசர் மரபிலேயே மிகவும் வலிமை குன்றிய அரசன் மூன்றும் இராசராசன். அவன் 1216-லே பட்டத்துக்கு வந்தான். அதே ஆண்டிலேயே புதிய பாண்டியப் பேரரசின் அடலேறு ஆன மாறவர்மன் சுந்தர பாண்டியன் I (1216—1238) அரசிருக்கை ஏறினான். இவன் சடையவர்மன் குலசேகர பாண்டியன் I தம்பியே யாதலால், மூன்றும் குலோத்துங்க சோழனால் அண்ணன் காலப் பாண்டிய அரசும் நாடும் மரபும் பட்டபாட்டைப் பார்த்துப் பார்த்துப் புழுங்கி யிருந்தான். இதனால் சோழப் பேரரசை வீழ்த்திப்பழிக்குப்பழி வாங்குவதே அவன் வாழ்வின் முதற் குறிக்கோள் ஆயிற்று.

**தஞ்சைப் போர்:**

பாண்டியன் 1219-ல் சோணாட்டின் மீது படையெடுத்தான். தஞ்சையில் நடைபெற்ற போரில் இராசராசன் படைகள் அவன் வீரத்தாக்குதல்களுக்கு ஆற்றாது வெருண்டோடின. பாண்டியன் வெற்றி வெறிகொண்டு தஞ்சையையும் உறையூரையும் எரியூட்டிப் பாழாக்கினான். எங்கும் மாட

மாளிகைகள், கூடகோபுரங்கள் தவிடுபொடி யாக்கப்பட்டன. சோழன் மூன்றும் இராசாதிராசன் ஓடி ஒளித்துக்கொண் டான்.

சோழரின் ஆயிரத்தளி அபிடேக மண்டபத்தில் சென்றி ருந்து சுந்தர பாண்டியன் வீரமா முடிவிழா (வீராபிடேகம்) நிறைவேற்றினான். வெற்றி மகிழ்வுடன் தில்லை சென்று அம்பல வாணனுக்கு வழிபாடாற்றினான்.

இவ் வெற்றியின் பின் பாண்டியன் தற்போதைய புதுக் கோட்டைப் பகுதியிலுள்ள பொன்னமராவதி நகரில் சென்று வெற்றிக் கொலு வீற்றிருந்தான். அச் சமயம் சோழப் பேரர சர் மரபில் வந்த மூன்றும் இராசராசன் மனைவி மக்களோடும் சென்று அவனைப் பணிந்து வேண்ட அவனும் சோழ நாட்டை அளித்தருளியதாகப் பாண்டியர் கல்வெட்டுக்களும் மெய்க் கீர்த்தியும் கூறுகின்றன. 'சோணாடு கொண்டருளிய பாண்டிய தேவர்' எனவும் 'சோணாடு வழங்கி யருளிய சுந்தர பாண்டிய தேவர்' எனவும் அவன் விருதுப் பெயர்கள் மேற்கொண்டான்.

கடுஞ் சீற்றத்தை யடுத்துத் திடுமென வந்த இந்த அருட் பண்பு அரசியல் வெற்றி வீரருக்கு இயல்பே. ஏனெனில் அந்த அருட் பண்பே எதிரிக்கு மாறா அவமதிப்பும் ஆகும். ஆனால் பாண்டியன் அருட் பண்புக்கு உண்மையில் வேறொரு காரணம் இருந்தது. சோழப் பேரரசு படுவீழ்ச்சி யடைந்து பாண்டிய பேரரசு எல்லை மீறி வளர்வதை ஹொய்சளர் விரும்பவில்லை. அத்துடன் ஹொய்சளன் இரண்டாம் வல்லாளனின் புதல்வன் வீர நரசிம்மன் ஒரு சோழகுல இளவரசியை மணந்திருந்தான். இந்த இரண்டு உரிமையாலும் ஹொய்சளர் சோழனுக்கு உதவியாகப் படையெடுப்பதாக அச் சுறுத்தினர். சோழனுக்கு அவன் நாட்டைத் திருப்பித் தந்ததன் பின்னணிக் காரணம் இதுவே. ஆயினும் சோழர் பாண்டியப் பேரரசருக்கு அடங்கிக் கப்பம் கட்டும் நிலையை இவ்வாட்சியில் அடைந்தனர். அத்து டன் 'முடிகொண்ட சோழபுரம்' என்று இப்போது பெயர் தாங்கிய இடைக்காலச் சோழச் சிற்றரசர் தலைநகரான பழ யாறையிலிருந்தே சோழன் இச்சமயம் ஆண்டு வந்தான்.

இம் முயற்சியில் சோழனுக்கு உதவிய ஹொய்சள வல் லாளனும், வீர நரசிம்மனும் தம்மைச் 'சோழராஜ்ய பிரதிஷ் டாசாரியர்' என்றும் 'சோழகுல ஏகரட்சகர்' என்றும் 'பாண் டிய கஜகேசரி' (பாண்டியனாகிய யானைக்குச் சிங்கம் போன்ற வர்) என்றும் குறித்துக் கொள்கின்றனர்.

பாண்டிய ஹொய்சளப் போட்டி:
சோணாட்டு உட்கிளர்ச்சிகள்:
உறத்திப் போர் 1221:

வட ஆர்க்காட்டுப் பகுதியிலுள்ள மகத நாடாண்ட சிற்றரசன் வாண கோவரையன் சோழருக்கெதிராகக் கிளர்ந்தெழுந்து தென் சோழ நாட்டின் மீது படையெடுத்தான். தென்னார்க்காட்டில் சேந்தமங்கலத்திலிருந்து ஆண்ட பல்லவர் குலக் குறுநில மன்னனான கோப்பெருஞ் சிங்கனும் அவனுடன் சேர்ந்து கொண்டான் சோணாட்டின் பெரும்பகுதி அவர்கள் கைப்பட்டது

இக் கிளர்ச்சிகளுக்குப் பாண்டியன் ஆதரவும் ஊக்கமும் அளித்து வந்ததாகத் தெரிகிறது ஆனால் இந் நிகழ்ச்சியறிந்த ஹொய்சள வீர நரசிம்மன் உடனே ஒரு பெரும் படையுடன் சோணாட்டின் மீது படையெடுத்தான்.

உறத்திப் போரில் வாணகோவரையனும் கோப்பெருஞ் சிங்கனும் முறியடிக்கப்பட்டனர். அவர்கள் ஆட்சிப் பகுதிகளில் வீரநரசிம்மன் கொள்ளையிட்டுப் பெரும் பொருளுடன் மீண்டான்.

சோழப் பாண்டியப் போராட்டம்:
இரண்டாம் படையெழுச்சி 1231

முதற்பாண்டியப் படையெடுப்பின் பின்பு ஆண்டுதோறும் பாண்டியனுக்குச் சோழன் திறைகொடுத்து வந்தான். பின் திறையை நிறுத்திப் போரிட்டுத் தன் உரிமைபெற எண்ணினன். 1231-ல் பாண்டியன் மீண்டும் சோழ நாட்டின் மீது படையெடுத்தான்.

இத்தடவை சோழப் படையின் அழிவும் குழப்பமும் முந்திய தடவையைவிடப் பன்மடங்கு மிகுதியாயிற்று உயிருடன் தப்பிப் பிழைப்பதே சோழனுக்கு அருமுயற்சியாய்ப் போய்விட்டது. அவன் மனைவியர் சிறைப்பட்டு அவதியுற்றனர்.

சோழர் தலை நகராகிய முடிகொண்ட சோழபுரத்தில் பாண்டியன் வெற்றி விழாவும் வீர விழாவும் முழக்கினான். ‘சீ கோமாற வர்மன் திரிபுவனச் சக்கரவர்த்திகள் சோணாடு கொண்டு முடி கொண்ட சோழபுரத்து வீராபிஷேகம் பண்ணியருளிய ஸ்ரீ சுந்தர பாண்டிய தேவர்’ என்ற நீண்ட விருதுப் பெயரை அவன் சூட்டிக் கொண்டான்.

**பாண்டிய ஹொய்சளப் போட்டி:**
**சோணாட்டு உட்கிளர்ச்சிகள்**
**தெள்ளாற்றுப் போர் II 1232**
**பெரம்பலூர்ப் போர் 1232:**
**மகேந்திர மங்கலம் போர் 1232:**

*பாண்டியர் இரண்டாம் படையெடுப்பில் தட்பியோடிய சோழன் மூன்றாம இராசராசன தன் பழய எதிரிகளான சாளுக்கியர் உதவியைப்பெற சோணாட்டைவிட்டு வடக்கே சென்றான் ஆனால் அவன் அந்த நாடு போய்ச் சேரவில்லை*

தெள்ளாற்றுப் போர் II 1232:

*தனியாகக் குடும்பத்துடன் மறைந்தோடிய அவனையும் பரிவாரத்தையும், அவன் கீழ்ச் சிற்றரசனாயிருந்த கோப் பெருஞ் சிங்கன் என்ற பல்லவக் குடி மன்னன் தெள்ளாறு என்ற இடத்தில் போர் செய்து மடக்கினான் பேரரசன் என்று சிறிதும மதியாமல் அவன் இராசராசனைச் சேந்தமங்கலத்தி லுள்ள தன் கோட்டையில் சிறைவைத்தான். இச் செயலை அவன் கல்வெட்டுக்கள் பெருமையுடன் கூறுகின்றன.*

*தன் மைத்துனன் சிறைப்பட்டிருப்பது கேட்ட ஹொய்சள வீர நரசிம்மன் வெகுளியும் பதைபதைப்பும் கொண்டான். தானே சென்று வாணகோவரையனையும் அவன் சுற்றத்தின ரையும் சிறைப் பிடித்தான் திருவரங்கத்துக்கு அருகிலுள்ள பாச்சூரில் பாளையமிட்டுத் தங்கினான். உடனே சென்று கோப்பெருஞ்சிங்கன் நாட்டை அழித்துச் சோழனை விடுவித்து வரும்படி அப்பண்ணன், சமுத்திர கொப்பையன் என்ற படைத்தலைவர்களை அனுப்பினான். அவர்கள் நாடு நகர்களை அழித்துக்கொண்டே முன்னேறிப் பெரம்பலூர்ப் போரில் கோப்பெருஞ் சிங்கனை முறியடித்தனர். அவர்கள் சேந்தமங்க லத்தை முற்றுகையிட்ட பின்னரே, கோப்பெருஞ்சிங்கன் சோழச் சக்கரவர்த்தியை விடுவித்தான்.*

*சோழப் பேரரசின் நலிவுற்ற சின்னமான இராசராசனை வீர நரசிம்மன் வரவேற்று ஆதரவு செய்தான். ஆனால் அவன் அத்துடன் நிற்கவில்லை. சோணாட்டையும் அவனுக்கு மீட்டுத் தரத் துணிந்தான்.*

மகேந்திர மங்கலப் போர்: *1232*

*படைத்தலைவர்கள் சோழனை மீட்கச் சென்றிருந்த சமயத் தில் ஹொய்சள வீர நரசிம்மன் நேரே பாண்டிய நாட்டின்*

மீது படையெடுத்தான், மகேந்திர மங்கலப் போரில் மாறவர்மன் சுந்தர பாண்டியன் கடுந்தோல்வி யடைந்தான். பேரரசனாகக் கிளர்ந்தெழுந்த அவன் இப்போரால் ஒருகணத்தில் தற்காலிகமாகச் சிற்றரசனாய் விட்டான் ஹொய்சளருக்குப் பணிந்து திறை தருவதாகக் கூறித் தன்னைக் காத்துக்கொண்டான். அதேசமயம் அத்தறுவாயைப் பயன்படுத்திப் பாண்டியன் முன்பு சோணாட்டில் வென்றுகொண்ட பகுதிகளையெல்லாம் வீர நரசிம்மன் மீட்டு, சோழனிடமே தந்தான். கோப்பெருஞ் சிங்கனும் வாணகோவரையனும் தற்காலிகமாகவேனும் அடக்கப்பட்டதால், தன் மீந்த ஆட்சிக் காலத்திற்கு மூன்றும் இராசராசன் பெயரளவில் பேரரசனாக வாழ முடிந்தது.

## சோழப் பேரரசின் இறுதிச் சுடர் வீச்சு

மூன்றும் இராசராசன் தன் ஆட்சி இறுதிக்குள் தன் ஏலாமையை உணர்ந்துகொண்டான், ஆகவே அவன் 1246-ல்தன் புதல்வன் மூன்றும் இராசேந்திரனுக்கு இளவரசுப் பட்டம் கட்டி அவனிடமே பொறுப்பு ஒப்படைத்து விட்டு ஒதுங்கி வாழ்ந்தான். மூன்றும் இராசேந்திரன் தந்தை ஏலாமை கண்டு புழுங்கியவன். பாணடியர் மீது பழிவாங்கத் துடித்தவன். சோழ மரபின் வீரக் குருதி அவன் நாடிகளில் ஓடிற்று. அவன் ஒரு சில ஆண்டுகளுள் நினைத்ததைச் சாதிக்கும் பேறு பெற்றான். ஆனால் அவன் திடீர் வளர்சி பாண்டிய எதிரியை மட்டுமன்றி, உறவினனான ஹொய்சளன் பொறாமையையும் தூண்டிற்று.

பெரும் பாண்டியருள் ஒருவனானமாறவர்மன்சுந்தரபாண்டியன் I மகேந்திர மங்கலத்தோல்விக்குப் பின் 1238-ல் மாண்டான். சில மாதங்களே ஆண்ட சடையவர்மன் குலசேகரன் II பாண்டியனைத் தொடர்ந்துவந்த மாறவர்மன் சுந்தரபாண்டியன் II ஹொய்சளர் கைப்பிள்ளையாகவே வாழ்ந்தான். ஆகவே மூன்றும் இராசேந்திரன் திடுமெனப் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்துச் சென்று அவனைப் போரில் வென்று அடிமைப்படுத்தி, தனக்குக் கீழ்ப்பட்ட ஒரு சிற்றரசன் ஆக்கினான். 'இருவர்பாண்டியர் முடித்தலைக்கொண்ட மகா ராசாதிராச நரபதி' என்றும் அவன் பட்டம் சூட்டிக் கொண்டான். இருவர் பாண்டியர் என்றது சுந்தரபாண்டியன் II-ம் அவன் முன்னோனுமாக இருத்தல் வேண்டும்.

திக்க நிருபதி அல்லது கண்ட கோபாலன் என்ற வலிமை வாய்ந்த தெலுங்குச் சோடன் சோழன் நண்பரா யிருந்ததால், அவன் உதவியுடன் சம்புவராயன், சேதிராயன், காடவராயன்

ஆகியவர்களை இவன் அடக்கினான். சம்புவராயன் நாடு சங்க கால முதல் மாவிலங்கை என்றழைக்கப்பட்டது. சம்புவராயரும் சில சமயம் தம்மை இராட்சதர்கள் என்று கூறிக் கொள்வதுண்டு. இதை அடிப்படையாகக் கொண்டு 'வட இலங்கை இராட்சதர்களை வென்ற வீரராமன்' என்று மூன்றாம் இராசேந்திரன் தன்னை அழைத்துக் கொண்டான்.

ஹொய்சளர் சோழருக் கெதிராகத் திரும்பிய போதும் கண்ட கோபாலன் உண்மையான சோழ நேசனாயிருந்து 'சோழ ஸ்தாபனாசாரியன்' என்று தன்னைப் பெருமையுடன் அழைத்துக் கொண்டான்.

தெலுங்குப் பெருங்கவிஞன் திக்கணனை ஆதரித்த அரசன் இந்தத் திக்க நிருபதி அல்லது கண்ட கோபாலன் என்ற தெலுங்குச் சோடனே.

ஹொய்சளர் சதுரங்க ஆட்டம்:

பாண்டியர் வளர்ச்சி கண்டு அஞ்சி ஹொய்சளர் சரிந்து வரும் சோழ அரசை ஆதரித்தனர். சோழ வரசு மீண்டும் தலை தூக்குவது கண்டதே, அவர்கள் பாண்டிய அரசுக்கு உதவத் தொடங்கினர். முன்பு 'சோழ குலரட்சகர்' என்று தம்மைக் குறித்தது போலவே, இப்போது அவர்கள் 'பாண்டியகுல சம்ரட்சகர்' என்று தம்மைக் குறிக்கத் தயங்கவில்லை. முன்பு 'பாண்டிய கஜகேசரி' என்றுபெருமைப்பட்டதுபோலவே இப்போது 'இராசேந்திரனைப் போரில்வென்றவர்' என்று விருது கூறிக் கொள்ளத் தயங்கவில்லை.

வீர நரசிம்மனின் புதல்வனான வீர சோமேசுவரன் இராசேந்திரன் மீது படை யெடுத்துப் பாண்டியநாட்டை அவனிடமிருந்து மீட்டுப் பாண்டியனுக்கு அளித்தான், முந்திய தலைமுறையின் பட்டங்களைத் தலைகீழாக்கியதுபோலவே, இச்செயலும் இவ்வாறு முந்திய செயலைத் தலை கீழாக்கிற்று. ஹொய்சளப் படைத் தலைவன் சிங்கணன் 1249-ல் சோணாடு முழுவதையும் படை யெடுத்துச் சூறையாடினான். இரவி வர்மன் என்ற மற்றொரு படைத்தலைவன் காஞ்சியை வென்று கைக் கொண்டான். உண்மையில் சோணாட்டின் ஒரு பகுதியை வீர சோமேசுவரனின் புதல்வனான வீர ராமநாதன் வென்று, திருவரங்கத்துக்கருகிலுள்ள கண்ணனூரிலிருந்து ஆளத் தொடங்கினான். அடுத்த சில தலை முறைகளுக்கு அது ஹொய்சளரின் ஒரு தென்மாகாண மாயிற்று.

ஆனால் ஹொய்சளரின் இந்த அரசியல் சதுரங்க ஆட்டம் என்றும் ஒரு நிலையாய் இல்லை. அவர்கள் சில சமயம் பாண்டிய சம்ரட்சகர்களாகியும், சிலசமயம் சோழ சம்ரட்சகர்களாகியும்

ஊசலாடி வந்தனர். சோழருக்கும் பாண்டியருக்கும் ஹொய்சளன் இச்சமயம் மாமனாதலால், திடீர் திடீர் என்று இருதிசையில் 'மாமன் பாசம்' மாறி மாறி அல்லாடிற்று.

### சோழப் பேரரசின் வீழ்ச்சியும் மறைவும்:

பாண்டியர் பேரெழுச்சி: 1257

சடையவர்மன் சுந்தர பாண்டியன் I (1251—1270) காலத்தில் சோழர் ஆட்சி விழுந்து மறைந்து, ஹொய்சளர் ஆட்சி பெரிதளவு மங்கிற்று. பாண்டியப பேரரசு இடைக்காலப் பாண்டியப் பேரரசையும் சோழப் பெரும் பேரரசையும் கூடச் சில கூறுகளில் வென்று சீறு வ ணம் போல் தமிழக வரலாற்றில் கண கூசவைக்கும் ஒளியுடனும் விரை அதிர்ச்சியுடனும் பாய்ந்து உயர்ந்தது

சடையவர்மன் சுந்தரபாண்டியன் அவன் காலத்தில் தென்னாட்டிலேயே தலை சிறந்த வீரனாகவும் படைத்தலைவனாகவும் இருந்தான். அத்துடன் பாண்டிய மரபில் அவன் காலத்துக்கு முன்னும பின்னும் இருந்து வந்த உள்நாட்டுப்போட்டி அவன் சூழலில் இல்லை. இந்நிலையில் அவன் ஆற்றல் தென்னாடெங்கும் சென்று பரவ முடிந்தது.

முடியேற்ற சில ஆண்டுகளில் அவன் தன் படை வலிமையைப் பெருக்கிக் கொண்டான். 1257-ல் அவன் சோழப் பேரரசின் மீது தண்டெடுத்துச் சென்று, சோழன் மூன்றும் இராசேந்திரனைப் போரில் முறியடித்துச் சோழ அரசைத் தனக்குக் கப்பம் கட்டும் சிற்றரசுகளுள் ஒன்றாக அடக்கினான். இப்போரில் ஹொய்சளரும் சோழனுக்கு ஆதரவாக நின்று போராடியிருந்தனர். ஆனால் சோழர்களைப்போலவே அவர்களும் தோற்றோட வேண்டி வந்தது.

மூன்றும் இராசேந்திரன் 1279-வரை ஆண்டான். அவனுக்குக் குழந்தை இல்லை. அவனுடன் சோழ மரபும் மறைந்தது. சோணாடு பாண்டியப் பேரரசின் ஒரு மாகாணமாகிவிட்டது.

### பாண்டிய—ஹொய்சளப் போராட்டம்:

கண்ணனூர்ப் போர் 1264

ஹொய்சள சோமேசுவரன் தன் தோல்விக்குப்பின் ஆர அமரத் தன் முழு வலிமையையும் திரட்டிக்கொண்டு பாண்டியன் மீது படையெடுத்து வந்தான். 1264-ல் கண்ணனூர் அருகில் கடும் போராட்டம் நிகழ்ந்தது. இப்போர் கிட்டத்தட்டப் பேரரசாக வளர்ந்து வந்த ஹொய்சளருக்கு ஒரு பேரி

டியாயிற்று. அவர்கள் படைத்தலைவர்கள் பலர் கொலைப்பட்டனர். படைகள் சிதைந்தன. பல களங் கண்ட அவர்கள் சிறந்த படைத்தலைவன் சிங்கணன் இப்போரிலேயே மாண்டான். ஹொய்சளரிடமிருந்து பாண்டியர் யானை குதிரைகளையும் நிதியங்களையும் படைக் கலங்களையும் களத்திலிருந்தே ஏராளமாகப்பெற்றனர். தவிரக் கண்ணனூரையும் தமிழகத்திலுள்ள தம் தென்மாகணத்தையும ஹொய்சளர் இழந்தனர. அவற்றில் குவித்து வைத்திருந்த ஹொய்சளர் பெருஞ் செல்வக் குவையும் பாண்டியர் கைக்குட்பட்டது.

அடுத்துப் பாண்டியருடன் நிகழ்த்திய மற்ெருரு போரில் ஹொய்சள மன்னன் சோமேசுவரனும் உயிர் நீத்தான்.

'நண்ணுதல் பிறரால் எண்ணுதற்கரிய
கண்ணனூர்க் கொப்பத்தைக் கைக்கொண்டருளி

என்று அவன் மெய்க்கீர்த்தி இப்போரைச் சுட்டுகிறது.

பாண்டிய நாட்டு நெப்போலியன்: சடையவர்மன் சுந்தர பாண்டியன் I-ன் கல்வெட்டுக்கள் கிருஷ்ணையாறு வரையிலுள்ள எல்லாநாடுகளிலும் காணப்படுகின்றன. அவன் ஆட்சிவரலாற்றின் முழுவிவரங்களும இன்னும் விளக்கம் அடையாவிட்டாலும் அவன் அந்நூற்றாண்டில் தென்னாட்டின் ஒரு நெப்போலியனாக விளங்கினான் என்பதில் ஐயமில்லை. சடையவர்மன் சுந்தரபாண்டியன் சோழரையும் வென்று ஹொய்சளரையும் வெல்வதற்கு முன்பே மேல்கரையிலுள்ள கேரள அரசன் வீரரவி உதய மார்த்தாண்ட வர்மனைத் தன்னடிப்படுத்தி மலைநாடு முழுவதிலும் சுற்றி வீர உலா ஆற்றியிருந்தான்.

இலங்கைப் படையெடுப்பு 1255:

சோழரை வென்றபின் மீண்டும் வடக்கே ஹொய்சளரை எதிர்க்குமுன், சுந்தரபாண்டியன் 1255-ல் தெற்கே இலங்கை சென்று, அங்கும் வீர உலா வந்தான். இலங்கையில் இச்சமயம் இரண்டு அரசர் இருந்தனர். ஒருவன் போரில் மாண்டான். மற்ற இலங்கை மன்னனைப் பணிய வைத்துப் பெருந் திரளான யானைகளும் தந்தங்களும் முத்துக் குவைகளும் திறையாகப் பெற்றான். கோண மலையிலும் திரிகூடமலையிலும் பாண்டியர் கயற்கொடி பொறிக்கப்பட்டது.

சேந்தமங்கல அழிவு: சோழருக்கும் ஹொய்சளருக்கும் பெருந் தொல்லை கொடுத்தவர்கள் கொங்கரும் மகதர் அல்லது வாணரும் பல்லவன் கோப்பெருஞ் சிங்கனுமே யாவர். தமிழகத்தில் சோழப் பேரரசர் ஆண்ட பகுதியும் ஹொய்சளர் ஆண்ட பகுதியும் இப்போது பாண்டியப் பேரரசின்

ஆட்சிக்கு வந்து விட்டதால், அவர்களை அடக்குவது இப்போது அவன் இன்றியமையாக் கடமையாய்விட்டது. ஆகவே அவன் முதலில் கொங்கரையும் மகதர் அல்லது வாணரையும் வென்றுவிட்டு, கோப்பெருஞ்சிங்கன் ஆண்ட பகுதிமீது படையெடுத்தான்.

கோப்பெருஞ்சிங்கன் அவனுக்குத் திறை செலுத்தித் தன் வலிமையைக் காத்துக்கொள்ள விரும்பினன். ஆனால் பாண்டியன் அவன் ஆற்றலடக்கியே அவனைத் தன்னடிப்படுத்துவதென்று துணிந்தான். பேரரசர்களும் அஞ்சும் ஆற்றல் படைத்த வல்லரசனாகிய அவனைப் பாண்டியன் பல போர்களில் வென்று அலைக்கழித்தான். இறுதியில் அவன் தலைநகராகிய சேந்தமங்கலத்தை முற்றுகையிட்டு அழிவுக்காளாக்கினன். அவன் பெருஞ் செல்வத்தையும் படை வலியையும் தனதாக்கிய பின்னரே, ஆட்சியைத் திரும்ப அவனிடம் ஒப்படைத்தான். திறை செலுத்தும் சிற்றரசனாக அவனை ஆக்கிய பின் சிலநாள் திருவரங்கத்திலும், தில்லையிலும் கடவுட் பணிகள் செய்திருந்து, பின் மீண்டும் வடதிசை செல்ல எழுந்தான்.

> வேந்தர் கண்டறியா விறல் திண்புரிசை
> சேந்தமங்மலச் செழும்பதி முற்றிப்
> பல்லவர் நடுங்கப் பலபோராடி
> நெல்விளை நாடும் நெடும்பெரும் பொன்னும்
> பருமயானையும் பரியும் முதலிய
> அரசுரிமைகைக் கொண்டு அரசுஅவற்கு அளித்து

என்று அவன் மெய்க்கீர்த்தி இதனைக் குறிக்கிறது.

முடுகூர்ப்போர்: நெல்லூர் வீரமாமுடி விழா:

பதின்மூன்றும் நூற்றாண்டுவரை இரண்டு நூற்றாண்டுகளாகத் தென்னாட்டில் இரண்டு பேரரசுகளே இருந்தன. ஒன்று தென்னாடு கடந்த உலகப் பேரரசாகிய சோழப் பெரும்பேரரசு. மற்றது தென்னாட்டில் மீந்த பகுதியை ஆண்ட சாளுக்கியப் பேரரசு. ஆனால் பதின்மூன்றும் நூற்றாண்டில் இரு பேரரசுகளும் சரிந்தன. தென்னாட்டின் ஒரே பேரரசாகப் பாண்டியப்பேரரசு வளர்ந்து வந்தது. அதற்குப் போட்டியாக வளரத்தக்க வல்லரசுகள் ஹொய்சள அரசு, யாதவ அரசு, காகதீய அரசு ஆகிய மூன்றுமே. அவற்றுள் ஹொய்சளரைப் பாண்டியர் வென்றபின், வடதிசை அரசுகள் யாவும் தென்கோடியில் எழும் அப்புதிய பேராற்றலைத் தடுக்கத் தம்மை வரிந்து கட்டிக்கொள்ளலாயின.

தெலுங்குசோடர் தம் வரலாற்றிலே உச்ச நிலை அடைந்திருந்த காலம் இதுவே. திக்கண மாகவிஞனின் புரவலனை

கண்ட கோபாலன் ஆட்சியில் அது தெற்கே காஞ்சியையும் வடக்கே நெல்லூரையும் உட்கொண்டு ஒரு வல்லரசாய் இருந்தது. கோப்பெருஞ் சிங்கன் வெற்றிக்குப் பின் சடைய வர்மன் சுந்தரபாண்டியன் எதிர்க்க முனைந்தது அவ்வல்லரச னையே. ஆனால் அப் போரில் கண்ட கோபாலனுக்கு வடதிசை வல்லரசர் பலரும் உதவியாயிருந்தனர்.

முடுகூர் நெல்லூர் மாவட்டத்தில் உள்ளது. மற்ற வட திசை அரசர் உதவியை எதிர்பார்த்தே கண்ட கோபாலன் தன் ஆட்சிப் பகுதியில் வட எல்லையிலுள்ள அவ்விடம் வரை பின் வாங்கிக்கொண்டு சென்றிருக்கவேண்டும். ஏனெனில் அப்போரில் காகதீய மரபின் புகழ்மிக்க பேரரசனான கணபதி யும் வேறு பல தெலுங்கரசரும் ஆரிய அரசரும் கண்ட கோபாலனுடன் சேர்நது போராடினார்கள்.

இப் போரில் பாண்டியன் தென்னகமே அதிரும்படியான பெரு வெற்றியடைந்தான். போரில் ஈடுபட்டிருந்த ஒரு வாண அரசனை அவன் நாடு விட்டே துரத்தினான். மற்ற வடதிசை யரசர்கள் பலரையும் பணியவைத்து, நெல்லூரிலே வீரமா முடிவிழா (வீராபிஷேகம்) நிகழ்த்தினான்.

சடையவர்மன் சுந்தரபாண்டியன் போர்களில் வீர பாண் டியன், விக்கிரமபாண்டியன், சடையவர்மன், குலசேகரபாண் டியன் II ஆகிய பிற பாண்டியத் துணையரசர் அவனுக்கு உற்ற துணையாயிருந்தனர் என்று அறிகிறோம்.

கர்நூல், திராட்சாராமம் வரை பாண்டியப் பேரர செல்லை இப் போரினால் விரிவுற்றது. 'எம் மண்டலமும் கொண்டருளிய சுந்தரபாண்டிய தேவன்' என்ற விருதுப் பெயரை இப் பாண்டியன் மேற்கொண்டான்.

### பாண்டியர் ஈழப்படையெழுச்சி: காரிக்களப் போர்: *1284*

சடையவர்மன் சுந்தர பாண்டியனுக்குப் பின் பேரரசு ஆண்டவன் மாறவர்மன் குலசேகரபாண்டியன் I(*1268-1311*) பிற்காலப் பாண்டியப் பேரரசருள் கடைசியானவன் இவனே. 'கோனேரின்மைக் கொண்டான்' 'புவனேக வீரன்' என்ற விருதுப் பெயர்கள் இவன் பேரரசு மாண்புக்கு இசைந்த வையே. பாண்டி நாட்டுக்கு இச் சமயம் வருகை தந்த மேலை நாட்டு யாத்திரிகன் மார்க்கோ போலோ, இஸ்லாமிய வர லாற்றறிஞன் வசப் ஆகியவர்கள் விரிவுரைகளால் இவனைப் பற்றியும், இவன் காலப் பாண்டி நாட்டு நிலைகள் பற்றியும் நாம் பல செய்திகளை விளக்கமாக அறிகிறோம்.

இப் பாண்டியன் தன் தம்பிமார் சிலருடனும் ஆரியச் சக் கரவர்த்தி என்ற தம் படைத்தலைவனுடனும் ஈழ நாட்டில்

படையெடுத்தான். இலங்கைப் படைகள் காரிக்களப் போரிலும் மற்றும் பல போர்க்களங்களிலும் தோல்வியுற்றன. பாண்டியர் பல நகரங்களையும் கோட்டைகளையும் அழித்து விலையுயர்ந்த பொருள்கள் பலவற்றைக் கைப்பற்றிக்கொண்டு தம் நாட்டுக்கு மீண்டனர். அவர்கள் கைப்பற்றிய மற்ற எல்லா பொருள்களையும் விட அவற்றுடன் சேர்த்துக் கொண்டு செல்லப்பட்ட புத்தர் பல் சின்னத்தையே இலங்கை மக்கள் பெருத்த இழப்பாகக் கருதி வருந்தினர். பாண்டியரை எதிர்த்துப் போரிட்டு அதை மீட்பது அரிது என்று கருதிய இலங்கை வேந்தன் மூன்றும் பராக்கிரமபாகு 1304-ல் பாண்டியனிடம் பணிந்து வேண்டி அதைப் பெற்றுக் கொண்டதாக இலங்கை வரலாறு கூறுகிறது.

பாண்டியர் படை யெடுப்பின்போது மூன்றும் பராக்கிரமபாகு இளவரசனுகவே இருந்தான். அச் சமயம் இலங்கை மன்னுக இருந்தவன் முதலாம் புவனேகபாகு என்பவனே.

பாண்டியர் படைத்தலைவன் ஆரியச் சக்கரவர்த்தியே யாழ்ப்பாணத்தில் இருந்து ஜெயவீர சிங்கை ஆரியன் என்ற பெயருடன் வட இலங்கையை ஆண்டான். அவன் தன்னுளிலேயே இலங்கை முழுவதும் ஒரே ஆட்சியாக்கி, புத்தப் பற்சின்னத்தைப் பாண்டியன் அளித்த சமயம் உரிமையிழந்த இளவரசனுக்கு முழு ஈழ ஆட்சியையும் அளித்தான் என்று அறிகிறோம்.

பாண்டியப் பேரரசின் வீழ்ச்சி;

இஸ்லாமிய வரலாற்ருசிரியர் கூற்று.

மாறவர்மன் குலசேகர பாண்டியனுடன் பாண்டிய மரபு முடிவுறவில்லை. ஆனல் பாண்டியப் பேரரசு அவனுடன் முடிவுறுகிறது.

இஸ்லாமிய வரலாற்ருசிரியர் கூறுகிறபடி மாறவர்மன் குலசேகரனுக்கு இரண்டு புதல்வர் இருந்தனர். அவர்களிடையே சுந்தரபாண்டியன் உரிமை மனைவியின் புதல்வனென்றும், வீர பாண்டியன் துணைப் பெண்டிர் புதல்வன் என்றும் கூறப்படுகிறது. வீரபாண்டியனையே குலசேகரன் இளவரசனுக்கியதால் சுந்தரபாண்டியன் கடுஞ்சினங்கொண்டு தந்தையைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்ற முயன்ருன். இதில் தோல்வி யெய்தவே அவன் நாமக்கல் சென்று அங்கிருந்து ஆண்டான்.

தலைச்சிக் குளங்கரைப் போர்:

இரண்டு பாண்டிய அரசுரிமையாளரும் மோதிக்கொண்ட போர் இது. இதில் வீரபாண்டியன் படுகாயம் உற்ருன். உட

லும் பனி நடுக்க முறத் தொடங்கிற்று. ஆகவே அவன் இறந்தானென்று கருதிக் களத்தில் போட்டு விட்டு சுந்தர பாண்டியன் சென்று முடி சூட்டிக் கொண்டான.

வீரபாண்டியன் மாளவில்லை. பிழைத்தெழுந்து மீண்டும் சுற்றினான். சுநதரபாண்டியன் தந்தையைக் கொன்ற செய்தி கூறி மற்ற உறவினரைத் திரட்டினான். மீண்டும் பாண்டிய நாட்டைக் கைப்பற்றினான்.

நாடிழந்த சுந்தர பாண்டியன் வட திசையில் தில்லியில் ஆண்ட பேரரசன் அலாவுதீனிடம் உதவி கோரினான். அவன் மாலிக்காபூர் என்ற படைத்தலைவனை அனுப்பினான்.

மாலிக்காபூர் தென்னாட்டின் அரசரான தேவகிரியாதவர் துவார சமுத்திரத்து ஹொய்சளர், பாண்டியர் ஆகிய எல்லா நாடுகளும் கடந்து இராமேசுவரம் வரை கொள்ளையடித்துச் சென்றான்.

மெய்ந்நிலை:

இஸ்லாமிய வரலாற்றாசிரியர் கூற்றில் ஓரளவு உண்மை உண்டு. ஆனால் முழுதும் உண்மையாய் இருக்க முடியாது அரசுரிமைப் போட்டி இருந்ததும் அதற்கான காரணங்களும் உண்மை நிகழ்ச்சியே. தலைச்சிக்குளங் கரைப்போர் முதலிய செய்திகளும் மெய்ந நிகழ்ச்சிகளே. ஆனால் இரு பாண்டியர்களுள் ஒருவர் வடதிசையாண்ட அரசனை அழைத்ததினாலேயே மாலிக்காபூர் படையெடுத்தான் என்பதோ, அது தலைச்சிக்குளங்கரைப் போர் முதலிய நிகழ்ச்சிகளுக்குப் பிற்பட்டு நடந்தது என்பதோ உண்மையாய் இருக்க முடியாது. ஏனெனில் மாலிக்காபூர் படையெடுத்த ஆண்டு 1310. இரு பாண்டியரும் 1319 வரையும், சுந்தர பாண்டியன் 1342 வரையும் ஆண்டதாக அறிகிறோம். தவிர மாலிக்காபூர் பாண்டியர் உரிமையில் தலையிட்டதாகவே தெரியவில்லை. வீரபாண்டியன் அச்சமயம் தான் ஆண்ட நகரமான வீர தவளப் பட்டணத்தை விட்டோடி விட்டான். அவன் பெரு நிதியமுழுதும் மாலிக்காபூர் கைப்பட்டது. சுந்தர பாண்டியனும் மதுரையைவிட்டு வெளியேறினாலும், அவன் உறவினரான பாண்டியர் ஒருங்கு சேர்ந்து மாலிக்காபூரை முறியடித்ததாகவும் அறிகிறோம்.

மாலிக்காபூர் படையெடுப்பு கொள்ளையிட்ட செல்வக் குவை ஒன்றிலேயே வெற்றி கண்டது. அது அரசியல் துறையில் வெற்றிகாணவில்லை. கொள்ளைச செல்வமும வீர பாண்

டியனிடம் பெற்றவை தவிர மீந்தவையும் மன்னர் மக்கள் வாழ்வில் ஈடுபடுத்தாமல் கோயிலில் கொட்டிக் குவித்துவைத்தவை மட்டுமே. அது தென்னாட்டின் அரசர் சேமிப்பின் ஒரு பகுதியே என்பதை நோக்க அதன் அளவு நம்மை மலைக்க வைப்பதாய் இருக்கிறது. ஏனெனில் அதில் 612 யானைகள், 96 000 மணங்கு பொன், 20.000 குதிரைகள், யானை குதிரைகள் மீது ஏற்றிச் செல்லப்பட்ட முத்து அணி மணிப் பெட்டிகள் பல்லாயிரம் ஆகியவை அடங்கி யிருந்தனவென்று அக்கால வரலாற்றாசிரியர் குறித்துள்ளனர்.

திருவாங்கூர் நெப்போலியன் இரவிவர்மன் குலசேகரன்:

சுந்தரபாண்டியன் முஸ்லிம் ஆதரவு கோரியிருக்கக் கூடுமானால், அது பெரிதும் மாலிக்காபூர் படையெடுப்புக்குப் பிற்பட்ட வேறு ஏதேனும் படையெடுப்பாளரிடமே ஆதல் கூடும். ஆனால் அதில் பயன் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. 1312 வரை சுந்தர பாண்டியன் மேலுரிமையை ஏற்றிருந்த திருவாங்கூர் அரசன் இரவிவர்மன் குலசேகரன் திடுமென வீர பாண்டியனுடன் சேர்ந்து கொண்டு சுந்தரபாண்டியனை எதிர்க்கக் காண்கிறோம்.

இரவிவர்மன் குலசேகரன் முதல் முதல் அந் நாளைய திருவாங்கூருக்கு வடக்கே யிருந்த கொல்லத்தையும் பிற வடமலையாள நாடுகளையும் வென்று கொல்லத்தில் தன்னைப் பேரரசனாக முடிசூட்டினான். அதன் பின் அவன் 1312-ல் சுந்தரபாண்டியனை வென்று சீகாழியில் சென்று மூவேந்தரும் வென்ற தமிழகப் பேரரசன் என்று திரும்பவும் முடிசூட்டிக்கொண்டான். இறுதியில் தெலுங்குச் சோடரையும் கீழடக்கிக் காஞ்சிபுரத்தில் மூன்றாவது முடி சூட்டு விழா நடத்தினான்.

சிற்றரசனாயிருந்த திருவாங்கூர் அரசுமரபில் தமிழக மலையாளப்பகுதி முழுதும் தெலுங்கு நாட்டின் ஒரு கூறும் வென்று சில ஆண்டுகளேனும் ஆண்ட பேரரசன்—திருவாங்கூர் நெப்போலியன்—அவன் ஒருவனே. ஆனால் அவன் ஆட்சி ஒரு சில ஆண்டுகளுக்கு மேல் நிலைக்கவில்லை.

சுந்தரபாண்டியன் இப்போது காகதீய அரசன் இரண்டாம் பிரதாபருத்திரன் உதவி கோரினான். அவன் முப்பிடி நாயகன் என்ற தலைவனை அனுப்பி 1317-ல் இரவிவர்மன் குலசேகரனை முறியடித்து அவனைப் பழைய திருவாங்கூர் எல்லைக்கே துரத்தினான். வீர பாண்டியனும் இத் தோல்வியால் ஆற்றலிழந்தான். சுந்தரபாண்டியன் ஆட்சியே உறுதிப்பட்டது

# 10. வீழ்ச்சியும் மீட்சியும்

தமிழக வாழ்வின் திரும்பு கட்டங்களில் தலை சிறந்தது சோழப் பெரும் பேரரசர் காலமே. அதற்கு ஓரளவு இணையாகக் கூறக் கூடிய மற்ற இரண்டு ஊழிகள் சங்ககாலமும் நம் காலமாகிய இருபதாம் நூற்றாண்டுமேயாகும்.

சோழப் பெரும் பேரரசர் காலத்தில் தமிழர் அரசியல் வாழ்வு உச்ச நிலை எய்திற்று. சங்க காலத்திலோ தமிழரின் சமுதாய, கலை, அறிவியல் வாழ்வுகள் உச்ச நிலை கண்டன. நம் காலம் இவற்றுக்கு இணையாகக் கூறத்தக்க எத்தகைய உச்ச நிலைக்கும் உரியதாகவில்லை—அதற்கு நேர்மாறாக அடி அவல நிலையையே அடைந்துள்ளது. அயினும் இந்த இரு திசை வாழ்வுகளையும் இணைத்து ஒரு புது நிறை தேசிய வாழ்வு காண விழையும் மறுமலர்ச்சி யார்வம் நம் காலத்தையும் ஒரு திரும்பு கட்டம் ஆக்கி வருகிறது.

சங்க கால வாழ்விலிருந்து இடைக்காலப் பாண்டிய பல்லவ வாழ்வுக்கு நாம் வரும்போது ஓர் உலகத்திலிருந்து வேறோர் உலகத்துக்கே செல்லும் உணர்ச்சி நமக்கு ஏற்படாமலிருக்க முடியாது. ஆனால் பாண்டிய பல்லவர் காலத்திலிருந்து சோழப் பெரும் பேரரசர் காலத்துக்கோ, பிற்காலப் பாண்டியப் பேரரசர் காலத்துக்கோ செல்லும்போது நமக்கு இத்தகைய உணர்ச்சி ஏற்படுவதில்லை. ஏனென்றால் பாண்டியப் பல்லவப் பேரரசுக் காலத்தில் தொடங்கிய தமிழக மறுமலர்ச்சியே படிப்படியாக வளர்ச்சியுற்று, அக் காலங்களில் புது மலர்ச்சியாகிய புதிய உச்ச உயர் முகடாளாவித் தழைத்தது. சோழப் பெரும் பேரரசின் இநத உச்ச உயர்வு பிற்காலப் பாண்டியப் பேரரசுக் காலத்தில் முற்றிலுமே விழுந்து விடவில்லை ஆனால் அப்பேரரசின் இறுதியில் அது திடீமென மீண்டும் அடி அவல நிலைக்கு வீழ்ச்சியுற்றது.

செங்குத்தாக உயர் முகட்டிலிருந்து விழுகிற நீர் மீண்டும் செங்குத்தாக மேலே எழுவதில்லை. அதே சமயம் அது விழுந்த இடத்தில் வாளா அமைந்து கிடைப்பதுமில்லை. நிலமகழ்ந்து உட்சென்று மேலெழுந்து கிளர்ந்து சுழித்தோடி, அது வீழ்ச்சியின் வேக ஆற்றலைப் புதிய திசைகளில செலுத்துவது உறுதி. விசய நகர ஊழியிலும், அதனையடுத்த மதுரை நாயக ஊழியிலும், இரண்டின் பின்னும் நிலவிய அரசியல் குளறு படிகளி

லும், அதிலிருந்து புதிதாய் எழுந்துள்ள மறு மலர்ச்சியிலும் நாம் இந்தப் படிகளை—நிலமகழ்தல், கிளர்ந்தெழுதல், சுழன்றடித்தல், புதிய நீரோட்டத்தின் அமைதி வாய்ந்த பேராற்றல் மேற்கொள்ளல் ஆகிய இந்தப்படிகளைக் காண்கிறோம். இவை நம்மை மீண்டும் புது மலர்ச்சியின் பொலிவு நாடி இட்டுச் சென்று வருகின்றன.

சங்க காலத்துக்குப் பின் திடுமென வீழ்ந்த தமிழகம் மீட்டும் சோழப் பேரரசுக் காலத்துக்குள் சங்க காலம் கனவு காணாத புது மலர்ச்சி பெற்றது கண்டோம். அது போலவே நம் வாழ்விலிருந்து தொடங்கும் வருங்காலத் தமிழகமும் அந்த இரு பேரூழிகளும்—சங்க காலமும் சோழப் பெரும் பேரரசுக் காலமும்—கனவிலும் சென்றெட்டாத புத்தம் புதிய உச்சப் புகழ்முகட்டைச் சென்று தடவி மேலெழுந்து பொங்கும் என்று நாம் உறுதியாக நம்பலாம்.

திரும்பு கட்டங்கள் மாறுதலின் செறிவையும் உச்ச நிலையையுமே காட்டுகின்றன. ஆனால் தேசீய வாழ்வின் உயிர்நிலை மாறா நிலையுமல்ல. மாறுபாடும் அல்ல. அது தொடர்ச்சியும் வளமும் வளர்ச்சியுமேயாகும். சோழப் பெரும் பேரரசுக் காலத்துக்குப் பின் நாம் முனைப்பாகக் காண்பது இத்தகைய வளர்ச்சிக்குரிய மாறுபாடன்று. தளர்ச்சிக்கு, வீழ்ச்சிக்குரிய மாறுபாடே. ஆனால் இது கடந்து, இதன் உள்ளீடாக, நாம் தொடர்ச்சியையும் புது வளத்தையும் வளர்ச்சியையும் காணலாம்.

## வீழ்ச்சி: கடல் வாழ்வு சரிந்தது

சோழப் பெரும் பேரரசுக்குப் பின் நாம் காணும் தளர்ச்சி, வீழ்ச்சி பெரிது, மிகப் பெரிது! அது தமிழகத்தின் வீழ்ச்சியாக மட்டும் அமையவில்லை. தமிழக வாழ்வின் விரிவான தென்னாட்டு வாழ்வையும், கீழை உலக வாழ்வையும் அது பல நூற்றாண்டுகளுக்கு உருத் தெரியாமல் மாற்றியுள்ளது. நாகரிகத்தின் முன்னணியில் நின்ற கீழைப் பழம் பேரினங்களைப் புதிதாக வளர்ந்த மேலையுலகின் காலடியில் கிடந்து நெளிய வைத்துள்ளது.

தமிழக நாகரியம் எகிப்திய, பினீஷிய நாகரிகங்களைப் போலக் கடலக நாகரிகமாகவே தொடங்கிற்று. பண்டைத் தமிழர் வேளாண்மைக்கும் தொழிலுக்கும் உள்நாட்டு வாணிகத்துக்கும் எவ்வளவு முக்கியத்துவம் அளித்திருந்தனரோ, அதே அளவு, அதில் குறையாத முக்கியத்துவத்தைக் கடல்

வாணிகத்துக்கும் கடல் வாழ்வுக்கும், கடற் படைக்கும். கடலாட்சிக்கும் அளித்திருந்தனர். மீன் தொழில், உப்புத் தொழிலில் மட்டுமன்றி, முத்தெடுத்தல், சங்கெடுத்தல், பவளம் கண்டெடுத்தால் முத்துக்கோத்தல், சங்கறுத்து வளையல் செய்தல் முதலிய கடல் வாழ்வு சார்ந்த தொழில்களும் தமிழகத்தில் நீடித்துப் பழமையிலேயே பயின்றிருந்தன. அத்துடன் கரையோரப் பயணத்துக்குரிய சிறு கலங்கள் மட்டுமன்றி ஆழ் கடல் கடத்தற்குரிய பெருநெடு நாவாய்களும் அவர்களிடத்திலிருந்தன. கடல் கடந்த வாணிகத்திற்கு மட்டுமன்றி கடல் கடந்த தொலை நாடுகளை வென்றடக்கி ஆள்வதற்கும் போதிய அளவில் மாகடற் படைகளும் தமிழரசர், பேரரசர்களால் வைத்துப் பேணிக் காக்கப்பட்டிருந்தன. தமிழகத்தின் கடற்கரை எங்கும் இக் கடற்படைத் தளங்களும் உள்நாட்டு வெளிநாட்டுக் கடல் வாணிகத் தளங்களும் மிகுதியாய் இருந்தன. உலகக் கடல் வாணிகத்தின் நடு நாயகக் களமாகத் தமிழகம் விளங்கியிருந்தது.

அந்நிலைகள் யாவும் சங்க காலத்துக்கு முன்னின்று தொடங்கிச் சோழப் பெரும் பேரரசர் பிற்காலப் பாண்டியப் பேரரசர் காலம் வரை நீடித்து வளர்ந்தே வந்தன. ஆனால் அக்காலத்துக்குப்பின் இவை பழங் கதைகளாகத் தொடங்கி விட்டன. சோழப் பெரும் பேரரசுடன் இவை உச்ச உயர் முகடெய்தி, அதன் பின் தமிழக வரலாற்றிலும், தென்னாட்டு வரலாற்றிலும், கீழ்திசை வரலாற்றிலும் தடமழிந்து தட்டுக் கெட்டுச் சாய்ந்தன. தென்னாட்டுக் கடற்கரையோரங்களும், கீழையுலகக் கடற்கரை யோரங்களும் மேலை யுலக வாணிக வேடர்க்கும், அரசியல் வேடர்க்கும் உரிய வேட்டைக் களங்களாய், கீழ் திசை அவற்றுக்கு அடிமையாக நேர்ந்தது இதனாலேயே யாகும்.

சோழப் பேரரசர் காலத்தில் உச்ச நிலை எய்திருந்த இக் கடலாட்சி பிற்காலப் பாண்டியப் பேரரசர் காலத்திலேயே சரியத் தொடங்கி விட்டதையும், விசய நகரப் பேரரசர் மதுரை நாயகர் காலத்தில் பின்னும் வீழ்ச்சியுற்று நொறுங்கி, படிப்படியாக அராபியர், போர்ச்சுக்கீசியர், டச்சுக்காரர், டேனியர். பிரஞ்சுக்காரர், ஆங்கிலேயர் ஆகியோர் ஆட்சிக்கு வாயில் திறக்கப்பட்டதையும் முனைவர் பேராசிரியர் கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்கள் சுட்டிக்காட்டி விளக்கம் தந்துள்ளார்கள்.

"பெருஞ் சோழருடன் தமிழர் கடல் கடந்த வாணிக வளத்துக்கு மட்டுமின்றிக் கடலின்கரையாட்சிக்கே ஒரு

முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு விட்டதென்று கூறலாம் ஏனெனில் பிற்காலப் பாண்டியப் பேரரசர் காலத்திலேயே அது அராபியர் கைப்பட நேர்ந்தது அந் நாளைக்குள்ளேயே கடல் கடந்த தென் கிழக்காசிய வாணிக மட்டுமன்றி, கரையோர வாணிகமும் கரையாட்சியுமே அவர்கள் கையில் ஒப்படைக்கப்பட்டு விட்டன என்று தோன்றுகிறது. இதனைச் சோழப் பெரும் பேரரசர், பாண்டியப் பேரரசர் காலத்திய இரு நிகழ்ச்சிகள் நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

"கடைசிப் பெரும் பாண்டியன் குலசேகரன் காலத்தில், 'ஷிராஸ்' கோமகனான குதிரைப் பெருவணிகன் ஜமாலுதீன் தமிழகக் கரை வாணிகத்திலும் கரையாட்சியிலுமே பெரும் பங்குகொண்டிருந்தான் என்று அறிகிறோம். பாண்டியர் ஆட்சி மன்றத்திலேயே அவனுக்கு உயர் இடம் அளிக்கப்பட்டிருந்ததாக இஸ்லாமிய வரலாற்றாசிரியர்கள் குறிக்கின்றனர்.

"பாண்டியர் காலத்தில் காயல் பட்டிணத்தில் தங்கி வாணிக ஆட்சி புரிந்த இந்த அராபிய வணிகன் கரையாட்சியுடன், சோழர் காலத்திய நிலையை ஒப்பிட்டுப் பார்த்தால், ஒரு சில தலைமுறைகளுக்குள் ஏற்பட்ட இம்மாறுபாடு எத்தகையது, எவ்வளவு பெரிது என்பது விளங்கும்.

"சோழப் பெரும் பேரரசுருள் முதல்வனான முதலாம் இராச இராசன் காலத்தில் கடாரப் பேரரசன் அவனோடொப்பான ஒரு கடல்கடந்த பேரரசை ஆண்டவன். ஜமாலுதீனைப்போல அவன் ஒரு வணிகக்கோமகனல்லன் அவன் சோழப் பேரரசின் கடற்கரை நகரங்களில் ஒன்றான நாகப் பட்டினத்தில் ஒரு புத்தப் பள்ளி கட்டவும், அதற்குத் தன் செலவிலேயே சில ஊர்களை விலைக்கு வாங்கி மானியம் விடவும் விரும்பினான். இவை அரசியல் பெருஞ் செயல்களல்ல, சமயச் சிறு செயல்களே. ஆயினும் இச்சிறு செயல் உரிமைகளுக்குக்கூட அவன் சோழப் பெரும் பேரரசனின் வெளி நாட்டமைச்சனை அணுகி, அவன் மூலமாகப் பெரும் பேரரசன் இணக்கம் பெற்றே செயலாற்ற முடிந்தது! (கடாரப்பேரரசன் சோழப் பெரும் பேரரசுக்கு அடங்கி வாழ நேர்ந்தது இதன் பின்னரேயாகும் என்பது கவனிக்கத் தக்கது!)"

மதுரைநாயகர் வரலாறு; திரு. ஆர். சத்தியநாத ஐயர்: முனைவர் பேராசிரியர் கிருஷ்ணசாமி ஐய்யங்கார் அவர்களின் பதிப்புரை அடிக் குறிப்பு: பக்கம் 90.

பிற்காலப் பாண்டியப் பேரரசர் ஆட்சியில் அராபியர் கரை யாட்சியில் பங்கு கொண்டனரென்ருல்—விசய நகர, மதுரை நாயகர் ஆட்சியில் கடற்கரைகள் முற்றிலும் போர்ச்சுக்கீசியர் பிரஞ்சுக்காரர், ஆங்கிலேயர் ஆகியோரின் ஏகபோக உரிமை வாய்ந்த வேட்டைக் களங்களாய் விட்டன.

ஹைதர், திப்பு ஆகிய இரு மைசூர்ப் பேரரசர், பாஞ் சாலங் குறிச்சிக் கட்டப் பொம்மன் ஆகியோர் நீங்கலாக ஏனைய தென்திசை, வட திசை அரசர், பேரரசர் யாவரும் பிற்காலத்தில் கடலாட்சி, கரையாட்சிகளை மட்டுமன்றிக் கீழ் திசை வாழ்வையே தம் குறுகிய தன்னலப் போட்டிப் பூசல் களால் கோட்டை விட்டவராவர். வருங்காலத் தென்னுட்டு வரலாறும் இந்திய வரலாறும் இம் மூவரசரையும் சிவாஜியை யும் மட்டுமே வருங்காலக் கீழ்திசை மறுமலர்ச்சி வாழ்வுக் குரிய மூதாதையர்களாகக் கொள்ளல் தகும். அவர்கள் பண்பு களே தேசியப் புது மலர்ச்சிக்குரிய கரு மூல விதைகளாகும்.

வாணிக, தொழில் முறை நாகரிகம் சரித்தது,

வடதிசை நிலப்பண்ணை முறை வளர்ந்தது.

சோழப் பெரும் பேரரசின் பின் தென்னுட்டில் ஏற்பட்ட மற்ருெரு பெரிய மாறுதல் அணிமைக்கால ஊழிப் பேரறி ஞன் கார்ல் மார்க்ஸ் தவிர மற்றைய உலக அறிஞர் எவர் கண்களிலும் படாத ஒன்று ஆகும்.

உலக நாகரிக வளர்ச்சியில் அறிஞர் கார்ல் மார்க்ஸ் நான்கு முக்கிய படிகளைக் காண்கிருர். அவையே தொடக்கக் கால முதிராப் பொதுவுடமை (Primitive Communism), நிலப் பண்ணையாட்சி முறை (Feudalism), வாணிக கலைத் தொழில் முதலாளித்துவம் (Mercantile and Artisan Capitalism), பெருந் தொழில் முதலாளித்துவம் (Industrial Capitalism), என்பன.

மேலை ஐரோப்பா தென்னுட்டுடன் தொடர்பு கொண்ட பின்பே திடுமென வாணிக முதலாளித்துவப் படியடைந்து, உடனடியாகவே புதிய இயந்திர ஆற்றலின் உதவியால் பெருந் தொழில் முதலாளித்துவத்தை நோக்கி வளர்ச்சியடைந்து வந்துள்ளது (இந்த நாகரிகமும் இன்று சரியத் தொடங்கியுள் ளது என்பது குறிப்பிடத் தக்கது). ஆனுல் தென்னுட்டுடன் மேலை நாடுகள் வாணிக, அரசியல், நாகரிகத் தொடர்பு கொள்ளுமுன் நீண்ட காலமாகத் தென்னுடே வாணிகக்

கலைத்தொழில் முதலாளித்துவப் படியிலும், மேலை உலகம் நிலப்பண்ணை யாட்சியிலும் இருந்தன.

மேலையுலகில் நிலப்பண்ணையாட்சி முறை உரோம ஆட்சி முடிவிலிருந்தே தொடங்கி இடையிருட்கால ஊழி முழுவதும் (கி. பி. 5 முதல் 16-ம் நூற்றாண்டு வரை) அதாவது, தென்னாட்டுத் தொடர்பு ஏற்படும் வரை தங்கு தடையற்ற ஆட்சி நடத்திற்று. அதுபோலக் கீழ்திசையிலும் ஆரியர் வருகைக்குப் பின் பிரிட்டிஷ் ஆட்சித் தொடக்கம் வரை வடதிசை இந்தியப் பரப்பு நிலப்பண்ணை யாட்சி முறையிலும், தென்னாடு வாணிகக் கலைத் தொழில் ஆட்சி முறையிலும் நிலவின. ஆனால் சோழப் பெரும் பேரரசர் ஆட்சிக்குப் பின் இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்குள் இந்நிலை விரைந்து மாறலாயிற்று. விசய நகர காலத்திலிருந்து தொடங்கி 18-ம் நூற்றாண்டுக்குள் தென்னாட்டின் வாணிகக் கலைத்தொழில் நாகரிகம் சரிந்து, அதனிடமாக வடதிசைக் குரிய நிலப்பண்ணை யாட்சி முறை வந்து புகுந்தது.

இவ்வாறு வட இந்தியப் பரப்பைப் போலவே தென்னாடும் நிலப்பண்ணை யாட்சிக்கு உட்பட்டதனால் தான், இரு மாநிலங்களும் ஒரே அயலாட்சிக்கு உட்பட்ட ஒரே அடிமை மாநிலமாகக் கருதப்பட நேர்ந்துள்ளது. அத்துடன் உலகிலேயே நாகரிக முன்னணி நிலையில் இருந்த தென்னாடும் தமிழகமும், கீழ்திசையில்கூட அந்த முன்னணி நிலையை இழந்தன. அதுமட்டுமன்று, தென்னாடு பொதுவாகவும், தமிழகம் சிறப்பாகவும் கீழ்திசைப் பரப்பின் ஒரு பகுதி என்ற தன் உரிமை நிலையைக்கூட இழக்கத் தொடங்கிற்று. அடிமைப் பரப்பிலும், உள்ளடிமைப் பரப்புக்களாய், அடிமைகளுக்கும் உட்பட்ட கொத்தடிமைகளாய், உரிமை மறந்தவர்களாய், தென்னாட்டவரும், தமிழரும் வாழத் தலைப்பட்டனர். இவ்வகையில் வடதிசைக்கு இயல்பான பிற்போக்குப் பண்புகளுடன், மேனாட்டவர் வாணிகப் போட்டியின் பகைமையும், உலகில் 18-ம் நூற்றாண்டின் இறுதியில் புதிதாக எழுந்து பரந்த இயந்திரப் பேராற்றலும், ஒருவரை ஒருவர் எதிர்த்து இனத்தை விற்று வாழ எண்ணிய ஆட்சி வகுப்பைச் சார்ந்த தென்னாட்டவர், தமிழர் தன்னலப் போட்டிப் பூசல்களும் ஒருங்கிணைந்து செயலாற்றியுள்ளன, செயலாற்றி வருகின்றன.

## நாகரிக மாறுபாடும் வீழ்ச்சியும்

வடதிசைப் பண்ணைமுறை நாகரிகத்தின் அரசியல் கூறு தவிர, மற்றநலிவுக் கூறுகள் யாவும் சோழப் பெரும் பேரரசுக் காலத்துக்கு முன்பே. சங்க காலத்திலேயே புகுந்து வளரத் தொடங்கி விட்டன. இதன் பயனாக,சங்க காலத்தின் முடிவில் தமிழக வாழ்வில் ஒரு பெரு வீழ்ச்சியும், அதன் பின்னர் மறுமலர்ச்சிக்கு இலக்காகிய அரசியல் வாணிகத் துறைகள் தவிர மற்றத் துறைகளில் படிப்படியான அழிவுகளும் உண்டாயின. இவ் வீழ்ச்சிக்கும் அழிவுக்கும் முதலில் புத்த சமண சமயங்களும். பின் புத்த சமண சமய எதிர்ப்புகளாய் எழுந்த சக்திகளும் பெருந் தூண்டுதற் காரணங்களாய் உதவின.

புத்த சமண சமயங்கள், சமயங்கள் என்ற நிலையில் தமிழர் பண்பாட்டுக்கு அயலானவையானாலும், சமுதாய வாழ்க்கைப் பண்புகள் என்ற முறையில் எதிரானவையல்ல. ஆயினும் அச்சமயத்தவர்கள் இயல்பாக வடதிசை நிலப்பண்ணை முறை நாகரிகத்தில் தோய்ந்து, அதைத் தம் சமயத்துடன் தென்னாட்டில் பரப்பி வந்தனர். மேலும் முற்காலப் புத்த சமணர் கனவு காணாத அளவில் பிற்காலச்சமண புத்தரும், இருகாலத்தவரும் கனவுகாணாத அளவில் அச்சமயங்களை எதிர்த்துத் தாக்கிய பிற்காலத்தவரும் நிலப்பண்ணையாட்சி முறைப் பண்புகளிலும் கருத்துக்களிலும் ஊறித் தோய்ந்து, செறிந்து, அவற்றையே மாநிலத்தின் புதிய சமயமாகவும், தென்னாட்டு ஆட்சி வகுப்பினரின் பிறவிக் கடமையாகவும் மேற்கொண்டு பரப்பினர். சோழப் பெரும் பேரரசர் காலம் வரை அரசியல் மறுமலர்ச்சியினால் சிறிது அணையிட்டுத் தடுக்கப்பட்ட இப் புது வெள்ளம், அப்பெரும் பேரரசாகிய அணை உடைபட்ட பின் மூன்னிலும் பன் மடங்காகத் தங்கு தடையின்றிப் பாய்ந்து பரவத் தலைப்பட்டது. தமிழகம், கீழ்திசை ஆகியவற்றின் பண்டைப் பெரு நாகரிகத்தடமே உலகுக்குத் தெரிய முடியாத வகையில் அவற்றின் மீது புதியதொரு மாயப் போர்வையாக இன்றுவரை திகழ்வது இதுவே.

சமயத்திலிருந்து தொடங்கி, மொழி, சமுதாய வாழ்வு, குடும்ப வாழ்வு ஆகிய எல்லாத் துறைகளிலும் இந்த நிலப் பண்ணை யாட்சி முறையின் மாய இருளைக் காணலாம்.

புதிய இந்திய மாநிலத் தேசியமும். இந்திய மாநிலத்தின் சமய வாழ்வும் பெருமையடைவதற்குரிய பல ஒளி மணிப் பண்புகள் இம்மாய இருளிடையே ஆங்காங்கே மின்னுவது உண்மையே. ஆனால் இவை அந்த இருளை அகற்றுவதற்குப்

பயன்படுத்தப் படுபவையல்ல. அந்த இருட்டையே ஒளியென்று உலகுக்கு விலக்கி, இருட்டை வளர்ப்பதற்கே அவை பயன் படுத்தப் பெறுகின்றன.

சமயத்துறையில் பண்டைத்தமிழர் வழிபட்ட கடவுள் சாதி, இனம், நாடு, காலம், இடம் ஆகிய வேறுபாடுகளற்ற கடவுள் மட்டுமல்ல; சமய பேதமும் மொழி பேதமும் கடந்த கடவுள். சமய பேதம் கடந்த கடவுளை வழிபட்ட அவர்கள் தேசியச் சமயமும் 'சமயம் கடந்த' சமயமாய் இருந்தது. இன்றைய அரசியல் மொழிப் பாணியில் கூறுவதானால் அவர்கள் கடவுளும் 'சமயச் சார்பற்ற' கடவுளே. சமயமும் 'சமயச் சார்பற்ற' சமயமே. அத்துடன் அவர்கள் அரசியல், சமயம், சமுதாயம், குடும்பம், கலை, இலக்கியம், நாகரிகம், அறிவியல் ஆகியயாவுமே சமயச் சார்பற்றவை ஆகும். இப்பண்பை ஆரியருக்குமுற்பட்ட சிந்து வெளி நாகரிக கால இந்திய மாநிலப் பண்பாக (தற்போதைய) இந்திய மாநில முதல் அமைச்சர் பண்டித சவகர்லால் நேரு அழகுபட விளக்கிக் கூறியுள்ளார். அவர் கருத்து வருமாறு:

"அந்நாளைய சமய வாழ்வு பேரளவில் இந்நாளைய இந்திய மக்கள் சமய வாழ்வையே பெரிதும் ஒத்திருந்தது இந் நாளைய சமயக் கருத்துக்கள் மட்டுமன்றி, இந்நாளைய மூட நம்பிக்கைகளில் பல கூட அன்று நிலவியிருந்தன. ஆனால் இந் நாளைய சமயத்துக்கும் அந்நாளைய சமயத்துக்கும் இடையே ஓர் உயர் முக்கியத்துவம் வாய்ந்த வேறுபாடு உண்டு .அந்நாளைய வாழ்வில் சமயம் ஒரு பகுதி. இன்றோ நம் வாழ்வு சமயத்தின் ஒரு பகுதியாக உள்ளது. அத்துடன் அந்நாளில் குருமார் இருந்தனராயினும், அவர்கள் சமயப் பணியாளர், தொண்டர்களாகவே இருந்தனர். சமய வாழ்விலோ, அரசியல், சமுதாய வாழ்வுகளிலோ, கலை இலக்கிய அறிவியல் துறைகளிலோ, நாகரிகத்திலோ அவர்கள் ஆட்சியும் ஆதிக்கமும் கிடையாது. குருமாரும் அன்று மற்ற மனிதரைப் போல மனிதராகவே சரிசம நிலையில் வாழ்ந்தனர்."

பண்டிதநேரு அவர்கள் தீட்டிக் காட்டும் ஆரியருக்கு முற்பட்ட கால இந்திய நாகரிகம் இதுவே. புத்த சமயத்தில் ஆரிய குருமார் ஆதிக்கம் ஏற்படும்வரை அதாவது வடகிழக்கிந்தியாவில் ஆந்திரப் பேரரசர் ஆண்டகாலம் வரை நிலவிய பழய இந்திய நாகரிகமும் இதுவே. சங்ககாலத்திலும் ஓரளவு சோழப்பேரரசர் காலம் வரையும் நிலவிய தமிழர் நாகரிகமும் இதுவே.

இந்த உயர் நாகரிகம் படிப்படியாகக் கெட்டழிந்து வந்த போக்கு உண்மையில் இந்நாளைய சீர்திருத்தவாதிகள் படிப்படியாகச் சீர்திருத்தவிரும்பும்படிகளின் நேர்எதிர்போக்கேயாகும்.

முதலாவது சமயம் சாராத கடவுள்—ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்—என்ற கருத்து, சமயங்கள் சார்ந்த கடவுள்கள்; சமயச் சார்பான பல கடவுள்களைக்கொண்ட புராண சமயக் கருத்துக்கு வழிவிட்டது.

மொழி வாழ்வின் சீர் குலைவு

இலக்கிய வாழ்வின் பண்பு கேடு:

மொழி சாராக் கடவுள்—மக்கள் தாய் மொழிகளிலேயே அவர்கள் பக்திப் பாடலைக் கேட்டு வந்த கடவுள்—மொழி சார்ந்த கடவுளாய்—மக்கள் தாய் மொழிகள் எதையும் பயின்றறியாத கடவுளாய்—தனிமொழி, ஓவக்சென ஒரு தனி மொழியுடைய கடவுள் ஆயினர். கடவுளுக்காக சமஸ்கிருத மொழி என்று ஒரு புதிய தெய்வீக மொழி படைத்து உருவாக்கப்பட்டது.

சங்க காலத்தில் தெய்வமொழி என்ற பெயர் வேத மொழிக்கு மட்டுமே பெயராய், புத்தர், சமணர், வேத நெறியினர் ஆகிய மூவகுப்பினருக்கு மட்டுமே சமயச் சார்பான மொழியாய் இருந்தது. ஆனால் தமிழ் வாழ்வை இம்மொழி பாதிக்கவில்லை. ஏனெனில் அந்நாளில் தமிழைப் போன்ற இலக்கிய இலக்கண வளம் அதில் இல்லை. ஆனால் வடதிசையில் ஆந்திரப் பேரரசராலும், பல்லவர் முதலிய தென்னாட்டரசராலும் தொடக்கத்தில் பாளி மொழியும், அதன்பின் 4-5 ம் நூற்றாண்டிலிருந்து புதியசமஸ்கிருத மொழியும் தமிழைப்பின் பற்றி இலக்கிய மொழிகளாகவளர்க்கப்பட்டன. சமஸ்கிருதம் உயிரிலாச் செயற்கை மொழியானாலும், அது கி பி. 9-ம் நூற்றுண்டுக்குள் தமிழுடன் போட்டியிட வல்ல இலக்கிய மொழியாயிற்று

பல்லவர் காலத்திலிருந்து பாளியும், சமஸ்கிருதமும்தென் கிழக்காசியா வெங்கும், இந்திய மாநிலத்திலும் தாய் மொழி வாழ்வை முழுதும் துடைத்தழிக்கத் தொடங்கின சிறப்பாகச் சமஸ்கிருதம் தமிழின் பண்பாட்டுக்கும் தாய் மொழிகளின் வாழ்வுக்கும் தடங்கலாக ஆதிக்கம் செலுத்தலாயிற்று. இந்த ஆதிக்கம் தமிழ் மொழியின் பண்பாட்டையும் தமிழர் பண்பாட்டையும் மாற்றியமைத்த அளவுக்கு தமிழரின் வளத்தையோ வீரத்தையோ கெடுக்க முடியவில்லை. அத்துடன்

தமிழகம் சூழ்ந்த மலையாளம், கன்னடம், தெலுங்கு முதலிய தமிழின மொழிகளிலும், சிங்களத்திலும்—ஓரளவு இவை கடந்து மராத்தி, வங்காளி, இந்தி ஆகிய மொழிகளிலும், தமிழின் ஆற்றலே ஓரளவு புது வாழ்வு அளித்தது. ஆனால் தெறகே அரைகுறையாகச் செலுத்தப்பட்ட சமஸ்கிருதத்தின் ஆதிக்க அழிவாற்றல் இவ்வெல்லை கடந்து வடமேற்கு, வடக்கு இந்தியாவில் தாய்மொழிவாழ்வுகளின் தடத்தையே அழித்து விட்டது.

இந்திய மாநிலத்தின் பண்டைப் பழம் பெருமைகளை, புத்தர், அசோகன், ஹர்ஷன் ஆகியோர் பெருமித வாழ்வுகளை வானளாவப் பாராட்டத் தயங்காத கீழ்திசை வரலாற்றாசிரியர் அப்பழம் பெருமாநிலத்தின் வடதிசைத் தாய்மொழிகளில் பெரும்பாலானவை பிரிட்டிஷ் ஆட்சியில் கூடப் பண்படா மொழிகளாய் நிலவியதைக் கண்டும், காணாது விட்டு விடுவது கீழ்த்திசை வரலாற்றாராய்ச்சியின் மாயங்களுள் ஒன்று ஆகும். இவ்வெல்லா மொழியாளரும் சமஸ்கிருதத்தையே இலக்கிய மொழியாகத் தொன்று தொட்டு ஏற்று, தம் தாய்மொழிகளை விலங்குப்படியினவையாய் அமைந்தவை என்பதை அவர்கள் எளிதாக நம்பி விடுகின்றனர்!

சங்ககால இறுதியிலேயேஎழுந்து, சோழப்பெரும்பேரரசர் ஆட்சித் தொடக்கத்துக்குள் முதிர்ச்சியுற்றுப் படர்ந்த சைவ, வைணவ. பக்தி இயக்கங்களே தமிழகம் சூழ்ந்த மொழிகளின் புதிய இலக்கிய வளத்துக்குக் காரணம் என்பதையும் வரலாற்றாசிரியர் கண்களைத் திறந்துகொண்டே காணாதிருக்கின்றனர்!

தமிழ் மொழியின் மரபு வளம் தமிழகத்திலும், தமிழகம் சூழ்ந்த நிலங்களிலும். தொலை வடதிசை நிலங்களான காசுமீரம். நேபாளம் ஆகியவற்றிலும் இலக்கிய வளம், கலைவளம் பரப்ப முடிந்ததானாலும், இலக்கியப் பண்பு வகையில் இப்பரப்பு முழுவதும் சமஸ்கிருத ஆதிக்கத்தால் மிகவிசித்திரமான வகையிலே பாதிக்கப்பட்டன. தமிழைப் பின்பற்றி சமஸ்கிருதத்தில் தூய நல்லிலக்கியம் வளர்த்த சமஸ்கிருத பற்றாளர்கள் தாய்மொழிகளில் மட்டும் அந்த இலக்கியப் பண்புடைய சமஸ்கிருத ஏடுகளைக் கூடப் பெரும்பாலும் மொழி பெயர்த்துப் பரப்ப எண்ணியதாக, விரும்பியதாகத் தெரியவில்லை. சமஸ்கிருத வாணரானேயே நல் இலக்கியமாக (ஸாஹித்யமாகக்) கருதப்படாத இதிகாச புராணங்களை மொழி பெயர்ப்பதுடனேயே பிரிட்டிஷ் ஆட்சிக் காலம் வரையும், அது கடந்தும் கூட முனைந்துள்ளனர். கீழ்திசை வரலாற்றாசிரியர் கண்களில் படாத நிகழ்ச்சிகளில் இதுவும் ஒன்று.

சங்க இலக்கியத்திலே மக்கள் அரசியல் வாழ்வு, குடும்ப வாழ்வுச் செய்திகளையும் அவர்கள் அறிவுக்கருத்துக்களையும் அவர் கால வெளியுலகச் செய்திகளையும் கூட நாம் காணலாம். சோழப் பேரரசர் காலத்தில் கூட ஒட்டக் கூத்தர் மூவருலா, சயங்கொண்டார் கலிங்கத்துப் பரணி போன்ற ஏடுகளில் இப்பண்பு ஓரளவு நீடிக்கிறது. ஆனால் பிற்காலத் தமிழிலக்கியத்தில் பெருப் பகுதியும், பிறதாய் மொழி இலககியங்கள்கிட்டத்தட்ட முழுவதும் வாழ்க்கைத் தொடர்பற்றவையாகவும் சமுதாய உயர்வு தாழ்வுக் கருத்துக்களைப் பேணி வளர்ப்பவையாகவும், வருண ஒழுக்கங்களைப் பரப்புபவையாகவுமே அமைந்தன.

தமிழர் உழவுத்தொழிலே அடிப்படை தேசியத் தொழிலாகக் கருதியிருந்தனர். ஆகவே அவர்கள் உழவருக்கு சமுதாயத்தில் உச்ச உயர்வு தந்தனர். ஆனால் பிற்காலச் சமய ஏடுகளும் இலக்கியங்களும் உழவரைக் கடை வருணத்தவர், கடைசியர் கீழோர் என இழித்துக் கூறலாயின. வேளாளரைச் சிறப்பித்து ஏரெழுபது எழுதிய கம்பரே தம் காவியங்களில் கடைசியர் அல்லது வேளாளப் பெண்டிரை இவ்வட திசை மரபு பின்பற்றிப் பொதுமகளிராக வருணிக்கத்தயங்கவில்லை.

கலைத் துறையில் கட்டடக் கலையில் வடக்கே இரசபுத்திரர் காலம் வரை சிந்து வெளிப் பண்பு நீடித்திருந்தது; சமயஞ்சாராத சிற்பக்கலை, ஓவியக்கலைகளை நாம் அவர்கள் வாழ்வில் காண்கிறோம். தென்னாட்டிலும் சமய மொழித் துறைகளில் அயல் பண்பே பேணிய பல்லவப் பேரரசர், கலையில் மட்டும் சங்ககாலச் செப்பமும் மனிதப் பண்புகளும் நன்கு பேணி யிருந்தனர். ஆனால் விரைவில் தென்னாட்டிலும் வடதிசையிலும், கலை பொதுவாக மக்கள் வாழ்க்கைக்கு அப்பாற்பட்டவைகளாகவே வளர்க்கப்பட்டு வருகின்றன.

இவ்வெல்லா மாறுபாடுகளும் வாணிகக் கலைத்துறை நாகரிகத்தினின்றும் நிலப் பண்ணை முறை நாகரிகத்துக்குக் கீழ்திசைமாறி வந்த நிலையினைக் காட்டுவன ஆகும். கீழ்திசை மார்க்சியவாதிகள் கூட இம்மாறுதல்களைக் திருவுளங் கூரவில்லை.

சோழப் பெரும் பேரரசர் ஆட்சியில் தமிழகத்திலும், தமிழகம் சூழ்ந்த கீழ்திசைப் பரப்புக்களிலும் பரவி வந்த மாறுபாடுகளில்—வளர்ச்சி சாராத, தளர்ச்சிக்குரிய மாறுபாடுகளில்—இவை சில. ஆனால் மாறுபாடுகளிடையே உயிர் வாழ்வு தடைப்படவில்லை என்பதைக் காட்டும் உயிர்த்

தொடர்புச் சின்னங்களையும் நாம் காணலாம். அத்துடன் அடிப்படை உயிர்வளம் குன்றிவிடவில்லை. புதிய மறு மலர்ச்சி, புதிய மலர்சசிகளை எதிர் நோக்கி அது கருவள மாகவே இருந்து வந்துள்ளது என்பதையும் ஆழ்ந்த வரலாற்று நோக்கு விளக்க முடியும்.

## தேசிய வாழ்வின் உள்ளார்ந்த தொடர்ச்சிப் பண்பு

சங்க காலத்தில் பேரரசுப் போட்டி இரு திசைகளில் வலிமை பெற்றிருந்தது. ஒன்று அகநிலைப் போட்டி. இதில் தமிழக முடியரசர் மற்ற முடியரசர்களுடன் மட்டுமன்றி வேறு பல குடியரசர் அல்லது வேளிருடன் போராடினர். தமிழ கப் பேரரசர் ஆற்றல், தமிழகம் கடந்து எளிதில் செல்லாமல் தடுத்த சூழ்நிலை இதுவே ஆனால் அடிக்கடிபேரரசர் இது கடந்து கடற்பரபபிலும் நிலப்பரப்பிலும் தம் ஆற்றலெல்லையை விரிவு படுத்தி வந்தனர். இதுவே அவர்கள் புற நிலைப் போட்டிக்குக் காரணமாக இருந்தது. இத்துறையில் தமிழகத்துடன் சரிசம நிலையில் போட்டியிட்டவர்கள், வட இந்தியாவில் கங்கை வெளியில் கி. மு. 7-ம் நூற்றாண்டு முதல் மகதப் பேரரசை ஆண்ட சிசுநாக மரபினர், நந்தர். மோரியர்; கங்கை நாட்டிலும் பர்மாவிலும் தம் ஆட்சி பரப்பிய ஆந்திர கலிங்கப் பேரரசர், புராண கலத்தவரான குப்தர், ஹாஷன் ஆகியவர்களே.

பாண்டிய பல்லவர் காலத்தில் இப்போட்டி முறுகுவதைக் காண்கிறோம். போட்டியின் புற எல்லை அக எல்லையாகவே குறுகி விட்டது. ஆனால் அக எல்லை தென்னாட்டையும் இலங்கையையும்அளாவி விரிவுற்றது.சேரரும்இலங்கை அல்லது ஈழ நாட்டு அரசரும் போட்டியில் அவ்வப்போதே கலந்து கொண்டனர். ஆனால் தலையாய போட்டி மூன்று பேரரசர் களின் போட்டியாகவே இயன்றது பாண்டியப் பேரரசும் பல்லவப் பேரரசும் தமிழகத்திலிருந்து தொடங்கித் தென் னாட்டின் தென் பெரும் பகுதி முழுவதும் விரிவுற்று வந்தன. இவற்றை எதிர்த்து வட திசையில் சாளுக்கியப் பேரரசர் அல்லது இராஷ்டிரகூடப் பேரரசரும், அவர்களை எதிர்த்துக் கங்கை வெளியில் குப்தர் அல்லது ஹர்ஷனும் போரிட்டனர்.

சோழப் பெரும் பேரரசர் காலத்தில் அக எல்லையும் விரிவுறுகிறது புற எல்லையும் விரிவுறுகிறது ஆனால் அக எல்லை தெற்கே இலங்கை, மேற்கே அரபிக்கடல் தீவுகள், கிழக்கே கீழ்மா கடல் (பசுபிக்) வரையுள்ள கடாரப் பேரரசும்

வங்காள விரிகுடாத் தீவுகளும், வடக்கே இமயமும் என விரிவுற்று விட்டது. புற எல்லை மேலைச் சாளுக்கியர் ஆண்ட பகுதி மட்டுமே; தெற்கே பாண்டியரும் அவர்கள் தூண்டுதலால் அடிக்கடி கிளர்ந்தெழுந்த சேரரும் ஈழ மன்னரும் பெரும் பேரரசுக்கு ஒரு முள்ளாகச் செயலாற்றியிராவிட்டால, இந்த மேலைச் சாளுக்கியப் பரப்பும் தென்திசை பெரும் பேரரசில கட்டாயம் இடம் பெற்றிருக்கும் என்று உறுதியாகக் கூறலாம். ஏனெனில் பேரும் பேரரசுக் காலத்திலேயே தமிழகப் பக்தி இயக்கம் அத்திசை கடந்து வடக்கே செல்லத் தொடங்கியிருந்தது,

சோழப் பெரும் பேரரசர் காலத்திலேயே கன்னட தெலுங்கு மொழிகள் இலக்கிய வளம் பெறத் தொடங்கியிருந்தன. ஆனல் சோழப் பெரும் பேரரசர் அவைப் புலவோர் அவர்களைத் தமிழில் பாடினர்; மேலைச் சாளுக்கிய விக்கிரமாத்தனின் அவைப் புலவனான பில்ஹணன் அவனைச் சமஸ்கிருதத்திலேயே பாடினன. அத்துடன் தமிழர் பாடல்கள் வரலாற்றுக்குப் பயன் படுவது போல, தென்னாட்டுப் பில்கணன் சமஸ்கிருத காவியமோ (விக்கிரமாங்க சரிதம்), வடதிசைப் பட்ட பாணன் காவியமோ (ஹர்ஷ சரிதம்) வரலாற்றுக்குப் பயன்படவில்லை இரண்டுதிசைப் பேரரசுகளின் இரு திசைப் பண்பாடுகளின் போக்கை இவை காட்டுவனவாகும்.

பல்லவர் காலத்திலும் சோழப் பெரும் பேரரசர் காலத்திலும் தமிழகப் பேரரசுப் படைகளும் சாளுக்கிய பேரரசுப் படைகளும் சந்தித்துப்போராடிய போர்க்களங்களில் மிகப் பல துங்கபத்திரை ஆற்றங்கரையிலோ அல்லது கிருஷ்ணையாற்றங்கரையிலோதான் நிகழ்ந்தன. அப்போர்களிடையே அடிககடி கை மாறி வந்த புயற்களம் இரண்டு ஆறுகளுக்கும் இடையேயுள்ளபகுதி ஆகும். இது இன்று பம்பாய் மாகாணத்தில் இரேய்ச்சூர் மண்டலம் எனற பெயருடன் நிலவுகிறது. பல்லவ சோழா காலத்தில் இது கல்வெட்டுகளில் இடைதுறை நாடு இரண்டாயிரம் என்றும், விசய நகரப் பேரரசர் காலத்திலிருந்து இரேய்ச்சூர் இடை நிலம் (Raichur Doab) என்றும் அழைக்கப் பட்டது. 14-முதல் 16-ம் நூற்றுண்டுகள் வரை இபபகுதியே விசய நகரப் பேரரசுக்கும், அதன் வடக்கிலுள்ள பாமினிப் பேரரசுக்கும் இடையேயுள்ள போர்ப்புயல் களமாய் இருந்தது. அது போலவே 18-ம் நூற்றுண்டில் இவ்விடம் தென் திசையில் மைசூர்ப் பேரரசுக்கும் வடதிசை

யில் மராட்டிய, நிஜாம் அரசுகட்கும் இடையே யுள்ள போராட்ட நிலமாய் விளங்கிற்று.

பழய தமிழகப் பேரரசுகளான பாண்டிய பல்லவ சோழர் ஆண்ட எல்லையையே விசய நகரப் பேரரசரும், மைசூர்ப் பேரரசரும் ஆண்டனர் என்பதும், அவர்கள் எதிரிகளாய் இருந்த சாளுக்கியர் ஆண்ட எல்லையையே பாமினி அரசரும் பிறகால மராட்டிய நிஜாம் அரசரும் ஆண்டனர் என்பதும் கருத்தில்கொள்ளத்தக்கன. விசய நகரப் பேரரசரும் மைசூர் பேரரசரான ஹைதரும், திப்புவும் தமிழகத்தின் பழைய பேரரச எல்லையில் நின்று, தமிழகத்தின் பண்பாட்டுப் பிரதிநிதி களாகவே வடதிசைத் தென்னாட்டரசுகளுடன் போராட வேண்டியதாயிருந்தது தம் காலங் கடநது செயலாற்றும் தமிழகப் பேரரசுகளின் வலிமையையும் அவர்கள் ஆட்சிப் பண்புகளின் நீடித்த தொடர்பையும் இது எடுத்துக் காட்டு கிறது,

தென்னாட்டின் தேசியவலு தமிழகமே

தவிர, விசயநகரப் பேரரசின் தலைமையிடமும், மைசூர் பேரரசின தலைமையிடமும் தமிழகத்துக்கு வடக்கே இருந்தாலும அவற்றின் உயிர் நிலைவலுவும் நீடித்தவாழ்வும் வளர்ச்சியும் தெறகு நோக்கியவையாகவே நிலவின. விசய நகரப் பேரரசு தளர்ச்சியுற்றபோது. அதன் தமிழக மாகாணத் தலைவர்களான மதுரை, தஞ்சை, செஞ்சி நாயகர்களே அம்மரபின் வல்லரசர்களாக விளங்கினர். தலை நகரம் அழிவுற்றபின், தலைமையிடமும் தமிழகத்தை நோக்கிய பெனு கொண்டா, சந்திரகிரி, வேலூர் ஆகிய நகரங்களுக்கு மாற்றப் பட நேர்ந்தது. இறுதி நாட்களில் விசய நகரப் பேரரசு வேலூர் அரசாகவே நடைபெற்றது. இதன் சின்னமாகவே இன்றும் அந்நகரம் ஆர்க்காட்டு வேலூர், இராயவேலூர் என்று அழைக்கப்பட்டு வருகிறது.

மாநிலத் தேசியத்தை வடதிசை இஸ்லாமியப்படையெடுப்பினின்றும் காக்கவிரும்பிய தேசியவீரன் சிவாஜி. 17-ம் நூற்றாண்டில் அவன் தன் புதிய தேசியத்துக்குத் தன் தாயகமான கொண்கானத்தை விடத் தமிழகமே சிறந்த தென்று கருதி, செஞ்சியிலும் வேலூரிலும் தன் சேமத் தலைமையிடத்தை வகுத்தான். அவன் தந்தையும் உடன் பிறந்தானும் தஞ்சையைத் தம் மரபின் புதிய தாயக அரசாக்கினார்.

வேறெந்த மன்னரையும் விட, சிவாஜியும் திப்புவுமே தமிழக மரபினைப் பேரளவு பேணித் தென்னகத் தேசியத்தைக் கனவு கண்டவராவர். ஆனால் சிவாஜியினும் முனைப்பாகத் திப்பு தேசீய வலுவைத் தென் திசையில் கண்டான். ஏனெனில் அவன் தமிழகத்தில்கூடத் தென் தமிழகத்தையே தன் மூலதளமாக்கத் திட்டமிட்டான். அவன் திருவாங்கூர்ப் படையெடுப்பின் நோக்கம் புது வழியில் அதை அடைவதே. இதில் அவன் வெற்றி பெறவில்லை. ஆனால் இதில் அவன் வெற்றியடைந்திருநதாலோ அல்லது தமிழகத்தின் மறுமலர்ச்சித் தேசியமாகிய பாஞ்சாலங்குறிச்சித் தேசியத்துடன் அவன் தொடர்பு கொண்டிருந்தாலோ தென்னாட்டின் வரலாறும் வேறுவகையாய் மாறியிருக்கும் என்பதில் ஐயமில்லை. தொலைதூர பிரான்சுடனும் நெப்போலியனுடனும் தொடர்புகொள்ளத் துணிந்த திப்பு, அவன் போராடிய காலத்திலேயே புரட்சி தொடங்கிய கட்டப்பொம்மனுடன் தொடர்புகொள்ள எண்ணாதது தென்னகத்தின், கீழ்திசையின் அவப்பேறே யாகும் என்னலாம்.

வழக்கமாக மாநிலத்தேசியத்திலும் அதன் இடைக் காலச் சமய வாழ்விலுமே அக்கரை காட்டும் வரலாற்றாசிரியர் பலர், இக்காலத்தின் கடைசிமூலதள அரண் என்ற முறையில் பொதுவாகத் தென்னாட்டிலும், சிறப்பாக விசயநகரப் பேரரசிலும் மதுரை நாயக அரசிலும் புதிய அக்கரையும் புதிய கிளர்ச்சியும் காட்டுகின்றனர். ஆனால் அவர்கள் மாநிலச்சமய வாழ்வு என்று கொள்வது சமயப் பற்றுருவில் அந்நாள் எழுந்த தென்னகத் தேசிய மறுமலர்ச்சியினையேயாகும். விசயநகரப் பேரரசின் வகையிலும் இன்னும் முனைப்பாக, சிவாஜியின் வகையிலும் தேசியக்கனவு,காலச் சூழ்நிலையால் மாநிலச் சமய வாழ்வாக உருவெடுத்தாலும், அதுமாநிலச் சமய வாழ்வு அல்ல, தேசியமே. ஏனெனில் விஜயநகர, சிவாஜி மரபைப் பின்னாட்களில் முஸ்லிம்களான ஹைதரும். திப்புவுமே மேற்கொண்டனர் இது அதன் சமயங்கடந்த தேசியத் தன்மையைத் தெளிவுபடுத்தும். திப்பு காலத்திலேயே அம்மரபு பாஞ்சாலங் குறிச்சியில் முழுநிறை தேசிய உருக்கொண்டது.

திப்பு தேசிய நோக்கம் கொண்ட பேரரசனாக மட்டுமே திகழ்ந்தான். அவன் போராட்டம் பேரரசுப் போராட்டமாகவே நின்றது. ஆனால் குறுநில மன்னனான கட்டப்பொம்மன் அதை முற்றிலும் மக்கட் போராட்டமாக்கினான். இதனாலே விசயநகர மைசூர் பேரரசுகள் அழிந்தபின் அவற்

றின் வாழ்வு புத்தெழுச்சிகளைத் தூண்டியதில்லை. ஆனால்பாஞ் சாலங்குறிச்சித் தேசியம் அடுத்த ஐம்பது ஆண்டுகளில் தொடர்ச்சியாக வேலூரிலும் சென்னையிலும் சீரங்கப் பட்டிணத்திலும் மீரத்திலும் வடதிசையெங்கும் புரட்சிக்கனலைப் பரப்பி, வெள்ளையரை வெளியேற்றும் இயக்கமாக ஒன்றரை நூற்றாண்டுக்குள் வளர்ச்சியடைந்தது.

பாஞ்சாலங்குறிச்சிக் கட்டபொம்மனுடன் புதிய தேசிய மறுமலர்ச்சி முழு உருவில் தொடங்குகிறதென்றால், அதே பாஞ்சாலங்குறிச்சிக்கருகில் பிறந்த வ. உ. சிதம்பரனாரின் கப்பல் போராட்ட இயக்கத்துடனும், தொழிலாளர் இயக்கத்துடனும், தமிழக தேசிய மரபின் மற்றொரு கூறு புதுமலர்ச்சியடையத் தொடங்குவது காணலாம். சோழப் பெரும் பேரரசர், பிற்காலப் பாண்டியர் ஆகியோருக்குப் பின் அவர்களின் கடற்படை மரபு வீழ்ச்சியடைந்து விட்டதானாலும், அதன் தூவானத்தை நாம் நெடுநாள்வரைகாண்கிறோம் விஜயநகரப் பேரரசரும் மதுரைநாயகப் பேரரசரும் சேர சோழ பாண்டியப் பேரரசரைப்போல எந்தக் கடல் கடந்த நாட்டையும் வென்று ஆளவில்லை. ஆனால் அவர்கள் காலத்தில் கூடத் தமிழகப் பகுதியில் இலங்கைமீது படையெடுக்கவும் அதனிடமிருந்து திறை கொள்ளவும் போதிய கடற்படை இருந்தது. தவிர கடல் வாணிகமும் தெற்கே பேரளவில் தமிழகக் கடற்கரை வழியாகவும் மேற்கே மலையாள கொண்கானக் கரை வழியாகவுமே நடைபெற்றது. மேலைக்கரையில் சேரர் காலத்தில் கடம்பர் கடற் கொள்ளைக்காரராக வாழ்ந்து வந்தனர் என்று கண்டிருக்கிறோம். அந்தமரபில் மலையாளக் கரை மக்களும் கொண்கானக்கரை மக்களும் பிரிட்டிஷ் ஆட்சி வரை தொடர்ந்து ஈடுபட்டிருந்தனர் என்று தோற்றுகிறது. ஏனெனில் பாமினி அரசர் நாட்களில் 'மக்கா' விற்குச் செல்லும் முஸ்லிம் யாத்திரிகர்களை இப்பகுதிமக்கள் அடிக்கடி கடலில் தாக்கிக் கொள்ளையடித்ததாகக் கூறப்படுகின்றது.

ஆந்திர கலிங்கருக்குப் பின் தமிழகக்கடற்படை மரபுடன் தொடர்பு கொண்ட ஒரே வடதிசை அரசன் சிவாஜி. வெள்ளையரை ஒன்றிரண்டு கடற் போரில் முறியடிக்கப் போதிய கரையோரக் கடற்படை அவனிடம் இருந்ததாகத் தெரியவருகிறது.

1756-ல் பிரிட்டிஷ் படைத்தலைவரே 'அங்கிரியா' என்ற கொள்ளைப் படைத்தலைவனை தாக்கி அவன் மூலதளமான செவண்துருக்கத்தை அழிக்கவேண்டி வந்தது. இரண்டாயிர ஆண்டுகளுக்கு முன் கடம்பர் மூலதளத்தை அழித்த சேரர் செயலை இது நினைவூட்டுகிறது.

பிரிட்டிஷ் ஆட்சித் தொடக்கம்வரை இந்தக் கடற் கொள்ளையில் மலையாளிகள் பேரளவாக இடம் பெற்றிருந்த னர். அவர்கள் மூலதளங்களில் ஒன்று பம்பாய்த் தீவின் ஒரு பகுதியில் அமைந்திருந்தது. பம்பாய் நகரில்இன்றும் அபபகுதி இதனால் மலையாளக்குன்று (மலபார்ஹில்) என்று அழைக்கப் பட்டு வருகிறது.

இவ்வாறாக 19- ம் நூற்றாண்டுவரை தொடர்ந்து உயிர்த் துடிப்பறாதிருந்த தமிழர் கடலாட்சி மரபு, வ.உ சி. யின் தேசிய இயக்கத்தால் மீண்டும் புது மலர்ச்சி நோக்கியுள்ளது. தற்கால மாநிலத் தேசியம் திப்புவின் பெருமையையோ பாஞ் சாலங் குறிச்சியின் பெருமையையோ புறக்கணித்தது போல, மாநில விடுதலை இயக்கத்தின் இவ்வயிர்க் கூற்றினையும் புறக் கணித்து வருகின்றது. ஆனால் வருங்காலத் தமிழகமும் வருங் காலத தென் கிழக் காசியவும் கீழ் திசையும் வ. உ. சி, யை ஒரு பெரிய கீழையுலக மறுமலர்ச்சியின் மூதாதை என்று போற்றாமலிருக்க முடியாது.

## தெலுங்கரும் தமிழரும்: முனைவர் சி. ஆர். ரெட்டியின் மதிப்புரை

தென்னாட்டு வாழ்வில் தாழ்ச்சியும், மீட்சியும் கண்ட காலம் 14-முதல் 17 வரையுள்ள நூற்றாண்டுகள். அக்காலத் திலே தமிழகமும் ஆந்திரமும் ஒரு வியதத்கு வரலாற்றுப் புதி ரைக் காணமுடிநதது. தமிழகததின் அரசியல், கலை, இலக்கி யப் பொற்காலங்கள், சோழப்பெரும் பேரரசுக் காலத்துக்குள் அழிந்து விட்டன. தெலுங்கரோ, ஆந்திரபேரரசுக் காலத்தி லேயே, அரசியல்துறையில் பொற்காலம் கண்டனரெனி னும், அரசியல், சமுதாயம், கலை, இலக்கியம் ஆகிய எல்லாத் துறைகளும் அடக்கிய முதல் முழு நிறை தேசிய வாழ்வின் மலர்ச்சியான பொற்காலத்தை, இக் காலத்திலேயே பெற்ற னர். தமிழகம் உட்பட தென்னாட்டின் தென்பெரும் பகுதி முழுவதும் ஆந்திர நாயக மரபினரே பரவி ஆண்டனர்— எங்கும் குடியேறினர்—வீரவாழ்வும் கலை இலக்கிய வாழ்வும் பரப்பினர். ஆனால் இந்தத் தெலுங்கு மறுமலர்ச்சியில் ஆந் திரத் தாயகத்தைவிட ஆந்திரர் குடியேறிய வாழ்வகமாகிய தமிழகமே பெரும பங்கு கொணடது. மதுரை, தஞ்சை, செஞ்சி, வேலூர், மைசூர் ஆகிய நகரங்களில ஆண்ட நாயக மரபின்இளைஞர் தம் செயலால் வீர காவியப் புகழாற்றினர். அதனுடனொதது அக்குடிப் பெண்டிர்—வீரர் மனைவியரும்

தங்கையரும்—தெலுங்கிலும் சமஸ்கிருதத்திலும் அப்புகழை வீரகாப்பியங்களாக்கினர். தமிழகச் சங்ககாலம் தவிர வேறெக்காலத்தினும் இத்தனை பெண்பாற் புலவர் மணிகளை நாம் காண முடியாது.

தெலுங்கு இலக்கியத்தின் ஒரு சிறந்த பகுதி—சிறப்பாகத் தெலுங்கு மொழியில் உரைநடை இலக்கியம், நாடக இலக்கியம் ஆகியவற்றின் பெருமபான்மையான பகுதி—தமிழக நாயகராட்சியில நாயக ஆட்சி மரபினராலும்,அவர்கள் ஆதரவாலும் இயற்றப்பட்டதேயாகும். தவிர, சிதைந்த நிலையில் இருந்த பழந்தமிழ் இசை இலக்கணத்தைப் பல்லவர் காலம் சமஸ்கிருதத்தில் புதிதாக வளர்த்ததென்றால், அந்த இலக்கணத்துக்கு மேலும் புதுமலர்ச்சி தந்து அதற்குத் தெலுங்கு மொழியில் இலக்கியம யாத்த பெருமை இக்காலத்துக்குரியதே யாகும். இச் செயலைச் செய்து புதிய கருநாடக இசையின் முதல்வருள் தலைவராய் அமைந்தவர் திருவையாற்றில் வாழ்ந்த தியாகராரசரே யாவர்.

16, 17-ம் நூற்றாண்டுகளில் தமிழகத்தில் குடி புகுந்து வாழ்ந்த தெலுங்கு மரபினர் இன்றும் பாலாறு முதல் தண்பொருநைவரை எங்கும் வாழ்கின்றனர். ஆனால் மூவாயிர நாலாயிர ஆண்டுகட்கு முன் இந்திய மாநிலத்துக்கு வந்த ஆரியரெனத் தம்மைக் கருதிக் கொள்ளும் மக்கள் தம் மொழி மறந்தும், இன்றும் மற்ற இந்திய மாநில மக்கள் வாழ்விலிருந்து விலகித் தண்ணீரும் எண்ணெயுமாகவே இயங்குவதைக் காண, நானூறு ஆண்டுகளுக்கு இப்பால் தமிழகம் வந்த இத்தெலுங்கு மரபினர்தம் தாய் மொழியைக் குடும்பச் சூழலில் பயன்படுத்திக் கொண்டே, முற்றிலும் தமிழருடன் தமிழராகி விட்டனர் என்பது வியப்புக்குரியதேயாகும். இது பிற்காலத் தமிழகவரலாற்றில் நாம் காணும் பொன் வண்ணச் செய்திகளுள் ஒன்றாகும்.

திராவிட, அதாவது பெருந்தமிழின நாகரிக வரலாற்றை ஊன்றி ஆராய்ந்துள்ள ஆந்திர நாட்டுப் பெரும் பேரறிஞரான முனைவர் சி. ஆர். ரெட்டி அவர்கள், தமிழகத்தில் தமிழர் தெலுங்கர் பொன்னிணைவு குறித்துக்கூறும் வாசகப் பகுதிகள், இரு இனக் கூறுகளையும் அவற்றின் இணைவாற்றலையும் நயம் பட மதிப்பிட்டுக் காட்டுகின்றன.

“தமிழர் தனிப்பட்ட தற்பண்பு வளர்ச்சியில் மிக்கவர். அவர்கள் வகுத்துள்ள தனி முதன்மைவாய்ந்த பண்பாடுதிராவிட இனத்தின் தலைசிறந்த அறிவு மலர்ச்சியையும், கலை மலர்ச்சியையும் குறிக்கிறது. அவர்கள் சீரிய சிந்தனைக்கும்

வனப்பார்ந்த கலையுயர்வுப் பண்புக்கும் சான்று வேறு வேண்டியதில்லை—சிலப்பதிகாரமும் மணிமேகலையுமே போதும்! இவற்றைத் தொலைவிலே சென்றடுக்கக் கூடிய எதனையும் தெலுங்கர் வாழ்விலே நாம் காண்பதற்கில்லை. அத்துடன் தமிழர் வகுத்துள்ள சைவசித்தாந்தக் கோட்பாடு, இந்திய மாநிலத்தின் பல்வண்ணக் கோட்பாட்டு, மாடகூடக் குவையியிலேயே ஓர் ஒப்புயர்வற்ற முத்துமணிக் கோபுரம் ஆகும். பழமைப் பெருமையிலும் தற்பண்பு மேம்பாட்டிலும் தெலுங்கரைப் பன்மடங்கு விஞ்சிய தமிழர் வாழும் தமிழகத்திலே தெலுங்கர் பாலாறு முதல் தண்'பொருநை வரை இவ்வளவு எளிதாகப் பரவி ஆட்சி செய்தனர் என்பதும், அத்துடன் அமையாது தமிழர் வாழ்வுடன் நகமும் சதையுமாக வேறு பிரிக்க முடியாத நிலையில் இரண்டறக் கலந்துள்ளனர் என்பதும் வியப்புக் குரியன. ஆனல் பண்பிலும் தனி முதன்மையிலும் தமிழர் மேம்பட்டவராயின், தெலுங்கர் வீரத்திலும் செயலார்வத்திலும் ஊக்க முனைப்பிலும் விஞ்சியவர் ஆவர். வீரமும் பண்பும் இணைந்த இம் மணிமிடை பவளமொத்த இணைப்புக் கவிஞர்களாலும் வருணித்து முடியாத பொன் வண்ணப் பொலிவுடையது...தோழமையினத்தவரான தமிழர் பண்பு காத்து 'திராவிடநாடு' என்ற பண்பாட்டுக் கோட்டையின் வீரகாவலர்களாகப் பொன்னூழிக் காலத்திய நாடு கடந்த தெலுங்கர் விளங்கினர் என்னலாம். இவ்விளைவு இந்திய மாநிலத்தின் பல் கூட்டிணைவுத் திறத்துக்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு."

—செஞ்சி வரலாறு: இராவ்பகதூர் ஸி. எஸ். சீனிவாசாச்சாரியார்: முனைவர் சி. ஆர். ரெட்டியின் சிறப்பு முன்னுரை.

தெலுங்கர் வீரம் எலும்பாகவும் தமிழர் பண்பு தசையாகவும் ஒரே தமிழ்ப் பேரினக் குருதியால் இணைக்கப்பட்டுப் புதிய தமிழகத்தை ஆக்கிவரும் பண்பைக் கவிஞரினும் கனிவுடைய மொழிகளிலே பேரறிஞர் சி. ஆர். ரெட்டி அவர்கள் இங்கே தீட்டிக் காட்டியுள்ளனர். ஆனல் தெலுங்கர் வீரம் தமிழர் பண்பு என்று பேரறிஞர் இங்கே பகுத்துக் காட்டுவது சோழப் பெரும் பேரரசுக்குப் பிற்பட்ட காலநிலைக்குமட்டுமே பொருந்துவதாகும். அதற்குமுன் தமிழர் பண்பு தெலுங்கரிடத்திலும் தெலுங்கர் வீரம் தமிழரிடத்திலும், இருவர் பண்பும் வீரமும் மற்ற எல்லாத் திராவிட இனத்தவரிடத்திலும் விரவியே காணப்படுகின்றன. தமிழர் தற்பண்பு வாய்ந்த இலக்கியத்தைப் போலவே, தெலுங்கருக்கும் தற்பண்பு வாய்ந்த திராவிடப் பேரிலக்கியம் சோழப் பெரும் பேரரசர் காலத்திலும், அதற்கு முன்னும் நிலவியிருந்தது என்பதை

அறிஞர் ரெட்டி அவர்களே பிறிதோரிடத்தில் (தெலுங்கிலக்கிய வரலாறு: செஞ்சையா: அறிஞர் ரெட்டி முன்னுரை) கல்வெட்டு இலக்கியச் சான்றுகளுடன் விளக்கியுள்ளனர். கன்னட மொழியிலும் சங்க இலக்கிய காலத்தை அடுத்தே இத்தகைய திராவிடப் பெரும் பேரிலக்கியம இருந்ததென்பதைக் கன்னட இலக்கியக் குறிப்புக்கள் மட்டுமன்றி, சோழப் பெரும்பேரரசர் காலத் தமிழிலக்கிய இலக்கணக் குறிப்புக் களும் காட்டும்.

அறிஞர் ரெட்டி மாநிலத்தின் வியத்தகு கூட்டிணைவுப் பண்பு என்று குறிப்பிட்டது உண்மையில் இந்திய மாநிலத்தின் அடிப்படைப் பழங்குடியினமாகிய திராவிடப் பேரினத்தின் உயிர்ப் பண்பேயாகும் என்பது நாகரிக உலகில் தமிழகம் இடம்பெற்ற பின்னரே அறிவுலகம் கண்டுணர வழி ஏற்படக் கூடும் என்னலாம்.

## இஸ்லாமியரும் தென்னாடும்

தென்னாட்டின் தேசிய உயிராற்றல் தமிழினத்தவராகிய தெலுங்கரையோ,மதமட்டுமே மாறிய தமிழினத்தவரையோ இணைத்துக்கொண்டது வியப்புக்குரியது அல்ல வட இந்தியப் பரப்பு இன்றுகூட முற்றிலும் தன் தேசியத்துக்குள்ளேயே மத மாறிய இந்திய முஸ்லிம்களைக் கூடத் தன்னுடன் ஒன்று படுத்த முடியாதிருப்பதை நோக்க, மதமாறிய தென்னாட்டவர் மட்டுமன்றி, அயல்நாட்டிலிருந்து வந்த அராபியரும், யூதரும், யவனரும் தென்னாடெங்கும் பரவித் தென்னாட்டவருடன் தென்னாட்டவராகக் கலந்துவிட்டசெய்தி வரலாற்றின் வியப்பார்வத்துக்குரிய புதுமைகளுள் ஒன்றேயாகும்.

பிற்காலப் பாண்டியப் பேரரசர் காலத்தில் ஜமாலுதீன் அராபியனாயினும் ஆட்சியுரிமை பெற்றுத் தமிழனாகவே வாழ்ந்தது மேலே குறிக்கப்பட்டது. முனைவர் கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்கள் வடதிசைக் கண்ணோட்டத்துடன் குறிப்பது போல, இது சோழப் பெரும் பேரரசருக்குப் பிற்பட்ட தளர்ச்சிக்குரிய அறிகுறி மட்டுமன்று. சோழப் பெரும் பேரரசர் காலத்திலேயே இதுபோலச் சீனரும் கடாரமக்களும் நாகபட்டினத்தில் வந்து தங்கித் தம் புத்த சமயத்துடனும் புத்தப் பள்ளியுடனும் வாழ்ந்திருந்தனர். இடைக்காலப் பாண்டியர் ஆட்சியில் இஸ்லாமியர் மேல் கரையில் 'அஞ்சு வன்னத்தார்' என்ற சிறப் புரிமையுடன் வாழ்ந்து வந்தனர். கிட்டத்தட்டச் சங்க காலத்திற்கு அருகாமையிலேயே சேர

அரசர் சிரியா நாட்டுக் கிருஸ்தவருக்கு இதுபோன்ற தனி உரிமை அளித்திருந்தனர். மற்றும் சங்க காலத்திலேயே யவனரும் உரோமரும் எகிப்தியரும் மேல்திசை முசிறியிலும், கீழ்திசைப் புதுச்சேரியிலும் தமிழருடன் தமிழராகக் கலந்து வாழ்ந்தனர். காவிரிப்பூம் பட்டினத்தின் பட்டினப்பாக்கம் பன்மொழிப் பாக்கமாகவே நிலவியதைப் பட்டினப் பாலை போன்ற சங்கப் பாடல்கள் காட்டுகின்றன.

இங்கிலாந்தும் பிரான்சும் ஏசுவின் பெயரைக் கேட்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே, ஏசுவின் நேர் மாணவருள் ஒருவரான திருமுதல்வர் தாமஸ் தமிழகக் கரையில் மயிலையில் கோயில் கட்டிச் சமயம் பரப்பி வாழ்ந்திருந்ததாய் கிரித்தவ மரபு குறிக்கின்றது.

ஜமாலுதீன் வாழ்ந்த காயல் பட்டினத்திலேயே அவருக்கு நான்கு நூற்றாண்டுகளுக்குப் பின் புகழுடன் வாழ்ந்து தமிழ் வளர்த்த சீதக்காதி மன்னனைத் தமிழகத்தில் அறியாதவர் இல்லை. ஜமாலுதீனைப் போலவே செத்தும் கொடுத்த சீதக்காதியும் பண்பால் தலைசிறந்த தமிழர்—மரபால் ''சையித் காதர்'' என்ற அயலினப் பேரும் ''மரக்கல ராயர்'' என்ற பட்டமும் உடைய தமிழக அராபிய குல திலகமேயாவர் என்பதை தமிழக வரலாற்றாசிரியர் மறத்தல் இயலாது.

கடல் வழி தமிழகம் வந்த இஸ்லாமியர் தமிழகப் பண்பாடு தழுவி எளிதில் கீழ்திசையிலே தேசங்கடந்த தேசியவாதிகள். சமயங் கடந்த சமய வாதிகள், நாடு கடந்த உலகத் தமிழர் ஆகமுடிந்தது. பண்படா இனக் கலவைப் பரப்பாகிய வடமேற்கு வழி வந்த இஸ்லாமியர்களுக்கு இந்தப் பண்பாட்டு வாய்ப்பு எளிதில் கிடைக்கவில்லை. வட திசையிலும் ஓரளவு முகலாய மன்னர் இந்தியப் பண்பு தழுவ முயன்றனராயினும், வடதிசைத் தேசியம் தென் திசைத் தேசியத்தின் பொன் வண்ண இணைவுப் பண்பற்றதாக வளர்ந்ததாலேயே அக்பர் கனவு கைகூடவில்லை. ஆனால் தென்திசையில் தேசியக் கனவையே இஸ்லாமியரான மைசூர்ப் பேரரசர் எளிதில் மேற்கொள்ள முடிந்தது. வடதிசையிலிருந்து வந்த இஸ்லாமியரின் மிக மோசமான அரசியல் பேராளான கரு நாடக நவாபும், நிஜாமும், சிவாஜி மரபின் பெருமையுணராத பிற்கால மராட்டிய அரசியல் வேடரும் தென்னாட்டைக் கோட்டை விடவில்லையானால், மைசூர்ப் பேரரசர், விஜயநகரப்பேரரசின் புகழும் பின்னிட வல்ல ஒரு பெருந்தென்னாட்டுத் தேசியத்தைக் கட்டாயம் உருவாக்கியிருப்பவர் என்னலாம்.

## பக்தி இயக்கமும் இஸ்லாமும்

மேலை ஐரோப்பாவின் வரலாற்றில் தலைசிறந்த நூற்றாண்டு எது என்று கேட்டால் 18, 19—ம் நூற்றாண்டுகளே என்ற விடையை யாவரும் ஒத்துக்கொள்வர். தென்னாட்டுத் தொடர்பு ஏற்பட்ட 16-ம் நூற்றாண்டில் தொடங்கிய மறுமலர்ச்சியின் உச்சமுகடு அந் நூற்றாண்டுகளே. ஆனால் அரசியல் வாழ்வையும வாணிகத் தொழில் வாழ்வையும் நோக்க தமிழக வரலாற்றிலும் கீழ்திசை வரலாற்றிலும் மிக மோசமான நூற்றாண்டுகள் எவை என்று கேட்டால் அந்த 18,19-ம் நூற்றாண்டுகளையே கூறுதல் வேண்டும். ஏனெனில் மேனாட்டுத் தொடர்பு ஏற்பட்ட 16-ம் நூற்றாண்டிலிருந்து தொடங்கிய வீழ்ச்சி உச்ச நிலை பெற்றது அந்நூற்றாண்டுகளிலேயே யாகும். ஆனால் தென்திசை, கீழ்திசை ஆகிய வற்றில் இந்த இருண்ட நூற்றாண்டுகளிலும் புது மலர்ச்சி தரும் ஒரு திரு விளக்கை தமிழகம் சங்க காலத்திலிருந்தே பேணி வளர்த்து வந்தது. அதுவே சைவ வைணவ பக்தி இயக்கமாகும்.

தமிழகத்தில் பக்தி இயக்கத்தின் முதல் தோற்றம் சங்க இலக்கிய இறுதிக் காலத்திலேயே, கி. பி. 3-ம் நூற்றாண்டுக்கும் 5-ம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்திலேயே ஏற்பட்டதெனலாம். அது பல்லவ பாண்டிய நாட்களில் தமிழகத்திலே உச்ச உயர் முகடெய்தி, சோழப் பெரும் பேரரசர் காலத்தில் இன்று ''இந்து சமயம்'' என்று கூறப்படும் அகல் பெருங் கோட்டையை உருவாக்கிற்று இதிலிருந்து பரவிய பல கிளையலைகளே இந்திய மாநிலத்தின் சமய, பண்பாட்டு, கலை, இலக்கிய வாழ்வாகவும். கீழ்திசை வாழ்வாகவும் பரவியுள்ளது. முதல் அலை பல்லவர் காலத்திலேயே காஞ்சியிலிருந்து சைவப் பேரியக்க அலைகளாக மராத்தியம், காசுமீரம் நேபாளம், திபேத், அஸ்ஸாம், வங்காளம் ஆகிய பகுதிகளெங்கும் பரவிற்று. இந்த அலையின் தடங்களைத் தமிழக அலைத் தடங்களாக இன்று வரலாற்றாசிரியர் காண்பதில்லை. காரணம் பிற்காலக் கிளையலைகளின் உயிர்த் தடங்களினாலேயே அவை மங்கி மழுங்கிவிட நேர்ந்துள்ளது. இரண்டாவது அலை 8, 9-ம் நூற்றாண்டுகளில் அதே காஞ்சியிலிருந்து புறப்பட்டது. அதுவே புத்த சமய எதிர்ப்பாக எழுந்த சங்கரரின் அறிவியக்க அலை. இது ஒருபுறம் வங்கத்தையும், மற்றொரு புறம் சிந்துவெளிப் பாஞ்சாலத்தையும் ஆட்கொண்டது. மூன்றாவது அலையே 12-ம் நூற்றாண்டிலிருந்து 19-ம் நூற்றாண்டு வரை பல கிளைப்பேரலைகளாக மீண்டும் மீண்டும் எழுந்து சென்று இன்றளவும் இந்திய மாநில மக்கள் வாழ்வின்

ஆழ் தடத்தில் புதுப்புது இசை கிளப்பி வருகின்ற வைணவப் பேரலையாகும்.

புத்த சமண சமயங்கள் சிந்து கங்கை வெளியில் எழுந்தவை யாயினும், அவற்றின் அறிவலைகளும் தமிழகத்தினின்று இம்மூவலைகளுடன் கலந்து கீழ் திசையின் சமய வளர்ச்சிக்களமான காஞ்சியிலிருந்து பல்லவர் காலத்துக்கு முன்னிருந்தே தொடங்கி 11-ம நூற்றூண்டு வரை வடக்கே செல்வது காண்கிறோம். திபேத்துக் கென்று தனிப்பட்ட ஒரு புத்த சமயப் பதிப்பைப் பன்னிரண்டாம் நூற்றூண்டில் அளித்த சமய முதல்வன் வங்கத்தில் விக்கிரம சீலப் பல்கலைக் கழகத்திலிருந்து சென்ற ஒரு தமிழனே என்றும், சீனுவுக்கும் சப்பானுக்கும் மலாயாவுக்கும் புத்த சமயங்களைக்கொண்டு சென்றவரும், பின்னுட்களில் மலாயாவுக்கு இஸ்லாத்தின் புத்தொளியைக் கொண்டு சென்றவரும் தமிழரே என்றும் அறிகிறோம்.

வைணவப் பேரலை தனிச் சிறப்புக்குரிய முறையில் தென்னுட்டு மொழிகளுக்கும் வட இந்தியத் தாய் மொழிகளுக்கும் இலக்கிய வாழ்வளித்த தமிழகப் பேரலையாகும். கன்னடம் நீங்கலானதென்னிந்தியத்தாய்மொழிகள் அனைத்திற்கும் 12-ம் நூற்றூண்டிலும். வங்கத்திற்கு 16-ம நூற்றூண்டிலும் மராத்தி குஜராத்தி, இந்தி ஆகிய மொழிகளுக்கு 18-ம் நூற்றூண்டிலும், பஞ்சாபிலுள்ள குருமுகி மொழிக்கு 19-ம் நூற்றூண்டிலும் இவ்வலை இலக்கிய வாழ்வளித்தது கன்னட நாடே சமண சமயத்துக்குக் கடைசிக் கோட்டையாக விளங்கியதனுல் அம்மொழியில் 12-ம் நூற்றூண்டு வரை சமண சமய அலையும், 16-ம் நூற்றூண்டு வரை சைவ அலையும், 19-ம் நூற்றூண்டு வரை வைணவ அலையும் இலக்கிய வாழ் வளித்துள்ளன. பாரநிலத்தில் இந்த அலைகளில் முதல் அலையான புத்த அலை தமிழகத்துக்கு வெளியே பரவியதற்கு எங்கும் அறிகுறிகள் உண்டானுலும், அது இடைக் காலத்தில் பெரிதும் அழிந்துபட்டது. மணி மேகலையுடன் புகழ் தோற்றுவித்துள்ள தமிழரின் புத்த இலக்கியமும், இலங்கை முதலிய தொலை நாடுகளின் இலக்கியககளும் தான் அதன் தடம் காட்டுகின்றன.

தமிழக வைணவ அலை பிற அலைகள் தாண்டி இந்திய மாநில மெங்கும் பரவியதற்கு இஸ்லாத்தின் துணைவலிமையே பெரிதும் காரணம் என்பதில் ஐயமில்லை. "ஒன்றே குலமும், ஒருவனே தேவனும்" என்ற கொள்கையில் தமிழரினும் வீறிய உரமுடையவர் இஸ்லாமியர் என்பதை எவரும் மறுக்க மாட்டார்கள். அதன் அரசியல் தாக்குதலை விடப் பண்பாட்டுத்

தாக்குதலே வடதிசை மாநில வாழ்வை 17-ம் நூற்றாண்டி லிருந்து பெரிதும் அசைக்கத் தொடங்கிற்று என்பதில் ஐய மில்லை. தமிழக வைணவ அலை அதனை எதிர்த்துத் தற் பண்பு பேணும் காப்புக் கருவியாகவும், அதனுடன் இணைந்து வட திசையின் தளர்ச்சியைப் போக்கும் மறுமலர்ச்சிப் படையாக வும் புதுத் தேசியமாகவும் இயங்கிற்று. இவ்வலையைப் பல இடங்களில் இஸ்லாம் பகை யலையாகக் கருதாமல் எதிர் கொண்டு தழுவிற்று என்பதற்குப் பல சான்றுகள் காணலாம்.

இஸ்லாத்தை எளிதில் வரவேற்றவர்கள் இஸ்லாம் வரும் வரை சமுதாயத்தில் தாழ்த்தப்பட்டவராக இருந்த பழங்குடி மக்களே. அவர்களிடையே தென்னாட்டுச் சைவ வைணவ இயக்கங்கள் பலரைப் பக்தராக்கியது போல, வட திசை யிலும் வைணவ அலை துளசிதாசர் போன்ற பல பக்த மணி களைத் தோற்றுவித்தது. அத்துடன் இஸ்லாமிய மரபே கபீர் தாஸர் மூலம் வைணவ அலையின் வைரமணி ஒன்றை அளித் தது. இலக்கியத்தில் 12-ம் நூற்றாண்டிலேயே அமீர் குஸ்ரு வட திசையின் உருவிலா மொழியில் கவிதைக் கனவு கண்டு, மொழி உருவான காலத்தில் உருது, இந்தி, பஞ்சாபி ஆகிய மொழியாளர்களின் பொதுமூலக் கவிஞனானன். அரபு நாட் டிலும் பழம் பாரசீகத்திலும் வளர்ந்த ''மறைஞான'' இயக் கம் (சூபிகள் இயக்கம்) தெனனாட்டு அறிவுச் சமய ஒளியுடன் கலந்து சிற்றாறும் தண் பொருநையும் போல எளிதில் இணை வதையும் இங்கே குறிப்பிடலாகும். வைணவமும் இஸ்லா மும் கலந்து உருவாக்கிய புதிய ஒளிகளுள் 18-ம நூற்றாண்டில் சீக்கிய சமய முதல்வரும் இலக்கிய முதல் வருமான குரு நானக் ஒருவர். 19-ம் நூற்றாண்டில் ஆரிய சமாஜத்தைத் தோற்றுவித்த தயானந்த சரஸ்வதி கூடச் சைவ அலையும் இஸ்லாமிய எதிர்ப்பலையும் சேர்ந்து உருவாக்கிய புத் தொளியே யாவர்.

### இஸ்லாம்: தேசிய வாழ்வும் சமய வாழ்வும்

இஸ்லாம், கிறித்தவம் ஆகிய மேலைச்சமயங்களைப் பொது வாகவும் முன்னதைச் சிறப்பாகவும் அயல் பண்பாக மட்டு மன்றிப் பகைப் பண்பாகவும் அழிவுப் பண்பாகவும் கொள் ளும் மரவு கீழ்திசை வரலாற்றாசிரியர் சிலரிடையே பெரு வழக்காகியுள்ளது. புத்த சமண சமயங்களும் வேத நெறியும் தமிழகத்துக்கு அயற் பண்பாடாவதுபோல, இவையும் இரு திசைக்கும் அயல்பண்பாடுகள் என்று கொள்வதில் தவறில்லை.

ஆனால் முந்தியவற்றைத் தமிழகத்தின் சொந்தப் பண்பாடு போலவும், பிந்தியவற்றை மட்டும் அயல் பண்பாடு மட்டுமல்ல எதிர்ப் பண்பாடு என்றும் கொள்வதில் வரலாற்று நேர்மையோ வாய்மையோ இருக்க முடியாது. உண்மை என்னவெனில், தென்னாட்டைப் பொறுத்தவரை, வடதிசைச் சமயங்களான புத்த, சமண நெறிகளும் மேல் திசைச் சமயங்களான இஸ்லாமிய கிரித்துவ நெறிகளும் அயல் வரவுகள் ஆனாலும், தமிழ்ப் பண்பாட்டுடன் ஒவ்வொரு வகையில் எளிதில் இணைபவையே யாகும்.

உலகின் இன்றைய நாகரிக சமயங்கள் யாவும் ஒரே உலகப் பகுதியில் ஒன்றுபட்ட பண்புகளுடன் தோன்றியதை நோக்க, இச்சமயங்கள் யாவும் தமிழ்ப்பேரினத்துடன் தொடர்பு கொண்ட ஓர் அகல் பேரின வாழ்வின் பல திசை மலர்ச்சிகளே என்று கொள்ள இடமுண்டு. இதன் விளக்கம் வருங்கால சமய ஒப்பியலாராய்ச்சியாளர்களுக்கு உரியதாகும்.

குறிப்பாக இஸ்லாத்தின் பேரில் வரலாற்றறிஞர் பலருக்குள்ள தப் பெண்ணத்துக்கு இரு வரலாற்றுக் கூற்றுக்களே காரணம். ஒன்று அவர்கள் ஒரு கையில் வாளும் ஒரு கையில் குரானும் கொண்டு சமயத்துடன் அரசியலும், அரசியலுடன் சமயமும் இணைத்தனர் என்ற கருத்து. மற்றது இந்திய மாநிலத்தில் சைவ வைணவக் கோயில்களை அவர்கள் கொள்ளையிட்டனர் என்பது.

சமயமும் அரசியலும் இணைந்தது ஓரளவு தொடக்க கால இஸ்லாத்தின் தனிப் பண்பு என்பதில் ஐயமில்லை. ஆனால் இது ஏழாம் நூற்றாண்டில் அராபிய நாட்டுச் சூழ்நிலை சார்ந்தது. நபி நாயகத்தின் கிளர்ச்சி அராபியருக்கு ஒரு சமயக்கிளர்ச்சி மட்டுமல்ல; அது ஒரு தேசியக் கிளர்ச்சியுமாகும் என்பதைப் பல இஸ்லாமிய அறிஞர்கள் கூடக் காணத் தவறியுள்ளனர். ஆனால் அரசியலும் சமயமும் ஓரளவு இணைவதை எல்லாச் சமயங்களிலும், நாடுகளிலும் காணலாம். அசோகன் புத்த சமயத்துக்கும், காரவேலனும் தென்னாட்டுப் பேரரசர் பலரும் சமண சமயத்துக்கும், தமிழகப் பேரரசர் சைவ வைணவ சமயங்களுக்கும், அவர்களைப் போலவே உரோமப் பேரரசன் கான்ஸ்ன்டைன் கிரித்து சமயத்துக்கும் பரப்புசல் தலைவரானதை நாம் மறந்து விட முடியாது. இது போலவே வாள் முனையில் சமயம் பரப்பியவரும் இஸ்லாமியர் மட்டுமல்லர். உண்மையில் தம் அரசியல் வெற்றிக்குத் தெய்வீகத் தோற்றந்தர விழைந்த எல்லா அரசர்களும், பேரரசர்

களும் இதைச் செய்யத் தயங்கவில்லை. கிரித்தவ சைவ, வைணவ வரலாறுகள் இதனைக் காட்டும்.

மதமாற்றும் செயலில் பல்லவன் மகேந்திர வர்மன் தென்னார்க்காட்டுப் பாடலி நகரிலுள்ள சமணப்பள்ளியை அழித்ததையும், கிருமி கண்ட சோழன் தில்லைப் பெருமானைக் கடலில் எறிந்ததையும், மேலை உலகில் ஆங்கில மன்னன் எட்டாம் ஹென்றி கத்தோலிக்க மடங்களை அழித்ததையும், கிரித்தவப் பழம் பேரரசன் சார்லிமேன் ஸ்பெயினில் இஸ்லாமிய நாகரிகத்தை அழித்ததையும் வரலாறு பதிவு செய்துள்ளது. தவிர சைவ வைணவக் கோயில்களை அவ்வச் சமயத்தவரே கொள்ளையிடத்தவறியதில்லை. காஞ்சியை விசய நகரப் பேரரசர் ஆட்சிக் காலத்தில் பாமினிப் பேரரசன் மட்டுமன்றி, ஒரிசாவை ஆண்ட கசபதி மன்னரும் கொள்ளை யிட்டனர். மராட்டியர் கொள்ளைக் காளான கோயில்கள் பல. மராட்டிய இனத்தவரல்லாதவர் பிராமணராயிருந் தால் கூட அவர்கள் அழிக்கத் தயங்கவில்லை என்று காண் கிறோம். மற்றும், பல்லவரும் சோழரும் எதிரி நாட்டுச் செல்வத்துடன் செல்வமாகக் கோயில்களையும் கொள்ளையிட்டு தம் நாட்டு மக்களிடையே அதையே வெற்றிச் சின்னமாகக் காட்டும்படி சிலைகளைக் கொண்டு வந்தனர் என்பதையும் நாம் மறக்க முடியாது.

சோம நாதபுரத்துக் கோயிலைக் கொள்ளையிட்ட மகமது கஜினி தன் நாட்டில் அச் செல்வத்தைக் கொண்டு மக்கள் வாழ்வும் கலையும் வளர்த்து நல்லரசனாகவே ஆண்டான் என்று அறிகிறோம். ஆப்கன் நாட்டின் பொற்காலம் அவன் காலமே. ஆகவே கோயில்களை அழிக்கும் செயலைவிட அவ் வழிவுக்கு அயலவரைத் தூண்டும் வகையில் மக்கள் நல்வாழ் வுக்குச் செலவிட வேண்டிய மக்கள் பணத்தைக் கோயிலில் குவித்து வைக்கும் அரசர்களே தேசிய வாழ்வுக்குப் பெருங் கேடு செய்தவராவர். ஆட்சியின் குறைபாட்டிலிருந்து மக்கள் பார்வையைத்திருப்பி மறைப்பதற்கே பல மன்னர் இச் செயலில் ஈடுபட்டுள்ளனர் என்னலாம்.

உலகில் வேறெந்நாட்டு மன்னரையும் விடத் தென்னாட்டு மன்னரும் தமிழக மன்னருமே இவ் வகையில். வருங்கால தேசிய, உலக சமுதாயத்தின் கண்களில் பெருங் குற்ற வாளிகள் ஆவர் என்னலாம். ஆனால் அக் கோயில்களின் வாழ்விலிருந்தே தென்னாட்டு வரலாற்றுக்குரிய கல்வெட்டுக் களும் இலக்கியங்களும் நமக்கு வந்து சேர்ந்துள்ளதை நோக்க, இது தேசிய மளாவிய குற்றமே என்னலாம். வன

மல்லிகை மலரின் முட்போல அது அமைந்ததாயினும் வருங்கால அறிவால் செப்பம் செய்ய வேண்டிய ஒன்றே யாகும்.

## இஸ்லாமும் ஆசிய தேசங்களும்

தென்னாட்டு வாழ்வில் இஸ்லாமிய நாடுகளின் நாகரிகமும், இஸ்லாமிய நாகரிகமும் வடதிசை இஸ்லாமியத் தொடர்புக்கு உட்பட்டவையாகும். ஆனால் இஸ்லாமிய ஆட்சியும் பண்பாடும் வடதிசை கலவைப் பண்பாடுகளுடன் கலந்த பின்பே, அது தென்திசை அரசியல் வாழ்வின் அமைதியில் தலையிடத் தொடங்கிற்று, ஆகவே தென்னாட்டின் முதல் வடதிசை தாக்குதல் வடதிசை இஸ்லாமியத் தாக்குதலாகவே அமைந்தது. வடதிசைக் கலவைப் பண்பாடுகளின் பேராளாக அதன் முதல் தாக்குதல் செயலாற்றிற்று.

இஸ்லாம் முதல் முதல் கிளர்ந்தெழுந்தது அராபிய இனத்திலேயே. அராபியர் தமிழ் இனத்தவரைப் போலவே உலகின் மிகப் பழமையான ஒரு கடலோடி இனத்தார். உலகின் பழமையான இனங்களுடன் தொடர்பு கொண்ட இனமாகவும் அது சிறப்புற்றோங்கி இருந்தது. ஆனால் பழங் காலத் தென்னாடு வாணிகத் தொழில் நாகரிகமாகவும், கடலக நாகரிகமாகவும் அமைந்திருந்தது. அராபிய இனமோ வாணிக நாகரிகமாகவும் கடல் நாகரிகமாகவும் மட்டுமே இயங்கிற்று. இதற்குக் கராணம் அதன் நில இயல்பே. முந்நீர்க்கடலில் அவர்கள் அலைந்தோடியது போலவே பாலை வனங்கலிலும் அவர்கள் அலைந்தோடினர். இதனால் அவர்கள் சமுதாய வாழ்வு ஓரளவு அரை நாடோடி வாழ்வாகவும், வீரக்குலமரபு முறை வாழ்வாகவுமே இருந்தது.

அராபியரைப் போல நாகரிக உலகின் நாகரிகம் அனைத்தையும் அறிவு கலை இலக்கியச் செல்வங்கள் அனைத்தையும் முன்னேற்றங்கள் அனைத்தையும் தமதாகக் கொண்ட இன்னொரு மனித இனக்கிளையை நாம் உலக வரலாற்றிலேயே காண்டல் அரிது. ஆனால் இத்தனை நிறை நாகரிக வாழ்வு இருந்தும் அவர்கள் 7-ம் நூற்றாண்டு வரை ஒரு தேசிய வாழ்வையோ, நிலையான வளர்ச்சியுடைய ஒரு சமய வாழ்வையோ, தேசிய ஆர்வத்தையோ பெற்றிருக்கவில்லை. அவர்கள் நிலச் சூழலிலும் வாழ்க்கைச் சூழலிலும் அவர்களாக இயல்பாக இவற்றை என்றும் பெற்றிருக்க முடியாதென்பதை இன்றைய அவர்கள் வரலாறு கூட எடுத்துக் காட்டும்.

ஆனால் 7-ம் நூற்றாண்டில் அந் நாட்டில் தோன்றிய ஒரு தனி மனிதர்—வியக்கத்தக்க மனித எல்லை மீறிய ஆற்றல் கொண்ட ஒரு தனிப் பெரியார்—நபிநாயகம்—இத்தனையையும் அவர்களுக்கு அளித்து ஆயிரம ஆண்டுகளுக்கு மேல் உலகுக்கே அவர்கள் உயிர்ப்பும் துடிப்பும் வழங்கும்படி செய்துவிட முடிந்தது!

உலகின் தேசிய முதல்வர்களின் வரிசையில் அவருக்கு ஈடிணை காண்பதரிது—ஏனெனில் மன்னராக ஆளாமலே மன்னர் எழுப்புதற்கரிய தேசயத்தை அவர் எழுப்பினார். தேசிய வீரனாய் அமையாமலே தேச தேசங்கள் கடந்த ஒரு புதிய உலக தேசியத்தை அவர் உருவாக்கினார்! கவிஞராய் இருந்து பாடாமலே, அறிஞராயிருந்து வாதிடாமலே-கவிஞர் எவரும் எழுப்பாத கனலை எழுப்பி, அறிஞர் எவரும் அமைக்காத அறிவுக் கோட்டையின் அடிப்படையை அவர் வெற்றிகரமாக அமைத்து முடித்தார்!

அராபிய தேசியமாக எழுந்த இஸ்லாம் பாரசிக தேசியத்தில் உருக்கி வார்க்கப்பட்டு, துருக்கிய இனத்தின் பேரெழுச்சிக்கு உருவும் பண்பும் தந்து, வட இந்தியாவில் பரவி சிறிது தற்பண்பு மாறி, தென்னகத்தின் வடதிசையில் இவ் வெல்லா நாகரிகங்களின் ஒரு புதுக்கூட்டுறவாகச் சில காலம நிலவிற்று. 18-ம் நூற்றாண்டுக்குள் தென்னகத் தேசிய மறுமலர்ச்சியுடன் அது முற்றிலும் ஒன்று பட்டுவிட்டாலும், அதன் வடதிசைப் பண்பு அதை வடஇந்தியத் தேசியத்துடன் மட்டும் முற்றிலும் இணைந்தமையாமல் போட்டியிடச் செய்துள்ளது. வருங்கால உலகில் அது தமிழகத் தேசியத்தின் வழி நின்று வடதிசைத் தேசியத்திலும் அமைதியும் ஒருமைப்பாடும் உணடு பண்ணக் கூடும் என்று நம்பலாம். ஏனெனில் தமிழகம் தாண்டிச் சென்ற தென்கிழக்காசிய நாடுகளில் இஸ்லாம் இதே அமைதி கண்டுள்ளது.

வடமேற்கு இந்தியாவில் 9, 10-ம் நூற்றாண்டுகளிலேயே அராபிய இஸ்லாமிய மரபினர் தாக்குதலால் கரையோரப் பகுதியாகிய சிந்து மாகாணத்தின் வாழ்வும் அதனை யடுத்து குஜராத் மாகாணத்தின் வாழ்வும் சீர்குலையலாயின. ஆனால் 11, 12-ம் நூற்றாண்டுகளில் ஆப்கன் நாட்டில் ஆண்ட கஜினி மாமூதும் கோரி முகமதும் வடமேற்கின் மலைக்கணவாய்களின் வழியாகப் படை யெடுத்தனர். கஜினிமாமுது 18 தடவை படை யெடுத்தானாயினும், சோழப பெரும் பேரரசின் அந் நாளைய ஆற்றலெல்லையான கங்கைக்கரை கடக்கவில்லை. அத்துடன் அவன் சமயம் மாற்றுவதையும் கோயில் செல்வங்களைக்

கொள்ளைகொள்வதையும் மட்டுமே குறியாகக் கொண்டிருந்தான். ஆனால் கோரி முகமது இவ்விரு செயல்களுடனமையாது தில்லியிலேயே தன் ஆட்சிப் பேராளை அமர்த்திச் சென்றான். 12-ம் நூற்றாண்டுக்குள் சோழப் பேரரசர் கை வட திசையில் தளாநது விட்டது என்பது இங்கே கவனிக்கத் தக்கது.

தில்லியில் 12-ம் நூற்றாண்டிலிருந்து தொடங்கி நான்கு நூற்றாண்டுகள் (1193—1526) ஆப்கானிய மரபினரும், அதன் பின் பிரிட்டிஷ் மன்னராட்சி ஏற்படும் வரை (1526—1858) நடு ஆசிய துருக்கி இனத்தவரான மொகலாய மரபினரும் ஆண்டனர்.

ஆப்கானியருள் ஐந்து மரபினர் ஒருவர் பின் ஒருவராகத் தில்லியில் ஆண்டனர். அவர்கள் அடிமை மரபினர் 1193—1287) கிலஜி மரபினர் (1290—1320) துக்ளக் மர பினர் (1320—1412) சயித் மரபினர் (1412—1443) லோடி மரபினர் (1443—1526) ஆகியவர்கள்.

மெகலாயர்களில் பாபர் (1526—1530) ஹுமாயூன் (1530—1540, 1555-1556) இடைமறித்து ஆண்ட ஆப்கன் மரபினனான ஷெர்ஷா (1540—1555) அக்பர் (1556—1605) ஜெஹாங்கீர் (1605-1627) ஷாஜஹான் (1627-1658) ஔரங்கசீப் (1658—1707) வரை பேரரசாக ஆண்டனர். ஔரங்கசீப்புக்குப்பின் அவர்கள் ஆட்சி தளர்ந்தது. 1858 வரை பெயரளவில் பேரரசராக, ஆனால் சிற்றரசரின் ஆற்றல் கூட அடிக்கடி இல்லாதவராய் அவர்கள் ஆண்டனர்.

இவ்வரசர்களுள் வட திசையில் பெரும் பகுதியும் அடக்கியாண்ட பேரரசர் ஒரு சிலர் மட்டுமே தென்னாட்டில் கவனம் திருப்ப வழியிருந்தது. இத்தகையவர் 14-ம் நூற்றாண்டில் ஆண்ட கில்ஜி, துக்ளக் மரபினரும், 17-ம் நூற்றாண்டில் ஆண்ட கடைசி முகலாயப்பேரரசர் நால்வருமேயாவர். இவர்களும் தென் திசையில் கால் வைத்தபின், வட திசையிலேயே தங்கள் பேரரசாட்சியின் வலுவை இழந்து விட்டனர் என்று காண்கிறோம். தென்னாட்டில் தேசிய வலுவை இது குறித்துக் காட்டுவதாகும்.

ஆனால் 14-ம் நூற்றாண்டில் ஆப்கானிய மரபினரான கில்ஜி, துக்ளக் பேரரசர்களின் தாக்குதலால் தென்னகத்திலேயே முஸ்லிம் அரசுகள் ஏற்பட்டன. வடதிசைப்பேரரசு சரிந்த பின்னும் இவை நீடித்துத் தென்னகத்தின் வடகோடியில் இடம் பெற்றுத் தெற்கும் கிழக்கும் நோக்கி விரிவடையத்

தொடங்கின. ஆனால் 17-ம் நூற்றாண்டில் மீண்டும் வடதிசை மொகலாயப் பேரரசின் படை யெடுப்புக்கு இம் முஸ்லீம் அரசுகள் ஆளாயின. ஆனால் இங்கும் வடதிசைப் பேரரசே சரிய நேர்ந்தது. படையெடுப்பின் ஒரே பயன் தென்னாட்டின் முஸ்லீம் அரசர் தொகையைப் பெருக்குவதாக மட்டுமே அமைந்தது.

தென்னக வாழ்வில் தலையிட்ட கில்ஜி மரபின் அரசர்கள் ஜலாலுதீன் (12*0-1296) அலாவுதீன் (1296-1316) முபாரக் ஷா (1316—1320) ஆகியவர்களும, துக்ளக அரசர்கள் கியாசுதீன் (1320-1325) முகமது (1325-1351) ஆகியவர்களும் ஆவர்.

தென்னகத்தில் வடதிசை இஸ்லாமியர் தலையீடு.

ஜலாலுதீன் காலத்திலேயே அவன் மருகனான இளவரசன் அலாவுதீன் திடுமென 1303-ல் தேவகிரி மீது தாக்கினான். தேவகிரியை இச் சமயம் ஆண்டவன் இராமதேவன். அவன் புதல்வனான சங்கமன் படையுடன் தொலை நாடுகள் சென்றிருந்ததனால், முதியவனான இராமதேவன் பணிந்து பெரும் பொருளைத் திறையாகக்கொடுத்துச் சந்து செய்து கொள்ள வேண்டி வந்தது. அத்துடன் இராமதேவன் இளவரசன் அலாவுதீனுக்குத் தன்புதல்வியையும மனைவியாக அளித்ததாக அறிகிறோம் எனினும் சங்கமன் இந்த ஏற்பாட்டை ஒத்துக் கொள்ளாமல் திறையையும் நிறுத்தினான். அத்துடன் அலாவுதீன் எதிரியான குஜராத்தரசனுக்கும் அவன் புதல்விக்கும் தன்னிடம் அடைக்கலம் அளித்தான். இதனால் வெகுண்டு 1307-ல் அலாவுதீன் மீண்டும் படையெடுத்துத் தேவகிரி நகரைச் கொள்ளையடித்தான். இராமதேவன் இவ்வெதிர்ப்பில் கலக்காமல், அலாவுதீனுக்குப் பணிந்தான். அலாவுதீன் அவனைச் சிறைப்பிடிததுச் சென்றாலும், விடுவித்து அவன் நாட்டை மட்டுமன்றி, பகைநாடாகிய குஜராத்தையும் அவனுக்கே தந்து ஆளும்படி செய்தான். இந்நட்பு அலாவுதீனுக்கும் தென் திசைப் படையெடுப்பில் பயன்பட்டது.

1309-ல்அலாவுதீன் படைத்தலைவனான மாலிக்காபூர்தேவகிரி மன்னன் உதவியுடன் வாரங்கல் நாட்டையாண்ட இரண்டாம் பிரதாபருத்திரனைப் பணியவைத்து அவனிடமிருந்து திறைபெற்றான். இதனை யடுத்தே அவன் தெற்கே திரும்பி ஹொய்சளரையும பாண்டிய நாட்டையும் தாக்க முற்பட்டான். ஹொய்சள மன்னன் மூன்றாம் பல்லாளன் இப்போது

பாண்டியர் உள் வீட்டுக் கலகத்தைப் பயன்படுத்தித் தமிழகத்தில் தன் ஆட்சியை விரிவுபடுத்துவதில் ஈடுபட்டிருந்தான். மாலிக்காபூர் படையெடுப்புக் கேட்டு அவன் விரைந்து தலைநகரான துவார சமுத்திரத்துக்கு வந்தாலும், போர் புரிய விரும்பாமல் பெரும் பொருள் கொடுத்துப்பணிந்துவிட்டான். பாண்டியருள் சுந்தரபாண்டியனும் அவன் சிற்றப்பன் விக்கிரம பாண்டியனும் மாலிக் காபூரை எதிர்த்து நின்று வெற்றி பெற்று மதுரையைக் காத்தனர். ஆனால் சோழ நாட்டுப்பகுதியில் வீரதவளப்பட்டினத்திலிருந்து ஆண்ட பாண்டியன் தலைநகரைவிட்டோடி விட்டான். அவன் செல்வக்குவையுடன் இராமேசுரக்கொள்ளையின் பொருளும் கொண்டு மாலிக்காபூர் திலலி திரும்பினான். இது முன் இயலில் குறிப்பிடப்பட்டது.

1312-ல் சங்கமன் தேவகிரியின் அரசனானான். அவன் மீண்டும் திறை நிறுத்தித் தங்குதடையற்ற தன்னாட்சி செலுத்தத் தொடங்கினான் முபாரக் மீண்டும் படையெடுத்து அவனை வென்று சிறைப்படுத்தினான் ஆனால் தேவகிரியை முற்றிலும் அடக்கியாள அவனால் முடியவில்லை. தேவகிரியின் தென் திசையில் இதற்குட்பட்ட சிற்றரசான காம்பிலி இப்போது முபாரகை எதிர்த்து நின்றது அதன் மன்னன் சிங்கய நாயகன் காமபிலியில் ஒரு வலிமை வாய்ந்த அரசை நாட்டினான். மாலிக்காபூர் 13 6-ல் காம்பிலி மீதும் படையெடுக்கப் புறப்படுமளவில், தில்லியில் ஏற்பட்ட அரசுரிமைக் குழப்பம் அவனை உடனே அப்பக்கம் செல்லும்படி செய்தது. இக் குழப்பத்திலேயே மாலிக்காபூர்மாண்டதும் மேலேகுறிக்கப்பட்டது.

அலாவுதீனுக்குப் பின் முபாரக்ஷா 1316-ல் தில்லி அரசனானான். இரண்டாண்டுகளுக்குள் தேவகிரி மன்னன் இராம தேவனின் மருமகனான ஹரபாலதேவன் தேவகிரியை மீண்டும் கைக்கொண்டான. ஆனால் முபாரக்ஷாவின் படைத் தலைவனான குஸ்ருகான் தேவகிரி மீது மீட்டும் படையெடுத்து அதை வென்றான். ஹரபாலதேவனைக் குஸ்ரு உயிருடன் தோலை உரித்துக்கொன்று கொடுமைசெய்தான். இதன்பின் தேவகிரி தில்லியின் நேரடி ஆட்சிக்குரிய ஒரு மாகாணமாக்கப்பட்டது. மாலிக்யாக் வக்கீ என்பவன் அதன் மாகாணத் தலைவனாக்கப் பட்டான்.

குஸ்ரு அவ் வாண்டிலேயே திறைதர மறுத்த வாரங்கல் அரசன் இரண்டாம பிரதாபருத்திரனைப் பணியவைத்தான். அதன் பின் தமிழகத்தில் பாண்டி நாட்டின் மீதும் படையெடுக்கத் திட்டமிட்டான்.

## வீரதவளப் பட்டினப்போர்:1318

சுந்தரபாண்டியனை எதிர்த்தொழிக்கும் எண்ணங் கொண்ட வீரபாண்டியன் திருவாங்கூர் அரசனான இரவி வர்மன் குலசேகரனின் உதவியையும் பெற்றிருந்தான். ஆனால் வீரதவளப் பட்டினப்போரில் சுநதரபாண்டியன் இருவரையும் முறியடித்தான்.

வீரபாண்டியன் மீண்டும் குஸ்ருவின் உதவியுடன் அர சுரிமை கைப்பற்ற எண்ணி அவனை வரவழைத்தான். குஸ்ரு இதனை ஏற்றுத் தமிழகம் நேர்க்கினான். ஆனால் அவன் எண்ணம் நிறைவேறவில்லை. தில்லி மன்னன் முபாரக்குக்கு எதிராக அவன் நடத்திய சூழ்ச்சிகள் இச் சமயம் அம்பல மாயின. அவன் படைவீரரே அவனைச் சிறைபிடித்துத் தில்லிக்கு இட்டுச் சென்றனர்.

## மதுரையில் சுல்தான்கள் ஆட்சி 1336—1377

துக்ளக் மரபின் முதல் அரசனான கியாசுடீன் தவிசேறிய வுடன் அவன் தன் புதல்வன் உலுக்கானை வாரங்கல் மீது படையெடுக்கும்படி அனுப்பினான். வாரங்கல் அரசன் இரண் டாம் பிரதாபருத்திரன் மீண்டும் திறை மறுத்ததே இதற்குக் காரணம். உலுக்கான் ஆறு மாதங்களுக்கு மேல் முயன்றும் வாரங்கலை முற்றுகையிட்டு வெல்ல முடியவில்லை. ஆனால் துக்ளக் படைத்தலைவன் மஜீர் அபுரிஜா தோல்வியை மீட்டும் வெற்றி ஆக்கி விட்டான் வாரங்கல் அரசன் குடும்பத்துடன் சரணடைந்தான். ஆனால் சிறைப்பட்ட நிலையில் திலலிக்குக் கொண்டு செல்லப்படும் சமயம் அவன் தற்கொலை செய்து கொண்டு மடிந்தான்.

மஜீர் அபுரிஜா வெற்றிப் படையின் ஒரு பகுதியுடன் கீழ் கரையோரமாகவே தமிழகத்தின் மீது படையெடுத்தான். முன் மாலிக்காபூர், குஸ்ரு படையெடுப்புக்களிலிருநது தமிழ கம் மீட்சியடைநததுபோல இப்போது அடைய முடியவில்லை. பாண்டியன் பராக்கிரம தேவன் 1326-ல் போரில் தோற்று, சிறைப்பட்ட நிலையிலேயே தில்லிக்குக் கொண்டு செல்லப் பட்டான்.

தமிழகம் முழுவதும் முஸ்லிம்களால் அடக்கப்படவில்லை யானாலும், அரசியல் வாழ்வு தற்காலிகமாகக் குலைக்கப்பட் டது. அத்துடன் பாண்டியர் ஆட்சி மதுரைநகரில் இடம் பெருது போயிற்று. ஏனெனில் மதுரையிலே துக்ளக் படைத்

தலைவன் சில படை வீரர்களையும் ஓர் ஆட்சித் தலைவனையும் விட்டுச் சென்றிருந்தான். மதுரையில் அவர்கள் தங்கள் பிடியை உறுதிப்படுத்தப் பத்து ஆண்டுகள் ஆயின. அதன் பின்னும் நகரும் நகரைச் சுற்றிய இடமும தவிர வேறு எங்கும் முஸ்லிம் கள் நேரடியாக ஆளவில்லை. ஆனால் தமிழகமெங்கும் முஸ்லிம் படை வீரர்களின கொள்ளையும் கிலியும் பரவின. சிறபபாகக் கோயில்கள் முஸ்லிம் ஆதிகக வேட்டைக் காரரின் சூறையாட்டுக்கும் அழிவுக்கும் இலக்காயின. கல்வெட்டுக்களிலும், பிற் கால வரலாற்றுச் சார்பான ஏடுகளிலும், கோயில் ஒழுகு என்ற கோயில் வரலாறுகளிலும் இககாலக் கொடுமைகள் மயிர்க் கூச்செறியவைக்கும முறையில் வரையப்பட்டுள்ளன.

முகமது துக்ளக் ஆட்சித் தொடக்கத்திலேயே தில்லி யரசின் தென் மாகாணங்கள் ஐந்தினுள் தமிழகம் ஒன்றாகக் குறிக்கப் பட்டது. இவ்ஐந்து தென் மாகாணங்கள் தேவகிரி, தெலுங்கானா, காம்பிலி, துவாரசமுத்திரம், மாபார் அல்லது தமிழகம் ஆகியவை ஆனால் தாக்ஜாஜ் நகர் அல்லது ஒரிசாவைக் கூடச் சில முஸ்லிம் வரலாற்று ஆசிரியர் குறித்துள்ளனர். எனினும் முதல் ஐந்தில் கூடப் பல செல்வாக்குத் தளங்கள் மட்டுமே.

முஸ்லிம் வரலாற்றாசிரியர்களால் தமிழகம் 'மாபார்' என்றழைக்கப் பட்டுள்ளது. ஆயினும் மாகாண ஆட்சியாக எதுவும் நடைபெறவில்லை. மதுரையை மூலதளமாகக் கொண்ட கொள்ளையாட்சியே நடைபெற்றது. 1336 முதல் 1377 வரை நாட்டு மக்களுடனும் தமக்குள்ளும் குத்துவெட்டுப் போர்கள் நடத்திக் குருதிக்களங்களில் மிதந்த தலைவர்கள் தம்மைத் தன்னுண்மையுடன் சுல்தான்கள் என்றே குறித்துக் கொண்டார்கள். ஏனெனில் வடதிசைப் பேரரசில் மீண்டும் குழப்பம் ஏற்பட்டதாலும், தமிழகத்துக்கும் வட திசைக்குமிடையே ஹொய்சளப்பேரரசு வளர்ந்து வந்ததாலும், தமிழக முஸ்லிம்கள் மீது தில்லியின் ஆதிக்கக் கரம் எட்டவில்லை. ஆனால் இந்தத் தன்னுண்மை மதுரை சுல்தான்களுக்குச் சாதகமாக இல்லை தில்லி முஸ்லிம் அரசின் உதவி அவர்களுக்குக் கிட்டாமல் அது அவர்களைத் துண்டு படுத்தி, மீண்டும் எளிதில் வீழ்ச்சி யடையச் செய்தது.

சுல்தான்கள் என்ற பெயருடன் மதுரையில் ஆண்டவர்களில் எண்மர் பெயர்கள் நமக்கு வந்தெட்டியுள்ளன. அவர்கள் ஜலாலுதீன் அஹ்சன்ஷா (1336), அலாவுதீன் அரோகர் அல்லது அதாஜிஷா, குத்புதீன் பிருஜ்ஷா, கியாஸூதீன் முகமது தமகான்ஷா (1339), நாசிருதீன் முகமதுஷா (1344),

'அமைதியாளன்' அதில்ஷா (1358), 'உலக மன்னன்' முபாரக்ஷா (1363-1368), அலாவுதீன் சிக்கந்தர்ஷா (1372-1377) ஆகியோர். தவிர, நஸ்ரத்துதீன், ஷம்ஸுதீன், நாசிருதீன் இஸ்மாயில் ஃவத் ஆகியோர்களும் மதுரை முஸ்லிம் அரசுக்குரியவர்களாகக் குறிக்கப் பட்டுள்ளனர்.

கோதாவரிப் போர்: 1326

காம்பிலி அரசை நிறுவிய சிங்கய நாயகன் காலத்திலும் அவன் மகன் காம்பிலி தேவன் காலத்திலும் காம்பிலி அரசு மிகவும் வலிமை வாய்ந்ததாக இருந்தது. தேவகிரிக்கும் ஹொய்சளருக்கும் நடைபெற்ற போர்களில் காம்பிலி அரசர் தேவகிரியை ஆதரித்து ஹொய்சளரை எதிர்த்து வந்தனர். இதனால் ஹொய்சளருக்கும் காம்பிலிக்கும் எப்போதும் பகைமைப் போட்டி மிகுதியாய் இருந்தது.

காம்பிலி நகரம் பெல்லாரி மாவட்டத்தில் உள்ளது. சோழப் பெரும் பேரரசர் ஆட்சிக் காலத்தில் அதில் சாளுக்கியர் அரண்மனை இருந்ததையும், அரண்மனையும் நகரும் அடிக்கடி எரியூட்டப் பட்டதையும் கேள்விப் பட்டிருக்கிறோம். காம்பிலி அரசு இந் நகரையே தலை நகராகக்கொண்டு, தற்காலப் பெல்லாரி மாவட்டம், பம்பாய் மாகாணத்தின் இரேய்ச்சூர் இடை நிலம், தார்வார் மாவட்டம் ஆகியற்றை உள்ளடக்கியதாக இருந்தது.

1325-ல் முகமது துக்ளக் தவிசேறினன். அவன் ஆட்சித் தொடக்கத்திலேயே காம்பிலிதேவன் தில்லி அரசுக்குத் திறை அனுப்ப மறுத்துத் தன்னுண்மையுடன் தன் வல்லமை பெருக்க முயன்றான். இச் சமயம் முகமதுக்கு எதிராக அரசுரிமை கோரிச் சாகர் மாகாண ஆட்சியாளனாகிய பகாவுதீன் கார்ஷப் கிளர்ந் தெழுந்தான். காம்பிலிதேவன் அவனுக்கு உடந்தையாக இருந்து வந்தான்.

கார்ஷப்பை அடக்குவதற்காக முகம்மது குஜராத்தின் ஆட்சித் தலைவனான மாலிக் சாதாவையும், தேவகிரி ஆட்சித் தலைவனான மஜீர் அபு ரிஜாவையும் பெரும் படையுடன் அனுப்பினான். அப்படைத் தலைவர்கள் பகாவுதீன் கார்ஷப்பைக் கோதாவரிப் போரில் முறியடித்து அவனை அவனுண்ட சாகர் வரையும் விடாமல் துரத்திச் சென்றனர். துணையற்ற நிலையில் கார்ஷப் தன் குடும்பத்துடன் காம்பிலி தேவனிடம் அடைக்கலம் புகுந்தான்.

**காம்பிலி வீழ்ச்சி 1327**

காம்பிலி அரசனுக்குக் கும்மடம், ஹொாச துர்க்கம் என்ற இரண்டு வலிமை வாய்ந்த கோட்டைகள் இருந்தன. துக்ளக் படைகள் இரு தடவைக் கும்மடக் கோட்டையைத் தாக்கி முற்றுகையிட முயன்றும், அதனைக் கைப்பற்ற முடியாமல் திரும்ப வேண்டி வந்தது. ஆனால் மூன்றாவது தடவை குஜராத்து மாகாணத் தலைவனான மாலிக் சாதா அக் கோட்டையை மும்முரமாகத் தாக்கிக் கைப்பற்றினான். அத்துடன் ஹொாச துர்க்கத்தையும் முற்றுகையிட ஏற்பாடுகள் செய்தான்.

காம்பிலிதேவன் தென்னாட்டு வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்க வீரமும் தன்மானமும் உடையவன். அடைக்கலம் புகுந்தவரை ஆருயிரளித்தும் ஆதரிக்க அவன் முனைந்தான், ஆகவே ஹொாச துர்க்கம் பிடிபட்டுத் தானழிந்தாலும், அடைக்கலம் புகுந்த இஸ்லாமிய நண்பனை அழியவிடக்கூடாது என்று திட்டமிட்டான். ஹொய்சளர் தனக்குப் பகைவரென்று தெரிந்தாலும், நிலைமையை விளக்கி அவனுக்கு ஆதரவு தருமாறு மூன்றாம் பல்லாளனுக்குக் கடிதம் எழுதினான் கார்ஷப்பையும் அவன் குடும்பத்தையும் துவார சமுத்திரத்திற்குப் பாதுகாப்புடன் அனுப்பிவிட்டு, அவன் வீரமாள்வுக்கு முனைந்தான். எதிரிகள் கைப்பட நேராதபடி பெண்டு பிள்ளைகளை அவன் தீக் குளிக்கும்படி செய்தான், பின் வீரமாகக் கோட்டைக் காவல் போரிலே சாவுடன் மல்லிட்டு, உலகில் புகழ் நிறுவி மாண்டான்.

ஹொாச துர்க்கம் பிடிபட்டது. காம்பிலி வீழ்ச்சியுற்று இஸ்லாமிய வெற்றி வீரர் காலடியில் கிடந்தது. ஆனால் தேடி வந்த கிளர்ச்சிக்காரன் கார்ஷப் அகப்படவில்லை. அவனும் அவன் குடும்பத்தினரும் ஹொய்சளரிடம் சேர்க்கப்பட்டிருப்பதறிந்த மாலிக் சாதா துவார சமுத்திரத்தின் மீது பாய்ந்தான்.

காம்பிலி தேவனின் புறநானூற்று வீரப் பண்புக்கு ஹொய்சளப் பல்லாளன் அயலவனாயிருந்தான். அவன் காம்பிலி தேவன் பகைமையையும் இச் சமயம் பேணினான். அவன் தன்னிடம் கொண்ட மதிப்பையும் நம்பிக்கையையும் குலைத்தான். பேரரசனைப் பகைக்கவும் அஞ்சினான். ஆகவே அவன் மாலிக் சாதாவுக்குப் பணிந்து அடைக்கலமாக அளிக்கப்பட்ட பகாவுதீன் கார்ஷப்பையும் அவன் குடும்பத்தினரையும் எதிரிகள் வஞ்சத்துக்கு இரையாகும்படி ஒப்படைத்தான்.

தென்திசைப் புதிய தேசிய ஒளி:
வீரசைவப் பேரியக்கம்
விசயநகரப் பேரரசு நிறுவனம் 1336

காம்பிலி தேவனின் வீரமறைவு வீண் போகவில்லை. அது தென்னாட்டின் வரலாற்றிலே ஒரு புதிய திருப்பத்தை உண்டு பண்ணும் பேரொளியாயிற்று தென்னகத்தின் வடதிசை வாழ்வைக் குலைத்துப் பரவி வந்த இஸ்லாமிய சக்தியை எதிர்த்து நிற்க இது பல தென்னாட்டு வீரரையும் குடிமக்களையும் அரச மரபினரையும் பெருமக்களையும் தூண்டிற்று இது வெறும் போர் நடவடிக்கையாக மட்டுமோ, வெறும் அரசியல் இயக்கமாக மட்டுமோ அமையவில்லை. ஏனெனில் தமிழகம் கடந்து கன்னட நாட்டிலும் தெலுங்கு நாட்டிலும் இப்போது பக்தி இயக்கத்தின் சைவ அலை ஒன்று கொழுந்து விட்டெரிந்து பரந்தது. அதுவே வீர சைவ இயக்கம் என்ற பெயருடன் கன்னட நாட்டு வரலாற்றில் நான்கு நூற்றாண்டுகளுக்கு மேலாகத் தழைத்த பெருவாழ்வு ஆகும். சமயச் சார்பான இந்த இயக்கம் மக்கள் வாழ்வு, கலை, இலக்கியம் ஆகியவற்றை எல்லாம் ஒருங்கே தூண்டி, அரசியல் போர்க்கிளர்ச்சிகளுக்கு ஆதரவு நல்கியதனால், அதன் முழுத் தேசிய ஆற்றலின் முன் இஸ்லாமிய அரசியல் வேட்டையின் வேகம் நூற்றாண்டுக் கணக்காகத் தடைபட்டு நின்று பின்னடையலாயிற்று.

இச் சமயம் துக்ளக் மரபினரின் ஆதிக்கம் தென்னாட்டின் வடக்கில் தேவகிரியையும் வடமேற்கில் மராட்டியத்தையும் மட்டுமே முற்றிலும் கைக் கொண்டிருந்தது கிழக்கே தெலுங்காணத்திலுள்ள வாரங்கலும், அதற்குக் கீழ் திசையில் இருந்த கலிங்கம் அல்லது ஒரிசாவும் முற்றிலும் அவர்கள் கைப்படவில்லை. வாரங்கலை நிலையாகத் தம் கைவசமாக்க முஸ்லிம்கள் ஒரிசா மீதும் படை யெடுத்தனராலும் இரண்டுமே வெற்றி பெறவில்லை. காம்பிலி வீழ்ச்சிக்குப் பின் சிற்றரசர்களாக நாயக மன்னர் 75 பேருக்குக் குறையாமல் ஒரே கூட்டாக ஒன்று திரண்டனர் அவர்களுக்குத் தலைமை வகித்தவர்கள் காபய நாயகன் என்பவனும் அவன் மைத்துனனை புரோலய நாயகனுமே. பின்னாட்களில் கொண்ட வீடு, அட்டங்கி ஆகிய இடங்களில் ஆண்ட ரெட்டி அரச மரபின் முன்னோனை புரோலய வேமனும் இதில் இடம் பெற்றான். பண்டைய சாளுக்கிய மரபுரிமை யுடையவனும், விசயநகரப்பேரரசின் இறுதி மரபான அரவீட்டு வழியின் முன்னோனுமான சோம தேவனும் இக் கூட்டில் சேர்ந்திருந்தனர். இப் பெயர்கள் கூட்டின் தேசிய, வரலாற்று முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றன.

இவர்களனைவரும் சேர்ந்து, வீர காம்பிலி தேவன் ஆண்ட பகுதியின் முஸ்லிம் மாகாணத் தலைவனை மாலிக் மாமூதை முறியடித்து வென்றனர். கர்னூலைத் தலைமையிடமாகக் கொண்டு இத் தேசியக் குழுவினா ஆனகுண்டி, இரேய்ச்சூர், முட்கல் ஆகிய கோட்டைகளைப் பிடித்து அரண் செய்தனர். இக் கிளர்ச்சியால் புத்தெழுச்சி யுற்ற ஹொய்சள மன்னன் மூன்றும் பல்லாளனும் துக்ளக் ஆட்சியின் மேலுரிமையை வீசி எறிந்து விட்டுக் காம்பிலியைத் தாக்கினான் மாலிக் மாமூது சூழ்வலிமையறிந்து ஹொய்சள மன்னனுடனும்காம்பிலி யரசனுடனும் தொடர்பு கொண்டிருந்த ஹரிஹரன், புக்கன் முதலிய உடன்பிறப்பாளர் ஐவரைக்காம்பிலியிருந்து துக்ளக்மரபினர் பெயராலும் தன் பெயராலும் ஆளும்படி கூறினான். தன் மேலுரிமையைப் பணிந்து ஏற்பதாக அவர்களிடம் உறுதி பெற்றுக்கொண்டு அவன் வெளியேறினான்.

அந்நாளில் வலிமை பெற்றிருந்த ஹொய்சளரே புதிய தேசிய எதிர்ப்புக்குத் தலைமை ஏற்பது பொருத்தம் என்று தேசியக் குழு கருதிற்று. ஆனால் மூன்றும் பல்லாளன் அதை ஏற்கவும் தயங்கினான். மறுக்கவும் விரும்பவில்லை. ஏனெனில் தில்லி ஆட்சியை அவன் எதிர்க்க விரும்பினாலும் உடனடியாக அதனைச் சமாளிக்க முடியுமா என்று அஞ்சினான். இந் நிலையிலே அவன் ஹரிஹரன் முதலிய ஐவரையும் ஆதரிப்பதாகக் கூறினான். தில்லியின் தற்காலிக இணக்கம் பெற்ற அந்த ஐவருமே தேசியக் குழுவின் பொறுப்பை ஏற்க முன் வந்தனர். குழு தான்வென்ற கோட்டைகளைக் காம்பிலியின் ஆட்சிப் பெறுப்பேற்ற அவர்களிடமே விட்டு விட்டது.

இச் சமயம் தென்னாட்டுச் சமய இயக்கப் பேரலையின் தலைவர்களுள் ஒருவரான வித்தியாரண்யர் இத் தேசியக் குழுவின் சார்பில் உடன் பிறந்தார்ஐவரின் புதிய தேசிய அரசியலுக்கு மக்கள் ஆதரவு திரட்டித் தர முன் வந்தார். அவர் உடன் பிறந்தாரே வேதங்களுக்கு முதன் முதலாக உரையியற்றிய சாயணாச்சாரியார் என்று அறிகிறோம்.

இவ்வாதரவுகளுடன் இஸ்லாமிய ஆட்சி எதிர்ப்பின் தலைவர்களாய் அம் மேலுரிமையை ஐவரும் வீசி எறிந்தனர். புதிய அரசின் தலை நகராக அவர்கள் ஆனகுண்டிக் கோட்டைக்கு எதிரிலே ‘விசய நகரம்’ என்ற புதிய நகரத்தையும் நிறுவினார்கள். இது தங்கள் குருவும் துணைவருமான வித்யாரண்யரின் பெயரால் வித்யாரண்ய நகரம் என்றே பெயரிடப் பட்டது என்றும் கூறுவதுண்டு. வடதிசை இஸ்லாமிய ஆட்சிக்கு எதிரான வெற்றி குறித்த நகரம் என்ற முறையில் அப் பெயர் பெற்றதாகக் கொள்பவரும் உண்டு.

விசயநகரம் விரைந்து ஹொய்சள அரசையும் தமிழகத்தையும் வென்று, தென்னாட்டின் தென் திசைப் பேரரசாக மூன்று நூற்றாண்டுகளுக்குமேல் புகழுடன் விளங்கிற்று.

விசயநகரப் பேரரசை ஆண்ட மரபுகள் நான்கு. அவையே சங்கம மரபு (1336—1485), சாளுவ மரபு (1486—1491), துளுவ மரபு (1491—1542), அரவீடு மரபு (1542—1649) ஆகும்.

உடன் பிறந்தார் ஐவரின் தந்தை பெயர் சங்கமன் என்பது அதுவே முதல் மரபின் பெயராய் அமைந்தது. அதன் முதல் அரசனாக ஐவர் உடன் பிறந்தாரில் முதல்வனை முதலாம் ஹரிஹரன் (1336—1357) ஆண்டான். ஆனால் அவன் ஆட்சிக் காலத்திலேயே ஐவருள் மூன்றாமவனை அவன் இளவல் முதலாம் புக்கன் (1344—1377) பேரரசின் ஒரு பகுதியைத் தனியாக ஆண்டு, தமையனுக்குப்பின் முழு ஆட்சியையும் நேரே கைக்கொண்டான்.

முதல் புக்கன் கூட்டாட்சியின் தொடக்கம் வரை (1344) பழமையான ஹொய்சளப் பேரரசு நீடித்துத் தழைத்தே வந்தது.

## திருவண்ணாமலைப் போர்: 1341

துக்ளக் பேரரசன் முகமதுவுக்கு எதிராக எழுந்த சாகர் மாகாணத் தலைவன் பகாவுதீன் கிளர்ச்சியும், அதன் பின் காம்பிலி வீர மன்னன் புகழ் மாள்வின் பின் தோன்றிய தேசிய எழுச்சியும தில்லி முஸ்லிம பேரரசினிடமிருந்து மதுரை முஸ்லிம்களைத் துண்டு படுத்திற்று. இது தென்திசை முஸ்லிம்களின் தன்னாண்மையை வளர்த்தது. ஆனால் அதே சமயம் புறத் தொடர்பும் உதவியும் இல்லாத நிலையில் அவர்கள் வலுவையும் நாளடைவில் தளர்வடையச் செய்தது. ஹொய்சளர் பாண்டியப் பேரரசர் காலத்திலிருந்தே தமிழகத்தின் அரசியல் வாழ்வில் தலையிட்டுத் தமிழகத்தின் கீழ்திசையில் புகுந்து வந்தவர்கள். பாண்டியர் அரசுரிமைப் போரிலும மூன்றாம் பல்லாளன் இது செய்யத் தவறவில்லை ஆனால் முஸ்லிம்படையெடுப்பே அதைச் சிறிது தடுத்திருந்தது. இப்போது மாறுபட்ட சூழலைப் பயன்படுத்தி அவன் மீண்டும் தமிழகத்தின் கீழ்திசையில் முன்னேறத் தொடங்கினான்.

இச் சமயம் தமிழகத்தில் திருநெல்வேலியில் சிற்றரசராக ஆண்ட பாண்டியர் கிளைரைத் தவிர வேறு பேரரசரோ, அர

சரோ கிடையாது. ஆனால் வலிமை வாய்ந்த சிற்றரசரான சாம்புவராயர் குடி கீழ் திசையில் வளர்ச்சி யடைந்திருந்தது. 1339-ல் இம் மரபினன் ஒருவன் 'சகலலோகச் சக்கரவர்த்தி இராசநாராயண சாம்புவராயன்' என்ற ஆரவாரப் பெயருடன் ஆட்சி செய்யத் தொடங்கி யிருந்தான். தமிழகத்தின் பல பகுதிகளிலும் மதுரையைச் சுற்றிலும் இம் மரபினர் பலர் ஆட்சி செய்திருந்தனர். தென்னகத்தின் வடதிசை தேசியக் குழுவினரும் ஹொய்சளரும் தமிழக முஸ்லிம்களுக்கெதிராக இவர்களை ஊக்கி யிருந்தனர். மூன்றும் பல்லாளனும் அவர்கள் நட்புடனேயே தமிழகத்தில் தன் ஆட்சியை வலுப்படுத்தினான் என்று தோற்றுகிறது.

மூன்றும் பல்லாளன் தமிழகத்தில் திருவண்ணாமலையையே தன் மூலதளமாகக் கொண்டிருந்தான். அங்கிருந்து தமிழகத்தின் வட எல்லை முழுவதையும் உட்கொள்ளும் முறையில் மூன்று வரிசைகளாகப் பல வல்லரண்களை அமைத்தான். மற்றொருபுறம் திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, இராமநாதபுரம் வழியாக இராமேசுவரம் வரை தன் படைத் தளங்களை அமைக்கவும் முயன்றான்.

மதுரை முஸ்லிம் மரபினர் கொள்ளையிலும் ஒருவர்க்கொருவர் அரசுரிமைப் பூசலிடுவதிலும் நேரம் கழித்தனராதலால், தம்மைச் சூழ்ந்து அமைக்கப்பட்டு வரும் முற்றுகை நடவடிக்கையைக் கவனியா திருந்தனர். ஆனால் 1340-ல் மதுரையில் ஆண்ட ஜலாலுதீன் ஹசன்ஷாவைக் கொன்று ஆட்சி கைக்கொண்ட அலாவுதீன் உதௌஜீ திருவண்ணாமலை மீது படையெடுத்து மூன்றும் பல்லாளனைத் தாக்கினான்.

1341-ல் நடைபெற்ற இப்போரில் உதௌஜீயின் கையே ஓங்கிநின்றது ஆனால் வெற்றி பெற இருக்கும் தறுவாயில் வில் வீரன் ஒருவன் எய்த அம்பு அவன் கண்ணில் பாய்ந்தது. அவன் உடனே உயிர் இழந்து வீழ்ந்தான்.

**கண்ணனூர்க் குப்பம் முற்றுகை 1342**
**ஹொய்சளர் வீழ்ச்சி 1344**

திருவண்ணாமலை வெற்றியை அடுத்து மூன்றும் பல்லாளன் பழய ஹொய்சளர் தென் தலைநகரான கண்ணனூர்க் குப்பத்தை முற்றுகையிட்டான். ஆறுமாத முற்றுகையால், கோட்டையினுள்ளிருந்த முஸ்லிம் வீரர்கள் எதிர்ப்புத் தளர்ந்து பேரவதிக்காளாயினர்.

உதௌஜீக்குப் பின் அவன் மருமகன் ஆளத் தொடங்கிய சில நாட்களிலேயே கொல்லப்பட்டான். அடுத்த ஆட்சியுரிமையாளனாக வந்த கியாஸுதீன் தம்கானி மதுரை முஸ்லிம்களிடையே கூடக் குருதி வெறியாட்டத்தில் ஈடிணையற்றவன். அவன் தன்மையறியாத ஹொய்சள மன்னன் எளிதில் அவன் சூழ்ச்சிக்கு உட்பட்டான்.

கோட்டைக்குள்ளிருந்த முஸ்லிம் வீரர் சரணடைவதாக வாக்களித்தனர். இச் சூழ்நிலை ஹொய்சளர் வெற்றிக்கு உகந்தவையாகவே தோற்றிற்று. ஆனால் தம் தலைவனுடனேயே இது பற்றிப் பேசுவது நலம் என்று முஸ்லிம்கள் வேண்டினர். சூதறியாத பல்லாளன் இதற்கு இசைந்தான். போர் நிறுத்தி அவன் வீரர் மதுரை முஸ்லிம் மன்னன் வருகைக்காகக் காத்திருந்தனர். ஆனால் தம்கானி இரவோடிரவாக நானூறு படை வீரருடன் ஹொய்சளர் பாசறை மீது பாய்ந்தான். வெற்றி வாயிலில் நின்ற ஹொய்சளர் படுதோல்வியடைந்தனர். தம்கானியின் மருமகனும் அடுத்த உரிமையாளனுமான நாசிருதீன் முதுமை வாய்ந்த மூன்றாம் பல்லாள மன்னனைக் கைப்பற்றி அவன் யானை, குதிரைகளையும் செல்வக் குவைகளையும் கொள்ளையிட்டபின், அவனையும் உயிரோடு தோலுரித்து வதைத்துக் கொன்றான். உரித்த மேனியாகவே வீர ஹொய்சள மன்னன் உடலம் மதுரைக் கோட்டை வாயிலில் நெடுநாள் தொங்கவிடப் பட்டிருந்ததாம்! இஸ்லாமிய வரலாற்றாசிரியர் இபுன் பத்தூதா மதுரைக்கு வந்தபோது, கோட்டை வாயிலில் இந்தக் கோரக் காட்சியைத் தம் கண்ணாரக் கண்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

11-ம் நூற்றாண்டிலிருந்து மூன்று நூற்றாண்டுகள் வரை சாளுக்கியருடனும் சோழருடனும் பாண்டியருடனும் போராடி அப் பேரரசுகள் எல்லாம் அழிந்த பின்னும் நீடித்து நிலவியிருந்த ஹொய்சள அரசு தன் வாழ்வின் உச்சநிலை கடவாமலே மூன்றாம் வீர பல்லாளன் முடிவுடன் முடிவடைந்தது. அவன் இறந்த பின்னும் அவன் மகன் நான்காம் பல்லாளன் கலைந்த வாழ்வை நிலைநாட்ட முயன்றதுண்டு. ஆனால் இரண்டாண்டுகளுக்குள், 1344-ல் முதலாம் ஹரிஹரன் ஆட்சியுடன் தன் ஆட்சியை இணைத்து ஆண்ட முதலாம் புக்கன் ஹொய்சள அரசரை முறியடித்து அதை தன் புதிய விசய நகரப் பேரரசின் ஒரு பகுதி யாக்கினான்.

'ஹொய்சளர் குடி மரபுக்குரியதா யிருந்த நிலவலய மேகலை விசய நகர மரபுக்குகுரிய வண்ணமேகலை யாயிற்று' என்று அந் நாளையக் கல்வெட்டுக்கள் இவ் வெற்றியை அழகுபடக் குறிக்கின்றன.

ஹொய்சளப் பேரரசின் அருகே சிறிய அரசாக நிலவிய விசய நகர அரசு அதை விழுங்கிய பின் விரைந்து தென் பேரரசாக வளரத் தொடங்கிற்று.

ஏற்கனவே 1340-ல் பண்டைச் சாளுக்கிய தலைநகரான வாதாபி கைக் கொள்ளப் பட்டிருநதது. ஹொய்சளப் பேரரசின் மேலுரிமையை ஏற்றிருந்த துளுநாடு 1345-லேயே விசய நகரத்துக்கு அடிபணிநது அதன் மேலுரிமையை ஏற்றுக் கொண்டது. 1346-க்குள் பேரரசு மேல் கடலிலிருந்து கீழ் கடல் வரை பரவிவிட்டது. பண்டைச் சேர அரசா மரபைப் பின் பற்றி விசய நகராண்ட உடன் பிறப்பாளர் ஐவரும் சிருங்கேரியில் ஒருங்குகூடி இவ் வளர்ச்சிப் படியை ஒரு விழா வாகக் கொண்டாடியதாக அறிகிறோம்.

அவர்கள் தென் திசையில் இஸ்லாமிய எதிர்ப்புப் பேரரசின் வளர்ச்சி விழாக் கொண்டாடியதற்கு அடுத்த ஆண்டிலேயே அவர்களுக்கு வட திசையில் தென்னாட்டிலேயே ஒரு முஸ்லிம் பேரரசும எழுநதது.

## பாமினிப் பேரரசின் பிறப்பு: 1347

தில்லிக்கும் தென்னாட்டின் வடகோடிக்கு மிடையே 14-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் முதல் முதலாக ஏற்பட்ட தொடர்பு 30 ஆண்டுகளுக்கு மேல் நீடிக்கவில்லை இஸ்லாமிய வரலாற்றாசிரியர் பெருமிதத்துடன் வகுத்துரைத்த வடபேரரசின் தென் மாகாணங்கள் ஐந்தில் உண்மையிலே பேரரசுடன் இணைந்திருந்த மாகாணம் தேவகிரி ஒன்றே. இது 1316-ல் தோன்றி, 1347-க்குள் தென்னகத்தின் ஒரு தனிப் பேரரசாகத் தொடங்கிற்று. ஆனால் மாகாணம் தான் பேரரசாகி இரண்டு நூற்றாண்டு வாழ்ந்தது. அதனை உட்கொண்டிருந்த வட பேரரசு மீண்டும் தென் திசைப் பக்கம் நாட முடியாத நிலையில் பேரரசுநிலை இழந்தது

துக்ளக் பேரரசின் மாகாணங்களில் வரி பிரித்து அனுப்பும் பொறுப்பு "நூற்றுவர்" என்று அழைக்கப்பட்ட பணியாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. முகமது துக்ளக் ஆட்சியின் மாலைப் போதிலே மாளவத்தின் நூற்றுவர் வரி பிரித்தனுப்பாத குற்றத்துக்காகப் படுகொலைத் தண்டனைக்காளாயினர். தேவகிரியிலிருந்து அம் மாகாண ஆட்சியாளர் இதைக் கேள்விப்பட்டதே கிலி கொண்டு கிளர்ந்தெழுந்தனர். காவலரை ஒழித்து விட்டுத் திரும்பத் தேவகிரிக்குச் சென்று

மாகாண ஆட்சியாளரையும் கொன்றனர். இஸ்மாயில் முக் என்ற தம் தலைவனையே நாசிருதீன்ஷா என்ற அரசுப் பெயருடன் தென் மாகாண (தெக்காண) மன்னர் ஆக்கினர்.

பேரரசன் முகமது இதுகேட்டுத் தானே வந்து கிளர்ச்சி செய்த அனைவரையும் இஸ்மாயில் முக்கையும் சிறைப் படுத்தினான். ஆனால் காவலிலிருந்து பலர் ஒன்றுபட்ட முயற்சியினால் வெளியேறினர். வெளியேறியவர்களிடையே தலைமை தாங்கியவன் ஹஸன்கங்கு என்ற சபர்கான் ஆவன். முகமது இச்சமயம் குஜராத்தில் ஒரு கிளர்ச்சியை அடக்கும்படி சென்றிருந்தான். அவன் வருவதற்குள் ஹஸன் படைதிரட்டிப் பேரரசன் படையை முறியடித்துத் தன்னையே தெக்காண அரசனாக்கிக்கொண்டான். முன்னமே அவ் வுரிமை அளிக்கப் பட்டிருந்த இஸ்மாயில் முக் அல்லது நாசிருதீனும் அவனுக்கே தன் உரிமையை விட்டுக் கொடுத்து அவனை மன்னனாக ஏற்றான்.

இவ்வாறு 1347-ல் ஹஸன் கங்கு என்ற சபர்கான் அமைத்த அரசே விரைவில் பாமினிப் பேரரசாக வளர்ந்தது. பாமினி என்பது மன்னனானபோது ஹஸன் கங்கு மேற்கொண்ட குடிப் பெயரே. அவன் முழு அரசுரிமைப் பெயர் சுல்தான் அபுல்முசபர் அலாவுதீன் பாமினிஷா என்பது. தலைநகரான தேவகிரியும் இப்போது தௌலதாபாத்து என்று மாற்றப்பட்டது. முகமது காலத்தில் குல்பர்காவுக்குத் தலைநகரம் மாற்றப்பட்டது.

பாமினிப் பேரரசர் 1347 முதல் 1527 வரை கிட்டத்தட்ட இரண்டு நூற்றாண்டுகள் பேரரசாண்டனர். விசயநகரப் பேரரசைப் போலவே அவர்கள் பேரரசும் முழு வளர்ச்சி யடைந்த சமயம் தென்னாட்டின் மேல் கடலிலிருந்து கீழ் கடல் வரை பரவியிருந்தது. ஆனால் முதல் முதல் அது மேல் கடலோரத்தையே அளாவிற்று கீழ்திசையில் வாரங்கல் கடந்து செல்ல முடியாமல் ஒரிசா ஆண்ட கஜபதி அரசர் அதற்கு நீடித்த தடையாய் இருந்தார்.

பாமினிப் பேரரசர் அரசவை வாழ்வு தென்னகத்தின் வேறெந்த அரசர் பேரரசர் அரசவை வாழ்வையும் விட—குறுகிய வாழ்வுடைய மதுரை முஸ்லிம் ஆட்சியாளர்கள் வாழ்வைப்போல—போட்டி பூசல் குருதிக்களரி நிறைந்ததாயிருந்தது. ஆட்சியும் கிட்டத்தட்ட அப்படியே அமைந்தது, பல அரசர் உண்மையில் ஓர் ஆண்டு, ஒரு மாதம் அல்லது ஒரு நாள் ஆள நேர்ந்தது.

முதல் பாமினி அரசன் அலாவுதீன் (1347—1358) ஆட்சியிலே ஆட்சி பேரரசாட்சியாகத் தொடங்கி மேல் கடற்கரை முதல் கிழக்கே பேலங்கிர் வரை பரவியிருந்தது. பெனுகங்கா ஆறும் கிருஷ்ண ஆறும் அதன் வட தென் எல்லைகளாயின.

குறிப்பிடத்தக்க முறையில் இம் முதல் பாமினி அரசன் முந்திய ஆட்சியை ஆதரித்த பெருமக்களிடம் தாராள மனப்பான்மையுடன் நேசமாக நடந்து கொண்டான். வாரங்கலண்ட காபய நாயகன் திறை தந்து பணிந்ததுடன் கௌலாக் கோட்டையையும் பேரரசுக்கு விட்டுக்கொடுத்தான். அவன் ஆட்சியிலேயே கோவா, தபோல் போன்ற துறை முகங்கள் பாமினிப் பேரரசில் சேர்ந்து விட்டன. விசயநகரப் பேரரசினிடமிருந்து இரேய்ச்சூர் கைப்பற்றப்பட்டது.

அடுத்த பாமினி அரசன், முதலாம் முகமது (1358—1317). இவன் ஆட்சி முறையை ஒழுங்குபடுத்தியதுடன், மாகாண வட்ட ஆட்சிகளைப் பொறுப்பாட்சியாக்கித் திசையாட்சி (Decentralisation) நிறுவினான். இது திறமையும் வலிமையும் மிக்க அரசன் காலத்தில் நல்லாட்சிக்குகந்ததாகவே இருந்தது, ஆனால் திறமை குறைந்த அரசர் கீழ் ஒற்றுமை கெடுத்தது.

தெலுங்காணத்துடனும் விசயநகருடனும் இவன் ஓயாது போர் தொடுத்தான்.

**தமிழக விடுதலைப் போராட்டம்:**
**மரகத நகரம் அல்லது விரிஞ்சிபுரம் போர் 1365—66;**
**சமயவரம் போர் 1367**

தமிழகத்தில் ஹொய்சளர் ஆண்ட பகுதியையே முதல் விசய நகரப் பேரரசன் முதலாம் ஹரிஹரன் ஆட்சியில் அவன் இளவலான முதலாம் புக்கன் ஆண்டதாகத் தெரிகிறது. முதலாம் புக்கன் முழுப் பேரரசாட்சியைக் கைக்கொண்ட பிறகு அதே ஆட்சியை அவன் மகன் கம்பணன் அல்லது கம்பன் மேற்கொண்டான். அவனுடன் கோபணன் அல்லது கோபணார்யனும் விசயநகரப் பேரரசின் இரண்டாம் மரபான சாளுவமரபின் முன்னோனான சாளுவ மங்குவும் படைத்தலைவராக அமைந்திருந்தனர். இவர்கள் கூட்டு முயற்சி தமிழகத்தின் இரு பெருஞ் செயல்களுக்குக் காரணமாய் இருந்தது. ஒன்று சாம்புவராயர் கீழடக்கப் பட்டது. அடுத்தது மதுரை முஸ்லிம் ஆட்சி ஒழிந்து, தமிழகத்தின் கோயில்களுக்கும் மக்கள் வாழ்வுக்கும் அமைதி ஏற்பட்டது. இவ் விரண்டு செயல்களையும் தனித்தனி நிறைவேற்றியதன்மூலம் கம்பணன்

ஒரு சிறந்த படைத்தலைவனாகவும் தேசிய அரசியல் வாதியாகவும் காட்சியளிக்கிறான். ஏனெனில் முதல் செயல் தமிழகத்தை ஒரே வல்லாட்சிக்குக் கொண்டுவந்தது. அடுத்த செயலால் அதுவே தமிழகத்தின் ஒன்றுபட்ட ஆற்றலை மதுரை முஸ்லிம் ஆட்சிக்கு எதிராகத் திரட்டிற்று. ஏனென்றால் கீழடக்கப்பட்ட சாம்புவராயனை, முஸ்லிம்களை எதிர்ப்பதில் ஒரு சிறந்த துணை வலு ஆயினான்.

மரகத நகரம் என்பது காஞ்சிபுரத்தை அடுத்த விரிஞ்சிபுரத்தின் பழம் பெயர். கோபணன், சாளுவமங்கு, சோமப்பன், கோவிந்தராசர் ஆகியோர் உதவியுடன் பல போர்களில் கம்பணன் சாம்புவராயனை எதிர்த்து நின்றான் மரகத நகரம் அல்லது விரிஞ்சிபுரப் போரிலேயே அவனை இறுதியாக முறியடித்துப் பணிய வைத்தான். சாம்புவராயனைச் சிறைப்பிடித்துக் கம்பணன் முன் கொண்டுவந்தவன் படைத்தலைவன் சோமப்பன் மகனான மாரையன் என்பவனே ஆனால் பணிய வைத்த பின் கம்பணன் அவனைத் தன்னுடன் ஆட்சியில் சேர்த்துக்கொண்டு அவனுதவியுடன் அடுத்த எதிரியைத் தாக்க முற்பட்டான்.

விசயநகரப் பேரரசின் வீரப்படைத்தலைவர்களுள் கம்பணன் தலை சிறந்த ஒருவன். அத்துடன் தமிழகத்துக்கு அவன் ஒரு சிறந்த தேசிய வீரனாகவும் நாட்டுக்காவலனாகவும் விளங்கினான். முனைவர் ஸி ஆர். ரெட்டி அவர்கள் தெலுங்கரைத் தென்னாட்டின் காவல வீரர் என்று கூறியது அவன் வகையில் இன்னும சிறப்புடன் பொருந்துவது ஆகும். இத்தகைய வீர காவியத் தலைவனாகிய கம்பணன் மனைவி கங்காதேவியும் ஒரு வீர காவியத் தலைவியாய் அமைந்தது வியத்தகு பொருத்தமே யாகும். ஏனெனில் அவள் சமஸ்கிருதப்புலமை நிரம்பியவளாய் இருந்தாள். மதுரையை வென்று தமிழக விடுதலை தந்த கணவன் பெருஞ்செயலையே அவள் வாழ்வின் வீறார்ந்த மைய நிகழ்ச்சியாக்கி, அவள் அவன் மீது 'மதுராவிஜயம்' (மதுரை வெற்றி) என்ற ஓர் ஒப்பற்ற காவியம் இயற்றினாள். தமிழக வரலாற்றில் அக் கவிதையஞ் செல்வியின் கணவன் ஆற்றிய டங்கையும், அந் நாளைய சூழ் நிலையையும் அறிய இது பேரளவில் உதவுவது ஆகும். சமஸ்கிருத காவிய மரபில் குன்றாத ஏடாயினும் தமிழர் தென்திசை மரபில் நின்று வரலாற்றுப் பண்பும் உடையதாக அது திகழ்கிறது.

மதுரையைத் தாக்க நேர்ந்ததற்குரிய காரணத்தை இக் கவிதையஞ் செல்வி புராணங்களைப் பழிக்கும் அழகுக் கற்பனையாக்கியுள்ளாள்.

“சம்பவராயனை வென்றபின் கம்பணன் காஞ்சிபுரத்தில் ஓய்வு கொண்டிருந்தான். ஒரு நாள் அரசியரிடையே ஒரு வானணங்கையும் வானணங்குகளிடையே ஒரு அரசியையும ஒத்த ஒரு எழில் வடிவம் அவன் துயிலிடையே வந்து தோற்றிற்று ஆனல் அதன்முடி மாசு படிந்திருந்தது. முகமும் பொலிவிழந்திருந்தது கண்கள் அழலெனச் சிவந்து கன்னிபிருந்தன.”

கவியாரணங்கு கற்பனையிற் படைத்துருவாக்கிய இத் தமிழ்த் தெய்வம், மதுரைமாதேவியே. இம் மாசூர்ந்த ஒளி வடிவம தமிழகத்தின் அன்றைய நிலையைக் கவிதை புனை வரலாருகத் தீட்டிக் காட்டுகிறது.

“தேவி மதுரையின் அலங்கோல நிலையை வருணித்தாள். பின் மனித உலகம் கண்டிராத ஒரு ஒளி மணி வாளைக் கம்பணன் கையில் தந்து மறைந்தாள்.”

கவிஞரின் புராண மரபுப்படி அவ்வாள் அகஸ்தியர் பாண்டியருக்களித்த இந்திரனின் வீரவாள். “பாண்டியர் தம் ஆட்சிப் பொறுப்பைக் கை நெகிழ விட்டு விட்டனர். அவர் கடமையும் பொறுப்பும் இனி நீ ஏற்று நடத்திடுக!” என்று தேவியின் பரிசு குறித்தது.

கம்பணன் 1374லேயே புகழ் வாழ்வு பெற்ருன். ஆனல் அவன் தமிழக ஆட்சியாளனுய் இருந்தது 1365 முதல் 1370 வரைதான் மதுரை முஸ்லிம் ஆட்சியினரை அவன் இக் காலத்தில் வென்றதாக ‘மதுரா விஜயமும்’ ‘கோயில் ஒழுகு’ களும் புகழ்கின்றன. ஆகவே அது இக் காலத்துக்குள்ளேயே நிகழ்ந்திருக்க வேண்டும் ஆனல் மதுரை முஸலிம் ஆட்சியாளர் ஆட்சி விவரங்கள் 1377 வரை நீடிக்கின்றன 1344-க்கும் 1358-ககும் இடையே முஸ்லிம ஆட்சியில் ஒரு இடைவெளி காணப்படுவதால், அக்காலத்தில் பெரும்பாலும் 1358-ல் மதுரை கைக் கொள்ளப்பட்டிருக்கலாம் என்று முனைவர் எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்கள் கருதியுள்ளார்கள். ஆனல் அது 1370-க்கு சற்று முன்பே நிகழ்ந்திருத்தல் இயல்பு. மதுரை ஆட்சிலழந்த பின்னும் சில பகுதிகளில் முஸ்லிம் ஆட்சியாளர் சில காலம வலி குன்றியவராய் நிலவி இறுதியில் அழிந்துபட்டிருத்தல் கூடும என்னலாம். மதுரைத் தலவரலாறு கம்பணன் மதுரையை விடுவித்தது 1371ம ஆண்டு என்றே குறிக்கிறது.

இக்குழப்ப காலத்தினிடையே சீரங்க நாதர் திருவுரு தமிழகம் எங்கும் பக்தர்களால் பாதுகாப்புக்காகக் கொண்டோடப்பட்டுத திருப்பதியில் இருந்ததாகவும், பின் செஞ்சி வந்து திரும்பியதாகவும், மதுரை விடுதலையின் பின்பே அது திரும்

பத் திருவரங்கத்துக்குக் கொண்டுவரப்பட்டதாகவும் அறிகிறோம். மதுரைத் தெய்வம்கூட நாஞ்சில் நாட்டில் சிலகாலம் கொண்டு சென்று பாதுகாக்கப்பட்டதாக மதுரைத் தலவரலாறு குறிக்கிறது.

சமயவரம் போரில் கம்பணனின் படைத் தலைவன் கோபணார்யனே மதுரை ஆட்சியாளரை வென்றழித்ததாகப் பிரபன்னமிர்தம் என்ற வைணவ சமய ஏடு குறித்துள்ளது.

இக்காலத்தில் வாழ்ந்த தலைசிறந்த வைணவருள், இக்காலக் குழப்ப நிலையில், பிள்ளை லோகாச்சாரியார் மயிலைக்கும், வேதாந்த தேசிகர் மைசூருக்கும் ஓடினர். வேதாந்த தேசிகர் திரும்பி வந்ததும் கோபணார்யனை வாழ்த்திப் பாடினராம்!

சாப்புவராயனைச் சமஸ்கிருத ஏடுகள் சம்பராயன் என்று குறிக்கின்றன. அவன் தலைமைக் கோட்டை இராசகம்பீரம் என்றும், அவன் நாடு இராசகம்பீர நாடு என்றும் வழங்கிற்று. இராசகம்பீரம் என்பது தற்போது படைவீடு என்றழைக்கப்படும் ஊரேயாகும்.

முதலாம் புக்கன் ஆட்சிக்குள் தமிழகத்தின் பெரும் பகுதியிலும் விசய நகரப் பேரரசின் ஆட்சி பரவி விட்டதாக அறிகிறோம். பேரரசு இப்போதே ஏழு மாகாணங்கள் அல்லது இராச்சியங்களாகப் பகுக்கப்பட்டிருந்தது. அவை உதயகிரி இராச்சியம் (நெல்லூர், கடப்பை), பெனுகொண்டா இராச்சியம் (பெல்லாரி அனந்தப்பூர், வட மைசூர்க் கணவாய்கள்), மூலபாகல் இராச்சியம் (மைசூர்ப் பகுதிகள், சேலம். தென்னார்க்காடு), ஆறக அல்லது மாலேக இராச்சியம் (பனவாசி, சந்திர குத்தி, கோவா) துளு அல்லது பரகூர் இராச்சியம், அல்லது பங்களூர் இராச்சியம், இராசகெம்பீர இராசசியம் ஆகியவை. இவற்றைப் பேரரசின் இளவரசர்களோ, அல்லது பேரரசின் நன்மதிப்புப் பெற்ற படைத் தலைவர்களோ, ஆட்சி தலைவர்களாயிருந்து ஆண்டனர்.

## கௌதல் போர் 1367

பாமினிப் பேரரசன் முதலாம் முகமதுக்கும் அவன் பேரரசுக்குக் கிழக்கில் உள்ள தெலுங்காணத்துக்கும் இடையே மூண்ட நீடித்த கடும் போராட்டம் பல வீரப் பகைமை விளையாட்டுக்களைக் கிளறி இறுதியில் விசய நகரப் பேரரசின் மீதும் மோதிற்று.

முகமது தன் பேரரசின் வீறு தோன்றத் தங்க நாணயங்களை அடித்து வெளியிட்டான். இது தம் ஆட்சிகளை அவமதிக்கும் செயலென்று தெலுங்காண, விசயநகர மன்னர் கருதினர். பாமினி ஆட்சிப் பகுதியிலும் காசுக் கடைக்காரர் முஸ்லிம் அல்லாதவர்களாகவேயிருந்ததால், இவ்வரசர் அவர்களைத் தூண்டித் தங்க நாணயங்கள் யாவற்றையும் உருக்கும்படி செய்தனர். இதனையுணர்ந்த முகம்மது வடதிசையிலிருந்து கத்ரிகள் என்ற வகுப்பினரைத் தருவித்துக் காசுக்கடை வாணிகத்தை அவர்களிடம் ஒப்படைத்தான்.

எதிரரசுகள் இப்போது தம் பகைமையை மெள்ள மெள்ள உரத்த குரலில் காட்டத் தொடங்கின. வாரங்கலாண்ட காபய நாயகன் தான் முன் விட்டுக் கொடுத்திருந்த 'கௌலா'க் கோட்டையைத் திருப்பித் தரும்படி அறைகூவல் விடுத்தான். விசய நகரும் இரேய்ச்சூர் மண்டல உரிமை பற்றி வலியுறுத்தத் தொடங்கிற்று. இவற்றைத் திருப்பித் தரா விட்டால் வடதிசைத் துக்ளக் அரசருடன் சேர்ந்து அவரை வரவழைப்பதாகவும் இரு அரசுகளும் அச்சுறுத்தித் தூதனுப்பின.

முகமது 18 மாதங்கள் தூதருக்கு எவ்வகை மறுமொழியும் அனுப்பாமல் அவனைத் தனனிடமே நிறுத்திக்கொண்டான். ஆனால் அந்த சமயம் அவன் போருக்கான மறை ஏற்பாடுகளைச் செய்து படைகளைப் பெருக்கினன். 18 மாதங் கழித்துத் தூதர் மூலமாக எதுவும் கொடுக்க முடியாதென்ற ஆணவ அவமதிப்பான மறுமொழியனுப்பினன்.

காபய நாயகன் தனக்குரியதாகக் கூறி அனுப்பிய 'கௌதல்' கோட்டையைக் கைப்பற்றும்படி தன் மகன் வினயக தேவின் தலைமையில் ஒரு படையை அனுப்பினன். விசய நகரப் பேரரசன் முதலாம் புக்கனின் 20 000 குதிரை வீரரும் அவனுக்குத் துணையாக அனுப்பப்பட்டிருந்தனர். (வாரங்கல் படைத் தலைவன் வினயக தேவல்ல, நாகதேவ் என்றும் சில ஏடுகள் குறிக்கின்றன).

பாமினி அரசனின் படைத் தலைவன் பகதூர்க்கான் வினயகதேவை முறியடித்துத் துரத்தியதுடன் வாரங்கலுக்குள்ளேயே புகுந்து 26 யானைகளையும் 100 ஆயிரம் பொன்களையும் சூறையாக வாரிச் சென்றான்.

முதல் தாக்குதலில் ஒரு சார்பு வென்றும் பகைமைச் செயல்கள் ஒரு சிறிதும் ஓயவுறவில்லை. எதிர் எதிர் செயல்களாகப் பெருகியே வந்தன. பாமினி அரசருக்காக வணிகரால் கொண்டு செல்லப்பட்ட 1362 குதிரைகளை வினயகதேவ்

வழிமறித்துப் பலவந்தப்படுத்தி விலைக்கு வாங்கினான். இதனால் சீற்றங் கொண்ட முகமது விஜயக தேவைத்தண்டிக்கும்படி வாரங்கல் மீது மீண்டும் படையெடுத்தான். அவன்நோக்கம் நிறைவேறிற்று. விஜயகதேவ் சிறைப் பிடிக்கப்பட்டுத் தூக்கிலிடப்பட்டான். ஆனால் இச்செயலால் அவனடைந்த இன்னல்களும் இழப்புக்களும கொஞ்சமல்ல.

இச்சமயம் தௌலதாபாத்தில் (தேவகிரியில்) முகமதின் மைத்துனனை பேராம்கான் மசந்தராணி என்பவன் கிளர்ச்சி செய்யத் தொடங்கினான். காபய நாயகன் அவனுக்கு முழு மனதுடன் ஆதரவு தெரிவித்ததன்றி வடதிசைத் துக்ளக் அரசனையும் வரவழைக்க முற்பட்டான். துரதிர்ஷ்டவசமாக வடதிசை அரசு இபபோது தெற்கே கவனம் செலுத்தும் நிலையில் இல்லை. ஆனால் இச்செயல் முகமதின் வெஞ்சினம் கிளறிற்று. அவன் தௌலதாபாத்துக்கு ஒரு படையை அனுப்பிவிட்டுத் தானே தெலுங்காணததுக்குச் சென்று, வாரங்கலையும் கோலகொண்டாவையும் தாக்கி முற்றுகையிட்டான்.

இவ்விரண்டாம் போரிலும் காபய நாயகன் முழுதும் தோற்றுக் காடுகளை நோக்கி ஓடினான். பிடிபட்டபின் அவன் மீட்டும் ஆட்சியையும் அமைதியையும் பெற மிகப் பெருவிலை தரவேண்டிவந்தது, அவன் கோலகொண்டா நகரை விட்டுக் கொடுத்தான். பேரளவான பொன்னும் யானைத் தொகுதியும் திறையாகக் கொடுத்தான். இவை மட்டுமல்ல. முன்னைய ஆணவ எதிர்ப்புச் சமயத்தில் தில்லிப் பேரரசனை அழைத்தபோது அப்பேரரசனுக்குப் பரிசாக அளிப்பதற்கென்று நவமணி பதித்த அரியணை ஒன்று சித்தம் செய்திருந்தான். இதையும் எதிர்பாரா இடத்தில்—முகமதுவுக்கு—பரிசாக அளிக்க நேர்ந்தது.

இப்பெரு வெற்றியின் பின் 1765ல் (மார்ச் 21ம் நாள்) முகமது தான் கொள்ளை கொண்ட பணத்தையெல்லாம் வாரியிறைத்து மிகப் பகட்டாரவாரமாக, ஆடல்பாடல் நங்கையர்கள், இசைவல்லுநர்கள், நாடக நடிக, நடிகையர்களை வரவழைத்து விழா வெறியாட்டயர்ந்தான். ஆனால் வெறியாட்டுடன் வெறியாட்டுக் குறும்பாக, ஆடல் பாடல் வல்லார்க்குப் பரிசாக விசய நகரப் பொருள் மனைகளின் பெயராலேயே பண ஆணை முறி அளித்தான்.

விசய நகரப் பேரரசன் முதலாம் புக்கன் குறும்புக் கெதிர் குறும்பு சூழ்ந்தான். பொருளக மனையில் பொருள் பெறவந்த ஆடல் பாடல் அழகர்களைக் கழுதை மீது வால் புறமாக முகந் திருப்பிக் கட்டி யனுப்பினான். அத்துடன் தன் படைகளை

யனுப்பி முட்கல் கோட்டையை உடனடியாகக் கைப்பற்றினன். பின் பெரும் படையுடன் அம்டானி நோக்கித் தண்டெடுத்துச் சென்றான்.

கௌதல் துங்க பத்திரையின் தென்திசையிலுள்ள ஓர் இடம். அங்கே நடைபெற்ற போரில் முஸ்லிம்கள் மிகப் பெரிய வெற்றி பெற்றனர். அவர்கள் வெற்றிக்கு அவர்களிடம் எதிரிகளைக் காட்டிலும் சிறப்பான குதிரைப் படைகளும், துப்பாககி, பீரங்கிகளும் இருந்ததே காரணம் என்று கூறப்படுகிறது. இப்போரில் இரு தரப்புகளிலுமே பீரங்கிகள் இருந்தனவென்றும், ஆனால் இரு தரப்புக்களிலும் ஐரோப்பியரோ அல்லது துருக்கியரோதான் அவற்றை இயக்கினரென்றும் இஸ்லாமிய வரலாற்றாசிரியரான பெரிஷ்டா குறித்துள்ளார்.

போரில் நடைபெற்ற கொள்ளை சூறையாட்டில் நாலு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்களும், பதினாயிரத்துக்கு மேற்பட்ட உயர்பணியாளர்களும் படுகொலை செய்யப்பட்டனர்.

தௌலதாபாத் கிளர்ச்சி இவ்வெற்றியின் பின்னரே முழு மூச்சுடன் அடக்கப்பட்டது.

பாமினிப் பேரரசரில் ஆட்சிச் சிறப்புக்கும் போர் வெற்றிக்கும் ஒருங்கே பேர்போன பேரரசன முகமதே. அதற்குக் காரணமாக இருந்த அறிவார்ந்த அமைச்சன் சைபுதீன் கோரி என்பவன். அவன் நூறு வயதுக்கு மேல் வாழ்நதிருந்தவனாதலால், முதல் பாமினிப் பேரரசன் காலத்திலிருநது ஆறு பேரரசர் காலம் வரை பணியாற்றியதாகக் கூறப்படுகிறது.

## விசய்நகரப் பேரரசுக் காலத்தில் தமிழ்த் தென்னகமும் இலங்கையும்.

முதலாம் புக்கன் ஆட்சி முடிவதற்குள் தமிழகம் முஸ்லிம் அரசியல் வேட்டுவரின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டு விசய நகரப் பேரரசின் பகுதியாய் விட்டது கண்டோம். இதே சமயம் பாண்டியர் சோழர் காலத்திலேயே இலங்கைத் தொடர்பு தமிழ்த் தென்னகத்துடன் நீடிப்பது காண்கிறோம்.

சோழர் காலமுதல் இலங்கையின் பழந் தலை நகரமான அனுராதபுரம், சோழர் காலத்திலிருந்து புதுத் தலைநகரமான பொலன்னருவா ஆகிய இரு நகரங்களையும் உள்ளடக்கிய இலங்கையின் வட பெரும் பகுதி தமிழரசர் கையிலும், தென் கோடிப் பகுதியே சிங்கள அரசர் கையிலும் பிரிவுற்றிருந்தன. இலங்கையின் சிறப்பு வாய்ந்த பேரரசன் பராக்கிரம பாகு

வின் கையில் இலங்கை முழுதும் ஒரு சில நாள் ஒன்றுபட்டிருந்தது. ஆனால் அவனுக்குப் பின் இரண்டும் மீண்டும் தனித்தனி பிரிவுற்றன. யாழ்ப்பாண அரசு என்று குறிக்கப்பட்ட வடதிசை யரசே வலிமையுடையதாகி, தென் திசைச் சிங்கள அரசன்மீது மேலுரிமை கொண்டிருந்தது.

மதுரை முஸ்லிம் ஆட்சியால் அவதியுற்ற சமயம் தெலுங்க வீரர் பலர் தமிழகத்தில் வந்து வீரப்பணி யாற்றியதுபோல, தமிழர் பலர் இலங்கை சென்று தமிழரசர் கீழும், சிங்கள அரசர் கீழும் வீரத் தொண்டாற்றினர். இவர்களில் சிங்கள அரசரிடம் படைத் தலைவனாக அமர்ந்த சோழ நாட்டுத் தமிழனான அழகக் கோனனே 1385-ல் யாழ்பாண அரசுக்குத் திறை கொடுக்க மறுத்து அதனை முறியடித்து அதன் மேலுரிமையை ஒழிக்கக் காரணமா யிருந்தான். இவனே பிற்பட வீர அளகேசுரன் என்ற பெயருடன் சிங்கள அரசனானான். சில கல்வெட்டுக்கள் அவனை மலையாள நாட்டிலுள்ள வஞ்சிபுரத்திலிருந்து இலங்கை வந்ததாகக் குறிக்கின்றன. ஆனால் சீன ஆதாரங்கள் அவனைச் சோழ நாட்டுத் தமிழன் என்று கூறுகின்றன.

சோழ பாண்டிய காலத் தமிழ் மரபுத் தொடர்ச்சி;
விசயநகரப் பேரரசரின் முதல் இலங்கை வெற்றி 1385

முதலாம் புக்கனுக்குப் பின் அவன் மூன்றும் புதல்வனான இரண்டாம் ஹரிஹரன் (1377-1404) பட்டத்துக்கு வந்து 27 ஆண்டுகள் ஆட்சி செய்தான். இதே காலத்துக்குள் பாமினிப் பேரரசில் முதலாம் முகமதுவுக்குப் பின் முஜாஹித் (1377-1378) தாவூத் (1378) இரண்டாம் முகமது (1378-1397) கியாசுதீன (1397) ஆகியோர் ஆட்சி முடிவுற்று, பிருஸின் ஆட்சி (1397-1422) தொடங்கி விட்டது.

பேரரசன் ஹரிஹரன் ஆட்சிக் காலத்திலேயே அவன் மூத்த புதல்வனான இளவரசன் (முதலாம்) விருபாட்சன் 1385-ல் தமிழகம் கடந்து சென்று இலங்கை மீது படையெடுத்து, அந்நாட்டரசனைத் திறை கொடுக்கும்படி செய்தான் என்று அறிகிறோம்.

முதலாம் விருபாட்சன் ஆட்சி செய்தது ஒரு ஆண்டே (1404-1405). ஆனால் தந்தை ஆட்சியிலேயே அவன் பலவகையில் தன் புகழை நாட்டினன். நாராயண விலாசம் என்ற சமஸ்கிருத காவியம்கூட அவனாலேயே இயற்றப்பட்டதாக அறிகிறோம். மற்றும் துண்டீர நாடு (தொண்டை நாடு), சோழ, பாண்டிய நாடுகளை வென்று பெரும் பொருளைத் திறையாகப் பெற்றுத் தலைநகர் வந்ததாக அவனது ஆலம்

பூண்டிப் பட்டயம் கூறுகிறது. அவனது இலங்கைப் படையெடுப்பு இச்சமயத்திலேயே இதனை யடுத்து நடைபெற்றிருக்க வேண்டும்.

விசய நகரப் பேரரசு இச்சமயத்திலோ, இதற்கு முன்னோ பின்னோ கூட, கடல் கடந்து போர் நடத்தும் அளவில் கடற்படை எதனையும் பெற்றிருந்ததாகத் தோற்றவில்லை. சோழ, பாண்டியர் காலத்துக்குப் பிற்பட்ட எல்லாத் தமிழக, தென்னக அரசு பேரரசுகளின் நிலையும், கீழ்திசை அரசு பேரரசுகளின் நிலையும் அதுவே. ஆனால் பாண்டியர் இச்சமயம் கீழடங்கிய சிற்றரசராக இருந்தாலும் அவர்களிடமும், இலங்கைத் தமிழகமாகிய யாழ்ப்பாண அரசை ஆண்ட தமிழரசரிடமும் கடற்படை இந்நாளிலும் இருந்ததாகத் தெரிகிறது. ஆகவே இரண்டாம் ஹரிஹரன் காலத்திய இந்த இலங்கை வெற்றியும், இதுபோன்ற இரண்டாம் தேவராசன் காலத்திய வெற்றியும், இவற்றைத் தொடர்ந்து மதுரை நாயகர் காலத்திய இலங்கை வெற்றியும், அவ்வக்கால மேலுரிமைக்குரிய பேரரசர் அல்லது வல்லரசர் துணையுடன் பாண்டியர் அடைந்த வெற்றியே என்னலாம். இதற்கேற்ப, இம் மூன்றிலும் இடைப்பட்ட கால வெற்றியில் பராக்கிரம பாண்டியனே பெரும் பங்கு கொண்டதாக அறிகிறோம். இவ்விரண்டாம் வெற்றியில் பாண்டியன் வெற்றிப் போர்க்களங்களின் பெருந்தொகையைக் காண, முதல் இரண்டு வெற்றிகளும் ஒரே பாண்டியன் காலத்துக்குரிய ஒரே தொடர்ந்த போரின் வெற்றிகள்தாமோ என்றுகூடக் கருத இடமுண்டு.

கேரள இலங்கை வெற்றிகளுடன் விசயநகரப் பேரரசின் எல்லை கிட்டத்தட்ட உச்சநிலை அடைந்ததென்னலாம்.

தென்னகத்துக்கு வந்த பாரசீகத் தூதரான, அப்துல் ரசாக் அப் பேரரசு தென் வடலாக இலங்கை முதல் குலபர்கா வரைக்கும் மேற்கு கிழக்காக மலபாரிலிருந்து வங்காளம் வரைக்கும் பரவியிருந்ததென்று கூறுகிறார். வங்காளம் என்றது ஒரிசாவாகக் கொண்டால்கூட இச்சமயத்தில் இது பொருந்தா மிகையுரையே ஆகும்.

நூனிஸ் என்ற போர்ச்சுக்கீசிய ஆசிரியர் கொல்லமும் இலங்கையும் புலிக்காடும் பெருவும் தெனசெரிமும் பேரரசுக்குத் திறை தந்த நாடுகள் என்று புகழ்கிறார். இங்கும் முதலிரண்டு தவிர மீதி மிகையுரைகளே யாகும்.

### இரண்டாம் ஹரிஹரனின் வடதிசைப் போர்கள் 1382-1397

இரண்டாம் ஹரிஹரன் பட்டத்துக்கு வருமுன்பே பாமினிப் பேரரசனின் நேசனான இராசகொண்டாவின் வேலம

மரபுத் தலைவன் அனபோதன் தெலுங்காண மன்னன் காபய நாயகனைத் தாக்கிக் கொன்றான். இதனால் பாமினியின் செல்வாக்கு வளர்ந்தது. அண்டையில உள்ள சிற்றரசாகிய கொண்ட வீட்டுக்கும் விசயநகரப் பேரரசுக்கும் இது இடையூறாயிருந்தது. இந்நிலையைச் சமாளிக்குமபடி இரண்டாம் ஹரிஹரன் தன் புதல்வன் இளவரசன் (இரண்டாம்) புக்கனை 1390-ல் வாரங்கல் மீது இருதடவை படையெடுக்கச் செய்தான். இப் படையெடுப்புகள் வெற்றி தரவில்லை. 1397-ல் பாங்கல் தற்காலிகமாக விசய நகரத்தின் வசமாயிற்று. இது நிலைக்கவில்லையெனினும், இக்காலப் பாமினி மரபினர் ஆட்சி குறுகலாயிருந்ததாலும், சிறப்பாக இரண்டாம் முகம்மது அமைந்த சமய ஆர்வப் போக்குடையவனாக இருந்ததாலும் விசயநகரப் பேரரசர் தெற்கிலும் மேற்கிலும் தம் ஆட்சி பரப்ப முடிந்தது.

மேல் திசையில் கோவா, செளல், தபோல், காரிப் பட்டினம் (Kharipatam) ஆகிய துறைமுகங்கள் விசயநகர் வசப்பட்டன. தொன்று தொட்டுச் சோழப் பெரும் பேரரசர் கால முதல் மேல் புறத்தில் தென் பேரரசுகளின் வட எல்லையாயிருந்த கிருட்டிணையாறே இப்போதும் விசயநகரின் வட எல்லையாயிற்று.

தென்கிழக்கில் கொண்ட வீட்டு ரெட்டி மரபினரிடமிருந்து விசய நகரப் பேரரசு 1382-க்கும் 1385-க்கும் இடையே கர்நூலையும் நெல்லூரையும் குண்டூரின் ஒரு பகுதியையும் வென்று கைக்கொண்டது.

**பாமினிப் பேரரசன் பிரூஸின் வீரப் போராட்டம் 1398-1399.**

இரண்டாம் ஹரிஹரன் ஆட்சியின் பிற்பகுதியில் அவனுக்கும் பாமினிப் பேரரசன் பிரூஸாக்கும் இடையே மீண்டும் போர் மூண்டது.

பாமினிப் பேரரசன் பிரூஸாக்கு இச்சமயம் பேரரசின் அகத்தும் புறத்தும் வேறு பல தொல்லைகள் ஏற்பட்டிருந்தன. பேரரசின் வடமேற்கில் 'கோலி' மரபினர் கிளர்ச்சிக்கொடி உயர்த்தியிருந்தனர். வட கிழக்கிலோ கோண்டு மரபினனான கேர்ளாவின் அரசன் நரசிங்கன் பீரார் மீது படையெடுத்திருந்தான். இச்சமயம் பார்த்தே விசயநகரப் பேரரசன் இரண்டாம் ஹரிஹரன் தென் திசையில் இரேய்ச்சூர் மண்டலத்தின் மீது படையெடுத்தான்.

பிரூஸ் முதலில் கோலியர் கிளர்ச்சியை எளிதில் அடக்கிவிட்டான். ஆனால் கேர்ளாப் படையெடுப்பைச் சமாளிக்க

அவன் பேரார், தௌலதாபாத் ஆகிய மாகாணங்களில் உள்ள படைகள் அத்தனையையும் ஈடுபடுத்த வேண்டியதா யிருந்தது. ஆகவேதான் படைத்தலைவனான காசி சிராஜுதீனை ஒரு சில படை வீரருடன் தெற்கே சென்று சமாளிக்கும் படி விட்டு விட்டு, அவன் கேர்ளா சென்றான்.

பாமினிப் படைத்தலைவன் சிராஜுதீன் சூழ்ச்சியாலேயே எளிதில் வெற்றி பெற்றான். அவன் பாடகனாக மாற்றுருக் கொண்டு விசயநகரப் பாசறையின் உள்ளே புகுந்தான். அம் முறையிலே உள்ளே குழப்பம் விளைவித்த சமயம் அவன் வீரர் திடுமெனப் பாய்ந்து பாசறையிலேயே வெற்றி நாட்டி னர். சிறைப்பட்டவர் எண்ணற்றவர்கள். அவர்கள் விடு விப்புத் தொகையே பாமினிக்கு ஒரு பெருந் திறையாயிற்று.

பிருஸ் கேர்ளா அரசன் நரசிங்கனை இதற்குள் முறியடித் திருந்தான். நரசிங்கன் பணிந்து பெரும் பொருட் குவை யுடன் 40 யானைகளைத் திறையாக அளித்தான். அத்துடன் தன் புதல்வியை அவன் பிருஸின் மனைவியாக மணஞ் செய்து கொடுத்தான்.

கேர்ளா வெற்றியின் பின் பிருஸ் விசயநகரப் படைகளைக் கிருஷ்ணை யாற்றங்கரையிலிருந்து விசய நகரத் தலைநகர் வரை விடாது துரத்தியடித்தான். இரேய்ச்சூர் மண்டலம் மீண்டும் பாமினி வசமாயிற்று. அடிக்கடி போர்களமாகி வந்த அந்த மண்டலத்தை அதற்கேற்ற முறையில் பிருஸ் ஒரு படையாட்சி மாகாணமாகவே ஆக்கி, பௌலாத்கான் என்பவனைப் படை யாட்சித்தலைவன் (Military Governor) ஆக அமர்த்தினான்.

விசயநகரப் பேரரசு இப் பெருந் தோல்வியால் பாமினிப் பேரரசுக்குப் பணிந்து திறை கொடுக்க இணங்க வேண்டியதா யிற்று. ஆனால் பின்னால் பாமினி அரசின் வடக்கிலும் வட மேற்கிலும் இருந்த வல்லரசான மாளவ சுல்தானுடனும், குஜராத் சுல்தானுடனும் விசயநகரம் நேச ஒப்பந்தம் செய்து கொண்டு இம் மேலுரிமையையும் திறைக் கடனையும் உதறித் தள்ளிற்று.

**ஒரு பெண்ணழகிக்கான பேரரசின் போராட்டம் 1406—1412.**

இரண்டாம் ஹரிஹரனுக்குப் பின் அவன் புதல்வர் மூவ ருள் முதல் இருவரான முதலாம் விரூபாட்சனும் இரண்டாம் புக்கனும் அடுத்தடுத்து ஆண்டு, இரண்டு ஆண்டுகளுக்குள் மடிந்தனர். மூன்றும புதல்வனான முதலாம் தேவராயன் (1406—1427) ஆட்சி பிருஸ் ஆட்சியுடன் சமகாலமானதாய் அமைந்தது.

இரேய்ச்சூர் மண்டலம் இப்போது பாமினி ஆட்சியில் இருந்தது அதன் கோட்டை நகர்களுள் ஒன்று முட்கல் அந் நகரின் பொற்கொல்லன் ஒருவனுக்கு அழகிற் சிறந்த புதல்வி ஒருத்தி யிருந்தாள். இந்தத் தொழிலாளர் குடும்பப் பெண் எப்படியோ விசயநகரப் பேரரசன் தேவராயன் பார்வையில் பட்டு, அவள் மையலால் அவன் பாமினிப் பேரரசு மீது போர் தொடுக்கவும், அதனால் பேரழிவுக்கும் பேரவமதிப்புக்கும் ஆளாகவும் நேர்ந்தது. இப போர் 1412-க்கு முன் நிகழ்ந்தது ஆகும். ஏனெனில் இப் போரில் தோற்ற முதலாம் தேவராயன் பாமினி அரசனுக்குப் பங்கப்பூர் கோட்டையையும் விட்டுக் கொடுத்துத் தன் புதல்வியையும் அவனுக்கு மனைவியாகத் தர நேர்ந்தது. அது மட்டுமன்று. எந்தப் பெண்ணழகிக்காக அவன் இத்தனை அவதியுற்றானோ அதே பெண்ணழகியையும் பிரூஸின் மகன் கையில் பிடித்துக் கொடுக்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டான்!

**இன்ப துன்பங்கள்:**
**இரு பேரரசின் வெற்றி தோல்விகள்: 1412—1422**

ஒரு பெண்ணுக்காகப் போர்புரிந்த முதலாம் தேவராயன் பிரூஸ் ஆகிய இரு பேரரசர்களும் அரசியல் துறையில் அடிக்கடி ஒருவருடன் ஒருவர் முரணிப் போராடினர். அரசியல் வாழ்விலும் தனி வாழ்விலும் முதலில் பிரூஸ் மதிப்பும்வெற்றியும் பெற்றாலும் இறுதியில் தேவராயனே இரண்டுக்கும் உரியவனாக நேர்ந்தது.

கிருஷ்ணை, கோதாவரி ஆறுகளுக்கிடையிலிருந்த கொண்ட வீட்டு அரசைத் தெலுங்குச் சோட மன்னனான அனதேவன் ஆண்டு வந்தான். அவன் பிரூஸுடனே நண்பனாக இருந்தான். இது பிரூஸின் செல்வாக்கை வளர்க்க ஏதுவாயிருந்தது. இதற்கு எதிரீடாகத் தேவராசன் அனதேவன் மைத்துனனான இராச மகேந்திரவரத்தின் (தற்கால இராச மண்ட்ரி) ரெட்டி மன்னன் காத்தியவேமனுடன் நேச ஒப்பந்தம் செய்து கொண்டு அனதேவன் ஆட்சிப் பகுதியைத் தாக்கினான். பிரூஸ் அனதேவனுக்கு நண்பனானதால் தானும் 1415-ல் களம்புகுந்தான். இரு பேரரசுகளும் மீண்டும் கீழ் திசையில் தெலுங்கான மண்ணின் மீது போரிட்டன. இப் போரிலும் இறுதியாக 1417-ல் பிரூஸே வெற்றி பெற்றுத் தன் தெலுங்கான மேலுரிமையாட்சியின் செல்வாக்கை முன்னிலும் வலியுறுத்தினான். போரில் இராசமகேந்திரபுரத்து ரெட்டி மன்னன் காத்திய வேமன் கொலையுண்டான். அவன் ஆட்சியும் பாமினியின் மேலுரிமையை ஏற்க நேர்ந்தது.

முதலாம் தேவராயன் இத் தோல்வியை வாளா ஏற்ற மையவில்லை. எதிர்த்தாக்குதல் நடத்திப் பாங்கலைக் கைப் பற்றினன். பிரூஸ் பாங்கலை மீட்க எண்ணி அதை முற்றுகை யிட்டான். இம் முற்றுகை இரண்டாண்டுகள் நீடித்தது. பிரூஸ் பக்கமிருந்த இராசமகேந்திரபுரத்து வேலமர் இப் போது பக்கமாறி மீண்டும் தேவராயனுடன் சேர்ந்து கொண்டதால், தேவராயன் பிரூஸை நைய முறியடித்துப் பெரு வெற்றி கொள்ள முடிந்தது.

1420-ல் பிரூஸ், பாங்கலை மீட்க எண்ணிப் பின்னும் தோல்வி யுற்றான்.

மன்னன் காத்திய வேமன் மாளிவுக்குப் பின் வீர மிக்க போரிலும் திறமிக்க அரசியல் சூழ்ச்சியிலும் ஈடுபட்டு இராசமகேந்திரபுரத்தின் நிலையை உயர்த்தியவன் காத்திய வேமனின் படைத்தலைவனை அல்லாதனே. அவன் காத் தியவேமனின் புதல்வன் குமாரகிரியின் காவலனா யிருந்து அவன் அரசுக்கு மீட்டும் வலுத்தந்தான்.

விசயநகர வெற்றிக்குப் பின் கொண்ட வீடு ஒரு தனி யரசு என்ற நிலையிழந்து ஒழிந்தது. அதன் நிலப்பரப்புத் தேவராயனின் விசயநகர ஆட்சிக்கும், இராசமகேந்திரபுரத்து வேலமர் ஆட்சிக்கும் இடையே பங்கிடப் பட்டுவிட்டது.

அரசியல் புறவாழ்வில் வீழ்ச்சியுற்று மதிப்பிழந்த பிரு ஸுக்கு அகவாழ்விலும் ஒரு மாய அல்லல் வந்து புகுந்தது. நெடுஞ் சேரலாதன் பேரவையில் செங்குட்டுவனையும் இளங் கோவையும் ஒருங்கு கண்ட அறவோர் ஒருவர் இளையவனுக்கே அரசயோகம் எனக் கூறியதாக நாம் சிலப்பதிகாரத்தில் கேள் விப்பட்டிருக்கிறோம். அதே போல பிரூஸின் போர்க்களங் களில் எல்லாம் அவனுடன் உற்ற வீரத்துணைவனாக நின்ற அவன் இளவல் அகமதுடன் அவனைக் கண்ட இஸ்லாமிய ஞானி ஜமாலூதீன் ஹுசைனி அவ்விளவலே விரைவில் அரச னாவதற்குரிய கோள்வாய்ப்பு உடையவனென்று குறியுரைத் திருந்தான். அகமது இதன் பின்னும் தமையனிடம் பற்று மாறாமலே யிருந்தாலும், இது தமையன் மனம் கெடுத்தது. அவன் தம்பியிடம் காட்டிய பரிவும் மதிப்பும் குறைந்தன. அவனுடன் தோழமை கொண்டிருந்த இரண்டு அடிமைகளி டம் அப் பரிவும் மதிப்பும் சென்று பாய்ந்தன. அவர்களுக்கு அவன் அயினுல்முல்க் என்றும் நிஜாம் உல்முல்க் என்றும் பட்டமளித்து அவர்களுக்கு உயர் பதவியும் தந்தான். இத னால் அகமது மனக்கசப்புற்று அகமது கலப் ஹசன் என்ற பஸ்ரா நகரத்துச் செல்வ வணிகன் ஆதரவாலும் தூண்டுத

லாலும் கலியாண் நகர் சென்று தன்னையே அரசனாக முடிசூட்டிக் கொண்டான். அவன் கைப்பட்ட பிரூஸ் முடிதுறந்து அதை அவனுக்கே அளித்து விட்டு, மனமுறிவுடன் உயிர் நீத்தான்.

## துங்கபத்திரை யாற்றுப் போர் (1422—1426)

முதலாம் தேவராயனுக்குப் பின் விசயநகரம் திறமை குன்றிய அவன் மகன் முதலாம் விசயராசன் (1422—1426) ஆட்சிக்கும், பிரூஸுக்குப் பின் பாமினிப் பேரரசு அவன் வீர இளவல் அகமதுஷா (1422—1435) ஆட்சிக்கும் வந்தன. முந்திய ஆட்சியில் தன் தமையன் மூலம் பாமினிக்கு ஏற்பட்ட அவமதிப்பைப் போக்கும் எண்ணத்துடன் அவன் பட்டத்துக்கு வந்த உடனேயே விசயநகரத்தின் மீது படையெடுத்தான். துங்கபத்திரை ஆற்றின் கரையிலே வந்து விசயநகரப் படைகளும் தங்கல் அமைந்திருந்தன. ஆனால் திடுமென எதிர்பாரா வகையில் அகமதுஷா பாசறை மீது தாக்குதல் நடத்தினான் விசய நகரப் படைகள் சின்னா பின்னமாகத் தெறித்தோடின. பேரரசன் விசயராசனே கந்தலான ஆடைகளுடன் ஆற்றின் மறுகரையிலுள்ள ஒரு கருப்பங் கொல்லையில் சென்று பதுங்கித் திரிய வேண்டியதாயிற்று. பாமினிப் படை வீரர் சிலர் அச்சமயம் அவனைக் கண்டனராயினும், அவன் பேரரசன் என்று அறியாமல் யாரோ கரும்புக் கொல்லையின் தொழிலாளி என்று கருதி விட்டுச் சென்றனராம்.

போரில் அகமது பெரு வெற்றி பெற்றதுடன் அமையவில்லை. விசய நகர எல்லைக்குள்ளேயே புகுந்து படை வீரரையும், பொது மக்களையும், ஆண்களையும் பெண்களையும் முதியவர்களையும், குழந்தைகளையும் வேறுபாடின்றி எங்கும் தீக்கும் வாளுக்கும் இரை யாக்கினான். இறந்தவர் எண்ணிக்கை இருபதினாயிரம் என்ற தொகை யெட்டுந்தோறும், படுகொலை வேலையைச் சிறிது நிறுத்தி அந்தக் கொலை வெற்றியைக் கொண்டாடிய பின்னரே, அடுத்த இருபதினாயிரக் கொலை நடத்தினானும். இப்படிப் பல தடவை பல நூறாயிர மக்களைக் கொன்றும், பிராமணர்களை அழித்தும், கோயில்கள், பள்ளி கல்லூரிகளை இடித்தும் அவன் விசய நகர வாழ்விலே மறக்க முடியாத கொடுமை யாட்சி பரப்பினான்.

## தபதி யாற்றுப் போர் 1428

நடு ஆசியாவில் தன் வாள் வலியால் ஒரு வீரப் பேரரசு நிறுவி ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் பரந்தகன்ற ஒரு பேராட்சி நாட்டியவன் தைமூர். அவன் பெயர் அந் நாளைய

மேலை உலகத்திலும் கீழையுலகத்திலும் கிலியூட்டும் பெயராக நிலவிற்று; 1401-ல் பாமினி அரசன் பிரூஸ் அவ் விஸ்லாமியப் பேரரசனுக்குச் சில பரிசுகள் அனுப்பி யிருந்தான். அதனால் மகிழ்ச்சி யடைந்த தைமூர் 'தெக்காணம், மாளவம், குஜராத்' ஆகிய மூன்று தேசங்களுக்கும்உன்னையே அரசனுக்கு கிம்ரும்என்றுகருணையுடன்கட்டளைபிறப்பித்தான்.இதுகேட்டு குஜராத் சுல்தானும் மாளவ சுல்தானும் நடுநடுங்கி, விசயநகரப் பேரரசுடன்நேச ஒப்பந்தம் செய்துதமமை வலிமைப்படுத்திக்கொள்ள முன்வந்தனர். பிரூஸ் காலத்தில் இதனெதிரொலி எதுவும் கிளம்பவில்லை. ஆனால் அகமதுஷா அந்த இரு நாடுகளையுமே கைப்பற்றுவதற்கான பெரும் போர் ஏற்பாடுகளில் முனைந்தான். இரு நாடுகளும் கைப்பற்ற முயன்று வந்த இடைநாடு காந்தேஷ். எனவே இயல்பாக அது இரு நாடுகளையும் பகைத்திருந்தது. அகமதுஷா காநதேஷுடன் ஒப்பந்தம் செய்து கொண்டான். காந்தேஷ் அரசன் நாசிர்கான் புதல்வியே அவன் மூத்த மகன் இளவரசன் இரண்டாம் அலாவுதீனுக்கு மணம் செய்து வைக்கப்பட்டாள்.

கேர்ளா நாட்டைப் பாமினியின் மேலுரிமையுடன் நரசிங்கனே இன்னும் ஆண்டு கொண்டிருந்தான். அகமதுஷாவின் வலுக் குறைக்கும் எண்ணத்துடன் மாளவ அரசன் ஹுஷங்ஷா 1428-ல் கேர்ளா மீது படையெடுத்தான். நரசிங்கன் தனக்கு உதவி புரியும்படி அகமது ஷாவை அழைத்தான்.

தபதி ஆற்றங் கரையில் நடைபெற்ற போரில் மாளவ மன்னன் மண் கௌவ நேர்ந்தது. 200 யானைகளும் அவற்றின் அணிமணி அம்பாரிகளும் பெருஞ் செல்வக்குவைகளும் அகமதுஷா வசமாயின.

படையெடுத்த எதிரியை யழித்து நாடு காத்த தன் மேலுரிமையாளனான பேரரசன் அகமதை நரசிங்கன் தன் நாட்டுக் கழைத்துச்சென்று மேலும் பரிசுகளளித்துப்பெருமைப்படுத்தினான். ஆனால் மாநிலத்தின் தொல் பழங்குடி (கொண்டு) மரபில் வந்த அம்மன்னன் தோல்வியுற்ற மாளவ அரசனையும் குடும்பத்தினரையும் வீரரையும் பாதுகாப்புடன் தாயகம் அனுப்பி வைத்துத் தன் பழம் பண்பாட்டின் மூலம் வடதிசை, தென் திசை அரசர் இருவரும் வெட்கப்படும்படி செய்தான்.

அகமதுஷா ஆட்சித் தொடக்கம் முதல் அவனை அரவணைத்து வந்த வெற்றிச் செல்வி இப்போது அவனைக் கைவிட்டாள். 1430-ல் அவன் குஜராத்தின் மீது படையெடுத்துத்

தோல்வியுடன் மீண்டான் குஜராத்துப் படைகள் எதிர் தாக்குதலில் முனைந்து பாமினி அரசியல் வலுவுக்கே ஆட்டம் தந்தன. இதனிடையே மாளவ அரசன் மீட்டும் கேர்ளா மீது படையெடுத்து நரசிங்கனைக் கொன்றான். ஏற்கனவே குஜராத்துப் படைகளால் அலைக்கழிக்கப்பட்ட பாமினி மீது அவன் படையெடுத்துத் தாக்கினான். இதில் அகமதுஷா ஓரளவு வெற்றி பெற்றாலும் கேர்ளாவின் பெரும் பகுதியை மாளவத்துக்குக் கொடுத்து மீந்த பகுதியை மட்டுமே தன் பீரார் மாகாணத்துடன் சேர்த்துக் கொள்ள வேண்டி வந்தது.

கலிங்க எழுச்சி : கஜபதி மரபின் வளர்ச்சி

விசய நகரப் பேரரசன் முதலாம் விசயராசனுக்குப் பின் அவன் புதல்வன் இரண்டாம் தேவராயன் (1422-1446) பேரரசனானான். முதலாம் தேவராயன் காலத்தில் விசயநகரப் பேரரசு கொண்ட வீட்டரசைக் கைக் கொண்டதனால், அவ்வெற்றியைத் தொடர்ந்து ஒரிசாவில் ஆண்ட கஜபதி மரபினரையும் தாக்க அவன் எண்ணினான். ஆனால் இச்சமயம் இராசமகேந்திரபுரத்தை ஆண்ட அல்லத ரெட்டி தலையிட்டு நேச இணக்கம் உண்டுபண்ணி வைத்தான். எனினும் அல்லத ரெட்டியின் மறைவுக்குப் பின் அவன் புதல்வர்களான அல்லய வேமன், வீரபத்திரன் ஆகியவர்கள் தாமே ஒரிசாவைத் தாக்க முற்பட்டனர். ஆயினும் 1435-ல் கஜபதி மரபின் புத்தினாயிருகக் கபிலேசுரன் என்ற வீரமன்னன் பட்டத்துக்கு வந்ததனால், தாக்குபவர் தாக்கப்படுபவர் நிலை தலைகீழ் ஆயிற்று. கபிலேசுவரகஜபதி இராச மகேந்திரபுரத்தையே தாக்க முற்பட்டான். அல்லயத் துணைவர் இச்சமயம் இரண்டாம் தேவராயனின் உதவி கோரினர். தேவராயன் படைகளுடன் விரைந்து சென்று தென்கலிங்க அதாவது தெலுங்கக் கரும்புத் தோட்டத்தில் நுழைந்த வடகலிங்க மத யானையை வெளியேற்றியுதவினான்.

தேவராயன் தந்த இப்பாதுகாப்பு அல்லயத் துணைவருக்கு நிலையான பாதுகாப்பாய் அமையவில்லை. விரைவில் கஜபதி அரசனின் பேரரச வாழ்வுக்கு இராசமகேந்திரபுரம் இரையாயிற்று.

வேழநாடு வென்ற வேழ வேட்டைக்காரன் : 1435

இரண்டாம் தேவராயனுக்கு வேழ வேட்டைக்காரன் (கஜபேட காரர) என்ற ஒரு பட்டப் பெயர் உண்டு. வேழ

நாடாகிய கேரளத்தை வென்றவன் என்ற பொருளிலே தான் இப்பெயர் ஏற்பட்டதோ என்று நாம் ஐயுற இடமுண்டு.

கிழக்குத் தென்னக அரசியலில் வெற்றிகரமாகப் பங்கு கொண்ட பின் பேரரசன் இரண்டாம் தேவராயன் தெற்கு நோக்கித் தமிழகத்தில் வீர உலா வந்தான் தமிழகம் ஏற்கெனவே பேரரசின் மேலாட்சியில் இருந்ததால் அவன் பேரரசு நோக்கு மேல் திசையிலும் தென் திசையிலும் சென்றன. அவன் மேல் திசை சென்று கொல்லத்தில ஆண்ட அரசனையும் அதற்கு வடக்கேயுள்ள பல சிற்றரசர்களையும் வென்றடக்கினான். பேரரசெல்லை இப்போது வடக்கிலும் தெற்கிலும் மேல் கடலளாவிற்று. ஆயினும் இடையே கள்ளிக்கோட்டையில் ஆண்ட சாமூதிரிப்பாடு என்ற வலிமை வாய்ந்த சிற்றரசன் மட்டும் தன்னுண்மையுடன் தனியாட்சியேசெலுத்திவந்தான்.

பாரசீக அரசனிடமிருந்து தென்னாட்டுக்கு அரசியல் தூதனாக அனுப்பப்பட்ட இஸ்லாமிய வரலாற்றாசிரியன் அப்துர் ரசாக் முதலில் இந்த சாமூதிரிப் பாட்டின அரண்மனையிலேயே வந்து தங்கினதாக அறிகிறோம். பேரரசன் தேவராயன் அத் தூதனைத் தன்னிடம் அனுப்பும்படி சாமூதிரிப் பாட்டுக்குத் தெரிவித்தவுடனே, அவன் அட்டியின்றி அவ்வாறே அனுப்பி வைத்தான். 'தனியாட்சி செலுத்தியவனாயினும் சாமூதிரிப் பாடு விசயநகரப் பேரரசன் என்றால் அஞ்சி நடுங்குபவனே' என்று இந்நிகழ்ச்சி பற்றிக் கூறுகையில் அப்துர் ரசாக் குறிப்பிட்டுள்ளான்.

**சோழபாண்டியத் தமிழ் மரபின் தூவானம்:**
**இலங்கைவெற்றிகள்:**
**சிங்கை, இராசை, செண்பை, முதலை, வீரை, வைப்பாறு,**
**அனுரை, விருதை, அறந்தைப் போர்கள்—1435**

தமிழகத்தில் பாண்டியப் பேரரசு வீழ்ச்சியுற்ற பின் சோணாட்டிலும் தொண்டை நாட்டிலும் சம்புவராயர் என்ற சிற்றரசர் ஆற்றலுடன் விளங்கியது போலவே, வட பாண்டி நாட்டில் வாணாதிராயர் என்ற வாணகுலச் சிற்றரசர் ஆற்றலுடையவர்களாகி யிருந்தனர். முஸ்லிம் ஆட்சியாளர் அகற்றப்பட்டபின் கூட, விசய நகர ஆட்சியின் கீழ் மதுரையிலும் அதனைச் சூழ்ந்த இடங்களிலும் அவர்களே உயர் பதவியிலிருந்தார்கள். ஆனால் பாண்டியர் பேரரசர் ஒளியும் அரச ஒளியும் குன்றினும், சிற்றரசர்களிடையே இன்னும் ஆற்றல் வாய்ந்தவர்களாகவே திருநெல்வேலி நகர், தென்காசி, கொற்கை, கரிவலம் வந்த நல்லூர் முதலிய திருநெல்வேலி மாவட்ட நகரங்

களிலிருந்து ஆட்சி செய்து வந்தனர். தமிழக முழுவதும் இந்நாளில் விசயநகரப் பேரரசின் மேலாட்சியில் இருந்ததாயினும், இப்பாண்டியர்கள் அவ்வபபோது கீழடங்கிய சிற்றரசர்களாகவும் அவ்வப்போது நட்புறவுடையவர்களாகவும்,ஒருசில சமயம் தன்னுண்மை கொண்டு பண்டைய வாழ்வின் நினைவில கிளர்ந்தெழுபவராகவுமே இருந்து வந்தனர். 14 முதல் 17-ம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை அவர்களைப் பற்றிய செய்திகளும் நிகழ்ச்சிகளும் இத்தகைய மாறுபட்ட நிலைகளையே காட்டுகின்றன.

இத்தகைய பிற்காலப் பாண்டியர் பலர் 14-ம் நூற்றாண்டிலேயே மதுரையிலும், வடக்கு கிழக்குத் தமிழகத்திலும் பரவிவந்த குழப்பச் சூழ்நிலைகளால்கூடப் பாதிக்கப்படாமல் தென்கோடித் தமிழகத்தில் வாழ்ந்து வந்தனர். ஆனால் 15-ம் நூற்றாண்டில் வாழ்நத சடையவர்மன் அரிகேசரி பராக்கிரம பாண்டியன் (1422-1463) பிற்காலப் பாண்டியர்களிலே தலைசிறந்த வீரப்பெருமையும் புகழும் உடையவனாகக் காணப்படுகிறான். இவன் ஜாதவர்மன்விக்கிரமபாண்டியன் (1401-1422) புதல்வன். கொற்கையைத் தலை நகராகக்கொண்டு இவன் திருநெல்வேலி மாவட்டத்தையும் இராமநாதபுர மாவட்டத்தையும் ஆண்ட வலிமைவாய்ந்த அரசன். விசயநகரப் பேரரசையே எதிர்த்து ஒரு சிறிதுகாலம் மதுரையைக்கூட ஆண்டு பின் அதனைத் தோற்றிழந்தான் என்றும் அறிகிறோம். வீரத்திலும் தெய்வப் பற்றிலும் தமிழார்வத்திலும் ஒருங்கே சிறந்தவன் இவன்.

இவன் குடிகள் நலத்துக்காக விசுவநாதப் பேரேரி போன்ற நீர்நிலைகளை 'நவமாக' (புதிதாக) வகுத்தவன். தென்காசியில் பதினேழு ஆண்டு அரும்பெருந் திருப்பணிகள் செய்து அதனைத் தன் மரபினரும் குடிமக்களும் பின்னோரும் பாதுகாக்கும்படிக் கல்வெட்டிலே செந்தமிழ்ப் பாக்களால் வேண்டிக் கொள்ளும் வாசகங்கள் எவரையும் உருக்கும் 'திருவாசகப் பண்பு' உடையன ஆகும்.

> "சேல் ஏறிய வயல் தென்காசி ஆலயம் தெய்வச் செய—
> லாலே சமைந்தது, இங்கு என் செயலல்ல! அதனை இன்னம்
> மேலேவிரிவு செய்தே புரப்பார் அடி வீழ்ந்து அவர் தம்—
> பால் ஏவல்செய்து பணிவன் பராக்கிரம பாண்டியனே!"

என்ற அரசன் பக்திப் பணிவு. அவன் அரசெல்லை சிறியதாயினும் பண்பெல்லை அசோகனுக்கு மேம்பட்டது என்பதை உணர்த்தாநிற்பதாகும். பிற்காலப் பாண்டியர் அனைவருமே இப்பாண்டியனைப் பெருமைப்படப் போற்றினர். அவன் கட்

டிய தென்காசிக் கோயிலிலேயே பிற்காலப் பாண்டியர் அனைவரும் முடிசூட்டிக் கொண்டனர்.

திருக்குற்றாலம், திருப்புடைமருதூர் (அம்பா சமுத்திரம்) முதலிய இடத்துச் சிவன் கோயில்களிலும் இவன் சிறப்புத் திருப்பணிகள் செய்தான். விந்தனூர் முதலிய ஐந்து ஊர்களில் அந்தணர்க்கு அகங்கள் வகுத்தான்.

இப் பாண்டிய வேந்தன் காலத்தில் விசய நகரப் பேரரசர் ஆட்சியின் பேராளாய்த் தமிழகத்தில் மாகாணத் தலைவராகவும் படைத்தலைவராகவும் இருந்தவர் தண்ட நாயகர் இலக்கண்ணரே யாவர். விசய நகரப் பேரரசருடனும் தண்ட நாயகருடனும் பராக்கிரம பாண்டியன் நேசத் தொடர்பு கொண்டு பேரரசர் சார்பிலே இலங்கைப் படையெடுப்பை நடத்தினான். இலங்கையில் நடைபெற்ற போர்களின் வெற்றி இக் காரணத்தால் இருவர் கல்வெட்டுக்களிலும் குறிக்கப் பட்டுள்ளன.

''சிங்கையில் அனுரையில் இராசையில் செண்பையில்
விந்தையில் அறந்தையில் முதலையில் வீரையில்
வைப்பாற்........மன்னரை வென் கண்டு''

எனச் சிதைந்த நிலையிலும் அவன் மெய்க்கீர்த்தி அவன் இலங்கைப் போர் வெற்றிகளைத் தொகுத்துரைக்கின்றன.

''கோதற்ற பக்தி அறுபத்து மூவர்தம் கூட்டத்திலோ,
தீதற்ற வெள்ளிச் சிலம்பகத்தோ, செம்பொன்
அம்பலத்தோ,
வேதத்திலோ, சிவலோகத்திலோ, விசுவநாதன் இரு
பாதத்திலோ சென்றுபுக்கான் பராக்கிரமபாண்டியனே!'',

என்ற இப்புகழ் வேந்தன் மறைவு பற்றிய இரங்கற்பா தென்காசிக் கோயிலில் பொறிக்கப் பெற்றுள்ளது.

இப்போர் வெற்றிகளின் பயனாகவே 1438-ல் இலக்கண்ண தண்ட நாயகன் தனக்குத் 'தட்சிண சமுத்திராதிபதி' என்ற பட்டத்தையும், விசய நகரப் பேரரசன் இரண்டாம் தேவராயன் 'ஈழம் திறைகொண்ட' என்ற அடைமொழி விருதையும் மேற் கொண்டனர்.

விசய நகர காலத்திலேயே 1385 ல் நடைபெற்ற இளவரசன் விருபாட்சனின் வெற்றியும் இவ் வெற்றியும் ஒரே தொடர்ப் போராட்டத்தின் வெற்றியாக இருக்குமோ என்று ஐயுற இடமுண்டு என்று மேலே கூறியுள்ளோம். எப்படியும் இவ்விரண்டு வெற்றிகளும் மதுரை நாயகர் கால வெற்றிகளும் பாண்டியர் கடல் மரபு தமிழகத்தில் பாண்டிய ராட்சி

மூலமாகமோ வேறு காரணமாகவோ முற்றிலும் அழியாது நீடித்திருந்தது என்பதைக் காட்டுகிறது.

சங்கர நமினார் கோயில் போர் :
திருக்குற்றாலப் போர் : முதலைக்குளப் ப்போர் :
வீரகேரளம்புதூர்ப் போர் : (*1422—1463.*)

சங்கர நயினார் கோயில், திருக்குற்றாலம், முதலைக்குளம், வீர கேரளபுதூர் முதலிய இடங்களில் இலங்கை வெற்றி சளுக்ருரிய அரிகேசரி பராக்கிரம பாண்டியன் தன் பகைவர்களை வென்று புகழெய்தினான் என்று அவன் கல்வெட்டுக்கள் சில பொதுவாகக் கூறுகின்றன. திருக்குற்றாலப் போர் சேரனை எதிர்த்து வென்ற போராகத் தெரிவதால், மற்றவையும்அதே அரசனை வென்ற போர்களாக இருக்கக்கூடும் என்று கூறலாம்.

பாமினிப் பேரரசில் உட்கட்சிப் பிளவு :

அகமதுஷாவுக்குப் பின் அவன் மூத்த புதல்வனான இரண்டாம் அலாவுதீன் (*1436—1458*) பாமினிப் பேரரசனான், அவன் 1437-ல் கொண்கானக் கரையின் பல பகுதிகளை வென்று அடக்கிப் பேரரசை விரிவுபடுத்தினான். இச்சமயம் சங்கமேசுவரா அரசன் தன் புதல்வியை அவனுக்கு மணம் செய்து கொடுத்தான். இம் மனைவியிடம் மன்னன் கொண்ட மட்டற்ற பற்றுதலால் காந்தேஷ் அரசன் நாசிர்கான் புதல்வியாகிய முதன் மனைவியை அவன் புறக்கணிக்க நேர்ந்தது. அவன் பகைமை இச்சமயம் நாட்டு முஸ்லிம்கள் (தெக்காணி) கட்சி, அயல் முஸ்லிம் கட்சி என்ற உட்கட்சி வேறுபாட்டை வலுப்படுத்திற்று. இதுநாளடைவில் பாமினியின் வாழ்வையே குலைக்க ஏதுவாயிற்று.

இரேய்ச்சூர்ப் போர் I: *1443.*

பாமினிப் பேரரசன் இரண்டாம் அலாவுதீன் இரண்டு தடவை விசய நகரத்துடன் மோத நேர்ந்தது. முதல் தடவை திறை நீண்ட நாள் தரப்படாததை ஒட்டி அவன் தன் இளவலான முகமதை விசய நகரத்துக்கு அனுப்பினான். ஆனால் முகமது நேசமுறையிலேயே விசயநகரப்பேரரசன் இரண்டாம் தேவராயனுடன் தொடர்புகொண்டு திறைப் பணத்தை வெற்றிகரமாக மீட்டுக் கொண்டு வந்தான். ஆனால் இச் செயலால் அவன் செருக்கடைந்து ஆட்சியில் பாதி தனக்கு வேண்டுமென்று கோரலானான். அலாவுதீன் அவனை எளிதில் அடக்கிப் பின் அவன் கிளர்ச்சிப் போக்கை மன்னித்து அவனை இரேய்ச்சூரின் மாகாண ஆட்சியாளன் ஆக்கினான்.

பாமினிக்கும் விசய நகருக்கும் மீட்டும்பகைமை ஏற்பட்டதற்கு விசயநகரின் உள்நாட்டு நிலைகளை அலாவுதீன் அறிந்து அது வலிமை குன்றியிருந்தது என்று நினைத்ததே காரணம் ஆகும். பேரரசன் தேவராயனைத் தாக்கிக் கொலை செய்யப் பேரரசன் தம்பியே முனைந்திருந்தான். இம் முயற்சி வெற்றி பெறவில்லையானாலும், அதனால் உள்நாட்டு அரசியல் சூழலில் பெருங் கல கலப்பு ஏற்பட்டது, பேரரசன் அரண்மனையிலே இச்சமயம் தங்கி யிருந்த பாரசீக மன்னன் தூதன் அப்துர் ரசாக் இம்முயற்சியின்போது பேரரசனுடனேயே இருந்தான்.

அலாவுதீன் இச் சூழலைப் பயன்படுத்திக்கொண்டு வலிந்து பூசல் வளர்க்க எண்ணினான். ஆகவே கொடுத்ததிறை போதாதென்று மேலும் ஏழு லட்சம் வராகன் கோரினான். தேவராயன் இது கேட்டு உடனே போர்க்கெழுந்தான்.

இரேய்க்சூரில் நடைபெற்ற இப்போரே முதல்இரேய்ச்சூர் போர் ஆகும். இப் போரில் தேவராயன் படைத்தலைவன் தமிழகத்தில் தலைவனாயிருந்து இலங்கைப் புகழ்பெற்ற இலக்கண்ண தண்ட நாயகனே. பாமினிப் பேரரசன் படைத் தலைவனாயிருநதவன் மாலிக் அல்கிஜார்.

போர் விசயநகரத்தின் பக்கம் வெற்றியாகவே தொடங்கிற்று. இலக்கண்ண தண்டநாயகன் குல்பர்க்காவைச் சூழ்ந்த இரேய்ச்சூர் மண்டலப் பகுதியில் புகுந்து முட்கல் கோட்டையைக் கைப்பற்றினான். இரேய்ச்சூர், பங்காப்பூர் கோட்டைகளை முற்றுகையிட்டான். பீஜப்பூர் வரை அவன் படைகள் பாமினிப் பேரரசின் ஆட்சிக்குரிய பகுதிகளைத் தீக்கிரையாக்கின.

போரின் போக்குக்கண்ட பாமினிப்படைத்தலைவன் மாலி ஆல்திஜார்கிளர்ந்தெழுந்து இரேய்ச்சூர்,பங்காப்பூர் முற்றுகைகளை உடைத்தெறிந்தான். இதன்பின் இரேய்ச்சூர் அருகே நடைபெற்ற கடும் போரின் மூன்று தாக்குதல்களில் முதல் தாக்குதல் விசயநகரத்தின் பக்கமே வெற்றிதந்தது. ஆனால் இரண்டாவது மூன்றுவது தாக்குதல்களில் பாமினிப்படைகளின் பக்கமே வெற்றி சாய்ந்தது. பேரரசன் தேவராயனின் மூத்த புதல்வனான மல்லிகார்சுனன் போரில் காயமுற்றதுடன் எதிரிகளால் சிறைபிடிக்கப்பட்டான். போரில் பாமினிப்படையின் பக்கமும் இரண்டு தலைவர்கள் சிறைப்பட்டனர். ஆயினும் பாமினிப் படைகள் வெற்றியடைந்ததே விசயநகரப் படைகளையும் மக்களையும் சுழன்று சுழன்று தாக்கி, இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்டவர்களைப் படுகொலைக்காளாக்கின.

தேவராயன் பாமினிப் பேரரசுக்குப் பணிந்து போர் தொடங்குமுன் கேட்ட மிகுதித் திறைப்பணத்தையே கொடுக்க வேண்டியதாயிற்று.

இரண்டாம் தேவராயன் படைத்துறைச் சீரமைப்பு

இரண்டாம் தேவராயன் இஸ்லாமியரையும் பேரளவில் படை வீரராகச் சேர்த்துக்கொண்டான். படையில் சேரும் வீரர் மன்னருக்குக் கடமை யுறுதிமொழி எடுக்கும் சமயம் தத்தம் திருநூலையே பயன்படுத்த முடியுமாதலால் இந்த இஸ்லாமிய வீரர் உறுதிமொழிக்காகப் படைத்துறை மனையில் நிலையாகவே 'குரான்' ஏட்டை வைப்பதற்கு ஏற்பாடு செய்தான்.

தமிழர் பண்பார்ந்த நோக்குப்படியும் தற்காலநாகரிகப் பண்பின் நோக்குப்படியும் சமய வேறுபாடு நோக்காத இந்தச் செயல் பாராட்டக் கூடியதேயாகும். ஆயினும் சங்க காலத்தி லும் இடைக்காலத்திலும் சோழப் பெரும் பேரரசுக் காலம் வரையிலும் தமிழகததிலிருந்த சமரசப்பண்பு அந் நாளில் தென்னகப் பொது வாழ்வில் சீர்குலைந்திருந்தது. ஆகவே தேவராயனின் சீரமைப்பு காலங் கடந்த நல்ல உயரிய செய லாயினும், திருடர் ஊருக்குத் திருடாமை குற்றமாய் விடுதல் போல, ஒரு குறைபாடாகவே பின்னுளில் செயற்பட நேர்ந்தது.

முஸ்லிம் வீரரும் படைத்தலைவரும் முஸ்லிம் அரசர் பக்க மும் அதுவல்லாத வீரரும் தலைவரும அதுவல்லாத பக்கமும் மாறுக் கடமைப் பகை செய்யும் போக்கை 16 முதல் 18-ம் நூற்றுண்டு வரை மிகுதியாகக் காண்கிறோம். இன்றுகூட வட திசைச சிநது கங்கை வெளியின் தேசியத்தின் போக்கு இது வாகவே இருந்து வருகிறது. உலகறியச் சமயஞ்சாரா அரசி யல் இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் உள்ளமறியச் சமயஞ் சார்நத அரசியலாகவே அமைகின்றது.

பெருந்தன்மையான செயல் செய்து அழிந்தவர் அந் நாளில் முஸ்லிமல்லாத பேரரசர் மட்டுமே என்றும் கூற முடியாது. தென்னக இஸ்லாமிய அரசர் எல்லோருமே— பீஜப்பூர் கோலகொண்டா மன்னர் கால முதல் ஹைதர், திபபு வரை இத்தேசியப் பண்பைப் பின்பற்றியே கறைப் பட்ட ஒரு தேசிய வாழ்விற் கேடுற்றனர்.

தென்னுட்டு அரசியல் வாழ்வு மன்னரின் தேசியப் போக் குக்குப் பிற்பட்ட முதிராத் தேசியமாகவும் சமயப்பூசலின் கறைபட்ட தேசியமாகவுமே இருந்ததென்பதை இது காட்டு

கிறது. 'தவமும் தவமுடையார்க்கேயாகும்' என்றபழமொழிக்கிணங்க, 'பண்பும் பண்புடைய கால இடச் சூழலமைந்தே பண்பார்ந்த வெற்றி தரும்' என்னலாம்.

விசயநகரப் பேரரசர் வண்மை :

விசய நகரப் பேரரசர் காலத்தில் தெலுங்கிலக்கியம் தழைத்தது. சிறந்த கவிஞர் அவைப் புலவராய் இருந்தனர். இரண்டாம் தேவராயன் காலத்தில் அவைப் புலவரை விஞ்சிப் புகழ் நாட்டிய கவிஞர் சிரீநாதரை அரசன் 'தங்காக்கள்' அதாவது பொன் காசுகளால் திருமுழுக் காட்டினன் என்று அறிகிறோம்,

கலிங்கப் பேரரசின் தொடர்ந்த வளர்ச்சி :

விசயநகரப் பேரரசன் இரண்டாம் தேவராயனுக்குப் பின் அவன் மூத்த புதல்வன் இரண்டாம் தேவராயன் ஓராண்டு ஆட்சிககுள் மாண்டான். அவனையடுத்து வந்த பேரரசன் மல்லிகார்ச்சுனன் (1447—1465) திறமையற்றவனும் சோம்பேறியாக இன்பவாழ்வில் அழுந்தியவனுமாக இருந்தான். இதன்பயனாக அடுத்து நாற்பது ஆண்டுக் காலத்துக்குச் சாளுவ நரசிம்மனால் அது மீட்டும் உயரும் வரை விசயநகரப் பேரரசின் மதிப்பே மிகத் தாழ்ந்து விட்டது.

தென்னகத்தின் அரசியல் மையம் இத்தறுவாயில் சில காலம் இரேய்ச்சூர் மண்டலத்திலிருந்துவிலகிக் கிழக்குக் கரையில் வட பகுதியாகிய ஆந்திரப் பகுதிக்கு மாறிற்று. இங்கே பாமினிப் பேரரசையும் புதிதாகத் தழைத்துவந்த ஒரிசாவின் கஜபதிப் பேரரசையும் தவிர மற்ற அண்டை அயல் அரசுகள் யாவும் வலிகையற்றனவாகவே இருந்தன. இந்தச் சூழ்நிலையை இருவரும் பயன்படுத்திக் கொள்ள விரும்பினர்—ஆனால்இச்சமயம் அத்துணிவு கஜபதிப் பேரரசன் கபிலேசுவரனுக்கு மட்டுமே இருந்தது.

இராச கொண்டாவிலிருந்து கபிலேசுவர கஜபதியால் துரத்தப்பட்ட வேலமமரபினர் கர்னூல் மாவட்டத்திலுள்ள வேலுகோட்டில்புதிய தாயகம் அமைத்துக்கொண்டிருந்தனர்.

கபிலேசுவர கஜபதி போரைத் தொடர்ந்து நடத்தி 1454க்குள் இராசமகேநதிரவரம்,கொண்ட வீட்டு ஆட்சிப் பகுதிகள் அத்தனையும் கைப்பற்றினன். அத்துடன் அமையாமல் அவன் தன் வெற்றிகளைக் கர்நூல் வரைக்கும் சிரீசைலம் வரைக்கும் கொண்டு சென்றான். பின் அவன் தெற்குக் கிழக்காகத் திரும்பி 1463-க்குள் நெல்லூர்க்கருகிலுள்ள உதயகிரி, காஞ்சி

புரம், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களைத் தாக்கிக் கொள்ளையிட்டான்.

தமிழக வெற்றிகள் நிலைக்கவில்லையானாலும் தெலுங்கு நாடு முழுவதும் உள்ளடக்கிய கஜபதியின் வெற்றிகள் அவன் பேரரசின் பகுதியாக அமைந்து விட்டன.

கந்தார்ப் போர் : *(1461—1463)*

பாமினிப் பேரரசன் இரண்டாம் அலாவுதீனுக்குப்பின் அவன் மகன் ஜாலிம் (அதாவது கொடியோன்) ஹுமாயூனும் (1458—1461) அவனுக்குப் பின் அவன் புதல்வர் நிஜாம்ஷாவும் (1461--1463) மூன்றும் முகமது லஷ்கரியும் (1463--1482) ஆண்டனர்.

ஹுமாயூன் காலத்தில் அயலார்கட்சி ஆதரவு பெற்றது. பீசப்பூர் மாகாணத்தலைவனும் உள் நாட்டமைச்சனுமான மகமத் கவான் அதன் தலைவனாக விளங்கினான். நாட்டுக கட்சியின் இரு கிளர்ச்சிகள் ஹுமாயூனால் குருதிக் கொடுமையுடன் அடக்கப்பட்டன.

நிஜாம்ஷா, தவிசேறும் சமயத்திலே 8 வயதும், இறக்கும் போது 10 வயதுமே உடையவன். திறமைமிக்க மாதரசியாகிய அவன் தாயே குவாஜா ஜஹான் என்ற மாலிக்ஷா துர்க், முகமதுகவான் ஆகியோர் உதவியுடன் ஆண்டு வந்தாள். ஓரிசாவும் தெலுங்காணமும் இச்சமயம் பாமினி மீது படையெடுத்து முறிவு பெற்றன. ஆனால் மாளவ அரசன் பாமினி மீது படையெடுத்துக் கந்தார்ப் போரில் பாமினிப் படைகளை முறியடித்தான். ஆனால் குஜராத் அரசன் முகமது பர்கஸாவின் உதவி கோரப்பட்டதே மாளவப்படைகள் வெளியேறின.

மேற்குக் கரைக் கொள்ளைக்காரர் தொல்லை *(1463—82)*

மூன்றும் முகமது கொங்கானக் கரை மீது படையெடுத்தான். மக்கா நகருக்குப் புண்ணிய யாத்திரைக்காகச் செல்லும் முஸ்லிம்களை இக்கரையோரத்திலிருந்து செல்லும் கடற் கொள்ளைக்காரர்கள் கொள்ளையடித்து வந்தனர். இதனைத் தடுக்கவே முகமது இம் முயற்சியில் ஈடுபட்டான். பல நடவடிக்கைகளின் பின் விசயநகரத்தின் கீழ்திசைத் துறைமுக நகரமான கோவாவை அவன் கைப்பற்றினான்.

**கஜபதி அரசர் சாய்வு : பாமினியின் சரிவு**
**விசய நகர மறுமலர்ச்சி**

விசயநகரப் பேரரசன் மல்லிகார்ச்சுனனுக்குப் பின் அவன் சிற்றப்பன் புதல்வனான இரண்டாம் விருபாட்சன் (1465—1485) தவிசேறினான். முந்திய பேரரசனைவிட அவன் திறமையிலும் குறைந்தவன். அவனைவிடப் பன்மடங்கு சோம்பல், இன்ப வாழ்வில் ஆழ்ந்தவன். அவன் பெயரளவிலேயே பேரரசனாயிருந்தான். பேரரசு முற்றிலும் ஒற்றுமை குலைந்தே யிருந்தது. ஆயினும் ஆற்றல் மிக்க மாகாணத் தலைவர்களே தத்தம் தனியாற்றல் வளர்த்துப் பேரரசு சரியாமல் காத்தனர். இவர்களுள் பேரரசின் நடு ஆட்சியையும் கிழக்கு மாகாணமாகிய சந்திரகிரி இராச்சியத்தையும் ஆட்சி செய்த சாளுவநரசிம்மனும்; திருச்சிராப்பள்ளி, தஞ்சை, புதுக்கோட்டைப் பகுதிகளை ஆண்டுவந்த சாளுவகோப திம்மண்ணனுமே முக்கியமானவர்கள். சாளுவநரசிம்மனிடம் துளுவ மரபைச் சேர்ந்த ஈசுவரன் என்ற ஒரு திறமையான படைத் தலைவன் துணைவலுவாய் இருந்தான். பின்னாளைய துளுவ மரபின் மூல முதல்வன் இவனே.

இரண்டாம் விருபாட்கன் ஆட்சி கிட்டத்தட்டச் சாளுவ நரசிம்மன் ஆட்சியாகவேயிருந்தது. விருபாட்சன் ஆட்சிக்குப் பின் அவனே ஆட்சியைக் கைப்பற்றி விசயநகரத்தின் இரண்டாம் மரபான சாளுவமரபின் முதல்வனானான். சங்கம மரபு பெரிதும் விருபாட்சனுடனே முடிவுற்றது.

கபிலேசுவர கஜபதிக்குப் பின் ஒட்டப் பேரரசு என்று அழைக்கப்பட்ட ஒரிசா அல்லது கலிங்கப் பேரரசு சீரழிவுற்றது. ஹம்பீர், புருஷோத்தமன் என்ற இருவரிடையே அரசுரிமைப் போர் எழுந்தது. கீழ்திசையில் சந்திரகிரி மாகாண ஆட்சியாளனாயிருந்து நடு அரசியலையே கைப்பற்றியிருந்த சாளுவ நரசிம்மன் தொடக்கத்தில் இதனால் பாதிக்கப்பட்டான். ஏனென்றால் பாமினியின் சார்பாக மூன்றாம் முகமதுவின் படைத்தலைவன் மாலிக் ஹசன் ஹம்பீருக்கு உதவிசெய்து அவனையே கஜபதி அரசில் தவிசேற்றினான். ஆனால் விரைவில் சாளுவ நரசிம்மனும் அவ்வரசுரிமைப் போரைப் பயன்படுத்திக்கொண்டு, புருஷோத்தமனுக்கு ஆதரவளிக்கத் தொடங்கினான். இந்தச் சாக்கிலேயே அவன் எளிதாக உதயகிரிக் கோட்டையைப் பிடித்துக்கொண்டான். இதே சமயத்தில் தமிழகத்திலே அவனுக்கெதிராகக் கிளர்ச்சி எழுந்தது. அப்போது கூடத் தளராமல் அதை விரைவில் சென்று அடக்கி விட்டு மீண்டு வந்து கோதாவரி வரையுள்ள கீழ் கரைப் பகுதி முழுவதையும்வென்றடக்கினான்.1471-ல்கொண்ட வீடும் மசூ

விப் பட்டணமும் அவன் கைப்பட்டன. அதன் பின் அவன் உதவியால் புருஷோத்தமன் வெற்றிபெற்றான். ஆனால் அரசியல் திறமையுடைய சாளுவ நரசிம்மன் எதிரி ஹம்பீரனை அழித்து விடவில்லை. புருஷோத்தமனுடன் அவனை இணங்குவித்து அவனுக்குக் கும்மிடியை வழங்கிப் புருஷோத்தமன் கீழிருந்து ஆண்டு வரச் செய்தான்.

மேல் திசையில் விசய நகரப் பேரரசன் விருபாட்சனின் திறமைக் கேட்டால், கோவா, செளல், தபோல்முதலிய கரையோரத் துறைமுகங்கள் பாமினிப் படைகளின்கைவசமாயின. விருபாட்சன் பெல்காம், பங்காப்பூர் ஆண்ட அரசனைக் கோவாவைப் பிடிக்கும்படி தூண்டினான். ஆனால் இதனால் ஏற்பட்ட பலன் அவன் எதிர்பாராத ஒன்றாயிற்று. மூன்றாம் மகமது தன் அமைச்சன் முகமது கவான் உதவியுடன் அவ்வரசனை வென்று பங்காப்பூரை அவனிடமிருந்து பறித்துப் பாமினிப் பேரரசுடன் சேர்த்துக் கொண்டான்.

1476-ல் கொண்ட வீடு கிளர்ந்தெழுந்து தனியாட்சியமைத்துக்கொண்டது. கும்மிடியை ஆண்ட ஹம்பீரின் புதல்வனையே அது 'தட்சிண கபிலேசுவர ஹம்பீர மகா பாத்திரன்' என்ற பட்டத்துடன் அரசனாக ஏற்றது. இவ்வாறு கலிங்கக் கஜபதிப் பேரரசு ஒரு தலைமுறைக்குள் மீண்டும் குறுகிற்று.

விசய நகரத்தின் கீழ்த்திசை அரசியல் செல்வாக்கைக் குறைக்கும் முறையில் மூன்றாம் முகமது அப்பேரரசின் கீழ் மாகாணங்கள் வழியாகத் தெற்கே காஞ்சிபுரம் வரை சென்று பெரும்பொருள் கொள்ளையிட்டான். ஆனால் அக் கொள்ளைப் பொருளுடன் திரும்பிவரும் வழியில் சாளுவ நரசிம்மன் அக் கொள்ளைப் பொருளையெல்லாம் அவனிடமிருந்து தட்டிப் பறித்துக் கொண்டான்.

மகமது கவான் பாமினிப் பேரரசின் பேரெல்லையைப் பல மாகாணங்களாகப் பிரித்து நல்லாட்சிக்கான ஏற்பாடுகளையெல்லாம் செய்துவந்தான். ஆனால் அவனுக்கும் அவன் எதிரியாகிய மாலிக் ஹசனுக்கும் ஓயாமல் போட்டிப் பூசல்கள் ஏற்பட்டன. அரசனும் அவன் தாயும் கவானையே ஆதரித்ததனால் மாலிக்ஹசன் அரசனைக் கொல்லும் சதியில் ஈடுபட்டான். இதில் அவன் பிடிபட்டு அயல் கட்சித் தலைவனான கவானால் தூக்கிடப்பட்டான்.

பாமினிப் பேரரசன் மூன்றாம் முகமதுவுக்குப் பின் மாமூது (1482-1518), அவன் நான்கு புதல்வர்கள் (1518-1527) ஆகியோர் ஆட்சியுடன் பாமினிப் பேரரசு அழிந்தது. அகமதுநகராண்ட மாலிக் அகமது நிஜாம் உல்முல்கும்,

பீஜப்பூர் ஆட்சியாளனுன யூசுப் அடில்கானும் பேரார் ஆட்சித் தலைவனுன இமத்உல்முல்கும் 1490-லேயே தன்னுண்மை பெற்றுத் தனியாட்சி தொடங்கினர். கோல கொண்டா ஆண்ட குதுப் உல்முல்க் 1512-லும் பீடார் ஆண்ட பாரீத் உல்முல்க் 1527-லும் தன்னுட்சி நிறுவினர். இவ்வாறு 16-ம் நூற்ருண்டின் தொடக்கத்தில் பாமினிப் பேரரசு ஐந்து தனியரசுகளாகச் சிதறிற்று. ஆயினும் அடுத்தஇரண்டு நூற்ருண்டுகளிலும் இந்த ஐந்து அரசுகளும், சிறப்பாக பீஜப்பூர், கோல் கொண்டா, அகமது நகர் என்ற மூன்று அரசுகளும் வல்லரசுகளாகவே விளங்கின.

பாமினி வீழ்ச்சியடைந்த அதே சமயத்தில் விசய நகரப் பேரரசு தலை தூக்கிப் புதுவாழ்வு நோக்கி வளரத் தொடங்கிற்று.

விசய நகரப் பேரரசனுகப் பெயரளவிலேயே விளங்கிய இரண்டாம் விருபாட்சன் ஆட்சியிறுதியுடன், அப்பேரரசின் முதல் ஆட்சி மரபான சங்கம மரபு முடிவுக்கு வந்தது. சாளுவ நரசிம்மனே (1486-1491) புதிய சாளுவமரபின்முதற் பேரரசனுனன். அவனுக்குப் பேருதவியாயிருந்த துணைவன் துளுவ மரபினனுன ஈசுவரனே. அவன் மகன் நரச நாயகனே அவனது ஒப்பற்ற படைத் தலைவனுனன்.

சாளுவ நரசிம்மன் தன் ஆட்சியிறுதியில் தன் மக்கள் திருமலை என்ற திம்மன், தம்மராயன் என்ற இம்மடி நரசிம்மன் ஆகியவர்களை நரச நாயகன் பாதுகாப்பிலேயே விட்டுச் சென்ருன். ஆனல் திருமலை 1491-லேயே கொலை யுண்டான். இம்மடி நரசிம்மன் 1491 முதல் 1505 வரை பெயரளவில் வாழ்ந்தாலும், சாளுவ நரசிம்மனுடனேயே சாளுவ மரபை ஒழித்து நரச நாயகன் பேரரசின் மூன்ரும் மரபாகிய துளுவ மரபின் முதல்வனுனன். சாளுவ மரபில் மறுமலர்ச்சியுற்ற விசய நகரப் பேரரசு உச்சநிலை எய்தியது இத்துளுவ மரபுக் காலத்திலேயே யாகும்.

### பேரரசைக் கட்டமைத்த பெருஞ்சிற்பிகள்—சாளுவ நரசிம்மனும்—நரச நாயகனும்

தென் பேரரசான விசய நகரப் பேரரசைத் தென்னகத்தின் புகழ் சிறந்த முதற் பேரரசாக்கிய மாவீரர் சாளுவ நரசிம்மனும் நரச நாயகனுமே.

இரண்டாம் விருபாட்சன் ஆட்சியிலே பாமினிப் பேரரசைப் போலவே சரிய இருந்த விசய நகரப் பேரரசை ஓரளவு தடுத்து நிறுத்திய பெருமை தமிழக ஆட்சியாளன் சாளுவ

கோப திம்மனுக்கும், சந்திரகிரி ஆட்சியாளனா யிருந்த சாளுவ நரசிம்மனுக்குமே உரியது. ஆனால் பேரரசின் பொறுப் பேற்ற பின் சரிவின் வேகமும் பெரிதாயிற்று. சாளுவ நரசிம் மன் பொறுப்பும் பெரிதாயிற்று.

முதலாவதாக, மேல்திசையில் கோவா, தபோல் ஆகிய துறைமுகங்களை விசயநகரம் இழந்தது. அதன் உயிர் நிலையையே பாதித்தது. இவற்றின் வாணிக வளம் பேரரசின் செல்வத்துக்கு மட்டும் காரணமாக இல்லை. அவற்றின்மூலம் இறக்குமதியாகும் குதிரைகள் அதன் போர் வலிமைக்கு இன்றி யமையாதனவா யிருந்தன. ஆனால் சாளுவ நரசிம்மன் மேல் கரையிலேயே சற்றுத் தெற்கிலுள்ள ஹோனாவர், பட்டகுலம் (பட்கல்), பாகனூர், மங்களூர் முதலிய துறைமுகங்களிலிருந்து புதிய குதிரை வாணிக நெறிகளை உண்டு பண்ணினான். பேர ரசின் உயிர் மூச்சு இவற்றால் மீண்டும் ஓடத் தொடங்கிற்று.

பேரரசின் கீழ்திசையிலும் நடுப்பகுதி யடுத்தும் பல பெருந் தலைவர்கள் சாளுவன் வன் பிடியை எதிர்த்துக் கிளர்ச்சி செய்யத் தொடங்கினர். இவர்களில் மைசூர் அடுத்த உம்மத்தூர்ப் பாளையக்காரரும், கடப்பையிலுள்ள பேரணிப் பாட்டுச் சம்பேதரும் முனைப்பானவர்கள். இவர்களைச் சாளுவ நரசிம்மன் ஓரளவு சாமளிக்க முடிந்ததானாலும், வட கிழக்கில் மீண்டும் வளர்ச்சி பெற்றுவிட்ட கஜபதி மரபுக் குரிய புருஷோத்தமன் பாமினிப் பேரரசின் வீழ்ச்சியைப் பயன்படுத்திக் கிழக்குக்கரை முழுவதும் மீண்டும் வென்றான். நெல்லூரை அடுத்து குண்டலகம்மா ஆற்றங்கரை வரையும் அவன்கைக்கொண்டதுடன் உதயகிரிக்கோட்டையையுங்கைப் பற்றினான். பேரரசன் நரசிம்மனே புருஷோத்தமன் கை வச மாகிச் சிறைப்பட நேர்ந்தது. உதயகிரியையும் கீழ்திசை வெற்றிகளையும் எதிரிக்கு விட்டுவிட ஒப்புக்கொண்ட பின்பே அவன் விடுதலை பெற முடிந்தது.

இரேய்ச்சூரையும் உதயகிரியையும் மீட்டும் கைப்பற்று வதே சாளுவ நரசிம்மனின் தீராக்கடைசி ஆர்வமாய் இருந் தது. தன்னால் தன் வாழ்வில் செய்து முடிக்க முடியாத இச் செயலை நிறைவேற்றும்படி அவன் தன் வீரத்துணைவன் நரச நாயகனிடம் சாப் படுக்கையில் வேண்டிக்கொண்டான்.

நரசநாயகன் (1491—1503) ஆட்சியின் தொடக்கத்தி லேயே எளிதில் இரேய்ச்சூரையும் முட்கலையும் கைப்பற்றும் வாய்ப்பும் நம்பிக்கையும் எழுந்தன. அச்சமயம் பாமினி அரசுகளில் மைய அரசில் பெயரளவிலே பேரரசனாயிருந்த மாமூதின் அமைச்சனாயிருந்தவன் பீடார் அரசின் முதல்வனான

காசிம் பரீத் ஆவன். அவன் வலிமை மிக்க பிஜப்பூர்த்தலை வனும் பிஜப்பூர் அரசின் முதல்வனுமான யூசுப் ஆதில்ஷாவை எதிர்த்துப் போராடி வந்தான். இப் போரில் தன்னுடன் சேர்வதா யிருந்தால் இரேய்ச்சூர், முட்கல் கோட்டைகளை எடுத்துக் கொள்ளலாம் என்று காசிம்பரீது நரச நாயகனுக்கு ஆவலூட்டினான்.

நரசநாயகன் இப்போது பிஜப்பூரைச் சார்ந்த பகுதியான இரேய்ச்சூர் மண்டலத்தைத் தாக்கி அழித்து, இரேய்ச்சூர் முட்கல் கோட்டைகளைப் பிடித்தான். ஆதில்ஷா அவற்றைத் திரும்பவும் கைப்பற்ற முடியாமல் மாண்ட்லிக் கோட்டையில் பதுங்கினான். ஆனால் பணிந்து விடுவதாகப் பாவித்து நரச நாயகனையும் எழுபதுக்கு மேற்பட்ட தோழப் பெருமக்களையும் அழைத்துச் சூழ்ச்சியால் கொன்றொழித்தான்.

இச் செயலால் இரண்டாண்டுகள் மீட்டும் பேரரசுக் குழப்பத்தில் ஆழ்ந்தது. 1505-லேயே நரசநாயகனின் மூத்த புதல்வன் வீர நரசிம்மன் அல்லது இம்மடி நரசிம்மன் தவி சேற முடிந்தது.

### நரசநாயகனின் தமிழகத் திருஎழுச்சி: 1496

தன் குறுகிய ஆட்சியிடையே கூட நரசநாயகனுக்குத் தமிழகக் காரியங்களைக் கவனிக்க நேரமிருந்தது. ஏறத்தாழ 1496-ம் ஆண்டில் திருச்சி தஞ்சை ஆண்ட தலைவன் கோனேடி ராசன் கொடுங்கோன்மை குறித்துச் சீரங்கத்து வைணவர் கள் குறைகிளர்ந்தனர். அவர்கள் குறை தீர்ந்தபின் நரசநாய கன் குமரி முனை வரை சென்று பேரரசின் ஆணையை நிலை நாட்டினான். சேர சோழர்களுக்கிடையே இச் சமயம் ஏற் பட்ட பூசலைத் தணித்தான்.

பாண்டியன் மானபூஷனை நரசநாயகன் இச்சமயத்தில் போர் செய்து அடக்க வேண்டி வந்தது என்று அறிகிறோம். பராக்கிரம பாண்டியனுக்குப் பின் பாண்டியர் வளர்ந்து வந் தனர் என்பதையும் பேரரசின் மரபு மாறுதல்களால் ஏற் பட்ட சூழலைப் பயன்படுத்தித் தன்னாட்சிக்குக் கிளர்ந்து வந்த னர் என்பதையும் இது காட்டுகிறது. நரசநாயகன் அடக்கிய பின்னும் தமிழகததிலும் கேரளத்திலும் சிற்றரசரும் மாகா ணத்தலைவரும் பின்னாட்களிலும் அடிக்கடி தொல்லை விளை வித்தே வரலாயினர். சீரங்கப்பட்டணப் பகுதியில் ஹென்னை மரபுத் தலைவனான நஞ்சராசன் நரசன் ஆட்சித் தொடக்கத்தி லேயே கிளர்ச்சியிலீடுபட்டிருந்தான். நரசநாயகன் காவிரி மீது பாலம் அமைத்துச் சென்று சீரங்கபட்டிணத்தைத் தாக்கி அவனை அடிமைப்படுத்தினான்.

மேல் கரைக் கரையோரமாகக் கோகர்ணம் வழியே நரச நாயகன் 1497-ல் திரும்பவும் பேரரசின் தலைநகர் சென்றான்.

புருஷோத்தம கஜபதி 1496-ல் இறந்தான். அதன்பின் பிரதாபருத்திரன் ஆட்சிக்குவந்து, தென்கிழக்குத் தென்னகப் பகுதியைக் கைப்பற்ற மீண்டும் முயற்சிகள் செய்தான். ஆனால் இவை இயலா முயற்சிகளாயின.

பெயரளவில் கடைசிச் சாளுவ மரபினனான இம்மடி நரசிம்மன் 1505-ல் இறந்த பின் நரசநாயகனின் மூத்த மகன் வீர நரசிம்மன் அல்லது இம்மடி நரசிம்மன் (1505—1509) பேரரசனானான்.

விசயநகரப் பேரரசின் பொன்னூழி 1500—1565:

விசயநகரப் பேரரசின் பொன்னூழி அதன் மூன்றும் மரபின் ஆட்சி காலமே என்னலாம். அது வீர நரசிம்மன் அல்லது இம்மடி நரசிம்மனுக்குப்பின் வந்த கிருஷ்ணதேவராயன் (1509—1529) ஆட்சியிலேயே உச்சநிலை எய்தி, அவனுக்குப் பின் அச்சுததேவராயன் (1530—1542) ஆட்சியிலும், அதன் பின் பெயரளவில் துளுவமரபின் கடைசி அரசரான முதலாம் வேங்கடன் (1542), சதாசிவன் (1542—1572) ஆகியோர் பெயரால் ஆட்சி செய்த அரவீட்டு மரபு முதல்வன் இராமராயன் (1542—1566) காலத்திலும் வீழ்ச்சியுறாதிருந்தது.

இப் பொன்னூழியின் பெருஞ் சிற்பிகள் சாளுவ நரசிம்மனும் துளுவநரசநாயகனுமேயானாலும், அதைத் தொடங்கி வைத்த பெருமை நரசநாயகனின் முதல் புதல்வன் இம்மடி நரசிம்மனுடையதே யாகும். அடுத்த இரு பேரரசர்களும் அவன் உடன் பிறந்தார்களே யாவர்.

அரவீடு மரபின் முதல்வன் இராமராயன் உயர்பதவி பெற்றுத் தன்பெருஞ்சேவையைத்தொடங்கியதுஇம்மடிநரசன் காலத்திலேயே. நயவஞ்சகனான அடோனிக்கோட்டைத் தலைவன் உதவியுடன் பீஜப்பூர் சுல்தான் யூசுப் ஆதில் ஷா (1490—1510) துங்கபத்திரை கடந்து கர்நூலைக் கைப்பற்ற முயன்றபோது, இராமராயனும் அவன் மகன் திம்மனும் ஆதில்ஷாவை முறியடித்துத் துரத்தியதுடன், அடோனியின் நயவஞ்சகத் தலைவனையும் அழித்தனர். இச் செயல்களால் மகிழ்வுற்ற பேரரசன் இராமராயனுக்கே அடோனி, கர்நூல் கோட்டைகளை அளித்தான்.

இம்மடி நரசன் காலத்திலேயே போர்ச்சுகீசியர் கண்ணனூர்ப் பக்கமிருந்து கடற்கரையோரமாகத் தம் வாணிக, சமய, அரசியல் ஆட்சியைப் பரப்பி வந்தனர். இம்மடி நரசன்

அவர்களுடன் நட்பாயிருந்ததுடன் தன்படைகளை மேலைமுறையில் பயிற்றுவிப்பதற்குரிய உதவிநாடி அவர்களிடம் தூதும் அனுப்பினான். ஆயினும் போர்ச்சுக்கீசிய ஆட்சித் தலைவனை அல்மேடா பட்கலில் ஒரு கோட்டை கட்ட இணக்கம் கோரிய போது, பேரரசன் இணக்கமும் அளிக்கவில்லை, மறுக்கவும் இல்லை.

துளுவ மரபுப் பேரரசர் எல்லாரிடமுமே நாம் இந்தத் தேசிய எச்சரிக்கை நிலையைக் காண்கிறோம். தமிழகக் கடல் மரபுத் தொடர்பையும் மேல்கரைக் கடல் மரபுத் தொடர்பையும் மட்டும் அவர்கள் வளர்த்திருந்தால், அவ்ர்கள் வடதிசை யரசுகளையும் வென்று, கீழ்திசை வாழ்வையே மாற்றியமைத்திருக்கக்கூடும் என்பதில் ஐயமில்லை.

படைத்துறையில் மட்டுமன்றி, பெருமக்களிடையேயும் பொதுமக்களிடையேயும் வீரமரபு வளர்ப்பதில் பேரரசன் காட்டிய அக்கரை சிறிதன்று. அவர்களிடையே மற்போர் அரங்கப் போட்டிகளை வளர்த்தும், அதில் வெற்றியடைந்தவர்களுக்கு அவர்கள் அவாவும் அழகியரை மணக்கும் உரிமையளித்தும் அவன் இம்மரபை வளர்த்தான்.

அவன் ஆட்சி இறுதிப்பகுதியில் உம்மத்தூர் ஹென்னமரபுத் தலைவன் மீண்டும் சீரங்கப்பட்டிணத்தில் கிளர்ச்சி தொடங்கினான். இதன் பயனாக இம்மடி நரசிம்மன் நடத்திய படையெடுப்பில் துளுநாடு நேரடி யாட்சியால் வலுப்படுத்தப் பட்டது. ஆனால் 3 மாதங்களுக்குப் பின்னும் சீரங்கப் பட்டண முற்றுகை முற்றுப்பெறவில்லை. பேரரசனும் அது முற்றுப்பெறு நிலையிலேயே புகழ் வாழ்வுற்றான்.

தீவானிப் போர் 1509:

பாமினிப் பேரரசின் இறுதிக் காலத்திலே அப் பேரரசின் மாகாணத் தலைவர்கள் பேரரசப் பரப்பை ஐந்து தனியாட்சிகளாகப் பிரித்துக் கொண்டனர். இவர்களில் பீஜப்பூர் அதில் ஷா மரபினர் ஆட்சியிலும் (1490—1690), கோல்கொண்டா குத்ப்ஷாஹி மரபினர் ஆட்சியிலும் (1512—1672), அகமது நகர் நிஜாம் ஷாஹி மரபினர் ஆட்சியிலும் (1490—1595), பீடர் பாரீத்ஷாஹி மரபினர் ஆட்சியிலும் (1492—1609), பேரார் இமத் ஷாஹி மரபினர் ஆட்சியிலும் (1485—1568) வலிமை வாய்ந்த அரசுகளாகவே நிலவி வந்தன.

இஸ்லாமியப் பேரரசை வீழ்த்திய இம்மன்னர்கள் எல்லோரும் ஒருங்கு சேர்ந்து ஒரு புதுவகையான இஸ்லாமிய ஒற்றுமையை 1501-ல் ஏற்படுத்தியிருந்தனர். ஆண்டுதோறும்

ஒருநாள் ஐந்தரசு மன்னரும் பெருமக்களும் படைவீரருடன் தலைமையிடமாகிய பீடாரில் கூடி, அத்திருநாளையே இஸ்லாமிய தெய்வீகத் திருப்போர் (ஜிஹாத்) நாளாக்கினர். இந்துப் பேரரசாகிய விசயநகரத்தைத் தாக்கி அந்த ஒரு திருநாளிலாவது ஆண்டுதோறும் இஸ்லாம் வளர்க்க அவர்கள் திட்டமிட்டனர்.

பெரும்பாலும் விசய நகரப் பேரரசர் மட்டுமன்றி மற்ற 'இந்து' அரசர் பேரரசர் பலரின் மரபுப்பண்பு இத்தகைய இஸ்லாமியப் படையெடுப்பையும் மராட்டியப் படையெடுப்பையும் பணிந்து பணம் கொடுத்துச் சமாளிப்பதென்பதே. ஆகவே இவ் ஏற்பாடு உண்மையில் கொலை, கொள்ளைக்கும் பணம் பறிப்புக்கும் உரிய ஓர் அரசியல் கூட்டு ஏற்பாடாகவே அமைந்தது.

பேரரசன் கிருஷ்ணதேவராயன் ஆற்றிய தீவானிப்போர் இஸ்லாமிய அரசுகளின் இந்தக் கோழைத்தனமான திட்டத்துக்கு ஒரு சவுக்கடி கொடுத்தது.

'தீவானி' என்ற இடம் எதுவென்று திட்டவட்டமாகத் தெரியவரவில்லை. ஆனால் அது பீடாரிலிருந்து இரேய்ச்சூர் வரும் வழியிலேயே இருந்திருக்க வேண்டும். ஏனெனில் தன் எல்லையணுகுமுன்பே கிருஷ்ணதேவராயன் எதிரிகளை அவ்விடத்தில் சென்று தடுத்ததாக அறிகிறோம். கிருஷ்ணதேவராயன் போர் முறை கண்டு இந்திய மாநிலத்திலேயே 'இஸ்லாம்' மரபு முதல் தடவையாகத் திகைப்புற்றது. போர் தொடுக்காமலே வெருண்டோடுதல், ஒரு தாக்குதலுக்குள் கலைந்தோடுதல் ஆகிய மரபுகளையே அது பெரும்பாலும் 'இந்து' என்ற பெயரால் அறிந்திருந்தது. வீரத்துடன் போர் புரிந்து மாளும் மரபை அது இராஜபுத்திரர்களிடம் கண்டிருந்தது. வீரமும் சூழ்ச்சியும் கலந்த புதுப்போர் முறையை அது மராட்டியரிடம் பார்த்திருந்தது. ஆனால் விசயநகரம் கண்ட புதுப் படைத் திறமையும் கிருஷ்ணதேவராயனின் மரபில் வந்த புதுப் படைத் தலைமைத் திறமையும் அவர்கள் வீம்புத் தருக்கை அடக்கிவிட்டன. பாதுகாப்பற்ற நாடுகளை, சூறையாடும் தம் உரிமைக்கு எதிர்ப்பு இந்த ஒரு பேரரசில் எழுந்துவிட்டது என்பது அவர்களுக்குப் புலப்பட்டது.

இது தமிழர் பழைய மரபே—ஆனால் பாண்டியப் பேரரசர் காலத்தின் இறுதியில் சரிந்துவிட்ட மரபு.

இப்போரில் புதிய அதிர்ச்சிக்கு ஆளாகிய இஸ்லாமியக் குழுவின் படைகளின் தாக்குதல் தளர்ந்தது—அழிக்கும்வெறி குழப்ப வெறியாயிற்று. ஐந்தரசர் படைகளுக்கும் தலைவனை

பீஜப்பூர் மன்னன் யூசுப் ஆதில்கானே படுகாயங்கள் பலவற்றுக்கும் ஆளாய்க் குதிரைமீதிருந்து வீழ்த்தப்பட்டான். அதன் நலிவிலிருந்து அவன் மீள நெடுநாளாயிற்று—அழிவுப் பெருவிழாவின் தலைவன் திரும்ப அந்த அழிவுத் திருநாள் திட்டத்தை எண்ணவே இல்லை! எளிய வெற்றியும் கொள்ளையும் நாடிவந்த அந்தப் பெருமரபின் பெருமக்கள் தலைவன் நிலை கண்டு 'போர்க் கம்பளத்தை மடித்தெடுத்துக்கொண்டு பீடாரிலேயே சென்று படுக்க' விரைந்தோடினர்!

கோயில் கொண்டாப் போர் 1509:

தீவானிப் போரில் தோற்றோடிய படைகளை, சிறப்பாக அவற்றின் தலைவன் யூசுப் ஆதில்கான் படைகளை, கிருஷ்ண தேவராயன் பின்பற்றித் துரத்தினான். கோயில்கொண்டா அருகில் யூசுப் எதிர் தாக்குதல் போர்செய்து அதிலேயே மாண்டான். கிருஷ்ணதேவராயன் கோயில்கொண்டாவைக் கைப்பற்றித் தன் பேரரசில் சேர்த்த பின்னரே தலைநகரம் திரும்பினான்.

சோழப் பேரரசர் அரசியல் திட்ட மரபு:

தீவானிப்போரின்தொடக்கத்திலேயே போர்ச்சுகீசியஆட்சித் தலைவன் அல்புகர்க், இம்மடி நரசிம்மன் காலத்திலேயே கோரப்பட்ட பட்கல் கோட்டைகட்டும் உரிமையை மீண்டும் வற்புறுத்திக் கோரியதுடன், அதற்கு மாறாகப் போரில் விசயநகரத்தின் பக்கம் நின்று உதவுவதாகவும், குதிரைகளை எதிரிகளுக்கு விற்காது விசயநகரத்துக்கு மட்டுமே விற்பதாகவும் ஆவலூட்டினான். போர்ச்சுகீசியர் உதவியின் வலு அறிந்தும், குதிரைகளின் குத்தகையின் மதிப்பறிந்தும் அவ்வுதவியையோ அதற்கு மாற்றீடான கோட்டை உரிமையையோ கிருஷ்ண தேவராயன் மறுக்கவில்லை—அளிக்கவில்லை. ஆனால் பீஜப்பூரிடமிருந்து போர்ச்சுகீசியர் கோவாவைக் கைப்பற்றிய பின் 1510-ல் குதிரை வாணிகத் தனியுரிமை மட்டுமன்றி வாணிகத் தனியுரிமையும் முற்றிலும் பெற்ற பின் இவ்வுரிமை அளிக்கப்பட்டது.

படைத்துறை சார்ந்த தமிழ், மேலை நாட்டு மரபு:

வடதிசை நிலப் பண்ணையாட்சிமுறை யடிப்படையான அரசியல் சமுதாய நாகரிகம், பாளையக்காரர்முறைமூலம் விசய நகர ஆட்சியிலேயே பெருவளர்ச்சியுற்றது. ஆயினும் படைத்துறையில் நிலப்பண்ணை யாட்சியின் கந்தறுங்காலப் படை நடவடிக்கை முறையை ஒழித்து, சோழப் பெரும் பேரரசர் பாண்டியப் பேரரசர் காலத்திலிருந்த நிலவரப்

படைப் பயிற்சி முறையை மேனாட்டவரைப் பார்த்துத் துளுவ மரபுப் பேரரசர் இம்மடி நரசிம்மனும் கிருஷ்ணதேவராயனும் பின்பற்றிப் படைக்குப் பயிற்சியளித்திருந்தனர். வீரத்தில் அவர்களில் குறையாத அரவீட்டுமரபு முதல்வன் இராம ராயன் காலத்தில் இம் மரபு மீண்டும் வழக்கிழந்ததே விசய நகர வீழ்ச்சிக்கு வழிவகுத்தது.

தென் மைசூர் வெற்றி 1510—12:

தென் மைசூரில் உம்மத்தூர்த் தலைவனை முறியடிக் காமலே இம்மடி நரசிம்மன் மாள்வுற்றிருந்தான். வடதிசைப் போரில் இடை ஒய்வு ஏற்பட்டதே, கிருஷ்ணதேவராயன் தெற்கே திரும்பினான். உம்மத்தூர்த் தலைவன் கங்கராசன் இதற்குள் பெனுகொண்டாவையும் பெற்றுக் கைக்கொண் டிருந்தான். கிருஷ்ணதேவராயன் பெனுகொண்டாவையும் உம்மத்தூரையும் தலைநகராய் இருந்த சிவசமுத்திரத்தையும் வென்றான். கங்கராயன் தோற்றோடிக் காவிரியில் விழுந் திறந்தான்.

பழய தலைநகரத்தைத் தரை மட்டமாக்கி பின் சீரங்க பட்டணத்தைத் தலை நகரமாகக் கொண்ட புது மாகாணமாக இப் பகுதி வகுக்கப்பட்டது. சாளுவ கோவிந்தராயன் அதன் ஆட்சித் தலைவனாகவும், பங்களூரிலுள்ள குடித்தலைவன் கெம்ப கௌட அவன் உதவியாளனாகவும் அமர்த்தப்பட்டனர்.

கீழ்திசைக் கலிங்க வெற்றிகள்:
கிருட்டிணையாற்றுப் போர் I 1513—1516:

கஜபதி அரசனான பிரதாபருத்ரன் ஆட்சி இச் சமயம் நெல்லூர்வரைக்கும் சென்றிருந்தது. அவன் வெற்றி எல்லை காஞ்சி தாண்டித் தஞ்சை வரை சென்றிருந்தது. கிருட்டிண தேவராயன் முன் இழந்த கீழ்ப் பகுதியை மீட்க முனைந்து 1513-ல் உதயகிரிக் கோட்டையை முற்றுகையிட்டான். ஒன்றரையாண்டு முற்றுகைக்குப் பின், மலை வழியாகப் புதுப் பாதைகள் வகுத்து அதைக் கைக்கொண்டான். பண்டைத் தமிழ் அரசர் மரபு பின்பற்றி அவ்வெற்றிச் சின்னமாக உதய கிரிக் கோட்டையிலிருந்து ஒரு பாலகிருஷ்ணன் வடிவத்தைக் கொண்டுவந்து விசயநகரத்தில் பதிப்பித்தான்.

உதயகிரி முற்றுகையைக் குலைக்கச் செய்த முயற்சிகள் யாவும் தகர்ந்தன. அத்துடன் உதயகிரியிலிருந்து அவன் படைகளைத் துரத்திக்கொண்டே கிருஷ்ண தேவராயன் படைகள் கலிங்கப் பேரரசின் எல்லை முழுதும் வெற்றி ஊர் வலம் செல்வது போல் குதூகலத்துடன் சென்றன.

கஜபதிப் பேரரசின் தென்திசைப் பெருநகராக இப்போது கொண்ட வீடு விளங்கியிருந்தது. முதலில் விசயநகரப்படைத் தலைவன் சாளுவதிம்மரசனும், பின் கிருட்டிண தேவராயனும் அதன் முற்றுகையிலீடுபட்டனர். பல மாதங்கள் சென்றபின் விசயநகரப் படைகள் மதிலேறி உட்சென்று காவற்படைகளின் கட்டுக் குலைத்தன. கஜபதிப் பேரரசன் மனைவியும் ஒரு மகனும் உட்பட, ஓரிசாவின் (கலிங்கப்) பெருமக்கள் பலர் சிறைப்பட்டனர். சிறைப்பட்டவர்கள் நேரே விசய நகருக்கு அனுப்பப் பெற்றனர். கொண்ட வீட்டுப் பகுதியின் ஆட்சி சாளுவதிம்மனிடமே ஒப்படைக்கப்பட்டது.

விசயவாடா பிடிப்பட்டபின் அதுவே படையெடுப்பின் அடுத்தபடிகளுக்கான மூலதளமாயிற்று. கோளப் பள்ளி முற்றுகையின்போது அதைத் தடுக்கவந்த பிரதாபருத்திரன் படைகள் பெனுகங்கை யாற்றங்கரையில் நடைபெற்ற போரில் முறியடிக்கப்பட்டன. நல்கொண்டா, வாரங்கல் முதலிய இடங்கள் பிடிபட்டபின் பேரரசின் தலை நகரத் தாக்குதல் தொடங்கிற்று. கலிங்கத்தாயக நாட்டின் முதல் நகரமான இராசமகேந்திரவரம் கடந்தபின் ப்பாதனூரில் ஒரு வெற்றித் தூணையும் விசயநகரப் பேரரசன் நிறுவினன்.

தலைநகர் கட்டாக் பேரவதிக்காளான பின்பு கஜபதிப் பேரரசன் பிரதாபருத்திரன் பணிந்து, தன் புதல்வியை விசய நகரப் பேரரசனுக்கு அளித்து நேசம் நாடினன். கிருட்டிண தேவராயனும் மனமுவந்து அவனுக்கு வடக்கேயுள்ள அவன் பழய ஆட்சிப் பகுதியைத் திரும்பவும் அளித்தான்.

''இஸ்லாமிய அரசமரபின் காவலன்''

தீவானி, கோயில்கொண்டாப் போர்களுக்குப் பின் பீஜப்பூருக்கும் பாமினி மரபின் மைய அரசாகிய பீடாருக்கும் இடையே வேற்றுமைகள் மிகுந்தன. இதனைப் பயன்படுத்திக் கிருஷ்ணதேவராயன் இரேய்ச்சூர்க் கோட்டையையும் அது சூழ்ந்த ஆற்றிடை மண்டலத்தையும் வென்று கைக்கொண்டிருந்தான்.

யூசுப் ஆதில் கானுக்குப் பின் ஆண்ட அரசன் இஸ்மாயில் (1510—1534) வயதுவராத இளைஞன். கமால்கான் என்பவன் ஆட்சிப் பேராளாயிருந்து ஆட்சிப் பிடியை முற்றிலும் கைக்கொண்டு அரசுரிமையில் கண் வைத்திருந்தான். இதனால் கட்சிப் பிணக்கும் வலிமைக் கேடும் மிகுதியாய் இருந்தது. ஆனால் 1511-ல் மன்னன் தாய் கமால்கானைக் கொலை செய்வித்த பின் இது குறைவதற்கு மாறாகக் கூடிற்று. கமால்கானின் நண்பர்

களான அயல் நாட்டுப் பாரசீக, குராசானியப் பெருமக்கள் முன்னிலும் சீறிக் குமுறினர்,

பிஜப்பூரின் தளர்ச்சியைப் பயன்படுத்தி, கிருட்டிண தேவ ராயன் அப்போது மைய அரசாயிருந்த பீடாரின் மீதே படை யெடுத்தான். இங்கே பெயரளவில் இன்னும் மாமூதே அரசனு னுலும் அவனைக் காவலில் வைத்து அமைச்சனுயிருந்த அமீர் பாரீதே ஆட்சியுரிமை செலுத்தியிருந்தான். கிருஷ்ண தேவ ராயன் தலைநகர் குல்பர்க்காவைத் தாக்கி அமீர்பாரீதை முறி யடித்தான். முறைப்படி அரசுரிமையுடைய மாமூதைவிடுவித்து அவனையே அரசனுக்கினுன். முன்பு தமிழகத்தில் ஹொய்சள மன்னர் 'சோழ வம்ச ஸ்தாபனுசாரியார்' 'பாண்டிய வம்ச ஸ்தாபனுசாரியார்' என்ற பட்டங்கள் மேற்கொண்டது போலவே, இது முதல் கிருஷ்ண தேவராயனும் 'யவன அரசு விடுவித்துக் காத்துவன்' என்ற சிறப்புப் பெயர் மேற்கொண் டான்.

கிருட்டிணையாற்றுப் போர் II
அல்லது இரேய்ச்சூர் போர் II—1520—(மே 19).

பிஜப்பூர் அரசன் இஸ்மாயில் ஆதில்கான் வடக்கே பீடா ரில் கிருட்டிண தேவராயன் ஈடுபட்டிருந்த சமயம் பார்த்து இரேய்ச்சூரைத் திரும்பவும் கைப்பற்றிக் கொண்டான். அதை மீட்கக் கிருட்டிண தேவராயன் ஆற்றிய இரண்டாம் கிருட் டிணை யாற்றுப்போர் அல்லது இரேய்ச்சூர்ப் போர் விசயநகரப் பேரரசின் புகழைத் தென்னகமெங்கும் பரப்பிய பெரும் போர் ஆகும். போர்ச்சுக்கீசியர் பேரரசுக்குக் காட்டிவந்த ஆதரவு இதன்பின் ஆர்வ ஆதரவாயிற்று. தென்னகத்தை ஆக்கவும் அழிக்கவும் வல்ல பேரரசு விசய நகரப் பேரரசே என்பதை அவர்கள் இதன் மூலமே கண்டனர். போர்ச்சுகீசியர் வாணிக மூலம் விசயநகரப் பேரரசு வளமும். பேரரசு வளமூலம் போர்ச்சுக்கீசியர் ஆட்சிவளமும் பெருகின. இதனுலேயே 'கோவா எழ விசயநகரின் மூன்ரும் மரபும் எழும். மூன்ரும் மரபு தாழ கோவா தாழும்' என்ற வாசகம் போர்ச்சுகீசிய எழுத்தாளரால் வழங்கப்பட்டுள்ளது.

போர்ச்சுகீசிய ஆசிரியர் நூனிஸ் இப்போரை நேரடியாகக் கண்டு விரித்துரைத்துள்ளார்.

கிருட்டிண தேவராயன் இரேய்ச்சூரை முற்றுகையிட்ட போது, இஸ்மாயிலின் படைகள் அதைக் குலைக்க முன்வந்தன. பீஜப்பூர்ப் படைகள் கிருஷ்ணையாறு கடந்து ஐந்து கல் வந்த பின் விசயநகரப் படைகள் இரேய்ச்சூரிலிருந்து ஒன்பது கல்

வந்து அவற்றைத்தடுத்தன. இவ்விடத்திலேயே போர் மூண்டது.

கிருஷ்ண தேவராயனின் படைவீரர்கள், துணைவர்கள் உள்பட ஆள் தொகை 10இலட்சம் என்றும், அவன் யானைகள் 500 என்றும் கூறப்படுகிறது.

இப்போரில் மற்றமுஸ்லிம் அரசர்களின் உதவியைக் கிருஷ்ண தேவராயன் கோரியிருந்தான், இஸ்லாம் சமயத்தின் ஷியாக் கிளை சார்ந்தவனுன அகமது நகர் மன்னன் பர்ஹான் நிஜாம் உல்முல்க் சேர மறுத்துவிட்டான். மற்ற மூவரும் போரில் துணை தந்தனர்.

விசய நகரப் படைகளின் முதல் தாக்குதலால் பீஜப்பூர்ப் படைகள் பின்னடைந்து அகழ் அரண்களில் தஞ்சம் புகுந்தன. ஆனுல் போரின் அடுத்த கட்டத்தில் எதிரிகளின் துப்பாக்கி பீரங்கிவரிசைகள் செறிவுற்ற விசய நகர அணிகளில் பெரும் சேதம்விளைவித்தன. ஆனுல் இரண்டாவது படைவரிசையைத் தலைமை வகித்து நடத்திய கிருஷ்ண தேவராயன் படையணிகள் எல்லாவற்றையும் ஒரு முகமாகத் தாக்குதலிலீடுபடும்படி கட்டளையிட்டான். இதன் முன் எதிரிபடைகள் சின்னு பின்னமாகச் சிதறுண்டோடின. கிருஷ்ணையாறு வரைக்கும் பீஜப்பூர்ப் படைகளை விசயநகரப் படைகள் துரத்தியடித்தன.

பிஜப்பூர் மன்னனின் பாசறையிலுள்ள பொருள்கள் யாவும் கொள்ளையிடப்பட்டன. மன்னன் இஸ்மாயில் ஒரு யானை மீதேறி உயிர்தப்பி யோடினுன். வெற்றியுடன் பெரும் பொருட்குவையும் கிருஷ்ண தேவராயனுக்குக் கிட்டின.

இரேய்ச்சூர்க் கோட்டையும் இதன் பின் விரைவில் கைப் பற்றப்பட்டது. கோட்டை முற்றுகையில் போர்ச்சுகீசியப் பெருஞ் செல்வ வணிகனுகிய கிரிஸ்தோவாவ் தே பிரிகடோ என்பவன் (Christovao de Figucire do) ஒரு சிறிய போர்ச்சுகீசியப் படையுடன் வந்திருந்து பேருதவிசெய்தான், பேரரசன் அடுத்த மகாநவமி விழாவின்போது நகரமக்கள் முன்னிலையில் அவனுக்குப் பெருஞ் சிறப்புச் செய்து பரிசுகள் அளித்துப் பாராட்டினுன்.

இவ் வெற்றியின் பெரும் புகழ், பேரரசன் கிருஷ்ணதேவராயனுக்குக்கூட மாற்முரைச் சிறிதும் மதியாத செருக்கு அளித்திருந்தது. பேரரசு மரபில் இச்செருக்கே பின்னுளில் ராமராயன் காலத்தில் பேரரசுக்குப் பெருந்தீங்கு விளைவிக்கக் காரணமாயிருந்தது. இப்போரின் பின்னும் பீஜப்பூர் அரசன்

நட்பு நாடியபோது பணியும்படி வற்புறுத்தப்பட்டான். அசத்கான் என்ற ஒருவன் போதனையால் தன் எல்லையிலேயே ஒரு குறித்த நாள் வந்து பணிவதாக பீஜப்பூர் மன்னன் கூறியனுப்பி. கூறியபடி வராமல் அவமதித்தான்.

கிருஷ்ணதேவராயன் பீஜப்பூர்மீதும் பீடார்மீதும் படையெடுத்துத் தலைநகர் குல்பர்க்காவை அழித்தான்; பிருஸ்பாத், சாகர்க் கோட்டைகளைப் பிடித்தான். பீடாரில் சிறைப்பட்டிருந்த மாமூதின் புதல்வர் மூவரில் மூத்தவனை அரசனாக்கி மற்ற இருவரையும் தன்னுடன் கொண்டுவந்து பாதுகாத்தான்.

ஆட்சியின் கடைசி ஆண்டுகளில் கிருஷ்ணதேவராயனுக்கு உடல் நோயும், குடும்பப் பூசல்களும் தொல்லை விளைவித்தன. இரேய்ச்சூர்ப் போருக்கு முன்னும் பின்னும் அவன் தென்திசைசென்று அங்கே ஆட்சிக்கான புது ஏற்பாடுகளைச் செய்திருந்தான்.

## கிருஷ்ண தேவராயனும், தெலுங்கு தமிழ் இலக்கியமும்:

தெலுங்கிலக்கியம் விசயநகரப் பேரரசர்காலத்தில் பொதுவாகவும், கிருஷ்ண தேவராயன் காலத்தில் சிறப்பாகவும் தழைத்தது. அரசனே தெலுங்குப் புலமையுடையவன். அவன் பெயராலேயே ''ஆமுக்த மால்யத'' என்ற காவியம் இலங்குகின்றது. சிலர் அது அல்லசானி பெத்தண்ணு என்ற அரசவைக் கவிஞரால் இயற்றப்பட்டு அரசன் பெயர் சூட்டப்பட்டதென்பர். கன்னட தமிழிலக்கியங்களும் அவன் காலத்தில் தழைத்தன.

கிருஷ்ண தேவராயனையே பாடிய யாரோ ஒரு தமிழ்ப் புலவர் பாடல் பெருந்தொகையில் (1283) இடம் பெற்றுள்ளது. அது அவன் போர்த்திறமையைப் பாராட்டுகின்றது.

''படை மயக்குற்ற போதும்
படை மடம் ஒன்றிலாதான்
மடை செறி கடகத் தோளான்
மதிக் குடை மன்னர் மன்னன்''

என்று அப்பாடல் மன்னன் வீரம் சிறப்பிக்கின்றது.

## தமிழக நாயக மரபுகளின் தோற்றம்

நரச நாயகன் காலத்தில் தொண்டைமண்டலமும் சோழ நாடும் கிளர்ந்தெழுந்தன. அவற்றை அவன் கீழடக்கினான்.

கிருஷ்ண தேவராயன் காலத்தில் செஞ்சிப் பகுதியில் மீண்டும் பல தலைவர்கள் எதிர்த்தனர். கிருஷ்ண தேவராயன் அவர்கள்மீது வையப்பநாயகன், துப்பாக்கி கிருஷ்ணப்ப நாய

கன், வெங்கடப்பநாயகன் என்ற மூன்று படைத்தலைவர்களின் கீழ் 1,00,000 வீரர் கொண்ட பெரும்படை அனுப்பினான். அவர்கள் வேலூரை வென்று, காளத்தித் தலைவன் பொம்ம ரெட்டி உட்பட எல்லாத் தலைவர்களையும் அடக்கினார்கள். தமிழகம் மூன்று மண்டலத் தலைவர்கள் கையில் ஒப்படைக்கப் பட்டது. நெல்லூர் முதல் கொள்ளடம் வரையுள்ள பகுதி செஞ்சியைத் தலைநகராகக் கொண்ட துப்பாக்கி கிருஷ்ணப்ப நாயகன் கீழும், தஞ்சையைத் தலைநகராகக் கொண்ட பகுதி விஜயராகவ நாயகன் கீழும், காவிரிக்கு இப்பாலுள்ள பகுதி மதுரையைத் தலைநகராகக்கொண்ட வெங்கடப்ப நாயகன் கீழும் ஒழுங்கமைக்கப்பட்டன.

## நாகமன் ஆட்சியும், பாண்டியர்-சோழர் போராட்டமும்

கிருஷ்ண தேவராயன் ஆட்சியில் இறுதிப் பகுதியில் தமிழகத்திலே நடைபெற்ற பல நிகழ்ச்சிகளைத் தெலுங்கிலே எழுதப் பெற்ற தமிழக வரலாற்று ஏடுகள் குறிப்பிடுகின்றன. அந நாளில் பாண்டியமரபினர் மட்டுமன்றிச் சோழமரபினர்கூடச் சிற்றரசராக, கிட்டத்தட்டத் தங்குதடையற்ற தன்னுரிமையுடையவராக, ஆண்டுவந்தனர் என்று தோற்றுகிறது. ஏனெனில் வீரசேகரன் என்ற சோழ மன்னன் சந்திரசேகரன் என்ற பாண்டிய மன்னன் மீது படையெடுத்து, அந்நாட்டைக் கவர்ந்து கொண்டான். சந்திரசேகரன் கிருஷ்ண தேவராயனிடம் முறையிட்டு, தனக்குரிய தன் நாட்டைப் பெற்றுத்தந்து உதவும்படி வேண்டினான். இதன் பயனாகக் கிட்டத்தட்ட கி. பி. 1525-ல் கிருஷ்ண தேவராயன் தன் நம்பிக்கைக்குரிய நாகமநாயகன் என்ற ஒரு பெருமகனை மதுரைப் பகுதியின் தலைவனாக அனுப்பி, பாண்டியனுக்கு நீதி வழங்கும்படி கூறினான்.

நாகமன் சாளுவ நரசிம்மன் ஆட்சியிலேயே அவனிடம் நரச நாயகனை ஒத்த உற்ற துணைவனா யிருந்தான். பேரரசன் இம்மடி நரசிம்மன் ஆட்சியிலும் கிருஷ்ண தேவராயன் ஆட்சியிலும் அவன் சேமப் பொருள் காப்பாளனாகவும் (கோடியன்) பொருள் காப்பாளனாகவும் (தோசேகாரு அதிகாரி) வரி தண்டலாளனாகவும் ஆட்சி பார்த்திருந்தான். தமிழகத்தின் மதுரை மண்டலத்தின் அலுவல் தலைவனாகவே அவன் அமர்வு பெற்றான்.

நாகமன் சோழனை அடக்கிப் பாண்டியன் நாட்டை மீட்டுவிட்டான். ஆனால் எக்காரணத்தினாலோ பாண்டியனிடம் ஒப்படைக்கவில்லை. பாண்டியன் மறுபடியும் கிருஷ்ண தேவ ராயனிடம் சென்று முறையிட்டான். இது கிட்டத்

தட்ட அவன் ஆட்சி யிறுதியிலேயே நடைபெற்றிருக்க வேண்டும். முதிர் வயதும் நோயும் பேரரசனுக்குப் பொறுதியின்மையையும் முன் கோபத்தையும் அளித்திருக்க வேண்டும். 'இந்த ஆணவக்காரனைச் சென்று அடக்கிக் கைப்பற்றிக்கொண்டுவர எவராலும் முடியாதா?' என்று கேட்டான். நாகமனை எதிர்க்கும் துணிவு எவருக்கும் வரவில்லை. ஆனால் நாகமன் மகனான விசுவநாதன் 'இதோ நான் கொண்டு வருகிறேன்!' என்றான். கிருஷ்ணதேவராயன் அவன் துணிச்சலும் பெருந்தன்மையும் வியந்து அவனையே மதுரை நாயகனாக்கி அனுப்பினான்.

விசுவநாதன் தந்தையைப் போரில் வென்றடக்கிக் கைப்பற்றினான். பாண்டியனுக்கு அரசளித்துவிட்டு, பேரரசன் முன்பு தந்தையை ஒப்படைத்தான். இதனால் மகிழ்வுற்ற பேரரசன் விசுவநாதனையே நிலையாக மதுரை நாயகனாக ஆக்கினான் என்று தோற்றுகிறது. இச்செயல் 1529-லேயே நடைபெற்றிருக்க வேண்டும்.

அரசுரிமைப் பூசல்:

கிருஷ்ண தேவராயன் வாழ்வின் இறுதி ஆண்டுகளில் அவன் ஆறு வயதுள்ள தன் புதல்வனுக்கு அரசுரிமை தர முயன்றதாக அறிகிறோம். பேரவாவுடைய அரசவைப் பெருமக்களுள் ஒருவனான சாளுவதிம்மன் அச் சிறுவனை நஞ்சிட்டுக் கொன்றதனால் அவன் குடும்பத்தினர் அனைவரும் காவலில் வைக்கப்பட்டனர். அத்துடன் ஒரு மகன் தப்ப முயன்றதைச் சாக்காகக்கொண்டு குடும்பத்தினர் அனைவரின் கண்களுமே குருடாக்கப்பட்டன.

கிருஷ்ணதேவ ராயனுக்குப் பின் அவன் இளவல் அச்சுத ராயனின் அரசுரிமை ஏற்பிற்கும், எதிர்ப்பும் போட்டியும் இல்லாமலில்லை. இராமராயன் என்ற ஆற்றல் வாய்ந்த தலைவன், கிருஷ்ணதேவ ராயனின் பதினெட்டு மாதக் குழந்தையின் அரசுரிமையையே ஆதரித்தான். குழந்தையின் பெயரால் தானே ஆள அவன் எண்ணினான். ஆனால் சாளுவ வீரநரசிம்மன் அச்சுதராயனையே ஆதரித்தான்.

கிருஷ்ணதேவ ராயன் இறுதிப் படுக்கையின் போதே கலவரங்களைத் தடுத்து அமைதி காப்பதற்காக முக்கியமான அரச குடும்பத்தினர் சந்திர கிரியில் காவலில் வைக்கப்பட்டிருந்தனர். அச்சுத ராயனும் அவர்களில் ஒருவன். ஆகவே அவன் விடுவிக்கப்பட்டு வந்து சேருமளவும், சாளுவ வீர நரசிம்மன் அரசுரிமையை எவரும் கைப்பற்றாதபடி அவனுக்காகப் பேணிக் காத்து நின்றான்.

அரசுரிமை பெறுவதில் யாரும் முந்திக் கொள்ளக் கூடா தென்பதற்காகவே அச்சுதராயன் வரும் வழியிலே திருப்பதி யிலும், காளத்தியிலும் விரைந்து முடி சூட்டுவிழா ஆற்றி விட்டு வந்தான். ஆயினும் இராம ராயனையும் இணக்குவித் துத் தன்னை மேலும் வலுப்படுத்திக்கொள்ள அவன் எண்ணி னான். இந் நோக்கத்துடன் அவன் இராம ராயனுடனே ஆட்சிப் பொறுப்பைப் பங்கு கொள்ள எண்ணினான். இது அச்சுதராயனையே ஆதரித்து நின்ற சாளுவ நரசிம்மனுக்கு மனக் கசப்பை ஊட்டிற்று.

பேரரசுக்கு எதிராகத் தமிழகம் சென்று கிளர்ச்சி செய்வ தற்கு இதுவே அவனைத் தூண்டிற்று.

விசுவநாத நாயகன் மதுரை ஆடசிப் பொறுப்பு:
முதற்பகுதி 1529—30
இடைப் பகுதி 1533—42

விசுவநாத நாயகன் கிருஷ்ணதேவ ராயன் காலத்திய தமிழகப் பிரதிநிதி நாகம நாயகர் புதல்வன். அவன் ஏறத் தாழ 1495-ல் பிறந்தவன். 16 வயதுடைய இளைஞனாயிருக் கும்போதே கிருஷ்ணதேவ ராயனின் அடைப்பக்காரனாக அவனுக்குத் தொண்டனாகி, அப்பேரரசனுடன் கலிங்கப் போர்களில் சென்று பணியாற்றியவன். பேரரசனின் நன் மதிப்பைப் பெற்றதனாலே அவன் இரேய்ச்சூர்ப் போரில் ஒரு சிறு படையின் தலைமை யளிக்கப்பட்டான்.

அவன் 1529-ல் கிருஷ்ண தேவராயன் ஆட்சியின் கடைசி ஆண்டிலேயே மதுரைப் பிரதிநிதியாக அமர்வு பெற்றிருந் தான். 1509-முதல் 1532-வரை ஒரு தடவையும், 1533-முதல் 1542-வரை ஒரு தடவையும் அவன் பிரதி நிதியாக இருந்து நல்ல சேவை செய்தான். அவன் ஆட்சிப் பகுதிகளுக்கு இடைப்பட்ட காலமே அச்சுதராயன் தென் திசை வெற்றிக் குரிய காலம் ஆகும். அவ் வெற்றியின் பின் அவன் ஆட்சி எல்லையும் சற்று விரிவுபட்டிருந்தது. ஆனால் அச்சுதராயன் ஆட்சிக்குப் பின்னரே அவன் மாமண்டல நாயகனாக்கப்பட் டான்.

மலையடி வாரப் போர்: 1533

அரசுரிமைப் பூசலின் முடிவில் பேரரசுமீது பகைமை யுற்ற சாளுவ வீர நரசிம்மன் என்ற செவ்வப்பன், தான் ஆட்சி புரிந்து வந்த சோணாட்டுக்குச் சென்று கிளர்ச்சிக் கொடி உயர்த்தினான். இக் கிளர்ச்சியில் உம்மத்தூர்த் தலை வனும், திருவாங்கூர் அல்லது வேணாட்டு அரசனான திருவடி

ராஜா உதய மார்த்தாண்டவர்மனும் கலந்து கொண்டனர். பேரரசன் அச்சுதராயன் 1532-ல் காஞ்சிபுரம் வந்து தன் எடை பொன் கொடை வழங்கும் துலாபார விழா வாற்றிய பின், படையுடன் திருவரங்கம் வரை வந்தான். ஆனால் சாளுவ வீர நரசிம்மன் இதற்குள் தண்டனைக்கு அஞ்சித் திருவாங்கூருக்கே ஓடி ஒளிந்து கொண்டான்.

இச் சமயம் தென் பாண்டி நாட்டை ஆண்டவன் சடையவர்மன் சீவல்லப பாண்டியன் (1534—1543). கிளர்ச்சியின் சூழ்நிலையைப் பயன் படுத்திக்கொண்டு, திருவாங்கூர் மன்னன் அவனுக்குரிய நாட்டைக் கைப்பற்றிக் கொண்டான். தென் பாண்டி நாடெங்கும் அம்மன்னன் கல்வெட்டுக்கள் இக் காலத்தனவாய் அகப்படுகின்றன. இவ்வாறு உரிமையிழந்த பாண்டியனும் பேரரசன் அச்சுதராயனிடம் முறையிட்டான்.

திருவரங்கத்திலிருந்து பேரரசன் தன் மைத்துனனை சாலக ராஜு திம்மராஜு என்ற சாலகம் திருமலையையும், அவன் மகன் சாலகம் திம்மனையும் படைத்தலைவர்களாக அனுப்பினன். அவர்கள் வெற்றிகரமாகத் தென்பாண்டி நாட்டைப் படையுடன் கடந்தனர். பின் திருவாங்கூருக்குள் புகுந்தனர். மலையருகில் நடை பெற்றதாகக் குறிக்கப்படும் போரில் திருவாங்கூர் அரசனும் சாளுவ வீர நரசிம்மனும் தோல்வியுற்றனர். விசய நகரப் படைத்தலைவர்கள், இருவரையும் சிறைப்படுத்தி அச்சுதராயனிடம் கொண்டு சென்றனர். இருவருக்கும் தக்க தண்டனை அளிக்கப்பட்டது.

தாம்பிரவருணி ஆற்றங்கரையில் இவ் வெற்றியின் அறிகுறியாக வெற்றித் தூண் நிறுவப்பட்டது. நாடிழந்த பாண்டியனிடம் அவன் ஆண்ட தென்பாண்டிப் பகுதி மீண்டும் ஒப்படைக்கப்பட்டது. அத்துடன் பாண்டியன் நன்மகளைப் பேரரசனுக்கு மணம் செய்து கொடுத்தான்.

திரும்ப நாடு பெற்றதனாலும், பேரரசர் உறவு பெற்றதனாலும் இப் பாண்டியன் பெரிதும் நன்மதிப்பு உடையவனானன். தன் கல்வெட்டுக்களில் அவன் ''இறந்த கால மெடுத்தவன்'' ''பாண்டிய ராஜ்ய ஸ்தாபனாசாரியன்'' ஆகிய பட்டங்களை மேற் கொண்டான்.

சாளுவ நரசிம்மன் ஆண்ட சோணாட்டுப் பகுதி அச்சுதராயன் மனைவி திருமலாம்பாளின் உடன் பிறந்தாளுக்குச் சீதனமாக வாக்களிக்கப்பட்டிருந்தபடி, அவள் கணவனான செவ்வப்பநாயகன் அதன் மண்டலத் தலைவனாக அமர்த்தப்பட்டான். ஆனால் தமிழகத்தின் இரு மாகாணங்களான

மதுரை, தஞ்சை ஆகியவற்றில் தஞ்சை சார்ந்த திருச்சிராப் பள்ளி மதுரைக்கும், மதுரையைச் சார்ந்த வல்லம் தஞ்சைக் கும் மாற்றப்பட்டன.

உம்மத்தூர்த் தலைவனும், பிறரும் பணிந்தளிக்கும் வணக் கத்தை ஏற்கும் வண்ணம் பேரரசன் அவ்வழி தலைநகரத்துக் குத் திரும்பினான்.

அச்சுதராயனின் இத் தென்திசை வெற்றியையே பொரு ளாகக் கொண்டு விசயநகர அரசவைக்கவிஞனான இராசநாத டிண்டிமன், அச்சுதராயாப் யுதயம் என்ற ஒரு சமஸ்கிருத காவியம் இயற்றினான்.

## அச்சுதராயனின் வடதிசைப் போர்கள்

ஓரிசாக் கஜபதியரசன், கோலகொண்டாவின் முதல் அரசனான குலீ குட்ப் ஷா (1512—1533) ஆகியவர்கள் 1534-க்கு முன் விசய நகரத்தின் மீது படையெடுத்துத் தோல்வியுற்றார்கள். எனினும் பிஜப்பூரின் அரசன் இஸ்மா யில் ஆதில்கான் (1510—1534) இரேய்ச்சூரையும் முட்கலை யும் கைப்பற்றியிருந்தான். எனினும் அடுத்த பிஜப்பூர் அரசனான மல்லூ ஆதில்கான் (1534—1535) ஆட்சியில் அசதி கான் லாரி என்பவனது கிளர்ச்சியால் ஆட்சி வலுவிழந்திருந் தது. ஆகவே அச்சுதராயன் இரேய்ச்சூர் மண்டலம் முழு வதும் மீண்டும் பிடித்தடக்கினான். 1536-ல் விசய நகரத் திலேயே குத்தியில் எழுந்த ஒரு கிளர்ச்சி அடக்கப்பட்டது.

## போர்ச்சுகீசியத் தொடர்புகள்

போர்ச்சுகீசியர் விசயநகரக் கடற்கரை யோரமாகத் தம் பேரரசை வளர்த்து வந்தனர். ஆனால் மேலீடாக விசய நகரத்துடன் அவர்கள் நட்பாகவே யிருந்தார்கள். தெற்கே தமிழகத்தில் அவர்கள் அடிக்கடி கடற்கரை கடந்து நெடுந் தொலைவரை சென்று கோயில்களைக் கொள்ளையடித்தனர்.

## இராமராயன் பதவி வேட்டையும் குழப்பங்களும்

அச்சுதராயன் ஆட்சியின் பிற்பகுதியில் அரசுரிமைக்குப் போட்டியாய் நிறுத்தப்பட்ட கிருஷ்ண தேவராயனின் சிறு வன் உயிர் நீத்தான். இதனால் அச்சுதராயன் இராமராயன் பற்றிய அச்சமின்றி ஆள முற்பட்டான். ஆனால் இராமராய னுக்கு இதுவரை தன் பேரவாவை மறைப்பதற்கு இருந்த சாக்கு அகன்று விட்டதால், வெளிப்படையாகவே கட்சி திரட்டித் தன் ஆதிக்கத்தை வளர்த்துவந்தான், கிருஷ்ண

தேவராயனுக்கு அவன் மருமகனுதலாலும், அவனும் அவன் உடன் பிறந்தார் இருவரும் கிருஷ்ண தேவராயன் உடன் பிறந்தாராகிய அச்சுதராயனுக்கும் ரங்கனுக்கும் மைத்துன ராதலாலும் அரசியர், அரண்மனை மாதர் ஆதரவு அவன் பக்கமே இருந்தது.

அவன் தன் ஆதிக்கத்தை வளர்க்க, எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் பிற்காலத்தில் அவனே ஆட்சியாளனுயிருக் கும்போது அவ் வாட்சியின் வலுக்குறைக்கக் காரணமாயிருந் தன. பேரரசன் இம்மடி நரசிம்மனும் கிருஷ்ண தேவராய னும் திறமையும் பயிற்சியும் தேர்ச்சியும் உடையவர்களையே பதவியில் அமர்த்திப் பேணி வந்திருந்தனர். இராமராயன் கூடுமான இடங்களில் எல்லாம் அவர்களை நீக்கித் தன் ஆட் களைப் புகுத்தினுன். மற்றும் வாய்ப்பு ஏற்பட்ட போதெல் லாம் படைத்துறையில் முஸ்லிம் வீரர்களைச் சேர்த்துக் கொண்டான். விசயநகரத்தின் முதிராத் தேசியச் சூழலில் இத் தீங்கு இம்மடி நரசிம்மன் ஆட்சியிலேயே தொடங்கி விட்டதானுலும், அது இப்போது பேரிடர்தரும் அளவில் பெருகிற்று.

இச் சமயம் தெற்கே நடைபெற்ற கிளர்ச்சிகளையடக்க இராமராயன் செல்லவேண்டி யிருந்தது. இவ் வேளை பார்த் துக் காவலிலிருந்த அச்சுதராயன் தன் காவலனையே அமைச்ச னுக்கித் தன்னுரிமை ஆட்சி நடத்தத் தொடங்கினுன். தெற்கே திருவாங்கூர் வெற்றிப் புகழ்பெற்ற சாலகராஜு திருமலை அக்காவலனை ஒழித்து ஆட்சியைத் தானே கைக் கொண்டான். இராமராயன் தெற்கே எதிரிகளுடன் சமர சம் செய்துகொண்டு தலைநகர் வந்தபோது நாட்டாட்சியில் எதிர்க்கட்சி முனைந்திருக்கக் கண்டான். இரு கட்சிகளும் சரி சமமாகப் போராடத் தொடங்கவே, உள் நாட்டு ஆட்சியில் இமைக்க முடியாத குழப்பம் ஏற்பட்டது. இதைத் தீர்த்து வைப்பதற்காகத் தலைவர்கள் பிஜப்பூரை இச் சமயம் ஆண்ட இரண்டாம் இப்ராஹிம் ஆதில்கானை (1535—1537) வர வழைத்தனர்.

விசயநகரப் பேரரசின் உள்நாட்டுக் காரியங்களில் தலை யிடுவதற்கான இந்த வாய்ப்பை இப்ராஹிம் பயன் படுத்தவே விரும்பினுன். ஆனுல் அதைப் பயன்படுத்த அவனுக்கு நேர மில்லாது போயிற்று. அவன் இல்லாத சமயம் அகமது நகரை அகமது (1490—1508)-க்குப் பின் ஆண்ட முதலாம் புர் ஹான் (1503—1554) கிளர்ச்சிக்காரனுன அசத்கான் அழைப் பின் மீது படை யெடுத்திருந்தான். ஆகவே அவசர அவசர மாக இரு கட்சிகளையும் இணைத்து வைத்துவிட்டு அவன் திரும்

பிச் சென்றான். இராமராயன் ஆதிக்கம் முன்னிருந்தபடியே நீடித்தது.

**அரவீட்டு மரபின் புரட்சி:**

**துங்கபத்திரைப் போர்:**

அச்சுத தேவராயன் 1542-ல் உலக வாழ்வு நீத்தான். வயது வராத அவன் புதல்வன் முதலாம் வேங்கடனுக்கு அரசுரிமை தரப்பட்டு அவன் பெயரால் அவன் தாய் மாமனை சாலகம் திருமலை ஆட்சிப் பேரரசனானான். ஆனால் தாயரசியான வரதாதேவி தன் உடன்பிறந்தான் மீது ஐயம் கொண்டு பிஜப்பூர் அரசன் முதலாம் அலி அதில்கானை (1537—1579) வரவழைத்தாள். ஆனால் வரும் வழியிலேயே திருமலை பணம் கொடுத்து பிஜப்பூர் அரசனைத் திருப்பி அனுப்பிவிட்டு அரசியின் செயலுக்கு எதிர்செயலாகக் குத்தியில் காவலில் வைக்கப்பட்டிருந்த அச்சுதன் தம்பி புதல்வன் முதலாம் சதாசிவனை அரசிருக்கையில் அமர்த்தி அவனுக்கு ஆதரவாக மறுபடியும் பிஜப்பூர் அரசனையே படையெடுக்கும்படி தூண்டினான்.

ஆட்சி நிலை பற்றிக் கிலிகொண்ட நகரமக்கள் திரண்டெழுந்து நிலைமையை அவசரமாகச் சமாளிக்கும்படி திருமலையை ஆட்சியாளனாக ஒத்துக்கொண்டனர். இதனால் திருமலை முன்பு தானே அழைத்த அயலரசனைத் தானே முறியடித்துத் துரத்தினான். ஆனால் அரிதில் பெற்ற இவ் வாட்சியை அவன் நீடித்துத் துய்க்க முடியவில்லை. முதலாம் வேங்கடனையும், சதாசிவன் நீங்கலான அரச குடும்பத்தினர் அனைவரையும் அவன் கொன்று குவித்துக் கொடுங்கோல் ஆற்றினான். பெருமக்கள் கிளர்ந்தெழுந்து மீண்டும் பிஜப்பூர்ப் பேரரசன் உதவி நாடினர்.

இதுவரை புரட்சியின் போக்கை விலகி நின்று பார்த்துக் கொண்டிருந்தான், முன்பே ஆதிக்கக் கயிற்றைக் கைப்பற்றியிருந்த இராமராயன். அவன் திடுமெனப் பெனு கொண்டாவைக் கைப்பற்றிப் பல போர்களில் திருமலையை முறியடித்தான். துங்கபத்திரையருகே நடத்திய போரில் அவனைக் கொன்று சதாசிவனை முடி சூட்டினான்.

சதாசிவன் பெயரால் இராமராயனே ஆட்சி செய்யத் தொடங்கினான். சதாசிவன் பெயரளவில் பேரரசனாக 1576 வரை உயிருடன் இருந்தாலும், இராமராயனே உண்மையில் பேரரசனாகி (1542—1565) அரவீட்டுமரபின் முதல்வனானான்.

**வைதிக இயக்கம் 16—18 நூற்றுண்டுகள்**

14-ம் நூற்றுண்டின் பிற்பகுதியிலிருந்து தென்னாட்டு அரசியல் வாழ்வின் மையமும் விசயநகரப் பேரரசின் தாயகத் தலைமையிடமும் தமிழகத்திலிருந்து அதன் வட திசைக்குமாறி விட்டது. இந் நிலை அடுத்த இரண்டு நூற்றுண்டுகளில் கூட மாறவில்லை. கசபதி மரபினர் ஆட்சி அதை இன்னும் கிழக்கு நோக்கிஇழுத்து வந்தது. எனவேதான் கடப்பை, கர்நூல், பல்லாரி, அனந்தப்பூர்ப்பகுதிகள் இன்றளவும் இராயலசீமாஎன்ற பெயருடன் இலங்குகின்றன. இப் பகுதியும் இதனையடுத்த வடதிசைப் பகுதிகளான மராட்டியமும், ஆந்திரப் பகுதிகளும் அரசியல் போராட்டக் களங்களாக மட்டுமன்றிச் சமுதாய சமயப் பண்பாட்டுப் போர்க்களங்களாகவும் நிலவின. இதனல் மக்கட் சார்பான இந்திய மாநிலத்தின் பக்தி இயக்கம் தென்திசையிலிருந்து இமயம் வரை பரவிய இதே காலத்தில், இதனை எதிர்த்த வைதீக இயக்கமொன்று ஆந்திர நாட்டிலிருந்து விசயநகர ஆட்சியிலேயே வட தமிழகம், கீழ்திசை மலபார், கன்னடம், தென் மராட்டியம் ஆகிய பகுதிகளிலே ஆதிக்க வகுப்பினர் இயக்கமாய்ப் பரவ இடம் ஏற்பட்டது. பக்தி இயக்கம் சமய இலக்கியத் துறைகளில் தாய் மொழி வாழ்வும், சமுதாயத்துறையில் சமத்துவமும், பெண் கல்வி, பெண்ணுரிமையும் பரப்பிய தென்றல், இவ்வைதீக இயக்கம் மேனாட்டுக் கல்வி வரும் வரையும் அதுகடந்து இன்றும் கூட, அவ்வெல்லாத் துறைகளிலுமே வினைமுறைகள் மூலம் சமஸ்கிருத ஆட்சியையும், வேதபுராண சுமிருதி ஆட்சிகளையும், வருணாசிரம ஒழுக்க முறையையும் பரப்பத் தொடங்கியுள்ளது. மேனாட்டுக் கல்வியால் ஏற்பட்ட பகுத்தறிவொளியும் தமிழகத் தேசிய மறுமலர்ச்சி இயக்கமுமே நம் நாளில் இதை மாற்றி வருகிறது.

தேசிய வாழ்வின் இப்புது மலர்ச்சித் தொடக்கத்துக்குரிய தடத்தை 16-ம் நூற்றுண்டின் பிற் பகுதியிலே தென்னக வாழ்விலும், விசய நகரப் பேரரசர் வாழ்விலும் கூடக் காணலாம். தேசிய வலுவும் அரசியல் வலுவும் படிப்படியாகத் தமிழகம் நோக்கி மீண்டும் படர்ந்தன. இதனை முதன் முதலில் நன் கறிந்து பயன்படுத்த முனைந்தவர் போர்ச்சுகீசியர்களே யாவர்.

**போர்ச்சு கீசியர் வளர்ச்சி:**

**இராமராயன் எதிர் நடவடிக்கைகள் 1542—1547**

தென்னகத்திலும் கீழ் திசையிலும் உலகிலும் போர்ச்சுகீசிய வாழ்வின் பொற்காலம் 16-ம் நூற்றுண்டின் முற்பகுதியாகிய விசயநகரப் பேரரசின் மூன்றும் மரபுக் காலமே. அந்

நூற்ருண்டின் நடுவில் அது உச்சநிலை எய்திற்று. கத்தோலிக்க சமயத்தை உலகில் பரப்பிய பெரியாருள் இந் நூற்ருண்டில் மேல்திசையில் எழுந்த ஒளியான இக்னேஷியஸ் லாயொலாவின் மாணவரான பிரான்ஸிஸ் ஸேவியர் கீழ்திசை ஒளியாக விளங்கிஞர். தமிழகத்தின் முத்திசைக் கடற்கரைகளையும் சுற்றிப் பரவை வாழ்வில் ஈடுபட்ட மீனவர்களையும், முத்துக் குளிக்கும் முத்துப் பரவரையும் தென்னகத்திலே ஒரு புதிய சமய, சமூதாய, அரசியல் சக்தியாக்க அவர் பாடுபட்டார். வைதீக சமயத்தின் சமுதாயக் கொடுமைகளையும், முஸ்லீம்சளின் போர் வெறிக் கொடுமைகளையும் எதிர்த்து நிற்கப் போர்ச்சுகீசிய அரசன் குடிகள் என்ற உரிமையையே கை காவற் படையாக வழங்கும்படி அவர் மீனவர்களைத் தூண்டி எழுப்பிஞர். இதன் எதிரொலியாக, கத்தோலிக்க அரசியல் வேட்டுவரும், முஸ்லீம்களைப் போலவே கோயில்களைக் கொள்ளையிட்டுச் சமயப்பணி பரப்பும் புண்ணியத்துடன் கொள்ளைப் பொருளும் பெற்று அரசியலில் ஆதிக்கமும் பெறும் சமய சஞ்சீவியை மேற்கொண்டார்கள்.

1542-ல் போர்ச்சுகீசிய ஆட்சியாளர் 'மார்டின் அல்பான் சோ டி சூசா பட்கலைக் கொள்ளை யடித்தான். கரையோரங்களிலிருந்து தொடங்கி மீனவர் உதவியுடனும் கிருஸ்தவப் பணியாளர் ஊக்குதலுடனும் போர்ச்சுகீசியர் உள் நாட்டுக் கோயில்களைக் கூடக் கொள்ளையிடுதல், கொலை, கொள்ளை வல்வந்தச் செயல்கள் மூலம் சமய மாற்றுதல் ஆகியவற்றைச் செய்யலாயினர். 1545-ல் திருப்பதி கூட இச் செயல்களுக்கு ஆளாயிற்று. ஆனல் 1547-ல் போர்ச்சுகீசிய ஆட்சித் தலைவர் ஜோவா டி காஸ்ட்ரோ காலத்தில் பேரரசின் காதுகள் செவிடுபடும் அளவு இந்த அட்டூழியங்களின் குரல்கள் எழுந்தன. அடுத்த ஆண்டு இராமராயன் மயிலை சாந்தோம் மீது திடுமெனத் தாக்கிக் கொள்ளை யடித்துக் கத்தோலிக்கக் குருமார்கள் சேமித்து வைத்திருந்த செல்வக் குவைகளைச் சூறையாடியதுடன் ஓர் இலட்சம் வராகன் திறையும் பெற்ருன். இதே சமயம் சாந்தோமுக்கு உதவியனுப்ப முடியா வண்ணம் விசய நகரப் படைத் தலைவன் விட்டலராசன் இக்கேரித் தலைவன் சங்கண்ண நாயகனின் துணையுடன் கோவாவையும் தாக்கிஞன்.

கயத்தாற்றுப் போர் I, II *(1550—1559)*

இராமராயனின் புதிய ஆட்சியைச் சந்திர கிரிக்குத் தெற்கேயுள்ள தமிழக முழுவதும் ஏற்காமல் கிளர்ந்தெழுந்தது. திருவாங்கூர் அரசன் இதே சமயம் போர்ச்சுகீசியக்

கத்தோலிக்கருடன் சேர்ந்து தன் செல்வாக்கைக் கரையோரப் பகுதிகளில் தூத்துக்குடி வரை பரப்பினான். தென்பாண்டி நாட்டில் நேருரிமையுள்ள தென்காசிப் பாண்டியன் பூதல வீரராம வர்மன் விசயநகர ஆட்சியை எதிர்க்காதிருந்தாலும் வேறு ஐந்துபாண்டியர் அவனைத் துரத்திவிட்டு விசயநகரத்துக் கெதிராகக் கிளர்ச்சி மேற்கொண்டனர். ஐவருக்கும் தலைமை வகித்தவன் கயத்தாறும் தூத்துக் குடியும் ஆண்ட கயத்தாற் றுத் தலைவன் பட்டம் பெருமாள் என்பவன்.

இக் கிளர்ச்சி தொடங்கிய காலம் 1545—1546 ஆண்டு களாயிருக்க வேண்டும். ஏனென்றால் அவ்வாண்டுகளிலேயே மூன்றாவது தடவையாக மதுரைப் பிரதிநிதி ஆக்கப்பட்டிருந்த விசுவநாத நாயகன் அதை முதலில் அடக்க முற்பட்டான் என்று அறிகிறோம். விசுவநாத நாயகன் தன்னுடன் அமைச் சராகவும் (தளவாய்) படைத் தலைவராகவும் இருந்த அரிய நாயக முதலியாரைத் தென்பாண்டி நாட்டுக்கு அனுப்பிவைத் தான். ஆனால் பாண்டியர் கயத்தாற்றில் நடைபெற்ற முதற் போரில் ஒருங்குகூடி நின்று அரிய நாயக முதலியாரை முறிய டித்தனர்.

விசுவநாத நாயகனுக்கு மேலாளாக இப்போது விட்டல ராசன் தென்னகத்தின் முழுநிறை ஆற்றல் வாய்ந்த மண்ட லத் தலைவனாக அனுப்பப்பட்டான். அத்துடன் வடதிசையி லிருந்து இராமராயன் தன் மைத்துனன் சின்ன திம்மன் தலைமையில் ஒரு பெரும் படையை அனுப்பி வைத்தான்.

சின்ன திம்மன் முதலில் சந்திரகிரி யருகிலுள்ள கிளர்ச்சிக் காரரை அடக்கி அந்நகரைப் பேரரசுக்கு உரியதாக்கினான். சோழ நாட்டில் புவனகிரிக் கோட்டையைக் கைப்பற்றிக் கத்தோலிக்கர்களால் சேதமுற்ற திருவரங்கக் கோயிலைச் செப்பம் செய்தான். தஞ்சை, புதுக்கோட்டைப் பகுதியி லுள்ள அடங்காத் தலைவர்களை அடக்கியவாறு பாண்டி நாட்டுக்கு வந்து இரண்டாவது கயத்தாற்றுப் போரில் ஐந்து பாண்டியர்களையும், கயத்தாற்றுத் தலைவன் பட்டம் பெரு மாளையும் தருக் கடக்கினான்.

இப்போரிலும் இதனை யடுத்த திருவாங்கூர்ப் படை யெடுப்பிலும் விட்டலராசனே உரிமைத் தலைவனா யிருந்து இயக்கினான். அத்துடன் விசுவநாத நாயகனின் இளமைந் தன் கிருஷ்ணப்ப நாயகனும் இப்போரில் பங்குகொண்டு புகழ் பெற்றான்.

தென்காசிப் பாண்டியனான பூதலராமவர்மனின் சுசீந் தரம் கல்வெட்டுக்கள் மூலம் அவன் விசய நகரத்துக்கு இக்

காலத்தில் கீழடங்கிய நண்பனாகவே இருந்தான் என்று அறிகிறோம்.

போர் முடிந்த பின், அடக்கப்பட்ட பாண்டியர்களையும் விசுவநாத நாயகன் இணக்குவித்துத் தன் பாளையத் திட்டத்தில் இடமளித்தான்.

### தோவாளைக் கணவாய்ப் போர் (1550—1559).

திருவாங்கூர் அரசர்களும் இச்சமயம் ஐவர் இருந்ததாகத் தெரிகிறது. ஐந்து திருவாங்கூர் அரசர் அல்லது திருவடிகளும் தோவாளைக் கணவாய்ப் போரில் கீழடக்கப்பட்டனர்.

தோவாளைக் கணவாய் என்பது தென்பாண்டி நாட்டிலிருந்து நாஞ்சில் நாடு அல்லது தமிழ்த் திருவாங்கூர்ப் பகுதியான நாகர்கோயிலுக்குச் செல்லும் வழியிலுள்ள மலை இடைவழி ஆகும். அது இன்று ஆரல்வாய் மொழிக் கணவாய் என்று அழைக்கப்படுகிறது. அந்நாளிலும் அணிமைக்காலம் வரையிலும் நாகர் கோயிலின் பழம் பெயர் கோட்டாறு என்பதே. கத்தோலிக்கர் எழுதிய கடிதங்களில் இந்நகர் வாழ்வு பற்றிய பல செய்திகள் தெரிய வருகின்றன.

போரின் பின் படைத் தலைவன் சின்னத் திம்மன் உள் நாடு சென்று திருவனந்தபுரத்தை அழித்து, தமிழ்த் தெய்வமாகிய தமிழன்னை கோயில் கொண்டுள்ள கன்னியா குமரியில் ஒரு வெற்றித் தூண் நாட்டியதாக அறிகிறோம். வென்ற பகுதிகளைச் சீரமைத்து விசுவநாத நாயகனின் மதுரை ஆட்சியில் சேர்க்கும் பொறுப்பு விட்டலராசனுக்கு விடப்பட்டது.

### மதுரை நாயகமும் அரிய நாயகமும் ஆற்றிய பணி

நாயகங்கள்: *1550—1584*

விசுவநாத நாயகன் *1559*-க்கு முன்பே மூன்று தடவைகள் மதுரைப் பிரதிநிதியாகப் பொறுப்பு வகித்தாலும், கயத்தாறு தோவாளைக் கணவாய்ப் போர்களின் பின்னரே அவன் பதவி அப் பகுதிகளையும் உட்கொண்டு ஒரு மாமண்டல ஆட்சியாயிற்று. அரிய நாயக முதலியார் விசுவநாத நாயகனைப் போலவே விசய நகரப் பேரரசில் உயர் பதவி வகித்தவர். தென் மாமண்டலத்தில் விசுவ நாதனுக்கு அவர் அமைச்சர் ஆகவும் (தளவாய்) படைத் தலைவர் ஆகவும் (பிரதானி) இருந்ததுடன் தென்பாண்டி நாட்டின் தனிக் காவலராகவும் இருந்தார். இருவரும் சேர்ந்தே சில திருத்தங்களும் ஆட்சி நலங்களும் செய்தனராதலால் எது யார் செய்த செயல் என்று கூற முடியாத அளவு அவர்கள் பெயர்

களும் புகழும் பின்னப்பட்டுள்ளன. ஆயினும் அரிய நாயக முதலியார் விசுவநாத நாயகன் காலத்திலும் அவனுக்கடுத்த இரண்டு மதுரை நாயகர் காலத்திலும் பதவி வகித்து நீண்ட நாள் வாழ்ந்ததாக அறிகிறோம். அவர் 80 ஆண்டுகளுக்குக் குறையாமல் ஒருவேளை 100 ஆண்டுகள் வரை வாழ்ந்திருக்கக் கூடும்.

விசுவநாத நாயகன் ஆட்சியில் கம்பம் கூடலூரிப் பள்ளத் தாக்குச் சோழனால் கைப்பற்றப்பட்டு, அதனால் மதுரை நாய கத்துக் குரிய திறை கட்டாதிருந்தது. விசுவநாதனின் படைத் தலைவனான இராமபத்திர நாயகன் கம்பம் கோட் டையை முற்றுகையிட்டு அப்பகுதியைக் கீழடக்கி வழிக்குக் கொணடுவந்தான். இச் செயலுக்குப் பரிசாக அப்படைத் தலைவனுக்கு வடகரைப் பாளையம் அளிக்கப்பட்டது.

அரியநாயக முதலியார், கேசவப்ப நாயகன் ஆகிய இரு வர் உதவியுடன் விசுவநாத நாயகன் மதுரைக் கோட்டை கொத்தளங்களைச் செப்பம் செய்தான். கோயிலின் பல பகுதிகள் அவர்களால் கட்டப்பட்டன. ஆயிரக்கால் மண் டப வேலைப்பாடு அரிய நாயகத்தின் தனித்திறனுக்குரியதா யிருந்தது. அதற்கேற்ப, குதிரை மீதமர்ந்த நிலையிலுள்ள அரியநாயகத்தின் சிலை புது மண்டபத்தை அணி செய்து அவர் பெயரையும் புகழையும் இன்னும் நிலைநாட்டி வருகின்றது.

திருச்சியில் இரட்டை மதிலுள்ள கோட்டையையும், அகழியையும் அமைத்து விசுவநாதன் நகரை வலுப்படுத் தினான். திருச்சிக் கோயிலையும் இன்னும் விரிவான அளவில் சீரங்கம் கோயிலையும் அவன் கட்டுவித்தான். திருச்சி நகரத்தை இன்றும் தனியழகுடைய தாக்கி இயங்கும் தெப்பக்குளம் விசுவநாத நாயகன் கட்டியதே. புண்ணிய யாத்திரிகர்களுக் குத் தொல்லைதரும் திருடர்களை ஒழித்தும், காவற்படை ஏற் பாடு செய்தும், திருடர்களுக்குக் காப்பளித்த காடுகளைக் காவிரி இருமருங்கும் அழித்தும், அவன் அரும்பணி யாற் றினான்.

திருநெல்வேலியையும் கோயிலையும் திருவீதிகளையும் இன் றைய அழகிய நிலையில் விரிவுபடுத்தியவர் அரியநாயக முதலி யாரே. இன்னும் அவர் அரண்மனையிலேயே அவர் மரபினர் மேடை தளவாய் முதலியார் என்னும் பட்டத்துடன் வாழ்ந்து வருகின்றனர். வேளாண்மைக்கான ஏரி, குளம், கால்வாய் சிற்றூர் வாய்ப்பு வசதிகள் ஆகியவற்றிலும் அவர் கருத்துச் செலுத்தினர்.

விசுவநாதநாயகன் ஆட்சியில் பாளைய முறையைத் தமி ழகத்தில் திட்டமிட்டு நிறுவியவர் அரியநாயகமே என்று

தோற்றுகிறது. பாளையங்கள் அவ்வப்போது புதிதாக அமைக்கப்பட்டனவாயினும் தமிழகத்தில் 72 பாளையங்கள் என்னும் நிலையான மரபை அவை நாளடைவில் அடைந்தன.

பாளைய மரபு கால நிலைக்கேற்ற சிறந்த திட்டமேயானாலும் பின்னாட்களில் நாட்டின் ஒற்றுமைக்குக் கேடாய் அமைந்துள்ளது. தவிர அம் முறை நிலப்பண்ணை முறை நாகரிகத்தை வளர்த்து, தமிழகத்தையும் அது சூழ்ந்த நாடுகளையும் பிற்போக்கு நிலைக்குத் தள்ளக் காரணமாய் இருந்து வந்துள்ளது.

இராமராயனின் வடதிசைத் தொடர்புகள் (I) 1542—1560:

இராமராயன் தன் மாமனான விசய நகர முன்னோன் கிருஷ்ண தேவராயனைப் போலவே ஒப்பற்ற படைத்தலைவன், ஈடிணையற்ற வீரன். கிருஷ்ணதேவராயனைப் போலவே, அவனைவிட முனைப்பாக, முஸ்லிம் மன்னர்களின் மதிப்பையும் அச்சத்தையும் நட்பையும் அவனால் பெற முடிந்தது. பெருமிதமும் தாராள சிந்தையும் அவனுக்கு இன்னும் சிறப்பளித்தன. ஆனால் அவன் பேரவாவும், செருக்கும், அவன் அளவு மீறிய சூழ்ச்சி நயமும் அவன் அரசியல் வாழ்வின் கோட்டையைக் கெடுத்தன.

1542-ல் பிஜப்பூர் அரசன் முதலாம் அலி ஆதில் ஷாவும் (1537—1579) அகமதாபாத் அரசன் முதலாம் புர்ஹானீ நிஜாமும் (1508—1554) தமக்குள் ஒரு நேச உடன்படிக்கை செய்து கொண்டனர். இதன்படி பீஜப்பூர் விசயநகர் மீதும், அகமதுநகர் பீடார் மீதும் தாக்கும் தடையற்ற உரிமை பரிமாறிக் கொண்டன. ஆனால் பீஜப்பூர் தாக்கியபோது விசய நகரப் படைத் தலைவனான கேலாதித் தலைவன் சதாசிவநாயகன் அதைத் திறம்பட முறியடித்துவிட்டான். அதே சமயம் அகமது நகர் பீடாரைத் தாக்கியபோது இராமராயன் அதனுடன் துணை நின்றான். பீடாரிடமிருந்த கல்யாணிக் கோட்டை அகமதுநகர் வசமாயிற்று. ஆனால் புர்ஹானீ ஆட்சிக்குப்பின் கல்யாணி மீண்டும் கைமாறிற்று,

அகமது நகரின் அடுத்த அரசன் ஹுசைனி நிஜாம் ஷா (1554—1565)' கோலகொண்டா அரசன் இப்ராஹிம் குத்ப் ஷாவுடன் (1550—1581) சேர்ந்து பீஜப்பூரை 1557-ல் தாக்கித் தலைநகரான குல்பர்க்காவையும் முற்றுகையிட்டான். பீஜப்பூர் அரசன் அலி ஆதில் ஷா விசய நகரத்தின் உதவி கோரினான். இராமராயனும் தானே படையுடன் சென்று உதவி செய்து தாக்கிப் பகைவரை வென்றடக்கினான். அத்துடன் போர் முடிவில் விசயநகரம், பீஜப்பூர், அகமதுநகர்,

கோலகொண்டா ஆகிய நான்கு அரசுகளும் ஒருவரை ஒருவர் தாக்காமல் நேசமாகவும், பிறர் தாக்கினாலும் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்வதாகவும் கூட்டு நேசப் பொறுப்பு ஒப்பந்தம் செய்யும்படி தூண்டினான்.

இதன் பின் அந்நாளைய சூழ்நிலைகளிடையே மறக்க முடியாத ஒரு பொன் நிகழ்ச்சி ஏற்பட்டது. இராமராயனின் புதல்வன ஒருவன் அச்சமயம் காலமாய் இருந்தான். உறவினர் ஒருவருக்கொருவர் துயரில் பங்குகொள்வதுபோல பீஜப்பூர் அரசன் அலி ஆதில ஷா இராமராயன் அரண்மனையில் வந்து துயருசாவினான். இதற்கேற்ப இராமராயன் மனைவியும அவனை ஆவலுடன் வரவேற்றுப் பாராட்டினாள். அத்துடன் இழந்த மகனின் இடத்தில் அவனையே மகனாகத் தேர்வு செய்து கொண்டாள்.

இந்த இனிய அன்பு நிகழ்ச்சியிலேகூட இராமராயன் இயல்பான பெருமிதப் போக்கு அலி ஆதில் ஷாவின் மனத்தில் ஓர் ஆழ்ப்புண் உண்டுபண்ணிற்று. மகனாக ஏற்றபின்பு அன்புத் தநதை என்ற புதிய உரிமை காட்டி அவன் போகும் போது இராமராயன் அவனைச் சென்று வழியனுப்பவில்லை.

ஜம்கெட் போர் 1560:

அகமது நகர் அரசன் ஹுசேனி நிஜாம் ஷா கூட்டு ஒப்பந்தத்தை மதியாமல் 1560-ல் பீஜப்பூரின்மீது படையெடுத்துத் தலைநகரான குல்பர்க்காவை முற்றுகையிட்டான். அலி ஆதில் ஷா தோற்றோடி வந்து விசய நகரில் தஞ்சம் புகுந்தான். இராமராயன் உடனே கூட்டொப்பந்தத்தின் வாசகத்தை நினைவூட்டிக் கோலகொண்டவை உதவிக்கு வரும்படி அழைத்தான். வேண்டா வெறுப்பாகவே கோலகொண்டா அரசன் அழைப்பை ஏற்று உதவ ஒத்துக்கொண்டான்.

உசேன் இந்த ஒற்றுமையை எதிர்பார்க்கவில்லை. ஆகவே அவன் தான் முற்றுகை இட்டுக்கொண்டிருந்த கல்யாணிக் கோட்டையின் தாக்குதல் பொறுப்பைத் தன் படைத் தலைவன் போபால் ராஜிடம் விட்டுவிட்டு அகமது நகருக்கு சென்றான். விசயநகர நேசப்படைகள் அவனைத் துரத்திச்செல்ல முனைந்தன. ஜம்கெட் என்னும் இடத்தில் ஹுசேன் எதிர்த்துத் தாக்கினான். ஆனால் இப்போரில் அவன் படைகள் தோல்வியுற்றுக் கலைந்தோடின. நேசப்படைகள் அவற்றை விடாது தௌலதாபாத் வரை பின் தொடர்ந்தன. ஹுசேன் இனி எதிர்ப்பதில் பயனில்லை என்று கண்டு கல்யாணி கோட்டையைத் திருப்பித்தந்து இணக்க உடன்படிக்கை செய்து கொண்டான்.

## இராமராயன் வடதிசைத் தொடர்புகள் (II) 1560—1564

தென்னக இஸ்லாமிய மன்னரிடையே இராமராயன் வீரம் விசய நகரம் கூட இதுவரை கண்டிராத பெரு வெற்றிகளையும், பெரு மதிப்பையும் அவனுக்குத் தந்திருந்தது. சில நாட்களுக்குள் இந்து—முஸ்லீம் என்ற வேறுபாடகற்றி ஒரு புதிய தென்னகத் தேசியத்தைக்காணவும், ஆற்றலும் பண்பும் அவனிடம் இருந்தன. ஆனால் அவன் பேரவா இதனைத் தடுத்தது. அவனது பெருமிதப் போக்கே தென்னகத் தேசிய வாழ்வில் உள்ளூர வடக்கிருந்து வந்து அரித்து வந்த போலிப் பண்புகளை—மத மாச்சரிய உணர்ச்சியை—முஸ்லீம்கள் மராத்தியர் போன்ற இனங்கள் கொள்ளை யடிக்கவும், பிறர் கொள்ளை கொடுக்கவுமே பிறந்தவர்கள் என்ற இனச் செருக்கையும், அதற்கு ஆட்பட்டுச் செயலற்று நலிந்த பிற இனங்களின் ஏலாக்கோழைமையையும் அவன் உணர்ந்து கொள்ளவில்லை. ஆகவே மேலும் மேலும் தன் தனி வெற்றிகளைப் பெருக்கி முஸ்லிம் அரசுகளின் பொறாமைக்கும் பகைமைக்கும் வழி வகுத்தான். தலைக் கோட்டைப் போரின் அழிவு நோக்கி இது அவனைக் கொண்டு சென்றது.

ஜம்கெட் போருக்குப் பின் இராமராயன் பீடார் மீது படையெடுத்து, அதன் அரசன் அலிபரீத்ஷா (1538—1582) வை வென்றான். ஆனால் தன்னுடன் கூட்டுநேச ஒப்பந்தம் செய்து கொள்ளும்படி தூண்டுவதற்கு மட்டுமே இவ் வெற்றியை அவன் பயன்படுத்தினான். இப்பெருந் தன்மையைப் பிரித்தாளும் சூழ்ச்சி என்று மட்டுமே பீடாரும், மற்ற முஸ்லிம் அரசுகளும் கருதியிருக்கக் கூடும்.

இராமராயன் அரசியல் வாழ்வு கோலகொண்டாவிலேயே தொடங்கியிருந்தது. கோலகொண்டாவின் அரசியல் சூழலில் அவனுக்கு நண்பர்களும் மிகப் பலராகவே இருந்தனர். சிறப்பாக, இப்ராஹிம் குத்ப் ஷா, அரசுரிமைப் போராட்டச் சமயம் தமயன் சீற்றத்துக் கஞ்சி விசய நகரத்துக்கே வந்து இராமராயன் ஆதரவும் உதவியும் பெற்றான். இராமராயன் உதவியுடனேயே அவன் ஆட்சி (1550—1571) தொடங்கிற்று. ஆயினும் அகமது நகரை எதிர்க்க இராமராயன் அழைத்தபோது அவன் மனமில்லாமலே இணங்கினான். ஏனெனில் இராமராயன் மீது உள்ளூர அவன் பொறாமை கொள்ளலானான். ஆகவே அவன் மிக விரைவில் அகமது நகருடன் சேர்ந்துகொண்டு கல்யாணிக் கோட்டையை மீட்டும் தாக்க முற்பட்டான்.

இராமராயன் அவனுக்குப் பாடம் படிப்பிக்க எண்ணி முற்றுகை தகர்க்கத் தான் புறப்படும் சமயம், தன் தம்பி வேங்கடாத்திரியின் தலைமையில் ஒரு படையைக் கோல கொண்டாவின் மீதே ஏவினான். இராமராயன் படைகளும் பீஜப்பூர் படைகளும் சேர்ந்து கல்யாணி முற்றுகையைத் தகர்த்தன. அகமதாபாதுப் படைகளும் கோல கொண்டாப் படைகளும் தத்தம் நகர்களுக்கு கலைந்தோடத் தொடங்கின. இராமராயன் அகமது நகர்ப் படைகளையும், பீஜப்பூர் மன்னன் கோல கொண்டாப் படைகளையும் துரத்திக்கொண்டே அவரவர் நாடுகள் சென்றார்கள்.

அகமது நகரைச் சூறையாடிப் பணிய வைத்தபின் இராமராயனும் பீஜபூர் மன்னனும் சேர்ந்து கோல கொண்டாவைப் பல போர்களில் முறியடித்துத் தாக்கினர். ஏற்கெனவே வேங்கடாத்திரியால் அவதியுற்று வந்த கோலகொண்டா மேலும் அல்லோல கல்லோலப்பட்டது. எதிரிகள் கவனத்தைத் திருப்ப அவன் கொண்டவீட்டைத் தாக்க முற்பட்டான். ஆனால் இதிலும் தோல்வியடைந்தான். இறுதியில் 1563-ல் கோவில்கொண்டா, கஞ்சரா, பாங்கல் ஆகிய கோட்டைகளை விட்டுக் கொடுத்து அவன் பணிய நேர்ந்தது.

இப்ராஹிம் குத்ப்ஷாவின் உள்ளம் இப் படுதோல்வியால் வேதனையிலும், தாங்கமாட்டா அவமதிப்பிலும் கிடந்து தத்தளித்தது. அந்தத் தத்தளிப்பிலிருந்து அதற்கு ஒரு புதிய படிப்பினை ஏற்பட்டது. ஒரு புதிய கொள்கையும் உருவாயிற்று. 'தென்னக முஸ்லிம் அரசுகள் இனி தனித்து வாழ முடியாது-வாழ முயன்றால் வளர்ந்துவிட்ட இந்தப் பேரரசின் காலடியில் கிடந்து தன் மதிப்பிழக்கவே நேரும்'—இதுவே அவன் பெற்ற படிப்பினை. 'எப்பாடுபட்டாவது எல்லா முஸ்லிம் அரசுகளும் சேர்ந்து இந்த ஆணவ மிக்க பேரரசை ஒழித்தாக வேண்டும்'-இது அவன் உள்ளத்தில் உருவாகிய புதிய கொள்கை.

தலைக் கோட்டைப் போரின் மூலம் குறுகிய எல்லையில், இப்ராஹிமின் படிப்பினையும் கொள்கையும் பயன் கண்டன. ஆனால் அதன் பயனைத் துய்க்கத் தென்னக முஸ்லிம் அரசுகள் நீடித்து வாழவில்லை. அது மட்டுமன்று. தென்னக முஸ்லிம் அரசுகளும்,அவற்றை அழிக்கவந்த வடதிசை முஸ்லிம் பேரரசு கூட, நீடித்து வாழவில்லை. தொலைத் தேசிய நோக்கு—படிப்படியாக விரிந்து செல்லும் தற்பண்பிலூறிய சங்க காலத் தமிழ்த் தேசியப்போக்கு-தென்னகத்தை இன்னும் அணையவில்லை.

## தலைக்கோட்டைப் போர் அல்லது இராட்சசத் தங்கடிப் போர் 1565

இப்போர் நடந்த இடம் கிருட்டிணை யாற்றுக்குத் தெற்கே யாகும். ஆற்றுக்கு மறுகரையில் இதற்கு அருகாமையாக இராட்சசி, தங்கடி என்ற இரு சிற்றூர்கள் இருந்தன. அவை ஒன்றுக்கொன்று பத்துக்கல் இடைவிட்டுக்கிடப்பவை. முஸ்லிம் அரசுகளின் படைகள் தங்கியிருந்த இடம் தலைக்கோட்டை என்ற ஊருக்கு அருகில் இருந்தது. அங்கிருந்து கிருஷ்ணை யாற்றைக் கடந்து வந்த பின்னரே போர் நடைபெற்றது. கன்னடமொழியின் பழைய வரலாற்றேடு ஒன்று இந்நிலைகளை விளக்கி, போர், தலைக்கோட்டைப் போர் என்று அழைக்கப் படுவதைவிட, அருகில் உள்ள இரு சிற்றூர்ப் பெயர்களையும் இணைத்து இராட்சச தங்கடிப் போர் என்று கூறுவதே பொருத்தமென்று வாதிக்கிறது. கிராண்ட் டஃவ் போன்ற வரலாற்ருசிரியர் சிலர் இதனை ஏற்று இப் பெயரை மேற் கொண்டுள்ளனர். ஆனாலும் தலைக்கோட்டைப் போர் என்ற பெயரே பெருவழக்காகப் பரந்து புகழ் அமைந்துளளது.

மேனாட்டு வடநாட்டு வரலாற்று முக்கியத்துவம் உடைய போர்களுடன் இணையாகத் ‘தென்னாட்டுத் திரபால்கர் போர்’ ‘தென்னாட்டுப் பானிபட்டு’ என்று இப் போர் குறிக்கப்பட் டுள்ளது.

இப்போருக்கு மூலகாரணமாய் இருந்தவன் கோல கொண்டா அரசன் இப்ராஹிம் குத்ப் ஷாவே யாவன். அவனும் அகமதுநகர் அரசன் ஹுசேன் நிஜாம் ஷாவும்தான இராமராயனின் பேரவாவாலும் பெருமித வீரப் போக்குக ளாலும் மிகவும் துயரத்துக் குள்ளானவர்கள். எனவே இருவ ரும் முதலில் கலந்து பேசி ஐந்து முஸ்லிம் அரசுகளையும் விசய நகருக் கெதிராக ஒன்றுபடுத்த அரும்பாடு பட்டனர். மாதக் கணக்காக இஸ்லாமிய அரசியல் தூதர்கள் அவற்றிடையே போக்கு வரவு நடத்தினர். இதன் பயனாக, கோலகொண்டா, அகமதுநகர், பீடார் அகியவற்றின் முழு ஒத்துழைப்பும் கிடைத்தது. பீஜப்பூர் அரசன் அலி ஆதில்ஷாவையும் கூட்டில் இணைக்க அரசியல் தொடர்புகள் மட்டுமன்றி மணத் தொடர் புகளும் நாடப்பட்டன. அலி ஆதில்ஷாவுக்கு அகமதுநகர் அரசன் ஹுசேன் நிஜாம் ஷாவின் புதல்வி சாந்து பீபியையும், அகமதுநகர் இளவரசனுக்கு பீஜப்பூர் அரசன் அலியின் உடன் பிறந்த நங்கையருள் ஒருத்தியையும் மணம் முடிக்கப் பட்டது. இவ்வாறு அரசியல் நேச இணைப்புடன் குடும்ப மண உறவிணைப்புகளும் சேர்ந்த பின்னும்கூட போர்க்களத் தில் சந்திக்கும்வரை பீஜப்பூர் அரசன் அலி இரு திசையிலும்

இரண்டகமாகவே நடந்து கொண்டான். ஆனால் போர்க் களத்தில் இறுதியாக அவன் முஸ்லிம் அரசுக் கூட்டுடன் சேர்ந்து போரிட்டான்.

முஸ்லிம் அல்லாதவரின் வரலாற்றுதாரங்கள் இஸ்லாமிய மன்னர் ஐவருமே இப் போரில் ஒன்றுபட்டதாகக் கூறுகின்றன. ஆனால் முஸ்லிம் ஆதாரங்கள் காட்டுகிறபடி அக் கூட்டில் இறுதிவரை பீரார் கலந்து கொண்டதாகத் தெரியவில்லை.

முஸ்லிம் மன்னர்களின் படைகள் பிஜப்பூரில் ஓரிடத்தில் வந்து கூடி 1564-ம் ஆண்டு இறுதியில் புறப்பட்டன. விசய நகரத்திலும் மகா நவமி நாளன்றே இராமராயன் பெருமக்களிடம் வரவிருக்கும் பெரும் போர் பற்றிய தகவலறிவித்து பேரரசின் முழு வலிமையையும் திரட்ட ஏற்பாடுகள் செய்யும்படி கட்டளையிட்டான்.

முஸ்லிம் மன்னர் படைகள் டிசம்பர் 24லேயே கிருட்டிணையாற்றங்கரையில் உள்ள தலைக்கோட்டையருகே வந்துதங்கின. விசயநகரப் பேரரசின் படை வீரர்களும் நாலாபக்க மிருந்து வந்து குழுமினர். விசயநகரப் படைவீரரின் மொத்த எண்ணிக்கை பத்து இலட்சம் என்று இஸ்லாமிய வரலாற்றாசிரியர் பிரிஷ்டா கூறுகிறார். போரில் இராமராயன் மட்டுமன்றி அவன் உடன் பிறந்தார்களான திருமலையும் வெங்கடாத்திரியும் தத்தம் படைகளின் தலைமையில் வந்து கலந்துகொண்டார்கள். தோல்வியே கண்டிராத இராமராயன் வீறமைதியுடனும், அசையா வெற்றி யுறுதியுடனுமே படைக்களத்தை அணுகினான். அவன் இச் சமயம் வயது முதிர்ந்து தளர்ந்த உடலுடையவனாயினும், தானே நேரில் இருந்து போர் நடவடிக்கைகளை நடத்த வேண்டுமென வற்புறுத்தினான். அவன் ஏறியிருந்த சிவிகை போர்க்களமெங்கும் துழாவிக்கொண்டிருந்தது.

இருதரப்புகளின் பெரும் படைகளும் எதிர் எதிராகப் போரை எதிர்பார்த்த வண்ணம் ஒரு மாத காலம் தங்கியிருந்தன. போராட்டம் 1565 ஜனவரி 23லேயே நடைபெற்றது.

போர் தொடங்குமுன் இரு பக்கங்களிலுமிருந்து சிறு சிறு தாக்குதல் எதிர் தாக்குதல்கள், வலிமைத் தேர்வுகள் நடைபெற்றன. அவற்றுள் ஒன்றில் அகமது நகர மன்னன் நிஜாம் ஷாவும், கோலகொண்டா மன்னன் குத்ப்ஷாவும் விசயநகரப் படைகளால் முறியடிக்கப்பட்டுச் சிதறி யோடினர். விசய நகரின் பேராற்றலை இவ்வாறு தொடக்கத்திலேயே அறிந்த பின் எதிர்த்து வெற்றிபெற்று விடமுடியும் என்ற நம்பிக்கை

முஸ்லிம் அரசுகளுக்குத் தளர்வுற்றது. எப்படியும் சூழ்ச்சியால் எப்பாடுபட்டாவது இல்வலிமை வாய்ந்த பேரரசினை வென்று அழித்துவிட வேண்டுமென்று இருமன்னரும் திட்டமிட்டனர். அதன்படியே நேசமாக இணங்கிப்போக விரும்புவதாக இரு மன்னரும் பேச்சுறவு தொடங்கினர். ஆனால் இந்த நயவஞ்சகத்திரைக்குப் பின்னால் மூன்று பகைச் செயல்கள் திறம்படச் செய்து முடிக்கப்பட்டன.

முதலாவது பிஜப்பூர் அரசன் அலி படையுடன் களம் வந்திருந்தானே ஒழிய எப்பக்கம் சேர்வதென்று இன்னும் முடிவு செய்யாமலேயே ஊசலாடி வந்தான். மற்ற இரு அரசரும் நேச இணக்கப் போர்வையில் கிடைத்த நேரத்தில் அவனுடன் நெருங்கி உறவாடி அவன் ஆதரவைப் பெற்றனர். அதே சமயம் கோலகொண்டா அரசனின் ஆட்கள் அதே போர்வையில் விசயநகரத்தின் முஸ்லிம் படைத்தலைவர்களைச் சந்தித்து அவர்கள் உள்ளத்தை தம் பக்கமாகக் கரைத்தனர். மூன்றாவதாக இணக்க நேச நடவடிக்கைகளில் ஒன்றாகக் கிருட்டிணையாற்றைக் கடக்க இருந்த இடத்திலிருந்து முஸ்லிம் மன்னர் படைகள் விலகிச் செல்வதாகப் பாவிக்கப்பட்டது. இதை நம்பிய விசய நகரப்படைகள் அத்திசையிலிருந்த காவலை வேறு திசைக்கு மாற்றிற்று. இதற்கே காத்திருந்த முஸ்லிம் மன்னர் படைகள் ஆற்றைக் கடந்து வந்து படைப் பாசறையையே தாக்கத் தொடங்கின.

திடீர்த் தாக்குதலால் ஏற்பட்ட குழப்பத்தை இராமராயன் மிக எளிதில் சமாளித்தான்.

விசயநகரப் படைகளின் நடுப் பேரணியின் களப்போரில் இராமராயனே தலைவனுயிருந்தான். அவனை எதிர்த்து மறு பக்கத்தில் அகமது நகர் அரசன் நிஜாம் ஷாவும் அவன் படைகளும் நின்றன. இராமராயன் இடதுபுற அணி அவன் தம்பி திருமலை தலைமையிலும், வலதுபுற அணி மற்றத் தம்பியான வெங்கடாத்திரியின் தலைமையிலும் நின்றன. திருமலையை எதிர்த்து மறுபுறம் பீஜப்பூர்ப் படைகளும் நிறுத்தப்பட்டிருந்தன.

தென்னகத்தின் வரலாற்றையே பெரிதும் மாற்றியமைத்த இப் பெரும் போர் நான்கு மணி நேரத்துக்குள்ளாகவே முடிவடைந்துவிட்டது என்று தெரிகிறது. போர்வெற்றி விசயநகரத்தின் பக்கமே மேன்மேலும் சாய்ந்து வருவது கண்டு இஸ்லாமிய மன்னர் தம் கடைசிச் சூழ்ச்சித் துருப்பையே தட்டிவிட்டனர். போரின் உயிர் நெருக்கடியான கட்டத்தில் விசயநகரத்தின் முஸ்லிம் பெரும்படைத் தலைவர்

களில் இருவர் திடுமென எதிர் பக்கம் சேர்ந்து தம் மன்னனையே எதிர்க்கத் தொடங்கினர். அவர்கள் ஒவ்வொருவர் கீழும் எழுபதினாயிரம் எண்பதினாயிரம் படைவீரர் இருந்ததனால், இது போரின் போக்கையே மாற்றிற்று. இதனைக் கண்டு இராமராயன் சிறிது நேரம் அதிர்ச்சியுற்றுத் திகைப்படைந்தான். பின் அதனால் ஏற்பட்ட குழப்பத்தைச் சமாளிக்க அரும்பாடுபட்டான். ஆனால் துரதிருஷ்ட வசமாக, அக்குழப்பத்தினிடையே அவன் அசமது நகர் அரசன் கையில் சிறைப்பட்டான். நிஜாம் ஷா அக்கணமே அவன் தலையை வெட்டி ஓர் ஈட்டியில் குத்தி விசய நகரப் படைகளெல்லாம் காணும்படி உயர்த்தினான்.

இராமராயன் வீரப்படைத் தலைமை ஒன்றையே அரணாகக்கொண்டிருந்த விசயநகரப் பேரரசின் வலு அக்களத்திலேயே உடைவுற்றது. ஓடுவது ஒன்றையே குறியாகக் கொண்டு விசயநகரப் படைகள் சிதறிப் பின்னடைந்தன. அப் படைவீரர்களைக் கொன்று குவித்து, ஓடுபவர்களைத் துரத்திக்கொண்டே இஸ்லாமியப் படைவீரர்கள் விசய நகரம் வரை தொடர்ந்தனர்.

போர்க்களத்தின் கிலியும் குழப்பமும் பேரரசெங்கும் பரந்து நகரினுள்ளும் புகுந்தது. படைகளைச் சீரமைத்துப் பாதுகாப்புப் போர் நடத்தவோ, பேரரசினுள்ளும் நகரினுள்ளும் வரும் பாதைகளைக் காக்கவோ யாரும் எத்தகைய நடவடிக்கைகளிலும் முனையவில்லை. அவைபற்றி எண்ணவுமில்லை. வழி திறந்து வாயில் திறந்து வைத்திருந்த நகரத்துக்குள் முதல்முதல் புகுந்தவர்கள் தலைபிழைத்துத் தோற்றோடி வந்த வீரரும் தலைவர்களுமே. அவர்களும் கிலியைப் பரப்புவதன்றி வேறெதுவும் செய்யவில்லை.

களத்திலேயே விசயநகரத்து வீரர் ஓர் இலட்சம் பேர் படுகொலைக்காளாயினர் என்று கூறப்படுகிறது. நிலைமையைத் தமக்குச் சாதகமாகக் கொண்ட திருடர் கொள்ளைக்காரர் குழாங்களே துரத்திவரும் எதிரி படைகளின் முன்னணிக் குழாங்கள் ஆயின. தென்னகத்தின் தலைசிறந்த செல்வநகர் நாட்கணக்காக, வாரக் கணக்காகப் பகற்கொள்ளை, கொலை, சூறையாட்டு முதலிய அவதிகளுக்கு இரையாயிற்று. முஸ்லிம் அரசர் படைவீரர்களில் களத்தில் சாகாது பிழைக்கும்பேறு அடைந்த ஒவ்வொருவரும் இப்போரின் பின் தம் காலம்வரை பெருஞ் செல்வராயிருந்து வந்தனர் என்று முஸ்லிம் வரலாற்றாசிரியர் பெரிஷ்டா குறித்துள்ளார்.

மதுரையில் விசுவநாதநாயகனின் அமைச்சரும் படைத்தலைவருமாயிருந்த அரியநாயக முதலியார் இப்போரில்

கலந்துகொண்டு தப்பிப் பிழைத்துச் சென்றவருள் ஒருவர் என்று கூறப்படுகிறது.

போரிலிருந்து மட்டுமன்றி நகரிலிருந்தே தப்பிச் சென்றவர்களில் இராமராயன் உடன் பிறந்தார்களான திருமலையும் வெங்கடாத்திரியும் குறிப்பிடத்தக்கவர்கள். நகரத்தையும் நகர மக்களையும் அவரவர் தலைவிதிக்கே விட்டுவிட்டுப் பெயரளவிலேயே பேரரசனாகச் சிறைப்பட்டுக் கிடந்த சதாசிவனுடனும், பேரரசின் பெருஞ் செல்வத் திரளுடனும் அவர்கள் விரைந்து பாதுகாப்பாகப் பெனுகொண்டா சென்று சேர்ந்தனர். இராமராயன் குவித்து வைத்த செல்வங்கள் 1550 யானைகளில் ஏற்றிச் செல்லப்பட்டனவாம்!

திருவாரூரில் பிறக்கமுத்தி, தில்லையில் இறக்கமுத்தி என்று பல நகரங்களுக்குச் சிறப்பு ஊழ்வலியுண்டு என்று தமிழர் கூறுவதுண்டு. அது அவ்வளவு கண்கண்ட உண்மையாகிலும் ஆகாவிட்டாலும், 1565-ம் ஆண்டு ஜனவரி 24-ந் தேதி வரை விசயநகரத்தில் வாழும் தலையெழுத்து உடையவர் அனைவரும் மனையிழந்து, பொருளிழந்து, மானமிழந்து, சுற்றமிழந்து மாண்டு மடிந்தனர் என்பது அந்நாளைய உலகுக்குக் கைகண்ட உண்மையாயிற்று. அந்நகர் திரும்பவும் என்றென்றுமே தலையெடுக்கவில்லை. சிற்றூராகக்கூட வாழவில்லை. ஏனெனில் அந்த ஒருநாள் நிகழ்ச்சி அதனருகேகூட மக்கள் செல்ல விடாமல் நெடுநாள் தடுத்தது. திருமலை அதை எப்படியும் தலைநகரமாக்கப் பாடுபட்டும் அதில் எவரையும் குடியேறச் செய்ய முடியவில்லை என்று அறிகிறோம்.

வெள்ளையராட்சியில் வரலாற்று ஆராய்ச்சி மீண்டும் அதன் பெயர் கூறும் வரை தென்னாட்டவரும், வரலாறும்கூட அந்த நகரையும், நகர வாழ்வையும், அதில் ஆண்ட பேரரசரையும் முழுக்க முழுக்க மறந்தன. ஆந்திர நாட்டின் சிற்றூர்க் குடியான மக்கள்கூட இரண்டாயிர ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த கரிகாலனைப்பற்றிய செய்திகளை மறவாது மனதில் கொண்டு கூறும் தென்னக வாழ்வில், நானூறு ஆண்டுகளுக்கு முன்னரே பெரு வாழ்வு வாழ்ந்த நகரையும் பிரிட்டிஷ் ஆட்சி வரையும் மரபு நீடித்திருந்த அதன் பேரரசாட்சியையும் முற்றிலும் மறந்தே போய்விட்டனர். வரலாற்றாராய்ச்சிக்குப் பின்னும்கூட 15-ம் நூற்றாண்டில் பாரசீக அமைச்சன் அப்துர் ரஸாக்கும் 16-ம் நூற்றாண்டில் போர்ச்சுகீசியத் தூதன் பேஸூம் (Paes) அந்நகரின் பெருஞ் செல்வப் பகட்டாரவாரத்தைப் படம் பிடித்துப் போகாமல் இருந்தால், அதை நாம் மனக்கண்ணால்கூட மதிப்பிட்டுக் காண முடியாது, அந்நகரின் அழிபாடுகளிடையேயும்

தென்னகமெங்கும் விசயநகரப் பேரரசர் பாரிய கோயில் பணிகளிலேயும் அவர்கள் கலைப் பெருமையை இன்னும் காண்கிறோம்.

நகரின் சுற்றளவு 28 கல்லென்பது அதன் பெருமையை நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

தும்பிச்சி நாயகன் எழுச்சி 1565

மதுரை மாமண்டலத்தில் விசுவநாத நாயகனுக்குப் பின் மதுரை அரசு மரபு இரண்டு நூற்றாண்டுகளுக்குமேல் தமிழகத்தின் வல்லரசாக நீடித்தது. விசுவநாத நாயகன் புதல்வன் முதலாம் கிருட்டிணப்ப நாயகன் (1569—1572) தலைக்கோட்டைப் போருக்கு முந்திய ஆண்டே அரசிருக்கை ஏறினான். பெயரளவில் அவன் பின்னோருள் பலரும் விசயநகரப் பேரரசின் மேலுரிமையை ஒப்புக்கொண்டு அவ்வப்போது திறை யனுப்பினாலும், அவர்கள் சிறிது பழம் பாசத்தொடர்புடைய தனி வல்லரசாகவே பெரிதும் இருந்தனர் என்னலாம்.

கிருட்டிணப்பன் ஆட்சியின் இரண்டாம் ஆண்டிலேயே தொட்டியர் தலைவனாகிய தும்பிச்சி நாயகன் மதுரை நாயகத்துக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தான். இதற்கு முக்கியமான காரணம் பாளையக்காரர்களுள் ஒருவராக அவன் நடத்தப்பட விரும்பாததே யாகும். வரலாற்று ஆதாரங்கள் அவனைச் 'சில்லவார் கோமான்' 'வங்கமன்னன்' என்று புகழ்கின்றன. அச்சுதராயன் காலத் தமிழகக் கிளர்ச்சியிலேயே அவன் மரபினர் ஈடுபட்டிருந்தனர். மதுரைக்குக் கீழ்ப்படாமல் தன்னாண்மை பெற அவன் எண்ணினான். தன் பரமக்குடிக் கோட்டையைச் செப்பம் செய்து வலுப்படுத்திக்கொண்டு வீரர் பலரைத் திரட்டிச் சுற்றிலும் உள்ள மதுரையாட்சிப் பகுதிகளைச் சூறையாடத் தொடங்கினான்.

கிருட்டிணப்ப நாயகன் இக் கிளர்ச்சியை அடக்குவதில் விரைவும் திறமும் காட்டினான். விசுவநாதன் காலத்திலிருந்தே திறம்படப் பணியாற்றிய தளவாய் பெத்த கேசவப்ப நாயகன் மகன் சின்ன கேசவனை அவனை அடக்கும்படி அனுப்பினான். மதுரைப் படைகளுடன் மதுரையாட்சிக்கு ஆதரவான பாளையக்காரர் பதின்மூவர் படைகளும் சேர்ந்து கொண்டன. மிகக் கடும் போரிட்ட வண்ணமே தும்பிச்சி நாயகன் இறுதியில் பிடிபட்டுத் தூக்கப் பெற்றான். மதுரை நாயக அரசன் தும்பிச்சி நாயகனின் இரு புதல்வர்களையும் பெருந் தன்மையுடன் நடத்தி அவர்களுக்கு பரமக்குடி கோட்டையையும் பாளையத்தையும் அளித்தான். ஆனால் பிற

பாளையங்களின் அளவுக்கு மேற்படத் தும்பிச்சி நாயகன் கொண்டிருந்த பெரும் பரப்பையும் கிளர்ச்சியின்போது வென்ற பரப்புக்களையும் மதுரை நேரடியாட்சிக்கு மாற்றினன்.

## இலங்கைப் படையெழுச்சி: புத்தளம் போர்

தமிழக வரலாறு கூறும் தெலுங்கு மொழி ஏடுகள் பலவற்றுள் ஒன்று 'சிங்கள த்வீபகதா' என்பது. அது கிருஷ்ணப்பனின் இலங்கை வெற்றி பற்றி விரிவாகவும் விளக்க நுணுக்கமாகவும் எடுத்துக் கூறுகிறது. இலங்கை 'மகாவம்சோ' ஏட்டிலோ கல்வெட்டிலோ இதற்கு மிகுதியான சான்றுகள் கிட்டவில்லை. இதனல் இது அரசனகுமுன் கிருட்டிணப்பன் விட்டலராசன் படைகளுடன் சென்று ஆற்றிய ஒரு போராயிருக்கக்கூடும் என்று சில வரலாற்ருசிரியர் கூறுகின்றனர். ஆனல் சமகால வரலாற்றேடு கூறும் விளக்க நுணுக்கமான செய்திகளை மறுக்க ஏது எதுவும் இல்லை. பெயரளவிலே விசயநகரப் பேரரசனை சதாசிவராயனின் கல்வெட்டுக்கள் 1564—1565லேயே அவன் இலங்கையில் போர் நடத்தியதாகக் குறிக்கின்றன. 1567க்குரிய திருமங்கலம் கல்வெட்டொன்று 'வீரவசந்தராயன்' என்ற ஒரு தலைவன் இலங்கையை வென்றதாகக் குறிக்கிறது. கிருட்டிணப்ப நாயகன் ஆட்சியின் முதலிரண்டாண்டுகளுக்குள்ளேயே இது நிகழ்ந்திருக்க வேண்டுமென்பதை இது காட்டுகிறது. தவிர வரலாற்றேடு இவ்வெற்றியுடன் தும்பிச்சி நாயகன் கிளர்ச்சியை இணைத்தே கூறுகிறது.

கண்டியிலிருந்து கொண்டு இலங்கையாண்ட அந் நாளைய அரசன் தும்பிச்சி நாயகனின் பெரு நண்பன் என்று வரலாற்றேடு குறிக்கிறது. தும்பிச்சி நாயகனைக் கொலைத் தண்டனைக்காளாக்கிய செயல் பற்றி அவன் இழிவாகப் பேசியதாலேயே படையெடுப்பு நடந்ததாக அது குறிக்கிறது. ஆனல் வெறும் பேச்சுடன் நில்லாமல் விசயநகரப் பேரரசின் பிரதிநிதி என்ற முறையில் மதுரைநாயகனுக்குத் திறையனுப்பாமலிருந்ததே படையெடுப்பின் காரணமாயிருந்திருக்க வேண்டும் என்பதைப் போரின் போக்கும் முடிவும் காட்டுகின்றன.

கிருட்டிணப்ப நாயகன் தமிழகத்தின் 52 பாளையக்காரரை அவர்கள் படைகளுடன் அனுப்பினன். அவர்கள் நவபாடாணத் துறைமுகத்தில் கப்பலேறி மன்னர் துறைமுகத்தில் சென்று இறங்கினர்கள். அங்கிருந்து அனுப்பப்பட்ட தூதனிடம் திறை தந்து பணிய மறுத்துக் கண்டி அரசன் நான்கு அமைச்சர்களையும் எட்டு மாகாணத் தலைவர்களையும் (தேச

நாதர்களையும்), 40,000 படை வீரருடன் நாயகப் படைமீது ஏவினான்.

நாயகப் படைகளின் தலைவன், தும்பிச்சி நாயகனை அடக்கிய சின்ன கேசவ நாயகனே. அவன் யுத்தளத்தில் ஆற்றிய போரில் வெற்றி கண்டு இருபதினாயிரம் வீரரையும், அமைச்சர்களில் இருவரையும், மாகாணத் தலைவர்களில் ஐவரையும் சிறைப்பிடித்தான். சிறைப்பட்டவர்களைச் சின்ன கேசவ நாயகன் நல்லாதரவுடன் நடத்தி அவர்களில் சிலரையே மீண்டும் தூதராக அனுப்பினான். பணிந்துபோகும்படி அவர்கள் கண்டி அரசனை மீண்டும் பணிந்து வேண்டினர். ஆனால் அவன் பணியாது மறுத்து மீண்டும் போருக்கெழுந்தான்.

இரண்டாவது போர் முன்னிலும் கொடியதா யிருந்தது. கண்டிப் படைகளில் 60,000 நாட்டு வீரரும் 10,000 அயலவரும் இருந்ததாகக் கூறப்படுகிறது. அயலார் (காபிரிகள்) என்று இங்கே குறிக்கப்பட்டது போர்ச்சுகீசியராய் இருத்தல் கூடும். இப் போரிலும் 8,000 நாட்டு வீரரும் 8,000 அயலவரும் உயிரிழந்தனர். ஆனால் கண்டியரசன் பணிந்து கொடுக்கவுமில்லை. உயிருடன் சிறைப்படவும் மறுத்தான். அவன் உயிரற்ற சடலமே நாயகப்படைத்தலைவன் கைப்பட்டது. ஆனால் இங்கும் படைத்தலைவன் பெருந்தன்மை காட்டி அரசனுக்குரிய மதிப்புடன் அவ் வுடலைத் தலை நகருக்கு எடுத்துச் சென்று அடக்கம் செய்தான்.

இறந்த அரசன் குடும்பத்தினர் இலங்கையின் பழய தலைநகரத்துக்கு மதிப்புடன் அனுப்பப்பட்டனர். மதுரை மன்னன் கிருட்டிணப்பன் இலங்கையில் மூன்று நாள் தங்கியிருந்தான். தன் மைத்துனனை விசய கோபாலனையே தன் ஆட்சிப் பேராளாக இருந்து திறையை ஒழுங்காகப் பிரித்து அனுப்பும்படி ஏற்பாடு செய்து விட்டுக் கிருட்டிணப்பன் மதுரை திரும்பினான்.

மாவலி வாணாதிராயன் கிளர்ச்சி (1572—1595)

ஹொய்சள பல்லாளன் காலத்தில் சோழ நாட்டில் சம்புவராயர் வலிமை வாய்ந்தவரா யிருந்ததுபோல, பாண்டிய நாட்டில் மதுரை ராமநாதபுரம் வட்டங்களில் வாணாதிராய மரபினர் ஆற்றலுடையவர்களாயிருந்தனர். மதுரை முஸ்லிம் ஆட்சிக்கு முன்னும் பின்னும் மதுரையிலும் மதுரை சூழ்ந்த பகுதிகளிலும் சுந்தரத்தோள் மாவலி வாணாதிராயன் என்பவன் பாண்டிய மரபுடன் தொடர்புகொண்டு அம் மரபுரிமை கோரியிருந்தான். 16-ம் நூற்றாண்டில் இராமநாதபுர

மாவட்டத்தில் திருப்புல்லாணி, காளையார்கோவில், தேவிபட்டணம்ஆகிய பகுதிகளில் வாணாதிராயர் ஆட்சி புரிந்தனர். அக்காலத்துக்கு முன் அவர்கள் பாளைய முறையில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

கிருட்டிணப்ப நாயகனுக்குப் பின் மதுரை நாயக மன்னனானவன் வீரப்ப நாயகன் (1572—1595). முந்திய ஆட்சியில் தும்பிச்சி நாயகன் கிளர்ச்சி செய்தது போலவே அவன் காலத்தில் ஒரு வாணாதிராய மரபினன் மதுரை ஆட்சியை மீறி எழுந்தான். மானாமதுரையிலும் காளையார் கோவிலிலும் கோட்டை கட்டித் தன்னை வலுப்படுத்திக் கொண்டு, அவற்றைச் சூழ்ந்த நாட்டுப் பகுதிகளைக் கைப்பற்றலானான். ஆனால் வீரப்ப நாயகன் தன் முழு ஆற்றலையும் தொடக்கத்திலேயே அவன்மீது செலுத்தி அவனை வென்றதுடன் அவன் பாளையத்தையே அவனிடமிருந்து பறித்தான். அவன் வென்ற பகுதிகளும் பாளையமும் நேராட்சிப் பகுதிகளாயின.

மும்மொழி மண்டலங்கள்;

தலைக்கோட்டைப் போருக்குப்பின் ஆறு ஆண்டுகள் விசயநகரப் பேரரசு ஒழுங்கான தலைமையாட்சியில்லாமலேயே இருந்தது. மாகாண ஆட்சித் தலைவர்கள் அச்சமயம் கிட்டத்தட்டத் தன்னாட்சியாளராயினர். ஆயினும் அவர்களே பேரரசு சிதறாமல் பார்த்துக் கொள்ள முடிந்தது. கிருட்டிண தேவராயன் காலத்திலிருந்த பயிற்சிபெற்ற பணியாளர்களை நீக்கி இராமராயன் உறவினர்களை அமர்த்தாமல் இருந்திருந்தால் மைய ஆட்சியும் கெட்டிருக்காது என்றும்; உரிமை முழுவதையும் அவன் தன் கைக்குள்ளேயே கொண்டுவராமலிருந்தால் தலைக்கோட்டைப் போரில்கூட அவ்வளவு முழுத் தோல்வி ஏற்பட்டிராது என்றும் கூறலாம்.

இராமராயனின் தம்பியான திருமலையின் அரசுரிமைக்கெதிராக இராமராயனின் புதல்வனான பெத்த திருமலை அரசுரிமையில் போட்டியிட்டு, பீஜப்பூர் அரசன் அலிஆதில்ஷாவை உதவிக்கு அழைத்தான். பெனுகொண்டாவின் தலைவன் சிவராம சின்னப்ப நாயகன் போர்த்திறமையே அச்சமயம் அவனைக் காத்தது. ஆனால் திருமலை அகமது நகர், கோலகொண்டா அரசர் உதவியை அழைத்தபோது பீஜப்பூர் அரசர் அவர்களுடன் நேச ஒப்பந்தம் செய்துகொண்டு அடோனியைக் கைப்பற்றிக் கொண்டான்.

தென் திசை அரசுகளின் அரைகுறைத் தன்னாண்மையை மதித்து நடந்ததுமூலம் பேரரசு மேலும் சரியாமல் திருமலை

பார்த்துக் கொண்டான். அத்துடன் பேரரசின் மூன்று பெரும் பகுதிகளையும் மூன்று மண்டலங்களாக்கி அவற்றில் தன் மூன்று புதல்வர்களையும் மாமண்டல முதல்வர்கள் ஆக்கினான். அதன்படி மூத்த புதல்வன் (முதலாம்) சீரங்கன் பெனுகொண்டாவைத் தலைநகராகக்கொண்ட தெலுங்கு நாட்டையும், இரண்டாம் புதல்வன் இராமன் சீரங்கபட்டினத்திலிருந்து கன்னட நாட்டையும் மூன்றும் புதல்வன் வேங்கடபதி சந்திரகிரியைத் தலைநகராகக் கொண்டு தமிழகத்தையும் ஆண்டனர்.

சென்னைப்பட்டினத்தை ஆங்கிலேயருக்களித்த சென்னப்ப நாயகன் இந்தச் சந்திரகிரித் தமிழரசன் மரபினனேயாவன்.

தன் சீரமைப்பில் பெருமை கொண்டு 'திருமலை கருநாடகப் பேரரசுக்கு புது வாழ்வு தந்தவன்' என்ற பட்டம் மேற்கொண்டான்.

## முதல் தலைநகர் மாற்றம்:

அரவீட்டு மரபின் திருமலைக்குப்பின் அவன் மூத்த புதல்வன் முதலாம் சீரங்கன் (1572—1585) ஆட்சியில் பீஜப்பூர் அரசன் அலிஆதில்ஷா அடோனியிலிருந்து 1576-ல் பெனுகொண்டாவைத் தாக்கினான். அதன் பாதுகாப்பைத் தன் படைத்தலைவன் சென்னப்ப நாயகனுக்கு விட்டுவிட்டு முதலாம் சீரங்கன் தலைநகரைச் சந்திரகிரிக்கு மாற்றிக்கொண்டான். சீரங்கன் உதவியுடன் சென்னப்ப நாயகன் பீஜப்பூரைப் போரில் முறியடித்தான்.

கோலகொண்டா அரசனையும் சீரங்கன் உதவிக்கு அழைத்திருந்தான். ஆனால் 1573-ல் பீஜப்பூரும் கோலகொண்டாவும் ஒரு மறை கூட்டு ஒப்பந்தம் செய்துகொண்டிருந்தனவாம்! அதன்படி தென்னகத்தின் மேல்திசை பீஜப்பூர் வெற்றி கட்கும், கீழ்திசை கோலகொண்டா வெற்றிகட்கும் உரியனவாக ஒப்புக்கொள்ளப் பட்டிருந்தன. ஆகவே கோலகொண்டா உதவ முன்வரவில்லை. ஆனால் கோலகொண்டாவிடம் படைத்தலைவனாயிருந்த மராத்திய பிராமணர்களுள் ஒருவனான முரஹரி ராவ் 1579-ல் சீரங்கன் கீழுள்ள பெருமக்களுடன் சேர்ந்து அவனைத் தாக்கியதுடன் அகோபிலத்தில் நரசநாயகன் கட்டியிருந்த செல்வவளமிக்க நரசிங்கர் கோவிலைக் கொள்ளையிட்டான். வினுகொண்டா, கொண்டவீடு, உதயகிரி ஆகிய கோட்டைகளையும் அது சூழ்ந்த இடங்களையும் கைக் கொண்டான்.

பெண்ணையாற்றுப் போர்: *(1586—1589)*

முதலாம் சீரங்கனுக்குப் பின் அவன் புதல்வர்கள் மிகச் சிறு குழந்தைகளாய் இருந்ததனால் அவன் தம்பி இரண்டாம் வெங்கடன் (1586—1614) அரசுரிமை ஏற்றான். சீரங்கப்பட்டினத்திலிருந்து கன்னடப் பகுதியின் மண்டலத் தலைவனாயிருந்த அவன் தமையன் இராமன் இதற்குள் உலகு நீத்திருந்தான். எனவே அம்மண்டலம் அவன் மூத்த புதல்வனாகிய திருமலைக்கு அளிக்கப்பட்டது. அவன் ஆட்சியில் விசயநகர மரபு ஒரு சிறிதே மறுமலர்ச்சியடையத் தொடங்கிற்று. ஆனால் அது நீடிக்கவில்லை.

இப்ராஹிம் குத்ப்ஷாவுக்குப்பின் கோலகொண்டா அரசு முகமது குலீகுத்ப்ஷாவின் (1581—1611) ஆட்சிக்கு வந்தது. அவனிடமிருந்து கொண்டவீட்டை மீட்கும் முயற்சியில் வெங்கடன் ஈடுபட்டான். இதற்கெதிராக முகமது குலீ கர்நூல் மாவட்டமெங்கும் வென்று, கடப்பை, அனந்தப்பூர்ப் பகுதிகளையும் தாக்கிக் கைப்பற்றிக்கொண்டு பெனுகொண்டாவையும் முற்றுகை யிட்டான்.

வெங்கடன் இப்போது பணிந்து நேச இணக்கம் செய்து கொண்டான். ஆனால் பெற்ற ஓய்வை நன்கு பயன்படுத்திப் படை வலுவைப் பெருக்கிக்கொண்டான். குத்தி, கண்டிகோட்டா ஆகிய கோட்டைகளும் விரைவில் விசயநகர் வசமாயின. இவ்வெற்றிகளைச் சமாளிக்க முகமது குலீ விரைந்து ரஸ்டம்கான் என்ற படைத்தலைவனுடன் அனுப்பிய படைகளையும் இரண்டாம் வெங்கடன் பெண்ணையாற்றங்கரையில் முறியடித்தான்.

வல்லம் பிரகாரம் போர் அல்லது வல்லத்துப் போர் II 1583:

சங்க காலத்தில் தமிழர் ஆரியரை முறியடித்த பழம் போர்ப் பெருமையுடையது வல்லம். தஞ்சையை அடுத்துள்ள இது ஒரு வலிமைவாய்ந்த கோட்டை நகரமாய் இருந்தது. அச்சுதராயன் காலத்தில் மதுரைமண்டலத்தைச் சார்ந்ததாயிருந்த இக்கோட்டை தஞ்சை மண்டலத்துக்கும், தஞ்சை மண்டலத்தைச் சார்ந்ததாய் இருந்த திருச்சிராப்பள்ளி மதுரை மண்டலத்துக்கும் பேரரசின் மைய ஏற்பாடாகவே மாற்றப்பட்டதாக அறிகிறோம்.

முதலாம் கிருட்டிணப்ப நாயகன், வீரப்ப நாயகன் மதுரையில் ஆண்ட நாட்களில் வாணாதிராயர் குடிகளில் ஒன்று கிளர்ச்சி செய்து அழிக்கப்பட்டது கண்டோம். இதன் பின்னும் மதுரை யடுத்த பொட்டைத் தஞ்சை என்ற நகரத்தில்

ஒரு வாண அரசன் ஆண்டு வந்தான். இவனைப் பொய்யா மொழிப் புலவர் என்ற தமிழ்க் கவிஞர் தஞ்சை வாணன் கோவை என்ற சிறந்த தமிழிலக்கிய ஏட்டில் பாடியுள்ளார். இதனால் இவன் தமிழ்ப் புலவர்களை ஆதரித்துத் தமிழிலக்கியத்தை வளர்த்த புகழ்வாய்ந்த சிற்றரசன் என்பது விளங்குகிறது. இவன் பெருவீரனாகவும் இருந்தான்.

இக்காலத்தில் அரசியல் பேரரசின் அவாவை இலக்கியப் பேரரசின் மீதும் அருளாட்சிப் பேரரசின் மீதும் திருப்பிப் புகழுடன் திருநெல்வேலிப் பகுதியில் பல பாண்டியர் ஆண்டிருந்ததாக அறிகிறோம். கொற்கையைத் தலைநகராகக்கொண்டு அதிவீரராம பாண்டியன் (1564—1604) ஆட்சி செய்து வந்தான். தமிழில் நைடத காவியம், கூர்மபுராணம், வாயு சங்கிதை, காசிகாண்டம், இலிங்கபுராணம் ஆகிய அரும்பெரும் நூல்களும் பள்ளிப் பிள்ளைகளின் நீதிநூல்களுள் ஒன்றாகிய நறுந்தொகை அல்லது வெற்றி வேற்கையும் இயற்றியவன் இவனே.

> ‘வெற்றி வேற்கை வீரராமன்
> கொற்கையாளி குலசேகரன் புகல்......
> நறுந்தொகை’

என்று நறுந்தொகையின் அவையடக்கப் பாடலின் முதல் தொடரான வெற்றி வேற்கையே இன்று அந்நூலின் பெயராக விளங்குகிறது. அவன் தன் தந்தையாகிய திருநெல்வேலிப் பாண்டியன் என்ற ‘அபிராம பராக்கிரம பாண்டியன் (1552—1564) பெயரை நினைவு கூர்வதற்காகத் தென்காசி நகரில் குலசேகரமுடையான் கோயில் எழுப்பியிருந்தான்.

இவன் தமயன் என்று தமிழ் மரபில் குறிக்கப்படும் இவனுடைய தம்பி வரதுங்கராம பாண்டியன் எக்காரணத்தாலோ 1588-லிருநதே கரிவலம் வந்த நல்லூரிலிருந்து அரசாண்டான் என்று அறிகிறோம். இவனும் தமிழ் இலக்கியப் பேரரசனே. பிரமோத்திர காண்டம், கருவைக் கலித்துறை அந்தாதி, கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி, கருவை வெண்பா அந்தாதி முதலிய சிறந்த நூல்கள் இவனால் எழுதப்பட்டன. இவற்றுள் கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி தமிழின் தலைசிறந்த பக்தி நூல்களுள் ஒன்று. ‘குட்டித் திருவாசகம்’ என்ற அதன் சிறப்புப் பெயரே இதனைக் காட்டுவதாகும்.

அதி வீரராம பாண்டியனுக்குச் சாமித்தேவரும், வரதுங்கராம பாண்டியனுக்கு வேம்பற்றூர் ஈசான தேசிகரும் சைவத் திருவருள் நெறிக்குரிய ஞானாசிரியரா யிருந்தனர்

என்று அறிகிறோம். சைவ சமயத்துறையில் இவ்விருவருக்கும் இருந்த பெருத்த ஈடுபாட்டை இது காட்டுவதாகும்.

வல்லத்துப் போரில் அதி வீரராம பாண்டியன், வரதுங்கராம பாண்டியன் ஆகிய இரு பாண்டியருடனும் சேர்ந்து தஞ்சையை ஆண்ட வாண அரசன் அச்சுதப்ப நாயகன், வீரப்ப நாயகன் என்ற நாயக மரபினர் இருவருடன் போரிட்டு வெற்றி கண்டான். சீவல்லப பாண்டியனால் வெளியிடப்பட்ட கல்வெட்டொன்று இவ்வெற்றியைக் குறிப்பிடுகின்றது. சீவல்லபன் என்பது அதி வீரராம பாண்டியன் பட்டப் பெயரேயாகும். அழகன் சீவல்லவேள் என்று அவன் வழங்கப் பட்டுள்ளான். ஆனால் சீவல்லபன் என்பது அவன் மகன் பெயராகவே இருக்க வேண்டுமென்று கருதிக்கொண்டு தலை சிறந்த வரலாற்றாசிரியர்களில் கூடப் பலர் இக் கல்வெட்டில் கொடுத்த ஆண்டைக் காரணமின்றி 1610 என்று திருத்தி இப் போரையும் இரண்டாம் சீரங்கன் ஆட்சிக்குப் பிற்பட்ட அரசுரிமைப் போராட்டத்தின் ஒரு பகுதியாக்க விரும்பி அவதிப் படுவர். ஆனால் வலிந்த இத்திருத்தத்தின் பின்னரிக் கூட அது அப்போர்க் காலமாகிய 1614-ஐ எட்டவில்லை என்பது குறித்துக் காணத்தக்கது.

இப் போருக்குரிய மெய் விளக்கத்தை அது குறித்த கல்வெட்டுக் காலமாகிய 1583-ன் சூழ் நிலைகளே காட்டவல்லன. விசயநகரப் பேரரசின் ஆற்றல் தெற்கே செல்லுபடியாகாத காலம் அது. மதுரை யாண்ட வீரப்ப நாயகனே இராமநாதபுரம் பகுதியிலே ஒரு ஆற்றல் வாய்ந்த வாணாதி ராசனை வென்று அவன் பாளையத்தையே கைக் கொண்டிருந்தான். வல்லத்துப் போரின் எதிரிகளில் ஒருவனான அச்சுதப்ப நாயகன் உண்மையில் அச்சுத ராயன் காலத்தில் தஞ்சை மண்டலத்தின் தலைவனாக அமர்வு பெற்றிருந்த அச்சுதராயன் சட்டகன் செவ்வப்ப நாயகனின் புதல்வனே யாவன். வாணாதிராயன் கிளர்ச்சியின் பேரால் மதுரை மண்டலத்தின் மீது தஞ்சை மண்டலத் தலைவனான அச்சுதப்ப நாயகன் தலையிட எண்ணிக் கிளர்ச்சியை ஆதரித்திருத்தல் இயல்பு. இதற்கெதிராக முன் மதுரை மண்டலப் பகுதியாக இருநத வல்லத்தின் மீது தன்னுடன் நேசமாயிந்த தஞ்சை வாணனையும் அவன் துணைவராகிய பாண்டியரையும் வீரப்ப நாயகனே ஏவிவிட்டுத் தான் விலகி யிருந்திருக்க வேண்டும் என்னலாம்.

தஞ்சை வாணன் பாண்டியர் மேலுரிமையை ஏற்றவன். தலைவராகிய பாண்டியரை மதியாத பகைவர் மாள அவன் வல்லத்துப் போர் புரிந்து வென்றானென்று தஞ்சை வாணன் கோவை அவனைப் புகழ்கின்றது. தவிர, போர்க்காலக் கல்

வெட்டுக்களிலேயே இடம் பெற்றுள்ள தென்காசிக் கவிஞன் கவியன் கவிராயன் வரதுங்கராம பாண்டியன் முடிசூட்டு விழாவில் பாடிய மங்கலப் பாடல்களில் (நாள் மங்கலம், குடை மங்கலம், வாள் மங்கலம் என்ற மும் மங்கலப் பாடலில்)

"பற்றலர் மண் கொள்ளும், பணிந்தார்க்கு அரசளிக்கும்
கொற்றம் உயர்க்கும், அறங்கூறுமே—வில்தடம் தோள்
வில்லவனை வென்று கொண்ட வீரமாறன் செழியன்
வல்லம் எறிந்தான் ஏந்து வாள்"

என்று வல்லத்து வெற்றியையும் குறித்துள்ளது.

வாண மரபினர்க்குரிய பழைய தலை நகர் வட ஆர்க்காட்டு வல்லமே. தஞ்சை வல்லமும் அவர்கள் தென் திசை வெற்றி கட்குரிய தாகலாம். வாணாதிராயன் அழிவுற்ற பின் தஞ்சை வாணன் இப்பழம் பகுதியை வெல்ல எண்ணிப் பாண்டியர் ஆதரவைப் பெற்றிருத்தலும், மதுரை நாயகர் இதற்கு மறை முகத் துண்டுதலா யிருத்தலும் இயல்பு. வல்லம் வென்ற பின் அதனைத் தஞ்சை வாணனுக்கே வரதுங்க ராமன் அளித் திருக்கலாம். 'பணிந்தார்க்கு அரசளிக்கும்' என்ற வெண் பாத் தொடர் இதனைக் குறித்திருத்தல் கூடும்.

ஐம்புலமருகுப் போர் 1598

பெண்ணை யாற்றுப் போருக்குப் பின் கோல கொண்டா அரசன் இதுவரை வென்ற பகுதிகளில் வேறுபல கோட்டை களையும் இரண்டாம் வெங்கடன் கைப்பற்றி அப் பகுதிகளில் தன் ஆட்சி நிறுவினன், இதன் பின் கோல கொண்டா அரசன் கிருட்டினை யாற்றையே மீண்டும் கோலகொண்டாவுக் கும் விசயநகரத்துக்கும் எல்லையாக ஏற்று ஒப்பந்தம் செய்து கொண்டான்.

புற எதிரியாகிய கோல கொண்டாப் பகைவனைச் சமா ளித்த பின்னும் இரண்டாம் வெங்கடன் அக எதிரிகளாகிய பெருமக்களை எதிர்க்க வேண்டி யிருந்தது. கொண்ட வீடு இன்னும் கோல கொண்டாவின் கையிலேயே இருந்தது இதற்கு உகந்ததாயிற்று. ஆனல் 1589-ல் உதயகிரி விசய நகரப் பகுதியாயிற்று. கோலாற்றுப் பகுதியில் கிளர்ந் தெழுந்த திம்மய்யக் கௌடன் இதனை யடுத்துக் கீழடக்கப் பட்டான். அதன் பின் நந்தேலா (தற்கால நந்தியால்) கோட்டையின் தலைவனை கிருஷ்ணம ராயன் (1592—1598) அருகில் உள்ள பல தலைவர்களைச் சேர்த்துக்கொண்டு பேரரச மரபினனை எதிர்த்தான். ஆனல் ஐம்புலமதுகுப் போரில்

அவன் தோல்வி யுற்றான். நந்தேலாக் கோட்டையும் மூன்று மாதங்களுக்குள் பிடிபட்டது. கிருஷ்ணமராயன் சிறைப் பட்டுத் தன் வாழ் நாள் முழுவதும் சந்திரகிரிக் கோட்டையிற் காவற் கிடங்கிலே கழித்து அங்கேயே உயிர் விட்டான்.

வேலுகோடி மரபின் செயல் வீரகாவியம்: **1598-1617**

இரண்டாம் வெங்கடனின் வீரமும் திறமையும் பல வீரப் பெருமக்களின் நன்மதிப்பையும், ஆதரவையும் அவனுக்குத் தந்தன. அங்ஙனம் ஆதரித்தவர்களில் பேரரசர், அரசர்களுக்கு அருகே தன் வீரச் சின்னங்களைப் பொறித்த ஒரு வீரப் பழப் பெருங்குடி பெரும் பேட்டுச் சீமையில் (செங்கற்பட்டு, மதுராந்தகம் பகுதியில்) ஆண்ட வேலு கோடி மரபு ஆகும். இதில் இருபத்திரண்டாம் தலை முறையினனும் வேலு கோடி கஸ்தூரி ரங்கப்பா என்பவன் புதல்வனுமான வேலு கோடி யாசம நாயுடு விசய நகரப் பேரரசின் வரலாற்றிலும் தென்னக வரலாற்றிலும் 16, 17-ம் நூற்றாண்டுகளிடையே ஒரு செயல் வீர காப்பியத்தை நடை முறைப் படுத்தினான்.

ஐம்புல மதுகுப் போரிலிருந்து (1598) தொடங்கி, உத் தரமேரூர்ப் போர் (1601), மின்னல் போர் (1603), வேலூர்ப் போர் (1603), செங்கற்பட்டுப் போர், திருச்சிராப் பள்ளிப் போர், மதுரைப் போர், செஞ்சிப் போர் (1608), தோப்பூர்ப் போர் (1617) பாளையங் கோட்டைப் போர் (1617) ஆகிய வரலாற்றுப் பெரும் போர் வெற்றிகள் பலவும் வேலு கோடி யாசம நாயுடுவின் செயல் வீர காப்பியப் பகுதிகளே யாகும்.

அகமது நகர் வீழ்ச்சி:
வீர அரசி சாந்து பீபி: **1600**

தலைக் கோட்டைப் போருக்குப் பின் விசயநகரப் பேரரசு மட்டும் சரியவில்லை: அதனை யழித்த இஸ்லாமியப் பேரரசு களின் அழிவும் அதனுடனேயே தொடங்கிற்று என்னலாம். ஆனால் சரிந்து வந்த விசயநகரப் பேரரசின் வடபகுதி அழிந்த பின்னும் தென் பகுதியே புது மலர்ச்சி யுற்றதுபோல, ஐந்து முஸ்லிம் அரசுகளான, பீடார், பீரார், அகமது நகர், பிஜப் பூர், கோல கொண்டா அரசுகளிலும் வடகோடியில் உள்ள பேராரும், பீடாரும் முறையே முக்கால் நூற்றாண்டும், ஒரு நூற்றாண்டும் வாழ்ந்து 16-ம் நூற்றாண்டுக்குள் மர பழிந்தன. ஆனால் அவற்றை விழுங்கி அழிக்க முயன்ற அகமது நகர் பீடா ரின் அழிவுக்கும் முற்பட்டே வட இந்தியாவின் புதிய முகலா யப் பேரரசால் அலைக்கழிக்கப்பட நேர்ந்தது.

தில்லியில் ஆண்ட ஆப்கானிய மரபுகளில் கடைசி மரபு லோடி மரபே. அயல் மரபுகளால் தேசீய வாழ்வமைதியும் பண்பமைதியும் இழந்து வந்த வடதிசை அந்த அயல் மரபுகளையும் நெடுநாள் தாக்காமல் இருந்ததில்லை. ஆப்கானிய மரபுகளில் பழமரபைப் புதுமரபு படிப் படியாக அழித்து வந்தது போலவே, ஆப்கானியத் தாயகமான ஆப்கானிஸ்தானத்திலும் அயல் மரபு ஆப்கன் மரபை அழித்தது. ஆப்கானிஸ்தானத்துக்கே அயல் மரபாக வந்தமைந்த இந்த மொகலாய மரபு, வட இந்திய வெளியிலும் ஆப்கானிய மரபழித்து வட இந்தியாவின் ஆட்சியைக் கைக்கொண்டது.

நடு ஆசியாவிலிருந்து ஆப்கானிஸ்தானத்தைக் கைக்கொண்டு பின் தில்லியையும் கைக்கொண்ட முதல் முகலாய அரசன் பாபர் (1526-1530). அவன் மகன் ஹுமாயூன் (1530-1556) ஆட்சி நடுவே வங்க நாட்டில் ஆண்டிருந்த ஆப்கன் மரபினனான ஷெர்ஷா (1542-1555) ஹுமாயூனைத் துரத்தி 13 ஆண்டுகள் ஆட்சி செய்திருந்தான். வங்கத்தில் முற்றிலும் மாறுதிருந்த தமிழ் மரபு சார்ந்த பண்பாடுகளையும், ஆட்சிப பண்பையும் அவன் பரப்பி, வட இந்தியாவில் முதல் முதலாக நல்லாட்சியின் அடிப்படைத் திட்டங்களை வகுத்தான். இவ்வாட்சியின் அடிப்படைக் கூறும் பண்புகளும் மொகலாய ஆட்சியிலும் பிரிட்டிஷ் ஆட்சியிலும் நீடித்து இன்றுவரை நிலவி யுள்ளன. அவனுக்குப் பின் வந்த முகலாய ஆட்சி முன் சென்ற ஆட்சியைவிடத் தேசிய மரபில் தோய்ந்ததற்கும் ஓரளவு பண்பமைவுற்ற மரபானதற்கும் இதுவே காரணம்.

ஹுமாயூனுக்குப் பின் அக்பர் (1556—1605) ஆட்சியில் மொகலாயப் பேரரசு கிட்டத்தட்ட கில்ஜிப் பேரரசன் அலாவுதீன் ஆட்சியைப்போல வடதிசை முற்றிலும் பரவித் தென் திசையிலும் நோட்டம் ஓடவிடும் தகுதி யுடையதாயிற்று. அவன் அகமதுநகர் வாழ்வைக் குலைக்க முற்பட்டுத் தன் புதல்வன் முராதைப் பெரும் படையுடன் அத்திசைக்கு 1595-ல் அனுப்பினான்.

தலைக் கோட்டைப் போருக்கு முன் அகமது நகர் அரசன் ஹுசேன் புதல்வி சாந்து பீபி பிஜப்பூர் அரசன் அலியை மணந்திருந்தாள். பிஜப்பூரில் அலியின் புதல்வன் இரண்டாம் இப்ராஹிம் (1579—1626) ஆட்சிக் காலத்திலேயே அகமது நகரில் இரண்டு தலைமுறை சார்ந்த ஆறு அரசர் ஆட்சி முடிந்து விட்டது. சாந்து பீபியின் மருமகன் இரண்டாம் பர்ஹாமின் குழந்தையாகிய பகதூரே ஆட்சிக்கு உரியவனாக மீந்தான். தாயகம் வந்து வாழ்ந்த சாந்து பீபி மூதரசியாயி

னும் வீர மாதரசியாகவே விளங்கினாள். அவள் தன் பெயரனின் பெயரால் ஆட்சியை நடத்தி வந்தாள்.

மூராதின் தாக்குதல் 1595-லும் 1596-லும் இரு தடவைகள் மும்முரமாக நடைபெற்றன. வீர அரசி சாந்து பீபி இரு தடவையும் மொகலாய இளவரசனை முறியடித்துத் திருப்பி யனுப்பினாள்.

1597-ல் அக்பர் ஒரிஸ்ஸா அல்லது கலிங்கத்தைக் கீழடக்கினான். அதன் பின் பீரார், பீடார் பகுதிகளையும் தாக்கிப் பிடித்த வண்ணம் அகமது நகர் மீது பேரரசின் முழுவலிமையுடன் மும்முரமாகத் தாக்கினான். அக்பராலும் சாந்து பீபியை நேரடியாக எதிர்த்துத் தாக்குவது அரிதாயிற்று. ஆனால் தன் பேரரசின் மதிப்பை அவ்வளவு எளிதாக இழந்து விட அக்பர் ஒருப்படவில்லை. வீரத்தால் சாயாததைச் சூழ்ச்சியினால் சாய்க்க முற்பட்டான். இதன் பயனாகச் சாந்து பீபியின் படை வீரர்களே அவளிடம் வஞ்சனையாக நடந்து கொண்டு அவளைக் கொலை செய்தனர்.

சாந்து பீபி போன்ற உயர் பண்புடைய வீரப் பெண் மணியை ஈன்ற அகமது நகரப் பேரரசு வீழ்ந்தது—சிறுசெயல் செய்து வெற்றிகண்ட அக்பரை ஈன்ற வடதிசைப் பேரரசு தற்காலிகமாக அதை விழுங்கி ஒருபடி வளர்ந்தது. 1600-ல் அகமது நகரின் பெரும்பகுதி, தில்லி மொகலாயப் பேரரசின் தென்கோடிப் பகுதி யாயிற்று.

ஐந்து முஸ்லிம் அரசுகளில் வடபகுதி அரசுகளை வடதிசைப் பேரரசு கைக்கொண்ட பின்னும் தென்திசை அரசுகளான பிஜப்பூர், கோல கொண்டா ஆகியவை வளர்ந்தே வந்தன. ஆனால் அவையும் தற்காலிகமாகவே வளர்ந்து வந்தன—வட திசைப் பேரரசினால் பின் புறமிருந்து விழுங்கப் பட்டு, மேல் திசை மகாராஷ்டிரத்தினால் உள்ளூர அரிக்கப் பட்டே சாவு நோக்கி அவை முன்னேறின.

### சேதுபதி மரபின் தோற்றம் 1605

வீரப்ப நாயகனுக்குப் பின் இரண்டாம் கிருஷ்ணப்ப நாயகன் (1595—1601) முத்துக் கிருஷ்ணப்ப நாயகன் (1601—1609) ஆகியோர் மதுரை நாயகராக ஆண்டனர்.

இன்றைய இராமநாதபுர மாவட்டப் பகுதி அந் நாட்களில் மறவர் நாடு என்றழைக்கப்பட்டது. அந்நாட்டில் பழங் காலத்திலிருந்தே பாண்டியர் கீழ் பல தலைவர்கள் ஆண்டு வந்தனர். பாண்டியப் பேரரசர் காலமுதல் மதுரை நாயகர் காலத் தொடக்கம் வரை இந்நாடும் இதுபோன்ற

கரையோரப் பகுதிகளும் போர்ச்சுகீசியர் போன்ற அயல் நாட்டவர் ஆதிக்கத்தில் பட்டிருந்தன. இதனால் இங்கே குழப்பநிலை மிகுதியாக இருந்தது. இந்நாடு கடந்தே புண்ணிய யாத்திரிகர் இராமேசுவரம் செல்ல வேண்டி யிருந்தது. குழப்பநிலை அவர்களுக்குப் பேரிடர் தந்தது. திருடரும் கொள்ளைக் கூட்டத்தினரும் அரசியல் வேடரும் எங்கும் திரிந்து தொல்லை தந்தனர்.

விசுவநாதன் காலத்திலிருந்தே காடு வெட்டியும் காவலர் அமைத்தும் இப் பாதைகளைப் பாதுகாக்க முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. அடுத்த ஆட்சிகளில் நாடு காவலராக மதுரை நாயகரின் ஆணையாளர்கள் அமர்த்தப் பட்டிருந்தனர். முத்துக் கிருஷ்ணப்பன் ஆட்சியிலேயே இராமேசுவரம் பாதையின் பாதுகாப்புக்காக இராமநாதபுரம், போகலூர்க் கோட்டைகள் அரண் செய்யப்பட்டன. யாத்திரிகர்களுக்குத் துணை செல்ல பாதுகாப்புக் குழுக்கள் வகுத் தமர்த்தப் பட்டன. ஆனால் இவை எவையும் அப் பகுதியில் நிலவிய அரசியல் குழப்பத்தைச் சிறிதும் மாற்றவில்லை.

முத்துக் கிருஷ்ணப்ப நாயகன் கடைசியாக ஏறத்தாழ 1605-ல் சடைக்கத் தேவர் (1605—1623) என்ற தலைவனுக்கு உடையான் சேதுபதி என்ற பட்டம் தந்து மறவர் நாடு முழுவதன் தலைமை யாட்சிப் பொறுப்பை அவனிடம் ஒப்படைத்தான். இந்த ஏற்பாடு தற்காலிகமாக யாத்திரிகர்களுக்குப் பாதுகாப்பும் நாட்டுக்கு அமைதியும் தந்தது. மதுரை நாயகனுக்கு அவன் கீழ்ப் படிந்து மதுரைநாயகன் போர்களிலும் உதவி வந்தான். ஆனாலும் பின்னாட்களில் பல சமயம் மறவர் நாட்டின் வலிமை மதுரையாட்சிக்குக் குந்தகமாக இருந்தது.

உத்தர மேரூர்ப் போர்: 1601

இராமராயன் இளவல் வேங்கடாத்திரியின் பெயரன் கந்தனவோலு கோபாலராயன் இரண்டாம் வேங்கடனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யத் தொடங்கினான். வேலு கோடியாசம நாயகன் உதவியுடன் இரண்டாம் வேங்கடன் அவனைக் கீழடக்கினான். இதன்பின் செஞ்சியை ஆண்ட கிருஷ்ணப்ப நாயகன் கீழ் வேலூரை ஆண்ட லிங்கமன் எதிர்த்தெழுந்தான்.

தென்னகத்தின் தலை சிறந்த சமஸ்கிருதக் கவிஞர்களுள் ஒருவரான அப்பய்ய தீட்சிதரை ஆதரித்தவன் லிங்கமனின் தந்தையாகிய சின்ன பொம்ம நாயகனே.

லிங்கமனின் துணைத்தலைவர்களுள் ஒருவனான நாகனிடமிருந்து வேலு கோடியாசம நாயுடு உத்தரமேரூர்க் கோட்டையைக் கைப்பற்றினான். அதனை மீட்கும் முயற்சியில் லிங்கமன் முனைந்து போராட்டம் தொடங்கினான். இதுவே உத்தர மேரூர்ப்போர். இதில் லிங்கமன் அண்டையிலுள்ள கோட்டைத் தலைவர்களின் படைகளைத் திரட்டுவதுடன் நிற்கவில்லை. தொலைவிலுள்ள மதுரை, தஞ்சை, செஞ்சி நாயகர் உதவியையும் நாடி அவர்கள் பெரும் படையையும் துணைக்கொண்டான். தமிழக முழுவதுமே கடலாகப் பொங்கி எழுந்தது போன்ற இம் மாபெரும் படைக்கு நாக நாயகனின் மைத்துனனான தாவுள பாப்பய்ய நாயுடுவே படைப் பெருந்தலைவனாய் இருந்தான்.

இக் கடற் பெருந்தானையைக் கண்டு கூட வீர யாசம நாயுடு சிறிதும் அஞ்சவில்லை. அவனும் அவனுக்கு வீரத்துணை தந்த அவன் இளவல் சிங்கனும் வியக்கத்தக்க முறையில் அரும் போர் ஆற்றினர். போரிலேயே தாவுள பாப்பய்ய நாயுடு கொலையுண்டான். இப் போர்மூலம் இரண்டாம் வேங்கடன் கண்ட பேரரசின் மறுமலர்ச்சிக்கு யாசமன் பெரிதும் உதவினான்.

மின்னல் அல்லது முன்னிலைப்போர்: 1603

இரண்டாம் வேங்கடனின் படைத்தலைவர்களுள் தாமர்ல சென்ன என்ற வேங்கடன் ஒருவன். அவன் தன் தந்தை தாய் பெயரால் சென்ன சாகரம் என்ற ஓர் ஏரி கட்டுவித்தான். அவன் காளத்திக் கோமானான அங்க பூபதியின் உடன்பிறந்தான். அவன் உடன் பிறந்தார்களில் மற்றும் இருவர் வந்தவாசித் தலைவன் தாமர்ல வேங்கடப்பனும் பூவிருந்தவல்லித் தலைவன் தாமர்ல ஐயப்பனுமே.

இரண்டாம் வேங்கடன் வேலூர்க் கோட்டையைப் பிடிக்கும் படியே சென்ன வேங்கடனுக்கு உத்தரவிட்டிருந்தான். ஆனால் போகும் வழியிலேயே அவன் லிங்கமன் படைகளை வேலூருக்கு அருகில் உள்ள மின்னல் அல்லது முன்னலி என்ற இடத்தில் சந்திக்க நேர்ந்தது. அங்கே நடைபெற்ற போரில் லிங்கமன் முறியடிக்கப் பட்டான்.

வேலூர்ப் போர்: 1603

சென்ன வேங்கடன் லிங்கமனை வேலூர் அருகில் இன்னொரு போரிலும் முறியடித்தான். இதன்பின் இரவோடிரவாக வேலூர் வந்து காலையில் அதைத் தாக்கிவிட வேண்டுமென்று சென்ன வேங்கடன் விரைந்தான். ஆனால் அவன்

படைகள் அந்த அளவு விரைவுபட முடியவில்லை. அத்துடன் வந்த பின்னும் கோட்டைக் காவலர் துப்பாக்கிக்குண்டுகள் முற்றுகையாளரைத் திணறடித்தன. ஆயினும் விசயநகர வீரர் முறுகிப் போர் உடற்றினர். இரண்டு மாத முற்றுகைக்குப் பின்னும் நகரைக் கைப்பற்ற முடியாமல் போயிற்று. இறுதியில் சென்ன வேங்கடனின் சூழ்ச்சியால் லிங்கமன் தன் அரண்மனை வாயிலிலேயே பிடிபட்டான்.

## புதிய தலைநகர் மாற்றம்

லிங்கமன் சிற்றரசனேயானாலும் வலிமையிலும் செல்வ வளத்திலும் பேரரசை விஞ்சியவன். அவன் தலைநகராகிய வேலூரும் செல்வச் சிறப்பிலும் கலைத்திறத்திலும் பேரரசுகளைக் கூடக் கேலி செய்வனவாய் இருந்தன. வெண்சலவைக் கல்லாலான கொற்ற மண்டபத்திலுள்ள அவன் அரியணை பேரரசர்க்கும் எளிதில் கிடைத்தற்கரிய பொன்மணித் தவிசாய் அமைந்தது. வேலூர் முற்றுகையிடப் பட்டபோது முற்றுகை கைவிடுவதற்காக அவன் இருபது லட்சம் பொன் வரை தருவதாக ஆசை காட்டியும் சென்ன வேங்கடன் இணங்கவில்லை என்று அறிகிறோம். லிங்கமனை ஒழித்தபின் இவை எல்லாவற்றையும் பேரரசன் இரண்டாம் வேங்கடன் எடுத் கொண்டதுடன், வேலூரையே தன் தலை நகராக்கி அச்செல்வத்தைத் தன் பேரரசுக்கு உரியதாக்கினான்.

## மைசூர் எழுச்சி: 1610-1612

இரண்டாம் வேங்கடன் ஆட்சிக்கு வந்த சமயம் மதுரை ஆண்ட வீரப்ப நாயகன் திறை கொடாதிருந்தான். இரண்டாம் வேங்கடன் சீரங்கப்பட்டணத்திலிருந்த கன்னட மண்டலத் தலைவனை தன் அண்ணன் மகன் திருமலையை இதற்காகப் படையுடன் மதுரைக்கு அனுப்பியிருந்தான். திருமலை மதுரை நாயகனை அடக்கித் திறைகொண்டான். ஆனால் முறைப்படி தலைநகர் சென்று பேரரசனிடம் அதை ஒப்படைக்காமல், தன் மண்டலத்துக்கே சென்று தங்கிவிட்டான். தானே பேரரசுக்கு அடங்காமல் தனி அரசு புரியும் நோக்க முடையவன் அவன் என்பது இதனால் பேரரசனுக்கு விளங்கிற்று.

மைசூரில் இச்சமயம் ஆண்ட சிற்றரசன் இராச உடையார் (1578—1617), திடுமென 1610-ல் சூழ்நிலையைப் பயன் படுத்திக்கொண்டு சீரங்கப்பட்டணத்தை முற்றுகையிட்டு அதைப் பேரரசினிடமிருந்து கைப்பற்றிக்கொண்டான். இப் பேரரசுப் பகுதியை மீட்கப் பேரரசன் சிறிதும் முயற்சி செய்யாமல் வாளா இருந்து விட்டான். எதிர்த்தெழும் உறவினரை

விடப் புதிய அயலான் வாழ்வே சிறப்புடையது என்று இரண்டாம் வேங்கடன் இச்சமயம் எண்ணியிருக்க வேண்டும். ஏனெனில் 1612-ல் மைசூர் அரசன் இப்புதிய வெற்றியைத் தனக்கே நிலவர உரிமையாக்கித் தரும்படி பேரரசனை வேண்டினான். புதிய நட்பை மதித்துப் பேரரசனும் அவன் உரிமையையே ஏற்றுத் தன் அண்ணன் மகன் ஆணவத்திற்கு ஒரு நன் முடிவு கண்டான்.

இது தற்காலிகமாக இருதரப்பினருக்கும் பயனுடைய தொடர்பாகவே இருந்தது. ஏனெனில் இவ்வெற்றியின்பின் மைசூர் அரசின் எல்லை மதுரை அரசின் எல்லையாயிற்று. மைசூர் மன்னரின் பேரவா, பேரரசை எதிர்த்து வலிமை பெற்று வந்த மதுரை அரசைத் தாக்கி முன்னேற இது வழி வகுத்தது.

மதுரை நாயகன் முத்துவீரப்பன் இச்சமயம் தஞ்சையரசனுடன் போராட்டம் நடத்திக் கொண்டிருந்தான். அதைப் பயன்படுத்திக்கொண்டு மைசூர் அரசன் முகிலன் என்ற படைத் தலைவனைத் திண்டுக்கல் வட்டாரத்தைத் தாக்கும்படி அனுப்பினான். அரசன் நாட்டகத்திலில்லாத இச்சமயத்தில் நாட்டின் பெருமக்களான விருபாட்சிப் பாளையக்காரனும் கன்னிவாடிப் பாளையக்காரனும் இப்படையெடுப்பைச் சிதறடித்து நாட்டைக் காத்தனர் என்று அறிகிறோம். இவ்வருஞ் செயலுக்காக மதுரை நாயகன் விருபாட்சிப் பாளையக்காரனுக்குப் 'பாதைகாவல்' என்ற பட்டமும், கன்னிவாடிப் பாளையக்காரனுக்குச் 'சின்ன மைசூரான்' என்ற பட்டமும் அளித்துப் பெருமைப் படுத்தினான்.

வீரமா முனிவர் : 1606—1623

முத்து வீரப்ப நாயகனுக்கு முந்திய ஆட்சியிலே மதுரைக்கு வந்து கிறிஸ்தவ சமயப் பிரசாரம் செய்ய முனைந்தவர்களுள் ராபர்ட்டு டி நோபிலி என்ற வீரமா முனிவர் ஒருவர். 1610-ல் அவர் மதுரையில் புதிய கிறிஸ்தவக் கோயில் ஒன்று கட்டினார். மதுரையிலும், சேலம், திருச்சிராப்பள்ளி முதலிய மாவட்டங்களிலும் அவர் பல திருப்பணிகள் செய்தார். ஆனால் ஒருபுறம் சமயத் தலைமையிடத்திலும் மறுபுறம் நாட்டு மக்கள், பெரு மக்களிடத்திலும் பேரெதிர்ப்புக்கு அவர் ஆளானார். ஆனால் இரு திசையிலும் அவருக்கு நண்பரும் இருந்ததால், 1623-ல் கத்தோலிக்கரின் உலகத்திருத்தந்தை (போப்) பதினைந்தாம் கிரகரி அவர் திருப்பணிக்கு ஆதரவளித்தார். கீழ்திசை மொழி பலவும் கற்றுவல்ல பன்மொழிப் புலவராய் அவர் திகழ்ந்தார். அத்துடன்

தமிழுக்கு இப்பெரியார் செய்த பணி சிறிதல்ல. உயர்ந்த புதுமுறை இலக்கணம், உரைநடை நூல்கள் ஆகியவையன்றி இயேசுவின் சரிதமாகிய தேம்பாவணி என்ற தமிழ் கிறிஸ் தவப் பெருங்காப்பியமும் அவரால் இயற்றப்பட்டுள்ளது.

மதுரை மண்டலத் தலைநகர் மாற்றம். 1616

மதுரை நாயகர் அடிக்கடி தலைநகரை மதுரையிலிருந்து திருச்சிராப்பள்ளிக்கும் பின் மறுபடி மதுரைக்கும் மாற்றி வந்தனர் என்று தெரிகிறது. முத்து வீரப்ப நாயகன் காலத் திய மாற்றத்துக்கு அவன் தஞ்சைப் போர்களே காரணம். திருச்சிராப்பள்ளி தஞ்சைக்கு அருகிலேயே இருந்தது. பொது வாக மதுரையைவிடத் திருச்சிராப்பள்ளிக்குச் சிறந்த பாது காப்பு வாய்ப்பு மிகுதியாயிருந்தது. ஆயினும் 17—18-ம் நூற்றாண்டுகளில் திருச்சிராப்பள்ளி வடக்கிலிருந்து வரும் படையெடுப்புகளின் நேர்வழியில் இருந்ததால், அடிக்கடி அழிவுப் போர்களுக்கு இலக்காயிற்று. மதுரை பாதுகாப்பு வகையில் சிறிது பிற்பட்டிருந்தாலும், இத்தகைய படை யெடுப்புத் தளங்களிலிருந்து பெரிதும் ஒதுங்கி யிருந்தது.

தஞ்சை செஞ்சி நாயக மரபுகள் :

இச்சமயம் தஞ்சையாண்ட நாயக மரபினன் விசய இரகு நாத நாயகன் ஆவான். அவன் அச்சுதராயன் காலத்திய செவ்வப்ப நாயகனின் பேரனும், வல்லத்துப் போர்க் காலத் திய அச்சுதப்ப நாயகனின் மகனும் ஆவான். நாயக மரபினர் பலரும் பேரரசுக்கு எதிராகக் கிளர்ந்து வந்த காலங்களில் பலகாலும் பேரரசுக்கு உண்மையாயிருந்து உதவியது அவன் மரபே.

இவன் காலத்தில் செஞ்சி மண்டலத்தை (வடசோழநாடு, தொண்டை நாடு அடங்கிய பகுதியை) ஆண்டவன் கிருஷ் ணப்ப நாயகன்.

செங்கற்பட்டுப் போர்: திருச்சிராப்பள்ளிப் போர் :
மதுரைப் போர் : 1603—1607

தாமர்ல சென்ன வேங்கட நாயகன் வேலூர் முற்றுகை யில் ஈடுபட்டிருந்த சமயம் இரண்டாம் வேங்கடனும் வேலு கோடி யாசம நாயுடுவும் தெற்கே தொண்டை மண்டலம் சோணடு ஆகியவற்றின்மீது தாக்குதல் நடத்தினார்கள். உத்தரமேரூர்ப் போரில் கிளர்ச்சிக்காரர் பக்கம் ஆதரவு தந்த மதுரை, தஞ்சை, செஞ்சி நாயகர்களைத் தண்டிப்பதே இதன் நோக்கமாய் இருந்தது. செங்கற்பட்டுப் போர்,

திருச்சிராப்பள்ளிப் போர், மதுரைப் போர் ஆகிய மூன்றிலும் யாசம நாயகன் இத் தென் திசை நாயக மரபுகளை முறியடித் தான்.

செஞ்சிப் போர் : 1607—8

இப்போரில் பேரரசனும் யாசம நாயுடுவும் கிருஷ்ணப் பனை முறியடித்துச் செஞ்சியையும் முற்றுகையிட்டுக் கைப்பற் றினர். கிருஷ்ணப்ப நாயகன் இப்போரில் சிறைப்பட்டான். ஆனால் தஞ்சை ரகுநாதநாயகன் போர் நடுவில் பேரரசன் பக்கம் சேர்ந்து கொண்டதாலும் பெனுகொண்டா முற்றுகை யின்போது பேரரசனுக்கு உதவி செய்ததாலும் பேரரசனிடம் செல்வாக்குப் பெற்றான். அச்செல்வாக்கைத் துணைக்கொண்டு அவன் சிறைப்பட்ட தன் நண்பன் கிருஷ்ணப்ப நாயகனின் சிறை விடுதலைகோரி அவனை விடுவித்தான்

விசய நகர அரசுரிமைப் போராட்டம் : 1614—1618

இரண்டாம் வேங்கடனுக்கு மனைவியர் பலர் இருந்தனர். ஆனால் ீகுழந்தைகள் இல்லை. அவன் மனைவியருள் ஒருத்தி கொப்பூரி ஜக்கராயன் என்ற பெரு மகனின் உடன்பிறப்பா யிருந்தாள். மன்னன் அவளிடம் உயிர்ப்பாசம் வைத்திருந் தான். அவள் தான் பெறாத மகவைப் பெற்றதாகப் பாவித்து மற்றொருவர் பிள்ளையை எடுத்து வளர்த்தாள். அரசன் அது போலி மகவென்று தெரிந்தும் மனைவியிடம் கொண்ட பாசத் தினால் தெரியாதவன் போலிருந்தான். ஆனால் அரசுரிமைக்கு அவன் தன் அண்ணன் இராமன் மக்களுள் கன்னட மண்டல மாண்ட திருமலையின் தம்பி இரண்டாம் சீரங்கனையே (1614) உரியவனாகத் தெரிவித்து மாண்டான். ஆயினும் ஒரு மரு மகன் பெயரை வைத்து அரசுரிமைச் செல்வமாளும் அவா வால் கொப்பூரி ஜக்கராயன் போலி மகவையே அரசனாக்க முனைந்து கிளர்ந்தெழுந்தான். ஆனால் வேலுகோடி யாசம நாயுடு இரண்டாம் சீரங்கனையே ஆதரித்து அவனை எதிர்த் தான்.

ஜக்கராயன் தன் துணைவர்களான திம்மநாயகன், மகா ராஜன் ஆகியோர் துணைகொண்டு இரண்டாம் சீரங்கனையும் அவன் குடும்பத்தாரையும் கைப்பற்றிச் சிறைப்படுத்தினான். போலி மகவுக்கே முடிசூட்டினான். வேலுகோடி யாசம நாயுடு பரபரப்படைந்து பெரு முயற்சி செய்து, துணி வெளுப்பவன் ஒருவன் துணைகொண்டு இரண்டாம் சீரங்கன் புதல்வனான இராமதேவராயன் என்ற குழந்தையை மீட்டு வெளிக் கொண்டு வந்தான். அத்துடன் சீரங்கனையே தப்புவிக்க

முயன்றான். ஆனால் இம்முயற்சியும், இதனையடுத்துச் சிறைக் கோட்டத்தையே அடர்த்துத் தப்புவிக்கும் முயற்சியும் இரண்டும் தோல்வியுற்றன. அத்துடன் அம்முயற்சிகளின் பயனாகவே ஜக்கராயன் சிறையிலிருந்த சீரங்கனையும் அவன் குடும்பத்தினரையும் ஒருவரையும் விடாமல் கொல்ல நேர்ந்தது. தப்பிப் பிழைத்திருந்த குழந்தை இராமதேவனையும் அழிக்க அவன் முற்பட்டான். அக் குழந்தையைக் காக்கும் முயற்சியில், யாசமன் தஞ்சையரசன் இரகுநாதனைத் தேடி ஓடினான். உயிரைக் கையில் பிடித்துக்கொண்டே அவன் தஞ்சையில் தஞ்சம் நாட நேர்ந்தது. ஏனெனில் அவனைத் தொடர்ந்து ஜக்கராயனின் ஆட்களும் படைவீரரும் வேட்டையாடினர். குழந்தைப் பேரரசனைக் கைப்பற்றவும்; அம் மகவுடன் யாசமன் தஞ்சை நாயகனை அடைந்து ஆதரவு பெறவிடாமல் தடுக்கவும் அவர்கள் அருமுயற்சிகளை மேற்கொண்டனர். ஆனால் அவர்கள் நிலையறிந்து தஞ்சை நாயகனும் அவர்களை வழியில் சென்று தேடியதனால் யாசமனும் குழந்தை இராமதேவனும் பாதுகாப்புடன் அவன் ஆதரவில் சென்று சேர முடிந்தது.

தோப்பூர்ப் போர்: *1616—1617*

தோப்பூர் என்பது காவிரியின் தென்கரையில் பேரணைக் கட்டுக்கு அருகில் இருக்கிறது. அது இப்பொழுது தோகூர் என்று அழைக்கப் பெறுகிறது. இங்கே நடைபெற்ற போர் தமிழக வரலாற்றிலேயே தலைசிறந்த முக்கியத்துவம் உடையது. ஏனெனில் அதில் தமிழகத்திலுள்ள எல்லா அரசியல் குழுக்களும் பங்குகொண்டு போராடின. அதிலிருந்து விலகியிருந்தவர்கள் தமிழகத்துக்கு வடக்கிலுள்ள மைசூர் அரசன், இக்கேரி நாயகன், இஸ்லாமிய அரசர்கள் ஆகியவர்களே.

குழந்தைப் பேரரசன் இராமதேவன் சார்பில் போராடியவர்கள் யாசம நாயுடுவும் தஞ்சை நாயகன் இரகுநாதனும் மட்டுமே. ஆனால் எதிர்பக்கத்தில் போலி மகவுக்காக ஜக்கராயனும், செஞ்சி மதுரை நாயகரும், மதுரை நாயகரின் துணைவர்களான திருநெல்வேலிப் பாண்டியர்களும், தொலைதூரத்திலிருந்து வந்த திருவாங்கூர் அரசனும், இச்சமயம் மதுரை நாயகர் ஆதரவாளராயிருந்த போர்ச்சுகீசியரும் ஆவர்.

எதிரிகளின் தொகையும் அவர்கள் கூட்டுப் படைகளின் அளவும் மிகப் பெரிதாய் இருந்தபோதிலும் அந்நாளைய தமிழகத்தின் தலை சிறந்த இரு வீரர்களான யாசமனும் தஞ்சை நாயகன் இரகுநாதனும் சேர்ந்து இப்போரில் தமக்குப் பெரும் புகழும் பேரரசுக்குப் பெருவெற்றியும் தேடிக் கொண்டனர்.

இரகுநாத நாயகனின் படைகள் முதலில் பலமானேரி என்னும் ஊருக்கருகே கூடாரமிட்டுப் பின் போருக்குச் சித்தமாகத் தோப்பூர் நோக்கிச் சென்றன. யாசம நாயகனின் படைகளும் அங்கே வந்து திரண்டன. எதிரிகளின் படைகளிடையே மதுரை நாயகன் வீரர்களே முன்னணியில் நின்றனர். ஆனால் போரின் முதற் கடுமைக்கே ஆற்றாது மதுரைப் படைகள் களம் விட்டோடின. தன் நேசப் படைகள் தோற்றோடுவது கண்டு பொறாத ஜக்கராயன் இரகுநாதனை நோக்கி விரைந்து சென்று தாக்கினான். ஆனால் தஞ்சை மன்னனின் காலாட்படைகள் பாறைகள்போல நின்று தாக்குதலைச் சமாளித்ததுடனன்றி, எதிர்த்துத் தாக்கின. இத்தாக்குதலே போரின் திரும்பு கட்டமாயிற்று. ஏனெனில் அதனிடையே ஜக்சராயனும் அவன் துணைத்தலைவர்களிருவரும் வெட்டுண்டு வீழ்ந்தனர். செஞ்சிநாயகன் கிருஷ்ணப்ப நாயகன் தன் படைகளுக்கு முந்தித் தானே ஓடித் தலைவர்களின் அவமதிப்புக்கு இலக்காக நேர்ந்தது. மதுரை நாயகன் மட்டும் தன் முதல் வலிமைக்கேட்டைச் சமாளித்துக் கடைசிவரை நின்று போரிட்டான். ரகுநாத நாயகன் வீரர்கள் அவனைச் சிறை செய்தாலும், ரகுநாதன் பெருமிதமான பண்புடன் அவனை விடுதலை செய்தான்.

இப்போர் வெற்றியின் சின்னமாக இரகுநாதநாயகன் காவிரிக்கரையில் ஒரு தூண் நாட்டினான்.

இவ்வெற்றியின் பயனாக, இரகுநாதன் குழந்தைப் பேரரசன் இராமதேவ நாயகனைக் கும்பகோணத்திலே கொண்டு சென்று முடிசூட்டி அவனையே பேரரசனென்று விளம்பரப்படுத்தினான். இதனால் முந்திய அரசன் இரண்டாம் சீரங்கன் 1614-லேயே கொல்லப்பட்டாலும் இராமதேவ நாயகன் (1618—1630) அதற்கு நாலு ஆண்டுகளுக்குப் பின்னரே பதவியேற்றான்.

1620-ல் இராமதேவ நாயகனுக்கு வேலூரிலேயே மீண்டும் பேராரவாரத்துடன் முடிசூட்டு விழா நடத்தப்பட்டது.

பாளையங்கோட்டைப் போர் : 1617

தோப்பூர்ப் போரின் பின் தஞ்சை நாயகன் செஞ்சிக்கெதிராக ஒரு படைத்தலைவனை அனுப்பினான். அவன் செஞ்சி நாயகனுக்குரிய புவனகிரியையும் மற்றக் கோட்டைகளையும் ஒவ்வொன்றாகக் கைப்பற்றினான். இறுதியில் செஞ்சி தவிர அவனுக்கு எதுவும் இல்லாத நிலை ஏற்பட்டது. அப்போது கூடக் கிருஷ்ணப்ப நாயகன் பணியாமல் எதிர்ப்புக் காட்டிக்

கொண்டே இருந்தான். இழந்த இடங்களை மீட்பதிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்தான்.

ஜக்கராயன் இறந்தபின் அவன் இளவல் எதிராசன் அரசுரிமைப் போரை விடாது நடத்தினன். கிருஷ்ணப்ப நாயகனுடன் சேர்ந்து அவன் பாளையங்கோட்டையில் தஞ்சை நாயகன் படைகளுடனும், யாசமநாயகன் படைகளுடனும் மீண்டும் மோதினன்.

பாளையங்கோட்டை என்பது தென் ஆர்க்காட்டு மா வட்டம் சிதம்பரம் வட்டத்தில் சிதம்பரத்துக்கு வடமேற்கில் வெள்ளாற்றங்கரையில் உள்ளது.

இப்போரிலும் யாசமனே பெருவெற்றி கண்டான். கிருஷ்ணப்ப நாயகன் சிறைப்பட்டான்.

அரசுரிமைப் போர் முடிவு : யாசம காவிய முடிவு

1617-க்குப் பின் அரசுரிமைப் போரின் வேகம் குறைந்து விட்டது. மதுரை நாயகன் முத்துவீரப்பன் தன் புதல்வியை இரகுநாத நாயகனுக்கு மணம் செய்து கொடுத்து அவனுடன் தற்காலிகமாகவேனும் இணக்கம் உற்றான். செஞ்சிநாயகன் கிருஷ்ணப்பனும் இரகுநாதன் பரிந்துரையால் விடுதலை பெற்று 1629-க்குள் பேரரசின் உற்ற தோழனாய்விட்டான்.

எதிராசன் மட்டும் நாயகர்களிடையே வேறுபாடு உண்டு பண்ணும் முயற்சியைக் கைவிடாமலே இருந்தான். ஆனால் 1619-ல் அவன் ஆதரவு பெற்ற போலி மகவு இறந்துவிட்ட தால் எதிர்ப்பின்முனை மழுங்கலுற்றது. இராமதேவன் எதிராசன் புதல்வியை மணம் செய்துகொண்டு அவனுடன் நேசமானன்.

அரசுரிமைப் போரின் முடிவால் முற்றிலும் மனக்கசப்பு உற்றவன் அதன் அணையா வீர விளக்காகிய வேலுகோடி யாசமனே. எதிராசனுடன் நேசமாகிப் பேரரசன் கொப்பூரி குடும்பத்துடன் ஒன்றுபட்டது அவனுக்கு ஒரு சிறிதும் பிடிக்க வில்லை. இவ்வெறுப்பைக் கசப்பாக்கிய மற்றொரு செய்தி இருந் தது. அரசுரிமைப் போரின் வெற்றியால் தனக்குப் புகழ்மட்டு மன்றி, நெல்லூர் மாவட்டத்தில் உள்ள கொப்பூரி குடும்பத் தின் பெருஞ் செல்வமும் கைவரும் என்று அவன் மனப்பால் குடித்திருந்தான். அவ்வாசை மீதும் மண் விழுந்துவிடவே, அவன் உயிர் கொடுத்துப் பல்லாயிரங் களங்களில் காத்த பேரரசனையே எதிர்க்கலானன்.

புதுவலுப் பெற்ற இராமதேவன் அவனை எளிதில் அடக்கி விட்டான். ஆனல் மக்கள் உள்ளத்தில் பேரரசரும் செல்வரும்

பெறாத உயரிடம் அவனுக்குக் கிட்டிற்று. பேரரசர் பெருஞ் செல்வத்தாலும் பெறமுடியாத மக்கள் அன்புச் செல்வமும் அவனுக்குக் கிடைத்தது. அந்நாளைய சமஸ்கிருத காவிய மாகிய சதுபதிய ரத்னாகரம், அவன் வீரப் புகழின் அருமை யைக் காவிய முறையிலேயே உவமை அணி அழகு நயங் களுடன் ஒரு பாடலில் மதிப்பிட்டுக் காட்டுகிறது.

“கோடி ஐக்கராயர்களும், எழுபதுகோடி மக்கராயர்களை ஈன்ற தந்தையரும், ஓரிலக்கத்து ஒரு பதினாறு இராவில்லா வெங்கட நாயகர்களும் ஒன்று திரண்டு கூடினாலும், ‘இப்பர கண்டன்’ என்ற புகழ்ப் பெயர் நாட்டிய ஒரு யாசமனுக்கு ஈடாவரோ? வெள்ளாடுகள் எத்தனை எத்தனை சேர்ந்தாலும் வீரமிக்க ஒரு செங்கட் புலியேற்றுக்கு ஈடாகுமோ?” என்று அது அவனைப் பாராட்டியுள்ளது.

கர்நூல் கைதுறப்பு : *1619—1724*

அரசுரிமைப் போராட்டத்தைப் பயன் படுத்திக்கொண்டு முகமது குலீக்குப் பின் வந்த கோலகொண்டா அரசன் அப் துல்லா (*1611-1672*) தன் படைத் தலைவனான அப்துல்வஹாப் கானை *1619*-ல் கர்னூல் மீது படையெடுக்கும்படி செய்தான். அக் கோட்டையின் வீர காவலன் கோபாலராயன் அப்துல்லா வஹாபை முறியடித்ததுடன், துங்கபத்திரையையே எல்லை யாக உடன்படிக்கையில் கையொப்ப மிடும்படியும் செய்தான். ஆனால் *1624*-ல் அப்துல் வஹாப் மீண்டும் படையெடுத்தான். அண்டை அயல் தலைவர்களின் துணைகொண்டு கூட இச்சமயம் கோபாலராயன் கோட்டையைக் காக்க முடியவில்லை, அதனைக் கைவிட்டு அவன் ஓட வேண்டியதாயிற்று. அவன் *1630*-ல் இறக்க நேர்ந்ததால், கர்னூல் நிலையாகக் கோல கொண்டாவின் கைப்பட்டது.

முதல் மதுரை மைசூர் மோதுதல் : *1625*

மதுரையில் முதலாம் முத்து வீரப்ப நாயகனுக்குப் பின் தலை சிறந்த புகழ் வேந்தனான திருமலை நாயகன் (*1621-1659*) பட்டத்துக்கு வந்தான். இதே காலத்தில் மைசூரை இராஜ உடையாருக்குப் பின் ஆண்ட மன்னர்கள் முதலாம் சாமராஜ உடையார் (*1617—1637*), இம்மடி ராஜன் (*1637—1638*), கண்டீரவநரச உடையார் (*1638—1659*) ஆகியோர் ஆவர்.

முதலாம் சாமராஜனின் படைத் தலைவனான ஹரசூரா அல்லது கரசூரி நந்திராஜன் மதுரை அரசின் பகுதியான திண்டுக்கல்மீது *1625*-ல் படையெடுத்தான். மதுரைத் தள வாய் இராமப் பையனும் கன்னிவாடிப் பாளையக்காரன்

இரங்கண்ண நாயகனும் அவனைத் தோற்கடித்ததுடன், மைசூர்த் தலைநகர்வரைக்கும் விடாமல் தொடர்ந்து துரத்தினர்.

திருவாங்கூர்ப் படையெடுப்பு : *1634*

திருவாங்கூர் அரசன் உண்ணி கேரளவர்மன் 1631-ல் பட்டத்துக்கு வந்தான். இராமராச விட்டலராசன் 1547-ல் படையெடுத்து வென்ற நாள் முதல் திருவாங்கூர் அரசர் விசயநகரத்துக்கும் அதன் சார்பில் மதுரை நாயகருக்கும் திறைகட்டி வந்தனர். உண்ணி கேரளன் அதை நிறுத்திவிட முயன்றான். இது காரணமாக நடைபெற்ற மதுரைப் படையெடுப்பில் திருவாங்கூர் அரசன் முற்றிலும் பணிந்து அது முதல் ஒழுங்காகத் திறைகட்டி வந்தான். இப் படையெடுப்பின் அச்சம் நீண்ட காலம், மங்கம்மாள் காலம்வரை, திருவாங்கூரை விட்டகலவில்லை என்று அறிகிறோம்.

சேதுபதி மரபின் அரசுரிமைப் போராட்டம் : *1637—1645*

முதல் சேதுபதியான தளவாய் சேதுபதி என்ற முதலாம் சடைக்கத் தேவன் ஆட்சிக்குப் பின் அவன் புதல்வன் கூத்தன் சேதுபதியும் [*1623—1635*] அவனுக்குப் பின் அவன் மகன் தளவாய் சேதுபதி இரண்டாம் சடைக்கத் தேவனும் ஆட்சி செய்தனர். சடைக்கத் தேவனின் ஆட்சியின் இரண்டாம் ஆண்டிலிருந்து முந்திய அரசன் அன்புரிமைப் புதல்வனை 'தம்பி' என்பவன் அரசுரிமை கோரிப் போராடியதுடன் மதுரைநாயகர் ஆதரவையும் பெற்றான். தளவாய் சேதுபதிக்கே நாட்டு மக்கள் ஆதரவு பெரிதாயிருந்ததனால், மதுரை நாயகன் தம்பிக்காகப் போராட வேண்டி வந்தது.

இப்போரிலும் திருமலை நாயகன் படைத்தலைவன் இராமப் பையனே. இராமப் பையன் அம்மானை என்ற அந்நாளைய தமிழ் நாட்டுப் பாடல் இப்படைத் தலைவன் வீர வெற்றி வாழ்வைப் பொதுவாகவும், சேதுபதி நாட்டின் போராட்டத்தைச் சிறப்பாகவும் விரித்துரைத்துள்ளது.

இப் போராட்டத்திலும் தளவாய் இராமப் பையனுடன் கன்னிவாடிப் பாளையத் தலைவன் இரங்கண்ண நாயகன் துணைத் தலைவனாகச் சென்றான். இதே போரில் நாஞ்சில் நாட்டு அரசனும் பங்கு கொண்டதாகக் கூறப்படுகிறது. நாஞ்சில் நாட்டு அரசன் என்பது இங்கே திருவாங்கூர் அரசனாகவே இருத்தல் கூடும். அல்லது திருவாங்கூர் அரசன் கீழ் நாஞ்சில் நாடாண்ட ஒரு வீரப் படைத் தலைவனாகவும் இருத்தல் கூடும்.

மதுரைப் படைகள் இராமநாதபுரம் வரை பெரும் போரிட்டுக் கிழடக்கிய பின்னும், சேதுபதி சடைக்க தேவன் இராமேசுவரம் தீவில் சென்று எதிர்ப்புச் செய்தான். படைகளை அத் தீவினுள் கொண்டு செல்வதற்காகப் பாம்பன் மீது ஒரு பாலம் கட்டமைக்கப்பட்டது. சேதுபதி சிறைப்படுத்தப்பட்டு மதுரைக்குக் கொண்டுவரப்பட்டான்.

இப்போர் 1639-க்குள் முடிவடைந்துவிட்டது. இந் நடவடிக்கைகளில் போர்ச்சுகீசியர் திருமலை நாயகனையும், டச்சுக்காரரர் சேதுபதியையும் ஆதரித்துப் போரில் கலந்து கொண்டதாக அறிகிறோம். போரில் சில கட்டங்களில் இரு தரப்பாருக்கும் கடற் போர்களும் நடைபெற்றன என்று அம்மானை கூறுவதுடன், போர்ச்சுகீசிய டச்சு ஆதாரங்களும் இவற்றை வலியுறுத்துகின்றன.

போர்ச்சுகீசியக் கீழ்திசைத் தலைவனிடம் மதுரை நாயகன் இராமப் பையனையே அரசியல் தூதுவனாக அனுப்பி, போரில் போர்ச்சுகீசிய அரசன் படைகள் செய்த உதவிக்கு நன்றி தெரிவித்ததாகவும், போர்ச்சுகீசியருக்கு இதற்குப் பதிலீடாக ஒரு கோட்டையும் ஏழு கோயில்களும் கட்டித் தருவதுடன், பிற உரிமைகள் அளிப்பதாகவும் உறுதி கூறினான். சேதுபதியின் மறவர் வெள்ளையரைவிடச் சிறந்த வீரர் என்று டச்சு ஆதாரங்களும் குறிப்பிடுகின்றன.

அரசுரிமைப் போருடன் இராமநாதபுரம் அமைதி காண வில்லை. தளவாய் சேதுபதியின் மறு புதல்வர்களான இரகுநாத தேவன், நாராயண தேவன் ஆகியோர் மக்கள் துணை கொண்டு தம்பிக் கெதிராகக் கிளர்ச்சி செய்தனர். திருமலை நாயகன் இப்போது சேதுபதி மரபின் வாழ்வில் தன் தலை யீட்டால் வந்த பிழை உணர்ந்தான். நாட்டில் அமைதி பேண வல்லவன் சேதுபதி சடைக்கனே என்றுணர்ந்து அவனையே விடுதலை செய்து மன்னனாக்கினான். அவன் 1640-முதல் 1645 வரை யாதொரு வில்லங்கமும் இல்லாமல் ஆண்டான். ஆனால் 1645-ல் தம்பியால் அவன் கொலைசெய்யப்படவே மீண்டும் அமைதி கெட்டது.

திருமலைநாயகன் இப்போது நாட்டை மூன்று கூறுகளாகப் பிரித்து, தம்பி ஒரு கூற்றையும், இரகுநாத தேவன், அவன் தம்பி தனக்கத்தேவன் ஆகிய இருவரும் இரு கூறுகளையும் ஆளும்படி செய்தான். ஆனால் தம்பியும் தனக்கத்தேவனும் விரைவில் இறந்ததால், சேதுநாடு மீண்டும் இரகுநாத தேவன் ஆளுகையில் ஒன்று பட்டது.

இரகுநாததேவன் இதன்பின் திருமலைநாயகனுக்குச் செய்த உதவி சிறிதன்று. திருமலைநாயகன் ஆட்சி இறுதியில் முஸ்லிம் படைகள் எதிர்த்தபோது அவன் அவற்றை முறியடித்துத் துரத்தினான். தெற்கே எட்டயபுரத்துக் கோமான் தலைமையில் பாளையக்காரர் கிளர்ச்சி செய்தபோது அதனை அடக்கி நாயக அரசு காத்தான். முந்திய சேவைக்காக அவன் மதுரைத் தலைநகரின் நவராத்திரி விழாவுடன் சரிசமமான ஆடம்பரத்துடன் தன் தலைநகரான இராமநாதபுரத்திலும் விழாக்கொண்டாடும் உரிமை பெற்றான். பிந்திய சேவைக்காக மன்னார் கோவில் பகுதியில் மானிய நிலமும் முத்துத் துறை வருவாயில் பங்கும் பெற்றான்.

இராமேசுவரத் திருப்பணியில் இரகுநாதன் கொண்ட பெரும் பங்கு 'சேது காவலன்' என்ற பெயரை அவனுக்குத் தந்தது.

பேரரசமரபின் வாழ்வு தாழ்வுகள் : *1630—1642*

இராமதேவராயனுக்குப் பின் விசயநகர மரபின் உரிமை முதலாம் சீரங்கனின் பேரனும் திருமலைராயனின் கொள்ளுப் பேரனுமான பெத்த வேங்கடன் என்ற மூன்றாம் வேங்கடனுக்கு உரிமையாயிற்று. ஆனால் இராமராயனின் பேரனான திம்மராயன் அதே உரிமைக்குப் போட்டியிட்டான். மதுரை தஞ்சைநாயகரும் செஞ்சிநாயகனும் பேரரசன் தம்பி மகன் அடுத்த உரிமையாளனான இளவரசன் (மூன்றாம்) சீரங்கனும் மூன்றாம் வேங்கடனுக்கு உதவியாயிருந்தனர். இளவரசன் சீரங்கனால் முறியடிக்கப்பட்ட பின்னும் அவன் கிளர்ந்தெழுந்து 1675-ல் செஞ்சி நாயகனால் போரில் கொலையுண்டான்.

இந்தச் சுமுகமான சூழ்நிலை 1637-ல் கலைவுற்றது.

பெனு கொண்டாவின் மீது பீசப்பூரின் கண் திரும்பிற்று. அதன் பாதுகாப்பைக் கொண்டி நாயகனிடம் விட்டு விட்டுப் பேரரசன் மூன்றாம் வேங்கடன் வேலூருக்கு மீண்டான். கொண்டிநாயகன் 15 ஆண்டுகள் வரை பெனுகொண்டா எதிரிகள் கையில் சிக்காமல் காத்துவந்தான்.

செஞ்சிநாயகனுடன் பேரரசன் மிக நெருக்கமாகப் பழகுவது காணப் பொறாமல் மதுரை நாயகர்கள் பேரரசன் வேங்கடனுக்கு எதிராகச் சதி செய்தனர். இச் சதி வெற்றி பெறவில்லை.

இதேசமயம் எக் காரணத்தாலோ, இளவரசன்(மூன்றாம்) சீரங்கன் பீசப்பூர் அரசனுடன் சேர்ந்துகொண்டு விசய

நகரத்தின் மீது இரு தடவை படையெடுத்தான். 1638-ல் நடைபெற்ற முதற் படையெடுப்பில் பங்களூர் முற்றுகையிடப்பட்டது. மூன்றும் வேங்கடன் பெரும்பொருள் கொடுத்து, இணக்க அமைதி பெற்றுக்கொண்டான். அத்துடன் தஞ்சைநாயகரசனுடன் ஒற்றுமைப்பட்டுத் தன்னைப் பலப்படுத்திக் கொண்டான்.

இளவரசன் (மூன்றும்) சீரங்கன் 1641-ல் பீசப்பூர்ப் படைத் தலைவன் ரணதுல்லாகானுடன் படையெடுத்து வேலூருக்குப் பன்னிரண்டு கல் தொலைவரை முன்னேறியிருந்தான். இத்தடவை தமிழக நாயகர் உதவி வேலூரைக் காத்தது. ஆயினும் இதே சமயத்தில் கோலகொண்டா அரசனும் கீழ்கரையோரமாகப் படையெடுத்து வந்தான். சரிநிற பேரரசில் மேல் திசையில் பீஜப்பூர் முன்னேறுவதுடனொத்துக் கீழ்திசையில் முன்னேறி அதைப் பங்கிடவே அவன் எண்ணினான். நெல்லூர்ப் பகுதியில் அருமகோவனின் தலைவன் வேலுகோடி திம்மராயனும் பூவிருந்தவல்லியிலிருந்து சென்னைப் பகுதியை ஆண்ட தாமரில வேங்கடனும் கோலகொண்டாவை ஓரளவு எதிர்த்து நின்றாலும், அதன் முன்னேற்றத்தை அவர்கள் தடுத்து நிறுத்த முடியவில்லை. இத்தகைய நெருக்கடித் தறுவாயிலேயே பேரரசன் நம்பிக்கையிழந்து வேலூரைக் கைவிட்டுச் சித்தூர்க் காடுகளிடையே திரிந்து மனமுறிவால் மாண்டான்.

### மைசூர், இக்கேரி, பீசப்பூர் எழுச்சிகள் : மராட்டிய இனப் புதுமலர்ச்சி

மைசூரில் இராஜ உடையார், முதலாம் சாமராஜ உடையார் ஆகியவர் காலங்களில் 1630-க்குள் மைசூர் தென பகுதியிலுள்ள சென்னப்பட்டண மண்டலத் தலைமைப் பகுதியில் பாரா மகால் (சேலம் பகுதி) நீங்கலான பரப்பு மைசூரில் நிலையாகச் சேர்க்கப்பட்டு விட்டது. ஆனால் மைசூருக்குப் போட்டியாக இச் சமயம் வீரபத்தரன் என்ற நாயக அரசன் (1629-1645) கீழும் செவ்வப்ப நாயகன் (1645-1660) கீழும் இக்கேரி வலுவடைந்து வளர்ந்து வந்தது.

சாமராஜ உடையார் நாகமங்கலத்திலாண்ட சிற்றரசன் சென்னையனை அவன் நாட்டைவிட்டுத் துரத்தியிருந்தான். சென்னையன் பீசப்பூர் அரசனிடம் உதவிகோரி அவனிடம் தஞ்சம் புகுந்திருந்தான். அடுத்த மைசூர் அரசன் கண்டீரவ ராசன் பசவபட்டணத்திலாண்ட சிற்றரசன் கெங்கஹனுமனை வீரபத்திர நாயகனுக்கெதிராகத் தூண்டிவிட்டான். வீரபத்திரன் கெங்கஹனுமனை இதுபோல் நாட்டைவிட்டுத் துரத்

தினன். அவனும் பீசப்பூரிடமே உதவி கோரிச் சரண் புகுந்தான். வல்லமை வாய்ந்த மைசூர், இக்கேரி அரசுகளைக் கடந்து தெற்கே பரவ முடியாமல் விருவிருத்துக் கொண்டிருந்த பீசப்பூருக்கு இது நலல வாய்ப்பாயிற்று.

பீசப்பூர், கோலகொண்டா, அகமது நகர் ஆகிய தென்னக முஸ்லிம் அரசுகள் இக் காலத்தில் ஒருபுறம் வட திசை முகலாயரால் அலைக்கழிக்கப்பட்டும், அதன இடை வேளைகளில் தென் திசை பரவித் தம் வாழ்வைப் பாதுகாக்க முனைந்தும் வந்தன. இம் முயறசிகள் காரணமாக மராட்டிய வீரரைப் படைத் துறையிலும மராட்டிய பிராமணரை அமைச்சர் முதலிய பணித் துறைகளிலும் பேரளவாகச் சேர்த்துக் கொண்டிருந்தனர். தென் திசைப் பக்தி இயக்கத்தின் சைவ, வைணவ அலைகள் இரண்டுக்கும் இலக்காகி இயல் மலர்சசி பெற்றிருந்த மராட்டிய இனம் இதனால் அரசியலிலும் மலர்ச்சியுற்றுப் புதிய தேசியமாக வளரத் தொடங்கிற்று. இம் மலர்ச்சியில் பீசப்பூர்ப் படைத்தலைவனாய் இருந்த ஷாஜி பான்ஸ்லே (பிறப்பு 1594 மறைவு 1664), அவன் இரண்டாம் மகன் சிவாஜி (பிறப்பு 1627 மறைவு 1680), ஓரளவு ஷாஜியின் மூதத புதல்வன் வெங்காஜீ என்ற எக்கோஜி (ஆட்சி 1675—1684) ஆகியோர் பேரிடம் வகிக்கத் தக்கவராவர்.

ஷாஜி தன் இளமையில் (1624—1636) பல ஆண்டுகள் அகமது நகர், முகலாயப் பேரரசு, பிஜப்பூர் ஆகியவற்றின் படைத்தலைவனாயிருந்து அருந்தொண்டாற்றிப் பெரும் புகழும் செல்வாக்கும் பெற்றிருந்தான். அடுத்த 28 ஆண்டுகளில் (1636-1664) அவன் பீசப்பூரின் படைத்தலைவர்களுள் ஒருவனாக இருந்துகொண்டே தென்னகத்தில் ஒரு புதிய மராட்டிய சக்தியை உருவாக்கக் காரணமானான். அதன் கிளையாகவே பின்னாட்களில் அவன் மூத்த புதல்வன் எக்கோஜி தஞ்சை மராட்டிய மரபை நிலைநாட்ட முடிந்தது

மைசூரின் தென்திசை வெற்றிகள் 1642-க்குள் மைசூரின் எல்லையை மதுரை அரசின் எல்லைக்குக் கொண்டுவந்து விட்டன. ஆனால் கெங்க ஹனுமனின் தூண்டுதலால் 1638—1639-ல் தொடங்கிய பீசப்பூர் படையெடுப்பினால் இக்கேரி அரசின் பகுதியும் பற்றப் பல சிற்றரசுப் பகுதிகளும் மைசூர் புதிதாக வெனற பகுதிகளும் படிப்படியாகப் பீசப்பூர் வசமாயின. பீசப்பூர் படைததலைவன் ரணதுல்லாக்கானுடன் இப் போர்களில் துணைப் படைத்தலைவனாக வந்த ஷாஜியிடமே இவற்றின் ஆட்சி ஒப்படைக்கப் பட்டது. பெயரளவில் பீசப்பூர் அரசன் மேலுரிமையுடன், ஆனால் பேரளவு

தன்னுண்மையுடனேயே, ஷாஜி இப் பகுதியை ஆண்டு வந்தான்.

ஷாஜியின் ஆட்சியிலிருந்த இப் பரப்பில் இன்றைய பெல்லாரி மாவட்டமும இன்றைய மைசூர்த் தனியரசுப் பகுதிகளாகிய சித்தலதுருக்கம், தும்கூர், கோலார் மாவட்டங்களும், பங்களூர் மாவட்டத்தில் பாதியும் அடங்கியிருந்தன.

உதயகிரிப் போர்: 1644

மூன்றும் வேங்கடனுக்குப் பின் பேரரச மரபுக்கு மூன்றும் சீரங்கனே (1642) உரியவனுனன். அவன் துணிகா வீரமும் சூழ்ச்சியும் உடையவன். ஆனால் அவன் பேரவாவும் சூழ்நிலையறிந்து நடக்கும் நெளிவு குழைவுப் பண்பின்மையும் அவன் காலத்திலேயே பேரரச மரபுக்கு ஒரு முடிவு உண்டு பண்ணின.

பேரரசனுகு முன் அவன் பேரரசை எதிர்த்துப் படையெடுத்த பீசப்பூர்ப் படையுடனே இருந்தான். ஆனால் முந்திய பேரரசன் மறைவுற்றது கேட்டதே அவன் ஆட்சி யுரிமை மேற்கொள்ள விரைந்தான். தாமர்லாத் துணைவர்களும் செஞ்சி நாயகனும் வேறு ஓர் உரிமையாளனை ஆதரித்து, தமக்கு உதவும்படி கோல கொண்டாவை அழைத்திருந்தனர். மூன்றும் சீரங்கன் அவர்களுக் கெதிராகப் பீசப்பூர்ப் படைகளை உதவிக் கழைத்தான். பீசப்பூரின் துணைப்படைத் தலைவனுயிருந்த ஷாஜி இச்சமயம் பேரரசனை ஆதரிக்கும்படி தமிழக நாயகர்களாகிய மதுரை, தஞ்சை, செஞ்சி அரசர்களை மட்டுமன்றி, இக்கேரி, ஹார்ப்பன ஹள்ளி ஆகிய நாயக அரசுகளையும் ஒருங்கு திரட்டி உதவியதாக அறிகிறோம். இவ்வுதவிகளுடன் மூன்றும் சீரங்கன் கோல கொண்டாப் படைகளை 1643-ல் உதயகிரிப்போரில் முறியடித்தான்.

தமிழக நாயகர்கள் இச்சமயம் உதவிய திறைப் பணத்தையே பீசப்பூர்ப் படைகளின் உதவிக்குக் கைம்மாருகப் பேரரசன் அளித்தான்.

இதே சமயம் டச்சுக் காரரிடம் தாசனுயிருந்த வணிக கோமகனுன் மல்லய்யன் என்பவன் தாமர்லாத துணைவர்களைக் கீழடக்கி அவர்களிடமிருந்த கீழ்க் கரையோரக் கோட்டைகளைக் கைப்பற்றினன் உதயகிரிப் போரின் பின் உதயகிரிக் கோட்டையும் அவன் வசமே விடப்பட்டது.

வேலூர்ப் போர்: 1645

மூன்றும் சீரங்கன் பேரவாவும் ஆத்திர புத்தியும் முந்திய பேரரசர்களைப் போலத் தமிழக நாயகர் மீது பெயரளவில் மேலுரிமையுடன் அமையாமல முழுப்பணிவும் கோரும்படி

செய்தது. இதனைப் பெறும்படி அவன் ஒரு பெரும் படையுடன் தெற்கே புறப்பட்டான். ஆனால் மதுரையாண்ட திருமலை நாயகன் பேரரசைச் சாராமல் தன்னுண்மை பெறவும், பேரரசை எதிர்த்து வளர்ச்சி யடையவும் விரும்பினான். எனவே இவ்வெதிர்ப்பில் மற்றத் தமிழக நாயகர்களையும் சேர்க்கத் திட்டமிட்டான். தஞ்சை அரசன் இதில் சேர மறுத்ததுடன் நில்லாமல், திட்டத்தின் முழு விவரத்தையும் பேரரசனுக்கு அறிவித்தான்.

பேரரசனும் தஞ்சை அரசனும் சேர்ந்துவிட்டால் தன் நிலை இன்னும் மோசமாய்விடும் என்றறிந்த திருமலை நாயகன் பேரரசின் தலைமை யிடத்தைத் தாக்கும்படி கோலகொண்டாவைத் தூண்டினான். அவனது இந்த நடவடிக்கை தற்காலிகமாக வேனும் பயனளித்தது. 1645-ல் கோலகொண்டாவின் படைத்தலைவனான மீர்ஜும்லா ஓங்கோல், நெல்லூர், சித்தூர் ஆகிய இடங்களைக் கடந்து வேலூர் மீது படையெடுத்தான்.

உதயகிரிக் கோட்டைக் காவலைச் சீரங்கன் மல்லய்யாவிடம் ஒப்படைத்திருந்தான். எதிரியுடன் பேரம் செய்து கொண்டு மல்லய்யா கோட்டையை அவனிடம் ஒப்படைத்துவிட்டதால், தலைநகர் விரைவில் ஆரிடருக்கு உள்ளாயிற்று.

மூன்றும் சீரங்கன் இச்சமயம் இக்கேரி நாயகனின் உதவி நாடினான். இக்கேரி நாயகன் வீரபத்திரனின் மகன் செவ்வப்ப நாயகன் 400,000க்கு மேற்பட்ட வீரர்களடங்கிய தன் வலிமை வாய்ந்த படைகளுடன் பேரரசனுக்கு உதவியாக வந்தான். வேலூர் எளிதாகப் பேரரசன் ஆட்சிக்கு உட்பட்டது. அதனைச் சூழ்ந்த இடங்களையும் அடக்கச் செவ்வப்ப நாயகன பேரரசனுக்கு உதவினான்.

உற்றவிடத்து உதவிய இப்பெருஞ் செயலால் பெரு மகிழ்வுற்ற பேரரசன செவ்வப்ப நாயகனுக்கு ‘இராமபாணம்’ ‘பரவாரணவாரணன்’ முதலிய பட்டங்களை அளித்துப் பெருமைப் படுத்தினான்.

பீசப்பூரின் புதிய படை யெழுச்சிகள் 1644—1646

இக்கேரியில் செவ்வப்ப நாயகனின் வலிமையைக் குறைக்கும் எண்ணத்துடன் பீசப்பூரரசன் 1644-ல் மூஸ்தாபாகான் என்ற நவாபகான் பாபாவின் தலைமையில் ஒரு படையை அனுப்பினான். அது இக்கேரி, சாகர்க் கோட்டைகளைக் கைப்பற்றியது மூஸடர் உதீன் அல்லது கானீகான் என்ற தலைவன் இவ்வெற்றியைத் தொடர்ந்து செஞ்சியை அடுத்த பாராமகால் (சேலமாவட்டம்) வரை முன்னேறினான்.

பீசப்பூர்—கோலகொண்டா புதிய ஒற்றுமை இச்சமயம் ஏற்பட்டது. பேரரசின் தலைமையிடத்தை இருவரும் சேர்ந்து படையெடுப்பதென்று இரு அரசர்களும் ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

விரிஞ்சிபுரம் போர் II *1646*

இருமுஸ்லிம் அரசுகளும் ஒன்று சேர்ந்து பேரரசை எதிர்ப்பதாக அறிந்தபோது, மதுரை நீங்கலான மற்ற நாயக அரசுகள் பேரரசுக்கு ஆதரவுதர முன் வந்தன ஆனால் அவற்றின் ஆதரவு பெற்றும் சீரங்கன் விரிஞ்சிபுரத்தில் நடைபெற்ற போரில் படுதோல்வியுற்றான். தலைநகரின் மீதே தாக்குதல் தொடங்கிற்று.

வேலூர் முற்றுகை *1647*

கோலகொண்டாப் படைத்தலைவன் மீர்ஜம்லா கடப்பை, நெல்லூர்ப் பகுதிகளையும் பழவேற்காட்டுக் கோட்டை வரையுள்ள கரையோரப் பகுதிகளையும் வென்றான். பழவேற்காட்டிலுள்ள டச்சுக்காரர் மட்டுமே அவன் புதிய வெற்றிகளை மதித்துப் பணிய மறுத்தனர். அதன் பின் அவன் ஒரு திசையிலிருந்தும், பீசப்பூர்ப் படைகள் மற்றொரு திசையிலிருந்தும் வேலூரை முற்றுகையிட்டனர்.

வேலூரில் காலூன்றிய விசயநகரப் பேரரசின் கடைசிக் காவலனைக் காக்க வேலூர்ப் பகுதி மக்களும் சூழ்புல மக்களும் பல தியாகங்களைச் செய்தனர் என்று அறிகிறோம். நகரின் பெருங்குடிப் பெண்டிரும் அரசகுடி மாதரும் தம் அணி மணிகளைப் பாதுகாப்புச் செலவுக்காக அளித்தனர். திருப்பதி கோயிலின் கருவூலக் காவலர் கருவூலப் பணத்தைக் கூட எடுத்துக் கொடுத்துதவினர். ஆனால் இவை எவையும் நகரைக் காக்கவில்லை.

நகர முற்றுகையில் ஷாஜி பீசப்பூர்ப் படைகளின் இடது புற அணியை நடாத்தினான்.

நகர மக்களில் பலர் கொலையுண்டனர்.

பேரரசனிடமிருந்து 50 இலட்சம் பொன்னும், 150யானைகளும் போர்த் தண்டமாகப் பறிக்கப்பட்டன. ஆனால் ஷாஜி பேரரசனை மட்டும் தப்பியோடும்படி செய்ததாக அறிகிறோம்.

தமிழக நாயகர்களை மீட்டும் ஒன்று திரட்டும் முயற்சியில் பேரரசன் ஓராண்டு கழித்தான். பின் அவர்கள் கைவிட்ட பின் தஞ்சைக் காடுகளில் திரிந்தான். இதன் பின்னர் அவன் மீண்டும சிலநாள் இக்கேரியிலும் சிலநாள் மைசூரிலும் சென்று அவ்வரசர் ஆதரவில் தங்கியிருந்தான்.

ஷாஜி முஸ்லீம் அரசுகளின் சேவையிலிருந்தாலும், தென் திசை அரசுகளை ஒன்றுபடுத்துவதில் கருத்துச் செலுத்தியிருந்தான். ஆயினும் அவன் கடமை யுணர்ச்சி இப்படையெடுப்பில் பீசப்பூர் வெற்றிக்குப் பெரிதும் உதவிற்று. ஆகவே போர் முடிவில் பீசப்பூர் அரசன் அவனுக்கு ''மகாராஜ்'' ''பர்சந்த்'' அல்லது 'மன்னர் மகன்' என்னும் பட்டங்களை அளித்துப் பெருமைப்படுத்தினான்.

செஞ்சி முற்றுகையும் வீழ்ச்சியும் 1648—1649

வேலூர் முற்றுகைக்குப் பின் மீர்ஜும்லாவின் கோல கொண்டாப் படைகள் விரைந்து செஞ்சியை நோக்கி முன்னேறி அத் தலைநகரையே முற்றுகைக்கு ஆளாக்கின. தமிழக நாயக அரசுகளுள் ஒன்றான செஞ்சிக்கு நேர்ந்த இடர் மற்ற நாயக அரசுகளுக்கு அதிர்ச்சி யூட்டின. தஞ்சை அரசன் அம் முதலதிர்ச்சியில கோலகொண்டாவுக்குப் பணிந்து தன்னைக் காத்துக்கொள்ள முயன்றான் ஆனால் மதுரையாண்ட திருமலை நாயகனோ பீசபபூரின் உதவியை நாடினான் மீர்ஜும்லா முன்கூட்டிப் பீசப்பூருடனும் மைசூருடனும் நேச ஒப்பந்தம் கோரியிருந்தாலும், பீசப்பூர் இச்சமயம் நவாப் முஸ்தாபாகான், ஷாஜி ஆகியவர்கள் தலைமையில் 17,000 குதிரை வீரர்கள் அடங்கிய ஒரு படை அனுப்பத் தயங்க வில்லை. செங்கம், திருவண்ணாமலைக் கோட்டைகளைப் பிடித்துக்கொண்டு அவர்கள் செஞ்சி வந்தனர். ஆனால் பீசப்பூரின் முஸ்லீம் படைத்தலைவர்களுடன் கோலகொண்டாவின் முஸ்லீம் படைத்தலைவர்கள் தனிப்பேச்சு நடத்தினர். ஷாஜி பல காரணங்களை முன்னிட்டு இச் சமயம் பீசபபூர் அரசனால் சிறையிடப்பட்டான்.

பீசப்பூர் படைத்தலைவர்சள் கோலகொண்டாப் படைத் தலைவர்களுக்குப் பணம் கொடுத்து முற்றுகையைத் தம்மிடம் ஒப்படைக்கும்படி தூண்டினர். தன் வடதிசை வேலூர் வெற்றியை முடிக்கும விருப்புடன் மீர்ஜும்லாவும் இதற்கு இணங்கினான். 1649-ல் செஞ்சி பீசப்பூர் ஆட்சிக்கு உட்பட்டது.

செஞ்சிநாயகன் செல்வமும் அணிமணிகளும், பல கோடிப் பொன்னளவில், பீசப்பூர் வசமாயின.

மதுரை தஞ்சை அரசுகளும் பீசப்பூரும்

செஞ்சி வீழ்ச்சியின் பின் பீசப்பூர்ப் படைகள் தஞ்சை அரசுப் பகுதிகளிலும் மதுரை அரசுப் பகுதிகளிலும் புகுந்து கொலையும் கொள்ளையும் சூழத் தொடங்கின. இவ் வகையில் அம் முஸ்லிம் படைத்தலைவர் தம்மை அழைத்த மதுரை,

செஞ்சி அரசுகளுக்கும் தம்மிடம் பணிந்துவிட்ட தஞ்சை அரசுக்கும் எத்தகைய வேற்றுமையும் காட்டியதாகத் தெரிய வில்லை. ஆனால் நாம் மேலே குறிப்பிட்டுள்ளபடி, இம் முஸ்லீம் அரசின் படைகளை மதுரை எல்லையிலிருந்த சேதுபதியும் அவன் மறவர் படைகளும் துரத்தித் தென் தமிழகத்துக்குப் பின்னும் நீடித்த ஓய்வு தந்தனர்.

மூக்கறுத்தான் போராட்டம் :

மைசூர், மதுரை பூசல் *1656—59*

திருமலைநாயகன் ஆட்சியிறுதியில் அவன் உடல் நலம் கெட்டுப் படுக்கையாய் இருந்தான். இச் சமயம் பார்த்து மைசூர் அரசன் முதலாம் கண்டீரவ நரசன் மதுரை அரசைத் தாக்கும்படி ஒரு படையை அனுப்பினான். மதுரைநாயகன் பீசப்பூர்ப் படைகளைத் தெற்கே அழைத்ததன் மூலம் தன் அரசுக்கு நேர்ந்த இடர்களே அவனை இச் செயலில் தூண்டி யிருக்கக்கூடும். ஆனால் அவன் தன் படைத்தலைவன் தளவாய் ஹம்பையாவுக்கு கொடுத்த கட்டளையே இப்போருக்குத் தனிப் பண்பும் பெயரும் தந்துள்ளது.

ஹம்பையா 1656-ல் மதுரையின் வட எல்லை மாகாண மாகிய சத்திய மங்கலத்தைக் கைப்பற்றித் தடையில்லாமல் சரசரவென்று மதுரையை நோக்கி வந்தான். எல்லைப்புற நகர் களிலும், வழி எங்கும், மைசூர் மன்னன் கட்டளைப்படி அவன் ஆண், பெண் குழந்தைகளை ஆயிரக் கணக்கில் பிடித்து மூக்க ரிந்து மைசூருக்கு அனுப்பிவைத்தான்.

இவ் வட்டுழியங்களையும் அதனால் ஏற்பட்ட மக்கள் கூக் குரலையும் கேட்டுத் திருமலை நாயகன் நோய்ப் படுக்கையில் கிடந்து தத்தளித்தான். தன் நண்பன் ரகுநாத சேதுபதிக்கு உடனே சொல்லியனுப்பினான். 25,000 மறவர் படையுடனும் 35,000 மதுரை அரசன் வீரருடனும் அவன் மதுரைமா நகரத்தைத் திறம்படக் காத்ததுடன் எதிரிகளை எல்லைவரை துரத்தினான், எல்லைப்புறத்தருகே நடந்த பெரும் போரிலும் முறியடித்தான். இப் போரில் இருதரப்பிலும் தலைக்கு 12,000 வீரருக்குக் குறையாமல் மாண்டதாகத் தெரிகிறது.

இப் போரில் மதுரை அரசன் தம்பி அல்லது மகன் குமார முத்துவும் கன்னிவாடிப் பாளையத்தலைவன் இரங்கண்ண நாய கனும் கலந்துகொண்டனரென்றும், மைசூர்த் தலைநகர் வரை போரைக்கொண்டு சென்று, மதுரையில் நிகழ்த்திய மூக் கறுப்பு வேலையை மைசூரிலும் நடத்திப் பழிக்குப்பழி வாங் கினரென்றும் கர்நாடக இராசாக்கள் வரலாறு குறித்துள்ளது.

## மதுரை அரசின் இரண்டாம் தலைநகர் மாற்றம் 1640—44

மதுரை அரசின் தலைநகரைத் திருமலை நாயகன் மீண்டும் திருச்சிராப்பள்ளியிலிருந்து மதுரைக்கு 1640-க்கும் 1644-க்கும் இடையே மாற்றியதாகத் தெரிகிறது. தஞ்சை அரசனுடன் தொடங்கியிருந்த போராட்டமே இதற்குக் காரணமாய் இருந்திருக்கலாம்.

சோழப் பெரும்பேரரசரும், பாண்டியப்பேரரசரும், விசய நகரப் பேரரசரும் படிப்படியாகப் பாரிய சிற்பக்கலை வளர்த்தனர். ஆயினும் பல்லவர்காலத்துச் சிற்பங்களுக்குப் பிறகு தமிழகத்தின் தலைசிறந்த சிற்பக்கலைப்படைப்பு திருமலை நாயகனுக்குரிய மதுரைத் திருமலைநாயகன் மகாலேயாகும். அடுத்த மதுரை அரசர் ஆட்சியிலேயே இதன் பெரும்பகுதி திருச்சிராப்பள்ளியில் சில பணிகளுக்காக அழிக்கப்பட்டு விட்டது. பிரிட்டிஷ் ஆட்சிக்கு முன்னும் அவ்வாட்சித் தொடக்கத்திலும், பின்னும் பெருப்பகுதி அழிந்தது. எஞ்சியிருக்கும் ஒன்றிரண்டு மாடங்களே வடதிசைத் தாஜ்மஹாலுக்கு இணையாகக் கூறத்தக்க தென்திசைக் கலையாக மதிக்கப் படுகிறது.

பல்லவர் சிற்பத்தில் தமிழர் நுண்கலைத் திறத்தையும் திருமலை நாயகன் காலச் சிற்பத்தில் அதன் பாரக் கலைத்திறத்தையும் காண்கிறோம். இவ்விரண்டையும் சோழப் பெரும் பேரரசர்காலத் தஞ்சைப் பெருவுடையார் கோயில் இணைத்து நிற்கிறதென்னலாம்.

## பஞ்சமும் போரும் 1659

திருமலை நாயகனுக்குப் பின் இரண்டாம் முத்து வீரப்ப நாயகனும் (1659) சொக்கநாத நாயகனும் (1659-1682) மதுரையில் ஆண்டனர். இரண்டாம் முத்துவீரப்ப நாயகன் ஆட்சியில் பீசப்பூர் அரசன் இடல் கான் என்ற இரண்டாம் அலி ஆதில்ஷா, சகோசி, மூலன் ஆகிய படைத்தலைவரின் கீழ் தமிழக நாயக அரசுகளைக் கீழடக்கும்படி பெரும்படை ஒன்றை அனுப்பினன். இப்போரில் ஒத்துழைக்கும்படி மதுரை அரசன் தஞ்சை அரசனை அழைத்தும், அவன் மறுத்து விட்டான். மதுரையின் படைத்தலைவன் லிங்கம நாயகன் போருக்குப் பெருத்த ஏற்பாடுகள் செய்தான். இவற்றைக் கேள்வியுற்ற பீசப்பூர்ப் படைத்தலைவர்கள் திருச்சியைத் தாக்காமல் தஞ்சையையே தாக்கினர், தஞ்சைப் படைத்தலைவரின் போதாத் திறமையால் தஞ்சை மட்டுமன்றி, வல்லமும், மனனர் கோவிலும் வீழ்ச்சியடைந்தன. ஆனல் முன்கூட்டியே மறவர் படைகள் அப்பகுதிகளின் செல்வத்தைக் கொள்ளை

யடித்திருந்ததால், பீசப்பூர் படைகளுக்கு ஒன்றும் கிடைக்க வில்லை. அவை திருச்சிராப்பள்ளியைத் தாக்க முடியாவிட்டாலும், சூழ் பகுதிகளைச் சூறையாடி மதுரை அரசனை அச்சுறுத்திச் சிறிது பணம் பெற்று வெளியேறின. புயலால் எழுந்த பஞ்சம் தாக்குதல் படைகளைக் கூட வெருண்டோடச் செய்தன.

ஆட்சிக்குழுவின் அட்டூழியம் :

முஸ்லிம் படையெடுப்பு *1659—1663*

*சொக்கநாத நாயகன் ஆட்சிக்கு வந்தபோது 16 வயது இளைஞனா யிருந்ததால் படைத்தலைவன் (தளவாய்) லிங்கம நாயகன், பெரியமேலெழுத்து (இராயசம்), அமைச்சர் (பிரதானி) ஆகியவர் அடங்கிய ஆட்சிக்குழு உரிமை கைக் கொண்டது. அது கொடுமைகளாலும் அட்டூழியங்களாலும் பணம் ஈட்டும் செயலில் முனைந்தது. முஸ்லிம் படையின் எதிர்ப்புக்கென்று ஏற்பாடுகள் செய்தது, வேண்டுமென்றே போரை நீட்டி, எதிரி படைத் தலைவரிடமிருந்து கைக்கூலி பெற்று மக்களை அவர்கள் ஏய்த்துவாழ்ந்தனர். சொக்கநாதன் இதையறிந்து மேலெழுத்தைக் கொன்றும், அமைச்சர் கண் கெடுத்தும் குழுவைச் செயலற்ற தாக்கினான். சில நாட்களில் படைத் தலைவனையும் நீக்கித் தானே படைத் தலைவனான்.*

*இச் சமயம் தஞ்சை அரசனாயிருந்த விசயராகவ நாயகன் வீரனானாலும், அரசயலில் கருத்துச் செலுத்தாத பக்தி வெறியனாய் இருந்தான். அவன் செயலால் மதுரைக்கு நேர்ந்த இடரை விட அவன் நாட்டுக்கு நேர்ந்த இடரே மிகுதி. ஆயினும் அவனைத் தண்டிக்கும் நோக்கத்துடன், சொக்க நாதன் 70 000 படை வீரருடன் படையெடுத்துத் தஞ்சையைப் பணியவைத்தான்.*

*1663-ல் பேர் போன பீசப்பூரிப் படைத்தலைவனான வாணமியான் படையெடுத்துப் பெருந் தொல்லைகள் விளைவித்தான். சொக்கநாதன் வீரப் பாதுகாப்பில் திருச்சிராப்பள்ளியை அவன் தாக்க முடியவில்லை யானாலும், சூழ்புல அழிவு காக்கும்படி அவன் ஒரு பெருந்தொகை அளித்து அனுப்பப்பட்டான்.*

*இத் தடவையும் பகைவனுக்குதவிய 'பக்த' விசயராகவனைத் தண்டிக்கப் புறப்பட்டுச் சொக்கநாத நாயகன் வல்லத்தைக் கைக்கொண்டு அங்கே தன்படைகளைக் காவலில் வைத்துவிட்டுவந்தான். வல்லம் சில காலத்துக்குள் தஞ்சையால் மீட்கப்பட்டது.*

சேது நாட்டுப் போர்: *1665*

*முஸ்லிம் படையெழுச்சியின்போது தனக்கு உதவாத தற்காகத் திருமலை சேதுபதியைச் சொக்கநாத நாயகன்*

தண்டிக்க எண்ணித் திருப்பத்தூர், புதுக்கோட்டை, மானா மதுரை, காளையார் கோயில் ஆகிய கோட்டைகளைக் கைக் கொண்டான். ஆனால் குரங்குப்போர் முறையைப் பின் பற்றிப் பின் வாங்கி ஒதுங்கிய சேதுபதி, சொக்கநாதன் முதுகு திரும்பியதே அவற்றைக் கைப்பற்றிக் கொண்டான்.

மதுரை அரசின் மூன்றும் தலைநகர் மாற்றம் 1665

போர்களால் ஏற்பட்ட பஞ்சம் திருச்சிராப்பள்ளி சூழ்ந்த பகுதிகளையே பெரிதும் வாட்டிற்று. பஞ்ச ஒழிப்பு திட்டங் களைக் கவனிப்பதற்காகச் சொக்கநாதன் தலைநகரை மீண்டும் மதுரையிலிருந்து திருச்சிராப் பள்ளிக்கு மாற்றினான். திருச்சி ராப்பள்ளியில் அரண்மனை முதலிய பொதுப் பணிகளுக் காகவே திருமலை நாயகன் கட்டிய கலைக் கோயில் மாளிகை யின் பகுதிகளை அவன் அழித்துப் பயன் படுத்தியதாக அறி கிறோம் கலைமாமன்னன் பிறந்த அதே மரபுக் குள்ளேயே கலைப் பண்பறியாக் கலை அழிவாளன் சொக்கநாதனும் தோன் றினான் என்று காண்கிறோம்.

மைசூர்ப் போர்: 1667

கண்டீரவ நரசனுக்குப் பின் மைசூரை ஆண்ட தேவ ராயன் (1659—1673) ஆட்சியில் சொக்கநாத நாயகன் மை சூரை வெல்லும் அவாவால் அந் நாட்டின்மீது படையெடுத் தான். ஆனால் புதுநிலம் கைப் பற்றுவதற்கு மாறாக 1667-ல் சேலம், கோயம்பத்தூர்ப் பகுதிகளை இழந்தான்.

அடுத்த மைசூர் அரசன் சிக்க தேவராயன் (1679—1704) மைசூரை மிகவும் விரிவுபடுத்தியவன். அவன் கால மைசூர் அரசின் எல்லை சத்தியமங்கலத்தையும் உட்கொண்டதாயிருந் தது இந்நிலைக்குக் காரணமான போர் ஈரோட்டுப் போரே யாகும்

ஈரோட்டுப் போர் 1672

மைசூரின் விரைந்த முன்னேற்றத்தைத் தடுக்கும் எண் ணத்துடன் இப் போரில் மதுரை நாயகன் சொக்கநாதன், தஞ்சை நாயகன் விசயராகவன், இக்கேரி நாயகன் ஆகியோர் பீசப்பூர் படைகளுடன் ஒன்றுசேர்ந்து எதிர்த்தனர். மைசூர்ப் பக்கம் நின்று போரிட்டவன் அப்போது இளவரசனாயிருந்த சிக்க தேவராயனே. தஞ்சை அரசன் படைத்தலைவனாக தாமர்லா ஐயப்பேந்திரன் என்பவனும், பீசப்பூர் சார்பாக அனந்தோஜீ என்ற மற்றொரு படைத்தலைவனும் இருந்தனர். எதிர்ப்புக் குழுவிலேயே பேரரசன் மூன்றும் சீரங்கனும் இருந் தான். எதிர்ப்பவர் பெயரளவில் பேரரசனுக்காகவே எதிர்ப் பதாகக் கூறிக்கொண்டனர்.

மைசூர் இளவரசன் சிக்கதேவராயனே வெற்றிபெற்றான். எதிர்ப்புக் குழு முற்றிலும் தோல்வியுற்றது. ஈரோடு, தாராபுரம் பகுதிகள் சிக்க தேவராயன் ஆட்சி யுட்பட்டன. திருச்சிராப்பள்ளிப் பகுதியில்கூடச் சிக்கதேவராயன் திறை கைப்பற்றியதாகத் தெரிய வருகிறது.

மைசூர்க் கல்வெட்டுக்கள் சொக்க நாதனைப் பாண்டிய அரசன் என்றே குறித்துள்ளன.

இப்போரின் பின் பேரரசு மரபுக்குரிய மூன்றும் சீரங்கன் மீண்டும் இக்கேரி சென்று செவ்வப்ப நாயகனிடம் தஞ்சம் புகுந்தான்.

## சக்கரப் பட்டணம் போர் 1675

மூன்றும் சீரங்கன் ஆதரவின் பேராலேயே இக்கேரி நாயகன் செவ்வப்பன் மைசூர் அரசன் சிக்கதேவ ராயனுடன் இப்போரில் கை கலந்தான். இதில் இக்கேரி தோல்வியுற்றது.

மூன்றும் சீரங்கன் இப்போருக்குப் பின் மாள்வுற்றிருக்கக் கூடும். ஆனால் 1653-லேயே அவன் வடதிசை முகலாயப் பேரரசன் உதவியை மிகவும் பணிந்து வலியுறுத்திக் கோரியிருந்தான். முகலாயர் கை அவ்வளவு தொலை தென்திசை வருமுன் அவன் வாழ்வு நீத்தான். ஆனால் விசய நகரப் பேரரசின் புகழ் மரபுத் தூவானம் நீடித்திருந்து, பேரரசன் மாள்வுச் சமயத்திலே சிவாஜி அம் மரபுக்குத் தன்னை உரிய வனாக்கத் தூண்டிற்று என வரலாற்றாசிரியர் பலர் குறிக்கின்றனர்.

## ஹாசன் அல்லது ஆசனுப் போர் 1677

விசய நகரப் பேரரச மரபின் பேரால் நடைபெற்ற கடைசிப் போர் ஆசனுப் போரே. இதில் சீரங்கன் அண்ணன் மகனான கோதண்டராமன் மைசூர்ப் படைத்தலைவன் தளவாய் குமாரையாவைத் தோற்கடித்ததாக கூறிக்கொள்கிறான். ஆனால் பின் விளைவுகளை நோக்க இது முடிவான வெற்றியாகத் தோற்றவில்லை. மைசூரே இறுதி வெற்றி அடைந்திருக்கவேண்டும்.

## தஞ்சை நாயக மரபின் வீழ்ச்சி 1673

மதுரை—தஞ்சை இறுதிப் போராட்டத்தின் காரணம் மதுரை யரசனுக்குத் தஞ்சை அரசன் தன் புதல்வியை அளிக்க மறுத்ததே என்று கூறப்படுகிறது. ஆனால் மைசூர்ப் போரின் தோல்வியின் பின் ஏற்பட்ட இயல்பான பிளவுதான் இச்சாக்குப் போக்கைக் கிளறியிருக்கவேண்டும் என்னலாம்.

மதுரைப் படைத் தலைவனாக இப்போரில் தளவாய் வேங்கட கிருஷ்ணப்பநாயகனும் அவனுடன் வரிதண்டலாளன் அல்லது கருவூல முதல்வன் (பேஷ்கார்) சின்னத்தம்பி முதலியாரும், கஞ்னிவாடிப்பாளைய முதல்வன் சின்ன கண்டீர நாயகனும் சென்றிருந்தனர். தஞ்சை முற்றுகையிடப் பட்டது. பெண்டிரை உவளகத்திலேயே குறித்த நேரத்தில் வெடித் தழிக்கும் சுரங்க வெடியின் கீழ் வைத்துவிட்டு விசய ராகவனும் அவன் வீரப் புதல்வனும் கோட்டைக்கு வெளியே வந்து களப்போர்செய்து வீரர் அனைவரையும் பறிகொடுத்துத் தாமும் புகழ் மாள்வு மாண்டனர். பகைவர் புகுமுன் கட்டளைப்படி உவளகத்தில் பெண்டிரும் அழிக்கப்பட்டனர். விசய ராகவனின் சிறு மதலையாகிய செங்கமலதாஸ் என்பவன் மட்டுமே மறைவில் நாகபட்டிணத்தில் ஒரு வணிகன் ஆதரவில் அனுப்பப்பட்டிருந்தான்.

தஞ்சை மதுரை அரசன் கைப்பட்டது. மதுரைப்படைத் தலைவர்களுக்குப் பாராட்டும் பரிசும் வழங்கிய பின் சொக்கநாதன் தன் மாற்றாந் தம்பி அளகிரி நாயகனிடம் தஞ்சை ஆட்சியை ஒப்படைத்துவிட்டு மதுரை மீண்டான்.

## தஞ்சையில் மராட்டிய மரபு : ஏக்கோஜி 1674

அளகிரி சொக்க நாதனுக்கு எதிராகத் தன்னைத் தனியரசாக்கிக்கொள்ள முனைந்தான் இது தஞ்சையுடன், மதுரைக்கு இருக்கவேண்டிய நட்புறவைக் கெடுத்தது. அளகிரியின் மேலெழுத்து முதல்வன் (இராயசம்) ஆன வெங்கண்ணா இதைப் பயன்படுத்தி முந்திய அரசனின் மதலை செங்கமல தாஸை முடிசூட்டிச் சதி செய்தான். இதற்காகப் பீசப்பூர் சுல்தான் உதவியும் கோரினான்.

ஷாஜி 1765-லே காலமாய் விட்டபின் அவன் மூத்தமகன் ஏக்கோஜி இப்போது ஷாஜியினிடமாகப் படைத் தலைவனாயிருந்தான். பீசப்பூர் அரசன் செங்கமல தாஸை அரசனாக்கும்படி அவனைப் பணித்தான். அளகிரிக்குச் சொக்கநாதன் உதவி கிடைக்காததால் அவன் எளிதில் தோல்வியுற்றான். ஏக்கோஜி செங்கமல தாஸுக்கு முடிசூட்டி வெங்கண்ணாவிடம் ஆட்சியை ஒப்படைத்துவிட்டுச் சென்றான்.

விசய ராகவன் பெருஞ் செல்வக்குவை பழைய குடும்ப நண்பரால் எடுத்துச் செங்கமல தாஸுக்கு அளிக்கப்பட்டது. எனவே ஏக்கோஜிக்குச் சிறந்த பரிசுகள் தரப்பட்டன.

செங்கமல தாஸ் தன்னை வளர்த்த நாகப்பட்டிணத்து வணிகனையே மேலெழுத்து முதல்வன் ஆக்கினான். இதனால் பதவியிழந்த வெங்கண்ணா தஞ்சையை மீண்டும் தாக்கிக்

கைப்பற்றும்படி ஏக்கோஜியை வேண்டினன். பீசப்பூர் அரசன் இரண்டாம் அலி ஆதில்ஷா இப்போது இறந்துவிட்ட நிலையில், ஏக்கோஜி துணிந்து வந்து படையெடுத்தான். செங்கமலதாஸ் போரிடாமலே வெங்கண்ணாவால் அச்சுறுத்தி ஓட்டப்பட்டான். ஆனால் இரண்டு அரசர்களைக் கெடுத்த அவனை ஏக்கோஜி நம்பவில்லை யாதலால் அவனும் தண்டனைக் கஞ்சி ஓட நேர்ந்தது.

தஞ்சை நாயக மரபின் தடம் அழிந்து மராட்டிய மரபு ஆட்சியைக் கைக்கொண்டது.

தஞ்சை மராட்டிய மரபுக்குரிய அரசர் 1674-லிருந்து 1855 வரை சிற்றரசாகவே ஆண்டனர். பிரிட்டிஷ் வாணிக, ஆட்சியின் இறுதியிலே மரபற்றுப் போனபின், ஆங்கில ஆட்சியாளரின் புது மகவுரிமை மறுப்புச் சட்டத்தால் அவர்கள் ஆட்சி பிரிட்டிஷாரால் கைப்பற்றிக் கொள்ளப்பட்டது.

தஞ்சை மராட்டிய மரபினர் சிற்றரசரே யானாலும் கலையும், நாகரிகமும் வளர்ப்பதில் கிட்டத்தட்டக் கடைசிப் பாண்டிய மரபினருக்கு ஒப்பாக விளங்கினர். தமிழ், மராத்தி சமஸ்கிருதம் ஆகிய மொழிகளுடன் அயல் மொழிகளும் வளர்க்கப்பட்டன. பழைய கலைகளுக்குப் புது மலர்ச்சி தரவும் அவர்கள் அரும்பாடுபட்டனர். இவற்றின் சின்னமாகத் தஞ்சை சரபோஜி மன்னனின் ஏட்டுக் குவையும் சரஸ்வதி மகால் என்ற ஏடகமும் இன்றளவும் இயங்குகின்றன.

கடக் போர் 1617

ஷாஜி பீசப்பூர் அரசின் படைத் தலைவனாய் இருந்து கொண்டே மராத்திய இனப் புது மலர்ச்சிக்குத் தூண்டுதல் தந்தான். அதன் கிளை ஒளியே அவன் மூத்த புதல்வன் ஏக்கோஜி கண்ட தஞ்சை மராட்டிய மரபு. ஆனால் மராட்டிய இனப் புது மலர்ச்சியைத் தேசிய அளவில் மாமலர்ச்சியாக்கிய வீரத் தலைவன் ஷாஜியின் இரண்டாம் புதல்வனாகிய சிவாஜியே. தென்னகத்தின் வட பாதியை அலைக்கழித்து வந்த வடதிசை மொகலாயப் பேரரசை எதிர்த்து, தென்னக முஸ்லிம் அரசுகளின் கண் பார்வையிலேயே அவன் ஒரு வலிமை வாய்ந்த கொண்கானப் பேரரசை அமைத்தான். ஆயினும் மொகலாயர் முன்னேற்றத்தைத் தடுப்பதில் கடைசித் தளமும் நிலையான மூலதளமும் தமிழகமே என்று கண்டு தமிழகத்திலே கால் ஊன்ற அவன் கனவுக் கோட்டை கட்டிக்கொண்டிருந்தான். அச்சமயம் தஞ்சையில் அவன் தமையன் ஏக்கோஜியின் செயலாளனான ரகுநாத் ஹனுமந்தே என்பவன் கோலகொண்டா அமைச்சன் மத்தண்ணாவுடனும், செயலாளன் பிரகலாத நிரால்ஜியுடனும் பேரம் பேசிக் கோல

கொண்டா சார்பிலும் அதன் உதவியுடனும் வடகிழக்குத் தமிழகத்தில் ஓர் அரசமைக்கும் திட்டத்தை உருவாக்கினான். சிவாஜி அதனை ஆர்வமுடன் தழுவினான். 1676-ல் 20,000 குதிரை வீரருடனும் 40,000 காலாட்களுடனும் அவன் கோல கொண்டாவுக்குப் புறப்பட்டான்.

கோலகொண்டா அரசன் சிவாஜியையே தன் சார்பில் படைத் தலைவனாக்கி 5,000 படை வீரர்களை உதவிக்கு அளித்தான். நாள் ஒன்றுக்கு 3,000 பொன் வீதம்செலவுக்கு அளிப்பதாகவும் வாக்களித்தான். இவற்றுடன் அவன் செஞ்சியையும் வேலூரையும் நோக்கிப் புறப்பட்டான்.

சிவாஜியின் படைத் தலைவனான ஹம்பீர் ராவ் மோகிதே வேறொரு வழியில் பீசப்பூர் அருகாக வந்தான் வழியில் கடக் என்ற இடத்தில் ஹூசேன் கான் மாயெனு என்ற பீசப்பூர் படைத்தலைவனை வென்று அவனைச் சிறைப் பிடித்துக்கொண்டு சிவாஜியிடம் ஒப்படைத்தான்.

வாலிகண்டபுரம் போர் 1677—8

சிவாஜிக்கு அவனுடைய மற்றோர் உடன் பிறந்தானான சாந்தாஜி உடநதையாயிருந்தான். சாந்தாஜியும் ரகுநாத பந்தும் தான் சிவாஜியின் படையெழுச்சிக்குக் காரணமென எண்ணி, அவர்கள் சிவாஜி சார்பில் கோரிய வேண்டு கோள்களை ஏக்கோஜி மறுத்தான். அவ்விருவரையும் அவன் வாலிகண்ட புரப்போரில் எதிர்த்துப் போர்க்களத்தில் கிட்டத்தட்ட வெற்றி நாட்டினான். ஆனால் எதிரிகள் புதர் மறைவிலிருநது அவனைத் தாக்கி முறியடித்தனர். அவன் வெற்றி தோல்வியாயிற்று.

சிவாஜியின் செஞ்சி வெற்றி 1678

செஞ்சிக் கோட்டை 1659-முதல் 1678 வரை பீசப்பூர் ஆட்சியிலேயே இருந்தது. ஆனால் அதன் காவல் தலைவர்களிடையே இருந்த பூசல் பிளவுகளும், அவர்கள் ஆட்சியில் மக்கள் அடைநத கொடுமைகளும் ‘தென்னகத்தின் டிராய்’ ‘கீழ்த்திசையின் வெல்ல முடியாத கோட்டை’ என்ற புகழ் பெற்ற செஞ்சியை வலிமை யற்றதாக்கியிருந்தது எனவே சிவாஜியின் முதல் முன்னணிப் படையின் தாககுதலிலேயே அது வீழ்ச்சியுற்றது. சிவாஜியின் பெரும்புகழும், உள்ளே இருந்தவர் பணமபெற்று உதவியதும் இத்தகைய எளிய வெற்றிக்கு மேலும் உதவின.

செஞ்சி மராட்டியர் ஆட்சியில் (1678—1698) இருபது ஆண்டுகள் இருந்தது. சிவாஜி தன் தம்பி சாந்தாஜியையே அதன் தலைவனாக அமர்த்திச் சென்றான். ஆனால் 1680-ல்

சிவாஜி இறந்த பின் அவன் மகன் சாம்பாஜி, ஹாஜி மகாதிக் என்பவனைத் தலைவனாக்கினான். அவன கட்டத்தட்டத் தன்னாண்மையுடனே 11 ஆண்டுகள் ஆட்சி செய்து யாண்டான். அதன்பின் சாம்பாஜி முகலாயரிடம் சிறைபட்டபின் அவன் பெயரால் செஞ்சியையே தலைமையிடமாகக் கொண்டு அவன் தம்பி ராஜாராம் ஆண்டான். அவன் ஆட்சியிலேயே முகலாயர் செஞ்சியை முற்றுகையிட்டனர். இம் முற்றுகை 1690 முதல் 1698 வரை எட்டு ஆண்டுகள் நீடித்தது.

வேலூர் முற்றுகை 1678

செஞ்சி வெற்றியின் பின் சிவாஜி வேலூரை முற்றுகையிடும்படி படைத் தலைவன் நரஹரி ராவை அனுப்பினான். வேலூரின் பீசப்பூர் ஆட்சித் தலைவன் அப்துல்லாகான் வீரமாகப் போரிட்டதால், முற்றுகை நீடித்தது. 14 மாதங்களுக்குப் பின் அதில் சிவாஜியின் ஆட்சிக்கொடி ஏற்றப்பட்டது.

ஏக்கோஜியுடன் சிவாஜி 1677-ல் செய்துகொண்ட ஒப்பந்தப்படி சிவாஜி மூன்று இலட்சம் பொன் பெற்று ஏக்கோஜியைத் தஞ்சை அரசுக்குத் தலைவனாக்க ஒப்புக்கொண்டான. தந்தை வென்ற மைசூர் அடுத்த பகுதியையும், செஞ்சி வேலூர்ப் பகுதிகளையும் தன் ஆட்சிக்கு உரிமையாக்கினான்.

சிவாஜி வேலூரில் விசயநகரப் பேரரச மரபில் வந்ததென் பேரரசுத் தலைவனாகத் தன்னை முடிசூட்டிக் கொண்டான் என்றும், பேரரச மரபின் கடைசி ஏநதலான மூன்றும சிரங்கன் அதைக் கேள்விபட்டு மன ஆறுதலுடனே தான இறந்திருக்க வேண்டுமென்றும் சில வரலாற்று ஆசிரியர்கள் கருதியுள்ளனர்.

கிழவன் சேதுபதி: புதுக்கோட்டை மரபின் தோற்றம்

மதுரை சொக்கநாத நாயகனால் திருமலை சேதுபதியைக் கீழடக்க முடியாமல் போகவே, அவன் கிட்டத்தட்டத் தன்னிச்சையாக ஆண்டான். 1674-ல் அவன் உடன்பிறந்தான் மகன் உரிமை பெற்றான். தஞ்சைப்போரில் இவன் எதிரி பக்கம் ஆதரவு செய்து, மதுரைத் தளபதி வேங்கடகிருஷ்ணப்ப நாயகனால சிறையிடப்பட்டுக காவலிலேயே மாண்டான். அவனுக்கு நேர்மரபு இல்லாத நிலையில் அவன் அன்புரிமைப் புதல்வன் ரகுநாத தேவனைச் சொக்கநாதனே சேதுபதியாக்கினான். கிழவன் சேதுபதி என்ற பெயரால் இவன் புகழ் பெற்றான்.

புதுக்கோட்டைத் தலைவன் பல்லவராயன் தொண்டைமான் என்பவன் இச்சமயம் தஞ்சை மராட்டிய அரசனுடன்

தொடர்பு கொண்டிருந்தான். கிழவன் சேதுபதி அவனைத் துரத்திவிட்டுத் தன் மைத்துனன் ரகுநாதனையே புதுக்கோட்டைத் தலைவனாக்கினான். இவனே அணிமைக்காலப் புதுக்கோட்டைத் தனியரச மரபின் முதல்வனானான்.

சொக்கநாதன் ஆட்சியின் கடைசி யாண்டுகளில் மதுரையரசின் வடபகுதி முழுமையையும் மைசூர் அரசன் ஆண்டான். மற்ற இடங்களில் குழப்பம் மிகுந்திருந்தது. அரசன் தம்பியாகிய முத்து அழகாத்திரி 1678-ல சொக்கநாதனைக் காவலில் வைத்து அரசைக் கைப்பற்ற முயன்றான். ஆனால் அவன் திறமையின்மையைப் பயனபடுத்தி, சொக்கநாதனை விடுவித்துப் பெயரளவில் அரசனாக்கி, ரஸ்டம்கான் என்ற படைவீரன தன்னை அரசனாக்க முயன்றான். இச்சமயம் தளவாய் கோவிந்தப்பையன் என்ற படைத்தலைவனுடனும் சில பாளையக்காரருடனும் சேர்ந்து கிழவன் சேதுபதி ரஸ்டம்கானை ஒழித்து மதுரை அரச மரபைக் காத்தான்.

சொக்கநாதனுக்குப் பின் மதுரை யாண்டவன் ரங்க கிருஷ்ணன் என்ற மூன்றும் முத்துவீரப்ப நாயகன் (1682-1689). அவன் ஆட்சியில் கிழவன் சேதுபதி தஞ்சை மராட்டிய அரசருடன் சேர்நது மதுரையைத் தாக்க முயன்றான். அவன் படைத்தலைவனான குமார பிள்ளை மதுரை நாயகனை ஆதரித்ததால் இது வெற்றி பெறவில்லை. ஆயினும் சேதுபதியைத் தண்டிக்க மூன்றும் வீரப்பன் நடத்திய போரில் மதுரைப் படைகளே தோல்வியுற்றன.

## தென்னக முஸ்லிம் அரசுகளின் வீழ்ச்சி 1686—87

அக்பர் காலத்தில் தொடங்கிய அகமது நகரத் தாக்குதல் ஷாஜஹான் காலத்துக்குள் முற்றிலும் வெற்றிகண்டது. அரங்கசீப் ஆட்சியில் 1686-ல் பீசப்பூரும் 1687-ல் கோலகொண்டாவும் முகலாயப் பேரரசின் பகுதிகளாயின.

விரைவில் முந்திய ஆப்கானிய வெற்றிகளைப் போலவே இந்த முகலாய வெற்றியும் 18-ம் நூற்றாண்டுக்குள் புதிய தென்னக ஆட்சிகளாகவே மாறினாலும், 17-ம் நூற்றாண்டில் தென்னகத்தின் முஸ்லிம் முன்னேற்ற முழுதும முகலாயப் படையின் முன்னேற்றமாகவ்வ அமைநதது.

## வந்தவாசிப் போர் I 1678—9

செஞ்சியில் ஹாஜி மகாதிக் கிட்டத்தட்டத் தன்னாண்மையுடன் ஆட்சி செய்வது கண்ட மராட்டிய அரசன் சாம்பாஜி அவனிடமிருந்து கோட்டைத் தலைமையை மேற்கொள்ளும்படி கேசவ திரியம்பக் பிங்களே என்பவனை அனுப்பியிருநதான்.

ஆனால் அவனால் செஞ்சிக் கோட்டையைக் கைப்பற்ற முடியவில்லை. ஆயினும் ஹர்ஜி ஒருபுறமும், பிங்களே மறுபுறமும் தொண்டை நாடுவரை தமிழகப் பகுதிகளைக் கொள்ளையிடுவதில் ஒத்துழைத்து வந்தனர்.

1687-க்குள் முகலாயரின் முன்னேற்றம் சிலந்தியின் கரங்கள் போலத் தென்னகத்தின் தென்பகுதிமீது குவிந்து வந்தன. பீசப்பூர், கோலகொண்டா ஆகிய இரு அரசுகளும் வீழ்ச்சியுற்றபின் கடப்பை ஆண்ட கோலகொண்டாத் தலைவனும், காஞ்சிவரம், பூவிருந்தவல்லி நாயகமும் தாமாக முகலாயர் மேலுரிமையை ஏற்றுப் பணிந்து அப்பேரரசின் ஏவலர் ஆயினர். 1688-ல் செஞ்சிப் பகுதியைத் தாக்குவதற்கென்றே இஸ்மாயில்கான், மகா யச்சப்ப நாயகன், ரஸ்டம்கான், முகமதுசாதிக் என்ற நான்கு படைத்தலைவர்கள் 4,000 குதிரை வீரருடனும் 7,000 காலாட்களுடனும் காஞ்சிபுரத்தில் வந்து தங்கல் அமைத்தனர். வடதிசையில் முன்னேறி வந்த மராட்டிய வீரர் இவ்விடத்திலிருந்து பின் வாங்கிப் பாலாற்றங்கரையில் தங்கிவிட்டனர். ஒரு முழு ஆண்டு முகல் படைகள் சேற்றுப்பட்டிலும், மராட்டியப் படைகள் வந்தவாசியிலுமாகத் தாக்குதலை எதிர்பார்த்துக் காத்திருந்தன. ஆனால் 1689-ல் வந்தவாசியில் நடைபெற்ற பெரும்போரில் கேசவ் பிங்களே, ஹர்ஜிராஜா ஆகிய இரு தரப்பினருக்குமுரிய மராட்டியப் படைகள் முறியடிக்கப்பட்டுப் பின்னிடைந்தன.

செஞ்சி முற்றுகை 1690—1698

ஹர்ஜி மகாதிக் 1689-ல் உயிர் நீத்தான். அவன் மனைவி அம்பிகாபாய் சிவாஜியின் வீரப் புதல்வி. இவள் தன் சிறுவன் பெயரால் தானே ஆட்சி செய்ய முயன்றாள். ஆனால் அதற்குள் அவள் உடன்பிறந்தானான இராஜாராம் தானே கோட்டைப் பொறுப்பை அவளிடமிருந்து கைக்கொண்டான். அச்சமயம் சிவாஜியின் மூத்த புதல்வன் சாம்பாஜி முகலாயரால் சிறைப் படுத்தப்பட்டிருந்ததை முன்னிட்டு, அவன் தன்னையே அரசனாக்கிச் செஞ்சியிலேயே மராட்டிய மாமண்டலத் தலைமை ஆட்சியை வைத்து ஆளத் தொடங்கினான்.

தென்னகத்தின் வடமேற்கிலுள்ள சிவாஜியின் தாயக அரசுப் பகுதிகள் இதற்குள் பேரளவில் அரங்கசீப் கைப்பட்டிருந்தன. இந்நிலையில் மராட்டியர் தெற்கே புதுத்தளம் கண்டு மேலும் வளர்வதை அவன் தடுக்க விரும்பினான். அவன் தன் கருவூலப் பேரமைச்சனான (வஜீர்) அசத்கானின் புதல்வன் ஜுல்பிகர்கானைப் பெரும் படையுடனும் தளபதிராவ் என்ற படைத்தலைவனுடனும் 1690-ல் தெற்கே அனுப்பினான்.

அரங்கசீப்பின் புதல்வனான காம்பக்ஷும் இப்படையெடுப்பில் கலந்துகொண்டான. செஞ்சி முற்றுகை தொடங்கிற்று.

1692-ல் இப்பேரிடரைச் சமாளிப்பதற்காக சாந்தாஜி கோர்ப்படே, தானாஜி யாதவ் ஆகிய இரு மராட்டியப் படைத் தலைவர்கள் 30 000 குதிரைப் படைகளுடன் செஞ்சிக்கு வந்து அதன் காவலை வலுப்படுத்தினர்.

கோட்டையைப் பாதுகாப்பவர்களுக்குள்ளேயும் தாக்குபவர்க்குள்ளேயும் ஒற்றுமையில்லாமலே இருந்ததால், இந்த முற்றுகை பெரிதும் வெற்றுரவாரத்துடனேயே ஆண்டுக் கணக்காகக் கழிந்தது உண்மையில் தாக்குதல் தலைவனான ஜுல்பிகர்கான் தன் பதவியையும் பெருமையையும் நீட்டிப்பதற்காக வேண்டுமென்றே முற்றுகையை நீட்டிக்கொண்டு போனதாக அறிகிறோம். இளவரசனை காம்பக்ஷும இன்னொரு திசையில் இராஜாராமுடன தொடர்புகொண்டு மராட்டியர் ஆதரவால் தென் திசையில் தனியரசு நாட்டும் எண்ணத்துடன் ஊடாடினன். அரங்கசீப் இறந்துவிட்டதாகத் தவறான செய்திபரப்பி ஜுல்பிகர் இந்த எண்ணத்தை வளர்த்தான். அதே சமயம் பேரரசர் மனத்தை அவன் செய்திகளைப் பெருக்கிக் கூறிக் கலைத்து, தக்க சமயம் பார்த்து அவனைச் சிறைப்படுத்தினன்.

தளபதி ராவ் ஜுல்பிகரைத் தட்டிக்கொடுத்துத் தானே புகழுச்சியடையத் திட்டமிட்டு வநதான்.

கோட்டைக்குள்ளும் சாந்தாஜி, தானேஜி ஆகியவரிடையே யார் படைததலைவனாவது என்பதுபற்றிப் போட்டி நீடித்தது. இறுதியில் தானேஜி மராட்டியத் தாயகத்துக்கே மீண்டான்.

1798-க்குள் அரங்கசீப் பொறுமையிழந்தான். செஞ்சியைத் தாமதமின்றிப் பிடிக்கும்படி அவசரககட்டளை பிறப்பித்தான். பணக்குவை உதவியும் புதுப் படைகளும் தாவூத்கான் பன்னியின் தலைமையில் அனுப்பப்பட்டன.

எதிரிகளுடன் உறவாயிருந்து பெரும் பணம் பெற்று வந்த ஜுல்பிகர்கான் இந்த மாறுதலை ராஜராமுக்கறிவித்து அவனைத் தப்பியோடும்படி செய்தான். ராஜாராம் நேரே வேலூர் சென்று இறுதியில் பூனாவுக்கே ஓடித் தாயகத்தில் தஞ்சம புகுந்தான்.

செஞ்சிக்கோட்டை வீழ்ச்சியுற்றது. மொகலாயர் புகுந்த வாயில் வெற்றி வாயில் (பதஃகு தர்வாஜா) என்று பெயர் சூட்டப்பட்டது. பெண்டிர் வாழ்வும் மானமும் கோரிப் பாதுகாப்புடன் வெளியேறினர். ஆனல் ராஜாராமின் மனைவி

ஒருத்தி எதிரிகளை நம்ப மனமின்றிப் பாறைமீதிருந்து குதித்து மாண்டாள்.

செஞ்சிக் கோட்டை காவலனுகக் காசர்க்கானும் செஞ்சிப் படைத்தலைவனுக சஜ்னபர் அலிகானும் அமர்வு பெற்றனர். தாவூத்கான் பன்னியே பெருஞ் சோழ மண்டலத்தின் (கர்நாடகத்தின்) படைத்தலைவனுக நியமனம் பெற்ருன். ஜுல்பிகர்கான் தன் பட்டப் பெயரான நஸ்ரத்ஜங் என்பதனடிப்படையாக செஞ்சிக்கோட்டைக்கு நஸ்ரத்கட் என்று புதுப் பெயரிட்டான்.

சஸ்னபர் அலிகான் செஞ்சியை இரண்டு ஆண்டுகளே ஆண்டான். அதற்குள் அரங்கசீப் தன்னிடம் இருந்த புந்தேலா வீரப் படைத்தலைவனுன ராஜா சருப் சிங்குங்கு (1700-1714) அக்கோட்டையை உரிமையாக்கினுன். தமிழகப் புகழ்பெற்ற ராஜாதேசிங்கின் தந்தை இவனே.

தேசூர்ப் போர், லக்கி ரெட்டிப்பள்ளிப் போர், ஆரணிப் போர் ஆகியவை செஞ்சி முற்றுகைப் போராட்டத்தின் பகுதிகளேயாகும்.

### தேசூர்ப் போர் 1693

செஞ்சி முற்றுகையின் போது முகலாயரின் இன்னல்கள் பல. அவற்றுள் உணவுப்பொருள் முடையே தலையானது. முகலாயப் படைத் தலைவன் ஜுல்பிகர்கான் வந்தவாசிக்கருகே சில வணிகரிடமிருந்து உணவுத் தானியங்களைக் கொள்ளையிட்டு அவற்றைத் தன் பாசறைக்குக் கொண்டுவர முயன்ருன். ஆனுல் அதற்குள் சாந்தாஜியின் மராத்திப் படைவீரர் அவர்களை மறித்தனர். தேசூருககருகே நடந்த கடும் போராட்டத்தில் முகலாயர் பெருத்த தோல்வியடைந்தனர். தளபதிராவும் அவனிடமிருந்த புந்தேல வீரரும் அச்சமயம் வந்து முகலாயப் படைகளுக்கு வீரப்பாதுகாப்பளித்திராவிட்டால், அவர்கள் மீந்த ஓரளவு தானியங்களுடன் கூடத் தேசூரை அடைந்திருக்க முடியாது.

### லக்கி ரெட்டிப்பள்ளிப் போர் :

அரங்கசீப்பினிடம் பெருமதிப்புப் பெற்றிருந்த தமிழகத்துத் தலைவருள் ஒருவன் ராஜா பங்காரு யாசம நாயுடு பகதூர் என்பவன். அவன் சாத்தூர் மாவட்டத்திலுள்ள மன்னுரின் தலைவன். அதனையடுத்துள்ள பல வட்டங்கள் அவன ஆட்சியில் இருந்தன. செஞ்சிப் படையெடுப்பில் ஜுல்பிகர்கான் போதிய அளவு முன்னேருததனுல் மனக்கசப்படைந்த பேரரசன் இப்பெரு வீரனையே அவனுக்குப் பதிலாக அனுப்ப முனைந்திருந்தான் என்று அறிகிருேம். இதனுல் அவன்

மீது பொறாமையும் புழுக்கமும் அடைந்த ஜுல்பிகர்கான் கலைமகள் திருநாளன்று அவன் படைக்கலமில்லாத சமயம் பார்த்து அவனை விருந்துக்கு அழைத்துச் சூழ்ச்சியால் கொன்றான். இது நடைபெற்றது 1694-ம் ஆண்டிலேயே ஆகும்.

இதற்கு முந்திய ஆண்டிலேயே யாசம நாயுடு லக்கிரெட்டிப் பள்ளிப் போரில் பேரரசுக்குப் பெரும் புகழ் வெற்றி தேடித் தந்திருந்தான். இப் போரில் தோற்றவன் கோலகொண்டா அரசன் கீழிருந்த ஒரு தலைவன். அவ்வரசனிடமிருந்து வீரக்கோமான (ராஜாபகதூர்), ஆயிரவேள் (ஷாஹஜாரி மன்சப்), கோஷ், பேஷ். பஞ்சராசிப் ஆகிய தனியுரிமைகள் பலவற்றையும் பெற்றிருந்தான். அரங்கசீப்புக்கு அவன்மீது பெரும் புகழ் ஏற்படுவதற்கு இது காரணமாக இருந்தது.

### ஆரணிப் போர் 1696 :

செஞ்சி முற்றுகையின்போது மராத்தியப் படைத் தலைவன் சாந்தாஜி புதுப்படையுதவியுடன் செஞ்சியை நோக்கி வந்துகொண்டிருந்தான். அச்சமயம் பேரரசனிடமிருந்து ஜுல்பிகர்கானுக்குக் கடப்பையிலிருந்து படைச் செலவுக்காகப் பெரும் பொருட்குவை அனுப்பப்பட்டிருந்தது. ஆரணியில் நடைபெற்ற போரில் சாந்தாஜி ஜுல்பிகரை முறியடித்து அக்குவையைப் பறித்துக் கொண்டான். கடப்பை வழியாக ஓடிய ஜுல்பிகர் படைகளையும் அவன் விடாது துரத்தினன். ஆனால் அச்சமயம் பேரரசன் மைந்தனை பிடேர்பக்த் படையுடன் அவ்வழி வந்ததனால், ஜுல்பிகர் படைகள் பேரிடரிலிருந்து தப்பின.

### மதுரை வீர அரசி மங்கம்மாள் 1689—1706:

மூன்றும் முத்துவீரப்பன் இறக்கும்போது அவன் மனைவி முத்தம்மாள் கருவுற்றிருந்தாள் இதனால் அவள் விரும்பியபடி உடன்கட்டை ஏறாமல் உறவினர் தடுத்தனர். ஆயினும் ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்த உடனே அவள் தன் விருப்பத்தை வலியுறுத்தி உடன்கட்டை ஏறிவிட்டாள். இக்குழந்தையே பின்னாளைய விஜயரங்க சொக்கநாதன், அவனுக்கு வயது வருமவரை அவன பாட்டியும் மூன்றும் முத்துவீரப்ப நாயகன் தாயுமான மங்கம்மாளே ஆட்சிப் பொறுப்பை (1689—1706) மேற்கொண்டாள்.

தமிழ்ப் புராண மரபின் தொடக்கத்திலே ஒரு தடாதகைப் பிராட்டியாரும், பாரத இதிகாச மரபின் முகிலிடையே ஓர் அல்லி அரசியும், பாண்டிய நாட்டில் பெண்ணுரிமையாட்சி நடத்தியதாகக் கேள்விப்படுகிறோம். வடதிசையிலும்

மேல்திசைக் கிரேக்கருலகிலும் ஷேக்ஸ்பியர் காலம்வரை நிலவிய மேலைநாட்டுப் புராண மரபுகளிடையேயும்; பாண்டி நாடு பெண்ணாட்சி நாடு, கந்தருவ விஞ்சையர் நாடு என்றே கருதப்பட்டிருந்தது. ஆயினும் வரலாற்றொளிக்குள்ளே தமிழகத்தில் மதுரையில் அப்புகழ் மரபுக்குரியதாக நாம் காணும் பெண்ணுரிமை ஆட்சி மங்கம்மாள் ஆட்சியேயாகும்.

மதுரை நாயக மரபில் திருமலை நாயகனுக்கு அடுத்த புகழாட்சி மங்கம்மாள் ஆட்சியேயாகும் தமிழக மக்கள் உள்ளத்தில் திருமலை நாயகன் வீறுட்சியினும் மங்கம்மாள் செலுத்தும் ஆர்வ அன்பாட்சியே பெரிது என்னலாம்.

முகலாயப் பேரரசன் அரங்கசீப் சிவாஜியின் வேலூர் முடிசூட்டு விழாவைக் கேலி செய்யத் தென்னாடெங்கும் தன் பாதுகைகளில் ஒன்றை அனுப்பி அரசர் சிற்றரசர் வணக்கத்தை அதற்கு உரிமைப்படுத்தினான் என்று அந்நாளைய கதை மரபு கூறுகிறது. மூன்றாம் மூத்துவீரப்பன் அப்பாதுகையை தன் கால்களில ஒன்றில் மாட்டிக்கொண்டு 'பேரரசர் எனக்கு ஏன் இன்னொன்று அனுப்பவில்லை' என்று கேட்டதாக மதுரை வரலாற்று மரபுரை ஒன்று கூறுகின்றது. ஆனால் மங்கம்மாள் காலத்தில் இந்த நகை மரபுக்கு இடமில்லாதிருந்தது. செஞ்சி முற்றுகையில் ஈடுபட்டிருந்த ஜுல்பிகர்-கான் தஞ்சையிலும் திருச்சிராப்பள்ளியிலும் புகுந்து திறை தெண்டி வந்தான.

புயலாக அடித்த இந்த வடதிசை வாடையைத் தன் அரசியல் பயிருக்கிசையத் திருப்ப மங்கம்மாள் முயன்றாள். 1702-ல் புதிய பெரும் படைத்தலைவன் தாவூத்கானுக்கும் அவன் துணைவருக்கும் பரிசுகள் அனுப்பியதுடன் கன் எதிரியான தஞ்சை அரசனைத் தண்டித்து உதவ வேண்டுமென்றும் நயமாக வேண்டிக்கொண்டாள். தாவூத்கானும் நயமாகவே நேரில் வரமுடியாமைக்கு வருத்தம் தெரிவித்து, சில படைவீரரை மட்டும் உதவிக்கு அனுப்பினான்.

தஞ்சைப் போராட்டம் :

முகலாயர் படையுதவியை மங்கம்மாள் பயன்படுத்தித் தஞ்சையை எதிர்த்தாலும் அதில் அவளுக்கு வெற்றி கிட்டவில்லை. தஞ்சை யரசன் ஷாஜி ஓயாது மதுரை அரசின் எல்லையில் கொள்ளையடித்துக் கொண்டேயிருந்தான். இறுதியில் மங்கம்மாள் 1700-ல் தஞ்சைமீது போர் தொடுத்து, படைத் தலைவன் தளவாய் நரசப்பையனைப் படையுடன் அனுப்பினாள்.

எதிரி கொள்ளையிட்டுத் தாக்காதபடி கொள்ளிடக் கரையை அரணாக்கிக்கொண்டு நரசப்பையன் சிலநாள் தற்காப்

புப்போர் ஆற்றினான். ஆனால் தஞ்சை மராத்தியக் குதிரை வீரரின் போர் வேகத்தை இப்பாதுகாப்பு முறை சமாளிக்க முடியவில்லை. ஆகவே தாக்குதல் முறை தொடங்கி நரசப் பையன் தானும் திறம்பட எல்லை கடந்து சென்று பலதடவை கொள்ளையடித்தான். தஞ்சைப் படைகள் இதனால் கலவர முற்று நகரின் காவலை மறந்து ஆற்றைக் கடக்க முயன்றன. ஆழ்மான இடத்தில் கடக்க நேரிட்டதால் வெள்ளத்திலேயே பலர் அடித்துக்கொண்டு போகப்பட்டனர். மதுரைப் படைகளும் அவை ஆறு கடக்குமுன் தாக்கிப் பேரழிவு செய்தன.

தஞ்சை அரசனும் மக்களும் இத்தோல்விக்கு அமைச்சன் பாலோஜி என்ற லாகோஜிப் பண்டிதனையே பழிவாங்க எண்ணினர். ஆனால் அவன் வெற்றிகரமான நேச ஒப்பந்தமே செய்துவிடுவதாகக்கூறி வணிகரிடமிருந்து பெரும் பொருள் கடனாகப்பெற்று மதுரைப் படைகளை அமைதிப்படுத்தினான்.

காந்தமன் மரபு :

நாட்டில் ஏற்கனவே இருந்துவந்த பஞ்சநிலை மேலும் வளரக்கூடும் என்ற கிலி இச்சமயம் தமிழகம் எங்கும் ஏற்பட்டது. இதற்குக் காரணம் மழைவந்த பின்னும் காவிரி வரண்டு வந்ததேயாகும். ஆனால் இவ்வரட்சி இயல்பானதல்ல. மைசூர்ச் சிக்கதேவராயன் கட்டிவரும் அணைக்கட்டே வரட்சியை உண்டு பண்ணிற்று என்பதறிந்ததே. புதிதாக ஒன்று பட்ட மதுரை, தஞ்சைப் படைகள் மைசூர்மீது படையெடுக்க முனைந்தன. ஆனால் புறப்படுமுன்பே வரட்சித் தொல்லை வெள்ளத் தொல்லையாக மாறிற்று ஏனெனில் சிக்க தேவராயன் கட்டிய அணை வெள்ளப் பெருக்குத் தாங்காமல் இடிவுற்றது

மைசூர்ப் போராட்டம் :

சிக்கதேவராயன் 1696க்குள் சேலம் கோயம்புத்தூர்ப் பகுதிகளை வென்று அவ்விடங்களிலுள்ள தலைவர்களை அடக்கித் தன் பெயரைக் காவிரிவரை கொண்டுவந்து விட்டான். அத்துடன் அமையாமல் திருச்சிராப்பள்ளியையும் வெல்லும்படி படைத்தலைவன் தளவாய் குமாரையாவை அனுப்பினான். ஆனால் மைசூரை இச்சமயம் மராட்டியர் தாக்கியதால் அவன் மீள வேண்டியதாயிற்று.

சேதுபதி போராட்டம் :

கிழவன் சேதுபதி 1698-ல் மதுரையையே முற்றுகையிட முனைந்தான். தளவாய் நரசப்பையன் அவனைத் துரத்தியடித்தாலும், அதன் பின் நடைபெற்ற தஞ்சைப் போரில் அவன்

எதிரிபக்கம் உதவியிருந்தான். 1700-க்குப் பின் தஞ்சையும் மதுரையும் நேச அரசுகளாயிருந்தபடியால் 1702-ல் தஞ்சைப் படைகளின் உதவியுடனேயே தளவாய் நரசப்பையன் சேது நாட்டின்மீது படையெடுத்தான். ஆனால் இதில் தளவாய் நரசப்பையனே உயிர் துறக்க நேரிட்டது. கிழவன் சேதுபதி மதுரைப்படைகளை வெளியே துரத்தித் தன் ஆட்சியைத் தனியரசாட்சி யாக்கினான். அத்துடன் 1709-ல் தன் மீது மீண்டும் படையெடுத்துவந்த தஞ்சையரசன் ஏக்கோஜியை வென்று அவனிடமிருந்து அறந்தாங்கியைக் கைக்கொண்டு அவனைப் பணிய வைத்தான்.

திருவாங்கூர்ப் படையெடுப்பு :

திருவாங்கூர் அரசர்கள் திருமலை நாயகன் காலமுதல் ஆண்டுதோறும் ஒழுங்காகத் திறை செலுத்தி வந்தனர். மூன்ரும் முத்து வீரப்பன் நாட்களில் அவன் திருநெல்வேலி சென்றிருந்த சமயம், திருவாங்கூர் அரசன் அவனுக்கு விலையேறிய பரிசுகள் அளித்தான் ஆனால் மங்கம்மாள் ஆட்சித் தொடக்கத்திலிருந்து ஆண்டுதோறும் மதுரைப் படைகள் சென்றே திறை பிரிக்கவேண்டி வந்தது. 1696-ம் ஆண்டில் மன்னன் இரவிவர்மன் துணிகரச் சூழ்ச்சியால் மதுரைப் படைகளுக்குப் பேரழிவு உண்டுபண்ணினான்.

திருவாங்கூர் அரசன் அந்நாளில் எட்டுவீட்டுப் பிள்ளைமார் என்ற அமைச்சர் கையில் பாவையாய் இருந்தான். ஒரே கோலில் இரு பறவைகளை வீழ்த்த எண்ணிய அவன், அவ்வமைச்சர்களை அடக்கினால் திறைமட்டுமின்றி நாட்டின் பாதியே தருவதாக மதுரைப் படைத் தலைவனுக்கு ஆசை காட்டினான். ஆனால் அமைச்சர்கள் அழிவுறும் சமயத்தில் படை திரட்டித் திடுமென மதுரைப்படைகளையும் தாக்கித் துரத்தினான்.

இத்துணிகர அவமதிப்புக்காக அரசி மங்கம்மாள் திருவாங்கூர் அரசனைத் தண்டிக்க எண்ணினாள். தளவாய் நரசப்பையன் திருவாங்கூர் அரசனைப் பல இடங்களில் முறியடித்த பின்னர் திறைப் பாக்கி முழுவதும் மீட்டதுடன் விலையுயர்ந்த பரிசுப் பொருள்களும் பெற்றுத் திரும்பினான்.

கதலி மலைப் போர் : ராஜாதேசிங்கின் வீர காதை: 1714

தமிழக நாட்டுப் பாடல்களில் பாஞ்சாலங் குறிச்சி வீரகாதையுடன் இணையாகக் கூறக்கூடிய புகழ்க்காதை ராஜாதேசிங்கின் வீறுப்புமிக்கப் போராட்டமே. மக்கள் உள்ளத்திலே அது பல வண்ண எழுச்சிகளைத் தீட்டினாலும், வரலாற்று நோக்கிலும் அதன் எழுச்சி குறைந்ததென்று கூறமுடியாது. ஏனென்றால்

அது நடைபெற்ற காலத்திலேயே அது எதிரிகள் கூடாரத்தை யும் ஆட்கொண்டு வீர வணக்க மரபை ஏற்படுத்திவிட்ட தென்று உணருகிறோம்.

தேசிங்கு என்ற தமிழ் மக்கள் மரபு வழக்குக்கு மூலமான பெயர் தேஜ்சிங் என்பதாகும். அவன் ஓராண்டுக்குள் நிகழ்த்திய வீரகாவிய நிகழ்ச்சிபற்றி நமக்கு இரண்டு வரன் முறை மரபுகள் கிடைத்துள்ளன. ஒன்று தேசிங்கை தெய்வீக வீரனாக்கிய தமிழ் நாட்டுப் பாடல். மற்றொன்று, பிரிட்டிஷ் ஆட்சித் தொடக்க காலத்தில் நாராயணப் பிள்ளை என்னும் வரலாற்றாசிரியன் இயற்றிய 'கர்நாடக ராசாக்கள் சரித்திரம் தருவது. பிந்தியது வீர வணக்க உணர்ச்சியற்ற தேசிங்கின் வீரச் செயலையே பாராட்டாத வரலாறானாலும் வீர வெற்றியை எடுத்துக்காட்ட அதுவே போதியது.

இரு மரபுகளுக்குமிடையே சிறு வேறுபாடுகள் இல்லாமல் இல்லை. தமிழ்ப் பாடல் தேசிங்கின் தந்தை தேரணிசிங்கு என்றும், உடன் பிறந்தான் தரணிசிங்கு என்றும் கூறுகிறது. அவன் செஞ்சியிலேயே பிறந்து தந்தை இறக்கும்போதும் செஞ் சிலேயே இருந்ததாகக் கூறுகிறது. ஆனால் தமிழ் வரலாற் றேடும் நாமறிந்தவரை பிற வரலாற்றாதாரங்களும் அவன் தந்தை 1700 முதல் 1714வரை செஞ்சி யாண்ட சரூப்சிங்கு என்றும், தந்தை இறந்தபோதும் அவன் தன் தாயகமாகிய புண்டேல் கண்டில் இருந்தானென்றுமே கூறுகின்றன. தவிர நாட்டுப் பாடல் அவன் தந்தை தில்லிப் பேரரசனால் திறை கொடாததற்காகச் சிறைப் பட்டிருந்தானென்றும், பேரர சனிடமிருந்த அடக்க முடியாத குதிரையை அடக்கித் தந்தையை தேசிங்கு சிறைமீட்டு வந்தானென்றும் கூறுகிறது.

தமிழ் வரலாற்றேடு தேசிங்கு செஞ்சிக்கு வரும் வழியில் பேடனூர் (இக்கேரி) அரசனின் பகைவரை வென்று, அவனிட மிருந்த அடங்காக் குதிரையை அடக்கிப் பரிசாகக்கொண்டு செஞ்சி வந்தானென்றே கூறுகிறது.

மற்றச் செய்திகளில், சிறப்பாகப் போராட்டச் செய்தி களில் வேறுபாடு மிகுதியில்லை. நாட்டுப் பாடலைவிட வரலாற் றேடே இவ்வகையில் விளக்கமிக்கது என்று கருதலாம்.

பேடனூர் அரசன் அளித்த குதிரை 12,000 வெள்ளிவிலை பெறுமானம் உடையது. இது தவிர அவ்வரசன் தேசிங்குக்கு ஒரு இலட்சம் வெள்ளியும் நன் கொடையாக அளித்தான். இவற்றுடன் அவன் செஞ்சிக்கோட்டை புகுந்தான்.

இச்சமயம் கருநாடகத் தளபதியா யிருந்தவன் சாதத் உல்லா கான். அவன் கீழ்த் தாவூத்கான் துணைத் தலைவனாய் இருந்தவன்—பின்னாளில் தமிழகப் பெரும்பகுதிக்கு உரிமை

யாளனை கருநாடக நவாப் மரபின் முதல்வன் அவன். தேசிங்கின் விருப்பான எதிர்ப்புக்கு ஆளாக நேர்ந்தவர்கள் இவர்களே.

நாராயணசாமிப் பிள்ளையின் வண்ணந் தோயா வரலாற்று விரிவுரை நமக்குத் தேசிங்கின் வாழ்வில் தமிழ் மக்கள் கண்ட வீர வணக்கப் பண்பின் மறை திறவையே காட்டுகிறது. தேசிங்கு இயல்பான வீரமரபிலும் மானமரபிலும் வந்தவன்—ஆனால் உலகியலனுபவமற்ற இளைஞன். பேரரசன் ஆட்சிமுறை மரபுப்படி இன்றுபோல் அன்றும் சில வினை முறைகள் நடைமுறைகள் சமுதாயத்தில் இன்றியமையாதவையாகக் கருதப்பட்டன. பேரரசனிடம் பணிவுகாட்டி அவன் பேராட்களான தாவூத்கான், சாதத் உல்லாகான் ஆகியவர்களின் ஆணையும் இணக்கமும் பெற்றே தேசிங்கு பதவி ஏற்றிருக்கவேண்டும். ஆனால் பயமறியாக் காளையான புந்தேல இளைஞன் தேசிங்கு நேரே கோட்டைக்குச் சென்றான். கோட்டைக் காப்பாளரும் வீரரும் அவனை வணங்கினர். அவன் பதவி மேற்கொண்டான். கோட்டையிலேயே உள்ள மொகலாய வீரர் கண்டு வியந்தனர்—வணங்கவில்லை. வாய் பேசவுமில்லை.

புந்தேல வீரன் துணிகரத் துடுக்குத்தனம் ஏற்கனவே பலருக்கும் தெரிந்திருந்ததென்று தோற்றுகிறது. ஏனெனில் பேரரசனிடம் இருந்து இச் சமயம் தேசிங்குக்கு ஓர் ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. பதினைங்கு ஆண்டுகள் ஆண்ட அவன் தந்தை அத்தனை ஆண்டுகளும் திறை அனுப்பாமலே திறமையாக நாட்கடத்தி வந்திருந்தான். அதைக் கொடுக்கும் படி தேசிங்குக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. தாவூத்கான் இதை நேரில் அனுப்ப மனமில்லாமல் சாதத் உல்லாகானிடம் கொடுத்தான். சாதத் உல்லாகான் வரிமா முதல்வன் (ஷெரிஸ் டாதார்) ஆன லாலா தோடர்மாலிடம் அதைக்கொடுத்து, கூடிய மட்டும் நய இணக்கமாகச் செய்தியை எடுத்துரைத்துக் காரிய மாற்றும்படி கூறினான்.

தோடர்மால் வருமுன்பே அவன் செயலாளன் (வாக்னிஸ்) ஆன பய்யா ராமகிருஷ்ணு தேசிங்கினிடம் நயமிக்க நல்லுரைகள் பல கூறினான். ‘இது வெறும் நடைமுறை வினைதான். தோடர்மால் மிக நல்லவர். அவரிடம் இணக்கமாகப் பேசினால், அவர் உங்கள் பதவியை உறுதிசெய்ய ஆவன செய்வார்’ என்று கூறினான். இந் நல்லுரைகளின் பயனாகத் தோடர்மாலைச் சென்று பார்க்க அவன் எப்படியோ இணங்கினான். ஆனால் ‘தந்தை பெற்ற பதவி மகன் உரிமையே’ என்ற உறுதியில் நின்ற தேசிங்கு திறை என்ற சொல்லைக் கேட்டதே

தோடர்மால் மீது பேரரசன் ஆணைப் பத்திரத்தை வீசி யெறிந்துவிட்டுச் சீற்றத்துடன் சென்றான் மறுநாள் வெளியே அவரைச் சந்தித்தபோதுகூட உயர் பணியாளரென்ற முறையில் வணக்கம் கூறாது சம நிலையிலேயே பேசினான். தோடர்மால் இவற்றை மேலிடத்துக்கு விளக்கி அறிவித்தான்.

சாதத் உல்லாகான் செஞ்சிக்குத் தன் படையுடன் புறப்பட்டான். திமிரிப் பெருவெளியில் பல தலைவர்கள் படைகள் வந்து கலந்தன. 5000 குதிரைகள், 10,000 காலாள் வீரர்கள் படையெடுப்பை எதிர் நோக்கி நின்றனர். வெங்கடகிரிக் கோமான் பங்காரு யாசம நாயுடுவின் வீரர்களுடன் இணைந்து படை 30,000 ஆகப் பெருகி ஆரணியை அடைந்தது. ஆரணிக் கோட்டைத் தலைவன் வெங்கடராவும், சேற்றுப் பட்டுத் தலைவன் சலாபத்கானும் இவ்விடத்தில் சாதத்உல்லா வின் படையுடன் சேற்றுப்பட்டை அடைந்தனர். இங்கே தோடர்மால் அவர்களை வரவேற்றான்.

படைகள் கதலிமலை என்ற இடத்தினருகே வந்ததும் கூடாரமிட்டுத் தங்கின. இது செஞ்சியிலிருந்து 4 கல் தொலைவிலுள்ள ஒரு சிற்றூர் ஆகும். படைகள் பேரரசன் படைகளாதலால், கோட்டைக் காவல் படைவீரர்கள் எவரும் இப் படையை எதிர்க்கவில்லை. மதிப்புக் காட்டி ஒதுங்கியே நின்றனர்.

படைகளின் வரவைக் கேள்வியுற்ற ராஜா தேசிங்கு வெளிப்படையாக எந்த உணர்ச்சிகளையும் காட்டவில்லை. ஆனால் அவன் உள்ளம் உள்ளூரச் சீறி எழுந்தது. எல்லா அரசரையும்போல் அவன் போருக்கு வரும்படி எல்லாரையும் உத்தரவிடவில்லை. 'சாகத் துணிந்தவர்கள் என்னுடன் வரலாம். வாழ விரும்புகிறவர்கள் வரவேண்டாம்' என்று கூறிக்கொண்டு புறப்பட்டான்.

அவன் நண்பர்கள் இருவர் ஐம்பது குதிரை வீரர்களுடனே அவனைப் பின் தொடர்ந்தனர். வழுதாவூர்க் கோட்டைத் தலைவன் அவன் தந்தையின் உயிர் நண்பன். தன் பேரெழுச்சி பற்றித் தேசிங்கு அவனுக்கு செய்தி சொல்லியனுப்பியிருந்தான். அவன் தன் புதல்வனாகிய மகாபத்கானை ஒரு சில குதிரை வீரருடன் அனுப்பினான். கோட்டைக்கு வெளியே புறப்படும் சமயம் தேசிங்குடன் இந்த மூன்று உயிர் நண்பர்களும் 200 குதிரை வீரரும் மட்டுமே இருந்தனர்.

போகும்போது அவன் தன் உயிர்த் துணைவியிடம் ஒரு வாசகத்துக்குமேல் பேசவில்லை. "போருக்குப் போகின்றேன். நான் திரும்பி வராமல் போய்விட்டால், பகைவரிடமிருந்து

உன் மதிப்பைக் காப்பாற்ற என்ன செய்ய வேண்டுமென்று உனக்குக் கூற வேண்டியதில்லை. உன் அறிவே ஆதைத் தெரிவிக்கும்'' என்று கூறி அகன்றான்.

நவாப் சாதத்கானின் படை வீரர்கள் பலவிடத்தும் குழுமி நின்றனர். தேசிங்கு அவர்களைக் கவனிக்கவேயில்லை. நேராகக் களம் நோக்கிச் சென்றான்.

வராக் நதியின் வெள்ளம் அச்சமயம் கரை பொருமி ஓடிற்று. அந்த ஆறு மிகுதி ஆழமற்றது, ஆனால் வேக மிக்கது. வெள்ளம் வருவது அருமை. வந்தாலும் ஓரிருமணி நேரத்திற்குமேல் வடியாதிருப்பதில்லை எனவே சிறிது காத்திருந்து கடப்பதே எவரும் இயல்பாக எளிதில் பின் பற்றத்தக்க மரபு. ஆனால் செயல் வீரன் தேசிங்கு சிந்தனை செய்யும் இயல்பினன் அல்லன். அவன் பொங்கி ஓடும் வெள்ளத்தின் ஊடாகத் தன் குதிரையைச் செலுத்தினான் பின் வந்த குதிரை வீரரில் பலர் பின் தங்கிக் கரையில் நின்றனர். ஆனால் பாதிக்கு மேற்பட்ட வீரர் பின் தொடர்ந்தனர். மகாபத்கானும் நண்பரும் அவன் நிழல்களோ என்னும்படி பின் தொடர்ந்தனர். ஆறு கடந்த பின்னும் அவர்களுடன் நூறு குதிரை வீரர் இருந்தனர்.

சாதத் உல்லாகான் உள்ளூர இளைஞன் தேசிங்கின் வீறுப்பான போக்கை உணர்ந்தவன். வீறுப்பைத் தண்டித்து அடக்க விரும்பினானேயன்றி வீரத்தை அழிக்க விரும்பவில்லை. ஆகவே அவனை உயிருடன் பிடித்து வரும்படி தாவூத்கானுக்குக் கட்டளையிட்டு ஒரு படையுடன் அவனையனுப்பிருந்தான். இக் கட்டளையே தேசிங்கு வகையில் ஒரு பெருத்த இடையூறாய் அமைந்தது. தேசிங்கு தன் படையளவும் எதிரியின் படையளவும் பாராமல் தாவூத்கான் படைகளை மும்முரமாகத் தாக்கிக்கொண்டே அவனை நோக்கி முன்னேறினான்.

தாவூத்கான் உத்தரவுப்படி அவன் படைகள் தேசிங்கையும் அவன் படைவீரர்களையும் வளைத்துப் பிடிக்க முயன்றன. ஆனால் தேசிங்கின் வீரரது தாக்குதலால் இருதரப்பிலும் ஐம்பதுபேருக்கு மேல் மாண்டனர். அச்சிறு படையில் சிலர் தப்பிப் பிழைக்க இடம் கிடைத்தவழியே சிதறியோடினர். ஆயினும் பெரும்பாலோர் தேசிங்கைச் சூழ்ந்து நின்று போராடினர். மகாபத்கான் தேசிங்கின் வலக்கையாக விளங்கினான். தம்மால் எத்தனை எத்தனை பேரைக் கொன்றொழிக்க முடியுமோ, அத்தனை பேரையும் ஒழித்தவாறு ஒவ்வொருவராகத் தேசிங்கைச் சுற்றிலும் சாய்ந்து விழுந்தனர். எவரும் காயமுற்றவர்களாக, குற்றுயிராளராக விழவில்லை—உயிரற்ற

பின்பே விழுந்தனர். நண்பர்களும் வீழ்ந்தனர்—மகாபத் கானும் வீழ்ந்தான்—தேசிங்கு மட்டுமே மீந்தான்.

அப்போதும் வீரன் போரை நிறுத்தவில்லை—தயங்கவில்லை—வலசாரி இடசாரியாக வீரரைக்கொன்று குவித்த வண்ணமே தாவூத்கான் இருந்த யானையை நோக்கி விரைந்தான். அச்சமயத்திலும் அவனை எவரும் கொல்லவேண்டாம் என்றே தாவூத்கான் ஆணையிட்டான். ஆனால் தேசிங்கின் துணிச்சலை அவன் கனவில்கூட எதிர்பார்க்கவில்லை. அவன் குதிரையின் முன் கால்கள் தாவூத்கான் யானையின் விலாமீது தாவின. குதிரை மீதிருந்த வீரன் அந்நிலையிலேயே தன் ஈட்டியைத் தாவூத்கான் உடல்மீது செலுத்தினான். அவ் வீட்டி தாவூத்கானின் உடலை ஊடுருவி உடலின் இருபுறமும் சமநீளமாக நின்றது!

ஈட்டியேற்ற தாவூத்கானின் முகத்தைப் போலவே, வீரர் அனைவர் முகங்களும் திகிலடைந்து செயலற்றிருந்தன!

ஈட்டியைப் படைத்தலைவன் உடலுடனே போராடவிட்டு வந்தபடியே தேசிங்கு குதிரையை ஊக்கிக் கோட்டைக்குள் சென்றான். ஆனால் தோழருடனும் வீரருடனும் வந்த அவன், சிற்றமே தோழராகவும் அஞ்சா உறுதியே படை வீரராகவும் சென்றான்.

தாவூத்கான் படைகளின் சீர் குலைவும் தாவூத்கான் மறைவும் செவியேற்ற சாதத் உல்லாகான் தன் முழுப் படைகளுடனும் கோட்டை நோக்கி வந்தான். ஆனால் தேசிங்கு ஈட்டி மாற்றவே கோட்டைக்குள் சென்றிருந்தான். முன் போராடிய இடத்தருகிலேயே அவன் சாதத் உல்லாகானின் பெரும் படையைச் சந்தித்தான். தனியொருவனாக முன்போல் சாதத் உல்லாகானின் யானையை நோக்கிப் பாய்ந்தான்.

இத்தடவை யானை மீதிருந்த வீரர் எச்சரிக்கையாயிருந்தனர். அவர்களில் ஒருவன் தேசிங்கு ஏறிவந்த குதிரையின் முன்கால் இரண்டையும் வெட்டி விழ்த்தினான். குதிரை வீரன் இப்போது காலாள் வீரன் ஆயினான். படைகள் தொலைவாகவே நின்று அவனை நாற்புறமும் சூழ்ந்தன. ஆனால் வேட்டை நாய்களை எதிர்த்துச் சீறும் புலிபோல அவன் நாற்புறமும் சுழன்று சுழன்று கைக் கெட்டியவர்களையெல்லாம் வீழ்த்தினான்.

சாதத் உல்லாகான் இப்போதுகூடத் தேசிங்கைக் கொல்லாமலே பிடிக்கும்படி உத்தரவிட்டான். யாசமனின் துணைத்தலைவர்களுள் ஒருவன் கேடயத்தால் தன் உடலைக் காத்தவண்ணம் தேசிங்கைப் பிடிக்குமாறு அணுகினான். ஆனால் தேசிங்கு ஓங்கிய ஈட்டி கேடயத்தையும் அதன் மறை

விலிருந்த தலைவனையும் ஒரே பாய்ச்சலில் ஊடுருவிப் பாய்ந்தது. இதன் பின் எவரும் அருகே நிற்க அஞ்சினர்.

யாசமன் இச்சமயம் கொல்லுங்கள், விடாதேயுங்கள் என்று உத்தரவிட்டான்.

துப்பாக்கி வேட்டுக்கள் நாம் நாற்புறமிருந்தும் வந்தன. ஒரு குண்டேற்று, உலையாத வீரன் உடல் உயிர் அற்று உணர் விழந்து வீழ்ந்தது.

கோட்டை முகலாயப் படைகள் வசமாயிற்று. தேசிங்கின் தந்தை சருப்சிங்கு ஈட்டி வைத்திருந்த செல்வ குவைகளில், களத்தில் வீழ்ந்த அவன் செல்வன் நீங்கலாக யாவும் சாதத் உல்லாகானால் கைப்பற்றப்பட்டன. ஆனால் சாதத் உல்லா கான் தன் படைத்தலைவன் தாவூத்கானின் மாள்வை எண்ண வில்லை—தன் படைகளின் குலைவை எண்ணவில்லை—மனித உலகம் கண்டிராத தேசிங்கின் வீரப் போராட்டமே அவன் உள்ளத்தில் ஒளி வீசிற்று தேசிங்கின் பணியாட்கள், வீரர் அனைவரும் முன்போலவே தத்தம் பதவிகளில் இருக்கும்படி உரிமையளித்தான். ஆனால் அவ் வீரனிடம் பணி செய்தவர்கள் பின்னும் பணிசெய்ய விரும்பவில்லை. அவன் வீழ்ந்த இடத்திலேயே ஒரு நகரம் அமைத்து அதில் வாழவே விரும்பினர்—இது அவர்களுக்கு உரிமையாய் அளிக்கப்பட்டது.

பெண்டிர் அனைவரும் பாதுகாப்புரிமையுடன் தத்தம் விருப்பப்படி செல்லவோ பணியேற்கவோ, இணக்கமளிக்கப் பட்டனர். தேசிங்கின் மனைவிக்கு வேண்டிய செல்வம், மாளிகை ஆகியவை வாக்களிக்கப்பட்டன. ஆனால் கணவன் இறந்த இடத்தருகே உள்ள செட்டி குளத்தின் கரையிலேயே அவனுடலுடன் எரி மூழ்குவதையே அவள் பிடிவாதமாக வேண்டினாள். அவள் விருப்பப்படி பலர் அழுத கண்ணீருடனும் வணங்கிய உள்ளத்துடனும் நின்று காண அவள் தன் கணவனுடலுடன் ஒன்றுபட்டு ஆவியானாள்.

அவள் உடன்கட்டை ஏறிய இடத்தில் ஒரு அரசும் வேம்பும் நடப்பட்டன. ஒரு மலர்ப்பொழில் உண்டுபண்ணப் பட்டது.

வீர அரசியின் நினைவாக சாதத் உல்லாகான் தன் தலை நகர் ஆர்க்காட்டின் அருகே 'இராணிப்பேட்டை' என்ற ஒரு நகரம் உண்டுபண்ணினான். அரசியின் புகழ் உருவாக இன்னும் அது ஆர்க்காட்டு இராணிப்பேட்டையாக விளங்குகிறது.

அரசி எரிபுகுந்த இடத்தில் இன்று பூங்கா காணப்பட வில்லை. ஆனால் மரங்கள் உள்ளன அதனுடன் ராணி குளிக்குமிடமாக ஒரு கல் துறை இன்றும் மக்களால் ஆர்வத் துடன் பேணப்பட்டு வருகிறது.

கதலிமலைப் போர்க் காட்சியின் படமமைந்த சலவைக் கல்லொன்று சென்னைப் பொருட்காசி சாலையை அணிசெய்கின்றது அதன் கீழுள்ள பாரசீகமொழிக் கல்வெட்டு சாதத்துல்லாக்கானால் செஞ்சிக்கோட்டை பிடிக்கப்பட்டதென்பதை உணர்த்துகின்றது.

புராண கதைகள், கட்டுக்கதைகள் எதிலும் தமிழர் காட்டாத ஆர்வத்தைத் தமிழக நாயகர் மரபினரான பாஞ்சாலங்குறிச்சி வீரர் பாடலிலும், தமிழக இராசபுத்திர வீரனான தேசிங்குராசன் வீரப்பாடலிலும் காட்டி வந்துள்ளனர்—அவர்கள் தேசங் கடந்த தேசிய ஆழத்தின் சின்னங்களாக இரு தேசிய வீர கதைகளும் இயங்குகின்றன.

சேதுமரபின் அரசுரிமைக் கலவரம்

மங்கம்மாளுக்குப்பின் அவளால் வளர்க்கப்பட்டு வயது வந்த பெயரன் விஜயரங்க சொக்கநாதன் (1706—1732) மதுரை நாயகனானான். அவன் கோயில்களில் மட்டுமே கருத்துக்கொண்டு அரச செலவத்தைச் சீரழித்ததுடன், அரச காரியங்களைக் கவனியாது குலையவிட்டான். அவன் ஆட்சியின் முக்கிய நிகழ்ச்சிகள் சேதுநாடு பற்றியவையே. கிழவன் சேதுபதிக்குப்பின் (1694—1710) அவன் புதல்வன் விஜயரகுநாதன் ஆட்சி செய்தான். கிழவன் சேதுபதியின் அன்பரிமைப் புதல்வனான பவானி சங்கரன, விஜயரகுநாதன் அரசுரிமையை எதிர்த்தாலும், மக்கள் விஜயரகுநாதனையே விரும்பி ஏற்றனர். அவன ஆட்சிநாளில் கரைமயாரப் பகுதியில் கிருஸ்தவ சமயம் பேரளவு பரவிற்று. அவன் உடன் பிறந்தானான வடுகநாத தேவனும் மைததுனனான திருவள்ளுவ நாதனும் அச் சமயத்தினபால் கனிவுடையவராயிருந்தனர். ஆனால் 1720-ல் புதுக்கோட்டை அரசன், தஞ்சாவூர் அரசன் ஆகியோர் உதவி பெற்றுப் பவானி சங்கரன் அரந்தாங்கியைத் தாக்கினான். இப்போரிடையே அநநாளில் பரவி வந்த ஒரு கொள்ளை நோய்க்கிரையாகி விஜயரகுநாதன் மாண்டான்.

விஜயரகுநாதனால் தேர்வு பெற்றுத் தண்டன் என்பவன் தவிசேறினன். ஆனால் பவானி சங்கரனின் உறவுமுறையான விஜரகுநாதன் மனைவியும் மக்களும் அவனை ஆதரிக்கவே, அவன் அரசுரிமையைக் கைப்பற்றினான். தண்டத்தேவன் மதுரை நாயகன் உதவியும் புதுக்கோட்டை அரசன் உதவியும் பெற்றுப் பவானி சங்கரனை மீண்டும் துரத்தினான்.

பாம்பாற்றுக்கு வடக்கிலுள்ள பகுதி முழுதும் தஞ்சைக்களிப்பதாக உறுதியளித்துப் பவானி சங்கரன தஞ்சையரசன் உதவி பெற்றான். தஞ்சைத் தளபதி மதுரைப் படைகளை

எளிதில் வென்றான். அத்துடன் புதுக்கோட்டை மன்னன் இரு புதல்வர்களைக் கைப்பற்றியது மூலம் அவனைத் தன் பக்கமாக்கினான். தண்டத்தேவனும் அவன் ஆட்களும் கொலை செய்யப் பட்டுப் பவானி சங்கரனே சேதுபதியானான்.

உறையூர்ப் போர் 1729

பவானி சங்கரன் சேதுநாட்டின் பல தலைவர்களின் உடைமை பறிமுதல் செய்து அவர்களைப் பகைத்தான். அவர்களில் தண்டத்தேவனின் தாய் மாமனான கட்டயத்தேவனும் மற்றொருவனும் தஞ்சையரசனிடம் சென்றனர். பவானி சங்கரன் வாக்களித்தபடி பாயபாற்றுக்கு வடக்கேயுள்ள நாட்டைத் தஞ்சைக்கு அளிக்கவில்லை என்பதை அவர்கள் அவனுக்கு நினைவூட்டினர். அதை அட்டியின்றி அளிப்பதாக வாக்களித்துத் தஞ்சை அரசன் உதவி பெற்றனர்.

தஞ்சைப் படைகள் பவானி சங்கரனை உறையூர்ப்போரில் முறியடித்துத் தஞ்சைக்கே சிறைப்படுத்திக்கொண்டு சென்றனர்.

சிவகெங்கை மரபின் தோற்றம் 1729

உறையூர்ப் போரின் பின் வாக்களிக்கப்பட்டபடி பாம்பாற்றுக்கு வடக்கேயுள்ள பழைய சேதுபதிகளாண்ட நிலம் தஞ்சைக்களிக்கப்பட்டது. ஆனால் உதவி கோரிய இருவருக்கும் மீந்த பகுதி இரு கூறாக்கபபட்டது. அப் பகுதியின் ஐந்து சரி கூறுகளில் மூன்றான பாகம் கட்டியத் தேவனுக்கு அளிக்கப்பட்டது. அவன் குமாரமுத்து விஜயரகுநாத சேதுபதி என்ற அரசுரிமைப் பெயருடன் சேதுபதியானான். மற்றவன் ஐந்தில் இருபகுதிபெற்றுச் சிவகங்கை மரபின் முதல்வனானான்.

மதுரை அரசின் வீழ்ச்சி 1732—1736

மதுரைநாயகன் விஜயரங்க சொக்கநாதனுக்கு ஆண் மகவு இல்லாததால், அவன் மனைவி மீனாட்சியே ஆட்சிப் பொறுப்பேற்றாள். அவள் அரசியல் பேரவாவுடையவளாகவே இருந்தாலும், சரிந்துவந்த தமிழக அரசியல் சூழலால் பேரவதிகுட்பட்டாள். திருமலை நாயகன் இளையவன மரபில்வந்த பங்காரு திருமலைநாயகன் எனபவன் புதல்வன் விஜயகுமாரனை மகனுமையுரிமையில் தேர்ந்து அவன் சார்பில் அவள் ஆள முயன்றாள். ஆனால் 4 ஆண்டுகட்குமேல் அவள் ஆட்சி நீடிக்கவில்லை. மகனுமைத்தேர்வு பெற்ற விஜயகுமாரன் தந்தையாகிய பங்காரு திருமலையே அமைச்சனான தளவாய் வேங்கடாச்சாரியுடன் சேர்ந்து அவள் ஆட்சியைக் கைப்பற்றக் கிளர்ச்சி செய்தான். அச் சமயம் திறை பெறுவதற்

ளாக ஆர்க்காட்டு நவாபான சாதத் உல்லாகான் தன் மகன் சஃப்தர் அலியையும் மருமகன் சந்தாசாகிபையும் தஞ்சைக்கும் மதுரைக்கும் அனுப்பியிருந்தான். பங்காரு திருமலை அவ்விருவருக்கும் கையுறைப் பொருள் தந்து மீனாட்சிக்கெதிராகத் தூண்டினான். ஆனால் போரிட விரும்பாத நிலையில் சஃப்தர்அலி நடுநிலைத் தீர்ப்புச் செய்வதாகப் பாவித்துப் பங்காருவிடமே அரசை ஒப்படைத்தான். இத்தீர்ப்பை நடைமுறைப் படுத்தும்படி தன் மைத்துனன் சந்தாசாகிபிடம் கூறிவிட்டு அவன் அகன்றான்.

மீனாட்சி ஒரு கோடி வெள்ளி தருவதாக வாக்களித்து சண்டாசாகிப் உதவி கோரினாள். ஆனால் அவன் போக்குக் கண்டு ஐயம்கொண்டு அவள், பங்காரு திருமலையிடம் சமரசமாகிச் சந்தாசாகிபைப் புறக்கணித்து ஒடுக்க முயன்றாள். ஆனால் கரடியைப் பற்றுவது எளிது, அதனின்றும் விடுபடுவது எளிதல்லவென்பதை அவள் விரைவில் காண நேர்ந்தது.

## அம்மைய நாயக்கனூர்ப் போர் 1736

சந்தாகிப் ஆர்க்காட்டுக்குச் சென்று புதுத் திட்டத்துடனும் உதவியுடனும் திரும்பத் திருச்சிராப்பள்ளிக்கு வந்தான். ஆட்சியை அவன் முற்றிலும் தன் கைவசப்படுத்தினான். கோவிந்தையன், இராவணையன் என்ற இருபடைத் தலைவர்களையும் தன் வயப்படுத்தி, அவர்கள் தலைமையில் 80,000 குதிரை வீரர்களையும காலாட்படைகளையும் அனுப்பித் திண்டுக்கலைப் பிடித்தான். பின் மதுரையையும் கைப்பற்ற எண்ணி அப்படைகள் அந் நகரை நோக்கிப் புறப்பட்டன.

பங்காரு திருமலை அவசர அவசரமாகச் சில படைகளைத் திரட்டிக் கொண்டுவந்து சந்தாசாகிப் அனுப்பிய படைகளை எதிர்த்தான். ஒரு சில பாளையக்காரரும் அவனுடன் நின்று போராடினர். ஆனால் அம்மையநாயக்கனூரில நடந்த இப்போரில் பங்காரு தீவிரமாகக் கடும் போரிட்டாலும் இறுதியில் தோற்றோட நேர்ந்தது அவன் சிவகங்கையில் அடைக்கலம் புகுந்து, சிவகங்கை அரசன் அளித்த வெள்ளிக் குறிச்சிக் கோட்டையிலே தன் மீந்த நாட்களைக் கழித்தான்.

சந்தாசாகிப் தன் வாக்குறுதிகளைக் காற்றிலெறிந்து நாட்டைக் கைக்கொண்டு மீனாட்சியைத் திருச்சிராப்பள்ளியில் சிறையிட்டான். பேரவாவும் பெருமித வீரமும் உடைய அவ்வரசி உளமுடைந்து சிறையிலேயே மாண்டாள். மூன்று நூற்றாண்டுகளாகப் பாண்டியர் பழம்புகழ் மதுரைக்குப் புதுப்புகழ் தந்த நாயக மரபு அவளுடன் முடிவுற்றது.

பால்கேத் போர் 1720

சிவாஜி ஊக்கிய மராத்திய இனமலர்ச்சி பிரிட்டிஷ் ஆட்சித் தொடக்கம்வரை தளர்வுறவில்லை. ஆனால் அவன் கட்டமைத்த தேசிய இன ஒற்றுமை சிதறிற்று. இந்நிலையிலும் அவன் கண்ட ஒரு தேசீயக் கனவொளி பின்னோர்களால் எளிதில் மறக்கப்படவில்லை. தமிழகத்தில் அமைக்கபபடும் பேரரசே தென்னகத்தின் முதல் அரசாயிருக்கும் என்ற சிவாஜியின் ஆர்வத்தைப் பின்னோர்களும் மேற்கொள்ளத் தவறவில்லை.

மராட்டியத் தாயகத்திலிருந்து தமிழகம்வரை மராத்திய அரசுகள், சிற்றரசுகள் தொடர்பாகப் பரவிக் கிடந்தன. பெல்காம், கொப்பல், சாந்தூர், பெல்லாரி, சிரா, பங்களூர், கோலார் ஆகியவை இவற்றுட் சில. சாம்பாஜிக்குப் பின் மராட்டிய மரபுக்கு வந்த மகாராஜா ஷாஹு இவை கடந்து சிவாஜியின் தமிழ் அரசுக் கனவும் கண்டு வந்தான். ஆனால் அவன் ஆட்சிக்குள்ளே பொருமிவந்த பூசல் பிளவுகள் மராத்திய வாழ்வுக்கே தொல்லை விளைவித்தன.

முகலாயப் பேரரசின்தளர்ச்சி அரங்கசீப் ஆட்சியிறுதி ஆண்டான 1707-லேயே தொடங்கிற்று. தென்னகத்தில், அதன் பயனாக எழுந்த புதிய முஸ்லிம் தனியாட்சி மரபுகளுள் முக்கியமானது நிஜாம் மரபே. அதன் முதல் அரசன் நிஜாம் உல்முல்க் அசஃவ்ஜா. அவன் மராத்தியர் பிளவுகளைப் பெருக்கிப் பயன்படுத்த எண்ணினான். பேராரைத் தருவதாக வாக்குறுதிகூறி அவன் மராத்தியப்படைத்தலைவன் சிரீபத்ராவைத் தனவயமாக்கி அவனை ஊக்கினான். இங்ஙனம் பிளவைப் பெருக்கிக்கொண்டே பிளவைச் சாக்குக் கூறிக்கொண்டு மராத்தியர் கொள்ளைப் பாதுகாப்பு வரிகளையும் கொடாது நிறுத்தினான்.

இந் நிலைக்கு 1726 ஒரு முற்றுப்புள்ளி வைத்தது. ஏனெனில் அவ்வாண்டு பால்கேத் போரில் மராத்திய மன்னன் மகாராஜா ஷாஹு; நிஜாமையும், சிரீபத்ராவையும் முறியடித்துப் பெருவெற்றி கண்டான். இதனால் மராட்டிய அரசின் பிளவு அகன்றது. ஒற்றுமை வளர்ந்தது.

போரின் பின் இவ்வாண்டு ஷாஹுவுக்கும் நிஜாம் உல் முல்க்குக்கும் இடையே நிறைவேற்றப்பட்ட முங்கி சிவக் கிராம உடன்படிக்கை மராத்திய மண்டலத்தை மீண்டும் ஷாஹுவின் ஒன்றுபட்ட ஆட்சியின்கீழ்க் கொண்டு வந்தது.

தென்னகத்தின் உயிர் நிலையாகிய தமிழகத்துக்குப் பரவ மராட்டியர் துடித்தது போலவே நிஜாமும் தென்னகத்தின்

உயிர் நிகழ்ச்சிகளுடன் இடைவிடாத் தொடர்பு வைத்துக் கொள்ள விரும்பியிருந்தான். இவ்வாண்டில் அவன் ஔரங்க பாத்திலிருந்து வடபகுதித் தமிழகத்துக்கு அருகாமையிலுள்ள ஹைதராபாதுக்குத் தன் தலைநகரை மாற்றிக்கொண்டான்.

தவிர 1721-லேயே முதல் நிஜாமான நிஜாமூல்முல்க் கத்துக்கு வருகை தந்து அதன் பெரும் பகுதியாண்ட முதல் கருநாடக நவாப் சாதத் உல்லாகான் (1708—1733) மீது தன் மேலுரிமையையும் தன் செல்வாக்கையும் நாட்டி, அவனிடமிருந்து திறையும், தன் புடைவரு சுற்றத்தினரான ஓர் இலட்சம் பேருக்கும் பங்கிட்டளிக்கப் பரிசாக ஐந்து இலட்சம் பொன்னும் பெற்று மீண்டான்.

தமிழகத்தின் 84 கோட்டைகள்

மதுரை நாயகர் ஆட்சியின்போது தமிழகப் பாளையங்கள் 72 என்று மரபு முறையாக வகுக்கப்பட்டிருந்தது போல, 18-ம் நூற்றாண்டில சாதத் உல்லாகான் ஆட்சியின்போது தமிழகக் கோட்டைகள் 84 என்று வரையறுக்கப்பட்டிருந்தன. அவற்றுள் ஏழு கோட்டைகள் செஞ்சியைச் சார்ந்தவை.

அவற்றின் பட்டி வருமாறு :

தளவாய் கட், கிடங்கல், பெருமுக்கல்; வழுதாவூர், விருத்தாசலம், பாளையங்கோட்டை, இறஞ்சன்குடி, கெம்பகட், போளூர், பூஸ்தாபகட அல்லது சங்கராபுரம், வேப்பூர்த்துருக்கம், இராவுத்த நல்லூர், சிதம்பரம், திருவண்ணாமலை, எலேயாநாகூர், கர்நாடககட், பெண்ணாத்தூர், திம்மப்பையதுருக்கம், மல்லிகார்ஜுனகட், ஆரணி, சேற்றுப்பட்டு, செங்கற்பட்டு, கருங்குழி, பூவிருந்தவல்லி, மயிலாப்பூர் (சாநதோம), திருப்பாசூர், தாமரப்பாக்கம், திமிரி, ஆர்க்காடு, வேலூர்த்துருக்கம், வேலூர்க்கோட்டை, வந்தவாசி, கயிலாசகட, படைவீடு, வண்ணான் துருக்கம், சக்கிலித்துருக்கம், வாஜேந்திரகட், ஆம்பூர்கட், சந்திரகிரி, உதயகிரி, இராணிப்பூர், சத்தியவேடு, செக்கு, தேவகட், சுலுபகட், கிருஷ்ணகிரி முதலியன.

தாமல் செருவுப் போர் 1740

தென்னகத்தின் வடமேற்குத் திசையில் ஆண்ட மராத்திய மன்னன் மகாராஜா ஷாஹூ தன் படைத்தலைவர்களான ரகோஜி பான்ஸ்லே, ஃபதேசிங் ஆகியவருடன் அவனை தாயகத்தின தென் திசையில உள்ள ஜஜீரிக கோட்டையைத் தாசகி வென்றான். இதன்பின் அம்மூவரும் படைகளுடன தென் மைசூர்ப் பகுதி அடுததுள்ள தாமல செருவுக் கணவாய் வழி

யாகத் தமிழகத்துக்குள் புகும்படியும், ஆர்க்காட்டையும், தஞ்சையையும் நோக்கி முன்னேறி அவற்றைக் கைப்பற்றும் படியும் ரகோஜி பான்ஸ்லே அவர்களுக்குக் கட்டளை யிட்டான்.

தமிழகத்தில் முதல் கருநாடக நவாபான சாதத் உல்லா கான் (1708—1733) ஆட்சிக்குப் பின் அவன் உடன் பிறந் தான் புதல்வன் அலிதோஸ்த்கான் (1733—1740) நவாபா யிருந்தான். தன் தலைநகரை நோக்கி மராத்தியர் படை யெடுப்பதறிந்ததும் அவன் அவர்களைத் தமிழகச் சம வெளிக்கே வராமல் தாமல் செருவுக் கணவாயிலேயே தடுத்து நிறுத்த எண்ணினான். இந் நோக்கத்துடன் தன்னிடத்தி லிருந்த சிறு படையுடன் வேக வேகமாகத் திரட்டிய புதுப் படைகளையும் சேர்த்துக்கொண்டு அவன் தாமல் செருவை நோக்கி விரைந்தான். அவன் மகன் சஃவ்தர் அலி அச்சமயம் தஞ்சையிலிருந்தான். அவனையும் விரைந்து தன் படைக ளுடன் தாமல் செருவுக்கு வந்து தன்னுடன் சேர்ந்துகொள் ளும்படி அவன் தகவல் அனுப்பினான்.

சஃவ்தர் அலி வருவதில் மிகவும் காலம் தாழ்த்தான், ஆகவே மராத்தியப் படைகளை அலிதோஸ்த்கான் தானே தனித்து நின்று போராட வேண்டியதாயிற்று. தாமல் செருவுககணவாயில் மலைகளிடையே மலையடிவாரததில் நடை பெற்ற இப்போரில் தோஸ்த் அலிகானும் அவன் அரசுரிமைக் குரிய மூத்த மைந்தனும் வீரமாகப் பொருது மாண்டனர். மராத்தியர் தங்கு தடையின்றித் தமிழகம் புகுந்து ஆர்க் காட்டை நோக்கி முன்னேறினர். ஆர்க்காட்டையும் அதனைச் சூழ்ந்த பகுதிகளையும் கொள்ளையிட்டுப் பலவகைக் கொடுமை களுக்கு உட்படுத்தினர்.

சஃவ்தர் அலி போர் முடிந்த பின்பே தாமல் செருவுக் களத்துக்கு வநதான். தந்தையும் தமையனும இறந்ததால் இனி தனக்கே அரசுரிமை கிடைக்கக்கூடும் என்று அவன் கருதி னான். ஆனால் அவன் மைத்துனர்களுள் ஒருவனான சந்தா சாகிபின் போட்டிக்கே அவன் மிகவும அஞ்சினான். ஆகவே அவனுக்கு முந்திக்கொண்டு விரைந்து மராட்டியரிடம் பணிய முனைந்தான்.

மராத்தியப் படைத்தலைவன் ரகோஜி பான்ஸ்லே, சஃவ்தக் அலியின் நட்பை இருகையேந்தி ஆர்வத்துடன் வர வேற்றான். இதற்கு மராட்டிய மண்டலத்தில் உருவாகிவந்த சூழ்நிலையே காரணம். சிவாஜியின் வீரமரபில் வந்த மன்ன ரிடமிருந்து மராத்திய பிராமணரான அமைச்சர் அல்லது பேஷ்வாக்களே நெடுநாளாக ஆட்சிக் கயிற்றைத் தமதாக்கி

யிருந்தனர். ஆனால் பாஜிராவ் பேஷ்வாவும் அவன் தம்பி சின்னாஜி அப்பாவும மாண்டபின் புதிய பேஷ்வாவை எதிர்த்துத் தானாக ஆட்சியைக் கைக்கொள்ள வேண்டுமென்று ரகோஜி பான்லே திட்டமிட்டிருந்தான். ஆகவே அவன் சஃவ்தர் அலிக்கு அவன் ஆட்சிப் பகுதியைக் கொடுத்ததுடன் அமையவில்லை. புதிய பேஷ்வாவுக்கு வழக்கமான கொள்ளை வரிகள் செலுத்த வேண்டாமென்றும் தனிப்பட வற்புறுத்திவிட்டுச் சென்றான்.

தென்னாட்டு அரசியலில் நடைபெறத் தொடங்கிய உள்ளுக்கு உள்ளான புதைகபடமான நாடகங்களின் போக்கை இத்தகைய செயல்கள் தெளிவாகக் காட்டுகின்றன. தன் கையே தன் கண்ணைக் குதிதும் நிலைக்குத் தென்னகத் தேசீய அரசியல் வளர்ந்து வந்தது.

கொடுத்தலம் போர் :
சந்தாசாகிபின் மராத்திய மண்டலச் சிறைவாழ்வு 1746

கொடுத்தலம் என்பது திருச்சிராப்பள்ளியிலிருந்து 4 கோசம் (ஏறத்தாழ 12 கல்) தொலைவிலுள்ள ஓர் ஊர். மதுரை அரசி மீனாட்சியை வஞ்சித்த தமிழக வல்லாளகண்டனை இப் போர் தற்காலிகமாகத் தமிழகத்திலிருந்து அகற்றி மராத்தி மண்டலத்தில் கட்டிவைத்தது

சஃவ்தர் அலி மராத்தியர் நேசத்தை நாடியதற்குக் காரணம் அவன் தன் மைத்துனனை அவர்களைக்கொண்டே அழிக்க விரும்பியதுதான். இதில் அவன் வெற்றியடைந்தான். திருச்சிராப்பள்ளியிலிருந்த சந்தாசாகிபின் மீது மராத்தியப் படைகள் திரும்பின. சந்தாசாகிப் திண்டுக்கலிலும் மதுரையிலும் தன் தம்பி படேசாகிபையே தலைவனாக்கியிருந்தான். படைகளைத் திரட்டிக்கொண்டு தன் உதவிக்கு வரும்படி சந்தாசாகிப் அவனுக்கு அவசரச் செய்தியனுப்பினான். ஆனால் இருவர் படைகளையும் கொடுத்தலத்தருகில் மராத்தியப் படைகள் எதிர்த்துத்தாக்கி முறியடித்தன. சந்தாசாகிப் மராத்தியப் படைத்தலைவன் ரகோஜிபான்ஸ்லேயிடம் சிறைப்பட்டான். தம் தமிழக நண்பன் சஃவ்தர் அலிக்கு அவனால் போட்டி ஏற்படாத வண்ணம் அவனை மராத்தியர் தம் மண்டலத்திலேயுள்ள பூனாவுக்கே கொண்டு சென்று சிறைவைத்தனர்.

திருச்சிரபப்பள்ளியின் ஆட்சிப் பொறுப்பு ஊட்டியிலிருந்தாண்டுவந்த மராத்தியத் தலைவன் முராரி ராவிடம் ஒப்படைக்கப்பட்டது. மதுரைநாயக மரபின் ஆட்சியிலிருந்த திருச்சிராப்பள்ளி இங்ஙனம் சந்தாசாகிப் ஆட்சிக்கு மாறி அதன் பின் மராட்டிய ஆட்சிக்கு உட்பட்டது.

ஆம்பூர்ப் போர் 1749

கருநாடக நவாபான சஃவ்தர் அலி (1740—1742) ஆட்சிக்குப்பின் அவன் மகன் முகமது சயீது (1743—1744) ஆட்சியுடன் சாதத் உல்லாகானின் முதல் கருநாடக நவாப் மரபு முடிவுற்றது. புதிய மரபு முதல்வனாக நவாப் சிராஜ் உத் தௌலா முகமது அன்வருதீன் (1741—1749) ஆட்சியுரிமை ஏற்றான்.

இதே சமயத்தில் முதல் நிஜாம் ஆன நிஜாம் உல்முல்க் அசஃவ்ஜா 1748-ல் உலக வாழ்வு நீத்தான்.

நிஜாம் உல்முல்க் அசஃவ் ஜாவின் புதல்வன் நசீர்ஜங் 1741-ல தன் தந்தைக்கெதிராகக் கிளர்ச்சி செய்திருந்தான. அச் சமயம் அசஃவ் ஜாவின் மருமகனான யோலேர் மாகாணத் தலைவன் முதவாசிலகான அவனுக்குப் பேருதவி செய்திருந் தான். இதற்குக் கைமாறாகக் கருநாடக நவாப் ஆட்சிப் பகுதி யைத் தனக்கு அளிப்பதாக அசஃவ்ஜா வாக்களித்திருந்தான் என்று முதவாசில்கான் உரிமை கோரினான். அதைப் பெறும் படி தன் மைந்தன் முசபர் ஜங்கை 20,000 குதிரை வீரருட னும், 50,000 காலாட்படை வீரருடனும் தமிழகத்துக்கு அனுப்பினான். அவனுக்குத் துணையாக தமிழக அனுபவமிக்க சந்தா சாகிபையும் பூனாச் சிறையிலிருந்து விடுவித்து அவ னுடன் அனுபபினான்.

சந்தாசாகிபின் புதல்வன் ரஜ்ஸா அலி இச்சமயம் புகழ் மிக்க பிரஞ்சு ஆட்சித் தலைவன் தியூப்ளேயின் நண்பனாகப் புதுச்சேரியில் தங்கியிருந்தான். தியூப்ளேயிடமிருந்து ஒரு பிரஞ்சுப் படையின் உதவியைப் பெற்று அப்படையுடன் அவன் தந்தையிடம் வந்துசேர்ந்தான்.

வயது சென்ற கருநாடக நவாப் அன்வருதீன் இச் செய் திகள் கேட்டுப் பரபரப் படைந்தான். அச்சமயம் அவன் தமிழகத்தின் தென் பகுதியில் தங்கியிருந்தான். விரைந்து படைகளைத் திரட்டிக்கொண்டு வடதிசை நோக்கி முன்னேறி னான். மூத்தமகன் மஃபூஸ்கானைத் தலை நகரிலேயே இருந்து நகரைக் காக்கும்படி கட்டளையிட்டான். இரண்டாவது அன் புரிமை மகனான முகமது அலியைத் தக்க துணைப்படைகள் திரட்டிக்கொண்டு தன்னுடன் வந்து சேரும்படி ஆணை பிறப் பித்தான். நாஜிப்கான், ஹுசேன்கான் தாஹிர் ஆகிய படைத் தலைவர்களுடன் அவன் முன்னேறினான்.

ஆம்பூர் அருகே நடைபெற்ற போரில் மூதரசன் அன்வருதீன் மாண்டான். அவன் மூத்த புதல்வன் மஃபூஸ் கான் ஆர்க்காட்டைக் கைவிட்டு ஓடி ஹைதராபாத்தில் சென்று தஞ்சமடைந்தான். ஆனால் இரண்டாம் புதல்வனான

மகமது அலி போளூர்ச் சமவெளிப் பக்கமாக விரைந்து தெற்கே பிரிட்டிஷாரின் தளமான செண்ட் டேவிட் கோட்டையை அடைந்தான். இங்கே ராஜா அனந்ததாஸ் என்பவன் துணையால் அவன் பிரிட்டிஷாரிடமிருந்து படைமுகவன் (காப்டன்) ஹோப் என்பவன் தலைமையில் ஒரு பிரிட்டிஷ் படையும், சில பீரங்கிகளும் வெடிமருந்தும் பெற்றுத் திருச்சிராப்பள்ளிக்குச் சென்றான். திருச்சிராப்பள்ளிக் கோட்டையின் பாதுகாப்பைப் படைமுகவன் ஹோப்பிடமே ஒப்படைத்தான். அத்துடன் பல ஆண்டுகளுக்கு முன் அந்நகரைக் கைக்கொண்டு ஆண்டதுபோல் ஆளத்தொடங்கினான்.

திருச்சிராப்பள்ளி நீங்கலாக ஆர்க்காட்டு அரசுப் பகுதி முழுவதும் முசபர்ஜங், சந்தாசாகிப் ஆகியவர்கள் கைப்பட்டன. அவர்கள வெற்றி வீறுடன் ஆர்க்காட்டில் புகுந்தபின் சந்தாசாகிப் ஆர்க்காட்டின் ஆட்சியைக் மேற்கொண்டான். ஏனெனில் முசபர்ஜங் இதற்குள் தன் பேராவாவை நிஜாம் ஆட்சியைக் கைப்பற்றும் அளவுக்கு உயர்த்தினான்.

தியூப்ளேயிடம் செயலாளராக இச்சமயம் இருந்த தமிழகப பெரியோர் ஆனந்தரங்கம்பிள்ளை யாவர். அவர் தமிழ் நாட் குறிப்பேடு, தமிழக வரலாற்றாசிரியர்களால் இன்று பொன்போல் பாராட்டப்படுகிறது. முசபர்ஜங் வெற்றியடைந்தபின் அவருக்கு அவன் வஜ்ஸாரத் விஜய ஆனந்தரங்கராவ் என்ற பட்டமும் கர்நாடக அமீர் என்ற பதவியும் சிவிகை கொடி முதலிய விருதுகளும். செங்கற்பட்டுக் கோட்டைத் தலைமை நிலையும் அளித்துப் பெருமைப்படுத்தினான் என்று அறிகிறோம்.

திருவாதிப் போர் 1750 (ஜூலை 19)

**11 1750 (ஆகஸ்டு 20)**

தந்தை இறந்தது கேட்டு நிஜாம் உல்முல்க் அசஃவ் ஜாவின் புதல்வன் நசீர்ஜங் நிஜாம் தலைநகருக்கு விரைந்தான். ஆனால் தென்னகத்தின் உயிர்ப் போராட்டங்கள் தமிழகத்தைக் களமாகக்கொண்டு விட்டதறிந்து அவன் பெரும் படையுடன் தெற்கே விரைந்தான்.

தென்னக வேந்தர் போராட்டங்களில் தென்னவேந்தரை விட மிகவும் ஈடுபட்ட பெருந்தலைவன் பிரஞ்சு ஆட்சி முதல்வனான தியூப்ளே. தென்னகத்தை மையமாகக்கொண்டு கீழ்திசையில் ஒரு மகபெரும் பிரெஞ்சுப் பேரரசை விரைந்தமைக்க அவன் சிந்தனைக்கோட்டை அமைத்து அதனைச் செயற்கோட்டையாக்க ஷிதிர்விதிர்த்தான். ஆகவே முசபர் ஜங்கும் சந்தாசாகிபும் ஆம்பூர்ப் போருக்குப் பின் தம் முதல் வெற்றியைத் தொடர்ந்து திருச்சிராபபள்ளியை உடனடியாகக் கைப்

பற்றவேண்டுமென்றும், நசீர் ஜங்கின் படைகளை முன்னேற வொட்டாமல் சென்று தடுக்கவேண்டுமென்றும் அவன் வற்புறுத்தினான். ஆனால் அவன் அறிவார்ந்த அரசியல் நல்லுரைகள் அந்நாளைய பிரெஞ்சுத் தாயகத்தின் உள்ளத்தில் ஏறாதது போலவே, கீழ்திசை அரசர் செவிகளிலும் ஏறவில்லை. அவர்கள் தஞ்சை முற்றுகையில் வீண் நேரம் கடத்தினர். செஞ்சி, உடையார் பாளையப் பகுதிகளில் சுற்றித் திரிந்தனர். கொள்ளையிட வாய்ப்புள்ள இடத்தில் அவர்கள் கொள்ளையிட்டனர். கடன் கொடுப்பவரிடத்தில் கடன் வாங்கினர். நிலங்கள், ஆட்சியுரிமைகள், பட்டம் பதவிகள் யாவும் பணம் தருபவருக்கு வாரிவழங்கப்பட்டன.

நசீர் ஜங்கின் படைகள் செங்கமம் கணவாயை அணுகிவிட்டன என்று கேட்டபின்பே அவர்கள் தஞ்சையை விட்டுப் புறப்பட்டனர். இச்சமயம் பிரஞ்சுப் படைகளிடையே ஏற்பட்ட ஒரு பிளவின் காரணமாக, முசபர் ஜங் மன உறுதியிழந்து நசீர் ஜங்கிடம் சரணடைய முற்பட்டான் நசீர் ஜங்கும் அவனை ஆதரித்து மதிப்புடனேயே காவலில் வைத்தான். பிரஞ்சு மக்கள் மதிப்பை இது மிகவும் தறழ்த்தி அவர்கட்குப் பலவீனமும் உண்டு பண்ணிற்று ஆயினும் அறிவார்ந்த செயல் வீர மேதையாகிய தியூப்ளே இச் சமயத்திலும் மனந்தளராமல் புது முயற்சியில் முனைந்தான். வெல்ல முடியாத கோட்டை என்று பெயர் பெற்ற செஞ்சியைப் பிரஞ்சுப் படைத்தலைவன் புஸி எளிதில் தாக்கிக் கைப்பற்றத் தொடங்கினான். பிரஞ்சுக்காரர் மதிப்பை மீண்டும் உச்ச நிலைக்கு உயர்த்த இது உதவிற்று. மற்ற பிரஞ்சுப் படைத் தலைவர்களும் இதே சமயம் வடக்கே மசூலிப் பட்டணத்தையும், தெற்கே திருவாதியையும் கைக்கொண்டு பிரஞ்சுச் செல்வாக்கைப் பரப்பினர்.

திருவாதி, கெடிலம் ஆற்றின் கரையிலுள்ள நகரம். அது பிரஞ்சு மக்கள் கைப்பட்டதறிந்து முகமது அலி 20,000 படை வீரரடங்கிய ஒரு படையுடன் அதை நோக்கிச் சென்றான். அவனுடன் 600 பிரிட்டிஷ் வீரரோடு முகவர் ஹோப்பும் துணை சென்றான்.

1750 ஜூலை 19-ல் நடைபெற்ற முதல் திருவாதிப்போரில் முகமதலி படையையும், பிரிட்டிஷ் படையையும் பிரஞ்சுப் படைகள் ஒருங்கே முறியடித்தன. இத்தோல்வியின் பின் பிரிட்டிஷ் படைகள் முகமதலியைத் தனியே போராடவிட்டு விட்டுத் திரும்பினர். ஆகஸ்டு 20-ல் நடைபெற்ற 2-ம் திருவாதிப்போரில் முகமதலி முன்னிலும் கடுந்தோல்வி கண்டான். அவன் படைகள் சிதறியோடின. அவன் கூடாரங்கள்

எரியூட்டப்பட்டன. அவன் தப்பிப் பிழைப்பதே அரும்பாடாகப் போய்விட்டது.

நசீர் ஜங் செஞ்சிப் பக்கமாக அவனுக்குப் படையுதவுவதாக வாக்களித்திருந்தான். தப்பியோடிய முகமதலி அப்பக்கமாகக்கூட ஓட முடியவில்லை. ஏனெனில் செஞ்சியில் இச்சமயம் பிரஞ்சுப் படைபலம் மேலோங்கியிருந்தது. அவன் பலபடியாகச் சுற்று வழிகளில் மறைந்தோட வேண்டியதாயிற்று.

செப்டம்பர் 11க்குள் செஞ்சி முற்றிலும் பிரஞ்சுக்காரர் வசமாயிற்று.

## செஞ்சிப் போர் அல்லது வெள்ளி மேட்டுப் பேட்டைப் போர் அல்லது புத்தனந்தல் போர் ; 1750 (டிசம்பர் 15)

செஞ்சியருகே நடைபெற்ற இவ் வரலாற்றுப் பெரும் போருக்கு ஒருபெயர் சூட்டுவதிலோ, போர் நடைபெற்ற இடத்தை வரையறுத்துக் காண்பதிலோ வரலாற்றாசிரியர் வேறுபாடுகளும் குழப்பங்களும் அடைகின்றனர். ஆயினும் போர் நிகழ்ந்த இடம் சேற்றுப் பட்டுக்கு 20 கல் தொலைவிலுள்ள தேசூருக்குத் தெற்கே வந்தவாசிக்கு மேற்கே, செஞ்சிக்கு வடக்கே, கிட்டதிதட்டப் புத்தனந்தல் என்ற ஊருக்கு அருகிலுள்ள வெள்ளிமேட்டுப் பேட்டை என்ற இடமாகவே இருக்கவேண்டுமென்று கூறலாம். இப்போர் நடந்த இடத்திலே தியூப்ளே வீர வெற்றி குறித்த பட்டயங்களை உள்ளடக்கம் செய்து அவற்றின்மீது ஒரு பெரிய வெற்றித் தூணும் ஒரு பெரிய வழிப்போக்கர் தங்கல் மாளிகையும் தன் பெயராலேயே தியூப்ளே—ஃபெத்—அபாத் என்ற நகரமும் அமைத்தான் என்று அறிகிறோம். ஆனால் பிரஞ்சு வெற்றி குறித்த இச் சின்னங்களை பிரிட்டிஷ் ஆட்சிக்கு அடிப்படைக் கல் நாட்டிய ராபர்ட் கிளைவ் 1752 மார்ச் 8-10 நாட்களில் அழித் தொழித்து விட்டான். போர் நிகழ்ச்சிக்குரிய இடம் பற்றி இதனாலேயே தலை மயங்க நேர்ந்துள்ளது. ஆனால் அப்பக்கம் இன்னும் இருக்கும் தங்கல் மாளிகை தியூப்ளே கட்டியதே என்று நம்ப இடமுண்டு.

தென்னக மறவரின் உள்ளார்ந்த புறநானூற்று வீரப் பண்பறிந்து காலத்திற்கேற்ற புதுப் பயிற்சி முறை மூலம் அதை மேலை ஏகாதிபத்திய ஆட்சி விரிவுக்குப் பயன்படுத்தும் வழியைக் காட்டிய முதல்வன் தியூப்ளேயே. தேசிய நோக்கமற்ற தென்னக அரசர்களின் போட்டி பூசல்களில் கலந்து அவற்றின் மூலமே மேலை ஏகாதிபத்திய நோக்கத்தை வளர்க்கப் பிரிட்டிஷ் ஆட்சிக்கு வழிவகுத்துக் கொடுத்தவனும் அவனே. எனவே முஸபர் ஜங் சந்தா சாகிப் ஆகியோருக்கு அவன் உதவியளித்து ஊக்கிய பின்பும், அவர்களை

எதிர்த்து நின்ற முகமதலியும், நசீர் ஜங்கும் ஒன்றுபடாமலும் மனமார்ந்த பிரிட்டிஷ் உதவி பெறாமலுமே இருந்தனர். முகமதலி தன் சார்பிலும் நசீர் ஜங்கின் சார்பிலும் உதவி கோரியும் பிரிட்டிஷார் அவனுக்கு மட்டுமே சிறிதளவு உதவியளித்து, நசீர் ஜங்குடன் நேரடி உறவு கொள்ளாமலுமே இருந்தனர். நசீர் ஜங்கும் பெரும் படையுடன் மெல்ல நகர்ந்ததையன்றி எத்தகைய செயலும் ஆற்றவில்லை.

தொடக்கத்திலேயே நசீர் ஜங் செஞ்சியையும் திருவாதியையும் கைப்பற்றிக்கொண்டு விழுப்புரத்தருகே தாவளமிட்டிருந்தான். ஆனால் செஞ்சியும் திருவாதியும பிரஞ்சுக்காரர் கைப்பட்டதென்று கேட்ட பின்பே அவன் போரில் முனைந்தான். அத்துடன் பிரஞ்சுக்காரர் செல்வாக்கு தென்னக அரசுகளிடையே எல்லையற்று வளர்வது கண்டு பிரிட்டிஷாரும் ஓரளவு மனமாற்ற மடைந்து வந்தனர். நசீர் ஜங்கின் படைப்பெருங்கடலின் அளவு கண்டும், அவன் தங்களுக்குக் கரையோர உரிமைகள் வழங்குவதாக ஒத்துக்கொண்ட பின்பும், அவர்கள் ஆதரவு ஆர்வ ஆதரவாகப் பெருகிற்று. அதன் பின்னரே அவர்கள் இணக்கம் பெற்று முகமதலி 6000 குதிரை வீரருடன் நசீர் ஜங்கின் படையுடன் வந்து கலந்து கொண்டான.

நசீர்ஜங்கின் படையணிகள் விழுப்புரத்துக்கும் கோலியனூருக்கும் இடையே தென்வடல் நீளம் 5 கல்லாகவும், கிழக்கு மேற்கு அகலம் மூன்று கல்லாகவும், சுற்றளவு 28 கல்லாகவும் ஆரவாரிக்கும வீரமா கடலாகப் பரந்திருந்ததென்று அறிகிறோம். அதில் மூன்று இலட்சம் படை வீரரும் குதிரை வீரரும், 1300 யானைகளும் 800 பீரங்கிகளும் இருந்தன. தென்னகம் அணிமைக் காலங்களில் கண்டிராத அம் மாபெரும் படை கண்டு தொடக்கத்தில் பிரிட்டிஷார் மலைப்பெய்தினரென்றும், 'ஆ, இதுவா தென்னகத்துச் சுபேதாரின் பதவி மதிப்பு!' என்று வியப்பார்வமுற்றதாகவும் அறிகிறோம். ஆனால் அளவின் பெருமை வீரத்தின் பெருமையோ, திறமையின வலிமையோ ஆகாதென்பதைப் போர்களின் போக்குக் காட்டிற்று.

தொடக்ககாலச் சில்லறை நடவடிக்கைகளிலேயே இக் கடற் பெரும்படையின் அளவு பெரிதும் கரையலாயிற்று. புத்தனந்தல் போருக்குமுன் 60,000 காலாள், 45,000 குதிரை வீரர், 700 யானைகள், 360 பீரங்கிகள் என்ற அளவில் அது குறைந்து விட்டது

ஒரு சில நாட்களுக்குள் 600 பிரிட்டிஷ் வீரருடன் மேஜர் லாரன்ஸும் அப்படையுடன் வந்து கலந்துகொண்டான்.

ஏலங்காட்டுச் சமவெளியை அவர்கள் அடைந்தபோது வந்தவாசிக் கோட்டைக் காவலன் குலாம் தகியா கான் வந்து அப்படையுடன் கலந்துகொண்டான். அவன் புதல்வன் ஏற்கெனவே நசீர் ஜங்கிடம் பணி பெற்றமர்ந்திருந்தான்.

செப்டம்பரில் விழுப்புரத்தருகே யிருந்து புறப்பட்ட பெரும்படை டிசம்பர் மாதத்துக்குள் செஞ்சிக்கு வடகிழக்கே யுள்ள வெள்ளிமேட்டுப் பேட்டையை அணுகின.

சுபேதார் நசீர்ஜங்குடன் இருந்த கோமகக்கள் (அமீர்கள்) 22 பேர் என்று அறிகிறோம். அவர்களியே நண்பர் சிலர். நட்பின் இனிய போர்வையினுள் நச்சுப் பகைமை பேணியவரும் பலர் இருந்தனர். அந்த உட்பகைகளின் தலைவன் கர்நூல் நவாபான ஹிம்மத் பகதூர் என்பவன். அவன் செஞ்சியிலுள்ள பிரஞ்சுப் படைத் தலைவன் லாதூரஷுக்குப் போர் நடத்துவதற்கு வாய்ப்பான நேரம், இடம், சூழல் ஆகியவை பற்றிய தகவல்களையும் தன் சதித் திட்டங்களையும் தெரிவித்திருந்தான். முகமதலி முதலிய மற்ற நண்பர்கள் எச்சரிப்புரையைக் கேளாமல் அவனிடம் பெருநட்புக் கொண்டிருந்த நசீர்கான் போர்க்களத்தில் அவனருகிலேயே சென்று நின்றான். நல்லதொரு தறுவாயில் ஹிம்மத்கான் கைத்துப்பாக்கியால் அவனைச் சுட்டுக் கொன்றான். சிறிது தொலைவில் நின்றிருந்த நிஜாமின் உடன் பிறந்தான் சலாபத் ஜங்கும், பஸாலத் ஜங், நிஜாம் அலிகான் முதலிய நண்பர்களும் உதவிக்கு ஓடோடியும் வந்தனராலும் நிஜாமின் உயிரைக் காக்க முடியவில்லை.

படைகள் இக்கோர நிகழ்ச்சியால் வெருண்டு சிதறியோடியன. முகமதலி தலைமறைவாகத் தேசூர், பெண்ணாத்தூர் முதலிய ஊர்கள் வழியாகத் திருச்சிராப்பள்ளிக்கே ஓடினான்.

கிளைவ் அருந்திறற்பணி: ஆர்க்காட்டு முற்றுகை *1751*
ஆரணிப் போர், காவேரிப்பாக்கம் போர் *1752*
பாகூர்ப் போர் *1753*

கடல் கடந்த பிரிட்டிஷ் தேசீய வாழ்வின் மறுமலர்ச்சிக்குரிய ஒரு வீர காவியம் கிளைவின் ஆர்க்காட்டு முற்றுகை. தேசிய வரலாற்றெழுத்தாளனான மெக்காலே சற்று மிகைபட ஏற்றத் தாழ்வுகளைப் பெருக்கி வருணித்தாலும், அதை ஓர் உயிரோவியமாக ஆங்கில மொழியில் தீட்டிக் காட்டியுள்ளான். அதே சமயம் கடல் கடந்த பிரஞ்சுத் தேசீயத்தைப் போல தமிழரின் உள்ளார்ந்த பண்புகளைக் காணும் திறம் பிரிட்டிஷ் தேசியத்துக்கு இல்லை என்பதையும் அதே சித்திரம்

காட்டுகிறது. ஏனெனில் தமிழர் வீரராகவோ, விடுதலை யுணர்வும் தன் மதிபபுணர்வும் உடைய மாந்தராகவோ காட்டப்பட வில்லை. பிரிட்டிஷ் தேசிய ஏகாதிபத்தியத்தின் அடிமைகளாக மட்டுமே காட்டப்பட்டுள்ளனர். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் பயன்படுத்திய அந்நாளைய தமிழரின் ஒரு குறைபாடு இது என்பதிலும், அது இக்குறைபாட்டை வளர்க்க என்றும் பாடுபட்டே வந்துள்ளது என்பதும் உண்மை ஆனால் தமிழகத்தை மட்டுமின்றிக் கலைவளமலிந்த வங்கத்தையும் வீரம் செறிந்த மராத்திய இனத்தையும் மெக்காலே இதே வண்ணத்திலதான் தீட்ட முடிந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

தென்னக அரசியலில் ஒற்றுமை கெட்டு. தேசிய ஆர்வம் கெட்டு, வழிவகை தெரியாது திகைத்து நின்ற அந்நாளைய பிரிட்டிஷாருக்குக் கிளைவ், திடுமென ஒரு மின்னொளியாகத் தோன்றி, கண்ணுயிருந்து கண்டு, பிறருக்கும் வழிகாட்டினான். திருச்சிராப்பள்ளியில் சந்தா சாகிபனுல் முற்றுகையிடப்பட்டு மறுகிய முகமதலிக்கு உதவச் சிறந்த வழி ஆர்க்காட்டை முற்றுகையிடுவதுதான என்று கூறி அவன் அதனைத் தானே செய்து முடித்தான். இதனால் திருச்சிராப்பள்ளி நெருக்கடி தளர்ந்தது. 50 நாள் எதிர் முற்றுகையைத் தமிழ் வீரர் உதவியுடன் கிளைவும் அவன் பிரிட்டிஷ் வீரரும் வெற்றிகரமாக முடித்துக் கீழ்திசைப் பிரிட்டிஷ் பேராட்சியின் அடித்தளக் கல்லைக் கானான்றினர்

ஆர்க்காட்டு முற்றுகையைப் பின்பற்றி ஆரணியிலும் காவேரிப்பாக்கத்திலும் பிரிட்டிஷாருக்கு வெற்றிகள் கிட்டின. லாரன்சும், கிளைவும் தளர்ச்சியுற்ற திருச்சிராப்பள்ளி முற்றுகை கடந்து முகமதலிக்கு உணவும் படையுதவியும் அளிக்க முடிந்தது. முற்றுகை முறிவுற்றபின் முகமதலிக்கு ஆதரவாளனுகச் செயலாற்றிய தஞ்சையரசன் சந்தா சாகிபைச் சிறைப்பிடித்துக் கொலை செய்தான்.

தோல்விகளிலே தளராது நின்று வெற்றி காணும் திறமுடைய தியூப்ளே இப்போது பிரிட்டிஷாரின் நண்பரிடையே பூசல்விளைத்தும், மராத்தியரைப் படையெடுக்கத் தூண்டியும், புதிய வழிகளில் போரின் போக்கைத் திருப்ப முயன்றுன். ஆயினும் 1753-ல் பிரஞ்சுத் தலைவன் தேகர்ழானைப் (Dekerzean) பாகூர்ப் போரில் வென்றதன் மூலம் பிரஞ்சு வலிமை நிலையாகத் தளர்வுறத் தொடங்கிற்று

இநத ஆண்டிலேயே அரசியல் சூழ்ச்சிகளில் வல்ல பிரஞ்சுத் தலைவன் புஸி, வட சர்க்கார் என்ற கரையோர ஆந்திரப் பகுதிகளின் வரிவருமான உரிமையை நிஜாமிட

மிருந்து பெற்று பிரஞ்சு மதிப்புத் திடுமென முற்றிலும் சரியாமல் காத்தான்.

வந்தவாசிப் போர் 1760 :

கீழ்திசையில் மேல் திசை ஏகாதிபத்தியம் நிலை கொள்வதற்கு உகந்த பண்புகளில் ஒன்று கடலாட்சியேயாகும். இதனைக் கண்டுணர்வதிலும் பிரிட்டிஷாருக்குப் பிரஞ்சுத் தலைவர்களே வழிகாட்டியாய் இருந்தனர். முதல் பிரஞ்சு ஆட்சி முதல்வன் லாபோர்டனாய் அத்தகைய கடற்படையை அருமுயற்சியால் படைத்துருவாக்கியிருந்தான். ஆனால் ஆங்கிலேயரிடம் தொடக்கத்தில் இருந்ததைவிட பிரஞ்சுகாரரிடம் மிகுதியான ஒற்றுமைக்கேடும், போட்டி பொறாமை, பூசல்களும் இருந்ததாலும் தனி மனிதர் கடல்கடந்த தேசிய நோக்கு பிரஞ்சு மக்களிடையே பரவாததாலும், தென்னகத்தில் இதன் பயனைப் பிரிட்டிஷாரே கைக்கொள்ள முடிந்தது.

1758-ல் பிரஞ்சு ஆட்சியாளர் கரையிலும் கடலிலும் கவிந்து கீழ்திசையில் சென்னையையே முற்றுகையிட்டனர். ஆனால் கடல் வெற்றிகளை பிரஞ்சுக்காரர் சரிவரப் பயன்படுத்தாததால் பிரிட்டிஷ் கடற்படை சென்னை முற்றுகை தகர்த்ததுடன் அமையாது, எதிர் தாக்குதலை நடத்த முடிந்தது அச்சமயம் வங்கத்திலே ஆட்சியாளனாயிருந்த கிளைவ் தென்னகத்தின் சூழலறிந்து பிரிட்டிஷ் பெரும் படைத்தலைவனான சர் அயர்கூட்டை உடனே சென்னைக்கு அனுப்பினான். வரும் வழியிலேயே வந்தவாசிக் கருகில் 1760-ல் அவன் பிரஞ்சுப் படைத்தலைவன் புஸியுடன் போரிட்டு பெரும் புகழ் வெற்றி நாட்டினான் இதில் சிறைப்பட்ட புஸி பிரான்ஸுக்கு அனுப்பப்பட்டாலும் திரும்ப கீழ்திசை மீளவில்லை. தாய் நாட்டிலேயே. அவன் அருமையை அறிய முடியாத ஒரு முதிராத் தேசியத்தால் அவன் தூக்கிலிடப்பட்டு மாண்டான்.

சென்னை முற்றுகைக்கு மாறாக, இப்போரின் பின் பாண்டிச்சேரியே முற்றுகையிட்டுப் பிடிக்கப்பட்டது. போர் முடிவில் அது திருப்பித் தரப்பட்டாலும், அது என்றும் திரும்ப வலுப்பெற முடியவில்லை. ஏனெனில் பிரிட்டிஷார் பிடித்த சமயம் அதன் கோட்டை கொத்தளங்கள் தகர்க்கப்பட்டன. கிளைவின் தூண்டுதலால் போர் முடிவில் ஏற்பட்ட உடன் படிக்கை, கோட்டை கட்டுதல், படைகள் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு ஒரு தடையிட்டது.

செஞ்சி வீழ்ச்சி 1761 ·

செஞ்சிக் கோட்டையின் பிரஞ்சுக் காவலாளன் மாக் கிரரர் 1761-ல் செஞ்சிக் கோட்டையை இழக்க வேண்டிய

தாயிற்று. ஐந்து மாத முற்றுகைக்குள் கையூட்டு, உட்பிளவு ஆகியவற்றின் உதவியால் பிரிட்டிஷ் படைத்தலைவன் படைமுகவன் ஸ்மித் செஞ்சியைக் கைப்பற்றினான்.

வரலாற்றுப் பெருமைமிக்க செஞ்சி, கீழ்த்திசையின் திராய் என மேலை உலக இலக்கியப் புகழ்பெற்ற செஞ்சிக் கோட்டை—ஒரு நாளில் புகழுச்சி யடைந்த தேசிங்கு ராஜனின் வீரவரலாறு கண்ட தமிழர் புரிசை—பிரிட்டிஷார் கைப்பட்ட அன்றே அதன் பெருமையை முற்றிலும் இழந்தது. இன்று அது பழமையார்வலர், கலையார்வலர் காட்சிப் பொருளாக மட்டுமே நிலவுகிறது.

செஞ்சியின் பழமை எல்லை நமக்கு வந்து எட்டவில்லை—இடைக்காலத்தில் அது அடைந்த பெருமைகூட இன்று நிலவவில்லை. புதிய தமிழகத்தின் அறிவே—தேசியப் புத்துணர்வே கலையார்வம் கடந்த புது வாழ்வை அதற்கு அளிக்கக்கூடும். புதிய தேசீயத்துக்கே இது இன்றியமையாத தேவையாகும். ஏனெனில் செஞ்சி தமிழகத்தின் தலைசிறந்த கோட்டையாயினும் ஒரே கோட்டையல்ல. தூங்கெயிலும், கானப் பேரெயிலும் கண்ட பண்டைத் தமிழகத்தின் கோட்டை மரபில் வந்த பல கோட்டைகளில் அது ஒன்று

அயலாட்சியாளர் இத்தகைய கோட்டைகளை நாட்டு ஒற்றுமைக்குக் கேடாகக் கொள்ளலாம். நாட்டுத் தேசியத்திலே ஏகாதிபத்தியப் பண்புடைய வலிமைத் தேசியம் அதை வெறுக்கலாம். ஆனால் தமிழர் பண்டைக் குடியாட்சி மரபு பரப்பு வலிமையையும், சமத்துவத்தையும் பேண இத்தகைய கோட்டை வாழ்வுகள் புது முறையில் பெரும் பயன் தருவது ஆகும். நாட்டுப்புற வாழ்வை அழித்து வாழும் தற்கால நகரங்களைப்போலன்றி, அவை அதற்குரிய முதுகெலும்பாகவும், வளர்ப்புப் பண்ணைகளாகவும் விளங்குவது உறுதி.

## 11. தேசீய வாழ்வும் புது மலர்ச்சியும்

'எல்லாப் பொருளும் தோற்றியபடியே ஒடுங்கும், ஒடுங்கியபடியே தோற்றும்' என்பது அறிவுத் துறைச் சமய வாணர் கொண்டுள்ள கோட்பாடு தமிழ்த் தேசீய வாழ்வின் வளர்ச்சி பற்றிய மட்டில் இது பெரிதும் வாய்மையுரையே யாகும். அது ஓயாது அலை எதிர்அலையாக, அகத் தேசீயம் அல்லது தமிழகத் தேசீய எல்லையிலிருந்து, அது கடந்த பலபடி உலகத் தேசீயங்களாகவும்; அதே சமயம் புறத் தேசீயம் அல்லது தமிழகம் கடந்த தேசீய எல்லையிலிருந்து அகத் தேசியம் அல்லது தமிழகத் தேசியமாகவும் மாறி மாறி வளர்ந்து கொண்டே வந்துள்ளது. ஒவ்வோர் அலை எதிர்அலையும் ஒரு மலர்ச்சியாக மறுமலர்ச்சி, புதுமலர்ச்சியாக, அது என்றும் தோன்றாத, என்றும் முடிவுறாத ஒரே எல்லையற்ற வளர்ச்சியாக நிலவி வந்துள்ளது. திருகு வளையம்போல், தோன்றிய இடத்துக்கே மீண்டும் மீண்டும் வரினும் ஒவ்வொரு சுற்றிலும் அது ஒரு படி உயர்ந்துகொண்டே செல்லும் வளர்ச்சியாக இயங்குகின்றது.

தேசீயக் கண்ணோட்டத்துடன் பார்ப்பவருக்கு, இது தமிழகத் தேசியத்துக்கு மட்டும் உரிய தனிச்சிறப்பல்ல என்பது விளங்கும். எல்லா ஆக்கத் தேசியங்களின் இயல்பும் பண்பும் இதுதான் இந்த இயல்பிலும் பண்பிலும் மாறுபட்ட அல்லது குன்றிய இனங்கள் எவ்வளவு வளர்ச்சி பெறினும் 'உயிர் வாழ்வு' அதாவது இடையறா வாழ்வு பெறமாட்டா. மறந்துபட்ட சிந்துவெளி, சுமேரிய, சால்டிய, எகிப்திய நாகரிகங்களும், புகழ்மிக்க கிரேக்க, உரோம, ஐஸ்லாந்திய, மய, இங்கா நாகரிகங்களும் இவ்விருதிசைப் பண்புகளைப் பெறாது. தனி வாழ்வோ பொது வாழ்வோ மட்டும் வாழ்ந்த தனாலேயே அழிவுற்றன.

தமிழகத்துக்கே உரிய உண்மைத் தனிச் சிறப்பை இது சுட்டிக் காட்டுகிறது. பல காலங்களில் அது தனி வாழ்விலோ பொது வாழ்விலோ தேங்குவதாகவோ, வளர்ச்சி தடைப்படுவதாகவோ தேய்வதாகவோ, தோற்றினாலும், வரலாற்றுக் கண்ணுடன் ஆழ்ந்து நோக்குவோர்க்கு அவையாவும் அலைமாற்றங்கள் அல்லது எல்லை மாற்றங்கள் அல்லது திசை மாற்றங்களின் மயங்கிய தோற்றங்களே என்பது தெரிய வரும்.

இவ் வகையிலேயே சோழப்பெரும் பேரரசுக்குப் பிற்பட்ட தமிழகத்தின் பெரு வீழ்ச்சியை நாம் தேசிய முறையில் ஒரு வளர்ச்சிக் கூறாக உணர முடிகிறது

சங்க காலத்தின் மிகப் பெருங்குறை ஒன்று உண்டு. அது பண்பில் மிக அகன்றதாயினும் எல்லையில் மிகமிகக் குறுகியது. அந்நாளில் தமிழர் தம் நில எல்லைகடந்து விரிவுறுவதற்கு மாறாக, தம் எல்லையிலேயே கொடுந்தமிழ் நிலம் விலக்கிச் செந்தமிழ் நிலம் குறுக்க முற்பட்டனர். இதன் சுவட்டை அந்நாளைய வாழ்விலே காணலாம். தமிழர் நாகரிகத்துடன் ஒத்த நாகரிகங்களை நாம் அக் காலத்தில் தேடினால், அணிமையில் காணமுடியாது நில எல்லை அணவியிருந்த வடதிசையில் பரவியதைவிட, அது கடல் கடந்து தொலை நாடுகளில் தான் மிகுதி பரவிற்று.

இக்கேட்டின் பயனை, படிப்படியாகத் தமிழக எல்லைக் குறுக்கத்தை, உள் வருந்தோறும் படிப் படியாகச் செறிந்த அடிமைத்தனத்தை, உள் வீட்டுப் போட்டி புழுக்கங்களை நாம் தமிழக வாழ்விலும் வரலாற்றிலும் இன்றளவும் காண்கிறோம். இவற்றை நம்மால் எளிதில் விளக்க முடியவில்லை. ஏனெனில் இவை நம் தனிப்பட்ட குறைபாடுகளல்ல—நம் காலக் குறைபாடுகள் கூட அல்ல. நம் மறுமலர்ச்சியாளர் உச்சிமேற்கொண்டு போற்றும் சங்க காலத்திலிருந்து—தொல்காப்பியர் காலத்திலிருந்து வந்த நம் ஆழ்ந்த இனக்குறைபாடு ஆகும். புதுக் குறைபாடுகளை நீக்குமளவு எளிதாக நம்மால் நம குருதியினுள்ளும், நாடி நரம்புகளுள்ளும், கருவக அணுக்களினுள்ளும் தோய்ந்த இத்தகைய குறைபாடுகளை அகற்ற முடியாது. வரலாற்று நோக்கோடியைந்த உலகநாகரிக அறிவே-புதுமலர்ச்சித் தேசியமே இவற்றைப் படிப் படியாக வேனும் அகற்ற நமக்கு வழிகாட்ட முடியும்.

பண்புத் தளர்வு: உறுதிச் செறிவு

தமிழினத்தினும் பண்பாட்டில் குறைந்த இனங்கள்—சில சமயம் தமிழினத்திலேயே பண்பில் பிற்பட்ட கிளையினங்கள்-தமிழகத்துடன் கொண்டுள்ள கூட்டுறவு இவ்வகையிலேயே தமிழினத்துக்குப் பேருதவியாய் இயங்கி வந்துள்ளது அவற்றின் குறைபாடுகள் தமிழர் நற்பண்புகளின் செறிவைக் குறைத்தது உண்மையே. ஆனால் செறிவிற் குறைந்த பண்பு, எல்லையில் விரிவுற்றது. அதன் மொத்த ஆற்றல் அழியவில்லை. அதுமட்டுமன்று, பண்பில் உயர்ந்த இனத்தின் குறைபாட்டைப் பண்பில் தாழ்ந்த இனங்கள் நிறைவுபடுத்த முடியும். ஏனெனில் 'உயர்ந்த' 'தாழ்ந்த' என்ற சொற்கள்; தற்பற்று, இனபற்றுக் காரணமாக மனிதன் வகுத்துக் கொண்ட சொற்களே. அவை நாம் விரும்புகிற அல்லது வெறுக்கிற, வளர்த்துள்ள அல்லது வளர்க்க வேண்டிய வேறுபாடுகளை உணர்ச்சி வசமாகக் குறிப்பவைகளே.

இதனை நாம் ஓர் உவமைமூலம் விளக்கலாம்.

நெடியவனுக்கு எட்டும் பொருள்கள் குறியவனுக்கு எட்டாதிருக்கக்கூடும். ஆனால் குறியவன் நுழையும் இடங்களில் நெடியவன் வளைந்து கொடுத்தே நுழையவேண்டும்.

இயற்கையில், வரலாற்றில், பண்பாட்டில் உயர்வு தாழ்வுகளாகத் தோற்றுவன வெல்லாம், உண்மையான உயர்வு தாழ்வுகளல்ல. சில சமயம் ஆக்கப் பண்பாகவும், சில சமயம் அழிவுப் பண்பாகவும் மாறி மாறிவரும் திசை மாறுபாடுகளே அவை என்பதை இது உணர்த்தும்.

பண்புகளிலேகூட, இயல்பாக அழிவுப் பண்பு என்றும் ஆக்கப் பண்பு என்றும் வேறு வேறு கிடையாது. நம் சூழலில் அழிவும் ஆக்கமும் தூண்டும்போதே அவற்றை நாம் அழிவுப் பண்புகள், ஆக்கப் பண்புகள் என்கிறோம் எடுத்துக் காட்டாக, சங்ககாலத் தமிழரால் பண்பற்றவர் என்று கருதப் பட்ட களப்பிரர் வரவே சங்ககால இறுதிப் பகுதியில் தமிழரிடம் காணப்படாத ஓர் உறுதிப்பாட்டை இடைக்காலத் தமிழருக்கு அளித்திருந்தது. இது முற்றிலும் அயற் பண்பல்ல. தமிழகத்திலேயே முன்னும் பின்னும் இன்றளவுகூட உலகமெங்கும்-எயினர், வேடர், குறவர் ஆகியவரிடம் காணப் படும் பண்பே. ஆனால் தமிழகம் வளர்த்தபண்பு தமிழின முழுவதும் பரவாமலிருந்ததால், பண்புகளில் வேறுபாட்டுத் தொலை மிகுந்தது. தேசிய வாழ்வில் உயர் தாழ்வு எல்லை அல்லது வேறுபாட்டைப் பெருக்குந்தோறும், தேசிய வாழ்வின் வலுக் குறைவது உறுதி சங்க காலத்துக்குப் பின் ஏற்பட்ட புறவீழ்ச்சி இவ்வகையில் அகநிலைச் சமத்துவத்தையும் உறுதிப் பாட்டையும் எல்லை விரிவையும் நோக்கிய இரு வகைப்பட்ட வளர்ச்சியின் மறுவடிவமேயாகும்.

அரசியல் துறையிலேயே நாம் இந்த உறுதிப்பாட்டின் வளர்ச்சியையும் ஒற்றுமையின் வலுவையும் தெளிவாகக் காணலாம். சங்ககால அரசியல் போட்டிகளில் எல்லாம் தமிழர் தமிழருடன் நடத்திய போட்டிகளே முனைப்பானவை. இடைக்காலப் பாண்டியரிடத்தும் பல்லவரிடத்தும் நாம் காணும் பண்பு இதுவல்ல, தமிழர் பிற தமிழினத்தவருடன் நடத்தும் போட்டியாக அது மாறிற்று, எல்லை விரிவுற்றது. இது தென்னக ஒற்றுமை பேணவிட்டாலும் தமிழக ஒற்றுமையைக் கட்டாயம் வளர்த்தது, வளர்க்க உதவிற்று,

சங்ககாலமும் இடைப்பட்ட பாண்டிய பல்லவ காலமும் காணாத ஒரு வளர்ச்சியைச் சோழப் பெரும் பேரரசு கண்டெய்திற்று. போட்டி தமிழனுக்கும் தமிழனுக்கும் என்ற எல்லை கடந்து, தமிழனுக்கும் தமிழினத்துக்கும் என்ற எல்லை கூடத்

தாண்டித் தமிழனுக்கும் உலகத்துக்கும் என அந்நாளில் விரிவுற்றது.

சோழப் பெரும் பேரரசு தாண்டி இவ் வெல்லை வளர்ச்சியோ, போட்டி வளர்ச்சியோ இன்னும் செல்லவில்லை. இதன் காரணங்களே தமிழரால் ஆழ்ந்து சிந்தித்தற்குரியன.

இடைக்காலம் வளர்த்த இரண்டு பண்புகள்

சங்கால இறுதியிலிருந்து தோன்றி இடைக்காலத்தில் இரண்டு பண்புகள் வளர்ந்தன. ஒன்று அழிவுப் பண்பு. இன்றளவும் கீழ்த்திசையை அடிமைத்திசையாக்கிய பண்பும், மேல் திசையைக்கூட நெடுநாள் பாதித்து வந்துள்ள பண்பும் இதுவே. மற்றது ஆக்கப்பண்பு. இன்றளவும் கீழ்திசை வாழ்வில் மலர்ச்சி யூட்டி வரும் பண்பு இது.

தமிழரின் தமிழகம் கடந்த வாழ்வில், நல்லகாலமாக அவர்கள் தம் தாய்மொழியைப் பரப்பி மற்ற மொழியாளர் மீது அயல்மொழி ஆட்சி சூழவில்லை. ஆனால் இதனினும் கேடான ஒரு நிலையைத் தமிழர் உலகிலேயே பரப்பினர். உலகத் தாய்மொழிகள் யாவற்றையும் கொடுந்தமிழ் நிலையில் வைத்து மதித்து, கொடுந்தமிழ் நிலையிலேயே பண்படாப் பேச்சு மொழிகள் (சமஸ்கிருத வழக்கில் பாகதங்கள்) ஆக்கி, செந்தமிழோடொத்த உயர்மொழி (வடதிசை வழக்கில், 'சமஸ்கிருதம்') வகுத்து அதை உலகில் பரப்பினர். கீழ்திசை இஸ்லாமிய நாடுகள் இதனைப் பின்பற்றியே முதலில் அரபையும், பின் அரபு பாரசீக மொழிகளையும் உயர்மொழிகளாகக் கொண்டு, தாய்மொழி வாழ்வை நெடுங்காலம் தடுத்து நிறுத்தின. மேல் திசையிலும் நெடுநாள் இலத்தீன், கிரேக்க மொழிகள் இவ்வகையில் பயன்படுத்தப்பட்டன. இன்றுகூட, ஆங்கிலம் முதலிய மேல் திசை மொழிகளும், இந்தி போன்ற கீழ்திசை மொழிகளும் இத்தகைய 'வழக்கிறந்துபட்ட' மொழிகளின் போக்கை மேற்கொண்டு வருவது காண்கிறோம். இச்செயலால் உலக வாழ்வில் அல்லல் பெருகுவது மட்டுமல்ல, வருந்தீங்கு. அப்பொது மொழிகளும் வழக்கிறந்து படவே இடமேற்படும். இதை இந் நாளைய உலக ஆட்சி வகுப்பினரோ, அவ் வகுப்புக்கு அடிமைப்பட்ட அறிஞரோ காணத் தவறுகின்றனர்.

இவ் வழிவுப்பண்புக்கு எதிராக இடைக்காலம் வளர்த்த ஆக்கப்பண்பு பக்தி இயக்கமே. இது சமயத்துறையில் மக்கள் வாழ்வும் உணர்ச்சியும் அளாவி வாழ்க்கைச் சமயத்துடனும் சமயத்தை வாழ்வுடனும் இணைத்தது. இவ்வாக்கப்பண்பே கீழ்திசை வாழ்வு முற்றிலும் கெடாமல் தடுத்தாட்கொண்ட பண்பு ஆகும். ஏனெனில் பிற்பட்ட பல்லவர் காலத்திலிருந்தே

இது தமிழகத்தில் மேற் கூறப்பட்ட அழிவுப்பண்பின் செயலைத் தளர்த்தத் தொடங்கிவிட்டது. தென்னக வாழ்வி லும், அது கடந்து வட திசையிலும் சோழப் பெரும் பேரரசர் காலத்தில் இந்த ஆக்கப்பண்பு அழிவுப்பண்பை வென்று தாய்மொழி வாழ்வில் எங்கும் புதுமலர்ச்சி ஊக்கிற்று.

சோழப் பெரும் பேரரசுக் காலத்துக்குப் பின் தமிழகம் கண்ட படுவீழ்ச்சி சங்காலத்துக்குப்பின் ஏற்பட்ட வீழ்ச்சி யிலும் மாபெரிது என்பதைப் பலரும் எளிதில் காண்பர். ஆனால் இங்கே வீழ்ச்சியின் அளவு உண்மையில் எல்லை விரிவின் அளவை நோக்கப் பெரிதன்று என்னலாம். இமய எல்லைவரை தமிழகப் பண்பாடும் நாகரிகமும் பரவுவது என்பது உண்மையில் அதன் உலகளாவிய பரப்பினும் அருமையில் குறைந்ததல்ல. ஏனெனில் உலகின் தலைசிறந்த ஆக்கப் பண்புகளின் சேமப் பண்ணையான தமிழகம் இந்திய மாநிலத்திலும் கீழ்திசையிலும் ஒரு கோடியிலிருந்து ஒளிபரப் புகிறதென்றால், அதன் மறு கோடியிலிருந்து உலகின் கடைப் பட்ட அழிவுப் பண்புகளின் சேமப்பண்ணையாக, வடமேற்கில் அயலினக் கலப்பு ஓயாது வளர்ந்து உலகில் அரையிருள் பரப்பி ஒளி குறைத்துக் கொண்டே வந்திருக்கிறது. வடமேற் கெல்லை கடந்து அதற்கு வடக்கே நாகரிகமும் பண்பும் பரவும் நாளே மாநிலவாழ்வு சீர்படும் நாளாகும். ஆனால் இன்றும் அவ் வடமேற்கடுத்த பகுதியே மனித நாகரிகமையங்கள் அனைத்திலிருந்தும் நெடுந்தொலை விலகிய பகுதியாய் உள்ளது. வடதிசைப் புதுப் பேரினமான இரஷ்ய இனமலர்ச்சி கூட இப் பகுதியை இன்னும் முற்றிலும் ஆக்கப் பண்புடையதாக்கி விடவில்லை—விரைவிலே ஆக்கும் என்று மட்டும்தான் நம்மால் நம்ப முடியும், விழைய முடியும்

உலகில் தமிழகம் தன் நீடித்த வாழ்வில் கண்ட அனுபவப் பண்புகளை, தமிழகம் வரலாறும் பண்பாடும் உணர்த்தும் பண்புகளை உலகளாவ வளர்த்துவரும் காரணத்தினாலும், தமிழரிடம் குன்றிவிட்ட அல்லது குறைபாடாக வளர்ந்து விட்ட இனக்குறைப் பண்புகளை உலகளாவிய அடிமை வாழ் விலேயே அதுபெற்றுவருவதனாலுமே, சோழப் பெரும்பேர ரசினை யடுத்து பிற்காலமும் நம்காலமும் தமிழகத்தின் வீழ்ச் சிக்காலமாக, அடிமைக் காலமாகத் தோன்றுகின்றன. மெய்ம் மையில் இந்த அடிமைக் காலங்களிலேயே தமிழகம் தன் கருவில் தன் புது மலர்ச்சி விதையை மட்டுமன்றி, உலகின் புது மலர்ச்சி விதையையும் வளர்த்து வருகிறது என்னலாம்.

## அகஅலை: புறஅலை

தமிழகத்தின் நாகரிகத் தொடக்கம் தொடக்கக்கால மனித நாகரிகமே. அதன் நாகரிக வளர்ச்சி பெரிதும் உலக

நாகரிக வளர்ச்சியே. ஆனால் தமிழர் பேச்சு முறையில்தான்—தமிழகத்திலிருந்து காணும் கண்ணோட்டத்தில்தான் இது முற்றிலும் தமிழகத்தினின்று பரவிய வளர்ச்சியாகும். இதனோடொப்ப உலகின் புறக்கோடிகளிலிருந்து தமிழகம் நோக்கி வளரும் வளர்ச்சிகளும் உண்டு. பண்பில் மிகுந்தோறும் உறுதியில் குன்றிய தமிழகம், பண்பை உலகளாவப் பரவலாக்கி உலகளாவிய உறுதியை மீட்டும் பெற்று வந்துள்ளது. இப்பிற் பகுதி வளர்ச்சியே சோழப் பெரும் பேரரசுக் காலத்திலிருந்து' நம்காலம்வரை தளர்ச்சியினூடாகக் காணப்படும் வளர்ச்சியாகும்.

சங்ககாலம் வரை தமிழகம் தன் பண்பை உலகப்பண்பாக விரிவுறுத்திற்று. இது அக அலைக்காலம். அக அலை புற நோக்கிச் சென்று விரிவுற்றது. இடைக்காலத்திலும் சோழப் பெரும் பேரரசுக் காலத்திலும் அக அலை புறத்தும், புற அலை அகத்தும் ஒருங்கே ஒழுக்கெதிர் ஒழுங்காகப் பின்னிப் பாய்ந்தன. இது ஈரலைக்காலம். சோழப் பெரும் பேரரசர் காலத்திலிருந்து நம் காலம்வரை புற அலைகளே பெரிதும் அகநோக்கி, தமிழகநோக்கிப் பாய்ந்தன. இது புற அலைக் காலம். புறநின்று தமிழகநோக்கிய இவ்வலைகள் பண்பலைகளல்ல—பண்படிப்படையில் நோக்கினால் அவை வளர்ச்சிப் பண்புகளும் அல்ல. ஆனால் அவை தமிழகத்துக்கு உறுதிப்பாடு அளிக்கும் அலைகள். அம் முறையிலேயே அவை தமிழகத் தேசிய மறுமலர்ச்சிக்கும் உறுதுணைகளாகியுள்ளன. அதனுடன் தமிழகத்துக்கு உள்ளே நிலவும் உயர்வு தாழ்வு தமிழகத்தேசியத்துக்கு வலுக்குறைவாவதுபோல, உலகில் தமிழக மடுத்துள்ள நாடுகள், தொலை நாடுகள் ஆகியவற்றினிடையே சோழப் பெரும் பேரரசுக்காலம்வரை நிலவிய பண்பாட்டு வேற்றுமையும், செல்வநிலை வேறுபாடும், உலகவாழ்விற்கு வலுக்குறைவாய் இயங்கின. தமிழகத்தின் தொல் பழங்காலக் கடல் கடந்த வாழ்வின் மறுமலர்ச்சியாக மேல் திசையில் படிப்படியாக எழுந்துள்ள இஸ்லாமிய நாகரிக எழுச்சி, தென் ஐரோப்பிய நாகரிக கலை வாணிக மறுமலர்ச்சி, தற்கால மேலை ஐரோப்பிய நாகரிக ஆட்சி ஆகியவை பழங்கால உலகின் உயர்வு தாழ்வைத் தலைகீழாகத் திருப்பிச் சரிசெய்யும் ஓர் எதிர் அலை இயக்கக் கூறுகளேயாகும்.

தமிழக, உலக வரலாற்றின் அக அலைக்காலம், மனித நாகரிகத் தோற்றக் காலம் என்பது கண்டோம். அத் தோற்றத்தில் தமிழ்ப் பண்பலையே உலகப் பண்பலையாக விரிவுற்றது என்பதும் தேற்றம். ஆனால் முதலலை தோன்றியவாறே அதனை அடுத்த ஒடுக்கப்படி நடைபெற வேண்டுவது

இயல்பு. புற அலைக் காலத்தில் நாம் காண்பது இதுவே. இக்காலத்தில் உலகப் பண்பலை மீண்டும் தமிழக அலையாக இயங்கியுள்ளது. சோழப் பெரும் பேரசுக்குப் பிற்பட்ட காலம் தமிழகம் தனி வாழ்விழந்து, சூழ்புலவாழ்வாகிய கீழ் திசை வாழ்வும் கெடுத்து, உலக வாழ்வின் ஒரு பகுதியாகத் தன்னிலை யழிந்து நிலவியதன் காரணம் இதுவே. ஆனால் இந்நிலை மாறத் தொடங்கிவிட்டது. மாறிவருகிறது. இம் மாறுபாட்டின் தொடக்கம் 1760– 1761-ம் ஆண்டுக்குரியது என்னலாம்.

1760 :—கீழ்திசை வாழ்வின் திரும்பு கட்டம் :

போலித் தேசியத்துக்கு ஒரு படிப்பினை

*1760* —மாநிலத் தேசீயத்துக்கு இந்து முஸ்லிம் வேற்றுமை யடிப்படையில் உருவும் வடிவும் தரப் பாடுபடும் நம் கால மாநிலத் தேசீயவாதிகளீ உண்டு. அத்தகைய தேசீயத்தில் தோய்வுற்ற வரலாற்றாசிரியர்கூட உண்டு. ஆனால் வரலாற்றில் அத்தேசியத்தின் பிறப்பை அவர்கள் விசயநகரப் பேரரசிலும். சிவாஜியின் மராட்டியத் தேசியத்திலுமே கண்டுள்ளனர். இவை இரண்டும் தென்னகத்தின் இரண்டு பெருமைமிக்க இடைக்காலத் தேசிய எழுச்சிகள் என்பதில் ஐயமில்லை. ஆனால் இவற்றை மட்டும் மாநிலத் தேசியத்தின் முன்னோடிகளாக்கி, இவற்றுக்கு இந்து - முஸ்லிம் சாய மடிக்க விரும்பும் தேசியவாதிகளுக்கும் வரலாற்றாசிரியர் களுக்கும் வடதிசை வாயிலாகவே 1760 ஒரு நல்ல படிப்பினை தருவதாகும். இந்துப் பேரரசு வகுத்த மராத்தியர் தம் எதிரிகளான முகலாய முஸ்லிம் பேரரசுடன் இணைந்து நின்று மற்றோர் அயல் முஸ்லிம் படையெடுப்பாளனான ஆப்கன் அரசன் அகமது ஷா ஆப்துராணியின் கையிலிருந்து ஒரே தேசியப் பேரிடியைப் பெற்றனர்—மூன்றாவது பானிப்பட்டுப் போர் வடதிசை வகுக்க எண்ணிய இந்து தேசியம், முஸ்லிம் தேசியம் ஆகிய இரண்டுக்கும், அவை கருவில் இருந்த அன்றே, ஒரே கடும் படிப்பினை அளித்திருந்தது!

ஆனால் இன்றளவும் மாநிலத் தேசியமும் அதன் சார்பில் வரலாறு வகுக்கத் துணிந்த தென்திசை, வடதிசை வரலாற்றாசிரியரும் இந்தக் கடும் படிப்பினையை ஒரு சிறிதும் உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை. பேராசிரியர் முனைவர் எஸ் கிருஷ்ணசாமி ஐயங்கார், இராவ்பகதூர் ஸி. எஸ். சீனிவாசாச்சாரியார், பேராசிரியர் கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார் முதலியோர் வகுத்துள்ள தென்னாட்டு வரலாறுகளில் இப்போலித் தேசியக் கோட்பாடு வரலாற்று நிகழ்ச்சிகளின் உருவை வளைத்துத் திருகி, அவற்றைச் சுற்றி நெளிவது காணலாம்.

தவிர வீர மராத்திய மரபில் வந்த ஜாதுநாத் சர்க்கார் போன்ற வரலாற்றாசிரியர்கள் சிவாஜி மரபுக்கு இராஜபுத்திர மரபின் குலப் பெருமையையும் உயர் வருணமாகிய க்ஷத்திரிய மரபினன் என்ற பிறப்பு உயர் பெருமையையும் நிலை நாட்டப் பாடுபடும் ஆராய்ச்சிகளும், முனைவர் கிருஷ்ணசாமி போன்றோர் அதனை மறுத்தெழுதும் எதிராராய்ச்சிகளும் தமிழர் இரக்கத்துக்கும் நகைச்சுவைக்கும் அருவருப்புணர்ச்சிக்கும் ஒருங்கே உரியவை ஆகின்றன. ஏனெனில் சிவாஜி போன்ற பெருவீரன் மரபு அவன் பிறந்த குடியை மட்டுமன்றி, நாட்டையும் நாடு கடந்த திசையையுமே உயர்த்த வல்லது. சிவாஜி க்ஷத்திரிய னல்லவானால், க்ஷத்திரிய வருணமும் அவ்வருண வேறுபாடு வகுத்த போலி இந்து சமயமுந்தான் இழிவுடையன ஆகக் கூடுமே யன்றி, அவன் மரபு இழுக்குறுது என்று தான் எவரும் கருதுதல் தகும்.

பகுத்தறிவுடைய, பண்பாடுடைய எந்த இனத்தவரும் இந்த முடிவுக்கே வருவர். ஆனால் சிவாஜியின் பண்புடன் தொடர்பற்ற குல மரபுகளில் பெருமைகொண்ட பேராசிரியர்கள், பேரறிஞராயிருந்தும் இம்முடிவு காண இயலாது அல மருகின்றனர். மற்றும் வரலாற்றாசிரியர் சர்க்கார் போன்ற மராத்திய மரபின் அறிஞர் ஆங்கிலப் படிப்பால் வந்த தன் மதிப்பைச் சிறிதே பேணியிருந்தால், சிவாஜி மரபு இந்தியாவின் தலை சிறந்த மரபு என்று கூறிப் பெருமைப் பட்டிருப்பாரே யன்றி, அம் மரபைப் பண்பில் இழிந்த குலமரபினருள் இணைக்க இவ்வளவு பாடுபட்டிருக்க மாட்டார்கள்! வீரப் பண்பில் இராசபுத்திர மரபு சிறந்ததே யாயினும், தேசியப் பண்புகளில் அது மராட்டியரிடமும், மராட்டியரின் ஒப்பற்ற வீரத் தலைவன் சிவாஜியிடமும் மண்டியிட்டுப் பயிற்சிபெற வேண்டிய மரபே என்றால் தவறாகாது.

உண்மையில் விசயநகரப் பேரரசும் சிவாஜி கண்ட பேரரசும் தென்னகத் தேசியத்தைத் தூண்டிய மரபுகள் மட்டுமே. ஆயினும் அவை பிறப்பிலேயே வடதிசைத் தேசியமாகிய நோயினால் பீடிக்கப்பட்டு நலிந்த தேசியங்கள் ஆகும். அவ் வடதிசை இஸ்லாமியர் படையெடுப்புகளுக்கு மட்டுமன்றி எல்லா அயலினப் படையெடுப்புகளுக்குமே வாயிலும் வளர்ப்புத் தளமுமாக அமைந்திருந்தது. ஆனால் அந்த வடதிசையே இஸ்லாமியரை மட்டும் அயலினம், மற்ற எல்லா இனங்களும் அந்த இஸ்லாமியர் கொடுத்த ‘இந்து’ என்ற பெயரால் ஒரே தேசிய இனம் என்ற கோட்பாட்டை மெல்லத் தன் படையெடுப்புக் காலத்திலே தென் திசையில் பரப்பிற்று! இக் கோட்பாட்டால் விசயநகர மராத்தியப் பேரரசுகள்

தாம் வலிமையிழந்ததுடன் நில்லாது, பின்வரும் தேசிய இயக்கங்களைக்கூட எளிதில் வளர முடியாமல் தடை செய்துள்ளன.

தென்னகத்தின் உண்மைத் தேசிய இயக்கம்—இந்துக்களையல்ல, முஸ்லிம்களையல்ல—அயலாட்சியையே எதிர்த்த தேசிய இயக்கம் ஆகும். அது தென்னகத்தின் முஸ்லிம் பெரு வீரனான ஹைதராலே தொடக்கப்பட்டது. அதனுடன் தென்னகத்தின் வாழ்வில் மீண்டும் அக அலை தொடங்கிற்று. புதுமர்ச்சி ஊழியும் அதன் கருவில் பிறந்தது.

## தென்னகத் தேசியமும் மறுமலர்ச்சி இயக்கங்களும்

தமிழகத்தின் புது வாழ்வாகிய புதிய அக அலையில் நாம் இரண்டு கூறுகளைக் காணக்கூடும். ஒன்று தேசிய அலை. மற்றது புதுமலர்ச்சியலை. இரண்டும் இணைந்து நம் காலத்திலேயே (20—ம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே) முழுநிறை தேசிய அலையாக, வருங்கால உலக வாழ்வை வளப்படுத்தத் தக்க புதிய தமிழக, தென்னக, கீழ்திசைத் தேசீய அலையாக உருவாகத் தொடங்கியுள்ளது என்னலாம்

தேசிய அலை கன்னட நாட்டில் (மைசூரில்) தொடங்கித் தமிழகம் அளாவி வளர்ந்து, கீழ்திசை மாநிலங்கள் பலவற்றைக்கண்ட பிரிட்டிஷ் அயலாட்சியை ஒழிப்பதைக் குறிக்கொண்டு இந்திய மாநில அலையாக வளர்ந்து செயலாற்றியுள்ளது. ஆனால் அது கீழ்திசையைத் தொல் பழங்கால நிலைக்கு உயர்த்த வேண்டுமானால், அது மீண்டும் தமிழ்த் தேசிய அலையாக வளர்தல் இன்றி யமையாதது. இவ்வளர்ச்சி தொடங்கிவிட்டாலும் நாம் இன்னும் அதன் இளம் பயிர்ப்பு நிலையிலேயே இருக்கிறோம்.

மைசூர் எழுச்சி (1753—1799), பாஞ்சாலங் குறிச்சி வீரப் போராட்டம் (1798—1802), இவற்றைத் தொடர்ந்து வேலூர்க் கிளர்ச்சி சென்னைக் கிளர்ச்சி, சீரங்கப் பட்டினம் கிளர்ச்சி, 1857-ல் நடைபெற்ற வடதிசை விடுதலைப் போராட்டம் இவற்றினூடாக மாநிலமெங்கும் கிளர்ந்த பொதுத் தேசியப் போராட்டம் (1885—1947), இப்பொதுப் போராட்அலையின் முகட்டில் எழுந்த வ. உ. சிதம்பரனாரின் கப்பல் போராட்டம், தொழிலாளர் போராட்டம் ஆகியவையே தமிழக அக அலையின் தேசியக் கிளை அலைகள் ஆகும். இவற்றுள் வ உ. சிதம்பரனாரின் போராட்டம் வருங்காலத் தமிழகத் தேசிய இயக்கத்தின் ஒரு விடிவெள்ளி எனத் தக்கது ஆகும்.

பக்தியியக்கத்தின் தமிழக மறுமலர்ச்சியாக எழுந்த தாயுமானார் (18—ம் நூற்றாண்டு), இராமலிங்க வள்ளலார் (19—ம் நூற்றாண்டு) ஆகியவர்களின் தமிழக அருளியக்கங்களும், இவற்றின் எதிரொலிகளாக வங்கம் தோற்றுவித்த

இராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்த அடிகள், அரவிந்தர் ஆகியோரின் கீழ்திசை அருளியக்கங்களும், பிரம்மஞான சங்க இயக்கமாகிய உலக இயக்கமும் தமிழக மறுமலர்ச்சியின் அலை ஒளி இயக்கங்கள் ஆகும். இவைசமயத்துறைசார்ந்த இயக்கங்கள். தமிழக இஸ்லாமியரையும் கிரிஸ்த்தவரையும் கூட இவ்வியக்கம் தூண்டியுள்ளது—சீராப் புராணமும், தேம்பாவணியும், இரட்சணிய யாத்திரிகமும், மஸ்தான் சாகிபுபாடல், பீர்முகமது சாகிபுபாடல் போன்ற பிறபாடல்களும் அதன் தமிழிலக்கியத் தடங்கள் ஆகும். இதுவே புற உலகில் மேலை நாடுகளில்கூட அகநிலை மெய் விளக்கக் கோட்பாடுகள் (Idealistic Schools of philosophy), மேலைப் புது நெறி அல்லது உயிர்நெறி (NewThought or Higher Thought) ஆகியவற்றையும் தூண்டியுள்ளன.

சமயத் துறையிலிருந்து அக அலை மொழித்துறையளாவிச் சங்க இலக்கிய மறுமலர்ச்சியையும் மறைமலை யடிகளாரின் தனித் தமிழியக்கத்தையும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தூண்டிற்று இத் தமிழியக்கத்தின் எதிரொலியே உலக அரங்கில் அடிப்படை மொழி இயக்கமாகப் பரவியுள்ளது; பரவி வருகிறது. சமயம், மொழி கடந்து சமுதாயத் துறையிலும் இங்வலை தமிழகத் தன் மதிப்பியக்கத்தையும் தமிழகப் பகுத்தறி வியக்கத்தையும் வீறுடன் தோற்றுவித்துள்ளது தனித் தமிழியக்கமும் சங்க இலக்கிய மறுமலர்ச்சியும் நூற்றாண்டின் நடுப்பகுதியில் மொழி இலக்கியத் துறையில் புதிய தேசிய ஆர்வத்தையும்,மொழி இலக்கிய மறுமலர்ச்சியையும் ஒருங்கே தூண்டியுள்ளது.

இவ்வெல்லா அக அலைகளின் இணைவான தமிழக முழுநிறைதேசிய இயக்கத்தின் இரு கூறுகள் —தமிழ் நாட்டுத் தேசிய இயக்கம், தமிழின அதாவது திராவிடத் தேசிய இயக்கம் என்று இரு கிளைகளாக ஒழுகி ஒருங்கிணையும் ஒரே பேராறுக, அகண்ட காவிரியாகப்பொங்கி எழுகின்றன. அதன் ஆக்கவளம் வருங்காலத் தமிழகமும் வருங்கால உலகமுமே முழுதும் காணத்தக்க ஒன்ருகும்.

தென்னகத்தின் முதல் தேசிய அலை:

மைசூர் எழுச்சி 1763—1798

சோழப் பெரும் பேரரசர் காலத்துக்குச் சற்று முன்பிருந்தே தமிழகத்தின் வட எல்லையடுத்த மைசூரும் இராயலசீமாப் பகுதியும் தென்னகத்தின் புதிய தேசிய எழுச்சிகளுக்கும் புதிய பேரரசுகளுக்கும் தாயகமாக வளர்ச்சியுற்று வந்தன. ஹொய்சளர், விசய நகரப் பேரரசர் வாழ்வு தாழ்வுகளுக்குரிய கருமுதல் நிலம் அதுவே. இதேபரப்பின் நடுமைய

மான கோலாரிப் பகுதியில்தான் மைசூர்ப் பேரரசின் முதல்வ னை ஹைதர் அலியின் வாழ்வும் தொடங்கிற்று. அவன் கடைசிப் போராட்டமும் மாள்வும் அதே இடத்தருகில் தமிழக வட எல்லையாகிய சித்தூர்ப் பகுதியிலே நிகழ்வுற்றது.

மைசூர் அரசியலிலும் தென்னக வாழ்விலும் ஹைதர் ஒரு புதிய தேசிய ஒளியை ஏற்றினான். இதற்கு அவன் பிறப்புச் சூழலிலேயே அருந்தகுதி உண்டு. ஏனெனில் குடிமக்கள் மரபி லேயே பிறந்து, குடியின வீர மரபினாலும் தன் வீரத்திறத் தாலும் அரசியலாற்றல் பெற்ற முதல் தென்னகப் பேரரசன் அவனே என்னலாம். மேலையுலகில் நெப்போலியன் ஒருவனே இவ் வகையில் அவனுக்கு இணையாகக் கூறக்கூடியவன். தாமே தோற்றுவித்த இப்பேரரசாற்றலை ஹைதரும் அவன் மைந்தன் திப்புவும் 1763-முதல் 1798 வரை முப்பத்தைந்து ஆண்டுகள் பேணி வளர்த்துத் தென்னக அரசியல் தேசிய வாழ்வின் நடு மையச் சக்திகள் ஆயினர்.

முகலாயப் பேரரசரிடையே அக்பர், ஜெஹாங்கீர், ஷாஜ ஹான் ஆகிய மூன்று பேரரசர் ஆட்சியிலும் தென்னாடு படை யெடுப்புகளுக்கு ஆளானாலும், தமிழக எல்லை கடந்த அதன் வடபெரும் பகுதியின் அரசியல் நிலைகளைக் குலைத்துத் தமிழ கத்தையும் கைப்பற்ற விரும்பியவன் அரங்கசீபே யாவன். ஆனால் அவன் ஆட்சியே முகலாயரின் பேரரசு சரியத்தொடங்கி கிய ஆட்சியாகவும் அமைந்தது. அவனுக்குப் பின் வடதிசை யிலேயே அப்பேரரசு வலிமையிழந்தது தென்னகத்தின் வட பகுதியில் ஹைதராபாத்தில் ஆண்ட நிஜாமும், தமிழகத்தில் ஆர்க்காட்டை ஆண்ட நவாபும் கிட்டத்தட்டத் தனியரசரே யாயினர்.

சிவாஜிக்குப் பின் மராத்திய அரச மரபின் இரு தலை முறைகள் அரங்கசீபின் அரசியல் சூதாட்டங்களுக்கு ஆளாகி அலைக் கழிவுற்றன. ஆனால் இந்தப் புற எதிரியின் அலைக் கழிப்பைவிட அதைப் பயன்படுத்தி வளர்ந்த அக எதிரிகளே சிவாஜியின் வீர மரபை ஏலமாட்டாச் சமரச மரபாக்கினர். அவர்கள் பிராமண அமைசர்களான பேஷ்வாக்கள், அவ் வீர ஆட்சி மரபைச் சூழ்ச்சியின் ஆட்சி மரபாக்கினர். தவிர இந் நிலையே மராத்தியப் பேரரசையும் கேய்க்வார், ஹொால் கார், சிந்தியா என்ற பல கிளை மரபின் ஆட்சிகளாகப் பிரித் தது.

மைசூர்ப் பேரரசு தோன்றிய காலத்தில் தென்னகத்தில் ஆட்சி செய்த மற்றப் பேரரசுகள் மராத்தியர், நிஜாம், ஆர்க் காட்டு நவாப் ஆகிய இம்மூவருமே. மைசூர் இந்நாள் இந்

நான்கின் நடுவே தென்னகத்தின் நடுநாயக வல்லரசாக வாழ்வு தொடங்கிற்று.

வடதிசை அயலரசான முகலாயப் பேரரசின் மரபில் பிறந்த நிஜாம் அரசும் ஆர்க்காட்டு அரசும் பெயரளவில் தனியரசுகளாய் இருந்தாலும், வீரமரபு பேணாது அயலரசுகளைச் சார்ந்தே வாழும் அடிமையரசுகளாய் இருந்தன. மராத்திய அரசும் அகவாழ்வில் ஒற்றுமை கெட்டும், புற வாழ்வில் சூழ் புலங்களைக் கொள்ளையிட்டுமே வாழ்ந்தது. மூன்று அரசுகளுமே தென்னகத்தின் மூன்று திசையில் உள்ள மூன்று அக நோய்களாக இயங்கி, பிரஞ்சுக்காரர் பிரிட்டிஷார் ஆகிய வெளி ஆதிக்க சக்திகளின் சதுரங்கக் காய்களாக நிலவினவேயன்றி, நாட்டு மக்கள் ஆட்சி கைக்கொண்ட தேசீய அரசுகளாக அமையவில்லை. இம் மூன்று நோயரசுகளுக்கும் இடையே எழுந்த புதிய மைசூர்ப் பேரரசு ஒன்றுதான் பிற்காலத் தென்னக வாழ்வில் தேசிய ஆட்சியும் தேசிய ஆற்றலும் உடையதாய் இருந்தது.

ஹைதர்—திப்பு: நிறைவு குறைவுகள்

ஹைதர் பிரிட்டிஷ் ஆட்சியாளர் மீது வெறுப்புக் காட்டவில்லை. அவர்களிடம் நேசமாகக் கூட இருந்தான். ஆனால் அவன் நிஜாமைப் போலவோ, ஆர்க்காட்டு நவாபைப் போலவோ, அயலவர் தயவில் வாழ விரும்பவில்லை. அவர்களைச் சார்ந்து வளரவும் முனையவில்லை. மராத்தியரைப் போல, தன் தற்காலிக நலனை மட்டும் கருதவில்லை. அவன் தன் மதிப்புடன் தன் வலிமையை மட்டுமே நம்பித் தன் ஆட்சியைப் பரப்பினான். அயலவர் திறமையால் அவர்கள் ஆற்றல் பெருகி வருவதைக் கண்டும், அதற்காக அவன் அவர்களைப் பகைக்கவில்லை. காரணம், அவர்கள் வளர்ச்சிக்குரிய உண்மைக் காரணம் நாட்டில் திறமையுடைய நல்லாட்சி இல்லாமையே என்பதை உணர்ந்தான். வெள்ளையரும் கண்டு வியக்கும் வீரம் அவனிடம் இருந்தது படை வீரருடன் படை வீரனாகப் பழகி அவன் அவர்கள் நேசத்தையும் பெற்றிருந்தான். தென்னகப் படைகளிடையே ஒற்றுமை வகையிலும் பயிற்சி வகையிலும் அவன் படைகளே தலை சிறந்தன என்பதை ஆங்கிலேயரே ஒப்புக் கொண்டுள்ளனர். படைப் பயிற்சி, நல்லாட்சிக்கான வழிதுறைகள் வாணிகத் தொடர்பு ஆகிய வகைகளில் பொதுவாக வெள்ளையரும், சிறப்பாக பிரிட்டிஷாரும் பிரஞ்சுக்காரரும் நன்கு உதவ முடியும் என்பதை அவன் அறிந்திருந்தான். அவ்வுதவியைக் கூடிய மட்டும் பயன்படுத்திக்கொள்ளவே அவன் பிரிட்டிஷார், பிரஞ்சுக்காரர் ஆகிய இரு சாராரையும் நேசமாக நடத்த விரும்பி

னன். வெள்ளையர் ஆட்சியை விரும்பாமல் வெள்ளையரை மட்டும் அவன் விரும்பி நேசித்ததன் மறைதிறவு இதுவே.

ஹைதரைப் போலவே திப்புவும் சிறந்த வீரன், படைத் தலைவன். ஆட்சித் திறமையிலும் அரசியல் சூழ்ச்சிகளிலும் தேசிய ஆர்வத்திலும் அவன் ஹைதரைவிடக் குறைந்தவனல்லன். ஆனால் ஹைதரின் கடு வாழ்வின் பயிற்சி அவனிடம் இல்லை. இதனால் சுற்றிலும் உள்ளவரை உள்ளவாறு மதிப்பிடும் பண்பும் அவர்களைப் பயன்படுத்தினாலும் அவர்கள் வசமாய் விடாமல் அவர்களை அடக்கியாளும் பண்பும் அவனிடம் ஹைதரளவு இல்லை. பிரிட்டிஷார் தன்னை எதிர்த்தாலும் கூடியமட்டும் அவர்களை எதிர்ப்பதில் தன் வலிமையைச் சீரழிக்காமல் காத்துக் காலம் கருதியிருந்தவன் ஹைதர். திப்பு சிறிது ஆத்திர அவசரம் காட்டிப் பிரிட்டிஷார் விரித்த வலைக்குள் விழ நேர்ந்தது.

ஹைதர்—திப்பு எழுச்சி சில வகையில் குடிமன்னர் நிகழ்த்திய தென்னகத்தின் — மாநிலத்தின் — முதல் தேசியப் போராட்டம் ஆகும். இதில் அவர்கள் முழு வெற்றி கண்டு விடவில்லை. இதற்கு மேற் குறிப்பிட்ட திப்புவின் குறைபாடுகள் மட்டும் காரணமல்ல. ஹைதர்-திப்பு இருவருமே படைவீரரிடம் காட்டிய அதே அன்பை நாட்டு மக்களிடம் காட்ட முடியாது போயிற்று. அத்துடன் தன் ஆட்சிக்கு வெளியேயுள்ள மக்கள்—சிறப்பாக மலபார், குடகுப்பகுதி மக்கள்—ஆதரவைப் பெறுவதிலும் அவர்கள் அருமை வாய்ந்த போர் முறைகள், ஆட்சிமுறைகள் குந்தகமாயிருந்தன. இது முற்றிலும் அவர்கள் குறையன்று—அவர்கள் காலநிலையின், 16-முதல் 18-வரை இருந்த தென்னக அரசியல் சூழலின் குறையே அது. மக்களைக் கொள்ளையடிப்பதே அந்நாள் போர்முறையாகவும் வெற்றிகண்ட அரசர் புதுவெற்றிகளை உறுதிபடுத்தும் முறையாகவும் இருந்தது.

இக்குறைபாடுகள் பேரரசின் வலுவை மட்டுமே குறைத்தன. தென்னகத்துக்குத் தேசிய வாழ்வின் வீழ்ச்சியை, மேலை வெள்ளையரின் அயலாட்சியை—அளித்த பண்பு இதுவல்ல. ஹைதர்-திப்புவின் தேசிய போராட்டங்களுக்கும் தேசிய ஆட்சி யியல்புக்கும் முற்றிலும் மாறான அடிமைப் பண்புகளும் குறுகிய தன்னலப் பண்புகளும் கோழைப் பண்புகளும் திறமையின்மையும் தென்னகத்தின் மற்ற மூன்றரசுகளையும் ஆட்கொண்டிருந்தன. அந்த மூன்றின் உதவிகொண்டும், திருவாங்கூர் அரசர் போன்ற ஏலமாட்டாச் சிற்றரசர் உதவி கொண்டுமே பிரிட்டிஷார்—வீரமாக அல்ல—கோழைத்தனமாக—மேல்திசையில் நெப்போலியனைச் சூழ்ந்து பற்றியழித்ததுபோல, திப்பு ஆட்சியை அழித்தனர்.

பிரிட்டிஷ் ஆட்சிக்கு அடித்தளக்கல் நாட்டியவன் ராபர்ட் கிளைவே என்று ஆங்கில வரலாற்றாசிரியர் கூறுவதுண்டு. ஆனால் திப்புவை வீழ்த்த உதவிய சிறுபண்புடைய பெருங்குடி மன்னரான மராத்தியர், நிஜாம், ஆர்க்காட்டு நவாப், திருவாங்கூர் அரசர் ஆகிய நால்வர்களே பிரிட்டிஷ் ஆட்சியமைப்புக்கு ஆதாரமாய் அமைந்த நான்கு நாட்டுப் பகைத் தூண்கள் ஆயினர் என்னலாம்.

தென்னகத்தில் மட்டுமன்று கீழ்திசையிலேயே—பிரிட்டிஷாரை மட்டுமன்று—மேலைநாட்டவர் ஆதிக்க வேட்டையையே—எதிர்த்துநின்ற பேரரசர் ஹைதர்-திப்பு மட்டுமேயாவர். எவர் துணையுமின்றி அவர்கள் தனியே அவராதிக்க ஆட்சியை எதிர்க்க முற்பட்டனர்—ஆனால் ஆதிக்க ஆட்சி தனித்துநின்று அவர்களை வெல்ல முடியவில்லை. நாட்டின் காளான் ஆட்சிகளை எல்லாம் திரட்டியே அது தென்னகத்தின் அந்நாளைய வீரப் பேரரசை அழிக்க முடிந்தது.

ஹைதர்-திப்புவின் வீழ்ச்சி மைசூர் வீழ்ச்சி மட்டுமல்ல—தென்னக வீழ்ச்சி மட்டுமல்ல—கீழ்திசையின் கடைசித் தூணின் வீழ்ச்சி ஆகும். ஆனால் குடிமன்னரான அவர்கள் வீழ்ச்சியே குடிமக்களின் எழுச்சிக்குரிய முதல் தூண்டுதலாய், தேசிய இயக்கத்தின் முதல் அலையாய் அமைந்தது.

பிரிட்டிஷ் ஆதிக்க வளர்ச்சி:

தென்னகத்துக்கு முதல் முதல் வந்த மேலை வாணிக ஆட்சியாளர் போர்ச்சுகீசியரே. தென்னகத்துக்கும் கீழ்திசைக்கும் வருவதற்குரிய கடல் வழியை முதன்முதல் 15-ம் நூற்றாண்டில் கண்டவர்களும் அவர்களே 15-ம் நூற்றாண்டு வரை கீழையுலகக் கடல் வாணிகம் சீனர், மலாய் நாட்டவர், தமிழர், அராபியர் ஆகிய நான்கு இனத்தவர் கைகளிலே இருந்தன ஐரோப்பிய நாடுகளுக்கு இவ்வாணிகத்தைக் கொண்டு சென்றவர் அராபியர்களே. அராபியர்களிடமிருந்து இத்தாலி நாட்டிலுள்ள கடல் வாணிக இனத்தவரான வெனிஸ் நகரமக்கள் இதைக் கைக்கொண்டு ஐரோப்பா வெங்கும் பரப்பிப் பெருஞ் செல்வம் திரட்டினர்.

ஆனால் 15-ம் நூற்றாண்டில் இந்நிலையில் ஒரு பெரு மாற்றம் ஏற்பட்டது துருக்கியர் பேரரசாட்சி மேற்கொண்டு மேலை ஆசியா, கீழ்கோடி ஐரோப்பா, வட ஆப்பிரிக்கா எங்கும் கைக் கொண்டனர். மேலை ஐரோப்பாவில் ஆயிரம் ஆண்டுகளுக்குமேல் கலைக் களஞ்சியமாக விளங்கிய கான்ஸ்டாண்டிநோபிள் நகரமும் அவர்கள் கைப்பட்டது இதன் விளைவாக அராபியர் வாணிகம் தடைபட்டது. மேலை நாடுகளிடையே இக்காலம் எழுந்த கலைமலர்ச்சி, சமயமறுமலர்ச்சி

தேசீய மலர்ச்சி ஆகியவற்றுடன் கீழ்திசையோடு நேரிடை வாணிகம் செய்யும் ஆர்வத்தையும் கீழ்திசைக்கு நேர்வழி காணும் ஆர்வத்தையும் இது தூண்டிற்று. இந்தியாவுக்கு வழிகாண எண்ணி ஸ்பெயின் நாட்டின் சார்பாக மேற்கே சென்ற கொலம்பஸ் அமெரிக்காக் கண்டத்தைக் கண்டு பிடித்து, அங்குள்ள மக்களுக்கு 'இந்தியர்' என்ற பெயரை உரிமைப்படுத்தினான். அதனையடுத்து 1498—ல் வாஸ்கோடி காமா என்ற மீகாமன் ஆப்பிரிக்காக் கரையைச்சுற்றித் தென்னகத்தின் மேல் கடற்கரையிலுள்ள கள்ளிக்கோட்டை அல்லது கோழிக்கோட்டுத் துறைமுகத்தில் வந்து இறங்கினான்.

தென்னகத்துக்கு வழிகாணும் ஆர்வமே பிரிட்டிஷாரையும் பிற மேனாட்டாரையும் ஆப்பிரிக்கா, ஆஸ்டிரேலியா, அமெரிக்காக் கண்டங்களைக் காணவும் கண்டு கைப்பற்றவும் வழி வகுத்தது. செவ்விந்தியர், மேலை இந்தியத் தீவுகள், கீழை இந்தியத் தீவுகள் என்ற பெயர்கள் இதைக் காட்டுகின்றன.

16—ம் நூற்றாண்டில் தென்னகத்துக்கு டச்சுக்காரரும் வந்து வாணிகத் தொடர்பு நாடினர். அந்நூற்றாண்டு முழுவதும் தென்னகக் கடற்கரை ஆட்சிக்காகப் போர்ச்சுகீசியரும் டச்சுக்காரரும் ஓயாது போராடிக்கொண்டே வந்தனர்.

பிரஞ்சுக்காரரும் பிரிட்டிஷாரும் தென்னகத்துக்கு வந்தது 17—ம் நூற்றாண்டிலேயே. பிரிட்டிஷார் நூற்றாண்டுத் தொடக்கத்தில் டச்சுக்காரருடனும் நூற்றாண்டு முழுவதும் போர்ச்சுகீசியருடனும் டச்சுக்காரருடனுமே பெரும் போட்டியிட்டனர். ஆனால் 18—ம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே வாணிகத்துறையிலும், பிற்பகுதியில் அரசியல் துறையிலும் பிரஞ்சு—பிரிட்டிஷ் பெரும்போட்டி நிலவிற்று. இப்போட்டியினிடையேதான் அதில்வென்று வந்தபிரிட்டிஷாரிடமிருந்து ஹைதரும் திப்புவும் தென்னகத்தை மீட்கப் பாடுபட்டு, மற்றத் தென்னக அரசுகளின் ஏலமாட்டாக் கோழைமை, திறமைக்கேடு, அடிமைத்தனம், தன்னலப் போட்டி, பகைமை உட்பகைமைகள் காரணமாக அதை அரசியல் துறையிலேனும் இழக்க நேரிட்டது.

மைசூர் எழுச்சி படுத்திராவிட்டால், தென்னகம் கட்டாயமாக வீழ்ச்சியுற்றிராது. தென்னகம் வீழ்ச்சியுறாவிட்டால், பிரிட்டிஷார் தென்னகமடைந்து இவ்வளவு எளிதாக அரசியல் தேசியக் கட்டுக்கோப்பற்ற வடதிசைப் பரப்பையோ, பர்மா, இலங்கை ஏடன், மலாயா, சிங்கப்பூர் ஆகிய பரப்புக்களையோ வென்றிருக்கவும் முடியாது. தென்

ஞட்டின் வலுவே பிரிட்டிஷார் இப்பரப்புக்கள் எல்லாவற்றை யும் கீழடக்குவதற்குரிய மூலதளமாய் அமைந்தது.

மேலை வாணிக வேட்டையாளர் பொதுவாகக் கீழை நாட்டு வாணிகம் நாடிவந்தனராஞலும், அவர்கள் கவனத் தைச் சிறப்பாகத் தென்னகமும் தென்கிழக்காசியாவுமே ஈர்த்தன என்பதில் ஐயமில்லை. இன்றுவரை பல மேலைநாட்டுத் துறைமுகப் பட்டணங்கள் இப்பகுதியிலேயே உள்ளன. அவர்கள் முதல்முதல் களங்கள் அமைத்ததும் நீடித்துப் போராடியதும் தென்னகத்திலேயேயாகும்.

பிரிட்டிஷார் சென்னையை 1639-லும், பம்பாயை 1661-லும், கல்கத்தாவை 1690—லும் மூலதளங்களாகக் கைக் கொண்டனர். பிரெஞ்சுக்காரர் பாண்டிச்சேரியில் 1674-லும், சந்திர நாகூரில் அதே ஆண்டிலும், மாஹியில் 1725-லும், காரைக்காலில் 1739-லுமே நிலைகொண்டனர். போர்ச்சுகீ சியர் கோவாவையும், பிரஞ்சுக்காரர் பாண்டிச்சேரியையுமே பெரிதும் இலக்காக்கியிருந்ததை இது காட்டும். தென்னகமே அந்நாளில் தொழிலிலும் வாணிகத்திலும் கீழ்திசையின் மைய மாய் இருந்தது. அரசியல் வாழ்விலும் அப்படியே. இந்நிலை யில் நாட்டரசருடன் பிரிட்டிஷார் நிகழ்த்த வேண்டிவந்த தேசியப் பெரும்போர் மைசூர்ப்போர் ஒன்றேயாகும். அதன் பின் அவர்கள் சரிசமப் போராட்டம் எதுவும் இல்லாமலேயே கீழ்திசையில் பரவ முடிந்தது.

தமிழ்த் தேசியமும் பிரிட்டிஷாட்சியும்:

தென்னகத்துக்குப் பிரிட்டிஷ் ஆட்சியாளர் கொடுத்த தொடக்ககால முக்கியத்துவத்தையும், பிற்காலத்தில் அதை வடதிசைப் பரப்புக்குக் கொண்டு சென்றதையும் தென்னகத் தேசிய வரலாற்றாசிரியர்கள் மட்டுமன்றி, கீழ்திசைத் தேசிய வரலாற்றாசிரியர்களும் நுணுகிக் கவனித்தல் வேண்டும்.

பிரிட்டிஷ் ஆட்சியில் கீழ்திசையில் முதல் முதல் அமைந்த மாகாண ஆட்சி சென்னை மாநில ஆட்சியே. 1653-ல் இது அமைக்கப்பட்ட பின்பே, 1698-ல் வங்கத்தில் வங்க மாநில ஆட்சி ஏற்பட்டது. ஆனால் சென்னையே கீழ்திசைத் தலைமை ஆட்சியிடமாய் இருந்தது. வங்கம் சென்னையைத் தலைமை மாகாணமாகக் கொண்டு அதன் கீழ்ப்பட்ட ஒரு சிறு ஆட்சிப் பகுதியாகவே இருந்தது வங்கம் ஒரு மாகாணமாக அமைக் கப்பட்டது 1701-லேயேயாகும். கல்கத்தா இந்தியாவின் தலைநகரமானது 1784 முதலேயாகும் 1910-ல் விக்டோரியா அரசி— பேரரசி ஆட்சிமுடிந்து ஏழாம் எட்வர்டு அரசர்— பேரரசர் ஆன சமயத்திலேயே இந்திய மாநிலத்தலைநகரம்

வட இந்தியாவின் அயலாட்சித் தலைநகரமாகிய தில்லிக்கு இறுதியாக மாற்றப்பட்டது.

கடலக அரசாகிய பிரிட்டன் கீழ்திசைத் தலைமையாட்சியைக் கடற்கரை நகரங்களிலிருந்து உள் நாட்டுக்கும், கடற்கரைப் பகுதியான தென்னாட்டிலிருந்து நிலப் பெரும்பரப்பான வடதிசைக்கும் கொண்டு சென்றது பற்றி ஆராய்ச்சியாளர் இதுவரை சிந்தித்ததுகிடையாது. ஆனால் தென்னகத் தேசிய வாதிகள் இதில் கருத்துச் செலுத்துவது பயன் தரத் தக்கதாகும். பிரிட்டன் கடல் வல்லரசான பின்பும் கீழ்திசையில் பிரிட்டன் ஆண்ட பகுதிகள் கடலக வாழ்வின் தொடர்பற்றதாய் இருப்பதையே பிரிட்டிஷ் ஆட்சியாளர் விரும்பினர். தென்னகத்தின் கடல்வாணிக, தொழில் மரபுகள் அழிக்கப்படும் வரை அவர்கள் தென்னகத்தைத் தலைமையிடமாகக் கொண்டிருந்து அதன் பின் வடதிசை நோக்கியும் உள்நாடு நோக்கியும் தலைநகரை மாற்றியதற்குரிய காரணங்களில் இது ஒன்று ஆகும். பிரிட்டிஷ் ஆட்சி வேரூன்றியபின் நாட்டு மக்கள் கரையோரக் கப்பல் தொழிலிலிருந்தே சட்ட மூலம் தடை செய்யப்பட்டனர்.

தலைநகர் கல்கத்தாவிலிருந்துகூட மாற்றப்படுவதற்கான சூழ்நிலை கீழ்திசை வரலாற்றின் ஒரு படிப்பினையை வலியுறுத்துகிறது. தில்லிப் பேரரசின் பழய தலைநகர மரபையும் வடமேற்கு எல்லைப்புறப் பாதுகாப்பையும் இம் மாற்றத்துக்குரிய காரணமாக மேலை வரலாற்றாசிரியர் காட்டுவதுண்டு இந்துக்கள் கிளர்ச்சிகளுக்கு எதிராக முஸ்லிம்கள் ஆதரவைப் பெற்றும், தேசிய இயக்க மையமான வங்கத்திலிருந்து விலகவுமே இம்மாற்றம் ஏற்பட்டதென்று மாநிலத் தேசிய வாதிகளும் மாநிலத் தேசிய வரலாற்றாசிரியரும் சுட்டிக் காட்டுகின்றனர் மாநிலத்தேசிய வாதிகள் கூற்று இங்கே பேரளவில் உண்மையேயாகும். ஆனால் அதன் முழுப் பொருளையும் அவர்கள் கூடக் காணத் தவறியுள்ளனர். மாநிலத் தேசியத்தின் மையங்கள் தெற்கும் கிழக்கும் ஆகும்—அவையே சோழப் பெரும் பேரரசாண்ட பகுதிகள். இம்மையத்திலிருந்து எவ்வளவு தொலைவிலிருக்க முடியுமோ அவ்வளவு தொலை விலகுவதும், இந்திய மாநிலத்தின் இந்து முஸ்லிம் தேசியப் பிளவை மிகுத்து, முஸ்லிம்களையும் நிலையாகத் தம் ஆட்சி வலுவின் கருவிகளாக்கிக்கொள்வதும் அவர்கள்நோக்கமாய் இருந்தது. இதற்காகவே தேசியப் பற்றுடன் வீரம் கலந்த இனங்களாகிய தென்னாட்டவர், வங்காளியர், மராத்தியர் ஆகியோர் படைத்துறையிலிருந்து பெரிதும் ஒதுக்கிவைக்கப்பட்டனர். முஸ்லிம்கள்—சிறப்பாக, தேசிய

ஆர்வ நோக்கமின்றிப் பிழைப்புத் தொழிலாகவே படைத் துறையைக் கருதும் வடமேற்கு முஸ்லிம்கள் படைத்துறையின் மிகப் பெரும்பான்மையினர் ஆக்கப்பட்டதும் இதனாலேயே யாகும். இந்திய மாநிலத்தின் தேசியமும் தேசிய நாகரிகமும் பரவாத, தேசியமையங்களிலிருந்து மிகுதொலை விலகிய வடமேற்கின் மூலதள ஆதரவு கருதியே அயலாட்சியாகிய பிரிட்டிஷ் ஆட்சி தலைநகரைத் தெற்கு நின்றும் விட்டு, வடக்கினின்றும் வடமேற்கு நோக்கிக்கொண்டு சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தென்னாட்டு மறவர் படைத்துறைக்குத் தேர்வு பெறுதவராய் மட்டும் நின்று விடவில்லை—அவர்கள் குற்றப் பரம்பரையினராக அடக்கியொடுக்கப்பட்டனர் என்பது இவ் விளக்கங்களுக்கு ஒளி தருவதாகும். தமிழர் வீரமற்றவர் என்ற குற்றச்சாட்டு ஒரு புறமும், தமிழ் மறவர் அடக்கி ஒடுக்கப்பட வேண்டிய கொடிய மரபினர் என்ற குற்றச்சாட்டு மற்றொரு புறமும் கூறப்பட்டன. இரண்டையும் ஆங்கில அறிஞர், ஆங்கிலம் படித்த சிந்தனையற்ற நம் தலையாட்டிப் பொம்மையறிஞர் மூளைக்குள் எளிதாகச் செலுத்திவிட முடிந்தது.

பிரிட்டிஷ் ஆட்சியாளர்வடதிசைப் பண்ணையாட்சி முறைக்குரிய வருண சிரம உயர்வு தாழ்வு அநீதிகள், மக்கட்கல்வியின்மை, அடிமைமுறை, பெண்ணடிமை, உடன் கட்டை ஏறுதல், மூடப் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை ஒழிப்பதில் தமிழர் பழைய பகுத்தறிவு மரபுடன் இணைந்தனர். இவை பொதுவாக மேலை நாகரிகத்தின் இயல்பான பகுத்தறிவு வளர்ச்சியின் பயன்களேயானாலும் கீழ்திசையில் மேலை நாட்டு ஆட்சியில்லாப் பரப்புக்களைவிட அவ்வாட்சிப் பரப்புக்களிலேயே மிகுதியாய் உள்ளதும், மேலையாட்சியிலேயே, பிரஞ்சு பிரிட்டிஷ் ஆட்சிப் பகுதிகளிலேயே, முனைப்பாய் அமைந்துள்ளதும் மறுப்பதற்குரியன அல்ல. ஆனால் இயல்பாக சமுதாய அடிப்படையிலன்றித் தேசிய அடிப்படையில் பிரிட்டிஷ் ஆட்சியினரும் சரி, மேலைத் தொடர்பும் சரி தமிழ்மொழி, தென்னக நாகரிகம் ஆகியவற்றைப் பெரிதும் புறக்கணித்தும், வடதிசை மொழிகள், பண்பாடுகள் ஆகியவற்றுக்குப் பேராதரவு தந்தும் வந்துள்ளன. தென்னகத் தேசியம் கீழ்திசையை உயர்த்தி மேலைநாடுகளின் சுரண்டல் வாழ்வைக் குறுக்கிவிடும் என்பதையும் மேலையுலக ஆட்சியாளர் நன்கு அறிந்துள்ளனர் என்னலாம்.

தண்டுல்சாப் போர் 1763

நிஜாம் சலாபத் ஜங்கை வீழ்த்தி அவன் இளவல் நிஜாம் அலி 1761-ல் ஹைதராபாத் அரசைக் கைப்பற்றி இருந்தான்.

1763-ல் பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் இடையே பாரிஸ் உடன்படிக்கை ஏற்பட்டது. இரண்டு நாட்டு வாணிக ஆட்சியினரும் அரசியல் சூழல்களில் சிலகாலம் தலையிடமாட்டார்கள் என்ற நிலையுணர்ந்த புதிய நிஜாம் அரசன் இவ் வாண்டிலேயே தன் தமையனைக் கொலை செய்து தன் ஆட்சியை வலுப்படுத்திக்கொண்டான். அதன் பின் அவன் மராத்தியர் அரசியலில் தலையிட்டு மராத்திய மைய ஆட்சியிலிருந்து, பேரரசை ஆண்ட ஜானோஜி பான்ஸ்லேயைப் பிரித்துத் தன் வயப்படுத்தினான். இதன்பின் அவன் உதவியுடன் மராத்தியர் மீது போர் தொடுத்தான்.

தண்டுல்சாவில் நடைபெற்ற போரில் நிஜாமுக்கு அவன் எதிர்பார்த்த வெற்றி கிட்டவில்லை. ஏனெனில் ஜானோஜி போரின் முக்கிய கட்டத்தில் மறுபடியும் திசைமாறினான். அத்துடன் நிஜாம் அலியின் திறமைவாய்ந்த அமைச்சனாகிய ராஜா பிரதாப் வந்த் என்ற விட்டல் சுந்தர் இப்போரில் மாள நேர்ந்தது.

முதல் மைசூர்ப் போராட்டம்: 1767—1769

தேசிய நோக்கமோ அரசியல் வாய்மையோ அற்ற, மற்றத் தென்னக அரசுகளை நம்புவதைவிட வணிகராக வந்து கரையோரப் பகுதிகளில் பரவிய பிரஞ்சு, பிரிட்டிஷ் ஆட்சித் தலைவர்களை நம்புவது பயன் தருவது என்பதே ஹைதரின் நிலையான கோட்பாடு. ஆனால் ஆர்க்காட்டு நவாபாகிய முகம்மது அலி பிரிட்டிஷ் ஆட்சியாளரைத் தன் வயப்படுத்தி ஹைதருக்கெதிராக அவர்களை ஏவிக்கொண்டே இருந்தான். அவனுக்கு கன்னட வீரனாகிய ஹைதரின் வளர்ச்சிகண்டு அச்சமும் கிலியும் பொறாமையும் மிகுதியாக இருந்தன. இதே நிலை நிஜாமுக்கும் இருந்ததானாலும், அவன் மராத்தியர் வளர்ச்சிகண்டும் அஞ்சினான். ஆகவே ஹைதரை ஆர்க்காட்டு நவாப்மீதும் சென்னை பிரிட்டிஷரார் மீதும் திருப்பிவிட்டுத் தன்னை வலுப்படுத்தினான்.

நிஜாம், மராத்தியர், மைசூர் மூன்றும் ஒன்றுபடா வண்ணம் காப்பது பிரிட்டிஷாருக்கு இச்சமய அரசியல் தந்திரமாய் இருந்தது. 1765-ல் அவர்கள் நிஜாமுடன் உடன்படிக்கை செய்து, ஹைதரிடமிருந்தும் மராத்தியரிடமிருந்தும் அவனுக்குப் பாதுகாப்பு அளிப்பதாக உறுதி கூறியிருந்தனர். ஆனாலும் நிஜாம் மைசூரைத் தாண்டி, ஹைதர் உதவியுடன் ஆங்கிலேயரை எதிர்க்கத் திட்டமிட்டான். ஆந்திரக் கடற்கரைப் பகுதியை நிஜாமும், தமிழகக் கரைப்பகுதியை ஹைதரும் எதிர்ப்பதென்று முடிவு செய்யப்பட்டது.

இப் போராட்டத்தில் நிஜாம் உதவி ஹைதருக்குச் சிறிதும் பயன்படவில்லை. அவன் படைகள் பெரிதானாலும், பிரிட்டிஷ் தாக்குதலுக்கு முன் கலைந்தோடி ஹைதருக்கு அடிக்கடி தொல்லைகளே தந்தது. ஹனால் இந்த நிலையிலும் நிஜாம் நீடித்துப் போராடாமல் இடையே 1768-ல் பிரிட்டிஷாருடன் உடன்படிக்கை செய்துகொண்டு விலகினான்.

காக்கன் கரைப் போர் 1767

ஹைதர் செங்கம் கணவாய் வழியாகத் தமிழகப் பகுதிக்குள் 1767 ஆகஸ்டு 25-ல் முன்னேறினான். கர்னல் ஸ்மித் என்ற படைத்தலைவர் கூடாரத்திலிருந்த உணவுப் பொருள்களையும் கால்நடைப் பந்திகளையும் அவன் கைப்பற்றிக்கொண்டான். இவற்றை மீட்க முயன்ற முகமதலியின் குதிரைப் படைகள் காக்கன் கரை என்னும் சிற்றூரருகே நடைபெற்ற போரில் நையப் புடைக்கப்பட்டன. இது கடந்து ஹைதர் கிருஷ்ணகிரிக் கோட்டையையும் கைப்பற்றினான்.

செங்கம் கணவாய்ப் போர் 1767 (செப்டம்பர் 2)

ஹைதரும் நிஜாமும் செங்கம் கணவாயில் நடைபெற்ற போரில் ஒன்றுபட்டு நின்று போராடினர். படை முகவர் ஸ்மித்தின் பிரிட்டிஷ் படைகளுடன் முகமதலியின் படைகளும் சேர்ந்து கொண்டன. பிரிட்டிஷ் படைகள் திருச்சினாப் பள்ளியிலிருந்து வரும் லெப்டினன்ட் கர்னல் வொர்ஸ்டின் படைகளைத் திருவண்ணாமலையில் சென்று சந்திப்பதற்காக விரைந்து கொண்டிருந்தன. ஹைதர் அப் படைகளைத் தொடர்ந்து தொல்லை கொடுத்தான். செங்கம் கணவாய் அருகில் நடைபெற்ற முதல் தாக்குதலிலேயே நிஜாம் படைகள் சீர்குலைவுற்றோடின. இதன் பயனாக ஹைதர் படைகள் பெருந் தொல்லைக்கு ஆளாயின. பீரங்கிகளைக் களத்தில் விட்டுவிட்டே பின் நோக்க வேண்டி வந்தது. களத்தில் இவ்வாறு ஹைதர் தோல்வியுற்றாலும், வெற்றியின் பயனைப் பிரிட்டிஷ் படைகள் அடைய முடியவில்லை. இரவும் பகலும் ஹைதர்படைகள் அவர்களைத் தாக்கிப் பேரழிவு செய்தன.

திருவண்ணாமலைப் போர் 1767 (செப்டம்பர் 26)

திருவண்ணாமலையில் நடைபெற்ற போரிலும் நிஜாம் தன் படைக்கலங்களைத் தன் அமைச்சனும் படைத்தலைவனுமான ருக்னுத் தௌலாவிடம் ஒப்படைத்துவிட்டுக் களம்விட்டோடினான். ஆனால் அதன்பின் ஹைதர் காட்டிய படைத்தலைமைத் திறமை பிரிட்டிஷார் அனைவரும் கண்டு மலைப்படையத்தக்

கதாயிருந்தது. தென்னகம் கண்ட தலைசிறந்த படைத்தலைவன் என்று பிரிட்டிஷ் வரலாற்றாசிரியர்கள் அவனை வாயாரப் பாராட்டியுள்ளனர். போரில் கர்னூல் நவாப் ஒரு தோளில் படுகாயமுற்றான். நிஜாமின் பாரிய யானை களத்தில் மாண்டது. களத்தில் ஹைதர் வெற்றி நாட்ட முடியாவிட்டாலும் நிஜாம் ஓடியதால் ஏற்பட்ட போர்த் தோல்வியைத் தடுத்து நிறுத்திப் புகழ் நாட்டினான்.

இப்போரின் பின்னரே நிஜாம் பிரிட்டிஷாருடன் தனியாக மறை பேச்சுக்கள் தொடங்கினான். ஆனாலும் முன் பிரிட்டிஷாரை ஏய்த்ததுபோலவே அவன் இன்னும் தான் கட்சிமாறியதாகக் காட்டிக் கொள்ளாமல் ஹைதரை ஏமாற்றிவந்தான்.

ஆம்பூர் முற்றுகை *1767* (டிசம்பர் *6* )

ஹைதர் ஆம்பூரை முற்றுகையிட்டுக் கைப்பற்ற முயன்றான். ஆனால் இம்முயற்சி வெற்றிபெறவில்லை.

வாணியம்பாடிப் போர் 1767 (டிசம்பர் 8 )

ஹைதர் வாணியம்பாடிப் போரில் காட்டிய வீரசூரத் திறமைகள முற்றிலும் வீணாயின. அவன் இறுதியில் பின்வாங்க நேர்ந்தது.

இப்போரில் நிஜாம் ஒத்துழைக்கவில்லை. அவன் ஒளிவு மறைவின்றி நேரடியாகப் பிரிட்டிஷாருடன் 17 (பிப்ரவரி 23)—ல் உடன்படிக்கை செய்து கொண்டான். இதன்படி நிஜாம் ஆர்க்காட்டின் மீதுள்ள தன் பேருரிமையை விட்டுக் கொடுத்தான். அவன் உடன் பிறந்தாருள் ஒருவனாகிய சலாபதஜங் கைப்பற்றியிருந்த குண்டூரை அவன் வாழ்நாளளவும் அவனிடமே விட்டுவைக்கவும் நிஜாம் இணங்கினான்.

மூலபாகல் போர் *1768* (அக்டோபர் *4*)

ஹைதர் மூலபாகல் கோட்டையைப் பிடித்துக் கொண்டான். பிரிட்டிஷ் படைமுகவர் வொர்ஸ்ட் இந்நகரின் கோட்டையைத் திருப்பவும் கைப்பற்றிக்கொண்டு முன்னேறினான். ஆனால் இறுதியில் புதுப்படைகள் வந்திருப்பதாக ஒரு பிரிட்டிஷ் தலைவன் பாவனை காட்டியே ஹைதர் படைகளை ஏமாற்றினான். ஹைதர் எதிர்பாராத திடீர்த் தோல்வியின் பயனாக விழுந்தடித்து ஓடவேண்டியதாயிற்று.

களப்போர்களில் ஹைதர் பிரிட்டிஷாரை மூர்க்கமாக எதிர்த்தும் சுழன்று சுழன்று தாக்கியும் பேரிடர்கள் தந்தான். போர்க்களங்களில் ஒரு சிலவற்றில் பெயரளவில் அவன் வெற்றியை எதிரிக்கு விட்டுக்கொடுக்க நேர்ந்தாலும், இவற்

ருல் கூட அவனுக்கு நேர்ந்த அழிவைவிடப் பிரிட்டிஷாருக்கு ஏற்பட்ட இன்னலே மிகுதியாயிருந்தது.

பிரிட்டிஷார் ஹைதரை விட்டு விலகி ஹைதர் வென்று கைக் கொண்டிருந்த சேலம், கிருஷ்ணகிரி, வேங்கடகிரி, மூலபாகல், கோவார், ஹோசூர் முதலியபகுதிகளை மீட்டனர். ஆனால் ஹைதர் இச்சமயம் பிரஞ்சு உதவி பெற்று ஈரோடு, கரூர்ப் பகுதிகளைப் புதிதாகக் கைக்கொண்டு, வட தமிழகம் முழுவதும் தன் புயல்வேகப் போர்க்களம் ஆக்கினான். அத்துடன் தன்படைகளின் பெரும் பகுதியை மகன் திப்புவுடனும் படைத் தலைவருடனும் மைசூருக்கே அனுப்பிவிட்டு, 6000 படை வீரருடன் இராப்பகலாக மின்னலாகத் தாவிச் சென்னை சாந்தோம் வரைப் பாய்ந்து சென்றான். கிலிகொண்டு நடு நடுங்கிய பிரிட்டிஷாருடன் அவன் 1769-ல் "சென்னை ஒப்பந்தம்" செய்துகொண்டான். இதன்படி இருதரப்பாரும் ஒருவருக்கு ஒருவர் காப்புப் போரிலும் தாக்குதல்களிலும் உதவவேண்டுமென்ற முடிவு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

போராட்டத்தின் முடிவு ஹைதருக்குப் பெரு வெற்றியாய் அமைந்தது.

நிஜாம்—மராத்தியர் போராட்டம்:

சிங்குர்லிப் போர் 1771 (மார்ச் 6)

மராத்தியர் ஹைதர் ஆட்சியில் பல தடவை மைசூர் மீது படையெடுத்தனர். படைகள் கொள்ளைப் படைகளாதலாலும், மிகப் பெரியனவா யிருந்ததாலும் ஹைதர் அடிக்கடி அவர்களைக் குரங்குப் போர் முறைகளாலேயே சமாளித்தும், பல சமயம் பெரும் பொருள் கொடுத்தனுப்பியும் வந்தான். மைசூரின் அமைதிக்கும் அண்டை அயல் நாடுகளின் மக்கள் வாழ்வுக்குமே அவர்கள் பெருந் தொல்லையாய் இருந்தார்கள். 1771-ல் அவர்கள் மைசூர்மீதுபடையெடுத்து வந்தனர். சென்னை உடன்படிக்கையின்படி ஹைதர் பிரிட்டிஷார் உதவி கோரினான். ஆனால் சென்னைப் பிரிட்டிஷார் இச் சமயம் ஆர்க்காட்டு நவாப் முகமதலியின் கைப்பாவைகளாக இருந்தனர். அரசியல் நேர்மையை வீசியெறிந்து உடன் படிக்கையை மதியாதிருந்தனர். ஹைதர் தனித்து நின்றே மராத்தியர் அழிவுகளை ஏற்க வேண்டியதாயிற்று.

மராத்தியர் மைசூர் முழுவதையும் தம் சூறையாட்டுக்கு ஆளாக்கினர். ஹைதர் பலதடவை போரிட்டும், அவர்கள் முற்போக்கைத் தடுக்க முடியவில்லை சீரங்கப்பட்டினத்துக்கு 11 கல் தொலைவிலுள்ள சிங்குர்லியில் நின்று ஹைதர் வீரப் போராற்றினான். தற்செயலாகப் பல இயற்கை நிகழ்ச்சிகள்

ஹைதர் படைகளுக்கு இச் சமயம் தோல்விமேல் தோல்வி தந்தன. எதிரிகள் வீசிய வாணவெடி ஒன்று ஹைதரின் வெடி மருந்துப் பெட்டிகளில் வீழ்ந்து பேரார்ப்பரிப்புடன் வெடித்து அழிவு செய்தது. ஹைதரின் தமையன் மருமகனான லாலாமியான், நாராயணராவ் முதலிய படைத்தலைவர்களும், கருவூலக் காவலனான சீனிவாச ஜீவாஜியும் போரில் கொலையுண்டனர். மீர் ரஜா அலிகான், அலிஜமான் கான், அப்துல் முகமது மிர்து ஆகிய புகழ்மிக்க படைத்தலைவர்கள் படுகாயமுற்றனர். ஹைதர் தன் உயிரைக் காத்துக்கொள்ளவே பல கல் தொலை ஓடவேண்டியதாயிற்று. ஆனால் அப்படியும் அவனிடம் பற்றுதல்கொண்ட வீரத் தலைவன் யாகின்கான் திறமையே ஹைதரை எதிரிகள் வேட்டையாடிப் பிடிக்காமல் தடுத்தது.

இயல்பாக ஹைதர் போன்ற தோற்றம் யாகின்கானுக்கு வாய்த்திருந்தது. ஆனால் ஹைதருக்கு இல்லாத நீண்டதாடி அவனுக்கு உண்டு. இதுபற்றி ஹைதரும் பிறரும் அவனைக் கேலி செய்வதுண்டு. அவனும் ஹைதரிடம் அடிக்கடி குறும்பாகப் பேசுவான். "உங்களுக்கும் எனக்கும் என்ன வேற்றுமை, ஒரு தாடிதான்! தாடியை எடுத்துவிடத் துணிந்தால் நானும் மைசூரை ஆண்டுவிடுவேன்" என்பான்.

அவன் கேலிப்பேச்சு சிங்குரலிப்போர் முடிவில் உண்மையிலேயே மைசூர் அரசன் உயிரைக் காத்தது. அவன் தாடியை எடுத்துவிட்டு ஹைதராக நடித்துக் களத்தில் சுற்றித் திரிந்தான். மராத்தியர் அவனைப் பிடித்துச் சிறைப்படுத்தியதனால், ஹைதரே சிறைப்பட்டானென்று மகிழ்ந்திருந்தனர். மைசூர் அரசனுக்குரிய மதிப்பை எல்லாம் பெற்று யாகின் சிறையில் மகிழ்ந்திருந்தான். சிதறிய படையைத் திரட்டி மீண்டும் போர் தொடங்க இது ஹைதருக்கு வாய்ப்பளித்தது. தம் தவறுணர்ந்த மராத்தியர் வெட்கமடைந்து யாகினை விடுவித்தனர்.

1772ல் ஹைதருடன் மராத்தியர் இணக்க உடம்படிக்கை செய்துகொண்டு வெளியேறினர்.

மராத்தியர் படையெடுப்பால் ஏற்பட்ட குழப்பம் நீடிக்கவில்லை. அவர்கள் திரும்பிச் சென்றதே ஹைதர் சித்தலத் துருக்கம் (1772) ஹார்ப்பன ஹள்ளி (1772), மலபார் (1773), குடகு ஆகிய நாடுகளை வென்றான். 1776-ல் குத்தியைத் தாக்கி அதை ஆண்ட மராத்திய தலைவன் முராரிராவை வீழ்த்தனான். மைசூர்ப் பேரரசு இங்ஙனம் நாற்றிசையிலும் விரிவடைந்தது.

சாவனூர்ப் போர் 1776

ஹைதரின் சூத்தி வெற்றி மீண்டும் மராத்தியர் படையெடுப்புக்கு வழி வகுத்தது. அவர்கள் சாவனூர்வரை முன்னேறினர். ஆனால் ஹைதரின் படைத்தலைவன் முகமது அலி சாவனூர்ப் போரில் அவர்களை முறியடித்துத் துரத்தினான்.

ராரவிப் போர் 1777

சாவனூர் வெற்றியால் வெகுண்டெழுந்த மராத்தியர் ஹரிபந்த் என்பவன் தலைமையில் கடல் போலகன்ற ஒரு பெரும் படையை அனுப்பினர். மற்றும் நிஜாமுடன் உடம்படிக்கைசெய்துகொண்டு அவன் உதவியையும் வரவழைத்திருந்தனர். ஆனால் ஹைதர் முதலில் ஹரிபந்துடன் இருந்த துணைத் தலைவனான மாஜி பாட்கேக்கு 6 இலட்சம் வெள்ளி வாக்களித்து அவனை வசப்படுத்தினான். நிஜாம் படைகள் வருவதற்குள் ராரவி என்னுமிடத்தில் ஹைதர் போர் தொடங்கினான். போர் நடுவிலேயே மாஜி பாட்கேயின் படைகள் களத்திலிருந்து விலகிச் சென்றதனால், மராத்தியப் படைக் கடல் கலவரமுற்றது. அந்நிலையில் ஹைதரின் தாக்குதல் அதை வெகுண்டோடச் செய்தது.

மராத்தியப் படைப் பெருங்கடலே மறிந்தோடியது கேட்டு ராரவிக் களத்துக்கு மெல்ல வந்துகொண்டிருந்த நிஜாம் திரும்பிச் சென்றுவிட்டான். ஹைதர் அவன் நாட்டின் ஒரு பகுதியையும் கைப்பற்றி மீண்டான்.

இரண்டாம் மைசூர்ப் போராட்டம் 1780—1782

ஹைதர் பிரிட்டிஷாருடன் எவ்வளவு நேசமாக நடக்க முயன்றும், பிரிட்டிஷார் முகமது அலியின் தூண்டுதலால் தொடர்ந்து பல பகைச் செயல்களில் முனைந்தனர். மராத்தியர் படையெடுப்பின்போது உதவாதது இதில் ஒன்று. பிரஞ்சுத் துறைமுகமாகிய மாகியிலிருந்தே ஹைதர் தன் படைத் துறைகளுக்கு வேண்டிய குதிரைகளைப் பெற்று வந்தான். மாகியும் அவன் ஆட்சி எல்லைக்குள்ளேயே இருந்தது ஆனால் பிரிட்டிஷார் அவன் இணக்கமின்றி அதைப் பிடித்தனர். இதனால் ஏற்பட்ட மனக் கசப்புகளை மாற்ற பிரிட்டிஷார் மறைத்திரு ஷ்வார்ட்ஸைத் தூதராக அனுப்பியிருந்தனர். ஆனால் இது பயன் படவில்லை

இச்சமயம் மராத்தியர் மேற்கிலும் கிழக்கிலும் இருவேறு சக்திகளாகப் பிரிவுற்றிருந்தனர். ஹைதர் இவ்விரு பிரிவினருடனும் நிஜாமுடனும் ஒன்றுபட்டு ஒரு நால்வர் நேச உடம்படிக்கை செய்துகொண்டான். பிரிட்டிஷாரை இந்தியாவி

லிருந்து துரத்துவது அவ்வுடம் படிக்கை யாளரின் நோக்க பாகக் குறிக்கப்பட்டது.

ஹைதர் தமிழகப் பகுதி மீது படையெடுத்தான். அவன் மகன் திப்புவே படைகளின் தலைமை தாங்கி ஆரணி, திமிரி, திருவத்தூர், கருங்குழி ஆகிய இடங்களை வென்று ஆர்க் காட்டை முற்றுகையிட்டான்.

சர் ஹெக்டார் மன்ரோ இப்போராட்டத்தில் பிரிட்டிஷ் படை முதல்வனு யிருந்தான்.

பேரம்பாக்கம் போர் I: 1780 (செப்டம்பர் 8—9)

மக்லியாட் பெருமகன், கர்னல் பிரேய்த் வெயிட், ஹார் போக் ஆகிய பிரிட்டிஷ் படைத் தலைவர்கள் காஞ்சிபுரத்தில் படைகளுடன் கூடார மிட்டிருந்தனர். 2863 வீரருடன் கர்னல் பெய்லி வடதிசையிலிருந்து புறப்பட்டுக் காஞ்சி புரத்தைநோக்கி முன்னேறினன். வழியில் நெல்லூரைக் கைப் பற்றிக் கொண்டு சென்னையிலிருந்து 27 கல் தொலைவிலுள்ள கும்மிடிப் பூண்டியை அடைந்தான். அடுத்துள்ள ஆற்றின் கரையை அணுகியும் முன்னுராய்வின்றி வடகரையிலேயே கூடார மிட்டுத தங்கினான். ஆனல் அன்றிரவே ஆற்றில் வெள்ளம் வந்ததால் அவன் அதை மாதக் கணக்காகக் கடக்க முடியாமல் தடைபட்டிருக்க வேண்டியதாயிற்று. அதன் பின்னும் ஹைதர் அவர்களை ஓயாது துரத்தித் தொல்லைகளுக்கு உட்படுத்தினான்.

பேரம்பாக்கத்தில் நடைபெற்ற முதல் போரில் கர்னல் பெய்லியும் அவன் பிரிட்டிஷ் படை வீரரும் பெருந் தோல்வி கண்டனர்.

ஹைதரிடம் 5000 காலாள் வீரரும், 6000 குதிரைவீரரும், 12 சிறு பீரங்கிகளும், 6 பெரும் பீரங்கிகளும் இருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. பிரிட்டிஷ் படையில் 27 பணி முதல் வரும், 2600 தென்னக வீரரும், 6 பெரும் பீரங்கிகளும், 4 சிறு பீரங்கிகளும் இருந்தன. இப்போரில் பிரிட்டிஷார் படு தோல்வி கண்டனர். பீரங்கி, படைக்கலங்கள் யாவும் ஹைதர் வசமாயின. இறந்தவர்போகப் பெரும்பகுதி படை வீரரும் கர்னல் பெய்லியும் சிறைப்பட்டு ஹைதரால் தக் கோலம் சிறைக்கூடத்துக்கு அனுப்பப் பட்டனர். படுகாய முற்ற மக்களில் சிறைப்பட்ட பெய்லியும் ஒருவரா யிருந்தார்.

இப்போர் ஹைதருக்கு வீரப்புகழ் தந்தது. பிரிட்டிஷார் படைத்துறை வரலாற்றில் இத்தோல்வி அவர்களுக்கு ஒரு நீண்ட நாள் கறையாய் இயங்கிற்று.

### பேரம்பாக்கம் போர் II அல்லது புள்ளலூர்ப் போர் II (ஆங்கில வரலாறுகளின்படி I) 1780 (செப்டம்பர் 10)

இப்போரில் பிரிட்டிஷ் படைமாமுதல்வன் ஜெனரல் மன்ரோ ஹைதர் படைகளின் முன் மாபெரும் தோல்வி கண்டான். படையில் துணைத் தலைவர் 86 பேர்களுள் 16 பேரே உயிருடன் தப்பினர். பிரிட்டிஷ் படைகளும் பெருஞ் சேதத்துக்கு ஆளாயின. எஞ்சிய படைவீரர்களுடன் தலைவர் மன்ரோ ஓட்டமும் நடையுமாகச் சென்னைக்குக் கம்பி நீட்ட நேர்ந்தது. போகும் வேகத்தில் பீரங்கிகளைத் தூக்கிக்கொண்டு ஓடமுடியாமல் அவற்றைச் செங்கற்பட்டு ஏரிக்குள் எறிந்து விட்டுச் சென்றனர்.

இப் போரில் ஹைதர் குண்டுகள்பட்ட தடங்கள் போர்க் களத்திலுள்ள பனைமரங்களில் இன்னும் உள்ளன என்று கூறப் படுகிறது.

இதே சமயம் இரண்டரை மாத முற்றுகைக்குப்பின் ஹைதர் ஆர்க்காட்டைக் கைப்பற்றினன். முகமது அலிக்குப் பதிலாகத் திப்புவே ஹைதரால் ஆர்க்காட்டு நவாபாகப் பட்டம் சூட்டப்பட்டான.

### செஞ்சியில் ஹைதர் 1780 (நவம்பர்)

90,000 வீரருடனும், புயின்மோரின் என்ற பிரஞ்சுப் படைத் தலைவருடனும் ஹைதர் இச்சமயம் செஞ்சியைத் தாக்கினன். கோட்டையைக் காக்கும்படி பிரிட்டிஷ் தலைவன் மக்காலே அனுப்பப் பட்டிருந்தான். கீழ்க் கோட்டை பிடிபட்ட பின்னும் அவன் இராசகிரிக் கோட்டை உச்சியில் சென்று போராடினன். ஆனல் இறுதியில் ஐரோப்பாவுக்கே தம்மை அனுப்பிவிடவேண்டும் என்ற கோரிக்கையுடன் அவனும் இறுதியாகமீந்த படைவீரரும் சரணடைந்தனர். நேச உடம்படிக்கையை மதியாதபிரிட்டிஷார் பண்பு கேட்டிற்குத்தக்க பாடம் கற்பிக்கும் படி ஹைதர் அவர்களைச் சீரங்கப் பட்டினம் சிறைக் கூடத்திலேயே கிடந்து வதங்கும்படி செய்தான்.

போர் இறுதியிலேயே செஞ்சி மீண்டும் பிரிட்டிஷார் கைக்கு வந்தது ஆனல் அதன் அருமையறியாத பிரிட்டிஷார் அதை 1803-ல் தகர்த்துத் தரை மட்டமாக்க எண்ணியிருந்த தாக அறிகிறோம். நல்ல காலமாக நாட்டு மக்கள் அச்சமயம் காட்டிய எதிர்ப்பு இத்திட்டத்தைத் தகர்த்தது

சிதம்பரம் போர் 1781 (ஜூன் 18)

ஹைதர் திருச்சிராப்பள்ளியை நீண்ட நாள் முற்றுகையிட்டிருந்தான், திருச்சிராபள்ளியே அந்நாளில் தென் தமிழகத்தின் வாயில் ககவா யிருந்தது. அது கிட்டத்தட்ட விழும் நிலையை அடைந்திருந்தது. அதை ஹைதர் அலி று கைப்பற்றியிருந்தால், மைசூரின் வரலாறும் தென்னக வரலாறும் வேறு வகையாய் அமைந்திருக்கும். ஏனெனில் திருச்சிராப்பள்ளி கடந்து அன்று ஆர்க்காட்டு நவாபின் கையோ பிரிட்டிஷ் வாணிக ஆட்சியாளர் ஆற்றலோ சென்றதில்லை. தென் தமிழகத்தின் பிடி அச் சமயம் ஹைதரை வெற்றிகரமான தேசியப்போர் தளபதி யாக்கி யிருக்கும். ஆனால் சர் அயர் கூட்டை வென்றடக்கும் ஆர்வம் அவனைச் சிதம்பரத்துக்கு இட்டுச் சென்றது. சர் அயர் கூட் மூர்க்கமாகப் போர் ஆற்றினான்.

இப்போரில் கோயிலே கோட்டையாய் உதவிற்று. முதல் இரண்டு வாசல்களைப் பிரிட்டிஷார் கடந்தனர். ஆயினும், மூன்றுவது வாசல் கதவு மணல்குவியல்களால் பின்னால் வலுப்படுத்தப் பட்டிருந்தது. கூட்டின் படையில் ஏற்பட்ட வெடி விபத்து ஒன்று அவனை இரண்டாம் வாயிலில் அடைந்ததோல்வியைப் பெரிதாக்கி அவனைக் குலைந்தோடச் செய்தது.

புத்தந்துறை (போர்ட்டோ நோவா)ப் போர்: 1781 (ஜூலை 1)

புத்தந்துறையருகில் ஹைதர் எட்டுத்தடவை பிரிட்டிஷ் படைகளைத் தாக்கியும் இறுதியில் அவன் படைகள் கலைந்து வெருண்டோடின. தோல்வியை ஏற்கவிரும்பாமல் களத்திலேயே நின்ற வீரமன்னனை அவன் படைத்தலைவர்களே குதிரை ஏற்றிக் கொண்டு செல்ல வேண்டியதாயிற்று இப்போரில் ஹைதரின் படையழிவு 10,000-க்கு மேற்பட்டதென்று கூறப்படுகிறது.

புள்ளலூர்ப் போர் III (ஆங்கிலவரலாற்றாசிரியர் கூற்றுப்படி II 1781 (ஆகஸ்டு 27)

இப்போரில் பிரிட்டிஷாரிடம் வெள்ளையர், தென்னாட்டவர் உட்பட 11,000 வீரர் இருந்தனர் என்றும், ஹைதரிடம் 1,50,000 வீரரும் 80 பீரங்கிகளும் இருந்தன என்றும் கூறப்படுகிறது தென்னகத்தின் சிறந்த படைத்தலைவரான ஹைதரும், பிரிட்டனின் போர்ப் பயிற்சியும் திறமையுமிக்க படைத்தலைவரான கூட்டும் இதில் தம் திறமையெல்லாம் காட்டி ஒருவரை யொருவர் தாக்கினர் ஹைதர் வீரருள்

2000 பேருக்குமேல் மாண்டனர். அவன் களத்தில் தோல்வியுற நேர்ந்தது.

சோளிங்கர்ப் போர் 1781(செம்பர் 27 )

திப்புவின் வேலூர் முற்றுகையால் அவதியுற்ற பிரிட்டிஷ் தளபதி கர்னல் லாங் அவசர அவசரமாக வந்து உதவும்படி ஸர் அயர் கூட்டைவேண்டினன். கூட் வேலூரை நோக்கிப் புறப்பட்டான் ஆனல் சோளிங்கர்க் கணவாய் அருகே ஹைதர் புலிபோல் பதிவிருந்து தாக்கினன்.

படையணிகளில் ஹைதர் மையத்தையும், திப்பு இடது சிறுகையும் தலைமைவகித்து நடத்தினர். வலப்புறம் துப்பாக்கிப்படை வீரரைப் பிரஞ்சுப் படைத்தலைவன் லாலி நடத்தினன். மாலைவரைபோர் இருதிசையிலும் சாயாது நடைபெற்றது. ஆனல் மாலையில் ஹைதர் படைகள் காவேரிப்பாக்கத்தை நோக்கி விரைந்தோட நேர்ந்தது.

இவ் வாண்டிலேயே வேலூர் முற்றுகை தகர்க்கப்பட்டு அந்நகரமும் பிரிட்டிஷார் கைப்பட்டது.

ஹைதரின் மலபார்ப் போரில் வெற்றிப் புகழ்பெற்ற படைத் தலைவன் சர்தான்கான் இப் போரில் மாண்டான்.

அன்னகுடிப் போர்ப் 1782(பிப்ரவரி 17—18)

இப் போரில் ஹைதர் பெற்ற இளஞ்சிங்கமாகிய திப்புவின் கையில் பிரிட்டிஷார் தளபதி பிரேத்வெய்ட் சிறைப்பட்டான். இருபத்தாறுமணி நேரம் தொடர்ந்து நடைபெற்ற இப் போரில் பிரிட்டிஷ் படைகள் பெருஞ் சேதத்துடன் கலைந்தோடின. 20 படைத் தலைவர்களுள் பிரேய்த்வெய்ட் உட்பட 12 பேர் களத்தில் சிறைபட்டுச் சிரங்கபட்டினம் அனுப்பப்பட்டனர். போரில் படுகாய முற்றவர்களில் படைத்தலைவர் பிரெத்வெய்ட்டும் ஒருவர் .

ஹைதர் இப் போரின் பின் கூடலூரைக் கைப்பற்றினன்.

இதே சமயம் பிரிட்டிஷாருக்கும் பிரஞ்சுக் காரருக்கும் இப் போரின் ஒரு பகுதியாகவே பல கடற் போர்கள் நடைபெற்றன. இது போரின் போக்கைப் பாதிக்கவில்லை. ஏனெனில் இருபுறமும் சரிசம நிலையிலிருந்தன. ஆயினும் ஹைதருக்கு 2000 பிரஞ்சு வீரர்களின் படைத்துணை வந்தது.

இச் சமயம் டச்சுக்காரருடனும் பிரிட்டிஷாருக்குப்போர் ஏற்பட்டது. ஆனல் இதன் பயனகவே இலங்கையின் தலைசிறந்த கடற்படைத்தளமான திரிகோணமலை பிரிட்டிஷார் வசப்பட்டது.

திரிகலூர்ப் போர் 1782 (ஏப்ரல் 7 )

பிரிட்டிஷார் இச் சமயம் பம்பாயிலிருந்து படை வீரர் களையனுப்பி மலபாரில் கிளர்ச்சியைத் தூண்டிவிட்டனர். ஹைதர் சயித்மக்தூமை அத் திசைக்கு அனுப்பினான். அவன் மலபார் வீரரைத் துச்சமாகமதித்து ஓர் ஆற்றோரமாக நின்று போரிட்டான். ஆனால் படுதோல்வியடைந்த வீரர் ஓடிய வேகத்தில் ஆற்றில் விழுந்து பெருந்தொகையாக உயிரிழந் தனர். புகழ் மிக்க படைத்தலைவனான மக்தூமையும் இப் போரில் ஹைதர் இழக்க நேர்ந்தது.

தோபிகர்ப் போர் 1782 (மே 31)

ஹைதருடன் நால்வர் ஒப்பந்தத்தில் கலந்துகொண் டிருந்த மராத்தியரைப் பிரிட்டிஷார் ஹைதர்மீது ஏவினர். ஹைதர் போரைப் பிரிட்டிஷார் பக்கம சிறிது தளர்த்திக் கொண்டு தோபிகரில் அவர்களைத் தாக்கி முறியடித்தான்.

ஆரணிப் போர் 1782 (ஜூன் 2)

ஹைதர் இப்போரில் பிரிட்டிஷாரை வேலூர் நோக்கித் துரத்தினான்.

நெடுங்கல் போர் 1782 (ஜூன் 8)

ஹைதர் 6000 குதிரை வீரருடன் மறைந்திருந்து படைத் தலைவர் கூட்டின் படைகளைத் தாக்கிப் பேரழிவுகளுக்கு ஆளாக்கினான். படைத்தலைவர்களுள் முக்கியமானவரான லெப்டினண்டு குருயிட்சர் சிறைப்பட்டான்.

பனியானிப் போர் 1782 (நவம்பர் 29 )

திப்பு மலபாருக்கு உடனே சென்று போர் செய்தான். தொடக்கத்தில் அவன் பிரிட்டிஷ் படைத்தலைவன் ஹம் பார்ட்டனைத் தோற்கடித்துப் பின் வாங்கச் செய்தான். ஆனால் பனியானிப் போரில் கர்னல் மக்லியோட், கர்னல் ஹம்பார்ட்டன் ஆகிய இருவரும் அவனை முறியடித்தனர்.

ஹைதர் மறைவு 1782 (டிசம்பர் 7 )

இச் சமயம் முதுகில் பிளவை நோயால் ஹைதர் போர்க் களத்தருகே திடீரென்று மாண்டான். இச்செய்தி எவருக்குமே தெரியாமல் ஹைதர் படை வீரர் மறைத்ததுடன், முடிவு தெரிவியாமலே திப்புவை அழைத்து வந்து பொறுப்பை ஒப்படைத்தனர். போர் தொடர்ந்து ஹைதர் நடத்தியது போலவே நடந்தது. பிரிட்டிஷாருக்குக் கூட மாதக்கணக்காக மாவீரன் ஹைதர் மறைவு தெரியாமலே இருந்தது.

ஹைதர் படைத்தலைவர்களின் திறமையையும் ஹைதர் மீதும் அவன் அரசு மீதும் அவர்கள் வைத்திருந்த மாறாப் பற்றுறுதியையும் பெரிதும் விளக்க இதனினும் சிறந்த சான்று வேண்டா.

ஹைதர் மாள்வுக்குச் சற்று முன்பே அவனை மதித்த, அவனால் பதிக்கப்பட்ட பெரும்படைத்தலைவன் சர் அயர் கூட்டும் மாண்டான்.

## போரின் திரும்புகட்டம் 1782

சென்னை பம்பாய் பிரிட்டிஷாரும், மராத்தியரும் சேர்ந்து போர் நடத்தியும் திப்பு ஹைதரை விடத் திறமையாகப் போரை நடத்தினான். பிரிட்டிஷார் கைப்பற்றியிருந்த பேடனூரை அவன் மீட்டான். ஆயினும் நாட்செல்லச் செல்ல கிழக்கு மேற்கு இருதிசைப் போராட்டம் கிழக்கு மேற்கு வடக்கு தெற்கு என்ற நால் திசைப் போராட்டமாக அவனைச் சூழ்ந்தது. தெற்கே கர்னல்லாங் கரூர், அரவக் குறிச்சி, திண்டுக்கல் ஆகிய இடங்களைக் கைப்பற்றினான். கர்னல் மாத்யூஸ் மேல்திசையில் மலபாரைப் பிடித்தடக்கினான் 1783-ல் கர்னல் புல்லார்ட்டன் தென் திசைத் தலைமை ஏற்று சீரங்கபட்டினத்தை முற்றுகை செய்யும்படி கூடலூரில் வந்து படை திரட்டினான்.

## பெரிய பட்டினம் போர் 1783

திப்பு மங்களூர் முற்றுகையில் ஈடுபட்டிருக்கும் சமயம் கர்னல் புல்லார்டடன் பாலக்காட்டையும், கோயமபுத்தூரையும் கைவசப் படுத்திச் சீரங்கபட்டினத்தைத் தாக்க முற்பட்டான். அதே சமயம் மங்களூர் முற்றுகை நீட்டிப்பைப் பயன்படுத்திக்கொண்டு பேடனூர் அரசன் மைசூர்ப் படைகளை முறியடித்து ஒட்டி நாட்டைக் கைக்கொண்டான்.

சீரங்கப்பட்டினம் வீழ்ச்சியடையுமுன் பிரிட்டிஷார் திப்புவிடம் நேசஒப்பந்தம் செய்து கொண்டனர். படைத்தலைவர்கள் மைசூர் அரசையே அழிக்க விரும்பினாலும், மராத்திய, நிஜாம் அரசுகள் அதனால் மட்டுமீறி வளர்ந்துவிடக் கூடுமென்று அஞ்சி, அரசியல் தலைவர்கள் திப்புவின் முழுத் தோல்வியைத் தடுத்து நிறுத்தினர்.

ஒப்பந்தம் முடியுமுன் திப்பு மங்களூரைப் பிடித்துத் தன் மதிப்பை நாட்டினான். போரில் இறுதி வெற்றி தன் பக்கம் என்பதை அறிந்தே அவன் ஒப்பநதத்தைக் கூடியமட்டும் கடத்தி வந்தானென்றும், பிரிட்டிஷாரின் வற்புறுத்தலுக்கு

இணங்கியே நிஜாம், மராத்திய தூதர் முன்னிலையில் அருளி ரக்கம்காட்டி அவர்கட்கு விட்டுக் கொடுத்தானென்றும் அறிகிறோம்.

பிரிட்டிஷ் வரலாற்றாசிரியர்கள் பிரிட்டிஷ் வெற்றிகளையே பெருக்கி வந்தனர் என்பதையும், அவர்கள் போர்க்களத்தின் வீரவெற்றி யடையாமலே, பிரசாரத்தால் வெற்றி நாட்டு வதில் திறமை மிக்கவர்கள் என்பதையும் இது சுட்டிக்காட்டு கிறது.

மங்களூர் ஒப்பந்தம் *1784* (மார்ச்)

ஒப்பந்தப்படி இருதிசையிலும் வென்ற இடங்கள் திருப் பித்தரப்பட்டன.

திப்புவின் மைசூர் மராட்டியப் போராட்டம் *1786*

சாவனூர்ப் போர் II: கண்டகிப்போர் *1786*

மங்களூர் ஒப்பந்தப்படி குடகு தனியரசாகி யிருந்தது. ஆனால் திப்பு அதை வென்று கைக்கொண்டான். அதனுடன் நார்க்கண்டு, சித்தூர், தார்வார், அடோணி, பாதாமி ஆகிய வற்றையும் கைப்பற்றி மராத்தியர் உள்நாட்டை நோக்கி முன்னேறினான். இரண்டாம் மைசூர்ப் போரில் உடன்படிக்கை மீறிய மராத்தியருக்கு இதுதண்டனையாய் அமைந்தது ஆனால் இதைத் தடுக்க நிஜாமுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு அவர்கள் முன்னேறி வந்தனர்.

சாவனூரர்ப் போரிலும் கண்டகிப்போரிலும் நிஜாம்படை யுடன் மராத்தியர் திப்புவிடம் படுதோல்வியுற்றனர் களத் தில் எதிரியின் படைத்தளவாடங்களும் பொருட்குவையும் ஏராளமாகத் திப்புவின் கைப்பட்டன.

*1782*—ல் இருவருமே திப்புவுடன் நேச இணக்கம் செய்து கொண்டு பின் வாங்கிச் சென்றனர்.

மூன்றாவது மைசூர்ப் போராட்டம் 1790—1792

ஹைதர்—திப்பு பிரிட்டிஷ் ஆட்சியாளரைச் சரிசம நிலை யில் எதிர்த்துப் போராடும் சமயத்திலேயே, தென் தமிழகத் தில் வீரப்பாளைய மரபில் வந்த சிவகங்கை, பாஞ்சாலங்குறிச் சிப் பகுதியில் மக்கள் சக்தி அதற்கெதிராகக் குமுறிக்கொண் டிருந்தது. ஹைதர் பாளையக்காரரிடம் தென்திசைப் போராட் டத்தில் ஒரு தடவை தொடர்பு கொண்டும் அம் மக்கள் சக்தியின் வலிமையை உணர்ந்துகொள்ளத் தவறினான். திருச்சிராப்பள்ளி முற்றுகையைக் கைவிட்ட அவன் பெரும் பிழைக்கு இதுவே காரணம் ஆகும். தவிர, மைசூர் அரசைத்

தென்னகத்தின் பேரரசாக்கிய பின்பே பிரிட்டிஷாரைத் துரத்த முடியும் என்று ஹைதர் கருதினன். ஆகவே அவன் முதல் எதிர்ப்பு பிரிட்டிஷாரின் ஏலமாட்டாக கையாளும், அதே சமயம் அவர்களையே ஆட்டிப்படைத்த சூதாடியுமான முகமதலிமீதே சென்றிருந்தது.

திப்பு தென் தமிழகத்தின் தேசிய உயிர் நிலையை நன்கு உணர்ந்திருந்தான். ஆனல் முகமதலியின் கை கடந்து தெற்கே செல்வதைவிட, மேலகடலோரமாக வளைந்து செல்வது பெரும்பயன்தரும் என்று அவன் கருதினன். இது சிவாஜி கொண்ட கருததின் ஒரு தென்திசைப் பதிப்பு என்பதில் ஐய மில்லை. ஆனல் இருவரும் அதில் முழுவெற்றி காணவில்லை. சிவாஜி தமிழக வெற்றியைப் பயன்படுத்த உயிர்வாழவில்லை. திப்புவோ மேல்கடற்கரையில் மலபார் முழுவதையும் கொச்சி யையும் வென்றபின் 1789—ல் திருவாங்கூர் மீது பலதடவை படையெடுத்தான். திருவாங்கூர் அரசியல் வாழ்வே இதனல் கிடுகிடுத்தது. ஆனல் திருவாங்கூரின் வீரத்தளபதி இராமை யன் தளவாய் பிரிட்டிஷ் உதவியுடன் அத்திசையில திப்பு வைத் தடுத்து நிறுத்தினன். அடிமைத் திருவாங்கூர் வாழ்வு இதனல் நீடித்தது—ஆனல் தென்னகத்தின் அடிமைத்தனமும் இதனலேயே நீடிக்க நேர்ந்தது.

பிரிட்டிஷார் 1790-ல் நிஜாமுடனும் மராத்தியருடனும் ஒப்பந்தம் செய்துகொண்டு போரில் இறங்கினர்.

சத்தியமங்கலம்போர் *1790* (செப்டம்பர் *13*)

பிரிட்டிஷ் படைத்தலைவன் மீடோஸ் 1790-ல் கரூர், அர வக்குறிச்சி, தாராபுரம் ஆகிய பகுதிகளையும் திண்டுக்கல்லை யும், கோயமுத்தூரையும் வென்று, திப்பு தென்திசை வராமல் தடுக்க முனைந்தான். ஆனல் அவன் தென்கிழக்கிலிருந்தே மைசூர்த தாயகத் துக்குள்ளும் புகுந்து தாக்கத திட்டமிட்டி ருந்தான். இது முடியவில்லை. ஏனெனில் அப்பகுதியிலிருந்த கஜ்ஜலஹததுக கணவாய் திப்புவின் அரண் வாயிலாய் அமைந்திருநதது அத்துடன் பவானியாற்றின் வடகரையில் சத்தியமங்கலததருகே நடந்த போரில் பிரிட்டிஷ் படைத் தலைவன் பிளாய்ட், திப்புவுக்குமுன் தலைதெறித்தோடிக் கோயமுத்தூர் சென்று தஞ்சமடைந்தான்.

அரிகேராப் போர் *1791* (மே *15*)

மைசூரைத் தாமே தனித்துநின்று எதிர்க்க முடியா தென்று சென்னை பிரிட்டிஷார் இச்சமயம் உணர்ந்தனர். இந்திய ஆட்சி முதல்வர் கார்ன்வாலிஸ் பெருமகனர் தாமே

நேரடியாகச் சென்னைவந்து படைத்தலைமை ஏற்றார். அவர் ஆணைப்படி சென்னையிலிருந்து படைத்தலைவர் மீடோஸ் தென்புறமும், பம்பாயிலிருந்து படைத்தலைவர் ஆபர்காம்பி மேல் திசையில் மலபாரில் மறுபுறமும் தாக்கினர். வடக்கே பாது காப்பற்ற வட எல்லைகளைத் தாக்கும்படி மராத்தியரும் நிஜாமும் தூண்டப்பட்டனர். ஆட்சி முதல்வர் கார்ன்வாலிஸ் தாமே கீழ்திசைத் தாக்குதலை ஏற்று வேலூரில் வந்து பெரும் படை திரட்டினார். ஆம்பூர்க் கணவாய வழியே மைசூரினுள் புகுந்து அவர் அரிகேராப் போரில் திப்புவை முறியடித்தார். இதன பின் பல கோட்டைகளைப்பிடித்து, அவர் சீரங்கப்பட்டினத்தையே தாக்க முற்பட்டார்.

நாற்புறமும் படைசூழ்ந்த நிலையில் திப்பு பணிந்து ஒப்பந்தத்துக்கு இணங்கினான்.

திப்பு தன் பேரரசில் பாதியை விட்டுக் கொடுக்கும்படியும், போர்க்கடன் தீரும்வரை தன் இரு புதல்வரையும் பிரிட்டிஷாரிடம் பணயமாக விட்டு வைக்கும்படியும் வற்புறுத்தப்பட்டான்.

நிஜாமையும் மராத்தியரையும் நம்பமுடியாத நிலையிலேயே பிரிட்டிஷார் விரைந்து ஒப்பந்தத்துக்கு இணங்கினர். அவர்கள் படையழிவும் படைத்தளவாட அழிவும் இதனைப் பின்னும் ஊக்கின.

பிரிட்டிஷாருக்கு இப்போர் வெற்றி மூலம் மலபார் ஆட்சியும், குடகு அரசனமீது மேலுரிமையும் கிட்டின.

### கர்டா அல்லது கர்ட்லாப் போர் 1795 (மார்ச் 11)

மராத்தியர்-நிஜாம் போராட்டம்

கார்ன்வாலிஸுக்குப்பின் வந்த ஆட்சி முதல்வன் ஸர் ஜான் ஷோர் வாணிக ஆட்சியில் வாணிக ஆதாயம் தவிரப் போர் எதிலும் ஈடுபாடு கூடாது என்ற கொள்கையை உறுதிப் பிடியாகக் கொண்டிருந்தான், இதை உணர்ந்த மராட்டியர் படைத்திறம் அற்றவனாய் பிரிட்டிஷாரையே நம்பியிருந்த நிஜாம்மீது படையெடுத்தார்கள்.

மராத்தியர் அச்சமயத்தில் பிளவுற்றிருந்தாலும் தில்லி முகலாயப் பேரரசரைக்கூடத் தம் கைப்பாவை யாக்குமளவு வலிமை பெற்றிருந்தனர். வடக்கே தில்லி வரை சிந்து கங்கை ஆறுகளுக்கு இடைப்பட்ட எல்லையிலும், மேற்கு கிழக்கு கடலெல்லையிலும் அவர்கள் ஆட்சி பரந்து தென்னாட்டை வட இந்தியாவிலிருநது பிரிக்கும எல்லையரசாய் அமைந்திருந்தது. இத்தகைய அரசின் பெரும்படையை எதிர்க்க அஞ்சி பிரிட்டி

ஷார் உதவியை நிஜாம் கோரியும், சர்ஜான்ஷோர் மறுத்து விட்டான். நிஜாம் மனமொடிந்து பிரஞ்சுக்காரரை அணுகினன். ரேய்மண்ட் என்ற பிரஞ்சுப் படைத்தலைவன் அப்பொறுப்பை ஏற்றுப் படைகளைப் பயிற்றுவித்துக் களத்திலும் உதவினன்.

மராத்தியப் படைகள் நாடெங்கும் பரந்து கைப்பற்றிக் கர்டாவில் நிஜாமைச் சூழ்ந்தன. ஆனல் கர்டாப் போரில் ரேய்மண்டின் ஒப்பற்ற படைத்திறமை மராத்தியப் படைத் தலைவன் பரசுராம் பாவேயைக் கிட்டத்தட்டப் பின்னடையச் செய்தது. ஆயினும் பல பழங்கால அரசரைப்போலப் போர்க் களத்துக்கே தன் குடும்பஞ்சூழ வந்திருந்த நிஜாம், பெண்டிர் பாதுகாப்பைக் கருதிக் களம் விட்டோட விரும்பினன். ரேய்மண்டின் அறிவுரையை மீறி நிஜாம் அவனையே தனக்கும் தன் பெண்டிருக்கும் பாதுகாப்பாக உடன்கொண்டு ஓடினன்.

இப்போரில் நிஜாமிடம் 1,30,000 படைவீரரும், மராட்டியரிடம் 1,10,000 படைவீரரும இருந்ததாக அறிகிறோம்.

தோல்வியை வரவேற்றதற்கேற்ப, நிஜாம் மராத்தியருக்கு மூன்று இலட்சம் வருமானமுள்ள ஆட்சிப் பகுதியைவிட்டுக் கொடுத்ததுடன், தன அமைச்சன் முன்ஹீர் உல்முல்கையே பிணையமாகவும் அனுப்பி வைத்தான்.

ரேய்மண்டின் உதவிக்கு நிஜாம் அவனைப் பாராட்டி அவனுக்குச் சடப்பையைப் பரிசளிக்க முன்வந்தான். ஆனல் போரில் தாம் உதவாததனல் பிரஞ்சு ஆதிக்கம் வளரவிட்ட பிழை இப்போது பிரிட்டிஷாரை உறுத்திற்று.

நிஜாமின் புதல்வன் அலிஜா இச்சமயம் பார்த்துக் கிளர்ச்சி தொடங்கினன். திப்பு அவனுக்கு உதவ வாக்களித்தான். நிஜாம் மீண்டும் பிரிட்டிஷாரையும் ரேய்மண்டையும் உதவிக்கழைத்தான் பிரிட்டிஷார் உதவியனுப்பினர். ஆனல் அது வந்து சேருமுன் மீண்டும் ரேய்மண்ட் உதவியால் நிஜாம் கிளர்ச்சியை அடக்கிவிட்டான். ஆயினும் அச்சமயத்தை நழுவவிடாமல் பிரிட்டிஷார் நேச ஒப்பந்தம் செய்து சமயத்தில் உதவிய வீர ரேய்மண்டின் உரிமைப் பரிசையும் தட்டிப் பறித்தனர்.

நான்காம் மைசூர்ப் போராட்டம் 1799

கீழ்திசையில் தென்னகத்தை ஒரு வலிமைவாய்ந்த பேரரசாக்கக் கனவு கண்டவன் ஹைதர். ஆனல் அது அவன் தொலை அரசியல் நோக்கமாக மட்டுமே இருந்தது. அவன்

அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. திப்பு அதே போராட்டத்தை ஆத்திரப்பட்டுப் பறைசாற்றினான். இதனால் விழிப்புற்ற பிரிட்டிஷ் அரசியல் விரைந்து அவனை அழித்துக் கீழ்திசையை உடனடியாகக் கைக்கொண்டு வளர எண்ணிற்று.

மேற்கே அமெரிக்க குடியேற்றங்களின் மேலாட்சியைப் பிரிட்டன் இச்சமயம் இழந்ததும், ஸர் ஜான்ஷோர் வாணிகக் கோட்பாடு முறிவுற்றதும் இவ்வெண்ணத்தை வளர்த்தன. ஐரோப்பாவைத் தன் காலடியிலிட்டு ஆட்டிவந்த நெப்போலியன் எழுச்சியும் கீழ்திசையில் அதே வகை ஆதிக்கத்தை நிறுவிவிடும் துடிப்பைப் பிரிட்டிஷாருக்குத் தந்தது.

தென்னக அரசுகளின் ஏலாமடமைகளையும் பிற்போக்குகளையும் கண்ட திப்பு அரேபியா, காபூல், கான்ஸ்டாண்டிநோபிள் ஆகிய கீழ்திசை முஸ்லிம் ஆட்சியாளர்களுக்குத் தூதர் அனுப்பி அவர்கள் ஆதரவைப் பெறத் தொடங்கினான். அதுடன் 1715-லிருந்து பிரஞ்சுக்காரர் கைவசமிருந்த மோரிஸ் தீவின் ஆட்சியாளருக்கும் தூதனுப்பி, பிரிட்டிஷ் கடற்படையை எதிர்க்கவல்ல ஒரு பெருங்கடற்படையை அனுப்பும்படியும், தனக்கு ஒரு கடற்படை அமைத்துத் தரும்படியும் முடங்கல் வரைந்தான்.

இந்நேரம் பிரஞ்சுப் புரட்சி கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியிருந்த சமயம் ஆகும். புரட்சியார்வம் மேல்திசையில் நிரம்பிக் கீழ்திசையில் பிரஞ்சு ஆட்சியிடங்களிலும் வழிந்தோடத் தொடங்கியிருந்தது. 'சமத்துவம், சகோதரத்துவம், சுதந்தரம்' என்ற குறிக்கோள்களும் சுதந்தரக் கொடியும் தாங்கிய புரட்சிக் கழகங்கள் உலகமெங்கும் அன்று பரவி வந்தன. இச்சூழ்நிலையில் ஒரு தென்னக வேந்தனே புரட்சியை ஆதரிக்க முன்வந்தான் என்ற மகிழ்ச்சியில், மோரீஸ் ஆட்சி முதல்வர் திப்புவின் முடங்கலின்படி ஒன்றை பிரான்சின் புரட்சி அரசியல் தலைவனான நெப்போலியனுக்கு அனுப்பி வைத்ததுடன், அதை மொழிபெயர்த்து அச்சிட்டு பிரஞ்சு உலகெங்கும் பரப்பினர். அத்துடன் பிரிட்டிஷ் கடற்படையை எதிர்க்கும் கடற்படை அவர்களிடமில்லாத நிலையில், மைசூரில் புரட்சி அரசியலை ஆதரித்த எவரும் போகலாம் என்ற விளம்பரமும் செய்தனர்.

இதன் பயனாக மைசூரில் ஒரு புரட்சிக் கழகம் திப்புவின் தலைமையிலேயே அமைந்தது. புரட்சி மரபின்படி பொது மனித உடையணிந்து தோழர் திபபுவாகப் பேரரசன் திப்பு உலாடினான். ஒரு புரட்சிப் படையும் சில கப்பல்களும்

சித்தம் செய்யும் ஏற்பாடுகள் தொடங்கப்பட்டிருந்தன. ஆனால் அதன் தொகை பற்றி ஆங்கில வரலாற்றாசிரியர்கள் கேலி செய்தனர்.

இச்சமயம் எகிப்துமீது படையெடுத்துக் கெய்ரோவிலிருந்த நெப்போலியன் திப்புவுக்கு விரைந்து உதவுவதாக மறுமொழி எழுதியிருந்தான். ஆனால் இது திப்புவுக்குக் கிடைக்கவில்லை. பிரிட்டிஷார் அதனை இடையிலேயே கைப் பற்றியிருந்தனர்.

வரலாற்றாசிரியர் கேலி செய்தபடி பிரிட்டிஷ் ஆட்சி முதல்வரான வெல்லெஸ்லிக் கோமான் திப்புவின் ஏற்பாடுகளைக் கேலி செய்தமையவில்லை. அவன் போருக்கான பெரிய ஏற்பாடுகளில் ஆண்டுக்கணக்காக முனைந்தான். மைசூர் இச்சமயம் முந்திய போர்களாலேயே சிறகற்ற நிலை எய்தி இருந்தாலும், அதனை எதிர்க்கும் பொறுப்பை அவன் சென்னை மாகாண அரசியலுக்கு விடவில்லை. கீழ்திசையில் பிரிட்டிஷாரின் முழு மூலதளப்படைகளையும் திரட்டி, பிற அரசுகளையும் தன் பக்கம் கொண்டுவரப் பாடுபட்டான். பிரிட்டிஷார், நிஜாம், மராத்தியர் ஆகியோரால் 1790-ல் செய்யப்பட்ட முக் கூட்டு ஒப்பந்தத்தைப் புதுப்பித்தான். மைசூர் வெற்றியின் பின் வென்ற பகுதிகளை மூவருக்கும் பங்கிட்டுத் தருவதாக அவர்களுக்கு ஆவல் தூண்டினான். தவிர, பேரளவில் பிரஞ்சுப் படைகள் வைத்திருந்த நிஜாமை வெல்லஸ்லி தான் புதிதாக வகுத்த ஏகாதிபத்திய அடிமைச் சங்கிலியில் (துணைமை நேசப் பாதுகாப்பு முறை) முதல் காட்சி விலங்காக மாட்டி அந்த பிரஞ்சுப் படைகளை அனுப்பிவிடும்படி செய்தான்.

திப்புவை எதிர்க்க பிரிட்டிஷார் திரட்டிய படைகளும் பொதுநிலைப் படைகளல்ல; படைத்தலைவர்களும் தென்னக வாணிகக் களங்களுக்குரியவரல்ல. உலகக் களங்கண்ட பிரிட்டனின் முதற் பெருந் தலைவர்கள் அதில் இடம் பெற்றனர். ஆட்சி முதல்வரின் உடன் பிறந்தான் ஆர்தர் வெல்லஸ்லி என்ற வெலிங்டன் கோமகன் அந்நாளை ஐரோப்பாவின் தலை சிறந்த படைத்தலைவன். பின்னாட்களில் நெப்போலியனை வென்ற வீரன் அவனே. அவன் நிஜாம் படைகளின் தலைமையில் கிழக்கிருந்து முன்னேறினான். தலைமையரசின் மாபெரும் படைகள் படைத்தலைவன் ஹாரிஸின் கீழ் வடகிழக்கிலிருந்து அணிவகுத்து முன்னேறின. மேற்கே பம்பாயிலிருந்து லெப்டினன்ட் ஜெனரல் ஸ்டியூவர்ட்டின் தலைமையில் அனுப்பப்பட்ட மற்றொருபடை மலபாரையும், குடகையும் பக்கத் தளமாகக்கொண்டு மேல்திசையில் மைசூர் எல்லை புகுந்தது.

படைத்தலைவன் ஹாரிஸ் 21,000 படைவீரருடன் வேலூரிலிருந்து புறப்பட்டு ஆம்பூரில் 16,000 வீரரடங்கிய நிஜாம் படைகளுடன் இணைந்து முன்னேறினான். இந்த நிஜாம் படைகளை நிஜாமின் அமைச்சனான மீர்ஆலம் பகாதூரே நடத்தினான். அவர்களுக்கு முன்பே ஒரு முன்னணிப் படையுடன் படைமுகவன் பிளாயட் முன்னேறிச் சென்றிருந்தான். சிரங்கபட்டினம் சிறையிலேயேயிருந்து அவதிப்பட்ட படைத்தலைவனின் பேயார்கூட்டை மீட்க ஒரு வெள்ளையர் படையையும் படைத்தலைவன் ஹாரிஸ், ஆர்தர் வெல்லெஸ்லியுடன் அனுப்பினான்.

இத்தனை பெருத்த ஏற்பாடுகள் செய்யப்பட்ட பின்னரே ஆட்சி முதல்வன் வெல்லெஸ்லி திப்புவுக்குப் போர் அறிவிப்பு முடங்கல் அனுப்பத் துணிந்தான். அதில், எந்தவகையான கட்டுப்பாடுகளும், உறுதிகளும் இல்லாமலே சரணடைய வேண்டுமென்றும், அடையாவிடில் போர் என்றும் தீட்டியிருந்தான். பிளந்தாலும் வளையாத கற்பாறை போன்ற உறுதியுடைய வீரத் திப்பு, இவ்வாணவத்துக்கு முதலும் வட்டியுமாக ஆணவத்துடன் பதிலனுப்பிவிட்டுக் களம் கிளம்பினான்.

கால் முறிவுற்றுக் கிடக்கும் சிங்கக்குட்டியைச் சூழ்ந்த சிறு நரிகள், குறுநாய்கள்போல நாற்புறமும் அடர்ந்த பகைவரிடையே கலங்கா உறுதிகொண்ட திபபுவின் அந்நாளைய வீர சித்திரம் காண்டல் அரிதன்று—ஆனால் பிரிட்டிஷ் ஆட்சியாளரின் பிரசாரகரான வரலாற்றாசிரியர் எப்படியோ சித்திரத்தைத் தந்து அது தெரியாது மறைக்கும் கோடுகளையும், கீற்றுகளையும் அதன் மீது நிறைத்துள்ளனர்!

சித்தேசுவரப் போர் 1799 (மார்ச் 6)

திப்பு கீழ்திசைப் பேரெதிர்ப்பை அவ்வளவாகச் சட்டை செய்யவில்லை. முதலில் பின்னணி அரங்கத்தைச் சரிசெய்து காக்க விரும்பினான். ஆகவே தன் அமைச்சன் பூரணய்யாவையும் படைத்தலைவன் சய்யிது சாகிபையும் 3000 குதிரை வீருடனும் சில காலாட்படைகளுடனும் கீழ்திசையைப் பார்த்துக்கொள்ளும்படி விட்டுவிட்டு, மேற்கரங்கத்துக்கு விரைந்து தாவினான். தாக்குதல் எதிர்பாராது பின்னிருந்து நிகழ்ந்தாலும், அதை மலை முகட்டிலிருந்து பார்த்துக்கொண்டிருந்த குடகின் (அடிமை) அரசன் அதை பிரிட்டிஷாரிடம் கூறினான்.

திப்புவுடன் இத்தாக்குதலில் கலந்துகொண்ட படைத்தலைவர்கள் சய்யித் கபார், ஹுசேன் அலிகான், பந்தி நவாப் என்ற மூகமத் ரஜா ஆகியோர் ஆவர். பிரிட்டிஷ் படைவீரர் இத்தாக்குதலை உறுதியுடன் நெடுநேரம் சமாளித்தும் இறுதி

யில் தளர்வுறத்தொடங்கினர். ஆனால் அச்சமயம் படைமுகவர் ஸ்மித் துணைப்படைகளுடன் வந்ததால், திப்புவின் படைகள் இந்த மேற்கரங்கத்திலே சிதறியோடி பழையபடி கிழக் கரங்கம் நோக்க நேரிட்டது. மாண்டவரும் காயமுற்றவரு மாக 1500 பேரைக் களத்தில் இழந்தவனாகத் திப்பு மீண்டான்.

மழவள்ளிப் போர் 1799 (மார்ச் 27)

மழவள்ளி சீரங்கப்பட்டணத்துக்குக் கிழக்கேயுள்ள ஒரு கோட்டை. அதன் அருகே நடைபெற்ற போரில் திப்புவின் படைகள் படுதோல்வியடைந்தன. அவன் சீரங்கப்பட்டணம் கோட்டைக்குள் புகுந்து, அதன் பாதுகாப்பில் நின்று இறுதிப் போராடினான்.

சீரங்கப்பட்டணம் வீழ்ச்சி 1799 (மே 4)

சீரங்கப்பட்டணம் முற்றுகையில் படைவீரருடன் படை வீரனாக நின்று வீரப்போரிட்டு மைசூர் மன்னன் திப்பு புகழ் மாள்வெய்தினான். அவன் கடைசிப் போராட்டம் அந்நாளைய ஆங்கிலக் கலைஞரொருவனால் ஓவியமாகத் தீட்டப்பட்டு இற வாப் புகழுடன் இயங்குகின்றது.

தென் தமிழகத் தேசிய எழுச்சி 1750—1834

இந்திய மாநிலத்திலே தென்னகமும் தமிழகமும் எந்த அளவுக்கு நிலச்சார்பான அயலவர் படையெடுப்புக்கும் பண் பாட்டுத் தாக்குதலுக்கும் ஒதுங்கி நீடித்த தேசிய வாழ்வு பெற்றுள்ளனவோ, அதே அளவு விசயநகர கால முதலே தென்னகத்திலும் தமிழகத்திலும் தென் தமிழகமும் அதன் பகுதியாகிய தென் பாண்டிநாடும் திருவாங்கூரும் ஒதுங்கிய நீடித்த தேசிய வாழ்வுடையவையாகவே இருந்து வந்துள்ளன. அதே சமயம் இப்பகுதி உலகப் பண்பாட்டுக்கும் உலகத் தொடர்புக்கும் ஒதுங்கிவிடவில்லை. தென்கோடியில் இளை யான்குடியருகே இருந்த உவரித் துறைமுகமே ஒஃவிர் என்ற பெயரால் நாலாயிர ஆண்டுகட்குமுன் எகிப்தியருக்குப் பொன்னும் அகிலும் மணப்பொருள்களும் அனுப்பிவந்த கீழ் திசையின் மிகப் பழமையான கடல் வாணிகக் களம் ஆகும். அராபியரும் தொடக்ககாலக் கிருஸ்தவ, இஸ்லாமிய சமயத் தவரும், ஈழத்தவரும், கடாரத்தவரும், அணிமைக் காலத் திலே போர்ச்சுகீசியரும், டச்சுக்காரரும் இங்கே சமய, நாகரிக, வாணிகத் தொடர்புகள் கொண்டிருந்தனர். ஆனால் வடதிசைத் தொடர்புகளைப்போல இவை இப்பகுதியின் தேசிய வாழ்வை ஒரு சிறிதும் குலைக்கவில்லை ஏனெனில் இவை வடதிசைப் பண்படாத் தேசியக் கலவையுடன் தொடர்பற்றவை.

தென் தமிழகத்தின் தேசியப் புதுமலர்ச்சி, மைசூர் எழுச்சி கடந்து நீடித்துத் தழைத்ததாயினும், அது திப்புவுக்கு முன்னும், ஹைதருக்கு முன்னும் தொடங்கிவிட்டது என்னலாம். அது 1750-லிருந்தே திருநெல்வேலி மாவட்டத்தின் மேலைச்சீமையில் புலித்தேவர் தலைமையில் நெல்கட்டுஞ் செவ்வலில் முகிழ்த்து, மைசூர் ஆட்சியை ஹைதர் கைப்பற்று முன்பே அவனுடன் தொடர்பு நாடிற்று. பின் அவ்வெழுச்சி இராமநாதபுரத்தில் படர்ந்து, சிவகெங்கையில் 1772 முதல் கொழுந்துவிட்டெரிந்து, 1790க்குப் பின், பாஞ்சாலங்குறிச்சியில் புயல்வேகத்தில் வீசி ஆர்ப்பரித்தெழுந்தது. அதன் இறுதிக் கொழுங்கனல் 19-ம் நூற்றாண்டின் முதலிரண்டு ஆண்டுகளில் பாஞ்சாலங்குறிச்சியையும் சிவகங்கையையும் உட்கொண்டு மீண்டும் தென் தமிழகமெங்கும் அழன்றெரிந்து புறமடங்கிற்று. ஆனால் தென் தமிழகத்தில் அடங்கிய தீ அடுத்த ஐம்பது ஆண்டுகளில் தென்னகமெங்கும் பரவி இந்திய மாநிலமெங்கும் விடுதலைப் பேரியக்கங்களை வளர்த்தது.

பிரிட்டிஷ் வாணிக ஆட்சியும் ஆர்க்காட்டு நவாப் ஆட்சியும் பதினெட்டாம் நூற்றாண்டின் முடிவுவரை திருச்சிராப்பள்ளி கடந்து தென்திசை வரவில்லை. ஹைதர் திருச்சிராப்பள்ளியைக் கைப்பற்றியிருந்தாலோ, அல்லது ஹைதரும் திப்புவும் தென்னகப் பாளையக்காரருக்குச் சரிசம அடிப்படையிலே தேசிய ஆதரவு தர முன்வந்திருந்தாலோ அது என்றும் தென் தமிழகத்திலும் படர்ந்திராது, கீழ்திசையிலும் நிலைத்திருக்காது என்றே கூறலாம். இப்பகுதிக்கு அத்தகைய தேசிய முக்கியத்துவம் உண்டு என்பதை இரு செய்திகள் சுட்டிக்காட்டுகின்றன. ஒன்று பிரிட்டிஷாரே 1760-ல் இப்பகுதியை பிடித்தடக்குவதைவிட, ஹைதருக்கெதிராக உதவ வேண்டுமென்ற கட்டுப்பாட்டுடன், டச்சுக்காரரிடம் பேரம் செய்து அவர்களுக்கே கொடுத்துவிடலாமா என்று நினைத்திருந்தனர் என்பது. இச்சமயம் டச்சுக்காரருடன் போர் தொடங்கியதனாலேயே இந்த யோசனை கைவிடப்பட்டிருந்தது. இரண்டாவதாக, திருநெல்வேலிப் பாளையக்காரரும் மதுரைப் பாளையக்காரரும் ஒன்றுபட்டிருந்த சமயம் அவர்கள் ஒரு முடிவு செய்திருந்தனர். மதுரைவரை கைப்பற்றி விடுவித்துவிட்டால், அதன்பின் நாட்டைத் தம்மில் எவரும் கைக்கொள்ளாமல், பழைய மதுரைநாயகர் மரபினன் ஒருவனிடமே விட்டுவிடுவது என்று அவர்கள் திட்டமிட்டிருந்தனர். இதுவும் வெற்றியுற நடைபெறவில்லை. ஆனால் முற்றுப்பெறாத இவ்விரு திட்டங்களுமே தென் தமிழகத்தின் தேசீய முக்கியத்துவத்தைக் காட்டுகின்றன.

கடல்கடந்த தென்னாட்டினரில் பெரும்பகுதியினர் இன்றளவும் மிகப் பெரும்பாலாக இம் மாவட்டங்களுக்குரியவர்களே. வ. உ. சிதம்பரனாரின் கப்பல் போராட்டத்தை நேரிடையாகவும், நேதாஜி சுபாஸ் சந்திரபோஸின் விடுதலைப் போரைக் கடலகடந்த தமிழக மூலமாகவும் ஊக்கிய சீமையும் இதுவே. மாநிலத் தேசியத்துக்கு வித்து நிலமாக இயங்கியதுடன் அதன் ஒவ்வொரு புது வளர்ச்சிக்கும் அது தூண்டுதல் நிலமாகவும் விளங்கிவந்துள்ளது; வருகிறது.

குமரி முனையில் குடிகொண்டுள்ள தமிழ்த் தெய்வமும், கடலுள் ஆழ்ந்துவிட்ட தொல் பழங்காலக் குமரி நாட்டின் தொடர்பும் இத் தென்பாண்டி நிலத்தின் உயிர்மூலத் தொடர்பைச் சுட்டிக்காட்டுவனவா யுள்ளன.

## புலித்தேவர் போராட்டம் 1750—1760

மதுரை நாயகமரபை அழித்து மதுரை திருச்சிராப்பள்ளிப் பகுதிகளைக் கைப்பற்றிய சந்தாசாகிபு மதுரை நகரில் தன் ஆளாக ஆலம்கான் என்பவனை அமர்வித்திருந்தான். அவன் 1752-ல் திருச்சியில் முகமதலியைமுற்றுகையிடமுனைந்த சமயம், ஆலம்கானையும்துணைக்குஅழைத்திருந்தான். ஆலம்கான்மூன்று பட்டாணியரிடம் மதுரையாட்சியை ஒப்படைத்துவிட்டுச் சென்றான். சந்தாசாகிபு இப்போரிலேயே மாண்டதால், மதுரைப் பகுதி இப்பட்டாணியர் கையிலேயே நீடித்தது. போரில் வெற்றி பெற்ற ஆர்க்காட்டு நவாப் முகமதலியை (1749—1795) அவர்கள் பெயரளவில் மேலாளாக ஏற்றாலும், அவனுக்கெதிராகத் தென்திசையில் சூழ்ச்சிகளில் முனைந்து வந்தார்கள்.

பட்டாணியர் மூவரில் மூடேமியான் என்பவன் திருநெல்வேலிப்பகுதியில் தன்பிடியை வலுப்படுத்த முயன்றான். அந்நாளைய திருவாங்கூர் அரசன் மார்த்தாண்டவர்மனுக்குக் களக்காட்டுப் பகுதியை அளிப்பதாக வாக்களித்து அவன் ஆதரவையும் பெறப்பாடுபாட்டான்.

1751-லே முகமதலி தன் தம்பி அப்துல்ரஹிமைத் தென் தமிழகத்துக்கு அனுப்பி ஆட்சிக்கட்டுப்பாட்டையும், வரி வருவாயையும் சீர்ப்படுத்தி வரும்படி ஏவினான். ஆனால் தென் தமிழகம் அன்று எவர்பிடிக்கும் எளிதில் மசியாத முரட்டுத் தமிழகமாய் இருந்தது. முகமதலி மீண்டும் தன் தமையன் மஃபூஸ்கானை 1755-ல் அனுப்பினான். அவனுடன் நவாபின் முழு உரிமைபெற்ற படைத்தலைவன் யூசுப்கானும் பிரிட்டிஷ் படைத்தலைவன் கர்னல் ஹீரானும் துணை வந்தனர்.

திருநெல்வேலி மாவட்டப் பகுதியிலுள்ள பாளையங்களில், மேல் சிறையில் நெல்கட்டுஞ் செவ்வலும் கீழ் சிறையில் பாஞ்

சாலங் குறிச்சியுமே தலைமை நிலை பெற்றிருந்தன. நெல்கட்டும் செவ்வலின் தலைவர்கள் புலித்தேவர் என்றும் பாஞ்சால குறிச்சித்தலைவர்கள் வீரபாண்டியக் கட்டப் பொம்மு என்றும் பட்டம் தாங்கியிருந்தனர். அந்நாளில் பாஞ்சாலங் குறிச்சியாண்ட தலைவன் விடுதலைப் போராற்றிய வீரகட்டப்பொம்மனின் பாட்டனாகிய பொல்லாப் பாண்டிய நாயகன் (1736—1760) என்னும் இரண்டாவது கட்டபொம்மன் ஆவான். அவன் நவாபுக்குத் திறைதர ஏற்றுக் கொண்டு, நாட்டுப் பஞ்சநிலை விளக்கித் தவணை மட்டுமே கேட்டான். திறைகொடுக்கும்வரை சில முக்கிய பாளையத்து ஆட்களை யூசுப் பிணையாகக் கொண்டான். ஆனால் பாஞ்சைத் தலைவன் எதிர்பாராதபடி யூசுப் பிணையாட்களைத் திருச்சிராப் பள்ளிக்கே இட்டுச் சென்றான.

யூசுப்கானால் பாளையங்களின் திறைப்பணமாக மிகுதி பிரிக்க முடியவில்லை. படைகளுக்குச் சம்பளம் தரவே பணமில்லாமல் படை வீரர் முணு முணுத்து வந்தனர். இதற்கிடையே வட தமிழகத்தில் எழுந்த போர் காரணமாக, படையுடன் திருச்சிராப்பள்ளி வரும்படி அவனுக்கு அவசர அழைப்பும் வந்துவிட்டது இவற்றையெல்லாம் உளவறிந்து வைத்துக் கொண்ட புலித்தேவன் திறை சிறிதும் தரமறுத்துவிட்டான். புலித்தேவன் கோட்டையைத் தாக்குவதாக அச்சுறுத்தியும் அவன் அசையவில்லை. கோட்டை தாக்குவதற்கு வேண்டிய பீரங்கிகள்கூட அவனிடம் இல்லையென்பதைப் புலித்தேவன் அறிந்திருந்தான். தாக்குதல் தோல்வியுற்றபின் யூசுப் மதிப் பிழந்து திரும்பினான்.

புலித்தேவன் இப்போது திருநெல்வேலிப் பாளையங்கள் அனைத்தையும் தன் பக்கமாகத் திரட்டி வரிகொடாப் போராட்டத்துக்குச் சித்தம் செய்தான். மதுரைப் பாளையக் காரர்கூட அவன் தலைமையிலுள்ள திருநெல்வேலிப் பாளையக் காரருள் சேர இணங்கினர். பாளையக்காரர் கூட்டுப்படையில் 1000 குதிரை வீரரும் 25,000 காலாள் வீரரும் திரண்டனர். இதில் சேராதிருந்தது பாஞ்சாலங்குறிச்சி மன்னன் பொல் லாப் பாண்டியன் இரண்டாம் கட்டப்பொம்மன் மட்டுமே. அவன் பிணையாட்கள் எதிரி வசம் இருந்தது இதற்கு ஒரு காரணம் ஆனால் இது மட்டுமே காரணமன்று. அதன் பின் னோர்களைப் போலன்றி அவன் மனமார நவாப் மேலாட்சியின் ஆதரவாளனாகவே இருந்தான். 1756-ல் திரும்பிவந்த யூசுப் கான் சில ஊர்களைப் பாஞ்சாலங்குறிச்சிப் பாளையத்துடன் சேர்த்து அவன் ஆதரவைப் பெற்றான் ஆகவே அவ்வாண்டில் அவன் யூசுபுடன் சேர்ந்து திருநெல்வேலிக்கருகே ஒரு கல் தொலைவில் நடந்த ஒரு போரில் புலித்தேவன் தலைமையில்

கூடிய பாளையக்காரர் படைகளை முறியடிக்க உதவினான். அத்துடன் மதுரையை நவாப் ஆட்சிக்கு மீட்பதிலும் அவன் யூசுபுக்குப் பேருதவியாய் இருந்தான். ஆனால் இவ்வுதவிக்குப் பின்னும் பாஞ்சாலங்குறிச்சி மன்னன் திறை முழுதும் கொடுத்த பின்னரே, யூசுப்கான் பிணையாட்களை விடுவித்தான். பின்னாட்களில் பிரிட்டிஷ் ஆதரவாளராயிருந்த எட்டையபுர மரபினர்கூட இச்சமயம் திறைகொடுக்க முன்வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது

புலித்தேவன் களக்காட்டுப் பகுதியைத் திருவாங்கூர் அரசனுக்கு உறுதிப்படுத்துவதாகக் கூறி அவ்வரசனையும் தன் கூட்டில் சேர்க்க முயன்றான். ஆனால் யூசுப் அதனை அவனே கொள்ள விட்டதுடன், திருவாங்கூர் அரசன் பகைவருள் வடகரைப் பாளையக்காரனை வென்று துரத்தவும் உதவினான். வடகரைப் பாளையக்காரன் புலித்தேவனிடமே அடைக்கலம் புகுந்தான். புலித்தேவனின் கோட்டையான வாடாதேவ நல்லூரை இதன் பின் திருவாங்கூருடன் சேர்ந்து யூசுப் முற்றுகையிட்டும் அதில் வெற்றிபெறாமல் பின்னிடைய நேர்ந்தது.

ஆனால் 1766-ல் திருவாங்கூர் அரசன் களக்காட்டுப் பகுதியை நிலையாக நவாபுக்கே விட்டுக்கொடுக்க வேண்டி வந்தது.

புலித்தேவன் தலைமையில் பாளையக்காரர் வலிமை வியக்கத்தக்க முறையில் நீடித்து வளர்ந்தே வந்தது. மஃபூஸ்கானை அவர்கள் முற்றிலும் தம் வயப்படுத்தித் தம் கைப்பாவை ஆக்கியிருந்தனர். 1760-ல் பொல்லாப்பாண்டியன் இரண்டாம் கட்டப்பொம்மனுக்குப் பின் பட்டத்துக்குவந்த பாஞ்சாலங்குறிச்சி மன்னன் ஜகவீர பாண்டியனான மூன்றும் கட்டபொம்மனும் (1760—1791) அவர்கள் பக்கமாக ஆதரவுதரத் தொடங்கினான்.

டச்சுக்காரர் பாளையக்காரருக்கு ஆதரவு தருவதாக வாக்களித்திருந்தனர் ஹைதர் தம் பக்கம் சேர்வதானால், முகமதலியையும் பிரிட்டிஷ் ஆட்சியையுமே தமிழகத்திலிருந்து துரத்த உதவுவதாகத் தகவல் அனுப்பிவந்தான். பிரஞ்சு ஆட்சித் தலைவன் தியூப்ளே முகமதலியை நீக்கி மஃபூஸையே நவாபாக்க உதவுவதாகப் பூலித்தேவருக்கு எழுதினான். ஆனால் இந்த ஆதரவுரைகள் எவையும் நிறைவேறவில்லை.

டச்சுக்காரர் விரைவில் தமிழகத்திலிருந்த தம் பிடியை மட்டுமன்றி, இலங்கையையும் பிரிட்டிஷார் கைக்கு மாற்றினர் ஹைதரும் திப்புவும் தென் தமிழகத்தை எட்டமுடியாது போயிற்று. பாளையக்காரர் பிரிட்டிஷாரை எதிர்ப்பதற்காகக்

கூட இவ்வயலவர் எவர் கையிலும் பணிந்துவிட விரும்ப வில்லை. இவை தவிரத் தென்னகப் பாளையங்களின் தலைமை மெல்லப் பாஞ்சாலங்குறிச்சிப்பக்கமாக மாறிற்று.பாஞ்சாலங் குறிச்சி மன்னர் வெளியாதரவை எதிர்பாராமலே செஞ்சி மன்னன் தேசிங்கைப்போலவும், முதல் உலகப்போரில் பெல்ஜி யத்தைப் போலவும் வலிமைவாய்ந்த எதிரியைத் தம் தனி வீரத்தாலேயே எதிர்த்துப் போரிட்டனர்.

சிவகங்கை எழுச்சி 1772—1780

தென் தமிழகத் தேசீய எழுச்சி அரங்கத்தின் இரண்டா வது கட்டம் இராமநாதபுரத்துக்கும் சிவகங்கைக்கும் தற்கா லிகமாக மாறிற்று.

ஜகவீர பாண்டியன் மூன்றும் கட்டபொம்மன் எதிரியா கச் செயலாற்றியதால் பிரிட்டிஷார் பாஞ்சாலங்குறிச்சியை மீண்டும் மீண்டும் தாக்கினர். சிவகிரிப் பாளையத்தின்மீதும் தாக்குதல் நடத்தினர். தாக்குதல்களின் பின்னும் அவர்கள் பணிய மறுக்கவே,இருவரையும் நாடு கடத்தினர். இராமநாத புரம் சேதுபதி அவர்களுக்கு ஆதரவு கொடுத்திருந்தான். பாஞ்சாலங்குறிச்சியில் ஒரு புதிய பாளையக்காரனை நியமித்த போது, மக்கள் அவனை ஏற்க மறுத்தனர். மூன்றும் கட்ட பொம்மனும் திரும்பிவந்து பாளையத்தைப் கைக்கொண்டு, பிரிட்டிஷார் நியமித்த புதிய பாளையக்காரனைக் கொன்றான்.

இராமநாதபுரம் இத்தகைய ஆதரவு கொடுத்ததுடன் நிற்கவில்லை. அச்சீமை முழுவதிலும் அதனைச் சார்ந்த சிவ கங்கைச் சீமையிலும் திறை பிரிக்க முடியாத நிலை இருந்து வந்தது. இதையுணர்ந்த நவாப் பிரிட்டிஷ் படையுடன் தன் படை ஒன்றையும் ஜோஸப் ஸ்மித் என்பவன் தலைமையில் இராமநாதபுரம் அனுப்பினான். புதுக்கோட்டைத் தொண்டை மான் படைகளும் பிரிட்டிஷாருக்கு, இந் நடவடிக்கைகளில் உதவின. 9 வயது சிறுவனாயிருந்த சேதுபதியையும் அவன் தாய் தங்கையரையும் சிறைப்படுத்திவிட்டு நவாப் இராம நாதபுரத்தையே தென் தமிழகத்தின் தலைநகராக்கி நேரடி யாகப் பாளையக்காரர்மீது ஆட்சி செலுத்தத் தொடங்கினான்.

நவாப் படையும், பிரிட்டிஷ் படையும், புதுக்கோட்டைப் படை உதவியுடன் இராமநாதபுரத்திலிருந்து சிவகங்கைக்கும் சென்று. அதன் தலை சிறந்த கோட்டையாகிய காளையார் கோயிலை முற்றுகையிட்டன. இப்போரில் சிவகங்கை மன்னன் முத்துவடுகநாதனும் (1750—1772) அவன் வீர மனைவி வேலு நாச்சியும் அவர்கள் அமைச்சரான மருது துணைவர்களும் கடும் போரிட்டனர். மன்னன் முத்துவடுகநாதன் அப்போரி லேயே மாண்டான். மற்றவர்கள் நாடிழந்து ஓடி, அச்சமயம்

திண்டுக்கலில் இருந்த ஹைதர்அலியிடம் அடைக்கலம் புகுந்தனர்.

நாட்டை அயலவர் ஆண்டாலும், மக்கள் உள்ளத்தில் அரசியும் மருதிருவருமே ஆண்டனர். நவாப், பிரிட்டிஷார், புதுக்கோட்டைப் படையினால் மக்கள் ஆதரவைப் பெறவும் முடியவில்லை, திறையும் திரட்ட முடியவில்லை. ஆகவே அவர்கள் அரசி வேலுநாச்சியையே வரவழைத்து 1780—ல் அவரிடமே நாட்டை ஒப்படைத்தனர். ஆனால் வேலு நாச்சியோ அதை மருதிருவரிடம் ஒப்படைத்தார். மருதிருவர் நாடாள்வதை நவாபும் பிரிட்டிஷாரும் விரும்பாவிட்டாலும், வேறு வழியின்றி வாளாவிருந்தனர். திறை கொடாமலே மருதிருவர் நாட்டை அமைதியுடன் ஆண்டுவந்தனர். நவாபும் பிரிட்டிஷாரும் தம் முழுக் கவனத்தைத் தெற்கே பாஞ்சாலங் குறிச்சியில் செலுத்த வேண்டியிருந்ததால், சிவகங்கைப் பக்கம் நெடுநாள் நாடவில்லை.

பாஞ்சாலங் குறிச்சிப் புரட்சி 1785—1801

I மன்னன் போராட்டம் 1785—1798

பிரிட்டிஷார் 1781—ல் நவாபிடமிருந்து நாட்டின் வரி வசூலிப்பைத் தாமே நேரில் எடுத்துக்கொண்டு தென்தமிழகத்துக்கு ஒரு வரிமுதல்வனை (Collector) நியமித்தனர். வரிமுதல்வன் இர்வின் ஆலோசனையின் பேரில் 1783—ல் அவர்கள் பாஞ்சாலங் குறிச்சியைப் படையெடுத் தடக்கக் கர்னல் புல்லார்ட்டன் என்பவனை ஒரு பெரும் படையுடன் அனுப்பினர். மூன்றாம் கட்டபொம்மன் பணிந்து அவனை வரவேற்க இணங்காததனால், கோட்டை முற்றுகையிடப்பட்டது. பீரங்கிகள் ஒருநாள் முழுதும் குண்டுகள் வீசிக்கோட்டையைத் தகர்த்தன. எதிரிகள் இனி உள்ளே நுழைந்துவிடுவர் என்று தெரிந்தபின், மன்னனும் படைவீரரும் முற்றுகைவீரர் தளர்ந்து உறங்கிய சமயம் வெளியேறிச் சிவகிரிக்குச் சென்று தஞ்சம் புகுந்தனர்.

சிவகிரியும் முற்றுகைக்கு ஆளாயிற்று. இப்போராட்டம் முடியுமுன் ஹைதரின் போர் நிலவரத்தை முன்னிட்டு, புல்லார்ட்டன் மீண்டும் வடக்கே அழைக்கப்பட்டான். ஆகவே விரைவில் திறை கொடுக்கும்படி பாளையக்காரரை அச்சுறுத்தி விட்டு அவன் திரும்பினான்.

இதன் பின் 1785—க்கும் 1890—க்கும் இடையில் நவாப் மீண்டும் வரி வசூலைத் தானே எடுத்து நடத்த முயன்றதால், பாளையக்காரரின் பிடி மீண்டும் வலுத்தது. ஆனால் 1790-லிருந்து 1795—க்குள்ளாகப் பிரிட்டிஷ் வாணிகக்கழகம் படிப்படியாக நவாபின் உரிமைகளை ஒதுக்கி வைத்து

நாட்டாட்சியை நேரடியாகத் தன் கைக்குக் கொண்டு வந்தது. இதனிடையே மூன்றும் கட்டபொம்மன் மாள் வுறவே, அவன் மூத்தபுதல்வன் கருத்தையா என்ற வீர பாண்டிய நான்காம் கட்டபொம்மன் பட்டத்துக்கு வந்தான். அவனுக்குக் குமாரசுவாமி அல்லது சிவத்தையா, துரை சிங்கம் அல்லது ஊமைத்துரை என்ற இரு வீரமிக்க தம்பி மார் இருந்தார்கள்.

நான்காம் கட்டபொம்மன் அவன் தந்தை யளவு பிரிட்டி ஷாரை வெறுக்கவில்லை. ஆனால் அவன் தன்மதிப்புணர்ச்சி யும் பெருந் தன்மையும் உடையவன். அமைதி தனத் தையே அனைவரிடமும் விரும்பி எதிர்பார்த்த பிரிட்டிஷ் ஆட்சியாளருடன் இது காரணமாகவே அவன் தந்தையினும் மிகுதியாக முரண்பட நேர்ந்தது இச் சமயம் சிவகிரியில் நடைபெற்ற ஓர் அரசியல் நிகழ்ச்சி இதனை வலியுறுத் திற்று.

சிவகிரிப் பாளையக்காரருக் கெதிராக அவர் புதல் வனும் மாப்பிள்ளை வன்னியர் என்று அழைக்கப்பட்ட அவர் மருமகனும், சங்கரலிங்கம் பிள்ளை என்ற செயலாளரும் கிளர்ந்தெழுந்தனர். பாளையக்காரனை ஆதரித்த பிரிட்டிஷ் படைத் தலைவன் கர்னல் மாக்ஸ்வெல் செயலாளரை நாடு கடத்தியும், கட்டபொம்மன் அவருக்கு ஆதரவளித்து, பாளையக்காரன் மகனையே மீண்டும் பதவி யேற்றினான். படைத் தலைவர் கிளர்ந்தெழுந்து மகனைத் துரத்திவிட்டு மீண்டும் தந்தையையே பாளையக்காரனாக்கினர். செயலாளர் நாடு கடத்தப்பட்டுச் சுமத்ராத் தீவுக்கே அனுப்பிவைக்கப் பட்டார்.

1797-ல் இராமநாதபுரத்தில் பாளையக்காரர் பெருங் கலகம் செய்தனர். இதனை பிரிட்டிஷார் அடக்கி அடக்கி தென் தமிழகத்தின் தலைமை அதிபதியாக அங்கே ஜாக்ஸன் என்ற வெள்ளையரை நியமித்தனர். இவன் தன்னைப் பேட்டி காணும்படி கட்டபொம்மனை அழைத்து விட்டு, அவனுக்குப் பேட்டியளிக்காமல் கடத்தினான். சொக்கப்பட்டி, சேற்றூர், சீவிலிப்புத்தூர், பேறையூர், பாவாலி, பள்ளிமடை, கமுதி ஆகிய இடங்களுக்கு அவனைச் சுற்றுவித்து அலைத்தான், அத்துடன் இராமநாதபுரத்தில் அவனுக்குப் பேட்டி யளித்தபோதும் அவனைச் சிறைப் பிடிக்க முனைந்தான் கட்டபொம்மனும் அவன் வீரத்துணைவரும் வீரமாகப் போரிட்டு வெளியேறித் தம் கோட்டைக்கு மீண்டனர். போராட்டத்தில் படைத் தலைவன் கிளார்க் வாளால் வெட்டுண்டு மாண்டான்.

கட்டப்பொம்மன் வீரர்களில் தலை சிறந்தவருள் ஒருவனான வெள்ளைத்தேவன் அல்லது பாதர் (பகதூர்) வெள்ளை இப்போராட்டத்தில் பெருஞ் செயல் வீரனாக விளங்கினான்.

பாஞ்சாலங்குறிச்சிச் செயலாளனான சுப்பிரமணிய பிள்ளை இச் சமயம் எதிரிகையில் பட்டு, திருச்சிராப்பள்ளிக்கு அனுப்பிக் காவலில் வைக்கப்பட்டான்.

பிரிட்டிஷார் இந் நிகழ்ச்சியில் ஜாக்ஸன் நடவடிக்கை மீதே குறைகண்டு அவனை நீக்கினார்கள். பாஞ்சாலங்குறிச்சிச் செயலாளன் சுப்பிரமணிய பிள்ளையும் விடுவிக்கப்பட்டான். ஆனால் அடுத்த தலைவன் லூஷிங்டனும் கட்டபொம்மன் பெருமிதப் பணியாப் போக்கைக் கண்டு குமுறினான். மீண்டும் போர் மூண்டது.

மேஜர் பானர்மன் தலைமையில் ஒரு பெரும்படை 1798-ல் பாஞ்சாலங் குறிச்சியைத் தாக்கப் புறப்பட்டது. படை பாளையங்கோட்டை வரும்போதே கட்டபொம்மனுக்குச் செய்தி எட்டிற்று அவன் நள்ளிரவே எங்கும் போர் முரசம் அறைவித்தான். அதனால் அண்டை அயலிலுள்ளவர்களெல்லாம் திரண்டு வந்து கோட்டை முற்றுகைக்குச் சித்தமாயினர். ஆனால் திருச்செந்தூர் விசாக விழாவை முன்னிட்டுக் கட்டப்பொம்மனின் வீர இளவல்களான சிவத்தையா என்ற குமாரசாமியும், ஊமைத்துரை என்ற துரைசிங்கமும் சென்றிருந்தனர் அவர்களில் முன்னவன் மட்டுமே எப்படியோ செய்தி கேட்டு உட்கடந்து வந்திருந்தான்.

செயலாளன் சுப்பிரமணிய பிள்ளை இச் சமயம் சீவைகுண்டத்துக்கு அருகிலுள்ள ஆற்றூரில் இருந்தான். ஆனால் அவன் இளவல் வீரபத்திர பிள்ளை கோட்டையிலேயே இருந்தான். கணக்கன் பொன்னப்ப பிள்ளையும் உடனிருந்தான்.

முற்றுகைப் படைக்கு லெப்டினண்ட் டல்லஸே தலைவனாயிருந்தான். காலன் துரை என்று தமிழ் ஏடுகளால் குறிக்கப்பட்ட படைத் தலைவன் காலின்ஸும் முற்றுகைப் படையில் இடம் பெற்றிருந்தான். இவர்கள் நீங்கலாக ஓரெய்லி, புரூஸ், டக்ளஸ், டார்மிச்ஸ், பிளேக், பிரௌன் முதலிய தலைவர்களும் கோட்டையைச் சுற்றி ஒவ்வொரு பகுதியிலும் போராடினர்.

பீரங்கிகளால் கோட்டை தகர்க்கப்பட்டது, மண் கோட்டையானாலும் 'தென் தமிழகத்தின் டிரபால்கர்' என்று அழைக்கப்பட்ட இவ் வரண் ஒரு பகல் முழுதும் தாக்குதலுக்குள்ளான பின்பே கட்டுத் தளர்ந்தது. தெற்கு வாயிலைத் தகர்த்து உள்ளே நுழைய முயன்ற படைத் தலைவன் காலின்ஸைப் பாதர் வெள்ளை என்ற வெள்ளையத்தேவன் தன்

ஈட்டியால் குத்தி ஊடுருவினான். இதனால் கோட்டை பிளவுற்ற பின்பும் எதிரிகள் உள்ளே புக முடியவில்லை. கோட்டையினுள் இருந்தவர்கள் தமிழகம் முன் என்றும் கண்டிராத வகையில் எதிரிகளின் உயிர்களைப் பலிவாங்கினர். ஆனால் அவர்கள் வீரரும் எண்ணற்றவர் இக்கோரப் போர்ப் புயலில் சாய்ந்தனர்.

பாஞ்சாலங் குறிச்சி வீரர் கோட்டையினுள்ளேயே இறுதிப் போரை நடத்துவதைவிட, காயம் பட்டவர் பெண்டு பிள்ளைகளுட்ன் வெளியேறிச் சென்று நீடித்து இப்போர் நடத்த விரும்பினர். ஆகவே அவர்கள் இரவோ டிரவாகத் தப்பி யோடினர்.

மேஜர் பானர்மன் ஓடியவர்களைத் தேடிக் கண்டு பிடிக்க எங்கும் வீரர்களை அனுப்பினான். பாளையங்களுக்கும் அவரைக் கண்டு ஒப்புவிக்கும்படி கடிதங்கள் எழுதினார். ஆனால் எட்டயபுரம் பாளையக்காரன் தானே இப் பொறுப்பை ஏற்பதாகத் தெரிவித்தான். அதன்மீது மேஜர் பானர்மன் அவனுடன் சென்று ஓடியவரைத் தேட உதவும்படி ஒரு படையை லெப்டினண்ட உல்லாயிமேன் தலைமையில் அனுப்பி வைத்தான்.

மேஜர் பானர்மன் ஏற்கெனவே செயலாளரைச் சிறைப் பிடிக்க ஆள் அனுப்பி யிருந்தான். அவர் அகப்படவில்லை. ஆனால் அவர் குடும்பத்தினர் சிறைப்படுத்தப் பட்டனர்.

எட்டயபுரப் பாளையக்காரன் கட்டபொம்மன் சென்ற இடம் உசாவிச் சென்று கோலார்ப் பட்டிக் கோட்டையில் அவனைக் கண்டு பிடித்தான். பிரிட்டிஷ் படைத் தலைவனுக்குத் தகவல் தெரிவித்தாலும் அவன் வரும்வரை காத்திராமல் அவர்களைக் கைப்பற்ற முயன்றான். ஆனால் கட்டப் பொம்மனும் அவனுடன் ஆறுபேரும் போரிட்ட வண்ணமே குதிரை ஏறித் தப்பியோடினர். மீந்திருந்த முப்பத்து நான்கு பேர் சிறைப் பட்டனர். இவர்களைப் பிரிட்டிஷ் படைத் தலைவன் விடுவிக்க உத்தரவிட்டான் ஆனால் அவர்களிடையே இருந்த செயலாளர் சுப்பிரமணிய பிள்ளையையும் அவன் உடன் பிறந்தானையும் மட்டும் தண்டனை செய்யும் எண்ணத்துடன் மீட்டும் காவலில் வைத்தான்.

கட்டபொம்மனுக்கு உடந்தையாக பாளையக்காரர் ஐவர் இருந்தனர். அவர்களே நாகலாபுரம், கோவார்பட்டி, ஏழாயிரம் பண்ணை, காடல்குடி, குளத்தூர் ஆகியவற்றுக்குரியவர்கள். இவர்களில் காடல்குடிப் பாளையக்காரன் தப்பியோடி விட்டான். மற்றவர்கள் சரணடைந்தனர்.

தாகலாபுரம் பண்ணையின் செயலாளனான சௌந்தர பாண்டியன் பிடிபட்டவுடன் அவனும் பாஞ்சாலங்குறிச்சிச் செயலாளனும் பாளையக்காரர்களைத் தூண்டிய முக்கிய குற்ற வாளி என்று குற்றஞ்சாட்டப்பட்டுத் தூக்கிலிடப்பட்டார்கள்.

படைத் தலைவன் காலின்ஸைக் கொன்ற வெள்ளைத் தேவனைப் பிடித்துக் கொடுப்பவருக்கு 1000 வெள்ளி பரிசு தரப்படுமென்று அறிவிக்கப்பட்டிருந்தது. வெள்ளைத்தேவனின் மாமனே அச்சிறு பணத்துக்கு ஆசைப்பட்டு மருமகனைப் பிடித்துக் கொடுத்தான்.

மீண்டும் தப்பிவிட்ட கட்டபொம்மனைத் தேடும் முயற்சியில் பிரிட்டிஷார் புதுக்கோட்டை அரசனை ஊக்கியிருந்தனர். புதுக்கோட்டை யடுத்த கலியபுரத்தில் வந்து தங்கியிருந்த சமயம் அவன் அவர்களைப் பிடித்துக் கொடுத்தான்.

1798 அக்டோபர் 16-ல் கயத்தாற்றில் எல்லாப் பாளையக்காரர்களையும் வரவழைத்து அவர்கள் முன்னிலையில் படைத் தலைவன் ஒரு போலி விசாரணை நடத்திக் கட்டபொம் மனுக்குத் தண்டனை விதித்தான். பாஞ்சாலங்குறிச்சிக் கோட் டைக்கு அருகில் ஒரு புளிய மரத்தில் தமிழகத் தேசிய மாவீரன் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டான். ஆனால் அவன் தூக்கிலிடப்படு முன்பே மேஜர் பானர்மன் பாளையக் காரர்களைத் தன்னிடம் பத்துநாள் வைத்துக் கொண்டு அவர் கள் ஆணையாலேயே அவர்கள் கோட்டைகளை இடித்துத் தரைமட்டமாக்கி யிருந்தான். அவர்களிடமுள்ள படைக் கலங்களனைத்தையும் கைப்பற்றியு மிருந்தான். தமிழகத்தில் கோட்டை கட்டுவதும் படைக்கலம் வைத்திருப்பதும் அதன் பின்னரே சட்டத்துக்குக்கு எதிரான செயலாக்கப்பட்டது.

பாஞ்சாலங் குறிச்சிப் பாளையம் இப்போது எட்டயபுரம், மணியாச்சி முதலிய பாளையங்களிடையே பங்கிடப்பட்டது. பழய கணக்கு ஏடுகளில்கூடப் பாஞ்சாலங்குறிச்சி என்ற பெயர் எடுக்கப்பட்டுவிடும்படி உத்தரவிடப்பட்டதாக அறிகிறோம். பாஞ்சாலங் குறிச்சி என்ற பெயர் தமிழருக்கு ஒரு தேசிய மந்திரம் என்பதைப் பிரிட்டிஷார் அறிந்திருந் தனர் என்பதை இது காட்டுகிறது.

பாஞ்சாலங்குறிச்சிப் புரட்சி 1785—1801

II தமிழக மக்கட் போராட்டம் 1801 (பிப்ரவரி 2—மே 25)

கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட பின்னும் அவன் வீர இளவலர் சிவத்தையா என்ற குமாரசாமியும், துரைசிங்கம் என்ற ஊமைத்துரையும் வேறு பல பாளையக்காரருடன் பாளையங்கோட்டைச் சிறையில் நீடித்து அடைக்கப்பட்டிருந்

தனர். வெளியே எங்கும் அமைதி நிலவுவதாகக் காணப்பட்டாலும் மக்கள் உள்ளத்தின் ஆழ்தடங்களில் அவ்வீரக் கைதிகள் பதினறு மாதங்களாக இடைவிடாத ஆட்சி செலுத்தினர். திடுமென ஒருநாள் ஆயிரக்கணக்கான மக்கள் வெளியிலிருந்தும் உள்ளேயிருந்தும் ஒரே சமயத்தில் சிறையைத் தாக்கி உடைத்தனர். ஆனல் அவர்கள் தம்மைச் சிறையிட்டவர்கள்மீது பழிகொள்ள விரும்பவில்லை, கலகம் செய்ய விரும்பவில்லை. அவர்கள் ஒரே ஆசை கோட்டைத் தடைச் சட்டத்தை மீறிப் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை மீண்டும் கட்டிவிட வேண்டும் என்பதே. இதை அவர்கள் உலகம் வியக்கும் ஒரே அன்பு வீரச் செயலாக்கினர். நேரே பாஞ்சாலங்குறிச்சி சென்று ஆயிரக்கணக்கான கைகள் — பல்லாயிர மக்கள் உழைப்பும் பொருளும் சேர்த்து — இரண்டே வாரங்களில் முன்னிலும் பெரிய அழகிய கோட்டை ஒன்றைக் கட்டி முடித்தனர்.

அவர்கள்மீது படையெடுத்துவந்த முதற் படைத்தலைவன் மக்காலே. இப்படையைப் புதிய கோட்டை வீரர்கள் வழியிலேயே பலவிடங்களில் தாக்கிப் பேரழிவு செய்தனர். மக்காலேயின் வீரர்கள் எதிர்பார்த்ததுபோலப் புதிய கோட்டையை எளிதில் பிடிக்க முடியவில்லை. அவர்கள் தப்பிச் செல்வதே பெரு முயற்சியாய்விட்டது.

இரண்டாம் படை வருமுன் கோட்டை வீரர்கள் அருகிலிருந்த பிரிட்டிஷ் கோட்டைகள் பலவற்றைப் பிடித்தனர். தூத்துக்குடி நகரமும் அவர்கள் கைப்பட்டது. இச்சமயம் சிறைபட்ட பாகட் என்ற வெள்ளையரை அவர் மனைவியின் வேண்டுகோளுக்கிணங்கி ஊமைத்துரை விடுவித்தானென்று அறிகிறோம். கோட்டை முற்றுகையின்போதும், எதிரிகள் இறந்தவரை அடக்கம் செய்ய அனுமதி கேட்டபோது கோட்டை வீரர் அனுமதியளித்ததனுடன் அமையாது, தாமும் உடனிருந்து உதவினர்! இப்பெருந்தன்மை கண்ட பல வெள்ளையர் இத்தகைய வீரமும பண்பும இயைந்த இனத்தவர்மீது ஆட்சி செலுத்த வந்தோமே என்று வருந்தினராம்!

இரண்டாவது தாக்குதலில் கோட்டையைப் பிளவுசெய்ய முன்னிலும் மிகுதி நேரம் பிடித்ததாக அறிகிறோம். மன்னர் ஆர அமரக் கட்டிய கோட்டையைவிட மக்கள் ஆர்வத்துடன் விரைந்து எழுப்பிய மாயக் கோட்டை வலுமிக்கதாகவே இருந்தது.

இத்தடவையும் கோட்டை இனி நில்லாது என்று கண்டவுடன் உள்ளிருப்போர் வெளியேறிப் போராட்டம் நீட்டிடிக்கவே விரும்பினர். ஆனல் இத்தடவை தப்பிச்செல்ல வழியில்லை

எதிரிகள் முன்னிலையிலேயே, பீரங்கிகளின் குண்டு மாரியிடை யேயும், துப்பாக்கி ஈட்டித் தாக்குதலிடையேயும் அவர்கள் வெளியேறினர். நடுவில் பெண்களையும் பிள்ளைகளையும் காயம் பட்டவர்களையும் விட்டு முன்னும் பின்னும் இருபுறமும் வீரர் போரிட்டவண்ணமே வெளியேறினர்.

வயிற்றில் ஒரு பிள்ளையும், அருகிலும் இடுப்பிலும் இரண்டு பிள்ளைகளுமாகத் தலையில் குலதெய்வத்தைக் கூடையில் சுமந்துகொண்டு ஊமைத்துரையின் மனையாட்டி சென்றாள்!

அவர்கள் கோட்டைக்கருகில் ஒரு தடவையும், ஒரு கல் தொலைவில் ஒரு தடவையும் தாக்குதலுக்காளாயினர். இரண்டாவது தாக்குதலில் தப்பியோடியவர் சிலர் நீங்கலாக ஏனையோர் இறந்தும் காயமுற்றும் களத்தில் குவிந்து கிடந்தனர்.

பாளையத்து மக்கள் அப்பிணக்குவியல்களைப் புரட்டி இறந்தவர், காயம்பட்டவரிடையே தத்தம் கணவர், உடன் பிறந்தார், குழந்தைகளைத் தேடினர். அவர்களில் ஒருத்தி குற்றுயிருடன் கிடந்த தன் மகனைக் கண்டெடுத்துத் தூக்கிச் செல்ல முயன்றாள். ஆனால் உடல் அசையப்பெறாத நிலையிலிருந்த அந்த மகன் அருகே குற்றுயிராய்க்கிடந்த ஊமைத் துரையைச் சுட்டிக்காட்டி, அவனையே தூக்கும்படி கூறிமாண்டான். தாய் மகனை மாளவிட்டு அவனை மற்றைப் பெண்டிர் உதவியுடன் வீட்டுக்கு இட்டுச்சென்று பண்டுவம் பார்த்தாள்.

போர்க்களங்களிலும் அயலிடங்களிலும் விடாமல் தம் இனத்தவர்களைத் தேடி அலைந்தனர், வெள்ளை எசமானர் களுக்காக உழைத்த எட்டையபுரப் பாளையக்காரனின் வீரர்கள்! அவர்கள் வருவது கண்டு ஊமைத்துரையைக்காத்த பெண்டிர் கலங்கினர். ஆனால் அவர்கள் ஆர்வம் ஒரு வழி கண்டது. ஊமைத்துரையின் குற்றுயிரான உடலைத் துணியால் மூடி அழத் தொடங்கினர். வைசூரியால் இறந்த மகன் என்று வீரரிடம் கூறி அவர்களை விரைந்து ஓட வைத்தனர்!

கட்டபொம்மனுக்குப்பின் அரசனாக வேண்டிய அவர் மூத்த இளவல் சிவத்தையா குமாரசாமி இப்போர்க்களத் திலே மாண்டான். ஊமைத்துரையே மரபுரிமையாக வந்த போராட்டச் செல்வத்தின் பொறுப்பேற்றான். காயம் ஒரு சிறிது ஆறியதே அவன் மீண்டும் களம் விரைந்தான்.

மருது காவியம் *1801 (மே 28—அக்டோபர் 1)*

ஊமைத்துரை நேரே மருதுவீரரிடம் சென்றான். புகழ் மாள்வின் தூதுவனாக, புகழ்த் தெய்வமாக வந்த அவனைப்

புகழ்வீரர் இருகை அளாவி வரவேற்று அவனுடன் புகழ் மாள்வு மாளப் புறப்பட்டனர்.

போர்க்களம் திருநெல்வேலிச் சீமையிலிருந்து சிவகங்கைச் சீமைக்கு மாறிற்று. அவர்களிடம் இருபதினாயிரத்துக்கு மேற்பட்ட போர்வீரர் இருந்தனர். பத்தொன்பதாண்டுகள் ஆண்டு, மக்கள் உள்ளத்தில் அவர்கள் தேசிய வாழ்வின் நல்லார்வம் பரப்பியிருந்தனர். ஆகவே அவர்கள் போராட்டம் பாஞ்சாலங்குறிச்சிப் போராட்டத்துக்கே ஒரு மணிமகுடமாய் அமைந்தது. மண்டியிட்டு மாற்றார் உரிமையின் கீழ் நல்வாழ்வே வாழ்வதிலும், பாஞ்சைப் புகழ்ப் பயிரைச் சிவகெங்கையிலும் பன்மடங்கு வளம்பெறப் பெருக்குவதே வளுவர் மரபுக்குரிய மாண்பெனக்கொண்டு அவர்கள் களம் பல சூழ்ந்து போராடினர்.

கமுதி—கானப் பேரெயில் என்ற பெயருடன் சங்ககாலப் புகழ்கண்ட காளையார் கோயில், சிறுவயல் ஆகிய வீரக்களங்களில் வெள்ளையருடன் வீறுடன் போரிட்ட வண்ணம் அவர்கள் தியாக உலா ஆற்றி, வீரத்தெய்வத்துக்குப் பலிகள் பல தந்து, இறுதியில் எதிரிகள் கைப்பட்டனர்.

மருதுத் துணைவர்கள் தாம் ஆண்ட நிலத்திலேயே திருப்பத்தூர்க் கோட்டையருகில் தூக்கிலிடப்பட்டனர்.

உலகாளப் பிறந்த ஊமைத்துரை பாஞ்சாலங்குறிச்சியின் புதிய கோட்டையைத் தகர்த்த பீரங்கிகள் வைக்கப்பட்டிருந்த மேட்டியிலேயே தூக்கிலிடப்பட்டான்.

தமிழகப் புண்ணிய பூமிகள்

கட்டப்பொம்மனைத் தூக்கிலிட்ட புளியமரம் இப்போது இல்லை. வீரனை இழந்த வெப்புப் பொறுது அது பட்டழிந்து விட்டது. ஆனால் அவன் தூக்கிலிடப்பட்ட இடமும் ஊமைதுரை தூக்கிலிடப்பட்ட இடமும் இன்றும் அடையாளமற்ற இடமாய் விடவில்லை இருவர் மாண்ட இடத்திலும் கற்குவியல்கள் வளர்ந்துகொண்டே வருகின்றன. போவார் வருவார் எல்லாம் அவ்விடத்தில் ஒவ்வொரு கல்லிட்டு வருவதால் ஏற்படும் வளர்ச்சி இது சிற்பிகளால் கட்டப்பட்டு வளராது ஓங்கிய தூபிகள் பிறருக்கு—மக்களே ஓயாதுகட்டி வளர்த்து வரும் தூபிகளாக இவை அவர்கள் நினைவைத் தமிழகத்தில் வளர்க்கின்றன.

இறந்தவர்க்கு வீரக் கல் எடுத்தனர் பழந்தமிழர்—கற்குவியல்கள் குவித்தனர் உலகின் முற்கால மக்கள் என்று அறிகிறோம். பாஞ்சாலங் குறிச்சிப் பழக்கம் தொல் பழங்கால மனிதனின் உள்ளத்தின் பழக்கத்தை மாறாப் பழக்கமாக, ஆனால் புதிய தேசியமாக வளர்த்துவருகிறது.

செஞ்சிமன்னன் புகழ்பாடிய மக்கட்கவிஞர் பாஞ்சை வீரத்தையும் பாடியுள்ளனர்; ஆனால் முன்னது வீரப்பாடலாக மட்டும் இயன்றது—பின்னது தேசிய வீரப்பாடலாக, நாடகமாக—மக்களே நடிகராகவும் காட்சியாளராகவும் பாடப் பட்டு, நடிக்கப்பட்டு வருகின்றது.

மைசூர், தென் தமிழக எழுச்சிகளின்
தமிழகங் கடந்த தேசிய எதிரொலிகள் : 1801—1947

மைசூர் எழுச்சியும், தென் தமிழகப் புரட்சிப் போராட் டங்களும் வீண் போகவில்லை. அவற்றின் கால்வழி மரபுகள் பல. அவற்றை ஒரு சிறிதே நாம் இங்கே சுட்டிககாட்ட முடியும். ஏனெனில் தொலை அயலாட்சியாகிய பிரிட்டிஷ் ஆட்சியின் வரலாற்றாசிரியர்களும், அண்டை அயலாட்சி யாகிய வடதிசை மாநிலத் தேசீயத்தின் அரையிருளாட்சியும் அவற்றின் தடங்களை நெடுங்காலம் மூடியுள்ளன.

தமிழகத்திலே பாஞ்சாலங் குறிச்சி மரபின் போராட் டத்திலும் மைசூர்ப் போராட்டத்திலும் நாட்டு வீரர்களைக் காட்டிக் கொடுத்தவர்கள் புதிய ஆளரசர் ஆக்கப்பட்டனர். அஞ்சி நடுங்கிய அடிமைகளும் ஒதுங்கியிருந்த தன்னலக் கும்பல்களும் புதிய ஆட்சி வகுப்பினராக வளர்க்கப்பட்டனர். அயலாட்சிப் பிரசாரமே பள்ளி கல்லூரிகளில், பல்கலைக் கழகங்களில், கலைக்கூடங்களில், பத்திரிகைளில் வரலாற்றுக் கல்வியாயிற்று; செய்தித் திரட்டுக்கள், கருத்துத் தொகுதிகள் ஆயின. ஆனால் இத்தனையும் கடந்து தென்னகதி தேசீய வாழ்வின் எதிரொலி பலதிசைகளிலும், தென்னகம் கடந்து இமயமும் கங்கையும் சிந்துவும் அளாவிப் பீறிட்டுத் தழைத்தது.

1806 (ஜூலை 10)-ல் வேலூரில் படை வீரர் கிளர்ச்சி செய்தனர். 600 படை வீரர் கிளர்ச்சிகளிடையே அடக்கு முறைகளுக்கு ஆளாகி உயிரிழந்தனர். 200 பேர் கிளர்ச்சிக் குற்றவாளிகளின் தலைவர்களாக தூக்கிலிடப்பட்டனர்.

அதே நாளில் சென்னையிலும் இதன் எதிரொலி கிளர்ச்சி களைத் தூண்டிற்று.

இக் கிளர்ச்சிகளில் திப்புவின் உறவினர் பலர் ஈடுபட் டிருந்தனர். திப்புவின் கொடியே கிளர்ச்சிக் கொடியாய் இருந்தது.

1824 (நவம்பர்) அன்று பரக்பூரில் இதே போன்ற கிளர்ச்சி ஒன்று அடக்கப்பட்டது.

1834 (ஏப்ரல் 10)-ல் திப்புவுக்கு எதிராக பிரிட்டிஷா ருக்கு உதவிய குடகு அரசன் மரபே அரசுரிமையிலிருந்து அகற்றப்பட்டது.

1835 (அக்டோபர் 8)-ல் பிரிட்டிஷ் தானாதிபதியான பிரேசரைக் கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு நவாப் ஷம்ஸுதீன் தூக்கிலிடப்பட்டான்.

1850 (பிப்ரவரி 27)-ல் வடதிசையில் வங்க மாகாணத்தில் கிளர்ச்சி செய்ததற்காக 66-வது வங்கப் படைப்பிரிவு கலைக்கப்பட்டது. அதே ஆண்டில் (மார்ச் 20-ல்) வங்கப் படைத் தலைவன் ஹீலி அப்ரிதியரால் கொலையுண்டான்.

1857-ல் சிந்து கங்கைப் பெருவெளி முழுவதும் புரட்சி கிளர்ந்தெழுந்து பெரிய எரிமலையாக எரிந்து வெடித்தது. பிரிட்டிஷ் ஆட்சியையே ஒரு முடிவுக்குக் கொண்டுவரும் அளவில் இது கோரமாய் இருந்தது. ஆனால் 1858-க்குள் இது பெரும் போரிட்டு அடக்கப்பட்டது.

தெற்கே பாஞ்சாலங் குறிச்சி மைசூர்ப் போராட்டங்களில் காட்டிக் கொடுத்தவர்களும் அதில் ஒதுங்கி யிருந்தவர்களுமே புதிய நாட்டரசரும் புதிய ஆட்சி வகுப்பினரும் ஆக்கப் பட்டதுபோல, வடதிசையிலும் புது மரபுகள் சூழப் பட்டன.

இத்தனையையும் மீறிப் புரட்சிச் சங்கங்கள் எங்கும் கிளர்ந்தெழுந்தன.

மாநிலத்தின் அடங்கிய தேசீய வெப்பத்தை வெளிக் கொணர்ந்து தணிக்கும் கருவியாகவே மாநிலத் தேசியக் கழக (Indian National Congress) இயக்கத்துக்குத் தொடக்கத்தில் பிரிட்டிஷ் ஆட்சியாளர் ஆதரவு நல்கினர். ஆனால் அதன் நிழலிலேயே எங்கும் இருபதாம் நூற்றாண்டின் முதற் கால் பகுதிவரை புரட்சிக் குழுக்களும் கழகங்களும் நீடித்து ஆங்காங்கே உழைத்தன. ஆனால் 1907-லிருந்து 1932-க்குள் மாநிலத் தேசியக் கழகமே அவற்றின் ஆற்றலின் பெரும் பகுதியைத் தனதாக்கி வளர்ந்தது. 1947-ல் அது பிரிட்டிஷாரின் அரசியல் பிடியை மாநிலத்தினின்றும் வெளியேற்றிற்று.

முடிவுரை

மாநிலத் தேசிய இயக்கத்துக்குள் இயக்கமாக மூன்று தனிச் சத்திகளும் அதற்கருகாமையிலேயே வேறு இரு சக்திகளும் தோன்றியுள்ளன. அவற்றின் ஆற்றல் வருங்கால மாநிலத் தேசீயத்துக்கும், தமிழக, தென்னகத் தேசீயங்களுக்கும் வழி காட்டிகள் ஆகும்.

மாநிலத் தேசீயத்தைப் புரட்சிகரமாகத் திருப்பியவர்களில் தலைசிறந்தவர் வ. உ. சிதம்பரனாரேயாவர். அவர் தோற்றுவித்த கப்பல் போராட்ட இயக்கமும் தொழிலாளர்

இயக்கமும் வருங்காலத் தமிழகத் தேசியத்தை உருவாக்கும் விடியல் ஒளிகள் ஆகும்.

தென்னாடு தந்த அறிவுச் செல்வம் எஸ் சீனிவாச ஐயங்காரும், வங்கம் தந்த வீரச் சிங்கம் சுபாஷ் போஸும், தன்னுண்மையும் தன்னுரிமையும் தற்காப்பும் மிக்க ஓர் ஆசியத் தேசியத்தைக் கனவு கண்டனர். சுபாஷ்போஸ் அதற்காகக் கடல் கடந்த தமிழகத்தையே திரட்டிப் பிரிட்டனை எதிர்த்துப் போராடினார். இவ்விருவர் குறிக்கோளையும் நோக்கி வருங்காலத் தமிழகமும் மாநிலமும் கீழ்திசையும் தன்னுண்மையுடன் முன்னேறவேண்டும்.

இம் மூன்றினுக்கும் வெளியே சமுதாய சமத்துவம், தொழில் மகத்துவம், மொழித் தேசீய வாழ்வு, தற்பண்பு ஆகியவற்றைப் பேணும் தனி மதிப்பியக்கம், வாழ்க்கையோடியைந்த இலக்கியப் பண்பார்த்த மறுமலர்ச்சி இயக்கம், தற்பண்பு சான்ற தனித் தமிழியக்கம் ஆகியவை வளர வேண்டும்.

மனித இனத்துக்குள்ளேயே பகைவரைக் காணும் புறப் போர்ப் பண்பு நீக்கித் தமிழகம் உலகில் அகப்பகைப் பண்புகளை எதிர்க்கும் அறிவுப் போர் முறைகளை வகுத்து முன்னேற்றம் காணவேண்டும்.

இக் குறிக்கோள்கள் நிறைவேறத் தொடங்கியுள்ளன. தமிழ்த் தேசியத்தின் பெயரால் மாண்புகழ் அறிஞர் அண்ணாவும், மதிவலார் ஆகிய மூனவர் கலைஞர் மு. கருணாநிதியும் தமிழக ஆட்சியின் மீகாமர்களாய், புதியதோர் வருங்காலத் தமிழகத்திற்குரிய, புதியதோர் இந்தியாவுக்குரிய நம்பிக்கைக் கொடியை உயர்த்தியுள்ளனர்.

சங்கத் தமிழகத்தின் தங்கப் புகழ் விரைவில் ஓங்கி வளரும் என்னலாம்!

# எமது வெளியீடுகள்

விற்பனையாகிக் கொண்டிருக்கிறது

**திருக்குறள் மணி விளக்க உரை**

| | | |
|---|---|---|
| 1-ம் பாகம் | ரூ. | 20. 00 |
| 2-ம் பாகம் | ,, | 20. 00 |
| 3-ம் பாகம் | ,, | 20. 00 |
| 4-ம் பாகம் | ,, | 20. 00 |

தென்னகப் பண்பு —

(அச்சில்)

விவரங்கட்கு :

## அலமேலு நிலையம்

8, கா. அப்பாத்துரையார் தெரு, சென்னை-18.